# கிராம நலம்

176

கண்ணென எல்லையைக் காத்திடும் திரர்கள்





அச்சம்
தவிர்த்த
அண்ணல்

" எல்லாவகைப் போர்களுக்குமே, நான் எதிரி. ஆனால், ஒரு நாட்டிடமிருந்து, நீதி கிடைக்கும்படி செய்வதற்கு, போரைத் தவிர வேறு வழியே இல்லையென்றால், நிரூபிக்கப் பட்டுவிட்ட தன் பிழையை ஒப்புக்கொள்ள அந்த நாடு பிடிவாதமாக மறுக்குமானால் தொடர்ந்து அலட்சியம் செய்து வந்தால் இந்திய அரசாங்கம் அதன்மீது போருக்குப் போக வேண்டியே இருக்கும்.

போர் என்பது தமாஷானதன்று; போரை யாரும் விரும்பவில்லை. நாசத்திற்கு வழிதான் அது. என்றாலும், அநீதியைச் சகித்துக்கொண்டு இருந்துவிட வேண்டும் என்று, நான் யாருக்கும் யோசனை கூறமாட்டேன். நாட்டுக்குநீதி கிடைக்கும்படி செய்வது, அரசாங்கத்தின் பணி."

மகாத்மாவின் மணிமொழி
"ஹரிஜன்" 5 10 1947.

# கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

மாடி 8 | ஜனவரி, 1963 | படி 4

## உரிமை காக்க உறுதி

ஜனவரி மாதம் 26-ம் தேதி, குடியரசு தினம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இந்த நல்ல நாளில்தான், 'இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு சம்பூரண அதிகார ஜனநாயகக் குடியரசாக' அமைத்து, அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றிக்கொண்டோம்.

சென்ற பன்னிரண்டு ஆண்டுகளில், பாரத தேசம் எல்லாத் துறைகளிலும் நல்லவிதமாக அபிவிருத்தி அடைந்து வந்திருக்கிறது.

சீனாவின் படையெடுப்பு காரணமாக, நம்முடைய தேசத்தின் சுதந்திரத்திற்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பாரதப் பிரதமர் தலைமையில், தேசம் முழுவதும் ஒன்று திரண்டு, விறுகொண்டு எழுந்து, எதிரியை முறியடிக்கும் போரில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த நிலையில் "இந்தியக் கிராமங்களின் கடமை என்ன? கிராமங்கள் என்னசெய்ய வேண்டும்?" என்ற விஷயங்களை நன்கு சிந்தித்து, கிராமங்களுக்கும், அவற்றின் மூலம் பாரத நாட்டிற்கும், புது பலமும், புது வாழ்வும் ஏற்படச் செய்வதற்கான, புதிய ஒரு திட்டத்தை, நம்முடைய பாரதப் பிரதமரைத் தலைவராகக் கொண்ட கமிட்டி, தயாரித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள், இரண்டு. முதலாவதாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும், கிராமத் தொண்டர் படை ஒன்றை (Village Volunteer Force) அமைப்பது. அந்தத் தொண்டர் படை மூன்று வேலைத் திட்டங்களில் ஈடுபடும். அவை :—(1) தீவிர விவசாய அபிவிருத்தி. (2) கிராம மக்களின் பொது அறிவை விருத்தி செய்தல் (Mass Education). (3) கிராமப் பாதுகாப்பு—(Village Defence). அடுத்தபடியாக, ஒவ்வொரு பஞ்சாயத்தும், தேசப் பாதுகாப்புக்கான உழைப்பு பாங்கு (Defence Labour Bank) ஒன்றை ஆரம்பித்து நடத்துதல்.

இந்தக் கிராமத் தொண்டர் படைத் திட்டத்தை, கிராமப் பஞ்சாயத்துக்கள் பரிசிலனை செய்து, அந்தந்த இடங்களுக்கேற்ற முறையில், பஞ்சாயத்துக்களுடைய வேலைத் திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, நம்முடைய ஒப்பற்ற தலைவர் பண்டித நேரு அவர்களும், மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும், பாரத நாட்டிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

ஜனவரி மாதம் 26-ம் தேதி சனிக்கிழமையன்று, இந்தத் தேசத்திலுள்ள சுமார் இரண்டு லட்சத்து மூன்றாயிரம் (2,03,000) கிராமப் பஞ்சாயத்து சபைகள், தேசத்தைப் பாதுகாப்பதற்குரிய * 'பிரதிக்ஞை' எடுத்துக்கொண்டு, கிராமத் தொண்டர் படை வேலைத் திட்டம் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை, சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள். இவற்றின் விவரம், ரேடியோ வாயிலாகவும், பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் மூலமாகவும் அறிவிக்கப்படும்.

கிராமத் தொண்டர் படை வேலைத் திட்டம், பாரத தேசத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும், புதியதொரு சக்தியை உண்டாக்கும், என்பதில் சந்தேகமில்லை. தமிழ் நாட்டிலுள்ள 12,500 பஞ்சாயத்து சபைகளும், தேசத்தைக் காத்தல் செய்வதற்காக, ஜனவரி மாதம் 26-ம் தேதியன்று எடுத்துக்கொள்ளவிருக்கும் மாபெரும் பிரதிக்ஞை, மாசில்லாது நிறைவேறவும், கிராமத் தொண்டர் படை வேலைத் திட்டம், வெற்றிகரமாக நடைபெறவும், நாம் அனைவரும் முழு முயற்சி செய்வோமாக.

நம்முடைய சீரிய முயற்சிகளுக்கு, ஆண்டவன் அருளும், ஐயன் காந்தியடிகளுடைய ஆசியும், பூரணமாகக் கிடைக்கும் என்று நம்புவோமாக.

* கிராமங்களில் உள்ள எல்லா ஜனங்களும், ஒன்று திரண்டு, அமைதியாகவும், ஒழுங்காகவும் நின்று, மேற்கொள்ள வேண்டிய பிரதிக்ஞையை (சபதத்தை), அடுத்த பக்கத்தில் காணலாம்.

159895
Y31 ... N62-2 429
600 0..

# பாரத சமுதாயத்தின் உறுதிமொழி

குடியரசு தினத்தன்று, பாரத தேசமெங்கும் உள்ள எல்லா கிராமங்களிலும், பிரதமர் நேருஜி அவர்கள், கிராமத் தொண்டர்படைத் திட்டத்தை, ஆரம்பித்து வைக்கிறார். அச்சமயம், **ஒவ்வொரு பஞ்சாயத்திலும்,** மக்கள் ஒன்று திரண்டு, அணிவகுத்து நின்று மேற் கொள்ளவேண்டிய உறுதிமொழியின் (Pledge) வாசகம் வருமாறு :—

(பாரதப் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறிய தீர்மானத்தை ஒட்டிய தமிழாக்கம்.)

● இந்தியா, சீனமக்கள் அரசாங்கத்துடன், பரஸ்பரம், ஒருவருக்கொருவர் தமது சுதந்திரத்தை அங்கீகரிப்பது, ஆக்கிரமிப்பு செய்யாமை, ஒருவா விஷயத்தில் மற்றவர் தலையிடாமை, சமாதான சகவாழ்க்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, ஒருமித்த நல்லெண்ணத்துடனும் நட்புறவுடனும் தொடர்பு கொண்டிருந்தும், சீன, பெரிய அளவில் ஆயுதப்படை கொண்டு இந்தியாவின் மீது, போர் தொடுத்ததன் விளைவாக, இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருந்த பஞ்சசீலக் கொள்கைகள், நல்லெண்ணம், நட்புறவு ஆகியவற்றுக்குத் துரோகம் செய்ததைக் கண்டு, **இந்தப் பஞ்சாயத்து,** ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

● தாய் நாட்டின் மானத்தையும், மரியாதையையும் காப்பாற்றும் வகையில், எல்லையைப் பாதுகாப்பதில் வீரமுடன் போராடும் நமது போர்ப்படை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும், **இந்தப் பஞ்சாயத்து,** தனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவிப்பதுடன், தங்கள் உயிரை இந்தப் போராட்டத்தில் அர்ப்பணித்த வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகிறது.

● இந்தியாவின் மீது சீன படையெடுத்து வந்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் அவசர நிலைமையையும், சமாளிப்பதில் இந்திய மக்கள் அற்புதமான முறையில், தாமாகவே வீறு கொண்டெழுந்ததை **இந்தப் பஞ்சாயத்து,** பாராட்டுகிறது. தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் இந்த அவசர நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, தீவிர முயற்சிகள் மேற்கொள்வதற்காக, நமது ஆதார சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்ட, நாட்டு மக்களின் எல்லாப் பிரிவினரும் திரண்டு எழுந்திருப்பது கண்டு, **இந்தப் பஞ்சாயத்து,** பெருமிதம் கொள்கிறது. சுதந்திரக் கனலும், தியாக ஜோதியும் தூண்டப் பெற்று மறுமலர்ச்சியுடன் ஒளி வீசுகின்றன. இந்தியாவின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்க, எதையும் அர்ப்பணம் செய்யும் புத்துணர்ச்சி, மக்களிடையே மேலோங்கி நிற்கிறது.

● ஆக்கிரமிப்பையும், படையெடுப்பையும் எதிர்த்து நாம் நடத்துகிற இந்தப் போராட்டத்திற்கு, நமது நேச நாடுகள், அனுதாபமும், தார்மீக ஆதரவும், தெரிவித்துப் பொருளுதவி அளித்து வருவதற்கு, **இந்தப் பஞ்சாயத்து,** நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

● போராட்டம் எவ்வளவு நாள் நீடிப்பதானாலும், எவ்வளவு கடுமையாக இருந்தாலும், ஆக்கிரமிப்பாளரை, இந்தியப் புனித பூமியிலிருந்து விரட்டியடிக்க, நமது நாட்டு மக்கள் மேற்கொண்டுள்ள சபதத்தை, **இந்தப் பஞ்சாயத்து,** மீண்டும் உறுதி செய்கிறது.

இந்த முடிவின்படி, தன்னிடம் உள்ள மனித சக்தியையும், பொருள் சக்தியையும், மற்ற எல்லாச் சக்திகளையும் ஒன்று திரட்டி, தேசப் பாதுகாப்பு முயற்சிக்கு, காணிக்கையாக்க, **இந்தப் பஞ்சாயத்து,** உறுதி எடுத்துக் கொள்கிறது.

" ஜெய் ஹிந்த் "



# வீறு கொண்ட பாரதத்தின் வீரமுரசு

பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, 1962 நவம்பர் 8-ந் தேதியன்று லோக் சபாவில் பின் வரும் தீர்மானங்களைப் பிரேரேபித்தார்:

" அரசியல் அமைப்புச் சட்டத்தின் 352-வது ஷரத்தின் (1)-வது பிரிவின் கீழ், 1962-ம் வருடம் அக்டோபர் மாதம் 26-ந் தேதி ராஷ்டிரபதி வெளியிட்ட அவசர காலப் பிரகடனத்தை இந்தச் சபை அங்கீகரிக்கிறது."

" இந்தியா, சீன மக்கள் அரசாங்கத்தினிடத்தில், பரஸ்பரம் சுதந்திரத்தை அங்கீகரிப்பது, ஆக்கிரமிப்பு செய்யாமை, தலையிடாமை, சமாதான சகவாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஒரே சீராக நல்லெண்ணமும் நட்பும் காட்டி வந்திருந்தும், இந்த நல்லெண்ணத்துக்கும் நட்புக்கும், இரண்டு நாடுகளுக்கு மிடையே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த பஞ்ச சீலக் கோட்பாடுகளுக்கும், சீன துரோகமிழைத்து, ஆக்கிரமிப்புச் செய்திருப்பதையும், தனது போர்ப் படைகளைக் கொண்டு இந்தியாவின் மீது மிகப் பெரிய அளவில் படையெடுத்திருப்பதையும் கண்டு இந்தச் சபை பெரிதும் வருந்துகிறது. நமது எல்லைகளைப் பாதுகாத்து நின்ற நம் போர்ப் படைகளின் வீரர்களும், அதிகாரிகளும் வீரத்துடன் போர் புரிந்ததை இந்தச் சபை பாராட்டுகிறது. நமது தாய் நாட்டின் கௌரவத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதில் உயிர் நீத்த வீரத் தியாகிகளுக்கு இந்தச் சபை மரியாதையையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது. "

" இந்தியாவின் மீது சீன படையெடுத்து வந்துள்ளதன் விளைவாக ஏற்பட்டுள்ள நெருக்கடியையும், அவசர நிலைமையையும் சமாளிப்பதில் இந்திய மக்கள், ஆச்சரியமான முறையில் வீறுகொண்டு எழுந்திருப்பது குறித்து இந்தச் சபை தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தான நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, பெரிய அளவில் முயற்சி மேற்கொள்வதற்காக, நம்முடைய ஆதாரங்களையெல்லாம் ஒன்று திரட்டுவதற்கு நம் மக்களின் எல்லாப் பிரிவினரும் ஆர்த்து எழுந்திருப்பது கண்டு இந்த சபை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. சுதந்திரம், தியாகம் ஆகியவற்றின் சுடர் மீண்டும் ஒளியுடன் பிரகாசிக்கிறது ; இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், மக்கள் தங்களை மீண்டும் அர்ப்பணம் செய்துகொண்டுள்ளனர்."

" ஆக்கிரமிப்பையும், படையெடுப்பையும் எதிர்த்து நாம் நடத்திவருகிற இந்தப் போராட்டத்தில், நம்முடைய நேச நாடுகள் அனுதாபமும், தார்மிக ஆதரவும் தெரிவிப்பதையும், பொருள் உதவி அளித்து வருவதையும் இந்த சபை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறது. போராட்டம் எவ்வளவு நீண்டதாக இருப்பினும் சரி, எவ்வளவு கடுமையானதாக இருப்பினும் சரி ஆக்கிரமிப்பாளரை இந்தியாவின் புனித பூமியிலிருந்து விரட்டியடிக்க இந்திய மக்கள் உறுதி கொண்டிருப்பதை இந்தச் சபை, நம்பிக்கையுடன் ஊர்ஜிதம் செய்கிறது. "



தீர்மானங்களைப் பிரேரேபித்து, பிரதம மந்திரி பேசிய தாவது :

" சபாநாயகர் அவர்களே ! மிக ஆபத்தானதொரு நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதால், பார்லிமென்ட் சபை ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட தினத்துக்கு முன்ன தாகவே கூடியிருக்கிறது. சீனர்கள் பெரும் படையுடன் நமது நாட்டைத் தாக்கியிருக்கிறார்களென்பதும், அதனால் ஏற்பட்ட சண்டையில் இரு தரப்பிலும் பலர் மாண்டிருக்கின்றனர் என்பதும், இந்தச் சபைக்கும், இந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும் ; உலகத்திலுள்ள பெரும் பான்மை மக்களும் அறிவார்கள்.

### இந்தியா மீது ஆக்கிரமிப்பு.

ஐந்து ஆண்டுகளாக இந்தியா, வட எல்லையில் சீன ஆக்கிரமிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. முதலில் அது ரகசியமாக நடைபெற்றிருக்கிறது. அவ்வப்போது சில சண்டைகளும், சம்பவங்களும் நிகழ்ந்தன. இவற்றையெல்லாம் எல்லைச் சம்பவங்கள் என்பதாகக் கூறலாம். ஆனால், இப்போது பெரும் படைகளுடன் நம் நாட்டின் மீது மிகப்பெரிய படையெடுப்பே நடந்துகொண்டிருக்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு வாதியாகத்தன்னைப் பறை சாற்றிக் கொண்டு வந்த—இன்னமும் பறை சாற்றிக் கொண்டிருக்கிற, சீனா, இன்று இறங்கியிருக்கும் நடவடிக்கைக்கு உதாரணம் வேண்டுமென்றால் 18-வது, 19-வது நூற்றாண்டுகளுக்குத்தான் செல்லவேண்டும். அந்தக் காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் ஏகாதிபத்திய வெறி கொண்டிருந்தன ; தொழில் துறையில் ஏற்பட்ட புரட்சிகரமான முன்னேற்றத்தின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் படை பலத்தைப் பிரயோகித்துப் பல பகுதிகளைக் கைப்பற்றினார்கள். அந்த ஏகாதிபத்தியம் இப்போது அழிந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளின் காலனிகளில் பல விடுதலையடைந்து சுதந்திர நாடுகளாகிவிட்டன. ஆனால் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்த அதே சீன மக்கள் சர்க்கார், நாடு பிடிக்கும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளிலும், ஆக்கிரமிப்பிலும் இப்போது ஈடுபட்டிருப்பது வியப்பாகவே இருக்கிறது.

உலகமெங்கும் அமைதி நிலவவேண்டுமென்று பாடுபட்ட நாம், சீனாவின் நட்பையும் நாடி, அவர்களைக் கௌரவமாகவும் மரியாதையாகவும் நடத்தி வந்த நாம், அவர்களுக்காக உலக சபைகளில் வாதாடிய நாம், இன்று, ஏகாதிபத்திய எதிர்ப்புவாதிகள் என்று தங்களைச் சொல்லிக்

## ஆக்ரமிப்புக்குச்சாவுமணி

கொள்கிறவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை நினைக்கும்போது வருத்தமாகவே இருக்கிறது. சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள விநோதமான இந்தத் திருப்பம், நாம் நூறு ஆண்டு காலமாக, ஏன் அதற்கும் முன்னால் கூட, அனுபவிக்காத ஒரு நிலைமையை இப்போது நமக்கு ஏற்படுத்திவிட்டது. சமீப காலத்தில் சூயெஸ் விவகாரத்தில் ஏற்பட்டது போன்ற சில தவறுகள் ஏற்பட்டிருந்தபோதிலும், இம்மாதிரியான ஆக்கிரமிப்பு பழங்காலப் பேச்சாகிவிட்டதாகவே நாம் பூரணமாக நம்பியிருந்தோம். சென்ற ஐந்து ஆண்டுகளாக நமது எல்லையில் சீனர்கள் நடத்திவந்த ஆக்கிரமிப்புகள்கூட, அவை மோசமானவையாகவும், நாடு பிடிக்கும் போக்கை வெளிப்படுத்துவனவாக இருந்தபோதிலும், அது நமக்குப் பெரிதும் கவலையளித்தபோதிலும், சீனர்கள் இந்தியாவின் மீது மிகப் பெரிய அளவில் படையெடுப்பார்கள் என்று நாம் நினைக்கவே இல்லை. இப்போது அந்தப் படையெடுப்பே நடந்துவிட்டது ; அதைக் கண்டு நாம் அதிர்ச்சியடைந்தோம் ; ஏராளமான பிற நாடுகளும் அதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளன.

ஆசியாவின்—ஏன் உலக வரலாற்றிலேயே கூட, புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது ; அதை நாமே எதிர்த்துத் தாங்கிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. நமது சுதந்திரத்துக்கும், நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தை நமது சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி எதிர்த்தாகவேண்டும். இந்த ஆபத்து நமக்கு மட்டும் ஏற்பட்டதல்ல ; சர்வதேச ஒழுங்கு நியதிகள் கலைக்கப்பட்டுவிட்டன ; ஆகவே உடனடியான தீமைகள் ஒருபுறமிருக்க, உலகமே இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தையும், நாட்டின் பிரதேசத்தையும் பெரிதாக மதிக்கிற, தன்மானமுள்ள எந்த நாடும் இந்தச் சவாலுக்குப் பணியாது. நிச்சயமாக இந்தியா—உயிருக்குயிரான நமது நாடு—ஒருபோதும் அதற்குப் பணியாது ; என்ன வந்தாலும் சரி, அதைப் பற்றிக் கவலையில்லை. நாம் இந்தச் சவாலை ஏற்கிறோம். அதனால், ஏற்படும் பலாபலன்களையும் அனுபவிக்கத் தயாராக இருக்கிறோம்.

இந்தச் சவாலின் மூலமாக நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இருக்கலாம். இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டிருப்பதாக, லட்சோபலட்சம் மக்கள் செயலில் காட்டியிருக்கின்றனர் ; அவர்களுடைய உற்சாகத்தையும் ஐக்கியத்தையும் இதற்கு முன் ஒருபோதும் இருந்திராத அளவுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றனர் ; இப்போது நமக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது ; அதை நாம் உறுதியாக எதிர்த்து நிற்கிறோம்.



## வலுச்சண்டைக்கு வந்துள்ள

ராஷ்டிரபதி வெளியிட்டுள்ள அவசர காலப் பிரகடனத்துக்கு சபையின் அங்கீகாரத்தைக் கோரி தீர்மானமொன்றை இந்தச் சபையில் சமர்ப்பித்திருக்கிறேன் அன்னியப் படைகள் நம்மைத் தாக்கியதால், அது தவிர்க்க முடியாததாகிவிட்டது ; ஆபத்தான நிலைமை ஏற்படும் போது இத்தகைய முறையைக் கையாள்வதற்கு நமது அரசியல் சட்டத்தில் விவேகத்துடன் வகை செய்யப்பட்டிருக்கிறது. ராஷ்டிரபதியின் பிரகடனத்தையும், அதையடுத்து, இந்தியப் பாதுகாப்பு அவசரச் சட்டத்தையும், இந்த ஆபத்தைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்படுகிற பிற நடவடிக்கைகளையும் இந்தச் சபை அங்கீகரிக்குமென்பதில் எனக்கு சந்தேகமில்லை.

இவ்விஷயத்தை இந்தச் சபை பல்வேறு கோணங்களிலிருந்து பரிசீலிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இந்தியாவின் சரித்திரத்திலேயும், ஆசியாவின் சரித்திரத்திலேயும்—ஏன் உலக சரித்திரத்திலேயே என்று கூடச் சொல்லலாம்—முக்கியமானதொரு திருப்பத்திலே நாம் இன்று இருக்கிறோம் ; ஏனென்றால், இந்த சச்சரவால் நிகழ்பவை உலகம் முழுவதையுமே பாதிக்கத்தான் போகிறது. சீனாவும் இந்தியாவும் ஆசியாவின் மிகப் பெரிய நாடுகள் ; எனவே அது ஆசியாவைப் பாதிக்கும். ஆனால், உலகத்தையும் பாதிக்கும். ஆகவே, இதன் விளைவுகள் மிகக் கடுமையானவையாயிருக்கும். இந்த நோக்குடனேயே நாம் அதைப் பார்க்கவேண்டும். இப்போதைக்கு, இந்த முரட்டுத்தனமான, கொடுமையான படையெடுப்பினால் நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம். ஆக்கிரமிப்புக்குள்ளான நாட்டின், அதாவது நமது நாட்டின், மக்கள் எவ்வாறு ஒன்று திரண்டு நிற்கின்றனர். என்பதையும் உலக மக்கள் காண்கின்றனர். நமது சுதந்திரத்துக்கு ஆபத்து வரும்போது நாம் எவ்வாறு துணிந்து செயல்படப்போகிறோம் என்பதையும் அவர்கள் காணப்போகிறார்கள்.

ஆகவே, நாம் அதிர்ச்சியடைந்திருக்கிறோம் ; மிகவும் பரபரப்படைந்திருக்கிறோம். இது தவிர்க்க முடியாதது; இதில் ஆச்சரியமொன்றுமில்லை ; ஆனால், உலக வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்தத் திருப்பம், விரைவில் முடிந்துவிடாது ; நாம் அதை நீண்ட காலத்துக்குச் சமாளிக்க வேண்டியிருக்கும் ; பல ஆண்டுகள் இது நீடிக்கும் ; எத்தனை ஆண்டுகள் நீடிக்குமென்று என்னால் சொல்ல முடியாது ; எவ்வளவு நாட்கள் நீடித்த போதிலும் அதை எதிர்ப்பதற்கு நம்மையும், நாட்டையும் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். இந்த எண்ணத்துடன்தான், இந்த மனப்பான்மையுடன்தான், நாட்டுக்கு வழிகாட்டுவதற்காக, இந்தச் சபையை நான் நாடியுள்ளேன்.

சீன ஆக்கிரமிப்பு நமது எல்லையில் ஐந்து ஆண்டுகளாக இருந்துவருகிறது : இந்தக் காலத்தின்போது, இந்தச் சபை இவ் விஷயத்தை அடிக்கடி விவாதித்திருக்கிறது. கடைசியாக, 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி இது பற்றி விவாதம் நடைபெற்றது. இந்திய சர்க்காருக்கும் சீன சர்க்காருக்குமிடையே நடைபெற்ற நீண்ட கடிதப் போக்குவரத்துக்கள் அடங்கிய பல வெள்ளை அறிக்கைகள் இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இன்றும் 7-வது வெள்ளை அறிக்கையில் அடங்கியுள்ள ஒரு கத்தைக் கடிதங்களை சபையில் சமர்ப்பித்திருக்கிறேன். 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ந் தேதி நாம் சீனாவுக்கு ஒரு குறிப்பு அனுப்பினோம். அதற்கு செப்டம்பர் மாதம் 13-ந் தேதி பதில் அனுப்பப்பட்டது. ஆனால் பதில் அனுப்பப்படுவதற்கு முன்னேயே, அல்லது பதில் நமக்குக் கிடைப்பதற்கு முன்னேயே, **செப்டம்பர் 8-ம் தேதியன்று, சீனப் படைகள் நேபா பகுதியின் வடமேற்கு முனையில், தக்ளா கணவாயைக் கடந்து—சர்வதேச எல்லைக் கோட்டைத் தாண்டி, டோலாவிலிருந்த இந்தியக் காவல் நிலையத்தைத் தாக்கத் தொடங்கினார்கள்.** சாதாரணமாக ஏற்படுகிற சில்லறை ஊடுருவல்களைச் சமாளிப்பதற்குப் போதுமான, பல காவல் நிலையங்களை, நேபாவின் வடக்கு எல்லைக்கு அருகில் நாம் அமைத்திருந்தோம். இந்தப் புதிய ஆக்கிரமிப்பை நம்மால் எதிர்த்து நிற்க முடியுமென்று நம்பினோம் ; அந்தப் பகுதியில் நமது படைகளை வலுப்படுத்துவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தோம்.

### மக்மகான் எல்லைக் கோடு

இந்தப் புதிய ஆக்கிரமிப்பு ஏற்பட்ட ஐந்து நாட்களுக்குப் பிறகு, அதாவது செப்டம்பர் 13-ம் தேதியன்று எல்லை விஷயத்தை விவாதிக்கவேண்டுமென்று சீன சர்க்கார்

## வஞ்சகரை விரட்டுவோம்

## அறிவிலே தெளிவு

பயமுறுத்தல் கடிதமொன்றை அனுப்பினார்கள். மக்மகான் கோடு என்று கூறப்பட்டு வந்துள்ள கோடுதான் நமது எல்லை என்பதை, ஏராளமான ஆதாரங்களுடன் இதற்கு முன் நிரூபித்திருக்கிறோம். இந்த எல்லையை வகுத்தது மி. மக்மகன் அல்ல; பன்னெடுங்காலமாக வழக்கத்தில் இருந்துவந்த எல்லையைத்தான், அந்தக்கோடு உறுதிப்படுத்திற்று. இந்த எல்லைக் கோடு இமயமலைப் பகுதிகளில் அதி உயரமான மலை உச்சிகளின் மீது, நீர் வழிந்தோடும் இடத்தில் இரு நாடுகளையும் பிரிப்பதாக அமைந்திருக்கிறது. சீனர்களும் இதை ஓரளவு மறைமுகமாகவேனும், ஏற்றுக்கொண்டிருந்தனர். பர்மா வெளியில் இந்த எல்லைக் கோடு நீடிப்பதைச் சீனர்கள் நிச்சயமாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எவ்வாறிருப்பினும் அரசியல் அமைப்பு விஷயங்களும், சட்ட விஷயங்களும் ஒருபுறமிருக்கட்டும். மக்மகான் கோட்டிற்கு இப்பாலுள்ள பிரதேசத்தில்சீனர் எவரும் ஒருபோதும் இருந்ததே இல்லை என்பதில் சிறிதுகூடச் சந்தேகம் இருக்கமுடியாது; அதை மறுக்கவும் முடியாது; எல்லையிலுள்ள லாஞ்சு என்ற ஒரு குக்கிராமம் வேண்டுமானால் இதற்கு விலக்காக இருக்கலாம்; இதை நீங்கள் அறிவீர்கள்.

சட்ட விரோதமானது என்று சீனர்கள் கூறுகிற மக்மகான் கோடு 48 ஆண்டுகளுக்கு முன் 1914-ல் வரையப்பட்டது. எல்லாரும் அது வரை நம்பி வந்ததையே அந்தக் கோடு ஊர்ஜிதம் செய்தது. சட்ட பூர்வமானதோ, அல்லாததோ, அது நீண்ட காலமாக இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. சுமார் 50 ஆண்டு காலமாகவாவது அது நிச்சயமாக நமது பகுதியாக இருந்து வருகிறது; அதற்கு முந்திய கால வரலாறும் நமக்கு சாதகமாகவே இருக்கிறது. ஆகவே, இந்த எல்லைக்கோடு சுமார் 50 ஆண்டு காலமாக நமது வடக்கு எல்லையாகக் காட்டப்பட்டு வந்திருக்கிறது. ஒரு வாதத்துக்காகவே நான் சொல்வதை 50 ஆண்டுகளுக்குக் குறைத்திருக்கிறேன். உண்மையில் அதற்கு முன்பும் இதுவே இருந்து வந்திருக்கிறது. சீனர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும்கூட, நான் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நமது தேசப் படங்களிலும், நமது உபயோகத்திலும் நமது அரசியல் சட்டத்திலும், நமது ஸ்தாபன அமைப்பு, நிர்வாகம் போன்ற வற்றிலும் சுமார் 50 ஆண்டுகளாக இது இருந்து வந்திருக்கிறது. 1913-ல் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக அவர்கள் தெரிவித்த மறுப்பு, மக்மகான் கோடு பற்றியதல்ல. திபேத்தின் உட்பகுதியையும், வெளிப் பகுதியையும் பிரித்த ஒப்பந்தத்தின் இன்னொரு பகுதி பற்றியதேயாகும் அந்த எதிர்ப்பு. அதில், மக்மகான் கோடு வரவேயில்லை. ஆயினும், அந்த எதிர்ப்பு காரணமாக, அவர்கள் ஒப்பந்தம் முழுவதையுமே எதிர்த்தார்கள் என்பது என்னமோ உண்மைதான். சீனர்கள் அதை ஏற்றுக்கொள்ளவே இல்லையென்றே வைத்துக்கொள்வோம். அதனால், அதை மாற்றியமைக்க ஒரு ஆயுதப் படையெடுப்பை நடத்துவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்று அர்த்தமா? இமயமலையில் நீர் ஓட்டம் பிரியும் இடம் வரை அமைந்துள்ள இந்தப் பிரதேசம், சுதந்திர இந்தியாவின் வசமே இருந்து வந்திருக்கிறது என்பதைச் சீனர்கள் அறிவார்கள்; அதைச் சொல்லியும் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதும் எனக்குச் சிறிது சிரமமாகத்தான் இருக்கிறது. இவ் விஷயம் பற்றிய ஏராளமான கடிதங்களை, சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு படித்துப் பார்ப்பவர்கள் எவரும், அவர்கள் கூறும் எல்லை மிகவும் நெகிழ்வானது. மாறிக்கொண்டே இருப்பது என்பதை எளிதில் கண்டு கொள்ளமுடியும். அவர்கள் நினைத்தபடியெல்லாம் அது மாறிக்கொண்டே இருக்கும். அதிலும்கூட, முன்னுக்குப் பின் முரணான பல விஷயங்களை அவர்கள் சொல்லுகிறார்கள். நாம் சுதந்திரமடைந்த பிறகு நேபாவில் இந்தப் பகுதியை அல்லது அதில் பெரும் பகுதியை நாம் வசப்படுத்தி வைத்திருக்கிறோம் என்ற உண்மையை அவர்கள் சில சமயங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். இது விநோதமானதாகும்; ஏனென்றால், நான் எப்போதும் சொல்லிவருவதுபோல, இப் பகுதி இந்தியாவினுடையது என்பது 1913–1914-லேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், நாம் சுதந்திரமடைந்ததும் பல காரியங்களைச் செய்தோம்; எல்லைப் பகுதிகளிலுள்ள இந்தப் பூர்வகுடி மக்களும் நம்முடன் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டுமென்று விரும்பினோம்; அது இயற்கையே. பிரிட்டிஷ்காரர்கள் அவர்களைஎவ்வித ஆதரவுமின்றி அப்படியேவிட்டு வைத்திருந்தனர். ஏதாவது தொல்லைகள் ஏற்பட்டால் மட்டுமே தலையிட்டு வந்தனர். ஆனால்

## அறத்திலே நாட்டம்

பிரிட்டிஷ்காரர்கள் மக்மகான்கோட்டையே தங்கள் எல்லையாகக் கருதினார்கள். என்பதில் சந்தேகமே இல்லை. அங்கு அவர்கள் விரிவான நிர்வாக ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை. நாம் சுதந்திரமடைந்த பிறகு இந்தியாவின் பிற பகுதிகளை அபிவிருத்தி செய்ய முயற்சித்ததைப் போல, அப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டோம். ஆகவே, அங்கு நமது நிர்வாகத்தை அமுல் செய்ததோடு, பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், ரோடுகள் முதலியவற்றை ஏற்படுத்தினோம். இந்த ஏற்பாடுகளே நாம் அந்தப் பகுதியை ஆக்கிரமித்திருப்பதைக் காட்டுவதாகச் சீனர்கள் கூறுகிறார்கள். இந்தக் கடிதங்களையும் அவற்றிற்கு முந்திய வரலாற்றையும் படிப்பவர்கள் எவரும் நாம் அந்த இடத்தில் சட்டபூர்வமாகவும், அரசியல் அமைப்புப்படியும், நிர்வாக ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறோம் என்பதை எளிதில் ஒப்புக்கொள்வார்கள்.

அவர்களுடைய கோரிக்கையின் சட்ட நுட்ப, அரசியல் சட்ட அம்சங்கள் எவ்விதமிருந்தபோதிலும்—அதற்குச் சிறிதுகூட நியாயமில்லை என்றே நாம் கருதுகிறோம்—அதற்காக நம்மை இவ்வாறு திடீரென்று தாக்குவது நியாயமாகி விடுமா? இவ் விஷயத்தை இதற்கு முன் பல தடவைகள் நாம் விவாதித்திருக்கிறோம் என்பது இச் சபைக்கு நினைவிருக்கும். அப்போது லடாக்கில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பு பற்றியே பெரிதும் விவாதித்தோம்; ஏனென்றால், இப் பகுதியில் லாஞ்சு என்னும் சிறிய எல்லைப்புற கிராமம் ஒன்றைத் தவிர, வேறு எந்த இடத்திலும் எதுவும் நடைபெறவில்லை. பேச்சு வார்த்தைகளின்போது, அவர்கள் எதையும் தெளிவாகவோ, திட்டவட்டமாகவோ கூறுவதில்லை; சில சமயங்களில் கடிதங்களும்கூட இதையே பிரதிபலித்தன; அவர்களுடைய சொற்களெல்லாம் இரட்டை அர்த்தம் கொண்டவையாக இருந்தன; எந்த விதமாக வேண்டுமானாலும் பொருள் கொள்ளும்படியாக உள்ளன என்பதை இப்போது நாம் தெரிந்து கொண்டோம். நம்மிடம் ஒன்றை உறுதியாகச் சொல்லிவிட்டுப் பிறகு அப்படி உறுதியளிக்கவே இல்லை என்று சொல்லக் கூடியபடி, சொற்கள் அமைந்திருந்தன. சீனப் பிரதம மந்திரியுடன் நடத்திய நீண்ட பேச்சு, குறிப்பாக, மக்மகான் கோடு பற்றிய பேச்சு, எனக்கு நினைவிருக்கிறது. தேதி நினைவில்லை; ஐந்து ஆறு வருடங்களுக்கு முன் இருக்கும்; அப்போது அவர் இந்தியாவுக்கு வந்தார். நாங்கள் நீண்ட நேரம் பேசினோம். நாங்கள் பேசிய விஷயங்களை நான் மறந்துவிடக்கூடாதே என்பதற்காக, பேச்சு முடிந்ததும் குறிப்பு எழுதி வைத்தேன். அந்தக் குறிப்பு இங்கே நமது காரியாலயத்தில் இருக்கிறது. அதற்குப் பிறகு, அந்தப் பேச்சு வார்த்தை பற்றிய குறிப்பிலிருந்து சில பகுதிகளைச்

## நெஞ்சிலே உறுதி

சீன சர்க்காருக்கு அனுப்பினேன்; அப்படிப் பேசவே இல்லை என்று அவர்கள் மறுத்துவிட்டார்கள். நான் ஆச்சரியப்பட்டதோடு, மிகவும் வேதனையடைந்தேன். ஏனென்றால், நாங்கள் அப்படித்தான் பேசினோம் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரே கேள்வியை ஒரு தடவையல்ல இரண்டு மூன்று தடவைகள் கேட்டேன். அதற்கும் அம்மாதிரித்தான் பதிலளித்தார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்; அதாவது, மக்மகான் கோட்டைச் சீன சர்க்கார் சட்ட விரோதமானதென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கோடு என்றும் கருதினாலும்கூட, நம்மிடையே நட்புறவு வளர வேண்டுமென்று அவர்கள் கருதுவதாலும், வேறு பல காரணங்களுக்காகவும், மக்மகான் கோட்டை எல்லையாகக் கருதத் தயாராக இருப்பதாகப் பொருள்பட அவர் கூறினார். எனக்கு இது மிகத் தெளிவாக நினைவிருக்கிறது. அதற்குப் பிறகு, அவர் அதை மறுத்திருக்கிறார். ஆகவே, ஒரு குறிப்பிட்ட சமயத்தில், அவர்கள் என்ன சொன்னார்கள் என்று நிர்ணயிப்பதே கஷ்டமாக இருக்கிறது.

அது எப்படியிருந்தாலும் மக்மகான் கோட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, சில வாரங்களுக்கு முன்பு வரையில் அது முழுவதும் நமது வசத்தில்தான் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தலைமுறை தலைமுறையாக அது நம் வசமிருந்து வந்திருக்கிறது. நீங்கள் விரும்பினால் பிந்திய தேதியொன்றை—1913-14 ஐ வைத்துக்கொள்ளலாம். அப்படியும், அன்று நிகழ்ந்தது அதற்கு முன்பிருந்த நிலைமைகளுக்கு அங்கீகாரமளித்ததேயாகும். இம்மாதிரி சீனா ஆக்கிரமிப்பதற்கு எந்தச் சட்டம், எந்த சர்வதேச நெறி முறை அல்லது வேறு எந்த நியாயம்தான் ஆதாரவாக இருக்கிறது ?

### சீனாவின் விசித்திரப் போக்கு

சமீபத்தில் நேபாவில் நடந்திருப்பதைப் பற்றிச் சீனர்கள் கூறுவது விசித்திரமாக இருக்கிறது என்பதை இச் சபை உணர்ந்திருக்கும். இந்தியாதான் அவர்களைத் தாக்கியது என்றும், அவர்களுடைய எல்லைக் காவலர்கள் (அப்படித்தான் சீனர்கள் அவர்களை அழைக்கின்றனர்) தற்காப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளனர் என்றும், சீனர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அது உண்மையை முற்றிலும் திரித்துக் கூறுவதாகும்! பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் திரித்துக் கூறும் அவர்களுடைய முயற்சி என்னைத் திகைக்க வைத்து விட்டது; ஏனென்றால், அவர்கள் சொல்வதைப் போன்ற

## கடமையில் கருத்து

ஆதாரமற்றது வேறெதுவும் கிடையாது. ஒரே ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்வோம். நாம் இது வரையில் மக்மகான் கோடு வரை இருந்து வந்திருக்கிறோம். அதற்கு அப்பால் ஒரு அங்குலம்கூட நாம் செல்லவில்லை; பிறருடைய பிரதேசம் எதையும் நாம் கைப்பற்றவும் இல்லை. அவர்கள்தான் இங்கு வந்திருக்கிறார்கள். மக்மகான் கோடு எங்கு இருக்கிறது என்பது பற்றி ஏதோ சந்தேகம் இருப்பதாக அவர்கள் சொல்வது உண்மையென்றே வைத்துக்கொள்வோம்; முக்கியமான விஷயம் என்ன வென்றால், ஒருபோதும் அவர்களிடம் இருந்திராத—சென்ற பதினாயிரம் ஆண்டுகளாக அவர்களிடம் இருந்திராத—பிரதேசத்தை அவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இப்போதைய சீன சர்க்கார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்புதானே தோன்றினார்கள்; இப் பகுதிமீது ஏதாவது அவர்களுக்குப் பாத்தியதை இருந்திருந்தால், அது இந்தப் பன்னிரண்டு ஆண்டு காலத்தில் ஏற்பட்டதாகத்தானே இருக்கவேண்டும், அல்லது திபேத் மூலமாக ஏற்பட்டதாக இருக்கவேண்டும்; ஆகவே, திபேத்தின் மூலமாக அல்லது திபேத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள ஆதிக்கத்தின் மூலமாக எந்தப் பகுதியின்மீது பாத்தியதை கோர உரிமை உண்டு என்பதுதான் பிரச்சினை. இந்தியாவுக்கும் திபேத்துக்கும் இடையே பல காலமாக, பிரிட்டிஷ் ஆட்சியின் போதும்கூட, சில எல்லைப் பிரச்சினைகள் இருந்து வந்தன என்பது உண்மைதான். ஆனால், அவையெல்லாம் சின்னஞ் சிறு திட்டுகள், அல்லது சின்னஞ்சிறு எல்லைப் பகுதிகள் பற்றியதாகும். நேபாவின் மூன்றில் இரண்டு பகுதிக்குச் சமமான இப் பெரிய பகுதியின்மீது இதற்கு முன்னால் எவரும், எந்த திபேத் சர்க்காரும், பாத்தியதை கோரவில்லை; லடாக்கில் பெரும் பகுதியில் பாத்தியதை கோருவது ஒரு புறமிருக்கட்டும். ஆகவே, எவராலும், மறைக்கவோ மறுக்கவோ முடியாத ஒரு நிச்சயமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதாவது, நெடுங்காலமாக இந்தியாவின் பகுதியாக இருந்து மேலெழுந்தவாரியாக நிர்வகிக்கப்பட்டதும், இந்தியாவால் சிறிதளவு பூரணமாக நிர்வகிக்கப்பட்டு வருவதுமான ஒரு பகுதியில் சீனர்கள் பெரும் படையுடன் நுழைந்துள்ளனர். அவர்களுக்கு ஏதாவது உரிமை இருந்தால், அதைப் பற்றி விவாதித்திருக்கலாம்; அதைப் பற்றிப் பேசி பல்வேறு சமாதான முறைகளைக் கையாண்டிருக்கலாம் அல்லது மத்தியஸ்தத் தீர்ப்புக்கு விட்டிருக்கலாம் அல்லது ஹேக் நீதி மன்றத்துக்குச் சென்றிருக்கலாம்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். தற்போதைய சீன சர்க்கார் ஐ. நா. சபையில் அனுமதிக்கப்படாதது வருந்தத்தக்கதாகும். ஐ. நா. சபையில் சீனாவின் மக்கள் சர்க்காருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்பதை நாம் ஆதரித்தபோது கனம் அங்கத்தினர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இந்த ஆக்கிரமிப்பு நடைபெற்ற பிறகுங்கூட, நாம் அதை ஆதரித்தோம். ஏனென்றால், அது நமது விருப்பு வெறுப்பு பற்றிய பிரச்சினையல்ல. அது சீன ஆக்கிரமிப்புக்கு வசதி செய்யும் பிரச்சினையாகும்; உலகத்தில் ஆயுதக் குறைப்பு நடைபெறுதபடி அது செய்துவிடும். உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளில் ஆயுதக் குறைப்பு செய்துவிட்டு, இந்தப் பெரிய சக்திவாய்ந்த நாடான சீனா மட்டும், வேண்டிய அளவு ஆயுதங்களுடன் இருக்கும்படி விட்டுவிடுவதாகிவிடும். அத்தகையதொரு நிலைமையை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆகவே, சீனாவின் செயலுக்காக நாம் மிகவும் ஆத்திரமும், எரிச்சலும், கோபமும் கொண்டுள்ள போதிலும், நாம் விஷயங்களைத் தூரதிருஷ்டியுடன் ஆராய்ந்து வந்தோமென்றும், அதை இப்போதும் கூட ஆதரிக்கிறோம் என்றும் சொல்ல மகிழ்ச்சியடைகிறேன். இதிலிருக்கும் சிரமம் என்னவென்றால், சீனர்களை நீதி மன்றத்தின் முன்பாகவோ, உலக நீதி மன்றத்தின் முன்பாகவோ அல்லது வேறு எந்த இடத்திலுமோ கொண்டு நிறுத்த முடியாது. அது முற்றிலும் பொறுப்பற்ற நாடு. தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கு போர் ஒன்றுதான் வழி என்று நம்புகிறவர்கள். அவர்களுக்குச் சமாதானத்தில் நம்பிக்கையே கிடையாது. ஆனால், அவர்கள் பேசுவதோ அதைப் பற்றித்தான்; மிகுந்த படைபலம் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இந்தியாவுக்குமட்டுமல்ல, உலகம் முழுவதுக்குமே அபாயகரமானதாகும். நான் சிலரைப் போல கம்யூனிஸம் அல்லது கம்யூனிஸ எதிர்ப்பு பற்றிப் பேசப்போவதில்லை. இந்தச் சூழ்நிலையில் இந்த விஷயமோ, வேறு எந்த விஷயமுமோ பெரிய பிரச்சினை என்று நான் கருதவில்லை. கம்யூனிஸம் ஒரு வேளை அதற்கு உதவியாக இருக்கலாம். ஆனால், முக்கியமான விஷயம், நாடு பிடிக்கும் ஆசை

## பாரத சக்தியின் விசுவரூபம்



## ஆயுதம் செய்வோம்

கொண்ட ஏகாதிபத்திய வெறிபிடித்த நாடு, திட்டமிட்டு நாம் நாட்டின் மீது படையெடுத்திருக்கிறது என்பதுதான்.

இவ் விஷயத்தை வலியுறுத்துதற்குக் காரணம் சில நாடுகள் எந்த விஷயத்தையுமே கம்யூனிஸம் அல்லதுகம்யூனிஸ எதிர்ப்பு என்ற அடிப்படையிலேயே பரிசீலிக்கின்றன. அதன் விளைவாக, அப்பிரச்சினையின் அடிப்படை உண்மைகள் பலவற்றை அவர்களால் தெரிந்து கொள்ள முடியாமற் போகிறது. கம்யூனிஸம் உதவியாக இருக்கலாம்; அல்லது தடையாக இருக்கக்கூடும்; கம்யூனிஸம் அவர்களுக்கு ஓரளவு பலத்தைத்தருவதாக இருக்கலாம் அல்லது பலஹீனத்தை உண்டுபண்ணுவதாக இருக்கலாம்; அது எப்படியிருந்தாலும்சரி. இன்று நாம் எதிர்த்து நிற்பது, அப்பட்டமான ஆக்கிரமிப்பு. அதாவது, 18–வது, 19–வது நூற்றாண்டுகளில் நாம் கண்ட ஆக்கிரமிப்பைப் போன்றது. அப்போது எங்கும் கம்யூனிஸம் இல்லை.

எனவே, இந்தப் புதிய ஏகாதிபத்தியத்தை நமது எல்லையில் நாம் எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது. ஆசியா இந்தப் புதிய ஏகாதிபத்தியத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. உலகம் முழுவதுமே இதில் அக்கறை கொண்டிருக்கிறது. இப்போதைக்கு நமக்குத்தான் இது மிகவும் கவலை கொடுப்பதாக இருக்கிறது; நாம் இதை எதிர்த்தே ஆகவேண்டும்; இதன் முழுப் பளுவையும் நாமே தாங்கிக்கொண்டாகவேண்டும். நமது நேச நாடுகளில் சில நமக்கு நிச்சயமாக உதவியளித்து வருகின்றன. அதற்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆயினும், ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள பளுவை, நாம்தான் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாம்தான் சீனப் பிரதேசத்தின்மீது, இந்த ஆக்கிரமிப்பை எல்லாம் நடத்தியிருக்கிறோம் என்று சொல்லுவது இரட்டை நாக்குப் படைத்தவர்களின் பேச்சு; என் போன்ற எளிய மனது படைத்தவர்கள் இதைப் புரிந்து கொள்ள முடியாது! நாம் நம்மீதே ஆக்கிரமிப்புச் செய்கிறோம், நம் நாட்டின் மண்ணிலேயே நாம் ஆக்கிரமிப்பு செய்கிறோம்; அதைக் காப்பதற்காக அவர்கள் மலைகளையெல்லாம் கடந்து நம் பிரதேசத்துக்குள் வந்திருக்கிறார்கள்! விசித்திரமாகத்தான் இருக்கிறது! தங்களுடைய அடாத செயல்களுக்கு நியாயம் கற்பிப்பதற்காக என்னவெல்லாம் பேசத் தயாராயிருக்கிறார்கள்!

செப்டெம்பர் 8-ந் தேதியன்று அவர்கள் தாக்லா கணவாயைக் கடந்து பெரும் பலத்துடன் நம்முடைய பிரதேசத்துக்குள் நுழைந்த செய்தியை நாம் கேட்டபோது, நம்முடைய காவல் நிலையங்களில் போதிய படை பலம் இருந்தது என்பது உண்மையே. ஏதேனும் ஊடுருவல்கள் ஏற்பட்டால், அதை எதிர்த்துச் சமாளிப்பதற்குப் போதுமான படை பலம் நம்மிடம் இருந்தது என்பதில் ஐயமில்லை; ஆனால், பெரிய படைகள் வரும்போது, சாதாரண ராணுவக் காவல் நிலையங்கள் அவற்றை எதிர்த்து நிற்கமுடியாது. அந்தக் காவல் நிலையங்களைப் பலப்படுத்துவதற்காக மேலும் படைகளை அங்கு அனுப்பிவைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்தோம். அவற்றை உடனேயே அனுப்பிவைத்தோம்—அந்த நிலைமையில் அதைச் செய்தே ஆகவேண்டியிருந்தது. ஆயினும், துரதிருஷ்டமான ஒரு விஷயத்தை நாம் நினைவில் கொண்டாக வேண்டும். நம்முடைய படை வீரர்கள் திறமையானவர்கள் இளைஞர்கள், பலசாலிகள். ஆயினும்கூட, நம்முடைய இந்தப் படை வீரர்களை இந்தியாவின் சம வெளிப் பிரதேசங்களிலிருந்து, 14,000 அடி உயரத்திலுள்ள இடத்துக்குத் திடீரென்று அனுப்பிவைக்கிறோம். எந்த மனிதனுக்கும், அவன் எவ்வளவுதான் பலசாலியாக இருந்தாலுங்கூட. அவ்வளவு உயரமான இடங்களில் தங்கிப் பழகுவதற்குச் சிறிது காலமாகத்தான் செய்யும். ஆன போதிலும், அவர்கள் அங்கு போனார்கள்; அதைத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், சில படைகளை அனுப்பி வைத்தோம். சீனரின் தொல்லையைச் சமாளிப்பதற்கு அவை போதுமானவையா யிருக்கும் என்று நினைத்தோம். சீனர்களும் அங்கு தங்களுடைய படைகளைப் பெருக்கிக்கொள்ளத் தொடங்கினர். அது அவர்களுக்கு எளிதான வேலை; ஏனெனில், திபேத்தில் அவர்கள் ஏராளமான படைகளைக் குவித்து வைத்திருக்கின்றனர். அவர்கள் எவ்வளவு படைகள் வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. முன்பு 11 பிரிவுகள் வைத்திருந்தார்கள்; இப்போது திபேத்தில் மாத்திரம் 13 அல்லது 14 பிரிவுகள் வைத்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

முதலாவதாக, சீனப் படைகள் உயரமான திபேத் பீட பூமியில் நெடு நாள் வசித்து வந்தது காரணமாக

## ஓயுதல் செய்யோம்

# தலை சாயுதல் செய்யோம்

முற்றிலும் பழக்கப்பட்டுப் போனவர்கள். அது மலை உச்சிக்கோட்டில் இல்லை ; அதற்குச் சற்றுக் கீழேயே இருக்கிறது.

இரண்டாவதாக, திபேத் முழுவதிலும், கடந்த சில ஆண்டுகளில், ரஸ்தாக்கள் போடப்பட்டுவிட்டன ; கடுங்குளிர் உள்ள அந்தப் பிரதேசத்தில் ரஸ்தாக்கள் போடுவதென்றால் பாறைகளை அகற்றித் தரையை சமப்படுத்துவதென்று தான் அர்த்தம் ஏனென்றால், அவ்வளவு உயரத்தில் சிமிண்டோ மற்ற பொருள்களோ தேவையில்லை. தரையே மிகவும் கெட்டியாக இருக்கிறது. ஆகவே, நெடுகிலும் ரஸ்தாக்கள் போடப்பட்டுள்ளன ; அவர்கள் நினைத்த மாத்திரத்தில் திபேத்தின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குச் செல்ல முடியும்.

எனவே, அவர்கள் தாகலா கணவாயின் மறு பக்கத்தில் ஏராளமான படைகளைச் கொண்டுவந்து சேர்க்க முடிந்தது. அவற்றை நாம் உடனுக்குடன் பார்த்துவிட முடியாது ; ஏனென்றால், அது மலைக்கு அந்தப்பக்கத்தில் நடக்கிறது ; தாக்லா மலையைக் கடந்துவந்த சீனர்களின் படை பலம் அதிகரித்துக் கொண்டே வந்ததை நாம் பார்க்க முடியவில்லை. மலைக்கு அந்தப் பக்கத்தில் அவர்கள் தங்கள் படைகளைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருந்தனர். 20-ந் தேதியன்று, இந்தப் போர் துவங்கியதற்கு முந்திய சில நாட்களில் ஏராளமான ஆட்களை அவர்கள் அங்கு கொண்டு வந்து குவித்தனர். அது எவ்வளவு என்று எனக்குத் தெரியாது ; நம்முடைய துருப்புகளின் எண்ணிக்கையைப்போல், ஆறு, ஏழு அல்லது எட்டு மடங்கு இருக்கலாம். ராணுவ ரீதியான அனுகூலம் அவர்களுக்கு இருந்தது ; துருப்புகளை அங்கு கொண்டுவந்து குவிக்க முடிந்தது மாத்திரமல்ல ; தாக்லா மலைக்கு அந்தப் பக்கத்தில் உடனடியாகக் கொண்டுவந்து சேர்க்க முடிந்த எல்லாவிதமான பொருள்களையும் கொண்டுவந்து சேர்த்துத் தமது படைகளுக்கு அனுப்பிவந்தனர். நமக்குச் சில பிரதிகூலங்கள் இருந்தன. உள்ள விஷயங்களைத்தான் குறிப்பிடுகிறேன். நம்முடைய ஆட்கள் திடீரென்று அவ்வளவு உயரமானஇடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது ராணுவ ரீதியில் நமக்குப் பிரதிகூலமே. அவர்களுக்குத் தேவைப்படுகிற பொருள்களையும், ஆகாரத்தையும் விமானத்திலேயே அனுப்பவேண்டியதாக இருக்கிறது. நம்முடைய விமானப் படையினர் போற்றுதற்குரிய முறையில் அங்கு பணியாற்றியுள்ளனர். இத்தகைய மிக உயரமான மலைப் பிரதேசங்களில் சாதாரணமாக ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், சில சமயங்களில் எதிரியின் தாக்குதலையும் சமாளித்து, அத்தனை, பொருள்களையும் அவர்கள் கொண்டு போய்ச் சேர்த்திருக்கின்றனர்.

இங்கு மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தயாரின்மையைப் பற்றிப் பல வாறுகத் தாக்கிப் பேசப்பட்டிருக்கிறது. அவை பெரும்பாலும் அறியாமை காரணமாக ஏற்பட்டவையே என்று நான் கருதுகிறேன்.

கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயத்தை நினைவு படுத்த விரும்புகிறேன் ; நாம் சுதந்திரம் அடைந்தது வரை, பாதுகாப்பிலாகா (பிரிட்டிஷ்) யுத்தக் காரியாலயத்தின் கீழேயே முற்றிலுமாக இருந்து வந்தது யுத்தக் காரியாலயம் கொள்கையை நிர்ணயித்தது மாத்திரமல்லாமல், கூடிய வரையில், எல்லாப் பொருள்களும் 'வைட்ஹால்' மூலமாகவே வாங்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி வந்தது. சென்ற மகா யுத்தத்தின்போது யுத்த தளவாடங்களை வெளி நாட்டிலிருந்து-பிரிட்டனிலிருந்து கொண்டு வந்து சேர்ப்பது கஷ்டமாக இருந்ததால் சில யுத்த தளவாடத் தொழிற்சாலைகள் இங்கு தோன்றின. அப்படியிருந்துங்கூட, அவை மிகச் சாதாரணமானவையாகவே இருந்தன. எனவே, நாங்கள் முதலில் கவனிக்க வேண்டியதாக இருந்த பிரச்சினை, 'வைட்ஹால்' சூழ் நிலையிலிருந்து வெளியேறி எல்லாப் பொருள்களையும் அங்கிருந்தே வாங்குவது என்ற வழக்கத்தைக் கைவிட்டு, நம்முடைய கொள்கையை நாமே வகுத்துக் கொள்வது என்பதாகும். அவற்றையெல்லாம் நாங்கள் நல்லபடியாகச் சமாளித்து, கடந்த ஆண்டுகளில் இந்தத் தொழிலை இங்கு வளர்த்திருக்கிறோம் என்றே நான் கருதுகிறேன்.

## ஆயுத உற்பத்தி

ஆயுதங்களை வெளி நாடுகளிலிருந்து வாங்கிக்கொள்வதா அல்லது நாமே தயாரித்துக்கொள்வதா என்பது நம் இஷ்டத்தைப் பொறுத்த விஷயம். அவற்றை நாமே தயாரித்துக்கொள்வது எவ்வளவோ சிறந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை ; ஏனென்றால், அதனால், நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது ; இரண்டாவதாக வெளிநாட்டு சப்ளைகளையே நாம் எப்போதும், முற்றிலுமாக நம்பிக்கொண்டு இருக்க முடியாது. எந்தச் சமயத்திலும் அவர்கள் கையை விரித்துவிடக்கூடும் ; மேலும், பொருளாதார ரீதியிலும் அவற்றை வெளி நாடுகளிலிருந்து வாங்கிக்கொள்வது நல்லதல்ல. ஆகவே, ஆயுத உற்பத்தியை நம் நாட்டிலேயே மேற்கொள்வதற்கு இந்தத் தொழிலையும் பிறவற்றையும் வளர்ப்பதற்கும் நாம் முயன்று வந்திருக்கிறோம் ; அதில் நல்ல முன்னேற்றமும் கண்டிருக்கிறோம். ஒரு வேளை இதைவிட நன்கு செய்திருக்கலாமோ என்னவோ ; அது எனக்குத் தெரியாது



எத்தனையோ விதமான கஷ்டங்கள் தோன்றுகின்றன ; ஏனெனில், ஒரு தொழில், வளர்ச்சி பெறுவது நாட்டின் தொழில் வளம் முழுவதையும் பொறுத்ததாக உள்ளது. இந்த விஷயத்தில் நாம் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். இதற்கு மேல் விரிவாக அதைப் பற்றிச் சொல்ல நான் விரும்பவில்லை.

தாமே இயங்கும் துப்பாக்கிகள் பற்றியும் பிறபொருள்கள் பற்றியும் பலவாறுகக் குறைகூறப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக அவற்றை இங்கேயே தயாரிக்க நாங்கள் முயன்று வருகிறோம். பேடன்ட் உரிமைகள் பற்றியும், மற்றும் பல விஷயங்கள் பற்றியும், பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டுவந்தன ; சில சமயங்களில், போதிய அன்னியச் செலாவணி கிடைக்காததாலும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அன்னியச் செலாவணியில் நாம் எவ்வளவு செலவுசெய்ய வேண்டும் என்ற விஷயம், தொடர்ந்தேவரும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்தது ; கடைசியாக, இந்தக் கஷ்டங்களையெல்லாம் நாங்கள் ஒருவாறுகச் சமாளித்து, அவற்றின் உற்பத்தியை — தேதி நினைவில்லை — இந்த வருஷத்தில் துவக்கிவிட்டோம் ; இப்போது அவை இங்கேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னால், நமக்கு இருந்த ஒரே மாற்று வழி இந்த ஆயுதங்களை வெளி நாடுகளிலிருந்து பெரிய அளவில் வாங்குவதுதான். அதைச் செய்வதற்கு நாங்கள் தயங்கினோம் ; அவற்றை நாமே தயாரித்துக் கொள்ள விரும்பினோம். அவை வெளிநாடுகளிலிருந்து நிச்சயமாக நமக்குக் கிடைத்திருக்கும். ஆனால், ஒரு விஷயத்தை நினைத்துப் பாருங்கள். சமாதான காலம் என்று சொல்லக்கூடிய ஒரு காலத்தில், இந்த ஆயுதங்களையெல்லாம் வெளிநாடுகளிலிருந்து வாங்கிக்கொள்வதற்கு நாம் முயன்றிருந்தால், அதற்கு நாம் ஏராளமாக பணத்தைச் செலவு செய்தாக வேண்டியிருக்கும். நம்முடைய திட்டம் எல்லாம் அடியோடு பறந்து போயிருக்கும். ஏனென்றால், போருக்கு வேண்டிய ஆயுதங்களை வாங்குவதென்றால், ஆயிரம் கோடிகள் கணக்கில்தான் நாம் பேசவேண்டும். ஒன்றிரண்டு கோடி அல்ல, ஆயிரக்கணக்கான கோடிகள் செலவு செய்ய வேண்டிருக்கும். அது நம்முடைய பொருளாதாரத்தையே சிதறடித்திருக்கும். ஆனால், இப்போது நிலைமையே வேறு ; மிக ஆபத்தான நிலைமையை நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. இதை நம் மக்களும் உணர்ந்திருக்கிறார்கள் ; உலகமும் இதைக் காண்கிறது ; நமக்குச் சாதகமான வழிகளில் இப்பொருள்களை நாம் வாங்கிக் கொள்ள முடியும் ; நம் மக்களும் இதற்காக அதிகமாகச் செலவு செய்யவும் தயாராக இருக்கிறார்கள்.

விஷயங்களை உள்ளபடி சுட்டிக்காட்டுகிறேன்; அவ்வளவுதான். இவை போதுமான விளக்கமாக இல்லாதிருக்கலாம். ஆனால், இந்நாட்டில் நவீன முறையில் விமான உற்பத்தித் தொழில், ஆயுத உற்பத்தித் தொழில் ஆகியவற்றை அமைப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். பிற நாடுகளுடன், உதாரணமாக, அமெரிக்கா, சோவியத் யூனியன் அல்லது இங்கிலாந்துடன் போட்டி போடக்கூடிய அளவுக்கு நம தொழில்கள் வளமாக இருக்கமுடியாதென்பது வெளிப்படை. நம்முடைய ஆதாரத் தொழில்களிலோ, விஞ்ஞானத்திலோ நாம் அந்த அளவுக்கு முன்னேறிவிடுவதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல. ஆயினும், விஞ்ஞானத்துறையில் நாம் வெகுவாக முன்னேறியுள்ளோம். மிக உயர்தரமான பாதுகாப்பு விஞ்ஞான இலாகாவை நாம் ஏற்படுத்தியிருப்பது, மிக முக்கியமானதொரு முன்னேற்றமென்றே சொல்ல வேண்டும்; அதில் சுமார் 2,000 விஞ்ஞானிகள் வேலை பார்க்கின்றனர்.

எவ்விதமிருப்பினும், தவறுகள் செய்யப்பட்டிருந்தாலும், தாமதங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவை பற்றி ஆராய்வதற்கு இது தருணமல்ல. குற்றத்தைப் பிறர் மீது சுமத்தி, குறிப்பிட்ட ஓர் அதிகாரியோ அல்லது மந்திரியோ இதற்குப் பொறுப்பாளி என்று கூறுவது நல்லதல்ல. ஒரு விதத்தில் நாம் எல்லோருமே இதற்குப் பொறுப்பாளிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

நான் வெளிநாடுகளிலிருந்து திரும்பியது முதலே, அதாவது அக்டோபர் முதல் தேதியிலிருந்தே, தினந்தோறும் நான் தொடர்பு கொண்டு வருகிறேன். படைத் தலைவர்களும், மற்றவர்களும் ஒன்றுகூடி இந்த விஷயங்களை விவாதித்து வருகிறோம். அதற்கு முன்னால் பாதுகாப்பு மந்திரி காரியாலயம் மூலமாகவே நான் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தேன். போர் முறைகளையும், தந்திரங்களையும், தீர்மானிக்கவேண்டியவர்கள், படைத்தலைவர்களும் அவர்களுடைய ஆலோசகர்களுமே ; நானல்ல. இந்த விஷயத்தைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நான் அவர்களிடம் கேள்விகள் கேட்கலாம். யோசனைகள் கூறலாம். ஆனால், முடிவு செய்வது அவர்கள் கையில்தான் இருக்கிறது.

நாங்கள் எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொண்டோம். மறுநாளே—அதாவது அக்டோபர் 2—ந்தேதியே, ரஜாவில் சென்றிருந்த, சைன்ய சிப்பந்திகள் பிரிவுத் தலைவர் ஜெனரல் கௌலை திருப்பியழைத்தோம். அவரைப் பற்றி மிகவும் அசாதாரணமான, நியாயமற்ற விஷயங்கள்

# வீரஎழுச்சியின் கோர தாண்டவம்

குறைக்கப்பட்டிருப்பதால் அவருடைய பெயரை முக்கியமாகக் குறிப்பிடவிரும்புகிறேன். நாங்கள் அவரை வரவழைத்தோம். படைத் தலைமை ஏற்பாட்டை மாற்றியமைத்தோம். நேபாவிலிருந்து நாகாமலைப் பிரதேசத்தைப் பிரித்துத் தனியாக அமைத்தோம். இருபத்திநான்கு மணி நேரத்துக்குள்ளாக அவர் அங்கு போய்ச் சேர்ந்தார். சண்டை செய்வதில் அவருக்குப் பரிச்சயமே இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள்; அது சரியல்ல. அவர் பர்மாவில் போர் புரிந்து அனுபவம் பெற்றவர். காஷ்மீர் சண்டை துவங்கிய சமயம் அவர் வாஷிங்டனில் நம்முடைய ராணுவ ஆலோசகராக இருந்தார். தம்மை காஷ்மீருக்கு அனுப்பும்படி அவர் மன்றாடிக் கேட்டுக்கொண்டதன் பேரில், நாங்கள் அவரை அங்கு அனுப்பிவைத்தோம். நம்முடைய ராணுவ அதிகாரிகள் பலரையும் எனக்குத் தெரியும். அவர்களில் பலர் சிறந்தவர்கள்; தைரியத்திலும், சுய முயற்சியிலும், கடுமையான உழைப்பிலும், அவர்களை மிஞ்சக்கூடியவர்களை வேறு எங்கும் நாம் காண முடியுமா என்பதே எனக்குச் சந்தேகம். எவ்விதமிருப்பினும், கடுமையான பொறுப்பைத் தாங்கிக்கொண்டிருக்கும் நம்முடைய அதிகாரிகளைப்பற்றி அது கௌலாக இருந்தாலும் சரி, வேறு எவராக இருந்தாலும் சரி, அம்மாதிரியாகக் குறைகூறுவது, வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் குறைகூறி வெளிநாடுகளுக்குச் செய்தி அனுப்புவது, கொஞ்சங்கூட நியாயமல்ல. அது மிகவும் முறையற்றது. பெரிதும் பொறுப்பற்றது.

பின்னர், ஜெனரல் கௌல் அங்குப் போய்ச் சேர்ந்ததும்—அவர் இங்கிருந்து திடீரென்று 4-ம் தேதியன்று அங்குப் போய்ச் சேர்ந்தார். செங்குத்தான மலைப் பிரதேசங்களில் தினமும் 16 முதல் 20 மைல் வரை நடந்து சென்று நம்முடைய காவல் நிலையங்களைப் பார்வையிட்டு வந்தார். அதனால், அவர் சுகவீனமுற்றார். நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குப் பிறகு நமக்குத் தகவல் கொடுப்பதற்காக இங்கு திரும்பி வந்தார்.

ஒரு உண்மையைச் சபைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் படையெடுப்பு, அக்டோபர் 20-ந் தேதியன்று நேபாவில் மாத்திரம் நடைபெறவில்லை. அன்றைய தினம் லடாக்கிலிருந்து நேபா வரையில் எல்லை நெடுகிலும், இணைந்த முறையில் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, நேபாவில். நாம் அவர்களைத் தாக்கினோம் என்பதற்காக நாம் அவர்களைத் தாக்கி விரட்டியடிப்பது முற்றிலும் நியாயமே. அதை ஒரு சாக்காகக் கொண்டு நேபாவில் நாம் அவர்களைத் தாக்கியதாகவும். ஆகவே, லடாக்கிலிருந்து எல்லை நெடுகிலும் அவர்கள் நம்மைத் தாக்குவதாகவும் கூறுவது முற்றிலும் பொய்; அவர்களால் ஜோடித்த கதை.

# என்றும் எண்ணங்கள்

அக்டோபர் 20-ந் தேதிக்குப் பிறகு, 24-ந் தேதி என்று நினைக்கிறேன்—சீனப் படையெடுப்பின் மூல காரணத்தைச் சுட்டிக்காட்டி, அதை எதிர்ப்பதற்கு நாம் உறுதி கொண்டிருப்பதைக் குறிப்பிட்டு, எல்லா நாடுகளின் அதிபர்களுக்கும், அரசாங்கங்களின் தலைவர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. அதன் நகல் ஒன்று சபையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பலரிடமிருந்து, நமக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தில் அவர்களுடைய அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித்து நமக்குப் பதில்கள் வந்துள்ளன. இன்னும் சிலரிடமிருந்து பதில் வரவேண்டியிருக்கிறது.

அதற்குப் பிறகு, படையெடுப்புக்கு நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குப் பிறகு போர் நிறுத்தலுக்கான "மூன்று அம்ச யோசனை" ஒன்றை சீனப் பிரதம மந்திரி அறிவித்தார். அது தெளிவற்றதாக இருந்தது. அவர் என்ன சொல்லுகிறார் என்பதே தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், நாங்கள் புரிந்து கொண்டது என்னவெனில் நம்முடைய பிரதேசத்தில் அவர்கள் அப்போது இருந்த இடத்திலேயே தங்கியிருக்கும் உரிமையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது மாத்திரமல்லாமல், நம் படைகள் மேலும் சிறிது தூரம். சுமார் 20 கிலோ மீட்டர்கள் பின் சென்றுவிடவேண்டும். அதாவது, சீனப் படைகள், நம்முடைய பிரதேசத்தில் சிறிது தூரம் பின்னேறிச் செல்வார்களென்றும், நாம் மேலும் சிறிது தூரம் பின் செல்லவேண்டும். பின்னர் மீண்டும் நம்மைத் தாக்குவதற்காக, அவர்கள் நம்முடைய பிரதேசத்திலேயே தங்கியிருந்து, தங்களுடைய படை பலத்தை வலுப்படுத்திக் கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்புக்கிடைக்கும். இதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? இந்நாட்டில் மட்டுமல்ல, வெளி நாடுகளிலுங்கூட இதைப் பற்றிச் சிறிது குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நாம் விளக்கிக் கூறிய பிறகு பெரும்பாலோர் அதைப் புரிந்துகொண்டுவிட்டனர். நான் கூறுவது மற்ற நாடுகளைப் பற்றி.

நாம், விடுத்த பதிலில், அல்லது அறிவிப்பில் சீனப் படைகள் செப்டெம்பர் 8-ந் தேதியன்று இருந்த இடத்துக்குச் சென்றுவிட வேண்டுமென்றும், அதாவது மக்மகான் கோட்டுக்குப் பின்னால் போய்விடவேண்டுமென்றும், லடாக்கிலும், செப்டெம்பர் 8-ந் தேதிக்குப் பிறகு ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும் சொன்னோம். நம் நண்பர்கள் சிலர் இந்த யோசனை பலஹீனமானதென்றும், நம் பிரதேசத்திலிருந்து முற்றிலுமே வெளியேறிவிடவேண்டுமென்று நாம் கேட்டிருக்கவேண்டுமென்றும் கூறுகின்றனர். நல்லது, நாம் பலஹீனமாக இருக்கிறோமா அல்லது



பலத்துடன் இருக்கிறோமா என்பதை, சபையே முடிவு செய்துகொள்ளட்டும்; நாம் கூறும் யோசனைகள் நானாவித பிரதிபலிப்புகளையும் இருக்கவேண்டும்; எனினில் நாம் அதற்குப் பணிந்தால் மாத்திரம் போதாது; நாம் கூறுகிற யோசனை நியாயமானது, நிறைவேற்றிவைக்கக் கூடியது என்று, வெளியிலுள்ள நம் நண்பர்கள் நம்பும்படியாகவும் இருக்கவேண்டும். நேபா, லடாக் இரண்டு இடங்களிலும் செப்டம்பர் 8-ந் தேதி இருந்த இடத்துக்கு அவர்கள் போய்விடவேண்டும் என்பதுதான் நான் கூறிய யோசனை. அதன் பிறகு, நெருக்கடியைக் குறைப்பதற்கு மேற்கொண்டு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்காக, அவர்களுடைய பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று சொன்னோம். இதை ஒப்புக்கொண்டுவிட்டால், அதன் பிறகு தான், மூன்றாவது கட்டம்—அதாவது இந்தப் பிரச்சினையின் தாரதம்மியம்பற்றிக் கூடிப்பேசும் கட்டம்—வருகிறது. இந்த யோசனையை நாம் கூறினோம். அதன்படி நடக்கத்தயாராக இருக்கிறோம். இது நியாயமான யோசனையென்றே நான் கருதுகிறேன். எவ்விதமிருப்பினும், நிச்சயமாக கௌரவக் குறைவானதோ, பலஹீனமானதோ அல்ல.

அதற்குப் பிறகு, நம்முடைய வெளிநாட்டு நண்பர்கள் பலர்—நல்ல எண்ணங்கொண்ட நாடுகள், போரை நிறுத்துவதற்கும், பிரச்சினையின் தாரதாத்தைக்கொண்டு பரிசீலனை செய்வதற்கும் பல முயற்சிகளை மேற்கொண்டனர். சண்டையை நிறுத்துவதற்காக அவர்கள் செய்யும் முயற்சி, அல்லது அவர்கள் கொண்டுள்ள விருப்பம் மிகவும் போற்றத் தக்கது; அவர்களுடைய விருப்பத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால், உண்மையான விவரங்கள் அனைத்தும் அவர்களுக்குத் தெரியாததால், நிலைமைக்குப் பொருத்தமில்லாத சில யோசனைகளை அவர்கள் சில சமயங்களில் கூறிவந்தனர்.

## அதிபர் நாஸருக்குப் பாராட்டு

அந்த யோசனைகளில் ஒன்றை மாத்திரம் குறிப்பிடுகிறேன். அது ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் நாஸர் கூறியது. இவ் விஷயத்தில் அதிபர் நாஸருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தெரிவித்த யோசனை எதையும், காற்றுவாக்கில், கூறிவிடவில்லை. நாம் ஏதோ போரை விரும்புவதுபோல நினைத்துக்கொண்டு, சமாதானமாகவும், நல்லபடியாகவும் இருக்கும்படி சிலர் நமக்குப் புத்திமதி கூறுகின்றனர். உண்மையில் பார்க்கப்போனால், நமக்குப் போர் மனப்பான்மை சிறிதுகூடக் கிடையாது. அதனால்தான் யுத்த சம்பந்தமான காரியத்தில் பலஹீனம் ஏற்பட்டிருக்கிறது. நாம் அதை வளர்த்திருக்கலாம். ஆனால், அது வேறு

# யாவினும் வெற்றி

விஷயம். கடந்துபோன காலத்தைப் பற்றிதான் நான் பேசுகிறேன். ஆகவே, நல்ல பிள்ளையாக இருக்கும்படி நமக்கு புத்திமதி கூறுவதில் அர்த்தமே இல்லை. அவர்கள் இதில் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தெளிந்து அறியவேண்டும். அதிபர் நாஸர் சிரமம் எடுத்துக்கொண்டு, உண்மையான விஷயங்களைத் தெரிந்துகொண்டார். அதன் பிறகே, தம்முடைய யோசனைகள் அடங்கிய அறிக்கையை அவர் வெளியிட்டார். அவர் கூறிய யோசனைகளை நாம் கூறிய யோசனையைப் போலவே இருக்கவில்லை யென்றாலும், பெரும்பாலும் அதை ஒத்தாற்போலவே இருந்தன. துருப்புகள் செப்டம்பர் 8-ந் தேதிக்கு முன் இருந்த இடத்துக்குப் போய்விடவேண்டும் என்பது அதில் முக்கியமாக வற்புறுத்தப்பட்டிருந்தது. அது ஒரு பெரிய விஷயமேயாகும். அது நம் யோசனைக்கு ஒத்ததாக இருந்தது. அதிபர் நாஸரின் இந்த யோசனையை சீனா நிராகரித்துவிட்டது.

இந்த நெருக்கடி நம்மால் ஏற்பட்டதல்ல; நாம் நாடியதும் அல்ல. சீனா தான், ராணுவ பலம் கொண்டு, தாம் சொல்லிக்கொள்ளும் பிரதேச உரிமைகளை நிலைநாட்டப் புறப்பட்டிருக்கிறது. உண்மையில் அவர்கள் கோரிய பிரதேசத்தையும் கடந்து அவர்கள் முன்னேறி வந்துள்ளனர். நான் ஏற்கெனவே கூறியதுபோல், அவர்களுடைய எல்லை நகர்ந்துகொண்டே போகக்கூடியது. அவர்களால் கைப்பற்ற முடிந்ததெல்லாம் அவர்களுடைய எல்லையாகிவிடுகிறது.

நம் தாய் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் இந்த நடவடிக்கையில், எல்லா நேச நாடுகளின் உதவியையும் நாம் நாடியுள்ளோம். அனுதாபமும், ஆதரவும் கோரி நாம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, அதை நமக்கு அளித்து உடனடியாகப் பதில் அனுப்பியுள்ள பல்வேறு நாடுகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்நாடுகள் நமக்கு அளித்துள்ள உதவி நிபந்தனை அற்றது; தளைகள் அற்றது. ஆகவே, நாம் பெரிதும் மதிக்கும், கோஷ்டி சேராக் கொள்கையை அது நேரடியாகப் பாதிக்கவில்லை. நமக்கு உதவி அளித்துள்ள அந்த நாடுகளே இதை அங்கீகரித்துள்ளன. இந்தக்கொள்கையைக் கைவிட்டுவிடும்படி அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை என்பதை அந்நாடுகள் தெளிவுபடுத்தியுள்ளன. அமெரிக்காவும், பிரிட்டனும், மற்றும் சில நேச நாடுகளும், விரைவில் உதவி அளித்துள்ளன. மற்றும் பலருடன் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். சோவியத் யூனியன் பிரான்ஸ் போன்ற மற்ற நேசநாடுகளிடமும், சப்ளைகளும், ஆயுதங்களும் கேட்டிருக்கிறோம்.

# எடுத்தகாரியம் யாவினும் வெற்றி

### ஆக்கிரமிப்புக்குப் பணிய மாட்டோம்

பிற நாட்டின் பிரதேசம் எதையும் கவரும் விருப்பம் நமக்குக் கிடையாது என்று நாம் அடிக்கடி கூறிவந்திருக்கிறோம். நம்மிடமுள்ள பிரதேசத்தைக்கொண்டு நாம் முழுதும் திருப்தியடைந்திருக்கிறோம். ஆனால், இதில் வேறொரு விஷயமும் இருக்கிறது. தற்போது ஆக்கிரமிப்பாளர் ஆரம்ப வெற்றிகள் பெற்றுள்ளபோதிலும், எவரும் நம்முடைய பிரதேசத்தைக் கவருவதற்கு நாம் விட்டுவிடமாட்டோம். அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது; பேரம் பேசுவதற்கு இதை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ள விரும்புகிறார்களா அல்லது வேறு ஏதேனும் கெட்ட எண்ணங்கொண்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. நான் முன்னால் சொன்னதுபோல, விளைவுகள் என்னவாக இருந்தாலும் சரி நாம் அதற்குப் பணியப் போவதில்லை.

மற்றொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்; அது இந்தப் பிரச்சினைகளுடன், மறைமுகமாக அல்லாமல் நேரடியாகவே தொடர்புள்ளது. நம்முடைய அபிவிருத்தித் திட்டங்களையும், ஐந்தாண்டுத் திட்டத்தையுமே குறிப்பிடுகிறேன். "இந்தத் திட்டங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு யுத்த முயற்சியில் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். யுத்த முயற்சி என்பது என்ன? யுத்த முயற்சி என்னும்போது போர் முனையிலுள்ள படை வீரர்களைத்தான் மக்கள் நினைக்கிறார்கள். அது மிகவும் சரியானதே. ஆக்கிரமிப்பின் உக்கிரத்தையும், அபாயத்தையும் அவர்களே தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், நாம் இப்போது **ஈடுபட்டுள்ள இத்தகைய போராட்டத்தில் வயலிலுள்ள ஒவ்வொரு உழவனும் ஒரு போர் வீரர்; தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு போர் வீரர்.** நம்முடைய வேலை, நம்முடைய போர் முயற்சி, போர் முனையில் சண்டை போடுவதோடுகூட, வயலிலும், தொழிற்சாலையிலும் மிகப் பெரும் அளவில் உற்பத்தியைப் பெருக்குவதிலேயே முக்கியமாக அடங்கியிருக்கிறது. நாம் இதை நினைவில் கொள்ளவேண்டும். இந்த முயற்சி நம்முடைய அபிவிருத்தியையே பெரிதும் பொறுத்திருக்கிறது. வயலிலும் தொழிற்சாலையிலும் இத்தகைய முயற்சியை மேற்கொளவதற்கு, பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட மேலான நிலைமையில் நாம் இப்போது இருக்கிறோம். இதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். ஆனால், நாம் இன்னமும் போதிய அளவு அபிவிருத்தியடையவில்லை. இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, நம்மை அதிவிரைவில் அபிவிருத்தியடையும்படி செய்துவிடுமென்றே நான் நம்புகிறேன். தற்கால போர்ப்படைகள், நவீன ஆயுதங்களைக்கொண்டே போர் நடத்துகின்றன என்பதையும், அந்த ஆயுதங்களைத் தனது நாட்டிலேயே உற்பத்தி செய்து கொண்டாகவேண்டும் என்பதையும் நாம் எப்போதும் நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஆயுத உற்பத்தி, தொழில் அபிவிருத்தியையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது; தொழில் அபிவிருத்தியில் வெற்றி காணவேண்டுமானால், அதற்கு விவசாயம் அடிப்படை ஆதாரமாக அமைந்திருக்க வேண்டும். ஆகவே, நமது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடிப்படை அம்சங்களான விவசாயம், தொழில் ஆகியவற்றோடுகூடவே மற்றெல்லாத் துறைகளையும் நாம் அபிவிருத்தி செய்தாகவேண்டும். மின்சாரத்தை எடுத்துக் கொள்வோம். யுத்த முயற்சிக்கும் அது அத்தியாவசியமாயிருக்கிறது; தொழில்களுக்கும் தேவைப்படுகிறது; ஏன், விவசாயத்துக்கும்கூடத் தேவைப்படுகிறது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டத்தை கைவிட்டுவிடவேண்டும் எனப் பேசுவது, நமக்குப் பலம் கொடுக்கும் உண்மையான வருவாய்கள் எவை என்பதை புரிந்து கொள்ளாமலே பேசுகிற பேச்சாகும். ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும்; பல விஷயங்களில் அதற்கு மேலும் முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கும். அத்தியாவசியமற்றவையாகக் கருதப்படுகிற சில விஷயங்களில் வேகத்தைக் குறைத்துக் கொள்வதாக இருக்கலாம் அல்லது விட்டுவிடுவதாகவும் இருக்கலாம். ஆனால், பெரிய வேலைத் திட்டங்களைப்பற்றிய வரையில் நாம் முழு முயற்சியும் எடுத்துக்கொண்டே ஆகவேண்டும். பெரிய வேலைத் திட்டங்களுள் விவசாயம் மிக முக்கியமானதாகும். போதிய உணவு இல்லாமல் ஒரு நாடு எப்படி போர் நடத்த முடியும்? ஆனால், நமக்கு அந்த நிலைமை ஏற்பட்டுவிடுமென்று எனக்குத் தோன்றவில்லை நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; அது வேறு விஷயம். ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்துறை உற்பத்திக்குக் குறியளவுகளை நிர்ணயித்திருக்கிறோம்; கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில், குறிப்பாக இந்த ஆண்டில் வெள்ளப் பெருக்குகள் காரணமாகவும், பிற காரணங்களாலும், நாம் சிறிது பின் தங்கிவிட்டோம்.

ஆயினும், மூன்றாவது திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டதையும்விட, அதிகமான குறியளவுகளை எய்துவதற்கு நாம் முயன்றாகவேண்டும் நாம் அதை நிச்சயமாக அடைவோம் என்றே நான் நம்புகிறேன் நான் பொதுப்படையாகப் பேசவில்லை; அதை அடைய முடியும் என்றே நான் நினைக்கிறேன். குறியளவுகளை உணவு மந்திராலயத்தில் நிர்ணயித்து விட்டால் மாத்திரம், நாம் அதை எளிதில் அடைந்துவிட முடியாது.



# எங்கு நோக்கினும் வெற்றி வெற்றி

நாம் விவசாயிகளிடம் செல்லவேண்டும்; உழவர்களிடம் போகவேண்டும்; அவர்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள உற்சாகத்தையும், சக்தியையும், உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடுத்தவேண்டும். மக்களிடையே, தங்கள் சக்திக்கு ஏற்ற சிறு உதவி அளித்துள்ள விவசாயிகளிடேயே, ஏற்பட்டிருக்கும் உணர்ச்சிப் பெருக்கைவிட உவகை அளிப்பது, உற்சாகமளிப்பது வேறெதுவுமில்லை. அவர்கள் அவற்றையெல்லாம் உற்பத்திப் பெருக்கமாக மாற்றவேண்டும். நாம் அவர்களைச் சரியானபடி அணுகினால், அவர்களால் அதை நிச்சயமாகச் செய்ய முடியும். தொழில் துறையிலும் இப்படிதான்; கல்வி போன்ற பிற விஷயங்களிலும் கூட இதுவேதான். இவற்றையெல்லாம் யுத்த முயற்சியின் ஒரு பகுதியாகவே நாம் கருதவேண்டும். இதைச் செய்கையில், நாம் நம்முடைய **நாட்டை அதிவிரைவில் அபிவிருத்தி செய்து விடுவோம் என்பது மாத்திரமல்லாமல், நாட்டை அதிக பலங்கொண்டதாகவும் செய்து விடுவோம்; நாம் லட்சியமாகக் கொண்டுள்ள சோஷலிஸ அமைப்புக்கு அஸ்திவாரத்தையும் அமைத்து விடுவோம்.**

நாம் எதிர்த்து நிற்கும் அபத்து மிகக் கொடியது. இந்தச் சவாலை, நாம் வளர்ச்சி பெறுவதற்கும், நம்முடைய எல்லைகளைக் கவ்விக் கொண்டிருக்கும் இருள் சூழ்ந்த மேகத்தை, நாட்டின் சுதந்திரத்துக்கும், சுபிட்சத்துக்கும் ஒளிசரும் பிரகாசமான கதிரவனாக மாற்றிக்கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த விஷயத்தை நாடு முழுவதின் முயற்சியாகவே கொள்ளவேண்டும். ஆயுதம் தாங்கிய மக்கள் நமக்கு வேண்டுமென்று நாம் சொல்லலாம்; சிலர் அப்படியே சொல்லுகிறார்கள். ஒரு விதத்தில் அதுவும் உண்மைதான். ஆனால், நமக்கு உண்மையாகத் தேவைப்படுவது இந்த முயற்சிக்கு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வருவதேயாகும். அவர்கள், வயலில் இருந்தாலும் சரி, தொழிற்சாலையில் இருந்தாலும் சரி, போர்க்களத்தில் இருந்தாலும் சரி அவரவர் வேலையைச் செய்து வர வேண்டும்; அவர்களுடைய முயற்சி அனைத்தும் ஒன்று சேர்ந்து நாட்டைப் பலப்படுத்தி, நமக்கு வெற்றியைத் தேடிக்கொடுக்கும். ஆகவே, போர்க் கருவிகள் கொண்டு மாத்திரமல்லாமல், விவசாயம், தொழில் ஆகியவை போன்ற ஆயுதங்களாலும், நாம் நம்மை ஆயுதபாணிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

நம்முடைய பொறுப்பை நான் குறைத்து மதிப்பிடவில்லை. எவரும் அதைக் குறைத்து மதிப்பிடவேண்டாம்; அதைப் பற்றித் தவறான எண்ணமும் கொள்ள வேண்டாம். அப்போதைக்கு ஏற்படுகிற உற்சாகத்தைக் கொண்டு, அல்லது ஒன்றிரண்டு மாதங்களே நீடிக்கக் கூடிய உற்சாகத்தைக் கொண்டு சமாளிக்கக்கூடிய விஷயமல்ல இது. இது கடினமான நீண்ட கால முயற்சியாகவே இருக்கப்போகிறது. நாம் இயன்ற மட்டும் இதற்குப் பாடுபட்டாகவேண்டும். **பாதுகாப்பு நிதிக்கு ஏதோ சிறிது தொகை கொடுத்து விட்டால் மாத்திரம் போதாது** அல்லது வேறு ஏதோ சில காரியத்தை செய்துவிட்டால் மாத்திரம் போதாது. அந்த அளவில் அதுவும் நல்லதுதான். மக்கள் தங்களால் முடிந்த மட்டும் பிரயாசைப்பட்டு பாதுகாப்பு நிதிக்குப் பணம் கொடுத்து வருவதைப் பார்க்கப் பரவசமாகவே இருக்கிறது. **நம்முடைய பலத்தையும் உறுதியையும் கடைசி வரை கடைபிடிக்க வேண்டும்.** அந்த முடிவு சமீபத்தில் இருக்காதென்றே தோன்றுகிறது. ஆகவே, இன்றைக்கோ நாளைக்கோ மாத்திரமல்லாமல், இந்தத் தொல்லைய அகற்றும் நாள் வரைக்கும் நாட்டைப் பலப்படுத்துவதற்காக எல்லா வழிகளிலும் நம்மைத் தயார் செய்து கொண்டாக வேண்டும். நாம் அதைச் செய்வோமேயானால், நம்முடைய மக்களிடத்தில் எதிர்பார்க்கும் உறுதியையும், தைரியத்தையும் நாம் வெளிப்படுத்த முடியும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. தற்போது காணப்படுகிற உற்சாகத்திலிருந்து அதை நாம் ஓரளவு கண்டுகொள்ள முடிகிறது இந்தக் காட்சி பெரிதும் மனதை உருக்குவதாக இருக்கிறது. நம் மக்கள் இளைஞர்கள் மட்டுமல்ல, வயோதிகர்களும் ஆண்களும்—பெண்களும்—சின்னஞ்சிறு குழந்தைகளும் தாங்களாகவே முன் வருவதும், அவர்கள் காட்டும் உற்சாகமும் உள்ளத்தை உருக்கும் காட்சியாக இருக்கிறது.

### அரும்பணியாற்றும் ஜவான்கள்

எனது உரையை முடிப்பதற்கு முன்னால், மிகவும் அசாதாரணமான, கஷ்டங்கள் நிறைந்த சூழ்நிலையில் பணியாற்றி வருகிற நம்முடைய படை வீரர்கள் பற்றியும் விமானிகள் பற்றியும் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். உங்கள் சார்பில், நம்முடைய பாராட்டுதல்களையும், நம்முடைய முழு ஆதரவும் அவர்களுக்கு உண்டு என்ற உறுதி மொழியையும். அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டைப் பாதுகாக்கும் பணியில் உயிர் நீத்தவர்களுக்கும் நம்முடைய மரியாதையைத் தெரிவித்துக்கொள்வோம். நாமோ, நமக்குப் பின்னால் வருபவர்களோ அவர்களை மறக்கவே மாட்டார்கள். சமாதானத்தையே நாடி வந்துள்ள சுதந்திர இந்தியா—இனியும் எப்போதுமே மற்ற நாடுகளுடன் சமாதானத்தையும் நட்பையும் கடைப்பிடித்து வரப்போகும் சுதந்திர இந்தியா—ஆக்கிரமிப்பையோ படையெடுப்பையோ சகிக்கவே சகிக்காது என்பதை உலகுக்கு நிரூபித்துக் காட்டும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நாம் சமாதானத்துக்காக உழைத்து வந்திருக்கிறோமென்றால், இனியும் அதற்காகவே உழைத்து வருவோமென்றால், இப்போது நிகழ்ந்திருப்பது போல்நாம் தாக்கப்படுவோமேயானால், போருக்காகவும் நாம் பயன்தரும் வகையில் உழைக்க முடியும்.

# சீனத்தலைவரின் பகற்கனவு

*சீனர்கள் தங்களைச்சமாதான வாதிகளென்றும், சகிப்புத் தன்மை நிறைந்தவர்களென்றும், கண்ணியமானவர் களென்றும், நம்பவேண்டுமென்று விரும்புகின்றனர்.*

*ஒரு வேளைச் சாப்பாட்டிற்காக பஞ்சத்தையும் வெள்ளத் தையும், வெட்டுக்கிளிகளையும் எதிர்த்துப் போராடி வருகிற ஏழைச் சீன விவசாயி விஷயத்தில், அது உண்மையாக இருக்கலாம். எளிய தொழிலாளர் விஷயத்திலும் அது உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், சீனாவில் ஆட்சி செலுத்தும் கும்பலைப் பொறுத்த வரையில் அது ஒருபோதும் உண்மையாக இருக்கமுடியாது.*

*சீனர்களுக்கு உலகமே மிகச் சாதாரண விஷயந்தான். அவர்கள் எண்ணப்படி உலகத்தை ஆளுவதற்கென்றே பிறந்தவர்கள் சீனர்கள்பிற நாட்டில் வாழ்பவர்கள் குரங்கு களும், காட்டுமிராண்டிகளும் என்பதுதான்.*

*இது ஹிட்லருடைய ஜெர்மனியின் "ஹொரன்வோல்க்" தத்துவத்தை நினைவுக்குக்கொண்டு வருகிறது. பீகிங்கும் சொர்க்க சாம்ராஜ்யத்தின் தலைமைப் பீடந்தானே! சீனர் களும், நாஜிகளைப் போல, யுத்தமில்லாவிட்டால் சோர்ந்து விடுவார்கள்.*

*சீனாவிலும் சில வேளைகளில் மந்தம் ஏற்படுவதுண்டு. சக்கரவர்த்திகள் தோல்வியடையும்போது பொறுமையின் பொக்கிஷமான இந்தச் சீன ஆத்மாக்கள் நல்ல காலம் வருமென்று காத்திருப்பார்கள். ஐரோப்பியர்கள் சீனா வில் புகுந்தபோதும் அப்படிதான். அப்படியிருந்தும் போர் அரக்கர்களும், அவர்களுடைய கூலிப் பட்டாளங்களும் சுகபோகத்தை அநுபவித்துத்தான் வந்தன.*

*ஆனால், இதில் இன்னொரு அம்சமும் இருக்கிறது. மாபெரும் அறிஞர் டாக்டர் சன்-யாத்-சென் தோற்றுவித்த ஜனநாயகத் தத்துவத்தை வளர விட்டிருந்தால் சீன வரலாறு ஒருவேளை மாறியிருக்கக் கூடும்.*

*ஆனால், துரதிருஷ்டவசமாக அப்படி நடைபெறவில்லை. அதன் முளை வளருவதற்கு முன் சீனர்களின் பிறவிக் குணம் ஓங்க ஆரம்பித்துவிட்டது.*

*மாவோதுங்கும் அவருடைய தோழர்களும், விடுதலை யாளர்கள் என்றுதான் சொன்னார்கள். அப்படித்தான் அவர்கள் நடித்து வந்தார்கள். அதனால்தான் அவர்கள் ஒரு காலத்தில் வெற்றியடைய முடிந்தது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, அவர்கள், நீண்ட யாத்திரையின் போது தூக்கிப் பிடித்திருந்த கொடிகளில் காணப்பட்ட வாசகங்கள் உன்னதமாக இருந்தன. "காலனி ஆட்சி யிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் விடுதலை" என்று அவர்களுடைய தோழர்கள் கையை உயர்த்தி வானதிர முழங்கினார்கள். விவசாயச் சீர்திருத்தம் வேண்டுமென்று விரும்பினார்கள். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் என்றார்கள் அவர்கள் எதைத்தான் கேட்கவில்லை.*

*அவர்கள் அப்படி வந்துக்கொண்டிருக்கும்போதே மதிப்புக்குரிய மாவோ திடீரென்று பல்டி அடித்தார். இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னால் சென்று ஆக்கிரமிப்பு என்னும் காட்டுமிராண்டித் தனத்தில் இறங்கி விட்டார்.*

*டில்லி பத்திரிகை ஒன்று சொன்னது போல, மோவ் "ஏனன்" குகைகளிலிருக்கும் போதே சீன சொர்க்க சாம்ராஜ்யத்திற்கு உயிரூட்டுவதைப் பற்றித்தான் கனவு கண்டிருந்தார் போலும்.*

*மோவின் சீனாவில் பழைய சர்வாதிகாரத்தின் தணியாத பேராசைகளுக்கு உயிரூட்டப்பட்டிருப்பதைக் காணலாம். அவர்களுடைய ஆயுதங்கள் இப்போது கூர்மையாகிவிட்டன. அவ்வளவுதான். எடுக்க எடுக்கக் குறையாத ஆள் பலம் இன்னும் அவர்கள் கையிலிருக்கிறது. தாராளமாக செலவழித்துக் கொள்ளலாம். ஏமாற்றும் தந்திரத்தி லும் முன்னேறியிருக்கிறார்கள்.*

*சோஷலிஸம், சமாதானத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட தாக அவர்கள் கூறுகிறார்கள். மோவின் சோஷலிஸம் அது அல்லபோலும். புராதன ஏகாதிபத்தியத்தின் சின்னம்தான் அவருடைய சோஷலிமாக விளங்குகிறது.*

## கிழோர்க் கஞ்சேல்



## கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம் :

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களுக்கும், அவர்கள் மூலம் எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர் களுக்கும் அனுப்பிய வேண்டுகோளில், தேசப் பாதுகாப்புக்கு, பஞ்சாயத்துக்கள் ஆற்றவேண்டிய செயல் திட்டம் விளக்கப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே கிராம வானொலி நிகழ்ச்சிகளிலும் ஒலிப்பரப்பாகியது நினைவிருக்கலாம். —ஆசிரியர்.

*பாரத நாட்டின் சுதந்திரத்துக்கு அபாயம் ஏற்பட் டுள்ள இந்தச் சோதனை காலத்தில் அரசாங்கத்திற்குப் பக்கபலமாகப் பொது மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நமது உற்சாகத்தையும், தேச பக்தியையும் காரியத்தில் காட்ட முன்வந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்.*

*நமக்கு இப்போது ஏற்பட்டுள்ளது நமது நாட்டின் தற்காப்புப் போர் ; ஆக்கிரமிப்புக்காரர்களைத் துரத்தியடித்து நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் புனித யுத்தம். ஒவ்வொருவரும் தமது பொறுப்பை உணர்ந்து தமது நிலைமைக்குத் தகுந்தாற்போல சேவைசெய்யும் நெருக்கடி இப்போது ஏற்பட்டுள்ளது. இதுவரையில் நாடெங்கும் தோன்றியுள்ள மக்களின் உற்சாகத்தைப் பார்க்கும்போது நமக்கு வெற்றி நிச்சயம் என்று உறுதியாக நம்பலாம். எனவே ஜனநாயக ஆட்சியில் நாம் பரிபூரண நம்பிக்கை வைத்தது வீண்போகவில்லை. நெருக்கடி ஏற்பட்டுள்ள இந் நிலையில் நமது பிரதமர் நேரு சொல்லியதுபோல "பாரத நாடு விசுவரூப தரிசனத்துடன்" விளங்குகிறது. பாரத மக்கள் இந்தத் தர்ம யுத்தத்தில் பரிபூரணமாக வெற்றி பெறுவது நிச்சயம்.*

*பொதுஜன உற்சாகத்தைப் பயனுள்ள காரியங்களுக்காக உபயோகிக்கும் பணியில் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சா யத்து யூனியன்களுக்கும் விசேஷ பொறுப்பும் முக்கிய கடமைகளும் உள்ளன. இன்றைய தினம் நமது தமிழ் நாடு அரசாங்கம் ஜனநாயக முறையில் அமைந்த ஸ்தல ஸ்தாபனங்களின் அடிப்படையில் அமைந்து இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. இதுவே இப்போதுள்ள நிர்வாகத்திற்கும் புதுபலமும் உரமும் அளிப்பதாகவே அமைந்துள்ளது.*

*எனவே, பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் தேசிய நெருக்கடி சமயத்தில் என்ன செய்யலாம் என்ப தைப்பற்றிச் சுருக்கமாக ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.—*

*1. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வசூலிப்ப தைக் குறித்து 1962–ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் தேதியில் ஏற்கெனவே ஓர் உத்தரவு (கிராம நல, தல நிர்வாகத்துறை அரசாங்க ஆணை எண் 2475) வெளியாகி யுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் தாமே முன்வந்து பணியாற்றும் நிறுவனங்கள் மூலம் நன்கொடை வசூலிப்பதைப்பற்றி அதில் தகுந்த ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இந்த வகையில் பொது ஜனங்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. எதிர் பார்த்ததிற்கும் மேலாக மக்களின் உற்சாகம் பெருக் கெடுத்திருக்கிறது. இன்னும் பலர் மேலும் மேலும் நன்கொடை அளிக்க ஆர்வத்தோடு முன் வந்துகொண் டிருக்கின்றனர்.*

*2. யுத்த நிதி வசூலுக்கான உண்டிப்பெட்டிகள் கலெக்டர் மூலம் உங்களுக்கு, சீக்கிரத்தில் கிடைக்கும். உங்கள் யூனியனில் எவ்வளவு நிதி சேர்க்கவேண்டும் என்பதைப் பற்றி நீங்களே ஒரு லட்சிய அளவு ஏற்படுத்திக்கொள்வது அவசியம் என்று நினைக்கிறேன். என்னைக் கேட்டால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள ஜனத் தொகையை ஆதாரமாகக்கொண்டு* **ஆள் ஒன்றுக்கு ஒரு ரூபாய்** *என்ற விகித அளவினை வைத்துக்கொள்வது நலம். உதாரணமாக உங்கள் யூனியன் ஜனத்தொகை அறுபதினாயிரம் என்றிருந்தால் திரட்டவேண்டிய நிதி அளவு குறைந்தபட்சம் அறுபதினாயிரம் ரூபாய்கள் என்று ஒரு லட்சிய அளவு வைத்துக்கொள்ளலாம். இந்த விகிதா சாரப்படி யுத்த நிதி சேர்க்கும் வேலை தொடங்கிவிட்டால் நாடெங்கும் மகத்தான காரியங்கள் நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை. நமது ராஜ்யத்தில் சுமார் மூன்றுகோடி பேர் கிராமவாசிகள். எனவே, மேலே குறித்த விகிதா சாரப்படி சுமார் மூன்று கோடி ரூபாய் நிதி திரட்ட இதனால் வழி பிறக்கும்.*

*3. யுத்த நிதி ரொக்கப் பணமாக வேஇருக்கவேண்டு மென்பதில்லை. அறுவடை காலங்களில் கிடைக்கும் விளை பொருள்களாகவும் இருக்கலாம். அவ்வாறு சேகரித்த வற்றை விற்று ரொக்கமாக்கிக் கொள்ளலாம். இவை தவிர முடிந்த அளவு தங்கமும், நகைகளும் கொடுக்கலாம். தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தங்கம் மிகவும் அத்தியா வசியமான பொருளாகும். யுத்த நிதி வசூல்பற்றிய கணக்குகளும், ரசீதுகளும் சரியான முறையில் வைத் திருக்கப்படவேண்டியது மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்திச் சொல்லத் தேவையில்லை. எந்தவிதமான புகார்களுக்கும் இதில் இடம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.*

*4. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வசூலிப்ப தோடு யுத்த நிதி உதவி நின்றுவிடக்கூடாது. பாதுகாப்புப் பத்திரங்களில் பணத்தைச் சேமித்து வைக்குமாறு பொது மக்களை வேண்டிக்கொள்வது அவசியம். இந்தச் சேமிப்புப் பத்திரங்கள் வாங்குவது பற்றியும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு குறிக்கோள் அளவு ஏற்படுத்திக்*

## மன்னும் இமய மலை எங்கள் மலையே

கொள்வது நல்லது. இதுவும் முன்சொன்னதுபோல ஜனத்தொகையை ஒட்டி ஆள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்ற விகிதாசாரத்தில் இருக்கலாம்.

5. பொதுவாக எங்கும் சிக்கனம் கையாளப்பட வேண்டும். அநாவசியமான செலவுகளையும், ஆடம்பரமான விழாக்களையும் நீக்க வேண்டும். தேசம் முழுவதும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நேரத்தில் பொருளையும், நேரத்தையும், மற்ற சக்திகளையும் வீண் விரயம் செய்யாமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம். பொது மக்கள் அனைவரும் இதை நன்கு உணர்ந்து நடந்துகொள்ளுமாறு செய்யவேண்டும்.

6. யுத்த முயற்சிக்குப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் சிறந்த முறையில் உதவக்கூடிய வழி, விவசாய உற்பத்தியை மிகவும் தீவிரமாகப் பெருக்க முயல்வதுதான். புதிய பஞ்சாயத்து ஆட்சியில் விவசாய உற்பத்திக்கே முக்கிய பொறுப்பு அளிக்கப்பட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. இதற்காகத் தமிழ்நாடெங்கும் உள்ள பஞ்சாயத்துக்களில் "கிராம உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள்" அமைக்கவும் அதற்குத் தக்க உதவி புரியும் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கவும் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தீவிரமான முறையில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உணவுத் தானியங்களோடு பழ வகைகள், காய்கறிகள், மீன், முட்டை, பால் முதலிய பல்வேறு உணவுப்பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்ய தீவிர முயற்சி செய்யவேண்டும்.

7. யுத்தத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்பும் வீரர்களைத் திரட்டும் அதிகாரிகளுக்கு எல்லாவித உதவியும் செய்து தர வேண்டும். அதாவது, நமது ராணுவத்தில் சேருவதற்குக் கிராமங்களில் உள்ள திடகாத்திரமான ஆட்கள் பலர் தயாராக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் சரிவர அறிந்து சேகரித்து வைத்துக்கொள்ளலாம். இவ்வாறு சேகரித்து வைக்கப்படும் விவரங்கள் குறுகிய கால அளவில் யுத்த வீரர்களைச் சேர்ப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

8. கிராமங்களுக்கு யுத்த நிலவரத்தைப்பற்றிய சரியான செய்திகளை அறிவித்து நாட்டிலே தக்க சூழ்நிலையை ஏற்படுத்த உதவி செய்ய வேண்டியது மிக முக்கியமான பொறுப்பாகும். நமது நாட்டின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப்பற்றி மக்கள் உணர்வும், அதை நீக்குவதற்காகச் சதாசர்வ காலமும் விழிப்போடு சேவை செய்ய வேண்டிய கடமையையும், ஒற்றுமையோடு கூடிய முயற்சியையும் வற்புறுத்திக்கொண்டேயிருக்கவேண்டும். மக்களிடையே பீதி ஏற்படக்கூடிய தவறான செய்திகளும், வதந்திகளும் பரவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பொறுப்பு மிகுந்த பத்திரிகைகளில் வரும் ஆதாரபூர்வமான செய்திகளைத் தவிர மற்றவற்றை யாரும் நம்பக் கூடாது. இதற்காகவே அகில இந்திய ரேடியோ நிலையங்களில் விசேஷ நிகழ்ச்சிகளும், உண்மையான செய்தி அறிக்கைகளும் அடிக்கடி ஒலிபரப்பாக அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. கிராம ஜனங்கள் வானொலி நிகழ்ச்சிகளையும், யுத்த நிர்வாகத்தையும் அறிவதற்கு பஞ்சாயத்து ரேடியோ பெட்டிகள் மிகவும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 12,500 பஞ்சாயத்துக்களில் சுமார் 10,000 பஞ்சாயத்துக்களில் இப்போது ரேடியோ செட்டுகள் உள்ளன. மற்றவற்றிற்கும் விரைவில் ஏற்பட ஆவன செய்யலாம். கிராம ஜனங்களின் சந்தேகங்களை போக்குவதற்கு சமீபத்தில் தோன்றியுள்ள 'கிராம வானொலி மன்றங்கள்' பெரிதும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

9. பாரத நாட்டின் எல்லையைக் காக்கும் போரில் ஈடுபட்டுள்ள நமது ஜவான்களின் வீரமும், தீரமும் போற்றிப் புகழ்தற்குரியன. தம் உயிரையே பணயமாக வைத்து, குடும்பப் பாசத்தைத் துறந்து, நமக்காக—நமது நாட்டின் சுதந்திரத்துக்காக அவர்கள் மாபெரும் தியாக வேள்வியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தியாக புருஷர்களின் குடும்பத்தினர் பலர் நமது கிராமங்களில் வாழ்கின்றனர். அந்தக் குடும்பத்தினருக்கு எல்லாவிதமான உதவியையும் உள்ளன்போடு செய்ய வேண்டியது நமது பொறுப்பு. நாட்டின் பாதுகாப்பின்பொருட்டு கடமையாற்றச் சென்ற ஜவான்களின் குடும்பங்களை அன்போடு கவனித்துக்கொள்ள பலர் இருக்கிறார்கள் என்ற எண்ணம் நமது படைவீரர்களின் தீரத்தை மேலும் உரமூட்டி வளர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

10. மேலே குறித்த லட்சியங்களைப்பற்றி நன்கு ஆலோசித்து திட்டமிட்ட வகையில் விரிவான நடவடிக்கைகளைப் பஞ்சாயத்து யூனியன் தக்க முறையில் எடுத்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். இவற்றில் ஒவ்வொன்றையும் குறித்து நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை அறிவதில் எனக்கு மிகுந்த அவா உண்டு.

தேசப் பாதுகாப்பு முயற்சிகளுக்காகத் தாங்களும், தங்களுடைய கவுன்சில் அங்கத்தினர்களும் மேற்கொள்ளும் எல்லாவிதமான முயற்சிகளுக்கு அவசியமான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்குத் தனியாக எழுதியிருக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

1—12—62.

**இன்னல் வந்துற்றிடும் போது, அதற்கஞ்சோம்**





# நிர்வாக சிக்கல்களை நீக்கும் வழி

## பரஸ்பர சகிப்புத் தன்மையும் விடாமுயற்சியும் அநேக பிரச்சினைகளைத் தீர்க்கும்

**திருச்சியிலிருந்து வெளிவரும் "பஞ்சாயத்துச் செய்தி"யின் 1962-ம் வருடம் செப்டம்பர் மாதம் 28-ம் தேதிய இதழில், பஞ்சாயத்துத் தலைவர் ஒருவர், ஒருசில நடைமுறைப் பிரச்சினைகளைக் குறித்து எழுதிய கடிதம் வெளிவந்துள்ளது. அனுபவத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு, அவ்வப்போது தீர்வு கண்டு, பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகள் தடையின்றி நடைபெற வேண்டுமென்பதே, அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆகவே, அவர் கூறியுள்ள பிரச்சினைகள் குறித்து, அரசாங்கத்தின் அதிகார பூர்வமான விளக்கம் கீழே தரப்படுகிறது.**

1962-ம் ஆண்டு செப்டம்பர் 28-ந் தேதியில் வெளிவந்த "பஞ்சாயத்துச் செய்தி" வாரப் பத்திரிகையில், உக்கடை அரியமங்கலம் பஞ்சாயத்துத் தலைவர் (திரு டி. பி. பக்கீர் முகமது சாயபு அவர்கள்) புதிய பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான சில பிரச்னைகளையும், நடைமுறை அனுபவங்களையும் எழுதியுள்ளார். (அதன் சுருக்கம் வருமாறு : "முன்சீப்–கர்ணங்கள், பஞ்சாயத்துக்களில் திறம்பட செயல்பட முடியவில்லை—புறம்போக்கு நிலங்கள் இன்னும் ஒப்படைக்கவில்லை. பொது நிலமே இல்லாதபோது, அரசாங்கம் கூறுகின்ற மரங்களை எங்கே வைப்பது ?—கிராம சேவக்–சேவகி முதலியவர்களால் பஞ்சாயத்துக்களுக்கு ஒருவித சௌகரியமும் ஏற்படவில்லை—யதார்த்த நிலையில் ஒவ்வொரு காரியத்திலும் மேலதிகாரிகளைப் பார்த்து உத்தரவு கேட்டுச் செய்ய வேண்டி இருக்கிறது—காரியங்கள் நடைபெற, வீண் கால தாமதம் ஆகிறது".)

அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் கூறும் அனுபவங்கள், ஒன்பது 'பாராக்களில்' அடங்கியுள்ளன. நடைமுறை சிக்கல்களை அறிவதற்கு இவை ஓரளவு உதவலாம். அத்துடன், மற்ற பல்வேறு பஞ்சாயத்துக்களிலும், இது போன்ற குறைகள் இல்லாமல கவனிக்கவும், இவை பயன்படலாம். இவற்றை யெல்லாம் ஆர அமர யோசித்துப் பார்த்த பிறகு, கீழே காணும் விளக்கம் தரப்படுகிறது :—

மேற்சொன்ன விஷயங்களை வெளியிடும்போது தலைவர் அவர்கள் தமது ஊர் பஞ்சாயத்து அங்கத்தினர்களின் ஆலோசனைப்படி எழுதுவதாக தமது கடிதத்தை ஆரம்பித்திருக்கிறார் இது மிகவும் சந்தோஷத்துக்குரிய காரியமாகும். பஞ்சாயத்தில் பொறுப்பு வகிக்கும் பல்வேறு அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்கும் ஜனநாயக முறையில், அவருக்கு நம்பிக்கை இருப்பது அதன் மூலம் தெளிவாகிறது. இது தான், புதிய பஞ்சாயத்து ஆட்சியில், தலைமைக்கு வேண்டிய குணமாகும்.

அவர் கூறியுள்ள நடைமுறைப் பிரச்னைகளில், முதலாவது, கிராமக் கர்ணம், முன்சீப் முதலியவர்களைப் பற்றியதாகும். புதிய பஞ்சாயத்து ஆட்சியில், முன்சீப், கர்ணம் முதலான கிராம அதிகாரிகளின் ஒத்துழைப்பு, எவ்வளவு முக்கியம் என்பதை, அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது ; இதற்காகவே கடந்த சுமார் இரண்டு வருஷங்களாக, தகுந்த நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. கிராம அதிகாரிகளுக்கு, "பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ்" என்ற விசேஷ ஊதியம் தர ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கான கிராமத் திட்டங்களைத் தயாரிக்கவும், பஞ்சாயத்துக்களுக்குச் சேரவேண்டிய மானியங்கள், வரிகள் பற்றிய கணக்குகளை நிர்வகிக்கவும் வரிவசூல் பொறுப்பை ஏற்று நடத்தவும், வழிவகை செய்யப்பட்டது. இதன் பலனாக, அநேகப் பஞ்சாயத்துக்களில் கிராம அதிகாரிகளின் ஒத்துழைப்பு மூலம் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. பஞ்சாயத்து வரிவசூல், திருப்திகரமாக நடந்து வருவதும், எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. எனவே, பழைய தவறான போக்கிலேயே போய்க்கொண்டிருப்பவர்கள், சீக்கிரமாகத் திருந்தி விடுவார்கள் என்று நம்பலாம்.

இரண்டாவது முக்கியப் பிரச்னை, புறம்போக்கு நிலங்களைப் பற்றியது. கிராமத்தின் பொது நிலங்களை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்து, 1960-ம் வருடத்திலேயே அரசாங்கம் உத்தரவிட்டது. அதற்குப் பின், 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதியில் வெளியான 972-ம் எண்ணுள்ள அரசாங்க உத்தரவில், எந்தெந்த முறையில் அந்த நிலங்களைப் பயன்படுத்தலாம் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், பொது நிலங்களின் பட்டியலை, கர்ணங்கள் கொடுக்க வேண்டுமென்றும், பஞ்சாயத்துத் தலைவர்களுடன் நேரில் சென்று அந்த நிலங்களைக் காண்பித்து,

**உற்பத்தியைப் பெருக்குங்கள்**

அவற்றைப் பற்றிய சகல விவரங்களையும் தரவேண்டுமென்றும், "ரெவினியூ போர்டு" உத்தரவிட்டு உள்ளது. இந்த உத்தரவு, சரியாக அமுலாகாமல் இருந்தால் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலம், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்கு (அதாவது டெபுடி கலெக்டர் அல்லது சப்-கலெக்டருக்கு) அறிவித்து தக்க நிவாரணம் பெறவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. இதே சிக்கலைக் குறித்து, 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 2-ம் தேதியில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்திலும், விரிவான ஆராய்ச்சி நடைபெற்றது. இதன் விளைவாக, புகார்கள் ஏற்படுகின்ற இடங்களில், ரெவினியூ அதிகாரிகள் மூலம், துரிதமான நடவடிக்கை எடுக்க, கலெக்டர்கள் சரியான ஏற்பாடு செய்வார்கள் என்று நம்பலாம்.

எல்லா மாவட்டங்களிலும் உள்ள அனேக பஞ்சாயத்துக்கள், பொது நிலங்களை ஒப்படைத்துக்கொண்டதோடு பல்வேறு மரங்களையும் பழத் தோட்டங்களையும் வைத்து பயிரிட்டு வருகின்ற செய்தியை, சந்தோஷத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம் "கிராம நலம்" பத்திரிகையில் இவற்றின் விவரங்களைக் காணலாம், ஆகவே, பஞ்சாயத்துக்களின் உற்சாக முயற்சியினாலும், ஒத்துழைப்பினாலும், இந்த விஷயத்தில் மேலும் அதிக முன்னேற்றம் ஏற்பட வழியிருக்கிறது.

மூன்றாவது விஷயம், நிர்வாக சம்பந்தமானது. அதாவது கிராம வாசிகளின் பொதுவான முக்கியக் குறைகளை நேரில் அறிந்து, தக்க வகையில் உதவி செய்யவே, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் புதிய பஞ்சாயத்து ஆட்சியிலும், கிராம ஊழியர்களை, ஏற்படுத்தியுள்ளனர். வீணான கால தாமதம் இல்லாமல், காரியங்களை நிறைவேற்ற உதவி செய்வதுதான், பொது நல ஊழியர்களின் கடமை. இதற்காகவே, புதிய பஞ்சாயத்து ஆட்சியில் பொறுப்பு ஏற்றுள்ள பழைய அதிகாரிகளுக்கு, விசேஷப் பயிற்சியும், புதிய கண்ணோட்டமும் அளிக்க, வழி செய்யப்பட்டு வருகிறது. காலப் போக்கில், நிலைமை சீர்திருந்தும் என்று நம்பலாம். அதே சமயத்தில், விதி முறைகள் இல்லாமல், கணக்கு, கண்டிப்பு, தணிக்கை முதலிய நிர்வாக ஒழுங்கு முறைகள் இல்லாமல், பொதுநல காரியங்கள் சரிவர நடைபெற முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம்.

இது விஷயமாக, கிராம நல—தல நிர்வாக இலாகாவில், சில முக்கிய ஏற்பாடுகள் இருப்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறோம். அதாவது, பஞ்சாயத்து நிதி சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளையும் ஆராய்ந்து பார்த்து, ஆவன செய்வதற்கே, பஞ்சாயத்து நிதி இயக்குநர் (Director of Panchayat Finance) என்ற ஓர் அதிகாரி, சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பே நியமிக்கப்பட்டார். அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் இவர் (திரு. கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்,) தமிழ்நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்யவும் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் நிதி சம்பந்தமான குற்றங்குறைகளை நீக்கவும் பொறுப் பேற்றுள்ளார். அதைப்போலவே, தமிழ்நாடு பூராவிலும் உள்ள பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் வேலைத் திட்டங்கள் சரிவர நடைபெறுவதைக் கவனித்து, அங்கங்கேயுள்ள குற்றங்குறைகளைப் போக்குவதற்காக பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநர் (Director of Panchayat Programme) கடந்த சில மாதங்களாக, அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். (திரு. குலாம் மகமது பாட்சா, ஐ.ஏ.எஸ்.) இந்த இருவரும், அரசாங்கத்தின் துணைக்காரியதரிசிகளாகவும் (Ex-Officio Deputy Secretaries to Government) அதிகாரம் பெற்றுள்ளனர். எனவே, பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் வேலைத் திட்டங்கள் ஒழுங்கு முறையோடு துரிதமாக நிறைவேறவும், பஞ்சாயத்து இலாகா நிர்வாக அதிகாரிகள், கால தாமதமின்றி காரியங்களைச் செய்யவும், இவர்கள் ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

மேலும், ஜனநாயக அமைப்பில், அதிகாரப் பரவல் முறை, இப்போது அமுல் நடந்து வருகிறது. புதிய பஞ்சாயத்து ஆட்சியின்கீழ், அநேக முக்கிய பொறுப்புகள் பொது ஜனத் தலைவர்களிடம் படிப்படியாகக் கொடுக்கப்படுகின்றன. இப்படிக் கொடுக்கும்போது, எல்லோரும் எல்லாத் தகுதியும் திறமையும் குறைவில்லாமல் பெற்றிருப்பது, கொஞ்சம் கடினம்தான். அதிகாரியாய் இருந்தாலும் சரி, பொது ஜனத் தலைவர்களாய் இருந்தாலும் சரி, புதிய சூழ்நிலையையும், புதிய விதி முறைகளையும் சரியாகத் தெரிந்து கொண்டு, அதற்கேற்றபடி சேவை செய்வதற்கு, சிறிது காலம் பிடிக்கும். அப்படிப்பட்ட இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய ஒரு சில தவறுகளையும் குறைகளையும் பிரமாதப்படுத்தாமல், **சகிப்புத் தன்மையுடனும், நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும், நடந்துகொள்ள வேண்டியது எல்லோருடைய கடமையாகும்.**

சாந்தமும் பொறுப்புணர்ச்சியும் நிறைந்த வழியில் செல்ல, நாம் தீர்மானித்து விட்டால், ஜனநாயக முறையில் அதிகாரப் பரவல் திட்டம் (Democratic De centralisation) நல்ல வகையில் வெற்றி பெறுவது நிச்சயம். புதிய பஞ்சாயத்து ஆட்சியில் பங்கு பெற்றுள்ள அரசாங்க அதிகாரிகளும், பொது ஜனத் தலைவர்களும் இந்த அடிப்படையான விஷயத்தை மறக்காமல், சேவை செய்ய வேண்டுகிறோம்.

**"பிரதமர் நேருவே நமக்கெல்லாம் தளபதி"**



# பாதுகாப்பு முயற்சியில் நமது பங்கு

## உற்பத்திப் பெருக தொழில் துறையில் அமைதி வேண்டும்

நமது எல்லைப் பகுதியில், சீன பீரங்கிகள் அமைதியைக் குலைத்து வருகின்றன. ஆனால், நமது வாழ்க்கை ஓட்டத்தின் இன்னொரு பக்கத்தில் அமைதி நிலவத் தொடங்கியிருக்கிறது. இந்தியாவின் தொழில் துறையில் நிலவி வரும் அமைதியையும், ஒற்றுமையையும் அது குறிக்கிறது.

பாதுகாப்புப் படைகளுக்கும், மக்களுக்கும் சப்ளைகள் இடைவிடாமலும், தொடர்ந்தும் கிடைக்கவேண்டியதன் அவசியத்தை முதன்முதலாக உணர்ந்துள்ளவர்கள் நமது தொழிலாளர்களும், தொழிலதிபர்களுமாகும்.

ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் உள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், அவர்களோ அல்லது அவர்களுடைய சக தொழிலாளர்களோ உற்பத்தி செய்யும் பண்டங்கள்தான் பயன்படுகின்றது. நாட்டில் ஏராளமான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டால், அதன் காரணமாக அது எல்லாருக்கும் தாராளமாகக் கிடைக்கும் நிலைமை ஏற்படும். இந்த உண்மையைத் தொழிலாளர்கள் தேசபக்தி உணர்வோடு ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

மக்களுக்கு வேண்டிய பொருள்களும், பாதுகாப்புத் தேவைக்கான சாதனங்களும் இடைவிடாமல் உற்பத்தியாகிப் படிப்படியாக பெருகும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

ஆகவே, உற்பத்தித் தடைபடவோ, சுணக்கமாகவோ இருக்கக்கூடாது. அது கேடு தரும். அதுமட்டுமல்ல, உற்பத்தி நடவடிக்கையும் பாதிக்கப்படும். ஒரு தொழிலில் ஏற்படுகிற உற்பத்திச் சுணக்கம் பிற தொழில் உற்பத்தியையும் பாதிக்கக் காரணமாக இருக்கக்கூடும். ஒருங்கிணைந்த தொழில் அமைப்பு கொண்ட நாட்டில் ஒரு தொழிற்சாலையின் உற்பத்தியே இன்னொரு தொழிற்சாலையின் மூலப்பொருளாக இருந்துவருகிறது.

தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழிலதிபர்களும், உற்பத்தியைப் பெருக்குவதற்கான அவர்களுடைய முயற்சி தொழில்துறை அமைதியின் அடிப்படையில் உருவாக வேண்டுமென்றுள்ளதை உணர்ந்துள்ளனர்.

தொழிலாளர் கல்வி பிராந்திய மகாநாட்டிலும், சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது போன்ற, தொழிலாளர் மகாநாட்டிலும், அதைப் போன்ற கூட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் முடிவுகளையும், லட்சியங்களையும் இரண்டு வார்த்தைகளில் "தொழில்துறை அமைதி" என்று குறிப்பிடலாம்.

தொழில்துறையில் அமைதி நிலவவேண்டுமாயின், எல்லா தரப்பினரும், சுயகட்டுப்பாடுடனும், சகிப்புத் தன்மையுடனும் இருக்கவேண்டியது அவசியமாகும். நமது கோரிக்கைகளையும் விட்டுகொடுக்கவேண்டியிருக்கும். தேவையானபோதெல்லாம் நமது கோரிக்கைகளைத் தியாகம் செய்யத் தயங்கக்கூடாது. வேலைகளிலும் தொழிலாளர் உறவுகளிலும், எந்த விதமான புகாரும் இல்லாமல் பார்த்துக்கொள்வது நமது கடமையாகும்.

தொழில் துறைத் தகராறுகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், தகராறுகளை மத்தியஸ்தத் தீர்ப்புக்கு விடவேண்டும். அந்தத் தீர்ப்பு எல்லாரையும் கட்டுப்படுத்துவதும், இறுதியானதுமாகும். நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உள்ள தொழிலாளர் சங்கங்கள், வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள மாட்டோம் என்று உறுதியளித்திருப்பது சுப சூசகமாகும். அதேபோல, கதவடைப்புகளும் இருக்காது.

தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளை செம்மைப்படுத்துவதற்காக சர்க்கார் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தொழில் துறையில் தற்போது நிலவிவரும் அமைதி, ஜவான்களுக்குப் பக்கபலமாக இருப்போம் என்று தேசம் முழுவதும் உறுதி கொண்டிருப்பதைப் பிரதிபலிக்கிறது. அவர்களுக்கு வேண்டிய துணி, ஆடைகள், பாதரட்சைகள் கருவிகள் எல்லாம் வேண்டுமளவுக்குத் தாராளமாகக் கிடைக்கும்.

நம் ஆலைகளிலும், வயல்களிலும் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நாம் எங்கிருந்தாலும் சரி, பொது முயற்சியின் பங்காளிகள். அப்போதுதான் இந்தியாவின் தொழில் பலம் முடுக்கிவிடப்பட்டு போர் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக விளங்க முடியும்.

---

### வதந்திகளுக்குச் செவி சாய்க்காதீர் !

போர்ப் படைகளில் பணியாற்றும் ஒருவர், கைது செய்யப்படும் போதோ, காணாமற்போனாலோ, காயமடைந்தாலோ, இறந்து விட்டார் என்றாலோ தந்தி மூலம் நெருங்கிய உறவினருக்கு தகவல் தெரிவிக்கப்படும். அதிகார பூர்வமான தகவல் கிடைத்தாலொழிய பணிபுரியும் நபர்களின் குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள் அதிகார பூர்வமல்லாத அறிக்கைகளையும், வதந்திகளையும் நம்பவேண்டாமென பாதுகாப்பு அமைச்சகம் கேட்டுக்கொள்கிறது.

—'சைனிக் சமாசார்' (போர்ப்படை வார இதழ்)

**"நாம் எல்லோரும் ராணுவ வீரர்கள்"** —காமராஜ்

# தேசியப் பாதுகாப்பு உதவிக்குழு அமைப்பு

## (STATE COMMITTEE FOR NATIONAL DEFENCE AID)

எல்லையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவைத் திரட்டவும், நிதி வசூல் வேலையைத் துரிதப்படுத்தவும், எல்லையில் போரிடும் இந்திய வீரருக்கு வசதிகளைச் செய்து தரவும், அவர்களின் குடும்பங்களின் நலன்களைக் கவனித்துக்கொள்ளவும் தக்க ஏற்பாடுகள் செய்ய, தமிழ்நாடு அரசாங்கம், மாநில அளவில் ஒரு குழுவை அமைத்துள்ளது. இந்தக் குழுவில், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்கள், தொழிலாளர் தலைவர்கள், நிர்வாக நிபுணர்கள், சமூகத் தொண்டர்கள், மற்றும் பல பிரமுகர்கள் இடம் பெற்றுள்ளனர். இக்குழு பின்வருமாறு அமைந்துள்ளது.

**போஷகர்:**—திரு விஷ்ணுராம் மேதி, தமிழ்நாடு கவர்னர்.

**தலைவர் :**—திரு. கே. காமராஜ், முதலமைச்சர்.

**பொருளாளர்:**—திரு எம். பக்தவத்ஸலம், நிதியமைச்சர்.

**செயலாளர் :**—திரு. கே. திரவியம், ஐ. ஏ. எஸ்., அரசாங்கத் துணைச் செயலாளர்.

**உறுப்பினர்கள் :**—1. திரு. ஆர். வெங்கட்ராமன், 2. திரு. பி. கக்கன், 3. டாக்டர் பி. வி. செரியன், 4. திரு. எஸ். செல்லபாண்டியன், 5. திரு வி. ஆர். நெடுஞ்செழியன், 6. திரு எம். கல்யாணசுந்தரம், 7. டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், 8. டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர், 9. சென்னை நகர மேயர், 10. டாக்டர் மாத்தியஸ் (சென்னை ஆர்ச் பிஷப்), 11. சென்னை அரசாங்கத் தலைமைச் செயலாளர், 12. சென்னை அரசாங்க நிதித்துறைச் செயலாளர், 13. திருமதி அம்புஜம்மாள், 14. திருமதி சௌந்தரவல்லி ஜகந்நாத், 15. திருமதி தாரா செரியன், 16. திருமதி மஞ்சுபாஷிணி, 17. திருமதி ஆனந்தநாயகி, 18. திருமதி அம்மு சாமிநாதன், 19. திருமதி ருக்மணி தேவி, 20. திருமதி சரோஜினி வரதப்பன், 21. திருமதி சரோஜ் கோயங்கா, 22. திருமதி ஆர். ஏ. கோபாலசாமி, 23. திருமதி நீலவேணி ராமசாமி, 24. டாக்டர் விஜயலட்சுமி, 25. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, 26. திரு. எம். ஏ. மாணிக்கவேலு, 27. திரு. வி. கே. ராமசாமி முதலியார், 28. திரு. கே. எஸ். வெங்கடகிருஷ்ண ரெட்டியார், 29. திரு. ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், 30. திரு டி. எஸ். அருணாசலம், 31. திரு என். எம். ஆர். சுப்பராமன், 32 திரு. பி. டி. ராஜன், 33. திரு வி கே பழனிசாமி கவுண்டர், 34. திரு. என். எம். லிங்கம், 35. திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், 36. திரு எஸ். ஆர். சேதுபதி, 37. திரு. கே. ராஜாராம், 38. திரு. பி. இராமச்சந்திரன், 39. திரு. ஹாஜா ஷெரீப், 40. திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், 41. திரு. ஸ்ரீனிவாச படையாச்சி, 42. திரு. சுந்தரராஜன், 43. திரு எச். வி. ஆர். ஐயங்கார், 44. திரு. எஸ். அனந்தராமகிருஷ்ணன், 45. திரு. எம். ஏ. முத்தையா செட்டியார், 46. தலைவர், தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம், 47. தலைவர், தென்னிந்திய வர்த்தக சபை, 48. தலைவர், தமிழ்நாடு தோட்ட முதலாளிகள் சங்கம், 49. திரு. ஆர். வெங்கடசாமி நாயுடு, 50. திரு. எஸ். எஸ். வாசன், 51. திரு. பி. நாகி ரெட்டி, 52. திரு. ஏ. எம். எம். முருகப்ப செட்டியார், 53. திரு. டி. எஸ். கிருஷ்ணா, 54. திரு. டி. எஸ். நாராயணசாமி, 55. திரு. ஹண்டர், 56. திரு. எஸ். ராமானுஜம், 57. திரு. தாதா, 58. திரு. ஜி. நரசிம்மன்; 59. திரு. மோகன்லால் மேதா, 60. திரு. எம். ஏ. சிதம்பரம், 61. திரு. பி. சூரியநாராயணா, 62. திரு வி. எஸ். லோகநாத முதலியார், 63. திரு. பஷீர் அஹமத் ஸயீது, 64. திரு. பி. எஸ். சின்னதுரை, 65. திரு கே. குருமூர்த்தி, 66. திரு. எஸ். வி. வி. அந்தோணி பிள்ளை, 67. திரு. ஆர் ராமன் நாயர், 68. திரு. வி. ஆர். ராமசாமி, 69. திரு கே. ராமுண்ணி மேனன், 70. திரு. வி. கே. திருவேங்கடாச்சாரி, 71, சென்னை ஷெரீப், 72. மேஜர் ஜெனரல். எஸ் சி. அழகப்பன், 73. திரு. சிவஞான கிராமணியார், 74 திரு. ஈ. வி. கே. சம்பத், 75. திரு. என். சிவராஜ், 76. திரு. ஏ. கிருஷ்ணசாமி, 77. திரு. டி. செங்கல்வராயன், 78. திரு. மகமது இஸ்மாயில் சாயபு, 79 திரு. ஆர். வி. சாமிநாதன், 80. திரு. ஏ. பி. வி. வீரபாகு, 81. திரு. டி. சிவஞானம், 82. திரு. பி. ஆர். கந்தசாமி, 83. திரு. ஏ. வி. தாமஸ், 84. திரு. எஸ். குருசாமி (ரெயில்வே தொழிலாளர் தலைவர்), 85. திரு. டி. ஆர். சக்கரவர்த்தி, 86. திரு. சி. ஏ. தைரியம், 87. திரு. கே. எம். பூதலிங்கம் பிள்ளை, 88. திரு. எஸ். ராமநாதன்.

### தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் முதற் கூட்டம்

தமிழ்நாடு அரசாங்கம், 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதியில் அமைத்த தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் முதற் கூட்டம் 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதியில் தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் கூடியது. முதலமைச்சர் காமராஜ், பாதுகாப்பு

**மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன் படுத்துங்கள்!**






இந்தியா - சீன எல்லை
சிந்து நதி
காரகோரம்
அக்ஸாய் சின்
ஸ்ரீநகர்
ஜம்மு - காஷ்மீர்
லே
கோங்காபா
பாங்கோங் ஏரி
ருடாக்
இமாசல பிரதேசம்
ஸ்பிதி
பாகிஸ்தான்
பஞ்சாப்
சட்லெஜ்
சண்டிகார்
மேற்கு பாகிஸ்தான்
கார்போக்
டில்லி
உத்திரப்பிரதேசம்
கங்கை
யமுனை
லக்னோ
ராஜஸ்தான்
ஜெய்பூர்
மத்தியப் பிரதேசம்
மத்தியப்பிரதேசம்
நேபாளம்
காட்மண்டு
கண்டக்
கோசி
பீஹார்
நாக்ச் ஹுக்கா
லாசா
சாங்பூர்
பிரம்மபுத்திரா
கியாங்ஸி
சிக்கிம்
காங்டோக்
பூடான்
புனகா
தாங்லா
மிக்யுடுன்
வடகிழக்கு எல்லைப் பிரதேச ஏஜென்சி
(நேபா)
அஸ்ஸாம்
ஷில்லாங்
மணிப்பூர்
இம்பால்
பாகிஸ்தான்




நிலைமைகளைப் பற்றிய ஆலோசனை சம்பந்தமாக, டெல்லிக்குச் சென்றிருந்ததால், மாநில நிதியமைச்சர், (குழுவின் பொருளாளர்) திரு எம். பக்தவத்ஸலம், தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினார். நிதியமைச்சர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது "தேசியப் பாதுகாப்பு நிதி வசூல் தமிழ் நாட்டில், ஒரு கோடிக்குமேல் ஆகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். பொது ஜனங்களின் உற்சாகத்தையும், தியாகத்தையும், தேசபக்தியையும் இது விளக்குகிறது. நிதி வசூல் வேலை ஒரே சீரான முறையில் நடைபெறவும், எந்த அளவிலும், யாதொரு குறையும் ஏற்படாமல் தவிர்க்கவும், மாநில அரசாங்கம், மாவட்ட அதிகாரிகளுக்கு, தக்க உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. மேலும் தமிழ்நாடு தேசியப் பாதுகாப்பு நிதியின் நிர்வாகியாக, அரசாங்கக் கஜானாக்களின் இயக்குநரை (Director of Treasuries) நியமித்துள்ளது. மாவட்டங்களில் நிதி வசூல் செய்ய, 2,500க்கு மேற்பட்ட உண்டிகளை விநியோகிக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ் விஷயங்களைக் குறித்து மேலும் துரித நடவடிக்கைகள் எடுக்கவும், மாவட்ட நிலையில் நிதி வசூல் முறையை வகுக்கவும் முதலமைச்சர் அவர்கள், மாவட்டக் கலெக்டர்களை, விரைவில் கலந்தாலோசித்து ஆவன செய்யத் தீர்மானித்திருக்கிறார்."

நெருக்கடி நிலைமை தீரும் வரையில், மின்சாரத்தைச் சிக்கனமாக உபயோகிக்கவும், அவசரத்தேவைகளுக்கான பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும், அவசியமான பொருள்களை விரயமாக்காமல் தடுக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுப்பது பற்றி இந்தக் குழு, தக்க ஆலோசனை கூறியுள்ளது. விலைவாசிகளின் உயர்வைக் கட்டுப்படுத்த, வியாபாரிகள் சங்கங்களை அமைத்துப் பணிபுரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இன்றைய நெருக்கடி நிலையில் பல்வேறு கட்சிகள், தம் கொடிகளைப் பயன்படுத்துவதை நிறுத்தி, நாட்டின் ஒருமையைக் காட்டும் வகையில், தேசியக் கொடியை மதித்துப் பயன்படுத்தலாம் என்றும், இதற்காக அரசியல் கட்சித் தலைவர்கள் தனியாகக் கூடி ஆராய்வது நலம் என்றும், பொது மக்களைத் தமது பக்கத்தில் ஆழ்த்தும் வகையில் பேசுவதையும், எழுதுவதையும் நிறுத்து, அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது அவசியம் என்றும், குழுவில் ஆலோசனைகள் கூறப்பட்டது.

இக் குழுவின் (10 உறுப்பினர்கள் கொண்ட) நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அவர்கள் விவரம் வருமாறு—

1. முதலமைச்சர்.
2. நிதியமைச்சர்.
3. தொழிலமைச்சர்.
4. டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்.
5. டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர்.
6. திரு கே. ராமுண்ணி மேனன்.
7. திருமதி கிஸப்வாலா ஜதாவ்.
8. சென்னை மேயர்.
9. சென்னை ஷெரீப்.
10. திரு எஸ். குருசாமி. (ரெயில்வே தொழிலாளர் தலைவர்).

மேலும், இராணுவ வீரர்களுக்கு வசதிகளைச் செய்யவும், அவர்களின் குடும்ப நலனுக்கான பணிகளைக் கவனிக்கவும், ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில், (1) திருமதி கிஸப்வாலா ஜதாவ் (2) திருமதி எஸ். அம்புஜம்மாள், (3) திருமதி சரோஜினி வரதப்பன், (4) திருமதி எம். ஜி. திவான், (5) திருமதி கோகர்ன், (6) திருமதி அம்மு சாமிநாதன், (7) திருமதி அமீர்கலீலி, (8) திருமதி இந்தர்செய்ன் (9) திருமதி சுனீதி ஸ்ரீனிவாசராவ், (10) திருமதி ருத்மாரில்—ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### கலெக்டர்கள் மாநாடு

எல்லையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தேச மக்களிடையே ஒரு விழிப்பையும், உத்வேகத்தையும் உண்டாக்கியிருக்கிறது. தேசியப் பாதுகாப்பு முயற்சிகளில் நாட்டு மக்கள், ஒன்றுபட்டு, ஒருமனதாகச் செயல்பட்டு வருகின்றனர். நம்முடைய இராணுவபலத்தைப் பெருக்கவும், அவர்களின் நலன்களையும், வசதிகளையும் கவனித்துக்கொள்ளவும். பொது மக்களின் ஒத்துழைப்பு பெருமளவில கிடைத்து வருகிறது. நியாயமான முறையில் தமக்குச் சொந்தமான பகுதியிலிருந்து, ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அடிப்பதில் நம் வீரர்கள் முழு வலிமையும் பயன்படுத்தி, உற்சாகத்துடனும் உணர்வுடனும் போரிட அவர்களுக்கு ஆயுதபலம் மட்டிலும் போதாது; அத்துடன், நாட்டு மக்களின் உணர்ச்சி வடிவான ஆர்வம் அவர்களுக்குப் பின்னணியில் நின்று வலியூட்டவேண்டும். அந்தப் பணியில் இந்திய மக்கள், இடையறாது, உற்சாகத்தோடு ஈடுபட்டுச் செய்து வருகின்றனர்.

பாதுகாப்பு உதவிகளைச் செய்வதில் தமிழ்நாட்டு மக்களின் ஆர்வம், பல வகைகளிலும் சிறந்து விளங்குவதை அன்றாடச் செய்திகள் அறிவிக்கின்றன. இவ்வாறு பீறிட்டெழுந்துள்ள மக்கள் ஆர்வத்தை ஒருமுகப்படுத்தி, தக்கமுறையில் அது பாதுகாப்பு முயற்சிகளில் பயன்படுமாறு ஒழுங்குபடுத்தும் வேலையை அரசாங்கம் செய்து வருகிறது. இந்தப் பணிகளுக்கென்று, மாநில அளவில் தேசியப் பாதுகாப்பு உதவிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய பணி தமிழ்நாடெங்கிலும் விரிவாகச் செயல்பட மாவட்ட அளவிலும் குழுக்களை அமைக்கவேண்டும் என்று தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் முதற் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இது குறித்த ஏற்பாடு

**உணவுப் பொருளை வீணாக்காதீர்!**

னைச் செய்யுமுன், தமிழ்நாட்டு முதலமைச்சர், மாவட்டக் கலெக்டர்களைக் கலந்தாலோசிப்பார் என்று பாதுகாப்புக் குழுவின் முதற்கூட்டத்தில் நிதியமைச்சர் திரு. பக்தவத்ஸலம் அறிவித்தார்.

அதன்படி, நவம்பர் மாதம், 29-ந் தேதி தமிழ் நாட்டு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் மாவட்டக் கலெக்டர்களின் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு, முதலமைச்சர் திரு. காமராஜ், தலைமை வகித்தார். அமைச்சர்கள் பக்தவத்ஸலம், வெங்கடராமன் தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு. செட்டூர், ஐ. வி. எஸ்., ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாவட்ட அளவில் பாதுகாப்பு உதவிக் குழுக்களை அமைத்து, பரவலாக நடந்துவரும் பாதுகாப்பு நிதி நன்கொடை வசூல் வேலைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. மாவட்டப் பாதுகாப்புக் குழுவில், மாவட்டத்தின் அளவைப் பொறுத்து, 35 முதல் 60 வரை உறுப்பினர்களின் எண்ணிக்கை அமையலாம் என்றும், இந்தக் குழுவில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களும், பஞ்சாயத்தும் யூனியன் பிரதிநிதிகளும், மற்றும் பிரமுகர்களும் இடம் பெறுவார்கள் என்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்தக் குழுக்களை அமைத்து ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. படைவீரர்களின் நலன்களையும், அவர்களின் குடும்ப நலன்களையும், வசதிகளையும் கவனித்துக்கொள்ள, இக் குழுக்களுக்குத் துணைக் குழுக்களும் அமைக்கப்படும்.

அரசாங்கம் தயாரித்துள்ள சுமார் 2,000 உண்டிகளை, கலெக்டர்களால் நியமிக்கப்படுபவர்களிடம் விநியோகித்து நன்கொடை வசூலிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஓட்டுப் பெட்டிகளை உண்டிகளாக மாற்றி, கலெக்டர் அலுவலகம், கோட்ட ஆட்சியாளர் அலுவலகம் (B.D.O's Office) முதலான பொது அலுவலகங்களில் வைத்து, அங்கு வரும் பொதுமக்கள் நன்கொடைகளை அவற்றில் இடுவதற்கு வசதி செய்வதென்றும் உத்தேசிக்கப்பட்டது.

அடுத்து, இந்தக் கூட்டத்தில், விலைவாசிகள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது குறித்தும், நிர்வாகத்தில் திறமையைப் பெருக்கவும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கருதப்பட்டது. மாவட்டங்களில் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இறுதியில், முதலமைச்சர் காமராஜ், பாதுகாப்பு முயற்சிகளில், மக்கள் காட்டும் ஆர்வத்தை வியந்து பாராட்டியதுடன், அவர்களின் உணர்ச்சியையும், உற்சாகத்தையும் ஒருமுகப்படுத்தி, பாதுகாப்பு முயற்சிகள் முழு வெற்றி யடைய கலெக்டர்கள் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் செயற் குழுக் கூட்டம்

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் டிசம்பர் மாதம் 4-ம் தேதி தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் செயற்குழுக் கூட்டம் முதலமைச்சர் காமராஜ் தலைமையில் கூடிற்று.

**உட்படை அமைப்பு.**—சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சி, சேலம் ஆகிய ஐந்து நகரங்களிலும் முதற்படியாக, பாதுகாப்பு உட்படை (Home guards) அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தப் படையில் தொழிலில் இருக்கும் ஊழியர்களும் சேர்த்துக்கொள்ளப் படலாம் என்றும் யோசனை கூறப்பட்டது. இதுவிஷயத்தில் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகளைக் கலந்தாலோசிப்பதென்றும், தொழிலதிபர்களுடன் அமைச்சர் வெங்கடராமன் விவாதிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சுடும் பயிற்சியை விரிவு படுத்தவும், அதற்கென அமைந்துள்ள சங்கங்களுக்கு ஆதரவு அளிப்பது குறித்தும் கூட்டத்தில் யோசனை கூறப்பட்டது.

**தொழில் நிறுவனங்களின் பாதுகாப்பு நிதி உதவி.**—பஞ்சாலைத் தொழிலில், மாமம் ஒன்றுக்கு, ஒரு கதிருக்கு 20 காசுகள் வீதம் பாதுகாப்பு நிதிக்குத் தொடர்ந்து நன்கொடை அளிக்க முன்வந்துள்ளது போல், எல்லாத் தொழில் நிறுவனங்களும், கால முறைப்படி ஒரு குறித்த சத வீதத் தொகையை, பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்கலாம் என்றும் யோசனை கூறப் பட்டுள்ளது. இதுகுறித்தும் தொழிலமைச்சர் திரு வெங்கடராமன் தொழிலதிபர்களைக் கலந்துரையாடுவார்.

**பாங்குச் சேமிப்புக்களிலிருந்து உதவி நிதிக்கு நன்கொடை.**—சென்ற இரண்டாவது உலகப் பெரும் போர்க் காலத்தில் செய்தது போலவே, இப்பொழுதும் பாங்குகளில் கணக்கு வைத்திருப்போரைக் கலந்துகொண்டு மாத இறுதிக் கணக்கெடுப்புக்களில் நிலுவைத் தொகையாக இருக்கும் ஒரு ரூபாய்க்குக் குறைந்த நிலுவைத் தொகைகளை (காசுகளை) பாதுகாப்பு நிதிக்குத் திரட்டுவது குறித்து யோசனை கூறப்பட்டுள்ளது. இது குறித்து பாங்கு அதிகாரிகள், தம் வாடிக்கைக்காரர்களைக் கலந்து ஆலோசனை செய்வதற்காக, பாங்கு அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும் யோசிக்கப்பட்டுள்ளது.

**உண்டிகள் மூலம் வசூல்.**—பொது மக்களிடமிருந்து நிதி வசூல் செய்வதில், அரசாங்கம் அங்கீகாரம் செய்துள்ள உண்டிகள் மூலமே வசூல் செய்வது நலம் என்று செயற்குழுவில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

**தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்**





அமைப்பாளர் பயிற்சி முகாம்—நிகழ்ச்சிக் கோவை

# ஊர்தோறும் வானொலி

## அறிவொளி பரப்பும் அரிய திட்டம்

தமிழ்நாட்டின் நடு நாயகமாக விளங்குவது திருச்சி மாவட்டம். திருச்சிமாவட்டத்துக்குள்ள மற்றொரு சிறப்பு திருச்சியில் அமைந்துள்ள அகில இந்திய வானொலி நிலையமாகும். திருச்சி வானொலி நிலையம் பல்லாண்டுகளாக, கிராம நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருவதன் மூலம் கிராம அபிவிருத்தி வேலைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் ஊட்டுவதுடன், கிராம மக்களிடையே அறிவொளி பரவப் பெருந் தொண்டாற்றி வருகிறது. அந்தத் தொண்டின் சிகரமாக விளங்குவதே, இப்பொழுது அது ஒலிபரப்பி வரும் "கிராம வானொலி மன்ற" நிகழ்ச்சிகளாகும்.

தமிழ்நாடு அரசாங்கம் ஊர்தோறும் வானொலி அமைத்து, அதன் முழுப் பயனைக் கிராமங்களில் வாழும் கோடானுகோடி மக்களும் அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன், முதற் படியாக, தமிழ்நாட்டின் 373 பஞ்சாயத்து யூனியன்களிலும், யூனியனுக்கு ஒரு "கிராம வானொலி மன்றம்" என்ற வீதத்தில் அமைத்து, அது நன்கு செயல்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்தக் "கிராம வானொலி மன்ற"ங்களுக்கான நிகழ்ச்சிகளை வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் ஒலிபரப்புகின்ற பணியை, திருச்சி வானொலி நிலையம் மேற்கொண்டுள்ளது. இந்தத் துறையில், அடுத்த நடவடிக்கையாக, கிராம வானொலி மன்றங்களின் அமைப்பாளர்களுக்கு ஒரு பயிற்சி முகாம் நடத்தியது.

திருச்சியில் நான்கு நாட்கள் நடைபெற்ற அந்தப் பயிற்சி முகாம், நவம்பர் மாதம் 5-ந் தேதி காலை 11 மணிக்குத் துவங்கியது. தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலிருந்தும், ஒரு கோட்டத்துக்கு ஒரு பிரதிநிதி வீதம் 46 பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பயிற்சி முகாமினைத் துவக்கி வைத்து, நிதி அமைச்சர் பக்தவச்சலம் செவிச் செல்வத்தின் பெருமை குறித்து விளக்கமாக உரை நிகழ்த்தினார் துவக்கவுரை கடையியில் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் நாள் கூட்டம், கிராம நல-தல நிர்வாகத் துறையின் பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குநர் திரு. குலாம்முகமது பாட்சா, ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளர் திரு. எஸ். வேங்கடசாமி அவர்கள், பயிற்சி முகாமின் நோக்கங்கள் குறித்தும், பயிற்சியின் அவசியம் குறித்தும் விளக்கினார். பின்னர், மற்ற மாநிலங்களில் கிராம வானொலி மன்றங்களின் அமைப்புப் பற்றி, பூனாவிலிருந்து வந்திருந்த திரு. ஜதேவ் அவர்கள் விளக்கிக் கூறினார். அதற்கடுத்துப் பேசிய திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு. நடராசன் அவர்கள், நம்நாட்டில் கிராம நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு, வானொலி மன்றங்களின் அமைப்பு பற்றிய வரலாற்றை, அன்றுதொட்டு இன்று வரை நடந்து வரும் விதத்தையும் அடைந்துள்ள வளர்ச்சியையும் மாற்றங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். கடைசியில் கூட்டத்தலைவர் பேசுகையில், கிராம மக்களின் முன்னேற்றத்துக்கு வானொலியும், வானொலி மன்றங்களும் எவ்வெவ்வகையில் பயன்படலாம் என்பதற்கான வழிகளை எல்லாம் விளக்கிக் கூறினார். இறுதியில் கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளர் நன்றி நவில, கூட்டம் நிறைவுற்றது.

### கிராம அபிவிருத்திக் கமிஷனரின் அறிவுரை

நான்கு நாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமின் நான்காவது நாள் கூட்டத்தில் கிராம அபிவிருத்திக் கமிஷனர் கலந்துகொண்டு, பயிற்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். அவர் தம்முடைய பேச்சில், "கிராமச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆரம்பப்பள்ளி எவ்வளவு அவசியமோ, அதுபோல் கிராம முதியவர்களுக்கு கிராம வானொலி மன்ற அமைப்புக்களும் அவசியமானவை. கிராம மக்களின் அறிவு வளர்ச்சிக்கு இந்த மன்றங்கள் பாடுபட வேண்டும். அறிவு விலை கொடுத்து வாங்கக்கூடிய சரக்கு அல்ல. நம் தேசத்தைப்பற்றியும், உலக விஷயங்கள் குறித்தும், சர்வ தேச நடவடிக்கைகளைப்பற்றியும், நம்முடைய தேசத்தின் லட்சியம் குறித்தும் கிராம மக்களுக்குத் தெளிவான அறிவு ஏற்பட இந்த அமைப்புக்களைப் பஞ்சாயத்துக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்குரிய சிறந்த சாதனம் வானொலி ஒன்றுதான். அதன் பயனை அனைவரும் முழு அளவில் அடையும் வகையில் கிராம வானொலி மன்றங்கள் பணிபுரிய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த திருச்சி மாவட்ட கலெக்டர் திரு. M. A. ஷெரீப், ஐ. ஏ. எஸ். பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். பயிற்சியாளர்களின் கடமைகளைக் குறித்து திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு. நடராஜன், கலெக்டரின் தனி உதவியாளர் திரு. கோமேதகவேலு, கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளர் திரு. வேங்கடசாமி ஆகியோர் விளக்கிப் பேசினார்கள். கிராம வானொலி மன்றங்கள் சிறந்த முறையில் பணிபுரிவதற்கான வகையில் சில தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, அமைப்பாளர்களின் ஏகமித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

கிராம வானொலி மன்ற அமைப்பாளர்கள் பயிற்சி முகாமின் நான்காவது நாள் கூட்டத்தில் கலந்துகொண்ட கிராம அபிவிருத்திக் கமிஷனர், திருச்சி வானொலி

**தேசியப் பாதுகாப்புக்கு உதவுங்கள்**

நிலைய இயக்குநரின் (Station Director, All-India Radio Tiruchirapalli) வேண்டுகோளுக்கிணங்க, வானொலி நிலையத்திற்கு விஜயம் செய்தார். அங்கு நடைபெற்ற விசேஷக் கூட்டத்தில் கிராம அபிவிருத்திக் கமிஷனர் பேசுகையில், வானொலி நிலைய நிர்வாகிகள், பணியாளர்கள் ஆகியோரின் தேசிய உணர்வையும், நிதிக்கு நன்கொடை அளிப்பதில் அவர்கள் காட்டிய உற்சாகத்தையும் பாராட்டினார். இந்த நெருக்கடி நிலையில், கிராம மக்களுக்கு அவ்வப்போதைய நிலையினை அறிவிப்பதிலும், அவர்களுடைய உணர்வுகளைத் தூண்டுவதிலும் வானொலி நிலையம் செய்யும் பணியை அவர் வெகுவாகப் பாராட்டி, அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

வானொலி நிலையத்திற்கு, கிராம அபிவிருத்திக் கமிஷனர் விஜயம் செய்ததற்கும், அறிவுரை வழங்கியதற்கும், நிலையப் பணியாளர்கள் சார்பில், நிலையப் பொறியாளர் (Station Engineer) திரு நாராயணசாமி, உணர்ச்சி ததும்ப உரையாற்றி, நன்றி கூறினார்.

நான்கு நாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமின் நிகழ்ச்சிகளில் பல்வேறு துறை அதிகாரிகளும், வானொலி நிலைய அதிகாரிகளும் பெரும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். சிறப்பாக, செய்தித்துறை, விவசாய துறை ஆகிய துறை அதிகாரிகள், விவசாயச் செய்திப் பிரிவைச் சேர்ந்த திரு கே. ராமலிங்கம்மண்டல வானொலி அதிகாரி (Regional Radio Officer) திரு வைத்திய நாதன் கோவை இந்திய அரசாங்க செய்தி விளம்பர அதிகாரிகள் (Field Publicity Officer) திரு தர்மராஜன், திரு தனபாண்டியன். திருச்சி வானொலிநிலைய நிகழ்ச்சி நிர்வாகி திரு கஸ்தூரி, துணை நிகழ்ச்சி நிர்வாகி திரு வாசுதேவ் ஆகியோரும், மற்றும் நிலைய இயக்குநர் திரு எஸ். வி. நடராஜன் ஆகியோரும் பயிற்சிமுகாமின் வெற்றிக்குக் காரணமாய் இருந்தவர்களாவார்கள்.

பயிற்சி முகாம் நிகழ்ச்சிகளை, கிராமவானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளர்திரு எஸ். வேங்கடசாமி, நேரிலிருந்து கவனித்தார்.

---

### நிதியமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்களின் துவக்க உரை:

பயிற்சி முகாமைத் துவக்கிவைத்த, அமைச்சரின் வாழ்த்துரை வருமாறு:

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்பது வள்ளுவர் வாக்கு. மக்கள் வாழ்வு வளம் பெறுவதற்கு, அநேக செல்வங்கள் உண்டு. அறிவு, பொருள், ஆரோக்கியம், அன்பு, அருள், சேவை முதலிய செல்வங்கள் மனித சமுதாயத்திற்கு எவ்வளவு அவசியம் என்பது, எல்லோருக்கும் தெரியும். இத்தகைய செல்வங்களோடு "செவிச்செல்வம்" என்ற ஒரு புதிய செல்வத்தையும் சேர்த்துக் கூறுகிறார் அனுபவ ஞானியான திருவள்ளுவர். காதுகள் மூலம் பெறத்தக்க அறிவை, தக்க முறையில் தேடிப் பெற்றால், சிறந்த நன்மை அடைய முடியும் என்பது, அவர் கண்ட உண்மை. எனவே திருக்குறளிலே "கல்வி"யை அடுத்து, "கேள்வி" என்ற தலைப்புடன் பத்துக் குறள்களில் "கேள்விச் செல்வத்"தின் சிறப்பு விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அறிவு பெறுவதற்கான முக்கிய சாதனம், கல்வி மட்டுமல்ல, கேள்வியும் வேண்டும் என்பதை, நாம் மறக்கக்கூடாது.

நம் நாட்டில், மிகப் பழங்காலம் முதற்கொண்டு, கர்ண பரம்பரையாகவே, அதாவது, செவி வழியாகவே, பல முக்கிய செய்திகள் பரவி வந்துள்ளன. பாரத நாட்டு வேதங்கள் "சுருதி" என்ற பெயரால் வழங்கி வருவது, இதற்குச் சிறந்த உதாரணமாகும். எனவே, கேள்விச் செல்வத்தை வளர்ப்பதில், நம் நாட்டுப் பெருமக்கள் விசேஷ கவனம் செலுத்தி வந்துள்ளனர். வாழையடி வாழையாக வந்துள்ள இந்தப் பழக்கம் விஞ்ஞான யுகமான இக்காலத்தில், மிகத் திரம்பட வளர்ந்துள்ளது என்று கூறலாம். உலகத்தில் ரேடியோ கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, மக்கள் வாழ்வில், மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிறப்பாக நமது அகில இந்திய ரேடியோ நிலையங்களை, மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு துறைகளிலும், பயனுள்ள நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன.

### வானொலியின் பணி.

கிராமவாசிகளுக்கென விசேஷ நிகழ்ச்சிகள் ஒலிபரப்புவதில், திருச்சி நிலையம் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறது என்று கூறலாம். சுமார் 23 வருஷங்களுக்கு முன்பே, கிராம நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் திட்டமிட்ட பெருமை அகில இந்தியாவிலேயே திருச்சி வானொலி நிலையத்தாருக்கு உண்டு. ஆயினும், இப்போது, எல்லா வானொலி நிலையங்களும், கிராம நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. அத்துடன், "கிராம வானொலி மன்றங்கள்" கடந்த சுமார் 3 வருடங்களாக மற்ற ராஜ்யங்களில் நடைபெற்று வந்துள்ளன. ஆனால், நாம் சுமார் 3 மாதங்களாகத்தான், இதில் விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறோம். நமது முதலமைச்சர் தொடங்கி வைத்த இந்தத் திட்டம், வெற்றி பெறுவது நிச்சயம். கால தாமதமாக ஆரம்பித்திருந்தாலும், இதை மிகுந்த உற்சாகத்துடன் நிறைவேற்றினால், மற்றவர்களைவிட நாம் சிறந்த பலனைக் காண முடியுமென்பது, என் நம்பிக்கை. இத் திட்டத்தை நிறைவேற்ற முன் வந்த, கிராம நல-நல நிர்வாக இலாகாவினரை, நான் பாராட்டுகிறேன்.

இத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காகவே, இந்தப் பயிற்சி முகாம் ஆரம்பமாகியுள்ளது, உங்கள் கூட்டு முயற்சியின் விளைவாக, இந்தத் திட்டம் மிகவும் சிறந்த முறையில் நிறைவேறும் என்பதில், எனக்கு ஐயமில்லை. "கேள்விச் செல்வம்" வளர்வதற்கு 'கிராம வானொலி மன்றங்கள்' சிறந்த கருவிகளாகப் பயன்பட வேண்டுமென்பது, என் ஆசை.

மக்களின் அனுபவங்களை மதித்து நடப்பதே, அரசாங்கத்தின் கடமை. சிறப்பாக கிராமவாசிகளின் அனுபவங்களைத் தக்க முறையில் சேகரித்து அவற்றை, ஒன்றுதிரட்டி, மேலும் வளம் பெறச் செய்வதற்கு அகில இந்தியாவிலும் ஏற்பாடு செய்துள்ள 'ஆல் இண்டியா ரேடியோ' நிலையத்தாரை, நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

### கருத்தரங்கு முறை

சென்ற, இரண்டு வருடங்களுக்கு முன்பு, சென்னை மாகாணக் கல்லூரியில் நடைபெற்ற "பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்குகள்" மூலமாக பொது ஜனத் தலைவர்களும், அதிகாரிகளும், கிராம அபிவிருத்தி சம்பந்தப்பட்ட தமது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள முடிந்தது. அந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான அரசாங்க உத்தரவுகளும், நடைமுறை விதிகளும், பெரும்பாலும் உருவாகின்றன. இது நமது அரசாங்கத்தின் நிர்வாக வரலாற்றிலேயே, ஒரு புதிய அனுபவமாகும். இதை ஒட்டியே, பல்வேறு கருத்தரங்குகளும், பயிற்சி முகாம்களும் இப்போது நடைபெற்று நல்ல பலன் ஏற்பட்டு வருகிறது.

### அனைவருக்கும் சமூகக் கல்வி

நம் நாடு சுதந்திரம் பெற்றதுமுதல், அநேக புதிய பொறுப்புகள் நமக்கு ஏற்பட்டுள்ளன. உலக நாடுகள், பல துறையிலும் முன்னேறியிருப்பதற்குக் காரணம், அந்த நாட்டு மக்களிடையே பொறுப்புணர்ச்சியும், நாட்டுப்பற்றும், சலியா உழைப்பும், விஞ்ஞான அறிவும் வேரூன்றி இருப்பதுதான். நம் நாடும் உலகத்திலே தலை சிறந்து விளங்க வேண்டுமானால், மேற்சொன்ன சிறந்த குணங்கள் ஜனங்களிடையே வளர வேண்டும். அதற்கான சமூகக் கல்வி, விரைவில் பரவ வேண்டும். கல்வி நிலையங்களில் மட்டும், சமூகக் கல்வி போதித்தால் போதாது. வயல்களிலே வேலை செய்யும் குடியானவர்கள், தொழிற்சாலைகளில் பாடுபடும் பாட்டாளி மக்கள், மற்றும் பல்வேறு துறைகளில் ஓயாமல் உழைக்கும் எண்ணற்ற ஆண் பெண் அனைவருக்கும், சமூகக் கல்வியை அளிக்கும் பொறுப்பு நமக்கு ஏற்பட்டுள்ளது. மகத்தான இந்தப் பொறுப்பை, அரசாங்க அதிகாரிகளோ அல்லது ஆசிரியர்களோ மட்டும் சாதித்து விட முடியாது. பத்திரிகைகள், வானொலி, படக்காட்சி, புத்தகங்கள், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் முதலிய பல்வேறு அறிவுச் சாதனங்களின் மூலம் சமூகக் கல்வியை ஜனங்களிடையே ஓயாமல் பரப்பிக் கொண்டே இருக்க வேண்டும். இதற்காகத்தான், புதிய பஞ்சாயத்து ஆட்சியில், விசேஷ ஏற்பாடு செய்து, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் "கிராம வானொலி மன்றங்கள்" ஆரம்பமாகியுள்ளன. இவை படிப்படியே வளர்ந்து, எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் செயல்படும் காலம் விரைவில் வர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

### கிராம வானொலி மன்றம்

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இப்போது சுமார் அரை மணி நேரம் திருச்சி நிலையத்திலிருந்து, இந்த விசேஷ நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அதே நேரத்தில் சென்னை வானொலி நிலையத்தின் மூலமும் அதைக் கேட்கலாம். திருச்சி நிலையத்தின் கிராம நிகழ்ச்சிகள் பற்றிய ஆலோசனைக் குழுவினர் தமிழ்நாடு அரசாங்கத்தின் பல்வேறு இலாகா தலைவர்களையும் கலந்தாலோசித்து இந்த விசேஷ நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துத் தயாரிக்கின்றனர். "கிராம வானொலி மன்றத்"தார் இவற்றைக் கேட்டு முறைப்படி தமக்குள் விவாதிக்கின்றனர். ஒவ்வொரு மன்றத்திலும் சுமார் 20 பேர் ஒழுங்காகக் கூடி தாம் கேட்ட விஷயங்களைக் குறித்து கலந்தாலோசிக்கும் பொழுது பல சந்தேகங்கள் எழலாம். மேலும் பல செய்திகளை அறிந்துகொள்ள அவர்கள் விரும்பலாம். இவ்வாறாக பல புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை இந்த மன்றங்கள் ஏற்படுத்துகின்றன. இந்த ஆர்வம் காரணமாக பல கேள்விகள் திருச்சி வானொலி நிலையத்தாருக்கு இந்த மன்றங்களின் அமைப்பாளர்கள் மூலம் வருகின்றன. மன்றத்தார் கேட்கும் பொதுவான கேள்விகளுக்கு, சரியான விடைகளையும் விளக்கங்களையும், அரசாங்கத்தின் சார்பாக, தலைமை அமைப்பாளர், தக்கவர்களிடமிருந்து விரைவில் பெற முயல்கிறார். திருச்சி வானொலி மூலம், அடுத்த வாரத்திலேயே அந்த விளக்கங்களை வெளியிட ஏற்பாடு செய்கிறார். இதன் மூலமாக, கிராமவாசிகள் தமது அனுபவங்களையும் பிரச்சினைகளையும் பரிமாறிக்கொண்டு, தக்க தீர்வு காண வழி பிறக்கிறது. இந்தக் கருத்தரங்கு முறை தொடர்ந்து நடைபெறுவதால் சமூகக் கல்விக்குத் தேவையான பொது அறிவு கிராம ஜனங்களிடையே எளிதில் பரவ முடியும். இந்த நிகழ்ச்சிகளை முன்னதாகவே வெளியிட்டு பயனுள்ள செய்திகளைத் தக்க முறையில் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

### கிராமியக் கலை வளர்ச்சி

இத்துடன் நில்லாமல் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் சாதனைகளைத் திறம்பட வெளியிடவும் இந்தக் கிராம வானொலி மன்றங்கள் துணை புரியலாம். உதாரணமாக பஞ்சாயத்து யூனியன்களின் சிறந்த சாதனைகளை ஒலிச் சித்திரங்களாக வெளியிடலாம். இசை, நாடகம் வாயிலாகவும் பஞ்சாயத்து ஆட்சியை விளக்கலாம். கிராமங்களிலே மறைந்து கிடக்கும் கலைச்செல்வத்தையும், கலைஞர்களையும் தேடிப் பிடித்து அவர்களுடைய திறமைகளையும் வெளிப்படுத்தலாம். கிராமங்களுக்கே உரித்தான கோலாட்டம்

(அடுத்த பக்கம் பார்க்க)

தீயோர்க் கஞ்சேல்

கொடுமையை எதிர்த்து நில்

# சீனர்களின் துரோகத்தினுல் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சி

சீனர்கள் பிடிவாதமாக நம்மீது படையெடுத்திருக்கின்றனர். அவர்களுடைய நயவஞ்சகமும், ஆக்கிரமிப்பும், நம் தேசப்பற்றை வெளிப்படுத்த புதிய சந்தர்ப்பத்தைத் தந்திருக்கின்றன; அது தானுகவே நம் முன் வந்திருக்கிறது. பிரதம மந்திரி சொன்னதுபோல, அது "நமது வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்". நம்பிக்கையுடனும், செயல்படுத்துவாம்; இறுதியில் நமக்குத்தான் வெற்றி கிடைக்கும்.

இன்று நமது நாட்டில் காணப்படும் காட்சியென்ன ?

அசைக்க முடியாத உறுதியுடன் மக்கள் ஒன்றுதிரண்டிருக்கின்றனர்; அந்நிய ஆக்கிரமிப்பு புதிய ஐக்கிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறது. எதிரியைத் துரத்தியடிக்கவேண்டுமென்ற ஆர்வம் அவர்களை ஆட்கொண்டு விட்டது. நாம் எவ்வாறு வீறுகொண்டு எழுந்திருக்க வேண்டுமோ அதில் பாதி உணர்ச்சிதான் நம்மிடமிருக்கிறது என்று சொல்லும்படி வைத்துக்கொள்ளக்கூடாது.

பிற சந்தர்ப்பங்களில், தனிப்பட்டவர்கள் தங்கள் சக்திக்கு உட்பட்டுதான் செயலாற்ற முடியும். ஆனால் இன்று, எதிரி நம் தாய் நாட்டின்மீது ஆக்கிரமித்துப் படையெடுத்துக்கொண்டிருக்கும்போது நமது வீரத்துக்கும், ஆற்றலுக்கும் அளவுண்டா ? ஒவ்வொருவரும் இன்னும் கடுமையாக உழைக்கவேண்டும்; அந்த ஒவ்வொரு துளியும் பெரு வெள்ளமாகி எதிரியைத் துரத்தவேண்டும்.

தேசியப் பாதுகாப்பு முயற்சியில் ஒவ்வொருவருக்கும் மகத்தான பங்குண்டு. நாடு முழுவதும் இப்போது இருந்து வரும் கொந்தளிப்பில் சிறு துரும்பும் பலன்தரும். அதற்கு நாம் எதை வழங்கினுலும் பெரிதல்ல.

நிதி மிகுந்தவரிடமிருந்து பொற்குவியல்கள், நிதி குறைந்தவர்களிடமிருந்து காசுகள். இவையெல்லாம், ஏன் ? நாம் வழங்கும் ரத்தமும்கூட, சீனர்கள் மீது விழும் கடைசி அடியாக இருக்கட்டும்.

தேசப் பாதுகாப்புக்கு நம்மால் எதுவும் வழங்க முடியவில்லையே என்பதை நினைத்து வருந்துகிறவர்கள், அணிலின் முதுகிலுள்ள பளபளப்பான மூன்று கோடுகளைப் பார்த்திருக்கமாட்டார்கள்; அதுவே ஒரு சிறிய கதைதான்.

ராம காதையின் தலைவன் அயோத்தி மன்னன், ராமன் இலங்கைக்குப் பாலமிடும் வேலையைக் கவனித்து வருகிருர். வேலை சீக்கிரம் நடைபெறவில்லையே என்ற பொறுமையிழந்த தோற்றம் அவருடைய முகத்தில் படருகிறது. உறுதி கொண்ட தோள்கள் பெரிய கற்களையும் பாறைகளையும் கொண்டு குவிக்கின்றன; வலிமை பெற்றவர்கள் நெற்றி வேர்வை நிலத்தில் சிந்திப் பாலம் கட்டப் பாடுபடுகின்றனர். இந்த மாபெரும் வேலையில் ஒரு சின்னஞ்சிறிய அணிலும் முனையத் தொடங்கிவிட்டது. தன்னுடைய வாலைத் தண்ணீரில் நனைத்துப் பிறகு மணலில் புரண்டது. தனது வாலில் ஒட்டிய மண்ணைக் கொண்டு கொந்தளிக்கும் கடலில் பாலம் கட்ட உதவிற்று. இதையெல்லாம் கவனித்துவந்த ராமர் மனமிளகினுர்; நன்றியுணர்வுடன் அணிலின் முதுகில் தடவினுர். அந்தத் தழும்புதான் அணிலின் முதுகில் இன்றும் பளபளக்கிறது; ஒன்றல்ல, மூன்று.

சிறு துளியும் பெருவெள்ளமல்லவா ? தேசிய முயற்சியில் தனிப்பட்டவர்களின் நன்கொடையைப் பற்றிக் கூறும்போது இன்னும் அடக்கமாக இருக்கவேண்டும். ஆனால் பாதுகாப்பு முயற்சியில் நமது பங்கு சாமானியமானதல்ல. அலுவலகங்களில் இன்னும் அதிக நேரம் பணியாற்றலாம். இன்னும் அதிகப் பொறுப்பை வகித்துக் கடமையை நிறைவேற்றலாம்; நாளடைவில் இத்தகைய தனிப்பட்ட முயற்சிகள் தான் பலன்தரும்.

எதிரியை எதிர்த்து நடக்கும் போர், யுத்த களத்தோடு நின்றுவிடுவதல்ல; அதற்கான உதவிகள் ஆலைகளிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வரவேண்டும். தனிப்பட்டவர்கள் செய்யும் தியாகமெல்லாம் தேசிய தியாகமாக வளரும். நாம் தரும் நன்கொடையின் அளவைவிட, நமது தியாக மனப்பான்மை தான் பெரியது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுக்கள், பஜனைகள், ஒயிலாட்டம், கும்மி, வில்லுப் பாட்டு, கதாகாலட்சேபம் முதலான கலை நிகழ்ச்சிகளை மேலும் ஊக்கம் ஊட்டி வளர்க்கலாம். "கிராம நலம்" பத்திரிகையோடு பயனுள்ள சிறு வெளியீடுகளையும் பஞ்சாயத்து நூல் நிலையங்களுக்கு அவ்வப்போது அளிக்க வசதி செய்யலாம். கிராம நல இலாகாவினர் இதற்கேற்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

வாரத்திற்கு ஒரு நாள் என்றிருக்கும் இன்றைய நிலைமை மேலும் வளர்ந்து எல்லா நாட்களிலும் இந்தத் திட்டம் படிப்படியே வளரும் என்று நம்புகிறேன். அதற்கேற்ற முறையில் கிராமவாசிகளும் இந்த வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டுச் செயல் புரியும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்துள்ள "கிராம வானொலி மன்ற"ப் பிரதிநிதிகள், இன்றைய தினம் புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்கிருர்கள். தமது பகுதியிலே உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் வானொலி நிகழ்ச்சிகளால் சிறந்த பலன் ஏற்படும் வகையிலே தேவையான ஏற்பாடுகள் செய்ய வேண்டியது இவர்கள் கடமையாகும். டில்லியிருந்து இதற்காக விசேஷ அதிகாரி வந்திருக்கிருர். மற்ற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை நாம் தெரிந்துகொண்டு நமது கிராமப் பிரதேசங்களில் இத் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதை ஆராய்ந்து செயல் புரிய வேண்டும்.

இன்றைய தினம் பாரத நாட்டில் மிக நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து, நாடு முழுதும் ஒற்றுமையுடன் திரண்டெழுந்துள்ளது. மக்களிடையே ஒற்றுமையும், பொறுப்புணர்ச்சியும், தேச பக்தியும் உச்ச நிலையில் ஓங்கி நிற்கும் தருணமிது. பாரத நாடெங்கிலும் பரவியுள்ள லட்சக்கணக்கான கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான கிராம மக்களுக்கு வானொலி சிறந்த சேவை செய்யும் சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் சிறந்த முறையில் நடைபெற்று, "கேள்விச் செல்வம்" நாடெங்கும் பரவ வேண்டுமென்று வாழ்த்துகிறேன். சமூகக் கல்வி வளர, "கிராம வானொலி மன்றங்கள்" சிறந்த சேவை செய்யுமென்று நம்புகிறேன்."

(1962-ம் வருடம் நவம்பர் மாதம் 5-ம் தேதி ஒலிபரப்பானது.)



# கிராமிய ஊழியர்களை உருவாக்கும் பயிற்சி நிலையம்

பி. பாண்டியன், பி. ஏ., பி. டி.,

[சங்கத் தமிழ் வளர்த்த மதுரை நகருக்கு மேற்கே இருபத்து நான்கு கல் தொலைவிலுள்ள டி. கல்லுப்பட்டியில், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம் அமைந்திருக்கிறது. மகாத்மா காந்தியடிகளின் லட்சியங்களை நிறைவேற்றும் உறுதிகொண்ட கிராமநல ஊழியர்களின்கூட்டு முயற்சியால், காந்திநிகேதன் ஆசிரமம், 1940-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. அந்த ஆசிரமத்தின் பகுதியாக அமைந்தது, இந்தப் பயிற்சி நிலையம். தனிச் சிறப்பு வாய்ந்த இப் பயிற்சி நிலையத்தின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு, அமைப்பு, செயல்முறை ஆகியவைகளை விளக்குவது இக்கட்டுரை. தமிழ் நாட்டில் அமைந்துள்ள இத்தகைய பயிற்சி நிலையங்களைப்பற்றிய கட்டுரைகள் 'கிராம நல' இதழில் தொடர்ந்து வெளிவரும்]



பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ. 40 உதவித் தொகை தரப்படுகிறது. பயிற்சியில் விவசாயம் முதன்மையான இடத்தை வகிப்பதால், சீர்திருந்திய விவசாயவேலைகளை பயிற்சியாளர்களே செய்து பழக 30 ஏக்கர் பரப்புள்ள விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. கால்நடைப் பராமரிப்புக்கு ஒரு முதலுதவி நிலையமும் இருக்கிறது; இவ்வட்டாரத்தில் விரிவான சிறுணவுத் திட்டம் செயலாக்கப்படுகின்றமையால், பெரிய கோழிப்பண்ணையொன்றும் இருக்கிறது, பால் பண்ணை ஒன்றும் நிறுவ இருக்கிறது. விவசாய முன்னேற்றங்களையெல்லாம் விளக்கும் பொருட்காட்சி ஒன்றும், 5,000–க்கும் மேலான புத்தகங்கள் கொண்ட நூல் நிலையம் ஒன்றும், சுமார் 60 பத்திரிக்கைகள் பெறு இன்ற படிப்பகம் ஒன்றும் சிறப்புக்குரியவை. பயிற்சியாளர்கள் தங்கள் உணவு விடுதியை ஜனநாயக முறையில் மிகக் குறைந்த செலவில் நடத்துகின்றனர். சிறந்த கட்டிடம் ஒன்றும் உணவு விடுதிக்கு உண்டு. வாடகையின்றி அறைகளில் பயிற்சியாளர்கள் வசித்து வருகின்றனர்.

### தேர்வும் மதிப்பீடும்

பள்ளியிறுதி வகுப்புத் தேறியவர்களும், தவறியவர்களென்றால் தமிழில் நாற்பது சத வீதம் எண்கள் பெற்றவர்களுமே தேர்வுக்கு உரியவர்கள். மாவட்டக் கலெக்டரின் தலைமையில் முன் தேர்வு ஒன்று நடைபெறுகிறது. இதில் வெற்றி பெற்றவர்கள், நேரிடை உடல் வலுத தேர்வில் தேறவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயிற்சி பெறும்பொழுதும், பயிற்சி முடிந்த பின்னும் மதிப்பிடப்பெறுகின்றார்கள். பருவகாலத் தேர்வுகள் ஆசிரியர்களால் நடத்தப்பெறுகின்றன.

பற்பல இலாகாவின் மாநில உதவி டைரக்டர்களாலும் உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) அவர்களாலும், அரையாண்டு ஆய்வுகள் நடத்தப்பெறுகின்றன. பயிற்சி முடிந்தபின் இறுதித்தேர்வு, அரசினரால் பாடத்திலும், செயல் முறையிலும், நடத்தப்பெற்று, தேர்வு பெற்றவர்களே வட்டாரங்களில் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். தவறியவர்கள் தங்களின் சொந்தச் செலவில் மூன்று மாதம் திரும்பப் பயிற்சி பெறவேண்டும்.

### நிர்வாக அமைப்பு

சென்னை அரசின், கிராம வளர்ச்சித் தல நிர்வாகத் துறை கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கீழ் இந்தப் பயிற்சி நிலையங்கள் இயங்கிவருகின்றன. அவரின் கீழ், மாநில அதிகாரியாக, உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) இருக்கின்றார். இவர் 7 கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களையும் நேரிடையாகக் கண்காணிக்கின்றார். இப்பயிற்சி நிலைய முதல்வர், குடும்பக் கலைப் பகுதியையும், தொழிற்கூடப் பகுதியையும் மேற்பார்வையிடுகின்றார் விவசாயம், கால்நடை, பொதுச் சுகாதாரம், கூட்டுறவு கிராம வளர்ச்சி—தல நிர்வாகத் துறை முதலிய இலாக்காக்களிலிருந்து முதிர்ந்த அனுபவமுள்ள ஊழியர்கள், ஆசிரியர்களாக நியமிக்கப்பெற்றுள்ளனர்.

பயிற்சியில், விவசாயம் முதலிடம் வகிப்பதால், நான்கு ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். நிலப் பராமரிப்பு, விவசாயப் பொறியியல் போதிக்க ஒருவரும், வேளாண்மைக்கு ஒருவரும், தோட்டப் பயிர், பயிர் பாதுகாப்பு போதிக்க ஒருவரும் விவசாயப் பண்ணையைப் பராமரிக்க ஒருவரும் ஆக நால்வர் உள்ளனர். பயிற்சி நிலைய முதல்வர், முதிர்ந்த அனுபவம் பெற்ற மாவட்ட விவசாய அதிகாரியாவார். கால்நடைக்கு ஓர் உதவிக் கால்நடை மருத்துவரும், கல்வியும், சமூகக் கல்வியும் போதிக்க ஒரு அனுபவம் பெற்ற சமூகக் கல்வி அமைப்பாளரும், பொதுச் சுகாதாரத்திற்கு ஒரு தேர்வுத் தகுதி சுகாதார இன்ஸ்பெக்டரும், கூட்டுறவுக்கு, ஓர் உதவிப் பதிவாளரும், கதர் கிராமக் கைத்தொழில்கள் போதிக்க, அனுபவமிக்க இரு ஆசிரியர்களும் பணி புரிகின்றனர். பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலர், பஞ்சாயத்தையும், பொறியியலர், நீர்ப்பாசனமும் போதிக்கின்றனர். இவர்களைத் தவிர, கௌரவ சொற்பெருக்காளர்களும் வந்து, உரை நிகழ்த்துகின்றனர். இப்பயிற்சி நிலையத்துக்குக் கௌரவ ஆலோசகராக ஆசிரமக் காரியதரிசி திரு இரா. குருசாமி அவர்களை, அரசினர் நியமித்துள்ளனர்.

### குடும்பக் கலைப் பகுதி

இல்லாள் மாண்புடையவளாயின், வீட்டில் இல்லாதது ஒன்றுமில்லை. மாண்புடைய வீட்டுப் பெண்களை, நாடெங்கும் உருவாக்குகின்ற சிற்பிகளைப் பயிற்றுவிக்கின்ற கூடமே, குடும்பக் கலைப் பகுதி. 1954–ல், இந்திய சர்க்கார் வளர்ச்சி ஊழியர் குழுவில், 'கிராம சேவிகா' என்றழைக்கப்படும் குடும்பக் கலை வளர்ச்சி ஊழியரையும் சேர்க்கத் தீர்மானித்தனர். கிராமக் குடும்பங்களை எல்லா வகைகளிலும் வளர்ப்பதே, குடும்பக் கலையின் கொள்கை. கல்லுப்பட்டியில், குடும்பக் கலைப் பகுதி, 1955-ல் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை 199 பெண்கள் பயிற்சி பெற்றுப் பணியாற்றுகின்றனர். இந்தக் குழுவில், தற்பொழுது 39 பெண்கள் பயில்கின்றனர்.

### பயிற்சியின் விவரம்

பயிற்சிக் காலம், ஓராண்டு. பயிற்றுவிக்கும் பாடங்கள், விவசாயம், சுகாதாரம், உடல் நலம், தாய்–சேய் நலம், உணவும் போஷாக்கும், வீட்டுப் பராமரிப்பு, ஆடை, கைவேலைப்பாடுகள், கூட்டுறவு, விரிவுப் பணி, அலுவலக முறை முதலியன; பயிற்றுவிப்போர் அரசிதழ் பதிவு பெற்ற பிரதம ஆசிரியையும், அவரின் கீழ் மூன்று உதவி ஆசிரியைகளும். உதவி ஆசிரியைகள் குடும்பக் கலைப் பட்டம் பெற்றவர்களும், கிராமப் பணியில் அனுபவம் மிக்கவர்களும் ஆவர். பிரதம ஆசிரியை, மாதர் நலப் பணியில் நீண்ட நாள் ஈடுபட்டவர். தேர்வும், ஆய்வு முறைகளும், கிராம சேவிக்காக்களுக்கு இருப்பன போன்றவையே.

பெண்கள் நான்கு குடும்பங்களாகப் பிரிக்கப்பெற்று, தாங்களே தங்கள் குடும்பத்தை நிர்வகிக்கின்ற முறை, கல்லுப்பட்டி குடும்பக் கலைப் பகுதிக்கோர் அணிகலமாகும். இரண்டு மாதங்கட்கு ஒருமுறை, அவர்கள் மறுபடியும் வெவ்வேறு குடும்பங்களாகப் பிரிக்கப்படுவதால், சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ளுந் திறன், சகிப்புத் தன்மை முதலிய நற்குணங்கள் வளர ஏதுவாயிருக்கின்றது.

பெண் பயிற்சியாளர்கள், ஜனநாயக முறையில், தங்களின் வேலைகளை நிறைவேற்றித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்றனர்.

### கிராம வேலை

பயிற்சிக் காலத்தில், வாரம் ஓரிரு நாட்கள், கிராமத்திற்குச் சென்று பணிபுரிகின்றனர். இவர்கள், நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பெற்று உள்ளனர். ஒவ்வோர் குழுவும், பக்கத்துக் கிராமங்களில் இரண்டு குடும்பங்களைத் (அவற்றுள் ஒன்று ஹரிஜன் குடும்பம்) தேர்ந்தெடுத்து ஆராய்கின்றனர். இவற்றைத் தவிர, ஆறு வாரங்கள் கிராமங்களில் சென்று வேலைப் பயிற்சி பெறுகின்றனர். வேலைப் பயிற்சிக்குப்பின் அவர்களின் ஐயங்கள் தீர்க்கப்படுகின்றன. இவ்வாறு ஏட்டில் கற்றதை, நாட்டின் நடைமுறையில் செய்து பழகிப் பயிற்சி பெறுகின்றனர்.

### தொழிற்கூடப் பகுதி

இங்குள்ள தொழிற்கூடப் பகுதி, 1955–ல் துவங்கப் பெற்றது. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக, கிராமங்களில் தச்சுத் தொழிலையும், கருமார் தொழிலையும், சீரிய முறையில் வளர்க்க வேண்டும் என்பதே, இத் தொழிற்கூடத்தின் நோக்கம். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தங்கள் கிராமங்களிலிருந்து இத் தொழில்களைப் பரம்பரையாகச் செய்கின்ற குடும்பங்களிலிருந்து இளைஞர்களைத் சேர்ந்து எடுத்து, இங்கு அனுப்புகின்றனர்.

**நோக்கம்.**—ஓராண்டு பயிற்சி காலத்தில் இந்த இளைஞர்கள் தத்தம் தொழிலை மிகவும் முன்னேறிய, ஆனால் கிராமச் சூழ்நிலைக்கு உகந்த முறையில் கற்கின்றனர். பரம்பரைத் தொழில் வண்மையும், கலை எண்ணமும் அவர்கள் கருத்தில் மிளிர்கின்றன. அவற்றுடன் விஞ்ஞான அறிவும் சேரும்பொழுது, அவர்களின் தொழிலில் தெளிவும், உற்பத்தியில் இலாபமும் பரிணமிக்கின்றன.

பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 45 உதவித் தொகை தரப்படுகிறது. இவர்களும் தங்களின் உணவு முதலிய தேவைகளை ஜனநாயக ரீதியில் நிர்வகிக்கின்றனர். பயிற்சிக் காலத்தில் தங்களுக்கு வேண்டிய நல்ல கருவிகளை, தாங்களே உற்பத்தி செய்து, பயிற்சி முடிந்து செல்லும்பொழுது எடுத்துச் செல்கின்றனர். பயிற்சி முடிந்து திரும்பும்பொழுது தங்கள் தங்கள் கிராமத்தில் தொழிற்கூடம் அமைக்க ரூ, 350 கடனாகத் தரப்படுகிறது. இந்த இவர்கள், ஐந்தாண்டுகளில் திருப்பித் தர வேண்டும். அந்தக் கிராமத் தொழிற்கூடங்களில், விவசாயக் கருவிகளை நன்கு பழுதுபார்க்கின்றனர். புதிய திருந்திய விவசாயக் கருவிகளையும், அங்கு உற்பத்தி செய்கின்றனர்.

இத்தகைய பயிற்சி வரிசையில், இது ஏழாவது ஆண்டு. இதுவரை 137 பேர்களை, இத் தொழிற்கூடம் பயிற்றுவித்திருக்கிறது. இவ்வாண்டு 20 பேர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் 10 பேர் கருமார் தொழிலையும், 10 பேர் தச்சுத் தொழிலையும் கற்கின்றனர்.

மிகுந்த திறமையும், நீண்ட அனுபவமும் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற பொறியியல் அறிஞர் ஒருவர், இந்தத் தொழிற்கூடத்தின் பிரதம ஆசிரியராகவும், இவரின் கீழ், இரண்டு பயிற்சி அதிகாரிகளும், பணியாற்றுகின்றனர்.

"ஆபு" மலையில் நடந்த நான்காவது பயிற்சி நிலைய முதல்வர்கள் மகாநாட்டின்போது, நடத்தப்பெற்ற "கருவிகள் கண் காட்சியில்" இந்தத் தொழிற்கூடப் பயிற்சியாளர்கள் செய்த காட்சிப் பொருட்கள், முதல் பரிசு பெற்றதும், மத்திய உணவு மற்றும் விவசாயத் துறையின் பாராட்டுப் பெற்றதும், இத் தொழிற்கூட வரலாற்றில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பெற வேண்டியவை. இந்தப் பயிற்சி நிலையத்தின் திறமைக்கு இவை சிறந்த சான்றுகளாகும்.

எனவே இத்தகைய கிராமிய வளர்ச்சி பயிற்சி நிலையங்களிலும் அவற்றை சேர்ந்தப் பகுதிகளிலும் பயிற்சி பெற்ற இளைஞர்களே நவ பாரதத்தை உருவாக்க நாடெங்கும் பணிபுரிந்து நல்வாழ்வுப் பாதையை வகுக்கின்றார்கள். இவர்கள் கிராம வாழ்க்கையில் "இருளில் ஒரு விளக்காய், இடரில் ஒரு ஊன்றுகோலாய், துன்பத்தில் தோழனாய், இன்பத்திற்கோர் விளக்கமாய்" விளங்குகின்றனர்.

**எதனினும் இனியது சுதந்திரம் காணீர்**

**அதனைக் காக்க அனைத்தையும் தாரீர்**

## இந்திய ராணுவக் கல்லூரி

### மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கான தேர்வு

டேராடேன், ராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான தேர்வு ஒன்று நாட்டின் பல்வேறு இடங்களில் 1963, பிப்ரவரி 11, 12 தேதிகளில் நடத்தப்படும். இதில் எழுத்து மூலமான பரீட்சையும், வாய்மொழிப் பரீட்சையும் அடங்கியிருக்கும். இப் பரீட்சையில் தேர்ச்சி பெறுகிற மாணவர்கள் குறிப்பிட்ட ராணுவ ஆஸ்பத்திரிகளில் வைத்திய பரிசோதனைக்குட்படவேண்டும். வைத்தியப் பரிசோதனையில் தகுதி பெறுகிற மாணவர்கள் மட்டுமே இறுதித் தேர்வுக்குத் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இறுதியாகத் தெரிந்தெடுக்கப்படுகிற மாணவர்களின் பெயர்கள் ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரியின் முதல்வர் இறுதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்புவார்.

இத்தேர்வுக்குரிய விண்ணப்பங்கள், இதற்கான நமூனக்களில் பூர்த்தி செய்யப்பட்டு இரு பிரதிகளாக அந்தந்த ராஜ்ய சர்க்கார்களின் பிரதம காரியதரிசிகளுக்கு 1963 ஜனவரி 15-ந் தேதிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். இக் கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்கள் 1963 ஜூலை முதல் தேதியன்று 11 வயதுக்குக் குறையாதவர்களாகவும் ஆனால் 12 வயதை அடைந்திராதவர்களாகவும் இருக்கவேண்டும். வயது வரம்புகள் தளர்த்தப்படமாட்டாது.

பயிற்சி சம்பந்தமான விவரங்கள், மாதிரி வினாத் தாள்கள், விண்ணப்ப நமூனக்கள் ஆகியவற்றை ராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரிகளின் முதல்வர்களிடமிருந்து அந்தந்த ராஜ்ய சர்க்கார்களின் குறிப்பிட்ட அதிகாரிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில், இவற்றை சென்னை-9, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, பொது (ராணுவ) இலாகா, துணைச் செயலாளர், திரு பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ. எஸ்.-க்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

—(o)—

## பஞ்சாயத்து ஆட்சி
### பத்து அம்ச பரிசோதனை

பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் நன்கு வளர்ந்து செயல்படவேண்டுமென்பது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். அதாவது, கூட்டுறவு அடிப்படையில், சமுதாய முன்னேற்றத்துக்கு ஆவன செய்துகொள்ள, மனிதசக்தி, பணம் பொருள் ஆகிய வருவாய்களை உயர்ந்தபட்சம் எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளமுடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்த அவற்றை ஒருங்கிணைப்பதாகும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், உண்மையில் இந்த வருவாய்களை எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றன என்கின்ற பிரச்சினையே திட்ட நிறைவேற்றத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. இது விஷயத்தை முடிவுசெய்ய, எந்த வகையான பரிசோதனைகள் நடத்திப்பார்க்கலாம் என்பது குறித்து அவ்வப்போது விவாதிக்கப்பட்டு வந்தது.

ஐதராபாத் நகரில், 1961-ம் வருடம் ஜூலை மாதம் நடைபெற்ற, சமுதாய நல-பஞ்சாயத்து ஆட்சி பற்றிய வருடாந்தர மாநாட்டில், இந்தப் பரிசோதனைகள் வரையறுக்கப்பட்டன. அந்த மாநாடு கீழ்க்கண்ட "பத்து அம்ச பரிசோதனை" யைச் சிபாரிசு செய்துள்ளது :—

(i) மூன்றாவது திட்டகாலத்தில், விவசாய உற்பத்தி உயர்ந்த தேசிய முதன்மை.

(ii) கிராமியத் தொழில்களின் முன்னேற்றம்.

(iii) கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி.

(iv) மனித சக்தியைப் பயன்படுத்தல் உட்பட, உள்ளூர் வருவாய்களை வளர்த்தல்.

(v) உயர்ந்த அளவிலிருந்து கிடைக்கும் பணம், பணியாளர்கள், தொழில் நுட்ப உதவி முதலான வசதிகளை, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் உயர்ந்த பட்சம் எந்த அளவுக்குப் பயன்படுத்தமுடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளல்.

(vi) சமுதாயத்தில் பொருளாதார நிலை தாழ்ந்துள்ள பகுதிகளுக்கு உதவி.

(vii) தாமே முன் வந்து பணிபுரியும் நிறுவனங்களின் பணிக்குச் சிறப்பிடம் அளித்து, அதிகாரத்தையும் முயற்சியையும் பரந்த அளவில் பகிர்ந்து கொள்ளுதல்.

(viii) ஒருங்கிணைந்த பயிற்சி, கல்வி ஆகியவற்றின் மூலமும், கடமை, பொறுப்பு ஆகியவற்றைத் தெளிவாகப் பிரித்தறிவதன் மூலமும் மக்கள் பிரதிநிதிகள், மக்கள் ஊழியர்கள் ஆகியோருக்கிடையில் சுமுகமான உறவு நிலவச் செய்தல்.

(ix) அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரின் தகுதிகளில் நல்ல வளர்ச்சி காணல்.

(x) சமுதாயத்தில் தமக்குத்தாமே உதவிக் கொள்வதில் ஒருமையும், கூட்டுறவும் காணல்.

*இந்திய அரசாங்க சமுதாய நலத் துறையின் "பஞ்சாயத்து ஆட்சி—பத்து அம்ச பரிசோதனை" என்ற வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்டது.*

## போர்த் தொழில் பழகு



## பித்தலாட்டப் பிரசாரப் புலிகள்

பீகிங் பிரசாரகர்கள் பொய் சொல்லுவதில் டாக்டர் கோயபல்ஸையும் மிஞ்சி விட்டார்கள். பொய் சொல்வதிலும் பெரும் பொய்யாகச் சொல்வதில்தான் அவர்களுக்கு நம்பிக்கை.

பீகிங் புளுகுக்கு இதோ ஓர் உதாரணம் : "இந்திய மக்களும், இந்தியாவிலுள்ள ஸ்தல அரசாங்கங்களும் கூட, இந்திய சர்க்காரின் தீவிர சீன எதிர்ப்புக் கொள்கையை எதிர்க்கின்றன" என்று, நவம்பர் 12-ந் தேதியன்று பீகிங் ரேடியோ கூறிற்று.

இதைவிடப் படுமோசமான பொய் வேறு ஏதாவது இருக்க முடியுமா? அல்லது எந்த அரசாங்கமாவது உண்மைக்கும், உண்மை நிலைக்கும் சிறிதுகூட சம்பந்தமே இல்லாத இத்தகைய பிரசாரத்தில் இறங்க முடியுமா?

இந்திய மக்களைப் பற்றி இவ்வளவு படுமோசமாகவா சீன அரசாங்கம் அறிந்து கொண்டிருக்கிறது? அல்லது உண்மையைக் காணச் சகியாமல், வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டு உளுத்துபோன தனது சொந்தக் கற்பனையில் இறங்கிவிட்டதா? அல்லது உண்மையைத் தெரிந்துகொண்டுவிடாதபடி ஒதுக்கிவைத்திருக்கிறதே அந்தச் சீன மக்களை ஏமாற்றுவதற்காகவோ?

### அறியாமை இருளில் உழலும் சீனமக்கள்

பீகிங்கில் ஆட்சி நடத்துபவர்கள், வெளித் தொடர்பே இல்லாமல் மறைத்து வைக்கப்பட்ட ஒரு நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு வசிப்பவர்கள் வெளி உலகத்தில் என்ன நடக்கிறதென்பதையே தெரிந்துகொள்ள முடியாது; அவர்களை அந்த நிலைமையிலேயே வைத்திருப்பதில்தான் சீன ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளுக்கெல்லாம் இது வசதியாக இருக்கிறது.

சீன மக்கள் தாங்களாக எதையும் தெரிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் எதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆட்சியாளர்கள் நினைக்கிறார்களோ அதைத்தான் அவர்கள் அறிந்து கொள்ள முடியும். பத்திரிகைகளைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்; அடக்கி ஒடுக்கப்பட்ட அடிமைப் பத்திரிகைகள். வெளி உலகத்துடன் தொடர்பே வேண்டாம்; கிடையாது. அவர்கள் வெளி உலகத்துடன் தொடர்பு கொள்வதெல்லாம் பஞ்சத்தில் அடிபட்டு உணவுப் பிச்சை கேட்கும் போதும், அமைதியாக வாழும் அண்டை நாட்டின் பூமியில் ஆக்கிரமிப்புச் செய்யும் போதும் தான்.

சீன மக்கள், ஈவு இரக்கமற்ற ஒரு சூழ்ச்சிக்குப் பலியாகிக்கிடக்கின்றனர். அவர்களுக்கு வெளியில் நடப்பது ஒன்றுமே தெரியாது என்பது மாத்திரமல்ல; தங்களுடைய அரசாங்கம், அண்டை நாடுகளுக்கும், நண்பர்களுக்கும் என்ன செய்து வருகிறது என்பதைப் பற்றிய உண்மைகள் கூட அவர்களுக்குத் தெரியாது.

இந்தியாதான் சீனாவின் மீது படையெடுத்துச் சென்றிருப்பதாக, இன்னமும் சீன மக்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சீனாவுக்குச் சொந்தமாக இராத ஒரு பிரதேசத்தைச் சீனப் படைகள் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையை இன்னமும் அவர்கள் சீன மக்களிடம் சொல்லவில்லை.

நாம் ஏதோ கொஞ்சம் சேராக் கொள்கையிலிருந்து பிறழ்ந்து விட்டதாக, சீன மக்களை நம்பும்படி செய்து வருகின்றனர். நாம் சிறிது கூட விட்டுக்கொடுக்கவே இல்லை என்று நமது பிரதம மந்திரி ஓயாமல் செய்து வரும் அறிவிப்புக்களைக் கேட்பதற்குச் சீன மக்கள் அனுமதிக்கப் படுவதே இல்லை.

### அடுக்கிய பொய்கள்

இவற்றிற்கெல்லாம் மேலாக இப்போது ஒரு அபாண்டப் புளுகு வந்திருக்கிறது. அதைக் கேட்க நமக்கு ஆத்திரமாகத்தான் இருக்கிறது. ஆனால், சீன மக்களின் கதியை நினைத்து நாம் பரிதாபப்படாமலும் இருக்க முடியவில்லை. யுத்தத்தை விடாமல் வளர்த்துக்கொண்டே வருவதற்காக அவர்கள், சீன மக்களை வறுமையில் வாட்டி வருவதைக் கண்டு நாம் உண்மையில் அனுதாபப் படத்தான் வேண்டியிருக்கிறது.

நாம் அவர்களிடத்தில் நட்புக்கொள்வதற்கு எவ்வளவு பாடுபட்டோம் என்பதாவது அவர்களுக்கு நினைவிருக்க வேண்டாமா? ஒரு வேளை சீன மக்களுக்கு அது நினைவிருக்கிறதோ என்னமோ? அதனால்தான் சீன அரசாங்கம் பொய்யையும், புளுகையும் அவர்களுக்கு ஊட்டி வருகிறதுபோலும்; அது பீக்கிங்கில் உற்பத்தி செய்யப்பட்டாலும், புளுகு புளுகுதான்; ஒருபோதும் உண்மையாகி விடாது.

சீனரின் அப்பட்டமான ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்காத இந்தியர் ஒருவர்கூட இல்லை என்பதை உலகமே அறிந்திருக்கிறது. அமைதியையே நாடியிருந்த இந்த நாட்டிலிருந்து எதிரியை முறியடிக்க ஒரு பெரிய சக்தியே கிளம்பிவிட்டது.

சீன அரசாங்கத்துக்கும் இது தெரியும். இந்திய மக்கள் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் உரம் ஏறி விட்டது; ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றும் வரையில் நாம் ஓய்ந்திருக்கப் போவதில்லை என்பதையும் சீன அரசாங்கம் அறிந்துதான் இருக்கிறது.

சீன ஆட்சியாளர்களால் எவரையும் ஏமாற்ற முடியவில்லை; அவர்களுடைய மக்களையுங்கூட. அவர்கள் இழைத்த துரோகமும், பொய்ப் பிரசாரமும் அவர்களையே திருப்பித் தாக்கப் போகிறது.

சீன மக்கள் என்றாவது ஒரு நாள் உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள். தங்களை எவ்வளவு

ழிவான நிலைக்குத் தங்களுடைய ஆட்சியாளர்கள் இறக்கி விட்டார்கள் என்பதைக் கண்டு அவர்கள் அப்போது பதைபதைக்கத்தான் போகிறார்கள்.

ஆகவே, நாம் நடத்தும் இந்த நியாயமான, மாபெரும் போராட்டத்துக்கு, இதனால் புதியதொரு முக்கியத்துவமும் ஏற்பட்டிருக்கிறது.

**நாம், நம்முடைய சுதந்திரத்துக்காக மாத்திரம் போர் புரியவில்லை, சீன மக்களின் விமோசனத்துக்காகவும் போராடுகிறோம்.**

### சீனர் நடத்தும் கொடுங்கோன்மை

சூ-என்-லாயும், அவருடன் சேர்ந்த மற்ற சீன எதேச்சாதிகாரிகளும் மறைமுகமாகப் பேசுவதில் நிபுணர்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே இந்தக் கலையைப் பயின்று தேர்ச்சி பெற்றது, சீன மக்களின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சீன கம்யூனிஸத்தின் மத குருவாகிய மா—சே துங் தம்முடைய பிரதான அலுவலுக்கு "புதிய ஜனநாயகம்" என்ற பெயரைக் கொடுத்தார். ஆம், இந்த ஜனநாயகம் மிகவும் புதியதுதான். அதற்கும், உண்மை ஜனநாயகத்திற்கும் ஸ்நான ப்ராப்திகூட கிடையாது. புதிய ஜனநாயகத்திற்கும், பழைய ஜனநாயகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இந்தப் புதிய முறை 70 கோடி சீன மக்களை வெறும் பூச்சிகளாக மாற்றியதுதான்.

இந்தப் புதிய ஜனநாயகத்தைச் செயல் முறையில் பார்த்தால்தான் அதனுடைய சுய உருவம் தெரியும். அரசியலில் செயல்படுவதற்கு வன்முறைதான் கருவியாகும் என்று மா—சே துங் கூறியிருக்கிறார். அரசாங்கத்தை எதிர்ப்பவர்களெல்லாம் விரோதிகள் என்று கருதப்படுவார்கள். ஒரே மாதிரியான உருப்படிகளாக தயார் செய்யப்பட்ட மக்களைக்கொண்ட நாடு ஒன்றை சிருஷ்டிப்பதுதான் இந்த ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கம். சிந்தனைச் சக்தியற்ற, பணிவு நிறைந்த, மானமிழந்த, மானிடக் கும்பலை உருவாக்குவதுதான்.

சீன அதிகாரிகள் தங்களுடைய கொள்கைகளை மிருகத்தனமான முறைகளுடன் நிறைவேற்றுவிட்டால் அது அவர்களுடைய இயல்புக்கு முரண்பட்டதாகிவிடும். அதனால், அதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றுகூட அவர்களுடைய செயல்களில் மானிடவர்க்கத்தினிடம் சீனா கொண்டிருக்கும் இரக்கமற்ற தன்மை புலப்படுகிறது. சீன மக்களாயிருந்தாலும் சரி, பாரத மக்களாய் இருந்தாலும் சரி, எந்த நாட்டு மக்களாய் இருந்தாலும் அவர்களைச் சீனா கொடுமையுடன்தான் நடத்தும்.

பத்து ஆண்டுகளுக்கு முன், சீனாவின் அப்போதைய நிதி அமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா ? "புரட்சிக்குப் பிறகு 20 லட்சம் கொள்ளைக்காரர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள்" என்றார். கொள்ளைக்காரர்களாம் ! தங்களுடைய எதேச்சாதிகார ஆதிக்கத்தை எதிர்த்தவர்களுக்குச் சீன அதிகார வர்க்கம் "கொள்ளைக்காரர்கள்" என்ற பட்டத்தை சூட்டிவிட்டது.

சில சமயங்களில் இவர்களை எதிர்ப் புரட்சிக்காரர்கள் என்றுகூட சீன அரசாங்கம் கூறிவந்தது.

இந்தச் சொல், சீனர்களின் அகராதியில் பலவித அர்த்தம் கொண்டதாகும். எதிர்ப் புரட்சிக்காரர் என்றால் அரசியலில் எதிர்கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம்; அல்லது அபாயகரமான சிந்தனைகள் கொண்டவராக இருக்கலாம் அல்லது பசியால் வருந்துவதால் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளும் பிரஜையாகவும் இருக்கலாம்.

#### அவர்கள் அகராதியில்....

அபாயகரமான சிந்தனை என்ற சொற்கள்கூட மறைமுகமான பொருள் கொண்டவை. ஒரு தந்தை தான் பெற்ற பிள்ளையிடம் அன்பு காட்டுவதும், ஆலைத் தொழிலாளி ஒருவன் புதிய ஆடைகள் விரும்புவதும்கூட அபாயகரமான சிந்தனைகள்தான் என்று சீனர்கள் வியாக்யானம் செய்தார்கள்.

இத்தகைய மோசமான எதிர்ப் புரட்சிக்காரரை அவர்கள் எப்படி அகற்றுகிறார்கள் தெரியுமா? சுருங்கச் சொன்னால், அவர்களுடைய செயல் முறை இதுதான்: அதாவது முதலில் தலையை ஆட்டுவது, பிறகு தலையை ஆட்டச் செய்வது முடிவில் தலையையே வெட்டிவிடுவது. தலையை ஆட்டும் எளிய முறையிலிருந்து பயங்கரத்திற்கே பலியாக்கி விடுவதுதான் சீனர்களின் சிறந்த செயல் முறை.

சிலருக்கு தாராளம்கூட காட்டுவார்கள். அந்த தாராளம் என்னவென்றால், அவர்களுக்கு மரண தண்டனை விதித்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக கடுங்காவலில் கடும் உழைப்பு மேற்கொள்ளச் செய்வதுதான்.

எதிர்ப் புரட்சிக்காரர்கள் சம்பந்தமான சட்டத்தில் அவர்களுக்கு நீதி மன்ற விசாரணைக்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட நீதிமன்றங்கள்? சாட்சியம் கூற முடியாது ; வழக்கறிஞர்களுக்கு அனுமதி கிடையாது. சுய நினைவு இழந்த அதிகாரி ஒருவர் குற்றப்பத்திரிகை படிப்பார். ஒப்பந்த வாக்கு மூலம் பலவந்தமாக வாங்கப்படும். அத்துடன் வெறிபிடித்த கும்பல் ஒன்று 'கொல்' 'கொல்' என்று கூக்குரலிட அந்த நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவனை எப்படியும் குற்றவாளியாகவே முடிவு கட்டி தண்டிக்கும்.

சில வருஷங்களுக்கு முன் இந்த நீதி மன்ற விசாரணைகளை பீக்கிங் ரேடியோ ஒலிபரப்பிற்று. சீன அதிகாரிகள் மானிட வர்க்கத்தினிடம் கொடுமையாக நடந்து கொண்டது பற்றி வெட்கப்படவில்லை. ஆடம்பரத்துடன் தம்பட்டமடித்துக் கொண்டார்கள்.

மானத்தைக் கைவிடுவது, மற்றவனைக் காட்டிக் கொடுப்பது, சுதந்திரம் இழப்பது முதலிய செயல்களால் சீனாவில் மோசடி மலிந்துவிடலாம். இவைகளெல்லாம் சிந்தனைச் சீர்திருத்தம் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்; அடிமைத்தன உழைப்பினால் கிடைக்கும் சீர்திருத்தம்.

**(நன்றி: செய்தித்துறை, அகில இந்திய ரேடியோ)**



# சீனாவின் துரோகம்

நமது பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, இந்தியாவின் மீது சீனா படையெடுப்பு செய்திருப்பது பற்றி உலக நாடுகளில் தலைவர்களுக்கு அக்டோபர் 26–ந் தேதியன்று கடிதம் எழுதியபோது, மிகுந்த மனவேதனையுடன் தான் அவர் அதைச் செய்ய வேண்டியிருந்தது.

சீனர்கள் இந்தியாவுடன் கொண்டிருந்த உறவில், "நன்மைகளுக்கெல்லாம் பிரதியுபகாரமாகத் தீமையையே இழைத்திருப்பது பெரிதும் வருந்தத் தக்கதொரு விஷயமாகும்" என்று மனம் வெதும்பி எழுதியிருக்கிறார். "இந்தியா சுதந்திரமடைந்தது முதல் சீனாவின்பால் நேசபாவமும், சமாதானமும் நிறைந்த உறவே எங்களுடைய அடிப்படையான கொள்கையாக இருந்து வந்திருக்கிறது ; இந்தக் கொள்கையையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறோம் ; வலுவில் சென்று, உலக அரங்கிலே சீனாவின் கட்சியை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். சீனா எங்களிடத்தில் விரோத மனப்பான்மை காட்டி வருவதோடல்லாமல், நயவஞ்சகமாகவும் நடந்து வந்திருப்பது கண்டு நாங்கள் வருந்துகிறோம்" என்று அவர் கூறியிருக்கிறார்.

### சொல்லும் செயலும்

கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியாவினிடத்தில் சீனா நடந்து கொண்டு வந்திருக்கும் விதத்தைப் பார்க்கும்போது, சமாதானத்தையே விரும்புவதாக சதா காலமும் பேசிக் கொண்டிருந்து, திரை மறைவிலே, அது தாக்குதலுக்கு ஆயத்தம் செய்து கொண்டு வந்திருப்பது புலனாகிறது.

சீன மக்களின் குடியரசு 1949, அக்டோபர் முதல் தேதியன்று அறிவிக்கப்பட்டபோது, அந்த ஆட்சிக்கு, முதலில் அங்கீகாரம் அளித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று ; அதுவே புதிய ஆட்சிக்கு, இந்தியாவின் முதல் பரிசு. ஆனால், அதற்கு ஒரு வருஷத்துக்குள்ளாகவே சீனா "சீன–இந்திய எல்லையை உறுதிப்படுத்துவது" பற்றிப் பேசத் தொடங்கி விட்டது. எல்லை என்னவோ ஏற்கெனவே நன்கு உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. 1950–ல் சீனாவுக்கும் திபேத்துக்குமிடையே தகராறு ஏற்பட்ட போது, இந்தியா உலக அமைதிக்குப் பங்கமேற்படாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையில், அந்தத் தகராறை சமாதானமாகவும், நேசபாவத்துடனும் தீர்த்துக் கொள்ளலாம் என்று சீன அரசாங்கத்துக்கு யோசனை கூறியபோது, அவர்கள் கூறிய பதில் நமக்கு அதிர்ச்சியைத்தான் கொடுத்தது. "திபேத்தில், சீனாவுக்கு எதிரான வெளி நாடுகளின் பேச்சில் நீங்கள் மதி மயங்கி விட்டீர்கள் என்று" அவர்கள் பதில் கொடுத்தார்கள். ஆதாரமற்ற அந்தக் குற்றச்சாட்டைக் கேட்டு இந்தியா அதிர்ச்சியடைந்தது. திபேத் பிரச்சினை அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்பதைத் தவிர வேறு எந்த விதமான எண்ணமும் நமக்குக் கிடையாது என்று பதில் சொன்னோம்.

சீனாவை ஐ. நா. வில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இடைவிடாது வாதாடி வந்தோம். சீனா சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றிப் பேசுவதற்கு சீன மக்கள் குடியரசுக்குத்தான் உரிமை இருக்கிறது என்று கூடச் சொன்னோம்.

1954-ல் திபேத்தை. சீனாவின் ஒரு பகுதியாக இந்தியா அங்கீகரித்தது. திபேத்தில் இதுவரையில் அனுபவித்து வந்த சலுகைகளையும் உரிமைகளையும், விட்டுக் கொடுத்தது. "உலகத்தில் அமைதி நிலவச் செய்வதற்கும், நல்லெணத்தை வளர்ப்பதற்கும் இந்தியா பறை சாற்றி வந்த "பஞ்ச சீல"க் கோட்பாடுகளையே பின்பற்றி நடப்பதாகச் சீனாவும் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இரண்டு நாடுகளுக்குமிடையே தகராறுக்குட்பட்ட விஷயம் எதுவுமே கிடையாது என்று அப்போது நினைத்தோம். அப்படியே, வருங்காலத்தில் ஏதேனும் ஏற்பட்டாலும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்துடன் பேசிக் கொள்வதன் மூலம் அதைத் தீர்த்துக் கொண்டு விடலாம் என்று நினைத்தோம்.

### 'பஞ்சசீலம்' மறந்தனர் !

1954-ல் சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்தார். இரண்டு நாடுகளின் பிரதம மந்திரிகளும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் அவரும் கையெழுத்துப் போட்டார். "பஞ்ச சீல நெறிகளை, பல்வேறு நாடுகளுக்கிடையே மாத்திரமல்லாமல் பொதுவாக சர்வதேச உறவுகளிலேயும் கூடப் பின்பற்றினால், உலக அமைதிக்கு உறுதியான அஸ்திவாரம் அமைந்து விடும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இது நிகழ்ந்தது 1954 ஜூன் 28-ந் தேதி. அதில் போட்ட கையெழுத்து உலருவதற்குள்ளேயே, ஒரே மாதத்துக்குள் ஜூலை 17-ந் தேதியன்று, சீனத் துருப்புகள் உத்திரப் பிரதேசத்தில், பாரஹோதி பிரதேசத்துக்குள் நுழைந்து, இந்திய பிரதேசத்தின் ஒரு பகுதியின்மீது உரிமை கொண்டாடியது. சீனர்கள் பஞ்ச சீலத்தைப் பயின்ற விதம் அது தான்!

1954 அக்டோபர் பிரதம மந்திரி ஸ்ரீ நேரு, இருநாடுகளுக்கு மிடையே நட்புறவை வளர்த்துப் பேணும் தமது கொள்கையையொட்டி, சீனாவுக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு தங்கியிருந்தபோது, சீனாவில் வெளியிடப்பட்டுள்ள பூகோளப் படங்களில், இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையேயுள்ள எல்லைக்கோடு தவறாகக் குறிப்பிடப்பட்டிருப்பதையும், இந்தியப் பிரதேசத்தில் சுமார் 50,000 சதுர மைல் சீனாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதையும், சீனத் தலைவரிடம் சுட்டிக் காட்டினார். அந்தப் படங்கள் பழைய கோமிங்டாங் படங்களின் பிரதிகளே யென்றும், அவற்றைத் திருத்தி வரைவதற்கு இதுவரை தங்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லையென்றும், அவர் அதற்குப் பதில் சொன்னார்.

# "உதட்டில் புன்சிரிப்பு—உள்ளத்தில் கொடிய விஷம்"

'உதட்டில் புன்சிரிப்பு—உள்ளத்தில் கொடிய விஷம்' சீனர்களின் தற்போதைய செயலை விளக்க வேறு வார்த்தைகளில்லை. சிரித்து சிரித்துப் பேசும் சீனர்களின் இரட்டை வேஷம் இப்போது பகிரங்கமாகிவிட்டது.

மக்மாஹன் கோடு பற்றிச் சீனப் பிரதமர் மி. சௌ-என்-லாய் கூறிய வார்த்தைகளையே உதாரணமாக எடுத்துக் கொள்வோமே. மி. சௌ-என்-லாய் 1956 இறுதியில் இந்தியாவுக்கு வந்தபோது, நமது பிரதம மந்திரியிடம் பின்வருமாறு கூறினார்: "வெகு நாட்களுக்கு முன் என்ன நடந்திருந்தாலும் சரி, தற்போது இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே நட்புறவு இருந்து வருவதால் இந்தியாவிலுள்ள இந்த எல்லையை, மக்மாஹன் கோட்டைச் சீனர்கள் அங்கீகரிக்க உத்தேசித்துள்ளனர்.

இரு பிரதமர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முடிந்தவுடன் அதுபற்றிப் பின்வருமாறு குறிப்பு எழுதியதாக, பிரதமர் நேரு பார்லிமெண்டில் சபைத்தில் அறிவித்தார்.

> "பிரதமர் சௌ, மக்மாஹன் கோடு பற்றி மீண்டும் பிரஸ்தாபித்தார்; அவ் விஷயத்தைப் பற்றி முந்திய சீன சர்க்கார் முடிவு செய்தார்கள் என்றாலும், தாம் அக் கோடு பற்றி எதுவும் கேள்விப்படவில்லையென்றும் மீண்டும் கூறினார். பர்மாவுடனும் அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் எல்லையைப் பரிசீலிக்கும்போது இவ்விஷயத்தை அவர் மீண்டும் பரிசீலித்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிர்ணயித்த அந்தக் கோடு சரியானதல்ல என்று தாம் கருதிய போதிலும், அக் கோடு வெகு காலமாக இருந்து வந்து நிலை பெற்றிருப்பதாலும், இந்தியா, பர்மா, சீனு ஆகிய சம்பந்தப்பட்ட நாடுகளிடையே நட்புறவு, நிலவி வருவதாலும், மகமஹான் கோட்டை அங்கீகரிக்க வேண்டுமென்று சீனச் சர்க்கார் கருதுகின்றனர் என்பதாக மி. சௌ-என்-லாய் தெரிவித்தார்",

சீனுவுக்குச் சென்றதும் அந்த வேஷத்தைக் கலைத்து விட்டுப் புதிய வேஷத்தைப் போட்டுக் கொண்டார். இந்தியாவின் கணிசமான பகுதிகளைச் சீனர் பாத்தியதை கோரும் பழைய தேசப் படங்களும் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. அதை நமது பிரதம மந்திரி, "சீனப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, சீன இந்திய எல்லை ஒரு போதும் முறைப்படியாக நிர்ணயிக்கப் படவில்லை. இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே எல்லைத் தகாறு இருக்கிறது என்றும் கூற விரும்புகிறேன்' என்று கூறினார்.

மீண்டும் 1960 ஏப்ரல் மாதம் புதுடில்லியில் சௌ-என்-லாய், பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் "மக்மகான் கோட்டை நாங்கள் தாண்டவே மாட்டோம்; இந்திய சர்க்காருடன் நாங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளில் நாட்டுப் பகுதிகள் விஷயமாக எவ்வித பாத்தியதையும் இதுவரை கொண்டாடியதில்லை" என்பதாகக் கூறினார்.

இதைவிடத் தெளிவாக வேறு எப்படிச் சொல்ல முடியும். அப்படியிருந்தும், இரண்டு மாதங்களுக்குப் பிறகு 1960 ஜுன் மாதம், இந்தியப் பகுதிகளில் பல இடங்களில் சீனர்கள் புகுந்திருக்கின்றனர்; சீன விமானங்கள் 52 தடவை இந்தியப் பகுதிகளில் அத்து மீறிப் புகுந்திருக்கின்றன; இவைகளை எதிர்த்து இந்தியா தெரிவித்த ஆட்சேபனைகளுக்கு சீனு பதிலளிக்கவில்லை.

சீனுவின் இரட்டை வேடத்துக்கு மகுடம் வைத்தாற் போல் இருக்கிறது, சௌ-என்-லாய் 1960-ல் புதுடில்லி விமான நிலையத்தில் பேசிய விஷயங்கள்:

"இந்தியர்களுக்கு சீனர்களுக்குமிடையேயுள்ள நட்புறவு ஒரு போதும் அழியாதது. நம்மிரு நாட்டு மக்களும் சென்ற ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நண்பர்களாக இருந்து வந்திருக்கின்றனர்; எதிர் காலத்தில் எப்போதும் நண்பர்களாகவே இருப்போம். இரு நாடுகளைச் சேர்ந்த 100 கோடி மக்களை, பூமியின் எந்தச் சக்தியும் அசைத்துவிட முடியாது என்பது வரலாற்றில் அழியாமல் இருக்கட்டும். சீன-இந்திய நட்பு வாழ்க".

லட்சக்கணக்கான வருடங்கள் நாம் நண்பர்களாக இருப்போம் என்று அவர் சொன்னுர். இப்போது இந்திய நாட்டின்மீது அவர் படையை ஏவி விட்டு நாட்டைச் சிதறடித்து விட்டார். சீன-இந்திய நட்பு வாழ்க என்று சௌ-என்-லாய் கூறியபோதே இந்தியாவை அபகரிக்கும் எண்ணம் அவர் உள்ளத்தில் உருவாகிவிட்டது.

# இந்திய—ரஷ்ய கப்பல் போக்கு வரத்து

## புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நடைபெறுகிற கப்பல் போக்குவரத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக இந்திய சாக்காரும், சோவியத் சர்க்காரும் புதிய கப்பல் போக்குவரத்து ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டிருக்கின்றனர். இப்புதிய ஒப்பந்தத்தின்படி இவ்விரு நாடுகளுக்குமிடையே கப்பல் போக்கு வரத்தில் ஈடுபடுத்தப்படும் கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 20 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தற்போது 14 கப்பல்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன; புதிய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு தரப்பிலும் 10 கப்பல்கள் விடப்படும். இப் போக்கு வரவுப் பணியின், தேவையான சரக்குக் கட்டண விகிதங்களும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.





# பொய்ப் பிரசார எதிர்ப்புப் போர்

## உண்மை நிலையை உலகறியச் செய்வோம்

தற்போதைய அவசர நிலைமையையொட்டி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விளம்பர, பிரசார ஏற்பாடுகளை அபிவிருத்தி செய்வது பற்றி, புது டில்லியில் நடைபெற்ற செய்தி-ஒலிபரப்பு மந்திராலயத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

இம்மந்திராலயத்தின் பல்வேறு மொழிப் பிரிவுகளும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதற்குப் பிறகு இவ்வளவு குறுகிய காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி உறுப்பினர்கள் பொதுவாக திருப்தி தெரிவித்தனர். ஆயினும், நமது பிரசார, எதிர்ப்பிரசார ஸ்தாபனத்தை மேலும் விரிவுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமென்று உறுப்பினர்கள் கருதினர்.

இக்கூட்டத்திற்கு, செய்தி-ஒலிபரப்பு மந்திரி, டாக்டர் பி. கோபால ரெட்டி தலைமை வகித்தார். விளம்பர நடவடிக்கைகள் பற்றி பாராளுமன்றத்தில் கருத்துக்கள் தெரிவித்திருந்த பார்லிமெண்டின் அங்கத்தினர்களும், பாராளுமன்றப் பல்வேறு கோஷ்டித் தலைவர்களும் விசேஷ அழைப்பின்பேரில் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எல்லைப்புறங்களிலுள்ள வானொலி நிலையங்கள் மேலும் சக்தி வாய்ந்தவையாக வலுப்படுத்தப்பட்டு வருகின்றன வென்றும், எல்லைப்புறப் பகுதிகளுக்கு வானொலிகள் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனவென்றும், அங்குள்ள பொதுமக்கள் வானொலி கேட்பதற்கு மேலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளனவென்றும் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த தொழிலில் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களடங்கிய நிரந்தரக் குழுயொன்று செய்தி-ஒலிபரப்பு மந்திராலயத்துடன் தொடர்பு கொண்டு அடிக்கடி ஆலோசனைக் கூறி வரவேண்டுமென்று யோசனை கூறப்பட்டது.

பிரபல பத்திரிகையாளர்கள், ராஜ்ய சட்ட சபை உறுப்பினர்கள் உட்பட உத்தியோகச் சார்பற்ற மற்றவர்கள் ஆகியோரும் இம்மந்திராலயத்துடன் தொடர்பு கொண்டிருக்கும்படிச் செய்யவேண்டுமென்றும் சில உறுப்பினர்கள் யோசனை கூறினுர்கள். பாதுகாப்பு மந்திராலயம், வெளி விவகார மந்திராலயம், செய்தி-ஒலிபரப்பு மந்திராலயம் ஆகியவற்றிற்கு இடையேயும், இம்மந்திராலயத்தின் பல்வேறு மொழிப் பிரிவுகளுக்கிடையேயும் மத்திய, ராஜ்ய, விளம்பர ஸ்தாபனங்களுக்கிடையேயும் மேலும் அதிக ஒத்துழைப்பு இருந்து வரவேண்டுமென்று உறுப்பினர்கள் வற்புறுத்தினுர்கள். மத்திய, ராஜ்யக் கட்டங்களிலுள்ள உத்தியோகச் சார்பற்ற ஸ்தாபனங்களுடனும் அதிக ஒருமைப்பாடு இருந்து வரவேண்டும்.

எதிர்ப்பிரசார ஸ்தாபனமொன்றும், பத்திரிகைகளுக்கு உதவி புரிவதற்காக பிரதம பத்திரிகை ஆலோசகர் ஸ்தாபனம் ஒன்றும் சீக்கிரமே அமைக்கப்படவேண்டுமென்று யோசனை கூறப்பட்டது.

இந்தியாவின் விளம்பரம் உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேணடும் என்று உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆனுல் இவ்விளம்பர நடவடிக்கைகள் மேலும் மும்முரமாகவும் காலதாமதமின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும் என்று அவர்கள் கருதினர்.

முன்னணிப் பகுதிகளில் நேரடியாகச் சென்று தகவல்களைச் சேகரித்து வருவதற்காக, இந்திய, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், புகைப்படக்காரர்களும் அடங்கிய பத்திரிகைக் கோஷ்டி ஒன்று நேபா முன்னணிப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறதென்றும், இதுபோன்ற மற்ற பத்திரிகை கோஷ்டியொன்றை சீக்கிரமே அங்கே அழைத்துச் செல்ல உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் இக்குழு உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. தேஜ்பூரில் பத்திரிகையாளர்கள் முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. நேபாவிலும் லடாக்கிலும் பொதுத் தொடர்பு அதிகாரிகள் நியமிககப் பட்டுள்ளனர். அவர்கள் அனுப்பிவரும் செய்திகளும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் நன்கு வரவேற்கப் படுகின்றன. வானொலியின் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பணிகளும் தற்போதைய விளம்பர பிரசார நடவடிக்கைகளுக்கு நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய அவசர நிலைமைக்குப் பொருத்தமான பல விசேஷ நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. பத்திரிகைகளுக்குப் பல விசேஷ வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. துண்டுப் பிரசுரங்கள், "போஸ்டர் அட்டைகள்" சுவரொட்டிகள் முதலியவை ஏராளமாக வெளியிடப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தை யொட்டி விசேஷத் திரைப் படங்களும் தயாரிக்கப் பட்டுள்ளன.

கிராம நலம் :
தனிப் பிரதி 0·13 ந.பை. ஆண்டு சந்தா ரூ. 1·50

# கொழுந்து விடும் தேசப்பற்று

**சீன ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவதற்காக நாட்டு மக்கள் எல்லோரும், சின்னஞ் சிறுவர்களும் ஏழை எளியோரும் தங்களால் ஆனதை புன்முறுவலுடன் வழங்குகின்றனர். லக்ஷக்கணக்கான மக்கள் தேசத்தை பாதுகாப்பதற்காக உறுதி கொண்டுவிட்டார்கள். சுதந்திரப்பற்று அவர்களிடயே கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருக்கிறது.**

### சிறுவர்களின் தியாகம்

பம்பாயைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் தியாகத்தின் சின்னமாக விளங்குகிறார்கள். அவர்கள் பிரதம மந்திரி நேருவுக்கு எழுதிய கடிதம் வருமாறு :

"நாங்கள், நிக்லேஷ், ஜெய்மினி ஆகிய இரு சகோதரர்களும் ரூ. 151 வீதம் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பியிருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

"கைக்கடியாரம் வாங்கிக்கொள்வதற்காக எங்கள் பெற்றோர்கள் இந்தப் பணத்தை தந்தார்கள். ஆனால் நீங்கள் விடுத்தச் செய்தியைக் கேட்டு, இந்தப் பணம் நாட்டின் பாதுகாப்புக்காகச் செல்லவேண்டுமென்று முடிவு பண்ணிவிட்டோம்.

"நாங்கள் அனுப்பியிருக்கும் எங்களுடைய புகைப் படத்தை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய கையெழுத்துடன் தங்களுடைய புகைப்படமொன்றை அனுப்பிவைக்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

"எதிரியை விரட்டுவதற்கான தங்கள் முயற்சி விரைவில் வெற்றி பெறவேண்டுமென்று விரும்புகிறோம். மிக்க நன்றி."

அவ்விரு சிறுவர்களுக்கும் பிரதம மந்திரி தம்முடைய கையெழுத்துப் போட்ட படத்தை அனுப்பிவைத்தார்.

### ராஜ்பூர் கிராமத்தின் வீரப்பரம்பரை

இந்தோ—பாகிஸ்தான் எல்லையிலுள்ள சிறிய கிராமமொன்றில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ராஜ்பூர் கிராமவாசிகள் சிலர் வாளை வீசிக்கொண்டு, ராஜஸ்தான் மந்திரி ஸ்ரீ மாத்தூரிடம், தாய்நாட்டின் மீது தங்களுக்கிருக்கும் பற்றுதலின் சின்னமாக தங்கள் தலைகளையே கொடுக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள்.

அவர்களிடையே இருந்த ஒருவர் முதலிரண்டு உலக மகா யுத்தங்களிலும் சண்டையிட்டவர். "ராணா பிரதாபின் பிள்ளைகளும், துர்க்காதாஸின் பிள்ளைகளும் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். ஸ்ரீ நேருவின் தலைமையில் அவர்கள் சீனரை விரட்டி அடிப்பார்கள் என்று சொல்லுங்கள்" என்பதாக மாத்தூரைக் கேட்டுக் கொண்டார்கள்.

### யுத்த நிதிக்கு சிறுமியின் சேமிப்பு

உத்தரப் பிரதேசத்தில் சித்தாப்பூர் ஜில்லாவில், ஷீலா பாண்டே என்னும் எட்டு வயதுச் சிறுமி கம்பளி கோட்டு வேண்டுமென்று நீண்ட காலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள். குழந்தைகளின் ஆசை நமக்குத் தெரிந்ததுதானே ? கம்பளிக் கோட்டுப் போடுவதே சுகபோகமான வாழ்வு என்பது அச்சிறுமியின் எண்ணம். அதற்காக அவள் தனக்கு அவ்வப்போது உறவினர்கள் கொடுத்து வந்த சில்லறைக் காசுகளையெல்லாம் சேர்த்து வந்தாள்.

ஆனால் அவளுடைய கனவு நனவாகுமுன் நேருவின் குரல் வானொலியில் கேட்டது. நமது நாட்டின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் காப்பதற்காக எல்லாவிதமான தியாகத்துக்கும் தயாராக இருக்கவேண்டுமென்று அவர் கூறினார்.

நாடுதான் முதலில் ; அதற்குப் பிறகுதான் கம்பளிக் கோட்டு, என்று அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். தனது சேமிப்புப் பெட்டியை உடைத்து சில்லறையை எண்ணினாள். 9 ரூபாய் 81 நயா பைசா சேர்ந்தது. கம்பளிக் கோட்டுக்கு இப்போதென்ன அவசரம்? குளிரில் போரிடும் ஜவான்களுக்கு கம்பளி உடை கிடைக்கட்டும் என்று சொல்லி உத்தரப்பிரதேச பிரதம மந்திரிக்கு அத்தொகையை அனுப்பி வைத்தாள்.

விஷயம் அத்துடன் முடியவில்லை. குழந்தையின் தியாகத்தைக் கேட்டு, மனமுருகிய தந்தை, தானும் சிப்பாய்களின் க்ஷேம நல நிதிக்காக மாதந்தோறும் ரூ. 3 தருவதாக முதல் மந்திரிக்கு எழுதியிருக்கிறார்.

### கோழி முட்டைக்கு 200 ரூபாய்

தேசியப் பாதுகாப்பு நிதிக்காக வழங்கப்பட்ட கோழி முட்டையை ஏலமிட்டதில் 200 ரூபாய் கிடைத்திருக்கிறது.

கேரளாவில், கண்ணனூர் ஜில்லாவில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த கோழியிட்ட முட்டையை ஸ்தல நிதி வசூல் கமிட்டியிடம் வழங்கப்பட்டு பொதுக் கூட்டத்தில் ஏலமிட்டதில் 200 ரூபாய் கிடைத்தது.

பொருட்காட்சியில் பரிசு பெற்ற பலர் இந்நிதிக்காக ஏராளமா நிதி வழங்கினர்.

### பிச்சைக்காரர் வழங்கிய நன்கொடை

தமிழ் நாட்டு முதல் மந்திரி ஸ்ரீ காமராஜிடம் வழங்கப் பட்ட கோழி ஒன்றை ஏலமிட்டதில் 100 ரூபாய் கிடைத்தது.

ஈரோட்டைச் சேர்ந்த 60 வயதான முத்துசாமி கவுண்டர், என்ற பிச்சைக்காரர் தனக்கு அவ்வப்போது கிடைத்து வந்த தொகையைச் சேர்த்து வைத்து கோழி வாங்கினதாகக் கூறினார். அந்தக் கோழியை நம் முதல் மந்திரியிடம் அளிப்பதற்காக ஈரோட்டிலிருந்து சுமார் 60 மைல் தூரம் நடந்து வந்து அளித்தார்.

**குன்றென நிமிர்ந்து நில்**





## ஸ்திரமான விலைவாசிகள்—யுத்த முயற்சிகளுக்குப் பக்க பலம்

சீனாவின் அதிதீவிர முன்னேற்றத் திட்டம் படுதோல்வியடைந்து விட்டதால் சீன மக்களின் கவனத்தையும், உலக மக்களின் கவனத்தையும் வேறு திசையில் திருப்ப வேண்டிய அவசியம் சீன சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது.

சீனாவின் தற்போதைய ஆக்கிரமிப்புக்கு இதுதான் காரணம் என்பதாக நடுநிலைமையாளர்கள் கூறுகிறார்கள். சீன சர்க்கார் ஒரே கல்லிலேயே இரண்டு பறவைகளைக் கொல்ல நினைக்கிறார்கள். உள்நாட்டுத் தோல்விகளை மூடிமறைப்பது ஒன்று. உலகத்திலேயே மிகவும் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, சிறு தலைகுனியும் விதத்தில், அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தைத் தகர்ப்பது இன்னொன்றாகும்.

நமது பொருளாதார வளர்ச்சியைச் சீர்குலைப்பதில் சீனர்களுக்கு இருக்கும் மகிழ்ச்சி வேறு எதிலும் இருக்காது.

நமது திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானால், பொது உபயோகப் பொருள்களின் விலைகள் நியாயமாகவும், ஸ்திரமாகவும் இருக்க வேண்டியது அவசியம். இந்திய சர்க்கார் இதை ஏற்கெனவே உணர்ந்துவிட்டனர்.

### முதலாவது கட்டம்

பதுக்கல் செய்பவர்கள், கொள்ளை லாபக்காரர்கள் ஆகியோரின் நடவடிக்கை, பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாதகமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், திட்ட வளர்ச்சியின் காரணமாக மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளை இல்லாமலும் செய்துவிடும்.

உள்நாட்டு விலைவாசிகளை ஸ்திரமாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் முதல் கட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

வர்த்தகப் பிரதிநிதிகளும், தொழில் அதிபர்களும் உற்பத்தியைப் பெருக்கி, விலைகள் ஏறாமல் பார்த்துக் கொள்வோம் என்று உறுதியளித்திருப்பதோடு, நியாயமான விலைக்குப் பொருள்கள் கிடைக்கச் செய்வோமென்றும் வாக்களித்திருக்கின்றனர்.

விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவதைப் பற்றிய உயர் கமிட்டியொன்று, தற்போதைய விலைவாசிகளையும், குறிப்பாக, சில்லறைச் சாமான்கள் விலை பற்றியும் பரிசீலனை நடத்தும்.

சுமார் 4,000 கிளைகள் கொண்ட, 200 மொத்த விலைக் கடைகள் அடங்கிய, கூட்டுறவு-உபயோகிப்போர் கடைகள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்படும். இவை பெரிய நகரங்களிலும், ராஜ்ய தலைநகரங்களிலும், தொழில் பகுதிகளிலும், பட்டணங்களிலும் இருக்கும். இதன் மூலமாய் பொருள்கள் வெகுவாக மக்களுக்குக் கிடைக்க வழி ஏற்படும்.

### உற்பத்திப் பெருக்கம்

உணவுத் தானியக் கையிருப்புக்களைப் பெருக்குவதற்காக அவை ஏராளமான அளவு கொள்முதல் செய்யப்படுகின்றன. நடுத்தர, மோட்டா ரகத் துணிகளையும் ஏராளமாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பழங்கள், காய்கறிகள், மீன், மாமிசம், முட்டை, பால் ஆகியவற்றின் உற்பத்தித் தீவிரப்படுத்துவதற்கும் திட்டமிடப் பட்டிருக்கிறது.

உற்பத்திப் பெருக்கம் யுத்த முயற்சிக்குப் பக்க பலமாக இருக்கும். சிக்கன நடவடிக்கைகளும், அதற்கு உதவும். இமயமலையில் மட்டுந்தான் போர் நடத்தவேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு வீட்டிலும், காரியாலயத்திலும், வயலிலும், ஆலையிலும் போர் நடவடிக்கைகளுக்கு உதவி செய்ய முடியும்.

## பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்கள்

### முதலீட்டு உச்சவரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது

தற்போது, 4½ சதவிகித பத்து வருட பாதுகாப்பு டிபாஸிட் பத்திரங்கள், 12 வருடத் தேசியப் பாதுகாப்பு பத்திரங்கள் ஆகியவை ஒவ்வொன்றிலும் முதலீடு செய்யப்படும் அதிகபட்ச வரம்பு, தனிநபர் ஒருவர் விஷயத்தில் ரூபாய் 25,000 ஆகவும், இருவர் கூட்டாக முதலீடு செய்யும் விஷயத்தில் அதிகபட்ச வரம்பு ரூபாய் 50,000 ஆகவும் இருந்து வருகிறது ; இந்த முதலீடுகளில், முன்பு வெளியிடப்பட்ட நான்கு சதவிகித கஜானா சேமிப்பு டிப்பாஸிட் பத்திரங்களிலும், 12 வருட தேசியத் திட்ட பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட்ட தொகைகளும் சேர்த்துக் கணக்கிடப் படுகிறது. ஆயினும், முந்தியப் பத்திரங்களில் ஏற்கெனவே அதிகபட்சத் தொகைகளை முதலீடு செய்துள்ளவர்களுக்கு ஓரளவு வசதி அளிப்பதற்காகவும், தற்போதைய அவசர நிலைமையில், புதியபாதுகாப்பு டிப்பாஸிட் பத்திரங்களிலும், தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களிலும் முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு வசதியளிப்பதற்காகவும், புதிய பத்திரங்களில் செய்யப்படும் முதலீட்டின் அதிகபட்ச வரம்பை ஒவ்வொரு பத்திரம் விஷயத்திலும், தனிநபர்கள் விஷயத்தில் ரூபாய் 35,000 ஆகவும், இருவர் கூட்டாக முதலீடு செய்யும் விஷயத்தில் ரூபாய் 70,000 ஆகவும் உயர்த்துவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**தேசத்தைக் காத்தல் செய்**

# தாய்த் திருநாட்டைக் காத்திட வாரீர் !

மகாத்மா காந்தியின் தலைமையில் நெடுநாள் கடுமையாகப் போராடி நாம் சுதந்திரம் பெற்றோம். நாட்டின் விடுதலைக்காக நடைபெற்ற அந்தத் தியாக வேள்வியில் லட்சக்கணக்கான வீரர்கள் பங்கு கொண்டனர்.

அவர்களின் வெற்றிக்காக நாட்டு மக்கள் எந்தத் தியாகத்தையும் பெரிதாகக் கருதவில்லை. சுதந்திரம் நமது பிறப்புரிமை என்ற உணர்ச்சி நம் உள்ளத்திலே உறுதிப்பட்டிருந்தது ; எத்தகைய இன்னல்களையும் நாம் பொருட்படுத்தவில்லை.

பதினைந்து ஆண்டுகளாக நாம் சுதந்திர மக்களாக வாழ்ந்து வருகிறோம். சுதந்திரம், நமக்கு சுய மதிப்பையும் கௌரவத்தையும் தேடிக் கொடுத்தது.

சுதந்திரம், நம் வாழ்க்கையை, நம் விருப்பப்படி வகுத்துக்கொள்ள, நமக்கு வழி செய்து கொடுத்தது.

சுதந்திரம், தலைமுறை தலைமுறையாகத் தாழ்வுற்ற நிலையில் அடக்கிவைக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான மக்களுக்கு நல்வாழ்வு மலரச் செய்தது.

சுதந்திரம், கடந்த நூறு ஆண்டுகளில் நாம் சாதிக்க முடியாத முன்னேற்றத்தை, பத்தே ஆண்டுகளில் அடைந்துவிடக்கூடிய சக்தியை நமக்கு அளித்தது.

நாடு செழிப்புறச் செய்வதற்கான வசதிகளையும், மன வலிமையையும் நமக்கு அளித்ததும் சுதந்திரமே.

நாம் கடுமையாகப் போராடிப் பெற்று, அரும்பாடுபட்டு வளர்த்துவரும் இந்த சுதந்திரத்துக்கு இப்போது பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

நம்மிலும் வலிமை மிக்க ஒரு எதிரி—நட்புறவாடி நயவஞ்சகம் செய்த ஒரு நாடு—நம் முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்க மாட்டாது, அதைக் குலைக்கத் தலைப்பட்டிருக்கிறது.

நம்முடைய சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும், முன்னேற்றத்தையும் காப்பாற்ற வேண்டுமானால், இந்த எதிரியை நாம் முழு பலங் கொண்டு எதிர்த்து நின்று முறியடித்தாகவேண்டும்.

உலகில் நீதியும், சுதந்திரமும், நட்புறவும் நிலைபெற வேண்டுமானால், இந்த எதிரியை முறியடித்தே ஆக வேண்டும்.

புனிதமான நம் பாரத பூமி பாதுகாக்கப்படவேண்டுமானால், இந்த எதிரியை முறியடித்தே ஆகவேண்டும்.

இப்புனிதப் போருக்கு நாடு உங்களை அழைக்கிறது ; நீங்கள் தயாராகிவிட்டீர்களா ?

---

# நாடு போற்றும் வீரர்கள்

## ஜனாதிபதியின் விருதுபெற்ற எல்லைப்போர் வீரர்கள்

லதாக்கிலும், நேபாவிலும் சீனபடையெடுப்பாளர்களுக்கு எதிரே மிகவும் தீரமுடன் போரிட்ட கோர்க்கா துப்பாக்கிப் படையில் சேவை செய்து உயிர் துறந்த மேஜர் தன்சிங் தாப்பாவிற்கும், சீக்கிய ரெஜிமெண்டைச் சேர்ந்த சுபேதார் ஜொகீந்தர் சிங்கிற்கும் (இவர் காணாமற் போயிருப்பவர்) உடனடியாக பரம் வீர் சக்ரா விருதுகள் வழங்க ஜனாதிபதி அங்கீகரித்துள்ளார்.

லதாக்கிலும், நேபாவிலும் புரிந்த வீரச் செயல்களுக்காக மேலும் 13 பேருக்கு மஹா வீர் சக்ரா விருதும், 19 பேருக்கு வீர சக்ரா விருதும் வழங்கப்படுகிறது. இவர்களில் 3 பேர் விமானப் படை அதிகாரிகளாவர் ;

விருது பெற்றவர்களின் முழுப் பட்டியலும் கீழே தரப்படுகிறது.

**பரம் வீர் சக்ரா .** மேஜர் தன் சிங் தாப்பா, கோர்க்க துப்பாக்கிப் படை (மரணந்திரம்), சுபேதார் ஜொகீந்தர் சிங் (காணாமற் போயிருப்பவர் இறந்துவிட்டார் என நம்பப்படுகிறது), சீக்கிய ரெஜிமெண்.

**மஹா வீர் சக்ரா .** மேஜர் எஸ்.எஸ். ரணதேவா, ஜம்மு காஷ்மீர் மக்கள் படை ; மேஜர் அஜித் சிங், ஜாட் ரெஜிமெண்ட், மேஜர் எஸ். பி. எஸ். ஸ்ரீகாண்ட், கோர்க்க துப்பாக்கிப் படை ; மேஜர் எம். எஸ். சௌத்ரி, பஞ்சாப் ரெஜிமெண்ட ; மேஜர் குர்தயாள் சிங், ராஜபுதன ரெஜிமெண்ட ; காப்டன் மஹாவீர் பிரஸாத் (கோர்க்க துப்பாக்கி படைகளுடன் இணைக்கப்பட்ட) சீக்கிய ரெஜிமெண்ட் ; 2/லெப்.ஜி. வி. பி. ராவ், கிரனேடியர்ஸ் ; சுபேதார் சோனம் ஸ்டோப்தன், ஜம்மு-காஷ்மீர் மக்கள் படை ; ஜமே. இஷ்ட் டுண்டுப் ஜம்மு-காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; ஹவில். ஸட்டிங்கியன் புன்சோக், ஜம்மு-காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்); ஹவில்தார் ஸ்வரூப் சிங், ஜம்மு-காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்), நாய்க் ராபிலால் தாப்பா. கோர்க்க துப்பாக்கிப் படை ; சிப்பாய் கேவல் சிங், சீக்கிய ரெஜிமெண்ட் (மரணந்திரம்).

**வீர் சக்ரா .** காப்டன் ராஜா அமிர்தலிங்கம், ஏ.எம்.சி. (காணாமற்போயிருப்பவர்—இறந்துவிட்டார் என நம்பப்படுகிறது) ; 2/லெப். ஹரிஷ் சந்தர் குஜ்ரால், ஜாட் ரெஜிமெண்ட் ; ஜமே. ரிக்ஸின் புன்சோக், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை ; ஹவில். துளசிராம், ஜம்மு-காஷ்மீர் மக்கள் படை ; லான்ஸ் ஹவில்தார் தரம் சிங், ஜாட் ரெஜிமெண்ட் ; நாயக் முன்ஷ் ராம் ஜாட் ரெஜிமெண்ட் (மரணந்திரம்) ; நாய்க் சிமாட் டோர்ஜி, ஜம்மு காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; நாய்க் பகதூர் சிங், குமாவன் ரெஜிமெண்ட் (மரணந்திரம்) ; சாப்பர் (யுபி/லா/நா) ராகவன், பீல்டு கம்பெனி இஞ்சினீயர்ஸ் ; சிக்னல் மென் தரம் சந்த், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; சிப். ஆம்புலன்ஸ் அஸிஸ்டண்ட் எஸ். ஜோசப், பீல்டு ஆம்புலன்ஸ் ஏ.எம்சி (மரணந்திரம்); சிப்பாய் டோர்ஜி புன்சோக், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை ; சிப்பாய் சோனம் அங்கோக், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; சிப்பாய் சோனம் ராப்ஜஸ், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; சிப்பாய் லோப்ஜங் சிரிங், ஜம்மு காஷ்மீர் மக்கள் படை (மரணந்திரம்) ; ரைபிள்மேன் துளசிராம் தாபா, கோர்க்கா துப்பாக்கிப் படை ; ஸ்குவாட்ரன் லீடர் ஆர்னால்டு ஜொசீந்திரநாத் வில்லியம்ஸ், பொதுப்பணி (விமானி) ; ஸ்குவாட்ரன் லீடர் சூர்யகாந்த் பத்வார் பொதுப்பணி (விமானி) ; பிளை லெப்டினெண்ட் குப்புஸ்வாமி லக்ஷ்மிநாராயணன, பொதுப்பணி (விமானி).

—நன்றி: "சைனிக் சமாசார்"



பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

குறிப்பு :—பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்ட அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிமுறைகள், முதலியவற்றின் சுருக்கமான தமிழாக்கத்தை இந்தப் பகுதியில் காணலாம்.

# தேசியப் பாதுகாப்பு நிதி

## தமிழ் நாட்டில் வசூலாகும் நன்கொடைகளின் நிர்வாக—கணக்கு வைப்பு ஏற்பாடுகள்

**[National Defence Fund—Contributions to the Fund—Administration and Accounting arrangements in the Madras State]**

**(G. O. No. 1290, Finance, dated 31st October 1962)**

தேசியப் பாதுகாப்பு நிதிக்காக பணமாகவும், நகைகளாகவும் நன்கொடைகள் பெறப்படுகின்றன. இவ்வாறு வசூலாகும் நன்கொடைகளை ஒழுங்காகக் கணக்கு வைப்பதற்கும், பிரதம மந்திரியின் தேசியப் பாதுகாப்பு நிதியில் ஒழுங்காகச் சேர்ப்பிப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

2. இந்த மாநிலத்தில் தேசியப் பாதுகாப்பு நிதியின் நிர்வாகியாக தமிழ்நாடு கஜானாக்கள்—கணக்குகள் துறை இயக்குநரை (Director of Treasuries and Accounts, Madras) அரசாங்கம் அமர்த்தியுள்ளது. அவர் எல்லா நன்கொடைகளுக்கும் கணக்குகளைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரியாக இருப்பார். சென்னை, இந்திய ரிசர்வு பாங்கில் "தமிழ்நாடு, தேசியப் பாதுகாப்பு நிதி நிர்வாகி" என்ற பெயரில் ஒரு அலுவல் பெயர் வைப்புத் தொகைக் கணக்கு (Personal Deposit Account) தொடங்கப்படும். இதன் பின் நிர்வாகி என்று அழைக்கப்படும் கஜானாக்கள்—கணக்குகள் துறை இயக்குநர், பணமாக வருகின்ற எல்லா நன்கொடைத் தொகைகளையும் அந்தக் கணக்கில் வரவு வைத்தும், அதிலிருந்து கால முறைப்படி எடுத்து டெல்லி தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பி வைத்தும் இந்தக் கணக்குகளைக் கவனித்துக் கொள்வார்.

3. பொதுமக்கள், நன்கொடைகளை மாநில கவர்னர், முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் முதலான உயர் பதவிகளில் இருப்பவர்களிடம் கொடுக்கலாம். அவ்வாறு கொடுக்கப்படும் நன்கொடைகள்—கஜானாக்கள், கணக்குகள் துறை இயக்குநரிடம் சேர்ப்பிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். அவர் அதற்குக் கணக்கு வைத்துக் கொள்வார். சென்னை நகரில் நன் கொடைகளை நிதி நிர்வாகியிடமோ அல்லது சென்னைக் கலெக்டரிடமோ நேரடியாகவும் கொடுக்கலாம். வெளியூர்களில், கலெக்டரிடமோ, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடமோ, தாசில்தாரிடமோ, தனி துணை தாசில்தாரிடமோ, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடமோ நன்கொடைகளைக் கொடுக்கலாம். அவர்கள் அவ்வாறு சேர்ந்த வசூல்களை கால முறைப்படி நிதி நிர்வாகிக்கு அனுப்பி வைப்பார்கள். பணமாகப் பெறும் நன்கொடைத் தொகைகளை வசூலிக்கும் அதிகாரிகள், அரசாங்க ட்ராப்டுகள் மூலம் நிதி நிர்வாகிக்கு அனுப்பி வைப்பார்கள். செக்குகளாக நன்கொடைகளைப் பெறும்பொழுது, அவை, தமிழ்நாடு தேசியப் பாதுகாப்பு நிதி நிர்வாகி, என்ற பதவிக்குக் கொடுக்கும்படி கேட்டு கொள்ளப்படவேண்டும். (எனினும் நன்கொடை வசூலிக்கும் அதிகாரியின் பெயருக்குச் செக் தரப்பட்டால் அதை மறுக்காமல் பெற்றுக் கொண்டு, நிதி நிர்வாகிக்குச் செலுத்த, மேல் கையெழுத்திட்டு அனுப்பப்படவேண்டும்.)

4. நகைகளாகப் பெறும் நன்கொடைகள் விஷயத்தில், பொருள் பட்டியல் பதிவேடு ஒன்று வைக்கப்பட்டு

---

## ஆயுதங்களுக்காக அணிமணிகள் தாரீர்

---

நன்கொடையாகப் பெறும் ஒவ்வொரு நகையைப் பற்றிய விவரங்களையும் அதில் பதிவு செய்ய வேண்டும்.

5. பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நன்கொடைக்கும், பெற்றுக்கொண்டதற்கான ரசீது கொடுக்கப்படவேண்டும். பணம், செக், நகைகள் ஆகியவற்றுக்குத் தனித்தனி ரசீது புத்தகங்களைப் பயன்படுத்த வேண்டும். ரசீது முப்பிரதியில் (Triplicate) இருக்கவேண்டும். அசல் ரசீது (Original) நன்கொடை அளிப்பவருக்குக் கொடுக்கவேண்டும். இரண்டாவது நகல் (Duplicate) நிதி நிர்வாகிக்கு அனுப்ப வேண்டும். மூன்றாவது நகல் (Triplicate) நன்கொடை வசூல் செய்யும் அதிகாரியின் அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும். நகையாகப் பெறும் நன்கொடை விஷயத்தில், பெறுகின்ற நகையைப் பற்றிய முழு விளக்கமும் கொடுக்கவேண்டும். ரசீது புத்தகங்கள் வரிசையாக எண்ணிடப்பட்டு நிதி நிர்வாகியால் பத்திரமாகப் பாதுகாக்கப்படும். அவை நன்கொடை வசூலிக்க நியமிக்கப்படும் பல்வேறு அதிகாரிகளுக்கும் அவரால் வழங்கப்படும்.

6. தங்கம் அல்லது தங்க நகைகளை நன்கொடையாகப் பெறும்பொழுது, நன்கொடைபெறும் அதிகாரி மேலே 5-வது பாராவில் கூறியபடி ரசீது கொடுத்ததும் கால தாமதம் செய்யாமல் உடனே இந்திய ஸ்டேட் பாங்கிலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ, பாங்கி குறிப்பிடும் முறைப்படி செலுத்திவிட்டு அதற்குரிய ரசீதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

7. விலை மதிப்புள்ள மாணிக்கற்கள் (ரத்தினங்கள்) அல்லது வெள்ளிப்பாத்திரங்கள் ஆகியவையும் நன்கொடையாகப் பெறலாம். அவற்றுக்கு ரசீது வழங்கியதும், அத்தகைய நன்கொடைகளை கஜானாக்களில் விலைமதிப்புள்ள பொருள்களைப் பாதுகாக்கும் முறையில், பாதுகாப்புக்கு அனுப்பிவிடவேண்டும். இத்தகைய நன்கொடைகளைத் தேசிய பாதுகாப்பு நிதியில் சேர்த்துப் பயன் படுத்துவதற்கான விளக்கம் பின்னர் வெளியிடப்படும்.

8. ஒவ்வொரு வாரமும் சேருகின்ற நன்கொடை விவரங்களை, நிதி நிர்வாகி, பத்திரிகைகளுக்கு அறிவிப்பதற்காக, செய்தித் துறை இயக்குநருக்கு (Director of Information & Publicity) அனுப்பிவைக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

9. கஜானாக்கள்–கணக்குகள் துறை இயக்குநர், இது விஷயங்களில் பின்பற்ற வேண்டிய விவரமான கணக்கு வைப்பு நடை முறையை வரையறுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. தேசியப் பாதுகாப்புக்கான வருவாய்களைப் பெருக்குவதற்கு, பல்வேறு நிலையில், பொதுஜனப்பிரதிநிதிகளும் ஒத்துழைக்கத்தக்க நிறுவனங்களை அரசாங்கம் அமைக்க இருக்கிறது. அத்தகைய நிறுவனங்கள் அமைக்கப்படும் வரை, இந்த ஆணையில் கூறப்பட்டுள்ள முறையைப் பின்பற்றவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது. இந்த மாநிலத்தில் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக, பணம் நகைகள் ஆகியவற்றை வசூல் செய்யும் பல்வேறு பொதுஜனப் பிரதிநிதிகள், தாங்கள் வசூலிக்கும் நன்கொடைகளை, இந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளிடம், அதாவது சென்னையில் கஜானாக்கள்–கணக்குகள் துறை இயக்குநர், வெளியூர்களில் மாவட்டக் கலெக்டர்கள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், தாசில்தார்கள், தனி துணை தாசில்தார்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோரிடம் சேர்ப்பித்து விடும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

(நிதித் துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1290).

## தேசியப் பாதுகாப்பு நிதி அரசாங்க ஊழியர்களின் நன்கொடைகள்—நடைமுறை பற்றிய விளக்கம்

## National Defence Fund—Contributions by Government Servants—Procedure—Instructions Issued.

### (G. O. No. 1307, Finance, Dated 5th November, 1962.)

அரசாங்க ஊழியர்கள் மிகப் பலர், தங்களுடைய மாதச் சம்பளத்திலிருந்து தொடர்ந்து, தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடைகளை வழங்க விரும்புகின்றனர். அவ்வாறு அரசாங்க ஊழியர்கள், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்குவதற்குக் கீழ்க்கண்ட நடைமுறையைப் பின்பற்றவேண்டும்.

### அரசிதழ் பதிவுபெற்ற அரசாங்க ஊழியர்கள்

அரசிதழ் பதிவுபெற்ற அரசாங்க ஊழியர்கள், தங்கள் சம்பளப் பட்டியல்களை அனுப்பும்போது, தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டிய தொகையை, பட்டியலில் குறித்து அனுப்பவேண்டும்.

**எல்லைப் போர் வீரருக்கு உதவுங்கள்**



சென்னை நகரில் சம்பளத்தை வாங்குகின்ற அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் விஷயத்தில் சம்பளக் கணக்கு அதிகாரியும் (Pay and Accounts Officer) வெளியூர்களில் சம்பளம் வாங்கும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் விஷயத்தில் கஜானா அதிகாரிகள் கிளைக் கஜானா அதிகாரிகளும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் தேசியப் பாதுகாப்பு நிதிக்கென்று குறித்த தொகை போக மீதித் தொகையை அனுமதித்து அவர்களுக்குச் செலுத்துவார்கள்.

சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில், சம்பளக் கணக்கு அதிகாரி, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிக்குச் சம்பளத்தில் சேரவேண்டிய நிகரத் தொகைக்கு ஒரு செக்கும் (Cheque), நிதிக்கு என்று குறிக்கப்பட்ட தொகைக்கான செக்கை நிதி நிர்வாகிக்கும் தயாரித்து அனுப்புவார். இவ்வாறு நிதிக்குக் கொடுக்கப்படும் தொகைக்கான செக்குகளுடன், நன்கொடையளித்த ஒவ்வொரு அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியின் பெயரும், ஒவ்வொருவர் அளித்த நன்கொடைத் தொகையையும் காட்டும் ஒரு அட்டவணையைத் தயாரித்து நிதி நிர்வாகிக்கு, சம்பளக் கணக்கு அதிகாரி அனுப்புவார்.

வெளியூர்கள் விஷயத்தில், கஜானா அல்லது கிளைக் கஜானா பாங்க் அலுவல் செய்வதாயின், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வரவுவைக்கவேண்டிய தொகைக்கு பாங்க் ட்ராப்ட் (Bank Draft) வழங்க ஒரு மனு தயாரித்து கஜானா அதிகாரி/கிளைக் கஜானா அதிகாரி, பாங்குக்குப் பட்டியல் அனுப்பும்பொழுது அத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பட்டியல்களுடன் இணைத்து அனுப்பப்பட்ட மனுக்களின் அடிப்படையில் ஸ்டேட் பாங்க் வழங்குகின்ற பாங்க் ட்ராப்டுகளை, பாங்கிலிருந்து, கஜானாக்களுக்கு அனுப்பப்படும் பாங்குக் குறிப்புகளுடன் (Bank Scrolls) அனுப்பிவைக்கவேண்டும். கஜானா அதிகாரி இந்த பாங்க் ட்ராப்டுகளை, தான் முதலில் தயாரித்த மனுவைக் கொண்டு சரிபார்த்து, நன்கொடை வழங்கிய அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் பெயர்களும், அவர்கள் ஒவ்வொருவரும் வழங்கிய நன்கொடைகளையும் குறித்த ஒரு அட்டவணையுடன் அந்த ட்ராப்டுகளையும் நிதி நிர்வாகிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

பாங்க் அலுவல் புரியாத கிளைக் கஜானாக்கள், நன்கொடை போக மீதியுள்ள சம்பளங்களை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிக்கு வழங்கவேண்டும். நிதிக்கு வழங்கப்பட்ட நன்கொடைகளின் மொத்தத் தொகைக்கு ட்ராப்ட் தருவித்து, அதை சென்னை தேசியப் பாதுகாப்பு நிதி நிர்வாகிக்கு மாதத்தின் இரண்டாம் வேலை நாள் (2nd working day) அனுப்பிவிடவேண்டும். அந்த ட்ராப்டுகளுடன், நன்கொடை அளித்தவர்களின் விவரமும், அவர்கள் அளித்த நன்கொடை விவரமும் குறித்த அறிக்கையையும் தயாரித்து அனுப்பவேண்டும்.

சம்பந்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிக்கு, இவருடைய ஊதியத்திலிருந்து தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை செலுத்தப்பட்ட செய்தியை அறிவிக்கவேண்டும்.

### அரசிதழ் பதிவுபெறா அரசாங்க ஊழியர்கள்

அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள், தங்கள் ஊதியத்திலிருந்து நன்கொடைகளை வழங்கும்பொழுது பணம் பெறும் அதிகாரி (Drawing Officer) நன்கொடையைப் பணமாகப் பெறவேண்டும். வாங்கப்பட்ட நன்கொடைத் தொகைக்கு மொத்தமாக, அரசாங்கக் கணக்கில் ட்ராப்ட் பெற்று, அதை நிதி நிர்வாகிக்கு அனுப்பிவைக்கவேண்டும். ஒவ்வொருவர் அளித்த நன்கொடை விவரங்களைக் காட்டும் அறிக்கையை இரு பிரதிகள் தயாரித்து, ஒன்றினை ட்ராப்டுடன் இணைத்து நிர்வாகிக்கு அனுப்பவேண்டும். மற்றொரு பிரதியை நன்கொடை வசூலித்த அதிகாரி தம்மிடம் வைத்திருக்க வேண்டும்.

அரசிதழ் பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத அரசாங்க ஊழியர் செக் கொடுத்தால் அதையும் பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு செக் கொடுக்கும் அரசாங்க ஊழியர், சென்னை, தேசியப் பாதுகாப்பு நிதி நிர்வாகிக்குப் பணம் செலுத்தத்தக்கதாக செக் அளிக்கக் கேட்டுக்கொள்ளப்படவேண்டும். செக் அல்லது செக்குகளைப் பெறுகின்ற அதிகாரி, நன்கொடையாளர்களின் விவரங்களடங்கிய கடிதத்துடன் இணைத்து அவற்றை நிதி நிர்வாகிக்கு அனுப்பிவிடவேண்டும்.

இந்திய அரசாங்க நிதி அமைச்சியல் வெளியிட்ட 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ந் தேதிய அறிவிப்பின்படி, தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைத் தொகைகள், 1961-ம் ஆண்டு வருமான வரிச் சட்டம் 88-வது பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ள அளவுக்குட்பட்டு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கத்தக்கவையாகும்.

(நிதித் துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1307.)

பஞ்சாயத்து அரசிதழ்.—
தயாரிப்பு—பொறுப்பு : திரு வே. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ., (மொழிபெயர்ப்பாளர்).

**தேசியப் பாதுகாப்பு சர்டிபிகேட்டுகளை வாங்குங்கள்**

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் : நமது பங்கு ; கிராமச் சிறுவர்கள்.
ஒவ்வொரு திங்கட்கிழமையும் : நமது பங்கு; விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் : திரைப்படப் இசை; கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சிகள்.
ஒவ்வொரு புதன் கிழமையும் : நமது பங்கு ; நாட்டுப் பாடல்கள்.
ஒவ்வொரு வியாழக்கிழமையும் : நமது பங்கு ; நமது திட்டம்; மெல்லிசை; செய்தி விமர்சனம்.
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் : திரைப்பட இசை; நமது பங்கு; மாதர் மன்றம் ; நாட்டுப்பாடல் பயிற்சி.
ஒவ்வொரு சனிக்கிழமையும் : முதியோர் கல்விக்கூடம் ; பக்திப் பாடல்கள் ; பேச்சு.

**இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் :**

**ஜனவரி—1963.**

செவ்வாய் (1—1—1963).

கிராம ரேடியோ மன்றம்.
1. கேள்வியும் பதிலும்.
2. தற்காப்புப் பத்திரங்கள்.

புதன் (2—1—1963).

தென்னை நடுவதில் சிக்கன முறைகள்—உரையாடல்.
சென்று வா கண்ணு—நாடகம்.
(எம். ஆர். ராஜகோபால் எழுதியது.)

வெள்ளி (4—1—1963).

(1) ஆப்பக்கார அங்காயி—சித்திரம்.
(வாசு எழுதியது).

சனி (5—1—1963).

ஆராய்ச்சிக்கூடம்.
கிராமம் போவோமே—சித்திரம்.

திங்கள் (7—1—1963).

ஆறுமுனை—நாடகம்.
(என். ராகவன் எழுதியது.)

செவ்வாய் (8—1—1963).

கிராமரேடியோ மன்றம்.
1. கேள்வியும் பதிலும்.
2. தரிசு நிலங்களை பயன்படுத்துவது எப்படி—உரையாடல்.

புதன் (9—1—1963).

கால்நடைகளைப் பாதிக்கும் வயிற்றுப்போக்கு—உரையாடல்.
உபகாரக்கோழி—தொடர் சித்திரம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது).

வெள்ளி (11—1—1963).

(1) எங்கள் கிராமத்தில்—பேட்டி.
(2) சத்திய நெறி.

(ஞாயிறு 13—1—1963).

நம்நாட்டு விவசாயியின் கடிதம்.
வில்லுப் பாட்டு.

திங்கள் (14—1—1963).

பொங்கல் கும்மி.
பொங்கல் நின்றது—நாடகம்.
(எம். ஆர். ராஜகோபால் எழுதியது).

செவ்வாய் (15—1—1963).

கிராம ரேடியோ மன்றம்.
1. கேள்வியும் பதிலும்.
2. தற்போதய நிலைமை.

புதன் (16—1—1963).

விக்கல்—உரையாடல்.
தேன்கூடு—இசைச் சித்திரம்.
(என். ராகவன் எழுதியது).

வெள்ளி (18—1—1963).

1. திட்டமிட்ட குடும்பம்.

சனி (19—1—1963).

கூடை முடைபவருடன் பேட்டி.

ஞாயிறு (20—1—1963).

கிராமச் சாவடி—பேபர்பிட் பெரியசாமி வழக்கு.
(தனஞ்சயன் எழுதியது.)

திங்கள் (21—1—1963).

வெற்றிச் சங்கு—தொடர் சித்திரம்.
(கோ. செல்வம் எழுதியது).

செவ்வாய் (22—1—1963).

கிராம ரேடியோ மன்றம்.
1. கேள்வியும் பதிலும்.
2. கலப்பு இன ராகியும் சோளமும்.

புதன் (23—1—1963).

புகையிலைக்கு உரம்—உரையாடல்.
நெஞ்சுக்கு நீதி—நாடகம்.
(அப்துல் காதர் எழுதியது.)

வெள்ளி (25—1—1963).

கருப்பாயியின் உண்மை—சிறு கதை.

ஞாயிறு (27—1—1963).

கண்டு முதல்—நாடகம்.

செவ்வாய் (29—1—1963).

கிராம ரேடியோ மன்றம்.
1. கேள்வியும் பதிலும்.
2. கால்நடைகளின் சரும பாதுகாப்பு.

புதன் (30—1—1963).

கோழிகளைத் தாக்கும் உண்ணி நோய்—உரையாடல்.

**வெளியிடுபவர் :**
**திரு எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ்.,**

**ஆசிரியர் :**
**திரு எஸ். வேங்கடசாமி எம்,ஏ.,**

**Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.**



தேசியப் பாதுகாப்பு முயற்சிகளை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. பல துறை அறிஞர்களும் இடம் பெற்றுள்ள அந்தக் குழுவின் முதற் கூட்டம் சென்னையிலே உள்ள கோட்டையில் நடைபெற்றது. (விவரங்களுக்கு 21-ம் பக்கக் கட்டுரையைக் காண்க.)



தலைமைச் செயலாளரே கிராம நல-தல நிர்வாகத் துறையின் செயலாளராகவும் பணியாற்றும் மரபு, தமிழ் நாட்டு நிர்வாக வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தப் பதவியில் இருந்து 21-11-'62-ல் திரு ஆர். ஏ. கோபாலசாமி ஐ. ஸி. எஸ். அவர்கள் ஓய்வு பெற்றபின் திரு எஸ். கே. செட்டூர் ஐ. ஸி. எஸ். அவர்கள் (படத்தில் இடப்புறம் இருப்பவர்) அப்பதவியை ஏற்றுள்ளார்.

Regd. No. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1962.

Panchayat Gazette
விலை : 13 ந.பை. January 1963

# பாரதியார் பெயரால் ஒற்றுமை சபதம்



மகாகவி பாரதியாரின் 81-வது பிறந்த நாள்—விழா, சென்னையில் (11-12-62ல்) நடைபெற்றது எழுத்தாளர், மாணவர், உழைப்பாளர், மாதர், கலைஞர் விழாக்குழுவினர் ஆகியோர் அணிவகுத்து நின்று, முதலமைச்சரின் முன்பு தேசியப் பாதுகாப்பு—ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பின்வரும் வாசகங்களை திரு காமராஜ் முன்மொழிய அனைவரும் பின்மொழிந்தனர்:

"பாரத நாடு பழம் பெரும் நாடு. நீரதன் புதல்வர், இந் நினைவு அகற்றாதீர்' என்றுபாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் 81.வது பிறந்த நாளாகிய இன்று, இங்கு கூடி, அணிவகுத்து நிற்கும் எழுத்தாளர், மாணவர், தொழிலாளர், மாதர் கலைஞர், விழாக்குழுவினர் சார்பில் நாம் அனைவரும், உளமார இந்த உறுதி மொழியை ஏற்றுக் கொள்கிறோம்.

நாமனைவரும் இந்தியர். நமது தாய்நாடு பாரதம். இயற்கை யாகவே நாம் விரும்பி மேற்கொண்டது இந்திய தேசியம்.

பாரத நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்.

பாரதத்தைப் பாதுகாக்க, உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் தியாகம் செய்ய நாம் சித்தமாக இருக்கிறோம்.

இந்த உறுதிமொழியை, நிச்சயம் கடைப்பிடிப்போம். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் மீது, ஆணை."

இந் நிகழ்ச்சி, மகாகவி பாரதியார் பிறந்த தின விழாவின் சிகரமாகவும், பாரத நாட்டு மக்களின் ஒற்றுமை உணர்வின் மணி மகுடமாவும் விளங்கியது. இந்த உறுதிமொழி, வானொலி மூலம், ஒலிபரப்பாகிய போது தமிழ் மக்கள் அனைவர் உள்ளத்திலும், எழுச்சி கொண்ட பாரத சக்தியின் சங்கநாதம் கேட்டது.



ஜெ
ய்
ஹி
ந்
த்

# கிராம நலம்

பகை அழிக்கப் புறப்படும் பாரத வீரர்







## லட்சிய தம்பதிகள்

“அண்ணல் காந்தியடிகள் போகும் கூட்டங்களிலெல்லாம், நகை அணிந்த மாதர்களை நோக்கி, நாட்டுத் தொண்டுக்கு, நன்கொடையாகக் கழற்றித் தருமாறு கேட்டார்.

நாட்டில் சொல்வன எல்லாவற்றையும் வீட்டில் செய்து காட்டும் அவர், தம் அருமைத் துணைவியாரான கஸ்தூரிபாவின் வாழ்க்கையில் நகைப் பித்தை அடியோடு போக்கிவிட்டார். தென்ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபோது, அங்கிருந்த இந்தியர்கள் பலவகை உயர்ந்த பரிசுகளை வழங்கினார்கள். கஸ்தூரிபாவுக்கென்றே, ஒருவர் ஐம்பத்தியிரண்டு பவுன் கொண்ட தங்கச் சரம் ஒன்றைக் கொடுத்தார். வைர மோதிரங்கள் முதலிய அணிகலன்களும் இருந்தன. நகைப் பித்தை ஒழிக்க முயன்று வந்த அவரிடத்தில், இப்படி நகைகள் வலியத் தேடிவந்து குவிந்தும், அவர் இவற்றைத் தம் செல்வம் என்று கருதாமல், பொதுத்தொண்டுக்குப் பரிசாக வந்த பொதுச் செல்வம் என்றே மதித்தார். சொந்தத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று கஸ்தூரிபாவுக்குக் கூறினார். “நான் நகை அணிந்து கொள்ளக் கூடாது என்று சொல்லுங்கள். உங்களுக்கு அந்த உரிமை உண்டு. ஆனால், எனக்கு வரும் மருமக்களுக்கு நகை வேண்டாமா?” என்று கஸ்தூரிபா மறுத்தார்; மன்றாடினார்; கண்ணீரும் சொறிந்தார்.......”

“ஆனால் அண்ணலின் உறுதியும், அன்பு கலந்த விளக்கமும் காரணமாக, கஸ்தூரிபா விரைந்து மனம்மாறி உடன்பட்டார். பரிசுப் பொருள்கள் திருப்பித் தரப்பட்டுப் பொது நிதியாக்கப்பட்டன. நகைப் பித்து அண்ணலார் குடும்பத்தை விட்டு அகன்றது. கஸ்தூரிபா—பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக, து... இலக்கிய ... திகழ்ந்தார்.”

—டாக்டர் மு. வரதராசனார்.

(“காந்தி அண்ணல்” என்ற நூலிலிருந்து)


# கிராம நலம்


“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?”

—பாரதியார்.


மாடி 8 | பிப்ரவரி 1963 | படி 5


## கிராமத் தொண்டர் படை

“சோர்வும், வீழ்ச்சியும், தொண்டருக்கில்லை...
எடுமினோ அறப்போரினை என்றான்”

—பாரதியார்.

பாரத தேசத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் அனைத்திலும், “கிராமத் தொண்டர் படைகளை” அமைக்க வேண்டுமென்றும், இந்த வேலையை ஜனவரி மாதம் 26-ஆம் தேதி குடியரசு தினத்தன்று ஆரம்பிக்க வேண்டுமென்றும், பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்களைத் தலைவராகக் கொண்ட மத்திய கமிட்டி. தீர்மானித்திருக்கிறது.

இந்தத் தீர்மானத்திற்கிணங்க, தமிழ்நாடு அரசாங்கமும், நம்முடைய ராஜ்யத்திற்கு ஏற்ற முறையில் இந்தக் கிராமத் தொண்டர் படைக்கான திட்டத்தைத் தயார் செய்து, எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக, அந்தந்த ஜில்லாக்களிலுள்ள மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்களின் விசேஷக் கூட்டம் ஜனவரி மாதம் 5-ஆம் தேதிக்குள் கூட்டப்பெற வேண்டுமென்றும், ஜனவரி மாதம் 11-ஆம் தேதிக்குள்ளாக, ராஜ்யத்திலுள்ள 373 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் சௌகரியமான ஒரு தேதியில், ஒரு விசேஷ கூட்டத்தைக் கூட்டி, அதில் இந்தக் கிராமத் தொண்டர் படை பற்றி விவாதித்து, செயலில் ஈடுபடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், அதற்குப் பின்பு, கிராமப் பஞ்சாயத்துக்களின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டி, கிராமங்களுக்கான செயல் திட்டத்தை, பஞ்சாயத்து, வகுக்க வேண்டுமென்றும், ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லா கலெக்டர்களும், அரசாங்க உத்தரவு மூலம், கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

கிராமத் தொண்டர் படை பற்றிய முக்கியமான அம்சங்கள் வருமாறு :—

இத்தொண்டர் படையில், பஞ்சாயத்துக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ‘கோ—ஆப்ட்’ செய்யப்பட்ட உறுப்பினர்கள், கிராம சகாயக்குகள், பஞ்சாயத்துப் பிரதேசத்தில் வசிக்கும் ஆசிரியர்கள், பஞ்சாயத்தின் மாதர் நலக் கமிட்டி உறுப்பினர்கள், இளம் விவசாயிகள் மன்றம், இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியவைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கத்தினர்களாய் இருப்பார்கள். தொண்டர் படையை அமைப்பதற்கும், அதன் வேலைத் திட்டத்தை அமல் ஆக்குவதற்கும் கிராமப் பஞ்சாயத்துக்களே, பொறுப்பு ஏற்றுக் கொள்ளும். இந்தக் கிராமத் தொண்டர் படையானது, இப்படையில் சேர தாமாக முன் வரும் கிராமத்திலுள்ள, எல்லா, தேக திடகாத்திரமுள்ள, வயது வந்த அனைவரையும், கொண்டதாக இருக்கும்.

## ஏற்றம் புரியும் படை தோற்றம் செய்யும்

இந்தக் கிராமத் தொண்டர் படையில், நான்கு பிரிவுகள் இருந்து வரும்.

1. பொருள் உற்பத்தியைப் பெருக்குவது.
2. கிராமப் பொது மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பணி செய்வது.
3. பாதுகாப்பு வேலைகளைக் கவனிப்பது.
4. தாய்மார்களிடையே சேவை செய்வது.

தேசம் பலம் உள்ளதாக இருக்கவும், பாதுகாப்பு பெறவும் வேண்டும் வகையில், தேசத்தின் பொருளாதார நிலை நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டும். தேசத்தில் உள்ளவர்களுக்கு உணவும், உடையும், வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற வசதிப் பொருள்களும், ஏராளமாகக் கிடைக்க வேண்டும். பொருள் உற்பத்தி வேலையைத் தேசப் பாதுகாப்புக்கான வேலையாக எண்ணி, கிராமத்திலுள்ள விவசாயிகள் எல்லோரும், செயலில் முனைய வேண்டும். ஆதலால்தான், தேசப் பாதுகாப்பைப்பற்றிச் சொல்லும் போதும். நம் தேசத்தின் மீது அநியாயமாகப் படையெடுத்து வந்திருக்கும் சீனர்களை அப்புறப்படுத்தியாக வேண்டும் என்று சொல்லும் போதும், நம்முடைய தலைவர் பண்டித நேரு அவர்கள், உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றியே முதன்மையாகக் குறிப்பிடுகிறார். இதைத்தான் திருவள்ளுவரும்—

“ செய்க பொருளை, செறுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனிற் கூரியது இல் ”

என்று கூறுகிறார். அதாவது “ நாட்டை ஆக்கிரமிக்க விரும்பும் பகைவர்களுடைய செருக்கை அறுக்க வேண்டுமானால், அதற்கு எஃகினால் செய்த போர்க்கருவிகளை விடக் கூர்மையானது, ஒன்று இருக்கிறது. அதுதான், உற்பத்தி செய்யப்படும் பொருள்கள். ஆதலின் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள் ” என்பதே இதன் பொருள். இந்த நோக்கத்தைத் தங்களுடைய ஒரே லட்சியமாகக் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயத்தைப் பெருக்குவதில் அனுபவமும் ஆற்றலும் பெற்றவர்கள் எல்லோரும் ஒரு குழுவாக, ஒரு அணியாக நின்றுவேலை செய்ய வேண்டும். வேளாண்மை பெருக்குவதில் முழு கவனம் செலுத்தும் இந்த அணியானது, ஊரைச் சுற்றியுள்ள நிலங்கள் எல்லாவற்றிலும் நன்றாக உழுது, விதைத்து அறுத்து, ஊர்த் தேவைக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், மற்ற பொருள்களையும் உற்பத்தி செய்வதுடன், எல்லையில் எதிரிகளை எதிர்த்துப் போராடும் ஜவான்களுக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் அனுப்பி வைப்பதையும், தன்னுடைய கடமையாக—தர்மமாக ஏற்று, அல்லும் பகலும் வேலை செய்து வரும். எனவே, இந்தப் பொருள் அணிக்கு—அதாவது பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்யும் இந்தக் குழுவுக்கு திருவள்ளுவர் கூறியுள்ள, மேலே குறித்த திருக்குறளே, கடைப்பிடிக்கத் தகுந்த ஒரு பொன் மொழியாக, உறுதி மொழியாக விளங்கும்.

ஒரு தேசத்தின் பலம், அந்தத் தேசத்தின் பொருளாதாரத்தை மட்டும் பொறுத்ததல்ல. நல்ல பொருளாதார வசதி பெற்றிருப்பதைப் போலவே, தேசத்தில் உள்ளவர்கள் அனைவரும் தெரிய வேண்டிய விஷயங்கள் அத்தனையும் தெரிந்தவர்களாய், நல்ல அறிவு விளக்கம் பெற்றவர்களாய், இருக்க வேண்டியது அவசியம். அறிவு உடையவர்கள்தானே, எல்லாம் உடையவர்கள் ? ஆதலின். கிராமத்திலுள்ள எல்லோருக்கும் தெரிய வேண்டிய எல்லா விஷயங்களையும், நல்ல முறையில் அறிவித்து, பொது மக்களுடைய அறிவை வளர்ப்பதற்கு, இந்தக் கிராமத் தொண்டர் படையில், ஒரு குழு ஓர் அணியாக வேலை செய்து வர வேண்டும். கிராமத்தில் உள்ளவர்கள் யுத்தத்தைப்பற்றிய விஷயங்களையும், பாதுகாப்புக்கான செய்திகளையும் நம்முடைய தேசத்தின் சரித்திரம், பூகோளம் மட்டுமல்ல, சீனாவின் சரித்திரம், பூகோளம் மற்ற ஏனைய தேசங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள், கம்யூனிசம், சோஷலிசம் முதலாளித்துவம் முதலிய கொள்கைகளைப் பற்றிய விளக்கங்கள் அத்தனையும் அறிந்தவர்களாய் இருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும் ! பாதுகாப்புக்கு அத்தியாவசியமானதும், தேசத்திற்கு யுத்தத்தில் வெற்றி ஏற்படுவதற்கு உதவியானதும் பகைவர்கள் ஊடுருவிப் பாய முடியாத அரணாக அமைவதுமான இந்த அறிவு வளர்ச்சிக்கு உதவி செய்யும் வேலையை கிராமத் தொண்டர் படையின் ஒரு பகுதியான “ அறிவு அணி ”, தன்னுடைய கடமையாக ஏற்றுச் செய்து வரும்.

அறிவுடைமையின் அவசியம் பற்றிச் சொல்லியுள்ள திருவள்ளுவரும், “ அறிவு என்பது இறுதி வராமல் காக்கும் ஒரு கருவி ; அது மட்டுமல்ல, பகைவர்களால் அழிக்க முடியாத உள் அரணும் ஆகும் ” என்பதை,

“ அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் ”

பிரதமர் நேருவே நமக்கெல்லாம் தளபதி



என்று, குறள் வாயிலாக, நமக்குச் சொல்லி வைத்துள்ளார். எனவே, கிராமத் தொண்டர் படையின் ஒரு பகுதியாக நின்று வேலைசெய்யும் இந்த ‘அறிவு அணி’ கடைப்பிடிக்கத் தகுந்த உறுதி மொழி, இந்த தெய்வத் திருக்குறளே ஆகும். இந்த ‘அறிவு அணி’யில், கிராம ஆசிரியர்கள் நடுநாயகமாக விளங்க வேண்டியவர்கள். கிராமத்தின் பாதுகாப்பை வளர்ப்பதற்கும் தேசத்தின் பாதுகாப்பு பற்றிய செய்திகளை, நல்லமுறையில் விளக்குவதற்கும், இந்த அணியானது, வேலைசெய்து வரும். இந்த அணி, கிராமத்திலுள்ள வானொலிப் பெட்டியையும், வாசகசாலையையும், மற்றுமுள்ள செய்தித் தாள்கள், பிரசுரங்கள் முதலியவற்றையும் கருவிகளாய்க் கொண்டு, வேலைசெய்து வரும்.

தொண்டர் படையின் மூன்றாவது பகுதியாகிய பாதுகாப்புப் பகுதி, காக்கும் திறல்கொண்ட காளையரைக் கொண்டதாக, இருக்கும் இந்தக் ‘காவல் அணி’ தேசத்தின் சுதந்திரத்தையும், மான மரியாதையையும் காக்கும் அணியாக விளங்கும். இந்த அணி தன்னுடைய மரியாதை பங்காக்கவும், தன்னுடைய கிராமத்தின் மரியாதையைக் காக்கவும், தியாகம் செய்ய வேண்டும் என்பதை, ஒவ்வொரு கிராமத் தொண்டரும் பெற்றுக் கொள்ள வேண்டிய வாழ்க்கைத் தத்துவமாக ஏற்றுக்கொள்ளும். இந்தக் ‘காவல் அணி’, கிராமக் காவல் வேலைகளை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒரு திட்டம் வகுத்துக்கொள்ளும். இந்தக் ‘காவல் அணி’, கிராமத்தினுடைய தேசப் பாதுகாப்புக்கும், தேசிய உணர்ச்சிக்கும், சின்னமாக நிற்கும். தொண்டர் படையின் இப் பகுதியில் உள்ளவர்களுக்கு, முதலுதவி, தீயணைக்கும் வேலை, உடற்பயிற்சி, கொடி வணக்கம், தேசிய கீதம் முதலியவற்றில், நல்ல பயிற்சி பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும். இந்தக் காவல் அணி, கிராமத்தின் ஒழுங்கு, அச்சமின்மை, கட்டுப்பாடு, தியாகம் முதலியவற்றின் சின்னமாக நின்று, கிராமங்களின் மூலமாக, தேசம் முழுவதும், இந்தச் சிறிய குணங்கள் பரவ உதவியாக இருக்கும். இத்தகைய காவல் அணிக்கு, எத்தகைய குணங்கள் அமைய வேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லும்போது, யுத்த சாஸ்திரத்தில் நிபுணரான திருவள்ளுவர் “ வீரம், மானம், வீரர்கள் தம்முடைய முன்னோர்கள் காட்டிய வழியைப் பின்பற்றுதல், தலைவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருத்தல், என்னும் நான்கு குணங்களும், பாதுகாக்கும் படைக்கு பாதுகாவலாக இருக்கும் அரண் ” என்று குறிப்பிடுகிறார் :—

“ மறம், மானம், மாண்ட வழிச் செலவு, தேற்றம்,
என நான்கே ஏமம் படைக்கு ”

எனும் திருக்குறளை, இந்தக் ‘காவல் அணி’ கடைப்பிடிக்கும் உறுதிமொழியாக, பொன்மொழியாக ஏற்றுக் கொள்ளும்.

கிராமத் தொண்டர் படையில், இன்னும் ஒரு பகுதி, மாதர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாய், வேலை செய்து வரும். இந்த மாதர்குழு, அல்லது ‘மாதர் அணி’, கிராம மக்கள் சிறிய வாழ்வுக்குரிய சிக்கன வழிகளைக் கையாளுவதற்கும், பொருள்கள் வீணாகாமல் சேமித்து வைப்பதற்கும், குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளி செல்வதற்கும், அவர்களுக்கு மத்தியான உணவும், சீருடையும் தருவதற்கும், ஏடு தூக்கும் சிறுவர்களும், சிறுமியரும் நாளை, நாடு காப்பதற்குரிய நல்ல வீரர்களாய், வீராங்கனைகளாய் ஆவதற்கும், வேண்டிய வேலைகளைக் கவனித்து வரும். மாதர்கள் மத்தியில், குழந்தைகளிடையில் அறிவு விளக்கப் பணியையும், தேசியக் கவிதைகளைப் பரப்புவதையும் ‘மாதர் அணி’ தன்னுடைய வேலைகளாய்ச் செய்து வரும். மேலும், ஜவான்கள் குடும்ப நலத்தை—இந்த மாதர் அணி கவனிக்க வேண்டிய உதவிகளைச் செய்து, தங்களையும் தங்களுடைய குடும்பத்தையும் பாதுகாப்பது மட்டுமல்ல. கிராமத்தினுடைய புகழையும், தேசத்தினுடைய பெருமையையும் காப்பவர்களாக, ஓய்தலும், ஒழிதலும், சோர்வும் இல்லாத பெண்களாக இருப்போம் ’ என்னும் பொருள் பொதிந்த,

“ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச், சோர்விலாள், பெண் ”

எனும் திருக்குறளை, தங்களுக்குரிய கடைப்பிடிக்கத் தகுந்த பொன்மொழியா—உறுதி மொழியாக ‘ மாதர் அணி ’ ஏற்று வேலை செய்யும். கிராமத்திலுள்ள, ‘ஆண்களோடு பெண்களும் சரிநிகர், சமானமாக ’, நம் தாய்த் திருநாட்டைக் காப்பதில்—சீனரை வெல்வதில் சேர்ந்து உழைக்கும் அணியாக நின்று, தொண்டர் படைக்கு வேண்டிய ஊக்கமும், உற்சாகமும், இந்த மாதர் அணி, கொடுத்துவரும்.

கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்த, மேலே சொன்ன நான்கு வகை அணிகளும் (‘ பொருள் அணி ’, ‘ அறிவு அணி ’, ‘ காவல் அணி ’, ‘ மாதர் அணி ’) தீவிரமான பொருள் உற்பத்தி, பொது மக்களுடைய அறிவை வளர்த்தல், ஊரையும், தேசத்தையும் காவல் செய்தல், தாய், சேய் நலம் பேணுதல் முதலிய நான்குவகைப் பணிகளையும், செய்து வரும்.

நாம் எல்லோரும் ராணுவ வீரர்கள் —காமராஜ்

இந்தக் கிராமத் தொண்டர் படை, ஊரில் ஓர் "உழைப்புக் களஞ்சியம்" ஏற்படவும், வேலை செய்யும். உழைப்பதற்கு வேண்டிய, உழைப்பினை, ஆண்டு ஒன்றுக்கு 10 அல்லது 12 தினங்கள் கொடுத்துதவுவதாக, திடகாத்திரமுள்ளவர்கள் வாக்களிப்பார்கள். உழைக்கும் சக்தியற்றவர்கள், அந்த உழைப்பினுக்குரிய பணத்தைக் கொடுப்பார்கள். ஊரார் வாக்களித்த உழைப்பெல்லாம், களஞ்சியமாக திரட்டப்படும். அந்தந்த ஊரில் செய்யவேண்டிய விவசாய உற்பத்திக்கும், மற்ற பொது வேலைகளுக்கும் வேண்டிய உழைப்பை, தக்க சமயத்தில் கொடுத்துதவும் வகையில், பஞ்சாயத்து, வேலைத் திட்டத்தை அமைக்கும். ஊரெல்லாம் ஒரு குடும்பம்போல், ஒரு தொண்டர் படையாகி, "எங்கள் வீட்டிற்கு மட்டுமல்ல, கிராமத்தின் பொது வாழ்விற்கும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் உழைப்பினைத் தருவோம்" என்று கூறுகிறவர்கள் உள்ள ஊரில், எல்லா நலங்களும் வளரும் என்பது உறுதி. "உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ"? இந்த உழைப்புக் களஞ்சியத்தின் நீதிமொழியாக—பொன்மொழியாக—பாரதியாரின் திருவாய்மொழியான,

"நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர் !"

என்பது இருந்து வரும்.

சுருங்கக் கூறின் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைத் தன்னுடைய லட்சியமாகக் கொண்டு கிராமத்திற்கும், அதன் மூலமாக தேசத்திற்கும் சேவை செய்யும் தேச பக்தர் படையாக இருந்து, இந்த கிராமத் தொண்டர் படை, வேலை செய்து வரும்.

"அன்பர் பணி செய்ய எனை, ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை, தானே வந்தெய்தும், பராபரமே !"—தாயுமானவர்.

கோ. வேங்கடாசலபதி



உதிரம் ஒழுகும் நம் மானம் துடைக்கும் வாள் என்று எதிரியின் வீச்சுக்குப் பதில் கூறிய மறவர் கூட்டம் மீண்டும் புதிய தெம்பு பெற உங்கள் உதார தானம் தேவை !

# பாதுகாப்பு முயற்சியில் பஞ்சாயத்துக்கள் பங்கு கொள்ளும் புதிய திட்டம்

திரு எஸ். கே. டே

(இந்திய அரசாங்க, சமுதாய நல-பஞ்சாயத்து ஆட்சி-கூட்டுறவு-அமைச்சர்.)

சோஷலிஸபாணி சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்பது இந்தியாவின் லட்சியம். குடும்பத்திலுள்ள வலியோரும், எளியோரும் தங்களுடைய ஆதார வசதிகளை ஒன்று சேர்க்க வேண்டுமென்பதுதான் சோஷலிசத்தின் நோக்கம். வலியோர் எளியோருக்கு கை கொடுத்து உதவவேண்டும். இவ்வுதவி தொடர்ந்து இடைவிடாமலிருந்து வரவேண்டும். குடும்பத்தின் செல்வம் எளியோருக்கும் விநியோகமாகும் விதத்தில் இருக்க வேண்டும். நீதியும், சமதர்மமும், நியாயமும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

தேசப் பிதாவின் பிறந்த தினத்தன்று, 1952 அக்டோபர் 2-ந் தேதி முதல், சமுதாய அபிவிருத்தித் திட்டம் நடைபெற்று வருகிறது. பல வெற்றி தோல்விகளை கண்டிருக்கிறது. புகழுரைகளும், கண்டனங்களும் குவிந்திருக்கின்றன. சமுதாய அபிவிருத்தி ஏற்பாடுகள் தொடர்ந்து இருந்துவருகின்றன; அதன் லட்சியங்கள் அழியவில்லை. இந்திய மக்கட்செல்வத்தில் 80 சதவிகிதத்தினர் வாழும் கிராமங்கள், அவற்றின் நிலைமையுங்கூட மாற முடியும் என்பதை உணர்ந்துள்ளன, மாற வேண்டியது மிகவும் அவசியமாகும் என்பதில் சந்தேகமில்லை.

## நாடு முழுவதும் பரவியிருக்கிற நல்ல திட்டம்

பத்து ஆண்டுகளில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் 557,000 கிராமங்களில் பரவியிருக்கின்றன. கிராமங்கள் முதல், அபிவிருத்தித் தொகுதி வரையில் 5,200 அபிவிருத்தித் தொகுதிகள் இயங்கி வருகின்றன. 203,000 பஞ்சாயத்துக்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. மேலும் சில ஆயிரங்கள் ஏற்படக்கூடும். அடித்தளத்திலிருந்து ஒன்றுக்கொன்று இணைந்த அமைப்பை ஏற்படுத்துவதுதான், இப்புதிய ஆனால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பஞ்சாயத்து ஆட்சி. பஞ்சாயத்து ஆட்சி 15 ராஜ்யங்களில், ஏற்கெனவே 10 ராஜ்யங்களில் நடைபெற்று வருகிறது. மேலும் மூன்று ராஜ்யங்கள் இது சம்பந்தமான சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றன. இப்புதிய இயக்கம் மீதியுள்ள மூன்று ராஜ்யங்களிலும் விரைவில் பரவும்.

இப்போது 220,000 கிராமக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. கூட்டுறவு சமாஜம் உதிக்கத் தொடங்கிவிட்டது. கிராம மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு அவற்றின் மேலுள்ள யூனியன்கள் உதவியாயிருந்து வருகின்றன. அவை அடித்தளத்திலிருந்து எழும்பிய சமஷ்டி அமைப்புக்களாகும். கூட்டுறவு இயக்கத்தின் கடனுதவி விற்பனை ஏற்பாடு, பண்டங்களைப் பக்குவம் செய்வது, இத்துறை சம்பந்தமான கல்வியைப் பரப்புவது, பயிற்சி, ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன. கிராமக் கைவினைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவுவதற்காக செயல்முறைக் கூட்டுறவு சங்கங்களுமிருக்கின்றன. அவர்களுக்கென்று தனியாக சமஷ்டி அமைப்புகளும் உருவாகி வருகின்றன. விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு கிராம சகாய ஏற்பாடுகளும் தொடங்கப்பட்டன. தங்களுடைய அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறி, சர்க்கார் ஸ்தாபனங்களிடமிருந்து நவீன விவசாய நுட்பத்தைத் தெரிந்து கொள்ளும் முறைக்கு விவசாயிகளுக்காக இது தொடங்கப்பட்டது. அவர்கள் புது முறையைக் கையாண்டு, அவர்களின் உதாரணத்தை மற்றவர்களும் பின்பற்றத் தூண்டவேண்டும். கிராம சேவகர்களாக சுமார் 40 லட்சம்பேர் பதிவு செய்துகொண்டு சென்ற ஐந்து ஆண்டுகளாக முகாம்களில் கலந்துகொண்டிருக்கின்றனர். மகிளா மண்டலங்களும், இளைஞர் மண்டலங்களுமிருக்கின்றன. இம்மண்டலங்களை மையமாகக்கொண்டு பெண்கள் சங்கங்களையும் இளைஞர் இயக்கங்களையும் ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் முயற்சி நடைபெற்று வருகிறது.

## சமுதாயமும் தனி மனிதனும்

ஜனநாயக நாடுகளின் செயல்முறைகளுக்கும், சர்வாதிகார நாடுகளின் நடைமுறைகளுக்கும் அடிப்படையில் பெருமளவு வேறுபாடுகளிருக்கின்றன. சர்வாதிகார நாட்டில் தனி நபர் என்று எவரும் கிடையாது. எல்லாரும் அந்நாட்டிலிருந்து பிரிக்கமுடியாத அம்சமாகும். நாட்டின் பிரஜைகள், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும், அந்நாட்டு அதிபர்களின் நிழலாகவே இருக்கவேண்டும். ஆனால் இந்தியாவின் சமுதாய அபிவிருத்தித் திட்டம் விரும்புகிற சமுதாயம் அதற்கு நேரெதிரானதாகும்; தனி மனிதர் சமுதாயத்தின் மையமாக விளங்குவார்; தனி நபர்களடங்கியதுதானே சமுதாயம். மாமூல் வாழ்க்கையின்போது, விழாவின் ஆரவாரமோ அல்லது அதிர்ச்சியின் துயரமோ இல்லாத போது, சமுதாயம் மறைந்திருக்கும்; தனிப்பட்டவர்கள்

தேச நலன் கருதிப் பாசறையில் சேருங்கள்.

முன்னணியில் இருப்பார்கள். சமுதாய அபிவிருத்தித் திட்டம் தனிப்பட்டவர்களின் முன்னேற்றத்துக்குத்தான் பெரிதும் உதவியாக இருந்துவந்திருக்கிறது. சமுதாயத்தை உருவாக்குவதற்கான சக்தியை எளிதாகப் பெறமுடியவில்லை. அது அத்திட்டத்தின் குறைபாடுகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

உலகத்திலேயே மிகவும் பழமையானதும், கடுமையான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதும், மக்கள் மிகுந்தது மான நாடு, நமது எல்லையில் இன்று அச்சுறுத்தி வருகிறது. வானளாவி நிற்கும் இமயமலையை அசைக்க முடியாத அரணாகக் கருதிவந்தோம்; நம்மைக் காத்துவரும் கடவுளாகக் கருதினோம்; அந்த எண்ணம் இன்று சுக்கு நூறாகச் சிதைந்துவிட்டது. நமது வரலாற்றிலேயே காணப்படாத உண்மையை, இன்று நாம் நேருக்கு நேர் கண்டுவிட்டோம்; ஆபத்து வந்துற்ற காலத்தில்தான், ஒரு நாடு பலமும், வலிமையும் சிறந்து விளங்கும் என்பது தெரிந்ததே. கோழைகள் தான் சோதனையும், கஷ்டமும் நிறைந்த சூழ்நிலையை விட்டு சுகபோகப் பாதுகாப்பைத் தேடி வருவார்கள்; வாழ்க்கைக் கலையில் நாம் வளமார்ந்தவர்களென்றும், புராதனப் பெருமை நிறைந்தவர்களென்றும் கூறி தேசப் பிதாவின் வாரிசாக நம்மைக் கருதுகிறோம். அவர் உலகத்திலேயே சக்தி வாய்ந்த அன்னிய ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் ஒன்றுபட்ட சக்தியின் கீழ் அடி பணியச் செய்தவர்; அச்சக்தியின் சின்னமாக விளங்கினார். மனிதனின் ஆத்மா, பெருமை வாய்ந்ததென்றும், அழிக்க முடியாததென்றும், அழியாததென்றும், தலைமுறை தலைமுறையாக நிலைநாட்டி வந்திருக்கிறோம். பல நெடுங் காலமாக, இந்தியாவின் சிந்தனைச் செல்வம், திரும்பத் திரும்பத் தாக்கதலுக்காளான காலத்திலும், உடலும் உள்ளமும் உரம் பெற்று ஆத்மீக வலிமைபெற்று விளங்கி வந்திருக்கிறோம். சிந்தனைகளை இணைத்து உருவாக்கும் திறமை பெற்றவர்களென நமக்குப் புகழுண்டு; வாழ்க்கையின் அத்தியாவசியத் தன்மைகளைச் சாறு பிழிந்துதரும் சக்தியென்ற நம் பெயர் பெற்றிருக்கிறோம். இந்தியாவின் வடபகுதியில் இன்று ஏற்பட்டிருக்கும் சோதனை, இந்திய மக்களனைவரையும் நோக்கிவிடப்பட்டிருக்கும் சவாலாகும்; இந்தச் சவாலை நாம் ஒன்று திரண்டு எழுந்து எதிர்க்கவேண்டும்; அல்லது பரிணாம சக்திகளுக்குப் பலியான பூர்வீக விலங்குகளைப்போல மாய்ந்தொழியவேண்டிவரும்.

### ஜனநாயக முறையில் ஒன்று திரளுவோம்.

ஆள்பலத்தையும் பொருள் பலத்தையும் ஒன்று விடாமல் திரட்டுவதன் மூலமாகத்தான் நவீன போர் முறையில் ஈடுபட முடியும். நாம் போரில் வெல்லுவதற்கு, அவர்களைப்போல எண்ணிக்கைப் படையைத் திரட்ட முடியாது. அப்படி நேரும்போது தற்போதைய பிரதேசப் போர் முடிவில்லாத பெரும் போராக மாறிவிடக்கூடும்; அதைத் தொடர்ந்து நிகழவிருக்கும் அணு சக்தி யுத்தத்தில் மனித இனம் பூண்டோடு அழிந்து போவதைத் தடுக்க முடியாது; நாம் கட்டிக் காத்துவந்த லட்சியங்களைக் காற்றில் விட்டவர்களாவோம். நம்மை எதிர்த்து நிற்கும் சக்திகள் கடுமையான சட்ட திட்டங்களுக்குட்பட்டவை. நாம் அவர்களின் யுக்தியைப் பின்பற்றி, நமது லட்சியங்களையும் இழந்துவிட வேண்டியதான். ஆயினும், நமது ஆதார வசதிகளையும் ஒன்று விடாமல் திரட்டி எதிரியை எதிர்க்கவேண்டும். ஆகவே, மனோ வலிமையிலும் உறுதியிலும் சிறந்து விளங்கும் சக்தியை ஒன்று திரட்டுவதற்கு, ஜனநாயக ரீதியான வழியை நாமே கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது, இதுதான் இன்றைய முக்கியமான பிரச்சினை.

### 'பாதுகாப்பு உழைப்பு பாங்கு'

போரின்போதும், சமாதான காலத்திலும் தங்கத்துக்கு மதிப்புண்டு; நம்மிடமுள்ள தங்கம் மிகவும் குறைவு. நாம் எவ்வளவுதான் முயன்றாலும் நாட்டிலுள்ள தங்கம் முழுவதையும் திரட்டுவது இயலாத காரியமாகும். ரொக்கப் பணமாக மாற்றக்கூடிய இதர பொருள்களும் குறைவாகவே இருக்கின்றன. நம்மிடம் இன்று தாராளமாக இருப்பது நம் உழைப்புச் சக்தியும் நல்லெண்ணமும்தான். கிராமப்புறங்களில், சுமார் 36 கோடி மக்களிருக்கின்றனர். அவர்களில் உடலுறுதி வாய்ந்த ஆண்களும், பெண்களும் 20 கோடி இருப்பார்கள். நாட்டுப் பாதுகாப்புக்காக ஒவ்வொரு கிராமத்திலும் 'பாங்கு' ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அது 'பாதுகாப்பு உழைப்பு பாங்கு' என்று அழைக்கப்படும். அதற்கு சட்ட வசதிகளோ, காவல் ஏற்பாடுகளோ எதுவும் வேண்டியதில்லை. பஞ்சாயத்து காரியாலயத்தில் பதிவுப் புத்தகமொன்று இருக்கும். பாங்கில் சேர விரும்புகிறவர்கள், குறைந்தபட்ச சந்தாவாக, ஆண்டொன்றுக்குக் குறைந்த பட்சம் 12 தினங்கள் இலவசமாக, உழைக்க விரும்புவதாக உறுதியளிக்க வேண்டும். ஆண்களும், பெண்களும் அவ்வாறு உறுதியளிக்கவேண்டும். நிலமில்லாதவர்களும், ஏழைகளும் ஆண்டொன்றுக்கு 12 தினங்களுக்கு மேல் இலவசமாக உழைக்க அனுமதிக்கக்கூடாது. அதிகப்படி உழைப்புக்கு, பஞ்சாயத்து நிதியிலிருந்து சம்பளம் தரவேண்டும். வயதானவர்களும், நோயுற்றவர்களும், உடலுழைப்புக்குப் பதிலாக ரொக்கமாகப் பணம் தரலாம்.

பாதுகாப்பு உழைப்பு பாங்கிலுள்ள 'உழைப்பு டிப்பாசிட்டை' சமுதாயத்தின் உத்தரவின்படியான வேலைகளில் ஈடுபடுத்தவேண்டும். இன்றைய சூழ்நிலையில் அது உடனடிப் பலன்தருவதாக இருக்கவேண்டும். மீன் வளர்ப்புக் குளங்களை வெட்டுவது, காய்கறிப் பழத் தோட்டங்கள், பஞ்சாயத்துக்குச் சொந்தமான விறகுக் காடுகளை வளர்ப்பது, செங்கல் சூளைகள், அதுபோன்ற, சமுதாயத்துக்கு நன்மைதரும் ஆக்கவேலைகள் முதலிய பணிகள் இதில் அடங்கும். வாய்க்கால்களை வெட்டலாம், சுவர் கட்டலாம். சிற்றோடைகளுக்குக் கரை கட்டலாம். இவையெல்லாம் சமுதாயம் முழுவதற்கும் பயன் தருவதாக இல்லாமலிருக்கலாம்; அதனால் நன்மை பெறுகிறவர்களுக்குச் சொந்தமான வசதி இருக்காது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், உடலுழைப்பைப் பெறுவதற்கும் ராஜ்ய சர்க்காரிடமும், பஞ்சாயத்துக்களிடமும் போதிய பண வசதி இருக்காது. பாதுகாப்பு உழைப்பு பாங்கில் வாக்களிக்கப்பட்டிருக்கும் உடலுழைப்பை இவ்வகைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த உடலுழைப்பின் விலை, பயனடைவோரிடமிருந்து பணமாகவோ, கிராம பஞ்சாயத்துக்களுக்கு பிற்பாடு சேரும் சொத்தாகவோ, திருப்பிக் கிடைக்கும். அந்த ஆஸ்தியை எதிர்காலத்துக்கு வேண்டிய மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நேரடியாக வழங்கலாம்; ஆள்பல வசதிகளெல்லாம் பூரணமாகப் பயன்படுத்தப்பட்டால் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 240 கோடி உழைப்பு நாட்கள் கிடைக்கும்; அதை சமுதாயத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தலாம்.

### கிராமத் தொண்டர் படை

சர்வாதிகாரக் கட்சிகள் சமுதாயத்தினுடையவும் தனி நபர்களுடையவும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் புகுந்துகொள்ளும் சக்தி வாய்ந்தவை. அத்தகைய சர்க்கார் அமைத்துள்ள சக்தியை சிறிய சக்தி எதிர்க்கவேண்டுமானால், அது மக்களின் மனப்பூர்வமான ஆர்வத்தினால் இயற்கையாக எழுந்துள்ள சக்தியால் தான் முடியும். இதற்கு 'கிராமத் தொண்டர் படையை' அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் கிராமத் தொண்டர் படையாக அமையும். உடலுறுதியுள்ள ஆண்களையும் பெண்களையும் பதிவு செய்யவேண்டும். அதன் வேலைத்திட்டம் உற்பத்தி, பொது மக்களுக்கு விஷயங்களை விளக்கிக் கூறுவது, கிராமப் பாதுகாப்பு ஆகிய மூன்று அம்சங்களடங்கியதாக இருக்கும். தேசப் பாதுகாப்புக்கு முதன் முதலாக வேண்டியது வலிமை வாய்ந்த விவசாயத்துறையாகும். பாதுகாப்பு முயற்சியில் நமது பல லட்சக்கணக்கான விவசாயிகளும் ஈடுபடுகிற விதத்தில், ஒவ்வொரு கிராமத்துக்கும் உற்பத்தித் திட்டத்தை உருவாக்கி, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான தேசிய இயக்கத்தைத் தொடங்குவதே, இத்திட்டத்தின் கருவூலமாகும்; உற்பத்தியில் ஈடுபடும் ஆள்பல சக்தி இருக்கும்; அது உற்பத்தியைப் பெருக்குவதற்காக பஞ்சாயத்து நிலம், குப்பை உரம், காய்கறி பழத்தோட்டம், விறகு காடுகளை வளர்த்தல், கிராமக் குளங்களை வெட்டுதல், பிற கிராமப் புற வேலைகள், புஞ்சைப் பயிர், மண்வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், வயல் கால்வாய்களை வெட்டுவது, ஆகிய வேலைகளிலும் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான விசேஷ திட்டங்களிலும் ஈடுபடும். எற்கெனவே, விளக்கப்பட்டுள்ள 'பாதுகாப்பு உழைப்பு பாங்கி'லுள்ள உழைப்பு சக்தியைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது இத்திட்ட வேலையின் முக்கிய அம்சமாகும்.

பல்வேறு ஏற்பாடுகளின் மூலமாக சரியான தகவல்களை பொது மக்களுக்கு எடுத்துக்கூறுவது, விளம்பர சாதனங்களைச் சரியானபடி பயன்படுத்துவது, வீண் வதந்திகள் பரவாமல் தடுத்து மக்களின் மனோ உறுதியை வளர்ப்பது ஆகியவை பொது மக்கள் தொடர்பு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும். கிராமப் பாதுகாப்புத் திட்டத்தின்படி தொண்டர்கள், காவல் வேலைகள், தீ விபத்து தடுப்பு, முதல் சிகிச்சை, செய்தித் தொடர்பு ஏற்பாடுகளைப் பாதுகாப்பது ஆகிய பணிகளில் ஈடுபடலாம். இளைஞர் சங்கங்களும், மாதர் சங்கங்களும் கிராமத் தொண்டர் படையில் மாதர் பிரிவையும் அமைக்கலாம். அவை, சேமிப்பு, பின்னுதல், உபயோகப் பண்டங்களை விநியோகிப்பதில் நியாய விலைக் கடைகளுக்கும், சேவை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவுவது, ஆகிய பெண்களுக்கேற்ற வேலைகளில் ஒவ்வொரு கிராமத்திலும் கவனம் செலுத்தலாம்; படை வீரர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாப்பதில் உதவியாக இருக்கமுடியும். முதியோர்கள் அனுபவ சாத்தியமான யோசனையைக் கூறுவார்கள்; ஆனால் இந்த மக்கள் இயக்கத்துக்கு சக்தியை அளிப்பது இளைஞர்களும், உயிரளிப்பது மாதர்களுமாகும். கிராமத் தொண்டர் படை, அதன் அங்கத்தினர்களுக்காக உடற்பயிற்சி, டிரில் முதலியவைகளை நடத்தலாம். இதன் மூலம் கிராம மக்களிடையே ஒழுங்கு, கட்டுப்பாட்டு உணர்ச்சியும், தேசியப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறோம் என்ற பெருமை உணர்வும் உருவாகும்.

### தேசிய ஒருமைப்பாடு

தசைநார்கள் இயங்காவிடில் சோர்வு தோன்றுகிறது; இந்தத் தளர்ச்சி உடலெங்கும் பரவி உடலையும், உள்ளத்தையும் கெடுத்துவிடுகிறது. வெளி ஆபத்துக்குள்ளாகாத சமுதாயம் கொழுப்படைந்து உள் விரோதத்தால் ஊனமடைந்துவிடும். வெளிநாட்டு ஆட்சி 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதியோடு முடிவடைந்தது; அதற்குப் பிறகு நடைபெற்ற புனர் வாழ்விப்புப் பணி வெகு காலம் தொடரமுடியவில்லை. மக்களும் சர்க்காரும் ஒன்று சேர்ந்த உழைத்ததின் பயனாக ஒரு கோடி மக்கள் புனர் வாழ்வு பெற்றிருக்கின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்கள் நல்ல பலனளித்து வருகின்றன. அவை, எதிர்காலத்தில் நல்வாழ்வுத் தருமென்ற நம்பிக்கையை ஊட்டியது. நமது பாரம்பரிய குணத்துக்கு ஏற்ப,

அகிம்சையின் கோபுரக்கலசம்

ஆதிக்கவெறியால் பாதிக்கப்பட்டது

நாமும் சிறிது சிறிதாக ஒற்றுமை சிதறிச் சென்ருேம். ஆனுல், இத்தனை நாளும் உழைத்து வளர்த்துவந்த நமது உயிருக்குயிரான சுதந்திரத்துக்கு, இமயமலைக்கு மறுபுறத்திலிருந்து ஆபத்து நேரிட்டதும் நாம் விழித்துக் கொண்டோம், சூழ்நிலை மாறிவிட்டது. அரசியல் கட்சிகளெல்லாம், ஒன்ருய் எழுந்து நிற்கின்றன. சாதி, மத, சமுதாய பேதமெல்லாம் மறைந்து எல்லாரும் ஓரினமாகி பொங்கி நிற்கின்றனர்; ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, பாரத நாடு இப்போதுதான் ஒன்று திரண்டு நிற்கிறது; கூட்டுக் குடும்பமாக நிற்கிருேம்; இது தொடர்ந்து நீடிக்கவேண்டும். நமது மனித சமுதாயத்தின் சக்திகளையெல்லாம், ஆள் பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டவேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை, நம்முடைய புதிய மனப்பான்மையை உருவாக்குவதற்கு, புதிய சிந்தனையைப் பெறுவதற்கும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வாழப் பிறந்த நாடு, நெருக்கடியை எதிர்க்கும் போது, கோழைகளைப்போல நடந்து கொள்வதில்லை. அந்த நாடு, நெருக்கடியைப் போக்கிவிடும்; நெருக்கடியைப் போக்க அதற்கு உதவியும் கிடைக்கும் குடும்பத்திலுள்ள வலியாரும், எளியாரும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்துடன் முழுமூச்சுடன் முயன்ருல் தான் இது சாத்தியமாகும்.

### சுதந்திரக் கோயில்

சுதந்திரம், மக்களை நோக்கித் தானுக வருவதல்ல; சூழ்நிலைகளை யொட்டி விடுதலை கிடைக்கக்கூடும்; சுதந்திரக் கோயிலை அடைவதற்கு, பக்களை படிக்கட்டுகளை ஏறிச் செல்லவேண்டுமென்பது வேதவாக்கு. கிராம மக்கள் கடந்து போன போராட்டத்தின உண்மையை உணர்ந்து தங்கள் விடுதலைக்காக இனமேல்தான் போராட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய ஏற்பாடுகளெல்லாம். தேசிய விஸ்தரிப்பு திட்டத்தின் மூலமாகவும், சமுதாய அபிவிருத்தி இயக்கத்தின மூலமாகவும் சர்க்கார் அளித்து வருகின்றனர். மக்கள் நிறைவேற்றியுள்ள சட்டங்கள் மூலமாக ஜனநாயக ரீதியாக மக்களின் பிரதிநிதி சபை ஏற்பட்டிருக்கிறது; இன்று கிராம மக்கள் தேசியப் பாதுகாப்புக்குத் தங்களால் ஆனதை வழங்குவதோடு, அங்கு உண்மை விடுதலை கிடைக்கவும் பாடுபடவேண்டியிருக்கிறது; கிராமங்களிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் புனித யாத்திரையைத் தொடங்கவேண்டியிருக்கிறது. "லட்சிய மனிதனை" மனிதனை நோக்கிய பயணம், நமது முயற்சியின் தீவிரத்தையும், ஒவ்வொருவரும் மேற்கொள்கிற புனித யாத்திரையின ஆத்மீக வலிமையையும், சமுதாயத்தை நடத்திச் செல்வதற்குக்கிடைக்கிற தலைமையையும் பொறுத்திருக்கிறது.

நாமிருக்கும் உலகை நாம் இப்போது அறிந்து கொண்டோம்; இத்தகைய உலகில் பாதுகாப்புத் துறையில் நமக்கு என்ன வேண்டுமென்பதையும் தெரிந்துகொண்டுவிட்டோம். நமது நிர்வாகம், தொழில் நுட்ப ஆதார வசதிகள், சப்ளைகள் ஆகிய எல்லாவற்றிலும் என்னென்ன வேண்டுமென்பது சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகத் தெரிய வந்திருக்கிறது. நமது ஜனநாயக முறைகளிலும் என்னென்ன இடைவெளிகள் இருக்கின்றனவென்பதை உரிய காலத்தில் தெரிந்து கொள்ளவேண்டும்; அப்போதுதான் நாம் போற்றிவரும் ஜனநாயகம் அழியாமல், தழைத்துவரும். வெளிநாட்டு ஆக்கிரமிப்பை மட்டுமின்றி, சமுதாயத்தை உருக்குலைத்து வரும் நம்மிடையேயுள்ள பூசல்களையும் ஒழிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் தேசிய பாதுகாப்பு திறம்பட இயங்கும். ஆகவே, சமுதாயத்தில் பலமிழந்து, ஒதுங்கிக் கிடக்கும் மக்கள் விஷயத்தில் முதன் முதலாக நமது கருத்தைச் செலுத்தவேண்டும்.

### நாம் கட்டிவருகிற புனித ஆலயம்

சமுதாய அபிவிருத்தித் திட்டம் இன்று பூரணத்துவமடைகிறது. சக்தி வாய்ந்த எதிரியை நோக்கி சமுதாயம் முழுவதுமே ஒன்று திரண்டு நிற்கும் சக்தியை இன்று காண்கிருேம். நாம் இன்று, சர்க்கார் என்னென்ன நன்மைகளைச் செய்து தருவார்கள் என்ற ஜாபிதாவை வைத்துக்கொண்டு மக்களிடம் வரவில்லை. உழைப்பையும், ரத்தத்தையும், கண்ணீரையும் தாருங்கள் என்று கேட்கிருேம். அப்படிக் கேட்கிறவர்கள், தங்கள் உயரிய தியாகத்தின் மூலமாகவும், சிந்தனை, செயலின் மூலமாகவும் வழிகாட்டியாக விளங்கினுல்தான், அவர்கள் கேட்பது கிடைக்கும். தலைவர்களும், மக்களும், சுய பரிசோதனைக்குள்ளாக்கும் நேரம் வந்துவிட்டது; கொடுத்து வாங்கும் இவ்வேலை தங்களுடைய உண்மை நட்பின் உணர்வால் ஊக்கமடையவேண்டும்; வெறும் லாப அடிப்படையிலிருக்கக்கூடாது. தொன்றுதொட்டே நம் முன்னோர்கள் இறைவனைத் தேடி இமயத்துக்குச் சென்று வந்திருக்கின்றனர்; இப்போது நாம் இமயத்துக்குச் செல்வது இன்னொரு புனித பணிக்காக; ஆயினும் இதுவும் புனித யாத்திரைதான். இந்திய மக்கள் என்ற முறையில் நாம் மதிக்கும் வாழ்க்கையை, அதுதான் நிலைபெறச் செய்யும். நாம் இந்நாட்டில் உண்மையைப் பின்பற்றி வந்திருக்கிருேமா! அல்லது வெறும் பிழையின் பின்னுல் சென்ருேமா என்பது அப்போதுதான் தெளிவாகும். நமது மக்களுக்காக கட்டிவருகிற புனித ஆலயம் பூர்த்தி பெறுமா என்பதும் அப்போதுதான் தெரியும்.

——( : )——

## தளர்வின்றி உழையுங்கள்



# தொன்றுதொட்டு வந்த ஆதிக்க வெறி

சர்தார் கே. எம். பணிக்கர்

இந்திய வரலாற்று நூல் எழுதிப் புகழ்பெற்றவரும், வரலாற்றுத்துறை அறிஞருமான திரு கே. எம். பணிக்கர் சீன ஆட்சியாளரின் ஆதிக்க வெறியைப் பற்றிய வரலாற்றை இக் கட்டுரையில் விளக்குகிருர். சீனவில் இந்தியத்தூதராகப் பணிபுரிந்துள்ள கட்டுரையாசிரியர், சீனவின் நாடுபிடிக்கும் பேராசை தொன்றுதொட்டு வந்த ஒன்று என்பதைத் தெளிவாக்குகிருர்.

கி. மு. மூன்ருவது நூற்ருண்டின் கடைசிக் காலத்தில், சின் ஷி ஹுவான்டி, பல பகுதிகளையும் ஒன்று சேர்த்து, சீனவை ஒருங்கிணைத்தது முதல், அந்நாடு பிரதேச விஸ்தரிப்பு கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது. ஹன், டாங், மிங் ஆகிய உள்நாட்டு வம்சத்தினரின்கீழ் இருந்தபோதும், மங்கோலியர்கள், மஞ்சூக்கள் ஆகிய வெளிநாட்டுப் படை எடுப்பாளரின்கீழ் இருந்தபோதும், சீனர்கள் தங்கள் நாடு பிடிக்கும் கொள்கையை விட்டுவிடாமல் கடைப்பிடித்துதான் வந்தனர்.

ஹன் வம்சத்தினரின்கீழ், சீனர்கள் மத்திய ஆசியாவில் வெகு தூரத்திற்குள்ளே புகுந்து, அப்போது பாக்ட்ரியா என்று அழைக்கப்பட்டு வந்த பகுதியின்மீது அதிகாரம் செலுத்தி, அதை ஓரளவு பாதுகாப்பின்கீழான நாடாகவும் ஆக்கிக்கொண்டனர்.

மங்கோலியர்களால் பிடித்து அடக்கப்பட்டு ஆட்சி செலுத்தப்பட்டு வந்த சீன, மங்கோலியாவின்மீதும்கூட அதிகாரம் செலுத்தத் துணிந்துவிட்டது. எஜமானர்களின் நாட்டையே படிப்படியாகத் தன்கீழ் கொண்டுவந்து விட்டது. (திபெத்தின்மீதுங்கூட அதிகாரமிருப்பதாக உரிமை கொண்டாடியது).

### அடக்கி ஆண்டவர்கள் அளித்த சொத்து!

மஞ்சூக்களைப் பொறுத்தவரையிலும் நிலைமை அப்படித்தான். அவர்கள் சீனவை பிடித்து அடக்கி 250 ஆண்டுகள் ஆண்டு வந்தனர். சிங்கியாங்கை எதிரிகளிடமிருந்து மீட்டு அதன்மீது, சீன அதிகாரத்தை ஸ்தாபித்ததும் மஞ்சு சக்கரவர்த்தியான சியென் லுங் தான். மஞ்சு ஏகாதிபத்தியம் அழிந்ததும், எஜமானர்களின் நாடான மஞ்சூரியாவையே தனது மாகாணமாக சீன ஆக்கிக் கொண்டுவிட்டது.

சீனர்கள் தங்களது 16 மாகாணங்களுடன், மஞ்சூரியா, உள்மங்கோலியா, சிங்கியாங், திபேத் ஆகியவைமீது இன்று உரிமை கொண்டாடுகின்றனர். இவையெல்லாம் சீனவைப் பிடித்து அடக்கிய வெளிநாட்டு எஜமானர்கள் விட்டுச் சென்ற நாடுகள் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

சீனர்களின் உரிமை எவ்வளவுதான் சந்தேகத்திற்குரியதாக இருந்தாலும், நியாயமற்றதாக இருந்தாலும், அவர்கள் மிகவும் பலவீனமாக இருந்த காலத்திலுங்கூட தங்களுடைய போலி உரிமையை விட்டுவிடவில்லையென்பது சீன விஸ்தரிப்புக் கொள்கையின் முக்கியமான அம்சமாகும்.

உதாரணமாக, கொரியாவின் மீது அவர்களுக்கு இருந்த உரிமை போலியாக இருந்தபோதிலும் ஜப்பானுக்கு எதிராக அவ்வுரிமையை நிலைநாட்ட சகல வழிகளிலும் முயன்று வந்தனர். இவ்வுரிமையை நிலைநாட்டுவதற்காகவே சீன-ஜப்பான் யுத்தம் நடந்தது.

இந்தோ-சீனவை பிரான்ஸ் பிடித்து அடக்கியபோது பீகிங் சர்க்கார் ராஜ தந்திர ரீதியிலும், ராணுவ முறையிலும் தலையிட்டு தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டனர். குப்லாய் கான், காலத்தில் மங்கோலியர்கள் அந்நாட்டைப் பிடித்து அடக்கியதால் அது தமக்குச் சொந்தமென்று சீன சாதித்தது.

அதேபோல பிரிட்டிஷார் வடபர்மாவை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேர்த்து கொண்டபோது, அது சீனவின்மீது ஏற்பட்ட ஆக்கிரமிப்பு என்பதாகக் கூறவும் மறந்துவிடவில்லை. மங்கோலியர்கள் பர்மாவைப் பிடித்து அடக்கியிருந்ததால் அந்நாடு சீனவுக்குச் சொந்தமாம்.

இவையெல்லாம் சீன பலமற்று இருந்த காலத்தில் நிகழ்ந்தவை. மஞ்சு சாம்ராஜ்யம் தனது அந்தஸ்தை இழந்திருந்தபோது நிகழ்ந்தவை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

### சீனவின் சுயநலம்

சீன அதன் அற்ப உரிமையைக்கூட ஒருபோதும் மறக்கவில்லை. அது எவர் மூலம் கிடைத்தாலும் சரி, சீன விட்டுவிடாது.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், தனது பழைய உரிமையை மீண்டும் வலியுறுத்திய சம்பவமும் உண்டு. ஹுன் மன்னர்கள் மத்தியாசியாவில் புகுந்து அப்பகுதியின் மீது அதிகாரத்தைச் செலுத்தியதை முன்பே குறிப்பிட்டிருக்கிருேம். அவர்கள் அதிகாரத்தைச் செலுத்த

## திட்டங்கள் தளிர்விடும் நேரம் இது

முயன்றபோதெல்லாம் மக்கள் எதிர்த்து வந்தனர். ஆனால் எட்டாவது நூற்றாண்டின் மத்திய காலம் வரையில் அந்த உரிமை வலியுறுத்தப்பட்டு வந்தது. கடைசியாக ஜெனரல் கேசிவலீயென் சியின், தலைமையில் திபேத்தியர்கள் சீனப் படைகளை விரட்டியடித்த பிறகுதான் சீனர்கள் உரிமையைக் கைவிட்டனர்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளாக சீனர்கள் இப்பகுதிக்கு வரவோ, விவகாரங்களில் தலையிடவோ இல்லை; ஆனால் சீனர்கள் உரிமை கொண்டாடுவதை விட்டு விட்டனர் என்றோ மறந்துவிட்டனர் என்றோ நினைத்தால் ஏமாற்றமே. ஏனென்றால் முழுவதாக ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகுங்கூட சீனர்கள் இப்பகுதியின் மீது தங்களுக்கு உரிமையுண்டென்பதற்கு உயிரூட்டி, சியின் லுயென் என்னும் மஞ்சூரிய மன்னரின் தலைமையில் அப்பகுதியைக் கைவசப்படுத்தி சிங்கியாங் என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார்கள். அதாவது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக சீனர்கள் இப்பகுதியின் மீது உரிமையிருக்கிறதென்பதாக இடைவிடாமல் வாதாடி வந்திருக்கின்றனர்.

### இங்கிலாந்தும் சீனுவும்

சீனர்கள் தங்கள் கற்பனையின் அடிப்படையிலேயே அதிகாரவுரிமை கொண்டாடுவார்கள். உதாரணமாக, 15-வது நூற்றாண்டு ஆரம்ப காலத்தில் மிங் கடற்படை இந்து மஹாசமுத்திரத்திலுள்ள சில பகுதிகளுக்கு விஜயம் செய்தது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, அப்பகுதியின் மீதும் உரிமை கொண்டாட இருந்தது.

சீனுவுக்கு பரிசுகளாகக் கிடைத்த பொருள்களையெல்லாம் கப்பமாகவே அது கருதி வந்தது. பரிசுகளை அனுப்பும், மன்னர் சீனுவின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு விட்டதாக சீன தஸ்தாவேஜுகளில் பதிவு செய்துகொள்வார்கள்.

இங்கிலாந்தின் மூன்றாவது ஜார்ஜ் மன்னரின் தூதவர் கோஷ்டி மக்கார்த்தினி, தலைமையில் சீனுவுக்கு வந்தபோது "இங்கிலாந்திலிருந்து கப்பம் கொண்டுவரும் கோஷ்டி" என்று எழுதப்பட்ட கொடிகளை ஏந்திவர வேண்டியதாயிற்று. அதாவது 18-வது நூற்றாண்டில் இங்கிலாந்து, சீன சாம்ராஜ்யத்தின் அடிமை நாடுதானும்.

சீனர்களின் இந்த மனப்பான்மை ஒரே ஒரு மாறுதலுடன் இன்றும் அழியாமல் இருந்து வருவது குறிப்பிடத் தகுந்ததாகும். அப்போது சீன சக்கரவர்த்திகளின்கீழ் இருப்பதாகப் பிறநாடுகள் பெயரளவில் ஒப்புக்கொண்டால் போதும். அவை சீனுவுக்குக் கப்பம் கட்டியும் அவர்களுடைய அதிகாரத்தை மதித்துவரும் வரையில் சீனச் சக்கிரவர்த்திகள் அந்த அடிமை நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதற்குப் பதிலாக தங்கள் அடிமை மன்னர்களுக்கு கௌரவப் பட்டங்களைத் தந்தும், வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமிருந்து ஆபத்து வந்தபோது உதவி செய்தும் வந்தனர்.

புதிய சீனுவின் கொள்கை மாறுபட்டதாகும். அவர்கள் அதிகாரத்தையோ உரிமையையோ சந்தேகமாக வைத்துக்கொள்வது இல்லை. ஸ்தல மக்களை விரட்டிவிட்டு அங்கு சீனர்களைக் குடியேற்றுவதுதான் சீனர்களின் விஸ்தரிப்புக் கொள்கை.

சீனர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட தேசிய இனங்களைக்கொண்ட மஞ்சூரியா, உள் மங்கோலியா, சிங்கியாங் திபேத் ஆகிய நாடுகளில் அவர்கள் கையாண்ட கொள்கை இதற்குச் சான்றாகும்.

மஞ்சூரியா சீனுவின் பகுதியேயல்ல. ஏனென்றால், மஞ்சூக்கள்தான் சீனுவைப் பிடித்து அடக்கி ஆண்டார்களே தவிர சீனர்கள் அல்ல. மஞ்சூரியா என்னும் பெயர் தனியாக இருக்கக்கூடாதென்பதற்காக அப்பெயருக்குத் தடையும் விதிக்கப்பட்டது. இன்று அப்பெயர் மட்டுமல்ல, மஞ்சூ மக்களும் கூடத் தங்கள் சொந்த நாட்டில் சிறுபான்மையினர் ஆகிவிட்டனர். மஞ்சூரியாவின் மக்கள் எண்ணிக்கை 5 கோடி என்பதாகக் கூறப்படுகிறது. அதில் மஞ்சூரியர்களின் எண்ணிக்கை 30 லட்சம்தான்.

மங்கோலியா விஷயத்திலும் அப்படிதான். செங்கிஸ்கானின், தாய்நாடான மங்கோலியாவில், மங்கோலியர்களின் எண்ணிக்கை சீனர்களை விட மிகவும் குறைவு. வெளி மங்கோலியாவை, சுய அதிகாரமுள்ள தனி நாடாகப் பிரித்திராவிட்டால், மங்கோலிய இனமே அழிந்திருக்கக்கூடும்.

### சிங்கியாங்கில் குடியேறிய ஹன் இன மக்கள்

சிங்கியாங் அல்லது சீன துர்க்கிஸ்தானின் நிலைமை இன்னும் பரிதாபகரமானது. ஹன் இனத்தவரின் காலத்திலிருந்தே இந்த இடம் தங்களுக்குச் சொந்தமானதென்று கூறியபோதிலும், மஞ்சூக்களின் காலத்தில் தான் இந்நாடு பிடித்து அடக்கப்பட்டது. ஆனால் அங்குள்ள முகம்மதியர்கள், கோமிங்டாங் ஆட்சியின் கடைசி காலம் வரையில் தங்களுடைய தனித்துவத்தை இழக்காமலிருந்தனர். அவர்கள் சுயாட்சியை அனுபவித்ததோடு முகம்மதிய மதத்தையும், பிராந்திய கலாசாரத்தையும் பாதுகாக்க முடிந்தது.

ஆனால் இன்றைய நிலை என்ன? சிங்கியாங் முன்னேற்றமடைந்து விட்டதாக கூறுகிறார்கள். அதாவது அங்குள்ள பூர்வீக மக்கள் பெருவாரியான ஹன் மக்களின் கூட்டத்தில் மறைந்து விட்டனர்.

சீனர்களின் புதிய பிரதேச விஸ்தரிப்புக் கொள்கை திபேத்தில் பூரணமாகக் கையாளப்பட்டது. 1239-ல் ஸாக்கியா ஆபட் என்பவர் மங்கோலிய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டது முதல், சீனர்கள் குப்லாய் கான் மூலமாய் அதை அனுபவித்து வந்தனர். ஆனால் அப்பிரதேசங்களின் மீது உரிமையிருந்ததாக ஒரு போதும்

[12-ம் பக்கம் பார்க்கவும்

## வதந்தியை நொறுக்கு





# "புதியதோர் உலகு செய்வோம்"

"வலிமையும், ஆக்கத் திறனுமே வாலிபத்தின் தன்மைகள். வாலிபம் கழிந்தால் வலிமை குறையும். வட்டார அபிவிருத்தி அலுவலர் பயிற்சி நிலையங்களும், ஆக்கத்திறனும் குறையும். வாலிபத்தின் இந்த வலிவும் ஆக்கத்திறனும் பயனுள்ள நற்பணிகளுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம்? வேகமாகப் பெருக்கெடுத்தோடும் ஆற்றுவெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, ஒருமுகப்படுத்தினால் தான் நாம் அவை நீர்ப்பாசனத்திற்கும், மின்சக்திக்கும் பயனுள்ளதாக்க முடிகிறது. அதேபோன்று கட்டுக்கடங்காத வாலிப உணர்ச்சியின் வலிமையையும் ஒருமுகப்படுத்தினால்தான் அதை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும். நாட்டிலுள்ள சமுதாய அமைப்புக்கள்தான், இந்த வாலிப சக்தியை, ஆக்கவேலைக்குத் திருப்பிவிடும் நிறுவனங்களாக இருந்து அவற்றை வழிப்படுத்தவேண்டும். இதை, ஒரு நிறுவனத்தில் அளிக்கப்படும் பயிற்சியைக் கொண்டோ, முகாம்கள் அமைத்து அளிக்கும் பயிற்சியைக்கொண்டோ மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. அவற்றைக்கொண்டு பல விஷயங்களை வேண்டுமானால் புரிய வைக்கலாம். ஆனால், சிந்தனையிலும், செயலிலும் புதிய பழக்கவழக்கங்களை, புதிய மனப்பான்மையை, புதிய கண்ணோட்டத்தை வளர்க்கின்ற இந்தப் பணியை நேரடியான சேவையும், நடைமுறையில் பெறும் பயிற்சியுமே சாதிக்கமுடியும். ஒரு பயிற்சி நிலையத்திலிருந்து பயிற்சி பெறுவதால் வாலிபருக்குத் தேவையான இந்த அனுபவங்களும், பக்குவ நிலையும் கிடைத்துவிட முடியாது.

### தனித் திறனை அறியவேண்டும்

வாலிபர் திட்டங்களை அமைத்துச்செயல்படுவோர் முதலில் சில குறிப்பிட்ட விஷயங்களில் ஆர்வம் காட்டும் வாலிபர்களுள்ள சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயல்படவேண்டும். இவர்களாகப் புதிய விஷயங்களில் ஆர்வத்தை உண்டாக்க முயலக்கூடாது. உதாரணமாக, கால்பந்தாட்டம், எறிபந்தாட்டம், சடுகுடு, படிப்பு, எழுத்து, சுற்றுப்பயணம், பொருளாதார வேலைத் திட்டம், துப்புரவு வேலைத்திட்டம் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு விஷயத்தில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கலாம். அந்தந்த விஷயங்களில் அவர்களுக்கு ஓர் அமைப்பு முறையையும், இணைப்பு முறையையும் உண்டாக்கி அவர்களை அதன்படிச் செயல்படுமாறு செய்யவேண்டும். பிறர் தூண்டுதலின்றி அவர்களே பொருளாதார வேலைத் திட்டங்களையும், சமுதாய சேவைத் திட்டங்களையும் ஏற்று, உற்சாகமாகச் செயல்படக்கூடிய நிலையை அடைவார்கள். அதற்காக நாம் செய்யவேண்டியதெல்லாம், அந்தச் சூழ்நிலைக்கேற்பச் செயல்படுத்தத்தக்க வேலைத்திட்டத்தைக் குறித்தும், அதன் தேவையைக் குறித்தும் அவர்களுக்கு அறிவிப்பதுதான். இந்த முறையில் உருவாக்கப்படும் வாலிபரின் கூட்டு முயற்சியும் ஒரு முகப்படுத்தப்படும் ஆக்கத்திறனும், கிராமத்தில் வாலிபத் தலைமை ஏற்படுவதற்கான இயற்கையான சூழ்நிலையை உருவாக்கும். இந்தத் தலைமையைச் செயற்கையாக ஏற்படுத்த முடியாது. இவ்வாறு வாலிபரிடையே முடங்கிக்கிடக்கும் உரியான சக்தியை வெளியிடும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதே நாம் செய்யவேண்டிய பணியாகும்.

முதலாவதாக, நம்நாட்டில் இப்பொழுது இயங்கிவரும் கிராமசேவகர், கிராம சேவிகையர் பயிற்சி நிலையங்களும், சமூகக் கல்வி அமைப்பாளர் பயிற்சி நிலையங்களும் முக்கிய சேவிகையர் பயிற்சி நிலையங்களும், தம்மைச் சுற்றியுள்ள கிராமங்களில், ஒரு நிலையம் ஐந்து கிராமங்கள் என்ற வீதத்தில் எடுத்துக்கொண்டு, மேற்குறித்தவாறு வாலிபர்கள் ஆர்வம் காட்டும் பொழுதுபோக்கு, விளையாட்டுக்களை அமைப்பு முறையில் ஒழுங்குபடுத்தும் திட்டத்தை நிறைவேற்றலாம். இத்தகைய திட்டத்தை சுமார் 1000 கிராமங்களில் நிறைவேற்றியபின், அதாவது சுமார் 6 மாதங்களுக்குப்பின் அதனுடைய பயனைக் கணக்கிட்டுப் பார்க்கலாம். இந்த திட்டத்தை நிறைவேற்றுவதனால், இப்பொழுது இயங்கிவரும் வாலிபர் மன்றங்களைக் கலைத்துவிடவேண்டும் என்பதில்லை. திட்ட அபிவிருத்தியில் முடியுமான எந்த உதவியும், அவற்றுக்கு அளிக்கலாம். ஆனால், முதலில் 200 பயிற்சி நிலையங்களும் அவற்றின் சுற்றுப்புறத்திலுள்ள 1,000 கிராமங்களில் இத்திட்டத்தை எடுத்து நடத்த வேண்டும்.

### கருத்தரங்கு முறை

இரண்டாவதாக, திட்டங்கள் நிறைவேறும் பல்வேறு இடங்களுக்கும் வாலிபர்கள் பயணங்களை ஏற்பாடுசெய்து, நடைமுறையில் வேலைகள் நடப்பதில் தம் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளவேண்டும். இந்த முறையினால் அவர்கள் மிகுந்த பயனடையக்கூடும். இவ்வியக்கத்தை மேலும் பரப்புவதற்குரிய வழி, அவ்வப்போது சம்மேளனங்களைக் கூட்டுவதாகும். இத்தகைய சம்மேளனங்களைக் கூட்டுவதன் மூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதியினர் தம் அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ளவும் அதன் மூலம் திட்டத்தைப் பற்றிய பரந்த அறிவும், உயர்ந்த பயிற்சியும் பெற வழி பிறக்கிறது.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை வலிவும், பொலிவுமுள்ள திட்டமாக நிறைவேற்ற ஆண்களும், பெண்களும் பங்குபெறும் வாலிபர்களுக்கான இத்திட்டங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். இவற்றின் வெற்றி இவை அரசாங்க அமைப்புக்களை, நிர்வாக மந்திரத்துக்குள் கட்டுப்பட்டு நடப்பதில் இல்லை; தாமே முன்வந்து பணியாற்றும் பொது நிறுவனங்கள் இத்திட்டங்களில் ஈடுபட்டுப் பணிபுரிவதிலேயே இவற்றின் வெற்றி அடங்கியுள்ளது. ஆனால் இத்தகைய பொது நிறுவனங்கள் இத்திட்டங்களைச் செயல்படுத்தும்பொழுது, எந்த ஒரு அரசியல், கட்சி சார்புகளும், குறிக்கோள்களும் இன்றி, நடுநிலையில் நின்று சமுதாயப் பணியாற்றும் தன்மையனவாக விளங்கவேண்டும். அதுவே அவை நாட்டுக்கும், சமுதாயத்துக்குச் செய்யும் உயர்ந்த தொண்டாகும்.'

(மத்திய சமுதாய நல பஞ்சாயத்து ஆட்சி கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ். கே. டே. அவர்கள் வாலிபர் வேலைத்திட்ட இயக்குநர் மாநாட்டில் நிகழ்த்திய துவக்க உரையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. குருக்ஷேத்திர வாலிபர் சிறப்பிதழ்).

# இன்பத்தின் எல்லை

*தியாக வாழ்க்கையே கலையின் சிகரம் : அதுவே இன்பத்தின் எல்லை. இது காந்தி வாக்கு. இன்று நாடு உங்களிடம் எதிர்பார்ப்பதும் அதுவே.*

நம்முடைய படை வீரர்கள் இமயத்துப் பனிமலை உச்சியிலே எதிரியை எதிர்த்து வீரத்துடன் போராடி வருகின்றனர். இந்த வேளையில் அவர்களுக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடன், ஆடம்பரத்தை ஒழித்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, பொருளையும், பணத்தையும் மிச்சப்படுத்தி, போரில் வெற்றிபெற உதவுவதே ஆகும்.

காந்திஜி காட்டிய வழியில் நடக்கும் நமக்கு இது ஒரு பிரமாதமான காரியமல்ல.

சுதந்திரப் போராட்ட காலத்திலே ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகள், இரண்டே இரண்டு வேஷ்டி சட்டைகளுடனும், சில சமயங்களில் ஒரே வேளைச் சாப்பாட்டுடனும் வாழ்க்கை நடத்தியிருக்கின்றனர். சுதந்திரப் போரில் வெற்றி பெறுவதற்காக அவர்களும் சரி, இந்நாட்டு மக்களும் சரி எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும் தயாராக இருந்தனர் என்பதை நம் மறந்திருக்க முடியாது.

ஆடம்பரமான விருந்துகளையும், அறுசுவை உண்டியையும் தவிர்க்கவேண்டும்; டாம்பீகமான உடைகளைக் கைவிடவேண்டும்; பகட்டான ஆபரணங்கள் அணிவதை விட்டுவிடவேண்டும்.

சீன இரக்கமற்ற ஒரு எதிரியை எதிர்த்து நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக, நம் வீரர்கள் உயிரைக் கொடுத்துப் போராடிக்கொண்டிருக்கும் இவ் வேளையிலே, இத்தகைய வாழ்க்கைக்கு இடமே கிடையாது.

இதன் மூலம் மிச்சப்படுத்தும் பணத்தையும் பொருளையும் போர் முயற்சிக்குப் பயன்படுத்தவேண்டும். தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடைகள் அனுப்பலாம். போர்முனையில் உள்ள வீரர்களின் உபயோகத்துக்காகப் பொருள்களைக் கொடுக்கலாம். முதலீடு செய்ய விரும்புபவர்கள் பாதுகாப்புப் பத்திரங்கள் வாங்கலாம்.

உங்கள் கடமையை நீங்கள் செய்துவிட்டீர்களா?

---

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியதில்லை. திபேத் மன்னர்கள் அவர்கள் மீது விசுவாச மாகயிருக்கவேண்டுமென்பதைத் தவிர கூடுதலாக சீன மன்னர்கள் பாத்தியதை கொண்டாடவில்லை. திபேத்தியர்கள் தங்களுக்கே உரிய மதத்தையும், கலாசாரத்தையும், அரசியல் ஸ்தாபனத்தையும் வளர்த்து தனி இனமாகவே இருந்துவந்தனர்.

இப்படியெல்லாம் மாற்றி வைத்துவிட்டதுதான், சீன விஸ்தரிப்பு கொள்கையின் முக்கிய அம்சமல்ல. காலப் போக்கில் மாறுதல் ஏற்படுவது சகஜம்தான். ஆனால் மனிதாபிமானமற்றும், கொடுமை நிறைந்ததுமான செயல், திபேத்தில், ஹான் இன மக்களை குடியேறிய காலத்தில் பெருவாரியில் குடியேறச் செய்து, திபேத் நாட்டிலேயே திபேத்தியர்களை சிறுபான்மையினராக்கிவிட்டனர். மஞ்சூரியாவில் மஞ்சூக்களையும், மங்கோலியாவில் மங்கோலியர்களையும், சிங்கியாங்கில் துருக்கி மக்களையும் சிறுபான்மையினராக்கியதும் இப்படித்தான்.

### பிழைக்க வந்த இடத்தைப் பிடித்து அடக்கினர்

இப்பிரச்னையில் இன்னொரு முக்கியமான அம்சத்தை, சீனாவின் அண்டை நாடுகளுக்கு அபாயம் விளைவிக்கும் அம்சத்தைக் குறிப்பிடவேண்டும். வெளிநாடுகளில் குடியேறியிருக்கும் சீனர்களைப் பற்றியதுதான் அது.

ஹான் மக்கள் சென்ற சில நூறு ஆண்டுகளாக, தென் கிழக்காசியாவில் பரவலாகக் குடியேறியிருக்கின்றனர். தாய்லாந்து, பர்மா, மலேயா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும், பிலிப்பைன் நாட்டிலும்கூட சீனர்கள் பொருளாதாரத் துறையில் ஆழமாக வேரூன்றி விட்டனர். மக்கள் குடியேறுவது சாதாரண விஷயம்தான். அமெரிக்காவிலும், அமெரிக்க நாடுகளிலும் பொதுவாகக் குடியேறியவர்களே ஏராளமிருக்கின்றனர். ஆனால் பிற நாடுகளில் குடியேறியுள்ள சீனர்களைப் பொறுத்த வரையில் அபாயகரமாக இருப்பது, சீனர்கள் தங்கள் தாயநாட்டின் மீது மட்டுமே விசுவாசத்தை வைத்துக்கொண்டிருப்பதும், தாய்நாட்டையே வளர்ப்பதுமாகும். அவர்கள் குடியேறியுள்ள நாட்டின் மீது விசுவாசமாகவிருப்பது மிகவும் அபூர்வமானதாகும்.

வெளிநாடுகளில் குடியேறியுள்ள சீனர்கள், அவர்கள் குடியேறி பல தலைமுறைகளானபோதிலும்கூட, சீன நாட்டின் மீது விசுவாசத்தை வளர்த்து போற்றிவருவதற்கு, சீன அரசாங்கம் ஊக்கமளித்து வருகிறது. கோமின்டாங் சர்க்காரின்கீழும், கம்யூனிஸ்ட் சர்க்காரின் கீழும் ஏற்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சீன மந்திராலயம், வெளிநாடுகளிலுள்ள சீனர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துவந்திருக்கிறது.

### தென் கிழக்காசியாவுக்கு அபாய அறிவிப்பு

சீனர்களின் பிரதேச விஸ்தரிப்பு அபாயத்தைப் பற்றி வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. பீகிங்குடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள இந்தோனேஷியா உட்பட தென் கிழக்காசிய நாடுகள் எல்லாம் இவ்விஷயத்தில் துன்பம் அனுபவித்து வருகின்றன. தாய்லாந்தின் முக்கிய பிரச்னையும் இதுதான். மலேயாவில் பிழைப்புத் தேடி குடியேறிய சீனர்கள் அந்நாட்டில் பெருந்தொல்லை விளைவித்து வருகின்றனர். இந்தோனேஷியா கடும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியதாயிற்று. சீனப் பிரதேச விஸ்தரிப்பு கொள்கையின், இந்த அபாயகரமான அம்சத்தை எதிர்த்துப் போராடவேண்டியிராத நாடு எதுவும் தென் கிழக்காசியாவில் இல்லை. உட் பகுதிகளான சிங்கியாங்கையும், திபேத்தையும், வெளிநாடுகளான தாய்லாந்தையும், மலேயாவையும் பாதிக்கிற இப் பிரச்னை உலகம் இதுவரை கண்டிராத பிரதேச விஸ்தரிப்பு முயற்சியாகும்.





# கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம்

## சத்தியவிஜயநகரம்

சத்திய விஜயநகரம் வட ஆர்க்காடு மாவட்டத்தில், ஆரணியிலிருந்து காஞ்சிபுரம் போகும் சாலையில் 3 கல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர். பயிற்சி நிலையம் இவ் வூரின் பழைய ஜாகிர்தார் அரண்மனைக் கட்டிடத்தில் உள்ளது. 30 எக்கர் பரப்புள்ள நிலத்தில் சுமார் 150 வருடங்களுக்கு முன் கட்டிய விஸ்தாரமான கவர்ச்சிகரமான அரண்மனையில் அமைந்துள்ளது. படிக்குமிடம், தங்குமிடம், ஆசிரியர் விடுதிகள், விவசாய பண்ணை எல்லாம் ஒருங்கே அமைந்திருப்பது பயிற்சிக்கு மிக உகந்ததாக இருக்கிறது.

**நிர்வாகம்.**—சென்னை மாகாணத்தில் ஏழு கிராமிய விஸ்தரிப்பு பள்ளிகள் உள்ளன. அவைகளில் இதுவும் ஒன்றே. இதை ஜில்லா விவசாய அதிகாரியாக பணியாற்றிய ஒருவரை முதல்வராக வைத்து நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையங்களை சென்னையில் உள்ள உதவி அபிவிருத்தி கமிஷனர் மேற்பார்வை செய்து வருகிறார்.

இந்த இடத்தை சர்க்கார் விலைக்கு வாங்கி முதன் முதல் பயிற்சியை 1956-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 23-ந் தேதியில் ஆரம்பித்தனர். முதலில் 1½ வருட பயிற்சியாக ஆரம்பித்து, ஜனவரி 1958-ம் வருடத்திலிருந்து 2 வருட பயிற்சிக்காக மாற்றப்பட்டு நடந்து வருகிறது. பயிற்சியாளர் மாதம் ரூ. 40 உபகாரச் சம்பளம் பெறுகின்றனர். இந்த நிலையத்தில் இது வரை 427 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

**பயிற்சிக்கான பாடங்கள்.**—கிராம அபிவிருத்திக்கு வேண்டிய கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. விவசாயம் | 2. கால்நடை |
| 3. கூட்டுறவு | 4. பொது சுகாதாரம் |
| 5. கதர் கிராமக் கைத்தொழில் | 6. பொறியியல் |
| 7. பஞ்சாயத்து | 8. சமூகக் கல்வி |
| 9. திட்டமிடல், விஸ்தரிப்புமுறை. | |

ஒவ்வொன்றிலும் வகுப்பில் பாடம் நடத்துவதோடு நிலையத்தில் செயல் முறையிலும் செய்து காட்டப்படும். பின், குறிப்பிட்ட சில கிராமங்களில் ஆசிரியர்கள் மேற்பார்வையில் பயிற்சியாளர்கள் செயல் முறையில் செய்து பழகுவர். பயிற்சி இறுதியில் 2½ மாதங்களுக்கு ஒவ்வொருவரும் சமுதாய நல வட்டார வளர்ச்சி அலுவலரின் கீழ் தனித் தனி கிராமங்களில் தங்கி கிராம வேலைகள் பலவற்றையும் செய்து பழகுவர். சிற்சில நுணுக்கங்களைப்பற்றி தெளிவாகப்படிக்க வெளி நிறுவனங்களுக்கு கல்விப் பயணமாக அழைத்துச் செல்லப்படுவர்.

பயிற்சி நிலைய வசதியை முன்னிட்டு பயிற்சியாளர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, வேலைகள் செய்யவேண்டியிருக்கும். பிறகு ஒவ்வொருவரும் தாமாகவே காரியங்களை செய்யவேண்டி வரும் தலைகளில் அவரவர் தனிப்பட்ட முறையிலும் அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சிறப்புச் சொற்பொழிவுகள்.**—பயிற்சி காலத்தில் பொது வேலையில் ஈடுபட்டுள்ள பெரியார்களைக்கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்படும். இதைத் தவிர முதலுதவி, சாரணியம் போன்ற விசேஷப் பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றன.

சட்டத் திட்டங்களைப் பின்பற்றி, ஒழுங்கு முறைகளை பயிற்சியாளர்கள் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை நாள் தோறும் ஆசிரியர்கள் கவனித்து மதிப்பிடுவார்கள். இதைப் பொருத்து கடைசித் தேர்வும் அமையும். விஞ்ஞானத்தை பெரிதும் பயன்படுத்தி கிராமங்களை முன்னேற்றுவதற்கான பயிற்சி பெறுறும் ஊழியர்களின் நடைமுறை, மகாத்மா காந்தி கிராம ஊழியர்களுக்கென வகுத்துத் தந்த சர்வோதய அடிப்படையை முழுதும் பின்பற்றி இருக்கும். சர்வோதயக் கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு அவ்வழி நடப்பவர் மட்டுமே இப்பயிற்சியைப் பெற்று சிறந்த ஊழியராக முடியும்.

நிலையத்தின் அன்றாட அலுவல்கள் வரையறுக்கப்பட்ட அட்டவணைப்படி முறையே நடைபெறும்.

பயிற்சியாளர்களுக்கு சலியாத உழைப்பு, ஜாதி மத பேதமற்ற ஒருமைப்பாடு, தன்னம்பிக்கை முதலிய பண்புகளை வளர்த்து பிற்காலத்தில் இந்த அடிப்படையில் சமூகத்தில் வேலைசெய்ய உகந்ததாயிருக்கிறது.

பயிற்சியாளர்கள் பஞ்சாயத்து ஒன்று நிறுவி தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக்கொண்டு வகுப்பிலும் வெளி வேலைகளிலும், உணவு விடுதி நடத்துவதிலும் முழுப் பங்கெடுத்து வருவது தலைமைப்பண்பையும், தன்னம்பிக்கையும் வளர்ப்பதோடு, நிலைய வேலைகளை சரிவர நடத்த ஆசிரியர்களுக்கு உதவுவதாய் இருக்கிறது.

பல்வேறு இலாகா பொறுப்புகளை ஏற்று நடத்துவதற்கான பயிற்சியை அந்தந்த இலாகாவிலிருந்து அலுவலர் ஒருவர் இங்கு ஆசிரியராக அமர்ந்து நடத்தி வைக்கிறார்கள். மாகாண அளவிலுள்ள இலாகா அதிகாரிகள் அந்தந்தத்துறையை மேற்பார்வை செய்து ஆசிரியர்களுக்கு வழிகாட்டி வருகிறார்கள். நேரடிப் பங்குகொண்டு செய்முறைப்பயிற்சியை நன்கு பெற 17½ ஏக்கர் நிலங் கொண்டு விவசாயப் பண்ணை ஒன்றும், சிந்தி பசுக்கள், முர்ரா எருமை கொண்ட பால் பண்ணை ஒன்றும், 80

# வியர்வை பெருக்கு

உயர்ந்த ஜாதி, கோழிப்பண்ணை ஒன்றும் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்றும் இந்த நிலையத்தில் இருக்கின்றன. மேலும் கைக்குத்தலரிசி, சோப்பு செய்தல், எண்ணெய் ஆட்டுதல், கதர் நெசவு ஆகிய கிராமக் கைத்தொழில்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும் கட்டிடங்களில் செயல்பட இருக்கின்றன.

நிலையத்தில் ஒரு சிறந்த புத்தக சாலையும், வாசக சாலையும் இருக்கின்றன. வாசகசாலைக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் தினசரி செய்தித் தாள்களும் அனேக சஞ்சிகைகளும் வரவழைக்கப்படுகின்றன. இந்தக் கவனிப்பு பயிற்சியாளர்களின் கலாசாரக் குழுவின் பொறுப்பு. நாள் முழுதும் அங்கு சென்று படிக்க வசதி உண்டு. நிலைய புத்தகசாலையில் சுமார் 5,000 புத்தகங்கள் இருக்கின்றன. இது ஓர் ஆசிரியரின் பொறுப்பிலிருக்கிறது. பயிற்சியாளர்கள் அனைவரும் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகங்களைத் தனி இடத்தில் வைத்து பயிற்சியாளர்களின் பிரதிநிதி ஒருவரிடம் ஒப்படைக்கப்படும். இதைத் தவிர நிலைய புத்தகாலயத்திலிருந்து புத்தகம் வாங்க விரும்புவோர் செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணி முதல் 5-30 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

பொருட்காட்சியொன்று நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் எல்லாத் துறை விளக்கப்பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன. நிலையத்தில் பூப்பந்தாட்டம், கைப்பந்து, டெனிகாய்ட், கால்பந்து, சடுகுடு, கேரம், சதுரங்கம் விளையாட வசதியுண்டு.

மறு பயிற்சி (Refresher Course)—பயிற்சி பெற்ற கிராமசேவகர்கள் 3 வருடங்களுக்கு மேல் சமுதாய நல வட்டாரங்களில் வேலைபார்த்தபின் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளவும், இடையூறுகளைக் களைந்து விறுவிறுப்புடன் திட்ட வேலைகள் செய்ய வழி முறைகளை வகுக்கவும் 2 மாத காலத்திற்கு முறைக்கு 30 பேர்களுக்கு இப்பயிற்சி ஏற்பாடாகி இருக்கிறது. இந்நிலையத்தில் இவ்வகைப் பயிற்சி 6—4—62 முதல் நடை பெறுகிறது.

குடும்பக்கலை பயிற்சி இந்நிலையத்தில் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் பெண்கள், குழந்தைகள் நலனைக் கவனிக்கும் திட்டங்களை அமுலாக்குவதற்கு ஏற்ற பயிற்சி கொடுக்கப்படுகிறது. உணவு, உடை, தாய்சேய் நலம், குடும்ப நிர்வாகம், சிறு கைத்தொழில்கள் இப்பயிற்சியில் முக்கிய இடம் பெறும். இந்நிலையத்தில் ஜூலை 1959-லிருந்து ஆண்டுதோறும் 40 பெண்களுக்கு, மாதம் ரூ. 45 உபகாரச் சம்பளத்துடன் கிராம சேவிகா பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் இன்றுவரை 204 பேர் பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

**தச்சுக்கொல்லுப்பட்டறைப் பயிற்சி.**

கிராமத்தில் பரம்பரை கொல்லர், தச்சர் குடும்பத்து இளைஞர்களை முற்போக்குக் கருவிகளைத் தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும்படியும், திட்ட வேலைகள் முன்னேறுவதற்கேற்ப தங்கள் பணியையும் இணைத்து நடத்த இப்பயிற்சி அளிக்கப்படும். இந்நிலையத்தில் இவ்வகை பயிற்சி ஆரம்பிக்க அரசினர் உத்தரவிட்டிருக்கிறார்கள். சில மாதங்களில் இப்பயிற்சி ஆரம்பமாகும்.

## தேசியப் பாதுகாப்பு மன்றத்தின் முதற் கூட்டம்

தேசியப் பாதுகாப்புக் மன்றத்தின் முதலாவது கூட்டம் பிரதமர் நேருவின் தலைமையில் நவம்பர் 2?-ந்தேதி புதுடில்லியில் நடைபெற்றது. நாட்டின் தற்போதைய நிலைமை பற்றிய பல்வேறு அம்சங்கள் பற்றியும் பிரதம மந்திரி அக்கூட்டத்தில் விவரமாக எடுத்துரைத்தார். ராஜ்ய முதல் மந்திரிகள் உட்பட ஏராளமான அங்கத்தினர்கள் அப்பொழுது நடைபெற்ற பொது விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். இம்மன்றம் இரண்டு கமிட்டிகளை அமைத்தது. அதில் ஒன்று, ராணுவ விவகாரங்கள் பற்றியது; பாதுகாப்பு மந்திரி அதன் தலைவர். இக்கமிட்டி நாட்டின் நிலைமையை அவ்வப்போது பரிசீலனை செய்து தேசப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் பற்றி சர்க்காருக்கு ஆலோசனை கூறி வரும் உள்துறை மந்திரியைத் தலைவராக கொண்ட இரண்டாவது கமிட்டி. நாட்டின் பாதுகாப்புக்காகப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டி, தகுந்த முறையில் வழிகாட்டி உதவிவரும். இக்கமிட்டியில் ஸ்ரீமதி இந்திரா காந்தி, ஸ்ரீ நருபாய் தேசாய், ஸ்ரீ அசோக் மேத்தா, ஜம்மு-காஷ்மீர் பிரதம மந்திரி, பஞ்சாப் முதல் மந்திரி யூனியன் செய்தி ஒலிபரப்பு மந்திரி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். ராணுவ விவகாரங்கள் பற்றிய கமிட்டியில் முப்படைத் தளபதிகள், ஜெனரல் மஹாராஜ் ராஜேந்திர சிங்ஜி, ஜெனரல் கே. எஸ். திம்மையா, லெப்டினெண்ட் ஜெனரல் எஸ். பி. தோரட், டாக்டர் டி. எஸ். கோத்தாரி, பாதுகாப்பு மந்திராலயக் காரியதரிசி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

ராணுவ விவகாரங்கள் பற்றிய கமிட்டியின் முதலாவது கூட்டம் புது டில்லியில் நவம்பர் 26-ந் தேதி நடைபெற்றது. அதற்கு பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ ஒய். பி. சாவன் தலைமை வகித்தார். பொது மக்களின் ஆதரவைத் திரட்டுவது பற்றிய கமிட்டியும் அன்றைய தினமே கூடியது. அதற்கு உள் துறை மந்திரி ஸ்ரீ லால்பஹதூர் சாஸ்திரி தலைமை வகித்தார். எல்லைப்பிரதேசங்களில் உள்ள எல்லா போலீஸ் நிலையங்களிலும் பொது மக்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருப்பதாக உள்துறை மந்திரி அப்போது தெரிவித்தார். எல்லா ராஜ்யங்களில கிராமப் பாதுகாப்புக் கமிட்டிகளும், சமுதாய நல அபிவிருத்தி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுவருகின்றன. தொகுதி நிலையில் பாதுகாப்புக் கமிட்டிகளும் அமைக்கப்படும்.



# இமயக்கோடு—எங்கள் உரிமைக்கோடு

மக்மகான் கோடு, வரலாற்று ஆதார பூர்வமானது, சட்டபூர்வமானது என்பதற்குச் சந்தேகமே இல்லை என்பதாக இந்தோ—சீன உறவுகள் பற்றி நன்கு அறிந்தவரான டாக்டர் கே. கோபாலாச்சாரி, இக்கட்டுரையில் தெளிவுபடுத்துகிறார். அந்தக் கோடு பூகோள ரீதியானதும், தேசிய இன ரீதியானதும் மட்டுமல்ல; இந்தியாவையும் திபேத்தையும் பிரிக்கும் வரலாற்று பூர்வமானதும், அரசியல் ரீதியானதுமாகும். அது மேலும் ஒப்பந்தத்தின் மூலமாகவும், அக்கோடு வரை இந்திய நிர்வாகம் நிலவியதன் மூலமாகவும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

மக்மகான் கோடு இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் இந்தியாவையும் திபேத்தையும் பிரிக்கிற பரம்பரை எல்லைக் கோடாகும். 1913-14-ல் சிம்லாவில் நடைபெற்ற முத்தரப்பு மகாநாட்டில், பிரிட்டிஷ் சர்க்காரின பிரதிநிதியாகக் கலந்துகொண்ட, சர் ஹென்றி மக்மகான் பெயரால் இக்கோடு வழங்கப்படுகிறது. இந்த மகாநாட்டில்தான் எல்லைக்கோடு அதிகார பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டு முறைப்படியாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்தக் கோடு, பூடான், இந்தியா, திபெத் ஆகியவை சேரும் தெய்காலா என்னும் முச்சந்தியிலிருந்து தொடங்கி மலை உச்சிகள் வழியாகவும், திட்டுகள் வழியாகவும் ஓடி, இந்தியா, பர்மா, திபெத் எல்லைகள், சந்திக்கும் 15,283 சதுரம் வரையில் 650 மைல் நீண்டு கிடக்கிறது. இந்த எல்லைக்கோடு இமயமலைத் தொடரின உச்சிகள் வழியாகச் செல்லும் எல்லைக் கோடு. இது இங்கு லோகித், டிஹாங், சுபான்ஸிரி, நியாம் ஜங் ஆகிய நதிகளை குறுக்கிடும் இடங்களைத் தவிர, மீதி இடங்களில் பிரம்மபுத்திராவின் வடகோடி நீரோட்டப் பகுதி வழியாகச் செல்கிறது. இந்த நீரோட்டப் பகுதித் தொடர் மத்திய, மேற்குப் பிரிவுகளிலுள்ள இந்திய சீன எல்லையான நீரோட்ட மலைப்பகுதிகளைவிட மிகவும் உயரமானவை; கம்பீரமானவை.

மக்மகான் கோடு பர்மா வரையிலும் நீண்டு செல்கிறது. வடகிழக்கு எல்லை சம்பந்தமாக 1914-ல் சிம்லா மகாநாட்டில் இந்தோ-திபெத் ஒப்பந்தம் கையெழுத்தான போது, பர்மா, இந்தியாவின் பகுதியாக இருந்தது; அதன் வடக்குப் பகுதியில் திபெத்துடனான எல்லை நிர்ணயிக்கப்படாமலிருந்தது. மக்மகான் கோட்டைத் தருபவை பர்மா-இந்திய-திபெத்-முச்சந்தியிலிருந்து—குதிரை லாடத்தைப்போல வளைந்து—ஐராவதி நதியின் வடக்குத் திட்டுப் பகுதிகள் வழியாக, இஸுராஸி கணவாய் வரை நீட்டப்பட்டு நிர்ணயிக்கப்பட்டது. அங்கு அந்தக் கோடு பர்மாவுக்கும் சீனாவுக்குமிடையே வட கோடியில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த எல்லைக் கோட்டைத் தொட்டது.

மக்மகான் கோட்டின் பர்மா பகுதியைச் சீனர்கள் எவ்வித மாறுதலுமின்றி ஏற்றுக்கொண்டிருப்பதோடு, அதைத் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் பாரம்பரியக் கோடாகவும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அக்கோட்டின் இந்திய சீனப் பகுதியை மட்டும் சட்ட விரோதமான, ஏகாதிபத்திய எல்லைக் கோடு என்பதாகக் கூறுவதோடு, அந்தக் கோட்டுக்குத் தெற்கே 33,000 சதுர மைல் பரப்பளவு தங்களுக்கே சொந்தமென்றும் சாதிக்கின்றனர். மேலும் இந்தியா இந்தக் கோட்டை திபெத்தின பகுதிகளுக்கு உள்ளே தள்ளி வைத்திருப்பதாகவும் கூறுகின்றனர்.

மக்மகான் எல்லைக் கோடு வரலாற்று ஆதாரம் நிறைந்தது மட்டுமல்ல, சட்டபூர்வமானதுமாகும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. அது பூகோள அம்சங்களையும் தேசிய இன ரீதியான அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு இந்தியாவையும், திபெத்தையும் பிரிக்கிற சரித்திர பூர்வமான அரசியல் ரீதியான கோடுமாகும். இந்த கோட்டிற்குத் தெற்கே யுள்ள, தற்போது வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்சி என்று வழங்கும் பகுதி, மலைப்பகுதி; கோட்டிற்கு வடக்கே திபெத்தின் பீடபூமிப் பகுதி இருக்கிறது. இந்தக் கோட்டிற்குத் தென் பகுதியில் மோன்பா, அகா, டாப்ளா, மிரி, அபோர், மிஷ்மி ஆகிய மலை ஜாதியினர் வசிக்கிறனர்; அவர்கள் திபெத் மக்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள்.

வடகிழக்கிலுள்ள பாரம்பரிய இந்தியா-திபெத் எல்லை, 1914 மார்ச்சு 24, 25 தேதிகளில் நடைபெற்ற சிம்லா மகாநாட்டின் இந்தோ-திபெத் ஒப்பந்தத்தின் மூலமாகவும், 1914 ஜூலையில் நடைபெற்ற இந்தியா-திபெத் மகாநாட்டின் மூலமாகவும் வரையறுக்கப்பட்டது. அந்தக் கோடு 1 அங்குலம் = 8 மைல் என்னும் விகிதத்தில் இரண்டு காகிதங்களில வரையப்பட்டது; அந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட படத்திலும், திபெத் பிரதிநிதி பிரிட்டிஷ் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்திலும், அந்தக் கோட்டை திபெத் சர்க்கார் அங்கீகரித்திருப்பதாக, திபெத் பிரதிநிதி கையெழுத்திட்டு ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மக்மகான் கோடு, பிரிட்டிஷ் பிரதிநிதியும் திபெத் பிரதிநிதியும், சீனப் பிரதிநிதிக்குத் தெரியாமல் ரகசியமாக வரைந்ததல்ல. 1914 பிப்ரவரி 17-ந் தேதி நடைபெற்ற மகாநாட்டில் அந்தப் படத்தை பிரிட்டிஷ் பிரதிநிதி சமர்ப்பித்திருக்கிறார். அது "சரித்திர பூர்வமான திபெத் எல்லையாகும்" என்றும் கூறியிருக்கிறார். அந்தக் கோடு, மகாநாட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டிருந்த படத்தில் சிவப்பு மையால் அடையாளமிட்டுக் காட்டப்பட்டிருந்தது; அதில் சீனப் பிரதிநிதிகளும், திபெத் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும் ஒப்பமிட்டிருந்தனர்; இந்தியா-திபெத் பிரதிநிதிகள் 1914 ஜூலை 3-ந் தேதி அதில கையெழுத்திட்டனர்,

1914 மார்ச்சு மாத இந்தோ—திபெத் ஒப்பந்தத்தைச் சீனா ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. அதற்கு முன்னால் திபெத் செய்துகொண்ட பல ஒப்பந்தங்கள சட்ட பூர்வமானவை என்று கருதப்பட்டதோடன்றி பல காலமாக அமுலாகியும் இருந்தன. லடாக்குடனும் காஷ்மீருடனும் 1842-ல் திபெத் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில், மேற்குப் பகுதியிலான திபெத்திய பாரம்பரிய எல்லைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன; அதில் வர்த்தக உறவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததோடு நமது காலம் வரையில் அது அமுலாகியும் இருந்திருக்கிறது. அதேபோலே 1856-ல் கையெழுத்தான நேப்பாள-திபெத் ஒப்பந்தமும் 1956-ல் சீனா-நேப்பாள ஒப்பந்தம் மூலமாக

**அயர்வை ஒடுக்கு**

ந்தம் செய்யப்பட்டது வரையில் அமுலில் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, மக்மகான் கோடு செல்லத் தக்கது, சட்ட பூர்வமானது என்பது தெளிவாகும்.

இந்தியாவுக்கும்-திபெத்துக்குமிடையே பாரம்பரியமாக இருந்த எல்லைக்கோடு இவ்விதமாக மக்மகான் என்னும் பெயரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது நிலையானதும்; வலியமான இயற்கை அமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட, பழக்கத்திலுள்ள பாரம்பரிய எல்லைக் கோடு, சர்வதேச சட்டத்தின்படியும், நடைமுறைப்படியும், நிர்ணயமான எல்லைக் கோடாகும். அதை, மேலும், அல்லது முறையாக நிர்ணயிக்கவேண்டிய அவசியமில்லை.

## வரலாற்றுச் சான்றுகள்

பாரம்பரிய எல்லைக் கோடு இமயமலை வழியாகத்தான் செல்கிறது என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. காமரூபனின் ஹூண்த் ராஜ்யத்தைப் பற்றி விவரிக்கிற விஷ்ணு புராண இமயமலையை அதன் வடக்கு எல்லையாகக் கூறுகிறது. எட்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த, யோகினி புராணம். காமரூபனின் ராஜ்யம், கஞ்சா மலைகள் அதாவது இமயமலை வரை பரவியிருந்ததாகக் கூறுகிறது. பதினாறாவது நூற்றாண்டிலும்கூட, இமய மலைக்குத் தெற்கிலுள்ள மலைஜாதியினர் வாழும் பகுதி அஹோம் மன்னர்களின் ராஜீய அதிகாரத்தின் கீழ்தான் இருந்தது. 17-வது நூற்றாண்டைச் சேர்ந்த "அஸ்ஸாம் பள்ளத்தாக்குகள் அரசியல் பூகோளம்" என்னும் புத்தகத்தில் அகா, டப்ளா புத்தியா ஆகிய இன மக்கள் அஹோம் மன்னர்களின் பிரஜைகள் என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1716–1729-ல் திபெத்துக்கு வந்த இத்தாலிய யாத்திரிகர், திபெத்தியர்களுக்கும் அந்த பழங்குடி மக்களுக்குமிடையே எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதாகக் கூறியிருக்கிறார். 1730-ல் திபெத்துக்கு விஜயம் செய்த ஹொரேஸ் டெலா பென்னு என்பவர், திபெத்துக்குத் தெற்குப் பகுதியில் லோபா மலைஜாதியினர் பகுதி இருந்ததாகக் கூறியிருக்கிறார். மிக்கெல் என்பவர் 1883-ல் இந்தியாவின் வடகிழக்கு எல்லையைப் பற்றிக் குறிப்பிடுகையில், அபோர் பகுதியின் வடக்கு எல்லை நாயன்பாலா, அதாவது இமயமலை என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

## சீனப் புத்தகங்களும் ஆதரிக்கின்றன

இவற்றுக்குச் சீனப் புத்தகங்களும் ஆதாரமாக இருக்கின்றன. வெட்ஸாங் து சின் என்பவர் லோபா (மலைஜாதியினர் பகுதி) திபெத் நாட்டுக்குத் தெற்கே இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஹிட்ஸாங் து ஷோ (1886) என்னும் சீனப் புத்தகத்தில் லோபா பிரிட்டிஷாருக்கு சொந்தமானது என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதிகார பூர்வமல்லாத சீன தேசப் படங்களிலும் பிற நாடுகள் வெளியிட்டுள்ள படங்களிலும் பாரம்பரிய இந்திய எல்லை அவ்வாறே வரையப்பட்டிருக்கிறது. காங் ஹி சக்ரவர்த்தியின் (1711—1717) உத்தரவின் பேரில் சில கிருஸ்தவ சங்கங்களும், லாமாக்களும் வெளியிட்ட படத்திலும், திபெத்தின் தெற்கு எல்லை இமயமலை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. 1925 நவம்பர் மாதம், பீக்கிங் பல்கலைக் கழகம், சிங் வம்சத்தினரின் கீழிருந்த, சீனப் பரப்பை விளக்கி வெளியிட்ட படத்தில், இந்திய எல்லை, தற்போதைய இடத்தில் இருந்ததாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மக்மகான் கோடு வரையுள்ள மலை ஜாதியினர் பகுதி முழுவதும் அஹோம் மன்னர்கள் அல்லது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் இருந்துவந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், ஆதியிலிருந்தே இப் பகுதி, அண்டை ஜில்லாக்களின் ராஜ்ய அதிகாரி அல்லது துணைக் கமிஷனரின் கீழ்தான் இருந்து வந்திருக்கிறது. 1912-ல் இப்பகுதி மூன்று எல்லைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் ராஜ்ய அதிகாரி நியமிக்கப்பட்டார், 1919-ல் அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, 1935-ம் ஆண்டு அரசியல் சட்டத்தின் கீழ் விசேஷப் பகுதிகளாக அமைக்கப்பட்டது. ராஜ்ய அதிகாரிகள் இங்கு சுற்றுப்பிரயாணம் செய்து, வருடாந்திர அறிக்கைகளையும் மக்கள் எண்ணிக்கை கணக்குகளையும் சமர்ப்பித்திருக்கின்றனர்; அவர்கள் அங்கு அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வந்திருக்கின்றனர். சிவில்–கிரிமினல் அதிகாரங்களை அமுல் செய்திருக்கின்றனர். ரோடுகள் அமைத்துத் தந்திருக்கின்றனர். சர்வே நடத்தியிருக்கின்றனர். மலை ஜாதியினருக்கிடையே ஏற்பட்ட தகராறுகளைத் தீர்த்து வைத்திருக்கின்றனர்.

## சீனக் கூற்று ஆதாரமற்றது

மக்மகான் கோட்டை, நாம், அதன் இரண்டு கோடிகளிலும் வடக்கே தள்ளி வைத்துவிட்டோம் என்று சீனர்கள் கூறுவதற்கு ஆதாரமே இல்லை ஒப்பந்தத்தின் படியான இக்கோடு இவ்விரு இடங்களிலும், மிகவும் உயரமான நீரோட்டப் பகுதிகள் வழியாகச் செல்கின்றன. மக்மகான் தனது குறிப்பில் இவ்வாறு கூறியிருக்கிறார்: "திபெத் சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, படத்தில் சிவப்பு மை அடையாளமிட்டுக் காட்டப்பட்டிருக்கிற எல்லைக்கோடு. அது தவாங், லோஹித், டலங்போ சுபான்ஸிரி, நியாம் ஜங் நதிப் பள்ளத்தாக்குகளிலும், டவாங்குக்கு அருகில் சிறிது தூரமும் தவிர மீதி இடங்களில், ஐராவதி, பிரம்மபுத்திரா நதிகளின் வட கோடி நீரோட்டப் பகுதிகள் வழியாகச் செல்கிறது. மேற்குப் பகுதியிலுள்ள எல்லைக்கோடு மலை உச்சிகளின் வழியாக 21,431 சிகரத்திலிருந்து துங்கா வழியாக பூடான் எல்லை வரைச் செல்கிறது. இப் பகுதியில் மிகவும் உயரமான மலைப் பகுதி இதுவே. இதற்கு வடக்கே திபெத்திய இன மக்கள் வாழ்கின்றனர். தெற்கே பூடான் இன மக்கள் இருக்கின்றனர்; இதுதான் எல்லை என்பதற்குச் சந்தேகமே இல்லை."

மக்மகான் கோடு, இந்தியாவுக்கும் திபெத்துக்குமிடையேயுள்ள பாரம்பரிய எல்லைக் கோடு என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும், அது ஒப்பந்தங்கள் மூலமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது; அந்தக் கோடு வரையிலுள்ள பகுதி இந்திய நிர்வாகத்தின் கீழ் இருந்து, எல்லை நிலைபெற்றிருக்கிறது.

டாக்டர் கே. கோபாலாச்சாரி.

**வல்லமை உண்டு எல்லையைக் காத்திட**





# புதிய பஞ்சாயத்து ஆட்சி-கடமைகளும் பொறுப்புக்களும்

(திரு க. வெங்கடேசன், எம். ஏ., எம். [illegible], விரிவுரையாளர், கிராமியக் கல்லூரி, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்)

**பஞ்சாயத்துக்களின் பொறுப்புக்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. நாட்டு ஆட்சிமுறை வரலாற்றில் இது ஒரு திருப்புமையமான காலம். பஞ்சாயத்து நிறுவனங்கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, சேவை மனப்பான்மையுடன் செயலாற்றவேண்டும். பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் பொறுப்புக்கள் என்ன, அவை ஆற்றவேண்டிய வேலைகள் என்ன என்பது பற்றியெல்லாம் இக்கட்டுரை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மட்டுமன்றி, அனைவரும் அவற்றைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.**

கிராம நலமே நாட்டு நலம். கிராமங்களின் பலமே இந்தியாவின் பலம். கிராம நலத்தைப் பெருக்குவதற்காக இந்திய அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்டதே சமுதாய நல அபிவிருத்தித் திட்டம். இத் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கான சக்தி வாய்ந்த சாதனமே புதிய பஞ்சாயத்து அமைப்பு முறை.

**மாபெரும் சமுதாயப் பரிசோதனை :** 1952-ம் ஆண்டு காந்திஜி பிறந்த நாளன்று கொண்டுவரப்பட்ட சமுதாய நலத் திட்டம் இந்திய கிராமங்களின் நிலையையே மாற்ற வல்ல உள்ளாற்றலுடைய ஒரு சமுதாய அமைதிப் புரட்சியைத் துவக்கி வைத்தது எனலாம். வேறு விதமாகக் கூறினால், இந்தியாவில் உள்ள 5,58,000 கிராமங்களில் வாழும் 35,85,84,529 மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், சமூக முன்னேற்றத்துக்காகவும் நிகழ்த்தப்படும் மாபெரும் சமுதாயப் பரிசோதனையே இச் சமுதாய நல அபிவிருத்தித் திட்டம்.

**பரிசோதனையின் நோக்கம்—செயல்முறை.—பயன் :** இது நாள் வரை இந்திய நாடு கண்டறியாத இப்பரிசோதனையின் நோக்கமென்ன? சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் பொதுவான நோக்கம் கிராம மக்களின் பொருளாதார சமுதாய வாழ்க்கை நிலையை உயர்த்துவதாகும். இந்திய கிராமங்களில் விழிப்புணர்வும் நல்லார்வமும் ஏற்படச் செய்து, சமுதாய முன்னேற்றத்துக்கு வழிகாட்டி, கிராம மக்களிடம் சிறந்த பயனுள்ள நலம் பெருகும் முழு வாழ்வு வாழ்வதற்குரிய ஆர்வத்தை எழுப்பி, அவ்வார்வத்தை வெளிப்படுத்திப் பயன்படுத்தத் தெரிந்த அறிவையும் திறமையும் உண்டாக்குவதே இத்திட்டத்தின் உள் எண்ணம். தன்னுதவியும், சமுதாய கூட்டு முயற்சியுமே இத் திட்டத்தின் மூலாதாரக் கொள்கைகள். சுருங்கக் கூறின் 'முயற்சி திருவினையாக்கும்' என்ற தத்துவத்தின் மீது பின்னப்பட்டதே இத் திட்டம்.

சமுதாய நலத் திட்டத்தை செயல்படுத்தும் சோதனைக் களங்களாக நாடு முழுவதும் நிறுவப்பட்டவையே வளர்ச்சி வட்டாரங்கள். கிராமங்களின் முழுமையான முன்னேற்றத்துக்கும், விரைவான விவசாயத்தொழில் வளர்ச்சி மூலம் பலமான பொருளாதார அடிப்படையை அமைப்பதற்குமான நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுவதே வட்டார வளர்ச்சி வேலைகள் அனைத்தும். கிராம ஆள்பலத்தையும், இதர ஆதார வசதிகளையும் பொது நன்மைக்காகப் பூரணமாகப் பயன்படுத்துவதைத் தன் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதிச் செயல்படும் இவ் வளர்ச்சி வட்டாரங்கள் கிராமங்களின் அடிப்படை நிறுவனங்களாகிய பஞ்சாயத்துக்களோடும் கூட்டுறவு சங்கங்களோடும், பள்ளிகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு கிராம மக்களின் நல உயர்வுக்குப் பாடுபடும்.

சமுதாய நலத் திட்டத்தின் இறுதிப் பயன் அரசாங்கம் எவ்வளவு கோடி ரூபாய் இத்திட்டத்துக்காகச் செலவிட்டது என்பதைப் பொறுத்ததல்ல. அதன் வெற்றி இத்திட்டத்தின் மீது கிராமங்களில் வாழும் சாதாரண மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை, இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அவர்கள் காட்டும் ஆர்வம், ஈடுபாடு, சமுதாய ஒருமைப்புணர்வு ஆகியவற்றைப் பொறுத்தது. சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் கிராம மக்களது நல்வாழ்வுக்குரிய நடவடிக்கைகளில், கிராம மக்களை ஈடுபடுத்தக்கூடிய முனைப்புணர்ச்சியை உண்டாக்கி, தனி மனிதனது தன்னம்பிக்கையையும், தற்சார்புத் தன்மையையும் வளர்த்து, கிராம சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்து செய்து கொள்வதற்குரிய அறிவையும் ஆற்றலையும் பெருக்கின் கிராமங்களில் பொருளாதார முன்னேற்றம், சமூக வளர்ச்சி, கல்விப் பெருக்கம், சுகாதார வசதி, பண்பாட்டு உயர்வு ஆகியவை இம்மாபெரும் சமுதாயப் பரிசோதனையின் பயன்களாக இருக்கும்.

**சமுதாய நலத்திட்டத்தின் அரசியல் விளைவே புதிய பஞ்சாயத்து ஆட்சி**—சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் விளைவாகக் கிராமங்களில் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வமும் கிராம மக்களிடையே அரசியல் உணர்வும் தோன்றலாயின. நாகரிக வாழ்வுக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் புதிய திட்டம் கிராமத்தாரின் நம்பிக்கையை வளர்த்தது. ஆனால் இத் திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமான கிராம மக்களின் சம்பாதிக்கும் திறனையும், பொருள் உற்பத்தியைப் பெருக்கும் சக்தியையும் ஏற்படுத்துவதில் மக்களின் ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்த அளவு பெற முடியவில்லை. இக்குறையை நீக்குவதற்காக பல்வந்தராய் மேத்தா குழு கூறிய வழியே புதிய பஞ்சாயத்து ஆட்சிமுறை. மக்களாட்சி நிறுவனங்களுக்கு உண்மையான அதிகாரத்தை வழங்கி அவைகளைச் சுதந்திரமாக இயங்க விட்டால்தான் சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் வெற்றி பெறும் என்ற உண்மையை அறிந்த மேத்தா குழு இச்சிபார்சைச் செய்தது. சமுதாய நலத் திட்டத்தின் செயல்அனுபவத்தின் அரசியல் விளைவே புதிய பஞ்சாயத்து ஆட்சிமுறை.

இப் புதிய பஞ்சாயத்து ஆட்சியின்கீழ் கிராமப் பஞ்சாயத்துக்கள் மிக முக்கிய நிலையை அடைந்துள்ளன. பஞ்சாயத்து நாட்டின் அடிப்படை மக்களாட்சி நிறுவனமாக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பஞ்சாயத்துக்களுக்கு இதுவரையில்லாத அளவுக்கு அதிகாரங்களும், பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. நம் மாநிலத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் அனைத்தும் சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழக்கமான வேலைகள் போக, கிராமங்களின் பூரண வளர்ச்சிக்கு வேண்டிய பொருளாதார சமுதாய வளர்ச்சி பணிகளைப் பலவற்றையும் அதிக அளவில் மேற்கொள்ள வேண்டும். கிராம மக்களின் மலர்ச்சிக்குரிய நேரடிப் பொறுப்பு கிராமப் பஞ்சாயத்தைச் சார்ந்திருப்பதால் அது எவ்வெவ்வகையில் கிராம நல வளர்ச்சி வேலைகளில் ஈடுபடலாம் என்பது ஆராயத்தக்கது.

சூழ்நிலைச் சுகாதாரத்தின் பிற அம்சங்கள். கிராம பள்ளி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளியைச் சுற்றியுள்ள இடத்தில் காய்கறித் தோட்டம் அமைக்கச் செய்து மதிய உணவுத் திட்டத்துக்குத் தேவையானவைகளை விளைவிக்கச் செய்தல் வேண்டும். பள்ளிப் பிள்ளைகளுக்கும், கிராம மக்களுக்கும் தூய குடிநீரை நன்கு பாதுகாக்கப்பட்ட கிணற்றிலிருந்தோ அல்லது மேல் மட்டத் தொட்டியில் நீரைத் தேக்கிக் குழாய்களின் வழியாகவோ விநியோகம் செய்ய வேண்டும். கிராம மக்கள் காலரா, மலேரியா, யானைக் கால் சுரம், எலும்புருக்கி நோய், தொழுநோய் பெரியம்மை, அம்மை நோய் போன்ற தொற்று நோய்களால் பீடிக்கப்படாவண்ணம் தடுப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். தாய்—சேய் நலத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு பஞ்சாயத்தும் அண்மையில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதோடு ஒவ்வொரு கிராமத்திலும் பயிற்சி பெறாது தொழில் செய்துவரும் ஒரு ஆயாவுக்காவது பயிற்சி தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சுகாதார நாள் கொண்டாடுவதன் மூலம் கிராமமக்களுக்குச் சுகாதாரக் கல்வியையும், சுகாதார உணர்வையும் ஏற்படுத்தல் அவசியம். விரிவுபடுத்தப்பட்டுள்ள சத்துள்ள உணவுத் திட்டம் (Expanded Nutrition Programme) மாநிலத்தில் செயல்படத் தொடங்கியுள்ளது. கிராம மக்கள் சத்துள்ள உணவைப் பெறும்படியான வகையில் பணியாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்துறையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் கடமையுணர்ச்சியுடன் பணியாற்றி, இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்தித் தருதல் மிகவும் அவசியமாகும்.

அளவுள்ள குடும்பம் :—விவசாய உற்பத்தி எவ்வளவு அவசியமோ, அவ்வளவு முக்கியமானது குடும்பக் கட்டுப்பாடு திட்டம். அளவுள்ள குடும்பமே ஆனந்த உறைவிடம் என்பதை கிராம மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் இத்துறையில் விசேஷ அக்கறை எடுத்துக் கொண்டு பாடுபட வேண்டியது மிகவும் அவசியம். ஆண் மலடு அறுவைச் சிகிச்சை திட்டம் (Pilot Sterliza ion Scheme) பற்றி கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லி முன்மாதிரி படமாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் ஒருவராவது இருக்கின்றார் என்ற ஒரு நிலையை அடையக் கூடிய உள்ளூர் சக்தியை வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்து ஸ்தாபனங்களுடையதாகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நன்கு விளம்பரம் செய்வதன் மூலம் அச்சட்டத்தின் பயனை கிராமத்தார் பெறுவதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி, அரசாங்கம் அளிக்கும் சலுகைகளை முழுதும் பெற்று இத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்துவதில் பஞ்சாயத்து தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

பிற வளர்ச்சி வேலைகள் : தீர்க்கமான விவசாய முறையில் பிரிக்க முடியாத ஒரு பகுதி கால்நடை வளர்ப்பாகும். மேலும், விவசாய வளர்ச்சி அதன் கால்நடைச் செல்வத்தையும் சார்ந்துள்ளதால் கிராமப் பஞ்சாயத்து கால்நடை வளர்ப்பில் தேவையான கவனம் செலுத்தவேண்டும். கால்நடைகளின் தரத்தை உயர்த்துவது. சத்துள்ள தீவனம் கிடைக்க ஏற்பாடு செய்வது, கால்நடை நோய் தடுப்பு ஆகிய வேலைகளைப் பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் எல்லைக்குள் இருக்கும் திறனற்ற சாரமற்ற கால்நடைகளின் கணக்கெடுத்து, வளங்குன்றிய காளைகளைக் காயடிக்கச் செய்வதும் பொலிக் காளைகளைக்கொண்டு இயற்கைமுறை கருத்தரிப்பு வசதி செய்வதும், அண்மையில் உள்ள செயற்கை முறை கருத்தரிப்பு நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தூண்டுவதும்; கால்நடைகள் தொத்து நோயால் பீடிக்கப்படுவது தெரிந்த உடனே தக்க அதிகாரிகளிடம் அறிவிப்பதும் பஞ்சாயத்தின் கடமைகளாகும்.

கிராமங்களில் கோழிவளர்ப்பு ஒரு பயனுள்ள துணைத் தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் கவர்ச்சியாகக் காணக்கூடிய பலன்களை மக்களுக்களிப்பதால் கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் சிறிய அளவில் ஒரு கோழிப்பண்ணையை ஆரம்பிக்குமாறு பஞ்சாயத்து ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய பண்ணைகளிலிருந்து உற்பத்தியாகி சுயதேவைக்குப் போக எஞ்சிய முட்டைகளை அருகாமையில் உள்ள நகரங்களில் விற்பனை செய்வதற்குரிய வசதியையும் பஞ்சாயத்து செய்துதரல் வேண்டும். மேலும் கோழிகளுக்கு நோய் வராது தடுப்பதற்கு வேண்டிய வைத்திய உதவியையும், தரமான கோழிகளை விஞ்ஞான ரீதியில் வளர்ப்பதற்குரிய யோசனைகளையும் பொருளுதவியையும் பஞ்சாயத்து யூனியன் மூலம் பெற்று பஞ்சாயத்து பயன்பெறலாம்.

குளவசதியுள்ள கிராமங்களில் மீன் வளர்ப்புத் திட்டத்தைத் தீவிரமாக மேற்கொள்வதன் மூலம் பஞ்சாயத்துக்கள் தங்களது வருவாயை ஓரளவு பெருக்கிக் கொள்ளலாம்.

போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிக் கொள்வதும் கிராமப் பஞ்சாயத்தின் வளர்ச்சி வேலைகளுள் ஒன்று. சுற்றியுள்ள கிராமங்களோடும் நகரங்களோடும் தொடர்பு கொள்வதற்கு இவ்வசதிகள் தேவை. ஒவ்வொரு கிராமமும் முக்கிய ரஸ்தாவோடு தொடர்பு கொள்ளக் கூடிய இணைப்புப் பாதையைக் கொண்டிருக்க வேண்டும். பல கிராமங்களை வெட்டிச் செல்லும் இத்தகைய இணைப்புப் பாதைகளைத் திட்டமிட்டுப் போடுவதற்குரிய பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு இருந்தாலும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் கிராமத்திற்குத் தேவையான இணைப்புப் பாதையை அமைக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். புறம்போக்கு நிலங்களிலும், பாதையின் இருமருங்கிலும் பயன்தரும் மரங்களை நடுதல்வேண்டும். பஞ்சாயத்துக்கு வருவாய் அளிக்கக்கூடிய இனங்களில் இதுவும் ஒன்றாகும்.

குறையும் நிறையும் : கிராமப் பொருளாதார வளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டாலும், சமுதாய நலப் பணிகளை அதிக அளவில் மேற்கொள்வதாலும் புதிய பஞ்சாயத்துக்களின் கடமைகளும் பொறுப்புகளும் என்றுமில்லாத அளவு பெருகியுள்ளன.

சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகளை மேற்கொள்ளக் கூடிய பலம் வாய்ந்த அமைப்புகளாகப் புதிய பஞ்சாயத்துகள் இல்லையென்று கூறப்படுகிறது. பஞ்சாயத்து நிர்வாகத்தில் காணப்படுவதாகக் கூறப்படும் குறைகளாவன : பஞ்சாயத்துக்களின் குறைந்த நிதி வசதி, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் போதிய அனுபவமும் பயிற்சியுமின்மை; பஞ்சாயத்துக்களுக்குப் போதிய அதிகாரமும் சுதந்திரமுமின்மை; பஞ்சாயத்தின் சிறப்புக் குழுக்கள் திறமையாக இயங்காமை; ஜாதிப் பூசல்; அரசியல் கட்சிகளின் செல்வாக்கு.

கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்தில் பல குறைகள் இருப்பதாகக் கூறப்படினும் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பயனாகப் பஞ்சாயத்துக்கள் புத்துணர்வும் புத்தார்வமும் கொண்டு செயல்படுகின்றன என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். இது பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றிக்கு அறிகுறி எனலாம். கிராம மக்களின் கல்வி நிலை உயர்ந்து, அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டு, கிராம நலனே தங்களது தனி நலன் என்ற சமுதாய ஒருமைப்பாட்டுணர்வு தோன்றி அவர்கள் அபிவிருத்தி வேலையில் ஈடுபடும்போது பல குறைகள் நீங்கிவிடும். நிர்வாகப் பிரச்னைகளை மாநில அரசாங்கம் தக்க நடவடிக்கைகளின் மூலம் தீர்த்துவிட முடியும். பலமான அமைப்பு முறையையும், போதிய நிதிவசதியையும், திறமையான தலைவர்களையும், ஆர்வமுள்ள பிரதிநிதிகளையும், மகிழ்வுடன் ஒத்துழைக்கும் மக்களையும், வேண்டிய பாதுகாப்பையும் உதவியையும் நல்கும் பிற மக்களாட்சி நிறுவனங்களின் ஆதரவையும் பெற்று, கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் செவ்வனே செயல்படுத்தி கிராமங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



**புத்தக மதிப்புரை :**

# " பஞ்சாயத்து ராஜ் "

**ஆசிரியர்: திரு எஸ். கே. டே**

" பஞ்சாயத்துத் தத்துவம் நம் நாட்டிற்குப் புதியதன்று சமுதாய அபிவிருத்தித் திட்டமும், தம் தேவையைத் தாமே உற்பத்தி செய்துகொண்டு வாழ்வில் நிறைவுகாணும் கொள்கையும்கூட இந்த நாட்டில் தொன்று தொட்டுவந்த தத்துவ வளர்ச்சிகளேயாகும்."

"பன்னெடுங்காலத்துக்கு முன்னர் நம் நாட்டின் மக்கள் தொகை மிகக் குறைவாக இருந்தது. கிராமங்கள் தன்னிறைவுடைய அமைப்புக்களாக விளங்கி வந்தன. குடும்பங்களில் சுபீட்சமும், அமைதியும் நிலவிவந்தன. கிராமங்களில் ஒற்றுமையுணர்வு வேரூன்றியிருந்தது. ஆங்கிலேயர் நம் நாட்டுக்குவந்த பின்னர் கிராமிய வாழ்வில் விளங்கி வந்த அமைதியும், சுபீட்சமும் சிதைந்தன; ஒற்றுமை மறைந்தது. தனித்தன்மையும் சுயநலமும் சமுதாயத்தில் பரவத் தொடங்கியது. இத்தகைய சூழ்நிலையில், கிராமப் பஞ்சாயத்துக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் தம்முடைய கடமையுணர்வை இழந்தன ; கூட்டு வாழ்வில் ஊழல் மலியத் தொடங்கிற்று. மக்களுடைய வாழ்வில் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கமும், கொடுமையும் பெருகலாயிற்று. அடுத்து சுதந்திரப் போராட்ட காலம் வந்தது. அதன் பின் சுயாட்சி நிறுவப் பட்டது. ஜனநாயக அடிப்படையில் அமைந்துள்ள நம் ஆட்சி தோன்றியதுமுதல், நம் கிராம சமுதாயத்தின் சீர்கேட்டைப் போக்கி, கிராமிய வாழ்வில் மறுமலர்ச்சி காணப் பாடுபட்டு வருகிறது. அந்த வகையில் பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுகள் ஆகியவை தம் பொறுப்பை உணர்ந்து கிராமிய நல்வாழ்வென்னும் குறிக்கோளை அடையப் பாடுபடும் சாதனங்களாக—நிறுவனங்களாகச் செயல்படத் தொடங்கியுள்ளன."

"சமுதாய அபிவிருத்தி என்பது, மக்கள், தம்முடைய தேவைகளை இவையிவை என்று உணர்வதுடன் அவற்றைப் பெற, தக்க வழிகளைக்காணுகின்ற நிலையினை ஏற்படுத்தும் கொள்கையின் அடிப்படையில் எழுந்த ஒரு செயல் திட்டமாகும்."

"நாட்டின் முன்னேற்றத்திற்கான பொதுப் பணியில் தங்கள் வாழ்வை இணைத்துக்கொண்டு தங்கள் கடமையைச் செய்யும் பண்பு வளரவேண்டும். இத்துறையில், பொது மக்களுடன் இணைந்து, அவர்களுக்கு ஆலோசனைகள் கூறி, வழி நடத்தி உதவி செய்யும் பொறுப்பு நம் அதிகாரிகளைச் சார்ந்ததாகும்."

"சமுதாய அபிவிருத் தித்திட்டங்களின் வெற்றி, பொது மக்களின் ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் பொறுத்தே பெரிதும் அமைந்துள்ளது. இந்தப் பணியினைச் செய்யும் நிறுவனங்களே பஞ்சாயத்துக்கள். பல நூறு ஆண்டு களுக்கு முன்பிருந்தே நம் நாட்டில், பஞ்சாயத்து நிறுவனங்கள் இயங்கி வந்துள்ளன. இடையில், அந்நியர் ஆட்சியில் அவை சிறப்பிழந்தன. அவை இப்பொழுது புதுப்பிக்கப்பெற்று, திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து என்பது ஒரு கிராமத்தின் சுயாட்சி ஸ்தாபனம் என்பதோடன்றி, நாட்டு நிலையில் அது ஒருமைப்பாட்டின் ஓர் இணைப்பாக விளங்கவேண்டும். அத்தகையதொரு சிறந்த நிலையை அடைய, அவற்றிடம் புதிய பொறுப்புக் களும், புதிய அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றத்தில் பஞ்சாயத்துக்களின் பணி, மிகப் பெரிது. திட்டத்தில் தங்கள் தங்கள் பங்கினை ஒவ்வொரு பஞ்சாயத்தும் நிறைவேற்றி நாட்டின் சுபீட்சத்தில் முழுமை காணப் பாடுபடவேண்டும்." —இவ்வாறு சமுதாய அபிவிருத்தி-பஞ்சாயத்து ஆட்சி ஆகியவற்றின் வளர்ச்சியை, வரலாற்றை, அடிப்படைத் தத்துவங்களை, அடையவேண்டிய குறிக்கோளை திரு எஸ் கே. டே, அவர்கள் " பஞ்சாயத்து ராஜ் " என்ற நூலில் விரிவாக விளக்கி யுள்ளார். இந்திய அரசாங்க சமுதாயநல—கூட்டுறவு—பஞ்சாயத்து ஆட்சித்துறை அமைச்சர் திரு எஸ். கே. டே அவர்கள், வாழ்வில் நிறைந்த அனுபவமும், பரந்த உலகியலறிவும் படைத்தவர். அவர்முதன் முதலில் மின் சாரப் பொறியாளராகத் தம் வாழ்வைத் தொடங்கி னார். நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு தம் வேலையை விட்டு அகதிகளுக்குப் பணிபுரிவதிலும், விவசாய—தொழில் குடியிருப்பு ஒன்றினை அமைத்து நடத்துவதிலும் சிறிது காலத்தைக் கழித்தார். பின்னர், 1952-ல் சமுதாயத் திட்ட நிர்வாகத்தில் நிர்வாகி யாகப் பதவிபெற்ருர். 1956-லிருந்து சமுதாயநலத் துறை அமைச்சராகவும், சமீபகாலமாக, கூட்டுறவு, பஞ்சா யத்து ஆட்சி ஆகிய துறைகளுக்கும் அமைச்சராகவும் விளங்கி வருகிருர். இந்தியக் கிராமிய வாழ்வின் உண்மை நிலையையும், அதன் தேவையையும் நன்கு உணரத்தக்க வாய்ப்பினை, திரு டே அவர்கள், தம் வாழ்வில் பெற்றிருக் கிருர். சுருங்கச் சொல்லவேண்டுமானுல், " பஞ்சாயத்து ராஜ் " என்ற இந்த ஆங்கில நூல், இன்றைக்கு நாட் டிற்குத் தேவையான ஒரு பொருளைப்பற்றி, தகுதியுடைய ஒருவரால், பொருத்தமான முறையில் எழுதப்பட்ட ஒரு சிறந்த நூல் எனலாம். இந்த நூலின் தமிழாக்கம் வெளிவருமானுல் நாட்டிற்குப் பெரிதும் பயன் விளைக்கும் என்பதில் ஐயமில்லை.

**டி. வி. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்.**
உதவிச் செயலாளர்,
கிராம நல-தல நிர்வாகத்துறை.

## தாய்நாடு காப்பதில் தாய்க்குலத்தின் பங்கு

உங்கள் வீடுகளில் சகல அம்சங்களிலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க ஆரம்பிக்கலாம். பொருள்களைக் குறைந்த அளவில் வாங்குங்கள்; குறைவாக உபயோகியுங்கள், கையில் உள்ளவற்றைத் திறம்படப் பயன்படுத்துங்கள். தங்கத்தையும் ஆபரணங்களையும் பாங்கி சேப் அறைகளில் குவித்து வைப்பதில் என்ன லாபம்?, உங்களுக்கு அவசியமானவற்றை மட்டிலும் வைத்துக்கொண்டு, அவற்றை அணிந்து கொள்ளுங்கள். பாக்கியுள்ளவற்றை, தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்.

### உள்ளவற்றைத் திறம்படப் பயன்படுத்துங்கள்

பழைய புடவைகள், படுக்கை விரிப்புகள், சட்டைகள், கால்சராய்கள் ஆகியவற்றைப் போட்டு பாத்திரங்கள், ஜாடி சாமான்கள் வாங்கும் பழக்கம் உங்களுக்குண்டா? நமக்குப் பயன்படாத இத்தகையதான பொருள்களை இவ்வாறு அன்றாட உபயோகப் பொருள்களுக்கு மாற்றிக் கொள்ளலாம். பழைய புடவைகளை ஜன்னல் திரைச் சீலைகள், மேஜை விரிப்புகள், உறைகள் என், குழந்தைகளுக்கு அணிவதற்கான சட்டைகள் ஆகிய பொருள்களாக தைத்துக்கொள்ளலாம். பழைய படுக்கை விரிப்புகளை ஜெட்டி, உள்பாவாடைகளாக தைத்துக்கொள்ளலாம்.

### குறைந்த உபயோகம்

அன்றாட உணவுக்குத் தேவையான அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை அவசியமான அளவுக்கு எடுத்துப் பயன்படுத்துவதில் எத்தனையோ நலமுண்டு. எந்த நேரத்திலும் தேநீர் குடித்த வண்ணமாக இருக்கிறோம். அதை உடனடியாகக் குறைக்க முடியாவிட்டாலும் ஓரளவு குறைத்துக் கொள்வதால் மிச்சப்படும் தேயிலையை ஏற்றுமதி செய்து அந்நியச் செலவாணி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

---

## சிங்கப்படை சேர்ப்பீர்!

நாஞ்சில் ஆரிதனர்

கார்மிஞ்சிய தாலே மயில் காதல்நடம் ஆடும்!
சீர்மிஞ்சிய தமிழால்உளத் தின்பம்மிகக் கூடும்!
நேர்மிஞ்சிய சனநாயக நினைவேபகை சாடும்!
போர்மிஞ்சிய வடஎல்லையில் புகுவோம், பகை ஓடும்!

உரமுள்ளவர் உயிருள்ளவர் உணர்வுள்ளவ ராஞல்
கரமுள்ளவர் கடமைசெறி கருத்துள்ளவ ராஞல்
தரமுள்ளவர் தாமின்முலைத் தமிழுண்டவ ராஞல்
கரு முள்ளெனப் படர்சீனரைக் களைவோம், படை வாரீர்!

பங்கப்பட, சீனப்படை பாழ்பட்டிட, ஓட,
அங்கப்படை ஆள் வீரர்கள் அங்காத்துயிர் மாய
"எங்கப்படை?" என்றேவரிந்(து) எல்லைகுடன் வாரீர்!
சிங்கப்படை சேர்ப்பீர், சிறு சீனர்தலை கொய்வீர்!

நன்றி: "சைனிக் சமாசார்" (போர்ப்படை இதழ்.)

## பாட்டில் மலர்ந்த பண்பாடு

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடிஞனடா"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அன்று பெருமையுடன் மொழிந்தார். ஆனல் இன்று ஒருவன் மட்டும் அந்த லட்சிய கீதத்தை இசைக்கவில்லை. ஆயிரக் கணக்கில் கூடி நின்று, ஒருமித்த குரலில் தமிழ் மக்கள் அதை உணர்ச்சி தெறிக்கப் பாடினர்.

வீர உணர்வு குறுகுறுக்கும், அவரது புல்லரிக்கும் கவிதைகள்—விடுதலை வேட்கையைப் பிரதிபலிக்கும் எழுச்சிக்கனல் ஊட்டும் அந்தப் பாடல்கள்—திரண்டு நின்ற மக்களைத் திண்தோள் தட்டிப் போர் முரசு கொட்டத் தூண்டிய தீப்பொறிகளாயின!

அன்று அவற்றைப்படித்தபோது எப்படி புத்துணர்ச்சி பிறந்ததோ, அதே உணர்ச்சி—ஆவேசம்—அளப்பரிய உத்வேகம் இன்றும் கரை புரண்டது.

"நாமிருக்கும் நாடு நமதென்பது அறிந்தோம்" என்றதும் அன்று நமக்கு ஆதிக்க வெறியர்கள், கட்டி மேய்க்கும் ஆட்டு மந்தைகளாக வாழும் அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறத் துடிப்பு பிறந்தது. "தாயின் வயிற்றில் பிறந்தோர் தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ" என்றதும் நமக்குள் விரோதம் என்ற விஷ வாடை நீண்டவொட்டாமல், குறுக்கிய வேற்றுமைகள் கொந்தளித்துப் பாய்ாமல் அன்பு அணையிட்டுத் தடுத்தது. "மொக்குள் தான் தோன்றி மூடிவது போல, மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்" என்றதும், நாம் மின்மினியாக வாழ்ந்து மடிவதை விட, மரண மஞ்சத்தில் சாயுமுன்பு விண் மீனாய்த்திகழ வேண்டும் என உயர் நிலை வேட்கை பெற்றோம். இன்றும் தமிழ் மக்கள் அந்த இலட்சிய கீதங்களை நினைவு கூர்ந்து ஒன்று கூடினர்; உறுதி பூண்டனர்.

தாயகத்தின் மண்ணை மிதித்த தருக்கரை—சுதந்திர வாழ்வின் பரிமளத்தை முழுதும் நுகர முடியாமல் பாதியிலே அதைப் பறித்து விடத் திட்டமிட்ட பாதகர் படையைத் தவிடுபொடியாக்குவோம் என்று அந்தக் கவிதை ஊட்டிய மன உறுதியில் ஆவேசச் சூளுரை செய்தனர். பார்த்திபனைப் பாரதப்போரில் ஊக்கிய பரந்தாமன் போல் பாரதியின் கவிதைகள் மக்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டி முறுக்கேற்றி விட்டன. அந்தக் கவிதைகளை இசைத்த வண்ணம், இமயத்தின் பிடரியிலே இன்று எக்காளமிடும் ஈனர்களை எச்சரிக்கும் விதத்தில் 'ஜயபேரிகை' கொட்டினர்; நவபாரத மக்கள்.

ஒற்றுமை உணர்ச்சியையும், தேசத்தின் பாதுகாப்புக்காகத் தியாகத் தீயில் மூழ்கத் தயார் என்ற உறுதிப்பாட்டையும் மக்கள் பாரதியின் அமர கவிதைகள் மூலம் பெற்றனர்.

(சென்னையில், டிசம்பர் 9, 10, 11 தேதிகளில் நடைபெற்ற பாரதி விழாக் காட்சிகளை அடுத்த பக்கங்களில் காண்க)

---

# பகைக்குலம் மாயும் நாளே பாரதத் திருநாள்



# சென்னையில் பாரதி பிறந்ததினவிழா







1. கவிக்குயில் பாரதியின் உருவப்படம் ஊர்வலத்தின் நாயகமாய் எடுத்துவரப் பெற்றது.
2. கருத்தரங்கு—பல அறிஞர்கள் கருத்துரை ஆற்றினர். (திருமதி சௌந்தரா கைலாசம் உரை நிகழ்த்துகிறர்.
3. இறை வணக்கம்—பாரதியாரின் பேத்திகள் பாடுகின்றனர். மைசூர் முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். திரு. சி. பி. ராமசாமி அய்யர் தலைமை வகித்தார்.
4. வெள்ளம் போல் தமிழர் கூட்டம்.
5. கவியரங்கம்—கவி அரங்கத்தில், பல கவிஞர்கள் பாரதிக்குப் பாமாலை சூட்டினர். (கண்ணதாசன் தன் கவிதையை மன்றத்தில் படைக்கிறர்.)





பாலையும் நஞ்சாக்கி நாசமாக்கும் பாதகர்க்கு உணர்த்தப் பாரதமக்கள் பாவேந்தன் பாரதியின் கவிதை நிழலில் கூடி வீர சபதம் ஏற்ற கோலம்! 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ' என்று முழங்கிய உறுதியின் பிரதிபலிப்பாய், உணர்ச்சியின் நிலைக்களனாய் நிற்கும் வீரர் திருக்கூட்டம்—குன்றாத உறுதியும் கொள்கை வலிவும் படைத்த கவிதைக் கோமானின்—குளிர்ச்சியை அள்ளிவரும் வெள்ளி நிலவாய், புரட்சியை ஏந்திவந்த மறுமலர்ச்சித் தூதுவனின்—உதய தினத்தில் ஒற்றுமையையும் பாதுகாப்பையும் தங்கள் இதயகீதமாக இசைத்த 'இளைஞர் பட்டாளம்' அமைதியோடு, அணிவகுத்து வந்த பிரமாண்ட ஊர்வலத்தின் காட்சிகள்.



தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், புலவர்கள் அனைவரும் கொண்ட அரசியல் சார்பற்ற குழுவின் அரிய முயற்சியில் நடைபெற்ற விழா!

சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பிரதிக்ஞை எடுக்கிறார். அருகில் நிதியமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இருக்கிறார்.

எழுத்துச் செல்வர்—பாரதி விழாக் குழுவின் பொதுச் செயலாளர்—அகிலன் அவர்கள், தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்களை விழா அணிச் சின்னம் அணிவித்து, வரவேற்றார்.



# சென்னையில் பாரதி பிறந்த தின விழா











# கண்காட்சி



# கலைநிகழ்ச்சி

1. விழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஓவியக் கண்காட்சியில் லயித்து நிற்கும் பிஞ்சு உள்ளங்கள்.
2. வீர சிவாஜி தீரர்களைத் திரட்டிப் போர்க்குரல் எழுப்பும் காட்சி.... "புண்களோ, இல்லை....புகழின் கண்கள்...." என வீரர்களுக்குப் புது முறுக்கேற்றுகிருர், சிவாஜி. (சகஸ்ரநாமம் ஏற்பாடு செய்த நாடகம்).
3. 'தாயின் மணிக்கொடி பாரீர்'! எனப் பாரதி முழங்குகிருர். வ. உ. சியும், வ. வே. சவும் வீரப் பெண்டிரும் கொடி வணக்கம் செய்கின்றனர் (சேவா ஸ்டேஜ் குழு). 4. "ஆடுவோமே—பள்ளு பாடுவோமே!" 5. கடற்கரையிலே 'திலகர்' கட்டத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் திரு. காமராஜ் அவர்கள், தேசிய கவிஞர்க்குப் புகழ்மாலை சூட்டுகிருர். மேடையில், ஆந்திர முதல் அமைச்சர் திரு. சஞ்சீவி ரெட்டி, திரு. பக்தவத்ஸலம், திரு. ம. பொ. சிவஞானம், டாக்டர் மு. வரதராசனுர் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.





## சிங்கம் புறப்படும் கம்பீர அழகு

திருப்பாவையும், திருவெம்பாவையும், தமிழ்ப் பண்பாட்டின் தனிச் செல்வங்கள். மார்கழி மாதம், உலகெங்கும், அவை ஓதப் பெறுகின்றன. இறைவனை வழிபடுவோர் மட்டுமன்றி, இலக்கிய நயம் மட்டுமே நோக்கமாயுள்ளவர்களும், இவற்றைப் படித்து இன்புறுகின்றனர். ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள், அவற்றைப் பாடி மகிழ்கின்றனர். புத்தம் புதிய கருத்துக்களைக் கண்டு தெளிகின்றனர்.

திருப்பாவையிலே, ஒரு சிறந்த வர்ணனை. மலைக் குகையிலிருந்து புறப்படும் ஒரு சிங்கத்தைப் படம் பிடித்துக் காட்டும் அழகு, படிப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்துகிறது. ஆம். இன்று பாரத நாடு உள்ள சூழ்நிலையில், அந்தப் பாசுரம், புதுமையான பொருள் வழங்குகிறது. அமைதியாகத் தன் இருப்பிடத்தில் ஓய்வு கொண்டிருந்த "பாரத சக்தி" என்னும் சிங்கம், இன்று, வெளியே புறப்படுகிறது!

> "மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
> சீரிய சிங்கம், அறிவுற்றுத் தீவிழித்து,
> வேரி மயிர் பொங்க, எப்பாடும் பேர்ந்துதறி,
> மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டுப்
> போதரு மாபோலே......"
>
> (23-ம் பாசுரம்)

அக்கிரமம் செய்த பகைவர்கள் அஞ்சி நடுங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. கண்களில் வீரக்கனல் தெறிக்கிறது. உடலெங்கும் உள்ள சக்தி, வீறு கொண்டு நிற்கிறது. சோம்பலை முறித்துக்கொண்டு, அடி அசைந்து நிமிர்ந்து நின்று, நான்கு புறமும் கம்பீரமாகக் கண்ணோட்டம் செலுத்துகிறது. அதன்பின், தனக்கே அமைந்த தலைமைப் பண்பை வெளிப்படுத்தும் வீர கர்ஜனை புரிகிறது. அதன் ஒவ்வொரு அசைவிலும், உயர்நலம் கவிநடம் புரிகின்றது. அதன் நடையில் ஒரு மிடுக்கு; அதன் ஒலியில் ஒரு பெருமிதம். அதன் அசைவில் ஒரு கவர்ச்சி அதன் மேனியில் ஒரு செழுமை. எல்லாம் சேர்ந்து, அதை ஓர் அழியா, அற்புத உருவமாக—உயிர் ஓவியமாக பேராற்றல் படைத்த நிலைக்களயாக—ஆக்கி விடுகின்றன. மேற்சொன்ன பாசுரத்தில், சொல்லோவியமாக இக் காட்சி நம் முன்னே காட்டப்படுகிறது.

சீனப் படையெடுப்பு காரணமாக, வீறு கொண்டு நிற்கும் பாரத சமுதாயம், இன்று, இதுபோன்ற 'சீரிய சிங்க'மாகப் புறப்பட்டுவிட்டது. அதன் கர்ஜனை, பகைவரை நடுங்க வைக்கிறது.

சீரிய சிங்கம், இன்று சீறிய சிங்கமாகி, வீர கர்ஜனை செய்கிறது. ஆம். இன்று, நவபாரதத்தின், "சிங்க நாதம்" கேட்கிறது! படை போர் புக்கு முழங்கும் பாஞ்சஜன்யத்தின் "சங்க நாதமும்", சேர்ந்து கேட்கிறது" எனவே, வெற்றி நிச்சயம். 'எங்கும் திருவருள் பெற்று, இன்புறுவது' உறுதி.

—"கண்ணன்."

### கலைஞர்கள் சார்பில் வழங்கும் காணிக்கை!

பாரதப் பாதுகாப்பு முயற்சிக்கு, படாதிபதி வாசன் அவர்கள் சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற விழாவில், தங்கு புகழ்த் தாய் நாட்டின் "சிங்கநாதம் கேட்குது" என்ற படச்சுருளை நிதியமைச்சர் கரங்களில் தந்து, "ஜெய்ஹிந்த்" என்று பெருங்குரல் எழுப்பினர்....

அதனை ஆக்கிய கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களும் உடன் இருக்கிருர்.



## மாநில கதர்-கிராமக் கைத்தொழில் போர்டு

### புதிய பயிற்சி நடத்த ஏற்பாடு

கதர்–கிராமக் கைத்தொழில் கமிஷன், தொழில் துறைக் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்ற, உதவி அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்றை, அனுப்பியிருக்கிறது. ‘ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா’வுக்கான பயிற்சியும், இத்துடன் இணைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தை அமுல் செய்ய, ஒரு பிரிவுக்கு ரூபாய் 2,8000 தர, கதர் கிராமக் கைத்தொழில் கமிஷன் ஒப்புதல் தந்திருக்கிறது.

அதன் முக்கிய அம்சங்களாவன:—

1. ஒரு பயிற்சிக்காலம் என்பது, ஆறு மாத காலம் ஆகும்.

2. இந்தத் திட்டத்தில் சேர விரும்புவோரின் தேவையான தகுதிகள்:

(i) பத்தாவது தேறியிருக்கவேண்டும்.

(ii) பத்தாவது தேறாதவர்கள், அந்த வகுப்பு வரை படித்திருந்து, தொழில் துறைக் கூட்டுறவு சங்க குறைந்த அளவு, இரண்டாண்டு கால அநுபவம் பெற்றிருக்கவேண்டும். அல்லது,

ஒன்பதாம் வகுப்புவரை படித்திருந்து, குறைந்தபட்சம் மூன்றாண்டு கால தொழில் துறைக் கூட்டுறவு சங்க அநுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது,

பிரதேசமொழித் தேர்வோ அன்றி அதற்கு இணையான இறுதித் தேர்வோ தேறி இருக்கவேண்டும்.

3. பயிற்சிக்காலத்தில், ஒவ்வொரு மாதமும், பயிற்சியாளருக்கு ரூ. 40 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படும்.

4. அத்துடன், ஒருவருக்கு ரூ. 75 வீதம் பயிற்சிக் காலம் முழுவதற்கும் சேர்த்துப் பயணப் படியும் தரப்படும்.

5. ஒவ்வொரு மாநிலத்திலும், அங்குள்ள ஒரு உதவி பயிற்சி நிலையத்தில் இந்தத் திட்டத்தை நடத்த யோசித்திருக்கிறார்கள். அந்தப் பயிற்சி நிலையத்தின் தலைவருடன் இரண்டு விரிவுரையாளர்கள் இருப்பர். வழக்கமான பயிற்சிப் பாடங்களோடு பகுதிநேரப் பேச்சுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

6. பயிற்சி பெறுவோர்க்கு இலவச உறைவிட வசதி செய்து தரப்படும்.

பாடத் திட்டம், தொழில்துறைக் கூட்டுறவுச் சங்கத்தின் பல்வேறு கோணங்களை அறிந்துகொள்ளும் விதத்தில், அதன் நடைமுறையை ஒட்டியதாய் அமையும். கூட்டுறவுக் கொள்கையின் முக்கியத்துவத்தையும், நடைமுறையில்அதில் ஏற்படும் மாறுபாடுகளையும், தொழில் துறைக் கூட்டுறவு வளர்ச்சியை அளந்து காணும் பலவித அறிக்கைகளின் சுருக்கமான பரிசீலனையையும் விளக்கும் வகையில் அமைந்திருக்கும். நவபாரதக் கூட்டுறவுத் திட்டங்களில், மத்திய அரசு, மாநில அரசு, ரிசர்வ் பாங்கு இவற்றின் பங்கை அறியவும், மற்றைய கூட்டுறவு சங்கங்கள் பணியாற்றும் விதத்தைப் பார்வையிட்டுத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

சங்கச் செயல் முறைகளையும், அண்மையில் அமுலுக்கு வந்த கூட்டுறவுச் சங்க சட்டங்களையும், விதிகளையும், பொதுவான கணக்கு வைப்பு முறைகளையும், கிராமியப் பொருளாதாரம், கிராமியக் கைத்தொழில்கள் இவற்றின் பெருமையையும் பயனையும் போதிக்கும்படியாக பாடத் திட்டம் அமைந்திருக்கும்.

**ஆசிரியருக்குக் கடிதம்**

## கிராம மக்களின் கடமை

கண்ணினும் இனிய சுதந்திரத்தைப் பறிக்கும் தீய நோக்குடன் தாக்குதலைத் தழுவிக்கொண்டுள்ள செஞ்சீனர்களை எதிர்த்துப் போராடுவது மாத்திரமல்ல, எதிர்த்து எட்டி விரட்டும் தேசிய திருப்பணியில் நம்மை நாமே அர்ப்பணித்துக்கொண்டுள்ளோம்.

திறமை, உற்பத்தி பெருக்கத்தில் அதிக நாட்டம்; கிராமச் சுகாதாரத்தில் அதிக அக்கறை, ஊர்க்காவல் போன்றதன்னிறைவு அம்சங்களில் நமது வாலிபர்கட்கு ஒரு அரிய சந்தர்ப்பம் வலியக் கிடைத்துள்ளது. காந்திஜியின் சாந்தி சேனையாகஇப்படை இயங்கும்.

சமூக சேவா கழகங்கள், சமுதாய களிப்புக் கேந்திரங்கள், சமூகக் கல்வி நிலையங்கள் புத்துயிர் பெறவேண்டிய நேரம் வந்துவிட்டது. இக்கிளைக் கழகங்கள் முறைப்படி வழிவினை வகுத்து நடைமுறையில் காண்பிக்கப் பின்வாங்கமாட்டா.

விவசாய இளைஞர் கழகங்கள், இளைஞர் காங்கிரஸ் கமிட்டிகள், பாரதீய சேவா சங்கக் கிளைகள், தாழ்த்தப்பட்டோர் லீக் கிளைகள், ஒருமுகப்பட்டு உருப்படியான தேசிய திருப்பணியை மையமாக்கி தத்தம் கடமைகளைச் செய்ய முன்வரும் என்பதுதான் மொத்தத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

அன்புள்ள,
**ஆர். சேவுகன்,**
பாலமேடு.

## தாயின் கட்டளை

**புத்தனேரி ரா. சுப்பிரமணியம்**

புறப்படு மகனே புறப்படடா!
போர்க்களம் நோக்கிப் புறப்படடா!
பொறுத்தது போதும் புறப்படடா!
பொறுப்புடன் உடனே புறப்படடா!

எல்லையில் வந்தது போர் போர் போர்!
எதிரியின் படைகள் தூள் தூள் தூள்!
தொல்லை கொடுக்கும் சீனரின் படையைத்
துரத்திட உடனே புறப்படடா!

வந்த சண்டையை விட மாட்டோம்
வலியப் போரிட வாமாட்டோம்!
இந்திய மண்ணைக கவர்ந்திட என்னும்
எவரையும் சும்மா விடமாட்டோம்!

சின்னத் தனமெனப் பேசுவதே—இனி
‘சீனத் தனம்’ என எசிடுவோம்!
மண்வெறி கொண்ட சீனரை வென்று
வையக அமைதி காத்திடுவோம்!

அடிமை விலங்கை ஒடித்தவர் நாம்
அந்நியர் கொடுமை தடுத்தவர் நாம்
விடுதலை காக்கும் தாய் நாட்டில்
விரோதிகள் நுழைய விடமாட்டோம்!

பரம்பரை வீரம் உறங்காது
பகைவரைப் பார்த்துக் கலங்காது!
வரம்பு கடந்து போராடும்
வம்பரின் ஜம்பம் சாயாது!

பொன்னைக் கொடுப்போம்; பொருளைக் கொடுப்போம்
போரினில் வெற்றி உறுதியடா
கண்ணைக் காக்கும் இமைபோல் நாட்டைக்
காப்பது நமது கடமையடா!



**களத்தில் நிகழ்ந்த கதைகள்:**

# போர் முனையில்....

**போர் முனையிலிருந்து வந்துள்ள செய்திகள். முன்னணியில் என்ன நடக்கிறது என்பதைத் தத்ரூபமாக விளக்குகின்றன. சீனர்களை எதிர்த்து வெற்றி அல்லது வீரமரணம் என்று போராடும் நமது படைவீரர்களின் தீரத்தையும், விட்டுக்கொடுக்காத மனப்பான்மையையும் இவை விளக்குகின்றன.**

### இந்திய வீரரின் வெற்றிச் சின்னம்

கம்பெனி ஹவில்தார்—மேஜர் சௌதார் சிங், நேபா போர் முனையிலிருந்து வெற்றிச் சின்னமொன்றைக் கொண்டுவந்திருக்கிறார். அது ஒரு தானே இயங்கும் சீனத் துப்பாக்கியாகும். ரஜபுத்ரா ரெஜிமெண்டைச் சேர்ந்த அவர் மரணவாயிலிலிருந்துகொண்டே எதிரிகளிடமிருந்து அத் துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு வந்துவிட்டார்.

மேஜர் சௌதாகர் சிங் அத் துப்பாக்கியினால் அரை டஜன் சீனர்களையாவது சுட்டுத்தள்ளியிருப்பார் என்பதாக நேபாவிலுள்ள இந்தியப் படை அதிகாரியொருவர் கூறுகிறார்.

அக்டோபர் 20-ம் தேதி காலையில் சுமார் 250 சீனர்கள் சௌதாகர் சிங் இருந்த இடத்தை நோக்கி வெட்டுக்கிளிப் படையைப்போல அலை அலையாக வந்தனர்.

மும்மூன்று பேர்களாக வந்த அவர்களில் முதலில் வந்தவர் துப்பாக்கியை ஏந்திக் கொண்டும், பின்னால் உள்ள இருவர் கைக்குண்டுகளையும், வெடிமருந்துகளையும் தூக்கிக்கொண்டும் முன்னேறி வந்தனர், துப்பாக்கி ஏந்தி வருபவர் குண்டுபட்டு கீழே விழுந்தால் கூட வருபவர்கள் அத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு முன்னேற வேண்டும். இதுதான் அவர்களுடைய போர்முறை.

### துப்பாக்கியைப் பிடிக்கிறார்

ஹவில்தார் மேஜர் சௌதாகர் சிங்கும் வேறு இரண்டு வீரர்களும் நாப்கா சூ ஆற்றின் மூலைமுடுக்கு பாதைத்திறந்த அருகிலுள்ள நிலையில் இருந்துகொண்டு சீனர்களைச் சுட்டுத் தள்ளிக் கொண்டிருந்தனர். அப்போது தமது தோழர்கள் இருவரும் குண்டுபட்டு கீழே விழுந்ததால் அவர் ஒரு சிறிய குன்றிற்குப் பின்னால் ஒளிந்துகொண்டு நிலையை அமைத்தார்.

### கைவேல் களிற்றொடு போக்கிய நிலை!

சீனர்கள் அவர் இருந்த இடத்திற்குச் சுமார் 25 கெஜ தூரத்தில் வந்துவிட்டனர். அதைக்கண்டு சிறிதும் அஞ்சாத சௌதாகர் சிங், துப்பாக்கி ஏந்திவந்த சீனனையும் அவனுக்கு அடுத்தவனையும்கூட கொன்றுவிட்டார். மூன்றாவது சீனன் முன்னேறிவந்தபோது, சௌதாகருக்கும் அவனுக்கும் இடையேயுள்ள தூரம் அல்லது மரணத்துக்கும் நமது வீரருக்குமிடையேயிருந்த தூரம் ஐந்தே ஐந்து அடிகள்தான்! அவரிடமிருந்த துப்பாக்கி மருந்தும் தீர்ந்துவிட்டது.

தெய்வீக சக்தியொன்று தம்மை உந்தித்தள்ளுவதாக உணர்ந்த சௌதாகர், தாம் மறைந்திருந்த குன்றிலிருந்து வெளிப்பட்டு மின்னலென எதிரிமீது பாய்ந்து அவரைக் குத்தி மாய்த்துவிட்டு அவரிடமிருந்த தானே இயங்கும் துப்பாக்கியையும் பறித்துக்கொண்டு மறுபடியும் தமது நிலையில் வந்து நின்றுகொண்டார்.

அந்த வெற்றிச் சின்னத்தை வைத்துக்கொண்டே சுமார் அரை டஜன் சீனர்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பார்; பின்வாங்கவேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவிட்ட பிறகுதான் அவர் சுடுவதை நிறுத்தினார். புதர்களில் ஒளிந்துகொண்டும் அங்கங்கே நின்று பார்த்து பதுங்கி வந்தும், பிரிகேட் தலைமை நிலையத்துக்கு வந்துசேர்ந்தார்.

### அமெரிக்கத் தலைவர் பாராட்டு

சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க கோஷ்டியின் உயர்தர ராணுவ அதிகாரி, ஜெனரல் பால் டி ஆடம்ஸ, இந்திய வீரர்கள் சேவையில் வீரமாகப் போரிட்டனர் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்திய ஜவான்கள் தங்கள் ஆயுதங்களுடன் திரும்பி வந்திருக்கிறார்கள் என்றும் இப்போதே சென்றுகூடத் திரும்பிச்சென்று சீனர்களை விரட்ட வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்றும், அவர்கள் தைரியமும், தளராத மன உறுதியும் பேரிடும் சக்தியும் நிறைந்து விளங்குகிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

நேபாவிலுள்ள இந்திய வீரர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பியவுடன் ஜெனரல் ஆடம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார். “இந்திய வீரர்கள் உலகில் பலவிடங்களிலும் தீரமாகப் போராடுவதைப் பார்த்திருக்கிறேன். இப்போதைய நிலைமையில் அவர்கள் திடீரென்று தாக்குதலுக்குள்ளான சாதுவைப் போல இருக்கிறார்கள். திடீரென்று தாக்கிய அனுகூலம் சீனர்களுக்குண்டு. திடீரென்று தாக்குதலுக்குள்ளான படைகள் ஆரம்பத்தில் சில தோல்விகளடையாமல் இருந்ததாக சைனிய வரலாற்றிலேயே சான்று கிடையாது. உலகத்தின் கூரையாக விளங்கும் இமயமலைகளில் இந்தக் குளிர் காலத்தில் போரிடுவது சாதாரணமானதல்ல. சுமார் ஆயிரம் மைல்கள் தூரத்திலிருக்கும் இரண்டு போர் முனைகளில் பிரிந்து நிற்கும் படைகளைக் கொண்டு போரிடுவது எந்தப் படைகளுக்குமே கடுமையாகத்தான் இருக்கும்.”

## நேர்மை நமது வஜ்ஜிராயுதம்

### பாஜீராம் தாப்பாவின் வீரப்போர்

நேபா முனையில் நமது ஜவான் ஒருவர் 15 சீனர்களைக் கொன்றுவிட்டு உயர்தர ஆயுதம் தாங்கிய சுமார் 500 சீனர் வீட்மிருந்து எவ்வாறு தப்பி வந்திருக்கிறார்.

காட்டில் நடந்த சண்டையில் வீரதீரத்தைக் காட்டிய பாஜூராம் தாப்பா எட்டு நாட்கள் நேபாவின் அடர்ந்த காடுகளின் வழியாக சுமார் 60 மைல் தூரம் இரவும் பகலும் நடந்துவந்து இப்போது அஸ்ஸாம் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இருபது வயதான தாப்பா கூறியதாவது: "வாலாங்குக்கு மேற்கே சீனத் துருப்புக்களை எதிர்ப்பதற்காக 50 பேருடன் செல்லவேண்டுமென்று எனக்கு உத்தரவு வந்தது. எங்களுக்குச் சுமார் ஒரு மைல் தூரத்துக்கு முன் நமது முன்னணி படையொன்று சென்றுகொண்டிருந்தது.

"நானும் வேறு இருவரும் அவசர அவசரமாகக் குழி வெட்டி கோண்டி படை நிலை அமைத்து அதில் பதுங்கிக் கொண்டோம். அப்போது நடுப்பகல் வேளை. கூட்டிலிருந்து கலைக்கப்பட்ட கோபங்கொண்ட தேனீக் கூட்டம் போல சீனர்கள் எங்களை நோக்கி ஓடிவந்தனர். அவர்கள் திடீரென்று தாக்கியதால் நமது ஜவான்களில் 10 பேர் மரணமடைந்தனர். எதிரிகள் நாங்களிருக்குமிடத்தை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தார்கள். இடைவிடாமல் பாய்ந்துவந்த குண்டுகளுக்கு என் தோழர்கள் இருவரும் பலியாயினர். நான் தனிமை ஆனேன். நூற்றுக்கணக்கான குண்டுகள் என்னைச் சுற்றிலும் விர்ரென்று பாய்ந்துவந்தன.

"நான் தைரியம் இழக்கவில்லை. என் எதிரே வந்தவர்களில் ஐந்து பேரையாவது சுட்டு வீழ்த்தியிருப்பேன்; பிறகு கைக்குண்டையெடுத்து இடது பக்கமாக வீசி இன்னொரு பத்து பேரைக் கொன்று குவித்தேன். நான் ஒளிந்துகொண்டிருந்த குழியிலிருந்து, எதிரிகள் பக்கத்திலுள்ள இடைவெளி வழியாக குண்டுபோலப் பாய்ந்தேன். ஆனால் அடிபட்டு கீழே விழுந்து அசையாமல் கிடந்தேன். செத்துக்கிடப்பதுபோல நடித்தேன்.

காயங்களிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டே இருந்தது; சீனர்கள் அணி அணியாக என்னைத் தாண்டிச் சென்றனர். அவர்கள் பூட்ஸ் காலால் என்னை மிதித்து உயிர் இருக்கிறதாவென்றும் பார்த்துக் கொண்டனர். அவர்கள் மறைந்த பிறகு நான் மெதுவாக ஊர்ந்து சென்று புதர்களில் ஒளிந்துகொண்டேன்.

பல மைல்கள் காடு வழியாக மெதுவாக கடந்துசென்று ஆற்றங்கரையை அடையும் நேரத்தில் சீனர்களின் கையில் மாட்டிக்கொள்ளவிருந்தேன். ஆனால் அவர்கள் என்னைக் கண்டுகொள்ளவில்லை."

### அற்புதத் துணிச்சல்

அதிகாரி ஒருவர், பின்வாங்கவேண்டுமென்ற உத்தரவையும் மறந்து தனது தோழர்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கும்போதே எதிரிகள்மீது குண்டுமாரி பொழிந்து அவர்களைத் தடுத்து நிறுத்தியதாக, டில்லி ரேடியோ ஒலிபரப்பில் கூறினார்." அந்த அதிகாரி வெடிக்கும் குண்டுகளுக்கிடையே வேங்கையைப் போலப் போராடினார். தமது துணை அதிகாரியிடம் அவர் கூறிய கடைசி வார்த்தை இதுதான்: "நான் பிழைக்க மாட்டேன் என்று தோன்றுகிறது. ஆனால் போகும்போது நான் சீனர்களின் உயிர்களையும் எடுத்துச்செல்வேன்."

### மக்களின் மனோதிடம்

மக்களின் மன உறுதி கெல்லாம் சிகரமாகவிருப்பது டோவாங்கிலுள்ள மூதிய பெண்மணியின் மனப்பான்மையே. சீனர்கள் அம் மூதாட்டியை பிடித்து வைத்துக்கொண்டு சீன துருப்புகளுக்கு முன்னால் சென்று அங்கு வைத்திருக்கும் கண்ணிகளைக் காட்டுமாறு உத்தரவிட்டனர். அவர் எப்படியோ தப்பி வந்துவிட்டார்.

சீனப்படைகளைப் பற்றி நான் அவர்களிடம் கேட்டபோது, வார்த்தைகளைவிட அவருடைய செயல்தான் விளக்கமாக இருந்தது. நிலத்தில் காறி உமிழ்ந்துவிட்டு, மெதுவாக, நடந்து சென்றுவிட்டார்.

### மரண ஆபத்திலும் மனந்தளராத ஜவான்கள்

"பிரிட்டிஷாருக்குப் பெரும் சோதனை நேரவிருந்தபோது அவர்கள் நிதானமிழக்காமல் எவ்வாறு மன உறுதியுடன் இருந்தார்கள் என்பதை விளக்கும் 'டங்கர்க்' என்னும் பெயர் பிரிட்டிஷாரின் போர் வரலாற்றில், அழியா இடம் பெற்றுள்ளது. அதே போல, நேபாவில் 14,000 அடி உயரத்தில் மற்றுகைக்குள்ளான 'சேலாப் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஜவான்களும் அதிகாரிகளும் திட்டமிட்டு பின் வாங்கிய நிகழ்ச்சியையும் இந்திய ராணுவ வரலாற்றில் மாபெரும் அத்தியாயமாகச் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள்". இவ்வாறு 'தி ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையின் தேஜ்பூர் நிருபர் எழுதியிருக்கிறார்.

இந்திய வீரர்கள் அப்பகுதியைப் பாதுகாக்க எவ்வாறு போரிட்டனர் என்பதைப் பற்றிய முழு விவரமும் இன்னும் கிடைக்கவில்லை; ஏனெனில் பெரும்பாலான வீரர்கள் இன்னும் ஆஸ்பத்திரியிலும், முகாம்களிலும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றனர். சீனர்களால் சுற்றி வளைக்கப்பட்டு சப்ளைகள் கிடைக்க முடியாத நிலையில் இருந்தும்கூட அவ்வீரர்கள் மனந்தளராமல் விரோதிகள் அணிகளைக் கிழித்து வெளிவர முயன்றிருக்கின்றனர்.

### ஜவான்களின் வீரவரலாறு

இதற்கிடையில் சீனர்கள் பொம்டிலாவுக்குக் கீழே ஏராளமான படைகளைக் குவித்துக் கொண்டிருந்ததால், நமது வீரர்கள் பக்கவாட்டு வழியாக சம நிலத்தை நோக்கி வரவேண்டியதாயிற்று. அன்றிலிருந்து சுமார் 7 தினங்கள், நமது வீரர்கள் அபாயகரமான மலைப் பகுதிகள் வழியாக நடந்து வந்தனர். சுமார் ஐந்து நாட்கள் வரையிலும் உணவே கிடைக்கவில்லை. அவர்கள் நடந்துவந்த அடர்ந்த காடுகள் விரோதிகளிடமிருந்து பாதுகாப்புத் தந்தது; ஆனால் உணவு தர முடியவில்லை.

சேலாவிலிருந்து வந்த இந்த சில ஆயிரக்கணக்கான ஜவான்கள் தீரமாகவும் தைரியமாகவும் இருந்தனர் என்று பாராட்டப்படுவதாக சைனியத்திற்கு நெருங்கிய தொடர்புள்ளவர்கள் கூறுகிறார்கள். அது தோழமையுணர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகவும் இந்திய ராணுவ பரம்பரை வீரத்துக்கு உதாரணமாகவும் விளங்குகிறதென்று அந்த நிருபர் கூறியிருக்கிறார்.

### நேபா பூர்வகுடி மக்களின் உதவி

ராஜபுத்திர ரெஜிமெண்டைச் சேர்ந்த மேஜர் கே. பி. நாயரும் அவருடன் சுமார் 150 வீரர்களும், தங்கள் கால் புண்ணையும் பொருட்படுத்தாமல் 17 தினங்களாக மிகவும் உயரமான பகுதிகள் வழியாகவும் அடர்ந்த காடுகள் வழியாகவும் நடந்து வந்து தேஜ்பூரை அடைந்திருக்கின்றனர். சீனர்கள் போர் நிறுத்தம் அறிவித்த பிறகுங்கூட, புதர்களில் மறைந்து நின்று நமது வீரர்களைச் சுட்டிருக்கின்றனர்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த, மேஜர் நாயர், சீனர் தாக்கியபோது—நவம்பர் 14-ந் தேதியன்று, சேலாவின் வலது பகுதியை காவல் புரிந்து வந்தார்.

அவர் தமது படையுடன் சீனர்களைத் தாக்கியபோதிலும் சுமார் 400 துருப்புகள் சேர்ந்து வந்ததால் நவம்பர் 16,ந் தேதியன்று பின் வாங்க நேரிட்டது.

தமது நிலைகளின் பின் பக்கத்தில் சீனர்கள் சூழ்ந்து கொண்டனர் என்பது தெரிந்துகொண்ட பிறகுதான சோதனை காலம் ஆரம்பமாயிற்று. அடிக்கடி அவர்கள் சீனப் படைகளைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் சுட்டனர்.

### சீனர்களின் கொடுமை

நேபாவின் பூர்வகுடி மக்களுக்கு தாம் மிகவும் கடமைப் பட்டுள்ளதாக அவர் கூறுகிறார். சீனர்களின் நடமாட்டத்தைப்பற்றி துப்பு கூறி தப்புவதற்கான வழிகளை அவர்கள் தெரிவித்திராவிட்டால் அவரும் அவர்களுடைய வீரர்களும் நல்ல நிலைமையில் இங்கு வந்து சேர்ந்திருக்க முடியாது.

அவருக்கு வழிகாட்டிய பூர்வகுடி ஆள் ஒருவர் சீனர்களால் பிடிக்கப்பட்டு சுட்டு கொலைப்பட்டிருக்க வேண்டும். மேஜர் நாயருக்கு துப்பாக்கிச் சத்தம் கேட்டது, வழிகாட்டி பிறகு திரும்பவே இல்லை.

பொம்டிலா பகுதிக்கு—நவம்பர் 24-ந் தேதி—வந்த பிறகுதான் அது சீனர்களின் வசமாகிவிட்டது என்று மேஜர் நாயருக்குத் தெரிந்தது—வரும் வழியில் இந்திய வீரர்களைப் போல தளிர்ப் பச்சை உடைகளை அணிந்துகொண்டு சிலர் எதிரே வந்தனர். அவர்களை இந்தியர் என்று நினைத்து மகிழ்ச்சியுடன் கைகாட்டி அழைத்தார். ஆனால் அந்தச் சீனர்கள் பயந்து தாங்கள் கொண்டு வந்த சாதத்தையும், குளிர் ஊறுகாயையும் விட்டு விட்டு ஓடி விட்டனர். சுமார் 8 நாட்களாகத் தண்ணீரும், உணவுமின்றி தவித்த நமது வீரர்களுக்கு அது பெரிய விருந்தாக இருந்தது. மாற்றுரைத் தெரிந்து கொள்வதற்கும் ரோந்து செய்வதற்கும் சீனர்கள் நாய்களைப் பழக்கி வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

சீனர்கள் தங்கள் ஆடுகளை அபகரித்தும், சொத்துக்களைக் கொள்ளையடித்தும் பெண்களை அவமானப்படுத்தியும், கொடுமைப்படுத்தினார்கள் என்று நேபா மக்கள் கூறினார்கள். ஆனால், சீனர்கள் நண்பர்களைப் போலவும் விடுதலை வீரர்கள் போலவும் நடிக்க மறக்கவில்லை.

### தவாங் மக்களின் துயரம்

தவாங் மத ஸ்தாபனத்தின் தலைவர் கெஷம் புஞ்ச் அளித்த பேட்டியொன்றில், சீனர்கள் புத்த மதத்தையும். மனிதர்களின் உயர்ந்த பண்புகளையும் அழிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்.

"சீனர்கள் திபேத்தைப் பிடித்தடக்கி லாமாக்களைச் சித்ரவதை செய்து, மடாலயங்களை நாசப்படுத்தி விட்டனர். அப்படியும் கூட அவர்களுக்குத் திருப்தி இல்லை. இப்போது அவர்கள் தவாங்கைப் பிடித்து மக்களைக் கொடுமைப்படுத்துவதோடு மேலும் பல தீய திட்டங்களை வைத்திருக்கின்றனர். சீனர்களை விரட்டியடிப்பதில் இந்திய வீரர்களுக்கு உதவவேண்டுமென்று புத்தரைப் பிரார்த்திக்கிறோம்." நேபாவில் 23 வயதான லெப்டினெண்ட் சௌத்ரி, ரோடுகளில் உள்ள தடைகளை நீக்கும் வேலையைச் செய்து வந்த கம்பெனியைத் தலைமை வகித்து நடத்தி வந்தார்.

சீனர்களின் குண்டுமாரிக்கு அஞ்சாமலும், எதிரியின் எண்ணிக்கையைக் கண்டு பயப்படாமலும், லெப்டினெண்ட் சௌத்ரி மிகுந்த மனோ தைரியத்துடன், தம் கடமையே கண்ணாயிருந்தார். கடைசி வரையிலும் வீரமாகப் போரிட்டு சில சமயங்களில் தனியாகவும் போரிட வேண்டியிருந்தும் அஞ்சாமல், சுமார் 50 சீனர்களைச் சுட்டுத்தள்ளினார்.

தாய் நாட்டின் மானத்தைக் காத்து, சீனர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்றுகூறித்தான் லெப்டினெண்ட் சௌத்ரி போர் முனைக்குச் சென்றார். தனது வீரமிக்க துணிகரச் செயலைப் பற்றியோ அல்லது போர் முனையில் நெஞ்சில் அடிபட்டு வீரமரணமடைந்த செய்தியைப் பற்றியோ தமது உறவினர்கள் கேட்கத் தயாராக இருக்க வேண்டுமென்றும் அவர் சொல்லிச் சென்றார்.

### பொம்டிலாவைக் கொள்ளையடித்த சீனர்கள்

பொம்டிலாவிலிருந்து கையிலெடுத்துச் செல்லக்கூடிய பொருள்களெல்லாவற்றையும் சீனர்கள் அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டனரென்பதாக, 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை எழுதியிருக்கிறது.

மனத்தூய்மை நம் போர் முரசு !

தியாகம் நமக்கு நிலாச் சோறு

சீனர்கள் பொம்டிலாவிலிருந்து தூக்கிச்கொண்டு சென்ற பொருள்களில் சில : 50 கி. வா. மின்விசை ஜெனரேட்டர் மருந்து ஸ்டாக்குகள். ஜில்லா ஆஸ்பத்திரியிலுள்ள சிகிச்சைக் கருவிகள், ஸ்பிரிங் மெத்தைகள், புத்தராலயத்திலிருந்த வெள்ளி உபகரணங்கள், ஜில்லா ஸ்டோர் நிலையத்திலிருந்த உணவு சாமான்கள், உருக்குத் தகடுகள் கம்பளி விரிப்புகள், இந்திய அதிகாரியின் வீட்டிலிருந்த சாமான்கள், டெலிபோன் கருவிகள் முதலியன.

முதலாளிகள் உபயோகிக்கும் அற்ப விஷயங்களான, சிட்டுக்கட்டு, பற்பசை ஆகியவற்றையும் சீனர்கள் ரசித்த அடையாளங்களை அக்கட்டடங்களில் விட்டுச் சென்றிருக்கின்றனர்.

அவர்கள் சில நாட்கள் தங்கிக் கொள்ளையடித்த வீட்டு வாசலில், "சொந்தக்காரர்கள் இல்லை, உள்ளே யாரும் வரக்கூடாது" என்ற அறிவிப்பை—கதவுகளில் ஒட்டிச் சென்றிருக்கின்றனர்.

சர்க்கார் பண்ணையிலுள்ள கால்நடைகளில், கொன்று தின்றதுபோக, மீதியைத் தங்களுடன் நடத்திச் சென்று விட்டனர். அங்கு அழகான ஜெர்சி பசுக்களும், ஹிசார் காளைகளும், கொழு, கொழுவென்றிருந்த யார்க்ஷைர் பன்றிகளும் இருந்தன; ரோட் ஐலண்ட் கோழிகள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தன: இன்று அவையொன்றும் அங்கில்லை.

அதிகாரிகளின் வீடுகளெல்லாம் சூறையிடப்பட்டு வெறிச்சோடிக் கிடக்கின்றன. பொருட்காட்சி சாலையிலிருந்த விலையுயர்ந்த பொம்மைகளையும் அரிய பொக்கிஷங்களையும் சீனர்கள் கொள்ளையடித்து சென்றுவிட்டனர்

இந்திய அதிகாரி இருந்த வீட்டில் உயர்தரச் சீன அதிகாரி தங்கியிருந்திருக்கிறார்கள். அவ்வீட்டை விட்டு அவர் செல்லும்போது அங்கிருந்த கக்கூஸ் சாதனங்களையும் பெயர்த்துச் எடுத்து சென்றுவிட்டார் :

### கொள்ளைக்கார சீனர்கள்

நேபாவில் காமெங் டிவிஷனில் சீனர்கள் தங்கியிருந்த போது நடத்திய அக்கிரமங்களும் அட்டூழியங்களும், புட் ஹில்ஸ் என்னுமிடத்திலிருந்து பொம்டிலாவுக்குச் செல்லும் வழியில இந்திய பத்திரிகையாளர்கள் கண்ட காட்சியாகும்.

சீனர்கள் புதைத்து வைத்திருந்த கண்ணிகளில் விழுந்து மடிந்த பசுக்களும் கன்று காலிகளும், மலைச்சரிவுகளிலும் சாலையோரத்திலும துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தன. சாலையோரமாக நின்ற தந்திக் கம்பிகளெல்லாம் களைந்து எறியப்பட்டுக் கிடந்தன.

சக்கரமும், எஞ்சினுமில்லாத மோட்டார் வாகனங்கள் வழி நெடுகிலும் காணப்பட்டன; புல் டோசர் ஒன்றைக் கண்டோம் ; அதிலுள்ள முக்கியமான பகுதிகளெல்லாம் அகற்றப்பட்டு இருந்தன.

### புத்த ஆலயத்தில் கொள்ளை

புனிதமயமான புத்த ஆலயத்துள்ளும் சென்று அங்குள்ள வெள்ளி விளக்குகளையும் பாத்திரங்களையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர்.

தூக்கிச் செல்ல முடியாத மேஜை நாற்காலிகளைச் சுக்கு நூறாக உடைத்து எறிந்திருக்கின்றனர். மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவுத் தானியங்களும், சப்ளைகளும் நிறைத்து வைக்கப்பட்டிருந்த சேமிப்பு கட்டடங்கள் இன்று வெற்றுக் கட்டடங்களாக தோற்றமளிக்கின்றன.

ஈவிரக்கமற்ற சீனர்களிடமிருந்து நாம் வேறெதையும் எதிர்பார்க்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் சீனாவின் ரேடியோ இராப்பகலாகப் பிதற்றுவதைக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கிறது ; அவர்கள் ஒரு ஈ காக்கைக்குக்கூடத் தீங்கு இழைக்கவில்லையாம ; மிகவும் நாகரிகமான முறையில் பின் வாங்கியிருக்கிறார்களாம் சீனர்களின் சொல்லிலிருந்த கடுகளவு நம்பிக்கைகூட அங்கு சென்றதும் காற்றாய்ப் பறந்து விட்டது என்பதாக அந்நிருபர் எழுதியிருக்கிறார்.

பொம்டிலாவில் தபால் நிலையம் வேலை செய்யத் தொடங்கியதும் சீனர்கள் விட்டுச் சென்ற நேபா பகுதிக்கும் அஸ்ஸாமுக்குமிடையே செய்தித் தொடர்பு ஏற்பட்டு விட்டது. தந்தித் தொடர்பு ஏற்படுவதற்கு இன்னும் ஒரு மாதமாகலாம். தந்திக் கம்பிகளைப் பிடுங்கி எறிந்து அவற்றிலிருந்த செப்புக் கம்பிகளைச் சீனர்கள் சுருட்டிச் சென்றுவிட்டனர்.

### இந்திய காவல் படையினரின் வீரம்

*சீனர்களின் நயவஞ்சகத்துக்கு ஈடு இணையே கிடையாது.*

அக்டோபர் மாத ஆரம்பத்தில் அவர்கள் நமது வீரர்களுக்குத் தேனீரும் சிகரட்டும் கொடுத்து மயக்கப் பார்த்தார்கள் 'அருமைச் சகோதரா' என்று மனங்குழைய அழைத்துப் பார்த்தனர். அதே சமயத்தில மாபெரும் தாக்குதலுக்கும் தயார் செய்து கொண்டிருக்கின்றனர்.

லடாக் காவல் படையைச் சேர்ந்த ஹவில்தார் ஸரூப் சிங்குக்கு நேர்ந்த முடிவு சீனர்களின் நயவஞ்சகத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

அக்டோபர் 20-ந் தேதி சீனர்கள் பெருமளவில் வந்து மோட்டார் பீரங்கிகளுடனும் தானே இயங்கும் துப்பாக்கிகளுடனும் தாக்கினார்கள்.

ஸரூப் சிங்கும், அவருடன் இரண்டு தோழர்களும் வீரமாகப் போரிட்டனர். அவர்களுக்கு அருகில் விழுந்த வெடி குண்டுக்குத் தோழர்கள் இருவரும் பலியாயினர்.

சுமார் 7 மணி நேரம கத தமது நிலையை எதிரிகளின் கையில் விடாமல் போராடிக்கொண்டிருந்த ஸரூபசிங் இறுதியில் மயக்கமுற்று விழுந்தார். நமது வீரர்கள் அவரைத் தூக்கிக்கொண்டு வந்து பின்னொரு நிலையில் சேர்த்தனர். அவர் அங்கு மரணமடைந்தார்.

வீரமிகுந்த ஸரூப் 500 தடவை சுட்டிருப்பார். எதிரிகளை முறியடிக்க வேண்டுமென்பதுதான், உயிர் பிரியும் வரையில் அவருடைய எண்ணமாக இருந்தது.

---

## தீரம் ஒன்றே புனல்விளையாட்டு

---



# தேசியப் பாதுகாப்பும் ஐந்தாண்டுத் திட்டமும்

திரு. ஸ்ரீமந் நாராயண், (திட்டக் கமிஷன் உறுப்பினர்.)

சீன ஆக்கிரமிப்பினால், தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறுத்தி வைத்துவிட வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். சமாதான காலத்தில் பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் பயனுள்ளவையாக இருக்கிறபோதிலும், எல்லைப் பாதுகாப்புக்காக ஒவ்வொரு துளி சக்தியையும் ஒன்று திரட்ட வேண்டிய இந்த யுத்த காலத்தில், திட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய கருத்தாகும். தற்கால பாதுகாப்பு நடவடிக்கைகளின் தன்மையைச் சரியாக உணர்ந்து கொள்ளாததன் காரணமாகத்தான் இக் கருத்து நிலவுகிறது. நமது பிரதம மந்திரி அடிக்கடி வலியுறுத்துவது போல, தற்கால யுத்தம் படை வீரர்களால் மட்டும் போர் முனையில் நடத்தப்படுவதல்ல. ஒவ்வொரு விவசாயியும், தொழிலாளியும், வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் கடுமையாக உழைத்து உற்பத்தியைப் பெருக்கி, யுத்த முயற்சிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும். அதாவது, வயல்களிலுள்ள ஒவ்வொரு விவசாயியும், ஆலைத் தொழிலாளியும் தேசிய நெருக்கடியின்போது படை வீரர்கள்தான். ஆகவே, நமது திட்டங்களை ரத்து செய்து காற்றில் விட்டுவிடாமல், ஐந்தாண்டுத் திட்டங்களைப் பல திசைகளிலும் தீவிரப்படுத்தி, வலுப்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும்.

பாதுகாப்புக் காரியங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படாத பல வேலைத் திட்டங்களின் செலவைக் குறைக்கவோ மாற்றியமைக்கவோ வேண்டிவரும். மூன்றாவது திட்டத்தில் விவசாயம், தொழில் உற்பத்தி போன்ற முக்கிய திட்டங்களுக்கு முதலிடம் அளிப்பதற்காக, சமூக சேவைச் செலவுகளை ஓரளவு குறைக்க வேண்டியிருக்கலாம். மின் விசை, வாகனப் போக்குவரத்து செய்தித் தொடர்பு. தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றின் ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டியிருக்கும். அவை பாதுகாப்புத் தேவைகளுக்கு இன்றியமையாதவை. கட்டட வேலைகளுக்கான செலவைக் குறைந்த பட்சமாகக் குறைக்கவேண்டும் ஆனால், மக்களின் தேவையையும் ராணுவத் தேவையையும் பிரதானமாகக் கருதி அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டிய விதத்தில் விவசாய—தொழிற்துறை திட்டச் செலவுகளைக் கணிசமாக அதிகரிக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் புது டில்லியில் கூடிய தேசிய அபிவிருத்திக் கௌன்சில், நெருக்கடி நேரத்திற்கேற்ப பல வேலைத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறபோதிலும், மூன்றாவது திட்டம் தேசியப் பாதுகாப்பின் இணைந்த அம்சமென்பதை வலியுறுத்தி இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில், பல்வேறு துறைகளையும் அம்மாதிரி மாற்றியமைப்பதற்காகத் திட்டக் கமிஷனும், சம்பந்தப்பட்ட மந்திராலயங்களும், ராஜ்ய சர்க்கார்களும் ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இம்மாதிரியான ஏற்பாடுகள் நமது பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும், நமது புனித பூமியிலிருந்து எதிரியைத் துரத்தியடிப்பதற்கும் துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சீனாவுடன் நாம் நடத்தும் போரின் காரணமாக எதிர்காலத்தில் நமது தேசியப் பொருளாதாரம் பெரும் சுமைகளைத் தாங்க வேண்டியிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. நமது வீரர்களின் உடனடித் தேவைகளுக்காக நமது ஆதார வசதிகளின் கணிசமான பகுதியை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதற்காகத் திருப்ப வேண்டியிருக்கும். மக்கள் ஐக்கியமாக இருக்கவேண்டுமென்றும், கடுமையாக உழைத்து எவ்விதத் தியாகத்துக்கும் தயாராக இருக்க வேண்டுமென்றும் நமது பிரதம மந்திரி விடுத்துள்ள வேண்டுகோளின்படி மக்கள் மகத்தான முறையில் ஒன்று சேர்ந்து நிற்பது மிகவும் திருப்தியளிக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளும் தொழிலாளர் சங்கமும், கல்வி ஸ்தாபனங்களும், சர்க்கார் சாரா ஸ்தாபனங்களும், தேசிய நெருக்கடியை வீரமாகவும், திடமாகவும் எதிர்த்து நிற்பதற்காக தங்களுடைய ஆதார வசதிகளையும், உழைப்பையும் இந்திய சர்க்காருக்குத் தர, தாமாகவே முன்வந்துள்ளனர். வர்த்தகத் துறையினர் மொத்த விலையையும், சில்லறை விலையையும் தாமாகவே முன்வந்து கட்டுப்பாடு செய்து அத்தியாவசிய பொருள்களின் விலையை ஸ்திரப்படுத்தத் தயாராகயிருக்கின்றனர். நமது மக்களின் பல்வேறு பிரிவினர் சர்க்காருடன் ஒத்துழைக்க மனமுவந்து முன்வந்திருப்பது வருங்காலத்தில் நமது பொருளாதாரத் திட்டங்களுக்குப் பெரிய ஆஸ்தியாக விளங்கப்போகிறது.

இந்திய சர்க்கார் தொடங்கியுள்ள பல்வேறு சேமிப்புத் திட்டங்களின் பலனாக மூன்றாவது திட்டத்துக்கு வேண்டிய சேமிப்புக் குறியளவுகளையும், சர்க்கார் கடன் குறியளவுகளையும் உயர்த்த முடிவதோடு, அதற்கு அடுத்தத் திட்டங்களுக்கும் அவ்வாறு உயர்த்த முடியும். சேமிப்புகளின் மூலமாக ஏராளமான மூலதனத்தைச் சேர்க்க மல் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை எந்த நாடும் தீவிரமாக்க முடியாதென்பதைக் கூறவேண்டியதில்லை சென்ற பத்தாண்டுகளாக இந்தியாவின் சேமிப்பு விகிதம் மிகவும் குறைவாகவும், சொற்பமாகவும் இருந்தது. தற்கால நெருக்கடி இந்தியாவின் சேமிப்பு விகிதத்தை அதிகரிக்குமென்றும், அது நெடுநாள் தொடர்ந்திருக்குமென்றும் நம்பலாம்.

இரண்டாவதாக, நமது விவசாய உற்பத்தியும், யுத்த கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். தொழிலாளர் விகித உற்பத்தி அதிகரிக்கவேண்டுமென்று நாம் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். ஆனால் அதன் பலன்கள் இதுவரையிலும் திருப்தியளிப்பதாக

இல்லை. நெருக்கடி நேரத்தில் தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் ஒருங்கிணைந்து முயற்சியில் ஈடுபட்டிருப்பது, விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும், நமது உற்பத்தி விஸ்தாரத்தைப் பெருக்கி பொதுவான பொருளாதார வளர்ச்சி வேகத்தையும் அதிகரிக்கும். இது நமது தேசீயப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள திட்டவட்டமான அனுகூலம் என்பதில் சந்தேகமில்லை. வருங்காலத்தில் தொழிலாளர் முதலாளி உறவு மிகவும் முன்னேற்றமடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷயத்தில், தொழிலாளர்களும், முதலாளிகளும், தமது உரிமைகளையும், கடமைகளையும் நன்கு உணர்ந்து தங்கள் பங்கை நிறைவேற்ற வேண்டும்.

மூன்றாவதாக தற்போதைய நெருக்கடி, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை நீண்டகால அடிப்படையில் ஸ்திரப்படுத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துமென்பதில் சந்தேகமில்லை. திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியில் உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஓரளவு வரம்பிற்குள் இருக்க வேண்டியது அவசியமாகும். இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் கணிசமான பலன்களை அளித்திருப்பதாகத் தெரியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் உபயோகிப்பவர்களும் தாமாகவே ஒத்துழைக்க முன்வந்திருப்பது இந்த அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் துணையாக இருக்கும். வருங்காலத்தில் பொருள்களை உபயோகிப்பவர்கள், மேற்கொள்ளப்படவிருக்கிற சிக்கன நடவடிக்கை உணவுத் தானியங்கள், துணி, பிற அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகளை ஸ்திரப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பது நிச்சயமாகும். யுத்த முயற்சிகளின் காரணமாக நிலவி வருகிற தற்போதைய சமூகப் பொருளாதார சூழ்நிலை இல்லாவிட்டால், நம்முடைய அத்தியாவசிய நோக்கங்களை நிறைவேற்றுவது மிகவும் கடினமான வேலையாக இருந்திருக்கும். ஆகவே இந்தப் போர் பல அம்சங்களிலும் இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அதற்கடுத்த திட்டங்களுக்கும் உறுதுணையாக இருக்கும்.

கடைசியாக, தற்போதைய நெருக்கடி நிலைமை, இந்தியாவில் சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்றுள்ள நமது லட்சியப் பாதைக்கு இடைஞ்சலாக இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். நமது யுத்த முயற்சிகளின் காரணமாக, நமது சோஷலிச லட்சியங்களையும் கோஷ்டி சேராக் கொள்கையையும் கட்டாயமாகக் கைவிட வேண்டியிருக்குமென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், அது முற்றிலும் தவறான கருத்து என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம். தற்போதைய யுத்த நிலைமைகளின் காரணமாக நமது நாட்டின் பொருளாதார நிலையில் ஏற்பட்டு வரும் சுமைகள், ஜனநாயக சோஷலிச சக்திகளையும், திட்ட ரீதியான பொருளாதார வளர்ச்சிகளையும் வலுப்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

<u>அண்ணலின் வாழ்வில்:</u>

## காலத்தின் அருமை

1929-ம் ஆண்டிலே பாபுஜி ஐக்கிய மாகாணத்தில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த நேரம். நாங்கள் ஒரு மூன்றாவது வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். பயணம் செய்யும்பொழுது ஓடும் ரயிலில்கூட, தன்னுடைய கடிதப் போக்குவரத்துக்களைக் கவனிப்பதோ, பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதோ பாபுஜியின் வழக்கம். மாலை சுமார் 5 மணியிருக்கும். தாள் கட்டுகளுடன் பாபுஜியின் கடிகாரம் முன்னால் இருந்தது. நான் அவருக்கு நேர் எதிரில் அமர்ந்து கொண்டிருந்தேன். என் கையில் கைக் கடிகாரம் கட்டிக் கொண்டிருந்தேன். மணி என்ன என்று பாபுஜி என்னைப் பார்த்துக் கேட்டார். என் கைக் கடிகாரத்தைப் பார்த்து 'சுமார் ஐந்து மணி' என்றேன். அவர் தன்னுடைய மூக்குக் கண்ணாடி வழியாக என் கைக்கடிகாரத்தை உற்றுக் கவனித்துவிட்டு ஐந்து மணியடிக்க இன்னும் ஒரு நிமிடம் இருப்பதைக் கவனித்துவிட்டார். கடிகாரத்தில் மணி பார்ப்பதுகூட பாபுஜிக்கு முக்கியமான ஒரு காரியம்தான். அப்படி ஒப்புக்கு மணி பார்ப்பதென்பது பாபுஜியிடம் இல்லை. நானும் சரியாகப் பார்க்கவில்லை என்பதல்ல நானும்தான் பார்த்தேன். ஐந்து அடிக்க ஒரு நிமிடம் இருந்தது. ஒரு நிமிடம்தானே என்று நான் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அவ்வளவுதான்! எழுதுவதை நிறுத்திவிட்டு "மணி ஐந்தா?" என்று பாபுஜி என்னைக் கேட்டார். 'இல்லை. பாபுஜி இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது' என்று குற்றம் புரிந்த ஒரு நிலையிலிருந்து நான் பதில் சொன்னேன். "காந்திலால் அப்புறம் கைக்கடிகாரம் எதற்காகக் கட்டிக் கொண்டிருக்கிறாய்? என்ன பிரயோஜனம்? நேரத்தின் மதிப்பை நீ கொடுக்கத் தயாராயில்லை. முப்பது கோடி நிமிடங்களில் எத்தனை நாட்கள் எத்தனை மாதங்கள் அடங்கியுள்ளன என்பது உனக்குத் தெரியுமா? நம்முடைய ஏழை நாட்டிற்கு எவ்வளவு காலம் அதனால் பாழாய்ப் போய்விடும் தெரியுமா? நான் எதற்காகச் சர்க்காவைப் பற்றிப் பேசுகிறேன் என்பதையே நீ புரிந்து கொள்ளவில்லை. நீ அறிந்த உண்மைக்கு நீ மதிப்பளிப்பதாகக் காணோம். சுமார் ஐந்து மணி" என்று சொல்வதற்குப் பதிலாக "ஐந்தடிக்க ஒரு நிமிடம் இருக்கிறது" என்று சொல்வதில் எவ்வளவு சக்தி விரயமாகிவிடும்?..." இப்படி கால் மணி நேரத்திற்கு மேல் எனக்கு டோஸ் கொடுத்துக் கொண்டேயிருந்தார். நல்ல காலம் மாலை உணவுக்கு நேரமாகி விட்டது! நான் தப்பித்தேன்!"

[காந்திலால் ஹரிலால்காந்தி. "படிப்பினைகள்—சிறியதும் பெரியதும்"]

---

நமது சமாதானக் கொள்கையும், கோஷ்டி சேராக் கொள்கையும் தீவிரப்படுத்தவேண்டியது அவசியம். தற்போதைய சூழ்நிலைகளில் அதைத் தளரவிட்டுவிடக்கூடாது. சோதனை காலத்திலும் தனது உயரிய லட்சியத்தைக் கைவிடாமல், மனோ உறுதியுடன் முன்னேறி வருகிற நாடு, போரில் மட்டுமின்றி, சமாதானத் துறையிலும் வெற்றிபெறும் என்பதில் சந்தேகமில்லை.



# சமாதான சகவாழ்வா? சர்வ நாசமா?

ரோமாபுரியில் நடைபெற்ற இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் அந்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், பால்மிரோ டோக்லியட்டி என்பவர், உரை நிகழ்த்திய போது சீனாவின் பெயரைக் குறிப்பிட்டுத் தீவிரமாகத் தாக்கினார். சீனாவின் அக்கிரமிப்பு 'அநியாயமானது முட்டாள் தனமானது' என்று தெளிவாகக் கூறினார். அது, சீன கம்யூனிஸ்ட் ராணுவ வெறியாளர்களின் தலைமையில் உழலும் சீன அரசாங்கம், உலக முற்போக்குக் கம்யூனிஸ்ட் கூட்டிலிருந்து, அனாதையாக விலக வேண்டுமென்று விடுத்த கடைசி உத்தரவு போலும்.

சமாதான சகவாழ்வுக் கொள்கையின் பலா பலன்கள் பற்றியும், கூட்டுச் சேரா நாடுகளின் ஸ்தானம் பற்றியும், கம்யூனிஸ்ட் நாடுகளிடையே கடுமையான கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதை அம்மகாநாடு சுட்டிக் காட்டுகிறது. உலகப் போர் தவிர்க்க முடியாததா? என்ற பிரச்னையும் உச்ச கட்டத்துக்கு வந்திருக்கிறது. கருங்கல்லை விடக் கெட்டியான சர்வதேசக் கம்யூனிஸ்ட் ஐக்கியம் சோதனைக்குள்ளாகி வருகிறது.

அந்தப் பிளவை, சீனர்கள் இவ்வளவு சீக்கிரம் முன் வந்து வாவேற்றுக் கூறி நர்த்தனம் வைப்பார்களென்று யார்தான் எதிர்பார்த்தார்கள்? குருஷ்சேவ், சோவியத் நாட்டின் தலைமையை ஏற்று, ஸ்டாலினின் வரட்டுக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் களையத் தொடங்கிய நாளிலிருந்தே பிளவு ஆரம்பமாயிற்று. குருஷ்சேவ் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் கையாளும் தாராளக் கொள்கை, தாங்கள் விரும்பும் கம்யூனிஸ்ட் தத்துவத்திற்குக் குழி தோண்டி விடுமோ என்று சீனர்கள் அஞ்சத் தொடங்கினர்.

### அவர்களுக்குள் வேறுபாடு

முதலில் ஒருவருக்கொருவர் மறைமுகமாகத் தாக்கிக் கொண்டனர். கம்யூனிஸ்ட் நாடுகளில் சுதந்திரமான நாடாகிய யுகோஸ்லாவியாவைப் பலி ஆடாக வைத்து, அந்நாடு ஏகாதிபத்தியத்துக்குப் பணிந்து விட்டது என்பதாகச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியது. ஆனால் அந்தக் கண்டனக்கணைகளெல்லாம் குருஷ்சேவையும் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியையும் நோக்கி விட்டவைகளே; குருஷ்சேவும் சளைக்கவில்லை. யுகோஸ்லாவ் பரிசோதனையின் உயரிய அம்சங்களைப் புகழ்ந்துரைத்துப் பதிலடி கொடுத்தார். சீனர்களின் தலைமையிலுள்ள கம்யூனிஸ்ட் கோட்பாடுகள் பொருத்தமற்றவை, வரட்டுத்தனமானவை என்ற எண்ணம் மெள்ள மெள்ள எங்கும் பரவத் தொடங்கியது.

கருத்து வேறுபாடுகள் வலுவடைந்து கடுமையாகத் தொடங்கியதும் அல்பேனியா என்னும் சின்னஞ்சிறு நாட்டின் பெயர் அடிபடத் தொடங்கியது. அல்பேனியாதான் கம்யூனிஸ்ட் கொள்கையின் உண்மையான பக்தர் என்று சீனா தம்பட்டமடித்தது. அல்பேனியா நாடு, கம்யூனிஸ்ட் கொள்கையைக் காட்டிக் கொடுக்கும் துரோகி என்று ரஷ்யா வருணித்தது.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் செல்வாக்குள்ள இத்தாலியக் கட்சி அல்பேனியாவைப் பற்றிப் பேசும் போது சீனாவையும் பெயர் சொல்லிப் பேச முன் வந்தது.

இந்தியா–சீனா பிரச்னையைப் பற்றி குருஷ்சேவ் தெள்ளத் தெளிவாகப் பேசத் தொடங்கினார்; உண்மை இப்போது வெளியாகிவிட்டது; கம்யூனிஸ்ட் நாடுகளிடையே அனாதையாகி, பெரும் நட்புக் கூட்டத்திலிருந்து ஆதரவற்றுத் தனித்து நிற்கும் சீனாவுக்குத் துணை சின்னஞ்சிறு அல்பேனியாதான்.

சீனர்கள் 'தோழர்கள்' என்று அழைக்கும் நாடுகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படக் காரணமென்ன வென்பதையும் கவனமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அதைத் தெரிந்து கொண்டால், இமயமலையில் நம்மை எதிர்த்து நிற்கும் எதிரியை முற்றிலும் தெரிந்து கொள்ள முடியும்.

### ரஷ்யாவின் கொள்கை

போரையும், அமைதியையும் பற்றிய அவர்களிடையே ஆழமான கருத்து வேறுபாடு நிலவுகிறது.

ரஷ்யா கூறுவது இதுதான்: கம்யூனிஸ்டு நாடுகளெல்லாம் ஒன்று திரண்டு வலுவாக இருக்கின்றன; இந்தியா போன்ற பல நாடுகள் விடுதலையடைந்து சுதந்திர சக்திகளாக விளங்குகின்றன; அந்நாடுகளின் கோடிக்கணக்கான மக்கள் போரை வெறுக்கிறார்கள்; முதலாளித்துவ நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கம் ஒன்று திரண்டு நிற்கிறது; உலகை அழிக்கும் சக்தி வாய்ந்த அணு ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் போரைத் தவிர்ப்பது மிகவும் சாத்தியமே; மேலும் போர், தவிர்க்க முடியாததல்ல. முதலாளித்துவமும், சோஷலிஸமும் அருகருகே இருக்கும் போதும்கூட, போரை மனித வாழ்க்கையிலிருந்து ஒழித்துவிட முடியும்.

### சீனர்களின் வரட்டு வாதம்

ரஷ்யாவின் இக்கொள்கையைச் சீனத் தலைவர்கள் வரட்டுத்தனமாக மறுக்கின்றனர். ஏகாதிபத்திய சக்திகள் போரைத் தொடங்கச் சிறிதும் தயங்காது. அவைகளுக்கிடையே கூடப் போர் நடைபெறுவது இன்னும் தவிர்க்க முடியாததாகவே இருக்கிறது; ஏகாதிபத்திய சக்திகளை அடியோடு அழித்தால்தான், போரையும் அறவே ஒழிக்க முடியும். இதுதான் சீனர்களின் வாதம், அவர்கள் தங்கள் முரட்டு வாதத்தை, தற்காப்பு என்ற நுட்பமான சொற்களில் மூடி மறைக்கின்றனர்.

# யுத்த வெறியர் யார் ?

நாம் யுத்த வெறியர்களென்றும், ஏகாதிபத்திய வெறியர்களென்றும் பீகிங் நமக்குப் பட்டம் கட்டுகிறது ! யார் யுத்த வெறியர்கள் ?

உலக சமாதானத்துக்காக நாம் அரும்பாடுபட்டுவந்ததை உலக நாடுகள் அனைத்துமே அறியும். நம்முடைய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிவைத்து, இந் நாட்டு மக்களை சுபிட்சப் பாதையில் அழைத்துச் செல்லு வதற்கு நாம் அமைதியை விரும்பினோம்.

நமக்கு மாத்திரமா நாம் அமைதியை நாடினோம் ? இந்தச் சீனாவும் அடங்கிய ஆசியா முழுவதுக்கும்—ஏன் உலகம் முழுவதிலுமே சாந்தி நிலவவேண்டுமென்று நாம் படாதபாடுபட்டு வந்தோம் என்பதை உலகமே அறியும். இதுவா போர் வெறி ?

நாடு பிடிக்கும் ஆசை நமக்கு என்றுமே கிடையாது. நம்முடைய உள்ளத் தூய்மையை சீனாவே ஒப்புக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நம்முடன் சீனா " பஞ்சசீல " ஒப்பந்தம் செய்துகொண்டது. பஞ்சசீலத்தைத் துச்சமாக மதித்துப் பறக்கவிட்டது யார் ? நாடு பிடிக்கும் பேராசைக் கொண்டு, நம் நாட்டை ஆக்கிரமித்திருக்கும் சீனாவா ? அல்லது, ஆக்கிரமிப்புக்கு உடபட்டிருக்கும் இந்தியாவா ?

ஆசியாவில் அமைதி நிலவும் பொருட்டே, சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஆதிமுதலே நாம் ஆதரித்து வந்தோம். மற்ற நாடுகளெல்லாம் அதை ஒதுக்கிவைத்திருந்தபோது, நாம் நட்புக் கரம் நீட்டி ஆதரவு கொடுத்தோம்.

அதற்கு சீனா நமக்குச் செய்திருக்கும் பிரதி உபகாரம் ? நயவஞ்சகமும், நாடு பிடிக்கும் படையெடுப்பும் !

சீன கம்யூனிஸ்ட் தலைவர்கள், "ஒரே தாவில்" சுபிட்சத்தை எட்டிவிடுவதாகச் சீன மக்களிடையே பறை சாற்றி வந்தனர். அவர்கள் போட்ட பொருளாதாரத் திட்டங்கள் குலைந்துபோயின. சுபிட்சம் கானல் நீராகி விட்டது. ஆனால் அவர்கள் மட்டும் தாவாமல் இருந்துவிடவில்லை ! ஒரு லட்சம் சீனர்களை நம் இமயத்தைத் தாண்டி தூக்கி எறிந்துவிட்டனர், சீனத் தலைவர்கள்.

சீனா என்ன ஜனநாயக நாடா, அரசாங்கம் தவறை உணர்ந்து திருத்திக்கொள்ள ? சர்வாதிகார ஆட்சி நடக்கும் சீனாவில் ஆட்சியாளரின் தவறுகளுக்கெல்லாம் மக்கள்தான் பொறுப்பாளி—தலைவர்கள் அல்ல! ஆட்சியாளர் செய்யும் தவறுகளின் விளைவுகளை மறைப்பதற்கு ஒரு போரைத் துவக்கிவிடுவதுதான் அவர்கள் மரபு !

அந்த மரபில் தோன்றியதே, இப்போது அவர்கள் நம் மீது நடத்தியிருக்கும் படையெடுப்பு.

---

[35-ம் பக்கத் தொடர்ச்சி]

### சீனத் தலைமையின் குதர்க்க வாதம்

இரண்டாவது சண்டை, சோவியத் ரஷியாவின் இன்னொரு கருத்து பற்றியதாகும். உலகத்தில் மாறுதல் ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில், முதலாளித்துவ நாடுகளிலும்கூட, சமாதான வழிகள் மூலமாகவும், பார்லிமெண்டரி முறைகள் மூலமாகவும் சோஷலிஸத்தை அடையமுடியும் என்கிறது ரஷியா.

இதை ஏற்றுக்கொள்ள சீனா தயாராக இல்லை. முதலாளித்துவ நாடுகளை ஒழித்துக்கட்டாமல் சோஷலிஸத்தை நோக்கி முன்னேற முடியாது என்று, கிளிப் பிள்ளைகள் போல, சொன்னதையே திருப்பிச் சொல்கிறது. உலக சூழ் நிலையைக் கவனிக்க மறுக்கிறது.

மூன்றாவதாக, சோவியத் யூனியன், சமாதான சக வாழ்வுக் கொள்கையை அளவுக்கு மீறி வலியுறுத்தி, தேசிய விடுதலை இயக்கத்தின் வேகத்தை குறைத்து வருவதாக சீனா குற்றம் சாட்டுகிறது.

### இந்தியாவின் கூட்டு சேராக் கொள்கை

அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுள்ள நான்காவது அம்சம், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளவை சம்பந்தப்பட்டதாகும். புதிதாக சுதந்திரமான நாடுகளுடன் சோவியத் ரஷியா நேசமாக இருப்பது, அந்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுடன் சரணாகதியாவதற்கு ஒப்பாகும் என்பதாகச் சீனா கருதுகிறது. அவர்களுக்கு உதவியெதுவும் அளிக்காமல் மேற்கு நாட்டுக் கூட்டுகளுடன் சேரும்படி நிர்பந்தித்தால்தான், அந்நாடுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்த முடியுமென்றும், அதற்குப் பிறகு அந்த சர்க்கார்களைச் கவிழ்க்க மக்களைத் தூண்டலாமென்பதும் சீனாவின் கருத்தாகும். இவ்விஷயமாக குருஷ்சேவுக்கும் சீனாவுக்குமிடையே கடுமையான சொற்கள் பரிமாறப்பட்டன.

இந்தத் தந்திரம் பலிக்கவில்லை. இந்தியாவின் கூட்டுச் சேராக் கொள்கை இன்னும் புத்தொளியுடன் துலங்குகிறது ; இரண்டு கோஷ்டி நாட்டுத் தலைவர்களும் நம்மைப் பாராட்டுகின்றனர். நம்மைப் பொறுத்தவரையில் அது மகத்தான சாதனையாகும்.



# சீனாவின் போர் வெறி

**சம்பாதி**

கம்யூனிஸ்ட் சீன அரசாங்கத்தின் 13 ஆண்டு கால ஆக்கிரமிப்பு வெறிக்கு சிகரம் வைத்ததுபோல அமைந்திருக்கிறது, இந்தியாவின் மீது சீனா நடத்தியிருக்கும் பெரும் படையெடுப்பு.

" சீன மக்கள் குடியரசு " அரசாங்கம் 1949 அக்டோபர் 1-ந் தேதியன்று அதிகாரத்தைக் கைப்பற்றியது ; அந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள்ளாகவே சீனாவின் பிரதான நிலப் பரப்பு முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து விட்டது. ஆனால் " மக்கள் குடியரசின் " ஆக்கிரமிப்பு வெறி என்னமோ தணியவில்லை ; வேறு எந்த இடங்களை எல்லாம் பிடிக்கலாம் என்று சதியாலோசனை செய்யத் தொடங்கியது. அதன் பார்வையில் முதலில் விழுந்தது இந்தோ-சீனா. அந் நாட்டில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த உள் நாட்டுக் கலகம் சீனத் தலைவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பையும் அளித்தது ; வடக்கு வியட்நாம் மக்களுக்கு ஆயுதங்களையும், " தொண்டர் படை "களையும் கொடுத்து உதவ முன்வந்தனர் ; இந்தோ-சீனாவில் உள் நாட்டுப் போர் தீவிரமடைந்தது ; பீகிங் தலைவர்கள் தங்கள் சூழ்ச்சி பலித்ததைக் கண்டு பெருமிதமடைந்தனர்.

அடுத்தபடியாக அவர்கள் கண்களில் பட்டது கொரியா. 1950-ல் கொரியாவில் மூண்ட உள்நாட்டுப் போரில் சீனா நேரடியாகவே தலையிட்டது ; வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்குமிடையே நடைபெற்றுவந்த உள்நாட்டுச் சண்டையில் ஆயிரக்கணக்கான சீனத் துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டன. வட கொரியாவுக்கும் தென் கொரியாவுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் நியாய அநியாயம் ஒரு பக்கம் இருக்க, நீதியை நிலை நிறுத்துவதற்காக சீனா அந்தப் போரில் ஈடுபடவில்லை ; சீனாவின் போர் வெறியும், ஆதிக்க வெறிபிடித்த சீனத் தலைவர்கள் நாற்றிசைகளிலும் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட வேண்டுமென்று கொண்டிருந்த பேராசையுமே, சீனாவைக் கொரியாப் போரில் ஈடுபடத் தூண்டியதென்று சொல்ல வேண்டும்.

அதற்கு அடுத்த ஆண்டு சீனாவின் ஆதிக்க வெறிக்கு இலக்காகிய நாடு திபெத் ; திபெத் அரசாங்கத்தின் பிரதிநிதிகளை வரவழைத்து மிரட்டி, சீனா திபெத்தை ஆக்கிரமித்துக்கொள்ள அனுமதிக்கும் ஒப்பந்தமொன்றில் கையெழுத்து வாங்கிவிட்டனர். திபெத்தின் சுயாட்சி பாதுகாக்கப்படும் என்பதாக அந்த ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்து இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அவர்கள் அகராதியில் அதற்கு என்ன பொருள் என்பதை இப்போது உலகமே கண்டு கொண்டது.

1953-ல் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹன்ஜா ராஜ்யத்துக்குள் சீனர்கள் நுழைந்தனர் ; அச்சமயம் பாகிஸ்தானில் வெளிநாட்டு மந்திரியாக இருந்த மி. முகம்மது ஜபருல்லா கான் அது பற்றி சீன அரசாங்கத்திடம் கடுமையாக ஆட்சேபித்தார்.

பிறகு சீனாவின் பார்வை இந்தியாவின் பக்கம் திரும்பிற்று. 1954-ல் முதல் தடவையாக உத்தரப் பிரதேசத்தில், எல்லையைக் கடந்துவந்து, பாரஹாதி என்ற ஊருக்குள் நுழைந்துகொள்ள முயன்றனர்.

இந்தியா, பர்மா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் அமைந்துள்ள எல்லை நெடுகிலும், நுழைவதற்கு வாகான இடம் எங்கெல்லாம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதே அப்போது சீனரின் நோக்கமாக இருந்ததென்றே தோன்றுகிறது.

1956-ல் பர்மா எல்லையில் சுமார் 1,000 சதுர மைல் பிரதேசத்தைச் சீனர்கள் பிடித்துக் கொண்டனர். 1960-ல் சீனத் துருப்புகள் நேபாளத்துக்குள் நுழைந்து, ஒரு நேபாள அதிகாரியைச் சுட்டுக்கொன்று, நேபாளப் படையினர் இருவரையும் சிறைப்பிடித்தனர். எவரெஸ்டு மலை முழுவதும் தங்களுக்கே சொந்தம் என்றும் சீனர்கள் உரிமை கொண்டாடினர்.

சீனர்கள் 1959-ல் திபேத்தின் மீது படையெடுத்து, தலாய் லாமாவை அந்நாட்டிலிருந்தே விரட்டியடித்து விட்டனர்.

ஆனால், தெற்கிலும் வடக்கிலும் சீனரின் எல்லையில் பெரும்பகுதி இந்தியாவை ஒட்டியே இருப்பதால் சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்த எல்லைப் பகுதியில்தான் மிகக் கடுமையாக இருந்தன.

1959-ல், லடாக்கிலும், நேபா பகுதியிலும், இந்தியப் பிரதேசத்தில் பெரும் பகுதி தங்கள் நாட்டைச் சேர்ந்ததென்று சீனர்கள் கோரினர். அதே சமயத்தில் பல இடங்களில் பகிரங்கமாகவே சீனர்கள் இந்திய எல்லையை மீறி இந்தியப் பிரதேசத்தைக் கைப்பற்றத் தொடங்கினர்.

சீனரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் 1962, அக்டோபர் 20-ந் தேதி உச்ச கட்டத்தை எட்டியது. சீனர்கள் லடாக்கிலும், நேபாவிலும் பெரும் அளவில் தாக்குதல்கள் நடத்தினர். சீனரின் இந்த துரோகச் செயலை நாகரீக உலகம் முழுவதுமே வன்மையாகக் கண்டனம் செய்திருக்கிறது ; கம்யூனிஸ்டு நாடுகள் பலவுங்கூட சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்துள்ளன.

---

## பண்டைத் தமிழகம் வீரர் கோட்டம்

# சபதம் கொள்வோம்

நாமக்கல் கவிஞர்

1. *பஞ்சாயத்தின் பகுதியைச் சேர்ந்த
இங்கேகூடி யிருக்கிற நாங்கள்
சத்தியம் செய்தொரு சபதம் கொள்வோம்
இந்திய நாடு எந்த நாளிலும்
அண்டைச் சீனரின் அரசாங்கத்துடன்
நல்லெண்ணத்துடன் நட்புகொண் டாடியே
நடந் திருப்பதை நானிலம் அறியும்.
ஒருவர் சுதந்திரம் ஒருவர் மதித்து
ஒருவருக் கொருவர் ஊறுசெய் யாமல்
ஒருவர் ஆட்சியில் ஒருவர் தலையிடார்
அவரவர் கொள்கை அவரவர் கொண்டு
சமாதானமாய்ச் சகவாழ்வு நடத்த
ஒருவருக் கொருவர் உறுதி கூறி
பஞ்ச சீலத்தின் படியே நடப்பதாய்
வாக்களித் திருந்தும், வஞ்சகச் சீனர்கள்
மண்ணாசை கொண்டோ மற்றாசை உண்டோ
நல்லெண் ணத்தையும் நட்புறவொடு
பஞ்சசீலத்தையும் பறக்கவிட்டுத்
திருட்டுத் தனமாய்த் திட்டமிட்டிருந்து
நடக்கா தென்றே நம்பி யிருந்த நாம்
திடுக்கிடும் படியாய்த் திடுமெனப் பாய்ந்து
பாரதத் தின்மேல் படையெடுத் தார்கள்.

2. அப்படி யிருந்தும் அஞ்சாநெஞ்சராய்
எல்லையைக் காக்க எதிர்த்து நின்று
புலிபோற் சீறிப் போர்புரிந் திட்ட
ஜவான் களொடு தளபதி பலரின்
வீரச் செயலையும் தீரப் புகழையும்
பாராட்டிச் சரித்திரப் பேரேட்டில் திகழப்
பொன்னெழுத்துக்களில் பொறித்து வைப்போம்.
பெற்ற தாயின் பெருமையைக் காத்துப்
பிறந்த பொன் நாட்டின் ஒருமையைப் பேணிச்
சாவிடை மாண்டு அமரர்க ளாகிய
தீரர்கள் புரிந்துளத் தியாகத்தை மெச்சி
நெஞ்சுற வணங்கி அஞ்சலி செய்வோம்.

3. சீனப் படைகள் ஈனமாய்த் தாக்கிய
அக்ரமச் செயலை அறிந்திட்ட வுடனே
அபாய நிலையின் அளவை உணர்ந்து
அவசரத் தேவையை நன்குணர்ந்து
வியக்கத்தகுந்த விறுகொண் டெழுந்து
நெருக்கடி நிலையை நீக்கிடத் துடித்துப்
பணமும் ஆளும் படைமும் ஆகிய
தேசத் தின்பலம் முழுவதையும் திரட்டி
இந்நாட்டிலுள்ள எல்லா மக்களும்
சாதி, கட்சி, சமயம் என்றே
வேற்றுமை யாவும் விட்டொழித் தவராய்
ஒருமனப் பட்டு ஒத்துழைப் பதனைப்
புகழ்ந்து பேசிட வார்த்தைகள் போதா.
நாட்டவர்க் கெல்லாம் நன்றி செலுத்தி
வாயார மனமார வாழ்த்தி மகிழ்வோம்.

4. சுதந்தர ஜோதியும் தியாகச் சுடரும்
புத்தொளி பரப்பி புதுஉணர் வூட்டி
இந்தியத் தாயின் சொந்த சுதந்திரம்
பறிபோ காமல் பாதுகாத் திடவும்
ஒருமைப் பாட்டை உறுதியாக்கவும்
அனைவரும் தம்மை அர்ப்பணம் செய்திடத்
துடிக்கிற நிலையைத் தூண்டிவிட் டுள்ளப்
புதுமையைக் கண்டு பூரிப் படைகிறோம்,

5. பதிகாரச்சீனரின் படையெடுப் பினையும்
அவர்கள் புரிந்துள ஆக்கிர மிப்பையும்
எதிர்த்திட வேண்டிய இக்கட்டு நேர்ந்தச்
சங்கட நிலையைச் சமாளித்திட
உடனடியாக நம் உதவிக்கு வந்து
அவசிய மாகிய ஆயுதங்களையும்
தளவாடங்களும் தார்மிக பலமும்
அநுதாபத்துடன் அள்ளிக் கொடுத்துள
நட்பு கொண்டாடும் நாடுகட் கெல்லாம்
வணக்கத் தோடு நன்றி வழங்குவோம்.

6. ஆக்கிரமித் தவர்களை அப்புறப் படுத்திநம்
புண்ணிய பூமியின் மண்ணைவிட் டவர்கள்
ஓடிச்செல்லும் வரைக்கும் ஓய்ந்திட மாட்டோம்
எப்படிக் கடுமையாய் எத்தனைக் காலம்
போராட வேண்டினும் சோராது புரிவோம்
என்னும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்வோம்.

7. இந்தத் துணிவுடன் இங்குள நம்முடைப்
*பஞ்சா யத்தின் பலமெலாம் திரட்டிப்
பொன்னும் பொருளும் போராடத் தக்க
ஆள்பலம் முதலிய அனைத்தும் உதவி
இந்தியத் தாயின் இப்பெரும் முயற்சியில்
நாது கடமையாம் நம்முடைப் பங்கைச்
செலுத்திடு வோமெனச் சபதம் செய்கிறோம்.

ஜெய் ஹிந்த் !

* பஞ்சாயத்து என்று வருகின்ற இடங்களில் உங்கள் ஊர் பஞ்சாயத்தின் பெயரைச் சேர்த்து படிக்கவும்





# ஆக்கிரமிப்பை எதிர்க்கும் மக்கள் சக்தி

## லடாக் மக்கள் பிரதிக்ஞை

லடாக் எல்லைப்புற ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் நகரமும் இமயமலையைக் காப்பதற்கு வேண்டிய சக்தி முழுவதையும் திரட்டுவதில் இப்போது முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கிறது.

இதுகாறும் அமைதி நிலவிவந்த சிறு சிறு குக்கிராமங்களெல்லாம் "ஆக்கிரமிப்புப் பேயை ஒழித்துக்கட்டுவோம்" என்ற குரல் எழுப்பி வருகின்றன.

சீன ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக ராணுவத்தில் சேரப் புறப்படும் இளைஞர்களை அவர்களுடைய பெற்றோர்கள் பெருமிதத்துடன் வாழ்த்தி வழியனுப்புகின்றனர்; இளம் மனைவியர்கள் உள்ளுறுவலுடன் தங்கள் கணவன்மார்களுக்கு விடைகொடுத்து அனுப்புகின்றனர். கிராமம் முழுவதுமே "ஆக்கிரமிப்புப் பேயை ஒழித்துக்கட்டுவோம்" என்று ஆவேசக்குரல் எழுப்பி அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவைக்கிறது.

### படைக்கு ஆள் அனுப்பக் குடும்பங்கள் போட்டி

ராணுவத்துக்கு மிக அதிக நபர்களை அனுப்பிவைக்க ஒவ்வொரு குடும்பமும் போட்டி போட்டுக்கொண்டு முன் வருகின்றது.

லடாக் விவகார மந்திரி, ஸ்ரீ குஷக் பகூலா, சீனர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் தனது ஒரே புதல்வனைப் பறிகொடுத்த வயது முதிர்ந்த ஒரு தாயைச் சந்தித்தபோது போர் முனைக்கு மீண்டும் அனுப்பத் தனக்கு வேறொரு புதல்வன் பேறு இல்லையே என்று அந்த வீரத்தாய் மிகவும் வருந்தினாள்.

ஜன நெருக்கம் அவ்வளவாக இல்லாத லே தாலுகாவில் மட்டுமே நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் சைனியத்தில் சேர முன்வந்துள்ளனர்; அவர்களில் பெரும்பாலோர் ஏற்கெனவே ராணுவப் பயிற்சி பெற்று வருகின்றனர். மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த உற்சாகம் தொலைதூரப் பிரதேசங்களுக்குக்கூட பரவியிருக்கிறது.

### பெண்களின் உற்சாகம்

லடாக்கில் நூப்ரா டள்ளத்தாக்கு வாசிகள் சமீபத்தில் நடத்திய பொதுக்கூட்டமொன்றில், சீன அக்கிரமிப்பாளர்கள் நமது புனித மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படுவது வரையில் போராடுவோம் என்று ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள். அக்கூட்டத்திலேயே தேசியப் பாதுகாப்பு நிதிக்காக ரூ. 1,000 நன்கொடை திரட்டப்பட்டது.

பாதுகாப்பு முயற்சிகளில் பங்கெடுத்துக்கொள்ளப் பெண்கள் பேரார்வத்துடன் முன்வந்துகொண்டிருக்கின்றனர். பல பெண்கள் ஓரிடத்தில் கூடி நமது ஜவான்களுக்காகக் கம்பளிக் கால் உறைகள், கம்பளிக் கை உறைகள், குல்லாய்கள் ஸ்வெட்டர்கள் முதலிய கம்பளி உடுப்புகளைப் பின்னிக் கொண்டிருக்கும் காட்சி, இப்போது லடாக்கில் சர்வ சாதாரணமாய் விட்டது. இளம் பெண்கள் முதல் உதவியிலும் வீட்டு சிகிச்சையிலும் பயிற்சி பெற்று வருகின்றனர். லடாக்கியப் பெண்கள் ஏராளமான பேர் நர்ஸ் பயிற்சி பெறுவதற்காகத் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருக்கின்றனர்.

### பரம ஏழையின் பரோபகாரம்

தேசியப் பாதுகாப்பு நிதிக்கு ரொக்கமாகவும் பொருளாகவும் நன்கொடைகள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. லடாக்கின் தலைமை லாமா, ஸ்ரீ பகூலா சமீபத்தில் லடாக்கின் தொலைதூரப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். ஆங்காங்கே சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாதபடியால், விமானம், ஜீப்புகள், மட்டக் குதிரை முதலிய பல்வேறு சாதனங்களையும் அவர் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று; சில இடங்களில் அவர் நீண்டதூரம் நடந்தே சென்றிருக்கிறார்.

அவர் சென்றவிடங்களிலெல்லாம் பரம ஏழைகள்கூட தேசிய முயற்சிக்குத் தங்களுடைய காணிக்கைகளைச் செலுத்தியிருக்கின்றனர். போர் முனையில் பங்கெடுத்துக் கொள்ள இயலாத நிலையிலுள்ள மக்கள் தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள பிரதிக்ஞைக்கு ஒரு அடையாளமாக ரொக்கமாகவும், உணவுத் தானியங்களாகவும், கம்பளி உடுப்புகளாகவும் மட்டக் குதிரைகளாகவும் நன்கொடைகள் வழங்கியிருக்கின்றனர்.

### பௌத்தர்கள், முஸ்லீம்கள் பிரார்த்தனை

எதிரிகளுடன் நடத்திய போராட்டத்தில் உயிர்நீத்த வீரர்களுடைய குடும்பங்களின் நலன்களை அந்தந்த கிராம மக்களே கவனித்துக்கொள்கின்றனர். அத்தகைய குடும்பங்களுக்கு ஜம்மு-காஷ்மீர் சர்க்கார் உடனடியாக ரொக்க உதவியும் அளித்து வருகின்றனர். லடாக் விவகார மந்திரி, சமீபத்தில் மேற்கொண்டிருந்த சுற்றுப் பிரயாணத்தின்போது, அத்தகைய குடும்பங்களுக்கு மொத்தம் 4,500 ரூபாயும் உணவுத் தானியங்களையும் விநியோகம் செய்தார்.

லடாக்கிய பௌத்தர்களும் முஸ்லிம்களும், நமக்கு வெற்றி துரிதமாகக் கிடைக்கவேண்டுமென்று, பௌத்த மடாலயங்களிலும் மசூதிகளிலும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தியிருக்கின்றனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

### தேசிய மாணவர் படையின் சிறந்த சேவை

நவம்பர் 19-ந் தேதியன்று, சீன ஆக்கிரமிப்பாளர்களின் பேரபாயத்துக்கு இலக்கா கியிருந்த தேஜ்பூரில், தேசிய மாணவர் படையினர் கஷ்டமான நிலைமைகளை மிகவும் திறமையாகவும் ஒழுங்காகவும் சமாளித்த விதத்தை அஸ்ஸாம் கல்வி அமைச்சர். ஸ்ரீ தேவ் காந்த் பருவாவும், தேஜ்பூர் டெபுடி கமிஷனர், ஸ்ரீ கே. டி. என். சிங்கும் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர். சீனர்கள் மேலும் முன்னேறி வரக்கூடும் என்ற ஓர் அபாய நிலைமையை எதிர்பார்த்து, ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேஜ்பூர் மக்கள் அந்நகரைவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த ஆண் கேடட்டுகளும், பெண் கேடட்டுகளும் தேஜ்பூர், கௌஹாத்தி, நௌகாங், திப்ருகார் ஆகிய ஜில்லாக்களிலுள்ள மக்களுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்தார்கள். அங்கிருந்து வெளியேறிச் செல்லும் அகதிகளை மோட்டார் வண்டிகளிலும், இதர வாகனங்களிலும் ஒழுங்காக ஏற்றியனுப்புவது, பிரம்மபுத்திராவின் இரு கரைகளிலும் பிரயாணிகள் போக்குவரத்தையும், வாகனப் போக்குவரத்தையும் ஒழுங்குபடுத்துவது ஆகிய பொறுப்புக்களை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். மக்களின் மூட்டை முடிச்சுகளை—முக்கியமாய் வயோதிகர்கள், நோயாளிகள் ஆகியோரின் சாமான்களை கேடட்டுகள் சுமந்து சென்றனர். அந்தத் துன்பகரமான காட்சிகளைக் கண்டு மனமிளகிப் போன கேடட்டுகள், தங்களுடைய அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது, அம்மக்களெல்லாம் பந்தோபஸ்தாக அந்நதியைக் கடந்து செல்லும் வரையில், இரவு பகலாகப் பாடுபட்டார்கள்.

#### காலத்தில் செய்த உதவி

அவ்வாறு இடம் பெயர்ந்து வந்த மக்களை வரவேற்று இருக்கச் செய்வதற்காக அஸ்ஸாம் சர்க்கார் பல முகாம்களை அமைத்திருந்தனர். அம்மக்களின் சௌகரியங்களைக் கவனித்துக் கொள்வதற்காக, அஸ்ஸாம் கல்வி மந்திரி, கல்லூரிப் பிரின்ஸிபால்களையும், தலைமை ஆசிரியர்களையும், தலைமை ஆசிரியைகளையும் அங்கே அனுப்பிவைத்தார். அம்முகாம்களில் தேசிய மாணவர் படையினர் அகதிகளை வரவேற்று, அவர்களுக்குப் பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்தனர், அகதிகளுக்கான உணவு விடுதிகளை அவர்கள் கவனித்துக் கொண்டனர். அம்முகாம்களின் இரவு ரோந்து வேலைகளையும் அவர்கள் மேற்கொண்டனர். உணவு விநியோக ஏற்பாட்டை மேற்பார்வை செய்ததோடு, உணவைப் பரிமாறவும் செய்தனர்.

---

## தேசியப் பாதுகாப்புச் மன்றத்தின் இரண்டாவது கூட்டம்

### பிரதமர் தலைமையில் நடைபெற்றது

தேசியப் பாதுகாப்புச் மன்றத்தின் இரண்டாவது கூட்டம் டெல்லி ராஷ்டிரபதி பவனில், பிரதம மந்திரியின் தலைமையில் நடைபெற்றது. பிரதம மந்திரி, சபையின் முதலாவது கூட்டம் (நவம்பர் 25-ந் தேதியன்று) நடைபெற்றதற்குப் பிறகுள்ள நிலவரம் பற்றியும், அபிவிருத்திகள் பற்றியும் விவரித்தார். நாட்டின் பாதுகாப்புக்கு முழு மூச்சுடன் நடவடிக்கை எடுத்துவர நாடு முழுவதிலும் மக்கள் உறுதி கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்,

நவம்பர் 26, டிசம்பர் 17-ம் தேதிகளில் நடைபெற்ற ராணுவ விவகாரக் கமிட்டிக் கூட்டங்களில் இடம்பெற்ற விவாதங்கள் பற்றிப் பாதுகாப்பு மந்திரி, சபைக்குத் தெரிவித்தார். பாதுகாப்புப் படையினரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பல்வேறு ராஜ்யங்கள் வழங்கியுள்ள சலுகைகள் பற்றியும் அவர் குறிப்பிட்டார். பெரும்பாலான ராஜ்யங்கள் யுத்த நடவடிக்கைகளில் கொல்லப்பட்டவர் அல்லது அங்கஹீனமடைந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிதி உதவியாக மொத்தமான தொகைகளை வழங்கி இருப்பதுடன், அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வியளிப்பதற்கும் ஏற்பாடு செய்துள்ளது பற்றியும் அவர் தெரிவித்தார். பல ராஜ்யங்கள், நெருக்கடி நிலை நீடிக்கும்வரை சம்பந்தப்பட்ட ராஜ்யங்களைச் சேர்ந்த படை வீரர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதிகளை அளித்து வரத் தீர்மானித்துள்ளது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

உள்விவகார மந்திரி, பொது உறவுகள் கமிட்டி செய்துள்ள வேலைகளின் விவரங்களை வெளியிட்டார். தகவல்களைப் பரப்புவது சம்பந்தமாக இக் கமிட்டி உபயோகமான பல யோசனைகளைத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரஜைகள் மத்திய சபையின் நடவடிக்கைகள் பற்றி அச் சபையின், தலைவர் இந்திரா காந்தி விவரிக்கையில், சிவில் ஆதாரங்களை உச்ச அளவு திரட்டுவதற்கு வகை செய்வதில் ராஜ்ய சபைகளின் வேலைகளையும், சுயேச்சை ஸ்தாபனங்களின் வேலைகளையும் ஒருமுகப்படுத்துவதுதான் மத்திய சபையின் முக்கிய பொறுப்பாகுமென்று கூறினார். இந்தச் சபை, நிதி வசூல், பொது மக்கள் ஒத்துழைப்பு, படையினர் குடும்பங்களின் நலன் படையினர் சௌகரிய வசதிகளுக்கான ஏற்பாடு, சுயேச்சையான வைத்திய சேவைகள், முதலிய காரியங்களுக்காகப் பல்வேறு உப கமிட்டிகளாகப் பிரிந்து அமைத்துக்கொண்டிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். சில ராஜ்யங்கள் கம்பளி உடை தயாரிப்புக்காகக் கம்பளி நூல் கேட்டிருந்தன. அவற்றுக்கு 5 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள கம்பளி நூல் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சஞ்சிகைகள், புத்தகங்கள், உணவுப் பொருள்கள், ஸ்வெட்டர்கள், கையுறைகள், டிரான்ஸிஸ்டர் ரேடியோ செட்டுகள் ஆகியவை பெருமளவில் கிடைத்துள்ளன. படை வீரர்கள், மாலுமிகள், விமானிகள் போர்டு, மத்திய சமூக க்ஷேமநல போர்டு, மத்திய சமுதாய அபிவிருத்தி மந்திராலயம், பாரத் சேவக் சமாஜ், கிராம ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் க்ஷேமநல வேலை நடவடிக்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு வருகின்றன, நர்சுகள், க்ஷேமநல ஊழியர்கள், சமையலறை மேற்பார்வையாளர்கள், டெலிபோன் வயர்லெஸ் ஆப்ரேட்டர்கள், அங்கஹீனர் புனர் வாழ்விப்பு சிப்பந்திகள் ஆகியோருக்கான பயிற்சி ஏற்பாடுகளை ஆரம்பிப்பது விஷயத்திலும் மத்தியசபை நடவடிக்கையெடுத்து வருகிறது என்று அவர் கூறினார்.

கிராம நலம் பகுதி-2
# பஞ்சாயத்து அரசிதழ்
GRAMA NALAM PART-II
# PANCHAYAT GAZETTE

இந்தப் பகுதியில் அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் ஆகியவற்றின் தமிழாக்கச் சுருக்கம் வெளிவரும்.

### தேசிய நெருக்கடி நிலை—மின்சார உபயோகத்தில் சிக்கனம்

### [Electricity—National Emergency—Conservation of Power.

### Memorandum No. 26912, P. W. Dept., dated 13—12—62.

இப்போதைய தேசிய நெருக்கடி நிலையை முன்னிட்டு, மின்சார சக்தியைச் சிக்கனமாக உபயோகிக்க வேண்டியிருப்பதால், நிலவுக்கால இரவுகளில் 10 மணிக்குமேல் தெரு விளக்குகளை அணைத்து விடுவதற்கான, விளக்கங்களை வெளியிடுமாறு நகரமன்ற ஆணையாளர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்ற ஆணையாளர்கள் ஆகிய எல்லோரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், தெருச்சந்திப்புக்களிலும், தெரு முனைகளிலும் தவிர பிற இடங்களில், மாறுபட்ட பக்கங்களில் அமைக்கப்பட்டிருக்கும் விளக்குகளை (Bulbs) நீக்கி விடும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். படிப்படியே, பிரகாசமான விளக்குகளை நீக்கி, அதற்குப் பதில் பாதரச விளக்குகளை (Flourescent tubes) அமைக்கும்படி, நகரமன்றங்களும், பஞ்சாயத்துக்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பொதுப்பணித் துறையின், 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 26912-ன் சுருக்கம்.

---

### இந்திய திட்ட வார விழா—கொண்டாடுதல் ரத்து செய்யப்பட்டது

### Indian Plan Week Celebration—Cancelled

### Memorandum No. 243305, R.D. and L.A., dated 13—12—62.

இந்திய அரசாங்க, சமுதாய அபிவிருத்தி அமைச்சகத்திலிருந்து வந்த கடிதத்தின் நகல் [கடித எண். 9 (50), தேதி: 1962-ம் ஆண்டு நவம்பர் 29-ந் தேதி] செய்தியை அறியவும் அதுகுறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும்/வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப் படுகிறது. இது சம்பந்தமாக, கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் 29-ந் தேதியிட்ட அறிக்கை எண். 177902-ல் வெளியிடப்பட்ட ஆணைகள் ரத்துசெய்யப்படுகின்றன என்பதும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள்/வட்டார வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவிக்கப்படுகிறது.

இந்திய அரசாங்க, சமுதாய அபிவிருத்தி அமைச்சகத்திலிருந்து தமிழ்நாடு அரசாங்க அபிவிருத்திக் கமிஷனருக்கு வந்த கடிதத்தின் [கடித எண் 9 (50), 1962-ம் ஆண்டு நவம்பர் 29-ம் தேதி] நகல் வருமாறு:

#### இந்திய திட்ட வார விழாக் கொண்டாட்டம்

இந்திய திட்ட வார விழாக் கொண்டாட்டம் பற்றிய, சமுதாய அபிவிருத்தி-பஞ்சாயத்து ஆட்சி கூட்டுறவு அமைச்சகத்தின (சமுதாய அபிவிருத்தி-பஞ்சாயத்து ஆட்சித்துறை) 1962-ம் ஆண்டு செப்டம்பர் 1-ந் தேதிய கடிதத்தைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவருவதுடன், இன்றைய தேசிய நெருக்கடி நிலை காரணமாக 1962-ம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் கொண்டாடப்பட இருந்த திட்ட வார விழாக்கள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே, இது சம்பந்தமாக செய்துள்ள எல்லா ஏற்பாடுகளும் ரத்து செய்யப்படலாம்.

கிராம நல தல—நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் ; 246305.

# தமிழ்நாட்டின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்—தேசிய நெருக்கடி நிலை—1963–64 ஆண்டுக்கு வரவு-செலவுத் திட்டம் வகுப்பதற்கான விளக்கம்

## [Third Five Year Plan of Madras State—Panchayat Development Schematic Budget—National Emergency—Instructions for framing Budget for 1963—64—Issued]

## G. O. Ms. No. 2531, R. D. and L. A., dated 21st November, 1962.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 16-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 664-ல் மாநிலம் முழுவதற்குமான, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம் ஒன்றினை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இந்த ஐந்தாண்டு வரவு செலவுத் திட்டம் மாநிலத்திலுள்ள 374 அபிவிருத்தி வட்டாரங்களுக்கும், 142 கோடி ரூபாய் ஒதுக்கி, அதன் அடிப்படையில் ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரமும் தன்னுடைய வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த ஆணையில், வட்டார அளவுத் திட்டத்திற்கு இருக்கும் உத்தேச பொருளாதார வருவாய்களை இருபது தனி இனங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. மேலும், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் பொருளாதார உதவிகளின் மாதிரித் தொகுப்பும் இந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின் கீழ், சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை, அரசாங்கம் அவ்வப்போது வெளியிடும் விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் ஒப்படைத்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இந்தத்திட்டத்தில், சிறப்பாக, விவசாய அபிவிருத்தி, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளர்ப்பு கிராமத் தொழில்கள், மாதர்-குழந்தைகள் நலம் சம்பந்தப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் அடங்கியுள்ளன. இந்த ஆணைகளை நிறைவேற்றும் வகையில், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் பொருளாதார வருவாய்களை முழு அளவுக்கு, நன்கு பயன்படுத்திக்கொள்வதற்கான பல்வேறு திட்ட துணை விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

3. சீன ஆக்கிரமிப்பு காரணமாக இப்பொழுது நாட்டில் அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே, எல்லாச் சக்தியையும் ஒன்று திரட்டி தேசத்தின் எல்லைகளைப் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. இந்த தேசீய அவசர நிலைமையில், பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்ட பொருளாதார அமைப்பை அரசாங்கம் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது:—

4. **விவசாய மானியம்.**—கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டகாலத்துக்கு, அதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 2 லட்ச ரூபாய் விவசாய மானியத்தை, முழு அளவில், பலனளிக்கத்தக்க வகையில் பயன்படுத்துவதற்குத் தேவையான, திட்ட துணை விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விளக்கங்கள், கீழ்க்கண்ட அத்தியாவசியத்திட்டங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை, முழு அளவில் செய்வதற்கு வகை செய்கிறது.—

(i) ஒவ்வொரு கிராமத்திலும், சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கும், விநியோகத்திற்குமான கிராம சகாயர் பணிப் பராமரிப்பு.

(ii) உணவுப் பயிருக்கு, குறைந்த விலையில் பூச்சி மருந்துகள் கிடைக்கச் செய்தல்.

(iii) காட்சி இடங்கள் நிறுவுதல்.

(iv) பஞ்சாயத்து செடி வளர்ப்பு.

(v) பஞ்சாயத்துக்கள் சமுதாய கம்போஸ்டு அமைத்தல்.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ன் 7-வது பாராவில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய மானியத்தின் கீழ் செய்யப்படும் செலவுகளின் வகைகளையும், வேலைகளையும் அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. தேசிய அவசர நிலை ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில், விவசாய உற்பத்தியை வேகமாகப் பெருக்க வேண்டியதன் அவசியம் முன் எப்போதையும்விட அதிகமாக இருப்பதை அரசாங்கம் வலியுறுத்திக் கூறுகிறது. 1962–63, 1963–64 ஆண்டுகளில் மேற்படி ஆணையின் 7-வது பாராவில் குறிப்பிட்டபடி செய்யப்பட்டு இருக்கும் நிதி வசதிகளை பஞ்சாயத்து யூனியன்கள் முழு அளவுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளில் குறைக்கும் உத்தேசம் எதுவும் இல்லை. பஞ்சாயத்து யூனியன்கள் எல்லா அத்தியாவசிய இனங்களிலும் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளை, முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் அவற்றின் விவசாய மானிய பங்கீடு திட்டங்களை முழு அளவுக்கு நிறைவேற்றும்படி யோசனை கூறப்படுகின்றன. அவை குறிப்பாக கிராம சகாயக் திட்டத்தை அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த செலவுத் தொகையைப் பயன்படுத்துவதன் மூலம் தீவிரமாக நிறைவேற்றும்படி யோசனை கூறப்படுகின்றன. முடியுமானால் அனுமதிக்கப்பட்ட விவசாய மானியத்தை மறு பங்கீடு (Re-allocation) செய்வதன் மூலமும், தேவையானால் அதற்கு அதிகமாக ஒதுக்குவதன் மூலமும் அந்தத் திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றலாம். மேலும், பஞ்சாயத்து செடி வளர்ப்பு வேலையை 1937-ம் ஆண்டு தமிழ் நாடு (ஸ்தல ஸ்தாபனங்கள்) கடன்கள் சட்டத்தின் கீழ், அதற்காக கடன் பெறுவதன் அடிப்படையில் தொடர்ந்து நடத்தும்படி யோசனை கூறப்படுகிறது.



5. **தல நீர்ப்பாசன மானியம்.**—மாநில முழுவதற்கும் மூன்றுவது ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்கு, (i) பஞ்சாயத்து யூனியன்களுக்கு, அவற்றிடம் மாற்றப்பட்டுள்ள சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களில் பழுதுபார்ப்புக்காகவும், பராமரிப்புக்காகவும், கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 711-ல் கூறியபடி, கணக்கிட்டு, தல நீர்ப்பாசன மானியம் வழங்குவதற்கும், (ii) நீர்ப்பாசனக் கால்வாய்களில் வழக்கமாக ஏற்படும் பழுதுகளைப் பார்ப்பதற்கு ஆகும் செலவில் ஒரு குறித்த பகுதியை ஈடு கட்டுவதற்கு அளிக்கப்படும் குடிமராமத்து மானியம் வழங்குவதற்காகவும் 200 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன வேலைகள் பராமரிப்புக்கு செய்யப்பட்டுள்ள நிதிவசதிகள் சில வட்டாரங்களில் போதுமான அளவு இல்லையென்று முன்னர் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இந்தத் தேவையை ஈடுகட்ட மேலும் நிதிவசதி செய்வதன் அவசியத்தை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. அதன்படி கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2362-ல் 1962–63 ஆண்டுக் காலத்திற்கு சிறப்பு வைப்பு ஒதுக்கீட்டுத் தொகையாக 10 லட்சம் ரூபாயை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இந்தத் தொகை சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களின் சில வகைப் பழுது பார்த்தலுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை பஞ்சாயத்து கலெக்டர்களால், மேற்படி அரசாங்க ஆணையில் குறித்த முறைப்படி அவற்றின் உண்மைத் தேவை அடிப்படையில் அளிக்கப்படும் தல நீர்ப்பாசன மானியத்துடன் விநியோகிக்கப்படும். வருகின்ற ஆண்டுகளிலும் இத்தகைய நிதிவசதிகள் செய்யப்படும். சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களைத் திறமையாகப் பராமரித்தல் குடிமராமத்து வேலைகளைத் திறமையாக கவனித்துக் கொள்ளுதல் ஆகியவை பஞ்சாயத்து யூனியனின் முக்கியமான பொறுப்பு என்பதை அரசாங்கம் எடுத்துக்கூற விரும்புகிறது. இதற்கென குறிக்கப்பட்ட மானியத் தொகைகளை அரசாங்கம் குறைக்காது என்றும் அறிவிக்கிறது.

6. **கிராம வேலைகள் மானிய மறு ஆய்வு:—(குறித்த வேலைகள் மானியம்).**—பஞ்சாயத்து யூனியன்கள் கிராமிய நீர்வழங்கு வேலைகளையும், கிராம இணைப்புப் பாதை வேலைகளையும் எடுத்துச் செய்வதற்காக, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் கிராம வேலைகள் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2103, 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2371-ஆகிய ஆணைகளில், எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்த மானியத்தை விநியோகிக்கும் வகை பற்றியும், இதைக் கொண்டு எடுத்து செய்யத்தக்க வேலைகளைப் பற்றியும், நிர்வாக, தொழில் நுட்ப அனுமதிகளை வழங்க தகுதியுள்ள அதிகாரிகள் பற்றியும், செலவு நடைமுறை பற்றியும் எல்லா விளக்கமும் கூறப்பட்டுள்ளன. அவற்றின்படி, இந்த மானியம் முதலாவதாக நீர்வழங்கு வேலைகளுக்கும், இணைப்புப் பாதைகளுக்கும் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வேலைகளின் தேவைகளும், முழு அளவுக்கு நிறைவேற்றப்படாத வரையில் வேறு வேலைகளுக்கு இந்த மானியத் தொகை அனுமதிக்கப்படவில்லை. இந்த விளக்கங்களின்படி பஞ்சாயத்து யூனியன்கள் பல நீர்வழங்கு வேலைகளையும் இணைப்புப் பாதை வேலைகளையும் எடுத்துச் செய்து வருகின்றன. அவற்றுள் பல வேலைகள் இப்பொழுது நடந்து வருகின்றன. கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2371-ன் 4-வது பாராவில், பஞ்சாயத்து யூனியன்கள் 1962–63 ஆண்டு காலத்திற்கான செலவுகளுக்கு, செலவு செய்யப்படாமல் நிலுவை இருக்கும் தொகையில் 4-ல் ஒரு பாகத்தை கடனாக எடுத்துக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டன. இப்போதைய தேசிய அவசர நிலைமையின் கீழ், எல்லா வருவாய்களையும் ஒன்று திரட்டுகின்ற சந்தர்ப்பத்தில் கிராம வேலைகள் திட்ட நிறைவேற்ற முறையை மாற்றி அமைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்துள்ளது. மாநில முழுவதற்குமே கிராம வேலைகள் மானியத்தின் கீழ், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவு செய்வதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள 15 கோடி ரூபாயை, எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இந்தத்தொகை முறைப்படி பங்குகள் செய்யப்படும்பால், ஒவ்வொரு யூனியனும் ஐந்தாண்டு காலத்தில் ரூபாய் 2 லட்சத்திலிருந்து 4 லட்சம் வரை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் அளவை ஒட்டி, வருகின்ற பங்குத்தொகையை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மாநில முழுவதற்கும், கிராம வேலைகள் மானியமாக ஒதுக்கப்படும் 15 கோடி ரூபாயை 1961–62-லிருந்து 1965–66 வரை ஆன ஐந்தாண்டுகளுக்குப் பதில் 1961–62-லிருந்து 1966–67-வரை ஆன ஆறுண்டுகளுக்கு என்று மாற்றி அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது. அதன்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கிராம வேலைகள் மானியத்தின், கீழ் ஆறுண்டுகளுக்கு அத்தொகை பங்கீடு செய்து தரப்பட வேண்டும். அதாவது 1963–64 ஆண்டில் பஞ்சாயத்து யூனியன்கள்செலவு செய்யாமலுள்ள நிலுவைத் தொகையில் நாலில் ஒரு பாகத்தைக் கடனாகப் பெற்று அந்த, அளவுக்கு செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். அவை 1965–66 ஆண்டில் செலவு செய்யப்படாமல் இருக்கின்ற நிலுவைத் தொகையில் ஒரு பாதி அளவுக்குத் தம் செலவை குறைத்துக் கொள்ள வேண்டும். கிராம வேலைகள் மானியத்தின் கீழ் எந்தெந்த வகையான வேலைகளை எடுத்துச் செய்யலாம் என்பது குறித்த விஷயத்தில் கிராம நல–தல நிர்வாகத்

துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2103-ம், 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2371-ம் தொடர்ந்து அமுலில் இருந்து வரும்.

**7. கிராம வேலைகள் மானிய மறு ஆய்வு.—(யுக்தானுசாரமான வேலைகள் மானியம்).**—கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 266-ல், குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் பற்றிய வேலை, பஞ்சாயத்து யூனியன்களிடமும், பஞ்சாயத்துகளிடமும், ஒப்படைத்திருப்பதுடன், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அறுவை சிகிச்சை லட்சிய அளவும் குறிக்கப்பட்டுள்ளது. அதன் பின் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் காணப்படுகிறது. சமுதாயத்தில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் பெருகுவதற்கு உற்சாகமான சூழ்நிலை எற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மகப்பேறு—குழந்தை நல நிலையங்களை கட்டுவதற்கான மானியத்தை அளிப்பதற்கு, அந்த மானியத்தொகை ஒவ்வொரு வட்டாரத்திலும் செய்து கொள்ளப்பட்டுள்ள குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அமைய வேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்தாகும். பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்களை கட்ட வேண்டுமென்ற கோரிக்கைகள் பெருகி வருகின்றன. இத்தகைய கட்டிடங்களுக்கான ஒரு திட்டத்திற்கு விசேஷ வகை செய்வது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது. மேலும், ஏழ்மை வட்டாரங்கள், இணைப்புப் பாதைகளுக்கும், பள்ளிக் கட்டிடங்களுக்கும் அளிக்க வேண்டிய முழு நன்கொடைத் தொகையை அளிக்க முடியாமல் இருக்கின்றன என்றும், இந்த விஷயத்தை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. கிராம வேலைகள் மானியத்தை மறு ஆய்வு செய்கின்ற இந்தத் தருணத்தில், அரசாங்கம் இந்த விஷயங்களையெல்லாம் கருத்தில் கொண்டு ஆராய்ந்தது. அதன்படி கிராம வேலைகள் மானியத்தை இரண்டு தனி இனங்களாகப் பிரிக்கவும் அவற்றுள் ஒன்றை "குறித்த வேலைகள் மானியம்" (Ear-Marked Works Grant) என்றும், மற்றதை "யுக்தானுசாரமான வேலைகள் மானியம்" (Discretionary Works Grant) என்றும் வகுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மேலே 6-வது பாராவில் "குறித்த வேலைகள் மானியம்" விளக்கப்பட்டுள்ளது. யுக்தானுசாரமான வேலைகள் மானியம் கீழ்க்கண்டவாறு அமையும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது :—

(i) மாநில முழுவதற்கும் 1963-64, 1964-65, 1965-66 ஆண்டுகளுக்கு—ஆண்டொன்றுக்கு 30 லட்ச ரூபாய், யுக்தானுசார வேலைகள் மானியமாக ஒதுக்கப்படுகிறது.

(ii) பஞ்சாயத்து யூனியன்களுக்கு வருடாந்திர மானியம், காலாண்டுத் தவணைகளாக, காலாண்டுக்கு 7·50 லட்ச ரூபாய்கள் என்ற விகிதத்தில் கொடுக்கப்படும்.

(iii) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், ஒவ்வொரு காலாண்டிலும் யுக்தானுசாரமான வேலைகள் மானியமாக செலுத்தத்தக்க தொகை கீழ்க் குறித்தவாறு இரண்டு பகுதிகளாக அமைய வேண்டும் :—

(a) பஞ்சாயத்து யூனியனுக்கு செலுத்தத்தக்க முதல் பகுதி, உயர்ந்த அளவு 2,000 ரூபாய்க்கு உட்பட்டு, சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் அதற்கு முன் காலாண்டு காலத்தில் செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கும் 25 ரூபாய் என்ற விகிதத்தில் அமைய வேண்டும்.

(b) முதல் பகுதி தொகைகளைக் கொடுத்த பின்னர், காலாண்டுத் தவணைத் தொகையான 7 50 லட்ச ரூபாயில் மீதியுள்ள தொகையை, மாநிலத்திலுள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சமமாக பங்கீடு செய்து தரவேண்டும். (இத்தகைய காலாண்டுத் தவணைத் தொகைகளை கேட்டுப் பெறுதல், செலவுகளைப் பற்று வைத்தல் ஆகியவை பற்றிய விரிவான விளக்கங்கள் தனியே வெளியிடப்படும்.)

(iv) பஞ்சாயத்து யூனியன்கள், யுக்தானுசாரமான வேலைகள் மானியத்தை வட்டாரத்தின் எந்த ஒரு பொது வேலைக்கும் குறித்த வேலைகள் மானியத்திலிருந்து செலவு செய்யப்பட்ட அல்லது செலவு செய்யப்படாத வேலையாக இருப்பினும் அதற்கு மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ முழுச் செலவையும் செய்கின்ற உரிமை பெற்றிருக்கின்றன.

(v) பஞ்சாயத்து யூனியன்கள், யுக்தானுசாரமான வேலைகள் மானியத்திலிருந்து செலவு செய்யப்படும் எந்த வேலைக்கும் செலுத்தத்தக்க உள்ளூர் நன்கொடைகளை குறைக்கவோ அல்லது வசூலிக்காமல் விடவோ உரிமை பெற்றிருக்கின்றன.

**8. துணைக் கல்வி மானியம் பள்ளிக் கட்டிட மானியம்-பள்ளி உணவு மானியம்-சமூகக் கல்வி மானியம்-மாதர்-குழந்தைகள் நல மானியம் முதலியன.**—1963-64 ஆண்டுக்கு இந்த மானியங்களில் எதையும் குறைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்கவில்லை.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2531.)

---

## பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் 1963-64 ஆண்டுக்கான, உத்தேச வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்கு மேலும் கால அனுமதி

## Panchayat Union Councils—Budget Estimate for 1963-64—Further time for Preparation—Permitted.]

### Memorandum No. 245337, R. D. and L. A., dated 3rd December, 1962.

கிராம நலத்துறை, கணக்குப் பிரிவின் 1962-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 196100-ல், பஞ்சாயத்து யூனியன்கள், 1963-64 ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் தயாரித்துக்கொள்ள, வேண்டிய விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதையடுத்து, இவ் விஷயங்குறித்து, அரசாங்கம் அவ்வப்போது மேலும் பல ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இவையெல்லாம், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தங்கள் உத்தேச வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிக்கும் பொழுது பெரிதும் துணையாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.

2. பஞ்சாயத்து யூனியன்கள், தங்கள் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது, சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு ஆணைகளையும், முழுதும் பின்பற்றி அமைக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து கலெக்டர்களிடம் சமர்ப்பிக்க 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதிவரை கால வரையறை அளித்து ஆணையிடுகிறது. எற்கெனவே வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து விட்டிருந்தால், சமீப கால ஆணைகளையொட்டி அவற்றைப் பொருத்தமாகத் திருத்தலாம். பஞ்சாயத்து யூனியன்கள் தயாரிக்கும் வரவு செலவுத் திட்டங்கள் செயல் முறையில் பயனுள்ளதாக அமைய வேண்டுமென்றும், அவ்வாறு அமைய வேண்டுமானால், அவை பல்வேறு முக்கிய அரசாங்க ஆணைகளைத் தழுவி அமைய வேண்டுமென்றும் அரசாங்கம் விரும்புகிறது. பஞ்சாயத்து யூனியன் வரவு செலவுத் திட்டங்கள் சரியாக தயாரிக்கப்படவும், குறித்த காலத்தில் முடிக்கப்படவும், கலெக்டர்களும், கோட்ட ஆட்சியாளர்களும் (Revenue Divisional Officers) தனி அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் : 245337)

---

## கொடிநாள் கொண்டாட்டம்

## Flag day, 1962—Celebration

### (Letter No. 234936/F-1/62-1 dated 23rd November 1962.)

**கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம்**

ஓய்வுபெற்ற பணியாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோரின் கஷ்டங்களை தீர்க்கவும், பணிபுரியும் ஊழியர்களுக்கு வசதிகளைச் செய்யவும் ஆன நோக்கங்களுக்காக நிதி வசூல் வேலையைச் செய்ய, வழக்கமாக ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 7-ம் தேதி 'கொடி நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் டிசம்பர் 7-ல் "கொடி நாள்" கொண்டாடப்படும். நம்முடைய ராணுவப் படையினருக்கு, நம் நன்றியுணர்வையும், பாராட்டையும் கணிசமான அளவில் தெரிவித்துக்கொள்வதற்கான, சிறந்த சந்தர்ப்பத்தைக் "கொடி நாள்" உண்டாக்குகிறது. நமமுடைய ராணுவ வீரர்கள் எல்லையைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வாண்டு "கொடி நாள்" ஒரு தனிச் சிறப்புடையதாகும். நம்முடைய தாய்நாட்டைக் காப்பதற்காக, அவர்கள் வியத்தகு வீரத்துடனும், உறுதியுடனும் போரிட்டு வருகின்றனர். நாட்டைக் காக்கும் அந்த வீரர்களின் உறுதிக்கு ஆக்கம் தரும் வகையில் அவர்களுடைய நலன்களைக், கவனிக்கவேண்டியது நாட்டு மக்களாகிய நம்முடைய நன்றிக்கடனாகும். ராணுவத்தினிடம் நம் மக்கள் பெருமதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதிலும், "கொடி நாளு"க்காக நன்கொடை கேட்டால் தாராளமாக வழங்குவார்கள் என்பதிலும் ஐயமில்லை. "கொடி நாள்" நிதி வசூலிப்பதில் பஞ்சாயத்து யூனியன்கள் முக்கிய பங்கெடுத்துக்கொண்டு பணிபுரியலாம் என்று கருதப்படுகிறது. எந்த அளவுக்கு அதிகமான மக்களைச் சந்திக்க முடியுமோ அந்த அளவுக்குச் சந்தித்து, நன்கொடைகளை வழங்கவேண்டுமென்று பொதுமக்களிடையே ஆர்வத்தைப் பெருக்கி, கணிசமான அளவில் நன்கொடைத் தொகையை உயர்த்தி, "கொடி நாளை" வெற்றிகரமாக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கையானவர்களைக் 'கொடி நாள்' நன்கொடை வசூலுக்கு அமர்த்தி, வசூல் தொகைகள் பற்றிய எந்த ஊழலும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளத்தக்க முன் ஏற்பாடு செய்யவேண்டும். வசூலாகும் தொகையை கலெக்டருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

(கிராம அபிவிருத்திக் கமிஷனரின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் தேதிய கடிதம் 234936.)

## விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்—கோழி வளர்ப்பு—கிராம கோழி வளர்ப்பு பிரிவுகளுக்கு நிரந்தரக் கட்டட வசதி

**[Expanded Nutrition Programme—Poultry Development—Village Poultry Units—Construction of Permanent Structures.]**

**(Memorandum No. 225244, R. D. & L. A., dated 16th November, 1962).**

பவானி சாகரில், ஒரு கோழி வளர்ப்பு நிலையம் அமைத்திருப்பதாகவும், பத்து கிராம கோழி வளர்ப்புப் பிரிவுகளும் தொடங்கியிருப்பதாகவும், பவானி சாகர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அறிவித்திருக்கிறார் மேலும், இதுவரையில் 300 பெட்டைக் கோழிகளையும், 50 சேவல்களையும் கிராம கோழி வளர்ப்புப் பிரிவுகளுக்கு விநியோகித்திருப்பதாகவும், 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதிவரை, கருத்தரித்துள்ள பேறு கால தாய்மார்களுக்கும், பள்ளிப் பருவமுன் நிலை குழந்தைகளுக்கும், 600 முட்டைகளுக்கு மேல் விநியோகித்திருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார். கோழி வளர்ப்பு விஷயத்தில் இந்தப் பஞ்சாயத்து யூனியனின் முன்னேற்றம் குறிப்பிடத் தக்க வகையில் திருப்திகரமாக இருக்கிறது. அதற்கா கமிஷனர் பாராட்டப்படுகிறார். மற்ற வேலைத் திட்ட வட்டாரங்களின் (விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களின்) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், பவானி சாகர் வட்டார வளர்ச்சி அதிகாரியின் வேலையை முன்மாதிரியாகக் கொண்டு, விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டத்தின் கீழ், இந்த முக்கியமானதும் சிறப்பானதுமான வேலை துரிதமாக நடக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட அறிக்கை 225244).

—( o )—

## மாவட்ட அபிவிருத்தி மன்றக்கூட்டங்கள், வட்டாரத் தலைநகரில் நடைபெறுவது குறித்த விளக்கம்

**[District Development Councils—Holding of meetings at Block Headquarters—Resolution of East Coimbatore District Development Council passed at its meeting on 27—8—62—Orders passed.]**

மாவட்ட அபிவிருத்தி மன்றம் விருப்பம் தெரிவித்தால் தாலூகா தலைநகரில் வசதி இருந்தால், அவ்வாறு வசதி இருக்கும் தாலூகா தலைநகரில் அபிவிருத்தி மன்றக் கூட்டம் கூட்டலாம் என்று ஏற்கெனவே விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது. கிழக்கு கோயம்புத்தூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம், அதன் 1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 27-ந் தேதி கூட்டத்தில், மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தை, வட்டாரத் தலைநகர்களிலும் கூட்டலாம் என்று அதனுடைய பொது விருப்பத்தை ஒரு தீர்மானத்தின் மூலம் தெரிவித்துள்ளது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் கூட்டங்களை, மாவட்டத்தின் எல்லா வட்டாரத் தலைநகரிலும் நடத்தலாம் என்றும், அநேகமாக எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சொந்த அலுவலகக் கட்டடங்கள் கூட்டங்கள் நடத்த வசதியாக உள்ளன என்றும் கோயம்புத்தூர் இணைக் கலெக்டர் (Joint Collector, Coimbatore) அறிவித்துள்ளார். இனி மேல், மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்கள், வட்டாரத் தலைநகரங்களிலும் நடத்தப்பட அனுமதிக்கலாம் என்றும் அவர் சிபாரிசு செய்துள்ளார். அதன்படி, அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்து, கூட்டம் நடத்த வசதிகளும் இருக்கும் பட்சத்தில், வட்டாரத் தலைநகர்களிலும் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்களை நடத்த, அனுமதி அளிக்கிறது.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் தேதியிட்ட அறிக்கை எண் 178603.)

---

## சென்னை மாநகராட்சி, நகரமன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவை தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்குதல் அனுமதிக்கப்படவில்லை

**Contributions—Corporation of Madras—Municipal Councils, Panchayat Union Councils and Panchayats—Contribution to the National Defence Fund—Payment—Not Permitted.**

**G. O. Ms. No. 2475, R. D. and L. A., dated 13th November, 1962.**

சில தல ஸ்தாபனங்கள், தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தம் நிதியிலிருந்து நன்கொடை அளிக்கவேண்டுமென்ற தம் விருப்பத்தைத் தீர்மானங்கள் மூலம் தெரிவித்துள்ளன. அரசாங்கம் தல ஸ்தாபனங்களின் இந்த நடவடிக்கையைப் பாராட்டுகிறது. என்றபோதிலும், அவ்வாறு அவை நன்கொடை அளிப்பது பொதுப் பணத்தின் ஒரு கணக்குத் தலைப்பிலிருந்து மற்றொரு கணக்குத் தலைப்புக்கு மாற்றுவதேயாகும். ஆகவே, தல ஸ்தாபனங்கள் தேசியப்பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்கத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, சென்னை மாநகராட்சிக் கமிஷனரும், தல ஸ்தாபனங்களின் நிர்வாக அதிகாரிகளும், தல ஸ்தாபனங்களின் நிதியிலிருந்து தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்கக் கோரும் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்காது என்று அறிவிக்கப்படுகின்றனர்.

2. எனினும், தல ஸ்தாபனங்கள், தங்கள் பகுதியில் சில நிறுவனங்களை அமைத்து, அவற்றின் மூலம் பொது மக்களிடம் நன்கொடைகளை வசூலிப்பதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான வருவாயைப்பெருக்கும் வகையில் கணிசமான அளவுக்குப் பாடுபடமுடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. அவர்கள் வசூலித்த நன்கொடைகளை நிதித் துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை : 1290-ல் கூறப்பட்டுள்ள முறைப்படி நிதியில் சேர்த்துவிடலாம்.

3. இந்த ஆணையை, தம் பகுதியிலுள்ள பஞ்சாயத்துக்களின் கவனத்திற்குக் கொணரும்படி, கலெக்டர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2475.)



## பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைத்தல்—மேலும் சிலவகை வானொலிப் பெட்டிகள் அங்கீகரிக்கப்படுகின்றன

**[Panchayat Radio Maintenance Organisation—Installation of Radio sets in the Panchayats—Approval of additional sets—Orders issued.]**

**G. O. Ms. No. 2103. R. D. & L. A., dated 24th September, 1962.**

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1381-ல் மேலும் சில வகை உலர்கடி வானொலிப் பெட்டிகளை (Dry Battery Radio Sets) அங்கீகரிப்பதற்கான யோசனையை ஆராய்ந்து, அவற்றை, குழுவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கும்படி, தலைமை வானொலி அதிகாரிக்கு (Chief Radio Officer) ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, சில பஞ்சாயத்துக்கள் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில் தலைமை வானொலி அதிகாரி, குழுவுக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையைக் குழு பரிசீலனை செய்து, இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை, அவற்றின் எதிரில் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு, பஞ்சாயத்துக்கள் வாங்கலாம் என்று சிபாரிசு செய்துள்ளது. அரசாங்கம், குழுவின் மேற்படி சிபாரிசுகளைப் பரிசீலனை செய்து, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை, அவற்றின் எதிரில் குறிக்கப்பட்ட விலைகளுக்கு வாங்க அங்கீகாரம் அளிக்கிறது.

2. கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-ல், பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளுடன் (சுமார் ரூ. 10/ செலவில்) ஒரு ஒலி அலை வாங்கிப் பெட்டியும் (Aerial kit), ஒரு புற ஒலி பெருக்கிக் குழலும் (External Loud speaker Unit) அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1560-ல் பஞ்சாயத்துக்கள் வாங்கத்தக்க புற ஒலி பெருக்கி வகைகளை அங்கீகரித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்ட வானொலிப் பெட்டிகளில் ஏதாவது ஒன்றை வாங்குகின்ற பஞ்சாயத்துக்கள், உதவித் தொகை ரூ. 180, அல்லது அரசாங்கம் அங்கீகரித்துள்ள வானொலிப் பெட்டி, ஒலி அலைவாங்கிப் பெட்டி, புற ஒலி பெருக்கிக் குழல் ஆகியவற்றின் விலையில் 50 சத வீதத் தொகை, இவற்றில் எது குறைவோ அந்தத் தொகையைப் பெற பஞ்சாயத்துக்கள் தகுதியுள்ளனவாகும்.

## இணைப்பு

| விற்பனையாளரின் பெயர். | வானொலிப் பெட்டியின் வகையும் மாதிரியும். | விலை. |
|---|---|---|
| 1. ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையன்ஸஸ் லிமிடெட், மவுண்ரோடு, சென்னை-2. | நேஷனல் எக்கோ உலர்கடி மாதிரி B. 755 x. (1962, அக்டோபர் கடைசியிலிருந்து விற்பனை தொடங்கும்). | எல்லா வரிகளும் உட்பட ஒன்று ரூ. 395·90· |
| 2. கமலா ரேடியோஸ், 125-A, பட்டமங்கலம் தெரு, மாயூரம். | எலிட் உலர்கடி-மாதிரி E. 365c. | மாயூரத்தில் பெறுவதாயின் எல்லா வரிகளும் உட்பட, ரூ. 333·55. |
| 3. விஸ்வேஸ்வரய்யா கிராமிய தொழில் வளர்ச்சிக் குழு, முசிறி, திருச்சி மாவட்டம். | விஸ்வாஸ்—6 வால்வ்—3 பாண்ட் ஏ. ஸி. மாதிரி. | வரிகள் சேராமல் நிகர விலை ரூ. 275. |

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை : 2103).

---

பஞ்சாயத்து அரசிதழ்.—
தயாரிப்பு—பொறுப்பு : திரு வே. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ., (மொழிபெயர்ப்பாளர்).

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

பிப்ரவரி, 1963.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்:**

*கிராமச் சிறுவர்கள் நிகழ்ச்சி..*

**ஒவ்வொரு திங்கட் கிழமையும்:**

*ஒலிப்பதிவுப் பாடல்கள் ; விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்.*

**ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்:**

*திரைப்பட இசை ; கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.*

**ஒவ்வொரு புதன் கிழமையும்:**

*பாட்டு ; நாட்டுப் பாடல்கள்.*

**ஒவ்வொரு வியாழக்கிழமையும்:**

*பாட்டு ; நமது திட்டம் ; மெல்லிசை ; செய்தி விமர்சனம்.*

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்:—**

*திரைப்பட இசை ; கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.*

**ஒவ்வொரு சனிக்கிழமையும்:**

*பாட்டு ; முதியோர் கல்விக் கூடம் ; நம் மாதர் மன்றம்- நிகழ்ச்சிகள்*

## இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்:

வெள்ளி (1—2—1963).

**கிராம வானொலி மன்றம்:—**

1. கேள்வியும் பதிலும்.
2. தேசிய பிரதேசப் படையில் நம் பணி.

ஞாயிறு (3—2—1963).

கிராமம் போவோமே : செய்திச் சித்திரம்.

திங்கள் (4—2—1963).

உபகாரக் கோழி : தொடர் சித்திரம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது)

செவ்வாய் (5—2—1963).

**கிராம வானொலி மன்றம்:—**

1. கேள்வியும் பதிலும்.
2. உயர்நத ரக ராகியும் சோளமும்.

புதன் (6—2—1963).

வாழை சாகுபடி பற்றி குறிப்புகள்.
பத்மாவின பரிவு : நாடகம.

வெள்ளி (8—2—1963)

**கிராம வானொலி மன்றம்:—**

. கேள்வியும் பதிலும்.
2. தேசிய நெருக்கடியில் பெண்கள் சேவை-தொண்டு செய்தல்.

ஞாயிறு (10—2—1963).

நம் நாட்டு விவசாயி—கடிதம்.
காவடி ஆட்டம்.

திங்கட்கிழமை (11—2—1963)

காசிக்கயிறு : நாடகம் (என். ராகவன் எழுதியது)

செவ்வாய்க் கிழமை (12—2—1963)

**கிராம வானொலி மன்றம் :—**

1. கேள்வியும் பதிலும்.
2. சர்க்கார் தானிய சேமிப்பு கிடங்குகள்.

புதன் கிழமை (13—2—1963)

தீயணைப்பு முறைகள்—உரையாடல்
புண்ணிய விரதம் : இசை நிகழ்ச்சி—
(என். ராகவன் எழுதியது)

வெள்ளிக் கிழமை(15—2—1963)

**கிராம வானொலி மன்றம் :—**

1. கேள்வியும் பதிலும்.
2. நாட்டின் நலனுக்காக சிக்கனமாக இருப்போம்.

ஞாயிற்றுக்கிழமை (17—2—1963)

கிராமச் சாவடியில்
கோயில் மரியாதை வழக்கு.

திங்கட்கிழமை (18—2—1963)

காணி நிலம்—நாடகம் (அப்துல்காதர் எழுதியது)

செவ்வாய்க்கிழமை (19—2—1962)

**கிராம வானொலி மன்றம் :—**

1. கேள்வியும் பதிலும்.
2. தீவிர சாகுபடி திட்டத்தின் பயன்.

புதன் கிழமை (20—2—1963)

முட்டைகள் பராமரிப்பும் விற்பனையும்.
படியளக்கும் பொம்மை—சித்திரம்—(என். ராகவன் எழுதியது.)

வெள்ளிக்கிழமை (22—2—1963)

**கிராம வானொலி மன்றம் :—**

1. கேள்வியும் பதிலும்
2. சேமிப்பு பத்திரங்களும் தேசப் பாதுகாப்பும்.

ஞாயிற்றுக்கிழமை (24—2—1963)

கிராமப் பொது நல சங்கம்
சித்தர் பாடல்கள்

திங்கட்கிழமை (25—2—1963)

வளரும் தமிழகம்.

செவ்வாய்க்கிழமை (26—2—1963)

**கிராம வானொலி மன்றம்:—**

1. கேள்வியும் பதிலும்.
2. கோழிகளுக்கு ஏற்படும் சாதாரண நோய்கள்

புதன்கிழமை (27—2—1963)

வாத நோய்—உரையாடல்
பேப்பர் பெரியசாமி—சித்திரம்(வாசு எழுதியது.)

---

**வெளியிடுபவர்:**

**திரு எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ்.**

**ஆசிரியர் !**

**திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.**

**Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.**







தென்னிந்திய புத்தக நிலையம் போர் வீரர்கட்கு அறிவு நூல்களை அள்ளி வழங்கிற்று. திரு. வை. கோவிந்தன் அவர்கள் முதலமைச்சரிடம் நூல் ஒன்றைத் தருகிறார்.

பனித் துயரால் வாடும் படை வீரர் துயர் தீர, நலம் நாடும் குழுவைச் சேர்ந்த மாதர், கம்பளி ஆடைகள் தயாரித்தளித்தனர்.

அன்னை பூமியை அன்னியன் தீண்டுவதோ? என ஆர்த்தெழுந்தனர் கல்லூரிக் காளையர்.



Regd. No. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1963.
Panchayat Gazette
விலை : 13 ந.பை. February 1963

# போர்முனையின் வெற்றி ஏர்முனையிலே !



எல்லை காக்கும் போர்முனையில், நமது யுத்த வீரர்கள் நாட்டைக் காத்துவரும் இன்றைய நிலையில், ஏர் முனையிலே விவசாயிகள், தீவிரமாக உற்பத்தியைப் பெருக்கக் கடமைப்பட்டுள்ளனர்

"வெளிநாடுகளிலிருந்து, ராணுவ ஆயுதங்களை இறக்குமதி செய்யவேண்டி உள்ளது. எனவே, உணவு தானியங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதென்பது, இப்போது முடியாது. ஆகையால், உணவு உற்பத்தியைப் பெருக்க, நாம் தீவிரமாகப் பாடுபட வேண்டியது மிகவும் அவசியமாகும்."

"ஜனநாயக முறையில், நாம் முன்னேறியுள்ளதைக் காண சீனாவுக்குப் பொறாமை. நம்மீது அவர்களுக்குக் கோபம். ஆசியாவில் பல நாடுகள் தன் ஆதிக்கத்தின் கீழ் இருக்கவேண்டும் என்பது, சீனாவின் பேராசை. இந்த நாடுபிடிக்கும் ஆசையால்தான், இந்தியா மீது சீனா படையெடுப்பு நடத்தியது. இந்தியா, பெரிய தேசம். இதைப் பிடித்துவிட்டால், மற்ற சிறு நாடுகளை எளிதில் பணிய வைத்துவிடலாம் என்று சீனா நினைக்கிறது. முன்பு இட்லர் கூட இப்படித்தான் சாம்ராஜ்யக் கனவு கண்டு, இறுதியில் தோல்வி கண்டான்."

"நாட்டைக் காப்பதற்கு, போர்முனையில் உயிரையும் தியாகம் செய்ய, நமது போர்வீரர்கள் தயாராக இருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, நாம் அனைவரும் உழைக்கத் தயாராக இருக்கிறோம். எனவே, நமக்கு வெற்றி கிடைப்பது உறுதி."

—காமராஜ்.

*(சென்னையிலே, 23-12-1962-ல், தமிழ்நாடு கிராம சேவகரின் சார்பில், மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற, சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்தில், முதலமைச்சர் திரு. காமராஜ் நிகழ்த்திய உரையின் சாரம்.*



*மத்திய அமைச்சர் திரு எஸ். கே. டே அவர்கள், கிராமத் தொண்டர் படை குறித்து தென் ராஜ்ய அமைச்சர்களைக் கலந்தாலோசிக்கிறார்.*

# கிராம நலம்

192



## கிராமத் தொண்டர் படை ஆரம்ப விழா



## உரிமை காக்க உறுதி



மகாத்மாவின் மணி மொழி :

“கீதை ஒரு மகத்தான தர்மகாவியம்....கீதை, பாமர ஜனங்களுக்காக இயற்றப்பட்டது....கீதையில் ஞானத்தின் மகிமை, நன்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது....பலனில் பற்று மட்டும், எப்பொழுதும், விலக்கு. பற்றின்மை] எக்காலமும், விதி.....கீதை, வெறும் மதியால் அறியக்கூடியதன்று. இருதயத்தால், அறியவேண்டியது.”

காந்தியடிகள்

“ அனு சக்தியோகம் ” என்ற நூலிலிருந்து.
தமிழாக்கம் : திரு. க. சந்தானம்

கௌசானி (இமயமலை)
1929-ம் ஆண்டு, ஜூன் மாதம் 24-ம் தேதி.

## எழுவீர்! உழைப்பீர்!

“ மனிதனே ! வலிமையற்றவனாக இருக்காதே ! நமக்குள்ள துன்பங்களில், மூன்றில் ஒரு பாகத்திற்குக் காரணம், வலிமையின்மையே. வலிமையற்ற உடலாலும், வலிமையற்ற மூளையாலும், நாம் எதுவும் செய்யமுடியாது. நாம், அவற்றை வலுப்படுத்த வேண்டும். முதலாவதாக, நமது இளைஞர்கள், உடல் வலிமை படைத்தவர்களாக இருக்கவேண்டும்.

வலிமைக்கு முதற்படி எது ? “ வாள் என்னை வெட்டாது, ஆயுதங்கள் என் உடலை ஊடுருவாது, நெருப்பு என்னைச் சுடாது. காற்று என்னை உலர்த்தாது நான் சர்வ வல்லமையுடையவன். எல்லா அறிவும் உடையவன் ” (கீதை). இந்த அமுத வாக்கியங்களை உச்சரியுங்கள். ‘ நாம் வலிமையற்றவர்கள் ’ என்று கூறாதீர்கள் ! நாம் எல்லாவற்றையும் செய்யக்கூடும்; செய்ய முடியும். நாம் செய்ய முடியாதது என்ன ? ஒவ்வொருவரும். வீரராக எழுந்து நின்று, பரந்த அறிவோடும், உயர்ந்த தெய்வத் தத்துவத்தோடும், உலகத்தை இயக்குங்கள். அத்தகைய நிலையை அடையுங்கள்.

ஏழைகளுக்கு அறிவொளியைக் கொண்டு வாருங்கள். செல்வர்களுக்கும் அறிவொளியைக் கொண்டு வாருங்கள். ஏனென்றால், ஏழைகளைக் காட்டிலும், செல்வர்களுக்கே, அது தேவை. பேதைகளுக்கும், அறிவொளியைக் கொண்டு வருவீர். கல்விமான்களிடமும், அறிவொளியைப் பரப்புங்கள் ஏனெனில். இக்காலத்துக் கல்வியினால். அவர்கள் கொள்ளும் வீண் பெருமைக்கு, அளவேயில்லை. எல்லோருக்கும் அறிவொளியைக் கொண்டு வந்து விட்டு எஞ்சி நிற்பதை, இறைவனிடம் விட்டுவிடுங்கள். நீங்கள் செய்யும் வேலை. உங்களுக்குப் பலன் கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, கவலைப்படாதீர்கள்.

எழுமின் ! விழிமின் !! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின் !!!

—வீரத்துறவி விவேகானந்தர்.

(‘ஞானமுரசு என்ற நூலிலிருந்து.)



# கிராம நலம்

வில்லினை யெடடா ! —கையில்
வில்லினை யெடடா ! —அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா !

—பாரதியார் (கீதை-கிருஷ்ணார்ஜுன தரிசனம்)

மாடி 8 | மார்ச், 1963 | படி 6

## கிராமத் தொண்டர் படையின் சீரிய பணி

---o---

## பிரதம மந்திரியின் துவக்க உரை

நண்பர்களே, தோழர்களே,

நமது குடியரசு தினத்தின் ஆண்டு விழாவான இன்றைய தினம், மங்களகரமானதொரு நாளாகும். ஆகஸ்டு 15-ம் தேதி நாம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். அதுவும் நமக்கு மாபெரும் நாளாகும். ஜனவரி 26-ம் தேதியன்று, இந்தியக் குடியரசை அமைத்து, முழு சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்திருக்கிறோம்.

### பொருளாதாரப் புரட்சி

அதோடு, அரசியல் புரட்சி முடிவடைந்தது ; அதற்குப் பிறகு, இந்திய மக்களிடையே பொருளாதார, சமூகப் புரட்சியை ஏற்படுத்தும் அடுத்த பெரும் பணியில் ஈடுபட்டோம். அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடங்கினோம். இன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாம், விவசாயம், தொழில், சுகாதாரம், கல்வி ஆகிய எல்லா துறைகளிலும் முன்னேற விரும்பினோம். இந்திய மக்கள் ஒவ்வொருவரும் சுபிட்சமாக வாழவேண்டுமென்றும், எல்லாருக்குமாகவும் க்ஷேமநல ராஜ்யத்தை அமைக்கவேண்டுமென்றும் விரும்பினோம். நம் மக்களில் பெரும் பகுதியினர் கிராமங்களில் வாழ்வதால், அவர்களுடைய முன்னேற்றமும், நல்வாழ்வும் தான் மிகவும் முக்கியமானவை என்பதையும் உணர்ந்திருந்தோம்.

### சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்

ஆகவே, கிராம மக்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, பல ஆண்டுகட்கு முன் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கினோம் ; அத்திட்டம் கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களிலும் இப்போது பரவிவிட்டது ; இந்திய கிராமங்களை விழிப்படையச் செய்தது ; அங்குள்ள மக்கள், செயலாற்றத் தொடங்கினர். இத்திட்டத்தால், பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன ; நமது குறைபாடுகளும் தெரிய வந்துள்ளன.

பிறகு, கிராம மக்களின் விவகாரங்களை, அவர்களே மேற்கொள்வதற்கு வசதியாக பஞ்சாயத்து ஆட்சியை ஏற்படுத்தி, இன்னொரு மகத்தான பணியில் ஈடுபட்டோம். கிராம விவகாரங்களைப் பெரிய அதிகாரிகள் நடத்துவதற்குப் பதிலாக, பஞ்சாயத்துக்களுக்கே அதிகாரமும், ஆதார வசதிகளும், கிடைக்கச் செய்தோம். பெரும்பாலும் எல்லா ராஜ்யங்களிலும், பஞ்சாயத்து ஆட்சி ஏற்படுத்தப் பட்டுவிட்டன; மீதி ராஜ்யங்களிலும் விரைவில் ஏற்படுத்தபட்டுவிடும்.

### பஞ்சாயத்தும் கூட்டுறவும்

பஞ்சாயத்து ஆட்சியுடன், கூட்டுறவு இயக்கமும் தொடங்கப்பட்டிருக்கிறது ; அதன் மூலமாக, பொருளாதார நிலையை, ஜனநாயக அடிப்படையில் உருவாக்கி, நம் மக்களனைவரும் பயனடைய முயற்சி செய்யப்படுகிறது. பஞ்சாயத்து ஆட்சியின் மூலமாகவும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவும், கிராமங்களில், அரசியல் ஜனநாயகம் மட்டுமின்றி, பொருளாதார ஜனநாயகமும் மலரும்; மக்கள் சுய பலம் கொண்ட வலுவான சமுதாயமாக மாறுவார்கள்.

---

### அட்டைப்பட விளக்கம்

26–1–1963-ல், பரங்கிமலைப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பழவந்தாங்கல் கிராமப் பஞ்சாயத்தில் நடந்த கிராமத் தொண்டர் படைத் துவக்க விழாவில், தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ். அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். (முழு விவரம் 22-ம் பக்கத்தில் காண்க.)

சென்ற மூன்று, நான்கு மாதங்களாக, நாம் பெரிய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது; நமது அண்டை நாடான சீனா, நம்மைத் தாக்கி, நம் பகுதிகளையும் கைப்பற்றி இருக்கிறது. இந்தியா வெங்கிலுமுள்ள நமது மக்களனைவரும், கிராமங்களிலிருப்பவர்களும், நகரங்களிலிருப்பவர்களும், இந்த சவாலை வீரமுடன் எதிர்த்து வருகின்றனர்; ஏனென்றால், நமது சுதந்திரம் மட்டுமல்லாமல், நமது வாழ்வு, நமது கலாச்சாரம், நமது ஜனநாயக லட்சியம் எல்லாமே சவாலுக்குள்ளாகியிருக்கின்றன. எல்லையில் சண்டை நடநதாலும் நடக்காவிட்டாலும், இப்போராட்டம் எப்போதும் நம்முடன் இருந்துவரும்; அதற்கு நம்மாலான உதவி செய்ய சகல வகைகளிலும் பாடுபடவேண்டும்.

நமது ஐந்தாண்டுத் திட்டங்கள், நமது நாட்டையும் மக்களையும் வளம்பெறச் செய்வதற்கான திட்டமாகும்; அத்திட்டங்களை இப்போது, நமது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருக்கும் வகையில் மாற்றியமைத்துக் கொள்ளவேணடும். ஆனல், நமது அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தமாட்டோம்; ஏனென்றல், அது நமது பலத்தைக் குறைத்துவிடும்; மக்களுககும் நல்லதல்ல; ஆகவே, பாதுகாப்பு, அபிவிருத்தி ஆகிய இருபெரும் பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதை நாம் ஏற்று. வெற்றிமாலை சூடுவோம், என்பதில் சந்தேகமில்லை.

**கிராம மக்களின் கடமை**

இந்த சூழ்நிலையில், நமது கிராமங்களும் அங்கு வாழும் மகத்தான மக்களும் செய்யவேண்டியதென்ன? படைகள் உட்பட நமது நாட்டுக்கு உணவளிப்பது கிராம மக்களே! நமது நாட்டுக்குப் பலமளிப்பதும் கிராமங்கள்தான். அங்கிருந்துதான் ஒப்பற்ற படை வீரர்கள் நமக்குக் கிடைக்கின்றனர். ஆகவே, இம்மாபெரும் முயற்சியில் கிராமங்கள் ஒன்று திரளவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத் தொண்டர்படையை அமைக்க முடிவு செய்துள்ளோம். அது இந்த மகத்தான பணியை முன்னின்று நடத்தும். இந்தியாவில் ஐந்தரை லட்சம் கிராமங்களிலுமுள்ள உடலுறுதி வாய்ந்தவர்களெல்லாம், நாட்டையும் கிராமங்களையும் பாதுகாக்கிற தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

**தொண்டர்படையின் முப்பெரும் பணிகள்**

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள தொண்டர் படை, உற்பத்திப் பெருக்கம், கல்வி, பாதுகாப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

பாதுகாப்பு வேலையில் ஈடுபடவேண்டியது, போர்முனைகளிலுள்ள நமது வீரர்கள் மட்டுமல்ல; உற்பத்தியைப் பெருக்கியும், பாதுகாப்புக்கு உதவி செய்யலாம். விளைபொருள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய புதிய முறைகளைக் கையாளவேண்டும். சிறு பாசன வேலைகள், வயல் கால்வாய்கள் வெட்டுதல். மண்வளப் பாதுகாப்பு, புஞ்செய் சாகுபடி ஆகிய வேலைகளை மேற்கொள்ளவேண்டும். அதனுல் சமுதாயத்தின ஆஸ்திகள் வளரும், மககளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, பஞ்சாயத்து மேற்கொள்ளும அபிவிருத்தி வேலைகளுக்கும் நிதி கிடைககும். தானியங்களை மட்டுமின்றி, காய்கறி, பழவகைகளையும் பெருமளவில் உற்பத்தி செய்யவேண்டும்.

கல்வி, மிகவும் முக்கியமானதாகும். கிராமத் தொண்டர்படை, கல்வியைப் பரப்புவதிலும், நமது போராட்டத்தைப் பற்றிய உண்மையான செய்திகளைக் கூறி விளககுவதிலும், பெரும்பங்கு வகிக்க முடியும். இதற்காக ரேடியோவும் பிற ஏற்பாடுகளும் வெகுவாகப் பயன்படுத்தப்படும். நாட்டில் என்ன நடந்துகொண்டிருக்கிறது, குறிப்பாக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் மக்கள் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

மூன்றுவதாக, கிராமத் தொண்டர்படை, கிராமப் பாதுகாப்பு வேலைகளையும் கவனித்துக்கொள்ளும். அவர்கள் ரயில்வே, ரோடுகள், தபால்-தந்தி ஆகிய ஏற்பாடுகளையும் பாதுகாத்து, கிராமங்களின் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பதிலும, உதவியாக இருப்பார்கள்.

உழைப்பின் மூலமாக செல்வம் பெருகும்; பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் உழைப்பு, ஆதார வசதிகளைக் கணிசமாகப் பெருக்கும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் வேண்டியவைகளைக் கிடைக்கச் செய்யும் விதத்தில் ஒவ்வொரு கிராமங்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும். நாடு முழுவதும் "பாதுகாப்பு உழைப்பு பாங்குகள்" ஏற்படுத்தப்படவேணடும். ஒவ்வொருவரும், ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் பன்னிரெண்டு தினங்கள் உடலுழைப்பை அளித்தால், கிராமங்களும், நாடும் நல்ல பலன் பெறும். இவ்விதமாக கிராமங்களிலுள்ள 20 கோடி வாலிபர்களும் உழைத்தால், ஆண்டொன்றுக்கு அவர்களுக்குச் சொந்தமாக ரூ. 300 கோடி மதிப்புக்கு ஆஸ்திகளை உருவாக்குவார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும், உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவியளிக்க வேண்டும். குறிப்பாக, குழந்தைகளை மிகவும் அக்கறையுடன் கவனிக்கவேண்டும். வேலை இல்லாதவர்கள், எழுந்து நடமாட முடியாதவர்கள் ஆகியோரை விசேஷமாகக் கவனித்து வரவேண்டும். கிராமங்களிலுள்ள ஒவ்வொருவரையும் அன்பாகக் கவனித்து, ஆதரித்து ஒவ்வொரு கிராமமும் பெருமைப்படவேண்டும். கிராமத்தையே பெரிய குடும்பமாகக் கருதி ஒவ்வொருவரும் பரஸ்பர உதவியளித்துக் கொள்ளவேண்டும். இவ்விதமாக இந்நாட்டையே, பல மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கிற, பெரும் குடும்பமாகக் கருதவேண்டும்.



# தமிழ்நாடெங்கும் சுமார் ஐந்து லட்சம் பேர் கொண்ட கிராமத் தொண்டர்படை

## கிராம வானொலிகளை நன்கு பயன்படுத்தி உண்மைச் செய்தியைப் பரப்புவோம்

**முதலமைச்சரின் அறிவுரை.**

"நாம் எதிர்பாராதவிதத்தில் ஏற்பட்ட சீன ஆக்கிரமிப்பு காரணமாக, ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய கவனமெல்லாம், இன்று தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருக்கிறது. போராட்டம் எவ்வளவு நீண்டதாக இருப்பினும் சரி, எவ்வளவு கடுமையாக இருந்தாலும் சரி, ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்க, தேசம் முழுவதும் வீறு கொண்டு கிளம்பியிருக்கிறது. தேசத்தின் பாதுகாப்புக்காக ஆள் பலம், ஆயுத பலம் முதலிய தேசத்தின் பலம் முழுவதையும் திரட்டுவது அவசியமாகிறது. இந்தியா லட்சக்கணக்கான கிராமங்களடங்கிய பெரிய தேசம். மக்களில் பெரும்பாலோர் கிராமவாசிகள். எனவே, கிராமங்களின் பலமே இந்தியாவின் பலம் என்று சொல்லலாம். இன்று கிராமப்பகுதிகளில் தோன்றியுள்ள ஆர்வத்தையும், தேசிய உணர்ச்சியையும் ஒழுங்கான முறையில் உருவாக்கி, தேசப் பாதுகாப்புக்கும், நிரந்தரமான பொருளாதார அபிவிருத்திக்கும், பயன்படுமாறு செய்ய வேண்டியது அவசியம். இந்தச் சமயத்தில், கிராமப்புறங்களிலுள்ள ஆள் பலத்தையும், இதர வசதிகளையும் திரட்டுவதற்கு, பஞ்சாயத்துக்கள், நல்ல முறையில் திட்டமிட்டு வேலை செய்ய முன்வர வேண்டும்.

இந்தக் காரியங்களைச் செய்வதற்காகத்தான், 'கிராமத் தொண்டர் படைத் திட்டம்' இனறு முதல் இந்தியா முழுவதும் எல்லா பஞ்சாயத்துக்களிலும் ஆரம்பமாகிறது. குடியரசு தினமாகிய அரம்பமாகும் இந்தக் கிராமத் தொண்டர் படைத் திட்டம், தமிழ்நாட்டில். சிறந்த முறையில் நடைபெற, எல்லாப் பஞ்சாயத்துக்களும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கிராமத் தொண்டர் படையின் முக்கிய நோக்கம், தேசப் பாதுகாப்பு.

நம்முடைய தேசம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. தேசீயப் பாதுகாப்பு வலுவாக இருக்க வேண்டுமானல், விவசாய தொழில், நன்கு பலமடைய வேண்டியது அவசியம். ஒவ்வொரு கிராமத்திலும், ஏர் முனையில் எந்த அளவுக்கு விவசாய உற்பத்திப் பெருக்கம் ஏற்படுகிறதோ, அந்த அளவுக்குப் போர் முனையின் சக்தியும் அதிகமாகும் தீவிரமாக உற்பத்தியைப் பெருக்கும் பணியைச் செய்வதின் மூலம், விவசாயிகள் கிராமங்களிலிருந்து கொண்டே, பாதுகாப்பு முயற்சிக்குப் பெரிய உதவி செய்தவர்கள் ஆவார்கள். கிராமததிலுள்ளவர்களில், விவசாயததில் நல்ல அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்கள் ஒன்றுகச் சேர்ந்து, கிராமத்தில் இன்று உற்பத்தியாவதைவிட, இன்னும் அதிக அளவில் உற்பத்தி பெருகுவதற்கு, என்ன முறைகளைக் கையாள வேண்டும் என்பதைப்பற்றி, கூடி ஆலோசிக்க வேண்டும். கிராமத்தைச் சுற்றி, ஒரு துண்டு நிலம் கூட வீணுகாமல் பார்த்துக்கொள்வது அவசியம். ஏரி, குளங்களை, நல்ல முறையில் காலாகாலத்தில் மராமத்து செய்வதுடன், கண்மாய்ப் புறங்களில் கருவேல் போன்ற மரங்கள், ஏராளமாக வளர்வதற்கும் வழி செய்ய வேண்டும். நெருக்கடி காலங்களில் உபயோகிக்கும் பொருள்களின் விலை, கூடிக்கொண்டு போகலாம். உற்பத்தியை அதிகரிப்பதின் மூலமாகத்தான், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும். எனவே, 'கிராமத் தொண்டர் படை' தீவிர உற்பத்திப் பெருக்கில், முழு கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, போர் சம்பந்தமான சரியான தகவல்களை, கிராம மக்களிடையே எடுத்துரைப்பதற்கு, அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். வீண் வதந்திகள் பரவாமலும், மனே உறுதி தளராமலும் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேணடும். போர் நிலவரம் பற்றிய உண்மையான செய்திகளைத் தெரிந்துகொள்ள, ரேடியோ ஏற்ற கருவியாகும். கிராமங்களில் வைக்கப்பட்டிருக்கும் ரேடியோக்களை, சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கிராமத்திலுள்ள விஷயம் தெரிந்தவர்களும், ஆசிரியர்களும் நமது

[2-ம் பக்கத் தொடர்ச்சி.]

**பாரதத் தாயின் புதல்வர்களெனப் பெருமை கொள்வோம்**

நண்பர்களே! தோழர்களே! நமது சுதந்திரத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்கும், நமது மக்களனைவருடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடுவதற்கும், உங்கள் கிராமங்களில், நீங்கள் இன்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதின் மூலம், நமதருமை நாட்டுக்கும், கிராமங்களுக்கும், நம் மக்களுக்கும் தொண்டாற்றியவர்களாவோம். நாட்டின் குழந்தைகளெல்லாம் மகிழ்ச்சி பொங்க விளையாடும் இடமாக இந்தியாவை ஆக்குவோம். ஆகவே, இந்த பிரதிக்ஞையின் உண்மையான பொருளை உணர்ந்து, பிரதிக்ஞையை மேற்கொள்வோம். அதன்படி நடந்துகொள்வோம். அப்போதுதான், நாம் நமது ஒப்பற்ற பாரதமாதாவின் அருந்தவப் புதல்வர்கள் என்று சொல்லும் அருகதை பெறுவோம்.

—ஜெய்ஹிந்த்."

(1963ஆம் ஜனவரி 26-ல் வானொலியில் பிரதமர் நேரு அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.)

எல்லையில் சீனர் செய்திருக்கும் அநியாய ஆக்கிரமிப்புப் பற்றிய விவரங்களையும், நம் பக்கமுள்ள நியாயத்தையும் ஊரில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

எல்லோரும் தேசப் பாதுகாப்புக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தில், கிராமங்களில் எந்த விதமான தகராறும் இல்லாமல், பார்த்துக்கொள்ள வேண்டியது முக்கியம். விவகாரங்கள் கோர்ட்டுகளுக்கோ போலீஸ் விசாரணைக்கோ போகாமல் ஊரில் கட்டுப்பாடும் அமைதியும் நிலவும்படிப் பார்த்துக்கொள்வது நல்லது. வாலிபர்கள், அவசியம் ஏற்படும்போது, நாட்டுக்காகப் போர்முனைக்குச் செல்லவும் தயாராயிருக்க வேண்டும். கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்த இளைஞர்கள், உடல் பயிற்சி, தீயணைப்பு, முதல் சிகிச்சை, காவல் வேலைக்குரிய பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். இதன் மூலம், கிராம மக்களிடையே ஒழுங்கும் கட்டுப்பாட்டு உணர்ச்சியும், தேசப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறோம் என்ற பெருமையும் உருவாகும்.

**மாதர் சங்கங்கள், தேசப் பாதுகாப்புக்கான திட்டங்களில் சேர்ந்து, தங்களாலான வேலை செய்ய முன்வர வேண்டும். பொருள்கள் வீணாகாமல் பார்த்துக் கொள்வது, சிக்கனமாகச் செலவு செய்வது, சிறு சேமிப்பு மூலம் பாதுகாப்பு நிதிக்கு உதவுவது, முதலிய விஷயங்களைப் பெண்கள் கவனிக்கலாம்.**

கிராமங்களின் மூலதனம், ஆள் பலமும் உழைப்புச் சக்தியும்தான். எனவே. ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் சோம்பல் இல்லாமல் உழைக்க வேண்டும்.



சுருங்கக்கூறின், ஒவ்வொரு கிராமமும் ஒற்றுமையுள்ள ஒரு குடும்பம்போல இருந்து, நாட்டின் பாதுகாப்புக்கான பணிசெய்ய வேண்டும். கிராமத்திலுள்ள ஏழை எளியவர்களுக்கு எந்தவிதமான கஷ்டங்களும் ஏற்படாமல், பஞ்சாயத்துக்கள் பார்த்துக்கொள்வது அவசியம்.

குடியரசு தினமாகிய இந்த நல்ல நாளில், நாம் எடுத்துக்கொண்டுள்ள பிரதிக்ஞையை நினைவில் வைத்து தேசப் பாதுகாப்புக்கானதும், புதிய சமுதாயம் ஏற்படுவதற்குமான முயற்சிகளில் கிராமத் தொண்டர் படை. வேலைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**—காமராஜ்.**

*[முதலமைச்சர் திரு காமராஜ் இவ்வாண்டு குடியரசுத் திருநாளில், வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.]*



## வெற்றி நாட்டிடுவோம்!

**அகரப்பேட்டை சி. கண்ணன்**

திங்களை விண்மீனும் வென்றதில்லை, எங்கள்
தேசம் பகைத்தவர் வாழ்ந்ததில்லை, இங்கே
சிங்கம் புலிகூடத் தோழனாகும், இந்தச்
சேதி தெரியாதான் சீனனடா!
செங்கோல் வளையாத இந்தியமோ, ஒரு
செந்நாயைக் கொன்றாலும் கேட்டுச்செய்யும், எரி
செந்தழல் முன்னாலே பஞ்சைப்போல, இழி
சீனத்துத் தூசியே நின்றதுவே!

வானம் மறந்தாலும் வீரமுண்டு, இங்கு
வாழ்கின்ற மானுக்கும் மானமுண்டு, ஒரு
கூனக் கிழவி முறமெடுத்தே, புலி
கொன்றுமே வென்றதிப் பாரதமே!
ஈனக் குணமிங்கே பெற்றதில்லை, சண்டை
என்றுவந்தால் மட்டும் விட்டதில்லை, வீர
ஆணுக்குப் பெண்ணென்று பேருமில்லை, சீன
ஆமை நடத்துதல் போருமில்லை!

அன்றைக்கிவன் முன்னோர் இங்குவந்தார், கலை
அன்பறிவு யாவும் கொண்டு சென்றார், இந்தச்
சின்னவன் மண்வேண்டி இன்று வந்தான், இவன்
சீனனோ, வீணன், 'சீ—ஈனன்'என்போம்!
நண்பரெனச் சொல்ல நாமிருந்தோம், அவன்
நாதியற்றுப் போகத்தான் பகைத்தான், இந்த
மண்ணைத் தனதாக்க எண்ணியவன், இட்லர்
வாழ்விழந்தான், சீனன் ஏன் மறந்தான்?

நெஞ்சம் அழித்துடல் சென்றதில்லை, வஞ்சம்
நீடித்து நீதியை வென்றதில்லை, அன்று
பஞ்சசீலங் கூறி நாடிவந்தான், அவன்
பஞ்சத்தில், சீலத்தைத் தான்மறந்தான்!
பொங்கும் ஒளிக்கோவில் உள்ளேவந்த, சீனப்
போக்கிரி நாயைத் துரத்திடுவோம், என்றும்
எங்கள் உரிமையைக் காத்திடுவோம், வட
எல்லையில் வெற்றியை நாட்டிடுவோம்!



# உரிமை காக்க உறுதிகொள்வோம்!

**கோ. வெங்கடாசலபதி,**
*கிராம அபிவிருத்திக் கமிஷனர்.*

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது காந்தியடிகள் தேச மக்களை நோக்கி "சுடுதலும் குளிரும் உயிருக்கு இல்லை, சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கு இல்லை, எடுமினோ அறப்போரினை" என்று, சுதந்திரச் சங்கநாதம் செய்தார். விடுதலை முழக்கம் கேட்டு, ஜாதி, மதபேதமின்றி, ஏழை பணக்காரர் என்ற, வித்தியாசமின்றி இந்த நாட்டு மக்களில் லட்சக்கணக்கானவர்கள், கூட்டம் கூட்டமாக—அணி அணியாகத் திரண்டு, "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்" "என்று எமது அன்னை கைவிலங்குகள் போகும்" என்றும், "வீர சுதந்திரம் வேண்டி நின்றார், பின்னர் வேறொன்று கொள்வாரோ" "கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின், கை கட்டிப் பிழைப்பாரோ" என்றும், சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்தவர்களாய், தேசிய உணர்ச்சி மிகுந்தவர்களாய், இதம் தரும் மக்களையும், மனைவியையும் பிரிந்து, வீடிழந்து தொழில் இழந்து, இடர் மிகுந்த சிறை புகுந்து, கோடி கோடி இன்னல்களைச் சகித்து, சுதந்திரப் போரில் வெற்றி கண்டோம்; விடுதலை அடைந்தோம், தர்மமே உருவாம் காந்தியடிகளையும், சரித்திரம் அறியா சத்தியாக்கிரக முறைகளையும், அவர் சொற்படி கேட்டு நடந்த சுதந்திர வீரர்களையும் கண்டு, உலகமே அதிசயித்தது, வாழ்த்தியது, வணங்கியது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, காந்தியடிகளைத் தன் தலைவராக—தன்னுடைய குருநாதராகக் கருதி பயிற்சி பெற்றவரும், காந்தியடிகளுடைய திருவாக்கு மூலம் "மனிதருக்குள் மாணிக்கம் போன்ற இவர் தான், என்னுடைய வாரிசு" என்ற பட்டம் சூட்டப்பெற்று, முடிசூடா மன்னனாக, இந்திய மக்களின் அபிலாஷைகளுக்கெல்லாம் அறிகுறியாகத் திகழ்பவரும், பாரதத்தின் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவருமான பண்டித ஜவஹரின் பண்புமிக்க தலைமையின் கீழ் சென்ற பதினைந்து ஆண்டுகளாக—பாரத சமுதாயத்தை, ஒப்பில்லாத சமுதாயமாக, உலகினுக்கே புது வழி காட்டும், புதுமையான சமுதாயமாகச் செய்வதற்கு, திட்டம் தீட்டிச் செயலாற்றி வந்தோம். நாம் கொஞ்சமும் எதிர்பாரா விதத்தில், மண்ணாசை கொண்டோ, மற்றாசை கொண்டோ, திருட்டுத் தனமாய்த் திட்டமிட்டிருந்து, நம் மீது பாதகச் சீனு படையெடுத்துள்ளது.

அன்று காந்தியடிகள் சுதந்திரம் பெறுவதற்கு நாட்டு மக்களை அழைத்தது போல, இன்று பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டி, அவருடைய வாரிசும், நம்முடைய ஒப்பற்ற தலைவருமான பாரதப் பிரதமர், பாரத மக்களை நோக்கி "கண்ணினும் இனிய சுதந்திரத்திற்கு, ஆபத்து நேரிடும் போலிருக்கிறது. போராட்டம் எவ்வளவு நீண்டதாக இருப்பினும் எவ்வளவு கடுமையாக இருப்பினும் ஆக்கிரமிப்பாளரை இந்தியாவின் புனித பூமியிலிருந்து விரட்டியடிக்க, விரதமெடுத்துக் கொள்ளுங்கள். பாரதத்தைப் பலம் பொருந்திய நாடாகச் செய்வோம், என்று சத்தியத்தின் பேரால், சபதம் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று தேசத்திற்கு வேண்டுகோள் விடுத்ததுடன்' குறிப்பாக, கிராம வாசிகளை நோக்கி, "கிராமவாசிகளே! உங்களுடைய பலம் தான், இந்தியாவின் பலம். நீங்கள் தான், இந்த நாட்டின் பெரும்பாலோரான, பெருங்குடி மக்கள். உங்களுடைய கிராமங்கள் ஒவ்வொன்றும், வீரத் தொண்டர்கள் நிறைந்த படைவீடு ஆகட்டும். பாரதநாடு முழுவதும், இன்று ஆரம்பமாகும், கிராமத்தொண்டர் படை, உற்பத்தி பெருக—உலகியல் அறிவு வளர—கட்டுப்பாடும், காக்கும் திறமையும், கடமை உணர்ச்சியும் ஓங்க, ஓயாது ஒழியாது உழைக்கட்டும்" என்று ஆசி கூறி, கிராமத் தொண்டர் படையை, இன்று காலை ஆரம்பித்து வைத்துள்ளார்.

நம்முடைய தமிழ் நாட்டு முதலமைச்சரும், தமிழகத்தின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்குபவருமான ஸ்ரீ காமராஜ் அவர்கள், சில விநாடிக்கு முன் இந்த வானொலி மூலம் கிராமத்தொண்டர் படைக்கு ஆசி கூறி "தமிழ்நாட்டில் இந்தக் கிராமதொண்டர் படை, சிறந்த முறையில் வேலை செய்ய வேண்டுமென்று, தமிழ நாட்டிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களையும் கேட்டுக் கொள்கிறேன்" என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்கள்.

### நால் வகை அணிகள்

தமிழ்நாடு அரசாங்கம், கிராமத்தொண்டர் படை, நால் வகை அணிகளாக நின்று, ஐவகைப் பணிகள் புரிய திட்டமிட்டுள்ளது. (விளக்கப் படம் 24–25 பக்கங்களின் பார்க்கவும்) 'பொருள் அணி,' நமக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் பணியிலும், 'அறிவு அணி' ஊரில் உள்ள அத்தனை பேருடைய அறிவை வளர்க்கும் பணியிலும், 'காவல் அணி' நம்முடைய மானத்தை—மரியாதையை—சுதந்திரத்தை—கட்டுப்பாட்டுடன் நின்று காக்கும் பணியிலும், 'மாதர் அணி' பொருள்களைப் போற்றி, எல்லோருக்கும் சத்துணவு வழங்கி, பாரதத் தாயின் தகைசான்ற பெருமையைக் காத்து நிற்கும் பிள்ளைகளைப் பேணி வளர்த்து, ஊரில் சோம்பலையும், சோர்வையும் அகற்றும் பணியிலும், உடல் நலமுள்ள அத்தனைபேரும் அவரவர்களுக்கு இயன்ற அளவு சிரமதானம் செய்வதின் மூலம், ஊரில் உழைப்புக் களஞ்சியத்தை உருவாக்கும் பணியிலும்—கிராமத

தொண்டர் படையின் வேலைத்திட்டம் அமைந்திருக்கிறது. ஆதலின்,

கிராமத்துப் பெரியோர்களே !
இளைஞர்களே !
சகோதரிகளே !
பஞ்சாயத்து யூனியன் தலைவர்களே !
பஞ்சாயத்துத் தலைவர்களே !
அங்கத்தினர்களே !
ஆசிரிய, ஆசிரியைகளே !
பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களே !
கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த அன்பர்களே !

நாம் அத்தனை பேரும், இன்று நம்முடைய தலைவர்களால் ஆரம்பித்து வைக்கப்பெற்றுள்ள கிராமத் தொண்டர்படையில், மனப்பூர்வமாகச் சேர்ந்து, நம்முடைய கிராமங்களை, நல்வாழ்விற்கு வேண்டிய அத்தனை வசதிகளும் நிறைந்த இடங்களாக, அறிவொளி பிரகாசிக்கும் ஆலயங்களாக—நாடு காக்கும் வீரர்களடங்கிய படை வீரர்களாக ஆக்குவோம். பாரதம், என்றும், சுதந்திரத்துடன் நிரந்தரமாகத் தலை நிமிர்ந்து நிற்கும் வண்ணம், பாரதத்தாயின் ஜீவநாடிகளாக. ஊர்கள் உயர உழைப்போம் !

'எங்கள் ஊர்களை உயரச் செய்வோம்' என்று பிரதிக்கினை எடுத்துக்கொண்டு உழைக்க முன்வருபவர்களுக்கு, முன்னோடியாக, தெய்வமும் தன் பீதாம்பரத்தைச்சுற்றி இறுகக்கட்டிக்கொண்டு முன்வந்து நின்று, "இதோ நானும் வந்து விட்டேன், என்னுடைய பலமெல்லாம் உங்களுக்குத் தருகிறேன், எல்லோரும் சேர்ந்து ஊரிலுள்ள குடிகளை உயரச் செயவோம்" என்று கூறுமாம், எல்லாம் வல்ல இறை. இதைத்தான் அழகாக வள்ளுவப்பெருமானும்—

"குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"

என்று பொய்யாமொழி மூலம் சொல்கிறார்.

கிராமத்தொண்டர் படையைச் சேர்ந்தவர்களுக்கு, பாரதத்தாயின் தவப் புதல்வர்களின் ஆசி கிடைத்து விட்டது. ஆம்; தொண்டர்படையைச் சேர்ந்தவர்களுக்கு, ஆண்டவன் அருளும் நிச்சயம் உண்டு என்று நம்புவோம் நம்பினோர் கெடுவதில்லை. இது நான் மறைத் தீர்ப்பு.

கிராமத்து அம்பிகையைச் சரண்புகுந்து, நம்முடைய கிராமத்தொண்டர்படை வேலைகளை, சிறந்த முறையில் ஆரம்பிப்போம். முயற்சி திருவினை ஆக்கும். ஜெய்ஹிந்த்.

(குடியரசு தினத்தில், கிராம அபிவிருத்திக் கமிஷனர் வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.)

## குமரப்பா திருநாமம் வாழ்க !

பக்தியுள்ளம் படைத்த ஒரு கிறிஸ்தவர். சொல்லிலும் செயலிலும் ஒருமைப்பாடு கண்டவர். "நோயாளிகட்கே வைத்தியர்கள் வேண்டும்; ஏனையவர்க்கல்ல" என்று திடமாக நம்பினவர். புறக்கணிக்கப்பட்டோரின், உண்மையான அன்பர். அவர்களின் அவல நிலை கண்டு மனமிரங்கி தானாகவே எளிய வறிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர். அவ்வறிய நிலையிலிருந்து, அவர்களை மீட்கும் வழி கூறினவர். பொருளாதாரத் துறையில் காந்திய நெறியை மனமாரப் பின்பற்றினவர். நமது நாட்டின் சிக்கல்களைத் தீர்க்கவல்ல காந்திய வழியின் ஆற்றல், இயற்கை எழில், என்றும் மாறாத் தன்மையை உலகிற்குப் பறைசாற்றினவர். பரவல் முறையையும், கிராமத்தின் அடிப்படையில் திட்டமிடுதலையும் ஓயாது ஒழியாது உணர்த்தினவர். "படிப்படியே உருக்குலைந்து பாழ்பட்டு வரும் நமது சமுதாயத்தில், இன்றும் புரையோடிக் கொண்டிருக்கும் கேடுகளைப் போக்கும் பேராற்றலுடையது, ஆதாரக் கல்வி", என்று முழக்க முழக்க நம்பினவர். "தங்களுடைய அன்றாடத் தேவைகட்கு, நாடுகள் கிராமக் கைத்தொழில்களை அக்கறையுடன் ஏற்று நடத்தவேண்டும். தேசிய வருவாயில் கனரகத் தொழிலின் பங்கை வரையறுக்கவேண்டும். அப்பொழுதுதான், உலக ரீதியில் நிரந்தரச் சமாதானம் நிலவும்" என்ற கொள்கையைத் திட்டவட்டமாகப் பரப்பினவர்.

உலகம் சுற்றின உத்தமர் கசடறக் கற்றுத் தேர்ந்தவர். எக்குற்றத்தையும், காரசாரமும் நகைச்சுவையும் விரவிய பாணியில், நயமாக எடுத்துரைத்தவர். தன்னுடைய தெள்ளிய கருத்துக்களை, ஆழமாய்ப் பதியவைக்கும், வன்மை மிக்க எழுத்தாளர். அவர் தாம், கிராமப் பொருளாதார வல்லுநர் ஜே. சி குமரப்பா ஆவர்கள்.

அவருடைய செயல்முறைத் தத்துவத்தை ஓர்ந்து, என்றும் கிராமக் கைத்தொழில் பொருட்களையே பயன்படுத்தி, கதரைத் தவிர எதுணியையும் உடுத்ாது, கிராமங்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நல்வாழ்வைப் பற்றியே சிந்தித்து அப்புனிதரின் பெயரை வாழ்த்தி வழுத்துவோமாக !

# கிராமத் தொண்டர்படைத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி?

திரு. குலாம் முகமது பாஷா, ஐ.ஏ.எஸ்., பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குநர்.
(Director of Panchayat Programme)

ஜனவரி 26-ந் தேதி, நமது இந்தியா தேசம் முழுவதும் உள்ள எல்லா கிராமங்களிலும், பிரதமர் நேரு அவர்களால் கிராமத் தொண்டர் படைத் திட்டம் (Village Volunteer Force) ஆரம்பிக்கப்படும். இது சம்பந்தமாக, தமிழ்நாடு அரசாங்கம் என்ன செய்ய உத்தேசிக்கிறது என்பதைக் குறித்து, ஏற்கெனவே உத்திரவு தயாராகிவிட்டது. நமது செய்தி அமைச்சர், திரு. பூவராகன் அவர்கள் திட்டத்தின் நோக்கத்தை விரிவாக விளக்கிவிட்டார். உங்கள் ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் அதைக் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளது. இந்த சமயத்தில், இத்திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதக் குறித்து, என் அனுபவத்தைச் சுருக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில், உருவாகியுள்ள இந்தத் திட்டம், மிகவும் சக்தி வாய்ந்தது. வெறும் ஏட்டுச் சுரைக்காய் திட்டமாக இது ஆகிவிடக்கூடாது என்பதே என் கவலை. காரியத்தில் நடக்கக்கூடிய அனுபவமாக இது பயன்படவேண்டும். எனவே, ஒவ்வொரு கிராமத்திலும் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி, திட்டவட்டமான ஏற்பாடுகள் நடைபெற வேண்டியது, மிகவும் அவசியம். இதை எப்படிச் சொல்வது, என்பது தான் நம்முன் உள்ள கேள்வி.

கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், இந்தத் திட்டத்தில, பங்குகொள்ள வழி செய்யவேண்டும். எல்லோரும் ஒரே மாதிரியான காரியத்தில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்ப்பது, தவறாக முடியும். எனவே, அவரவர் தகுதிக்கேற்ற காரியங்களை ஆராய்ந்து பார்த்து, அவரவர் இஷ்டத்தை அறிந்து, மனப்பூர்வமாக அதில் அவர்களை ஈடுபடுத்தவேண்டும். கிராம சமுதாயத்தில் உள்ள சம்சாரிகள் (அதாவது, குடும்பத்தினர்) பல்வேறு பழக்கவழக்கங்களை உடையவர்கள். அவர்கள் தொழில் திறமையும், சூழ்நிலையும், சக்தி, சௌகரியங்களும் வயது அனுபவங்களும் பல தினுசாக இருக்கும். கிராம பஞ்சாயத்துத் தலைவரும் மற்ற அங்கத்தினர்களும், இவற்றையெல்லாம் நன்றாக அறிந்திருப்பவர்கள். ஆதலால், அவர்களால் சாத்தியமாகும் வேலைகளையே, அவர்களிடம் ஒப்படைத்து, அவற்றையெல்லாம் ஒன்றாக இணைத்துத் திட்டப்படி நிறைவேற்ற முன்வரவேண்டும்.

### உற்பத்தி

"உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்", "பொது அறிவு வளரவேண்டும்", "பாதுகாப்பு அல்லது ஊர்க் காவலைக் கவனிக்கவேண்டும்", என்று பொதுவாகப் பேசுவதற்குப்பதிலாக, எந்தெந்த வகையில் இந்த முக்கிய காரியங்களை யார் யார் நிறைவேற்றலாம் என்று தீர்மானித்துக் கொள்வது அவசியம். பொறுப்பை நிர்ணயித்துக்கொண்டால் தான், அனுபவத்தில் பயன் பெறமுடியும். உதாரணமாக, உணவு உற்பத்தியை எடுத்துக்கொள்வோம்.

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கு கிராம உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டமொன்று இருக்க வேண்டுமென்று, நமது அரசாங்கம் சென்ற இரண்டு வருடமாக வற்புறுத்தி வந்துள்ளது. "கலியாண குப்பம்" கிராமத்தை முன்மாதிரியாகக் கொண்டு, ஏறக்குறைய 12,500 கிராமப் பஞ்சாயத்துக்களிலும், விவசாய இலாகாவின் ஒத்துழைப்புடன், புள்ளி விவரங்களை சேகரிக்கப்பட்டு நடைமுறை திட்டங்கள் உருவாகியுள்ளன. காகித உருவத்தில் உள்ள இந்த வேலை முறைகளை, அனுபவத்தில் காட்டவேண்டிய சந்தர்ப்பமும் நெருக்கடியும், இப்போது ஏற்பட்டுள்ளன.

இப்போதுள்ள திட்டப்படி நமது விவசாய உற்பத்தியின் மூன்றில் ஒரு பாகம், பொறுக்கு விதைகளின் உபயோகத்தைப் பொறுத்தே, அதிகரிக்கமுடியும். எனவே, (1) ஒவ்வொரு கிராமத்திலும் "கிராம சஹாயகர்" வைத்துள்ள பொறுக்கு விதைகளை, தக்க முறையில் விநியோகிக்க முயலவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மூலம் இதற்கான கடன் வசதி தரப்பட்டுள்ளன. பொறுக்கு விதைகளை வாங்கி உபயோகிப்போர் யார் யார் முன் வருகிறார்கள் என்பதை கிராம பஞ்சாயத்து அறிந்து கொள்ளவேண்டும். அவர்களெல்லாம் உற்சாகத்தோடு இந்த முயற்சியில் நவீன விவசாய முறைகளையும் பயன் படுத்தி விளைச்சலை அதிகப்படுத்தலாம். ஈடுபடுமாறு தூண்டலாம்.

(2) ஒரு போகம் பயிரான நிலங்களில், இரண்டாவது போகம் பயிர் செய்ய முடியுமா என்று ஆலோசனை நடத்தலாம். ஏரி கண்மாய் ஊற்றுக்கால் வாய், ஆற்றுக்கால்வாய், குளம் முதலிய நீராதாரங்களை கிராம மக்களே செப்பனிடமுடியுமா என்பதையும் ஆராயலாம். புதிதாக மின்சார பம்ப் செட் போடுதல், ஆயில் எஞ்சின்கள் வைத்தல் கிணறு வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல் முதலியவற்றுக்கு, அரசாங்கம் அளிக்கும் கடன்வசதிகளை, தக்கவகையில், விவசாயிகளும், சாகுபடிகாரர்களும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(3) குப்பை எரு, தழை எரு, கம்போஸ்ட் எரு முதலியவற்றை, ஒவ்வொரு குடும்பமும் சரியான முறையில் தயாரிக்க வழி வகுக்கலாம். இதற்காக அதிகமாகத் தழை தருகின்ற செடிகளையும், மரங்களையும் நட்டுவளர்க்கலாம். பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களை, இவற்றுக்காகப் பயன்படுத்தலாம். அத்துடன் (4) இதுவரையில் சாகுபடி செய்யாமல் உள்ள தரிசு நிலங்களை, சாகுபடி செய்ய முயற்சி செய்யலாம். நஞ்செய்

பிரதேசங்களில் அநேகமாக, எல்லா நிலமும் சாகுபடியாகி வரலாம். ஆனால், புஞ்செய் பிரதேசமான இடங்களெல்லாம், எவ்வளவோ தரிசு நிலங்கள் பயனற்றுக் கிடக்கின்றன. உழைப்புத் திறமும் உண்மையான உற்சாகமும் நிறைந்த ஏழைஎளிய குடும்பத்தினருக்கு இத்தகைய நிலங்களை தர்கஸ்து செய்துதர, ரெவின்யூ இலாகாவினர் உதவியைப் பெறலாம். இந்தக் காரியங்களை யார் யார் பார்க்க முடியும் என்பதை பஞ்சாயத்து நிர்ணயிக்கலாம்.

(5) நஞ்செய் நிலங்கள் உள்ள பிரதேசங்களில் (உதாரணமாக, காவேரி டெல்டாவில்) அதிகப்படியான உரம் போடுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கமுடியும். ரசாயன உரத்தோடு, இப்போது புதிதாக வந்துள்ள அநேக கலவை உரங்களையும், அந்தந்த இடத்துக்கேற்றபடி உபயோகிக்கலாம்.

(6) மலைப் பிரதேசங்களிலும், மண் அரிப்பைத் தடுக்கவும், நிலவளத்தைப் பாதுகாப்பவும், சரிவுகளில் வரப்புயர்த்தி மழை நீரைத் தேக்கிவைக்கும் முயற்சிகளையும் (Contour Bunding and Soil Conservation) மேற்கொள்ளலாம். விவசாய இலாகா இதற்காக உதவும் தொழில் நுட்ப ஆலோசனையையும், நீண்டகால கடன் மானியங்களையும் பெறலாம்.

மேலே சுருக்கமாகச் சொன்ன ஆறுபகுதிகளில், யார் யார் எந்தக் காரியத்தை மனமுவந்து உற்சாகத்தோடு செய்கிறார்கள் என்பதை வரைப்படுத்தி அவர்கள் பெயர்களையெல்லாம் பதிவு செய்துகொண்டு, 'கிராமத் தொண்டர் படையினர்' என்ற அடையாளச் சின்னத்தை (Badge) அவர்களுக்குத் தரலாம். அதேபோல், ரேடியோ மன்றத்தை நடத்துகின்ற அமைப்பாளர், மற்ற அங்கத்தினர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், பத்திரிகை படிப்பவர்கள் நூல் நிலையத்துக்கு வருபவர்கள், பஜனை, பாட்டு, நாடகம் முதலியவற்றைச் சொல்லிக் கொடுக்கக்கூடியவர்கள் ஆகியோர், கிராமவாசிகளிடையே உண்மையான செய்திகளைப் பரப்பும் சேவையை செய்பவர்கள் வதந்திகளை நம்பாமல் இருக்கவும், ரேடியோவில் வரும் உண்மையான தகவல்களை மற்றவருக்கு எடுத்துச் சொல்லவும், இவர்களால் சுலபமாக முடியும். இது மிகவும் சிறந்த பணியாகும். கிராம ரேடியோ மன்ற அமைப்பாளர் மூலம் அனுப்பப்படும் பொதுவான கேள்விகளுக்கு அவ்வப்போது ரேடியோ மூலம் பதில் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் சுமார் 12,000 பஞ்சாயத்துக்களில், ரேடியோ பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே பெரும்பாலும் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் 'ரேடியோ மன்றங்கள்' நல்லமுறையில் நடைபெறச் செய்யவேண்டும்.

### மாதர் அரங்கு

'ஊர்க்காவல்' என்பது இப்போது மிகவும் முக்கியம். சண்டை சச்சரவு இல்லாமல், கிராம ஜனங்கள் இந்த நெருக்கடியான சமயத்தில் இருந்தால்தான், உள்நாட்டில் ஒழுங்கும், நிம்மதியும் ஏற்பட்டு, நம்முடைய சக்திகளையெல்லாம் தேசப் பாதுகாப்புக்கு உபயோகிக்க முடியும். தவிர, நெருப்பு, விபத்து, வெள்ளம் போன்ற எதிர்பாராத அபாயங்கள் ஏற்படும்போது, கிராமவாசிகள் ஒன்றாக இருந்து தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது சகஜமான விஷயம். எங்கேயாவது ஒரு சிறு வீடு, தீப்பிடித்துக் கொண்டாலும், ஊர் முழுதும் ஒன்று திரண்டு, கைக்குக்கிடைத்த சட்டிப்பானைகளைக்கொண்டு நீரைமொண்டுவந்து அவிப்பதை அனுபவ ரீதியாகப் பலர் பார்த்திருக்கலாம். ஆயினும் இதற்கேற்ற பயிற்சிகளை, தக்கவர்கள் மூலம் பெறுவதும், மிகவும் நல்லது. அபாய அவசர காரியங்களில், ஒழுங்காகவும் திறமையாகவும், துரிதமாகவும் காரியங்களைச் செயவதற்கு சாரணர் இயக்கம் தக்க பயிற்சி தருகிறது. அதேபோல, காயமடைந்தவர்க்கு முதலுதவி சிகிச்சை, இளைஞருக்கு 'டிரில்' முதலியவற்றில, இப்போது பயிற்சி பெறுவது அவசியம், பழங்காலத்தில் நம் கிராமங்களில் சுவாதப் பழகுதல் (அதாவது தண்டால், பஸ்கி, குத்துச்சண்டை) போன்ற தேகாப்பியாசங்களை, சர்வ சாதாரணமாகக் காணலாம். அவற்றையெல்லாம் நமது இளைஞர்கள் இப்போது தீவிரமாகக் கற்று, உடல் வலிமையும், மன உறுதியும், ஒற்றுமை உணர்வும் பெற முயலவேண்டும். இத்தகைய வேலைகளில் ஈடுபடுவோர் அனைவரையும், பேரேட்டில் பதிவுசெய்துகொண்டு கிராமத் தொண்டர் படை அடையாளச் சின்னம் கொடுக்கவேண்டும்.

### ஊர்க்காவல்

கிராமங்களிலே ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் விவசாய வளர்ச்சியில், தீவிர பங்கு கொள்கிறார்கள். சிறப்பாக கோழி வளர்த்தல், முட்டைகளைப் பெருக்குதல், பசு, எருமை முதலியவற்றை வளர்த்து அதிகமான பால் உற்பத்தி செய்தல், வீட்டின் அருகிலேயே காய்கறிகளைப் பயிரிடுதல், குப்பை எரு தயாரித்தல், பொறுக்கு விதைகளைச் சேகரித்தல், தானியங்களை வீணாக்காமல், சிக்கனமாக உபயோகித்தல், முதலியவற்றை அவர்கள் ஏற்கெனவே செய்துவருகிறார்கள். அத்துடன் தையல்வேலை, கம்பளி உடைகள் தயாரித்தல் கதர் உற்பத்தி கிராமத் தொழில்களையும் கற்றுக் கொள்ளலாம். நமது மாதர் நல இலாகவும், சமூக நல போர்டும், கதர் கிராமக் கைத்தொழில் போர்டும், இதற்காக அநேகத் திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள். செங்கல் தயாரிப்பு, மண்பாண்டத் தொழில், கொல்லர் பட்டறை, தச்சுவேலை முதலியவற்றை நவீன முறையில் செய்து கிராமப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யலாம். இப்படி செய்கின்ற பெண்கள், ஆண்கள் எல்லோரும் "கிராமத் தொண்டர் படை"யில் சேர்ந்து சிறந்த சேவை செய்ய இயலும். இவர்கள் எல்லோரும் அணிந்துகொள்கின்ற சின்னம் அவர்களே விரும்பி மேற்கொண்ட சேவையின் அடையாளமாகவும், பொறுப் புணர்ச்சியின் முத்திரையாகவும், விடாமுயற்சியின் லட்சியமாகவும் விளங்கும். இதுவே, நான் காணவிரும்பும் அனுபவரீதியான "கிராமத் தொண்டர்படை" இதை அமைப்பதில், எந்தவிதக் கஷ்டமும் இருக்காது. விஷயத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, மன உறுதியோடும், ஒற்றுமை உணர்ச்சியோடும் காரியம் செய்யவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆண்டவனிடம் நம்பிக்கையும், ஜனங்களிடம் மனமார்ந்த அன்பும சேவை மனப்பான்மையும் மிகவும் அவசியம்.



# நாட்டுப் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பங்கு

மாநில கல்வித் துறை இயக்குநர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் 24—1—63-ல், வானொலியில் நிகழ்த்திய உரையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அவர் தமது உரையில் ஆசிரியர் பெருமக்களின் சிறப்பு மிக்க சேவையையும், அவர்களின் தற்கால கடமையையும், மிக அழகாக விளக்கியுள்ளார். "கிராமத் தொண்டர் படை" அமைப்பின் "செய்தி விளக்கப் பணியினை," (Mass Education) கல்வித் துறை இயக்குநர் தம்முடைய சொற்பொழிவில் மிகத் திறம்பட விவரித்துள்ளார்.

ஒரு நாட்டின் இதயம் பள்ளிக்கூடம். சரி, நாட்டின் உயிர்நாடி யார்? இதயமாகிய பள்ளிகளை இயக்குபவர்கள் தானே! எனவே, ஆசிரியர்களே உயிர்நாடி என்பதை. கூறவா வேண்டும்? அவர்கள் நிலையே நாட்டின் நிலை. அவர்களிடம், நாட்டுப்பற்று மிகுந்திருந்தால், நாட்டு மக்களிடம் நாட்டுப்பற்று மிகுந்து இருக்கும். அவர்களிடம், தியாக உணர்ச்சி நிறைந்து இருந்தால், நாடு முழுவதும், தியாக உணர்ச்சி பரவியிருக்கும். ஆசிரியர்கள் வெறும் **உபதேசிகள் மட்டும் அல்லர்; சிறந்த வழிகாட்டிகள்;** ஆகவே, சாதாரண காலத்திலும் சரி, நெருக்கடியான காலத்திலும் சரி, நாட்டை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் சேர்ந்ததாகும். நாட்டிற்குப் பலவகைகளில் உதவும் பொறுப்பும், அவர்களுடையதே.

இப்போது, நம் நாட்டில் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சென்ற அக்டோபர் 20-ஆம் நாள், நம் நாட்டின் வட எல்லையில் போர் தொடுத்தது சீனா. வஞ்சகமாகத் தொடங்கப்பட்டது இப் போர். இப்போது, சில வாரங்களாகச் 'சுடுதல்' ஓய்ந்திருக்கிறது. ஆயினும் நெருக்கடி தீர்ந்துவிட்டதா? இல்லவே இல்லை. 'சுடுதல்' நின்றிருப்பதைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது. அயர்ந்துவிடக்கூடாது. பாதுகாப்பு முயற்சிகளையும் தளர்த்திவிடக் கூடாது; என்றும், எவரும் இந்திய மண்ணைக் கவர நினைக்க முடியாத அளவிற்கு, நம் பாதுகாப்புப் பலத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டும்" என நம் தலைவர்கள், எச்சரிக்கை விடுத்துள்ளனர்; அதைச் சிந்தையில் இறுத்துவது நல்லது.

இந்நெருக்கடியில் ஆசிரியர்கள், ஆசிரியைகள், இது வரையில் செய்தது என்ன? இனிச் செய்யவேண்டியது என்ன? இவற்றைச் சிந்திப்போம்.

### ஆசிரியர் சமுகத்தின் அற்புதப் பணிகள்

நெருக்கடி ஏற்பட்டதும், நொடிப் பொழுதில் ஆசிரியர்கள் ஆதரவு கிடைத்தது. கல்லூரி ஆசிரியர்கள் முதல், தொடக்க நிலை ஆசிரியர்கள் வரையில் உள்ள யாவரும், பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை அளித்தனர். பிறர் தூண்டுதலின்றிக் கொடுத்தனர்; தாமாகவே கொடுத்தனர்; தயக்கமின்றிக் கொடுத்தனர்; வெகு தாராளமாகக் கொடுத்தனர். இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே 15 இலட்சம் ரூபாய் வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

முதல் ஆவேசத்தில் ஒரு தடவை கொடுத்து, பின்பு நிறுத்திவிட்டனரா? அதுதான் இல்லை. அடுத்தடுத்துக் கொடுத்து வருகின்றனர். மாதந்தோறும் ஒரு நாள் ஊதியத்தை பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாகக் கொடுப்பதாகப் பல ஆசிரியர் சங்கங்களின் சார்பில் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவை வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு அதிக சம்பளமா, என்ன? இல்லையே! ஆரம்ப ஆசிரியர்களின் நிலையோ, மேலும் மோசமானது. ஆயினும், அவர்களுடைய கூட்டணியின் மாநில மாநாட்டு முடிவு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? தற்போதைய நெருக்கடி தீருகின்றவரைக்கும், தட்டுத் தடங்கலின்றித் தொடர்ந்து, மாதத்திற்கு ஒரு நாள் சம்பளத்தை, நன்கொடையாக வழங்குவது என்பதே. மற்றவர்களும் அவ்வாறே உறுதி பூண்டுள்ளனர். ஆகவே, தத்தம் சொந்த கஷ்டங்களையெல்லாம், எப்படியும் சமாளித்துக் கொண்டு, எல்லா ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தாய் நாட்டைப் பாதுகாக்க, நிதியுதவி புரிவார்கள்; தொடர்ந்து புரிவார்கள் என்பது திண்ணம்.

பணத்தியாகம் என்பது, ஆசிரியர்களோடு மட்டும் நிற்கலாமா? எல்லோரிடையிலும் பரவவேண்டாவா? அதையும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் தூண்டவேண்டும். **எழுத்தறிவிப்போர் இறைவனுக்கு ஒப்பாவார். அவர்கள் செல்வாக்கும், அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ளது.** அச்செல்வாக்கைக் கொண்டல்லவா நடுப்பகல் உணவுத் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் பரப்பினோம்! ஆசிரியர்களின் ஆலோசனையையும் தன்னூக்கத்தையும், தூண்டுதலையும், செல்வாக்கையும் அல்லவா பள்ளிச் சீரமைப்பிற்கு முதலாக்கினோம்! அவர்களால் தானே இலட்சக்கணக்கான மாணவ மாணவிகளுக்கு, 'சீருடை' கிடைத்துள்ளது.

அளவிடமுடியாத பெரும் செல்வாக்கு படைத்தவர்கள் தமிழ்நாட்டு ஆசிரியர்கள். அவர்கள் அச்செல்வாக்கை மற்றொரு நல்ல செயலுக்குத் திருப்பிவிடவேண்டும். பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக வழங்கும்படி பொது மக்களை ஊக்குவிக்கவேண்டும். பணத்தை மட்டும் கொடுத்தால் போதுமா? ஒவ்வொரு குடும்பமும் தன் சக்திக்கு ஏற்ற அளவில், தங்கத்தைத் தரவேண்டும். ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பிரசாரத்தை மேற்கொண்டால் விரைவில் ஏராளமான தங்கம் எளிதாகக் குவிந்துவிடும்.

ஆகவே, ஆசிரியத் தோழர்கள் மனம் உவந்து கொடுக்கட்டும்; மனமகிழ்ச்சியோடு கொடுக்க வைக்கட்டும்.

பாதுகாப்பிற்குப் பணம் மட்டுமோ தேவை? இன்னும் பல தேவை. வாலிபமும் வன்மையும் உடையவர்கள், இராணுவத்திலே சேரவேண்டும். அவை இல்லாதவர்கள் என்ன செய்வது? இதுதானே உங்கள் கேள்வி? அவை இரண்டும் உடையவர்களை பட்டாளத்தில் சேரத் தூண்டி ஊக்குவிக்கவேண்டும்.

போர் நெருக்கடியில் தேவையானது, மற்றொன்று. அது எது? அதுவே, இரத்த தானம். ஆசிரியர்களும் தம்மால் முடிந்த அளவு இரத்த தானம் செய்ய வேண்டும். பிறரையும், இரத்ததானம் செய்யுமாறு தூண்டவேண்டும். மேலும் செய்யவேண்டியது, யாது?

தீமையிலும் நன்மை விளைவது உண்டு என்பது, உங்களுக்கு நன்றாகத் தெரியும். சீன ஆக்கிரமிப்பால், நம் மக்களிடையே நாட்டுப் பற்றும், ஒற்றுமையுணர்ச்சியும், மேலோங்கியுள்ளன. இவை நன்றாக வேரூன்ற வேண்டும். அதற்கான தொண்டை, ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே" என்று மாணவர்கள் மனத்தில் நன்றாகப் பதியவைக்கவேண்டும். முற்கால இந்திய மன்னர்கள் அன்னியப் படையெடுப்புகளைத் தடுக்கக்கூட ஒன்று சேராததற்குக் காரணங்கள், அவர்களுக்குள் இருந்த சொந்த விரோதம், புகழ், பதவிப் போட்டி ஆகியவை. அத்தவற்றை, நாம் செய்யக்கூடாது என்னும் உணர்ச்சியை, மாணவ மாணவிகளுக்கு ஊட்டவேண்டும். பிரிக்கமுடியாத ஒற்றுமையோடு கூடிய பாரதமே, சுதந்திரப் பாரதமாக—குடியாட்சிப் பாரதமாக—பண்பாட்டுப் பாரதமாக—விளங்கும் என்பதை உணர்த்த வேண்டும்.

ஆசிரியர்களின் தேசப்பணி, பள்ளிக்கூட எல்லைக்குள் நின்று விடுவதா? இல்லை. **பள்ளிக்கூடம் சமுதாயத்தின் மையம்; நாட்டுப் பற்றும், ஒற்றுமையுணர்ச்சியும், தியாக சிந்தனையும், அம் மையத்திலிருந்தே, ஊர் முழுவதும் பரவவேண்டும்.** அவற்றைப் பரப்புவது, ஆசிரியர்களின் தொண்டாகும். அதற்கேற்ப, பொதுமக்களிடையில் பிரசாரம் செய்யவேண்டும்.

'அதிக உழைப்பு; அதிக உற்பத்தி' இதுவே, இன்றைய ஊக்கம் ஊட்டும் முழக்கம்; தேவையான முழக்கமும்கூட இதைக் கேட்டறிந்த பிறகு, ஆசிரியர்கள் செய்யவேண்டியதென்ன? எல்லோருக்கும், ஐந்து மணிப் பாடம் என்பதை, மாற்ற வேண்டும். **மதிப்பெண்கள் குறைவாக வாங்கும் சில மாணவ மாணவிகளுக்கு, கூடுதலாக அரை மணியோ, முக்கால் மணியோ, பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும்.** ஒவ்வொரு கூடுதல் பாடத்திற்கு, ஒவ்வொரு நாள் என்று, திட்டமிடவேண்டும். குறைந்த மதிப்பெண்கள் வாங்குகிறவர்களுக்கு, அத்திட்டப்படி முறையாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதுவே, ஆசிரியர் ஆசிரியைகளிடம், எதிர்பார்க்கும் அதிக உழைப்பு. இந்த அதிக உழைப்பின் பலனே? தேர்ச்சி அதிகமாவதே.

இதற்காக, எப்படியோ மேல் வகுப்பிற்குத் தள்ளிவிடலாமா? கூடவே கூடாது. தேறுவதற்கு வேண்டிய மதிப்பெண்கள், எல்லோரும் வாங்கும்படி செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலேயே, இவ்வாண்டில் இது முடியுமா என்று, மலைக்காதீர்கள்! ஆண்டுப் பரீட்சைக்கு, இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன. இதற்குள், எவ்வளவோ செய்யமுடியும்! திட்டமிட்டுக் கூடுதலாகக் கற்பிப்பதன் மூலம், அதிகம் பேரைத் தேறவைக்க முடியும். **தேர்ச்சி உயர்வு, இவ்வாண்டில் தொடங்கட்டும்!** மூன்றாண்டுகளில் முழுத் தேர்ச்சி நிலைக்கு, உயரட்டும்! **இது தமிழ் நாட்டு ஆசிரியர்கள், ஆசிரியைகளால் முடியக் கூடிய காரியமே.** உங்களில் எவருக்கும், அவநம்பிக்கை கொஞ்சமும வேண்டா.

### இன்னுமொரு முக்கிய பணி

போர்முனைகளில் பணிபுரியும் வீரர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்க, தனிக்கவனம தேவை. ஆசிரியர்களோ தமிழ் நாடெங்கும், சிற்றூர்தோறும் இருக்கிறார்கள். அவர்கள்தான், கவனம் முழுவதையும் செலுத்தி இதை நன்றாகச் செய்யமுடியும். இதற்கு, **மதுரை மாவட்ட ஆசிரியர்கள் வழிகாட்டியுள்ளனர்.** வசதியும் ஓய்வும் உடைய ஆசிரியர்கள் பலர் முன்வந்து, 'போர் வீரர் குடும்ப நலக்குழுக்களை அமைத்துள்ளனர். போர் வீரர்களின் குடும்பங்களைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் திரட்டுவது, முதல் வேலை. அக்குடும்பங்களின் தேவைகளைத் தெரிந்துகொள்வது, அடுத்தவேலை. அவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவது, உதவிகளைப் பெற வழிவகை செய்வது, அதற்கு அடுத்த வேலை. குடும்பங்களுக்காகக் கடிதங்களை எழுதிக் கொடுத்தல், குடும்பங்களுக்கு வரும் கடிதத்தைப் படித்துக் கொடுத்தல், அவர்களின் குழந்தைகளைத் தகுதி வாய்ந்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்த்தல் வேண்டிய உதவிகளைப் பெற உதவுதல் ஆகியவையே நாம் செய்யவேண்டிய தொண்டாகும். மதுரை மாவட்ட ஆசிரியர்கள் காட்டிய வழியை மற்ற மாவட்ட ஆசிரியர்களும் பின்பற்றுவதைப் பார்க்கிறேன். **விரைவில் எல்லா மாவட்டங்களிலும், 'போர்வீரர்களின் குடும்பநலத்** தொண்டை" ஆசிரியர்குழுக்கள் ஏற்றுக்கொண்டன என்ற நல்ல செய்தியை எதிர்பார்க்கலாமா?

மூளை வேலை செய்வோர் ஒவ்வொருவரும், சிறிது உடலுழைப்பிலும் ஈடுபடவேண்டும். இது தனிநபர் உடலுக்கும் நல்லது; நீண்டகாலவாழ்வுக்கும் நல்லது. அதுமட்டுமா? நாட்டு நலனுக்கும், நல்லது; பாதுகாப்பிற்கும் இன்றியமையாதது. ஆகவே; **ஆசிரியர்களும் ஆசிரியைகளும், அன்றாடம் பள்ளித் தோட்ட வேலைகளில், ஈடுபடும்படி வேண்டுகிறேன்.** மாணவர்களையும். மாணவிகளையும் தோட்டவேலையில் ஈடுபடுத்திவிட்டு, நாம் மேற்பார்வை

(13-ம் பக்கம் பார்க்க)





# கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம், கிருஷ்ணகிரி

**அமைப்பு.**—வானளாவிய மலைகளும் பசும்புல்மெத்தையோ என கண்ணுக்கெட்டும் தூரம் நெல் வயல்களும் அவைகளில் சில விவசாயின் உள்ளத்தை இன்பத்தால் நிறைத்து.

"ஆடியில் விதை விதைத்து
ஐப்பசியில் களை எடுத்து
கார்த்திகையிலே கதிராச்சு
கழனியெல்லாம் பொன்னாச்சு"

என்று நினைக்கும் வண்ணம் முத்து போன்ற நெல்மணிகளை பார்க்கும் ஒரு நிலையை கொடுத்த சர்க்காரின் சாதனையை புகழ்ந்துக்கொண்டிருக்கும்படி செய்கிறது. முன்னெல்லாம் வாடிய வயல்களையும், வானையும் நோக்கி நின்ற விவசாயியின் நிலைமாறி இப்போது காட்டாற்றை (தென்பெண்ணை) தடுத்து அணைக்கட்டி, கண்ணுக்கெட்டும் தூரம் தண்ணீரைத் தேக்கி விவசாயிகளின் இன்னலைப் போக்க வந்த சாதனையின் உருவம். "நீர்த் தேக்கம்" கண்ணுக்கும், செவிக்கும் விருந்தாக "சோ" என்ற இரச்சலுடன் தண்ணீர் வழிந்தோடுவதும், இன்பப் புங்காவும், பூத்துக்குலுங்கும் பூக்களின் இனிய மணமும் நிரம்பிநிற்கும் இடம்தான் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்—இந்த சூழ்நிலையில் அமைந்திருப்பதுதான் கிராம விஸ்தரிப்பு பயிற்சி நிலையம்.

**வரலாறு**—மதுரை மாவட்டத்தில் இந்த இரண்டு கிராம விஸ்தரிப்பு நிலையங்களில் ஒன்றை இட வசதியும் இயற்கை எழிலும் கொண்ட இந்த இடத்தில் 12—2—58 அன்று அந்த நன்னாளில் வேலூன்றப்பட்டது. பயிற்சியாளருக்கும் பயிற்றுவிப்போருக்கும் இருக்க இடம் கிடைத்தபோதிலும் வகுப்புகளுக்கும், மியூசியம், ஆசிரியர் அறை, உணவு விடுதி ஆகியவைகள் இல்லாமல் இருந்தபோது அன்று கிடைத்த இடத்தை கொண்டு எந்த நிலையிலும் சமாளிக்க முடியும் என்றஅடிப்படைத் தத்துவத்தை மனதில்கொண்டு, கிராம பணியாளரைக் பயிற்றுவிக்கும் இடம் பொது நலத் துறையினிடமிருந்து ரூ. 1,51,670 மதிப்புள்ள 32 யூனிட் கட்டிடங்கள் வாங்கப்பெற்றது

**பயிற்சியாளர் (இதுவரை)**—முதல் முறையாக 110 (நூற்றுப்பத்து) பேருக்கு விஸ்தரிப்பு பயிற்சியும், இரண்டாவதாக 82 பேர்களுக்கு மறு பயிற்சியும் மூன்றுவதாக 103 பேருக்கு இரண்டாண்டு பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது நான்காம் பகுதியாக 103 பேருக்கு கிராம சேவகர்களாக பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்றுவிப்போர்—

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சி நிலைய முதல்வர் | 1 |
| 2. | பயிற்சி நிலைய உதவி முதல்வர் | 1 |
| 3. | விவசாய ஆசிரியர்கள் | 3 |
| 4. | பண்ணை மேற்பார்வையாளர் | 1 |
| 5. | கால்நடை ஆசிரியர் | 1 |
| 6. | கூட்டுறவு ஆசிரியர் | 1 |
| 7. | சமூகக் கல்வி ஆசிரியர் | 1 |
| 8. | கதர், கிராமக் கைத்தொழில் ஆசிரியர் | 1 |
| 9. | பொது சுகாதார ஆசிரியர் | 1 |
| 10. | பொறிஇயல் உதவியாளர் | 1 |
| 11. | திரைப்பட இயக்குநர் | 1 |

இத்துடன் கிருஷ்ணகிரி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைச் சேர்ந்த ஜூனியர் இன்ஜினியர் பொது பொறியியல் போதிக்கவும் இதுவரை மேற்படி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலர் போதித்து வந்த பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான வகுப்புகளை தற்போது புதியதாக அமர்த்தப்பட்டுள்ள உதவி முதல்வர் அவர்களே போதித்து வருவார்.

**அலுவலக ஊழியர்கள்.**—அலுவலக வேலைகளை கவனிக்க இரண்டு மேல்தர எழுத்தர்களும், இரண்டு இடைநிலை எழுத்தரும், ஒரு விவசாய பண்ணை எழுத்தரும். ஒரு தட்டெழுத்தாளரும், நூல்நிலைய அட்டெண்டரும் இருந்து பணியாற்றிக்கொண்டு இருக்கின்றனர். பயிற்சி நிலையத்திற்கு அளிக்கப்பட்டுள்ள ஊர்திகளின் ஓட்டிகள் நால்வர், ஒற்றை மாட்டு செக்கு அமைப்பாளர், 3 கடைநிலை ஊழியர்கள், 2 காவல் புரிவோரும் இருக்கின்றனர்.

### பயிற்சித் திட்டம்

கிராமப் பகுதிகளில் பணியாற்ற பயிற்றுவிக்கப்படும் பயிற்சியாளருக்கு பலதிறப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. அவைகளில் அவர்களுக்கு நல்லமுறையில் போதிக்க அரசினரால் இரண்டாண்டுகளுக்கு பாட திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. 1. வளர்ச்சித் திட்டம், திட்டம் தயாரித்தலில் அடிப்படை தகவல்களும் அம்சங்களும், 2. சமூகக்கல்வி, 3. விவசாயம் (மண்பராமரிப்பும் பாதுகாத்தலும் விவசாய அடிப்படை பொறியிலும்) 4. விவசாயம் (பயிர் பராமரிப்பு) 5. விவசாயம் (தோட்டக் கலையும், பயிர் பாதுகாப்பு முறைகளும்) 6. கால்நடைப் பராமரிப்பு, 7. கதர் கிராமக் கைத்தொழில், 8. அ. கூட்டுறவு, ஆ. பஞ்சாயத்து, 9. பொதுச் சுகாதாரம், 10. சிறு பொறியியல் வேலைகள், 11. அ. சாரணியம், ஆ. விஷேசித்த விரிவுரைகள். ஆகிய பாடங்களுக்கு விஷய விளக்க வகுப்புக்களும் செயல் முறை வகுப்புக்களும் நடத்தப்படும்.

**ஊட்டமளிக்கும் உணவுத் திட்டம்.**—தற்போது நமது சர்க்காரின் பல திட்டங்களில் மக்கள் ஊட்டமளிக்கும் உணவு பெறவேண்டும் என்ற எண்ணத்தினுல், பயிற்சி நிலையங்கள் இருக்கும் 7 பஞ்சாயத்து யூனியன் வட்டாரங்களில் மட்டும் செயலாற்றவும், கிராம சேவக் பயிற்சியாளருக்கும் உணவு திட்டங்களைக் குறித்து நன்ருக தெரிந்திருக்கும்படியும் இந்த திட்டங்களை பயிற்சிக்குப் பிறகு தாங்களே செய்ய வேண்டியிருக்கும் ஆகையால் இந்த திட்டத்தின் சகல அம்சங்களையும் தெரிந்துகொள்ளும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த திட்டத்தின் மூலம் கர்ப்பிணிகளும், பாலூட்டும் தாய்மார்களும், 2 முதல் 5 வயதுள்ள சிறுவர்களும் பயன் பெறுவார்கள். அந்தந்த கிராம பஞ்சாயத்தே எல்லாவித வேலைத் திட்டங்களையும் அமுல் செய்யும்.

**கற்பிக்கும் முறைகள்.**—பயிற்சியாளரின் செயல்படும் மனப்பான்மையும், செயலாற்றும் திறமையையும் வளர்க்க வேண்டும் என்ற பயிற்சி குறிக்கோளுக்கு இயன்றவாறு பாடப் பகுதிகளும் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வகுப்புகளிலும் நிலையத்தின் பண்ணையிலும் கிராமப் புறங்களிலும் போதனு முறைப்படியும், செயல் முறைப்படியும் நடத்தப்பட்டு வந்தாலும் செயல்முறைக்கு சிறிது அதிக முக்யத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது அவசியமும் அவசரமுமானது எனவே பாட திட்டங்கள் 3 வகையாக பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

**1. நிலையத்தில் கல்வி.**—வகுப்பறைகளில் போதனை செய் முறைகள் திருபணங்கள் விவாதங்கள் செய்து பழகுதல் ஆகியவைகளைக்கொண்டு கற்பிக்கப்படுகின்றது.

**2, கிராமத்தில் கல்வி.**—பயிற்சி நிலையத்தைச் சுற்றி ளஉள் சில கிராமங்களை பயிற்சி நிலைய "தத்து கிராமங்களாக" எடுத்து அவைகளில் வகுப்பறையில் பயின்றவைகளையும் நேரில் காண்பவைகளையும் சேர்த்து விஷயங்களை புரிந்துகொள்ளவும் கிராமங்களில் எப்படி. என்ன வேலைகள் நடைபெறுகின்றன இன்னும் என்ன செய்யவேண்டும் என்பவைகளை அறிந்துக்கொள்ளும்படிச் செய்தல்.

**3. பயிற்சி—களத்தில் கல்வி.**—மேற்கூறிய இரண்டு முறைகளில் அவர்கள் பெற்ற அனுபவத்தையும் பொது அறிவையும் கொண்டு பயிற்சி நிலையத்தைச் சுற்றிலும் வட்டார வளர்ச்சி திட்டம் செயல்படும் பல பகுதிகளில் கிராமங்களைத் தேர்ந்து எடுத்து அங்கே பயிற்சியாளரை அனுப்பி பயிற்சிக்குப்பின் அவர்கள் எந்த முறையில் கொடுக்கப்படும் கடமைகளையும் அலுவல்களையும் திறம்பட செய்து முடிக்கவேண்டும் என்பதை நேரில் தெரிந்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல். இதனை "வேலைக்கான பயிற்சி" எனலாம். இது 2½ மாதங்கள் வரை நீடிக்கும். இதோடு பயிற்சி நிலையத்திற்கு அருகிலுள்ள 5 கிராமங்களில் பயிற்சியாளரைக்கொண்டு, பயிற்சியாளருக்காக இளைஞர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுகின்றன. அவைகளின் அமைப்பு முறைகளும் இன்னும் இதர அம்சங்களையும் தெரிந்துகொண்டவைகளையும் பயிற்சிக் காலத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

இவைகளோடு கல்வி நோக்கு சுற்றுப்பயணம் மூலம் சில முக்கிய ஆராய்ச்சிப் பண்ணைகள் நிலையங்கள் திட்டங்கள் முதலியவைகளை நேரில் கண்டு அறிவை பெருக்கிக் கொள்ளும்படியாக இவைப்போன்ற வாய்ப்புகள் செய்து தரப்படுகிறது.

பயிற்சி நிலைய வாழ்க்கையின் உயரிய நோக்கம் வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதல் எவ்விதம் என்பதை அறியும்படியும் அன்பு, பண்பு, ஒற்றுமை, சமத்துவம் நிலவும்படி செய்யவேண்டியவைகளிலேயும் பயிற்றுவிக்கப் படுகின்றனர். ஒவ்வொருவருக்கும் ரூ. 40 வீதம் 2 ஆண்டுகளுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் கல்வி (Job Training) காலத்தில் ரூ. 50 வீதம் இவ்வருட முதல் கொடுக்கப்படுகிறது. இதைக் கொண்டு அவர்களாகவே பஞ்சாயத்து முறைப்படி அந்தந்த வேலைக்கென்று தலைவர்களை தேர்ந்தெடுத்து உணவு விடுதி சுத்தம், தோட்டம், பண்ணை சாகுபடி வகுப்பறை சுத்தம், கலாநிகழ்ச்சிகள், விளையாட்டுகள் ஆகியவைகளை கவனிக்கின்றனர்.

பயிற்சியாளரை பல தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு ஆசிரியரின் பொறுப்பில் இணைக்கப்படுகின்றனர். பயிற்சி சம்பந்தமானவைகளை செவ்வனே செய்யும்படியும் பரஸ்பர உறவும், நட்பும் ஏற்படுத்தும் வழியாகவும் பயிற்சியாளரின் திறமையையும் ஒழுங்கு முறைகளையும் நேரில் கவனிக்கவும் மதிப்பீடு செய்யவும் இம்முறை உதவுகின்றது.

**பண்ணை.**—பயிற்சியில் விவசாயத்திற்கும் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது மொத்த பாடவகுப்புகளில் 37% இதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளதிலிருந்து தெரிய வரும்.

அதற்காக இப்பயிற்சி முகாமில் 51·75 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நஞ்செய் .. .. .. .. | 20 ஏக்கர் |
| 2. | தோட்டம் (இவன பயிர்கள்) சாகுபடி நிலம் உள்பட.. .. | 11·44 ஏக்கர் |
| 3. | பழச் சாகுபடி .. .. .. | 8·64 ஏக்கர் |
| 4. | புஞ்சை சாகுபடி நிலம் .. .. | 4.00 ஏக்கர் |
| 5. | மேய்ச்சல் நிலம் .. .. .. | 5·49 ஏக்கர் |
| 6. | பாறை நிறைந்த இடம் பசுந்தாள் உற்பத்திக்கென்று ஒதுக்கப் பட்டது). | 2·18 ஏக்கர் |

இந்த பயிற்சி முகாமில் மற்ருெரு முக்கியத்துவம் என்னவென்ருல் இங்கு புஞ்சை சாகுபடி, நஞ்சை சாகுபடி, தோட்டக்கால் சாகுபடி ஆகிய மூன்று வித சாகுபடி முறைகளும் நடத்தி காட்டப்படுகிறது. அதோடு இன்னொரு முக்கியமானதொன்று என்னவென்ருல் பழச் சாகுபடியும் முக்கிய விவசாய வேலையாக எடுத்து நடத்திக் காட்டப்படுகிறது. 8·64 ஏக்கர் நிலத்தில் பலவித பழ மரங்கள் வளர்க்கப்படும் விதங்கள் பாதுகாப்பு முறைகளும் புகுத்தப்பட்டு பயிற்சியாளருக்குப் பயனளிக்கும் வகையில உள்ளது.



இப்பண்ணையில், நெல், சோளம், கேழ்வரகு, நிலக் கடலை, எள், பருத்தி, சொள், பசுந்தாள் பயிர், தீவனப் பயிர், காய்கறிகள் முதலியவை பயிரிடப் படுகின்றன. பயிற்சியாளருக்கு விவசாய முன்னேற்றத்தில் நேர்முறையில் பயிற்சி அளிக்கவும் அபிவிருத்தி முறைகளை தெரிந்துகொள்ளும் வகையில் இது ஒரு "விஞ்ஞான கூடமாக" விளங்குகிறது. அருகில் உள்ள விவசாயிகளுக்கு மாதிரி பண்ணையாகவும் பயனளிக்கிறது.

இம்மாதிரியே இங்கு கால்நடை முதலுதவி நிலையம், நூல் நிலையம் காட்சி சாலை (Museum) மாணவராலும் ஆசிரியரும் நிலையத்தின் இதர ஊழியரும் சேர்ந்துநடத்தும் கூட்டுறவு சங்கம் போன்ற ஸ்தாபனங்களும் ஊட்டமளிக்கும் உணவு திட்டத்திற்கு என்று "கோழிப்பண்ணை, ஒன்று உள்ளது. இதற்கு புதுவகையான பல கருவிகளும் "டீப் லிட்டர்" முறைப்படி கோழி வளர்க்கும் முறைகளும் இங்கே அமுலாக்கப்பட்டு கோழிகளும் குஞ்சுகளும் முட்டைகளும் இங்கிருந்து பல கிராமங்களுக்கு வழங்கும் படியான எண்ணத்துடன் இயங்கிவருகிறது.

இத்துடன் 16 மில்லி மீட்டர் ப்ரொஜக்டர், எபிடியாஸ் கோப் ஸ்டிரிப் ப்ரொஜக்டர் கேமரா ஆகிய (Audio visual aids) செவிகட்புல சாதனங்கள் இங்குள்ளன. கிராம கிராம தொழில்களில் ஒற்றை மாட்டு செக்கு கதர் நெசவு, கைக்குத்தல் அரிசி முறை, தேனி வளர்த்தல் ஆகியவைகளும் நடைபெற்று வருவது பயிற்சியாளருக்கு பயனளிக்கின்றது.

மேற்கூறிய சாதனைகளையும் சந்தர்ப்பங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி இரண்டு வருட காலத்தில் கிராமத்தொண்டு கிராமத் திருப்பணி சமூக சேவை ஆகியவைகளை அச்சாணியாகக் கொண்டு மக்கள் சக்தி மண்டிகிடக்கும் நம் நாட்டில் கிராமங்களால் நிறைந்த இந்திய நாட்டின் முன்னேற்றம் கிராமங்களில்தான் ஆரம்பிக்க வேண்டும் என்பதோடும் இம்மக்களின் சக்தி காட்டாறுபோல பயனற்று ஓடிக்கொண்டிருக்காமல் அரசினரின் நல்ல திட்டங்களைக்கொண்டு குறுக்கே அணை போட்டு நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதும், மின்சாரம் உற்பத்தி செய்வதுபோலவும் மக்களுக்குள்ளே—

(1) விழிப்பு : (பஞ்சாயத்து ஆட்சியினுல் விளங்கும் பல நன்மைகளை அறிவது, அதில் பங்கு பெற்று பயனடைவதும்)

(2) ஒத்துழைப்பு : (கூட்டுறவு முறையில் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்பதை அறியவும் வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை வளரவும் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதை அறியவும்)

(3) சேமிப்பு : (கல்வியினுல் உண்டாகும் அனுகூலங்களை அதாவது "கல்லாதார் இல்லை" என்ற நிலை வரவேண்டும். கல்வி அறிவின் மூலம் நாட்டின் நிலை உயர்வு, முன்னேற்றம் இவைகளில் தீவிரமாக பங்குக்கொள்ள சமூக கல்வியும் பெற வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளவும், குறிப்பாக நாட்டின் தற்போதைய நிலையில் சேமிப்பின்)

முதலிய நற்பண்புகளை மக்கள் பெறவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் பயிற்சியாளருக்கு போதிக்கப் பட்டு கிராமத் திருப்பணி தொண்டராக அனுப்பும் பணியை சிரமேற்கொண்டது இப்பயிற்சிச் சாலையின் புனித பொறுப்பு.

முதல்வர்,
கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம்
[illegible]

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இடுவது மட்டும் போதாது! முடிந்த அளவு, நாமும் அவர்களோடு கலந்து, தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும்.

பள்ளிகளில் தோட்டங்களை உருவாக்குவதோடு, நிற்கலாமா? **நாம் குடியிருக்கும் வீட்டுப் புறக்கடைகளிலும், தோட்டம் அமைக்க வேண்டும்.** இயற்கையோடு இயைந்த இன்பத்தைச் சிறிது நேரமாவது, பெறவேண்டாவா? யாம் பெற்ற இன்பம் பிறரும் பெறட்டுமே! அக்கம்பக்கத்தில் இருபவர்களையும், தோட்டம் போடதூண்டுவோம.

பொன்னையும் பணத்தையும் கொடுத்து, கொடுக்க வைத்து, தோட்டம் போட்டு, போடவைத்து, நாட்டுப்பற்றையும், ஒற்றுமையுணர்ச்சியையும், தியாக உணர்ச்சியையும், நாடுமுழுவதும் போற்றி வளர்த்து, மதிப்பெண் குறைந்தவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்தி, கூடுதலாகக் கற்பித்து, தேர்ச்சியைப் பெருக்கி, பாதுகாப்பைப் பலப் படுத்தி, அச்சத்தை வென்று, அமைதியைக் காத்து, **அறிவையும் அன்பையும் எல்லோரும் பெத உதவுவது, நம் தலையாய கடன்; தனிப் பொறுப்பு.** இதை நிறை **வேற்றி,** வெற்றிகாண்போம் வாரீர்!

வெல்க பாரதம்!

—(வானொலிப் பேச்சு)

---

## அன்னை அழைக்கின்ருள்!

**மின்னூர் சீனிவாசன்**

அன்னை பாரதம் அழைக்கின்ருள்—இன்று
உன்னையே நம்பி இருக்கின்ருள்
பொன்னும் பொருளும் தருவது பெரிதா
புறப்படு மகனே போருக்கு—வெற்றி
உனக்கில்லாமல் யாருக்கு —(அன்னை)

சிறந்தது உலகில் பிறந்த மண்ணை
சிந்தையில் நிறுத்து மறவாதே—உயிர்
செல்வதென்ருலும் தளராதே —(அன்னை

வெற்றி என்ற ஒரே கருத்தோடு
வீரமைந்தனே போர்நடை போடு
வெல்க என்றுநீ பாடியும் பாடு! —(அன்னை)

**தமிழ் நாட்டில் ராஷ்டிரபதி**

# திரு பி. எஸ். சிவசாமி அய்யர் நூற்றுண்டு விழா

தமிழ்நாட்டின் தவப்புதல்வருள் ஒருவரான திரு. பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்களின் நூறுவது பிறந்த தின விழாவில் நமது ராஷ்டிரபதி அவர்கள் கலந்துகொண்டு அவரது பெயரால் எழுப்பவிருக்கும் நினைவு மன்றம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டினுர்.

தஞ்சைத் தரணியில் பழமானேரி என்னும் சிற்றூரில் பிறந்து, கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றுத் தமது உதார குணத்தாலும் உத்தமப் பண்பாலும் திரு. சிவசாமி அய்யர் அவர்கள் உயர்ச்சி பெற்ருர். பிரபல வக்கிலாகப் பணியாற்றிய அவரது ஆழ்ந்த தெய்வபக்தியும் அறிவுத் துறையில் நேர்மை மலரச் சேவை செய்த பான்மையும் கல்விக்கென வாரி வழங்கிய வண்மையும் அவரை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவராகக் காட்டுகின்றன. மாநில முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் அவரை, தலை ஈந்த குமணன் போல் தான் வாழ்ந்த வீட்டை விற்றுப் பள்ளிக்கு நிதி அளித்தவர் எனறும், கடையெழு வள்ளல்களைப் போல் கல்விக்கு உதவி செய்த வள்ளல் என்றும் பாராட்டினுர். இந்தியா அன்னியன் காலில் மிதியுண்டு கிடந்த வேளையிலேயே—விடுதலை வாழ்வைப் பெறப் போராடி நின்ற நேரத்திலேயே—நாட்டின் பாதுகாப்பு பலம் பொருந்தியதாக, இருக்கவேண்டுமென்று அவர் பன்னிப்பன்னி வலியுறுத்தினுர். நாட்டின் ராணுவ பலத்தில் அக்கறை காட்டினுர். நமது வீரர்களை பாரபட்சமாக நடத்தக்கூடாது என வாதாடினுர். அவர் தனது சொத்தின் பெரும்பகுதியைக் கல்வி ஸ்தாபனங்களுக்காகவே செலவிட்டார். தனது ஊருக்கருகிலுள்ள திருக்காட்டுப் பள்ளி என்னும் இடத்தில் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றைத் தோற்றுவித்தார். மயிலையில் மற்ருெரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியினைத் தோற்றுவித்தார். அவரது நூறுவது பிறந்ததின விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் கலந்துகொண்டார்.

வர்ண விசித்திரம் காட்டும் வான வில்லென, விதம் விதமாய் உடுத்து நின்ற அதிரூபவண்ணச் சிறுமிகள் வழிநெடுக வண்ணமலர்கள் தூவி "வருக! வருக!" எனக் குடியரசுத் தலைவரை மேடைக்கு அழைத்துச் சென்ற காட்சி யாவரையும் கவர்ந்தது.

ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தமது பேச்சில், திரு. சிவசாமி அய்யர் பல்வேறு துறைகளிலும் திறம்படச் செயலாற்றியதை விரித்து உரைத்தார். ராணுவ விவகாரங்களில் அவர் காட்டிய கரையற்ற பேரார்வத்தையும், மத்திய சட்டமன்ற உறுப்பினராய்ப் பணியாற்றுங்கால், ராணுவ விவகாரக் குழுவில், அவர் அங்கம் வகித்ததையும், தென்னிந்தியர்களைப் பெருவாரியாகப் படையில் சேர்க்கத் தீவிரங்கொண்டதையும் சுட்டிக் காட்டினுர். அந்நாளில் ராணுவ அணியில் நிலவிய பாகுபாட்டை நீக்கி இந்திய வீரர்களுக்குச் சம உரிமையும் வாய்ப்பையும் தந்திடப் பெருமுயற்சி மேற்கொண்டார். பாதுகாப்பு விஷயத்தில் அவர் ஊக்கத்தின் ஊற்றெனத் திகழ்ந்தார். துப்பாக்கி வெடிகள் சொல்லும் மரணக் கதைக்கு மருண்டுவிடாமல், யுத்தத்தின் பாதையில் வானத்தைத் தீண்டும் மலைகளானுலும், பாதாளத்தைக் காட்டும் பள்ளங்களானுலும் தடைகளைக் கண்டு தயங்காத நெஞ்சுரமும் 'விடை கொடு தாயே' என்று துடித்துக் கிளம்பும் வீர உணர்வும் இன்று நமது வீரர்கள் பெற்றிருப்பதற்குத் திரு. சிவசாமி அய்யர் அவர்களின் சேவையும் ஓரளவு காரணமாகும். அப்போது ராணுவத் தளபதியாகப் பணியாற்றிய சர். கிளாட் ஆக்கின்லக், சிவசாமி அய்யர் ராணுவ விவகாரக் கமிட்டியில் அங்கம் வகித்து ஆற்றிய சேவை குறித்துப் பாராட்டினுர்.

அவரது பிறந்ததின விழாவை நாட்டைப் போர்மேகம் கப்பியுள்ள இந்த நேரத்தில் கொண்டாடுவது சாலவும் பொருத்தமானதாகும். இவரது பெயரில் நடைபெற்று வரும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி திரு. வரதாச்சாரி அவர்கள் (சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தவர்) தலைமையில் உள்ள நிர்வாகக் கமிட்டியாலும், 'குருகுலதர்ம ஆசாரியர்' திரு. K. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் ஆலோசனையாலும் மிகத் திறம்பட நடைபெற்று வருவது பாராட்டுக்குரிய செயலாகும்.

# தமிழில் கலைக்களஞ்சியம்

**சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம்,** பதினைந்து ஆண்டு காலம், சளையா முயற்சி மேற்கொண்டதன் விளைவாய், **தமிழ்க் கலைக் களஞ்சியம்** (Tamil Encyclopaedia) வெளி வந்துள்ளது.

இது, ஒன்பது தொகுதிகளைக் கொண்ட ஒளிசேர் **"நவமணிக் களஞ்சியமாகத்"** திகழ்கிறது ; இதன் முதல் தொகுதியை வெளியிட்டபோது, கூறப்பட்ட சிற்சில குறைபாடுகளும், பின்னர் நீரில் அழிந்த நுரையாகிவிட்டன. அடுத்தடுத்து வந்த வெளியீடுகளைக் கண்டு, தமிழறிஞர்களும், பெருங்குடி மக்களும், பெரிதும் வியந்தனர். எட்டுத் திக்கிலும் சென்று தமிழர் ஏந்திக் கொணர்ந்த அறிவுப் பொறிகளைத் திரட்டி, விளக்கேற்றி, **தமிழன்னையின் சந்நிதானத்தை ஜோதி மயமாக்கினர்.** தமிழ் வளர்ச்சிக் கழகத்தார், தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் போன்ற அறிவுக் கனிகள் அனைத்தின் சாற்றையும் பிழிந்து, பருகும் பேற்றை, தமிழர்க்கு வழங்கினர் ; அறிஞர் தம் இதய ஓடையில், ஆழநீர் தன்னை மொண்டு, செறிதரும் மக்கள், எண்ணம் செழித்திட ஊற்றி, குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்தனர் ; பல்வேறு சிறப்பியல்புகளும், விழுமிய கலைகளும் விரவிய இத் தொகுதிகளின் இறுதி வெளியீடாக, ஒன்பதாவது தொகுதியை, தமிழகத்தின் தலைநகரான சென்னையில், தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டது. இம் மகத்தான சாதனைக்கு மகுடம் வைத்தது போல், இவ்விழாவிற்கு, தத்துவப் பேரறிஞரும், நமது ஜனாதிபதியுமான, டாக்டர் ராதாகிருஷ்ணன், தலைமை வகித்தார்.

ஞாலத்து மொழிகளுள், காலத்தால் மூத்த தமிழில் ஆக்கப்பெற்ற இக் கலைக் களஞ்சியம், இம் முயற்சிக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்திருப்பது, பாராட்டுதற்குரியது. இத் தொகுதிகளில், பாரதப் பண்பாட்டை நிலைபெறச் செய்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாறும், பாடல் பெற்ற பழம்பதிகளின் திருத்தலங்கள், இவற்றின் மாண்பு துலக்கும் விளக்கமும், காலத்தின் கதிக்குத் தப்பிய ஆன்ருேரின் அரிய நூற்களுடைய பெருமையும், அவரது சமயநெறியின் சீலமும், கொள்கைக் கோட்பாடுகளின் உயர்வும், அடங்கியுள்ளன. இதன் சிறப்பு குறித்தும், வளர்ந்த விதம் பற்றியும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், விளக்கினுர். அதைத் தொடர்ந்து, அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், அறிவியலின் வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறியதோடு, குழந்தைகள் இலக்கிய வளர்ச்சிக்கும் தக்க திட்டம் வகுத்து. மற்ருெரு சிறந்த கலைக் களஞ்சிய வேலை தொடங்குவது நலம் என்று குறிப்பிட்டார்.

தலைமை வகித்து உரையாற்றிய, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், "அறிவியல்" என்பது, வளரும் பொருள். அவ் வளர்ச்சிக்கேற்ப, இந்தத் தொகுதிகளை, அடிக்கடி சீர் செய்ய வேண்டும். எனவே, தமிழ் வளர்ச்சிக் கழகம், இத்துறையில், தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். "வேதம் தமிழ் செய்த மாறன்" தமிழிலக்கியத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது போல, மற்ற தமிழறிஞர்கள் அனைவரும் தமிழன்னைக்குப் புதுப்புது அணிகளை அணிவித்து மகிழத் தொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மனிதர்களுக்கிடையில் குறுக்குச் சுவர்களாக, மொழி, இனம், கலாசாரம், என்ற பாகுபாடுகளைத் தகர்த்தெறியவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், இந்நூல் பெரிதும் பயன்படும் எனவும் குறிப்பிட்டார்.

சென்னை மாநில கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி, முதல் அமைச்சர் திரு. காமராஜ், மத்திய அமைச்சர், ஓ. வி. அளகேசன் ஆகியோரும், தமிழறிஞர் பலரும், வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

**வேலூரில் ராஷ்டிரபதி**

# டாக்டர் ஐடா ஸ்கட்டர் ஆற்றிய அரிய சேவை

## "அவருடைய சேவை தூய்மையானது, சாதனைகள் மகத்தானவை" ராஷ்டிரபதியின் பாராட்டு

ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தபோது, வேலூர் கிறிஸ்தவ வைத்தியக் கல்லூரி மருத்துவ மனை விழாவில் கலந்து கொண்டார். வேலூர் கிறிஸ்தவ வைத்தியக்கல்லூரி மருத்துவமனையில், சீரமைப்பு ரண சிகிச்சைக்கான பயிற்சித் திட்டம் ஒன்றினைத் துவக்கிவைத்தார். நர்சிங் பயிற்சிப் பள்ளி, மருந்தகம் ஆகியவற்றுக்கான புதியகட்டடத்தையும் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் கலந்துகொள்ள, ராஷ்டிரபதி அவர்கள் மருத்துவமனையை அடைந்ததும், அவரை டாக்டர் பிராண்ட் அவர்கள் உவகையுடன் வரவேற்று, ஏனைய டாக்டர்களையும், பணியாளர்களையும் அறிமுகம் செய்துவைத்தார். ராஷ்டிரபதிக்கும் உடன் வந்த தமிழ்நாடு கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்களுக்கும் டாக்டர் மேரி வர்க்கீஸ் அவர்கள் மலர்மாலைகளணிவித்து வரவேற்ருர்.

மருத்துவ மனையின் பல்வேறு பகுதிகளையும், செயல் முறைகளையும் பார்வையிட்ட ராஷ்டிரபதி அவர்கள், அது புரிந்துவரும் அரும்பணியைப் பெரிதும் பாராட்டினுர். **இம் மருத்துவமனையின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும காரணமாயிருந்து மறைந்த டாக்டர் ஐடா ஸ்கட்டர் (Ida Scudder அவர்களைத் தமக்கு நேரில் தெரியுமென்றும், சமுதாயத்தில் பிணியுற்று வருந்தும் யாந்தருக்குப் பணிபுரிந்த அவருடைய சேவை தூய்மையானது சாதனைகள் மகத்தானவை என்றும் ராஷ்டிரபதி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.**

மருத்துவ மனையின் புதிய கட்டடங்களைத் திறந்துவைத்து ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்திய உரையின் சில பகுதிகள் வருமாறு:—

"ஒருவரை ஒருவர் அழிப்பதைக் காட்டிலும் சிறந்ததான ஓர் உயர்ந்த லட்சியத்துக்காக வாழ்கிருேம் என்ற உணர்ச்சி மக்களிடையே துலங்கச் செய்யவேண்டியது அவசியம். ஒருவரை ஒருவர் நேசிப்பதற்காகவே ஒருவர்பால் ஒருவர் அன்பு காட்டவே மனிதர் பிறந்திருக்கின்றனர்; அழித்துக் கொள்வதற்காக அல்ல."

"சீனரை எதிர்க்க வேண்டுமென்று மக்களிடம் நாம் சொல்லுகிருேம். நம்மை ஆக்கிரமிப்பாளர்கள் என்கின்றனர் சீனர்கள். நம்மை அழித்துவிட வேண்டுமென்கின்றனர்

இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? மனிதனுடைய மனப் போக்குதான். ஆத்திரம், அசூயை, போட்டி, பொறாமை, ஆதிக்க வெறி முதலியவற்றை மனிதன் ஒழித்துவிட்டால், நல்ல மனோபக்குவம் நிலவும். அந்த நிலையில் சமாதான மும் நிலவும். மனித சமுதாயத்தின் ஒருமைப்பாடு என்ற அடிப்படையில்தான் உலக மக்கள் உழைக்கவேண்டும். உல கில் யுத்தம் மூளுமானால், அதை உடன் பிறந்தாரிடையே ஏற்படும் சண்டையாகவே கருதவேண்டும்."

"மக்களுக்கு வைத்திய வசதி வழங்குவது மிகமிக அவ சியம். தக்க வைத்திய வசதியில்லாமல் ஜனங்கள் அவதிப் படுவது வெட்கப்படத்தக்க வேண்டிய விஷயம்."

"சமூக நீதிதான் ஜனநாயகத்தின் சாதனை. ஓட்டுரிமை வழங்குவதால் மட்டும் பயனில்லை; அந்த உரிமையுடன் தனி மனிதனின் கௌரவத்தையும், தனி மனிதன் தன் தனித்திறமைகளைப் பயன்படுத்தி முழு வளர்ச்சிபெற வாய்ப்பையும் அளிக்கவேண்டும்."

"நமது நிருபர்"

---

ராஷ்டிரபதி அவர்கள் திறந்துவைத்த மருத்துவமனைக் கட்டடங்கள், பிரிட்டன் முதலிய பல ஐரோப்பிய நாடுகளில் உள்ள மருத்துவ சங்கங்கள் தனி மனிதர் ஆகியோரின் நன்கொடைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

---

வரப்பெற்றோம்

## 'சைனிக் சமாசார்'

(போர்ப் படை சித்திர சஞ்சிகை)

இந்திய அரசாங்க, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிடும் "சைனிக் சமாசார்" (போர்ப்படை சித்திர சஞ்சிகை) என்ற வார இதழ், எல்லைப் போரில் நம் வீரர்கள் காட்டிய வீரச் செயல்கள், அவர்களுடைய மயிர் கூச்செரியும் அனு பவங்கள், பகைவனை எதிர்க்க நாடெங்கிலும் மேற்கொள்ளப் பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள், நாட்டைக் காப்பதில் நம் மக்கள் காட்டிவரும் உற்சாகம் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைத் தாங்கி வருகிறது.

இவ்வார இதழ், போர்முனையில், தமிழ் தெரிந்த எல்லா வீரர்களாலும் படிக்கப்படுவது இதனுடைய தனிச் சிறப் பாகும். நம்முடைய படை நிலைகளைப்பற்றிய அதிகார பூர்வ மான செய்திகளை அறிய இவ்விதழ் பெரிதும் பயன்படுகிறது போர்ப்படை நடை முறைப் படங்கள், வீரர்க்கான பொழுது போக்கு அம்சங்கள் இவ்விதழ்களில் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

புது டில்லியிலிருந்து வெளிவரும் "சைனிக் சமாசார்" (தமிழ்) வார இதழின் ஆண்டு சந்தா ரூ 12; ஆறு மாத சந்தா ரூ. 6-50; தனிப் பிரதி 31 ந. பை. பண்டப்பணி தொடர்புள்ளவர்க்கு சந்தா விகிதத்தில் சலுகைகளும் உள்ளன.

—o—

## இந்தியர் வீடு

'வாலி'

எத்தனை எத்தனை மொழிகள்!
எத்தனை எத்தனை வழிகள்!
அத்தனை பேரும் ஒன்றுனோம்—ஒரு
அன்னையின் மக்கள் என்றுனோம்!

ஒற்றுமையே நம் எல்லையடா!
உள்ளம் வேறென இல்லையடா!
பற்றுதல் வைத்தோம் நெஞ்சினிலே, நாம்
பாரதத் தாயின் பிள்ளையடா!

பாதைகள் வேருய்ப் போவதுண்டு
பார்த்தால் முடிவொன் ருவதுண்டு
வாழ்வோ தாழ்வோ பொதுவென்போம்
வளரும் வகைதான் அதுவென்போம்

ஆறுகள் சேர்வது கடலாகும்
ஐம்புலன் சேர்ந்தால் உடலாகும்
ஆயிரம் இனத்தவர் நாடாகும்
அதுவே இந்தியர் வீடாகும்!

---

## "படையினருக்கு நன்கொடை வழங்குவீர்!

### ஸ்ரீமதி இந்திரா காந்தியின் வேண்டுகோள்

படையினர் ஒவ்வொருவருக்கும் நன்கொடைப் பொட் டணங்களை அனுப்பி வைக்க மக்கள் மத்திய சபை தீர்மானித்திருக்கிறது. இந்த நன்கொடைப் பொட்டணங் களில் உபயோகப் பொருள்கள், அதாவதுடார்ச் லைட்டுகள், பால்-பாயின்ட் பேனுக்கள், தொண்டைக்கு இதமளிக்கும் ஜவ்வு மிட்டாய்கள், சோப்புகள், பிளேடுகள், வாஸ்லின் ஆகியவை உட்பட அழகுபடுத்தும்சாதனங்கள் முதலிய பொருள்கள் இருக்கும்.

மக்கள் மத்திய சபை தலைவர், ஸ்ரீமதி. இந்திரா காந்தி பொதுமக்களுக்கு விடுத்துள்ளதொரு வேண்டு கோளில், இந்த நன்கொடைப் பொட்டணங்களைச் சிப்பங் கட்டி படையினருக்கு அனுப்புவதற்காக, இத்தகைய பொருள்களை நன்கொடையாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

—o—



# உங்கள் சாதனைகள் என்ன?

எஸ். நடராஜன், பி.ஏ.

**பத்திரிகைக்குச் செய்தி அனுப்புவோர் பின்பற்ற வேண்டிய முறை இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது. சிறப்பாக, பஞ்சாயத்துக்களிலிருந்து, கிராம நலத்துக்குச் செய்தி அனுப்புவோர் இம் முறைகளைப் பின்பற்றக் கோருகிறோம்.**

"வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் இதர துறைகளில் பெரும் அளவுக்கு அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்பதற்காகவே இவை சம்பந்தமான பொறுப்புகள் பஞ்சாயத்துகளிடம் விடப்பட்டு, அதற்கான அதிகாரங்கள், நிதி வசதிகள் முதலியன அளிக்கப் பட்டுள்ளன.

"இந்த ஜனநாயக ஸ்தாபனங்கள், அவை ஏற்பட்ட ஒரு வருட காலத்தில், மிக உற்சாகத்துடனும் சிரத்தை யுடனும், இத்திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளன" என்று, நிதி அமைச்சர் திரு பக்தவத்ஸலம் தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒதுக்கப்பட்ட தொகைகள், தக்கமுறையில் செலவிடப் பட்டுள்ளனவென்றும், பஞ்சாயத்துகள் அந்தந்தப் பிர தேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்களிட மிருந்து பொருளுதவியையும் உடல் உழைப்பையும் பெற் றிருப்பதையும் அவர் பாராட்டியிருக்கிறார்.

ஒவ்வொரு பஞ்சாயத்தும், ஒவ்வொரு துறையில் எதை யாவது சாதித்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம். உங்கள் சாதனைகள் என்ன என்பதை நீங்களாகவே எடுத்துச் சொன்னால்தான், பிறருக்கு உங்கள் பஞ்சா யத்தைப் பற்றியும் தெரியும். சில நல்ல விஷயங்களில், உங்கள் பஞ்சாயத்தை, மற்றவர்கள் பின்பற்றவும் முடியும்.

"பத்திரிகைக்காரர்கள், எத்தகைய செய்தியை விரும்பு கிறார்கள்? செய்தி எப்படியிருந்தால், அதை அவர்கள் பிரசுரிப்பார்கள்", என்பதை, பஞ்சாயத்து நிர்வாகத்தி லுள்ளவர்கள், கவனிக்கவேண்டும்.

செய்தியிலுள்ள தகவல், பொதுமக்களுக்கு அவசியம் தெரியவேண்டும் என்ற ரகத்தைச் சேர்ந்ததாக இருந் தால், அதை அவர்கள் கட்டாயம் பிரசுரிப்பார்கள் சுய விளம்பரம், வெறும் உத்தேசங்கள், ஆசைக் கனவுகள், தற்புகழ்ச்சி, இம்மாதிரியேயிருக்குமானால், அவை குப்பைக் கூடைக்குப் போய்விடும். பஞ்சாயத்தின் சாதனைகள், பொது நலம் சம்பந்தமாக இருப்பவை. கிராம வாசிகள் பலருக்கு, அவற்றால் வசதி ஏற்படுவது நிச்சயம். ஆனால், அவற்றைத் தக்க வகையில், விளக்க வேண்டும். அதாவது, வாசகர்களுக்குப் பயனுள்ள முறையில், செய்திகள் இருக்கவேண்டும். பஞ்சாயத்து களில் மதிய உணவு கொடுப்பது, கொடி ஏற்றினது, பரிசளித்தது, முதலியன எல்லா இடங்களிலும் நிகழக் கூடிய நிகழ்ச்சிகளே. ஆகவே அம்மாதிரி செய்திகளை, பத்திரிகைகள் பெரும்பாலும் வெளியிடமாட்டா. தப்பித் தவறி பிரசுரிக்க நேர்ந்தால், "இன்ன பஞ்சாயத்திலும், இந்த விழா கொண்டாடப்பட்டது" என்று தான் காணப் படும். ஆகவே, இம்மாதிரியான பொதுச் செய்திகளை எல்லாம், கூடுமானவரை குறைக்கவேண்டும்.

பத்திரிகைக் காரியாலயத்தில், உலகின் பல இடங்களி லிருந்தும் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. ஒரு நாளில், பத்திரிகைக்குப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் செய்திகளில், **நான்கில் ஒரு பங்கு மட்டுமே** பிரசுரிக்க முடிகிறது. எனவே, மற்ற முக்கால் பகுதி, நீக்கப்படவேண்டி ஏற்படுகிறது. இவ்வாறு வடி கட்டாமல், எல்லாச் செய்திகளையும் வெளியிடுவது, முடி யாத காரியம்.

பத்திரிகைக் காரியாலயத்தில், முக்கியமாக, தினசரிப் பத்திரிகைகளில், வெளியூர்ச் செய்திகளை வடிகட்டி, தக்க முறையில் சரிபார்த்து "எடிட்" செய்வதற்கென்றே, தனி உதவியாசிரியர் இருப்பார். நீங்கள் பின்கண்ட யோசனைகளை அனுசரித்தால், அவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும், வெகு சீக்கிரத்தில் பெற்றுவிடமுடியும்.

(1) நல்ல காகிதத்தில் செய்திகளை எழுதுங்கள். (துண்டுக் காகிதங்களிலும், 'பிட்' நோட்டீஸ் போன்ற அனுப்பாதீர்கள். அவற்றின் பின் பக்கங்களிலும் எழுதி இத்தகையவை, படிக்கப்படாமலேயே, தூக்கியெறிப்படும் என்று சொல்லத் தேவையில்லை).

(2) வரிக்கு வரி இடம் விட்டு நன்கு புரியும்படியாக எழுதுங்கள். எதாவது சேர்க்கவேண்டும் என்று, உதவி

ஆசிரியர் விரும்பினால், எழுதுவதற்கு வரிக்கு வரி இடைவெளி இருக்க வேண்டும்.

(3) காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதங்கள் அச்சு கோக்க, அப்படியே கொடுத்துவிட, அப்போதுதான் சௌகரியமாக இருக்கும். நீண்ட செய்தி, ஒரு பக்கம் முழுவதும் எழுதியிருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பக்கச் செய்தி முழுவதையும், ஒருவரே அச்சு கோப்பதை விட, அதை நான்காகக் கிழித்து, நான்கு பேரிடம் கொடுத்து, அச்சு கோத்த பின்னர் சேர்த்தால், வேலை மிகத் துரிதமாக முடிந்துவிடும். பத்திரிகைக் காரியாலயங்களில், எல்லாக் காரியமுமே மிக அவசரமாகச் செய்யும்படி இருக்கும். அதனால் தான், ஒரு பக்கத்தில் செய்தியை எழுத வேண்டும். இரு பக்கங்களிலும் எழுதினால், நான்காகக் கிழித்துப் பங்கு போடும்போது, பின்புறம் எழுதியது வீணாகி விடும். இத்தகைய அவசிய, அவசரங்களைப் புரிந்து கொண்டால், பத்திரிகை ஆசிரியர்களுக்கு, நீங்கள் தக்க முறையில் உதவ முடியும்.

(4) உங்கள் பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும், என்ன முக்கியமான சம்பவம் நடந்தாலும், அது பிறருக்குத் தெரிவதால், பலனுண்டு என்று நீங்கள் கருதினால், தாராளமாகப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பலாம். இம் மாதிரி அருமையான செய்திகளைத் திரட்டுவதற்கு, பத்திரிகைகள், பணம் செலவிடுவதுண்டு. அப்படியிருக்க, நீங்கள் இலவசமாக அனுப்பினால், போடாமலா இருந்து விடுவார்கள்? ஆனால், அனுப்பப்படும் செய்தி, வாசகர்களுக்கு புதிய தகவலோ, பொது அறிவோ அளிப்பதாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். சுருக்கமாகவும், தெளிவாகவும், நேரடியாகவும், செய்திகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

(5) செய்தி, மிக நல்லதாக இருக்கும். ஆனால், புரியாத கையெழுத்தில் எழுதி அனுப்பினால், அது குப்பைத் தொட்டிக்குதான் போகும். எனவே, மற்றவர் சுலபமாகப் படிக்கத் தகுந்த முறையில், சங்கிலி எழுத்து அதிகம் இல்லமல், அழகாக எழுதி அனுப்புவது நலம்.

"உங்கள் பஞ்சாயத்துகளின் சாதனைகள் என்ன? உங்கள் முன்புள்ள பிரச்சினைகள் என்ன?" என்பதை அழகாக எடுத்துக் கூறும், ஒரு நிருபர், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இடம் பெற வேண்டும். அவரை பஞ்சாயத்தின் பிரசார அதிகாரி என்று வேண்டுமானாலும் அழைக்கலாம்.

நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்பது, வெளி உலகுக்குத் தெரிய வேண்டும். உங்கள் சாதனைகளைப் பற்றிய உண்மைச் செய்திகளை, நீங்கள் மற்றவர்க்கு எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில், **சத்தியத்துக்கு, எல்லையற்ற சக்தி உண்டு. உண்மையின் ஒளி உலகெங்கும் பரவக்கூடியது.** வெறும் விளம்பரத்தை

(20-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்குக் கடிதம்

### 1

**அன்புள்ள ஆசிரியருக்கு**

மின்சார வசதியுள்ள இடங்களில் மின்சார பம்புகள் வைத்து நீர் இறைத்து நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பம்பு கொட்டகையின் மீதும் இரவு நேரங்களில் ஒரு மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இந்த மின்விளக்கு உங்கள் நெற்பயிர்களை தூங்க விடாமல் அவற்றின் வளர்ச்சியை நீடித்து கதிர்கள் வாங்கா வண்ணம் தடுத்து விடுகிறது.

நெற்பயிர்களின் மத்தியில் ஒரு மின்விளக்கு 2 மாதம் எரிவதனால் 2 மூட்டை நெல் மகசூல் குறைகிறது என்பதை எல்லோரும் கண்கூடாகக் காணலாம். உதாரணமாக ஒரு மின்விளக்கு ஒளி உமிழும் இடத்திலுள்ள பயிர்களைக் கண்ணுற்றால் இது தெள்ளிதின் விளங்கும். ஒரு தென்னை மரத்தின் நிழல் பட்ட நெற்பயிர்கள் மட்டமாக, அழகாக விளைவுற்று அறுவடைக்குத் தயாராயிருக்கும்போது, வெளிச்சத்தால் பாதிக்கப்பட்ட மற்ற நெற்பயிர்கள் கதிர் வாங்காமல் அதிக உயரம் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இவைகள் கதிரே வாங்காமல் கடைசி வரை நின்று விடுகின்றன.

எனவே உங்கள் பயிர்களைத் தூங்க விடுங்கள். விளக்கு எரிந்தே ஆக வேண்டுமாயின் கோப்பைகளைப் போட்டு வெளிச்சத்தின் போக்கை திருப்ப ஏற்பாடுகள் செய்யலாம்.

ராமா கவுண்டர்,
கிராம நல ஊழியர், நாமக்கல் வட்டாரம்.

### 2

இப்பஞ்சாயத்து யூனியன் ஒரே வருடத்தில் 8 புதிய ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்தியுள்ளது. பல புதிய பாதைகள், பல புதிய கிணறுகள், பள்ளிக்கூடங்கள், சமூக நல செண்டர்கள், மாதர் சங்கங்கள் என்பனவும் ஏழைகளின் மோட்சமாகிய கதர் திட்டமும் புகுத்தப்பட்டு ராட்டைகள் விநியோகிக்கப்பட்டு நூல் விற்கவும் இதன் மூலம் சிறு சேமிப்புத் திட்டம் போன்ற பலவற்றை ஒரு வருட காலத்தில் செய்து மக்களுக்கு உதவி மனம் மகிழ்கின்றோம். "மக்களுக்குச் செய்யும் தொண்டு மகதேவனுக்குச் செய்யும் தொண்டு" என்பது பழம் தமிழ் பழமொழி. இதில் ஒரு ஐயமுமில்லை. நாங்கள் செய்யும் இம் மக்கள் தொண்டு ஆண்டவன் செய்யும் தொண்டாதலினால் ஆண்டவன் எங்களுக்கு நல்லது செய்வார். அரசாங்க ஊழியர் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் என்ற பதத்தை எடுத்து விட்டு பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் யாவர்க்கும் "மக்கள் ஊழியர்கள்" என்ற பதத்தைக் கொண்ட பெயராக அமைத்துவிடலாம்.

ரா. சுவாமிநாதன்,
பிலமலை பஞ்சாயத்து யூனியன்.



## கூட்டுறவும் தேசிய நெருக்கடியும்

**அகில இந்திய கூட்டுறவு வார விழாவை, ஒட்டி தேசிய கூட்டுறவு யூனியன்தலைவர் திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி விடுத்த வேண்டுகோள்:**

"கூட்டுறவு வார விழாவைக் கொண்டாடும் இந்த ஆண்டில், சீனப் படையெடுப்பால் நமது தேசத்துக்கு பேராபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நம் நாட்டின் பாதுகாப்பு ராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், வீரர்களும் இந்தியாவின் உரிமையைப் பாதுகாக்கும் பணியில் தீரத்துடன் செயலாற்றி வருகிறார்கள். இத்தருணத்தில் நமது எண்ணங்கள் யாவும் அவர்கள்பால் இருந்து வருகின்றன. சீனர் ஆக்கிரமித்துள்ள நம் இடங்களிலிருந்து அவர்களை விரட்டியடிக்க எவ்வித தியாகங்களைப் புரியவும், இன்னல்களை ஏற்கவும் மக்கள் தயாராயிருக்க வேண்டும். இந்திய சமுதாயத்தில் முக்கியமான பங்கு வகித்துவரும் கூட்டுறவாளர்களாகிய நாமும் இந்த தியாகங்களில் பங்கு கொள்ளவேண்டும். அத்துடன், பலவேறு துறைகளில் தங்கள் நடவடிக்கைகளை ஏற்பாடுசெய்வதன்மூலம் அவர்கள் தேசத்துக்குச் சிறந்த பணிபுரியலாம் என்பதையும் நினைவுகூற விரும்புகிறேன். அவற்றுள் சிலவற்றை ஈண்டு குறிப்பிட்டுள்ளேன்:

### உணவு உற்பத்திக்கு முதடம்

முதலாவதாக, விவசாய உற்பத்திப் பெருக்க விஷயமாய்க் கூட்டுறவாளர்கள் சிந்தைகொள்ள வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களும், கூட்டுறவு சங்கங்களும் தங்களுக்குள் கலந்துகொண்டு அந்தந்த கிராம ரீதியாகவும், தொகுதி ரீதியாகவும், ஜில்லா ரீதியாகவும் விவசாய உற்பத்தித் திட்டங்களைத் தயார் செய்து அமுலாக்குவது மிகவும் முக்கியமானது. நமது நாட்டின் உற்பத்திப் பெருக்கத்துக்கு அடிப்படையாய் இருந்துவரும் கிராம உற்பத்தித் திட்டத்தின் வெற்றியானது, விவசாய மக்கள் பின்கண்ட துறைகளில் மேற்கொள்ளும் சீரிய நடவடிக்கைகளைப் பொறுத்தே இருந்துவரும். அவை யாவன: (1) நீர்ப்பாசன வசதிகளைப் பரிபூரணமாகப் பயன்படுத்தும் வகையில் பூமிகளுக்குச் சரியானபடி பாசன வாய்க்கால்களை அமைத்து உயர்ந்த பட்ச அளவில் விளைவைப் பெருக்குவது; (2) நல்ல வித்துக்களை விதைப்பது, செயற்கை இயற்கை உரங்களை வேண்டிய அளவுக்கு உபயோகிப்பது ஆகிய சாஸ்திரீய முறைகளைப் பயன்படுத்திக்கொள்வது; (3) மண் வளப் பாதுகாப்பு, இதர மானாவாரி வெள்ளாமை நடவடிக்கைகளை மேற்கொள்வது; (4) நல் விவசாயம் சம்பந்தமான தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பின்பற்றுவது முதலியனவாகும்.

மேற்கண்ட வழிவகைகளில் செயலாற்றுவதன் வாயிலாக விவசாய உற்பத்தியை அதி தீவிரப்படுத்துவதன் மூலம் நமது உணவுக்கு வெளி நாட்டை நம்பியிருக்கும் நிலைமையை நாம் தவிர்த்துவிடலாம்.

சேமிப்பு பற்றிய நடவடிக்கைகளிலும் கூட்டுறவாளர்கள் ஈடுபட வேண்டுவதவசியம். தங்கள் அங்கத்தினர்களின் சேமிப்புகளைத் திரட்டுவதிலும் அங்கத்தினரல்லாதவர்களிடமிருந்தும், டிப்பாசிட்டுகள் பெறுவதிலும் எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களும் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும். ராஜ்ய மத்திய கூட்டுறவு பாங்குகளும், கிராம நகர கூட்டுறவுச் சங்கங்களும் இது விஷயத்தில் தக்க கவனம் செலுத்த வேண்டும். இயக்கத்திலுள்ள அங்கத்தினர்கள் யாவரும் இது விஷயமாய்ச் சிரத்தையெடுத்துக்கொண்டால் இந்த இயக்கத்துக்குத் தேவையான லேவாதேவி நிதி வசதிகளை அவர்களே சேகரம் செய்துவிட முடியும; அத்துடன், சிறு சேமிப்பு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கும் அவர்கள் நல்ல வழிகாட்ட முடியும் என நம்புகிறேன்.

### தேசிய ஒருமைப்பாடு

மிக முக்கியமான ஒரு விஷயத்தை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு எல்லா கூட்டுறவாளர்களும் இடைவிடாமல் பாடுபட வேண்டும். தங்களுக்குள் ஏற்படும் வேற்றுமைகளைச் சமாதான முறையில் இந்திய மக்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும்; எக்காரணங்கொண்டும் பலவந்தச் செயலில் ஈடுபடக்கூடாது. இந்த உயர்ந்த கொள்கையில் தங்கள் உறுதியைத் தெரிவித்து பிரதிக்ஞை எடுக்ககோரி அக்டோபர் மாதம் 2-ம் தேதியன்று கூட்டுறவாளர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன். மேற்படி உறுதியைப் பெறுவதில் கூட்டுறவாளர்கள் யாவரும் இந்த ஆண்டு பூராவும் ஈடுபடக் கோருகிறேன். நமது தேசம் அன்னியப் படையெடுப்புக்கு உட்பட்டிருப்பதைக் கூட்டுறவாளர்கள் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறி, அனைவரும் ஒற்றுமையாகவும், கட்டுப்பாட்டுடனும், இணக்கமாகவும செயலாற்றப் பாடுபடவேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையைச் சமாளிக்க கூட்டுறவாளர்கள் மற்ற வழிகளிலும் முனைந்து ஈடுபடலாம். ஒற்றுமை, சமூக உரிமை சமுதாயப் பற்று, ஆகிய குறிக்கோள்களைக் கொண்டது கூட்டுறவு இயக்கம். இந்த உன்னத இலட்சியங்களை அடைய ஒருமனப்பட்டு அனைவரும் பாடுபடுவோமாக."

# வெற்றிப் பாதையில் தாய்க்குலம்

திருமதி சரோஜினி வரதப்பன்.

"பல நூற்றாண்டு காலமாக இந்தியா, சீனவிடம் நட்புறவோடும், நேசமனப்பான்மையோடும் இருந்து வந்திருக்கிறது. சீனாவின் உரிமைகளுக்காக உலக நாடுகளிடம் வாதாடியிருக்கிறது. இந்தியாவைப், போல் சீனுவிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட நேசநாடு வேறு எதுவும் இல்லை என்பது உலகம் அறிந்த உண்மை. உலகிலுள்ள மற்ற நாடுகளின் கலாசாரங்களுடன் ஒப்பிடும் பொழுது இந்த இரு நாட்டுக் கலாசாரங்களும் தமக்கே நிகராக உயர்ந்திருக்கின்றன. சீனுவை "இந்தியாவின் சகோதரி" என்று நமது பிரதமர் நேருஜி அவர்கள் வருணித்திருக்கிறார்கள். உலகில் வேறு எந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் இல்லாத உறவு அரசியலில் ஆகட்டும், கலாசாரத்தில் ஆகட்டும். இந்தியாவிற்கும் சீ )விற்கும் இருந்து வந்திருக்கிறது. மிகச் சாதாரணமான பண்டமாற்று பரிவர்த்தனை முதல் மிக உயர்ந்த தத்துவப் பரிவர்த்தனை வரை நடந்து வந்திருக்கிறது. இதைத்தான் பிரதம மந்திரி நேருஜி அவர்கள் "உலக சரித்திரம்" என்ற தமது நூலில் கூறுகிறார். "உடன்பிறந்தார்களைப் போல் இவ்வுலகில் மனிதரெல்லோரும், இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில் ஏதுக்கு சண்டைகள் செய்வீர் ?" என்ற தீர்க்கதரிசி பாரதியார் வாக்குகள் மெய்யாகின்றன.

அன்பை அரணாகவும், பண்பைப் பாதுகாப்பாகவும், சமாதானத்தை சாதனமாகவும், நட்புறவை நடுமையமாகவும் வைத்து நமது பாரதநாடு நீதிக்கும் நேர்மைக்கும் போராடுகையில் கொடுமையை ஆயுதமாகவும், பகைமையைப் பாதுகாப்பாகவும், மண்ணாசையை நடுமையமாகவும் வைத்து சீனநாடு யுத்தத்தை நாடுகிறது.

பாரதபூமி பழம்பெரும் பூமி. பற்பல நேரங்களிலே தனது வீரத்தை, அரும்பெரும் ஆற்றல்களை இவ்வுலகிற்கு தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டியுள்ளது. ஆகையால் போருக்குப் பயந்து பேசும பேச்சல்ல நம் பேச்சு. உரிமைப் போரானுல் உண்மையான ஒரு நியாயத்திற்காக நடக்க வேண்டிய ஒரு போரானுல் நாம் பூரித்து பொங்கி எழுவோம். "வீரரைப பெறுத மேன்மைதீர் மங்கையை ஊரவர் மலடியென்றுரைத்திடு நாடு" நம் நாடு. அப்படிப் பட்ட வீரத்தாய்மார்கள் பெற்றெடுத்த வீர சிங்கங்கள் பிறந்துள்ளது நம் நாடு. போரென்றால் புல்லும் கூட கிளர்த்தெழும் வீர பூமி நமது நாடு. போரிலே இறுதி வெற்றி நமதுதான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வயது வந்தவர்களின் அனுபவத்தாலும், இளைஞர்களின் வீரத்தாலும், வீரப் பெண்குலத்தின மாண்பாலும், நம் இந்திய தேசம் வெற்றி பெற்றே தீரும் என்பது திண்ணம்.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே" என்ற உண்மையை எட்டளவோடு நிறுத்தி விடவில்லை நமது புண்ணிய பூமியில். நமது பாரதப் பெண்மணிகள் எங்கெங்கே எவ்வெப்பொழுது தேவைகள் ஏற்பட்டதோ ஆங்காங்கே அவ்வப்பொழுது சேவைகள் பல புரிந்து வந்திருக்கின்றனர். பெண்குலத்தின் பொன் விளக்குகள் பல சுடர் விட்டு எரிந்து, தியாகங்கள் பல புரிந்து இந்நாட்டை செம்மையாக்கிச் சென்றுள்ளனர். அன்னிபெஸண்டு அம்மையார் முதல் சரோஜனி தேவி வரை பற்பல வீரப் பெண்மணிகள் நமது நாட்டில் தோன்றி மறைந்துள்ளனர். அவர்கள் வழி வந்த தாய்க்குலத்தின் பெருமையால், மாதர்குல மாணிக்கங்களின் மகிமையால், வீரமகளிரின் பக்தியின் வலிமையால் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோமாக."

[திருமதி களப்வாலா ஜதாவ் தலைமையில் இயங்கும் ராணுவ வீரர் நலம் நாடும் குழுவினைச் சேர்ந்த திருமதி சரோஜனி வரதப்பன் வானெலியில் நிகழ்த்திய சொற்பொழிவு ]

---

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு, நடைபெறுத நிகழ்ச்சிகளையோ, ஆதாரமில்லாத புள்ளி விவரங்களையோ, எக்காரணத்தைக் கொண்டும் அனுப்புவது மிகவும் தவறு. அனுமானம், ஜோடிப்பு, வதந்திகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, செய்திகளைத் தயாரித்து அனுப்புவது அபாயகரமான பரிசோதனையாகும். செய்திகளைக் "கயிறு திரிக்கும்" வேலையில் ஈடுபடுவோர், வெகு சீக்கிரம் பல்வேறு சிக்கல்களில் மாட்டிக்கொள்வது நிச்சயம். ஏனெனில், பொய்யின வெளிவேஷம், அதிக நாள் நீடிக்காது. உண்மை வெளியாகும்போது, போலிச் செய்திகளின் 'குட்டு' உடைபட்டுப்போகும்.

எனவே உண்மையை அஸ்திவாரமாகக் கொண்ட செய்திகளையே நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட செய்தி உடனடியாக இல்லாவிட்டாலும், என்றாவது ஒருநாள், நிச்சயம் வெளியாகும், ரசமான செய்திகள் இல்லையென்றால், ஒரு சிலர், ஆதாரமற்ற தகவல்களையோ, கற்பனை விஷயங்களையோ சுயநல நோக்கங்கொண்டு, சுவைபடத் திரித்துக்கூற முற்படலாம். இது பத்திரிகை தர்மத்துக்கே விரோதமான காரியம். செய்தி அனுப்புவோர், இந்த முக்கிய அடிப்படையை, எப்போதும் மறக்கக் கூடாது.



# சீனர் ஆணவப் பரணி

திரு. ஜி. பெருமாள் எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் கலைக் கல்லூரி, சென்னை.

1. சீன ரோடு வான வர்கள்
   சேர்ந்தெ திர்த்த போதினும்
   மானம் மிக்க இந்தி யர்தம்
   மண்ணைக் கவர லாகுமோ ?

2. வீரம் மிக்க சீன ரெல்லாம்
   வெகுண் டெழுந்த போதினும்
   ஈரம் மிக்க பார தத்தை
   எதிர்த்து வெல்ல லாகுமோ ?

3. மறத்தை நம்பி அறத்தைக் கொல்லும்
   மமதை மிக்க சீனரின்
   உரத்தைக் கீறி உயிரைக் கோறல்
   உறுதி உறுதி உறுதியே !

4. சமயம் பார்த்துச் சமர்த்துப் பேசிச்
   சண்டை போடும் சீனரை
   இமயம் முற்றும் குருதி யோட
   எதிர்த்து வெல்லல் உறுதியே !

5. ஒன்று பட்ட இந்தி யர்கள்
   உமிழ்ந்து காறித் துப்பினுல்
   நன்றி கெட்ட சீன ரெல்லாம்
   நம ஞலகில் வாழ்வாரால் !

6. எதிர்த்து வந்த சீனர் தம்மை
   எமனு லகிற் கேற்றவே
   குதித்துத் துள்ளும் வீரர் தம்மைக்
   கூற்றும் கண்டு போற்றுமே !

7. எல்லை மீறித் தொல்லை நல்கும்
   ஏதும் கெட்ட சீனர்தம்
   பல்லைத் தட்டிக் கையிற் றந்து
   பகைக்கும் காலம் வந்ததே.

(வேறு)

8. காரணம் இன்றி காலை மிதிக்கும் கயவர்தமைத்
   தோரணம் கட்டித்தோலை உரித்துத் தொங்கவிடும்
   வீரமேவீரம் ; வீரத்தில் உயர்ந்த பாரதத்தை,
   ஆரணம்போற்றும், அறிவியல்போற்றும்
   அறிந்திடுமே.

(வேறு)

9. பஞ்சசீலக் கொள்கையைப்
   பாரறிய ஏற்றவர்
   நஞ்சனைய நெஞ்சினால்
   நமையெதிர்த்தல் நல்லதோ ?

10. நடு நிலைமைக் கொள்கையை
    நாடறிய ஏற்றவர்
    கொடு மனத்துக் கொழுப்பினால்
    கொதித்து எதிர்த்தல் நல்லதோ ?

11. வஞ்சகத்தைத் துணைக் கழைத்து
    வந்தெதிர்க்கும் சீனர் தம்
    நெஞ்சகத்தைப் பிளந்து, வெற்றி
    நேருவுக்கே சூட்டுவோம் !

(வேறு)

12. தம் முடைய பண்பாட்டின்
    தகவெல்லாம் மறந்தந்தோ
    எம் முடைய மண்வேட்டார்
    இழிகுணத்துச் சீனர்தாம்.

13. அமைதியின் பெரு நலத்தை
    உலகினுக்கே அறிவித்த
    நமையெதிர்க்கும் சீனருக்கும்
    நல்லறமே கற்பிப்போம்.

14. எம்முடைய மண்வேட்ட
    இழிகுணத்துச் சீனருக்கும்
    நம் முடைய பண்பாட்டை
    நாம் காட்ட வேண்டுமால் !

(வேறு)

15. பொல்லாத ஆணவத்தால் போராடும் சீனர்களின்
    கல்லாமை இருளகற்ற கற்றவர்கள் இல்லையோ ?
    நெறியல்லா நெறிசெல்லும் நேர்மையிலாச்
    சீனர்களின்
    அறியாமை இருளகற்ற அறிந்தவர்கள்
    இல்லையோ ?
    வெறியேறி நெறிமீறும் வெஞ்சினத்துச் சீனருக்குச்
    சரியான நெறிகாட்டும் சான்றோர்கள் இல்லையோ ?

# ஆக்கப் பணிகளும் கிராமத் தொண்டர் படையும்

## ஒற்றுமை உணர்வோடும் ஒழுக்கநெறியோடும் பணிபுரியுமாறு தலைமைச் செயலாளர் அறிவுரை

"நிய சக்திகளை எதிர்த்துப் போராடும் துணிச்சல் கிராம வாசிகளிடையே வளரவேண்டும்—
ஆயுதபலத்தைவிட மனோபலமே சிறந்தது"

நமது ஒப்பற்ற பிரதமர் நேருஜியின் வேண்டுகோளுக் கிணங்க, பாரத நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக் களிலும், " கிராமத் தொண்டர் படை " 26-1-1953-ல் ஆரம்பமாகியுள்ளது. பரங்கிமலை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பழவந்தாங்கல்' கிராமப் பஞ்சாயத்தில் நடந்த "கிராமத்தொண்டர் படை" துவக்க விழாவில், தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ். (Sri S. K. Chettur I.C.S,) அவர்கள் கலந்து கொண்டார். (படங்கள் அடுத்த பக்கம் பார்க்கவும்) அவர்பேசியதாவது :—

### ஒற்றுமை உணர்ச்சி

"கிராமத் தொண்டர் படை பற்றி பேசுவதற்கு முன்னால் புதிய பஞ்சாயத்து நிர்வாகத்தின் அடிப்படைக் கருத்துக் களைப் பற்றி, சிறிது கூற விரும்புகிறேன். சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாட்டில் தாலுகா போர்டு, ஜில்லா போர்டுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நிர்வாக விஷயத்தில் இவை வெற்றி பெறவில்லை. தோல்வி யடைந்தன. தோல்வி அடைந்தன என்று சொல்லும் போது, அதன் பொருளை நன்றாக அறிந்தே கூறுகிறேன்.

இந்தத் தோல்விக்கான காரணங்களில், முதலாவது, அந்த ஸ்தாபனங்களில் பொதுவான ஒற்றுமை லட்சியம் (Unity of purpose) இல்லை. அடுத்த காரணம் காரியங்களை நிறைவேற்றுவோரிடத்தில், ஒழுக்க நெறியும் (Honesty on the part of the executive) இல்லை. ஆனால், தற்போது, பஞ்சாயத்துகளும, பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டிருக்கும் முறை, அப்படியல்ல. பழைய அனுபவத்திலிருந்து. புதிய பாடங்களைக் கற்றுக்கொண்டு முன்னேறியிருக்கிறோம்.

பஞ்சாயத்தில், ஒரு காரியம் நிறைவேற வேண்டுமானால், ஒற்றுமை உணர்ச்சி வேண்டும். ஒவ்வொரு சார்பாரும் ஒவ்வொரு பக்கமாக இழுத்து, நமது சக்தியை வீணாக்கினால், மக்கள் நலனுக்காக நல்ல காரியம் எதுவும் உருப்படியாக நடக்காது. கட்சிச் சண்டையும், சச்சரவு களும், பஞ்சாயத்தில், இருக்கக்கூடாது. " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கொள்கையை, பஞ்சாயத்துக்கள் அமுல் நடத்த வேண்டும்.

ஒரு ஸ்தாபனம், நல்ல முறையில் நடக்கவேண்டு மானால், என்ன அபாயங்கள் வரும் என்பதை, முதலில் தீர்க்கமாக ஆலோசித்த பிறகு, ஒரு தீர்மானத்திற்குவர வேண்டும். அத்தகைய அபாயங்களை எதிர்க்கும் சக்தி யை வளர்த்துக்கொண்டு, பொதுநல சேவை செய்ய வேண்டும்.

நமக்கு, முதலாவதாக, ஒழுக்கம் அதாவது நாணயம் தேவை. பொது மக்களின் பணத்தைச் செலவழிக்கும் போது, அது பயனற்ற வழியில் விரயமாகாமலும், வீண் போகாமலும், பார்த்துக்கொள்ளவேண்டும். சரிஇன்ற ஏரிக் கரைகளை உறுதியாக்க வேண்டுமானால், அவற்றை மரா மத்து செய்வோர் (அதாவது சிறிய நீர்ப்பாசன ஓவர்ஸியர் களும் கன்ட்ராக்டர்களும்) கவனத்தோடும் கருத்தோடும் அவற்றை பலப்படுத்த வேண்டும். ஊருணியின் கரைகளைக் சரிவரச் செப்பனிடக் கூடியவர்களிடம் அவ்வேலையை ஒப்படைக்க வேண்டும். அப்பணியைப் பழுதின்றி முடிக்கும் வரை, கண்காணிப்பு செய்யவேண்டும். அப்படியின்றி, திறமையில்லாதவரிடம் அவ்வேலையை ஒப்படைத்து பெய ரளவில் கரைகளைப் பலப்படுத்தினால், பொதுமக்களின் பணம் வீணாகிப்போகும். 'காண்டிராக்டர்' வேண்டியவர் என்பதற்காக, பொதுப்பணம் செலவழிப்பதில், நிர்வாகஸ் தர்கள் நாணயமாக நடக்காவிட்டால், வெள்ளம் வரும் போது, கரைகளில் விரிசல் ஏற்பட்டுவிடும். எனவேதான் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும், பொது மக்களின் பணத்தைச் செலவிடவேண்டும் என்பதை, வற்புறுத்திக் கூறுகிறேன். முன்பு ஜில்லா கலெக்டரிடம் இருந்த முக்கிய அதிகாரங்கள், இப்போது பஞ்சாயத்து ஸ்தாபனங் களிடம் அளிக்கப்பட்டு வருகின்றன. பொது அமைப்புக் களில், ஒழுக்கக்குறைவு இருக்கத்தான் செய்கிறது. இந்தக் குறை இருந்தால், அமைப்புக்களின் சிரிய சேவையில், மாசு படிந்து விடும். இந்த அவல நிலைக்கு ஆட்பட்டு, சில கூட்டுறவு சங்கங்கள் துவண்டு போன விபரம் நீங்கள் அறிந்ததே. ஆகவே, புதிய பஞ்சாயத்து ஆட்சியில் பொது வான ஒற்றுமை லட்சியமும், திட்டங்களை நிறைவேற்றும் நிர்வாகஸ்தர்களிடம் நாணயமும், இருக்கவேண்டியது, மிகவும் அவசியம்.

### கிராமங்கள் தயாராகட்டும்

சினா ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலை யில், இப்போது இருக்கிறோம். யுத்தமும். ரத்தக்களரி யும், இனி இருக்காது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பாதுகாப்புக்கான, சக்தி நம்மிடம் குறைவு என்பதை நாம் நன்றாக உணரும் சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டுள்ளது. சினாவோ, வேறு எந்த நாடோ, தாக்கா மல் இருக்கும் வகையில், நம்மை நாம், பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நெருக்கடியான எந்த நிலைமையை யும் சமாளிக்க, ஒவ்வொரு கிராமமும், தயாராகவேண்டும்.

(27-ம் பக்கம் பார்க்க.)





# குடியரசு தினத்தில்..

# கிராமத் தொண்டர் படை ஆரம்ப விழா









பொருள் அணி
கிராமப் பஞ்சாயத்து
கிராமத் தொண்டர் படை
ஜெய் ஹிந்த்
கிராமத் தொண்டர் படை
மாதர் அணி
பொருக்கு விதை
அதிக உரம்
அறிவு அணி
கல்வி வளர்ச்சி
காவல் அணி
மாடு படம் கதிர்
மீன் வளம்
கால் நடைச் செல்வம்
அதிக உற்பத்தி








## கிராமத் தொண்டர் படை
## —அமைப்பு விழா—

குடியரசு தினத்தில், தமிழ்நாடு பூராவும் கிராமத் தொண்டர் படை அமைப்பு விழா சீருடன் நடை பெற்றது. கிராம அபிவிருத்திக் கமிஷனர் உயர்திரு கோ. வேங்கடாசலபதி, மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்து கொண்டார். காக்கி சாயும், வெள்ளை பனியனும் கொண்ட சீருடை அணிந்து, தொண்டர்கள் நடத்திய அணிவகுப்பு, வீர மறவர் கூட்ட எழுச்சியின் சின்னமாகத் திகழ்ந்தது.

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

நம்மிடையே உள்ள குறைகள் சிலவற்றிற்கு உதாரணம் கூற விரும்புகிறேன். ரஸ்தாக்களில் அழகான மரங்களை வைத்து வளர்க்க முன்பு எல்லா போர்டார் கஷ்டப்பட்டு ஏற்பாடு செய திருப்பார்கள். கிராமத்தில் வாழ்பவர்கள் சிலர், அந்த மரங்களின் கிளைகளை, அரிவாளாலோ, தொரட்டுக் கம்பாலோ, வெட்டிக்கொண்டு போய் விடுவார்கள். அதனால், பச்சை மரங்கள் நசித்துவிடும். அதைப் பார்க்கும் கிராமத்தார் யாரும், இந்தக் கெட்ட காரியத்தைத் தடுப்ப தில்லை. தவறு செய்கிறவர்களைக் கண்டிக்கும் மனப்பண்பு நமது ஜனங்களிடம் வளரவேண்டும். அத்தகைய தைரியம் மிகவும் அவசியம். நமது சகோதரரைக் கத்தி கொண்டு தாக்க யாராவது வந்தால், அவர்களை எதிர்த்துத் தாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதே போல் சமூக விரோதிகளை ஒடுக்குவதில் பயம் என்பதே கூடாது. பஞ்சாயத்து ராஜ்ய நிர்வாகம் வெற்றியடைய வேண்டுமானால், அதன் நிர்வாகத்தை நடத்துவோர், பழி நாணும் பண்பும், நேர்மையான ஒழுக்கமும் ஒற்றுமையில் தோய்ந்த இதயமும், படைத்தவராய் இருக்கவேண்டும்.

### உணவு உற்பத்தி—தலையாய கடன்

இந்தக் கிராமத் தொண்டர் படையின் முக்கிய கடமைகளுள் ஒன்று, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியாய் இருப்பது. இந்தத் திட்டம், மொத்தத்தில், ஒரு செழுமை நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் ஒரு பெரிய முயற்சியாகும். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையின்போது, எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. **படைக்கலங்களை விட நமக்குப் போர்புரியும் மனவலிமை மிகவும் அவசியம். அந்த மன உறுதியை—எழுச்சியை—மக்களிடையே பரப்பும் பணியில், தொண்டர் படை தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.** அத்தகைய ஓர் எழுச்சியை நாட்டில் உருவாக்கித் தருமானால், இத் திட்டத்தின் நோக்கம், பெரிதும் நிறைவேறிவிட்டது என்று நாம் திருப்தி அடையலாம்.

குறிப்பாக, கிராமப் பொது நலத்துக்கான மராமத்து வேலைகளில் ஏதாவது தவறு செய்கிறவர்களை, உடனே போலீசில் ஒப்படைக்கவேண்டும். ஏரி மதகுகளைத் திறப்பதில் தில்லுமுல்லு செய்வோரையும், ரயில் தண்டவாளங்கள், தந்தி கம்பங்கள் முதலிய பொதுச் சொத்துக்களைப் பாழ்படுத்துவோரையும், கையும் மெய்யுமாகப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைக்கும் துணிச்சல், இத் தொண்டர் படையினருக்கு ஏற்படவேண்டும். கிராமத் தொண்டர் படை, நாணயத்தையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வெற்றியடைய வாழ்த்துகிறேன்."

இவ்வாறு தலைமைச் செயலாளர் திரு எஸ். கே. செட்டூர் அவர்கள் பேசினார். தலைமைச் செயலாளரின் சொற்பொழிவை, சென்னை அரசாங்க பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். வேங்கடசாமி மொழி பெயர்த்து விளக்கினார்.

செங்கற்பட்டு கலெக்டர் திரு. என் அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்., விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், "இமயம் முதல் குமரி வரை உள்ள மக்கள் எல்லோரும், ஒரே இனம் என்ற எண்ணத்துடன், ஒருமை உணர்வைக் கடைபிடிக்கவேண்டும்," என்று வற்புறுத்தினார்.

விழாவில், காக்கி உடையும், சிவப்புத் தலைப்பாகையும் அணிந்த கிராமத் தொண்டர் படையினர் (ஆலந்தூர் பஞ்சாயத்து) அணிவகுத்துச் சென்றார்கள். கிராம மக்களின் கோலாட்ட நிகழ்ச்சியும் நடந்தது. விழாவையொட்டி நடந்த பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, தலைமைச் செயலாளர் திரு. செட்டூர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அன்று காலை நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அரசாங்க கிராம நலத்துறையின் உதவிச் செயலாளர் டி. வி. வெங்கட்ராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் கலந்து கொண்டார். அவர் பேசுகையில், "இந்திய எல்லையைக் காக்கும் ராணுவ வீரர்கள் மட்டும் அல்லாமல், நாட்டு மக்கள் எல்லோருமே, படை வீரர்கள்" என்றும், "நமக்குப் பின்னால் பெரும் சக்தியிருக்கிறது என்று எல்லை வீரர்கள் நினைக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்" என்றும் கூறினார்.

"கிராமத் தொண்டர் படை"யினருக்கு, பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன் தலைவர், திரு. டி. எல். ரகுபதி அவர்கள் அணிச்சின்னம் (பாட்ஜ்) அணிவித்தார். 'பழவந்தாங்கல்' பஞ்சாயத்து உபதலைவர், திரு. எல்லையா நாயுடு அவர்கள் கொடி ஏற்றிவைத்தார். பழவந்தாங்கல் பஞ்சாயத்துத் தலைவர், திரு. கண்ணன் அவர்கள் உறுதி மொழியைப் படிக்க, தொண்டர்கள் அனைவரும் சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

பிறகு, அரசாங்க உதவிச் செயலாளர், திரு. டி. வி. வெங்கட்ராமன், கிராம வானொலி மன்ற தலைமை அமைப்பாளர், திரு. எஸ். வேங்கடசாமி, செங்கற்பட்டு மாவட்ட கலெக்டரின் அந்தரங்க உதவியாளர், திரு. என். வி. சந்திரன் ஆகியோர் செங்கற்பட்டு மாவட்டக் கிராமப்பகுதிகளில் சிலவற்றைச் சுற்றிப் பார்த்தனர்.

குறிப்பாக, திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் அவதரித்த குன்றத்தூருக்குச் சென்றார்கள். திரு. எம். கே. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திரு. டி. வி. வெங்கட்ராமன் பேசுகையில், கிராமத் தொண்டர் படையில் மூன்று முக்கிய அலியின் வேலைத் திட்டத்தை விரிவாக விளக்கினார். திரு. சம்பந்தம் முதலான பல்வேறு கட்சிப் பிரமுகர்கள், கிராமத் தொண்டர் படையின் நோக்கத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

சோழப் பேரரசின் தலைமை அமைச்சர் பதவியைவிட, தொண்டரின் [illegible]யைப் பாடுவதில், பெருமகிழ்ச்சி

பகண்டவர் சேக்கிழார் பெருமான். "தொண்டர் சீர்பரவும் பெரிய புராணம் என்னும் அழியாத் தமிழ் இலக்கியத் தைப் படைத்த பெருமை அவருடைய தனிச்சிறப்பு. ஏறக் குறைய ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்த அரசியல் மேதை, தமிழ்நாட்டுக்கு வழங்கிய திருத்தொண் டர் வரலாறு இன்று மறுமலர்ச்சி பெறுவது, வியப்பூட்டும் நிகழ்ச்சியாகும். இறைவன் திருவருள், இத்தகைய சரித் திர நிகழ்ச்சிகளுக்கு புத்துணர்வும் புத்தொளியும் அளிக் கிறது போலும் ;

" சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், எதிர்காலத் தின் சிறப்பும் " என்ற சேக்கிழார் திருவாக்குக்கு இலக் கியமாக—ஒன்றுபட்ட உயர்ந்த பண்பாட்டின் விளக்கொளி யாக — " கிராமத் தொண்டர் படை " பணியாற்றும் என் பதில் ஐயமில்லை.

**மதுரையில் கிராம அபிவிருத்திக் கமிஷனர்**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரே நேரத்தில் கிராமத் தொண்டர் படை ஆரம்ப விழாக்கள் வெகு சிறப்பாகச் கொண்டாடப்பட்டன. தேசியப் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்வதிலும் கிராமத் தொண்டர் படையை அமைத்துச் செயல்படுவதிலும் கிராம மக்கள் மிகுந்த உற்சாகம் காட்டியுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில், கிராமத் தொண்டர் படை அமைப்பு வேலைகளை நேரடியாகக் கவனிப்பதற்காக கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி, மதுரை நகரம், மாடக்குளம், உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, உத்தமபாளையம், பெரியகுளம், வத்தலகுண்டு, வாடிப் பட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், நத்தம் ஆகிய ஊர்களுக்கு விஜயம் செய்தார். அங்கெல்லாம், தொண்டர் படையினர், பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், ஆசிரியர்கள், வட்டாரப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து, இத்திட்டத்தின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறினார். அநேகமாக அவர் விஜயம் செய்த இடங் களில் எல்லாம் கிராமத் தொண்டர் படையினருக்கு, உள்ளூர்களில் நன்கொடை வசூலித்து, சீருடை (Uniform) தயாரித்து அளிக்கப்பட்டிருந்தது. மதுரை மாவட்டத்தில் கிராமத் தொண்டர் படை வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மாவட்டக் கலெக்டர், திரு. ஈ. சி. பி.பிரபாகர் ஐ. ஏ. எஸ். திறம் படச் செய்திருந்தார்.

**சேலத்தில் பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குனர்.—** கிராமத் தொண்டர் படை அமைப்பு பற்றிய வேலைகளைக் கவனிக்க, தமிழ்நாடு அரசாங்க, பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குனர் திரு. குலாம் மகம்மது பாஷா சேலம் மாவட்டத்தில் பல இடங்களுக்கு விஜயம் செய்தார். சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, கனகமுட்லு, பையனபல்லி, காவேரிப்பட்டணம், சேலம், வெள்ளாளப்பட்டி, தாரமங் கலம், நங்கவள்ளி, கொண்டலம்பட்டி ஆகிய ஊர்களைப் பார்வையிட்டுவிட்டு, எலச்சிபாளையம் பஞ்சாயத்தில் கிராமத் தொண்டர் படைத் துவக்க விழாவில் நேரடியாகக் கலந்துகொண்டார். அதன்பின்னர், வாழப்பாடி, ஆத்தூர் ஆகிய ஊர்களுக்கும் விஜயம் செய்துவிட்டு, சென்னை திரும்பினார்.

தமிழ்நாடெங்கும் கிராமத் தொண்டர் படை துவக்கப் பட்டுவிட்டன. செயல்படத் தொடங்கிவிட்டன. கிராம மக்கள் இந்தப் புனிதமான தேசியப் பணியில் பேரார்வம் காட்டி வருகின்றனர். மாநிலத்தின் பல்வேறு பஞ்சாயத் துக்களிலிருந்து கிராமத் தொண்டர் படை தொடங்கிய விவரங்கள் வந்தவண்ணமுள்ளன. அவை அடுத்த இடம் பெறும்.

" திருத்தொண்டர் "

# இயற்கையின் எதிர்ப்பு

**நாகு. ஆறுமுகம்**

வானகத்துப் பறவையெல்லாம் எங்கே ஓடுது ?—நம்மை
வம்புசெய்யும் சீனர்களை விரட்ட ஓடுது
கானகத்து விலங்கினமும் என்ன சொல்லுது?—நமக்கும்
காலம்வரும் சீனரைநாம் வெல்வோ மென்குது.
கூட்டிலுள்ள குஞ்சினமும் ஏனோ துள்ளுது?—அம்மா
"கொஞ்சம்விடு" சீனரைநான் பார்ப்பே னென்குது
நாட்டிலுள்ள மரங்களெல்லாம் ஏனோ வாடுது?—ஐயோ
காலில்லையே போர்க்குச் செல்ல என்று வாடுது.
செடிகொடிகள் என்னசொல்லி இதழ் விரிக்குது?—இன்று
சீனரெல்லாம் செத்தாரென்று சொல்லிச் சிரிக்குது
செடியிலுள்ள மலர்களெல்லாம் எதற்கு வாடுது?—போரில்
செத்தவீரர் நிலைநினைத்து ஏங்கி வாடுது.
பாம்பும்சிறு கீரியுமங் கென்ன பேசுது?—சீனப்
பகைவர்களை ஒழிப்பதற்குக் கூட்டுப் பேசுது
தேம்பித் தேம்பிப் பூனையொன்று— ஏனோ அழுகுது?—
தன்னைச்
சேர்த்துக் கூட்டுப் பேச வில்லை என்றோ அழுகுது ?





# தாயகத்தைக் காக்கத் தாய்மார்கள் உறுதி

## படையில் சேர பெண்கள் ஆர்வம்

தாயகத்தின் கௌரவத்துக்கும் சுதந்திரத்துக்கும் சீனர்கள் விடுத்துள்ள சவாலை ஏற்க இந்திய மாதர் குலம் வீரத்துடன் முன்வந்துள்ளது.

இந்திய மாதர் நமது பாதுகாப்பு முயற்சிகளுக்குப் பணமாகவும், நகைகளாகவும், இரத்தமாகவும், சொத்துக் களாகவும் நன்கொடைகளை வாரி வழங்குவதோடு நின்றுவிடவில்லை ; நர்ஸிங் பணி முதல் ஆம்புலன்ஸ் கார் ஓட்டுவது வரையில் பல்வேறு வகையான சேவை களில் ஈடுபடவும் போட்டி போட்டுக்கொண்டு முன்வரு கின்றனர்.

டில்லியில் மாதர் ஷேமநல-வசதிகள் கமிட்டி அமைக்கப் பட்ட உடனேயே 2,500-க்கு மேற்பட்ட பெண்கள் அக்கமிட்டியில் தங்களுடையப் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, நர்ஸுகள், குமாஸ்தாக்கள், சுருக்கெழுத்தாளர் கள், சமையல் வேலை, டெலிபோன் இயக்குபவர்கள், ஆம்புலன்ஸ் கார் ஓட்டுபவர்கள், தீ அணைப்புச் சிப்பந்தி கள் ஆகியோர் போன்ற பல்வேறு வகையான பொறுப் புக்களை ஏற்க முன்வந்துள்ளனர்.

பூனாவைச் சேர்ந்த பிரபல 'கிளைடர்' விமானி, குமாரி இந்துபிடே என்பவர் விமானப் படையில் சேர்ந்து பணி யாற்ற முன் வந்திருக்கிறார் ; குறைந்தபட்சம் ஹெலி காப்டர் விமானங்களை ஓட்டும் பொறுப்பாவது தமக்கு அளிக்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண் டுள்ளார். பரூக்காபாதை (உத்திரப் பிரதேசம்) சேர்ந்த கிராம சேவகி ஒருவர், தமது துப்பாக்கிப் பயிற்சியை முடித்துக்கொண்டு, ராணுவத்தில் படை வீரராகச் சேர முன்வந்திருக்கிறார்.

டில்லியிலும் மற்ற பெரிய நகரங்களிலும், கல்லூரி மாணவிகள் உட்பட ஏராளமான பெண்கள் துப்பாக்கிப் பயிற்சி பெற முன்வந்துள்ளார்.

### பாதுகாப்பு முயற்சியைப் பெருக்க நடவடிக்கை

இந்திய தேசீய மாதர் சம்மேளனம், அனைத்திந்திய மாதர்கள் சங்கம், பெண்கள் ஷேமநல-சங்கம் ஆகியவை ஏற்கெனவே ஆரம்பித்துள்ள பாதுகாப்புப் பணிகளை மேலும் பெருக்குவதற்காக, மாதர்களின் தேசீயப் பாது காப்புக் கமிட்டி, மகிளா சேவா சஹாயக் சமிதி, சேவா சேவா சமிதி, ஸ்திரீ சபா ஆகியவை போன்ற பல மாதர் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதர் இஷ்ட பூர்வ சேவா சங்கம், கல்கத்தாவைத் தலைமை ஸ்தல மாகக் கொண்டு, தனது நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியிருக்கிறது. ஜம்முவிலுள்ள மாதர்கள் ஜவான் கள் ஷேமநல நிலையமொன்றை அமைத்திருக்கின்றனர்.

இந்த ஸ்தாபனங்களெல்லாம் மிகச் சிறப்பான முறை யில் பணியாற்றி வருகின்றன ; பணம் திரட்டுவது, தங்கம், ஆபரணங்கள், கம்பளி உடைகள் சேகரிப்பது, முதல் உதவி, வீட்டு வைத்தியம், துணை நர்ஸிங் முதலிய வற்றில் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்வது, ஜவான்களுக்காக ஜெர்ஸிக்கள் பின்னுவது, க்வில்ட் மெத்தைகள் தயாரிப்பது; கம்பளிச் சட்டைகள் பின்னுவது; அன்பளிப்புப் பொட்டலங்களையும், கம்பளங்களையும் முன்னணிப் பகுதிகளுக்கு அனுப்புவது ; ஜவான்களின் குடும்பத்தினர்களைச் சந்தித்துப் பேசுவது ஆகியவை இந்த ஸ்தாபனங்கள் ஆற்றிவரும் சிறப்புப் பணிகளாகும்.

இம்பாலிலுள்ள பூர்வகுடி மாதர் பயிற்சி நிலையம், இரவு பகலாக வேலை செய்து கடும் பனிப் பிரதேசங்களில் அணிவதற்குரிய 5,000 விசேஷ ரகக் கம்பளிக் கோட்டு களைத் தயாரித்து முடித்திருக்கிறது.

### குடும்பச் செலவில் சிக்கனம்

நாடெங்கிலும் மாதர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வரு கின்றன. இந்தக் கூட்டங்களில் பணமாகவும் தங்க மாகவும் நன்கொடைகள் திரட்டப்பட்டிருப்பதோடுகூட, சிக்கனத்தைக் கையாண்டு, அதன்மூலம் கிடைக்கும் சேமிப்புகளை தேசிய பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்வதென்றும் பெண்கள் பிரதிக்ஞைகள் எடுத்துக் கொண்டுள்ளனர்.

பம்பாயில் நடத்தப்பட்ட மாதர் கூட்டமொன்றில், தங்களுடைய குடும்பச் செலவில் 10 சத விகிதம் தொகை யைச் சேமித்து, அதில் பாதியை ஜவான்களின் ஷேம நலனுக்குக் கொடுப்பதென்றும், பாதியைப் பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்வதென்றும் முடிவு செய்யப் பட்டது. அன்றாடம் ஒரு கையளவு உணவுத் தானி யத்தைச் சேமித்து வைப்பதென்றும் பெண்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர்.

அவசரக் காலத்தில் முகப் பவுடர், ஸ்நோ முதலிய அலங்காரப் பொருள்களை உபயோகிக்க மாட்டோம் என்றும், அதன்மூலம் மிச்சமாகும் தொகையை பாதுகாப்பு முயற்சி களுக்குக் கொடுப்போம் என்றும், எர்ணாகுளம் ஸெயின்ட் தெரிஸாஸ் கல்லூரி மாணவிகள் சுமார் 2,000 பேர் கேரள ராஜ்ய கவர்னரின் முன்பு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.

டில்லியில், தேசிய பாதுகாப்புக்கான மேயர் கௌன் சிலின் ஆதரவில் நடைபெற்ற மகிளா மேளாவில், ஸ்ரீமதி இந்திரா காந்தி 100 தோலா தங்கமும், சுமார் 10,000 ரூபாயும் நன்கொடை திரட்டினார்.

கல்கத்தாவில் மாதர் ஒத்துழைப்புக் கௌன்ஸிலின் ஆதரவில் நடத்தப்பட்ட மாதர் கூட்டமொன்றில், தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் தேசத்துக்குத் தங்களுடைய பூரண ஆதரவைத் தந்து ஒத்துழைக்கச் சித்தமாயிருப்பதாக அந்த ஸ்தாபனம் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டது.

---

### பெண்களின் தியாக சித்தம்

தனிப்பட்ட முறையிலும் பெண்கள் நாட்டின் நலனுக்குச் சிறப்புமிக்க தியாகங்கள் புரிந்து வருகின்றனர்.

பஞ்சாபில் அக்பர்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஹர்னம் கான் என்ற மூதாட்டி ஒருவர், தமது சொத்து முழுவதையும், அதாவது ரூ. 18,000 மதிப்புள்ள 60 பிகா நிலத்தையும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறார். அவரது ஒரே புதல்வரான சுதாகர் சிங் நேபா போரில் உயிர் துறந்தார்.

டில்லியில் பூல் தேவி என்ற 85 வயது மூதாட்டியொருவர், தமது வாழ்நாள் சேமிப்புத் தொகையாகிய ரூ. 140-யும் எடுத்துக்கொண்டு பிரதம மந்திரியின் இல்லத்துக்குச் சென்று, அத்தொகை முழுவதையும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக வழங்கினார்.

இவையெல்லாம் சில உதாரணங்களே. இத்தகைய தியாகங்கள் புரிந்துள்ள மாதர் குல மாணிக்கங்கள் எத்தனை எத்தனையோ பேர்.

லக்னோவில், பாதுகாப்பு நிதிக்கு நன்கொடைகள் திரட்டுவதற்காக, பெண்கள் ஒரு தேனீர்க் கடை நடத்தினர்.

"தேனீர் அருந்துங்கள், நமது ஜவான்களுக்கு உதவுங்கள்" என்று கூறி தங்களுடைய வாடிக்கைக்காரர்களை அவர்கள் வரவேற்றனர்.

"நெருக்கடி ஏற்பட்டுள்ள இத் தருணத்தில் பாரதப் பெண்கள் எழுச்சியுற்றெழுந்துள்ள விதத்தைக் காண நான் பெருமைப்படுகிறேன்" என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறியிருப்பதில் நாம் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

படையினருக்காக நூறு படுக்கை வசதி கொண்ட ஆஸ்பத்திரியொன்றை நடத்த இந்திய விஞ்ஞான கழகம் முன் வந்திருக்கிறது.

படையினரில் கடும் வியாதியால் அவதியுறுபவர்களுக்கு நீண்டகால சிகிச்சையளிப்பதற்காக, 100 படுக்கை வசதிகளைக் கொண்ட ஆஸ்பத்திரியொன்றை நடத்த வைத்திய விஞ்ஞானங்களுக்கான அனைத்திந்திய கழகம் முன் வந்திருக்கிறது. அத்துடன் டில்லியில் உள்ள ராணுவ ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைகள் சம்பந்தமாக ஆலோசனையளிப்பதற்காக, அதன் சீனியர் வைத்திய அதிகாரியொருவரை அனுப்பி வைக்கவும், சன சிகிச்சைகளுக்கான வைத்தியர்கள் கோஷ்டியொன்றை அனுப்பி வைக்கவும் அது முன்வந்திருக்கிறது.

கழகத்தைச் சேர்ந்த சிப்பந்திகள், மாணவர்களில் இதுவரை 43 பேர் ராணுவ டாக்டர்களாக சேவைசெய்ய அவசர கால கமிஷன் பதவிகளுக்கு விண்ணபித்துக் கொண்டிருக்கின்றனர். இறுதி எம்.பி.பி.எஸ். பரீட்சையை எழுதி இப்பொழுது வைத்தியப் பயிற்சிக்கு அனுப்பப்பட விருக்கும் மாணவர்கள் அனைவரும் பாதுகாப்புப் படைகளில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். கழகத்தின் மாணவர்கள், படையினருக்காக இதுவரை 45 பாட்டில்கள் ரத்த தானம் அளித்துள்ளனர். இதுதவிர சிப்பந்திகளிலும், மாணவர்களிலும் 900 பேர் ரத்த தானம் அளிக்க பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருக்கின்றனர்.

---

## செஞ்சிலுவைச் சங்க நூற்றுண்டு விழா

### இந்தியாவில் பிரதான கொண்டாட்டங்கள் மே மாதம் நடைபெறும்

செஞ்சிலுவைச் சங்கம் தனது நூற்றுண்டு விழாவை இவ்வாண்டு கொண்டாடவிருக்கிறது. ஜினிவாவில் உள்ள அதன் உலக தலைமைக் காரியாலயம் 1963-ம் ஆண்டை சங்கத்தின் நூற்றுண்டு விழா ஆண்டாக அறிவித்துள்ளது. இவ்வாண்டு முழுவதும் செஞ்சிலுவைச் சங்கங்கள் அனைத்தும் புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பதையே பிரதானமாக வலியுறுத்திவரும். இப்பொழுது செஞ்சிலுவைச் சங்கத்தில் மொத்தம் 16 கோடிப் பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தில் மொத்தம் 1,35,000 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். பள்ளிகளில் சேவை செய்து வருகிற ஸ்தாபனங்கள் அடங்கிய இந்திய செஞ்சிலுவை ஜூனியர் பிரிவில் 27 லட்சம் பேர் உள்ளனர்.

ஒவ்வொரு தேசிய செஞ்சிலுவைச் சங்கமும் நூற்றுண்டு விழா ஆண்டில் பிரதானகொண்டாட்டங்களுக்கு அதனதன் சௌகரியம் போல தேதிகளை வைத்துக்கொள்ளும். செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஹென்றி ட்யூனண்ட்டின் பிறந்த தினமான மே 8-ந் தேதியன்று இந்தியாவில் சிறப்பான வைபவங்கள் நடைபெறும். அந்நாளில் நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பெறும். ஜூனியர் செஞ்சிலுவை சங்கம் அவ்வைபவத்தையொட்டி அணிவகுப்புகளை நடத்தும். அந்தந்த ஊரில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள்—இந்தியாவில் மொத்தம் 430 சங்கங்கள் உள்ளன—தனித்தனியே கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன. இச்சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்திட மே 8 ந் தேதியன்று ஐம்பது புதிய காசுகள் மதிப்பில் விசேஷ ஞாபகார்த்த தபால் பில்லை யொன்றையும் இந்திய சர்க்கார் வெளியிடுவார்கள்.



# நாவை அடக்கி நாட்டைக் காப்போம்

திருலோகசீதாராம்

**ஐயா, உங்களைத்தான்!**

"நாலு பேர் நடமாடுகின்ற தெருவில் நின்று கொண்டு அவ்வளவு சுவாரஸ்யமாக என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? சீனப் போரைப் பற்றித்தானே? கொஞ்சம் இதைக் கேளுங்கள். உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும். நீங்களும் இந்த நாட்டு மன்னர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். எல்லையைக் காக்கும் பொறுப்பு உங்களுக்கும் இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் உங்களுக்காகவும் சேர்த்துத்தான் எல்லையைக் காக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பொறுப்பின்றி வம்பளந்து கொண்டிருக்கலாமா? நீங்கள் விஷயந்தெரிந்தவர்களாகவும், பத்திரிகைச் செய்திகளை விமர்சிக்கும் புலிகளாகவும், படித்தவர்களாகவும் இருக்கலாம். வம்புப் பேச்சு உங்களுக்குப் பொழுது போக்காகவும் இருக்கலாம். ஆனால், தெருவில் நடமாடுகின்ற சாதாரண மக்கள் காதில் உங்கள் பொறுப்பற்ற விமர்சனங்கள் விழுந்தால், விஷயம் தெரியாத பாமர மக்களுக்கு நாட்டு நிலைமை பற்றி அனாவசியமான பீதியும் குழப்பமும் ஏற்படாதா? வேண்டாம், போர்க் காலத்தில் பொறுப்பின்றி அரட்டையடிப்பது தேசத் துரோகம். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜனநாயக உரிமையை வீணாக்காமல் சற்று அடக்கமாக இருங்கள். போர் முடிந்த பிறகு எல்லாம் பார்த்துக்கொள்ளலாம்."

### உரிமையை மறந்து கடமையைச் செய்வோம்

"தம்பி, மெடிகல் லீவு போட்டுவிட்டு எங்கே சுற்றுகிறாய்? கூடாதப்பா? உனக்கு விடுமுறைபெறும் உரிமை இருக்கலாம். உன்னுடைய தொழிற்சாலைக்கு இன்று நீ போகாததனால், ஒரு ஆள் உழைப்பு வீணாகிவிட்டது. உற்பத்தி பாதிக்கப்படும் என்பது உனக்குத் தெரிய வேண்டாமா? போர் முனையில் பனியும் குளிரும் பசியும் தாகமும் பார்க்காமல், உயிரைக் கொடுக்கும் போர் வீரர்கள், உன் உயிருக்காகவும் தான் மகத்தான தியாகம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உடையும், உணவும் இதரப் பொருள்களும் ஏராளமாகத் தயாராக வேண்டாமா? யுத்த கால நெருக்கடியில் வேலைக்குப் போகாமலிருத்தல் பெரிய தேசத் துரோகம், மகா பாவம். வேண்டாமப்பா, தயவு செய்து லீவை ரத்து செய்துவிட்டு வேலைக்கு போ."

### போர் முனையும் ஏர் முனையும்

"பெரியவரே, வயலில் ஏன் அந்த மூலையைத் தரிசாகப் போட்டிருக்கிறீர்? ஒரு அங்குல நிலம்கூட இப்படி வீணாக்க இது நேரமல்ல, அந்த மூலையில் ஒரு மரக்கால் தானியம் விளையுமே? ஒவ்வொரு மணி நெல்லும் யுத்த காலத்தில் போர் முனைக்கும் உன் நாட்டுக்கும், எவ்வளவு பயன்படும்! போர் முனையில் வீரர்கள் போராடுகிறார்கள். நீங்கள் போர் முனையைப் பார்க்கப் போவதில்லை. ஏர் முனையில் உங்களால் முடிந்தவரை அதிகமாகக் கண்டு முதல் செய்தால் அதுவே கோடி புண்ணியம். தயவுசெய்து தரிசு போடாதீர்கள்."

### நகைக்கு என்ன அவசரம்?

"என்னம்மா? நகையா? உனக்குத் தெரியாதா? நம்முடைய நாட்டில் இப்போது போர் மூண்டிருக்கிறதே. அவரவர்கள் தங்கள் ஆபரணங்களையெல்லாம் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது நீ புதிதாகக் காசுமாலை பண்ண வேண்டுமென்று அடம்பிடிக்கலாமா? பொறு தாயே, சண்டை முடியட்டும், பிறகு வேண்டிய நகை செய்து போட்டுக்கொள்ளலாம், அது வரையில் நமக்கு வேண்டிய ஆயுதங்களை வெளி நாடுகளிலிருந்து வாங்க சர்க்காருக்குத் தங்கம் மிகவும் தேவைப்படுகிறது. நகைக்கு என்ன அவசரம்? என்ன, சரிதானே."

### வெற்றிலையும் வெற்றிக்கு உதவும்

"என்ன சார், வெற்றிலை பாக்குப் பெட்டியைக் காணோம், அது உங்கள் ஹஸ்த பூஷணமாச்சே, ஓஹோ—போர்க்காலச் சிக்கனமோ? எப்படி? வெற்றிலை பாக்குச் செலவை நிறுத்தி அந்தத் தொகையைப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்கப் போகிறீர்களா? சரிதான் போங்கள். இது அல்லவா தேச பக்தி. போர் முடிந்த பிறகு நமது போக போக்கியங்களுக்குப் பஞ்சமா என்ன?"

### ஜெய் பாரதம்!

"நமது நாட்டில் மக்களுக்கு நாவடக்கம், ஒற்றுமை உழைப்பு, என்ற ஜீவசக்திகள் இன்று உதயமாகியிருக்கின்றன. எல்லாரும் இந்நாட்டு மன்னர்களென்று மகா கவி சொன்ன வாக்குப் பொய்க்குமா? மன்னர்களாக இருப்பது பெருமை, அது பொறுப்பும் நிறைந்த ஒரு பதம். மக்கள் அனைவரும் மன்னர்களாக விளங்கும் நாட்டில் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. எந்த எதிரிதான் நம்மை என்ன செய்ய முடியும். வந்தே மாதரம், என்று வணங்கி வந்தோம். இனி 'ஜய பாரதம்' என்று முழங்குவோம்."

(வானொலியிற் பேச்சு)

# இராமத் தொண்டர் படை

இராமத் தொண்டர் படையினை நாடு முழுவதும் அமைப்பதற்கான திட்டத்தை, புது டில்லியில்நில் நடைபெற்ற மத்திய சமுதாய அபிவிருத்தி கூட்டுறவுக் குழுக்கூட்டம் அங்கீகரித்திருக்கிறது. அக்கூட்டத்துக்கு பிரதம மந்திரி தலைமைவகித்தார்.

இராமத் தொண்டர் படைத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் வருமாறு:—

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்து ஆட்சி ஸ்தாபனங்களும், விஸ்தரிப்பு ஏற்பாடுகளும் இத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபடுத்தப்படும். சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த வேளையில், அதைச் சமாளிப்பதற்கு, சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஏற்கெனவே அமைத்துள்ள ஸ்தாபனங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கிராமங்களிலிருந்து தொடங்கி எல்லா மட்டங்களிலுமுள்ள பஞ்சாயத்து ஆட்சி, கூட்டுறவு ஸ்தாபனங்களும் இத் துறையில் தீவிரமாக ஈடுபடும். சுமார் 203,000 பஞ்சாயத்துக்களும், 212,000 கிராமக் கூட்டுறவு சங்கங்களும், 5,200 அபிவிருத்தித் தொகுதிகளும் அடங்கிய இந்த ஸ்தாபனங்களில், 10 லட்சம் நிர்வாக அதிகாரிகளும், 40 லட்சம் சர்க்கார் சார்பற்ற பிரதிநிதிகளும், 40 லட்சத்துக்கும் அதிகமான கிராம சகாயக்குகளும் இருக்கின்றனர். கிராமத் தொண்டர், படையில், கிராமங்களிலுள்ள உடலுறுதியுள்ள எல்லாரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். அத் திட்டத்தில், உற்பத்தி, பொதுஜனத் தொடர்பு, கிராமப் பாதுகாப்பு ஆகிய மூன்று அம்சத் திட்டங்களிருக்கும்.

தேசியப் பாதுகாப்புக்கு முதன் முதலாக வேண்டியது வலிமை பொருந்திய விவசாயத் துறையாகும். லட்சக் கணக்கான நமது விவசாயிகள் பாதுகாப்பு முயற்சியில் பூரணமாக ஈடுபடவேண்டுமாயின், கிராம உற்பத்தித் திட்டங்களின் மூலமாக விவசாய உற்பத்தியைத் தீவிரப் படுத்துவதற்கு வேண்டிய தேசிய இயக்கம் இத் திட்டத்தின் கருவூலமாக இருக்கவேண்டும். இராமத் தொண்டர் படை மூலமாக, பஞ்சாயத்து நிலங்களை அபிவிருத்தி செய்வது, குப்பை உர வசதிகளைப் பெருக்குவது, காய்கறி, பழத் தோட்டங்களை ஊக்குவிப்பது, எரிப்பதற்கேற்ற மரங்களை நட்டு வளர்ப்பது முதலிய வேலைகளில் ஈடுபட்டு சமுதாய ஆஸ்தியை வளர்ப்பதில் கவனம் செலுத்தப்படும். விளைபொருள் உற்பத்திப் பெருக்கத்துக்குத் துணையாக புஞ்செய்ப் பயிர், மண்வளப் பாதுகாப்பு, சிறு பாசனத் திட்டங்கள், ஆகியவை சம்பந்தமான லட்சிய அளவை நிறைவேற்றுவதில் பிரத்தியேக கவனம் செலுத்தப்படும். வயல் கால்வாய்களில்லாததன் காரணமாகப் பாசன வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்த முடியாமலிருக்கும் இடங்களில், அவைகளை வெட்டி முடிக்கும் வேலையைத் தேசிய இயக்கமாகத் தொடங்கவேண்டும். மேலும் பல வேலைத் திட்டங்களும் கிராம உற்பத்தித் திட்டத்தில் சேர்க்கப்படும். அத்தகைய திட்டத்தை ஒவ்வொரு கிராமமும் தயாரித்து நிறைவேற்றும். கிராமத் தொண்டர் படை, கூட்டுறவு சங்கங்களுக்கு மேலும் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொடுக்கவும் ஆதார வசதிகளைப் பெருக்கவும் உதவியா இருக்கும்.

"பாதுகாப்பு உழைப்பு பாங்கி"யுள்ள உழைப்பு சக்தியை திட்டமிட்ட ரீதியில் பயன்படுத்துவதற்கு இப் படை உதவியாக இருக்கும். உடலுறுதி வாய்ந்த ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு ஒரு நாள் வீதம் வழங்கும் உடலுழைப்பும், அல்லது அதற்குப் பதிலாகக் கிடைக்கும் பணமும் இப் பாங்கின் ஆதார வசதிகளாக இருக்கும். அது மிகவும் குறைந்தபட்ச அளவாகும். நிலமற்ற தொழிலாளர்கள் விஷயத்தில், இந்த அளவுக்கு மிஞ்சிய வேலைகளுக்கு உள்ளூர் நிலவர அடிப்படையில் கூலி வழங்கப்படும். இந்தப் பாங்கைப் பூரணமாகப் பயன்படுத்தினால் ஆண்டொன்றுக்கு ரூ. 300 கோடி மதிப்புக்கு வேலை நடைபெறும். பல்வேறு ஏற்பாடுகள் மூலமாக உண்மையான தகவல்களை வெளியிடவும், வதந்திகள் பரவுவதைத் தடுத்து மக்களின் மனோ உறுதியைப் பலப்படுத்தவும் இப் படை பொறுப்பாக இருக்கும்.

உடற்பயிற்சி, 'டிரில்' சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவரையில் கிராமத் தொண்டர் படைக்குப் பொதுவான திட்டமிருக்கும். கிராம மக்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கவும், பாதுகாப்பு முயற்சியில் பங்காளரென்ற மனப்பான்மையை ஏற்படுத்தவும் தொண்டர் படை உதவியாக இருக்கும். உள் விவகார மந்திராலயத்தின் திட்டத்தின்படி கிராமப் பாதுகாப்புப் படையில் தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் காவல் வேலைகளிலும், தீ அணைப்பு, செய்தித் தொடர்பு ஏற்பாடுகளின் பராமரிப்பு, முதல் சிகிச்சை ஆகிய வேலைகளிலும் ஈடுபட்டு வருவார்கள். அபிவிருத்தி தொகுதி ஸ்தாபனங்களுக்கிடையேயும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையேயும் நெருங்கிய தொடர்பு இருக்கும்.

கிராமத் தொண்டர் படையில், மாதர் பிரிவுமிருக்கும் பெண்களுக்கிடையே, சேமிப்பு, பின்னுதல், உபயோகப் பொருள்களை விநியோகித்தல் ஆகிய விசேஷ நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். ஜவான்களின் குடும்பங்களைக் கவனிக்கும் வேலையிலும் இப் பிரிவு உதவியாக இருக்கும்.

இத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உத்தேசித்து பிரதம மந்திரியின் தலைமையில் உயர்தரக் கமிட்டி. இத் திட்டங்களுக்கு யோசனை கூறி நடத்திவரும்.



# இளமை உள்ளம் வளமை பெற....

மரங்கள் பூக்கத்தொடங்கும் இளவேனிலின் ஆரம்ப காலம் போன்றது இளமை. கவலைத்தீயில் வெந்தழியாத இந்தப் பருவத்தில் கடமை உணர்ச்சியையும் பொறுப்பேற்கும் சக்தியையும் இளைஞர்களுக்குப் பயிற்சி மூலம் அளிக்கமுடியும் என்பது கண்கூடு.

பிறர் கையை எதிர்பாராமல் நமது தேவைகளை நாமே தேடிக்கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாட்டு வாழ்க்கையில் இளைஞர்களைப் பங்கேற்றுப் பயன்பெறுமாறு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு மனோ பக்குவத்தை, வழிவழிப் பிறந்த பாரம்பரியப் பண்புகளை அவர்களுக்கு ஊட்டத்தக்க வகையில் பாரதம் முழுவதிலும் பல பயிற்சி நிறுவனங்கள் செயலாற்றி வருகின்றன.

பொதுவான கலை நிகழ்ச்சிகள், புராதனக் கிராமிய நடனங்கள், நாட்டுப் பாடல்கள் போன்ற நம்முள் சிறந்த பண்பாட்டை வளர்த்த கலைகளை யாவும் மெல்ல மெல்லத் தேய்ந்து வருவதைப் பார்க்கிறோம். இவற்றின் மூலம் நாம் பெற்று வந்த ஆன்மீக உணர்வும் தேசப்பற்றும் சீலம் நிரம்பிய வாழ்க்கை நெறிகளும் அதற்கேற்ப மங்கி வருகின்றன. இளைஞர்களுக்கு இவற்றில் ஆர்வம் பெருகும் வண்ணம் மனவளத்தை உருவாக்குவது இன்றைய முதல் தேவையாகும். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவர்களிடையில் ஓங்கி வளர, இக்கலைகள் பெரிதும் பயன்படுவன ஆகும். அவர்கள் ஒன்றுபட்ட கூட்டு வாழ்க்கையை உணர்ந்து கொள்ளவும், ஒரு சேர உழைக்கவும் நம்முள் வளரும் ஏற்றத்தாழ்வுகளை, விருப்பு வெறுப்புக்களை உதிர்த்து விடவும் ஓர் அமைப்பு ஏற்படுத்தி ஆக்க வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தப் பயிற்சி ஒன்றே சிறந்த வழிகாட்டியாக அமையும்.

வெறும் அரசியல் விடுதலையால் மட்டும் இன்றைய பாரதம் பெருமை கொள்வதற்கில்லை. ஏனெனில் அதனினும் மேலான ஒரு இலட்சிய வாழ்வை அது உருவாக்க பாடுபடுகிறது. அந்த இலட்சிய வாழ்வுக்கு அடிகோலும் கருவியாகவே நாம் பெற்ற சுதந்திரத்தைக் கணக்கிடுகிறோமே தவிர, சுதந்திரமே ஒரு லட்சிய சித்தி என்று நாம் நம்பவில்லை. எனவே, எதிர்காலத்தின் கரத்தில் இருக்கும் அந்தப் புது வாழ்வை, இளைஞர்களால்—பண்பாடு, பக்குவம், பயிற்சி என்ற மூன்று சக்தி வாய்ந்த கேடயங்களைத் தாங்கி முன்னேறும் சந்ததியால் மட்டுமே அடைய முடியும்.

நாம் போராடிப் பெற்ற சுதந்திரத்தின் விலை அறியாமலே இன்று இளைஞர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். விடுதலையின் மகத்துவத்தை அவர்கள் உணரவில்லை. நமது வீரப் பரம்பரையின் சாகசங்களை விளக்கிச் சொன்னால் நேரம் காணாது. ஆனால் அவர்கட்கு அந்தப் பழம் வரலாறு, பாரதத் திருநாட்டின் வாழ்வுக்காகப் பச்சை ரத்தம் பாய்ச்சியோர், தூக்குக் கயிற்றை முத்தமிட்டோர், தொல்லை ஏற்றோர்—தடியடி பட்டோர்—இவர்களின் கதைகளை நாம் உணர்த்தியாகவேண்டும். கொடுமையே உருவான பழமையும் அதிலிருந்து விடுபட்ட நிகழ்காலத்தையும் காட்டி, இன்பமே வடிவான எதிர்காலத்தில், மலையாக நம்பிக்கை அவர்களிடம் எழச்செய்யவேண்டும். படிப்படியாக ஆட்சி இயந்திரத்தின் அடிப்படைக் கருத்துக்களைப் புகட்ட ஜனநாயகத்தில் அவர்களுக்குப் பற்று ஏற்படுத்த அவர்களைத் தயாரிக்கும் பயிற்சி நிறுவனங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அன்றைய நாளில் குருகுலங்கள் ஆற்றி வந்த பணிகளை இப்பயிற்சி நிலையங்கள் அந்தந்த காலத்துக்கேற்ப, வசதிப்படி மாற்றிச் செயலாற்றுமானால், அவை இளைஞரின் மதியிருளைப் போக்கிய மகத்தான ஆக்கப்பணி புரிந்தவையாகும்.



பயிற்சி என்பது மனத்தைப் பண்படுத்துவதோடுகூட உடலையும் பக்குவம் செய்வதாகும். உள்ளத்தில் பாவ நினைவுகள் படரவொட்டாமல் பரம்பொருளின் தியானத்தில் ஒன்றிவிட, சாது சந்நியாசிகளும் ஜீவன் முக்தர்களும் பயிற்சி பெற்றமை போல, பொதுத் தொண்டு தேசப் பற்று முதலியன இளைஞரின் இதயங்களை வருடும் அளவுக்கு அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். இம்மனப் பக்குவத்தை அடைய உடல் வலிவும் ஓரளவு தேவையான சாதனமாகும். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் கூறியது போல், இளைஞர்கள் கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், பீடுநடையும் உடையவர்களாகத் திகழ வேண்டும்.

இளைஞர் உள்ளத்திலே விஷவித்துக்கள் விதைக்கப்படாமல் காப்பாற்றப்பட்டால்—எதிர்காலம் பற்றிய நம் நம்பிக்கைக் கோட்டை உருவாக்கப்பட்டுவிட்டால்—இந்தியா இலட்சியடரியை நோக்கி உண்மையில் நடைபோடுகிறது என்று பொருள். ஜனநாயக தத்துவத்தை—அதன் முக்கியத்துவத்தை அரும்புப் பருவத்திலேயே அவர்களை உணரச் செய்ய வேண்டும். இதற்காக அதனைப் பாலபாடம் ஆக்கிவிடுவதாலே நாம் எதிர்பார்க்கும் பயனை அடைய முடியாது. ஜனநாயகத்தை செயல்படுத்தும் நிலைமையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சான்றாக, கூட்டங்கள் ஏற்பாடு செய்தல், அணிவகுப்புக்கள் நடத்த ஆயத்தம் செய்தல், விளையாட்டுப் பந்தயங்கள், உல்லாசப் பயணங்கள் இவற்றை நடத்துதல் போன்ற பொறுப்புக்களை தந்து அவர்களின் திறமையை வளர்க்கலாம். அவ்வாறு ஓர் இளைஞன் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று மற்றவர்களின் கண்காணிப்பில் அவற்றைத் திறம்படச் செயலாற்றுவதின் மூலம் ஜனநாய முறைகளில் நம்பிக்கையும், அந்தத் தத்துவத்தின் பால்மாறுத ஈடுபாடும் பற்றும் அவர்களிடம் பெருகிவிடக்கூடும். இவ்வாறு தொடங்கி இளைஞர்களின் நாட்டத்தைத் தேச சேவையிலும் பொதுத் தொண்டிலும் படிப்படியே திருப்பி விடுவது எளிதாகும். சாரணர் இயக்கம் போல் சமூக நலன்களில் அவர்களுக்கு அக்கறை ஏற்படுத்த முடியும். பாதை அமைப்பது முதல் பாசன வசதிக்காக வாய்க்கால் வெட்டுவது வரை கிராமத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் உபயோககரமான பணிகளில் ஈடுபடுத்த இயலும். இதனைத்தான் நமது மாநில சர்க்கார் 'கிராமத் தொண்டர் படை' என அழைக்கிறது.

நாட்டுப்புறத்து இளைஞர்கள் பெரும்பாலும் போலி நாகரிகத்தின் வசீகரப் பிடியில் சிக்காமல், உடல் நலம் பெற்றுத் திகழ்பவர்கள். உற்சாகத்தோடு கடின வேலைகளையும் செய்யக்கூடியவர்கள். அவர்கள் அலுக்காமல் உழைப்பதன் பயனாகவே நகரவாசிகள் மெலுக்காக வாழமுடிகிறது. கூடித்தொழில் புரியும் அவர்களுக்கு ஆயாசம், அயர்வு இவற்றை மறக்க இசை பெரிதும் உதவுகிறது. ஏற்றம் இறைப்போரிலிருந்து நாற்று நடுவோர் வரை பாட்டிசைத்த வண்ணம் இன்றும் பணி புரிவதுண்டு. அவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆயினும் கொஞ்சம் படிப்பு வசதி பெற்றவர்கள், மீண்டும் அந்தப் பட்டி தொட்டிகளில் வாழ விருப்பம் கொள்வதில்லை. பட்டண வாழ்வை நாடி பறந்து வந்துவிடுகிறார்கள். இதன் பயனாய் புதிய விவசாய முறைகளை உரிமையோடு வற்புறுத்தி நுழைக்கக்கூடியவர்கள், பாமரரைத் தெளிவுபடுத்த வேண்டியவர்கள் அங்கு இருப்பதில்லை. அதிலும் நகர்ப்புறத்தை ஒட்டிய கிராமமாக இருந்தால், அதில் வாழும் இளைஞர்களில் பலர் நகருக்கு வந்து கடைகளில் ஆலைகளில் பணி புரியத் தொடங்கி விடுகிறார்கள். அந்த இளைஞர்களின் கல்வி நலனும் தொழில் புலமையும் அக்கிராம மக்களின் வாழ்வுக்குப் பயன் விளைக்கவேண்டுமானால்—எல்லைக்கு அப்பால் இயங்கி வரும் அவல நிலையை ஒழிக்கவேண்டுமானால், கிராமங்களில் முன்னேற்றகரமான திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டும். கைத்தறி—கதர் நெசவு குடிசைத்தொழில் போன்ற எளிய பயனுள்ள திட்டங்களைப் பெரிய அளவில் செயல்படுத்தும்போது இளைஞர்களின் கவனத்தை அவை ஈர்க்காமல் போவதற்கில்லை. அந்தந்த கிராமங்களில் ஏற்படும் அபிவிருத்திகளுக்கேற்ப பயிற்சி நிலையங்களின் செயல் திட்டங்களை அமைத்துக் கொண்டால் பெரும்பாலான இளைஞர்கள் பிறந்த மண்ணை மறந்து வெளியேற மாட்டார்கள். வேலை கிடைக்கவில்லை என வீணில் சோம்பித் திரியமாட்டார்கள். இந்த அடிப்படையில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டால், இளைய பாரதத்தின் எதிர்காலம் நிச்சயம் நம்பிக்கை நிறைந்ததாக இருக்கும். 'இளமையின் சிறந்த வளமையும் இல்லை' என்ற ஆன்றோர் வாக்கின் முழுப்பயனையும் நாம் துய்க்க முடியும்.

Adaptation from " Kurukshetra "

## அடுத்த இதழில்........

- வானொலியில் மக்கள் குரல்—
- பஞ்சாயத்துக்களில் விவசாய உற்பத்தித் திட்டங்கள்—திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.,எஸ்.
- தேசிய நெருக்கடி நிலையில் கூட்டுறவாளர்களின் கடமை—திரு வி. டி. கிருஷ்ணமாச்சாரி.
- " சேரவாரும் ஜெகத்தீரே !"—திருமதி எஸ். சௌந்திரம்.
- பஞ்சாயத்து நிதி ஆராய்ச்சிக் குழுவினரின் சுற்றுப்பயணம்—திரு கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்,, பஞ்சாயத்து நிதி இயக்குநர்.
- மின்சார விபத்து—தற்காப்பு விதிகள்..
- ஒன்றுபட்டு நின்று எதிரியை விரட்டுவோம்—டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்.

கிராம நலம்

ஆண்டு சந்தா .. ரூ.1·50

தனிப்பிரதி .. 13 ந. பை.

பஞ்சாயத்து ஆட்சி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதி முறைகள் முதலியன இப் பகுதியில் தமிழில் சுருக்கி வெளியிடப்படுகின்றன.

## தேசிய நெருக்கடி நிலை—கிராமத் தொண்டர் படை—தேசிய நெருக்கடியை ஒட்டி ஆள்பல வசதிகளையும் இதர வசதிகளையும், திரட்டும் திட்டத்தின் விளக்கம்

### G.O. Ms, No. 2793, R.D. & L.A., Dated 26-12-62.

நமது நாட்டில், சீன ஆக்கிரமிப்புக் காரணமாகத் தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையை முன்னிட்டு, பாதுகாப்புக்காக ஆள் பலம், இதர வசதிகள் முழுவதையும் திரட்டுவது அவசியமாகிறது. சென்ற சில வாரங்களாகத் தேசபக்தி உணர்ச்சியானது பல உருவங்களில் வீறுகொண்டு கிளம்பியிருக்கிறது. கிராமப் பகுதிகளில் தோன்றியுள்ள ஆர்வத்தை ஒழுங்கான முறையில் வகைப்படுத்துவது அவசியமாகும். அந்த ஆர்வமானது, தேசப்பாதுகாப்புக்கும், பொருளாதார அபிவிருத்தி என்ற நீண்ட கால லட்சியத்துக்கும் பயன்படுமாறு செய்யவேண்டும். தேசிய முயற்சியில் பங்குகொள்ளவும், தேசிய முயற்சிகளுக்குத் தன்னால் முடிந்ததை உதவவும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்பதே நமது அடிப்படை லட்சியமாகும். இந்த மாநிலத்தில் தற்போது 12,500-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இவற்றால் சுமார் 2·8 கோடி மக்கள் பயனடைந்து வருகிறார்கள். இந்தப் பஞ்சாயத்துக்கள் 373 பஞ்சாயத்து யூனியன்களாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பஞ்சாயத்து யூனியன்கள், 21 அபிவிருத்தி மாவட்டங்களில் அமைந்துள்ளன. இந்த அபிவிருத்தி மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்ட அபிவிருத்தி மன்றம் உள்ளது. இந்த ஊராட்சி மன்ற ஆட்சி முறையானது, கிராமப்புறங்களில் ஆள்பலத்தையும், இதர வசதிகளையும் திரட்டுவதில் தகுந்த கருவியாக அமைகின்றது.

2. மேற்கண்ட காரியங்களைச் செய்வதற்காக, கிராமத் தொண்டர் படை அமைப்புக்கான திட்டம் ஒன்றை, இந்திய அரசாங்கம் வகுத்துள்ளது. 1963 ஜனவரி 26-ம் தேதி குடியரசுத் திருநாளன்று பிரதம மந்திரி அவர்கள் இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பார்கள். பிரதம மந்திரி அவர்களைத் தலைவராகக் கொண்ட உயர் அதிகாரக் குழு ஒன்று, நாடெங்கிலும் இந்த வேலைத் திட்ட நிறைவேற்றத்துக்கு வழிகாட்டி, அவ் வேலையைக் கண்காணித்து வரும். இந்திய அரசாங்கம் இதற்காக வகுத்த திட்டமானது தமிழ்நாடு, மைசூர், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களின் சமுதாய நல வளர்ச்சி அமைச்சர்களும், புதுச்சேரி கமிஷனரும் கலந்துகொண்ட பிராந்திய மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. இந்த மாநாடு சென்னையில் 1962 டிசம்பர் 20-ல் நடைபெற்றது. மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கும், மாநிலத்திலுள்ள தல நிலைமைகளுக்கும் ஏற்பத் திருத்தப்பட்டுள்ள கிராமத் தொண்டர் படைத் திட்டம் இணைப்பு I-ல் விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்தும், கிராமத் தொண்டர் படை அமைக்கவேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அத் தொண்டர் படை வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். அது கிராமப் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களை மக்களுக்கு விளக்குவதுடன் கிராமப் பாதுகாப்பு அணியாகவும் செயல்படும். மாநிலம் முழுதிலும் இத்திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

3. எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் 1963 ஜனவரி 5-ந் தேதிக்குள்ளாக, சவுகரியமான ஒரு தேதியில் கூடி, இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ள திட்ட விவரத்தைப் பரிசீலனை செய்து, செயல்படுத்துவதற்கான விரிவான திட்டம் வகுத்து, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், பஞ்சாயத்துக்களும் மேற்கொள்ளுவதற்காக அதைத் தெரிவிக்கவேண்டும். அதன் பின்பு, திட்ட விவரத்தை பரிசீலனை செய்து, செயல்படுத்துவதற்காகத் தனக்குரிய திட்டம் வகுத்துக் கொள்வதற்காகப் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சிறப்புக் கூட்டம் கூட்டப்படவேண்டும். 1963 ஜனவரி 11-க்குள்ளாக எல்லாப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கூட்டமும் நடந்துவிடவேண்டும். அதற்குப் பின்பு பஞ்சாயத்துக்களின் சிறப்புக் கூட்டம் கூடி, பஞ்சாயத்து கிராமங்களுக்கான செயல் திட்டத்தை வகுக்கவேண்டும். 1963 ஜனவரி 2[illegible] குடியரசுத் திருநாளன்று கிராமத் தொண்டர் படைத்

திட்டத்தைப் பிரதம மந்திரி ஆரம்பித்து வைப்பார். அந்த நாளில் மாநிலம் முழுதிலும் பஞ்சாயத்துக்களின் சிறப்புக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பஞ்சாயத்துக்கள், எல்லா கிராம மக்களையும் அழைக்கவேண்டும். அக் கூட்டங்களில் ஆக்கிரமிப்பாளரை நமது நாட்டிலிருந்து விரட்ட உறுதிகொண்டும் நாட்டுக்காக நம்மை அர்ப்பணம் செய்துகொண்டும் ஒரு பொது சபதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். (அந்தச் சபதத்தின் வாசகம் ஜனவரி மாத 'கிராமநல' இதழில் தரப்பட்டுள்ளது. கூட்டத்தில் கூடியுள்ள அனைவரும் அச் சபதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அந்தச் சமயத்தில் கிராமத் தொண்டர் படை முறையாக ஆரம்பித்து வைக்கப்படவேண்டும். கிராமத் தொண்டர் படைக்கான வேலைத் திட்டத்தையும், பஞ்சாயத்து முடிவு செய்துகொண்டு, அந்த நாளில் வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு பஞ்சாயத்துப் பகுதியிலும் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள்ளாக அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அரசாங்கத்துக்குத் தகவல் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஆரம்பிக்கப்பட்ட தொண்டர் படையில் உள்ளவர்கள் தொகை அவர்களுக்காக வகுக்கப்பட்ட வேலைத் திட்டம். ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை எந்த வகையில் அமுலாக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்னும் விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். திட்டங்களை அமுலாக்குவதிலும், சங்கடங்கள் ஏதாகிலும் இருக்குமானால் அவைகளைத் தீர்ப்பதிலும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் பொறுப்பாக இருந்து பஞசாயத்து யூனியன்களுக்கு உதவுவார்கள். எல்லா ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், கமிஷனர்களுக்கும் வேண்டுமான வழிவகைகள் கூறியும், ஆலோசனை கூறியும் உதவும்படி எல்லாக் கலெக்டர்களும், இணை கலெக்டரும் கேட்டுக் கொள்ளப்படுவதோடு, திட்ட அமுல் வேலையில் முன்னேற்றம் பற்றி அரசாங்கத் தலைமைச் செயலாளருக்கு மாதாந்திர அறிக்கை அனுப்பும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## இணைப்பு I.

## தமிழ்நாட்டில் செயல்படுவதற்கான கிராமத் தொண்டர் படைத் திட்டம்

மாநிலத்தின் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், கோ ஆப்ட் செய்யப்பட்ட உறுப்பினர்கள், கிராம நாயக்குகள், பஞ்சாயத்துப் பிரதேசத்தில் வசிக்கும் ஆசிரியர்கள், பஞ்சாயத்தின் மாதர் நலக் கமிட்டி உறுப்பினர்கள், இளம் விவசாயிகள் மன்றம், இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியவைகளின் பிரதிநிதிகள் ஆகியவர்களின் உதவியுடன் பஞ்சாயத்துகளால் இது அமைக்கப்படும். தொண்டர் படையை அமைப்பதிலும், அதன் வேலைத் திட்டத்தை அமுலாக்குவதிலும் இளைஞர் மன்றங்களுக்கும் மாதர் சங்கங்களுக்கும் குறிப்பான முக்கியப் பங்கு உண்டு. இவ் விவரம் கீழே விளக்கப்படுகிறது. கிராமத் தொண்டர் படையானது, இப்படையில் சேரத் தாமாக முன்வரும் கிராமத்திலுள்ள தேக திடகாத்திரமுள்ள—வயதுவந்த நபர்கள் அனைவரையும் கொண்டதாக இருக்கும்.

**வேலைத் திட்டம்.**—கிராமத் தொண்டர் படையின் வேலைத்திட்டம் மூன்று அம்சங்களைக் கொண்டது. அதாவது உற்பத்தி ; விளக்கப்பணி ; கிராமப் பாதுகாப்பு, கிராமத் தொண்டர் படை மூன்று யூனிட்டுகளைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு யூனிட்டும், இந்த மூன்று அம்சங்களில் ஒரு பணியைக் கவனித்துக்கொள்ளும். இந்த யூனிட்டுகளை அமைப்பதில், உற்பத்தி பெருக்கத்துக்கான யூனிட் அமைக்கும்போது, விவசாய அனுபவம் உள்ளவர்கள் எல்லோரையும் ஒன்றுகத் திரட்டி, இந்த யூனிட்டை அமைப்பது நலமாக இருக்கும். படித்தவர்களும், தற்போதைய நாட்டு நடப்புகள் குறித்து அறிந்தவர்களுமான தொண்டர்கள் விளக்கப் பணிக்கான யூனிட்டிலும், இளைஞர்கள், குறிப்பாக 21 வயதிலிருந்து 40 வயதுக்குள் உள்ள தேக திடமுள்ள இளைஞர்கள், கிராமப் பாதுகாப்பு யூனிட்டிலும் இடம் பெறலாம். ஒரு குறிப்பிட்ட யூனிட்டில்தான் சேர்ந்தாகவேண்டும் என்பது கட்டாயமில்லை என்பது தெளிவாக்கப்பட வேண்டும். அவசியமானால், ஒரு தொண்டர் ஒன்றுக்கு மேற்பட்ட யூனிட்டுகளில் உறுப்பினராக இருக்கலாம். உதாரணமாக ஒரு ஆசிரியர் விளக்கப்பணிக்கான யூனிட்டிலும் உறுப்பினராக இருக்கலாம் ; கிராமப் பாதுகாப்பு யூனிட்டிலும் உறுப்பினராக இருக்கலாம்.

**(அ) உற்பத்தி.**—தேசியப் பாதுகாப்பு வலுவாக அமைவதற்கு, வேளாண்மைத் தொழில் நன்கு பலமடைந்து விளங்குவது அவசியமாகும், ஒவ்வொரு கிராமத்திலும் கிராம உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் மூலம் தேசம் முழுவதிலும் தீவிரமாக உற்பத்தியைப் பெருக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். லட்சக்கணக்கான நமது விவசாயிகள், பாதுகாப்பு முயற்சியில் பங்குபெற வாய்ப்பளிக்கும் இந்த ஏற்பாடானது, வேலைத் திட்டத்தின் சிறந்த அம்சமாக விளங்கும், உற்பத்திப் பெருக்கத்துக்கான யூனிட், உற்பத்திப் பெருக்கத்திலும், பஞ்சாயத்து வசமுள்ள நிலங்கள் அபிவிருத்தி, கம்போஸ்ட் உரங்கள் இதர தல உரங்கள் அபிவிருத்தி, காய்கறி, பழம் சாகுபடி, கிராமக் காடுகள், மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஏரி, குளங்கள், இதர கிராம நல வேலைகள் ஆகியவைகளிலும் கவனம் செலுத்தவேண்டும், விரிவான சாகுபடி, தீவிர சாகுபடி ஆகியவை மூலம் உற்பத்தி அதிகரிப்புக்கான லட்சிய அளவை நிறைவேற்றி வைப்பதிலும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு மாற்றப்பட்ட சிறு பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதிலும், குடி மராமத்து வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும், பஞ்சாயத்தின்



மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை அமுலாக்குவதிலும், உற்பத்திப்பெருக்கத்துக்கான இதர வேலைத்திட்டங்களிலும் இந்த யூனிட்டுக்குக் கூடுதல் பொறுப்புக்கள் உண்டு. பஞ்சாயத்து அளவில் கிராம உற்பத்தித் திட்டங்களை உருவாக்கவும், அவற்றை நிறைவேற்றவும் உணவு விவசாயத் துறையின், 1960 நவம்பர் 16-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3792-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துப் பகுதிகளில் தரமான விதைகளை விதைப்பதையும், உள்ளூர் உர வசதிகளைப் பெருக்குவதையும் கிராம உற்பத்தித்திட்டம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாய மானியமாக 2 லட்சம் ரூபாயைப் பயன்படுத்தவும், கிராம அபிவிருத்தி, நல நிர்வாகத் துறையின், 1961 செப்டம்பர் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எம் எஸ், எண் 2460-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன் விவசாய ஒதுக்கீட்டுத் திட்டங்களை உருவாக்கவும், நிறைவேற்றவும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன் விவசாய மானிய ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழும், கிராம விவசாய உற்பத்தித்திட்டத்தின் கீழும் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தை நிறைவேற்றுவதில் பஞ்சாயத்து தன் பங்கை ஆற்றும் வகையில் உதவுவது உற்பத்தி யூனிட்டின் பொறுப்பாகும். மாநில அரசாங்கமும் புன்செய் சாகுபடி, உள்ளூர் உரவசதிகளைப் பெருக்குதல், பெரிய நகரங்களிலும் சுற்றுப்புறத்திலும் காய்கறிகள் உற்பத்தி செய்தல், தீவிர நெல் சாகுபடி குறுகிய கால பயிர் சாகுபடி ஆகியவற்றின் மூலம் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான விசேஷத் திட்டங்களை உருவாக்கிவருகிறது. இத்திட்டங்கள் இறுதி வடிவம் அளிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும் பஞ்சாயத்து அளவில் இவற்றை நிறைவேற்றும் பொறுப்பு உற்பத்தி யூனிட்டைச் சார்ந்ததாக இருக்கும்.

உள்ளூர் கிராமக் கூட்டுறவில் அதிக உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலமும், அதன் நிதி வசதிகளைப் பெருக்குவதன் மூலமும் அதைப் பலப்படுத்த உற்பத்தி யூனிட் பாடுபடவேண்டும். இதனால் கிராம உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற அதன் உறுப்பினர்களுக்குப் போதிய கடனும் மற்ற உதவிகளும் அளிக்க வழி ஏற்படும். அத்துடன், உற்பத்திப் பொருள்களைக் கூட்டுறவு மூலம் விற்பனை செய்யவும் அது உதவும். இதனால் நஷ்டம் தரத்தக்க விற்பனைகளைத் தவிர்க்கலாம்.

இத் திட்டத்தின் முக்கியப் பகுதி சிரமதானத்தின் மூலம் மக்கள் அளிக்க முன்வரும் உழைப்பினைத் தக்கவாறு பயன்படுத்துவதேயாகும். சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குச் சிரமதானத் தத்துவம் புதியதன்று சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் தொடக்கமே பணமாகவோ, பொருளாகவோ, உழைப்பாகவோ மக்கள் அளிக்கும் பங்கை வலியுறுத்துவதாகும். சரியான நிர்வாக அமைப்பு இருப்பதோடு, சமூகம் முழுவதும் முயற்சியில் ஈடுபட்டால்தான், சிரமதானத்தைச் சரியாகப் பயன்படுத்த முடியும். கிராம மக்கள் உடனடியாக அளிக்கக் கூடிய உழைப்பின் மூலம் சமுதாய முன்னேற்றத்தை நிலைநாட்டவும் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் கிராம அளவில் இத்தகைய நிர்வாக அமைப்பு வகை செய்யும். பாதுகாப்பு நடவடிக்கைகளில் அனைவரையும் முழுமனதுடன் ஈடுபடுத்தவும் இது வழி கோலும்.

ஒவ்வொரு நபரும் குறைந்தது மாதத்தில் ஒரு நாள் உழைப்பையாவது, அல்லது அதற்குச் சமமான பொருளுதவியையாவது இலவசமாக அளிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். நிலமில்லாத தொழிலாளர்கள் இதற்கு மேல் வேலை செய்தால், அவர்களுக்கு உள்ளூர் வீதத்தில் கூலி தரப்படும். கிராமத் தொழில் வினைஞர்கள் தங்கள் தொழில் முறைகளில் அவர்களது உழைப்பினை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டும். அதாவது, கருமான் மற்றச் தொழிலாளர்களைப்போல உடல் உழைப்பினை மட்டும் தரவேண்டும் என்பதில்லை. தனக்குத் தெரிந்த தொழில் முறையில் அவர் உதவலாம்.

மக்களில் பல்வேறு பிரிவினரிடமிருந்தும்தொடர்ச்சியாகப் பத்து நாட்களோ அல்லது அவற்றிற்கு மேலோ உழைப்பினைப் பெறப் பஞ்சாயத்து முயலவேண்டும். குறிப்பான விவசாய வேலைத் திட்டங்களை முடிப்பதற்காக அத்தகைய உழைப்பினை பயன்படுத்தலாம். கிராமத்தில் திட்டத்தைத் தொடங்கியதும் மேற்சொன்ன முறையில் உழைப்பினை இலவசமாக அளிக்கும்படி பஞ்சாயத்துக்கள் எல்லா மக்களுக்கும் வேண்டுகோள் விடவேண்டும். நன்கொடையாளர்கள் பெயர்களையும், அவர்கள் அளித்த உதவிகளையும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும். பதிவேட்டைப் பஞ்சாயத்துக்கள் முக்கியமான இடத்தில் வைத்திருக்கவேண்டும். பஞ்சாயத்துக்கள் வேலைத்திட்டங்களை ஆராய்ந்து, உழைப்பைப் பயன்படுத்தும் வகையில் தகுந்த திட்டங்களை உருவாக்கவேண்டும். வேலைத் திட்டங்கள், எடுத்துக்கொள்ள வேண்டிய மாதம், வேலை நடைபெறவேண்டிய இடங்கள், குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்யவேண்டிய நபர்கள் ஆகிய விவரங்களைத் திட்டம் குறிப்பிடவேண்டும். விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது மக்களது உழைப்பையும் கவனத்தையும் சமூக வேலைகளில் ஈடுபடுத்தாமல் தகுந்த காலங்களில் அவர்களது உழைப்பைப் பயன்படுத்தப் பஞ்சாயத்துக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வேலையின் முன்னேற்றம், உழைப்பு பயன்பட்ட அளவு ஆகியவற்றைப் பரிசிலனை செய்து, மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைகளையும், உழைப்புத் தேவைகளையும் பஞ்சாயத்து நிர்மானிக்கவேண்டும்.

**(ஆ) விளக்கப்பணி.**—போர் சம்பந்தமான சரியான தகவல்களை மக்களிடையே எடுத்துரைப்பதற்காக அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது விளக்கப் பணி யூனிட்டின் பொறுப்பாகும். வீண் வதந்திகளைத் தடுக்கவும், மக்களின் மன உறுதியைப் பாதுகாக்கவும் விளக்க வெளியீடுகள், மற்றுமுள்ள நூல்கள் ஆகியவற்றைச் சிவரப் பயன்படுத்துவதுபோன்ற பாதுகாப்பு முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். போர் நிலவரம்

ற்றிய அதிகார பூர்வமான தகவல்களைத் தெரிந்து கொள்ள அகில இந்திய ரேடியோ எற்ற கருவியாகும். அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பபடும் செய்திக் குறிப்புகள், போர் பற்றிய விசேஷ நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள எல்லா மக்களும் முடிந்தவரை கவனித்து வரவேண்டும். பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள ரேடியோ செட்டுகளில் விசேஷ நிகழ்ச்சிகளையும், செய்தி ஒலிபரப்புகளையும் கேட்கச் செய்யும் வகையில் கேட்பவர் குழுக்களை விளக்கப் பணி யூனிட்டு அமைக்க வேண்டும். ரேடியோ செட் இல்லாத கிராமங்களில் பொது இடத்தில் ஒரு ரேடியோ செட் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும். சரியான தகவல்களைப் பரப்புவதற்கு வட்டாரத் தகவல் நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், முதியோர் கல்வி நிலையங்கள், கிராம நூலகங்கள், கிராம வானொலிக் கருத்தரங்குகள், விவசாய சங்கங்கள், இளைஞர் சங்கங்கள் ஆகியவற்றைக் கிராமத் தொண்டர் படை பயன்படுத்தவேண்டும். கேட்பவர் குழுக்களை அமைத்து, யுத்த முயற்சி சம்பந்தமாக பத்திரிக்கைகள் மூலமும் யுத்த வெளியீடுகள் மூலமும் அரசாங்கம் வெளியிடும் செய்திகளைப் படிக்கவேண்டும். அவற்றை விளக்க வேண்டும். ஆசிரியர்களும் கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டுச் சிறந்த தொண்டாற்ற முடியும். விளக்கப்பணி யூனிட்டில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து கிராமங்களில் கேட்பவர் குழுக்களைக் கூட்டி, சீனர்களுக்கும் நமக்கும் உள்ள தகராறு பற்றிய விவரங்களையும், நமது எல்லையில் சீனர் செய்திருக்கும் அநியாய ஆக்கிரமிப்புப் பற்றிய விவரங்களையும், நம் பக்கம் உள்ள நியாயத்தையும் எடுத்து விளக்க வேண்டும்.

(இ) **கிராமப் பாதுகாப்பு.**—கிராமப் பாதுகாப்பு வேலைகள் தீ தடுப்புவேலை, முதல் உதவி, செய்திப் போக்குவரத்து லைன்களைப் பாதுகாத்தல் முதலிய வேலைகளைச் செய்ய வேண்டியது கிராமப்பாதுகாப்பு யூனிட்டின் பொறுப்பாகும். கிராமப்பாதுகாப்பு யூனிட்டுக்காக உடற்பயிற்சித் திட்டத்தைச் சாதாரண அளவில் மேற்கொள்ளலாம். இதனால் அதன் உறுப்பினர்கள் உடல் பலத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும், அவசியம் ஏற்படும்போது நாட்டுக்காகப் போரிடச் செல்லவும் எளிதாக இருக்கும். போர் முயற்சியில் பங்கு கொள்ளவும், கட்டுப்பாட்டுணர்வு பெறவும் தூண்டுதலாகவும் இது அமையும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி விவசாயிகள் மன்றங்கள், இளைஞர் மன்றங்கள், மாதர் சங்கங்கள் ஆகியன இந்த நெருக்கடிச் சமயத்தில் பணியாற்றுவதில் முக்கியமான இடம் பெறுகின்றன. இளைஞர் மன்றங்கள் மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் விளக்கப்பணி சம்பந்தமான வேலைகளில் பங்கு கொள்ளலாம். குறிப்பாக, ஜவான்களின் குடும்ப நலத்தை மாதர்சங்க உருப்பினர்கள் கவனிக்கலாம். கிராமப் பெண்களிடையே சரியான தகவல்களை எடுத்துரைக்கலாம். சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தலாம். போர் வீரர்களுக்கு தேவையான சாதாரண பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வேலைகளில் கிராமப் பெண்களை ஈடுபடுத்தலாம்.

கிராமத் தொண்டர் படையினருக்குப் பொதுவான அடையாளச் சின்னம் ஒன்று இருக்கவேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பொது லட்சிய நிறைவேற்றத்தில் தாங்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வைத் தொண்டர்களிடையே உருவாக்க இவை உதவும். அங்கத்தினர்கள் அணிந்து கொள்ள வேண்டிய பாட்ஜுகள் சிலவற்றை மாதிரிக்காக எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் அரசாங்கம் விரைவில் அனுப்பிவைக்கும். இவற்றை அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கலாம்.

**அமைப்பு— (i) பஞ்சாயத்து நிலையில்.**—பஞ்சாயத்து, கிராமத் தொண்டர் படையை அமைத்து அதற்கு வழி காட்டும். கிராமநிலையில் பாதுகாப்பு சம்பந்தமான திட்டங்களை அமுலாக்கி, அபிவிருத்தி செய்யும் பொது ஏஜன்சியாகப் பஞ்சாயத்து இருக்கும் கிராமத் தொண்டர் படை, தலைமைத் தொண்டர் ஒருவரின் பொறுப்பில் இருக்கும். பஞ்சாயத்துத் தலைவரே தலைமைத் தொண்டராக இருக்க முடியுமானால், ஆனால் வரவேற்கதக்கதாகும். எந்தக் காரணத்திலாவது அவர் தலைமைத் தொண்டராக இருக்க முடியாவிட்டால் பஞ்சாயத்து, யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை தலைமைத் தொண்டராக நியமிக்கலாம். உற்பத்தி, விளக்கப்பணி, கிராமப் பாதுகாப்பு ஆகிய மூன்று யூனிட்டுகளுக்கும் உடனடியாகப் பொறுப்பு ஏற்கும் நபர்களையும் பஞ்சாயத்து நியமிக்க வேண்டும். அப்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பணியைத் தலைமைத் தொண்டர் மேற்பார்வையிட்டு வழிகாட்டுவார், கிராமத் தொண்டர் படையை மேற்பார்வையிட்டு அதற்கு வழிகாட்டுவதற்காகப் பஞ்சாயத்து தன்னையே ஒரு அவசர காலக் கமிட்டியாக அமைத்துக் கொள்ளும். பஞ்சாயத்துத் தலைவர் அதன் தலைவராக இருப்பார்.

**(ii) வட்டார நிலையில்.**—வட்டார நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பொறுப்பேற்றுக்கொள்ளும். பல்வேறு பஞ்சாயத்துக்களிலும் உள்ள கிராம தொண்டர் படைகளுக்கு இடையே ஒரு வலுவான இணைப்பை ஏற்படுத்தும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிலையில் ஒரு இணைப்புக் கமிட்டி அமைக்கப்படும். ஒவ்வொரு கிராம சேவகர் வட்டத்திலிருந்தும் ஒருவர் என்ற விகிதத்தில் தலைமைத் தொண்டர்களும் பஞ்சாயத்து யூனியன் பொதுக் காரியக் கமிட்டி உறுப்பினர்களும் இந்த இணைப்புக் கமிட்டியில் இடம் பெறுவார்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர் இக் கமிட்டியின் தலைவராகவும், கமிஷனர் காரியதரிசியாகவும் இருப்பார்கள். பஞ்சாயத்துக்களிடையே வெளியீடுகள், துண்டறிக்கைகள், உத்தரவுகள் முதலியவற்றை உடனுக்குடன் விநியோகிப்பதும், பாதுகாப்பு சம்பந்தமான சரியான தகவல்களை எடுத்துரைப்பதும் இணைப்புக் கமிட்டியின் கடமையாகும்.



**(iii) மாவட்ட நிலையில்.**—கிராமத் தொண்டர் படையின் வலுவான இணைப்புப் பணிக்கு, மாவட்ட நிலையில் அபிவிருத்திக் கவுன்சில் பொறுப்பேற்கவேண்டும். தேசீய லட்சியங்களைக் கருத்திற் கொண்டு பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து, கிராமத் தொண்டர் படை ஆகியவை நிறைவேற்றவேண்டிய கடமைகளை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் தீர்மானிக்கும். குறிக்கோள்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு, திட்டங்களை அமுலாக்குவதற்கு உரிய காலங்களை நிர்ணயித்து, அவ்வப்போது இத்தகைய திட்டங்களின் முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்வதும் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலின் பொறுப்பாகும். பொதுவில், போதுமான மேற்பார்வையைக் கவுன்சில் மேற்கொள்ள வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலுக்கும், மாவட்ட நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான அமைப்புகளுக்கும் இடையே நெருக்கமான இணைப்பு இருக்க வேண்டும். இதை அடையும் வகையில், மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலின் பொதுக் காரிய நிரந்தரக் கமிட்டியைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அரசாங்க இலாக்காக்களுக்கும், மாவட்ட நிலையில் சிவில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கச் சார்பற்ற அமைப்புகளுக்கும் அவசியமான அளவுக்குப் பொதுக்காரிய நிரந்தரக் கமிட்டியில் பிரதி நித்துவம் அளிக்கப்படவேண்டும், மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் தலைவர் காரியதரிசி என்ற முறையில் முறையே கலெக்டரும், அவருடைய உதவியாளரும் (பஞ்சாயத்து அபிவிருத்தி) கிராமத் தொண்டர் படை சம்பந்தமான எல்லாப் பணிகளுக்கும் மாவட்ட நிலையில் பொறுப்பான அதிகாரிகள் ஆவர்.

**(iv) மாநில நிலையில்.**—மாநில நிலையில், நிதி அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், முதலமைச்சரைத் தலைவராகவும் கொண்ட மந்திரிசபை அவசரக் கமிட்டி, கிராமத் தொண்டர் படைத் திட்ட அமுலுக்குப் பொறுப்பு வகிக்கும். திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும், அமுலாக்குவதற்கும் பிரதம காரியதரிசி குறிப்பிட்ட கடமைகளை மேற்கொள்வார். இந்தப் பணியில் அவருக்குக் கிராம அபிவிருத்திக் கமிஷனர் உதவி செய்வார். அரசாங்க இலாக்காக்களுக்கும், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களுக்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு இருக்குமாறு பிரதம காரியதரிசி கவனித்துக்கொள்வார். தேசியத் திட்டத்தின் பரந்த திட்ட வரம்புக்கு உட்பட்டு, உற்பத்தித் திட்டத்தின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்கள் சம்பந்தமாகக் குறிப்பிட்ட லட்சியங்களையும், அவை நிறைவேறுவதற்கான கால அளவுகளையும் பிரதம காரியதரிசி குறிப்பிடுவார்.

**விசேஷ திட்டங்களின் ஒருங்கிணைப்பு.**—(i) தற்போது ராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் பணி, பிரதேச ரெக்ரூட்டிங் அமைப்புகளின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, இவை மாவட்டக் கலெக்டரோடு நெருக்கமான தொடர்பு கொண்டு செயல்படுகின்றன. ராணுவப்படை, பிரதேச ராணுவப்படை, தேசீய துப்பாக்கி சுடும் தொண்டர்படை முதலியவற்றிற்கு அதிகளவில் ஆட்களைச் சேர்ப்பதற்காக மாவட்டக் கலெக்டர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். தேசிய மாணவர் படை, மாணவர் உதவிப் படை ஆகியவை கல்லூரிகளுக்கும். பள்ளிகூடங்களுக்கும் ஆன திட்டங்கள். எல்லாம், இந்த அமைப்புகளின் பயிற்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும், முகாம் அமைப்பதற்கான இடங்கள், வழக்கமாகத் தங்குவதற்கான இடங்கள், கூடாரம் அமைத்தல் முதலான வசதிகளைச் செய்து தருவதற்கும், அவற்றின் சமூக சேவை முகாம்கள் சம்பந்தப்பட்ட பணிகளுக்குப் பொதுவாக உதவி செய்வதற்கும் அபிவிருத்தி வட்டாரமானது தலஅலககாக் கருதப்படும்.

(ii) நாடு முழுவதிலும் மாவட்ட நிலை வரையில் சிவில் பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிவில் பாதுகாப்பு ஊர்க்காவல் படையும். ஏ.ஆர்.பி. திட்டமும் இந்த அமைப்பின் பொறுப்பில் இருக்கும். மாவட்ட நிலையில் சிவில் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த மாவட்டக் குழுக்கள் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலோடு நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றும். வட்டார நிலையில் கிராமப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கி, ஒருங்கிணைத்து வளர்ச்சிபெறச் செய்யும் ஏஜன்சியாகப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் இருக்கும். பஞ்சாயத்து யூனியன் நிலையில், கிராமப் பாதுகாப்புக்குப் பொறுப்புள்ள அதிகாரியாகப் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியையாவது, அல்லது கல்வி விஸ்தரிப்பு அதிகாரியையாவது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நியமிக்கும். கிராம நிலையில், கிராமப் பாதுகாப்புத்திட்டத்தை அமுலாக்கும் நிர்வாகப் பொறுப்பு பஞ்சாயத்துக்கு இருக்கும்.

(iii) பஞ்சாயத்து யூனியன்களில் அதிகக் கிராம வானொலி கருத்தரங்குகளை ஏற்படுத்த வேண்டும். இதில் கல்வி விஸ்தரிப்பு அதிகாரி மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்.

(iv) பாரத சாரணர் சங்கம் தனது திட்டத்தை விஸ்தரிக்க (12—18 வயது) உத்தேசித்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் நிலையில் இத்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு, கல்வி விஸ்தரிப்பு அதிகாரியைச் சார்ந்ததாக இருக்கும். கிராம நிலையில், சாரணர்ச படை உருவாகப் பஞ்சாயத்து உதவி செய்யும். இவ்வாறே 9 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான தேசிய ஒழுங்குமுறைத் திட்டத்தை விஸ்தரிக்க இந்திய அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்பொழுது, வட்டார நிலையில் திட்டத்தின் பொறுப்பு கல்வி அதிகாரியிடம் விஸ்தரிப்பு ஒப்படைக்கப்படும்.

**பயிற்சி.**—கிராமத் தொண்டர் படை மூலமாகச் சக்தியை வலுவான முறையில் ஒன்று திரட்ட, கிராமப் பாதுகாப்பு, தேகப்பயிற்சி, உடற்பயிற்சி முதலுதவி, சுகாதாரம் முதலான பல்வேறு துறைகளில் அலுவலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டியது அவசியம். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் விஷயம், அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இது சம்பந்தமான உத்தரவுகள் விரைவில் பிரப்பிக்கப்படும்.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2793]

## தேசிய நெருக்கடி நிலை—காரோட்டிகளுக்குப் பயிற்சி—பஞ்சாயத்து யூனியன்களின் ஒத்துழைப்பு

**[National Emergency—Light duty vehicles and Heavy duty vehicle—Scheme for drivers training—Association of Panchayat Unions—Regarding]**

**Memorandum No. 235996 R. D. & L. A. Dated 22—11—1962**

தொழில்—தொழிலாளர்—கூட்டுறவுத் துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 5643-ல் (ஆணையின் பிரதி ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது) சிவில். தேவைகள் உட்பட தேசியத் தேவைகளுக்குத் தயாராக இருக்கத் தக்கவகையில் காரோட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், வரைவறுக்கப்பட்ட அளவினருக்கு, இலேசான ரக வண்டிகளை (Light duty vehicles) ஓட்டுவதற்கான, பயிற்சியளிக்க அரசாங்கம் வகை செய்துள்ளது. மாவட்டங்களில், தொழில்-வர்த்தகத்துறையின் (Industries and Commerce Department) 19 தொழிற் பயிற்சி நிலையங்களிலும், சென்னை நகரில், தமிழ்நாடு போக்குவரவுத் துறையிலும் (Madras State Transport Department) இந்தப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியில், 20 பயிற்சியாளர் என்ற வீதத்தில் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு தொகுதிக்கும் பயிற்சிக்காலம் ஒரு மாதமாகும். பஞ்சாயத்து யூனியன்கள் இந்தத் தேசிய முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில், இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் அனுப்பிவைக்கும் பயிற்சியாளருக்கு, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு இடம் வீதம் ஒதுக்கப் பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பிவைக்கப்படும் பயிற்சியாளர், மேற்படி ஆணை (ஆணை எண் 5643)—யின் இணைப்பில், 5-வது பாராவில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி, தகுதியுள்ளவராக இருக்கவேண்டும். பயிற்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் பணியை பஞ்சாயத்து யூனியன்கள், தம் நியமனக்குழுக்களைக் கலந்தாலோசித்து செய்ய அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களினால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பயிற்சியாளர்களும் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் தேதிக்குள் சம்பந்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் முன் ஆஜராகவேண்டும்.

3. மாதமொன்றுக்கு ஒரு பயிற்சியாளர் வீதம் குறித்த தகுதிகளையுடைய பயிற்சியாளர்களை நியமனக்குழுவைக் கலந்து, தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்கள் அவசர நிலையில், தேசியப் பணியில் ஈடுபடத் தக்கவர்களாகவும், விரும்புகிறவர்களாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் கடமையாகும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்கள் இந்த அறிக்கையின் இணைப்பில் குறித்தபடி சம்பந்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களின் முதல்வர்களின் முன் ஆஜராகவேண்டுமென்று அறிவிக்கப்படவேண்டும்.

5. பஞ்சாயத்து யூனியன்கள் தேர்ந்தெடுக்கும் பயிற்சியாளர்களுக்கு ஏதாவது பயிற்சி உதவித் தொகை அளிக்க வேண்டுமா என்கின்ற பிரச்சினையை அரசாங்கம் பரிசீலனை செய்தது. கிராமப் புறங்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிபெற வருகின்ற பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் தங்கியிருக்க இட வசதியும், உணவு வசதியும் வேண்டியிருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதற்கு அவர்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும். மாநில நிதியிலிருந்து எந்த உதவி நிதியும் வழங்க அரசாங்கம் வகை செய்யவில்லை. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்கள், ஒரு பயிற்சியாளருக்கு, பயிற்சிக் காலத்துக்கு 30 ரூபாய்க்கு மேற்படாமல் பயிற்சி உதவித் தொகை வழங்கலாம் என்று அரசாங்கம் அனுமதித்துள்ளது. இதன்படி; பஞ்சாயத்து யூனியன்கள், ஒரு முழு ஆண்டுக்கு, 12 பயிற்சியாளருக்கு 360 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு செய்ய அனுமதிக்கப்படுகின்றன. இந்தச் செலவுகள் பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து செய்யப்படும்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 235996.)

## முக்கிய பண்டிகைகளுக்கு முன்னர் பஞ்சாயத்துப் பணியாளர்க்கும் பஞ்சாயத்து யூனியன் மன்றப் பணியாளர்க்கும் சம்பளத்தில் முன்பணம் வழங்கும் திட்டத்தை 1963-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்துதல்

[Advance—Advance of Pay to Employees of Panchayats and Panchayat Union Councils on. the eve of important festivals—Continuance of Scheme during 1963—Orders issued.]

*Memorandum No. 261500, R.D. & L.A., dated 28th December, 1962.*

நிதித்துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை * 1455-ன் பிரதிகள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், நகரப் பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகள் ஆகிய எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(கிராம நல—தலநிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 261500.)

* இவ்வாணையின் சுருக்கம் அடுத்து தரப்பட்டிருக்கிறது. *



## முக்கிய பண்டிகைகளுக்கு முன்னர் மாநில அரசாங்க அரசிதழ் பதிவுபெறு ஊழியர்களுக்கு சம்பளத்தில் முன்பணம் வழங்கும் திட்டத்தை 1963—ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்துதல்

**(Advances—Advance of pay to State Non-Gazetted Government Servants on the eve of important festivals—Continuance of the scheme during the Calandar Year 1963**

**G.O. No. 1455, Finance Department, Dated 10—12—62.**

அரசிதழ் பதிவு பெறு மாநில அரசாங்க ஊழியர்கள், தொழில் நிறுவனங்களின் (Industrial Establishments) பயிற்சி பெற்ற ஊழியர்கள் (Skilled workers) மாதாந்தர சம்பளம் அல்லது கூலிகள் பெறும் பணியாளர்கள் பயிற்சி பெற்றோர், பயிற்சி பெறுவோர், சிறு செலவுத் தொகை ஊதியம் பெறுவோர், வேலை நிதி ஊதியம் பெறுவோர் உட்பட) கடை நிலைப் பணிப் பிரிவு ஊழியர்கள் ஆகியோருக்கு முக்கியப் பண்டிகைகளுக்கு முன்னால் திருப்பிப் பெறத் தக்க முன்பணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது இத் திட்டத்தின், நிதித் துறையின் 1951-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1461-ல் கடைசி முறையாக, 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது நிதித் துறையின் 1956-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1675-ல் அனுமதிக்கப்பட்ட பண்டிகை முன்பணம் வழங்கும் திட்டத்தை வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, திருத்தப்பட்டபடி, 1963—ம் ஆண்டுக்கும் காலவரையறையை நீட்டித்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

### இணைப்பின் சுருக்கம்

பண்டிகை முன்பணம், பணியிலுள்ள ஒவ்வொரு சமயத்தினருக்குக், கீழ்க்கண்ட முறைப்படி ஓராண்டில் ஒரு முறைதான் அனுமதிக்கப்படும்.

(a) இந்துக்களுக்கு தீபாவளி அல்லது பொங்கல்.

(b) முஸ்லீம்களுக்கு ரம்ஜான் அல்லது பக்ரீத் அல்லது மீலடி நபி.

(c) கிருஸ்த்தவர்களுக்கு ஈஸ்டர் அல்லது கிருஸ்துமஸ்.

அரசாங்க ஊழியர் விருப்பத்துக் கிணங்க, மலையாளி இந்துக்களுக்கு, தீபாவளி அல்லது பொங்கலுக்குப் பதிலாக, ஓணம் பண்டிகை எந்தத் துறையின் எந்த உறுப்பினருக்கும் ஓராண்டில், இந்த முன்பணம், ஒன்றுக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டாது.

முன் பணம் வாங்கும் போது வேலையில் இருந்துவரும் அல்லது சராசரி சம்பளம் பெற்று விடு முறையில் இருக்கும் அல்லது முழுச்சம்பளம் பெற்று சேமிப்பு விடு முறையில் (Earned leave) இருக்கும் ஊழியர்களுக்கு முன்பணம் அனுமதிக்கப்படுகிறது. வேலையிலிருந்து தற்காலிக நீக்கம் (Suspension) செய்யப்பட்டுள்ள அரசாங்க ஊழியர் இந்த முன்பணம் பெறத் தகுதியுடையவரல்லர்.

அடிப்படை மாதச் சம்பளம் 500 ரூபாய்க்கு மேற்படாத எல்லா அரசிதழ் பதிவு பெறு ஊழியர்களும், இப் பண்டிகை முன்பணம் பெறத் தகுதியுடையவராவர். திருத்தப்பட்ட சம்பள வீதத்தில், அடிப்படை சம்பளத்தில் ஒன்றரை மாதச் சம்பளம் அல்லது 120 ரூபாய் இவற்றுள் எது குறைவோ அதுவே பண்டிகை முன்பணத் தொகையாக அளிக்கப்படும்.

இந்த முன்பணத் தொகைகள், பண்டிகைக்கு முன்னர் பெற்று விநியோகிக்கப்படவேண்டும். பண்டிகைக்கு முன் இரண்டு வாரங்களில் இந்தத் தொகைப் பெறப்படலாம்.

இந்த முன்பணத்தொகை, அரசாங்க ஊழியரின் சம்பளங்களிலிருந்து, பத்து. சம மாதத்தவணைகளாக கட்டாயமாகப் படிக்கப்பட்டு திரும்பப் பெறப்படும். முன் பணம் வாங்கியதற்கு அடுத்து வாங்கப்படும் சம்பளத்திலேயே இந்தப் பிடிப்பு தொடங்கப்படும். மாதத்தின் 16-ம் தேதி அல்லது அதற்குப் பின் பண்டிகை வருவதாயிருந்தால், முன்பணப் பிடிப்பு, பண்டிகை வந்த மாதச் சம்பளத்திற்கு அடுத்த மாதச் சம்பளத்திலிருந்து தொடங்கப்படும். இந்தப் பிடிப்புகள் அலுவலகத் தலைவரால் ஒரு தனி பதிவேடு வைத்திருப்பதன் மூலம் கண்காணித்து வரப்படவேண்டும்.

எந்த அரசாங்க ஊழியருக்கும். அவர் ஏற்கெனவே வாங்கியுள்ள பண்டிகை முன் பணத்தின் எந்தப் பகுதியேனும் திருப்பிப் பெறப்படாத வரையில், மேலும் முன்பணம் வழங்கப்படமாட்டாது.

முன்பணம் செலுத்தும் மாதத்திற்குப் பின்னர் குறைந்தபட்சம் ஆறு மாதங்களேனும் தொடர்ந்து பணி புரியும் வாய்ப்பில்லாத தொழில் நிறுவனங்களின் ஊழியர்கள் தற்காலிகப் பணியாளர்கள் முதலானோருக்கு இந்த முன்பணம் வழங்கப்படமாட்டாது.

தலஸ்தாபனங்கள் விரும்பினால் சம்பந்தப்பட்ட தலஸ்தாபனங்களின் பொருளாதார நிலை இந்த முறையில் முன்பணம் வழங்க அனுமதிக்குமானால். அவற்றின் பணியாளர்கள் இந்த முன்பணத்தொகை அனுமதிக்கப்படலாம்.

(நிதித்துறையின் (செலவுகள்-A-பிரிவு) 10—12—'62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1455ன் சுருக்கம்)

## தேசிய நெருக்கடி நிலை—கிராமத் தொண்டர் படை அமைப்பு.
## [National Emergency—Formation of Village Volunteer Force—Regarding.]
### (D. O. No. 46, dated 2nd January 1963.)

நமது மாநிலத்தின் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 'கிராமத் தொண்டர்படை' அமைப்பது குறித்து வெளியிடப்பட்டுள்ள கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை : 2793-ன் பிரதி இந்த நேரத்தில் உங்களுக்குக் கிடைத்திருக்கும். நீங்கள் அந்த ஆணையைக் கவனமாகப் படித்து, 'கிராமத் தொண்டர் படை' அமைப்பு குறித்து தெளிவுபெற்றிருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்தத் திட்டம் 1963—ஜனவரி 26—குடியரசு தினத்தன்று தொடங்கப்பட வேண்டுமென்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

2. 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5 தேதிக்கு முன்னர், ஒருநாளில் ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றமும்கூடி, இந்தத் திட்டமிற்கான ஒரு வரைவும், விரிவான செயல் திட்டமும் தயாரித்து ,பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் அதைப் பின்பற்றிச் செயல்பட சிபாரிசு செய்யவேண்டும் என்று ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இத்திட்டத்தின் வரைவு குறித்து ஆராயவும் தனக்கென ஒரு செயல் திட்டம் அமைத்துக்கொள்ளவும்வேண்டும் என்றும் ஆணையில் கூறப்பட்டிருக்கிறது. எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களும் 1963 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1..-ம் தேதி அளவில் தம் கூடடத்தை நடத்திவிட வேண்டும். அதன்பின்னர் பஞ்சாயத்துக்களும் சிறப்புக் கூட்டங்களை நடத்தி பஞ்சாயத்துக் கிராமத்துக்கான செயல் திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

3. பெரும்பான்மையான மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி அளவில், தம் கூட்டத்தை நடத்திவிட்டிருக்கும். சில தவிர்க்க முடியாத காரணங்களால், சில மன்றங்கள் 5 தேதிக்கு முன்னர் கூட்டம் நடத்த முடியாத நிலை இருக்கலாம்; எவ்வாறாயினும், இது விஷயத்தைப் பற்றி ஆராய 5 தேதிக்குப் பிறகு உடனடியாக கூட்டம் நடத்தப்படவேண்டும். அதேபோன்று; எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், 1963-ம் ஆண்டு ஜனவரி 11-ம் தேதிக்கு முன்னர் இதுபற்றிய கூட்டங்களை நடத்த வேண்டியது அவசியமாகும். அவ்வாறு கூட்டம் நடத்துவது, பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்களான எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இத் திட்டத்தைப் புரிந்துகொண்டு, அரசாங்க ஆணையில் குறிப்பிட்டுள்ள முறைப்படி, தத்தம் பஞ்சாயத்துக்களைக் கூட்டிச் செயல்பட வசதியாக இருக்கும். ஆகவே, உங்களுடைய பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை, உடனடியாக, எந்த வகையிலும் 1933-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் தேதி அளவில் நடத்துமபடி கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

(கையொப்பம்)

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி.
செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை–9.

## தேசிய நெருக்கடி நிலை—'கிராமத் தொண்டர் படை' அமைப்பு—உறுப்பினர்க்கு 'அணி வில்லைகள்' வழங்குதல் பற்றிய விளக்கம்.
## [National Emergency—Formation of Village Volunteer Force—Supply of Badges to members—Instructions—Is ued.]
### (Memorandum No. 3843, R. D. & L. A., dated 7th January 1963.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2793-ல் கிராமத் தொண்டர் படை அமைப்பு குறித்து விளக்கப்பட்டுள்ளது. அதில், கிராமத் தொண்டர் படையினர் தாம் ஒரே குறிக்கோளுக்காக, ஒன்றுபட்டவர்கள் என்று உணரத்தக்க வகையில், பொதுவகன 'அணி வில்லைகள்' ( Common insignia ) அணியவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக, அணி வில்லைகளின் மாதிரியை, அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அனுப்பி வைக்கிறது. அதுபோல், அச்சிட்டு, உறுப்பினர்க்கு வழங்கப்படவேண்டும். 'இந்திய அரசாங்கம், அணிவில்லையின் அமைப்புப்படம் ஒன்றை சிபாரிசு செய்துள்ளது. மாநில அரசாங்கம், அந்த அமைப்புப் படத்தை ஒப்புக்கொண்டது. அணிவில்லை, வட்டவடிவமாக, இந்தியாவின் படமும், தேசியக் கொடியும் நடுவில் பொறிக்கப்பட்டு இருக்கும். "கிராமத் தொண்டர் படை" என்ற சொற்களும் "ஜெய் ஹிந்த்" என்ற சொற்களும் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கும். அமைப்புப் படம், வெள்ளைக் கதர்த்துணியில் பச்சைக் கரையுடன் அச்சிடப்படும். கிராமத தொண்டர் படை உறுப்பினர்க்குத் தேவையான, பெருமளவுக்கு, ஒரே மாதிரியாகத் தயாரிப்பதற்காக அரசாங்கம், அந்த வேலையை மாநில கதர் கிராமத் தொழில் போர்டிடம் ஒப்படைத்திருக்கிறது. மாநில கதர்-கிராமத் தொழில் போர்டு, சுமார் 5,00,000 அணி



வில்லைகளைத் தயாரிக்கும். ஒரு வில்லையின் விலை இருபத்தைந்து புதுக் காசுகளாகும்.

2. அணிவில்லைகளை வழங்குவதற்கு ஆகும் செலவுகளை ஈடு செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்தது. 'கிராமத் தொண்டர் படை' அணிவில்லைகளை வழங்குவதற்காகும் செலவை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள், தம் நிதியிலிருந்து ஈடுசெய்ய வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. அதன்படி பஞ்சாயத்துக்கள், தம் நிதியிலிருந்து வில்லைகளுக்காகச் செலவு செய்ய அரசாங்கம் அமைதி வழங்குகிறது.

3. மாநில கதர்-கிராமத் தொழில் போர்டு தயாரிக்கும் அணிவில்லைகள், மாவட்டக் கதர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பஞ்சாயத்துக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தங்கள் எல்லைக்குட்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு எத்தனை வில்லைகள் தேவை என்று அளித்து, அவற்றுக்கான தேவைப் பட்டியலை ( Indent ) சம்பந்தப்பட்ட மாவட்டக் கதர் அதிகாரிக்கு அனுப்பிப் பெறவேண்டும். பஞ்சாயத்துக்களும், எத்தனை வில்லைகள் தமக்குத் தேவை என்பதையும், அதற்காகத் தம் நிதியிலிருந்து செலவு செய்ய ஒப்புக்கொண்டும், இது விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அதிகாரம் அளித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டும்.

4. மாவட்டக் கதர் அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களிடமிருந்து தேவைப் பட்டியல்களைப் பெற்றதும், அவர்களுக்கு எத்தனை வில்லைகள் தேவையோ அத்தனை அனுப்பி வைப்பார். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அணிவில்லைகள் வந்து சேர்ந்ததும், அவற்றைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு விநியோகிக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த விநியோக வேலை, குடியரசு தினத்துக்கு (1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-க்கு) முன்னதாகவே முடிந்துவிடவேண்டும். அப்பொழுதுதான், குடியரசு தினத்தில் உறுப்பினர்கள் அவற்றை அணிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

5. மாவட்டக் கதர் அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு, அணிவில்லைகள் அனுப்பும் பொழுது அவற்றுடன் விலைப் பட்டியலையும் (Invoice) அனுப்புவர். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அணிவில்லை விநியோகிக்க ஆகும் செலவு, முதலில், பஞ்சாயத்து யூனியனின் பொது நிதியிலிருந்து எடுத்து செய்யப்பட்டு, பின்னர் பஞ்சாயத்துக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கணக்கு வைப்பு முறை பற்றிய பிற விளக்கங்கள் தனியே வெளியிடப்படும்.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963–ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண்: 3846.]

## கிராமத் தொண்டர் படை—துவக்க விழா விளக்கம்

ஜனவரி மாதம் 26-தேதி எல்லா பஞ்சாயத்துக்களிலும் கிராமத் தொண்டர் படை சம்பந்தமான வேலைத் திட்டம் ஆரம்பிக்க வேண்டியிருக்கிற விவரங்களைத் தாங்கள் அறிவீர்கள்.

26உ. செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சில குறிப்புகள் கொடுக்க விரும்புகிறேன்.

1. ஒவ்வொரு பஞ்சாயத்து கிராமத்திலும் ஊர் மக்கள் கூடுவதற்குச் சௌகரியமான ஒரு பொது இடத்தை தேர்ந்தெடுத்து அந்த இடத்தை முன் தினமே சுத்தம் செய்து ஊர் மக்கள் உட்காருவதற்கு ஏற்ற முறையில் தயார் செய்துவைக்க வேண்டும்.

2. அன்று குடியரசு தினமாக இருப்பதால் குடியரசு தினத்தன்று கிராமத்தில் செய்ய வேண்டிய அலங்காரங்கள்—அதாவது தெருக்களில் தோரணங்கள் கட்டுவது முதலியன—செய்வதற்கான முன்னேற்பாடு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

3. கூட்டம் 9 மணிக்குள்ளாக ஆரம்பிக்க வேண்டியிருக்குமாதலால் முதல் நாள் இரவே ஊரிலுள்ளவர்களுக்கு இந்தக் கூட்டத்தைப் பற்றிய விவரங்களைச் சொல்லி வைக்கவேண்டும்.

4. ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆசிரியர்கள் (பள்ளிக் குழந்தைகள் உட்பட) முதலிய அனைவரும் ஊர்வலமாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ஊர்வலம் கூட்டம் நடக்கிற இடத்தில் கூட்டம் ஆரம்பிப்பதற்கு பதினைந்து நிமிஷங்களுக்கு முன்னதாகவே வந்து சேரவேண்டும். அப்படியானால் காலை 8 மணிக்கே ஊர்வலம் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கும்.

5. பொதுக்கூட்டத்திற்கு யார் தலைமை வகிப்பது என்று பஞ்சாயத்து முன்கூட்டியே தீர்மானித்திருக்க வேண்டும். தலைவருடைய பிரசங்கத்தில் என்னென்ன விஷயங்களைப்பற்றி அவர் பேச வேண்டும் என்பதற்கான குறிப்புகளை முன்னதாகவே தயாரித்து கொடுப்பது நல்லது. கூட்டம் நடைபெறும் இடத்தில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு—இவர்களுடை திருவுருவப் படங்களை நன்கு அலங்கரித்து கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் தெரியும்படியான ஓரிடத்தில் வைப்பது உசிதம்.

6. கொடிக் கம்பமும், தேசியக் கொடியும் நல்ல முறையில் இருப்பதற்குரிய ஏற்பாடுகளையும் இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே செய்து வைத்திருக்க வேண்டும். தேசிய கொடி புதிதாய் முறைப்படி தயார் செய்யப்பட்டதாய் இருக்கவேண்டும். கொடி ஏற்றுவது யார் என்று முன்னதாகவே நிச்சயித்து கொடிக் கம்பத்தின் கீழிருந்து எந்த முறையில் கொடி ஏற்ற வேண்டும். கொடிக்கு

எப்படி வணக்கம் செய்ய வேண்டும் என்ற விஷயங்களை யெல்லாம் கவனிக்க வேண்டும். கொடி வணக்கம் பாட்டு பள்ளிப் பிள்ளைகளைக் கொண்டே பாடுவதற்கேற்ற வகையில் தயார் செய்து வைப்பது நல்லது.

7. 26-ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கிராமத் தொண்டர் படையை ஆரம்பித்து வானொலியில் பேசுவார்கள். அதைத் தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களும் வானொலியில் பேசுவார்கள். ஆதலின் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் வானொலிப் பெட்டிகள் நல்ல முறையில் வேலை செய்வதற்குரிய ஏற்பாட்டையும் முன்னதாகவே கவனித்து வைத்திருக்க வேண்டும். அந்த வானொலிப் பெட்டி கூட்டம் நடக்கும் இடத்தில் இருப்பதற்கான ஏற்பாடும் செய்யப்பட வேண்டும்.

8. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு இறைவணக்கம் யார் பாடுவது, என்ன பாடல் என்பதையும் தேர்ந்தெடுத்து வைத்துக்கொள்வது நல்லது. இங்கிருந்து அனுப்பப் பட்டுள்ளதும், கிராமவாசிகள் எடுத்துக்கொள்ள வேண்டியதுமான பிரதிக்ஞைப் பத்திரத்தை ஒருவர் படிக்க வேண்டியிருக்கும். அதைக் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து பின்னால் சொல்ல வேண்டியிருக்கும். ஆதலின் அந்தப் பிரதிக்ஞையைப் படிப்பவர் யார் என்பதை முன்கூட்டியே தேர்ந்தெடுத்து அவர் இந்தப் பிரதிக்ஞைப் பத்திரத்தில் கண்ட விஷயத்தை நல்ல முறையில் சொல்வதற்கு முன்னதாகவே கொஞ்சம் பயிற்சி கொடுத்து வைப்பது நல்லது.

9. கூட்டம் முடியும் தருவாயில் எல்லோரும் எழுந்து நின்று நல்ல முறையில் "ஜனகணமன" தேசிய கீதம் பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமாதலின் இதைப் பற்றியும் முன்னதாகவே யோசித்து பள்ளிக்கூடத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள்—இவர்களைக்கொண்டு இந்த விஷயம் கவனிக்கப்பட வேண்டும்.

10. மேலே சொன்ன இந்த வேலைகளை ஒவ்வொரு கிராம சேவகரும் தன்னுடைய குருப்பில் உள்ள பஞ்சாயத்துக்களில் சரியாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்வது நல்லது. ஆதலின் கிராம சேவகர்கள் கிராமங்களுக்கு நேரில் சென்று பஞ்சாயத்து போர்டு தலைவர்களைக் கண்டு பேசி குடியரசு தினத்தன்று நடைபெற வேண்டிய விஷயங்களைப்பற்றி முன்கூட்டியே யோசித்து அதற்கான ஏற்பாடு கிராம சேவகர்கள் கவனிக்கவேண்டும்.

எல்லா பஞ்சாயத்துக்களிலும் குடியரசு தினத்தன்று நடைபெறவேண்டிய ஏற்பாடுகள் சரியான முறையில் செய்து இருக்கிறார்களா என்பதைத் தாங்களும், சௌகரியப்பட்டால் பஞ்சாயத்து யூனியன் சேர்மனும், இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் நேரில் சென்று பஞ்சாயத்துத் தலைவர்களை நேரில் பார்த்துப் பேசி குடியரசு தினத்தன்று கூட்டம் நல்ல முறையில் நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

இந்த தினத்திற்காகப் பஞ்சாயத்துகள் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றித் தனியாக உத்தரவு விரைவில் அனுப்பப்படும். ஆரம்பர செலவுகள் எதுவுமில்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இந்தக் கிராமத் தொண்டர் படை வேலைத் திட்ட சம்பந்தமாகச் செய்யவிருக்கும் வேலைகள் என்ன என்பதை அந்தந்த பஞ்சாயத்து முன்னதாகவே கூடி யோசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அந்த ஏற்பாட்டின்படி 26-ல் குறிப்பிட்ட வேலைகளில் ஏதாவது ஒன்று ஆரம்பித்து வைக்கப்படுவது நல்லது. இந்தத் திட்டத்தைக் கிராமத்திலுள்ள ஆண்கள், பெண்கள், படித்தவர்கள், படியாதவர்கள் எல்லோரும் நன்கு மனதில் புரிந்து கொள்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்வதற்கு இப்போதிருந்தே தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

26-ம் தேதி குடியரசு தினத்தன்று குறிப்பிட்டுள்ள வேலைகளைக் கவனிப்பதுடன் அன்று காலை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அலுவலகத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் சென்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதுடன் இந்தக் கூட்டம் நடப்பதற்கான வேலைகளில் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு உதவி செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். காரியாலயத்தின் பிரதிநிதியாக அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்பவர்கள் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் விளக்கிச் சொல்வதற்கு முன்னதாகவே ஏற்பாடு செய்து வைத்துக்கொள்வது நல்லது. நம்முடைய ராஜ்ய சர்க்கார் தயாரித்திருக்கும் கிராமத் தொண்டர் படை வேலைத் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைச் சேர்ந்த விஸ்தரிப்பு அதிகாரிகள், கிராமசேவகர்கள், குமாஸ்தாக்கள் முதலிய எல்லோரும் கூடி விவாதித்து இந்தத் திட்டத்தைப்பற்றி நன்கு விளக்கம் பெறுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் 21 வயதிலிருந்து 40 வயதிற்குள்ளாக உள்ள கிராமவாசிகளின் பெயர்ப் பட்டியலை முன்னதாகவே கிராமசேவகர்கள் தயாரித்து வைத்துக்கொள்ளும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். இவர்கள் அனைவரும் அவசியம் கூட்டத்தின் போது வந்து பிரதிக்ஞை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் அணிவதற்கு அவசியமான 'பேட்ஜ்' சம்பந்தமான விவரங்கள் தனியாக இங்கிருந்து அறிவிக்கப்படும்.

குடியரசு தின சம்பந்தமாகத் தாங்கள் செய்த முன்னேற்பாடுகளைப் பற்றியும், அத்தினத்தில் நடந்த விழாவைப் பற்றியும் பிப்ரவரி 1-ஆம் தேதிக்குள் எனக்கு எழுதியனுப்பவும்.

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

கிராம அபிவிருத்திக் கமிஷனரின், 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் தேதிய நே.க. எண் 7-63



## கிராம வேலைகள் திட்டம்—அங்கீகரிக்கப்பட்ட வேலைகளில் சேராத வேலைகளை எடுத்துச்செய்வது குறித்த ஆலோசனைகள்

## —Village Works Programme—Works other than those falling under approved categories—

*Memorandum No. 142255, R.D. & L.A., dated 2nd January* 1963

திருநெல்வேலி தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி கூட்டத்தில், கிராம வேலைகள் திட்டத்தின்கீழ், மாதர்-குழந்தைகள் நல நிலையங்களுக்குக் கட்டிடங்கள், சாக்கடை வடிகால் வேலைகள் ஆகியவற்றை எடுத்துச் செய்ய அனுமதி கோரி, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பிரதிகளை, திருநெல்வேலிக் கலெக்டர் தம்முடைய 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதிய கடிதத்துடன் அனுப்பிவைத்துள்ளார். மே மாதத்தில் உதகையிலும், நவம்பர் மாதத்தில் சென்னையிலும் கூடிய நிர்வாகவும் கட்டு வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் இத்தகைய ஆலோசனைகளும், கோயமுத்தூர் மாவட்டத்தில் தடுக்கச் சுவர் (Retaining Wall) கட்டும் வேலையை எடுத்துச் செய்யலாம் என்ற ஆலோசனையும் கூறப்பட்டன.

2. அரசாங்கம் இந்த ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து, சாக்கடை வடிகால் வேலைகளை, சில விதிமுறைகளுக்குட்பட்டு, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய அனுமதித்து, கிராமநல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2508-ல் ஏற்கெனவே ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

3. கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் உள்ள நிதி வசதிகளை, மாதர், குழந்தைகள் நல நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டவும், தடுப்புச் சுவர்கள் எழுப்பவும் பயன்படுத்துவது பற்றிய ஆலோசனையைப் பொருத்தமட்டில், அந்த ஆலோசனைகள் ஒப்புக் கொள்ளப்படமாட்டா என்று எல்லா கிராமிய மாவட்ட கலெக்டர்களும், சம்பந்தப்பட்ட மற்ற எல்லா அதிகாரிகளும் அறிவிக்கப்படுகின்றனர். ஏனெனில், கிராம வேலைகள் மானியத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி வசதிகள், கிராமிய நீர்வழங்கு வேலை, இணைப்புப் பாதைகள் ஆகிய கிராமப் பகுதிகளின் முக்கிய தேவைகளுக்கு ஓரளவுக்குப் போதுமானதாக உள்ளது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 19 2-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2531, 9-வது பாராவில் பிறப்பித்துள்ள ஆணைகளின்படி "யுக்தானுசாரமன வேலைகள் மானியத்தின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள் மாதர், குழந்தைகள் நல நிலையக் கட்டிடங்களைக் கட்டுதல், தடுப்புச் சுவர்களைக் கட்டுதல் ஆகிய வேலைகளை எடுத்துச் செய்ய பயன் படுத்தலாம்.

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 142255.

---

## விவசாயம்—கிராம நிலைப் பணியாளர்கள், கிராமங்கள் ஆகியோரிடையே பரிசுப் போட்டி

## [Agriculture—Prize competition among Village level Workers and Villages—Competition during 1962-63.]

**(Memorandum No. 35561, R. D. & L. A., dated 2nd January 1963.)**

கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 118-ல், கிராம நிலைப் பணியாளர்களிடையே, உண்மையில் பாராட்டத்தக்க பணியினை ஊக்குவிக்கும் வகையில், 1959-60 ஆண்டில், ஒரு பரிசுப்போட்டித் திட்டத்தை நடத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 119-ல், கிராமங்களிடையே இத்தகையதொரு பரிசுப் போட்டியை, 1959–60-ம் ஆண்டில்நடத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. கிராம நிலைப் பணியாளர்களின் உண்மையான வேலையை அளந்தறிவதற்கு வரையறுக்கப்பட்ட அடைப்படை திருப்திகரமானதாக இல்லை என்று, வெளியிடப்பட்ட முடிவுகளிலிருந்து தெரிகிறது. கிராமநிலைப் பணியாளர்கள் பாராட்டப்படக் காரணமாக இருந்த பலவகை வேலைகளும், உண்மையில் அவர்களால் முயன்று செய்யப்பட்டன அல்ல என்பதும், அவர்களுக்குப் பெருமை தேடித்தந்த வேலைகளில் பெரும்பான்மையானவை, உண்மையில் வளர்ச்சிப் பணி அதிகாரிகள் (Extension Officers) முதலானோரால் செய்யப்பட்டன என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. ஆகவே, அவர்களின் வேலைக் கணக்கிட்டறிய ஒரு சிறந்த முறையை வகுக்கும் வரையில் இத்தகைய போட்டிகளை நடத்துவதில் பயனில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்ட நிறைவேற்றத்தை ஒட்டி மாநிலத்தைப் புனரமைக்கும் வேலை கவனிக்கப்பட்டு வந்தால், அந்த வேலை முடிந்ததும், இத்தகைய போட்டியை நடத்த, சிறந்ததும், பொருத்தமானதுமான

ஒரு முறை வகுத்து, அதனால் சிறந்த பயனைக் காணலாம் என்று கருதப்பட்டது.

3. இந்தப் பரிசுப் போட்டிகளுக்கான திருத்தப்பட்ட முறையை வகுக்கின்ற வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. இந்தப் புதிய முறைப்படி, 1962-63 ஆண்டில், போட்டிகளுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. போட்டியை, வட்டார அளவு, மாவட்ட அளவு, மாநில அளவு என்று மட்டும் வகுத்துக் கொள்வதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட இந்த முறை நம் மாநிலத்தில் மட்டுமே இப்பொழுது அமல் செய்யப்படுவதால், தேச அளவில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் யோசனை இப்போதைக்கில்லை. ஏனெனில், பிற மாநிலங்களில் இந்திய அரசாங்கம் சிபாரிசு செய்துள்ள முறையில் போட்டிகள் நடைபெற்று வருவதாலும், இப்பொழுது நாம் வகுத்துள்ள, புதிய முறைக்கு இந்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற காலமின்மையினாலும் தேச அளவில் நடக்கும் போட்டியில் இவ்வாண்டு கலந்து கொள்ளவாய்ப்பில்லை. பல்வேறு அளவுகளில், கிராம அளவுப் பணியாளர்கள் கிராமங்களுக்கு சனைறிதழ்கள் வழங்க உத்தேசித்துருப்பதால், பணமாக அளிக்கப்படும் பரிசுகளை அளிக்காமல் நிறுத்திவிடவும முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. திருத்தப்பட்ட போட்டித் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும். இவ்வாண்டு போடடிக்கான காலம், 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரையில் என்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கால எல்லைக்குள் செய்யப்பட்டுள்ள, எல்லா கிராம அள்வுப் பணியாளர்களின் வேலைகளும் மதிப்பிடப்பட்டு வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் சிறந்த பணி புரிந்துள்ள கிராம அளவுப் பணியாளரும் சுறந்தீ பணி நடந்துள்ள கிபாமமும் தேர்ந்தெடுக்கப்படுவர். கலெக்டர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், இப்போட்டித் திட்டத்தைக் குறித்துத் தத்தம் பகுதிகளில் விரிவாக விளம்பரம் செய்து இப்போட்டியில் உயர்ந்த பட்சம் மிக அதிகமானவர்கள் பங்கு கொள்ளப்பதிவு செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கிராம அளவுப் பணியாளர், கிராமங்களின் வேலைகளை மதிப்பிட்டு, சிறந்த பணியாற்றியுள்ள கிராம அளவுப் பணியாளரையும், சிறந்த பணி நடந்துள்ள கிராமத்தையும் தேர்ந்தெடுக்கத் தயாராக ஏற்பாடுகள் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வேலைகளை மதிப்பிடுவது குறித்த முறைகள் பற்றிய விளக்கங்கள் விரைவில் வெளியிடப்படும்.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை. 35561.]

## கிராமத் தொழில்களுக்கான மாதிரி நிலையம்—தே. கல்லுப்பட்டி—கிராம சேவகர், கிராமத் தொழிற்பயிற்சிபெற அனுப்பிவைக்கப்படல்—ஒவ்வொரு பயிற்சிக்கும் கால இடைவெளி

## Training—Model Centre for Village Industries—T. Kallupatti—Deputation of Grama Sevaks for Training in Village Industries Interval between courses

## G.O. No. 277 . R.D. & L.A., Dated 24—12—62

கிராமத் தொழில்களுக்கான மாதிரி நிலைய கௌரவ முதல்வர், கீழ்க்கண்ட யோசனைகளைக் கூறியுள்ளார்.

(i) மாதிரி நிலையத்தில் கிராமத் தொழில்கள் பயிற்சிக்கு அனுப்பப்படும் கிராம சேவகர்களின் ஒவ்வொரு தொகுதியிலும் 49 பேர் இருக்கலபம் என்றிருப்பதை 45 பேராக உயர்த்தலாம் என்றும், அதனால் எந்த ஒரு குறிப்பிட்ட தொகுதியிலும், கடைசி நேர விலக்கல் காரணமாக, 40 பேருக்குக் குறையாமல் இருக்க முடியும் என்று கூறியுள்ளார்.

(ii) இரண்டு பயிற்சிக் காலங்களுக்கும் இடைப்பட்ட காலம் ஏழு நாட்கள் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை என்றும் யோசனை கூறியுள்ளார். ஏனெனில் பயிற்சியின் தொடக்க நாள்–விடுமுறை நாடகளிலும், (ஞாயிற்றுக் கிழமைகளிலும், பிற பொது விடுமுறை நாட்களிலும்) மாதத்தின் முதல் நாள் அல்லது இறுதி நாளிலும் அடிக்கடி அமைந்து விட ஏதுவாகிறது.

மாதிரி நிலைய முதல்வரின் மேற்படி யோசனைகளை உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) சிபாரிசு செய்துள்ளார்.

2. தே. கல்லுப் பட்டி கிராமத் தொழில் மாதிரி நிலையத்தில், கிராமத் தொழில்களில் இரண்டு மாதப் பயிற்சி பெற, கிராம சேவகர்களைத் தேர்ந்தெடுத்து 45 பேர் கொண்ட தொகுதிகளாக அனுப்பி வைக்க, அரசாங்கம் உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேலும், ஒவ்வொரு தொகுதிக்கும், மாதத்தின் 25 தேதிக்குப் பிறகோ, மாதத்தின் முதல் மூன்று நாட்களிலோ, விடு முறை நாட்களிலோ பயிற்சி தொடங்கும் படி அமையால் பார்த்துக் கொள்ளும்படி உதவி அபிவிருத்திக் கமிஷனர் [பயிற்சி] கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3 .பொது (கிராம நலத் திட்டங்கள்) துறையின் 1958-ம் டிசம்பர் மீ 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3417, கிராம நலத் துறையின் 1961-ம்ஆண்டு ஜனவரி மீ 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 154 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில்அளவு தேவையான திருத்தத இவ்வாணை செய்ததாகக் கருதப்பட வேண்டும்.

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2776.



## ஆரம்பக் கல்வி—ஆரம்பப் பள்ளிகளில் பள்ளி உணவு வழங்கத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை வரையறை—மறு ஆய்வு

## Elementary Education—Scheme for of Supply of School meals t pupils in Elementary Schoo's—Restriction on number of pupils to be fed—Revised Orders issued

## G O Ms NO; 3116. Education. Dated 31 st December, 1962

கல்வித் துறையின் 1962-ம் ஆடு ஆகஸ்டு மீ 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண்2135-ல், ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவளிக்கத் தக்க மாணவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதி—நகரமன்றப் பகுதி—மாநகராசிப் பகுதியிலும் I முதல் V-வது வகுப்பு வரை படிக்கும் மானவரின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் என்ற வரையறைக்கு மேற்படக் கூடாது என்று அரசாங்கம் ஆணைபிறப்பித்திருந்தது. இந்த ஆணைகளைத் திருத்துகின்ற முறையில், நீலகிரி தவிர ஏனைய ரெவினியூ மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளில், I முதல் VIII-வது வகுப்பு (standards) வரையில் படிக்கும் மாணவர்களின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உணவளிக்கப்படலாம் என்று அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது. நீலகிரி மாவட்டத்தில், I முதல் VIII-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் மொத்தத் தொகையில் பாதிக்கு மேற்படாத அளவினருக்கு இத் திட்டததின் கீழ் உணவு அளிக்கப்பட வேண்டும். மதிய உணவுத் திடடததுக்காக அரசாங்கத்துக்காகும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதறகாகவே இந்த வரையறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

தேவைப்பட்டால். குறிப்பிட்ட வரையறைக்கு மேலும் மாணவர்களுக்கு மதிய உணவளிக்கலரம். ஆனால் வரையறைக்கு மேல் அதிகமாக அளிக்கப்படும் தொகையினருக்கு உணவளிக்க ஆகும் செலவுகள், உள்ளூர் நன் கொடைகள் வசூலித்துச் செய்யப்பவேண்டுமே தவிர அரசாங்கத்தாரிடமிருந்து எந்த ஒரு உதவித் தொகையும் எதிர்பார்க்கக்கூடாது. மதிய உணவை எதிர்பார்க்கு மாணவரின் தொகையைக் குறைக்கவேண்டிய தேவையில்லை.

2. இதன் பின்னர்; இந்த எண்ணிக்கை வரையறையை தடைமுறையில் கொண்டுவரும் பொறுப்பு கல்வித்துறை இயக்குநரைச் (Director of Public Instrutions) சார்ந்ததாகும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்—நகரமன்றம் முதலான பகுதிகளிலும் 1-வதுபாராவில் கூறியுள்ளபடி ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்துக்கும்வகுக்கப்பட்ட எண்ணிகைத் தட்பட்டு உணவளிக்கமதக்க எண்ணிக்கையை அவர் நியமிப்பார். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், நகர மன்றத்துக்கும் அவ்வாறு நிர்ணயித்த தொகையை அந்தக் கமிஷனர்களுக்கு முன்னதாகவே அறிவித்து விடுவார். அதைக் கொண்டு அவர்கள் வரவு செலவுத் திட்டத்தைச் சரியாகத் தயாரித்து, உரிய காலத்தில் நிதி வசதி கிடைக்க வகை செய்ய முடியும். ஏற்கெனவே மொத்தத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட மாணவருக்கு உணவளிக்கப்பட்டுவரும் ரெவனியூ மாவட்டங்கள் விஷயத்தில், 1961—62-ம் காலததில் இத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே உணவளிக்கப்பட்ட மாணவர் தொகைக்குக் ரேட்டுப் பெற வண்டிய உதவித் தொகையையே நிர்ணயித்து விடவேண்டும். அவ்வாறு நிரணயிக்கப்படும் இந்தத் தொகை மாநில அளவில் செய்யப்பட்டுள்ள வறையறைக்கும் வரவு செலவுத் திட்ட அமைப்புக்கும் உட்பட்டதாக இருக்கவேண்டும். இத்தகைய மாவட்டங்களில் அதிகமாகச் சேரக்கப்பட்டிருக்கும் மாணவர் தொகையை ஒட்டி, ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்திற்கும், மதிய உணவ திட்ட உதவிநிதி வரையறைக்கு மிகாத வகையுல், கல்வித்துறை இயக்குநர் அந்த மாவட்டங்களின் மத்திய உணவுத் திட்டதைச் சரிகட்டவேண்டும்.

கல்வித்துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் "2 ந் தேதியிட்ட அசாங்க ஆனை 3116

## சமூக நலப்பணியாளர் பதவிகளை நிரந்தர நியமனமாக்குதல்

## [Establishment—Social Welfare Workers—Permanent retention—342 Posts—orders issued.]

## G. O. Ms. No. 69, R.D. & L. A., dated 8—1—1963.

இவ் வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 171 வட்டாரங்களிலும், ஒரு வட்டாரத்திற்கு இருவர் வீதம் மொத்தம் 342 சமூக நலப் பணியாளர் பதவிகளை. 1-363 தேதியிலிருந்து நிரந்தரமாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 13–362 தேதியிட்ட அரசாங்க ஆணை 5 1-ல் இந்தப் பதவிகளின் காலம் கடைசி முறையாக நீட்டிக்கப்பட்டிருந்தது.

# பஞ்சாயத்து அரசிதழ்

கூட்டுப்பொறுப்பு :

வ. சம்பந்தம், பி.ஏ.,
(உதவி ஆசிரியர்)

வே. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.,
(மொழிபெயர்ப்பாளர்)

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்:
கிராமச் சிறுவர்கள் நிகழ்ச்சி.

ஒவ்வொரு திங்கட்கிழமையும்:
ஒலிப்பதிவுப் பாடல்கள்; விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்:
திரைப்பட இசை; கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

ஒவ்வொரு புதன்கிழமையும்:
பாட்டு; நாட்டுப் பாடல்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும்:
பாட்டு; நமது திட்டம்; மெல்லிசை; செய்தி விமர்சனம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்:
திரைப்பட இசை; கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

ஒவ்வொரு சனிக்கிழமையும்:
பாட்டு; முதியோர் கல்விக்கூடம்; நம் மாதர்மன்ற நிகழ்ச்சிகள்.

## இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் :

வெள்ளி (1—3—63)

**கிராம வானொலி மன்றம்**

1. கேள்வியும் பதிலும்.
2. நம் கொடிய விரோதிகள்—வதந்தியும் பீதியும்.

ஞாயிறு (3—3—63)

கிராமம் போவோமே—செய்திச் சித்திரம்.

திங்கள் (4—3—63)

உபகாரக் கோழி-தொடர் சித்திரம் (எஸ். பூமிநாதன் எழுதியது.

செவ்வாய் (5—3—63)

**கிராம வானொலி மன்றம்**

1. கேள்வியும் பதிலும்.
2. கோடைகால பருத்தி சாகுபடி.

புதன் (6—3—63)

கடலைப் பயிருக்குப் போராணின் அவசியம்—உரையாடல்

மாசி பனி—இசைச் சித்திரம். (என். ராகவன் எழுதியது.

வெள்ளி (8—3—63)

**கிராம வானொலி மன்றம்**

1. கேள்வி பதில்.
2. நெருக்கடியும் ஊர்க்காவல் படையும்.

ஞாயிறு (10—3—63)

நம் நாட்டு விவசாயி : கடிதம்.
வில்லுப்பாட்டு.

திங்கள் (11—3—63)

பஜனை மடம் : சித்திரம் :
—(என். ராகவன் எழுதியது)

செவ்வாய் (12—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. கால்நடைகளில் வெப்பகால நோய்.

புதன் (13—3—63)

குடல் புண்—உரையாடல்.
தாயின் குரல் : நாடகம்.

வெள்ளி (15—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. கிராமங்களில் கடன் வசதி : சிறு தொழிலுக்கு.

ஞாயிறு (17—3—63)

கேள்வி நேரம்.
வர்ண மெட்டுகள்.

திங்கள் (18—3—63)

அண்ணனின் தியாகம் : நாடகம்.

செவ்வாய் (19—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. தீவிர சாகுபடித் திட்டத்தின் பயன்.

புதன் (20—3—63)

நம் கால்நடைச் செல்வம்—உரையாடல்.
தங்கக் கவசம்—சித்திரம்.

வெள்ளி (22—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. கூட்டுறவுச் சங்கமும் கடன் வசதியும்.

ஞாயிறு (24—3—63)

பாமா விஜயம் : விசேஷ நாடகம்.

திங்கள் (25—3—63)

வளரும் தமிழகம் : வரலாற்றுச் சித்திரம்.

செவ்வாய் (26—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. கோழிகளுக்கு ஏற்படும் சாதாரண நோய்கள்.

புதன் (27—3—63)

நெற்பயிருக்கு விரோதிகள்.
கிராமப் பொது நல சங்கம்.

வெள்ளி (29—3—63)

**கிராம வானொலி மன்றம்—**

1. கேள்வி—பதில்.
2. சேமிப்புப் பத்திரங்களும் தேசப் பாதுகாப்பும்.

ஞாயிறு (31—3—63)

வர்ண மெட்டுகள்.
நிகழ்ச்சி நிரல்.

**வெளியிடுபவர் :**
திரு எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ்.,

**ஆசிரியர் :**
திரு எஸ். வேங்கடசாமி எம்,ஏ.,

**Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.**

# ராஷ்ட்ரபதி சென்னை வருகை



**விமான நிலையத்தில்...**

ராஷ்ட்ரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னை வந்தபோது, விமான நிலையத்தில் தமிழ்நாடு கவர்னர், முதலமைச்சருடன், சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் திரு நெடுஞ்செழியன் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ராஷ்ட்ரபதியை வரவேற்றனர்.



**திரு சிவசாமி அய்யர் பிறந்த தின விழாவில்**

ராஷ்ட்ரபதி, சென்னையில், திரு பி. எஸ். சிவசாமி அய்யரவர்களின் நூறுவது பிறந்த தின விழாவில் கலந்துகொண்டு, கல்விப் பணிக்கும், குறிப்பாக, ராணுவத் துறையிலும் அவர் செய்த சேவையைப் பாராட்டினர்.



**கலைக் களஞ்சிய வெளியீட்டு விழாவில்...**

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் ஒன்பதாவது பாக (கடைசி பாகம்) வெளியீட்டு விழாவிறகு, ராஷ்ட்ரபதி அவர்கள் தலைமை வகித்து, வளர்கின்ற அறிவியலுக்கேற்ப கலைக்களஞ்சியம் அவ்வப்போது சீர் செய்யப்பட வேண்டும் என்றார்.

வேலூர் கிறித்தவ மருத்துவமனை விழாவில் கலந்து கொண்டு, மருத்துவ மனையில் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்.



**வேலூர் மருத்துவமனையில்....**



## மகாத்மாவின் மணிமொழி :

" கால்நடைகள் அபிவிருத்தியில் பஞ்சாயத்துக்கள் கவனம் செலுத்தவேண்டும். பால் உற்பத்தி, படிப்படியாக அதிகரிக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். கவனமில்லாததால், நமது கால்நடைகள் இன்று நிலங்களுக்குச் சுமையாக இருக்கின்றன. ".

*குறிப்பு—தமிழ் வருடப் பிறப்பு நாளை, பால் வழங்கும் விழாவாகக் கொண்டாட தமிழ்நாடு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.*

## தவப் புதல்வரை இழந்தோம்!

" ராஜன் பாபுவின் மறைவினால், இந்தியா, ஒரு தவப் புதல்வரை—சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி வீரரை—காந்திஜியின் பக்தி மிகுந்த ஒரு சீடரை-சிறந்த வழக்கறிஞரை—இழந்துவிட்டது. காந்தியடிகளின்கீழ் 40 ஆண்டுகள் பணியாற்றிய அவர், அகிம்சை முறை அறப்போரின் முன்னணித் தலைவராக விளங்கினர். ராஷ்டிரபதி பதவியை சீரும் சிறப்புமாக வகித்தார். அவருடைய முதிர்ந்த அனுபவ பூர்வமான யோசனைகள் நமக்கு மிகவும் தேவையாயிருக்கையில், விதி கொடூரமாக அவரைக் கொண்டுபோய் விட்டது. அவரது மறைவு நாட்டிற்குப் பேரிழப்பாகும். "

—காமராஜ்.




# கிராம நலம்



GAZETTEER 196 GU 11 APR 1963 RECORD OFFICE BUILDINGS, MADRAS


" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே ;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும் ?"

—பாரதியார்


மாடி 8 | ஏப்ரல், 1963 | படி 7


## தியாக உணர்வுடன் செயலாற்றுவோம்

### முதல் அமைச்சரின் வேண்டுகோள்

வலிமை கொண்டதும் ஈவிரக்கமற்றதுமான ஒரு பகைவனை எதிர்த்து, இந்தியா போராடிக் கொண்டிருக்கிறது. இந்தியா, காலமெல்லாம் சமாதானத்தை விரும்பி வாழ்ந்து வரும் நாடு. உலகுக்கெல்லாம் நல்லறம் கூறிவரும் நாடு. எங்கெங்கு அநீதி நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் நம் கண்டனத்தை ஆணித்தரமாகத் தெரிவித்து வந்திருக்கிறோம். இந்த சீனா, உலக நாடுகளின் அரங்கில் இடம் பெறவேண்டும் என்பதற்காக, இந்தியா செய்த முயற்சிகள் கொஞ்சமல்ல. வேறுபல நாடுகளின் அதிருப்தியையும் பொருட்படுத்தாமல், நாம் நியாயத்தின் அடிப்படையில், நமது கொள்கைகளை வற்புறுத்தினோம். இதற்கெல்லாம் பிரதிபலனாக, சீனா குரூரமான ஆக்கிரமிப்பில் இறங்கியிருக்கிறது.

நியாயத்துக்கும் அநியாயத்துக்குமிடையே நடைபெறும் இந்தப் போரில், யாருக்கு வெற்றி என்பதில் சந்தேகமே இடையாது. கொடியவர்களை எதிர்த்துப் போராடும்போது, நாம் வல்லவர்களாக வளரவேண்டியது அவசியம். தேசப் பாதுகாப்புக்காக நமது வலிமையை வளர்த்துக் கொள்ளவேண்டும். வசதிகளையும் வாய்ப்புக்களையும் அமைத்துக்கொண்டு, உறுதியான நம்பிக்கையுடன் எதிர்த்தாக்குதல் நடத்தி, பகைவர்களைத் துரத்தியடிக்க வேண்டும்.

### சத்தியம் தோற்றதில்லை

இந்தப்போர் அதிக காலம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்று நமது பிரதம மந்திரி நேருஜி எச்சரித்திருக்கிறார். இந்தப் போரில் நாம் தன்னந்தனியாக நிற்கவில்லை. உலகத்தை இயக்கும் உயிரோட்டமான தருமம் நமக்குத் துணை நிற்கிறது. குருக்ஷேத்திரப் போரில் தருமம்தான் வென்றது. நம் கண்முன்னால் இரண்டாவது உலகப் போரில் ஹிட்லரும் முசோலினியும் டோஜோவும் மிகுந்த பலம் கொண்டவர்களாகப் போரைத் துவக்கினார்கள். ஆரம்பத்தில் வெற்றிகளும் கண்டார்கள். ஆனால் முடிவில் அநீதியும் சர்வாதிகாரமும் அழிந்து சத்தியம்தான் மிஞ்சி நின்றது.

நமது நாடும், நாட்டின் சுதந்திரமும், உயிரினும் மேலான அரிய பொக்கிஷங்கள். இந்தப் பொக்கிஷங்களைக் காப்பாற்ற எந்த விலையையும் நாம் கொடுத்தே ஆகவேண்டும். நாட்டுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் எந்தத் தியாகமும் பெரிதல்ல. நாடு இன்று நம்மை அழைக்கிறது. நாட்டு மக்களின் ஊக்கம், உழைப்பு, சக்தி, சாதனம் அனைத்தையும் நாட்டின் பாதுகாப்புப் பணிக்கு ஈடுபடுத்தவேண்டும்.

இந்த ஜென்ம பூமியின் எல்லைகளைச் சேதமின்றிக் காக்கும் பெரும்பணிக்கு போனவேண்டும். ராணுவ சாதனங்கள் வாங்குவதற்குப் பணம் வேண்டும். உழைக்கும் மக்கள் நலிவுறுவண்ணம் பொருள் உற்பத்தி பெருகவேண்டும். நமது வீரர்களுக்கு ஆயுதங்கள் சாதனங்கள் மற்றும் இதர வசதிகள் மேலும்மேலும் தொடர்ந்து கிடைத்துவர வழி செய்ய வேண்டும். காடு, கழனி, தொழிற்சாலை அனைத்திலும் இன்று ஒரே நோக்கம் நிலவ வேண்டும். நமது சகல சக்திகளும் தேசப் பாதுகாப்பு என்ற மையத்தை நாடிப் போகவேண்டும்.

நம் நாட்டின் தொழிலாளர்கள் நல்ல உணர்ச்சியுள்ளவர்கள். அரசியலிலும் நாட்டுப் பிரச்னைகளிலும் கருத்துக் கொண்டவர்கள். அந்த நண்பர்களை இன்று எதிர்நோக்கி நிற்கும் ஒரே பணி, உற்பத்தியை அதிகரிப்பதேயாகும்.


(அடுத்த பக்கம் பார்க்கவும்)


அட்டைப்படம்.—

ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பள்ளித் தோட்ட வேலைகளில் ஈடுபட வேண்டுமென்று மாநிலக் கல்வித்துறை இயக்குநர் திரு நெ. து சுந்தரவடிவேலு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கிராம நலம், மார்ச் 1963 இதழ் 10-ம் பக்கம்) பள்ளித் தோட்டங்கள் கண்ணுக்கு அழகு மட்டுமல்ல, பிஞ்சுக்கரங்கள் மேற்கொள்ளும் உழைப்பின் வெற்றியுமாகும். ஆகவே, இத்துறையில் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களும் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆக்கிரமிப்பு கண்டு, இளைஞர்களும் மாணவர்களும் தங்கள் உள்ளத் துடிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆர்வம் எல்லாம் வகையான முறையில் பயன்படுத்தப்படும் என்று நம்புகிறேன். பயிற்சிகள் பெறுவோர், தங்கள் பணிகளில் நல்ல திறம் பெறுவார்களாக. மற்ற மாணவர்கள், ஓய்வு நேரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஆதரவான பணிகளில் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

நம் நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. நாட்டுப் பாதுகாப்புக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப் பார்க்கும்போது கட்சி வேறுபாடுகள் என்பவை மிகச் சிறிய விஷயங்கள். சர்ச்சைகளுக்கும், வாதப் பிரதிவாதங்களுக்கும், குறை கூறுவதற்கும் இது நேரமல்ல. ஆக்கிரமிக்கப் புகுந்த கொடியவர்களைத் துரத்தும் பெரும் பணியில் எல்லாக் கட்சிகளும் வேறுபாடுகளை மறந்து ஒரு மனதாகச் செயல்படவேண்டும்.

நாட்டில் தோன்றியுள்ள இந்த நிலைமையை ஒரு சாக்காக வைத்து, விலைவாசிகளை உயர்த்தும் போக்குக்கு ஒரு போதும் இடம் தரக்கூடாது. தீய சபலங்கள் அடியோடு தொலையவேண்டும். நாட்டுக்கு அவதி நேரும்போது, அதைப் பயன்படுத்தி, சொந்தத்துக்கு லாபம் அடிப்பது பச்சைத் துரோகம் என்பதை உணரவேண்டும்.

## உற்பத்தியைப் பெருக்குங்கள்

ஐந்தாண்டுத் திட்ட வேலைகளில் விவசாயப் பெருமக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்து, உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். மக்கள் அமைதியாக தங்கள் பணியைத் திறம்படச் செய்துகொண்டு போக வேண்டுமானால், விவசாய உற்பத்தி மேலும் பெருகவேண்டும். ஒவ்வொரு ஏக்கரிலும் அதிகமான உற்பத்தியைப் பெருக்க முனைந்து வேலைசெய்யவேண்டும்.

இழந்திருந்த சுதந்திரத்தை 15 ஆண்டுகளுக்கு முன்புதான் திரும்பப் பெற்றோம். நமது அறப்போர் முறையையும், அதன் விளைவையும் கண்டு உலகம் வியந்தது. அத்தகைய சிறப்புடைய நம் நாட்டு மக்கள் போரைப்பற்றி பீதியோ, திகிலோ அடையக்கூடாது. திகிலடையக் காரணமே இல்லை.

நமது ராணுவம் நல்ல தேர்ச்சியுள்ள ராணுவம். ராணுவ அதிகாரிகள் திறமை மிகுந்தவர்கள். சீனர்களின் தொகை அளவும், கபடமான அவர்களது நீண்ட நாள் ஏற்பாடுகளும் அவர்களுக்குத் தற்காலிகமாகச் சில சாதகங்களை அளித்திருக்கலாம். ஆனால், சீனர்களைத் துரத்தியடிப்பதற்கு நமது ராணுவத்துக்கு எல்லா வலிமையும் உண்டு. எல்லைப்புறத்தில் கடுமையான குளிரில் நமது ஜவான்கள் தீரத்துடன் சமர்புரிந்து வருகிறார்கள்.

நமது நாடு குடியரசு நாடு. மக்களே அரசோச்சும் நாடு. வந்துள்ள ஆபத்து, நம் ஒவ்வொருவருடைய உரிமைக்கும் வந்துள்ள ஆபத்து. இதை உணர்வதால், நாம் அடையும் புதிய வலிமையும், நமது ராணுவத்தின் ஆற்றலும் இணைந்து செயல்படுவது மூலம் எதிரிகள் துரத்தியடிக்கப்படுவது திண்ணம். இறுதி வெற்றி இந்தியாவுக்கே என்பது உறுதி.

நடக்கிறபடி நடக்கட்டும் என்ற மனப்பான்மை நம் நாட்டில் சற்று அதிகம், அத்தகைய போக்குக்கு இனி இடமே கிடையாது. ஏற்பட்டுள்ள அபாயத்தைப் போக்க காரியங்கள் வேகமாக நடைபெறவேண்டும்.

பாதுகாப்பு முயற்சிகளை பலப்படுத்துவதற்கு உதவியாக நாம் அனைவரும் சிக்கனத்தை அனுசரிக்க வேண்டும். குறிப்பாக, தாய்மார்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலகம் முழுவதற்குமே, சமாதானத்தின் ஜீவ சின்னமாகத் திகழ்பவர் நேருஜி. அவரது தலைமையில் இயங்கும் நமது நாடுதான் இன்று தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. சீனர்களின் படையெடுப்பால் ஒரு உண்மை தெளிவாகப் புலப்படுகிறது. நாட்டைக் காக்க இந்திய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, எல்லா உதவியையும் அளிக்க முன் வந்துள்ளனர். அவர்களுடைய தேசபக்தி, நமது எதிர்காலத்தைப் பற்றி நாம் பூர்ண நம்பிக்கை கொள்ளச் செய்கிறது.

பிரகாசமான ஒரு பொற்காலம் நமக்குக் காத்துக் கிடைக்கிறது. இடையில் தோன்றிய இந்தச் சோதனைகளை தீரத்துடன் சமாளிப்போம். நமது வீரர்களின் ஆற்றலை உலகம் முழுவதும் அறிய இப்பொழுது ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்திய மக்கள் அனைவரும் தங்களுக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள் என்பதை நமது வீரர்கள் அறியும் வகையில் கட்டுப்பாடாகவும் தியாக உணர்ச்சியுடனும் நாம் செயலாற்றுவோமாக. வெற்றி நமதே. ஜெய்ஹிந்த்.

—கே. காமராஜ்.

*1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி வானொலியில் "எந்த நாளும் காப்போம்" என்ற தொடரில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

குறள் :— "கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டில் தலை".



# உணவு உற்பத்தி - பஞ்சாயத்துக்களின் கடமை



[திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., விவசாயத் துறை இயக்குநர்.]

இன்றுள்ள நிலையில் விவசாய உற்பத்தி முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கு, விவசாய உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க வேண்டியது மிகவும் அவசியம். இதன் முக்கியத்துவத்தை விவசாயம் சம்பந்தப்பட்டவர்களும், பஞ்சாயத்து நிறுவனங்களும் உணர்ந்து கொண்டு, பணியாற்றி வருகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாய உற்பத்தி பற்றி, மாநில விவசாயத்துறை இயக்குநர் அவர்களின் கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவையாக அமையும் என நம்புகிறோம்.

—ஆசிரியர்.

பஞ்சாயத்துக்களின் விவசாய உற்பத்தித் திட்டங்களைப் பற்றி இப்பொழுது பேசுவது மிகவும் பொருத்தம். இந்திய–சீனத் தகராறு காரணமாக தற்பொழுது ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடி நிலை தெரிந்ததே. இந்த நெருக்கடி நிலையைச் செவ்வனே சமாளிப்பதற்கு விவசாய உற்பத்தியைப் பல மடங்கு பெருக்க வேண்டும். ஏற்கெனவே வகுத்து, செயலாற்றி வரும் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட விவசாய உற்பத்திப் பெருக்கத்தைவிட இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டும். விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் பஞ்சாயத்துக்களின் கடமையும், பொறுப்பும் திட்டவட்டமாயுள்ளன. 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டப்படி, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், அமைக்கப் பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்களிடம் விவசாயம், கால்நடை, கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும், படிப்படியாக 1960-ம் ஆண்டு அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### கிராம உணவு உற்பத்தித் திட்டம்—இரு முக்கிய அம்சங்கள்

தமிழ்நாட்டு கிராமங்களையெல்லாம் 12,522 பஞ்சாயத்துக்களாகப் பிரித்து 373 யூனியன்களாகத் தொகுத்துள்ளார்கள். அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் கிராம உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்பட்டும் வருகின்றன. கிராம உற்பத்தித் திட்டத்தில் 2 முக்கிய அம்சங்கள் உள்ளன. ஒன்று உள்ளூரில் கிடைக்கும் எரு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம். மற்றது, சிறந்த விதை அபிவிருத்தி செய்து பரப்பும் திட்டம். நம் மாநிலத்தில் தொழு எரு பற்றாக்குறை இருக்கிறது. பயிர்களுக்கு சாதாரணமாக தேவைப்படும் அளவில் தற்பொழுது மூன்றில் ஒரு பங்கு எருவே கிடைக்கிறது. தொழு எரு பற்றாக் குறையைப் போக்குவதற்கு கம்போஸ்ட் எரு தயாரிப்பது எளிது. கம்போஸ்ட் எரு தயாரிப்பதற்கு கிராமங்களில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை உபயோகிக்கலாம். வசதியுள்ள இடங்களில் பசுந்தாள் பயிர்களையும் வளர்த்து எருவாகப் பயன்படுத்த வேண்டும். தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும் பசுந்தழை கொடுக்க கூடிய மரங்களை வளர்க்க வேண்டும். இவை தவிர, குளத்து வண்டல் மண்ணையும், ஆங்காங்கே கிடைக்கக் கூடிய இதர எருக்களையும் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். மூன்று ஆண்டுகளில், பாசனப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 12 வண்டி வீதமும், மானவாரிப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 6 வண்டி வீதமும், பாசன டணப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 21 வண்டி வீதமும் எரு கிடைக்கும் அளவுக்கு நாட்டு எருக்களை அபிவிருத்தி செய்வது அவசியமாகும்.

### கிராம சகாயத் திட்டம்

கிராம உற்பத்தித் திட்டத்தின் மற்றொரு அம்சம், கிராம சகாயத் திட்டமாகும். நெல் சிறு தானியங்களின் உயர்தர விதைகளை அபிவிருத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வகுத்துள்ள திட்டமே கிராம சகாயத் திட்டம். விவசாய இலாகாவிலிருந்து நெல், சிறு தானியங்களில் சிறந்த ரகங்கள் வெளிவந்துள்ளன. இவை

உரை :—பகைவரால் கெடுக்கப்படாததாயும், கெட்டுவிட்ட காலத்திலும் வளம் குன்றாததாயும் உள்ள நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலையானது என்று கூறுவர்.

நாட்டு ரகங்களை விட 10 முதல் 15 சதம் வரை அதிக மகசூல் கொடுக்கக் கூடியவை. இலாகாவின் சிறந்த ரக வித்துக்கள் சிறு அளவிலேயே கிடைக்கும். சிறு அளவில் கிடைக்கும் உயர்தர வித்துக்கள் ஒவ்வொரு பஞ்சாயத்து கிராமத்திலும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதற்கென, ஒவ்வொரு கிராமத்திலும் சில விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் "கிராம சகாயக்குகள்" எனப்படுவர். அபிவிருத்தி செய்த உயர்தர வித்துக்களை கிராம சகாயக்குகள், தங்கள் கிராம விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் வித்துக்கள் ஆண்டுதோறும் அந்தந்தக் கிராமத்தில் 3-ல் 1 பங்கு விளை நிலத்திற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். மூன்றாண்டு காலத்திற்குள் விளை நிலப்பரப்பு முழுவதற்கும் சிறந்த வித்துக்கள் பரவிவிட வேண்டும் என்பது திட்டம். 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வீரியமும் மகசூலும் குறையாதிருக்கும் பொருட்டு வித்துக்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு, திருந்திய சாகுபடி முறைகளுக்கான செயல் விளக்கங்கள், விவசாயக் கருவிகள் வழங்குதல், பஞ்சாயத்துக்களின் நிலைமைக்கேற்ற இதர திருந்திய விவசாய முறைகள் முதலியவற்றிற்கான திட்டங்களும், கிராம உற்பத்தித் திட்டங்களும் அடங்கியுள்ளன. திருந்திய சாகுபடி முறைகளை நன்கு திட்டமிட்டுச் செயலாக்குவதன் மூலம் மூன்று ஆண்டுகளுக்குள் விவசாய உற்பத்தியைப் பத்திலிருந்து பதினைந்து சதவீதம் வரை அதிகரிக்க இயலும்.

### போதிய நிதி வசதி

விவசாய உற்பத்தித் திட்டங்களை ஏற்று நடத்தும் பொருட்டு பஞ்சாயத்துகளுக்கு அரசாங்கம் போதிய பண வசதி அளிக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் 5 ஆண்டு காலத்திற்கு 2 லட்சம் ரூபாய் வீதம் விவசாய மானியம் அளிக்கப்படுகிறது. அத்தொகையில் 1 லட்சம் ரூபாய் ஈட்டு மானியமாகப் பொது நலக்காரியங்களுக்குச் செலவிடும் பொருட்டு வழங்கப்படுகிறது. விறகு, பசுந்தழை, தீவனம், பழம் முதலியவை கொடுக்கக் கூடிய மரத் தோப்புகளை உண்டாக்குதல, கிராமக் கழிவுப் பொருட்களை உபயோகித்து கம்போஸ்ட் எரு அபிவிருத்தி செய்தல், வித்துக்காகவும் உரத்திற்காகவும் பசுந்தாள் செடிகளைப் பயிரிடுதல், பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கச் சாதனங்கள் வாங்குதல் முதலியவை பொதுநலக் காரியங்களாகும். பொதுநலக்காரியங்களுக்காக அரசாங்கம் செலவிடும் ஒரு லட்சம் ரூபாய்க்கு ஈடாக, பயனடையும் பஞ்சாயத்துக்கள் ரூ. 50,000 வசூலித்துச் செலவிட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் இத்தொகை சாகுபடி நிலங்களின் மேல் வரியாக விதித்து வசூலித்து கொள்ளலாம்.

விவசாய மானியத்தில் மீதியுள்ள மற்றொரு லட்சம் ரூபாய், கிராம சகாயத் திட்டத்திற்கும், நவீன விவசாய கருவிகள், பயிர்ப்பாதுகாப்பு சாதனங்கள், காய்கறி வித்துக்கள், பசுந்தாள் உர விதைகள், பழச் செடிகள், பூச்சி மருந்துகள் முதலியவற்றை வாங்கி, சலுகை விலையில் வழங்குவதற்கும், கம்போஸ்ட் எரு அபிவிருத்தி செய்வதற்குமாக செலவிடப்படுகிறது. கிராம சகாயக் அபிவிருத்தி செய்து வழங்கும் ஒவ்வொரு மணங்கு சிறந்த ரக வித்துக்கும் 2 ரூபாய் வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. நவீன விவசாயக் கருவிகள் சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. காய்கறி விதைகள், பழச்செடிகள், பயிர்ப்பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவை பாதி விலையில் கொடுக்கப்படுகின்றன. பூச்சி மருந்துகள் முக்கால் விலையிலும், பசுந்தாள் பயிர் விதைகள் 15 சதவீத சலுகை விலையிலும் கொடுக்கப்படுகின்றன. கம்போஸ்ட் குழி தோண்டி உரம் தயாரிப்பதற்கு குழி ஒன்றுக்கு ரூபாய் 6 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. மானியத் தொகை முழுவதும் பஞ்சாயத்துக்களின் மூலம் வருகிற நபர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. யூனியன் தலைமைக் காரியாலயங்களிலும், கிராம சேவக் இருக்கும் இடங்களிலும் வைத்து உபயோகிக்கும் செயல் விளக்க சாதனங்கள் வாங்குவதற்கும் மானியத் தொகை உபயோகிக்கப்படுகிறது. ஆராய்ச்சி மூலம் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படும் விஞ்ஞான விவசாய முறைகளை விவசாயிகளுக்குப் போதிக்கும் பொருட்டு, செயல் விளக்கப் பண்ணைகளையும், மாதிரிப் பண்ணைகளையும் அமைப்பதற்கும் மானியத் தொகை செலவிடப்படுகிறது.

### வளர்ச்சிக்கான செலவுகள்

தனித்தனியே 3 தொகுப்புக்களிலும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் 1960-61-ம் ஆண்டிலிருந்து பணியாற்றத் துவங்கியுள்ளன. 1961-62-ம் வருட காலத்தில் புறம்போக்கு நிலங்களில் பொதுநலத்திற்காக பஞ்சாயத்து தோப்புக்கள் அமைப்பதில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது. 340 யூனியன்களில் 4,66,264 ரூபாய் செலவில் 3,811 ஏக்கர்களில் பஞ்சாயத்துத் தோப்புக்கள் போடப்பட்டுள்ளன. 6,750 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டுள்ளன, 122 டன் பசுந்தாள் பயிர் விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, 5,720 ஸ்ப்ரேயர்கள் 708 டஸ்டர்கள், 2,412 நவீன விவசாயக் கருவிகள் முதலியவற்றை பஞ்சாயத்துக்கள் வாங்கியுள்ளன. ஈட்டு மானியத் தொகையின் கீழ் 12·38 லட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் பல தொகுப்புகளாக வெவ்வேறு காலங்களில் அமைக்கப்பட்டமையால் கிராம சகாயத் திட்டம் ஓரளவே செயலாக்கப்பட்டது. காய்கறி விதைகள், பழச் செடிகள், பசுந்தாள் பயிர் விதைகள், ஸ்ப்ரேயர்கள், டஸ்டர்கள், விவசாயக் கருவிகள், பூச்சி மருந்துகள் முதலியவற்றை வாங்கி விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், கம்போஸ்ட் குழிகள் வெட்டுவதற்குமாக வழங்கிய சலுகைத் தொகை 9,47,684 ரூபாய். செயல் விளக்க சாதனங்கள் வாங்குவதற்கு, செயல் விளக்கப் பண்ணைகளும், மாதிரிப் பண்ணைகளும் நிறுவுவதற்குமாக செலவாகிய மானியத் தொகை ரூ. 7,48,973. 340 யூனியன்களுக்கும் சேர்த்துச் செலவாகிய மொத்த மானியத் தொகை ரூ. 28 லட்சம்.

பஞ்சாயத்து யூனியன்கள் 3 தொகுப்பாக அமைக்கப்பட்டதையும், மானியத் தொகை ஆண்டு நடுவிலேயே கொடுக்கப்பட்டதையும், கிராம உற்பத்தித் திட்டத்தையும், விவசாய மான்ய ஒதுக்கீட்டுத் திட்டத்தையும், வகுப்பதற்குத் தகுந்த அனுபவம் அடைய வேண்டி இருந்ததையும் எண்ணிப் பார்க்கும்போது, இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் திருப்திகரமானதே. மண் வளப் பாதுகாப்பு திட்டம் பஞ்சாயத்துக்களில் சரிவர நடைபெறுமா என்பதைப் பரிசோதித்து அறியும் பொருட்டு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள ஏழு பஞ்சாயத்து யூனியன்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே கிடைக்கும் ஆள் பொருள் வசதிகளைக் கொண்டு பஞ்சாயத்துக்களே இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மண்வளப் பாதுகாப்பு முறைகளின் நுணுக்கங்கள் அவ்வப்போது விவசாய இலாகாவால் அளிக்கப்படும். இதுவரை இத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற வேலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஆயினும், இனிவரும் கோடை காலத்தில் பயிர் அறுவடைக்குப் பிறகு, பஞ்சாயத்துக்கள் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டு ஊக்கத்துடன் செயலாற்றும் என்று நம்பலாம். 1962–63 வருட காலத்தில் மொத்த மானியத் தொகையில் 5-ல் 1 பாகத்தைச் செலவு செய்ய பஞ்சாயத்து யூனியன்கள் திட்டமிட்டுள்ளன. ஒப்படைக்கப்பட்ட விவசாய திட்டங்களைச் செயலாற்றுவதில் பஞ்சாயத்துக்கள் ஊக்கமும் உற்சாகமும் கொண்டுள்ளன. அதனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் அளவுக்குப் பஞ்சாயத்துக்கள் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

கிராம சகாயத் திட்டம் ஒரு முக்கியமான திட்டம். 1962-63 வருட காலத்தில் கிராம சகாயக் திட்டம் எல்லா யூனியன்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1963-ம் ஆண்டு தை மாதத்தில் கிராம சகாயக்குகள் அபிவிருத்தி செய்த உயர்தர நெல் வித்துக்கள் எங்கும் கிடைக்கும். "கிராம சகாயக் வித்துக்கள்" அடுத்து வரும் பருவ காலத்தில் நெல் சாகுபடியாகும் விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பாக விளை நிலத்துக்குப் போதுமானதாகும். சில "கிராம சகாயக்குகள்" தங்களிடம் வித்துக்கள் இருப்பு வைப்பதற்கு போதிய இடவசதி இல்லை என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர், தங்களுக்கு உடனடியாகப் பணம் தேவைப்படுவதால் வித்துக்களை நீண்ட காலம் இருப்பு வைக்க இயலாது என்கின்றனர். கையில் பணம் இல்லாமையால் விவசாயிகள் "கிராம சகாயக் வித்துக்களை" உடனடியாக வாங்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த இக்கட்டான நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் புதிய உத்திரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. அதன்படி "கிராம சகாயக் வித்துக்களை" வாங்க விரும்பும் விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாகத் தங்களுக்குத் தேவையான பணவசதியைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களுக்கும் விவசாயிகளுக்கும் இதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. பஞ்சாயத்திலுள்ள வளர்ச்சிப் பணி அலுவலர்கள், "கிராம சகாயக் வித்துக்களை" வழங்குவதைப் பற்றியும், வித்துக்களை வாங்கும் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு விதை தேவை என்பதை பற்றியும் ஆலோசித்து முடிவு எடுப்பார்கள், பணவசதி செய்து கொடுப்பதால் "கிராம சகாயக் வித்துக்களை" வாங்குவது எளிது. அந்தந்த ஊரிலுள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்கள் கிராம சகாயக்குகளுக்கு, தங்களுக்குச் சேரவேண்டிய தொகையை அளிக்கும். கிராம சகாயக் திட்டம் வெற்றிகரமாக முடிவது பஞ்சாயத்துக்களின் திறமையைப் பொருத்திருக்கிறது.

### விவசாயிகளின் ஒத்துழைப்பு

விவசாய திட்டங்களை நிறைவேற்றுவதுடன், தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிக்கும்பொருட்டு காய்கறிப் பயிர்களையும், உளுந்து, பயிறு போன்ற பயிறு வகைகளையும், ஆங்காங்குள்ள பாசன வசதிகளைப் பயன்படுத்தி குறுகிய காலப் பயிர்களையும் சாகுபடி செய்ய வேண்டும். தேசிய நெருக்கடி நிலைமையில் அரசாங்கம் வகுக்கும் சகல விவசாய அபிவிருத்தித் திட்டங்களையும் செயலாக்குவதில் பஞ்சாயத்துக்கள் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும். விவசாயிகள் அனைவருடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்று யுத்தத்தில் வெற்றி காண பஞ்சாயத்துக்கள் உதவிசெய்யவேண்டுமென்று கோருகிறேன்.

[வானொலிப் பேச்சு]

## முக்கிய அறிவிப்பு

அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் எழுதுவோர், தங்களுடைய முழு முகவரியை தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். பெரும்பாலான விண்ணப்பங்களில் தெளிவான முகவரியே இருப்பதில்லை. தங்களுடைய கிராமத்தின், அல்லது பஞ்சாயத்தின் பெயரை மட்டும் எழுதினால் போதாது. அத்துடன், பஞ்சாயத்து யூனியன், மாவட்டம் ஆகியவை பற்றியும் தெளிவாக முகவரியில் எழுதி அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புவோரின் முழு முகவரியும் கிடைக்கப் பெறாததால், அவைகளின் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் தாமதமும், சிரமமும் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக்களுக்கும் இந்த விஷயத்தில் பொறுப்புண்டு. எனவே, அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்புவோர், பொதுமக்களாக இருந்தாலும், பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவராக இருந்தாலும், தங்களுடைய முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று".

பொருள் என்று சொல்லப்படும் நந்தாவிளக்கு, தன்னைச் சேர்த்து வைத்துள்ளவர் நினைத்த இடத்திற்குச் சென்று அவர்களின் இடையூற்றைக் கெடுக்கும்.

# தேசிய நெருக்கடி நிலையில் கூட்டுறவாளர்களின் கடமை

திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி, தலைவர், தேசியக் கூட்டுறவு யூனியன்.

நமது தாயகத்தின்மீது சீனா தொடுத்துள்ள படையெடுப்பினால், நாடு இன்று மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இந்தப் படையெடுப்புக்காக, சீனா நீண்ட நெடுங்காலமாக இரகசியமாக ஏற்பாடுகள் செய்து வந்துள்ளது. இந்த வெட்கங்கெட்ட ஆக்கிரமிப்பை நமது போர் வீரர்கள் மிகவும் தீவிரமாக எதிர்த்துப் போராடி வருகின்றனர். விடாமுயற்சியுடனும், உறுதியுடனும், நெஞ்சுரத்துடனும், நமது வீரர்கள் போர்செய்து வருகின்றனர்.

நாட்டின் நலனுக்காக பணியாற்றுவதில், தொடர்ந்து நம்முடைய முயற்சிகளைச் செய்யும் வகையில் என்ன முறைகளைக் கையாளவேண்டும் என்பதுபற்றி என் கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## உற்பத்தியைப் பெருக்கு

எல்லாத் துறைகளிலும் உற்பத்தியை எவ்வளவு பெருக்க முடியுமோ அவ்வளவு பெருக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றி அதிகமாக வலியுறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் யுத்தத்தில் பெறவேண்டிய வெற்றியை நாம் பெற வேண்டும். உணவு உற்பத்தி இதில் முதல் இடம் பெறத்தான் செய்கிறது. அதனுடைய முக்கியத்தைத் விளக்க வேண்டியதில்லை.

மக்களுக்குத் தேவையான உணவுக்காக, உணவு தானியங்களுக்கும், நமக்கு அத்தியாவசியமான தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களுக்கும், வெளி நாடுகளிலிருந்து எதிர்பார்க்கிற நிலையில் நாம் இருந்தால், கட்டுக்கோப்பான பொருளாதார அமைப்பினை நாம் பெற முடியாது.

இந்த மகத்தான பணியில், கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இந்த லட்சியத்தை அடையப் பணி புரிவதில் கூட்டுப் பொறுப்புண்டு. மாநில அரசாங்கம் பிறப்பித்துள்ள கட்டளைகளுக்கிணங்க, மாவட்ட, வட்டார, கிராம உணவு உற்பத்தித் திட்டங்களை தயாரிப்பது, கூட்டுறவு நிறுவனங்களுடைய ஒத்துழைப்புடன், மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும், கிராம அளவிலும் இயங்குகின்ற பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கடமையாகும்.

கிராம உணவு உற்பத்தித் திட்டம், இத்துறையில் முதல் வேலையாக அமைந்துள்ளது. வட்டார அளவில் உள்ள பஞ்சாயத்து ஸ்தாபனத்தின் உதவியுடன், கிராம மக்கள் சமூகத்தின் சம்மதத்துடன், இந்தத் திட்டத்தை, கிராமப் பஞ்சாயத்தும், கிராமத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கமும் தயாரிக்கவேண்டும். இந்த உற்பத்தித் திட்டத்தின் ஒரு பங்காக, மாநில அளவில் உள்ள ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சமூகங்கள், பஞ்சாயத்துக்களிடமிருந்து கிடைக்கப்பெறுகிற, விஞ்ஞான ரீதியில் விவசாயத்தைப் பெருக்குகின்ற எல்லா வசதிகளையும் முழுக்க முழுக்க உபயோகப்படுத்தும்படியான ஒரு நிலையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## நீர்ப்பாசன வசதி.

இந்த வசதிகளில், மிகவும் முக்கியமானது, பெரிய, நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்தும், சிறிய பாசன வேலைகளிலிருந்தும் கிடைக்கப்பெறுகிற பாசனம் சம்பந்தமான வசதிகளாகும். நம்முடைய மூன்று திட்டங்களில், இவ்வேலைகளுக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஆதாரங்களிலிருந்து கிடைக்கப்பெறுகிற தண்ணீரானது தாமதமின்றி, முழுக்க உபயோகப்படுத்தப்படாமல் போய்விட்டால், பின்பு, இதற்காக செலவிடப்படுகிற பணமானது, பல ஆண்டுகளுக்குப் பயனளிக்காமல் போவதுடன், அதனால் தேசிய வளர்ச்சிக்குப் பெரிதும் குந்தகம் ஏற்படவும் செய்கிறது. நாடு பூராவும் என்ற ஒரு நிலையில் இருந்து பார்த்தால், நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்துகின்ற நிலை அவ்வளவு திருப்தியாக இல்லை. கிட்டத்தட்ட ஆறு மில்லியன் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் இப்பொழுது கிடைக்கிறது. ஆனால் அது பயன்படுத்தப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் தண்ணீரைக் கொண்டுவர பயன்படுகிற பாசன வாய்க்கால்கள், காலத்தில் வெட்டப்படுவதில்லை. அதாவது, தண்ணீர் கிடைத்த உடனே, அல்லது அதற்கு பின்னால் உடனடியாக அவை தோண்டப்படுவதில்லை. தங்கள் நிலங்கள் நீர்ப்பாசனத்தினால் பயனடைய வேண்டிய நிலையில் உள்ள மக்களால், இப்படி ஏறக்குறைய நூறு ஆயிரம் மைல்கள் நீளமுள்ள பாசன வாய்க்கால்கள் தோண்டப்பட வேண்டியுள்ளன என்று உத்தேசமாகச் சொல்லலாம். இந்த விவரம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், சமுதாயம் முழுமையும் இது தாக்குகிறது. கிராமம் கிராமமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், இந்தப் பிரச்னை மிகவும் சுலபமானதாகவும், சுலபமாகச் சமாளித்துவிடக் கூடியதாகவும் உள்ளது எனலாம். அடுத்த பயிர் செய்யும் காலத்தில்—விவசாயத்தில் இதுவும் மந்தமான காலம்தான்—கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துக்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும், இப்படி தோண்டப்படாமல் உள்ள எல்லா பாசன வாய்க்கால்களையும் அதனால் பயன்பெறுவோர் தோண்டி

> "செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
> எஃகதனிற் கூரியது இல்".



விடும்படியான ஒரு நிலையினை ஏற்படுத்த எல்லாவிதமான தீவிர நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வார்கள் என நம்புகிறேன். இந்த வேலை செய்துமுடிக்கப்பட்டால், நம்முடைய உணவு உற்பத்தியானது கணிசமான அளவுக்குப் பெருகிவிடும். அடுத்த பயிரிடும் காலத்திற்கு பயன்படும் முறையில், காலா காலத்தில் எல்லா பாசன வாய்க்கால்களும் வெட்டப் படுகின்ற முறையில், வட்டார அளவில் உள்ள பஞ்சாயத்து ஸ்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விஷயத்தில் விசேஷ அக்கறை எடுத்துக்கொண்டு, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் கூட்டுறவுகளுக்கும் உதவி செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். தேசிய நெருக்கடி காலத்தில், இந்த வேலையை ஒரு புனிதமான பணியாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்னொரு விஷயத்தையும் கவனித்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது கட்டப்பட்டு வருகின்ற நீர் ஆதாரங்களிலிருந்து புதிதாகத் தண்ணீர் கிடைக்கப்பெறுவதற்குமிடையே, கால இடைவெளி இருத்தல் கூடாது. பஞ்சாயத்துக்களும் கூட்டுறவுகளும் இந்த விஷயத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

இன்னும் செய்து முடிக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் உள்ளன. வட்டாரத்தில் விநியோகம் செய்யப்படுகிற பொறுக்கு விதைகளைப் பெருக்கவும், அவற்றை ஒவ்வொரு குடும்பமும் உபயோகப்படுத்தவும்படியான நிலையினை உண்டாக்கவும், கிராம மக்கள் பணி புரிய வேண்டும். அதேபோல், கரிம உரம், பசுந்தழை உரம் ஆகியவை ஒவ்வொரு கிராமத்திலும் தயாரிக்கப்பட்டு, அவை, கிடைக்கப் பெறுகிற ரசாயன உரத்துடன், உபயோகப் படுத்தப்படவேண்டும். மற்றும், மண்வளப் பாதுகாப்பு வேலைகள், காடு வளர்த்தல் உள்பட மானாவாரி விவசாய வேலைகள் போன்ற வேலைகளும் உள்ளன. இந்த வேலைகளுக்காக, நமது திட்டங்களில் தாராளமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்கள் விசேஷ கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக நடைபெறுவது உசிதம். இந்த முறைகளைக் கையாள்வதின் மூலம், விவசாயத் தொழில் நுணுக்க அலுவலர்களுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படுகின்ற பயிர் முறைகளை பின்பற்றி, வருடா வருடம் உற்பத்தி பெருகும்படியான ஒரு நிலையை பஞ்சாயத்துக்களும், கூட்டுறவுகளும் நிச்சயம் செய்ய முடியும். கூட்டுறவுகளும் பஞ்சாயத்துக்களும் உதவி செய்தால், நம்முடைய விவசாயிகள் இந்த வேலைகளை நிச்சயமாக ஏற்று நடத்துவார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட உதவிகள் விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்கும்படியான வழி வகைகளைச் செய்ய வேண்டும்.

வட்டாரத் திட்டங்களும், மாவட்டத் திட்டங்களும் கிராமத் திட்டங்களில் இருந்தே உருவாக்கப்படுகின்றன. இதை நடைமுறையில் செயல்படுத்துகின்ற வேலை அவ்வப்போது ஆராயப்பட்டு பரிசீலனை செய்யப்படவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மேல் உள்ள பஞ்சாயத்து ஸ்தாபனங்களும், தொழில் நுட்ப அலுவலர்களும் அவைகளுக்கு வேண்டிய பொருட்களை விநியோகிப்பதின் மூலமும், உழைப்பை நல்குவதின் மூலமும், ஏற்படுகின்ற சிக்கல்களை ஆராயவும், இந்த முறைகளில் உதவி செய்யலாம். இந்தத் துறைகளில் அவசியமாக உள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் அயராமல் செய்வதை விட தற்போதுள்ள நெருக்கடி நிலையில் பஞ்சாயத்துகளும் கூட்டுறவுகளும் வேறு சிறந்த முறையில் நாட்டுக்கு பணியாற்றி விட முடியாது. இதற்கான பொறுப்பு, எல்லா நிலைகளிலும் இயங்குகின்ற பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள உத்தியோக சம்பந்தமில்லாதவர்கள், அலுவலர்கள் ஆகிய இரு சாராருக்கும், சமமாக உண்டு. இந்த வேலைத் திட்டங்களில் எல்லாம், அந்நியச் செலாவணி என்ற பேச்சுக்கு இடமில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். அத்துடன், திட்டத்தில் கண்டுள்ள இப்பொழுதுள்ள ஒதுக்கீடுகள் முழுமையாக உபயோகப்படுத்தப்பட்ட பிறகு, மேற்கொண்டு கூடுதலான நிதி வசதிகள் சிரமமின்றி கிடைக்கப்பெறும். எந்த வேலைத் திட்டங்களின் மூலம் உற்பத்திப் பெருக்கம் விரைவாகக் காணப்படுகிறதோ, அங்கே பணவீக்கம் ஏற்பட்டு விடுமோ என்று கவலைப்படத் தேவையில்லை. எல்லைப் புறங்களை ஒட்டியுள்ள ராஜ்யங்களில், நெருக்கடி நிலையினைச் சமாளிக்க விசேஷ வேலைத் திட்டங்கள் உள்ளன.

## சேமிப்பை அதிகப்படுத்துதல்

எல்லா நிலைகளிலும் இயங்குகின்ற கூட்டுறவு ஸ்தாபனங்கள், அங்கத்தினர்கள், அங்கத்தினராக அல்லாதவர்கள் ஆகியோரிடமிருந்து டிபாசிட்டுகளைப் பெறுவதின் மூலம், சேமிப்பை அதிகப்படுத்தப் பாடுபடவேண்டும். இதனுடைய நோக்கம் என்னவென்றால், மிகக்குறுகிய காலத்திற்குள்ளாகவே, தனக்குத் தேவையான எல்லா லேவாதேவி நிதி வசதிகளையும் இந்த இயக்கமானது இப்படிப்பட்ட டிபாசிட்டுத் தொகைகளிலிருந்தே பெற்றுவிடும்படியான ஒரு நிலையினை உண்டாக்க வேண்டும் என்பதே. இந்த விஷயம் எல்லா சங்கங்களுக்கும்—கிராம நகரக்கூட்டுறவுச் சங்கங்கள்—மத்திய, ராஜ்ய கூட்டுறவு பாங்குகள்—ஆகிய அனைத்திற்கும் பொருந்தும். எவ்வளவு குறைந்த தொகையாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு குடும்பமும், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நிதி அளிக்கவேண்டும். பாதுகாப்புப் பத்திரங்களில் பணத்தைப் போட வேண்டும் என்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். இப்படிச் செய்வதின் மூலம், பொதுப் பொறுப்பிலே ஒவ்வொரு பிரஜையும் தனக்குள்ள பங்கினை ஒத்துக்கொண்டு, மிக நெருக்கடியான இந்த அவசர நிலையில், தேசிய ஒற்றுமைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ முடிகிறது.

ஒருவன் பொருள் ஈட்டவேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை.

## நியாய விலை

அத்தியாவசியமான பண்டங்களின் விலைகளை உயர்த்தாமல், நியாயமான விலையில் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டி, நகரங்களிலும் பண்டங்களை வாங்கி உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கங்களை மிக விரிந்த அளவில் ஏற்படுத்த ஒரு விரிவான வேலைத்திட்டம் இருக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சங்கங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த இயக்கத்தை வெகுவாகப் பரப்ப, அனுபவம் வாய்ந்த எல்லாக் கூட்டுறவாளர்களும் தங்களுடைய உழைப்பினையும், அனுபவத்தையும், மாநில அரசாங்கங்களுக்கு நல்க வேண்டும். இந்த சங்கங்களை ஆரம்பித்து நடத்துகிறவர்களுக்கு பயிற்சி திட்டங்கள் அமைத்து கொடுக்க தன்னுடைய, சக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தேசிய கூட்டுறவு யூனியன் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் அளிக்க முன் வந்துள்ளது.

### கடுமையான போராட்டம்

இன்றைய நெருக்கடி நிலையில் தேசமானது தன்னுடைய ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் ஏற்றுக் கொண்டுள்ள மிக பெரிய அளவில் சமூக, பொருளாதார அபிவிருத்தி நிலையினை ஏற்படுத்துதல் என்ற இலக்கை அடைவதில், நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் மிகப் பெரியவை இந்தக் கடமைகளைக் ஏற்று நடத்துவதில் கூட்டுறவு இயக்கம் குறிப்பிடத்தக்க நிலையில் அமைந்துள்ளது எனலாம். நாட்டில், நகரம், கிராமம் ஆகிய இரு பகுதிகளில் கூட்டுறவு இயக்கத்திற்கு அமைப்புக்கள் உள்ளன. அநேகமாக, எல்லாப் பெரிய ஊர்களிலும், நகரங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மொத்தம் 5 மிலியனுக்கு மேல் உறுப்பினர்கள் இந்தச் சங்கங்களில் உள்ளனர். 18 மிலியனுக்கு மேல் உறுப்பினர்களைக் கொண்டுள்ள 2,10,000 ஆரம்ப கிராமக் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இந்த அருமையான அமைப்பின் மூலம் **பாரத நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருடனும் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விஷயத்தைப் புரியவைக்கக்கூடிய அருமையான வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறோம்.**

பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்யப்பட்ட மாதிரி, "பாரத நாட்டின் புனித மண்ணிலிருந்து ஆக்கிரமிப்பாளனை விரட்டி அடிக்க நாங்கள் உறுதி எடுத்துக்கொண்டுள்ளோம்; இதற்கான போராட்டம் எவ்வளவு நீண்டதாக இருந்தாலும் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் சரி" என்ற "இந்தியமக்களின் அசையாத உறுதியிலே" நாம் அனைவரும் பங்கெடுத்துக்கொள்கிறோம் ஒரு மனப்பட்டு நிற்கிறோம் என்ற உணர்வினை நாளுக்குநாள், அயராமல், தளராமல் உழைப்பதின் மூலம், நாம் நிருபித்துக் காட்ட வேண்டும் என்று உங்கள் ஒவ்வொருவரையும் நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நம்மை நோக்கி மிக நீண்ட, கடுமையான போராட்டம் எதிர்நோக்கியுள்ளது நாம் அனைவரும்— ஆண் பெண் அடங்கலும்-நெஞ்சில் துணிவுடனும், அசைக்க முடியாத உறுதியுடனும், நம்மை எதிர்நோக்கியுள்ள இந்தக் கடுமையான போராட்டத்தை எதிர்த்துச் சமாளிக்க வேண்டும்.

**1962**-ம் ஆண்டு நவம்பர், மாதம் 21-ம் தேதி அகில இந்திய ரேடியோவில் ஆற்றிய சொற்பொழிவு.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் :

# "ஒன்றுபட்டு நின்று எதிரியை விரட்டுவோம்"

**டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்**

சீனாவிலிருந்து இப்போது கிடைத்துள்ள தகவல்கள்—அவை நாம எதிர்பாராதவை யல்ல—நெருக்கடியும், வாய்ப்பும் ஏற்பட்டிருப்பதை எடுத்துககாட்டுகின்றன.

நாட்டு விவகாரங்களிலும் சர்வதேச அரங்கிலும் இத்தகைய நெருக்கடி ஏற்படுவது, தயக்கம் காட்டுவதற்கோ மனந்தளருவதற்கோ உரிய விஷயமல்ல. இந்த ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும், நமது பாரம்பரியத்துக்கும் நெடுநாளைய மனப் போக்குக்கும் முற்றிலும் பொருந்தாத வாழ்க்கைத் தத்துவத்தை எதிர்ப்பதற்கும் இந்திய மக்களனைவரும் ஒன்று திரண்டு நிற்கவேண்டிய சந்தர்ப்பம் இதுவேயாகும்.

வியாசருடைய கருத்துக்களையும் கிருஷ்ண பகவானின் போதனைகளையும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர வேண்டிய சந்தர்ப்பமாகும்.

நமது கலாச்சாரம் இரண்டு அம்சங்கள் கொண்டது; ஒன்று, நியாயமான வரம்புக்குட்பட்டு அஹிம்சையைக் கையாளுவது. இரண்டாவது, கொடுமையையும் அழிவுச் சக்திகளையும் எதிர்க்க, நமது சக்திகளனைத்தையும் ஒன்று திரட்டுவதாகும். சிவன், சக்தி, விஷ்ணு ஆகியோரின பல்வேறு அவதாரங்களும், கொடுமையையும், அதர்மத்தையும் ஒழிப்பதிலேயே ஈடுபட்டன என்பதை மறந்துவிடக் கூடாது.

### பொறுமையால் விளைந்த ஆக்கிரமிப்பு

ஆசியாவின் தலைமையைக் கைசமாக்கும் சீனர்களின் ஓர் அம்சத் திட்டத்தையும், இந்தியா உட்பட பிற நாடுகளின் கொள்கைகளையும், திட்டங்களையும் வெறுத்து வந்ததையும், அந்நாடுகள் மீது பொறாமை கொண்டதையும் 1955-ல் சீனாவுக்குச் சென்றிருந்தபோது நான் உணர்ந்தேன்.

அவர்களை நண்பர்களெனக் கருதி வாளாவிருந்தவர்களின் கண்களைத் தற்போதையப் போர் திறந்துவிட்டிருக்கும்.

இந்தப் போர் தற்காலிக கருத்து வேற்றுமையிலோ நடத்தையிலோ ஏற்பட்டதல்ல; தத்துவங்கள், வாழ்க்கை முறைகள் சம்பந்தமான அடிப்படை வேறுபாடுகளில் எழுந்ததாகும்.

ஆகவே, இப்போதைய தேவை, முதன் முதலாக, தற்போதைய நெருக்கடியைப் பற்றிய உண்மையை முற்றிலும் உணர்ந்து கொள்வதாகும். இரண்டாவதாக, ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவதாகும்; நாம் இழந்த பகுதிகளை மீட்பதற்கும், நமது நாட்டைப் பொருளாதார ரீதியிலும், மனோதத்துவ ரீதியிலும் படை பலத்திலும் வலுவாக்கி, நமது பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

**" உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையு ளெல்லாம் தலை".**



# பஞ்சாயத்து நிதி ஆராய்ச்சிக் குழுவினரின் தமிழ்நாடு சுற்றுப்பயணம்

பஞ்சாயத்து நிதி ஆராய்ச்சிக் குழுவினர், திரு க. சந்தானம், எம்.பி., அவர்களின் தலைமையில், 1963 பிப்ரவரி முதல் நாள் முதல் 8-ம் நாள் வரை, சென்னை மாநிலத்திற்கு விஜயம் செய்தனர். தல நிர்வாக அமைப்புகள் தீர்வு காணவேண்டிய பிரச்னைகளில் மிக முக்கியமானதாக விளங்குவது நிதிப் பிரச்னையே என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தல நிதி விசாரணைக் குழுவும் வரி விசாரணைக் கமிஷனும், இப்பிரச்னை பற்றி, முன்பே நன்கு ஆராய்ந்திருந்தன. எனினும், இந்தியா முழுவதிலும் பஞ்சாயத்து அமைப்புகள் உருவாகி, ஜனநாயக ரீதியில் அதிகாரம் பரவுதல் கொள்கை வெற்றிகரமாகப் பின்பற்றி வரும் இத் தருணத்தில், நிதி விஷயம் புதிய தொரு உத்வேகத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே, 1962, ஜூலை மாதத்தில், பஞ்சாயத்து அமைப்பு நிதிகளைப் பற்றி முழுதும தீர்க்கமாக ஆராய்ந்து, தக்க சிபாரிசுகளைச் செய்வதற்காக ஓர் ஆராய்ச்சிக் குழுவை இந்திய அரசாங்கம் அமைத்தது. அக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் :—

குழுவின் தலைவர் :—**திரு. க. சந்தானம்,** ராஜ்ய சபை உறுப்பினர்.

குழுவின் உறுப்பினர்கள் :—**1. திரு. ஸ்ரீநாராயண தாஸ்,** லோக்சபை உறுப்பினர்.

**2. திரு. எம். ஒப். சோர்பாடே,** எம்.எல்.ஏ., மைசூர்.

**3. பேராசிரியர் எம். வி. மத்தூர்,** ராஜஸ்தான் பல்கலைக்கழகம், ஜெய்ப்பூர்.

**4. திரு சி. நரசிம்மம்,** அடிஷனல் அபிவிருத்தி கமிஷனர், ஆந்திர பிரதேசம்.

குழுவின் செயலாளர் :—**திரு. ஆர். ஸரன்.**

இந்திய அரசாங்கத்தாரிடம், 1963 ஜூலை 31-ம் நாளுக்குள் தங்களுடைய அறிக்கையை இக் குழுவினர் சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. மேலும், மூன்றாவது திட்டக் கட்டுக்காப்புகள், அத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளையொட்டி, வெவ்வேறு மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகளின் நிதிகளையும், நிதி ஆதார வசதிகளையும் பரிசீலித்து, கீழ்க்கண்ட இனங்கள் சம்பந்தமாக சிபாரிசுகள் செய்ய வேண்டுமென்று, இக் குழுவினரை, இந்திய அரசாங்கத்தினர் கோரியுள்ளனர் :—

(அ) அதிகாரப் பொறுப்புகள் மாறியதையொட்டி, பஞ்சாயத்து அமைப்புகளிடம், முழுமையாகவோ, ஒரு பகுதியோ ஒப்படைக்கப்பட வேண்டிய வருமான ஆதார வசதிகள் (நில வருமானம் உள்பட); பஞ்சாயத்து அமைப்புகளின்கீழ் செயல்படும் ஸ்தாபனங்கள், சர்விசுகள் முதலியவற்றின் பராமரிப்புக்காக, சில குறிப்பிட்ட ஆதார வசதிகளை ஒதுக்குதல்,

(ஆ) மாநில அரசுகள் அளிக்கும் மானியங்கள்; அம்மானியங்களைச் சார்ந்த நிபந்தனைகள்,

(இ) பஞ்சாயத்து அமைப்புகளுக்கிடையே நிதி சம்பந்தமாக நிலைபடுத்தக்கூடிய சுமுக உறவு,

(ஈ) தற்போதுள்ள ஆதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள்; பஞ்சாயத்து அமைப்புகளுக்குச் சொந்தமானவையும் வருமானமளிக்கக் கூடியனவையாகவுமுள்ள உடைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள்,

(உ) மேற்கொண்டும் அதிக அளவில் தானியங்களையும் நன்கொடைகளையும் பெறுவதற்காகவும், மக்கள் தாங்களாகவே மனமுவந்து தானமளிப்பதற்காகவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்.

### மாவட்டங்களில் ஆராய்ச்சி

இந்த ஆராய்ச்சிக் குழு எல்லா மாநில அரசுகளுக்கும், மிகவும் விரிவான முறையில் தயாரிக்கப்பட்டதொரு கேள்வித்தாளை அனுப்பியது.

ஒவ்வொரு மாநிலத்திலும், பெருமளவில் ஆதார வசதிகளுள்ள ஒரு மாவட்டத்திற்கும், மிகக் குறைந்த ஆதார வசதிகளுள்ள ஒரு மாவட்டத்திற்கும் விஜயம் செய்ய வேண்டுமென்றும், அத்துடன் அதே அடிப்படையில், அந்தந்த மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கும், அந்த யூனியன்களிலுள்ள இரு பஞ்சாயத்துகளுக்கும் விஜயம் செய்யவேண்டுமென்றும் இக் குழுவினர் விரும்பினார்கள். இவ்விருப்பத்திற்கிணங்க, சென்னை மாநிலத்தில், பெரும் அளவில் ஆதார வசதிகள் உள்ள மாவட்டங்களில் ஒன்றாக தஞ்சையும், மிகக் குறைந்த அளவில் ஆதார வசதிகள் உள்ள மாவட்டங்களில் ஒன்றாக இராமநாதபுரம் மாவட்டமும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இதே அடிப்படையில், தஞ்சை மாவட்டத்திலுள்ள அம்மாபேட்டை, வேதாரணியம் பஞ்சாயத்து யூனியன்களும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வத்திராயிருப்பு, மண்டபம் பஞ்சாயத்து யூனியன்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. அம்மாபேட்டை வட்டாரத்திலுள்ள மேலட்டூரும் மேலகளக்குடியும், வேதாரணியம் வட்டாரத்திலுள்ள வண்டுவான்சேரியும், மூலக்கரையும், வத்திராயிருப்பு வட்டாரத்திலுள்ள மகராஜபுரமும் தம்பிபட்டியும், மண்டபம் வட்டாரத்திலுள்ள தனுஷ்கோடியும் நொச்சியூரணியும், இக் குழுவினர் விஜயம் செய்வதற்கான

**எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாயும், இடையூறுகளுக்கு அஞ்சாததாயும் உள்ள வெற்றி தரும படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும சிறந்ததாகும்.**

பஞ்சாயத்துகளாகத் தெரிந்து எடுக்கப்பட்டன. குழுவினர் கேட்ட தகவல்களை, மேலே குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியன்களும் பஞ்சாயத்துக்களும், நேரிடையாகவே, குழுவினரிடம் சமர்ப்பித்தன.

பேராசிரியர் எம். வி. மத்தூர் அவர்கள் தவிர, இக் குழுவைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள் அனைவரும் சென்னை மாநிலத்திற்கு விஜயம் செய்தனர். 1963 பிப்ரவரி முதல் நாளன்று, இக் குழுவினர், சென்னை முதலமைச்சரையும் மற்றும் சென்னை அமைச்சர்களையும் சந்தித்துப் பேசினார்கள். அடுத்த நாளன்றும், பிப்ரவரி 8-ம் நாளன்றும், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளையும் குழுவினர் சந்தித்துப் பேசினார்கள். பிப்ரவரி 3-ம் நாளன்று குழுவினர் வேதாரணியம் பஞ்சாயத்து யூனியனுக்கு விஜயம் செய்தார்கள். வழியில் வண்டுவான்சேரியில் உள்ள பஞ்சாயத்துத் தோப்பு ஒன்றையும் அவர்கள் பார்வையிட்டார்கள். அதற்கடுத்த நாளன்று, குழுவினர், அம்மாப்பேட்டை பஞ்சாயத்து யூனியனுக்கு விஜயம் செய்ததுடன், தஞ்சாவூரில், சில குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடன், மாநில அபிவிருத்திக் கவுன்சில் சம்பந்தமாக விவாதித்தார்கள். பிப்ரவரி 5-ம் நாளன்று, இராமேசுவரத்திற்கு விஜயம் செய்து, நொச்சியூரணி பஞ்சாயத்துத் தலைவரைக் குழுவினர் சந்தித்துப் பேசினார்கள். இராமேசுவரம் நகரப் பஞ்சாயத்தின் நிதி நிலைமையையும், இக்குழுவினர் பரிசீலித்தார்கள். பிப்ரவரி 6-ம் நாளன்று, மண்டபத்தில், இக்குழுவினர், மண்டபம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்களுடன் விவாதித்தார்கள். பிப்ரவரி ஏழாம் நாளன்று, குழுவினர் வத்திராயிருப்புக்கு விஜயம் செய்து, கிழக்கு, மேற்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்களின் உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார்கள். குழுவினர் விஜயம் செய்த ஊர்களிலெல்லாம், பஞ்சாயத்து அமைப்பு பற்றிய பல்வேறு அம்சங்கள் குறித்து, மிகவும் விரிவாகவும், தெளிவாகவும், அதிகாரிகளிடமும் உத்தியோகச் சார்பற்றவர்களிடமும், இக்குழுவினர் விவாதம் நடத்தினார்கள்.

### பஞ்சாயத்து நிதி வசதி

பஞ்சாயத்து அமைப்புகளின் ஆதார வசதிகளைப் பெருக்குவதற்கான யோசனைகள் பலவற்றைத் தொகுத்த குறிப்பு ஒன்றை சென்னை மாநில பஞ்சாயத்து யூனியன், 1963, பிப்ரவரி 8-ம் நாளன்று, குழுவினரிடம், சமர்ப்பித்ததற்கு, இந்த யூனியன் குறிப்பிட்ட சிபாரிசுகளைப்பற்றி, யூனியன் தலைவருடனும், மற்றும் யூனியனைச் சார்ந்த அலுவலருடனும், குழுவினர், விவாதித்தனர்.

சென்னை மாநிலத்துக்கு விஜயம் செய்வதற்கு முன்னர், இக்குழுவினர்; ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், மைசூர் ஆகிய மாநிலங்களுக்கு விஜயம் செய்திருந்தார்கள். சென்னை மாநிலத்தில், பஞ்சாயத்து அமைப்புக்கள் சம்பந்தமான நிதி ஏற்பாடு எவ்வகையில் அனுபவ ரீதியாக இயங்கி வருகிறது என்பதிலும், எந்தக் கொள்கைகளைப் பின்பற்ற இந்த நிதி ஏற்பாடு உருவாகி இருக்கிறது என்பதிலும், குழுவினர் கணிச அளவில் அக்கறை காட்டினார்கள். தேவைகளையே கருத்தில் கொண்டு, அவற்றின் அடிப்படையில் ஆதார வசதிகளை பஞ்சாயத்துக்களுக்கு விநியோகிப்பதற்காகவும் இப்போது அமுலில் உள்ள ஏற்பாடு முறையை ஓரளவு எளிதாக்குவதற்காகவும், உள்ளூர் செஸ், ஸ்டாம்பு வரி மீது உபரிவரி, தாராஷா வரி போன்ற ஒப்படைக்கப்பட்ட வருமான இனங்களில் சிலவற்றை ஒன்றாகத் திரட்டி விநியோகிப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், குழுவினர் ஆராய்ந்தனர்.

வருமானமளிக்கக்கூடிய முயற்சிகளில் ஈடுபட, பஞ்சாயத்து அமைப்புகளுக்கு ஊக்கமளிப்பதற்கான வழிமுறைகளைப்பற்றி; சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அலுவலர்களிடமும் தலைவர்களும் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில், குழுவினர் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். மாநில கூட்டுறவு பாங்கு போன்றதொரு தனிப்பட்ட நிதி ஸ்தாபனமொன்றை உருவாக்கி அதன் மூலம் தல அமைப்புகளுக்கு கடன் வழங்கலாமா என்பது, இக்குழுவினரால் பரிசீலிக்கப்படும் சாத்தியக் கூறுகளில் ஒன்றாகும்.

ஜனநாயக ரீதியில் அதிகாரப்பரவல் ஏற்பட்டு பஞ்சாயத்து அமைப்புக்கள் வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமானால், பஞ்சாயத்து அமைப்புகளில் நிதி முறை மிக வலுவானதாக அமைய வேண்டுமென்பது மிகவும் அத்தியாவசியமானதாகும். இதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் முயற்சிக்குக் கணிச அளவில் ஊக்கந் தரத் தக்கவகையில், குழுவினரின் குறிப்புகளும் சிபாரிசுகளும் அமையும் என்று நாம் முழு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

**கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்.,**
பஞ்சாயத்து நிதி நிர்வாக நெறியாளர்,
கிராம நல, தல நிர்வாகத்துறை.

" உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது".



# கிராமத் தொண்டர் படை

திரு. ஏ. பி. அழகிரிசாமி, பி.ஏ.,பி.எல்., உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூகநலம்), சென்னை.

எங்கும் "கிராமத் தொண்டர் படை" என்பதே பேச்சு. ஆனால் இப்பேச்சு மேலெழுந்தவாரியாகவே இருந்து வருகிறது. சில வட்டாரங்களில் இக்கிராமத் தொண்டர் படை எதிர்பார்த்தபடி 4 பிரிவுகளாகக் கூட அமைக்கப்படாமல் இருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. காவல் படை அல்லது பாதுகாப்பு அணி என்ற பிரிவிற்கு "உடை தரவேண்டும்" என்ற சிந்தனை கூட இல்லாமல் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் கேட்டால் அரசாங்கத்தின் முடிவான யோசனைகளை எதிர்பார்த்து இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு காரியம் செய்யாமல் இருப்பதற்கு ஆயிரம் காரணங்கள் காட்டி "சட்டி சுட்டது கை விட்டது" என்று இருந்து விடலாம். அப்படிச் செய்யாமல் பெரிய முயற்சி எடுத்து, காரியத்தில் முனைந்து இறுதியில் அக்காரியம் தப்பிப் போனாலும் அது பெருமையுடைத்து என்பதை எல்லோரும் உணர வேண்டும். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகை

" கானமுயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது "

என்று கூறியிருக்கிறார். இதைப்பற்றி ஆழ்ந்து, சிந்தித்து நடைமுறையில் வெற்றிகரமாக இயங்குவது எங்ஙனம் என்பதை அரசாங்கம் சீக்கிரம் வெளியிடும். அதற்கிடையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தத்தமக்குத் தோன்றிய மனோவிசாலத்துடன் காரியங்கள் நடைபெற முயற்சிகள் எடுக்கப்படவேண்டும், இதற்கான சில யோசனைகளை வெளியிடுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

### படையினரின் உடை

காவற்படை அங்கத்தினர்களுக்கு சீருடை (யூனிபாம்) வழங்கவேண்டும். இந்தச் சீருடை எப்படி இருக்க வேண்டும்? சிக்கனமான செலவில் பக்குவமாக அமைதல் வேண்டும். சில மாவட்டங்களிலே, ஒரு காக்கி டிராவுசரும் கை வைத்த வெள்ளை பனியனும் சீருடையாக அமையலாம் என்று கருதுகிறார்கள். இது சிக்கனமாக இருப்பதற்கு வழிதான். ஆனால் பனியன் போடுவது என்பது காவல் படையில் இருக்கும் அங்கத்தினர்கள் எல்லோருமே கட்டு மஸ்தான உடலமைப்பு உள்ளவர்களாக இருந்தால் எடுப்பாக இருக்கலாம். அப்படி இல்லாத உடலமைப்பு கொண்டவர்களும் எடுப்பாகத் தோற்றமளிக்க வேண்டும் என்றால், பனியனுக்குப் பதிலாக அரைக்கைச் சட்டை அணிவது நலம் என்று சிலர் கருதுகிறார்கள். மேலும் வெள்ளை பனியன் என்பது சீக்கிரம் அழுக்காகும். ஆகையால் நீடித்த உழைப்பிற்குப் பிறகு பயன்படாமலும் போகலாம்.

உடை எதுவாக இருந்தாலும், இந்த உடைக்கு எங்கிருந்து பணம் கிடைக்கும் என்று ஏக்கம் பல வட்டாரங்களிலே இருந்து வருகிறது. பணம் எங்கே இருந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் இத்திட்டத்தின் ஆழத்தை உணராதவர்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது. இத்திட்டத்தின் பெயர் கிராமத் தொண்டர் படை. ஆகவே அந்தந்தப் பகுதிகளிலேயே உடைக்குத் தேவையான பணத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். வசதியுள்ள அங்கத்தினர்கள் தாங்களே உடையைத் தைத்துக்கொள்ளலாம். வசதியில்லாதவர்களுக்கு உடை தைத்துக்கொடுக்கும் பொறுப்பை அக் கிராமமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இது சாத்தியம் இல்லையானால், இத்திட்டத்திற்குள்ளேயே அடங்கி இருக்கிற சூட்சமத்தைக் கைக்கொள்ளலாம். அதாவது இக்கிராம தொண்டர் படையில் "உழைப்புக்



ஊர்மக்களின் உற்சாகம்!

அழிவு வந்தவிடத்தில் வலிமை குன்றினாலும் இடையூறுகளுக்கு அஞ்சாத அஞ்சாமை தொன்று தொட்டுப் பெருமை உடைய படைக்கு அல்லால் இருப்பதில்லை.



G.N.—3

காரியம்" என்று ஒன்று உண்டு என்பதை அனை வரும் அறிவர். தொண்டர் படை அங்கத்தினர்கள் தனி பட்ட நபர்களுக்காகவோ அல்லது அடுத்த பஞ்சாயத்துக் காகவோ கூலிக்காக வேலைசெய்து பணம் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒரு ஏற்பாடு இருக்கிறது. அம் முறையின் மூலம் உடை தைத்துக் கொள்ளவதற் காக இத்தொண்டர் படை பொருள் ஈட்டிக் கொள்ளலாம் அல்லவா ?

சில வட்டாரங்களில் உடைக்கு பணம் சேர்ப்பதற்காக நாடகங்கள் நடத்தி வசூல் செய்கிறார்கள். பிறிதொரு வட்டாரத்திலே ஒரு நூதன வழியைப் பின்பற்றி பொருள் சேகரிக்கிறார்கள். இசைத்தட்டிற்கிணங்க இரு சிறுமிகள் ஆடுவது இதைப்பார்க்க மக்கள் கூடுவது—இதன் மூலம் பணம் தேடுவது இப்படி எல்லாம் முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. இவைகளெல்லாம் வரவேற்கத் தகுந்தவைகளே.

### காவல் அணிக்கு பயிற்சி

**உடற்பயிற்சி:**—கிராமத்தொண்டர் படையில் ஒரு பிரி வாகிய காவல் அணிக்குப் பல பயிற்சிகள் தர வேண்டும் என்று கருதப்படுகிறது. அதிலே கவாத்து, அணிவகுப்பு, உடற்பயிற்சி முதலியவைகளை பயிற்றுவிப்பது முக்கியமான தாகக் கொள்ளலாம். இதற்காக ஒரு மாவட்டத்திலே ஒரு ஏற்பாட்டைச் செய்ய இருக்கிறார்கள். கிராம சேவககுகள், பிரதம வாலண்டியர்கள், வளர்ச்சி அதிகாரிகள் முதலியவர்களுக்கு மையமான பொது இடத்தில் போலீஸ் அதிகாரிகளையோ அல்லது பிரதேசபடை அதிகாரிகளையோ கொண்டு மேற்கண்ட பயிற்சிகளைக் கொடுப்பதற்கு அந்த மாவட்டத்தில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**முதலுதவி பயிற்சி:**—உடற்பயிற்சியுடன் முதலுதவிப் பயிற்சியும் கொடுப்பது முக்கியம் என்று கருதி இன்னொரு மாவட்டத்தில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்தக் குறிப்பிட்ட மாவட்டத்தில் 15 ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர்களும், 9 தாலூகா ஹரிஜன ஆஸ்பத்திரி வைத்தியர்களும், 10 அலாபதிக் (இந்தியன் ஸ்கூல் ஆப் மெடிசன்) மருத்துவர்களும் இருக்கிறார்களாம். இது மட்டிலுமல்லாமல் மூன்று வருடம் பயிற்சி பெற்ற நர்சுகளும் இந்த முதலுதவிப் பயிற்சியை சொல்லித் தருவதற்கு அருகதையும், தகுதியும் உள்ளவர்களாம். இவர்களுள் ஒவ்வொருவரும் ஒரு வட்டாரத்தை எடுத்துக் கொண்டு காவல் அணி அங்கத்தினர்களுககு முதலுதவிப் பயிற்சி கொடுக்கலாம். ஒரு வட்டாரத்திற்கு நான்கு மையமான இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, ஒவ்வொரு மையத்திலும் 30 பேர் கொண்ட ஒரு பிரிவி னருக்கு கொடுக்கலாம். இவ்வாறு பயிற்சி கொடுத்தால் நான்கு பிரிவிலும் 120 பேர் பயிற்சி பெறுகிறார்கள். இது போல் 5 ரவுண்டுகள் கொடுத்தால் ஒரு வட்டாரத்தில் 600 தொண்டர்களுக்கு இலகுவில் முதலுதவிப் பயிற்சி கொடுத்து விடலாம். இதற்கு ரூ. 50. தான் தேவைப் படும் என்று தெரிய வருகிறது.



'சிரமதானம்' அளிக்கத்தயார் !

தமிழ்ப் புத்தகம் ரூ. 3 பாண்டேஜுக்கு ரூ. 10, 13 சார்ட்டு கள் ரூ. 31 மற்ற உபகரணங்களுக்கு ரூ. 6 ஆக ரூ. 50 தேவை என்று கருதப்படுகிறது. இந்த ரூ. 50 செலவில் வாங்கியவைகளைக்கொண்டே மேற்கூறிய 600 பேர்களுக்கும் பயிற்சி அளித்து விடலாம். இவ்வாறாக சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரி அவர்கள் கூறினார்.

**பயிற்சிக்குப் பின்:**—உடற்பயிற்சி பெற்ற பிறகு காவல் அணி அங்கத்தினர்கள் வாரம் இருமுறையேனும் கூடி அணி வகுப்புகளில் கலந்து கொண்டு கவாத்துகள் செய்ய வேண்டும் என்று கருதப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் உடற்பயிற்சி செய்து களைத்தபின், அவர்களுக்கு ஏதாவது தாக சாந்தியோ சிற்றுண்டியோ தர வேண்டு மென்று ஒரு கருத்து நிலவுகிறது. இதைக்குறித்து ஒரு பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் தனது யோசனையைத் தெரிவித்தார். இப்படையினருக்கும் நீர்மோரோ, சுண்டல் விநியோகமோ கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறினார். இதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10க்கு மேல் செலவாகாது என்றும் தெரிவித்தார்.

இன்று நம் முன் இருக்கும் இப்பெரும் பணியை வெற்றியுடன் செயல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

**" ஒலித்தக்கால் என்றும் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்."**





# ஒற்றுமைச் சங்கநாதம்

பாரத மணித் திருநாட்டின் மீது சீனர்கள் அக்கிரமமாக ஆக்கிரமிப்பு நடத்தியது கண்டு, நாடே கொதித்தெழுந்தது. கண்ணினு மினிய சுதந்திரத்தைக் காக்க நாடெங்கும் அணி திரண்டது. என்றுமே கண்டிராத அளவுக்கு நாட்டில் ஒற்றுமை உணர்ச்சி மலர்ந்தது. இந்த ஒற்றுமைஉணர்ச்சி சங்கநாத மாக ஒலித்தது. அன்னை பூமியை 'எந்த நாளும் காப்போம்' என்ற முழக்கம் நாடெங்கிலும் ஒலித்தது. பல்வேறுபட்ட அரசியல் கட்சிததலைவர்கள், சமுதாயத்தலைவர்கள் எல்லோரும் வேற்றுமைகளை மறந்து, பூசல்களை ஒதுக்கிவிட்டு, ஒற்றுமைக் குரல் எழுப்பினர். இதை வானொலி முரசு கொட்டி முழங்கிற்று.

எத்தனையோ கருத்து வேறுபாடுகளுக்கிடையே மலர்ந்த இந்த ஒற்றுமை உணர்ச்சியை, அமைச்சர் பக்தவத்ஸலம் பாராட்டிப்பேசினார். 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை தமிழ்நாடு சட்ட சபையில் சமர்ப்பித்து அவர் பேசுகையில் " நெருக்கடியின் முன்னிலையில் நம மக்களுடைய ஒற்றுமை உணர்ச்சி, தியாக உணர்ச்சி இவற்றைக் கடந்த சில மாதங்களில் கண்டோம். எல்லோருக்கும் புனித மான கடமை ஒன்றுண்டு. அதுதான் தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் உள்ள பல தரப்பட்ட நம் மக்கள் சக்திகளையெல்லாம் ஆக்கப்பணியில் திருப்பி, நம்முடைய பொருளாதாரம் இன்னும் வேகமாக முன்னேறுகின்ற நிலையைத் தோற்றுவிப்பதாகும் " என்று கூறினார்.

நிதி அமைச்சர் அவர்களின் பேச்சைப் பிரதிபலிக்கும் வகையில், வானொலியில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் 'எந்த நாளும் காப்போம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவுகளை சுருக்கமாகக் கொடுத் திருக்கிறோம். இந்தத் தொகுப்பிலே, கூடுமானவரையில், 'கிராம நல'த்தில் உள்ள இடவசதியை மனத்தி லிருத்தி—முடிந்தவரையில் கருத்துக்களைத் தொகுப்பாக தந்துள்ளோம். இந்தத் தொடரில் மேலும் பல தலைவர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோர்களின் பேச்சுக்களின் சுருக்கம் வருகின்ற இதழ் களில் வெளிவரும். இச் சொற்பொழிவுகளை வெளியிட உதவிய சென்னை வானொலி நிலயத்திற்கு நம் நன்றி உரியதாகும்.

—ஆசிரியர்.

**" தாய்த் திருநாட்டைத்**
**தகர்த்திடு மிலேச்சரை**
**மாய்த்திட விரும்பான்**
**வாழ்வுமோர் வாழ்வுகொல் ? "**

**திரு. கக்கன்,** விவசாயத் துறை அமைச்சர்.

நம்மைத் தாங்கும் இந்தத் தாயகத்தின் மண் பொன்னான மண். இந்த மண்ணுக்கு உரமும் நீரும் வேண்டுமளவு சேர்த்து, உற்பத்தியை ஒன்றுக்குப் பலவாகப் பெருக்க முடியும். என்றுமே இல்லாத அளவுக்கு இன்று வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டாக வேண்டியிருக்கிறது. அயல் நாடுகளிலிருந்து ஆயுதங்கள், தளவாடங்கள் முதலிய முக்கியப் பொருட்கள் அதிகம் வர வேண்டியிருப்பதால், தானியங்களைக்கொண்டு வருவது இயலாது.

தமிழ்நாட்டின் நிலவளம் நீர்வளத்துக்கேற்ப, தானி யங்கள், பயிறு வகைகள், காய்கறி வகைகள், பழங்கள் முதலியனவகளைத் தீவிரமாகச் சாகுபடி செய்ய வேண்டும்.

வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் தமிழ்நாடு இந்தியாவில் ஏற்கெனவே முன்னணி மாநிலங்களில் ஒன் றாக விளங்குகிறது. முதலாவது, இரண்டாவது திட்டக் காலங்களில், உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில், 38 லட்சம் டன்னுக

**எலியாகிய பகைசேர்ந்து கடல்போல் ஒலித்தாலும் என்ன தீங்கு ஏற்படும் ? பாம்பு மூச்சுவிட்ட அளவில் அவை கெட்டு அழியும்.**

இருந்த உணவு உற்பத்தி, இரண்டாம் திட்ட முடிவில், 53 லட்சம் டன்களாக உயர்ந்தது. பஞ்சு உற்பத்தி 2,26,000 பேல்களில் இருந்து 3,74,000 பேல்களாக அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 8 லட்சம் டன்களிலிருந்து 10,40,000 டன்களாக அதிகரித்துள்ளது. மூன்றாம் திட்டத்தில், உணவு தானிய உற்பத்தியை 69½ லட்சம் டன்களாக உயர்த்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. பஞ்சு உற்பத்தியை 5,20,000 பேல்களாகவும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை 13½ லட்சம் டன்களாகவும் அதிகரிக்கத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

உலகத்தின் கவனம் முழுவதும் இன்று நம் நாட்டை நோக்கித் திரும்பி இருக்கிறது. எந்த நெருக்கடியையும் தன்னால் சமாளித்து வெல்லமுடியும் என்பதை இந்தியா இன்று புலப்படுத்திக்கொண்டு வருகிறது. நாட்டில் இன்று உள்ளது போன்ற உணர்ச்சி வேகம் இதற்கு முன்பு இருந்ததில்லை. இந்த உணர்ச்சி வேகம் செயல் வடிவமாகவும் பயன்பெற வேண்டும். கழனிகளிலும், ஆலைகளிலும் உற்பத்தியைப் பெருக்கும் பணி புது வேகத்தோடு நடைபெறவேண்டும்.

இந்த நாடு நம்முடைய நாடு. இதைக் காக்கும் பொறுப்பு நம்முடையது. தேசியக் கவிஞர் சொன்னது போல,

> "நாடு முற்றும் நம்மது
> நன்மை தீதும் நம்மது
> விடு பெண்டிர் மக்களை
> வேறு காக்க திக்கு யார்?"

இந்தப் பொறுப்பை உணர்ந்து, மக்கள் ஒவ்வொருவரும் செயலாற்ற முற்பட வேண்டும். வளமான நமது நாட்டின் வளத்தை மேலும் பெருக்குவோம். நமது வலிமையை வளர்ப்போம். தேசப்பாதுகாப்புக்கு எல்லா வழிகளிலும் உதவுவோம். வெற்றி நமதே.

---

> "பெற்றெடுத்த தந்தையையும் பிரியமுள்ள துணைவனையும்
> மற்றுந்தன் தனயனையும் மாளக் கொடுத்தபின்
> பச்சையிளம் பாலகனைப் பட்டுடுத்தி வேல்கொடுத்து
> இச்சையுடன் களமனுப்பும் மறத்தாயர் எங்கள் குலம்"

## திருமதி ஜோதி வெங்கடாசலம்

*சுகாதாரத் துறை அமைச்சர்*

உலக அமைதிக்காக அரும்பாடுபட்டு வரும் இந்தியாவின்மீது சீனா இன்று ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது.

தாய்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெருஞ்சோதனையில் எதையும் செய்ய மக்கள் தயாராகிவிட்டனர். பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கச் சகல வேற்றுமைகளையும் மறந்து, ஒரே தேசிய இனமாகக் கிளர்ந்து எழுந்துள்ளனர். நாட்டிற்காக நம் உடைமைகளையும் உயிரையும் தியாகம் செய்யத் தயாராகிவிட்டனர். பரிபூரண சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க, இந்தியாவின் புனிதமான மண்ணிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அடியோடு துரத்துவது என்று உறுதிப்பாட்டினோடு மக்கள் அணி திரண்டுவிட்டனர்.

சீனர்களை விரட்டியடிக்கும் பணியில் பெண்கள் பரிபூரணமாக ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். குடும்பத்தில் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதும், வீண் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துத் தேசப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குவதும் அவசியம். வீடுதோறும் உண்டிகளை வைத்துக்கொண்டு சிறு குழந்தைகளையும் சேமிக்கும்படி செய்து பாதுகாப்பு நிதிக்குப் பொருள் திரட்டுவோம். அந்நியச் செலாவணிக்கு உதவும் வகையில் தங்க நகைகளைப் பாதுகாப்பு நிதிக்கு அளிப்போம். தங்கப் பத்திரங்களை வாங்கி நெருக்கடி தீர்க்க உதவுவோம். நாட்டுக்காகப் போராடும் வீரர்களின் குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம். இத்தகைய ஆக்கப் பணிகளை நிறைவேற்றப் பெண்கள் முன் வந்து முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். முக்கியமாக, முதலுதவிப் பயிற்சி, பணிப் பெண் பயிற்சி ஆகியவற்றில் சேர்ந்து பயிற்சி பெறுங்கள். ராணுவ வீரர்களுக்கு சேவை செய்ய ஆஸ்பத்திரிகளிலுள்ள நர்ஸ்கள் செல்வதால், அவர்களுடைய இடத்தில் பணியாற்ற துணை நர்சுகள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட திட்டங்களின் வெற்றிக்கு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மருத்துவர்களின் பணி மிக முக்கியமானதாகும். மக்களுக்குத் தொண்டு செய்வதே மருத்துவர்களின் லட்சியம். நாட்டின் பாதுகாப்புக்காக விழுப்புண் ஏற்றுள்ள வீர ஜவான்களுக்கு நாம் உற்றுழி உதவுவது அவசியம்.

போர் மேகங்கள் கப்பிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் போர்க்களத்தில் மட்டும்தான் பணியுள்ளது என்பது இல்லை. எதிரிகளின் செயலால் வீரர்களின் உயிருக்கு ஆபத்து நேரிடுவதோடு, கொடிய நோய்கள் பரவவும் வாய்ப்பும் உண்டு. இவற்றைத் தக்க சமயத்தில் தடுக்க வேண்டிய பொறுப்பு டாக்டர்களைச் சேர்ந்தது. இந்த விஷயத்தில் பெரிய மருத்துவ நிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் பணியாற்ற முன்வர வேண்டும். இவர்கள் ராணுவத்தில் சேர்ந்துவிட்ட இளம் மருத்துவ அதிகாரிகளுக்குப் பதிலாக மருத்துவ மனைகளில் இருந்து பணியாற்றலாம். முதிர்ந்த அனுபவத்தைத் தக்க முறையில் பயன்படுத்த இது நல்ல சந்தர்ப்பமாகும்.

(32-ம் பக்கம் பார்க்க.)

---

"அழிவின்று அறைபோகாதாகி வழிவந்த
வன்கணதுவே படை".





# வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்குத் தேவை!

திருமதி எஸ். சௌந்தரம்

அந்தக் கிழவியின் பெயர் வந்தி. வாழ்க்கையின் எல்லைக்கோட்டை நெருங்கிக்கொண்டிருப்பவள். உற்றவரோ, உறவினரோ எவரும் இல்லை. அவளுக்கு அவளே துணை. ஆண்டவன் துணை. மதுரை மாநகரிலே 'பிட்டு' விற்று வந்தாள். இந்தத் தள்ளாத வயதிலும் அவள் பிறர் கையை எதிர்பார்க்கவில்லை. பிச்சை எடுக்கவில்லை. தன் கையே தனக்கு உதவி என்று வாழ்ந்து வந்தாள்.

தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டை அன்று அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். சைவப் பெரியாரான மாணிக்கவாசகருக்கு துன்பம் இழைத்ததால் இந்த அரசன் தெய்வ கோபத்திற்கு ஆளானான்.

தமிழ் பெருக்கெடுத்து ஓடிய மதுரைப் பெருநகரிலே வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வைகை அன்னை நகருக்குள் புகுந்தாள். கோர நர்த்தனமாடினாள். எங்கும் ஒரே ஓலக்குரல். மதுரை நகரெங்கும் ஒரே வெள்ளம். பூக்காடாய் காட்சியளித்த அந்த நகரம் சாக்காடாய் மாறியது. மக்கள் நிலை குலைந்தார்கள். உயிருக்குப் புகலிடம் தேடி ஓடி ஒளிந்தார்கள்.

நாடும் நகரமும் அல்லோலகல்லப்படும் இந்த நேரத்தில் செய்வதென்ன? அமைச்சரவையினரும் நகரப் பெரியோர்களும் கூடி ஆலோசனை நடத்தினார்கள். அரசவை இறுதி முடிவு எடுத்தது.

### வீட்டுக்கு ஒருவர் தேவை!

"நாட்டுக்குச் சேவை செய்ய வீட்டுக்கு ஒருவர் தேவை. வைகை வெள்ளத்தைத் தடுக்க மதுரை நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டினரும் தனது பங்குக்குக் குறைந்த அளவு ஒருவரையாவது அனுப்பவேண்டும். இதை மீறுகிறவர்கள் அரச தண்டனைக்கு உள்ளாவார்கள்."

முரசு முழங்கிற்று. அரசாணை பறை அடித்து அறிவிக்கப்பட்டது. கிழவி வந்தி அரசாணையை அறிந்தாள். உடைப்பெடுத்த வைகைக் கரையில், அவள் செப்பனிடவேண்டிய பகுதி அளந்து குறிக்கப்பட்டது. சதிரவன் மறைவதற்குள் வைகைக்கரை சீர் செய்யப்பட வேண்டும். பாவம் அவள் என்ன செய்வாள்.

கூனிக்குறுகிய அந்தக் கிழவிக்கும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமை இருக்கிறதே! தானே வேலை செய்யலாம் என்றால் உடலில் பலம் இல்லை. கூலிக்கு ஆள் அமர்த்தி வேலை செய்யலாம் என்றால் பணமும் இல்லை. என்ன செய்வாள். அங்கயற்கண்ணி மணாளனை சொக்கநாதப் பெருமானை எண்ணித் துதித்தாள்.

வைகைக்கரை உடைப்பில் தனது பங்கைச் செப்பனிட ஒரு கூலி ஆளை எதிர்பார்த்திருந்தாள். அந்த ஆள் செய்யும் வேலைக்காக, தின்னத் தின்னத் திகட்டாத பிட்டு தான் அவளால் கொடுக்க முடியும். இதைத் தவிர கூலியாகக் கொடுப்பதற்கு அவள் கையில் வேறு எதுவும் இல்லையே!

### கூலியோ, கூலி!

பொழுது நகர்ந்துகொண்டிருந்தது. கிழவி வந்தியின் கண்களுக்கு எட்டிய தூரத்தில் ஒருவரும் காணப்படவில்லை. உடைப்பை அடைக்கவேண்டிய கடமையில் தவறினால் கிடைக்கும் அரசனின் தண்டனையை அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. ஆனால் இறையச்சம் கொண்ட எவருடைய வேண்டுகோளையும் ஆண்டவன் புறக்கணிப்பதில்லை. மண்வெட்டி கூடையுடன் தெருவில் ஒரு கூலியாள் வந்தான். "கூலி வேண்டுமோ, கூலி" என்று அந்த ஆள் சத்தமிட்டான். கிழவிக்கு ஒரே மகிழ்ச்சி, பொக்கை வாயிலே புன்னகை தவழ அவனைக் கூப்பிட்டாள். "வைகையாற்றின் உடைப்பில் எனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை நீ சீர் செய்கிறாயா?" என்று கேட்டாள்.

"செய்து தருகிறேன், என்ன கூலி தருவாய்" கூலியாள் கேட்டான்.

"தம்பி, உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் பணம் இல்லை, ஆனால் பணத்திற்குப் பதிலாக சுவையான பிட்டு தருகிறேன் தின்றுவிட்டு வேலையை முடித்துக்கொடு" என்றாள் கிழவி.

கூலியாள் ஒப்புக்கொண்டான். மண்வெட்டியையும் கூடையையும் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தான்.

"ஓ பாட்டியம்மா, எனக்கு ஒரே பசி களைப்பா இருக்கு! முதலில் கொஞ்சம் 'பிட்டு' கொடு, வயிற்றுக்கு ஏதாவது போட்டால்தான் வேலை சீக்கிரமாக நடக்கும்."

"சரி இந்தா, தின்றுவிட்டு ஆற்றுக்குப் போய் வேலையைச் சீக்கிரமா முடித்துவிட்டு வா"—மந்தாரை இலையில் பிட்டை வைத்துக் கிழவி கொடுத்தாள். கூலியாள் சுவைத்துத் தின்றான்.

பிறகு, மண்வெட்டியையும் கூடையையும் எடுத்துக் கொண்டு வைகைக்கரை சென்றான். பிட்டு விற்கும் வந்திக் கிழவியின் சார்பில் உடைப்பை அடைக்க வந்திருப்பதாகத் தன் பெயரை பதிவு செய்துகொண்டான். கொஞ்சம் மண்ணை வெட்டி உடைப்பில் கொட்டினான்.

---

போர்முனையில் அழிவுபடாததாகவும், பகைவருடைய வஞ்சனைக்கு இரையாகாததாகவும் தொன்றுதொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

சிறிது நேரம் சென்றது. வந்திக் கிழவி கொடுத்த பிட்டுச் சுவையின் நினைவு வந்தது. நாக்கைச் சப்புக் கொட்டினான். கிழவியிடம் ஓடினான். இன்னும் கொஞ்சம் 'பிட்டு' கேட்டான். கிழவி கொடுத்தாள். மீண்டும் கரைக்கு ஓடினான். ஆற்றங்கரையிலே ஒரே பரபரப்பு. நாட்டையும் நகரத்தையும் காக்க அங்கு வீட்டுக்கு ஒருவராக வந்திருந்தார்கள். முந்திக் விட்ட யந்திரமாக ஒவ்வொருவரும் வேலை செய்தார்கள்.

ஆனால் வந்திக் கிழவியின் கூலியாள் இந்தப் பரபரப்பில் கலந்துகொள்ளவில்லை. அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. ஆடினான், பாடினான் ஆற்றின் உடைப்பை அடைப்பதற்குப் பதிலாக பாய்ந்து வரும் புது வெள்ளத்தில் புகுந்து நீந்தினான். வேலை பார்க்க வந்தவனாக இல்லாமல் விளையாட வந்தவனாக காணப்பட்டான்.

தனது பங்கு என்ன ஆயிற்று என்று பார்க்க ஆற்றங் கரைக்கு வந்தி வந்தாள். அவளுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் ஏதோ சிறிது மண் போடப்பட்டிருந்தது. கூலியாளைக் கூப்பிட்டாள். இன்னும் கொஞ்சம் பிட்டு கொடுத்து, கொடுத்த வேலையைச் சீக்கிரம் முடித்து விடும்படி கூறினாள்.

### கடமை மறந்தான்

பொழுது சாய ஆரம்பித்தது. கரை செப்பனிடப்பட்டதைப் பார்க்க அரசவையினர் வந்தார்கள். கரையின் உடைப்பு எல்லாம் சீர்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் வந்திக் கிழவிக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதி மட்டும் அடைக்கப் படவில்லை. 'சலசல'வென்ற தண்ணீர் ஓடிக்கொண்டிருந் தது. இன்னும் கொஞ்சநேரம் அதை அப்படியே விட்டு விட்டால் நகர மக்கள் எல்லோரும் செய்த வேலை உபயோகமற்றுவிடும். கரை உடைப்பு பெரிதாகும். கூலியாளோ இன்னும் வேலையை முடிக்கவில்லை. கும்மாளமடித்துக்கொண்டிருந்தான். அந்தக் கூலியா ளைப் பார்த்தால் யாரும் இவன் கூலிவேலை செய்ய வந்திருப்பவன் என்று கூறமாட்டார்கள். யாரோ பெரிய இடத்துப் பிள்ளை போல இருந்தான். நாடகத் தலைவனாக நடிக்க வந்த கூத்தாடியோ என்று அவனைப் பார்த்தவர் கள் நினைத்தார்கள்.

கடமையை மறந்து களியாட்டம் ஆடிக்கொண்டிருந்த அந்தக் கூலியாளைப்பற்றி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. வந்திக் கிழவிக்காக வேலையை முடித்துத் தருவதாகக் கூறி ஏமாற்றியதை அரசன் உணர்ந்தான். அந்தக் கூலியாளைப் பிடித்து இழுத்துவரக் கட்டளையிட்டான். வந்திக் கிழவியின் கூலியாள் அரசன் முன் நின்றான். நாட்டின் காவலனுக்குக் கடுங் கோபம் அருகிலிருந்த வீரன் ஒருவனிடம் இருந்து சாட்டையைப் பிடுங்கிச் சொடுக்கினான். கூலியாளின் முதுகில் 'சுளீர்' என்று அடி விழுந்தது. அடி விழுந்த வேகத்தில் கூலியாள் தன் கையிலிருந்த கூடையை அந்த உடைப்பில் வீசினான். பிறகு அந்த இடத்தில் அவனைக் காண வில்லை. அவ்வளவுதான். சாட்டையடி அரசன் முதுகிலும் விழுந்தது. அரச மங்கையர்கள், மந்திரிகள், மக்கள், விலங்கினங்கள், பறவைகள் ஆகிய எல்லா ஜீவராசிகள் முதுகிலும் 'சுளீர்' அடி விழுந்தது. பிரபஞ் சமே நடுங்கியது. வைகைக்கரை உயர்ந்தது. வெள்ளம் அடங்கியது. மன்னனுக்கும், மக்களுக்கும் கூத்தர் பெருமான் காட்சி அளித்தான்.

இதையொட்டிய திருவிழா ஆண்டுதோறும் ஆவணி மாதம் மதுரை நகரிலே நடக்கிறது. இந்தத் திருவிழா வுக்கு பிட்டுத் திருவிழா என்று பெயர் வைகைக் கரையில் உள்ள தென்னைமரச் சோலைக்கு இறைவன் திருவுருவம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு பூஜை செய்வோரும் பொதுமக்களும் பிட்டுக்கு இறைவன் மண் சுமந்ததை விழாவாக நடத்துகிறார்கள். 'பிட்டு' பிரசாதத் திற்கும் 'சுளீர்' அடிக்கும் ஏராளமான பக்தர்கள் காத்து கிடக்கிறார்கள். இது உணர்த்துவது என்ன? கடமை. இதை மக்களுக்கு உணர்த்துவதற்காக இறைவனும் அடிபட்டான். தொண்டு என்பது ஆண்டிக்கும் உண்டு, அரசனுக்கும் உண்டு இறைவன் தனது திருவிளையாடல் மூலம் மக்களுக்கு இதை உணர்த்துகிறான்.

இன்று நாடு அழைக்கிறது, தொண்டு செய்ய அணி திரளுகிறது. அதுதான் தொண்டர் படை. கிராமம் கிராமமாகத் துவக்கப்படும் 'கிராமத் தொண்டர் படை'.

பிட்டு விற்கும் சாதாரண வந்திக் கிழவிக்கும் நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமை இருந்தது. உங்களுக்கு இல்லையா என்ன? உங்கள் கடமை என்ன? கிராமம் கிராமமாக அணி திரளுகிறது. கிராமத் தொண்டர் படை தோள் கொட்டுகிறது. சேருங்கள்! செயலாற்றுங்கள்.

[Adaptation from 'Panchayati Raj']



"கூற்றுடன்று மேல்வரினுங் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை".



# சிங்காநல்லூர் யூனியனில் மாதர் சங்கங்களின் சிறப்பான பணிகள்

திரு. சி. ரா. இலக்குமிகாந்தன்—ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கிராமிய உயர்நிலைக் கல்லூரி.

கிராமத் தொண்டர் படையின் முக்கிய பணிகளில் மாதர் நலப் பணி ஒன்று. தேசிய நெருக்கடி நிலையில், கிராமத் தொண்டர் படையின் பணி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூர் பஞ்சாயத்து யூனியன், மாதர் நலத்துறையில் ஆற்றியுள்ள பணிகளைப் பற்றி இக்கட்டுரை கூறுகிறது.

பெண்களுக்கு "சம உரிமை' கொடுப்பதிலும், நாட்டு வளர்ச்சியில் அவர்களை ஈடுபடவைப்பதிலும் மகாத்மா காந்தி முதல், பாரதி, திரு வி. க. வரை பல பெரியார் கள் அயராது பாடு பட்டனர்.

நாடு விடுதலையடைந்த பிறகு பெண்கள் முன்னேற்றத் திற்காக அரசினர் பலவகையிலும் பாடுபட்டு வருகின்றனர். மாநிலந்தோறும் 'மாதர் நலக்குழு ஒன்று அமைக்கப் பட்டு திறம்படச் செயலாற்றி வருகிறது. கிராமங்களின் முன்னேற்றத்திற்காக சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கிய போது பெண்கள் நலமும் அத்திட்டத்தில் முக்கிய இடம் பெற்றது.

### சிங்கா நல்லூர் யூனியனின் சீரிய பணி

அண்மையில் நாங்கள் வட்டாரப் பயிற்சிக்காக (Block Placement) கோவை அருகே உள்ள சிங்காநல்லூர் பஞ்சாயத்து யூனியனுக்கு சென்றிருந்தபோது அந்த யூனியனில் சிறப்பாக நடைபெற்றுவரும் பல்வேறு அபி விருத்திப் பணிகளையும், சாதனைகளையும் நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. அந்த வட்டாரத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் எங்கள் மனதில் பசுமை யாக பதிந்து விட்டன.

சிங்கா நல்லூர் யூனியன் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதி முதல் பணிபுரியத் தொடங்கியது. இங்கு மொத்தம் ஏழு பஞ்சாயத்துக்கள் உள்ளன. இந்த மிகக் குறுகிய காலத்தில் அங்கு இதுவரை எட்டு மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு செயலாற்றத் தொடங்கி விட்டன. கிருஷ்ணராயபுரம், நீலிக்கோணம்பாளையம், ஒண்டிப்புதூர், நஞ்சுண்டாபுரம், உடையம்பாளையம், கிருஷ்ணாபுரம், கள்ளிமடை, சௌரிபாளையம் ஆகிய எட்டு ஊர்களில் தற்பொழுது மாதர் சங்கங்கள் பணிபுரிகின்றன. மீதமுள்ள ஒரு சில இடங்களில் மாதர் சங்கம் துவக்கு வதற்கான முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன இந்த சங்கங்களில் நடைபெறும் செயல்களை பொதுவான பணிகள், சிறப்பான பணிகள் எனப் பிரிக்கலாம்.

### பொதுவான செயல்கள்

பொதுவாக ஒவ்வொரு மாதர் சங்கமும் வாரம் ஒரு முறை கூடுகிறது. சமையல் செய்யும் முறைகள், புத்தகங் கள் படித்து சர்ச்சை செய்தல். சேமநலத்தைப்பற்றிய சொற்பொழிவுகள் ஆகிய நிகழ்ச்சிகள் பெருவாரியாக நடை பெறுகின்றன. இவைகளின் வாயிலாக மாதருடைய அறிவு விரிவடைவதோடு, குடும்ப நிர்வாகம, சமயற்கலை ஆகியவற்றைப்பற்றித் தெரிந்து அதன்படி செயலாற்றுகின் றனர்.

பெண்களுடைய ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன் படுத்தும் பொருட்டு பூவேலை செய்தல் தையல் ஆகியவைகளில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள் ளது. கிருஷ்ணராயபுரம், நீலிக்கோணம்பாளையம் ஆகிய இரண்டு மாதர் சங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டு தையல் இயந்திரங்கள் வீதம் 4 வாங்கியுள்ளன. மற்ற சங்கங்களும் விரைவில் வாங்க விருக்கின்றன. இரண்டு தையல் இயந்திரங்களின் விலை சுமார் ரூ. 500 ஆகிறது. யூனியனிலிருந்து இதற்காக ஒவ்வொரு மாதர் சங்கத்திற்கும் ரூ. 200 நிதியுதவி கிடைத்துள்ளது.

### கலைகளில் சிறந்தது சமையற்கலையே!

எளிய முறையில், சிக்கனமான வகையில் சத்துள்ள உணவைத் தயாரிப்பதெப்படி, புதிய பலகாரங்கள் செய்வதெப்படி போன்றவைகளைப் பற்றி 'செய்முறை காட்டல்' (Demonstration) மாதந்தோறும் நடைபெறு கிறது. யூனியனில் உள்ள எல்லா மாதர் சங்கங்களிலும் உள்ள பெருவாரியான உறுப்பினர்களின் வீடுகளில் எளிய முறையில் சோறு சமைக்கும் முறை (வைக் கோல் அடுப்பு முறை) கையாளப்படுகிறது. இதனால் விறகுச் செலவு குறைவதோடு பெண்கள் அதிக நேரம் சமையலறையில் கண்ணை கசக்கிக்கொண்டு தொல்லைப் படவேண்டிய கெடுதலும் குறைகிறது.

வீடுகளில் காய்கறித் தோட்டம் அமைப்பதற்காக மாதர் சங்க உறுப்பினர்களுக்கு யூனியனிலிருந்து விதைகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டு பல வீடுகளிலும் காய்கறித் தோட்டங்கள் அமைத்துள் ளனர். இதனால் இரண்டு நன்மை. முதலாவதாக அவர்கள் வெளியிலிருந்து காய்கறிகள் வாங்குவதற் காகும் செலவு குறைகிறது. இரண்டாவதாக புத்தம் புதிய காய்கறிகளை அவ்வப்போது சமையல் செய்ய முடிகிறது.

ஒவ்வொரு மாதர் சங்கமும் ஆண்டுதோறும் குழந்தை கள் கண் காட்சி (Baby-show) நடத்தி சிறந்த குழந்தை களுக்குப் பரிசு வழங்குகிறது. யூனியனிலிருந்து இதற் காக ஆண்டு தோறும் ரூ. 20 நிதியுதவி கிடைக்கிறது. இதன் வாயிலாக குழந்தைகளை சிறந்த முறையில் வளர்ப்பதற்கு பெற்றோர்களுக்கு உற்சாகம் கொடுக்கப்படு கிறது.

### மாதர் சங்க பாங்கு

பல சங்கங்களில் சீட்டு குலுக்கல் முறை உள்ளது. அதாவது, உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வாரந் தோறும் தலைக்கு எட்டணா வீதம் கொடுத்து வர வேண் டும். ஒவ்வொரு வாரமும் ஒரு முறை உறுப்பினர்களின்

கூற்றமே சினங்கொண்டு தன்மேல் எதிர்த்து வந்தாலும், ஒன்றுகத் திரண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதே படையாகும்.

பெயர்கள் அடங்கிய சீட்டுகளைக் குலுக்கி திருவுளச் சீட்டு முறையில் பொறுக்கியெடுக்கப்படும் உறுப்பினருக்கு ஒரு ஆண்டிற்கான முழுத்தொகை கொடுக்கப்படும். இப்பணம் அவர்களுக்கு அவசர காலத்திற்கு உதவுவதாக இருக்கிறது. இல்லாவிடில், அதை அப்படியே சேமிப்பில் போட்டு வைக்க முடிகிறது. ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் மறுமுறை வராது. தேர்ந்தெடுத்த பிறகும் அவர்கள் ஆண்டு இறுதி வரை வாரச்சீட்டுத் தொகையான எட்டு அணாவை செலுத்தி வர வேண்டும்.

சங்க உறுப்பினர்களுக்குப் பிரார்த்தனைப் பாடல்கள், சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா சங்கங்களிலும் தேசிய விழாக்களையும், தலைவர்களின் பிறந்த தின விழாக்களையும் ஆண்டுதோறும் கொண்டாடுகிறார்கள்.

மேற்கூறியவை எல்லா சங்கங்களிலும் நடைபெறும் பொதுவான செயல்கள். ஆனால் சில சங்கங்களில் தற்பொழுது நடைபெறும்—நடைபெறவிருக்கும்—சில செயல்கள் எங்களை வெகுவாகக் கவர்ந்தன. அவைகளை இங்கு குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்.

## ‘பால்வாடி’ பள்ளிகள்

கட்டாய இலவசக் கல்வித்திட்டத்தை அமுல்படுத்துவதில் சில நடைமுறைப் பிரச்னைகள் இருப்பதை அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். அவற்றுள் ஒரு முக்கிய பிரச்னையை குறிப்பிட வேண்டும். விவசாயப் பகுதிகளிலும், தொழிற்சாலை உள்ள பகுதிகளிலும் பல குடும்பங்களில் தந்தை, தாய் இருவரும் வேலையில் ஈடுபட வெளியே செல்லும்போது வீட்டில் உள்ள சிறு குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு வீட்டில் உள்ள வயதுவந்த சிறுவர், சிறுமிகளுக்கு ஏற்படுகிறது. இதனால் வயது வந்த அச்சிறுவர்கள் பள்ளிக்கு வர முடியாத நிலைமை உண்டாகிறது. இது எல்லா கிராமங்களிலும் உள்ள பொதுப்படையான பிரச்னை. இதைத் தீர்ப்பதற்கு 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, அயல் நாடுகளில் இருப்பது போல் முன்னோடிப் பள்ளிகள் அல்லது **பாலர் பள்ளிகள்** (Nursery Schools) துவங்குவதே சிறந்த வழியாகும். ஆனால் நிதிப்பற்றுக் குறை காரணமாக 3-வது ஐந்தாண்டுத்திட்டத்தில், அரசினர் எல்லா கிராமங்களிலும் இது போன்ற பள்ளிகளைத் துவக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இப்பிரச்னையைத் தீர்க்க சிங்காநல்லூர் யூனியனில் உள்ள **கிருஷ்ணராயபுரம், கிருஷ்ணபுரம்** ஆகிய இரு ஊர்களில் மாதர் சங்கமே வெளியார் உதவியின்றி இது போன்ற பாலர் பள்ளிகளை (பால்வாடி வகுப்புகள்) நடத்துவது மிகவும் போற்றத் தக்க அம்சமாகும். இதற்காக மாதர் சங்கத்தினர் பெற்றோரிடமிருந்து மாதம் ரூ. 1.50 வீதம் வசூல் செய்து, அப்பணத்தைக்கொண்டு, ஊரில் உள்ள, சற்று படித்து வேலையின்றி இருக்கும் பெண்களைத்தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ரூபாய் 20 வீதம் சம்பளம் கொடுத்து அவர்களை இப்பள்ளிகளின் ஆசிரியைகளாக நியமித்திருக்கின்றனர். கிருஷ்ணராயபுரத்தில் இரண்டு ஆசிரியைகளும், கிருஷ்ணபுரத்தில் ஓர் ஆசிரியையும் தற்பொழுது பாலர்களுக்கான வகுப்பை நடத்துகின்றனர். வகுப்பை நடத்தும் முறைகளுக்கான சிறு பயிற்சியை முக்கிய சேவிகாவே அந்த ஆசிரியைகளுக்கு அளித்துள்ளார்.

**ஒண்டிப்புதூர்** மாதர் சங்கத்தினர் “ **நூல்கயிறு திரிக்கும்** கூட்டுறவு சங்கம் ” (Cotton Thread Producers Co-operative Society) ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றனர். மாதர்கள் ஒரு பங்கு ரூபாய் 5 வீதம் இது வரை சுமார் ரூபாய் 380-க்கு பங்குகள் போட்டுள்ளனர். ஆரம்பிப்பதற்கான எல்லா முன்னேற்பாடுகளும் முடிந்து விட்டன. இத்தொழிலில் பல பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் 25 பெண்களுக்கு வேலை கிடைக்கும் என்று முக்கிய சேவிகா கூறினார்.

## பால் வழங்குவோம்

**நஞ்சுண்டாபுரம்** மாதர் சங்கத்தினர் ‘**கூட்டுறவு பால் விநியோக சங்கம்**’ (Co-operative Milk Society) ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு பல முன்னேற்பாடுகளை செய்து முடித்து விட்டனர். இந்த சங்கத்தில் பெண்களே உறுப்பினர்களாக இருப்பர். ஒரு வேலையாளை நியமித்து பால் விநியோகம் செய்வதாக முடிவு செய்துள்ளனர்.

இவ்வளவு தூரம் விழிப்புணர்ச்சியடைந்து சிறப்புடன் பணியாற்றும் தாய்மார்கள் தேசிய நெருக்கடியில் தங்கள் பங்கை செலுத்தாமல் இருப்பார்களா? எல்லா மாதர் சங்கத்தினரும் **தேசியப் பாதுகாப்பு நிதிக்கு** மாதந்தோறும் பணம் அனுப்பி வருகின்றனர். இதுவரை (டிசம்பர் வரை) ரூபாய் 1,140 அனுப்பியிருக்கின்றனர். இரண்டு தங்க வளையல்களையும், இரண்டு மோதிரங்களையும் நன்கொடையாக அளித்துள்ளனர்.

இவ்வாறாகப் பல்வேறு அம்சங்களில் சிங்காநல்லூர் யூனியனில் உள்ள மாதர் சங்கப் பணிகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. இந்த சிறப்பான பணிக்கு இந்த யூனியனில் பணிபுரியும் மாதர் நலத்துறை அலுவலர்களாகிய யாரின் பெரும் முயற்சியும் ஆர்வமும் அயராத உழைப்பும் அடிப்படையாக இருக்கின்றன. பெருந்தலைவர்கள் பஞ்சாயத்துத்தலைவர்கள் மற்றுமுள்ள கிராமத் தலைவர்கள்; யூனியன் அலுவலர்கள் ஆகியோரது ஒத்துழைப்பும், ஆதரவும் இந்த சிறப்பான பணிக்கு மற்றொரு காரணமாகத் திகழ்கிறது.

தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும், இது போன்ற மாதர் நலச் செயல்கள் சிறப்பாக நடைபெறுவதற்கான முயற்சிகளை உடனடியாகக் கைக்கொள்ளவேண்டும். **முயற்சி திருவினையாக்கும்!**





# ஆசிரியருக்குக் கடிதம்

**ஆசிரியர், “ கிராம நலம், ” சென்னை-9.**

தங்கள் அலுவலகத்தின் மூலம் வரப்பெற்றுக்கொண்ட “ கிராமநலம் ” டிசம்பர் 1962 இதழில், கிராம அதிகாரிகளின் நிலை, மேற்படியாளர்களின் அதிகாரம், ஊதியம் முதலியவைகளைப்பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிராம அதிகாரிகளையெல்லாம் நீக்கி விடுவார்களா என்பது போன்ற வற்றை தயவு கூர்ந்து என்போன்றோருக்கு விளக்கும்படியும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,<br>
எம். கே. கந்தசாமி,<br>
கிராம முன்சீப்,<br>
பிலிச்சி அஞ்சல்,<br>
கோயம்புத்தூர் மாவட்டம்.

## ஆசிரியர் குறிப்பு

மேலே கடிதத்தில் குறிப்பிட்டுள்ள டிசம்பர் மாத இதழ், ‘கிராம நல’ சிறப்பிதழாகும். அவ்விதழில், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் தமிழாக்கத்தினை வெளியிட்டுள்ளோம். கிராம அதிகாரிகள்–பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகிய இரு சாராரிடையே நிலவ வேண்டிய சுமுகமான உறவுபற்றி ‘கிராம நல’த்தில் தொடர்ந்து கட்டுரைகளும், விளக்கங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழ்நாடு அரசாங்க முன்னாள் தலைமைச் செயலாளர் திரு ஆர். எ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்கள் இந்த விஷயம் குறித்து விடுத்திருந்த வேண்டுகோளை ‘கிராம நல’ 1962 பிப்ரவரி இதழில் வெளியிட்டிருந்தோம். மற்றும், கிராம அதிகாரிகளின் நிலைபற்றியும், அது சம்பந்தமான விஷயங்கள் பற்றிய அரசாங்க ஆணைகளையும் விளக்கங்களையும் “கிராம நல”த்தில் தொடர்ந்து வெளியிட்டுள்ளோம். குறிப்பாக, திருச்சியில் இருந்து வெளியாகும் “ பஞ்சாயத்துச் செய்தி” என்ற பத்திரிகையில், இந்த விஷயம் குறித்து சில சந்தேகங்களை எழுப்பி வெளியான ஒரு கடிதத்திற்கு, 1963 ஜனவரி “ கிராம நல’ இதழில், அரசாங்கத்தின் அதிகார பூர்வமான விளக்கம் “ நிர்வாகச் சிக்கல்களை நீக்கும் வழி ” என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. ‘கிராம நல’த்தைத் தொடர்ந்து வாசித்து வந்துகொண்டிருந்தால், மேலே உள்ள கடிதத்தில் கண்டுள்ள சந்தேகங்களை எழுப்புவதற்கே இடமிருக்காது.

# போர்ப் பரணி

**கவிஞர் கண்ணதாசன்**

எழுகவே! எழுகவே! எழுகவே!<br>
எண்ணிறந்த வயது கொண்ட<br>
இளைய பாரதம் நிமிர்ந்து<br>
எழுகவே! எழுகவே! எழுகவே!

மேருவென்ற மலையின்மீது<br>
  ஏறி வந்த பகைவரை<br>
நேருவென்ற மலையின்மீது<br>
  ஏறி நின்று வீழ்த்துவோம்

வீரங்காட்டி மடிந்தபேர்க்கு<br>
  வீர வாழ்த்துப் பாடுவோம்<br>
வீடுதோறும் அவர்கள்பேரை<br>
  சேய்களுக்குச் சூட்டுவோம்

மானமொன்று போனபின்பு<br>
  ஞானம் பேசமுடியுமோ<br>
வந்தநாய் முன் கைகள்கட்டி<br>
  நொந்துவாழ இயலுமோ

சீனமல்ல வேறு எந்த<br>
  தேசமேனும் எங்களை<br>
ஈனமாக்க முயலுமாயின்<br>
  ஊனமாக்கி ஓட்டுவோம்

தீங்குசெய்யும் மனிதர் என்றும்<br>
  ஓங்கி வாழ்ந்ததில்லையே!<br>
சீனநாட்டுக் கதையில் கூட<br>
  தீயர் வாழ்ந்ததில்லையே!

தாங்குகின்ற சக்தியுண்டு<br>
  தாக்குமட்டும் தாக்கலாம்<br>
தர்மதேவன் கோவில்மீது<br>
  மணியின்ஓசை கேட்கலாம்

வணங்குகின்ற கைகள்நோக்கி<br>
  வாளெடுத்த சீனரே!<br>
வாழ்த்துரைத்த பாரதத்தை<br>
  வீழ்த்த எண்ணும் வீணரே

இணையநின்ற நண்பர்வீட்டைக்<br>
  கவரவந்த ஈனரே!<br>
இறுதிவெற்றி எமதுஎன்ற<br>
  உறுதி கேளும் வானிலே!

# ஆடுதுறை
# கிராம சேவகர் பயிற்சி நிலையம்

[தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்கள் (Rural Extension Training Centres) பற்றிய குறிப்புகளை 'கிராம நல'த்தில் தொடர்ந்து வெளியிட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இதற்குமுன், இந்தத் தொடரில் தே கல்லுப்பட்டி, சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி ஆகிய பயிற்சி நிலையங்கள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவ்விதழில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆடுதுறை கிராம சேவகர் பயிற்சி நிலையத்தின் வரலாறும் செயல்முறையும் விளக்கப்படுகின்றன. கிராமிய மறுமலர்ச்சிக்கு, அயராமல் உழைத்து வரும் ஊழியர்களை உருவாக்கும் இப்பயிற்சி நிலையங்களைக் குறித்து அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆசிரியர்.]

**தோற்றம்.—**

1954-ம் ஆண்டு மத்திய அரசாங்கத்தின் சிபாரிசுகளின் பேரில் 'தமிழ்நாடு அரசினர் கிராமப் பணிக்கான பயிற்சி கொடுக்கும் பொருட்டு நம் மாநிலங்களில் பல இடங்களில் "ஆதார விவசாயக்கல்விக் கூடங்கள்" (Basio Agricultural training school) திறந்தனர். நம் மாநிலத்தில் அவ்வாறு திறக்கப்பட்ட ஆறு பயிற்சிக் கூடங்களில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆடுதுறையும் ஒன்றாகும். இது 1954-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி ஆதார விவசாயக் கல்விக் கூடமாகத் தோன்றி 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ந் தேதி விவசாயம், விஸ்தரிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்த பயிற்சி நிலையமாக மாறியது. அப்பொழுது எல்லாம் இது ஓராண்டு பயிற்சிக் காலமாக இருந்தது. பின்னர் கிராம விஸ்தரிப்புப் பணி பயிற்சி நிலையம் என்ற பெயரால் விவசாயம் 12 மாதப் பயிற்சியும் விஸ்தரிப்பு 6 மாதப் பயிற்சியும் ஆக 13 மாதப் பயிற்சியாக இருந்தது. பிறகு இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து 24 மாதப் பயிற்சியாக மாற்றப்பட்டு அதில் 3 மாத காலம் பயிற்சியாளர்கள் நேரடியாக கிராமங்களில் இருந்து வேலைப்பயிற்சி பெறுகின்றனர்.

1954-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியில் இருந்து 4 அணிகள் (Batches) பழைய முறையிலும், 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் ஐந்தாவது அணியிலிருந்து இந்த 24 மாதப் பயிற்சியும் கொடுக்கப்பட்டு வருகிறது. 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரை ஒவ்வொரு அணியிலும், 60 பயிற்சியாளர்கள் வீதம் பயிற்சி பெற்றனர். மாதம் 30 ரூபாய் உதவித் தொகையாக 12 மாதங்களுக்கு மட்டும், மாதம் 45 ரூபாயாக 6 மாதங்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி பயிற்சி பெற்றோரின் எண்ணிக்கை 50-ஆக குறைக்கப்பட்டு மாதம் 40 ரூபாயாக உதவித்தொகை 24 மாதங்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் அதிதீவிர சாகுபடித் திட்டம் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி ஆரம்பித்ததினால், ஆறாவது அணியில் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை 80-ஆக உயர்த்தப்பட்டது. 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதி வரை ஆறு அணியாக 380 பயிற்சியாளர்கள் பயிற்சிபெற்று வட்டாரங்களில் பணியாற்றி வருகின்றனர்.

**வேலைக்குத் தேர்ந்தெடுத்தல்.—**

கிராம சேவக் பயிற்சியாளர்களுக்கான தேர்வை சர்க்கார் துணைச்செயலாளர், துணை அபிவிருத்திக்கமிஷனர் (பயிற்சி) ஏதாவதொரு கிராம விரிவுப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் அடங்கிய குழு செய்யும். இவ்வேலைக்கான குறைந்தபட்சக் கல்வி யோக்கியதாம்சம் உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் தேர்வு பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களாவர். இது விஷயத்தில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும், தியாகிகள் குடும்பத்தினருக்கும் இவ்விதிகள் தளர்த்தப்படும். முதலில் மாவட்டரீதியில் நேர்முக பேட்டித் தேர்வு நடைபெறும். பின்னர் திறமைச் சோதனையொன்றும் ஏதாவதொரு பயிற்சி நிலையத்தில் 2 நாட்களுக்கு நடைபெறும். இவைகளில் வெற்றிபெற்றவர்கள் ஏதாவதொரு பயிற்சி நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் பயிற்சியை பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்களிடம் பயிற்சி பூர்த்தி செய்த பின்னர் மூன்றாண்டுகாலம் கிராம அபிவிருத்திப் பணியில் வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்து கொடுத்தல் வேண்டும்.

1. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்கள் கதராடைகளையே உடுத்த வேண்டும்.

2. பயிற்சி நிலையத்தில் சேர்ந்த ஒரு மாத காலத்திற்கு பின்னர் அவர்கள் தகுதிபற்றி மீண்டும் ஒரு சோதனை நடத்தப்படும். இதில் தகுதியில்லாதவர்கள் நீக்கப்படுவார்கள்

### நூல் நிலையம்

பயிற்சியாளர்களுக்கு அறிவின் கருவூலமாக 5,000-க்கு மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட நூல்நிலையம் ஒன்றும் இருக்கிறது. இது ஆசிரியர்களுக்கும், அவர்களுடைய ஓய்வு நேரங்களில் பலபிரிவுகளிலும் தங்களுடைய அறிவை விருத்தி செய்ய உபயோகப்படுகிறது. விவசாயம், காலநடை, கூட்டுறவு, சுகாதாரம், சமூகக்கல்வி, கதர் கிராமக் கைத்தொழில்கள், சம்மந்தப்பட்ட வார, மாத ஏடுகள் தருவிக்கப்பட்டு ஆசிரியர்களாலும், பயிற்சியாளர்களாலும் உபயோகிக்கப்படுத்தப்படுகின்றன. அவ்வப்பொழுது தேவைப்பட்ட புத்தகங்களும் புதிதாக வாங்கப்பட்டு நூல் நிலையத்தின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுகின்றது.

**தொழிற் கூடம்.—**

பயிற்சியாளர்களுக்கு தச்சு, கொல்லு வேலைகளுக்கான பயிற்சியளிப்பதற்கும், விவசாயக்கருவிகளை செப்பனிடுவதற்கும் ஒரு தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

### விவசாயப் பண்ணை

பயிற்சியாளர்களின் செய்முறைப் பயிற்சிக்கென 10 ஏக்கர் 12 செண்ட் நஞ்சை நிலங்களைக் கொண்ட ஒரு விவசாயப் பண்ணையும் இருக்கின்றது. 1 ஏக்கர் 50 செண்ட் தோட்டம் ஒன்றும் உள்ளது. நஞ்சை நிலங்களில் இருபோக சாகுபடி செய்யப்படுகின்றது. அவை குருவையும் தாளடியுமாகும் கோடையில் பசுந்தாள் உரங்கள் பயிர் செய்யப்படுகின்றன தொட்டதில் பலவிதமான காய்கறிகள் பயிர் செய்யப்படுகின்றன. பயிற்சியாளர்கள் பயிர்களின் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும் பயிர் பாதுகாப்பு போன்ற நடவடிக்கையிலும் நேரடிப்பயிற்சி பெறுகின்றனர். இக்கல்வி "செய்தல் மூலம் கற்றல்" என்ற அடிப்படையில் தரப்படுகின்றது.

### பாடத் திட்டங்கள்

**விவசாயம்.—**

விவசாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் சொல்லித் தரப்படுவதோடு, செய்முறைப் பயிற்சியும் தரப்படுகின்றது. விவசாயம், விவசாயப் பொறியியல், மண்வளப் பாதுகாப்பு, பயிற்சிப் பாதுகாப்பு, தோட்டக்கலை போன்ற அம்சங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. பாடத்திட்டத்தில் பெரும் பகுதி விவசாயப் பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**கால்நடை .—**

இத்துறையில் கால்நடை பராமரிப்பின் அவசியத்தையும் இனப்பெருக்கு முறைகளும் கால்நடைகளுக்குண்டாகும் தொத்து நோய்கள் அதைத் தடுக்கும் முறைகள் கர்ப்ப காலத்திலும் ஈன்ற காலத்திலும் கால்நடையைப் பேணும் முறையும் சொல்லித் தரப்படுகின்றன. பால் வெண்ணை தயாரிப்பது போன்றவைகளும் போதிக்கப்படுகின்றன. செய்முறைப்பயிற்சிக்காக அருகில் உள்ள கால்நடை மருத்துவ மனைக்கு மாணவர்கள் சென்று நேரடியாக தெரிந்து கொள்கின்றனர். நிலையத்தில் ஒரு கோழிப்பண்ணையும் இருக்கிறது. கோழி வளர்ப்பின் ஒவ்வொரு நிலையிலும் பயிற்சி பெறுகின்றனர்.

### பொதுச் சுகாதாரம்

இப்பாடத்திட்டத்தில் கிராமச் சுகாதார சீரமைப்புப் பணியில் ஆரோக்கியமாக வாழவேண்டிய வழிகள், குடியிருப்பு வசதி, குடிதண்ணீர், விகித உணவு, கழிவுப் பொருள்களை உபயோக முறையில் அப்புறப்படுத்துதல் தொத்து நோய்கள் வரக்காரணம், பரவும் விதம், தடுப்பு முறைகள், குடும்பக் கட்டுப்பாடு முதலியன சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

### கதரும் கிராமக் கைத்தொழிலும்

கிராமப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக விவசாயத்தோடு இணைந்த பல ஓய்வு நேரக் கைத்தொழில்கள் போதிக்கப்படுகின்றன. குறிப்பாக நூற்புத் தொழிலும், தேனி வளர்ப்பு, கைக்குத்தலரிசி போன்ற தொழில்களில் அநுபவத்தோடுகூடிய அறிவும் தரப்படுகிறது.

**கூட்டுறவு .—**

பயிற்சியாளர்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கத்தை நிர்வகிப்பதில் அனுபவம் ஏற்படும்படி செய்வதற்காகவும், அவர்களுக்கு கூட்டுறவு சங்கத்தின அங்கத்தினர்களின் கடமைகளையும், உரிமைகளையும் உணரும்படி செய்வதற்காகவும் இப் பயிற்சி நிலையத்தில் ஒரு கூட்டுறவு பண்டகசாலை ஒன்று இருக்கிறது. இதைப் பயிற்சியாளர்களின் பஞ்சாயத்தார் நடத்துகின்றனர்.

### சமூகக் கல்வி

இப்பாடத் திட்டத்தின்கீழ் சமூக கல்வியின் அவசியத்தை உணர்த்த பல வழிகளும் முறைகளும் போதிக்கப்படுகின்றன. முதியோர் கல்வி, ஆதாரக் கலவி, கட்டாய ஆரம்பக்கல்வி, இளைஞர் விவசாய மன்றங்கள், விவசாய மன்றங்கள், பாலர் மன்றங்கள், மாதர் சங்கங்கள், வாசக சாலைகள், சமுதாய மன்றங்கள் ஆகிய நிறுவனங்களின் வாயிலாக கிராமத்தில் எல்லா சமூகத்தினரையும் எழுச்சியடையச் செய்து மக்களை அணுகுதற்கான சாதனங்கள் அனைத்தும் போதிக்கப்படுகின்றன.

### வளர்ச்சிப் பணிக் கொள்கை

இப்பாடத் திட்டம் எல்லா பாடங்களையும் இணைத்து மக்கள் மத்தியில் சென்று எவ்வாறு செயல்படுவது என்று போதிக்கின்றது. பல்வேறுபட்ட துறையின் அறிவுத்திறன் மட்டும் இருந்தால் போதாது மக்களை உணர்ந்து, அவர்களை அணுகும் முறைகளைத் தெரிந்து விஸ்தரிப்பு முறையில்தேர்ச்சி பெற்றாலின்றி கற்றனவெல்லாம் விழலுக்கிறைத்த நீராக மாறிடக்கூடும். இந்நிலை ஏற்படாவண்ணம் விஸ்தரிப்புக் கல்வி மாணவர்களுக்கு விஸ்தரிப்பு முறைகளை போதிக்கின்றது.

**பஞ்சாயத்து.—**

கிராமப் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்றம், இவைகளின் தனித் தனி வேலைகளைப் பற்றி விபரமாக போதிக்கப்படுகின்றது. 1958-ம் வருடத்திய புதிய பஞ்சாயத்துச் சட்டம் அதற்குக் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், இவை விபரமாக போதிக்கப்படுகின்றது. நேரிடைப் பயிற்சிக்காக பக்கத்திலுள்ள பஞ்சாயத்து அலுவலகங்களுக்கு அழைத்துச் சென்று போதிக்கப்படுகின்றது.

"தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை அறிந்து".

தன்மேல் எதிர்த்து வந்த பகைவரின் எதிர்ப்பை தாங்கி வெல்லும் தன்மையறிந்து, அவருடைய முதற்படையை எதிர்த்துச் செல்ல வல்லதே படையாகும்.

முக்கியமாக பஞ்சாயத்து ராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கை, தத்துவம், குறிக்கோள் முதலியவை விளக்கப் படுகின்றன.—

### சிறு பொறியியல்

கிராமங்களுக்குத் தேவையான மண்சாலை, சப்பிசாலை, சிறிய மதகுகள், பாலங்கள், சிறிய சமுதாய கட்டிடங்கள் முதலியவைகள் அமைப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் விளக்கப்படுகின்றன.

### பயிற்சி நிலைய நிர்வாகம்

இப்பயிற்சி நிலையத்தில் நிலைய முதல்வராக ஒரு மாவட்ட விவசாய அதிகாரி இருக்கிறார். கால்நடை அபிவிருத்தி, விவசாயம், கூட்டுறவு, பொது சுகாதாரம், சமூகக் கல்வி, கதர், கிராமக்கைத்தொழில்கள், விவசாய பொறியியல். இவைகளைப் போதிக்க ஒரு கால்நடை மருத்துவ அதிகாரி, இரண்டு விவசாய பட்டதாரிகள், ஒரு கூட்டுறவு சப்-ரிஜிஸ்டிரார். ஒரு செலக்ஷன் கிரேடு ஹெல்த் இன்ஸ்பெக்டர், ஒரு சமூகக் கல்வி அமைப்பாளர் ஒருகதர் கிராமக் கைத்தொழில் ஆசிரியர், ஒரு மெக்கானிக் முதலியோர் நிரந்தரமாக இந்த நிலையத்தில் இருக்கிறார்கள். பயிற்சி நிலைய பண்ணையைக் கவனிக்கவும் நேரடி பயிற்சி (Practical) அளிக்கவும், ஒரு விவசாய பட்டதாரி இருக்கிறார். மேலும் சிறு பொறியியல, பஞ்சாயது இப்பாட திட்டங்களை திருவிடைமருதூர் பஞ்சாயத்து கூட்டு மன்றஅலுவலகத்திலுள்ளகூட்டுமன்ற பொறியியலாளரும் பஞ்சாயதது விஸ தரிட்பாளரும் வகுப்புக்கள் எடுக்கிறார்கள் பொது சுகாதாரத்தில் மருத்துவ சம்மந்தப்பட்ட பாடங்களை கும்பகோணம் நகராட்சி சுகாதார அதிகாரி வகுப்பு எடுக்கிறார். இதைத் தவிர காந்தீயக் கொள்கைகள், நிர்மாணத்திட்டங்கள இதுபோன்ற பொது விஷயங்களைத் தனிப்பட்ட உத்தியோகப் பற்றற்ற தலைவர்களும், உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறறவர்களும் பிரத்தியோக போதனையாளர்களாக வந்து அரிய சொற்பொழிவாற்றுகிறார்கள். பயிற்சி நிலையங்களின் மேற்பார்வையாளராக இருக்கும் துணை அபிவிருத்தி ஆணையாளர் (பயிற்சி), மாநில கூட்டு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களும் அவ்வப்போது வந்து அறிவுரைகள் வழங்குகிறார்கள்.

போதிக்கப்படும் பாட திட்டங்கள சரியானபடி நடக்கின்றனவா என்பதை ஆராயவும், ஆசிரியர்களுக்கு வேண்டிய சம்மந்தப்பட்ட பாடத்திட்ட நுணுக்கங்களை அறிவிக்கவும் ஒவ்வொரு ஆறுமாதக் கடைசியிலும் சம்மந்தப்பட்ட இலாகாவின் மாநில அதிகாரிகளில் ஒருவர் பயிற்சி நிலையத்துக்கு விஜயம்செய்து ஆவன செய்கிறார்கள்.

—x—

## நேருவின் ஆணை

தேவிதாசன்

நஞ்சிருக்கும் பாம்புதனைத் தின்கின்ற தாலே
நஞ்சுளதோ சினர்தம் நெஞ்சினிலே? புத்தர்
நெஞ்சினிலே மலர்ந்தெழுந்த அறிவுரைகள் எல்லாம்
நிலந்தோண்டிப் புதைத்திட்ட அரக்கர்கள் ; நமர்
நெஞ்சினிலே குடியிருக்கும் அறநெறிகள் என்ற
நெருப்பினிலே அழிந்திடுவார்! உறுதியிதே!
—ஆமாம்

அஞ்சிடவே வேண்டாம்என் ஆண்மையுடை யோரே
அரசாங்கக் கொள்கைகளை ஆதரிக்க வாரீர் !

இதுநல்ல சமயமென உலகரங்கிற் கண்டோம்
இமயத்தைக் காத்திடவே சபதமிகக் கொண்டோம்
எதுவரினும் தளராமல் உழைத்திடவே வேண்டும்
இயலும்வரை சிக்கனத்தில் வாழ்ந்திடவும்
வேண்டும்
புதுப்புதிதாய்த் தொழிற்பெருக்கம், திட்டங்கள்
கொஞ்சம்
பொறுப்பறிந்து சூழ்ந்திருக்கும் நெருக்கடியிலே
ஒதுக்கிவைக்கும் நிலைவரினும், அரசதனின் கொள்கை
உணர்ந்தென்றும் உதவியெலாம் வழங்கிடவே
வேண்டும்.

நேரத்தை வீணாக்காமல் முயற்சி கொண்டு
நிலமுழுதே உற்பத்தி பெருக்கிடுதல் வேண்டும்
பாரத்தைச் சுமக்கின்ற மனவலிமை வேண்டும்
பயமுறுத்தும் வதந்திகளை ஒழித்திடவே வேண்டும்
சாரத்தைப் பிழிந்தெடுத்த சக்கைபோலா றலும்
சதிகாரச் சிறுவை முறியடிக்க வேண்டி
வீரத்தில் குன்றாது தலை நிமிர்ந்து, நேரு
விதிக்கின்ற ஆணையிலே போரிடுவோம், வாரீர் !

———



# மதுரை மாவட்டத்தில்


1

### ஊருக்கு ஒரு படை !

மதுரை மாவட்டத்தில், கிராமத் தொண்டர் படை ஆரம்ப விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி இந்த விழா சம்பந்தமாக, மதுரை நகரம், மாடக்குளம், உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், பெரியகுளம், வத்தலகுண்டு, வாடிப்பட்டி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், நத்தம் ஆகிய ஊர்களுக்கு விஜயம் செய்தார். தொண்டர்கள் சீருடை அணிந்திருந்தனர். விழாவில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# கிராமத் தொண்டர் படை அமைப்பு விழா


2


3


4





1, 2—சென்னையில், ஜனவரி, 30-ம் தேதி நடைபெற்ற சர்வோதய தின விழாவில், நூற்பு யக்ஞமும், சம பந்தி போஜனமும் நடைபெற்றது. முதலமைச்சர் நிகழ்ச்சிகளைப் பார்வையிடுகிறார்.

3. சென்னை அசோக் விகாரில், 4-2-63-ல் நடைபெற்ற குழந்தைகள் காட்சிக்கு திருமதி மேதி வந்திருந்து, பரிசுகள் வழங்கினார். பரிசு பெற்ற குழந்தைகளுடன் திருமதி மேதியை படத்தில் காணலாம்.

4. 10-2-63-ல் தமிழ்நாடு மாணவர் சமூக நலப்பணிக் கழக விழாவில் ஏழைப் பள்ளிச் சிறுமிகளுக்கு செய்தித்துறை அமைச்சர் திரு பூவராகன் உடை வழங்குகிறார்.

5. ஆவடி, சத்தியமூர்த்தி நகரில், அமைக்கப்பட்டுள்ள தனி போலீஸ் படையினர் குடியிருப்பை முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

6. குடியிருப்பின் தோற்றம்.













ஜனவரி 26-ம் தேதியன்று செங்கற்பட்டு மாவட்டம் பழவந்தாங்கல் கிராமத்தில் அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு எஸ். கே. செட்டூர், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் 'கிராமத் தொண்டர் படை' ஆரம்பவிழா நடந்தது.

கொடியேற்று விழா, கிராமத் தொண்டர் படையினர் பாதையைச் செப்பனிடுதல், 'அணிவில்லை' அணிவித்தல், ஆலந்தூர் நகரைச் சேர்ந்த கிராமத் தொண்டர் படை ஊர்வலம் ஆகிய காட்சிகளை படங்களில் காணலாம்.





# ராஷ்டிரபதியின் சென்னை விஜயம்





## பச்சையப்பன் கல்லூரியில்

1. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் 5-1-63-ல் பச்சையப்பரின் சிலையைத் திறக்க வருகை தந்தபோது, பத்மவிபூஷன் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களும், பச்சையப்பன் அறநிலையத் தலைவர் சீதாராமன் அவர்களும் அவரை வரவேற்றனர். பச்சையப்பரின் சிலை வடித்த சிற்பி திரு வெங்கடேசன் ராஷ்டிரபதியின் அருகில் இருப்பதைப் படத்தில் காணலாம். 2. பச்சையப்பரின் உருவச்சிலை.

3. சென்னையிலிருந்து தனி ரயில் மூலம் வேலூர் புறப்பட்ட ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்களை முதலமைச்சரும், அரசாங்க அதிகாரிகளும் வழியனுப்பிவைத்தனர்.

4. சேலம் சாரதா பெண்கள் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட ராஷ்டிரபதிக்கு திருமதி சீதாலட்சுமி ராமசாமி வரவேற்புரை படித்து வழங்கினர்.

5. விழாப் பந்தலில் பெண்கள் பகுதி.

(விவரம் 30–31 பக்கம் பார்க்க.)







## சேலம் சாரதா கல்லூரியில்

# தமிழ்நாட்டில் கிராமத் தொழில்கள்

[செங்கற்பட்டு மாவட்ட அதிகாரிகள், கிராமத் தொழில் பற்றிய வளர்ச்சிப்பணி அதிகாரிகள் ஆகியோரின் கூட்டம் ஒன்றில், பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநரும், கதர்-கிராமத் தொழில் போர்டு செயலாளரும், மாவட்ட அளவில், கிராமத் தொழில்கள் பற்றிய கூட்டங்களைக் கூட்டுவது நலம், என்று முடிவு செய்தனர். செங்கற்பட்டு கூட்டத்தை, கதர்-கிராமத் தொழில் கமிஷன் உறுப்பினர் திரு கே. அருணாசலம் அவர்கள் ஏற்பாடு செய்தார். தமிழ் நாட்டில் கிராமத் தொழில்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை கீழ்க்கண்ட கட்டுரை விளக்குகிறது]

மாவட்ட அளவில் நடக்கும் கிராமத் தொழில் பற்றிய கூட்டங்களில், செயல்பட்டுவரும் கிராமியத் தொழில் திட்டத்தில் ஏற்படும் முன்னேற்றங்களை அளவிட்டுக் காண்பது, இத் திட்டத்தை எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களில் விரிவுபடுத்த, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தேவையான விளக்கங்களை அளித்தல் ஆகிய விஷயங்கள் ஆராயப்படும். தமிழ்நாட்டில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலங்களில், கிராமத் தொழில், குடிசைத் தொழில், சிறு முதலீட்டுத் தொழில்கள் (Small-scale Industries) ஆகிய தொழில் திட்டங்களை சமுதாய அபிவிருத்திப் பகுதிகளில் நிறைவேற்றுகின்ற பொறுப்பு தொழில்-வாணிகத்துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் இருந்து வந்தது. இத் திட்டங்களை, மாவட்ட அளவில், தொழில்-வாணிகத்துறை உதவி இயக்குநர் கிராமத் தொழில் அதிகாரியின் துணையுடன் நிறைவேற்றி வந்தார்.

அரசாங்கம் 1961 அக்டோபர் மாதம் பிறப்பித்த ஒரு ஆணையின் மூலம் கிராமத் தொழில்கள் பற்றிய திட்ட நிர்வாகத்தை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் போர்டினிடம் ஒப்படைத்துள்ளது பின்னர், கிராமத் தொழில் திட்ட நிறைவேற்றத்திற்கென்று ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்துக்கு 50,000 ரூபாய் மானியம் ஒதுக்கியதுடன், பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்து நடத்தத்தக்க வேலைத் திட்டங்களின் மாதிரியையும் குறிப்பிட்டுள்ளது. மேலும், 1962 செப்டம்பர் மாதம் 4-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கையில், "கிராமத் தொழில்கள்" பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் இரண்டாவது முக்கியப் பொறுப்பாகக் குறிப்பிட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய முதல் முக்கியப் பொறுப்பு 'விவசாயம்' என்பது அனைவரும் அறிந்ததே.

### தொழிலைத் தேர்ந்தெடுத்தல்

தத்தம் பகுதியில் அபிவிருத்தி செய்யத்தக்க கிராமத் தொழில் என்ன என்பதை பஞ்சாயத்து யூனியன்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. மூலப்பொருட்கள் முதலானவற்றை வாங்குவதற்கு, மாநில கதர் கிராமத் தொழில் போர்டு வழங்கும்படி முதலீட்டுக் கடன்களை வழங்க வசதி செய்யும்.

கிராமத் தொழில் அதிகாரியினால் சிபாரிசு செய்யப்படும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் ஆலோசனைகள் மாநில கதர்-கிராமத் தொழில் போர்டினால் அனுமதிக்கப்படும். இத் திட்டங்களை போர்டு செய்யும் நிதி வசதிகளைக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும்.

கதர் கிராமத் தொழில் கமிஷனின் கிராமத் தொழில் கூட்டுறவுகளையும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் சிபாரிசுகளின் பேரில், கதர்-கிராமத் தொழில் போர்டு, பதிவு செய்து கொள்ளுதல், நிதி வசதிகள் செய்தல், நிர்வகித்தல் ஆகியவற்றைச் செய்யும்.

### விற்பனை வசதிகள்

கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள், தொழில் கூட்டுறவுகள், தொழில் நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் நேரடியாகப் பொதுமக்களுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படும். இந்த உற்பத்திப் பொருட்களைப் பரப்ப, மாநிலத்தின் முக்கிய நகரங்களில் கிராமோத்யோக விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்.

தமிழ்நாட்டின் பதின்மூன்று மாவட்டங்களில், அநேகமாக எல்லா மாவட்டங்களிலும், பரம்பரைக் கைத் தொழிலாளர், பிற தொழிலாளர். பரப்பத்தக்க புதிய தொழில்கள், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் வருங்காலத்தில் அவற்றை விரிவுபடுத்தத்தக்க ஆதாரங்கள் ஆகியவற்றைக் கணக்கெடுத்து விவரப் பட்டியலைச் சேகரிக்கும் வேலையை முடித்துள்ளன.

### சேலம் மாவட்டத்தில். .......

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் போர்டு எவ்வாறு இத்திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது என்பதை விளக்கும் வகையில், தென் சேலம் அபிவிருத்தி மாவட்டத்தின் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்ட புள்ளி விவர விளக்கமும், கிராமத் தொழில் திட்ட நிறைவேற்றத்தில் ஈடுபட்டிருக்கும் மாநிலத் தொழில் துறை அதிகாரிகளின் கணக்கும் கீழே தரப்படுகிறது. தென் சேலம் அபிவிருத்தி மாவட்டத்தில் உள்ள 29 வட்டாரங்களில், 9 வட்டாரங்களில் மட்டுமே இப்போது தொழில் வளர்ச்சி அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றனர். தென் சேலம் மாவட்டத்தில் சுமார் 20,000 கைத்தொழிலாளர் பல்வேறு பரம்பரைத் தொழில்களிலும், சிலர் புதிய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். அவர்களுள் 75 சத

(29-ம் பக்கம் பார்க்க)

# நலப்பணிக் குழுவின் பணிகள்

*தேசிய நெருக்கடி நிலையினைச் சமாளிப்பதற்கான பாதுகாப்பு முயற்சிகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்திச் செயல்படுத்தும் குறிக்கோளுடன், மாநில தேசியப் பாதுகாப்பு உதவிக்குழு அமைக்கப்பட்டதும், அக்குழுவின் செயற்குழுவும், நலப் பணிகளுக்கான துணைக்குழுவும்* **(Welfare Amenities Sub-Committee of the State Defence Aid Committee)** *அமைக்கப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. ராணுவ வீரர்களுக்கு வசதிகள் செய்தல், அவர்களுடைய குடும்ப நலன்களைப் பேணுதல், இந்த வகையில் தனிப்பட்டவர்கள் முனைவந்து செய்யும் உதவிகளை ஒருமுகப்படுத்துதல் ஆகிய வேலைகளைச் செய்வதே இத் துணைக்குழுவின் பணியாகும். (இக்குழுக்களின் அமைப்பு பற்றிய விவரங்களை ஏற்கனவே 'கிராம நலம்' ஜனவரி* **1963** *இதழில் வெளியிட்டிருக்கிறோம்).*

*ராணுவ வீரர்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய நலன்களைக் கவனித்துக் கொள்வது, ராணுவ வீரர் நலம் நாடும் இக்குழுவின் இன்றியமையாத பணிகளுள் ஒன்றாகும். இப்பணியைத் திறம்படச் செய்வதற்கு, மாநில தரைப்படை, கடற்படை, விமானப்படை வீரர்களைப்பற்றிய முழு தகவல்களை அறியும் பொருட்டு, ராணுவ போர்டு உறுப்பினராக விளங்கும் மாவட்ட வேலை ஏற்பாட்டு அதிகாரியின்* **(District Employment Officer)** *ஒத்துழைப்பைப் பெறவேண்டும். ராணுவப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்கள், அவர்களுடைய குடும்பங்கள், பணி புரிந்துவரும் வீரர்கள் ஆகியோருக்குச் செய்யத்தக்க உதவிகளையும், சலுகைகளையும் அரசாங்கம் அறிவித்துள்ளது. போர் முனையில் உயிர் துறந்த வீரர்களின் குடும்பங்களுக்கு மட்டுமன்றி, யாதொரு தகவலும் தெரியாமல் காணமற்போன வீரர்கள், போர்முனையிலுள்ள வீரர்கள், படையில் சேர்ந்து வரும் வீரர்கள், குடும்பங்களை விட்டுப் பிரிந்து வெகு தொலைவிலுள்ள போர் வீரர்கள் ஆகியோரின் குடும்ப நலன்களையும் கவனித்துக்கொள்ளும் வகையில், இக்குழு திட்டம் தீட்டிச் செயல்பட இருக்கிறது.*

**தமிழ்நாடு தரைப்படை—கடற்படை—விமானப்படை வீரர் போர்டு அனுமதித்துள்ள உதவிகள், சலுகைகள் விவரம் வருமாறு :—**

**1.** *தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் நிதியிலிருந்து பராமரிப்புக்காக அளிக்கப்படும் மாதாந்தர நிவாரண மானியம்.*

**2.** *உடனடியாகத் தேவைப்படும் செலவுகளுக்கு அளிக்கப்படும் நிவாரண மானியம்.*

**3.** *தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் க்ஷயரோக, பெருநோய் நோயாளியாக உள்ள முன்னாள் ராணுவத்தினருக்கு (மாதாந்திர) கைச்செலவுப் பணம்.*

**4.** *மருத்துவமனைகளில் க்ஷயரோகம், பெருநோய் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் ராணுவத்தினர், தம் இல்லங்களுக்கு கால முறைப்படி (ஆண்டுக்கொருமுறை) சென்றுவர போக்குவரவுச் செலவுகள்.*

5 *தேவைத் தகுதியுடையவர்களுக்கு மொத்த மானியம்.*

**6.** *முன்னாள் ராணுவ அரசாங்க ஊழியருக்கு வட்டியுடன் தவணைகளில் திருப்பித்தரத்தக்க குறுகிய காலக் கடன்கள்.*

**7.** *இறந்துபோன ராணுவத்தினரின் மகளுக்குப் படிப்பு உதவித்தொகை.*

**8.** *ஒரு மாதத்துக்கு, ஒருவருக்கு 50 ரூபாய் வீதம் பூனா—கர்க்கி ராணிமேரி தொழில் நுட்பப் பள்ளியில் பயிற்சி பெறும் அங்கவீனமான முன்னாள் ராணுவத்தினருக்கு (ஓராண்டுக்கு அறுவர் வீதம்) பராமரிப்புச் செலவுகள்.*

**ராணுவ போர்டுகள், வேலை ஏற்பாட்டு இயக்குநர் ஆகியோர் ராணுவத்தினருக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் கீழ்க்கண்ட விஷயங்களில் எல்லா உதவிகளையும், சலுகைகளையும் செய்து தருவர் :—**

**1.** *நிலத்தகராறுகள்.*

**2.** *வீடு பற்றிய தகராறுகள்.*

**3.** *சிவில் வழக்குகள்* (Civil suits).

**4.** *ராணுவத்தில் பணிபுரிவோரிடமிருந்து கடிதம், பணம் முதலியன வராமலிருத்தல்.*

**5.** *குடும்ப ஒதுக்கீடுகள்.*

**6.** *ராணுவத்தில் பணிபுரிவோரின் விடுமுறை/மாற்றம்/வேலை நீக்கம் ஆகியவை குறித்து அவர் தம் குடும்பத்தினரின் வேண்டுகோள்கள்.*

**7.** *தந்தி முதலியன பரிசீலனை.*

**8.** *பல்வேறு உதவிநிதிகளிலிருந்து பொருள் உதவி பெற மனு.*

**9.** *வேலை ஏற்பாட்டு உதவிக்கு மனு.*

**10.** *அங்க ஈனமுற்ற முன்னாள் ராணுவத்தினர் ராணிமேரி தொழில் நுட்பப் பள்ளியில் சேர மனு.*

**11.** *அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் க்ஷயரோகம், பெருநோய் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ராணுவத்தினருக்குக் கைச்செலவுப் பணத்திற்கான மனு.*



**12.** *அவர்களின் போக்கு வரவுச் செலவுகளுக்கான மனு.*

**13.** *தகுதிச் சான்றிதழ்—நில ஒப்படைப்பு.*

**14.** *துப்பாக்கி வைத்திருக்க அனுமதி வேண்டுகோள்.*

**15.** *காரோட்ட அனுமதி, நூல் அனுமதி முதலியன வேண்டுதல்.*

**16.** *வேலை நீக்கச் சான்றிதழ்—நகல்கள் வழங்க மனு.*

**17.** *பல்வகை மனுக்கள்.*

**18.** *அண்டையிலுள்ளோர் தொல்லைகள், பாதுகாப்பு மனுக்கள்.*

**19.** *மருத்துவ உதவி—க்ஷயரோக, பெருநோய் நோயாளிகள் மருத்துவமனையில் சேர்த்துக்கொள்ள வேண்டுதல்.*

**20.** *முன்னாள் ராணுவத்தினர் பிற வியாதிகளுக்காக அரசாங்க தலைநகர் மருத்துவமனைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுதல்.*

**21.** *போர்ப்படையில் பணிபுரிந்தமை பற்றிய கணக்குகள் இறுதித் தீர்வு—அதாவது சம்பளப்பாக்கி, நிலுவைச் சம்பளம், பணிக்கொடை* (Gratuity) *முதலியன செலுத்தும்படி கேட்டுக்கொள்ளல்.*

**22.** *பணி—அங்க ஈன—குடும்ப ஓய்வுத்தொகை முதலியன தீர்த்துவைத்தல்.*

**23.** *அங்க ஈனமுற்ற முன்னாள் ராணுவத்தினருக்கு செயற்கைக் கைகள் முதலியன வழங்க மனுச் செய்தல்.*

**24.** *உடனடி நிவாரணத்திற்கான மனு (பல்வேறு உதவி நிதிகளிலிருந்து பொருள் உதவி கேட்பது நீங்கலாக ஏனைய உதவி).*

**25.** *பணியிலுள்ள ராணுவத்தினரின் மனைவி, குழந்தைகள், அருகிலுள்ள அரசாங்க ராணுவ மருத்துவமனைகளில் சிகிச்சை பெறச் சேர்த்துக்கொள்வதற்கான மனுக்கள்.*

*(ராணுவத்தினர் நலம் நாடும் குழு, சென்னை-2, வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது—இக் குழு, மாநில தேசியப் பாதுகாப்பு உதவிக் குழுவின் ஒரு துணைக் குழுவாகும்—இதன் தலைவி திருமதி இளப்வாலா ஜாதவ்)*

---

27-ம் பக்கம் தொடர்ச்சி.

*வீதத்தினர், கிராமத் தொழில் கமிஷனைச் சார்ந்த தொழில்களிலேயே ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பான்மையோர் சாறு இறக்குவோர் (மரமேறிகள்). அவர்கள் மொத்தம் 8,700 பேர் உள்ளனர்.*

*தென் சேலம் அபிவிருத்தி மாவட்டத்தில் தோல் பதனிடுவோர்* 2,141 *பேர்;* 1,831 *பேர் தச்சு—கொல்லுப் பட்டறைத் தொழில் செய்பவர்கள்;* 974 *பேர் கூடை முடைபவர்கள்; கயிறு திரிக்கும் தொழிலாளர்* 807 *பேர்; பாய் முடைபவர்* 976 *பேர்; மண்பாண்டத் தொழிலாளர்* 850 *பேர்: எண்ணெய் வித்துத் தொழிலாளர்* 459 *பேர்; சுண்ணாம்புத் தொழிலாளர்* 674; *ஜமக்காளம் நெய்வோர்* 75 *பேர்; செயற்கை வைரம் பட்டை தீட்டுவோர்* 42 *பேர் உள்ளனர்.*

### கூட்டுறவுகள்

*பனஞ்சாறு இறக்கும் தொழிலாளர்களெல்லாம் கூட்டுறவு அமைப்புக்களின்கீழ் வெல்லம் காய்ச்சும் தொழில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய தொழிலாளர்க்கும் இவை எடுத்துக்காட்டாக விளக்குகின்றன. வெல்லம் காய்ச்சும் தொழிலுக்கு மட்டும் 17,500 உறுப்பினர்களைக்கொண்டே 101 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்தச் சங்கங்கள், இவ்வாண்டு மட்டும் 5·5 லட்ச ரூபாய் மதிப்புள்ள வெல்லத்தை விற்பனை செய்துள்ளன.*

*மற்ற தொழில்களுக்கும் கூட்டுறவுகள் அமைந்து வருகின்றன. 7 சணல் தொழிலாளர் கூட்டுறவுகளும், 6 தோல் பதனிடும் தொழிலாளர் கூட்டுறவுகளும், கட்டட வேலை, மண்பாண்டத் தொழிலுக்கு 2 கூட்டுறவுகளும் கைக் குத்தலரிசித் தயாரிப்புத் தொழிலுக்கு 4 கூட்டுறவுகளும், உணவுப் பொருளாகா எண்ணெய் சோப்புத் தொழிலுக்கு 1 கூட்டுறவுமாக இப்போது பல தொழிற் கூட்டுறவுகள் தோன்றி வளரத் தொடங்கியுள்ளன. வட்டார வரவு செலவுத் திட்டத்தில் "கலை—கைவினை—தொழில்கள்" என்ற தலைப்பின்கீழ், ஒதுக்கப்பட்டுள்ள 50,000 ரூபாய் நிதியை, இத் தொழிலாளருக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்த அரசாங்கம், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது. மேலும், வேண்டிய உதவிகளுக்கு மாநில போர்டுக்கு எழுதிப்பெறவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.*

*அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், பகுதி நேர வேலையாக தேனீ வளர்த்தல் செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் மொத்தம் சுமார் 642 பேர் இவ்வேலையைச் செய்து வருகின்றனர். தேனீ வளர்ப்புக்குத் துணைக்கருவிகளின் தேவை அதிகமாகி வருகிறது.*

*சில வட்டாரங்களில் கம்பளித் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பயிற்சி பெற்ற மூன்று நெசவாளர் குடும்பங்கள் உள்ளூர் தேவைக்கான ஜமுக்காள நெசவில் ஈடுபட ஊக்குவிக்கப் பட்டுள்ளன.*

*(பம்பாய் காதி கிராமத் தொழில் கமிஷன் வெளியிடும் "ஜாக்ரிதி" என்ற ஆங்கில இதழிலிருந்து எடுக்கப்பட்டது.)*

(Particulars obtained from "Jagriti" issue, dated 27-12-63).

# அறச் செல்வரின் கல்விப் பணி

**நமது ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜனவரி முதல் வாரத்தில், சென்னை பச்சையப்பன் கல்லூரியில், பச்சையப்பரின் திரு உருவச் சிலையைத் திறந்து வைத்தார். "கல்விச் சிறந்த தமிழ்நாடு" என்பதும் "அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பதும் தமிழ்ப் புலவர் திருவாக்கு. கல்வி வளம் பெருக, பொருள் வளத்தை வாரி வீசிய வள்ளல் பச்சையப்பரின் புகழ்பற்றி அக்கல்லூரி பழைய மாணுக்கர் ஒருவர் தன்னுடைய சிந்தனையில் அலைமோதிய எண்ணங்களை கீழே வெளியிட்டுள்ளார்.**

*ஏழை எளியவர்களை 'தரித்திர நாராயணர்கள்' என்று குறிப்பிடுவது, மகாத்மா காந்தியின் வழக்கம். சமுதாய அமைப்பின் அடிதளத்தில் வாழும் மக்களிடம் அன்பு காட்டும் அருங்குணம் பெரும்பாலோர்க்கு இருப்பதில்லை. வறுமையில் வாடும் ஏழை அழுத கண்ணீரைத் துடைத்து, உதவி புரியும் உத்தம குணம் படைத்த பெரியோர் தமிழ்நாட்டில் அவ்வப்போது தோன்றி தம் புகழ் நாட்டிச் சென்றுள்ளனர். இந்த வகையில், கல்வித்துறையிலே மிகச் சிறந்த சாதனை புரிந்த பெருமை பச்சையப்ப முதலியார் அவர்களைச் சாரும்.*

*சென்னை பச்சையப்பன் கல்லூரியில் அவருடைய, திரு உருவச்சிலையைத் திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்ட நமது ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், பச்சையப்பரின் பரோபகார சிந்தையைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். "வியாபாரத் துறையிலே சிறந்து விளங்கி, தாம் சேர்த்த செல்வம் முழுவதையும் தருமத்துக்காக—சிறப்பாகக் கல்வி முன்னேற்றத்துக்காக வழங்கிய வள்ளன்மை, மிகவும் போற்றற்குரியது" என்றார் "கடவுள் திருப்பணிக்கு ஈடாகக் கல்விக் திருப்பணியைக் கருதிச் செய்த உண்மை பக்தர் பச்சையப்பர்" என்று ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.*

*பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த செல்வர்களுள் முதன் முதலாக, கல்விக்காக அறநிலையங்களை ஏற்படுத்திய பெருமை பச்சையப்பரையே சாரும். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளை வாழ்ந்த அப் பெரியவர், ஆயிரக் கணக்கில் பொருளைச் சம்பாதித்தார். பக்தி நெறியிலும், ஒழுக்க சீலத்திலும், சிறந்து விளங்கிய அவர் வாழ்க்கை ஏழை எளியவர்களிடம் மிகுந்த அன்பு காட்டுவதிலேயே கழிந்தது.*

### விழா நிகழ்ச்சி

*பச்சையப்பரின் சிலை திறப்பு விழாவிற்கு அனைவரையும் வரவேற்றுப் பேசிய, அறநிலையத் தலைவர் திரு சீதாராமன் அவர்கள், கல்லூரி, படிப்படியே வளர்ந்த வரலாற்றை எடுத்துரைத்தார்.*

*வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் தலை சிறந்து விளங்கும் அறிஞர் பலர் இங்கு கல்வி பயின்றுள்ளனர். கல்லூரியின் முதல்வர்களாகப் பணிபுரிந்த பேரறிஞர்களைப் பற்றி இப்போதுள்ள கல்லூரி முதல்வர் திரு சி. டி. ராஜேஸ்வரன் அவர்கள் விளக்கினர்.*

*சிறப்பாக, பச்சையப்பன் கல்லூரிக்கும், தமிழ்ப் பணிக்கும் மிகுந்த தொடர்புண்டு. திரு செல்வகேசவராய முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார், மோசூர் கந்தசாமி முதலியார், டாக்டர் மு. வரதராசனுர், டாக்டர் துரை அரங்கனுர், முதலான புகழ்பெற்ற தமிழறிஞர்கள் இக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர்களாகப் பணியாற்றினர். சென்னைப் பல்கலைக்கழகத்தில், ஆங்கிலத்துக்கு இருப்பது போன்றே தமிழ் இலக்கியத்திற்கும் பட்டப்படிப்பு வசதிகளையும், சம அந்தஸ்தையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, 'பத்ம விபூஷன்' டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களையே சாரும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒப்புதல் பெற்று முதன் முதலாக பி. ஓ. எல். (ஆனர்சு) என்ற பாடத் திட்டத்தை 1940-ல் அமுல் நடத்தினர். சென்னை ராஜ்யத்திலேயே, முதன் முதலாகத் தமிழ்த் துறையில், ஆங்கிலத் தரத்துக்குச் சமமான நிலையை தமிழுக்கு ஏற்படுத்திய துணிவும், பெருமையும், தமிழன்பும் அவரையே சாரும். அச் சமயம் கல்லூரி முதல்வராக திரு. D. S. சர்மா அவர்கள் இருந்தார். அப்போது தமிழ்த்துறை பேராசிரியர்களாக பணி புரிந்தவர்கள் திரு வி. எஸ். சுப்பிரமணிய ஆச்சாரியார், திரு. ரா. நடேச நாயக்கர், திரு. ஏ. எஸ். ஞான சம்பந்தம் ஆகியோர் இந்தப் புதுத் திட்டத்திற்கு, முன்னோடிகளாக இருந்து சிறந்தபணியாற்றினார்கள். முதல் ஆண்டு தேர்ந்த மாணவர்களுள் ஒருவரான திரு ரா. சீனிவாசன் அவர்கள், இதே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியாகப் பணியாற்றி வருவதுடன். மொழியியல் துறையில் ஆராய்ச்சி நடத்திப் பட்டம் பெற்றுள்ளார்.*

*பச்சையப்பன் கல்லூரி, நெருக்கடி மிகுந்த சென்னையின் நடுப் பகுதியிலிருந்து பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள புதிய கட்டிடங்களுக்கு மாற்றப்படுவதற்கும், புதிய புதிய கலைகளை அங்கு கற்பிக்க ஏற்பாடு செய்வதற்கும் காரணமாயிருந்தவர்களில், டாக்டர் ஏ. எல். முதலியார், ராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் ஆகியோர், குறிப்பிடத்தக்கவர்களாவர். சென்னைப் பல்கலைக் கழகம், தன் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு முன்னதாகவே, அதாவது 1941-லேயே பச்சையப்பன் கல்லூரியின் நூற்றுண்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அப்போது திரு. வி. திருவேங்கடசாமி அவர்கள் கல்லூரி முதல்வராக இருந்தார்கள்.*

*பச்சையப்பன் கல்லூரிக் கட்டடம், பஞ்சாயத்து அபிவிருத்திக்குப் பயன் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். 1961—அக்டோபரில், பிரதமர் நேரு துவக்கி வைக்க—சிறப்புற நடந்த மாநில பஞ்சாயத்து மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்க இங்கு வசதி செய்யப்பட்டது. இரண்டாவது உலகப் பெரும் போர் நடந்த காலத்தில் அரசாங்கத் தலைமை அலுவலகம இங்கிருந்து செயல்பட்டு வந்துள்ளது*

### எங்கும் தமிழ் மணம்

*கடந்த சுமார் 13 ஆண்டுகளாக இக் கல்லூரியில் தமிழ்த்துறையில் தேறிய பல மாணுக்கர்கள் பல்வேறு துறைகளில், பச்சையப்பரின் புகழை விளக்குகின்ற வகையில், சிறந்த தொண்டாற்றுகின்றனர். பச்சையப்பன் கல்லூரி அற நிலையத்தைச் சேர்ந்த துணை அற நிலையங்களிலிருந்து கிடைக்கும் உதவித்தொகை பெற்று படித்து முன்னுக்கு வருகின்ற ஏழை மாணவர்களின் தொகை ஏராளம். பச்சையப்பர் சிலையில் உள்ள ஏழைச் சிறுவன் இந்த லட்சியத்தை நினைவூட்டும் முறையில் அமைந்துள்ளது. (இதைப் பற்றிய விளக்கம் அந்த சிலையின் அடித்தளத்தில் பார்ப்பவர் புரிந்ததுக் கொள்ளும் வகையில் எழுதப்படுவது மிகவும் நலம்.)*

*பச்சையப்பரின் அன்புள்ளமும், சீல நன்னெறியும், தமிழுணர்ந்த பண்பாடும், அற நெறிக்கொள்கையும், பாரத நாகரிகத்தின் அம்சமாக, தமிழ் நாட்டில் எப்போதும் ஒளி வீசக்கொண்டிருக்கும். பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் செல்லும் அனைவருக்கும் பச்சையப்பன் கல்லூரிக் கட்டிடங்களுக்கு இடையில், அழகுடன் விளங்கும் அவர் திரு உருவம்—ஏழை எளியவர்க்கு, சமுதாயம் ஆற்ற வேண்டிய சேவையை நினைவூட்டும், திருச் சின்னமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.*

**'பழைய மாணுக்கன்.'**

**சேலத்தில் ராஷ்டிரபதி :**

## பெண்மையின் உயர்வு

—o—

### ராஷ்டிரபதியின் பேச்சு

***ஜனவரி மாத முதல் வாரத்தில் சென்னைக்கு விஜயம் செய்த ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், சேலத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ந்தேதி, சாரதா மாதர் கல்லூரியின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார். கல்லூரிக் கட்டிடத்தின் அடிக்கல்லை நாட்டி வைத்து, ராஷ்டிரபதி நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி இது.—***

*"முற்காலத்தில் பெண்களுக்கு உபநயனம் செய்விக்கப் பட்டது. அவர்களுக்கு வேதம் கற்க உரிமை இருந்தது. அவர்கள் காயத்ரி மந்திரங்களும் உச்சரித்தனர். பின்னர் நம்முடைய கலாச்சாரம் அழியத் தொடங்கியது. அந்த அழிவின் முதல் அறிகுறி பெண்களை அடிமைப்படுத்தியதாகும்!*

*"காந்திஜீ மூலம், நாம் சுதந்திரம் பெற்றதும், பெண்கள், மெதுவாக தங்களது பழைய அந்தஸ்தைப் பெற்று வருகின்றனர். இந்தப் புதுஉணர்ச்சியின் சின்னமே 'சாரதா மாதர் கல்லூரி ஆகும்".*

**கல்வியின் நோக்கம்**

*"கல்வியின் நோக்கம், முதலாவதாக, விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம் முதலியவை பற்றிய அறிவை வளர்ப்பதானாலும், உயரிய வாழ்க்கை, காலம் நேரம் இவற்றிற்கு அப்பாற்பட்ட உலகம்-இவை பற்றிய அறிவை வளர்ப்பதுதான், முக்கியமாகும்.*

*"அரசியல், சமூகம், பொருளாதாரம், ஆத்மிகம் முதலிய பல துறைகளிலும், பெண்களை ஆண்களுக்குச் சமமாக நடத்துவது அவசியம்."*

*ராஷ்டிரபதி வேலூரிலிருந்து விசேஷ ரயில் மூலம் சேலம் வந்து சேர்ந்தார். திறந்தகாரில் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி, முதல் அமைச்சர் திரு காமராஜ் ஆகியோருடன் கல்லூரி விழாவில் கலந்து கொண்டார். வழி நெடுகிலும், மக்கள் திரளாகக் கூடியிருந்து, ராஷ்டிரபதியை வரவேற்றனர்.*

*சாரதா கல்லூரி, 27 ஏக்கர் நிலத்தில் 30 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.*

*சேலம் மாவட்டத்தின் சமூக நலத் துறையில் சிறந்த பணி புரிந்திடும் திருமதி சீதாலட்சுமி ராமசுவாமி அவர்கள் (இந்திய அரசாங்க ரயில்வே அமைச்சரின் வாழ்க்கைத் துணைவியார்) செய்துள்ள சேவையை ராஷ்டிரபதி பாராட்டினர்.*

*விழாவுக்கு திரு காமராஜ் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில், "ஓரிரு ஆண்டுகளில் சேலத்தில் ஓர் எஞ்சினியரிங் கல்லூரி ஏற்படுத்தப்படும்" என்று கூறினர்.*

*அமைச்சர் பக்தவத்ஸலம் ராஷ்டிரபதியின் சொற்பொழிவை, தமிழில் மொழி பெயர்த்தார்.*

*கல்லூரிக்கு திரு ஜீ. டி. பிர்லா ஒரு லட்சம் ரூபாய், டால்மியா 50,000 ரூபாய், நன்கொடை வழங்கியுள்ளார். மொத்தம் 2,40,000 ரூபாய் நன்கொடை வந்திருக்கிறது தலைவர் சுவாமி சித்பவானந்தாஜி யாவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் திருமதி ஜே. செல்லம், வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.*

———

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

"பாரதத் தாய் பெற்றெடுத்த புத்திரர்தம் பரம்பரைக்கு
வீரம்—அது எந்நாளும் விலைமருந்துச் சரக்கல்ல . ."

## திரு. சி. என். அண்ணாதுரை

*பாராளுமன்ற உறுப்பினர்*

மலர் பறித்திட பூங்கா அமைக்கும் வேளையிலே, பசும்புல் தரையில் ஒளிந்திருந்து காலினைத் தீண்டிடும் நச்சரவு போலக் கிளம்பிற்று சீனப் படையெடுப்பு. அதிர்ச்சி கொண்ட நிலைதான் நமக்குத்—துவக்கத்தில். தாக்குதலை வெறித்தனமாக நடத்தினர் சீனப் பகைவர்கள்; தோல்வி சில கண்டோம்; இடம் பல இழந்தோம்; களத்திலே பலர் உயிர் நீத்தனர். பனிக்காடு, மலைச்சரிவு, கடுங் குளிர், பெரிய தாக்குதலுக்கு, எதிர்பார்த்துத் தயாராக இல்லாதிருந்த நிலையிலே நமது துருப்புகள் பல இடங்களை இழந்தன.

சீனப்படைகள் ஏராளமான அளவிலே குவிந்தும், ஏராளமானவர்களை ஈவு இரக்கமற்ற முறையிலே பலி கொடுத்திடும் வெறி முறையிலே தாக்குதலை நடத்தியதும் மறைந்திருந்து தாக்குவது, பணிவது போலப் பாசாங்கு காட்டிப் பாய்வது, சுற்றி வளைத்துக் கொள்வது போன்ற சூது முறைகளால் சீனப் பகைவர்கள் பெற்ற வெற்றிகளையும் போர் முறையையும் வீர மரபின் மாண்பினையையும் அறிந்தவர்களும் போற்றுபவர்களும் பாராட்டமாட்டார்கள்.

பஞ்சசீலம் பேசி, பாண்டுங் நடத்தி, பண்டித நேருவை விடச் சிறந்த சமாதானப் பிரியர் இந்தப் பாரினில் இல்லை என்று பாராளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் தேனொழுகப் பேசி, திடீரென்று வெறித் தாக்குதலை நடத்திக் காட்டிய சீனாவின் பேச்சை, நாடு இனி நம்பத் தயாராக இல்லை.

இந்தியா சமாதானத்தை விரும்புகிறது, போற்றுகிறது. ஆனால் தன்மானம் இழந்து அல்ல, உரிமை அழிக்கப் பட்ட நிலையில் அல்ல. "கண் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரிப்பார்கள்" என்றார் கவி பாரதி. கண்ணிலும் மேலானது உரிமை. அதனை இழந்து சமாதானம் பெற, இந்தியா ஒரு போதும் சம்மதிக்காது.

உரிமை காத்திடப் போர். தன்மானப் பாதுகாப்பிற் காகப் போர். ஜனநாயகத்திற்காகப் போர். இதனை நடத்தி வெற்றி பெறும் ஆற்றல் அற்ற நாடு அல்ல இந்தியா. பெரும் படைகளை நடாத்திச் சென்று, வீரமிக்க போர் பல புரிந்து, வெற்றி வாகை சூடி, பேரரசு அமைத்த பெருவீரர்கள் வாழ்ந்த வீரபுரி இந்நாடு. மாவீரர்கள் நடாத்திய போர் பற்றி புலவர்கள் இயற்றியுள்ள காவியம் பல பெற்ற நாடு; கூனன் நிமிருவான். கோழையும் வீரனாவான், புலவர்கள் பாடியுள்ள பரணி படித்தால்.

வீரம் செறிந்த நாடு இது. வெற்றி பல கண்ட நாடே, ஆனால் வாள் வடிக்கத் தேவைப்படும் இரும்பை, கலப்பையாக்கிக் கொண்டிருக்கும் காலம். டாங்கிகள் ஓட்டத் திறம்படைத்த கரங்கள் ஏர் பிடித்துக் கொண்டுள்ளன. அழைப்பு கிடைத்ததும், அணி வகுப்பு திரண்டதும், படைகளில் சேர்ந்து போரிடத் துடிக்கும் பல இலட்சக் கணக்கானவர்கள் இன்று வயல் வெளிகளிலும் தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் கல்விச் சாலைகளிலும் உள்ளனர், அழைப்பினை எதிர்நோக்கியபடி. இன்று இந்த நாடே ஒரு பாடிவீடு.

சீனப்பகைவன் நாட்டைத் தாக்குகிறான்—அரசியல் கட்சிகளிலே ஏதோ ஒன்றின் மீது குறி பார்த்துத் தாக்குதலை நடத்தவில்லை—நாட்டைத் தாக்குகிறான்.

இதனை அறிந்து அரசியல் கட்சிகள் தத்தமக்கு இனிக்கும் உயிர்க் கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு, சீனப் பகையினை முறியடிப்போம் என்று ஒரு பெரும் முழக்கம் எழுப்பி வருகின்றன.

சர்வாதிகார நாடுகளிலே இது தானே முறை என்று கேட்கின்றனர். அங்கு, இது, முறை அல்ல. விதி! மீற முடியாத விதி. இங்கு அங்ஙனம் அல்ல. பொறுப்பை உணர்ந்து செயல்படும் அருந்திறன்.

மாடு மனை மறந்து, உற்றார் பெற்றோர் மறந்து, மாலையிட்ட மங்கையையும் மழலை பேசும் குழவியையும் மறந்து, உயிரை இழக்கத் துணிந்து மறவர்கள் களத்திலே நின்று போராடும் போது, ஜனநாயகத்தின் பேரால் இங்கு நாம் கட்சி மாச்சரியங்களில் ஈடுபட்டால், களத்தில் நிற்போர் இரத்தக் கண்ணீர் வடிப்பார்.

இதனை நன்கு உணர்ந்து இன்று அனைவரும் பொறுப்பு மிக்க போக்குடன் நடந்து வருகின்றனர். இது கண்ணுக் குப் புலனாகாத, ஆனால் வலிவு மிக்க, படைக்கலனாகும்,

பாதையில் எத்தனை பயங்கரங்களும் படுகுழிகளும் இருப்பினும், ஏமாற்றங்கள் அடுக்கடுக்காக ஏற்படினும் பயணம் நிற்காது, வெற்றி கிட்டும் வரை வெற்றி பெற்றே தீருவோம் என்று உறுதியளித்து, ஆணை பிறப்பித்து விட்டார் பண்டித நேரு. அதனை ஒரு கட்சித் தலைவரின் ஆணையாக அல்ல, நாட்டின் விழிப்புணர்ச்சியும் வீர உணர்ச்சியும் வெளியிடும் ஆணையாகக் கொண்டு, அனைவரும் பயணத்தில் ஈடுபட்டு விட்டனர். ஒளி படைத்த கண்ணினர், உறுதி கொண்ட நெஞ்சினர், திரண்டெழுந்து அணி வகுத்துச் செல்கின்றனர், வெற்றி பெற்றிட—வெற்றி பெற்றே தீருவோம்.

---

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்".



"பாரத பூமி பழம்பெரும்பூமி;
நீரதன் புதல்வர்; இந்நினைவ கற்றீர்"

## திரு. பி. ஜி. கருத்திருமன்

*பாராளுமன்ற உறுப்பினர்*

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும் சேராது இயல்வது நாடு". இந்தப் பொய்யா மொழி மூலம் வள்ளுவனார் ஒரு நாட்டின் உயரிய இலட்சியத்தை வலியுறுத்தினார். நாட்டின் நல்லாட்சியின் இலக்கணம், அந்நாட்டு மக்களுக்கு போதிய உணவு கிடைக்கச் செய்வதே யாகும். பசியைப் போக்கி, ஆரோக்கிய வாழ்வு அளிப்பதினால் பிணியை நீக்க முடியும். பசி பிணியைப் போக்குவதை விட இன்றியமையாதது ஒன்று ஒரு நாட்டிற்கு உண்டு. அது தான் வேறு நாட்டானின் பகையை வளர்த்து நாட்டை சண்டைக்கு உள்ளாக்காமல் இருப்பது. பல நூற்றாண்டுகளாக அடிமையாகக் கிடந்த நாம அரிய பெரிய போராட்டங்களால் சுதந்திரத்தைப் பெற்றோம். பஞ்சசீலத்தினால் கட்டுண்ட சீனா வேசம். உதட்டிலே பஞ்ச சீலமும் உள்ளத்திலே நச்சுப் பகையும் கொண்டு தேசத்தின் எல்லைகளைக் கவர்ந்து மா பெரும் பனிமலைகளை இமயமலைச் சாரலில் எலி ஆக்கிரமித்தது. இமயத்தில் சீனப் படைகள் ஆக்கிரமித்தும் அமையாத இயத்துடன் விளங்கும் நம் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் விடுத்த செய்தி கேட்டு, நம் நாட்டிலுள்ள பல அரசியல் கட்சிகளும் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு, நம் பாரத அன்னைக்கு அர்ப்பணித்த தியாகங்கள் கற்பனைக்கும் எட்டாதது.

ஆக்கிரமித்த சீனரை விரட்டியடித்து, பிடிபட்ட நம் பகுதியை மீட்டே தருவது என்ற முடிவுக்கு இந்திய மக்கள் இன்று வந்து விட்டார்கள். இந்த முடிவை நாம் நிறைவேற்றியே தீருவோம், என்பதும் உறுதி. இந்த நேரத்தில், தேச சுதந்திரத்திற்கே ஆபத்து நேர்ந்திருக்கும் இந்த வேளையில், போர்க்களத்திற்கு அப்பால் இருப்பவர் களான நம் கடமை என்ன? அதையே நம்மில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், குழந்தைகளும் கூட ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

நம் படையினர் வெற்றிகரமாகப் போராடுவதற்கு நாம் செய்யவேண்டிய கடமைகளும் அதிகமிருக்கின்றன. போரில் ஈடுபட்டிருக்கும் நம் சிப்பாய் ஒவ்வொருவருக்கும் வேண்டிய ஆயுதம், உடை, சாப்பாடு போன்ற வசதி களுக்காக தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் நாம் பாடுபட்டால்தான், எந்தப் போரும்தட்டின்றி நடக்க முடியும். இதை முதலில் நம் நினைவில் வைக்க வேண்டும். ஆகவே விவசாயியானாலும் சரி, வேறு எந்தத் தொழிலாளியானாலும் சரி, பாடுபட்டு உற்பத்தியை இரண்டு மடங்காவது பெருக்கியாகவேண்டும். அப்படி பெருக்கியாக வேண்டியது இன்னுமொரு விஷயத்தை முன்னிட்டு அவசியம், மக்களின் சுகத்தைப் பற்றியே கொஞ்சமும் சிந்திக்காத சீன சர்க்காராயிருந்தால், ராணுவத்திற்குச் சப்ளை கிடைத்தால் போதும் என்று இருந்துவிடும். மக்கள் பனியில் ஈசல்போல் மடிய நேர்ந்தாலும் சீன ஆட்சியாளர்கள் கவலைப்பட மாட்டார்கள். நாம் அப்படிப்பட்டவர்கள் அல்ல. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதினால் மக்களுக்கு உணவுப்பற்றாக்குறையோ, துணிக்கட்டுப்பாடோ வந்துவிடக்கூடாது. ஆகையால் யுத்தத் தேவையை முன்னிட்டு நாம் உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால், நம் உழைப்பை அதிகமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

பிறந்தவர் இறப்பது உறுதி. இப்படியும் உயரிய லட்சியத்திற்காக, நம்மை ஈன்று எடுத்த பாரத அன்னையின் நல்வாழ்விற்காகச் செய்யும் தியாகங்களைவிட ஈடு இணை உண்டோ?

---

"பேய் பெற்ற படைகொண்டு போர்நடத்தும்
புல்லர்க் கிங்கொரு நாளும் வெற்றியில்லை"

## திரு நாஞ்சில் கி. மனோகரன்

*பாராளுமன்ற உறுப்பினர்*

மக்களாட்சிக் கோட்பாடு, சமாதானம், அறவழி, நடுநிலைக்கொள்கை, பஞ்சசீலம் போன்ற பண்புகளால் பொலிவேறி நின்ற இந்தியா, முற்றிலும் எதிர்பாராத நிலையில், விரும்பாத வகையில், போர்ச் சுழற்சியில் தூக்கி யெறியப்பட்டுவிட்டது.

அதன் விளைவாக, பொருளாதாரத் துறையில், நாட்டைப் பக்குவப்படுத்தி பலமுள்ளதாக மாற்றுவதற்குப் பதிலாக, செஞ்சீனா மிருகபலம் மிக்க ராணுவத்தின் மூலம், நாட்டைக் கபளீகரமாக ஆக்கும் முயற்சியில் முனைந்து விட்டது.

சீன நாட்டு மக்களின் சிந்தனையை அந்தத் துறையிலேயே திருப்பிவிட்டது. அளவிற்கு மீறிய மக்கட்தொகையைக் கொண்ட சீனா, அதிலிருந்து பரிகாரம் காண்பதற்குக் கூட "போரை" ஒரு வழிவகையாகப் பயன்படுத்தத் தவறவில்லை.

"ஒரு நூறு பூக்கள் மலரட்டும்" என்ற தத்துவ கானத்தை அவனிக்குக் காற்றினிலே வரும் கீதமாக தந்துவிட்ட சீனா, தனது அரசாங்கம் கொண்ட கொள்கைக்கு மாறானவர்கள் என்பதற்காக, மனித உயிர்களை பலிகொண்ட கோரத்தை மனித நாகரீகம் மன்னிக்கும் என்று நான் நம்பவில்லை.

---

"கையில் ஏந்திய வேலை ஒரு யானையின்மேல் எறிந்து துரத்திவிட்டு வருகின்றவன் தன் மார்பில் பட்டிருந்த வேலை பறித்து மகிழ்கின்றான்."

வெறும் தத்துவங்கள் பெறுகின்ற மரியாதை, சீர் வரிசை, சிறப்பு அத்தனையும், தசை, நரம்பு, இரத்தம், உணர்வு இவைகளின் கூட்டுச்சேர்க்கையில் உருவெடுத்த மனிதனுக்கு செஞ்சீனாவில் இல்லை. தத்துவங்கள் மனிதனுக்காக என்ற நிலை தலைகீழாகிவிட்டது. எண்ணங்களை வளர்த்துக்கொள்ளப் பயன்படும் கருவாக மனிதன் ஆக்கப்பட்டுவிட்டான்.

யாருக்கும் தீங்கு நினைக்காமல், சமாதானத்திற்கு முழு உழைப்பை உவந்து அளித்து வந்த இந்தியாவை ஆதிக்க வெறி பிடித்த சீனா தாக்கிவிட்ட சம்பவம், உலக நாடுகளில் பெரும் பரபரப்பை மூட்டிவிட்டது. போட்டியிட்டுக்கொண்டு மேற்கத்திய நாடுகள் ஒன்றின் பின் ஒன்றாக இந்தியாவிற்குப் பாதுகாப்புத்தர முன் வந்துவிட்டன.

நாம் நம்பிக்கையோடு பணியாற்றுவோம், சின்னஞ்சிறு பூசல்களில், பொது ஆபத்தை மறக்காமல் இருப்போம். இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நினைவூட்டிக்கொள்வோம். எத்தகைய தியாகத்திற்கும் நாம் தயாராவோம். இறுதி வெற்றி நமக்கே.

---

"கொட்டடா போர்முரசை
 கூட்டடா போரணியைப்
பற்றடா போர்க்கொடியைப்
 பாடடா வெற்றி தன்னை.."

## திரு இரா. நெடுஞ்செழியன்

*சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்*

"கிளம்பிற்றுக் காண்
 தாயகத்தூர் சிங்கக் கூட்டம், அது
கிழித்தெறிய தேடுது காண்
 சீனப்பகைக் கூட்டத்தை"

என்று சொல்லுமளவிற்குச் சீனப் படையெடுப்பை எதிர்த்து, இந்தியப் பெருநாட்டின் இளைஞர் கூட்டமெல்லாம் திண்டெழுந்திருப்பது, உறங்கிக் கிடந்த இந்திய வீரம், உணர்ச்சி பெற்று எழுந்துவிட்டது என்பதைக் காட்டும் அறிகுறியாகும். இந்தியா, தன் போர் வீரத்தை நிலைநாட்டித் தீர வேண்டிய நெருக்கடி கட்டத்திற்கு இப்பொழுது வந்திருக்கிறது.

உலகில் சனநாயகப் பண்பையும், சனநாயக முறையையும் காப்பாற்றும் நாடுகளில் மிகப்பெரிய பெருநாடு இந்தியாவாகும். இந்தியாவை முதலில் விழுங்கினால், பிற ஆசிய நாடுகளை அடுத்தபடியாக விழுங்குவது எளிது. ஆசியாவில் கம்யூனிஸ்டு சர்வாதிகார எகாதிபத்தியத்தை நிறுவிவிட்ட பிறகு, ஆப்பிரிக்கா கண்டத்தை கொள்ளை கொள்வது எளிது. ஆசியாவையும், ஆப்பிரிக்காவையும் வைத்துக்கொண்டு, ரஷ்யாவின் உதவியோடு, ஐரோப்பா முழுவதையும் அடக்க முயலுவது எளிது. இவற்றையெல்லாம் விழுங்கியதற்குப் பிறகு, வலிமைமிக்க அமெரிக்காவை விழுங்குவது எளிது. இந்த வகையில், கம்யூனிஸ்டு சர்வாதிகார எகாதிபத்தியத்தை உலகம் முழுவதும் நிலைநாட்ட கம்யூனிஸ்டு வல்லரசுகள் சேர்ந்து இரகசியமாகத் திட்டமிட்டுச் செய்துகொண்ட முடிவின் விளைவாக இருக்குமோ இந்த சீன ஆக்கிரமிப்பு என்று கூட எண்ணத் தோன்றுகிறது. இன்று சீனா தொடுத்துள்ள, போர் பகைவழிப் போர் என்பதைவிட, தத்துவ கொள்கை வழிப்போர் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். அடக்கவொடுக்கமான அமைதியான சனநாயகத்தை எதிர்த்து, எகாதிபத்திய சர்வாதிகாரம் போராடத் தொடங்கியிருக்கிறது. இந்த உண்மையை உலக நாடுகள் பலவும் அறிந்து, இந்தியாவிற்கு இன்று ஏற்பட்டுள்ள தீங்கு நாளைக்குத் தமக்கும் ஏற்படக்கூடிய தீங்கு என்பதை உணர்ந்து, இந்தியாவிற்கு பல வகையிலும் உதவி செய்யத் தலைப்பட்டிருக்கின்றன.

இந்தியா தன் மதிப்பையும், மானத்தையும், உரிமையையும், விடுதலையையும் இழக்காமல் நட்புதவிகளை பெறுவதில் தவறில்லை. அவற்றைத் தேடித் தேடிப் பெற்றுத்தான் தீரவேண்டும். சீனா ரஷ்யாவினிடத்தில் தீய எண்ணத்தோடு தீயவழியில் படைக்கல உதவிகளைப் பெற்றுள்ளது. இந்தியா நலலெண்ணத்தோடு நல்வழியில் படைக்கல உதவிகளைப் பெற்று வருகிறது. இறுதியில் உண்மை வெல்லும், பொய் அழியும், நீதி வெல்லும், அநீதி அழியும் என்பது உறுதி.

சீனா ஆக்கிரமிப்பு செய்தது எப்படி இந்தியாவின் நன்மையைக் கருதியது அல்லவோ, அது போல சீனாவின் போர் நிறுத்தச் செய்தியும் இந்தியாவின் நன்மையைக் கருதியது அல்ல. "சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க, வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்" என்று பொய்யாமொழியாரின் கூற்றினை, இந்த நேரத்தில் நினைவுப்படுத்திக்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

இந்தியாவிலுள்ள அனைவரும் ஒரே சிந்தனையினராய், ஒரே சொல்லினராய், ஒரே செயலினராய் இருந்து அனைவருடைய அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும், உறுதியையும், ஊக்கத்தையும், ஆக்கத்தையும் ஒருமுகப் படுத்தி சீனாவின அநீதியான ஆக்ரமிப்பை முறியடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அனைவருடைய சிந்தை, சொல், செயல், ஆகியவற்றில் நெருக்கடி நிலைமையை எதிர்பார்க்கும் ஒருமித்த உணர்வு ஏற்படட்டும். நாம் வீறுகொண்டு எழுவோமாக நீடித்த நிலையான வெற்றி பெறுவோமாக.

"விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு".



நாட்டுமக்கள் இளைஞர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். "பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது. சிறுத்தையே வெளியில் வா. எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல்செய புறப்படு வெளியில்."

---

"ஆயுதத்தால், ஆள்பலத்தால்
 அகிலமதை ஆளவெண்ணும்
பேயர்தமை நாமழிப்போம்! பெருவெற்றி
 கண்டிடுவோம்!"

## திரு ஜி. குசேலர்

*சென்னை மேயர்*

இந்தியாவின் மானமும், மதிப்பும், பெருமையும், பெருவாழ்வும் இந்த ஆக்ரமிப்புலிருந்து இந்தியா முழுவதையும், ஒரு அடி நிலத்தைக்கூட இழக்காது மீட்பதிலேயே அடங்கி இருக்கிறது என்றால், அது மிகையாகாது.

இந்த உணர்ச்சி இன்றைய தினம் நாட்டு மக்கள் எல்லோரிடமும் பீறிட்டு எழுந்திருக்கிறது. இன வேற்றுமை, மொழி வேற்றுமை, கட்சி வேற்றுமை, மத வேற்றுமை ஆகிய பலவேறு வேற்றுமை உணர்ச்சிகளையும் மறந்து, நாடு காப்பதற்குத் தேவையான ஒற்றுமை உணர்ச்சி இன்று எங்கும் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் எல்லைப் பகுதிகள் மீட்கப்படுவதற்கு, சீனப் படையை நமது மண்ணிலிருந்து விரட்டுவதற்கு, இந்திய அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் எல்லாவித ஒத்துழைப்பையும் அளிக்க முன்வர வேண்டும்.

பட்டாளத்தில் சேர்ந்து பணிபுரிய கட்டுடல் கொண்ட காளையர் முன்வர வேண்டும். நாட்டை காக்கும் நற்பணிக்கு வீட்டுக்கு ஒரு வீரன் முனைந்து வரவேண்டும். உணவு விளைச்சலைப் பெருக்கவும், பல்வகைப் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கவும், போர்க் கருவிகளைச் செய்து நிரப்பவும், தொழிலாளர்கள் முனைந்து நிற்கவேண்டும். உழைக்கவும், உதவி செய்யவும், பொன்னும் பொருளும் திரட்டி அளிக்கவும் தாய்மார்கள் முன்வர வேண்டும், களத்திலே படுகாயமுற்ற வீரர்களின் உயிர் காக்க வேண்டப்படும் 'குருதி' வழங்கவும், எல்லோரும் முன் வரவேண்டும். இந்தியாவைக் காக்கும் பெரும் பொறுப்பு ஏற்றுள்ள பண்டித நேரு அவர்களின் கரத்தைப் பலப்படுத்தி, படை வலிமையைப் பெருக்கச் செய்து, பகைவனை ஒழித்துக்கட்ட ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நெருக்கடியான நேரத்தில் வீண் வதந்தியைப் பரப்புவது தீயதாகும். புரளியை நம்புவது கேடாகும். காட்டிக்கொடுக்கக்கூடிய உளவாளிகளோடு உறவு கொள்கின்ற குறைபாடுகளும். எனவே, போர் நிலை குறித்தும், மாற்றார் படையின் நடவடிக்கை பற்றியும், பத்திரிகை, வானொலி ஆகியவற்றின் மூலம் அரசாங்கம் தரும் ஆதாரமுள்ள செய்தியைக்கொண்டே, உண்மை நிலையைக் கண்டுகொள்ளவேண்டும்.

போர்க்காலத்தில் நாட்டில் குழப்பங்கள் விளையவோ, வீணான கலகம் வளரவோ இடம் தரக்கூடாது. அரசியல் கட்சிகள் யாவும், இச்சமயத்தில் எவ்விதக் கிளர்ச்சிகளிலும் ஈடுபடாமல், அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பது அவசியமாகும். அரசாங்கத்தை எதிர்த்து நடத்தப்படும் கிளர்ச்சி மட்டுமின்றி, வேறு மாற்றுக் கட்சியினரை எதிர்த்து நடத்தப்படும் கிளர்ச்சியும்கூட போர் உதவி முயற்சியைக் குந்தகப்படுத்துவதே ஆகும். எனவே, எவ்விதக் கிளர்ச்சிக்கும் பொது மக்கள் இடம் தருதல் கூடாது.

---

"அறத்தின் நோன்புல் பாரதம்—அதை
ஆக்கிரமிப்பவன் யாரவன்?"

## திரு. ரா. கிருஷ்ணசாமி

*தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்*

இந்த நெருக்கடியான நேரத்தில் பொது மக்களாகிய நமது கடமையென்ன என்பதைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாட்டைக் காக்கும் பணியிலே ஈடுபட்டுள்ள நமது அருமைத் தலைவர்களுக்கும், வீர ஜவான்களுக்கும் உள்நாட்டைப் பற்றிய கவலை இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் தான், அவர்களால் சக்தி பூராவையும் ஒருமுகப்படுத்தி, எதிரியை விரட்டியடிப்பதிலே பயன்படுத்த முடியும். உள்நாட்டில் உள்ள எல்லோரும் நாம் பின்னணிப்படைகள் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும். முன்னணியில் போர் நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டிய கவலையில்லாமல், செயல் புரியும்படி பின்னணிப்படைகளாகிய பொதுமக்கள், நாட்டின் தேவைக்கு அவசியமான பண்டங்கள், பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து குவிக்க வேண்டும்.

இப்பொழுது நமக்கு ஏற்பட்டுள்ள விழிப்பும் உணர்ச்சியும் நாட்டிற்குத் தேவையான உணவுப் பண்டங்கள், இயந்திர சாதனங்கள் முதலியவற்றின் உற்பத்தி அதிகரிப்பில் பிரதி பலிக்காவிட்டால் வெறும் உணர்ச்சியால் என்ன பயன்? முக்கியமாக, விவசாய உற்பத்தியை பெருக்குவதின் அவசியத்தை உணர்ந்து அத்துறையில் ஈடுபட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கைவிடப்படாது, தொடர்ந்து நிறைவேற்றப்படும்" என்று நமது தலைவர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள். முன்

பகைவரைச் சினந்து நோக்கிய கண், அவர் வேல் எறிந்தபோது மூடி இமைக்குமானாலும், அது வீரமுடையவர்க்குத் தோல்வி அன்றோ?

எப்போதையும் விட இன்றைக்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கியத்துவம் நன்றாக உணரப்படுகிறது. இத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றியதால்தான், நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சுயவலிமையை வளர்த்துக்கொள்ள நல்ல அஸ்திவாரங்களையிட முடிந்தது. இந்த அஸ்திவாரங்கள் இன்று சீனப் படையெடுப்பைச் சமாளிப்பதற்கான ஆற்றலைத் தருகின்றன. எனவே, இதுவரை உழைத்ததை விட, அதிக சுறுசுறுப்புடனும் அதிக நேரமும் உழைத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் எதிரியின் பலத்தை முறியடிக்க நம் உபாயத்தை நம் வள்ளுவர் பெருமான் எடுத்துக்காட்டியிருப்பதைப் பாருங்கள்.

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனில் கூரியதில்"

இதன் பொருள் "நாட்டிற்கு வேண்டிய தேவைப் பொருட்களை அமோகமாகச் செய்து குவித்துக்கொண்டிருங்கள்; பகைவனின் பலத்தை சிதைக்கவல்ல இருப்பான ஆயுதங்கள், இப்பண்டங்களைவிடக் கூர்மையானவை அல்லவென்பது நினைவிருக்கட்டும்" என்பதாகும். எனவே, உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

---

"சத்தியத்தை பொய்மை என்றும்
சாய்த்த தெங்கு மில்லையே!"

## திரு. ஈ. வே. கி. சம்பத்

உலகில் எவருக்கும் இன்முகம் காட்டியே இந்தியா வாழ்ந்திருக்கிறது. உலகில் எவரிடமும் தன் பற்களையும், நகங்களையும் காட்டியே சீனா அழிவைத் தேடுகிறது.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக்கொள்கையே அந்நாட்டின் சிறந்த பாதுகாப்புக் கொள்கை என்பது ஒரு கருத்து.

ஒரு நாட்டிற்கு ஆபத்து நேரிடும்போது, அந்நாடு கடைப்பிடித்த வெளி நாட்டுக்கொள்கையின் விளைவாகக் கைகொடுத்து உதவ எத்தனை நாடுகள் திரளுகின்றன என்பதைப் பொறுத்தே, அக்கொள்கையின் சிறப்பு மதிப்பிடப்படும்.

அறத்தின்பாற்பட்ட நமது கொள்கையும், நிலையும், நட்பும் நமக்கு உலகில் ஏராளமான நண்பர்களை ஏற்படுத்தியுள்ளது. கள்ள நினைப்பும், கொலை வெறியும் கொண்டலையும் சீனா நமது மண்ணை அள்ளியது, அறிந்தும் நம்மைத் தாக்கியது கேட்டும் உலகே கொதித்தெழுகிறது.

சீன அக்கிரமத்துக்குத் துணை போக எந்நாடும் முன்வரவில்லை. சீனம் தனித்து நிற்கிறது. பிறர் நாட்டைக் கவர நினைத்த சீனத்தின் படை, குலைந்து செருக்கழியும் நாள் வந்து விட்டது.

நமது போர்வேண்டா அமைதிக்கொள்கை, பலஹீனத்தில் பிறந்ததன்று தன்னம்பிக்கையிலும், நல்லெண்ணத்திலும் உருவான அக்கொள்கை அநீதியை மாய்த்து, நீதியை நிலை நாட்டுவதில் எத்தகைய ஆற்றல் கொண்டது என்பதைக் காட்ட ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

---

"பற்றி நின்ற பகைமை தன்னைப்
பஞ்சு போல ஊதுவோம்!"

## திரு பி. ராமச்சந்திரன் எம். எல். ஏ.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கொறடா.

மக்கள் ஒருமனதாக அரசாங்கத்துடன் கைகோத்து நின்று, இந்திய சுதந்தரத்தைக் காப்பாற்றும் கட்டம் வந்திருக்கிறது. நமது உறுதியையும் முயற்சியையும் பன்மடங்காகப் பெருக்கியாக வேண்டும். நாட்டின் பாதுகாப்புச் சக்தியையும் பொருளாதாரச் சக்தியையும் பலப்படுத்த வேண்டும்.

ஏர் முனையும் போர் முனையே. ஜவான்களைப் போல கஷ்ட நஷ்டங்களைப் புன்முறுவலோடு சமாளித்துக்கொண்டு கடுமையாக உழைத்தால் உற்பத்தி உயரும். பஞ்சாயத்துக்களுக்கு இந்த வகையில் மகத்தான பொறுப்பு உண்டு. கிராமங்களில் உள்ள ஆள் பலத்தைப் பாதுகாப்பு முயிற்சிக்குத் திரட்டும் பொருட்டு, சமுதாய நல வளர்ச்சித் திட்டம் மாற்றியமைக்கப்பட இருக்கிறது. கிராமங்கள் பூராவிலும் திருவப்பரும் கிராமத் தொண்டர் படைகள் உற்பத்தியை அதிகரிப்பது, உள்ளூர் பாதுகாப்பைக் கவனிப்பது, பாதுகாப்புத் தொழிலாளர் பாங்குகளைத் திறப்பது ஆகிய காரியங்களைக் கவனித்துக்கொள்ளும். போர் முனையில் போராடும் வீரர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துக்கள் முன்வர வேண்டும். ஜவான்களின் குழந்தைகளுக்கு அரசாங்கம் கல்விச் சலுகை அளித்துள்ளதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

சீன ஆக்ரமிப்பினால் நமக்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், ஒரு நன்மையும் விளைந்துள்ளது. இந்திய மக்கள் அனைவரும் இன்று ஒரே லட்சியத்தை நோக்கி, அணி திரண்டிருக்கின்றனர். சகல விதமான வேறுபாடுகளையும், மனமாச்சரியங்களையும் உதறியெறிந்து விட்டு ஒன்றுபட்டிருக்கின்றனர். இந்தப் பொன்னான வாய்ப்பு நீடித்த நிலைபெற வேண்டும். நமது ஒற்றுமைதான் எதிரியை மண் கவ்வச் செய்யும் மகத்தான ஆயுதம். தாய் நாட்டில் கௌரவத்தையும், பிரதேச உரிமையையும் பாதிக்கும் எந்தப் படையெடுப்பையும் முறியடிக்க நாம் தயங்க மாட்டோம். என்ன நேர்ந்தாலும் சரி, இறுதி வெற்றியடையும் வரை இந்தியா ஓயாது, உறங்காது.

---

"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை யெடுத்து".



"கங்கையாறு இரத்தமாகிக்
கரைபுரண்ட போதிலும்
எங்கள் நாடு தொட்ட சீனர்
ஏற்றியோடச் செய்யுவோம்!"

## திரு எஸ். என். ஏ. அஜீஸ்

(தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர்.)

விடுதலை அடைந்த பின்னர் உலகமே வியக்கும் வண்ணம் ஜனநாயக வழி முறையிலே நம் நாட்டில் உருவாகி வரும் பிரம்மாண்டமான பொருளாதார சமுதாய வளர்ச்சி, சீன சர்வாதிகாரிகளின் பொறாமைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். அண்டை நாடாகிய பாரதம் வளர்வதைச் சகிக்க இயலாத அந்த வன்கண்ணர்கள் இந்த நாட்டின் மீது படை யெடுத்து ஜனநாயகத்தை அழிப்பதுடன், பொருளாதார வளர்ச்சியையும் சீர்குலைத்து விடலாமென்று மனப்பால் குடிக்கின்றனர்; உலகிலேயே பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவை விழுங்குவதின் மூலம், உலகத்தையே கட்டி ஆளுவதற்கான கனவு பலிக்கும் என ஏகாதிபத்திய எண்ணம் படைத்த செஞ்சீனா எண்ணியிருக்கலாம். ஆகவே நாம் போரில் வெற்றி பெறுவதுடன், தாய்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் தடைபடாமல், தளர்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது புனித கடமையாகும். அதற்கேற்ப, முன்னிலும் பன்மடங்கு பாரத மக்கள் ஒன்றுபட்டு ஓயாது உழைத்தால் தான், இப்புனித முயற்சியில் வெற்றி காண முடியும்.

குறிப்பாக, இளைஞர்களுக்கு இதில் தலையாய பொறுப்புண்டு. "தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம், கருகத்திருவுளமோ?" என்று சொல்லிச் சென்றார் அமரகவி பாரதி. அத்தகைய சுதந்திரப் பயிரைக் காக்க இன்று செந்நீர் தேவை. அந்த விழுமிய வேள்வியை நம் வீரர் கூட்டம் இமாலயப் பகுதிகளில் செய்து கொண்டிருக்கிறது. அந்த அறத்தையும், சுதந்திரத்தையும் காக்கும் புண்ணிய வேள்வியில் பங்கு பெறுவது இளைய இளைஞர் சமுதாயத்தின் பிறவிப் பயன் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

---

"ஆயிரம் இமயம் எங்கள் இதயம்
ஆறெனா அதிலே வீரத்தின் உதயம்"

## திருப்பூர் வின்சென்ட்

பொன்னும் பொருளும் உழைப்பும் ஊதியமும் சேமிப்பும் சிக்கனமும், சிந்தை குழம்பாத நெஞ்சுறுதியும் அட்சயபாத்திரம் போல் பொங்கி எழும் மக்களின் சக்தியுமே மாவீரர்களுக்கு நாம் செய்யும் மாபெரும் கைம்மாறு.

அசுரபலத்தோடு நம்மை எடுத்து விழுங்கத்துடிக்கும் சீனப்பிடாரிகளை முறியடிக்க அதுவே எமது ஆயுதககவசம்.

சுயமரியாதையிழந்த நிலையில் சுதந்திரம் நமக்கு எப்படி தேவையில்லையோ, அதைப்போலவே வல்லரசுகளை மோதவிட்டு பற்றி எரியும் உலகப்பெரும்போரின் சுவாலையிலே நமது வெற்றி தீபத்தை ஏற்ற விரும்பாதவர்கள் நாம்.

நாள் கடந்தாலும் நமது போரின் வெற்றி உலக அமைதியோடு ஒட்டிய பிறக்கவே விரும்புகிறோம். நமது எல்லையில் நிகழ்ந்துள்ள இந்த நெருக்கடியால் பிரசவ வேதனையில் துடிக்கும் தாய் போல ஜனநாயக உலகம் தவிக்கிறது.

பாரதநாடெனும் சேய் பிழைத்தால் மட்டும் போதாது, உலகத்தாயும் பத்திரமாக உயிர் பிழைத்தல் வேண்டும். இதுவே நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையின் தாரக மந்திரம்.

நம்முடைய ஒரே நாடு பாரதம். நாம் நம்மும் ஒரே தலைவர் நேரு. நம்முடைய ஒரே லட்சியம் ஆக்கிரமிப்பாளரை அடியோடு முறியடிப்பது. நமக்குத் தெரிந்த ஒரே வழி நம்மை நாமே வலுப்படுத்துவது. திட்டங்கள் மும்மடங்கு வெற்றி பெற்றாக வேண்டும். தேசப் பாதுகாப்பில் நம்மை அர்ப்பணித்திட வேண்டும்.

---

"மையிட்ட கண்களெல்லாம் சினத்தீயின் கோளமாகும்!
அருளும அன்பும் பெய்திட்ட வாயுமினிக் களப்பாட்டே
பாடிக்காட்டும்."

## டாக்டர் எஸ். விஜயலெட்சுமி

இன்று நமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து நம் தோத்திற்கும், வீரத்திற்கும் திறமைக்கும் சுய திப்பிற்கும் ஒரு கடும் சோதனை. இச் சாதனையில் வெற்றி பெற்று விட்டால் நம் தாயத் திருநாட்டின் சுதந்திரம் என்றும் பத்திரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நெருக்கடியையும், பேராபத்தையும் சுயநலத்துக்கும், சொந்த லாபத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளும் தீயசக்திகளை எளிதில் கண்டு, சமுதாய விரோதிகளை கண்டித்து, தக்க நடவடிக்கை எடுக்க நாம் பொறுப்பேற்பது நம் கடமையாகும். விலையை உயர்த்தி, பண்டங்களை அகவிலைக்கு விற்பவர்களை எச்சரிக்க வேண்டும். இவ்வாறு அகவிலை பொருட்களை அவசியமான பண்டமாக இருப்பினும், வாங்காமலிருத்தல் நலம். இங்கிலாந்தில் ஒரு முறை தேயிலை அதிகமாக விலை விற்றது. அந்த நாட்டுப் பெண்மணிகள் தேயிலை வாங்குவதில்லை என்று கட்டுப்பாட்டோடு இருந்து விட்டனர். தேயிலை விலை உடனே குறைந்தது. கட்டுப்பாட்டோடு வாழவும், கடமையை உணர்ந்து பணியாற்றவும், பெரிய பொறுப்புகளை ஏற்று எல்லாவிதத் தியாகங்களுக்கும் நம்மைத் தயாராக்கிக் கொள்ளவும், இன்னும் இதுபோன்ற தேசிய நல்லியல்புகளை வளர்த்துக்கொள்ள நாம் முற்படல் நலம்.

---

வீரன் தன் வாழ்வில் கழிந்த நாட்களைக் கணக்கிட்டு, விழுப்புண் படாத நாட்களை எல்லாம் பயன்படாமல் தவறிய நாட்களுள் சேர்ப்பான்.

நம்முடைய, கடின உழைப்பு, ஒற்றுமை, தேசப்பற்று இவைகள்தான் பாரத பிரதமருக்கு உறுதியான உறு துணையாக நின்று விரோதியை விரட்ட உதவும் என்பதில் ஐயமில்லை.

பதினைந்து ஆண்டுகளாக நாம் கட்டி வந்த சீரான ஜன நாயக ஸ்தாபன அமைப்புகளையெல்லாம் ஒரே நிமிஷத்தில் நொறுக்கிவிடப் பார்க்கிறது செஞ்சீனம். எதிர்காலத்தில் நமது வளமான வாழ்விற்காக நாம் தீட்டிய ஆக்கத் திட்டங்களை உருத் தெரியா வண்ணம் அழித்து விட நினைக் கிறது, தீவழி வந்த நெறிகெட்ட சீனம். இந்த நேரத் தில் இப்பேராபத்தை சமாளித்து, விரோதியை விரட்டி யடித்து வெற்றி காணல் நமது கடமை.

---

"உயிரினும் மேல் எனக் கொண்டது—தேசம்
ஓங்கும் வழிஎனக் கண்டது—அதை
வயிரமுடையவோர் நெஞ்சினில் காத்து
வாழும் வழிதனில் வாழுவோம்"

## திரு கே. ராஜாராம் எம்.எல்.சி.

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சகோதரர்களாக நேயர் களாக வாழ்ந்து வந்த சீனர் நம்மீது தாக்குதல் தொடங்கி யிருப்பதை வரலாறு என்றும் மன்னிக்காது.

இந்தக் கட்டத்தில், கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சா யத்து யூனியன்கள் ஆகியவற்றின் பொறுப்பு குறிப்பிடத் தக்கது.

பஞ்சாயத்துக்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கலாம். அப் போது பொறுமையாக இருந்து, பணி புரிய வேண்டும். அந்த சமயத்தில், கிராமத்தில் எவ்விதமான சிறுதகராறு களும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எல்லைபாதுகாப்பு, விவசாய உற்பத்திப்பெருக்கம் ஆகிய வற்றுக்காக பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள், பஞ்சா யத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கக்கூடாது. அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் விவசாய உற்பத்திப்பெருக்க முயற்சிகளை வெற்றிகரமாக்க ஊக்கத்துடன் பாடுபட வேண்டும். நாட்டுக்குத் தேவையான எல்லாப் பொருட் களையும் அமோகமாகச்செய்து குவித்துக்கொண்டிருங்கள், விளை பொருட்களை மும்மடங்கு பெற முயற்சியுங்கள். வள்ளுவப் பெருமான் கூறியவாறு. . . .

'நீங்கள் பொருளைக் குவியுங்கள். பகைவனின் செருக்கை யறுக்கும் எஃகிலுலாகிய ஆயுதம் அப்பொருளைவிடக் கூரியதல்ல."

**1. தேசிய பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக நன் கொடைகள் வழங்கும்படி பொதுமக்களை வேண்டிக் கொள்ளல்;**

**2.** பாதுகாப்புப் பத்திரங்களும் பரிசுப் பத்திரங்களும் வாங்கும்படி பொது மக்களுக்கு ஊக்கமளித்தல்;

**3.** திடகாத்திரமான ஒவ்வொரு இளைஞனும் புதி தாக ஆரம்பிக்கவிருக்கும் தேசிய தொண்டர் படையில் சேரச் செய்தல்;

**4.** அத்யாவசியப் பண்டங்களின் விலை உயர்வு, பதுக்கல் போன்றவை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளல்;

5. ரத்த தானமளிக்க ஊக்கமளித்தல்;

6. ராணுவத்தினரின் குடும்பங்களை ஆதரித்தல்;

7. ஊர்காப்புச் சங்கம் அமைத்தல்.

யுத்த காலத்தில் வாழ்க்கை வசதிகள் குறையலாம். ஒவ்வொருவரும் சர்ப்புத் தன்மையுடன் சுகவாழ்வைத் தியாகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறுதல்.

இவையெல்லாம் பஞ்சாயத்துக்கள் பொறுப்பேற்றுச் செய்யக்கூடிய சில காரியங்கள்.

நமது வீரர்கள் சிந்துகின்ற ரத்தம், நமது மக்கள் புரியும் தியாகம், சில துண்டு நிலங்களுக்காக என்று யாரும் கருதிவிடக்கூடாது. சுதந்திரம், தேசிய கௌரவம், சமூக நீதி தர்மம் ஆகியவற்றுக்காகவும் அவர்கள் போராடு கின்றனர்.

இன்று சீனருடன் நடைபெறும் போர் ராணுவ ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி, ஆக்கிரமிப்பை எதிர்த்துப்போர் மட்டுமல்ல, நல்வாழ்க்கைக்கான போராட் டம் ஆகும். எனவே திட்டமிட்ட அபிவிருத்தி என்ற கொள்கை, முன்னெப்போதும் விட இப்போது அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தப் போராட்டத்தில் நமக்கு வெற்றி நிச்சயம். ஏனெனில் நமது பக்கம் தான் நியாயம் இருக்கிறது. தருமம் இருக்கிறது. நமது மண்ணுக்காக மட்டுமல்ல, உலகில் சமாதானத்தைக் காக்கவும் நாம் போராடுகிறோம். எனவே, இறுதி வெற்றியில் நமக்குச் சந்தேகமே இல்லை. ஏனெனில், அறம் இறுதியில் வெல்லும், என்பது நியதி.

---

"தயவு நீ தருமம் நீயே சக்தியின் வடிவம் நீயே
சத்தியநெறியே செல்லும் தாளினை மறக்கிலோமே"

## காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
## சங்கராச்சாரிய சுவாமிகள்

நம்முடைய நாட்டில் எக்காலத்திலும், நமக்கு எந்த ஆபத்து ஏற்பட்டாலும் அப்பொழுதெல்லாம் நம்மை ரக்ஷித்து பராசக்தி, ஒவ்வொரு பிராந்திய[illegible] ஒரு ரூபமாக எழுந்தருளி இருக்கிறாள். மகாராஷ்டிரத்தில் துளஜா பவானி என்றும் காஷ்மீரத்தில் க்ஷீரபவானி என்றும் பாஞ்சாலத்தில் ஜ்வாலமுகி என்றும், கூர்ஜரத்தில் அம்பாஜி என்னும் உருவத்துடனும், உத்தரப் பிரதேசத்தில் விந்திய வாசினி யாகவும், வங்கநாட்டில் காளி ஆகவும்.



காம ரூபம் என்னும் அஸ்ஸாம் பிரதேசத்தில் காமாக்யா என்ற பெயருடனும், கர்நாடகத்தில் சாமுண்டி ஆகவும் காஞ்சியில் காமாட்சி ஆகவும், நம் நாட்டுத் தென்கோடி யில் கன்னியாகுமரி ஆகவும், இவ்விதம் அநேக ரூபமாக அந்தந்த இடத்தில் அந்தந்தக் காலத்தில் நமது பிரஜைகளை தனது குழந்தையாக பாலித்து நம்மை ரட்சித்து விளங்கி வருகிறாள்.

நமக்கு ஜெயம் ஏற்படும் வரையில், நாட்டில் நீதி நிபுணர்களாக இருக்கிறவர்கள் நம்முடைய நாட்டை நிர் வாகம செய்யும் மந்திரிகளிடம், அவரவர்களுடைய ஹிருதயத்தில் தோன்றிய, நல்ல நீதி முறைகளைத் தெரிவிக்க வேண்டியதே, ஆனாலும், பிரசங்க மேடை களிலோ, எதிர்க்கட்சி முறையிலோ, அந்த அபிப்பிராயங் களைத் தெரிவிக்க வேண்டாம். அன்புடன் ஏகாந்தத்தில் அவசியம் தெரிவிக்க வேண்டியது. எல்லோருடைய உள்ளத்தில் தோன்றும் நீதி முறைகளெல்லாம ஒன்றாக ஒரே சுருதியில் அமைந்து காரியத்தில் ஈடுபட வேண்டும்.

ஹிருதயத்தில் ஈஸ்வர பக்தியும், கையில் சத்ருக்களை சிட்சிக்கும்படியான அஸ்தரமும இருந்து நம் நாட்டுக்கு எப்போதும் ஜெயம், ஐஸ்வரியம், நல்ல நீதி முறைகள் இவைகள் விளங்க வேண்டும். அம்பிகையின் கிருபையால் வெகு விரைவில், ஜயம் உண்டாகி உலகம் முழுவதும் ஒன்றாக வாழ வேணடும்.

---

"பொங்கி வரும் மாநதிகள் புனிதப் பிறப்பிடமாம்—அத்
துங்க மலைக் காவாமல் தூங்கிக் கிடப்போமோ!"

## திரு ம. பொ. சிவஞானம்

பேசும் மொழியால் நாம் தமிழராயினும், பிறந்த நாட்டால், நாம் எல்லோரும் இந்தியர் இந்தியா நம் தாய்த் திருநாடு. நாம் அதன் புதல்வர்கள். இந்த உண்மையை மறந்தால், மதிமாறி துறந்தால், அன்றே நாம் அழிந் தோம்.

இமயப் பெருமலை நாம் வழிபடும் தெய்வம் உறையும் திருமலை. இது ஆயிரமாயிரம ஆண்டுகளாக நாம் கொண்டுவந்துள்ள நம்பிக்கை. அந்தப் புனிதமலையைப் போர்க்களமாக்கிவிட்டான் சீனன்.

இமய மலையை "உலகத்தின் கூரை" என்று வருணிப் பது உண்டு. அந்தக் கூரையிலே தீ மூட்டிவிட்டனர் சீனர் இமய முகட்டிலே சீனரிட்ட தீ, நம் ஒவ்வொருவருடைய இதயத்திலே இட்ட தீயாகிவிட்டது. ஆம், நம்முடைய மனங்களெல்லாம் கோபத்தீயால் கொதிப்பேறி இருக் கிறது. இந்தத் தீ அணைய நெடுங்காலம் ஆகுமென்கிறார் நேரு. இமயமலையிலே சீனன் இட்ட தீயை அணைக்க நம் போர் வீரர்கள் தங்களுடைய செந்நீரை தண்ணீராகக் கொட்டிக்கொண்டிருக்கின்றனர்.

காலம் எவ்வளவானாலும் சரி, கடமையைச் செய்ய நாம் தயாராகவேண்டும். கடைசி ஒரு அங்குலத்தில் சீனப் படை இருக்கும்வரை, நாம் போராடியே ஆகவேண்டும். பிரதமர் நேரு நமது நம்பிக்கைக்குரிய ஒரே தலைவர். அவர், இன்று பாரதத்தின் தளபதியாகிவிட்டார். நாம் எல்லோரும போர் வீரர்களாக மாறுவோம். இந்தப் போர் முடியும்வரை, நாம் இந்தியர் என்ற ஒரே உணர் வோடு செயல்படுவோம். நம் தாயகம் இமயம் முதல் குமரிவரையுள்ள பாரதப் பெருநிலம் என்ற உணர்வோடு செயல்படுவோம்.

உழவர்களும், தொழிலாளர்களும், உடையணியாத சிப் பாய்கள் என்று கூறினார் நேரு. அது முக்காலும் உண்மை போர் நிகழும் காலத்தில் நாட்டில் அமைதி நிலவ வேண்டும். சமுதாயத்தின் கட்டுக்கோப்பு சரியாமல் இருக்க வேண்டும். இதற்கு நாம் செய்ய வேண்டியது. உற்பத்தி யைப் பெருக்குவதாகும். உழவர்களும், தொழிலாளர் களும், எவருடைய உபதேசமும இன்றியே, தேச பக்தி யுடன் தங்களுடைய கடமையைச் செய்வார்கள்.

நேரு இடும் ஆணையைச் சிரமேற்கொண்டு அவருடைய ஆணைகளை நிறைவேற்றிவைப்போம்.

---

"பண் எல்லாம் வீரத்தைப் பாட வேண்டும்—
பாட்டெல்லாம் கனல் வெறியை ஊட்டவேண்டும்"

**திரு அகிலன்,** செயலாளர், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் பெரு மன்றம்.

நாட்டின் நல்வாழ்வைக் குலைக்கும் நோக்கத்தோடு துவக்கப்பட்டுள்ள இந்த மிருகத்தனமான சீன ஆக்கிர மிப்பை முறியடிப்பதில் எழுத்தாளர்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. இந்தச் சோதனைக் காலத்தில் நாட்டு மக்களின் உள்ளத்தில் வலிமையையும் ஒற்றுமை உணர்வையும், சிந்தனையில் போராட்ட உணர்ச்சியையும் தூண்டிவிட்டு அவர்களது சக்தியை ஒன்று திரட்டி, நமது படைவீரர்களுக்குப் பக்கபலமாக இருக்கச் செய்வது நமது முழுமுதற் கடமையாகும்.

இந்தச் சமயத்தில் நாம் எழுதும் கட்டுரைகள், கவிதை கள், கதைகள், நாடகங்கள் முதலிய யாவுமே இன்றைய போராட்டத்திற்கு மக்களை ஊக்குவிக்கும் நிலையில் இருக்க வேண்டும். நம்மிடையேயுள்ள பலவேறு கருத்து வேறு பாடுகளை அறவே மறந்து, நாம் அனைவரும் ஒரே சிந்தனை, ஒரே செயலோடு பாதுகாப்புப் பணியில் நமது எழுத் தாற்றலைத்திருப்பவேண்டும். மக்களுடைய மனமே நம் முடைய மாபெரும் தொழிற்சாலை. அந்தத் தொழிற் சாலையில் இப்போது உற்பத்தி செய்யவேண்டியது பகை வரை விரட்டியடிக்கும் ஆயுதங்களான உளவலியும், ஊக்கமும், போராட்ட உணர்ச்சியுமாகும்.

இந்தப் படைக் கலங்களை ஆக்கிக்கொடுத்து நாட்டுப் பணி யிலே எழுத்தாளர்களாகிய நாம் ஊக்கத்துடன் ஈடுபடு வோமாக.

நன்றி: அகில இந்திய ரேடியோ, சென்னை.

கிராம ஊழியம் பகுதி

பஞ்சாயத்து அரசிதழ்

PANCHAYAT GAZETTE

## தேசிய நெருக்கடி நிலையில் விவசாய உற்பத்திப் பெருக்கம்

## Agriculture—Increase of Agricultural Production in view of National Emergency.

### Letter No. 236422, R.D. & L.A., dated 21st January 1963.

இப்போதைய தேசிய நெருக்கடி நிலையில், பாதுகாப்பு முயற்சிகளுக்கு இன்றியமையாத துணையாக விளங்குவது, விவசாய அபிவிருத்தியில் நாம் அதிகக் கவனம் செலுத்துவதேயாகும். விவசாய உற்பத்தித் திட்டத்தின் இன்றியமையாமையை ஸ்தல ஸ்தாபனங்கள் உணர்ந்து அந்தத்துறையில் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படிப் பார்த்துக்கொள்ளவேண்டியது கலெக்டர்களின் கடமையாகும். கலெக்டர்களுக்கு அனுப்பட்ட நேர்முகக்கடிதத்தின் பிரதி (கடித எண். 3 422, தேதி: 15—12—'62) தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், விளக்கம் பெறுவதற்கும் கீழே தரப்படுகிறது :—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், விவசாய உற்பத்தியை சுமார் 33 சதவீதத்திற்கு உயர்த்துவது குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தக் குறிக்கோளை அடையும் வகையில், விவசாயிகள் முயன்று பாடுபடுவதற்கு, அவர்களுக்குத் தேவையான செயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள், கடன்கள் பாசன வசதிகள் முதலிய எல்லா வசதிகளும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதென்பது தம் வயல்களில் விளைவு அதிகரிக்கவும் தனி வழியில் சிந்தித்துச் செயல்படும் கோடிக்கணக்கான விவசாயிகளின் ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் பொறுத்தே இருக்கிறது. மாநில விவசாய அபிவிருத்தித் திட்டத்திலும், பஞ்சாயத்து யூனியன் விவசாய மானியப் பங்கீட்டுத் திட்டத்திலும், கிராம விவசாய உற்பத்தித் திட்டத்திலும், விவசாயிகளின் இத்தகைய ஈடுபாட்டையும், ஒத்துழைப்பையும் ஒருங்கிணைத்துப் பயன்காணவேண்டுமென்றே குறித்துள்ளது. உணவு உற்பத்திப் பெருக்க வேலைகளில், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் முதலிய உள்ளூர் நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படவேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்து அளவில், இது விஷயத்தில் பஞ்சாயத்து முழுமையும், முயற்சியுடன் ஈடுபடவேண்டும். பஞ்சாயத்து யூனியன் அளவில், அந்தப் பஞ்சாயத்து யூனியன் பகுதியின் உணவு உற்பத்திப் பெருக்க விஷயத்தை பொதுப் பணிக்குழு (General Purpose Committee) கவனித்துக்கொள்ளும். மாவட்ட அளவில், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின், உணவு–விவசாய நிலைக்குழு, அதன் பகுதியிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களின், முயற்சிகளை ஒருங்கிணைப்பதுடன், திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வறிக்கை தயாரித்தல், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆலோசனை கூறுதல், திட்ட நிறைவேற்றத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படுமானால் அதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருதல் ஆகிய வேலைகளைச் செய்யும். இந்த அமைப்புகளிலெல்லாம், விவசாயப் பின்னணியும் அனுபவமும் உள்ளவர்களை உறுப்பினர்களாக நியமித்துச் சேர்த்துக் கொள்ள (Coopt) வகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் பொதுப்பணிக் குழு, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் உணவு–விவசாய நிலைக்குழு, ஆகிய மூன்று அளவிலும் உள்ள அமைப்புகள், சாதாரண காலங்களில், விவசாய உற்பத்திப் பிரச்சினையை கவனிக்கின்ற—கவனிக்க வேண்டியன ஆகும். இப்பொழுது—இன்றைய தேசிய நெருக்கடி நிலையில், அவை விவசாய உற்பத்தித் திட்டங்களை மிகத் தீவிரமாக நிறைவேற்றவேண்டியது அவற்றின் கடமையாகிறது. ஆகவே விவசாயத் திட்ட நிறைவேற்றத்தின் இன்றியமையாமையை அந்நிறுவனங்கள் உணர்ந்து அதற்கான வழியில் செயல்படுமாறு செய்யவேண்டியது கலெக்டர்களின் கடமையாகும்.

2. உணவு உற்பத்திக்கான வழி வகைகளை ஆராயும் பொழுது, கீழ்க்கண்ட குறிப்புக்களைக் கவனத்தில் கொள்வது நலம் :

(i) நஞ்செய், புஞ்செய்ப் பயிர்களுக்கான புதுவகை விதைகளைப் பரப்புதல்; அவ்வப் பகுதிகளில் மாதிரித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தல்.

(ii) தனிப் பிரிவினருக்குப் போக அதிகமாக உள்ள புறம்போக்கு நிலம் உட்பட, அரசாங்க அல்லது தனிப் பட்டவர்களின் தரிசு நிலங்களை எல்லாம், விவசாயத்திற்கு உபயோகப்படுத்துதல்.



(iii) ரசாயன உரங்கள், உள்ளூர் எரு ஆதாரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி விளைவைப் பெருக்குதல்; உற்பத்தியைத் தீவிரப்படுத்துதலும், உள்ளூர் எரு ஆதாரங்களை அபிவிருத்தி செய்தலும்.

(iv) ஒரு பட்டம் பயிரிடப்படும் நஞ்செய் நிலங்களிலெல்லாம் இரண்டாவது பட்டமும் பயிர் செய்தல்.

(v) வானம் பார்த்த (மழையையே எதிர்பார்க்கக் கூடிய) புஞ்செய் நிலங்களையெல்லாம், கிணறுகள் வெட்டுவதன் மூலம் தோட்டக்கால்களாக மாற்றுதல்.

(vi) நில வளைவுக் கரை அமைப்பு, புஞ்செய்ப் பயிர் முறைகளைப் பின்பற்றுதல்.

(vii) வீட்டுத் தோட்டங்களிலும், வீட்டைச் சுற்றியுள்ள இடங்களிலும், வயல் வரப்புகளிலும் கிராமத்தில் இருக்கின்ற இடத்திலெல்லாம் காய்கறிகளைப் பயிரிடுதல்.

3. இந்த மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக, கூட்டு முயற்சியுடன் மேற்படி குறிப்புகளின்படி நடவடிக்கைகளை எடுக்கலாம்.

மேற்படி குறிப்புகளில் கூறப்பட்ட ஏதாவது ஒரு விஷயத்தில், பஞ்சாயத்து, அந்தப் பஞ்சாயத்துப் பிரதேச நிலைகளைப் பொறுத்து தனிக் கவனம் செலுத்தலாம். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், ஒரே மாதிரியான செயல் திட்டத்தைத் திணிப்பதற்குப் பதிலாக, உணவு உற்பத்தியை உடனடியாகப் பெருக்கச் சாத்தியமான வழிகளைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பூரண உரிமை கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாக பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியனின் பொதுப்பணிகள் குழுவும், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் உணவு–விவசாய நிலைக் குழுவும் ஆலோசனை கூறுவது நலம்.

4. கலெக்டர்கள் இதுவிஷயத்தில் நேரடிக் கவனம் செலுத்தி, பல்வேறு உள்ளூர் நிறுவனங்களுக்கும் தேவையான யோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முடியுமான அளவு அதிக விதை விநியோகத்துக்கும், விவசாயிகளுக்கும், வட்டார அதிகாரிகளுக்கும். உடனடியாகப் பயன் தரத்தக்க பயிர்களைத் தரிசு நிலங்களில் விளைவிப்பதற்கான ஆலோசனைகளைச் சொல்லவும், விவசாயத் துறை இயக்குநர் மூலமாக, மாவட்ட விவசாய அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட இருக்கின்றனர்.

5. இப்போதைய யுத்த நிலையை தேசிய கண்ணோட்டத்துடனும், தேசப் பற்றுடனும் சமாளிக்கின்ற முயற்சியுடன் திட்டமிட்டுச் செயல்பட்டாலன்றி—எல்லா வட்டார அதிகாரிகள், இதர அதிகாரிகள் மட்டுமன்றி, பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள் ஆகியோர் மட்டுமன்றி, கிராமப் பொது மக்களும் இந்த முயற்சிகளில் ஆர்வம் காட்டி, தாமே முன் வந்து பணி புரியும் நிலை இல்லை என்றால்—இந்த முயற்சியில் முழுப் பயனை அடைய முடியாது என்பதை உணரவேண்டும். எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தும்பொழுதும், பொது மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் இல்லை என்பது வழக்கமாகக் கூறப்படுவதாகும். இந்த உணவு–காய்கறி உற்பத்தி வேலைகளிலும் அதே மனப்பான்மை காட்டப்படுமானால், நாம் எந்த ஒரு சாதனையையும் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதென்பது பயனற்றதாகும். இந்த நெருக்கடி நிலையில், அதிகாரிகள், பொது மக்கள் ஆகிய இருபாலாரின் பங்கும் மிக இன்றியமையாததாகும்; அவர்களுடைய பொறுப்பு மிகுதியாகும்; அவர்கள் காட்டும் ஆர்வத்தையும், உற்சாகத்தையும், மனோவேகத்தையும் பொறுத்தே இந்தத் திட்டத்தின் வெற்றி அமைந்திருக்கிறது. மேற்படி திட்ட நிறைவேற்றத்தை திட்டமிட்டுச் செயலாற்ற அதிகாரிகள், பொது மக்கள் ஆகிய எல்லோரும் முனைந்து முற்படுவார்கள் என்று பெரிதும் நம்பப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் (பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநரின்) 21—1—1963 தேதியிட்ட கடிதம்: 236422.)

---

## கிராம சேவகர் பதவிகள் நிரந்தரமாக்கல்

## [Permanent retention of posts of Grama Sevaks grade I and grade II—Ordered]

### G. O. Ms. No. 110, R. D. and L. A., dated 15th January, 1963.

இவ்வாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து கீழ்க்கண்ட பதவிகளை நிரந்தரமாக்கி அரசாங்கம் அனுமதி வழங்குகிறது :—

1. முதல்நிலை கிராம சேவகர் பதவிகள் 138

2. இரண்டாம் நிலை கிராம சேவகர் பதவிகள் 322.

கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 470-ல் இப்பதவிகள் கடைசி முறையாக நீட்டிக்கப்பட்டன.

3 பொதுத் துறை (கிராம அபிவிருத்தித் திட்டங்கள்) யின் 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2047லும், 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2201-லும், கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1279-லும் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன. 267 முதல் நிலை கிராம சேவகர், 623 இரண்டாம் நிலை கிராம சேவகர் பதவிகள் ஆகியவற்றுக்கு மேலும். மேலே 1-வது பாராவில் கூறப்பட்ட பதவிகள் நிரந்தரமாக்கப்படுகின்றன.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 110.)

## விவசாய முன்னேற்றம், சாதனைகள் பற்றிய செய்திகளை விவசாய அமைச்சருக்குச் சமர்ப்பித்தல்

## [Agriculture—Progress and Achievements—Information—Submission to Minister for Agriculture—Instructions Issued]

### (Memorandum No. 264499, R. D. & L. A., dated 15th January, 1963).

தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில், விவசாய அமைச்சர் கூட்டிய ஒரு கூட்டத்தில், அவர் வட்டாரங்களுக்கு விஜயம் செய்யும் பொழுது, விவசாய வளர்ச்சி அதிகாரிகள் அவரைச் சந்தித்து அவ்வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள விவசாய திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சாதனைகள் முதலியன குறித்து விளக்கிக் கூற வேண்டுமென்று, விவசாயத்துறை (தணிக்கை—பொது) & (வளர்ச்சி)—இணை இயக்குநரிடம் தெரிவித்துள்ளார். ஆகவே, விவசாய அமைச்சர், தம் சுற்றுப் பயணத்தின்போது விஜயம் செய்யும் வட்டாரங்களில், விவசாய வளர்ச்சி அதிகாரிகள் அமைச்சரைக் கண்டு விவசாயத் திட்டங்களில் அவ் வட்டாரங்களில் அன்றுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விளக்கிக்கூறவேண்டுமென்று அவர்களுக்கு எடுத்துக்கூறும்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 264499.)

---

## தேசிய நெருக்கடி—கிராமத் தொண்டர்படை—கிராம மாதர்களின் ஒத்துழைப்பு—பயிற்சி முகாம்கள் நடத்துதல் குறித்த விளக்கம்

## National Emergency—Village Volunteer Force—Association of women in rural areas—Conduct of Training camps—Instructions Issued.

### Memorandum No. 139021, R. D. & L.A., dated 23rd January 1963

1961-62, 1962-63 ஆண்டுகளில், பஞ்சாயத்துக்களின் பெண் உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட/நியமிக்கப்பட்ட (coopted) பெண் உறுப்பினர்கள், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் அளவில் உள்ள மாதர் நலக் குழுக்களின் உறுப்பினர்கள், ஆகியோர் தத்தம் பகுதிகளில், மாதர் குழந்தைகள் நலத் திட்டத்தை உருவாக்கவும், செயல்படுத்தவும், கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள், ஆகியோர் ஆரம்ப நிலையில் செய்யும் பணியைத் தொடர்ந்து நடத்தவும், பயிற்சி அளிக்கும் வகையில், பயிற்சி முகாம்களை நடத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இப் பயிற்சி முகாம்கள் ஒவ்வொன்றும் மூன்று நாட்கள் காலவரை முறையுடையன. அநேகமாக எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட/நியமன பெண் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது.

2. இன்றைய தேசிய நெருக்கடி நிலையில், குறிப்பாக, கிராமத் தொண்டர் படை அமைப்பு வேலையில், பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியன்களின் மாதர்நலக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கும் விஷயம் அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது. மாதர் நலத்துறை இயக்குநர் தம்முடைய 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ந் தேதிய கடிதத்தில் (கடித எண் : 12567) கிராமப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் விஷயத்தில், கீழ்க்கண்ட அம்சங்கள் அடங்கிய சில ஆலோசனைகளைக் கூறியுள்ளார்.—

(i) முதலுதவியும் இல்லப் பணியும்.

(ii) சிறு சேமிப்பு.

(iii) வீட்டுத் தோட்டம் ; கோழி வளர்ப்பு, கிராமக் கம்போஸ்டு.

(iv) போர் வீரர் குடும்ப நலன்.

இந்த ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து கீழ்க்கண்டபடி ஆணை பிறப்பிக்கிறது.—

(i) மேலே குறித்த நான்கு அடிப்படை அம்சங்களில், மாநிலத்திலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களிலும், அவ்வப்பகுதிகளிலுள்ள மாதர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். இந்தப் பயிற்சி, மாதர் நலக்குழு உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி பயிற்சியில் சேரும் எல்லா பெண்களுக்கும் நடத்தப்படவேண்டும்.

(ii) பஞ்சாயத்து அளவு பயிற்சித் திட்டம் நடத்துவதில் முதற் பொறுப்பு கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் ஆகியோருடையதாகும். இது சம்பந்தமாக, சுகாதார மேற்பார்வையாளர்கள், கிராம சேவகர்கள், விவசாய வளர்ச்சி அதிகாரிகள், கல்வி வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோர் கிராம சேவிகைகளுக்கும், முக்கிய சேவிகைகளுக்கும் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். மொத்தத்தில், பயிற்சி முகாம்களை நடத்தும் பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், மாவட்ட மாதர் நல அதிகாரி ஆகியோருடையதாகும்.

(iii) வளர்ச்சிப் பணியாளர்கள் நன்கு செயல்படும் வகையில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தத்தம் பகுதிகளில் பயிற்சி முகாம்கள் நடத்துவதற்கான மாதிரித் திட்டம் ஒன்றை வகுக்கவேண்டும்.

(iv) மாதர் நலத் துறை இயக்குநர் ஒரு விளக்கமான பாடத்திட்டத்தையும், வேலைத் திட்டத்தையும் தயாரித்து,



பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், மாவட்ட மாதர் நலத்துறை அதிகாரிகளுக்கும் முன்னதாகவே அனுப்பி வைக்கவேண்டும்.

(v) இத்திட்டத்திற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், மாதர்-குழந்தைகள் நல மானியத்திலிருந்து, உயர்ந்த அளவு 200 ரூபாய் வரை தொடர்ந்து வரும் செலவுகளுக்கு வகை செய்யலாம். அதற்கு மேலும் ஆகும் செலவுகள் ஏதாவது இருப்பின் அவற்றைப் பொது மக்கள் நன்கொடைகளைக் கொண்டு ஈடு செய்யவேண்டும்.

(vi) பயிற்சி முகாம்களை நடத்தும் இத்திட்டம் 1963-ம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்படவேண்டும். எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும், விரைவில், எந்தவகையிலும் மூன்று மாதத்துக்குள் முடித்துவிடவேண்டும்.

3. பஞ்சாயத்து அளவு பயிற்சி முகாம்களை நடத்தும் வேலையின் முன்னேற்றங்களைக் குறித்து மாதர்நலத் துறை இயக்குநர் அரசாங்கத்துக்கு அவ்வப்போது அறிவித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

கிராம நல தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந்தேதியிட்ட அரசாங்க அறிக்கை 139021.

---

## உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்) அவர்களின் பணிகளும் கடமைகளும்

## [Assistant Development Commissioner (Social welfare), Madras—Functions and Duties—Prescribed—Instructions Issued].

### G.O. Ms. No. 181, R. D. and L. A., dated 23-1-63

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 1833-ல், உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்) என்ற பதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (சமூக நலன்) பணிகளையும், கடமைகளையும் கீழ்க்கண்டவாறு அரசாங்கம் வரையறுத்துள்ளது:—

(i) கல்வி வளர்ச்சி அதிகாரிகளின் வேலை அட்டவணை (Job Chart), கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 483, 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 300 ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள சமூகக் கல்விக்கான மாதிரி வேலைத்திட்டம் ஆகியவற்றை யொட்டி மாநிலத்தின் எல்லா வட்டாரங்களிலுமுள்ள கல்வி வளர்ச்சி அதிகாரிகளின் சமூகக் கல்வி பற்றிய பணியினை மேற்பார்வையிடுதல்.

(ii) மாநிலத்தின் எல்லா வட்டாரங்களிலுமுள்ள சமூக நலப் பணியாளர்களின் வேலையை மேற்பார்வையிடுதல்; கிராம நலத் துறையின் 1958-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ந்தேதியிட்ட அரசாங்க அறிக்கை 151-ல் கூறியபடி, அவர்கள் நன்கு பணிபுரியத் தக்கவகையில், அவர்களுக்குத் தகுந்த பயிற்சியளித்து வழிப்படுத்துதல்.

(iii) மேலும், எல்லாக் கிராமங்களிலும் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டானதும், அவற்றின் செயல் முறையில் சிறப்பாகக் கவனம் செலுத்துதல்.

[கிராம நல தல நிர்வாகத் துறையின் 22-1-1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 181]

---

## தேசிய நெருக்கடி—கிராமத் தொண்டர் படை—உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (சமூக நலன்) பணிகளும் கடமைகளும்—மேலும் வெளியிடப்பட்டுள்ள விளக்கம்

## [National Emergency—Village Volunteer Force—Assistant Development Commissioner (Social Welfare)—Functions and Duties—Further Instructions Issued.]

### (Memorandum No. 24500 R.D. and L.A., dated 5-2-63.)

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் வருடம் ஜனவரி மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை *181-ல் உதவி அபிவிருத்திக் கமிஷனரின் (சமூக நலன்) பணிகளையும் கடமைகளையும் அரசாங்கம் வரையறுத்துள்ளது. அதில், எல்லா கிராமங்களிலும், கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டானதும், அவர் அவற்றின் செயல் முறையில் சிறப்பாகக் கவனம் செலுத்துவார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. இவ்வாண்டு குடியரசு தினத்தில், எல்லா பஞ்சாயத்துக்களிலும் கிராமத் தொண்டர் படை தொடங்கப்பட்டுள்ளது. கிராமத் தொண்டர் படையில், மூன்று பிரிவுகள், அதாவது, பொருள் அணி, அறிவணி, காவல் அணி என்ற பெயர்களில் முறையே உற்பத்தி, பொது அறிவு, கிராமப் பாதுகாப்பு ஆகிய விஷயங்களைக் கவனிக்க, அமைக்க பஞ்சாயத்துக்கள் ஏற்பாடு செய்து வருகின்றன. பல பஞ்சாயத்துக்கள் கிராமத் தொண்டர் படையின் மேற்படி பணிகளை நிறைவேற்ற தாமே திட்டம் தீட்டி வருகின்றன.

* இவ்வாணையின் தமிழாக்கம் மேலே தரப்பட்டுள்ளது.

வைக்கவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறித்திருந்தது. அதன்படி, விளக்கமான பாடத் திட்டம் தயாரித்து, *(இந்த சுற்றறிக்கையின் இணைப்பில் பாடத் திட்டத்தின் விவரத்தைக் காணலாம்.) இவ்வாணையுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

2. பயிற்சி முகாம் நடத்த, அட்டவணை தயாரிக்கும் பொழுது, சம்பந்தப்பட்ட கிராமங்களில் முக்கிய சேவிகைகளும், கிராம சேவிகைகளும் தங்கியிருக்கும்படி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். மேற்படி அறிக்கையின் 2 (ii)-பாராவில், சுகாதார மேற்பார்வையாளர்கள், கிராம சேவகர்கள், விவசாய வளர்ச்சி அதிகாரி, கல்வி வளர்ச்சி அதிகாரி, ஆகியோரும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் பயிற்சி முகாம் வெற்றிகரமாக நடத்த ஒத்துழைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வேலைக்காக, பிற அதிகாரிகளின் சுற்றுப் பயணம் எந்த அளவுக்கு சரிப்படுத்த முடிகிறது என்று பார்த்துக்கொள்ளும்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

3. முக்கிய சேவிகைகளும், கிராம சேவிகைகளும் அமர்த்தப்படாத வட்டாரங்களின் அதிகப்பணிகளை ஏற்கெனவே பணிபுரிபவர்களிடம் ஒப்படைப்பது குறித்து ஆணைகளைப் பெறுவதற்காக, மாவட்ட மாதர் நல அதிகாரிகள் உடனடியாக கலெக்டர்களிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பற்றிய அறிக்கையை, மாவட்ட மாதர்நல அதிகாரிகள் விரைவில் சமர்ப்பிக்கவேண்டும்.

4. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தத்தம் வட்டாரங்களில், பயிற்சி முகாம் நடத்துவதற்கான விளக்கமான அட்டவணையை, பிப்ரவரி மாதம் 15-ம் தேதிக்கு முன், சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அந்த விவரங்களை அவர்கள் கீழ்க்கண்ட முறைப்படி குறிக்க வேண்டும் :—

1. பஞ்சாயத்தின் பெயர் :
2. பயிற்சி முகாம் நடத்த இருக்கும் இடம் :
3. பயிற்சிபெற சேர்ந்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை :
4. பயிற்சி நடத்த இருக்கும் தேதிகள் :
5. பயிற்சித் திட்டப் பொறுப்பேற்றுள்ள வட்டாரப் பணியாளர் :

5. முதல்நிலை சுகாதார நிலைய மருத்துவர்கள் (Doctors) பயிற்சி முகாம் நடத்துவதில், சிறப்பாக முதலுதவி, இல்லப் பணிவிடை வகுப்புகள் நடத்துவதில் தேவையான உதவிகள் செய்து ஒத்துழைக்க வேண்டுமென்று மருத்துவப்பணி இயக்குநர் ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளார் என்பது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு, இந்தச் சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்படுகிறது.

6. மாவட்ட சிறு சேமிப்பு அமைப்பாளர்களும், கூடுமான அளவுக்கு, தேவையான உதவிகள் புரியவும், பயிற்சி முகாம்களில் கலந்துகொள்ளவும் தேசிய சிறு சேமிப்பு-பிராந்திய இயக்குநர், தேவையான ஆணைகள் பிறப்பித்துள்ளார். இதற்குமேலும், மாவட்ட மாதர் நல அதிகாரிகளும், எத்தனை பயிற்சி முகாம்களில் முடியுமோ அத்தனை பயிற்சி முகாம்களில் கலந்துகொள்ள இருக்கின்றனர். இவ்வாறு செய்யப்படும் உதவிகளை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், முழு அளவுக்குப் பயன்படுத்தி, குறித்த காலத்தில் அவரவர் வட்டாரங்களிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களிலும் பயிற்சித் திட்டத்தை நல்ல வகையில் நடத்துவார்கள் என்று நம்பப்படுகிறது.

(மாதர் நலத்துறை இயக்குநரின் 1963 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண் 2366).

---

## *கிராமப் பெண் தொண்டர் படையினர் சபதம்

பாரத நாடு சீனர்களுடன் பாசமும் நேசமும் காட்டி அதன் சுதந்திரத்தையும், சமாதானத்தையும் மதித்து வருகிறது. எனினும் சீனர்கள் எதிர்பாராதவாறு இந்திய நாடு காட்டிவந்த அன்பையும், மதிப்பையும் நட்பையும், நல்லெண்ணத்தையும் சமாதான மனப்பான்மையையும் மதியாமல் பஞ்சசீலக் கொள்கைக்கு மாறாக படையெடுத்து வந்ததைக் கண்டு நாங்கள் மிகவும் வருந்துகிறோம். இந்நெருக்கடியான நேரத்தில் இந்திய நாட்டிலுள்ள கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றிற்கு எங்களால் இயன்ற சேவையை என்றும், எப்பொழுதும் இதயம் கனிந்து செய்வோமென இச்சந்தர்ப்பத்தில் சபதம் செய்கிறோம்.

கிராமப் பெண் தொண்டர்ப்படை பயிற்சி பெற்ற மாதர்களாகிய நாங்கள் முதல் உதவி, குடும்ப மருத்துவ சேவை (ஹோம் நர்ஸிங்), சிறு சேமிப்பு, வீட்டுத் தோட்டமிடல், போர்வீரர் குடும்பத்திற்கு உதவுதல் ஆகிய ஐந்து விதமான திட்டங்களும், எங்கும் வெற்றியுடன் நிறைவேற எங்கள் மூச்சு உள்ளவரை முழு மனதுடன் ஒத்துழைப்போமெனவும் உறுதி கூறுகிறோம்.

(ஒப்பம்)........................

தேதி........................

* கிராமத் தொண்டர் படையின் பெண்கள் பகுதி உறுப்பினர்கள் மேற்கொள்ளவேண்டிய சபதம். இதை எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் நடைபெறும் பயிற்சி முகாம்களில் பங்கு கொள்வோர் மேற்கொள்வார்கள். அதன் மாதிரி இங்கு தரப்பட்டுள்ளது.

---

## தேசிய நெருக்கடிநிலை—கிராமத் தொண்டர் படை—உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்)—பணிகளும் கடமைகளும்

## National Emergency—Village Volunteer Force—Assistant Development Commissioner (Social Welfare)—Functions and Duties

### Memorandum No. 24500, R. D. & L. A., dated 5-2-63.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 181-ல் உதவி அபிவிருத்தி கமிஷனர் (சமூக நலன்) அவர்களின் கடமைகளும் பணிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துக்களின் கிராமத் தொண்டர் படை செயல்முறைகளில் உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்) தனிக் கவனம் செலுத்துவார். கிராமத் தொண்டர் படை சம்பந்தமாக உதவி அபிவிருத்திக் கமிஷனர் (சமூக நலன்) அவர்களின் கடமைகள் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ந்தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 24500-ல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

உதவி அபிவிருத்தி கமிஷனர் (சமூக நலன்), கிராமத் தொண்டர் படை வேலைகளை ஒரு முகப்படுத்துதல், விளக்கங்கள் கூறுதல் ஆகியவற்றிற்காக வட்டாரத்தில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்வார். உதவி அபிவிருத்தி கமிஷனர் (சமூக நலன்) வட்டாரங்களில் சுற்றுப்பயணம் செய்யவும், பல்வேறு பஞ்சாயத்துக்களின் கிராமத் தொண்டர் படை உறுப்பினர்களைச் சந்திப்பதற்கும் வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கிராம சேவகர்கள் ஆகியோரைச் சந்திப்பதற்கும் வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தரும்படி ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளும் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 24500)

---

## பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஜீப் வண்டிகளுக்கு வேண்டிய பெட்ரோல் வாங்க ஆகும் செலவு பற்றிய நடைமுறை

## Motor Vehicles—Jeeps supplied to Panchayat Unions—Petrol supplied to Jeeps—Meeting of expenditure—Procedure—Instructions

### Memorandum No. 235552, R.D. & L.A., dated 1-2-63.

பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்ட பின்பும் வட்டார ஜீப்புகளுக்கு ஆகும் செலவு மாநில அரசாங்கத்தாலேயே தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும். வட்டார ஜீப் வண்டிகளுக்கு வழங்கப்படும் பெட்ரோல் செலவுகளை ஈடு செய்யும் விஷயத்தில் கீழ்க்கண்ட விளக்கம் வெளியிடப்படுகிறது :—

2. முதலில், வட்டார ஜீப்புகளின் பெட்ரோலுக்காக ஆகும் செலவு பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து செய்யப்படும் ரூபாய் 20 வரை ஆகும் செலவுகள் கமிஷனருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்களின் நிரந்தர முன் பணத்திலிருந்து எடுத்து செய்யப்பட வேண்டும். செலவு 20 ரூபாய்க்கு மேற்படும்போது, முதலில் பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து எடுத்துச் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாத முடிவிலும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இந்தக் கணக்கில் செய்யப்பட்ட செலவுகளைக் குறிப்பெடுத்து, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு அனுப்பி அந்தத் தொகையை பெற்றுச் சரி செய்வார். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி செய்யப்பட்டுள்ள செலவு விதிகளுக்குட்பட்டது என்று கண்ட பின்பு, கிராம நலத் துறையின் (கணக்குப் பிரிவு), 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந்தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 221263-ல் கூறப்பட்டுள்ள அனுமதி வழங்கு நமூனாவைப் பயன்படுத்தி செலவுசெய்யப்பட்ட தொகையை வழங்கி சரிக்கட்ட வேண்டும். அந்த நமூனாவில் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். இந்தச் செலவை "37. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய வளர்ச்சிப் பணியும் தல அபிவிருத்தி வேலைகளும் II—அபிவிருத்தித் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைகள் எ. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் 5. இதர செலவுகள்", என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்க வேண்டும்.

3. இது சம்பந்தமாக, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கிராம நலத்துறையின் 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 380-ல் வரையறுத்துள்ளபடி ஒரு ஜீப்பிற்கு ஒரு மாதத்திற்கு 325 லிட்டர் பெட்ரோல் என்ற உயர்ந்த பட்ச வரையறையை, குறிப்பாக இன்றைய தேசிய நெருக்கடி நிலையில், கண்டிப்பாக பின்பற்ற வேண்டும், என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 235552)

# கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

வாரந்தோறும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும், மாலை 6-45 முதல் 7-15 வரையில் 'கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. அந்நிகழ்ச்சிகளில் கேள்வியும் பதிலும் முதலிடம் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| 2—4—63 | செவ்வாய் | பசுந்தாள் பயிர் சாகுபடி |
| 5—4—63 | வெள்ளி | கிராமத் தொண்டர் அணியும் தீவிர சாகுபடித் திட்டமும் |
| 9—4—63 | செவ்வாய் | பசுக்களின் மலட்டுத் தன்மை |
| 12—4—63 | வெள்ளி | தங்கக் கட்டுப்பாட்டின் அவசியம் |
| 16—4—63 | செவ்வாய் | கண் பாதுகாப்பு |
| 19—4—63 | வெள்ளி | முப்படையில் சேர்வது எப்படி |
| 23—4—63 | செவ்வாய் | கூட்டுறவுப் பண்டகசாலை |
| 26—4—63 | வெள்ளி | பூமிசேனையில் நம் பங்கு |
| 30—4—63 | செவ்வாய் | விபத்தும் முதலுதவியும் |

---

The following particulars regarding the ownership of 'GRAMA NALAM' the monthly news paper are published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956 :

## FORM IV

(See Rule 8.)

| | | |
|---|---|---|
| 1. | Place of publication | Fort St. George, Madras-9. |
| 2. | Periodicity of publication | Monthly. |
| 3. | Printer's Name | Sri C. P. Kelu Erady, I.A.S., Controller of Stationery and Printing. |
| | Nationality | Indian. |
| | Address | Government Press, Madras-1. |
| 4. | Publisher's Name | Sri S. K. Chettur, I.C.S., Secretary to the Government R.D. & L.A. Department. |
| | Nationality | Indian |
| | Address | Fort St. George, Madras-9. |
| 5. | Editor's Name | Sri S. Venkataswamy, M.A., Public Relations Officer, R.D. & L.A. Department. |
| | Nationality | Indian. |
| | Address | Fort St. George, Madras-9. |
| 6. | Names and addresses of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | Government of Madras, Fort St. George, Madras-9. |

I, S. K. Chettur, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Sd.) S. K. CHETTUR,
*Publisher.*

Dated : 12—3—1963.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



19

இராமேஸ்வரம் கோயில் தேவஸ்தானத்தார் மாநிலக் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்களிடம் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக, ஆயிரம் ரூபாயும், 448 கிராம் தங்கமும் 17-12-62-ல் அளித்தனர். கவர்னர் அவர்கள், குங்குமம் இலாமன், பாதி உள்ளச்சியுடன் இருப்பதைப் படத்தில் காணலாம். மாவட்டக் கலெக்டர் திரு கே. அம்பாசங்கர், ஐ.ஏ.எஸ்., விசேஷ டெபுடி கலெக்டர் திரு ஆர். பதமநாபன் ஆகியோர் கவர்னருடன் உள்ளனர்.

Regd. No. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1963.

# "தாயகம் காத்திட தங்கநகை தருவீரே"



# கிராம நலம்



204பு.





## எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய செல்வம்

"உணவுச் சீர்திருத்தத்துடன் கிராமப்பொருளாதாரப் புனருத்தாரணம் ஆரம்பமாகியிருப்பதால், இழந்துவிட்ட பலத்தைக் கிராமவாசிகள் திரும்பவும் பெறும்படி செய்ய வல்ல எளிய, மலிவான ஆகாரங்களைக் கண்டுபிடிப்பது அவசியமாகிறது. கிராமவாசிகள் தங்கள் சாப்பாட்டுடன் பச்சைக் கீரைகளையும் சேர்த்துக்கொள்ளுவார்களாயின், இப்பொழுது அவர்கள் அனுபவித்துக்கொண்டு வரும் நோய்கள் பல ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ள முடியும். கிராமவாசிகளின் உணவில் வைட்டமின் சத்துக்கள் போதாமல் இருக்கின்றன. பச்சைக் கீரைகள், வேண்டிய பல வைட்டமின் சத்துக்களை அளிக்கும். புல்லியில் ஒரு பிரபலமான ஆங்கில டாக்டர் என்னிடம் பின்வருமாறு கூறினர்: "பச்சைக் கீரைகளைச் சரியானபடி உபயோகிக்க முற்பட்டு விட்டால், உணவைப்பற்றி, வழக்கமாக இருந்து வரும் அபிப்பிராயங்கள் எல்லாம் புரட்சிகரமான மாறுதலை அடைந்து விடும். பால் சாப்பிடுவதால் என்ன பயன் ஏற்படுகிறதோ, அதே சத்துக்களை, பச்சைக் கீரைகள் அளித்து விடும்" என்றார்.

இந்தியாவில் எண்ணற்ற வகையான கீரைகள் தாமே வளர்ந்து வருகின்றன. ஆனால், அவற்றில் என்ன என்ன ஊட்டச் சத்துக்கள் நிறைந்திருக்கின்றன என்ற விவரத்தை அறிவதற்கு, விரிவான ஆராய்ச்சிகளும் பரிட்சைகளும் செய்ய வேண்டியதாகிறது."

"மகாத்மாவின் மணிமொழி"

# கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 8 | மே 1963 | படி 8

சென்னை-600 003.

## பட்டினியை ஒழிக்கப் பாடுபடுவோம்

உலகத்தின் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணமாய் இருப்பவை மூன்று. பசி, பிணி, பகை, அவற்றின் கொடுமையை உணர்ந்து அறிந்து, அனைவரும் அவற்றை அடியோடு நீக்க ஓயாது [illegible]ருள்ளனர்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சிறக்கென வாழ்த்தி"

என்று மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற தமிழ்ப் பெருங் காப்பியங்கள் முரசறைகின்றன. [சிலப்பதிகாரம்: இந்திர விழா ஊரெடுத்த காதை 72—73 வரிகள்; மணிமேகலை; விழா அறை காதை 70—71 வரிகள்: வசி= மழை; வசிகரம் என்ற பொருளும் உண்டு] மக்கள் திருவிழாக் காலங்களில் இந்த வாழ்த்தொலியை முழங்குவது வழக்கம் எனத் தெரிகிறது.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர்' என்பது தமிழ்ப் புலவர் இருவாக்கு. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பசி, பிணி, பகை ஆகிய மூன்று கொடுமைகளையும் அடக்கி ஒடுக்க, அநேகப் பெரியோர் அரும் பணி புரிந்துள்ளனர். "பஞ்சமும் நோயும் நின்மெய்யடியார்க்கோ" என்று கவிஞன் குமுறிப் பாடுகின்ற அவலநிலை நாட்டில் இருக்கக்கூடாது என்பதற்காக எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

மக்கள், தமது கூட்டு முயற்சியாலும், உழைப்புத் திறனாலும், அன்புள்ளத்தாலும், இந்த மூன்று கொடுமைகளையும் வெல்லவேண்டும் என்ற உறுதியினை, நமது பெரியோர்கள் தக்க சமயங்களில் மறக்காமல் வற்புறுத்தியுள்ளனர். அதன் தொடர்ச்சியாகவே, இருபதாவது நூற்றாண்டில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒரு பகுதியாகிய உணவு விவசாய அமைப்பின் ஆதரவில், உலகெங்கும் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பசிப்பிணியைப் போக்கும் இந்த உயரிய பணியில் உலக மக்கள் யாவரும் ஈடுபடவேண்டும்.

நாடு என்பதற்கு இலக்கணம் கூறவந்த திருவள்ளுவர்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும், சேராது இயல்வது நாடு"

என்று கூறுகிறார். இந்தக் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டே வந்துள்ளது என்பதை, இலக்கியங்களிலிருந்து காணலாம். இந்த உயரிய பணியில், பாரத நாடு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இது பற்றி, பிரதமர், ராஷ்ட்ரபதி, உப ராஷ்ட்ரபதி ஆகியோர் விடுத்துள்ள செய்திகள் (அடுத்த பக்கம் பார்க்க) கருத்தாழம் மிக்கவை. "பசி இல்லாத, பிணி இல்லாத, பகை இல்லாத பாரத நாட்டை உருவாக்கப் பாடுபடுவோம்" என்ற உறுதிமொழியை நாம் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்வோமாக!

---

**அட்டைப் படம்:**

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; இங்கு
வாழுமனிதருக்கெல்லாம்" என்று பாடினார் பாரதி.
பசியும், பிணியும், பகையும் நீங்கி, மக்கள் நல்வாழ்வு வாழ
பாடுபட வேண்டியது பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமையாகும்.
"வாழ வகை இல்லையே என்று ஏங்குவோரைப் பார்த்து,
நிலமென்னும் நமது அன்னை சிரிப்பாள்...." என்றார் திருவள்ளுவர்.
அந்த அடிப்படை நெறி நின்று, "பாடுபட்டால் பலன் உண்டு" என்ற அனுபவ உண்மை[illegible]
விளக்குகிறாரா இந்த முதுமகள்?

## ஒன்று சேர்ந்து உழைப்போம் !

“ மனித இனம் படும் துன்பங்களில் பட்டினித் துன்பம் கடுமையானது. உலகத்திலுள்ள சச்சரவுகள் பெரும்பாலானவைகளுக்குக் காரணமாக இருப்பது, பட்டினியும் சத்துணவுப் பற்றாக்குறைவுமாகும். மக்கள் எண்ணிக்கை அதிகமாகி வருவதால், இப்பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டியிருக்கிறது. இதன் அவசரத்தையும் முக்கியத்தையும் உணர்ந்து, அதைத் தீர்த்து வைப்பதற்கு, விஞ்ஞான முறைகளைக் கையாளுவதுதான் சிறந்த வழியாகும். தீவிரமாக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்ட இடங்களிலெல்லாம், உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

உற்பத்தியைப் பெருக்குவது மட்டும்தான், பிரச்சினை என்பதல்ல. விளைபொருள் விநியோகத்தை செம்மைப்படுத்தி சத்தான உணவு கிடைக்கும் வகையில் உணவுப் பழக்கத்தை சீர்திருத்த வேண்டியது அவசியமாகும். ஒவ்வொருவரும், பட்டினியிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற இலட்சியத்தை மனத்திற்கொண்டு, அதை நிறைவேற்ற, நமது சக்தியையும் மனத்தையும் ஈடுபடுத்தினால், நிச்சயமாக வெற்றியடையலாம். உலக உணவு விவசாய ஸ்தாபனம் மேற்கொண்டுள்ள இந்த இயக்கத்தின் மூலம், பட்டினியையும், சத்துணவுக் குறைவையும் ஒழிக்க, நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு

—(o)—

## பட்டினியை ஒழிப்பது பஞ்சாயத்தின் கடமை

“ உலகிலுள்ள இன்றைய மிகப்பெரிய பிரச்சினை பட்டினியாகும். உலக மக்களில் பாதிக்குமேல் பட்டினி அல்லது சத்துணவுக் குறைவு ஆகிய ஏதாவதொரு வகையில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். உலகில் 15 சத விகித மக்கள் வாழ்க்கை முழுவதும் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் இந்தப் பிரச்சினை மிகவும் கடுமையானதென்பது, எல்லோரும் அறிந்ததாகும். ஆகவே, இந்த இயக்கத்தை நாம் வெற்றியுடன் நடத்தவேண்டியவர்களாகிறோம்.

இந்த இயக்கத்தை வெற்றியடையச் செய்யும் வகையில், பணமாக சிறு நன்கொடை வழங்கலாம். உணவின் ஒரு பகுதியை அருகிலுள்ள ஏழைகளுக்குத் தரலாம். தனிப்பட்ட முறையிலும் பள்ளிகள், சங்கங்கள் மூலமாகவும் மேற்கூறியபடி செய்யலாம். ஆனால், இது போன்றவையெல்லாம் அடையாள உதவியாகவே இருக்கமுடியும். இவை மட்டும் போதாது. நல்லவிதைகள், ரசாயன உரங்கள், பாசன வசதிகள் ஆகியவை கிராம மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். நிலக்குத்தகை முறைகளை ஒழிக்க வேண்டும். சாகுபடி முறைகளைச் சீர்திருத்த வேண்டும். நமது விவசாயிகளுக்கு, எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கலாம். ஆனால், அவர்கள் நல்ல பொது அறிவு படைத்தவர்கள். அவர்களுக்கு வேண்டியது, உபதேசமல்ல ; திட்டவட்டமான உதவி. பஞ்சாயத்துக்கள் ஏற்பட்ட பிறகு, விவசாய முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது. பஞ்சாயத்துக்களின் முதற்கடமை, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவுவதாகும். இதற்கு முன், பல சோதனைகளில் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்தப் பட்டினிப் பிரச்சினையில் வெற்றி காணும்வரை ஓய மாட்டோம். ”

ராஷ்டிரபதி டாக்டர் இராதாகிருஷ்ணன்

—(o)—

## உற்பத்தியைப் பெருக்குவோம்

உலகிலுள்ள மக்களில் பெரும் பகுதியினர், பட்டினியாலும் சத்துணவுக் குறைவாலும், துன்பப்படுவது வருந்தத்தக்கதாகும். இயற்கையின் சக்திகளைப் புரிந்துகொண்டு, அதைக் கட்டுப்படுத்தி, அதன் ஆற்றல்களை உபயோகப்படுத்தும் இந்த நாளில், அப்படியிருப்பதற்கு நியாயமில்லை. இதற்குக் காரணம், மக்களின் அறியாமையே. உணவைச் சமமாக விநியோகிக்க இன்னும் வழி கண்டுபிடிக்கவில்லை. ஆனால், காலம் தாழ்த்திப் பயனில்லை. பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகள் எல்லாம், உற்பத்தியைப் பெருக்க, எல்லா வகையிலும் முயற்சி செய்யவேண்டும். இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திட்ட ரீதியான முயற்சியும் மனோதிடமும் இருக்கிறது என்பதையும், மனிதனின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்பது வெறும் கனவல்ல என்பதையும், எல்லோரும் உணரும்படி செய்ய வேண்டும்.

—உப ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன்

—(o)—





# பாதுகாப்பு உழைப்பு பாங்க்

(திரு எஸ். கே. டே, மத்திய அரசாங்க சமுதாய அபிவிருத்தி—கூட்டுறவு-பஞ்சாயத்து ஆட்சி அமைச்சர்)

போர்முனைகளிலுள்ள வீரர்களுக்குச் சத்தான உணவு வேண்டும். உயரமான இடங்களில் லேசான வெதுவெதுப்பான ஆடைகள் தேவை. அம்பையும் வில்லையும், கம்புகளையும், ஈட்டிகளையும் வைத்துப் போராடும் காலம் மறைந்துவிட்டது. நாம் பெரிதாக நினைக்கிற துப்பாக்கிகள்கூட காலத்துக்கு ஒவ்வாததாகி விட்டன. இமயமலையில் பெரியதோர் யுத்தம் நடத்தவேண்டியிருக்கிறது. மேலே செல்லச்செல்ல காற்று குறைந்து கொண்டு வருகிறது. பதினாயிரம் அடி உயரத்துக்குமேல் சென்றால் மூச்சுவிடுவதே கடினமாகிவிடும். கேதாரிநாத், பண்டரிநாத், அமர்நாத் போன்ற மலைப்பகுதிகளிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்பவர்களுக்கு அது தெரியும். அவ்விடங்களில் நமது உடலையே கூடத் தாங்கிச் செல்லுவது கடினமாகும். பளுவான ஆயுதங்களையும் கருவிகளையும் தூக்கிச் செல்லுவதென்றால் சாமானியமல்ல. ஆனால், லேசான ஆயுதங்களையும் கருவிகளையும் தயாரிக்கப் பெருஞ் செலவாகும். ஆயினும் நமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. சுதந்திரமற்ற வாழ்வில் சுகமில்லை. என்ன செலவாயினும் சரி, நமக்குப் பெரிய நவீன படை அவசியம். மலைப்பகுதிகளில் போராடும் வலுப் பெற்று நாம் விளங்கவேண்டும். சக்தி வாய்ந்த, அதே சமயத்தில் லேசான ஆயுதங்களும், கருவிகளும் இருக்கவேண்டும். உடனடியான யுத்தமெதுவும் இல்லாவிடினும் நாட்டைப் பாதுகாப்பதற்கான யுத்தத்துக்கு நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். நாம் வலுவாக இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டால்தான் எதிரிகள் நமது மண்ணை விட்டுச் செல்வார்கள்.

நமது திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதற்குப் போதுமான வசதிகள் நம்மிடமில்லை. ஆகவே நேச நாடுகளிடமிருந்து கணிசமான உதவியைப்பெற முயன்று கொண்டு வருகிறோம். மலைமீதிருக்கும் பயங்கர விரோதியை விரட்டுவதற்கேற்ற படையையும் கருவிகளையும் உருவாக்க இன்னும் ஏராளமான ஆதார வசதிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். நேச நாடுகளெல்லாம் நமக்கு உதவ முன்வருகின்றன. ஆனால் நமது தேவைகளனைத்தையும் அவர்களால் தரமுடியாது. ஒவ்வொரு நாட்டுக்கும் சொந்த தேவைகளிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள் ஓரளவுக்குட்பட்டதாகவே இருக்கமுடியும். ஆதார வசதிகளில் பெரும் பகுதியும் நமதாகவே இருக்கவேண்டும்; வெளியாரை மட்டுமே நம்பியிருப்பது அடிமை வாழ்வுக்கு ஒப்பாகும். ஆகவே, நமது, பாதுகாப்புக்கு வேண்டிய ஆதார வசதிகளை எப்படித் திரட்டுவது ?

நாசிக் அச்சகத்தில் ஏராளமாக ரூபாய் நோட்டுக்களை அச்சடித்தால் என்ன என்று கேட்கலாம். அதற்கு வேண்டிய அளவு காகிதம் நம்மிடமிருப்பதும் உண்மைதான். ஆனால் ரூபாய் நோட்டுக்கள் அதிகரிப்பதைப் போல உற்பத்தியும் அதிகரிக்காவிட்டால் பொருள்களின் விலைதான் ஏறும். ரூபாய் நோட்டுகள் அதிகரிப்பின் காரணமாக எவ்வாறு விலை பாதித்தது என்பதைச் சென்ற யுத்தத்தின்போது பார்த்தோம். அதன் விளைவுகள் இன்னும் இருந்துகொண்டுதானிருக்கின்றன. அப்படியிருக்கும்போது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் தீவிர பாதுகாப்புத் திட்டங்களுக்கும் வேண்டிய பணத்தைப் பெறுவது எப்படி ? கிராமங்களிலுள்ள நல்லிதயம் படைத்த இளைஞர்களும், பெண்களும் பாதுகாப்பு முயற்சிக்கு உதவத் துடிக்கிறார்கள். ஆனால் எல்லாரையும் படையில் சேர்த்துவிட முடியுமா ? உணவையும், பிறவாழ்க்கைத் தேவைகளையும், ராணுவத்துக்கு வேண்டிய பொருட்களையும் உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. படைவீரர்களில் பெரும்பாலோரும் கிராமங்களைச் சேர்ந்தவர்களே. தேசியத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமாயின், ஜவான்களுக்கு வேண்டிய உணவு கிடைக்க வேண்டும். போதுமான கருவிகள் தரப்பட வேண்டும். இப்பாரத்தின் பெரும் பகுதியையும் கிராம மக்கள்தான் நேரடியாகவோ மறைமுகமாகவோ தாங்க வேண்டியிருக்கிறது. இவ்வேலையை கிராம மக்கள் எவ்வாறு செய்து முடிக்கப்போகின்றனர் ?

### கிராமங்களுக்கு ஒரு சவால்

இந்திய மக்களில் 80 சதவிகிதத்தினர் கிராம மக்களே. நாட்டுக்கு வேண்டிய உணவை அவர்கள்தான் தருகிறார்கள். தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை தருபவர்களும் அவர்களே. கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள், பக்குவத் தொழில்கள் ஆகியவை மூலமாகவும், தொழில் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். தேசிய பாதுகாப்பு நிதிக்கு உதவியளிக்கும் விஷயத்தில் போர் முனைகளிலுள்ள அவர்கள் நண்பர்களுக்காகவும். உறவினர்களுக்காகவும் தாராளமாகப் பண உதவியளித்திருக்கின்றனர். அந்நிதிக்கு மக்கள் அளித்திருக்கும் பங்கு பெருமைபடத்தக்கது. ஆனால், அது மட்டிலும் போதாது. இதுவரை சேர்ந்துள்ள தொகை நவீன படைகளின் நான்கு நாள் செலவுக்குக்கூடப் போதாது. அப்படியிருக்கும்போது, அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அவர்களை உதவியளிக்கச் செய்வது எங்கனம் ? தாராளமாக வழங்க வேண்டுமாயின், ஏராளமாகச் சம்பாதிக்கவேண்டும். ஏராளமாகச் சம்பாதிப்பதற்கு மேலும் முதலீடு செய்ய

வேண்டியது அவசியமாகும். முதலீடு செய்ய மூலதனம் வேண்டும். நமது நாட்டில் முதலீடு தாராளமாக இல்லை என்பது தெரிந்ததே. பிறநாடுகள், இப்போது அளித்து வரும் உதவிக்கு மேலாக எதுவும் செய்ய முடியாது என்பது நமக்குத் தெரியும். ஆகவே உற்பத்தி காரியங்களுக்கான முதலீட்டுக்கு வேண்டிய கடன்களை உள்ளூரிலேயே திரட்டிக்கொள்ளவேண்டியிருக்கிறது.

## கிராமத் தொண்டர் படை

இது சம்பந்தமாக, நமது பிரதம மந்திரி, கிராமத் தொண்டர் படையை, குடியரசு ஆண்டு விழாவின்போது **1963-ம் ஆண்டு** ஜனவரி மாதம் **26-ந்** தேதியில் துவக்கி வைத்தார். இந்தியாவிலுள்ள **5,57,000** கிராமங்களிலும் இப்படை திரட்டப்படும். பஞ்சாயத்து ஆட்சி, கூட்டுறவு இயக்கம், சமுதாய அபிவிருத்தி ஆகிய துறைகள், இத் திட்டத்துக்கு முதலிடம் அளித்து முன்னேறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. உற்பத்தியைப் பெருக்குவது, பொதுமக்களுக்கு அறிவூட்டுவது, கிராமப் பாதுகாப்பு ஆகிய முப்பணிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் கிராமங்கள் முன்னேறவேண்டுமென்றால், அவையெல்லாவற்றையும் நிறைவேற்றவேண்டியது அவசியமாகும். நாம் மேற்கொண்டு வரும் வாழ்க்கை முறைகளையும், நாம் அரும்பாடுபட்டு உருவாக்குகிற சுதந்திரத்தையும் அழித்தொழிப்பதற்காக இமயமலையின் மறுபுறத்தில் **70** கோடிப் பேர் துணிந்து நிற்கும் இந்நேரத்தில், இப் பிரச்சினை, வாழ்வா, சாவா ? என்னும் பிரச்சினையாகும்.

## பாதுகாப்பு உழைப்பு பாங்கு

அதனால்தான் கிராமத் தொண்டர் படைத் திட்டத்தில் பாதுகாப்பு உழைப்பு பாங்கைச் (Defence Labour Bank) சேர்ந்திருக்கிறோம். பாதுகாப்பு என்றால் என்ன என்பது நமக்குத் தெரியும். ஆனால் உழைப்பு பாங்கு என்றால் என்ன? பணத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பாங்கியில் போடுகிறோம். செக்குகளை மாற்றுவதற்காகப் பாங்குக்குச் செல்கிறோம். ரூபாய் நோட்டுக்களில் அச்சடிக்கப்பட்டுள்ள தொகையை ரிசெர்வ் பாங்கின் கிளைகள் எதிலும் பெற்றுக்கொள்ளலாமென்று ரிசெர்வ் பாங்க் உத்தரவாதமளிக்கிறது. கிராம மக்களிடம் சேமிப்பதற்கான தங்கமோ பணமோ இல்லை. பாங்கில் டிப்பாசிட் செய்வதற்கு வேண்டிய உபரி தானியங்களும் கிடையாது. ஆனால், அவர்கள் வேலையின்றி வீணாக இருக்கும் நேரம் அதிகமிருக்கிறது. இந்த நேரம் கெடுமதியாளர் வளருவதற்கும், கிராமச் சொத்து பாழாவதற்கும் தான் பயன்படுகிறது ; வீண் நேரத்தில் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு வழக்கு மன்றங்கள் ஏறுகிறார்கள். அதனால் குடும்பங்களுக்கிடையே ஏற்படுகிற தகராறு தலைமுறை தலைமுறையாக வளருகிறது. ஒவ்வொருவரும் வீணாகக் கழிக்கிற நேரத்தையெல்லாம் ஒன்று திரட்டி கிராமத்தின் உண்டியலாக டிப்பாசிட் செய்ய முடியுமா ?



அப்படி முடிந்தால் அதை உழைப்பாக மாற்றி, கிராம முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தலாமல்லவா? இதை இன்னும் விளக்கமாக ஆராய்ந்து, அது எப்படி வேலை செய்யுமென்பதைக் கவனிப்போம்.

## எப்படி இயங்கவேண்டும் ?

ஒரு கிராமத்தில் வயோதிகர்களும், குழந்தைகளும் உட்பட ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுள் 350 பேர் குழந்தைகள் ; 100 அல்லது 150 வயோதிகர்கள் இருப்பார்கள். அவர்கள் போக உழைக்கும் சக்தி வாய்ந்தவர்கள், ஆண்களும் பெண்களும் 500 பேர் இருப்பார்கள். அவர்கள், நாம் வேண்டும்போது, ஆண்டொன்றுக்கு 12 தினங்கள், பொதுநலனுக்காக உழைக்க சம்மதம் தருகிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அந்த உறுதிமொழி ரிசெர்வ் பாங்கின் உறுதிமொழியைப் போலவே பலன் தரும். அந்த உறுதிமொழிகளை உண்டியல்களில் எழுதி பஞ்சாயத்தில் அதற்கென உள்ள பெட்டியில் வைத்துக் கொள்வோம். இப்போது 500 ஆண்களும் பெண்களும் ஆண்டொன்றுக்கு 12 தினங்கள் உழைப்பார்கள். அதாவது 6,000 தொழில் தினங்கள் கிடைக்கின்றன. இன்றைய கூலியின் அடிப்படையில் கணக்கிட்டால் கிராம மக்களின் வீண் நேரத்திலிருந்து ஆண்டொன்றுக்கு அதிகப்படியாக ரூ. 9,000 மதிப்புள்ள சொத்துக்களை உருவாக்கலாம், உழைக்க முடியாதவர்கள், அவர்களுடைய 12 நாளைய வருமானத்தைத் தரலாம்.

மக்கள் சாதாரணமாக கலியாணம், குழந்தைகள் கல்வி போன்ற ஏதாவதொரு செலவுக்காகவே பணத்தைச் சேர்க்கிறார்கள். அதேபோல் மக்களுக்கு மிகவும் அவசியமான தேவைகளையொட்டிய உருப்படியான திட்டங்கள் இருந்தால்தான், உழைப்பு பாங்கிலுள்ள டிப்பாசிட்டும் வளரும். அத்தகைய திட்டங்களை சமுதாய அபிவிருத்தி ஸ்தாபனங்களும், பஞ்சாயத்துக்களும் முன்கூட்டியே தயாரித்து வைத்துக்கொள்ளலாம். அவை கிராமங்களின் உற்பத்தித் திட்டங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கவேண்டும். கிராம மக்களின் உழைப்பை, மீன் வளர்ப்பதற்கான குளங்களையும், பாசனக் குளங்களையும் வெட்டுவது; குடிநீர்க் கிணறு கட்டுவது, கிராமப்புறக் காடுகளை, பழத்தோட்டங்களை வளர்ப்பது, கிராம கோழிப் பண்ணை நடத்துவது, பஞ்சாயத்து நிலத்தில் தோட்டம் போடுவது ஆகிய சமுதாயத்துக்கு நன்மைதரும் பொது வேலைகளில் ஈடுபடுத்தலாம். பஞ்சாயத்துச் செங்கல் சூளையில் செங்கல், ஓடுகள் முதலியவை தயாரிப்பதில் ஈடுபடலாம். இவை பொதுக்கூட்டங்களில் பயன்படுத்தப்படலாம் ; அல்லது தனிப்பட்டவர்களுக்கு ரொக்கப் பணத்துக்கு விற்பனை செய்யலாம். அபிவிருத்தித் தொகுதியின் அங்கீகாரம் பெற்ற, கிராமங்களுக்கிடையேயான பொது வேலைகளிலும் இந்த உழைப்பு ஈடுபடுத்தப்படலாம். இந்த உழைப்பின் பகுதியை, வயல் கால்வாய்கள் வெட்டுவது, வரப்பு கட்டுவது, மண்வளப் பாதுகாப்பு, கிணறு வெட்டுவது, கால்வாய்களுக்குக் கரை வெட்டுவது போன்ற வேலைகளுக்காகத் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வட்டியுடன் கூடிய தக்காவிக் கடன்களாக கொடுக்கலாம்.

## உதவிகள் பெருகும்

இத் திட்டம் பல வழிகளில் பயனுள்ளதாக இருக்கும். இதன் பயனாக கிடைக்கக்கூடியவையெல்லாம், கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலதன ஆதார வசதிகளைப் பெருக்க உதவியாக இருக்கும். இம்மாதிரி பல ஆண்டுகளாகத் திரட்டக்கூடிய ஆதார வசதிகளைக் கொண்டு கிராமங்களுக்கு வேண்டிய மின்விசை வசதி, குடிதண்ணீர் வசதி, சுகாதார ஏற்பாடுகள் ஆகியவற்றைச் செய்துகொள்ளலாம். கிராமத்தின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அக் கிராமத்தின் விசேஷத் தொழில்கள் நிறைந்த தொழில் பேட்டை உருவாகும். பாதுகாப்பு உழைப்பு பாங்கின் ஆதார வசதிகளைக்கொண்டு பஞ்சாயத்துக்கள் எண்ணற்ற தொழில்களைத் தொடங்கலாம். இத்திட்டம் கிரமதானத்தின் அடிப்படையிலானதாயினும், அதற்குப் புதிய மதிப்பும் பயனும் ஏற்படும் விதத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உழைப்பு பாங்கின் விரிவான திட்டத்தின்கீழ் கிராமப் பஞ்சாயத்துக்களும் மக்களும் வளம் பெறுவதைக் காண்கிற, ராஜ்ய சர்க்கார்களும், தேசிய சர்க்காரும் பஞ்சாயத்துக்களின் பெயராலும் அவற்றின் குடையின்கீழ் வாழும் மக்களின் பெயராலும் கடன் எழுப்பும் நாளும் வரலாம். உடலுறுதி வாய்ந்தவர்கள் பஞ்சாயத்துக்களுக்கு வலுவூட்டுவார்கள். பஞ்சாயத்துக்களும் கடன்களையும் பிறவசதிகளையும் தனிப்பட்டவர்களுக்குத் தரும். அதன்மூலம் பரஸ்பர உதவி வளரும். ஒவ்வொரு குடும்பமும் படிப்படியாக முன்னேறி சுபிட்ச வாழ்வை அடையும். நாடும் குடும்பமாக செழித்து வளர்ந்தோங்கும்.

சுருக்கமாகச் சொன்னால், கிராம உழைப்பு பாங்கு, பாதுகாப்பு உழைப்பு பாங்காக மலரும். ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, போர் முனைகளிலுள்ள வீரர்களுக்கு உதவ நமக்கு ஆதார வசதிகள் தேவை. பரஸ்பர உதவியின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ஆக்கவேலையின்றித் தேங்கிக்கிடக்கும் உபரி உழைப்பை பயன்படுத்த வேண்டும். பொது நிலத்தில் கிடைக்கும் விளை பொருளை விற்று, பஞ்சாயத்துக்களின் பெயரில் பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கலாம். தனிப்பட்டவர்; நிலத்தில் விளைந்த அதிகப்படி தானியங்களை அவரே அறுவடை செய்துகொள்வார். முதலில் கடனுக்குரிய தவணையைச் செலுத்திவிட்டு, மீதி உபரியை விற்று அவருடைய பெயரிலோ குழந்தைகள் பெயரிலோ பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கலாம் இல்லையென்றால் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனில் பாலிஸி எடுத்துக் கொள்ளலாம். அதில் ஏராளமானவர்கள் பாலிஸி எடுத்துக்கொண்டால் கார்ப்பரேஷனின் ஆதாரவசதி பெருகும். அதன்மூலம் தொழில்கள் வளரும் ; விவசாயம் உட்பட பிற தொழில்களுக்கு உதவி செய்யலாம். நெருக்கடி காலத்தில் நடைபெறும் இவையெல்லாம் நமது பாதுகாப்பு சக்தியைப் பெருக்கும்.

பாங்கின் அன்றாட வேலைக்கு இரண்டு பதிவுப் புத்தகங்கள் மட்டும் போதுமானது. (1) உழைப்பு நன்கொடை புத்தகம், (2) உழைப்பு விநியோக புத்தகம். உழைப்பு நன்கொடைப் புத்தகத்தில் நன்கொடைதாரர் ஒவ்வொருவருக்கும் தனியாகப் பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும். பாங்கு கணக்குப் புத்தகத்தில் குறிப்பிடுவதுபோல உழைப்பு வரவும் செலவும் குறித்துக் கொள்ளப்படும். உழைப்பு விநியோகப் பதிவு புத்தகத்தில் தனிப்பட்டவர்கள் அல்லது குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமுதாய வேலை அளவு அல்லது கடனாக வழங்கிய உழைப்பின் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும். நன்கொடை வழங்கியவர்களின் பெயர்கள். இதில் குறுக்கே எழுதப்பட்டிருக்கும் ; அதே போல விநியோகப் பதிவுப் புத்தகத்தில் விநியோக விவரம் குறிக்கப்பட்டிருக்கும். பாதுகாப்பு உழைப்பு பாங்கிலிருந்து தனிப்பட்டவர்கள் அல்லது குழுக்கள் பெற்றுள்ள தக்காவிக் கடன்கள் பற்றிய பத்திரங்களும் தக்க முறையில் எழுதி பாதுகாத்து வைத்துக் கொள்ள முடியும். இன்று பாதுகாப்பு உழைப்பு பாங்கு என்று அழைக்கப்படுகிற நாளைய கிராம உழைப்பு பாங்கில் முக்கிய கணக்குகளெல்லாம் இரண்டு புத்தகங்களிலேயே இருக்கும். இன்று தேவைப்படுவதெல்லாம், பேறு காலத்திலிருந்து நவ இந்தியாவுக்கு அன்பையும் ஆதரவையும் வழங்குவதுதான். ஒவ்வொரு கிராமத்திலுமிருக்கிற கிராமத் தொண்டர் படை இதன் கருவூலமாக இருக்கும். அது முன்னணியாக நின்று, கிராமங்களிலுள்ள உடலுறுதி வாய்ந்த மக்களையெல்லாம் ஒன்றுதிரட்ட உதவும்.

## பசியும் சுதந்திரமும்....

பசியால்வாடும் மனிதர்களுக்கு சுதந்திரத்தின் பொருள் தெரியாது. தேசிய சுதந்திரம் உண்மையானதாக இருக்கவேண்டுமாயின், கிராமக் குடும்பம் சுதந்திரமான மக்களடங்கியதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமமும் ஒன்றுபட்ட பெரிய குடும்பமாக இயங்கினால்தான் சுதந்திர சமுதாயமாக வளரமுடியும், வலியோர் எளியோருக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டும். அறிவுடையோர் பிறருக்கு வழிகாட்ட வேண்டும். அதாவது படித்தவர்களும் வலியோரும். தங்கள் வளர்ச்சிக்காக எளியோரைப் பயன்படுத்துவது நிற்க வேண்டும்.

இந்திய-சீன தகராறு, எல்லையில் மட்டும் நடைபெறுவதல்ல. அது தத்துவார்த்த மனப் போராட்டத்தின்—மனிதனிடமும் சமுதாயத்திடமுள்ள நல்லவைக்கும் தீயவைக்குமிடையே நடைபெறும் இடைவிடாப்போராட்டத்தின்—பிரதிபலிப்பாகும். இமயமலையில் போராடி வெற்றி பெற வேண்டும் ; நமது மக்களையே ஒருவருக்கொருவரைப் பிரித்துவைக்கிற எல்லையிலும் போராடவேண்டும். ஒன்றுபட்ட சமுதாய முயற்சியினால்தான், இது சாத்தியமாகும். பாதுகாப்பு உழைப்பு பாங்கு இதற்கான மூலதனம். கிராமத் தொண்டர் படை புதிய விடுதலைப்போரை முன்னின்றுநடத்தும் புதிய படையாக விளங்கவேண்டும்,

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம் :

# "ஊருக்கு நல்லது சொல்வேன்"
(பாரதியார்)

# பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும், வணக்கம். சென்ற மூன்று மாதங்களாகக் கிராமத் தொண்டர் படையின் வேலை விவரங்களைப் பார்ப்பதற்காக, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வட ஆர்க்காடு முதலிய ஜில்லாக்களுக்குச் சென்றிருந்தேன். இந்த ஜில்லாக்களில் நான் பார்த்த வேலைகள் எனக்குப் புதிய ஊக்கமும், உற்சாகமும் ஊட்டுவனவாக இருந்தன. இந்தக் கடிதத்தில் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் பேச விரும்புகிறேன்.

அதாவது, கிராமத் தொண்டர் படையின் உடை பற்றியது. நான் பார்த்த வட்டாரங்களில் கிராமத் தொண்டர்கள் ஒவ்வொருவிதமாக உடை அணிந்து வருகிறார்கள். அதாவது, சில இடங்களில், காக்கி அரைக் கால் சட்டையும், வெள்ளை பனியனும், பாட்ஜும், சில இடங்களில் முழுக்கால் சட்டையும், முழுக்கைச்சட்டையும் காக்கி நிறத்திலும், சில இடங்களில் நீலநிறச் சட்டையும், காக்கிக் கால் சட்டையும் அணிந்திருந்தார்கள். இப்படிப் பலவிதமாகக் காட்சியளித்தார்கள். ஒரே வட்டாரத்திற்குள்ளேயே இந்த உடை விஷயத்தில் வேறுபாடுகள் இருந்தன. நான் பார்த்த இடங்களில் காக்கி அரைக்கால் சட்டையைப் பொதுவாக எல்லோரும் அணிந்திருந்தார்கள் என்றே சொல்லலாம். நான் கண்டு பேசிய பல பஞ்சாயத்துத் தலைவர்கள் இந்த உடையைப்பற்றியும், அதற்காகும் பணச்செலவைப்பற்றியும் என்னிடம் கேட்டபோது, "பஞ்சாயத்து நிதியிலிருந்தோ, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்தோ கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களுக்கு உடை வாங்கிக் கொடுப்பது சரியாகாது ஏனெனில், பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமை சட்டபூர்வமாக ஏற்பட்ட வேலைகளுக்கே பற்றாமல் இருக்கிறது. கிராமத் தொண்டர் படைக்குரிய உடைச் செலவை அந்தந்தத் தொண்டர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். வசதியில்லாத தொண்டர்களுக்கு வசதி படைத்த அன்பர்கள் அன்பளிப்பாக உடை வழங்கலாம்" என்ற என்னுடைய ஆலோசனையை எல்லோரும் சரியென்று ஒப்புக்கொண்டார்கள் என்றே சொல்லலாம்.

உடை எந்த நிறத்தில் எப்படி இருக்க வேண்டும் என்ற விவரங்களை எல்லாம் நான் சீர்தூக்கிப் பார்த்தபோது, காக்கி நிறத்தில் அரைக்கால்சட்டையும் காலர் வைத்த வெள்ளை நிறத்தில் அரைக்கைச்சட்டையும் பொருத்தமாக இருக்கும் என்பது பெரும்பாலோருடைய அபிப்பிராயமாக இருந்தது. சில வட்டாரங்களில் இம்மாதிரி உடையணிந்த தொண்டர்கள் வரிசைவரிசையாக நின்று கொடி வணக்கம் செய்ததைப் பார்த்தபோது இதையே கிராமத் தொண்டர்களுக்கேற்ற உடையாக அமைக்கலாம் என்று எனக்குத் தோன்றியது.

எனவே கிராமத் தொண்டர்கள் விசேஷ சமயங்களில் அணியும் உடைபற்றி என்னுடைய யோசனையும், வேண்டுகோளும் வருமாறு—

கிராமத் தொண்டர்களின் உயரம், மார்பு அளவு இவற்றிற்கு ஏற்ற முறையில் காக்கி அரைக்கால் சட்டை—அதை 'நிஜார்' என்றும், 'டிரௌசர்' என்றும் சொல்லலாம்—காலர் வைத்த கைகள் இல்லாத அரைக் கைச்சட்டை, மார்பின் இடது பக்கம் கிராமத் தொண்டர் படைக்கான பாட்ஜ்—இந்த மூன்றும் கிராமத் தொண்டர் படையினருக்கு ஏற்றதாக இருக்கும். இந்த உடையை எல்லா சமயங்களிலும் அணிய வேண்டும் என்ற அவசியமில்லை. விசேஷகாலங்கள், கொடி வணக்கம், அணிவகுத்துச் செல்வது, தலைவர்களை வரவேற்பது முதலிய சந்தர்ப்பங்களில் இந்த உடை அணிவது நல்லது. உடலுழைப்பு செய்யும்போது இந்த உடையிலேயே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. கால்சட்டை மட்டும் இருக்கலாம். உடம்பில் பனியன் இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்.

இந்த உடைகளை ஒரே சீராக, நல்ல முறையில் தைத்து தொண்டர்களுடைய உயரத்திற்கும், அளவிற்கும் ஏற்ற முறையில் தயார் செய்து கொடுப்பதற்குச் சென்னை ராஜ்ய கிராமக் கைத்தொழில் போர்டார் முன்வந்து ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கிராமத் தொண்டர்கள் அணியும் இந்த உடை கிராம மக்களாலேயே நூற்று நெய்து செய்த துணியாக இருப்பது மிகவும் விசேஷமானதும். இல்லையெனில், கிராமத் தொண்டர் படையின் சீருடையில் துணியாக இருந்தால் அதன் மூலமாக கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பணம் நகரங்களுக்குச் செல்வதற்கே உதவியாக இருக்கும். இது கிராமசேவையாகாது. எனவே, கிராம மக்களுக்கு விவசாய வேலையில்லாதபோது கொஞ்சம் வருமானத்தைக் கொடுக்கும் நூற்றல்—நெசவுத் தொழிலுக்கு ஆதரவு காட்டுவது அவசியமும் கிராமத் தொண்டர்களின் கடமையும் ஆகும். ஆதலால் கிராமங்களில் உற்பத்தியாகும் துணியை வாங்குவதுசாலச் சிறந்தது.



அதன் மூலம் சில குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படவும், வருவாய் கிடைக்கவும் உதவியாக இருக்கும். எனவே, கிராமத் தொண்டர்கள் அணிந்து கொள்ளும் சீருடை (யூனிபாரம்) கதர்த்துணியாக இருப்பது சாலச் சிறந்தது.

அந்தந்த வட்டாரங்களுக்குத் தேவையான உடைகளைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் வாயிலாகத் தெரிந்து கொண்ட பின்னர், ஜில்லா கதர் அபிவிருத்தி அதிகாரிகள், உடைகளைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்வார்கள். இந்த உடைகள் விற்பனையானபின், அதற்குரிய பணத்தைக் கதர் போர்டார் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, உங்கள் யூனியனில் எத்தனை கிராமத் தொண்டர்களுக்குச் சீருடைகள் வேண்டும் என்பதைக் கணக்கிட்டு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மூலம் அந்தந்த ஜில்லாவிலுள்ள கதர் அபிவிருத்தி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவீர்களானால், அவர்கள் உங்களுக்கு வேண்டிய கிராமத் தொண்டர்களுக்கான சீருடைகளைக் (யூனிபாரங்களை) கொண்டு வந்து கொடுப்பார்கள். விற்பனையான பின்னர் பணத்தை அனுப்பி வைக்கலாம். சீருடைகளின் விலை, அந்தந்த அளவுக் கேற்பவிருக்கும். கிராமத் தொண்டர்களுக்கான இந்த உடையைத் தயாரிப்பதில், லாபத்தை எதிர்பாராது, கிராமத் தொண்டர்களுக்குச் செய்யும் ஒரு தொண்டாகவே கருதி, சென்னை ராஜ்ய கதர் போர்டார் இந்தப் பணியை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் செய்ய முன் வந்துள்ள இந்த நல்ல பணிக்கு, கிராமத் தொண்டர்கள் சார்பாக என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமத் தொண்டர்கள் அணியும் உடை ஒரே மாதிரியாக இருந்தால் நன்றாக இருக்கும். பார்த்த மாத்திரத்திலே இவர் கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்தவர் என்று அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். எனவே, மேற்குறித்துள்ள முறையில் உடைகளைப் பெற்றுத் தொண்டர்களுக்குக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்துப் பஞ்சாயத்து தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கிராமத் தொண்டர் படை வேலைத் திட்டம்பற்றிய மற்றவிவரங்களை, அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

உங்கள் பஞ்சாயத்துக்களில் ஆரம்பமாகியுள்ள தொண்டர் படை வேலைத் திட்ட விவரங்களை, அவ்வப்போது "கிராம நலம்" ஆசிரியருக்கு அறிவிப்பீர்களாயின், அது 'கிராம நலம்' வாசகர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி.

## இன்றைய பாரதப் போரில் ஈடுபாடு

பெ. பூங்குன்றன

வாரீர் ! வாரீர் ! வாரீர் !
திரண்டு
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

உலகம் காக்க உணவு—அவ்
உணவை ஆக்க உழவு—அவ்
உழவைச் செய்ய மக்கள்—அம்
மக்கள் எல்லாம் திரண்டு
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

உழவு செய்யத் தண்ணீர்—அத்
தண்ணீர் தேக்க அணைகள்—அவ்
அணைகள் கட்ட மக்கள்—அம்
மக்கள் எல்லாம் சேர்ந்து
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

பொருள்கள் செய்யத் தொழில்கள்—அத்
தொழில்கள் செய்யக் கலைகள்—அக்
கலைகள் செய்ய மக்கள்—அம்
மக்கள் எல்லாம் கூடி
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

அறத்தைக் காக்க ஆட்சி—அவ்
ஆட்சி காக்க அறிவு—அவ்
அறிவை ஆக்க மக்கள்—அம்
மக்கள் எல்லாம் சேர்ந்து
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

காவல் காக்கப் படைகள்—அப்
படைகள் ஆக்கப் பொருள்கள்—அப்
பொருள்கள் செய்ய மக்கள்—அம்
மக்கள் எல்லாம் ஒன்றி
வாரீர் ! வாரீர் ! வாரீர் !

—(o)—

# "சுற்றி நில்லாதே போ! பகையே துள்ளி வருகுது வேல்"

'ஒரு குறிப்பிட்ட வேலையை ஒருவனிடம் ஒப்படைத்த பின்னர், அதைச் சரியான முறையில், செய்து முடிப்பதற்கான தகுதியை அவனுக்கு அளிக்க வேண்டும், என்பது வள்ளுவர் கூறும் அனுபவ வேலைத்திட்டம்.

"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்"

என்பது வள்ளுவர் வாக்கு.

கிராமத் தொண்டர் படையில் சேர்ந்த எல்லோருக்கும் தக்க திறமையும் தகுதியும் வளர்வதற்கான பயிற்சி, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. வெற்றிவேலனின் வீரப்படை வீடான திருப்பரங்குன்றத்தில் இந்தப் படை வீரர் முகாம் பயிற்சி பெற்றது மிகவும் பொருத்தமானதே!

இந்த முகாமில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் அத்தனை பேரும், கிராம மக்கள். அதிலும் பெரும்பாலோர் விவசாயிகள். ஆனால், பயிற்சியின்போது, அவர்கள் காட்டிய உற்சாகமும், மனோ திடமும், கட்டுப்பாடும் யாவரையும் பிரமிக்க வைத்தன. 'பட்டாளச் சிப்பாய்போல்' பாங்குடன் அவர்கள் அளித்த தோற்றம்—பயிற்சி காலமான பத்து நாட்களும் அவர்கள் கிராமங்களில் தங்களுக்குள்ள அன்றாடக் கடமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, பயிற்சியிலே முழு ஆர்வத்துடன் கலந்து கொண்டது, கிராமப்புறங்களிலே தோன்றியுள்ள விழிப்புணர்ச்சிக்கு நல்லதொரு—எடுத்துக்காட்டாகவும், மற்ற பகுதிகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்தது.

இவ்வாண்டு, குடியரசு தினம் முதல், தமிழ்நாடு முழுதும் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டு இயங்கி வருவது, யாவரும் அறிந்ததே. மதுரை மாவட்டத்திலும், இந்தப் படை அமைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது. கிராமத் தொண்டர் படை, மூன்று அணிகளைக் கொண்டது. உற்பத்தி அணி—அறிவு அணி, பாதுகாப்பு அணி. பாதுகாப்பு அணியின் கிராம அணித் தலைவர்களுக்கு பயிற்சி (Training for Village Captains) அளிப்பது என்று, மதுரை மாவட்ட கிராமத் தொண்டர் படை பயிற்சிக்குழு முடிவு செய்தது. இந்த வேலைத் திட்டத்தை முதலில் எடுத்துச் செயல்படுத்தி வைத்த பெருமை, திருப்பரங்குன்றம் வட்டாரத்திற்குரியது. மதுரை தாலுகாவிலுள்ள கிராமத் தொண்டர் படையின் பாதுகாப்பு அணிகளின் பஞ்சாயத்து அணித் தலைவர்கள்,



சீருடை அணிந்த வீரர் திருக்கூட்டம்..



உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும்.

மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம் வட்டாரங்களின் கிராம சேவக்குகள், வளர்ச்சி அதிகாரிகள் (கல்வி, பஞ்சாயத்து) ஆகியோருக்கு, பயிற்சி முகாம் திருப்பரங்குன்றத்தில் நடத்தப்பெற்றது. இந்தப் பயிற்சி முகாம், 1963-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 11-ந் தேதியிலிருந்து 20-ந் தேதி வரை பத்து தினங்கள் தொடர்ந்து நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமினை ஏற்று நடத்த, இயக்குநர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு திரு. எஸ். சின்னக்கருப்பத்தேவர், எம்.எல்.ஏ., தலைவர். மற்ற உறுப்பினர்கள் :—(1) திரு. எம். ராமசாமி—தலைவர், மதுரை மேற்கு பஞ்சாயத்து யூனியன் மன்றம் ; (2) திரு. எஸ். பெரியசாமி அம்பலம்—தலைவர், மதுரை கிழக்கு பஞ்சாயத்து யூனியன் மன்றம் ; (3) தாசில்தார்



மதுரை தாலுகா ; (4) எஸ்டேட் மானேஜர், மதுரை ; (5) மதுரை மேற்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ; (6) மதுரை கிழக்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ; (7) திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோர். (திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இக் குழுவின் செயலாளராகப் பணி புரிந்தார்). இப் பயிற்சி முகாமின் முழுப் பொறுப்பும் குழுவின் தலைவர், திரு. எஸ். சின்னக்கருப்பத் தேவர், எம்.எல்.ஏ., அவர்களிடம் விடப்பட்டிருந்தது. பயிற்சி முகாம் செலவுக்காக ரூ. 3,766-50 நன்கொடையாக குழுவினர் வசூலித்தனர்.

**ஆரம்ப விழா.**—திருப்பரங்குன்றத்தில், இப் பயிற்சி முகாமை, மதுரை மாவட்டக் கலெக்டர் திரு. ஈ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., ஆரம்பித்து வைத்தார். திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. எஸ். சின்னக் கருப்பத் தேவர் ஆரம்ப விழாவுக்குத் தலைமை வகித்தார். அவ்வமயம், சுமார் 150 பேர் பஞ்சாயத்து அணித் தலைவர்கள், சீருடை அணிந்து அணிவகுப்பு நடத்தினர். மதுரை (நகர்ப்புறம்) போலீஸ் சூபரிண்டெண்டெண்ட் திரு. கே. செந்தாமரை, ஐ.பி.எஸ்., தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

**பயிற்சி முறை அலுவல்கள்.**—நாள்தோறும், ஒவ்வொரு பணிக்கும் காலம் குறித்து, வேலை முறை வகுக்கப்பட்டது. பயிற்சியில் கலந்துகொண்டவர்கள் அத்தனை பேரும், திறமையுடனும், கட்டுப்பாட்டுடனும், தங்கள் பணிகளைச் செவ்வனே செய்தனர். மதுரை மாவட்ட விளையாட்டுக் குழு, (Madurai District-Sports Council) தன்னுடைய நான்கு பயிற்றுவோரின் (Coachers) சேவையை இதற்கென அளித்தது. இவர்கள் பயிற்சிகளை ஒழுங்காக நடத்திக் கொடுத்து, பயிற்சி முழு வெற்றியுடன் நிறைவெய்தக் காரணமாக இருந்தனர். பத்து நாள் பயிற்சிக்குப் பின்னர், இறுதிநாளாகிய 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ந் தேதியில், பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. அவ்வமயம் விவசாயத் துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள், விழாவில் கலந்துகொண்டு,



அற்புத அணிவகுப்பு....

பஞ்சாயத்து அணித் தலைவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அவர் இப் பயிற்சியை வெற்றியுடன் நடத்திய அனைவரையும் பாராட்டிப் பேசினார். அணித் தலைவர்கள் பயிற்சி முகாமில் காட்டிய அதே உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் தத்தம் கிராமங்களுக்குச் சென்று, அங்கும் இத்தகைய பாதுகாப்பு அணி உறுப்பினர்க்கு, நல்ல முறையில் பயிற்சி அளிக்கத் திறமையுடன் பாடுபடவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். தென் பிராந்திய துணை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. கே. ஆர். ஷெனாய் அவர்கள், பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கினர்.



ஒழுக்கும் உறுதிப்பாடும்....

திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும், முகாம் இயக்குநருமான திரு. எம். பாலகிருஷ்ணன் இந்தப் பத்து நாள் பயிற்சி பற்றி ஓர் அறிக்கை படித்தார். திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவர் திரு. எ. நெல்லையப்பப் பிள்ளை அவர்கள் நன்றி கூற, விழா இனிது நிறைவெய்தியது.

திருப்பரங்குன்றத்தில் நடந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் அத்தனை பேரும் கிராமவாசிகள். பெரும்பாலோர், விவசாயிகள். அனுபவமில்லாத கிராம வாசிகளான அவர்கள், இத்தகைய கட்டுப்பாடான பயிற்சியில் கலந்து கொண்டு வெற்றிகரமாகத் திகழ்வார்களா என்பது, ஆரம்பத்தில் சந்தேகமாக இருந்தாலும், பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் காட்டிய திறமை, ஆர்வம், கட்டுப்பாட்டுணர்வு, சுறுசுறுப்பு முதலியன இந்த ஐயத்திற்கே இடமின்றி செய்துவிட்டன. அணித் தலைவர்கள் சீருடை அணிந்து இராணுவத்தினர் போல் அணிவகுப்பு நடத்தினர். இப்பயிற்சி முகாம் வெற்றியுடன் நடைபெற முழு முயற்சி எடுத்துக் கொண்ட மதுரை மாவட்டக் கலெக்டர் திரு. ஈ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., இயக்குநர்க் குழு உறுப்பினர்கள் ஆகியோர்களின் அரிய சேவை பாராட்டுக்குரியது.

—o—

# கிராம சேவகருக்கு விசேஷப் பயிற்சி

## பணி செய்யும் காலத்தில் நடைபெறும் பயிற்சித் திட்டம்

திரு பி. விஜயராகவன், ஐ.ஏ.எஸ்., துணைக் காரியதரிசி, கிராம நலத்துறை நிர்வாகத் துறை

கிராம வளர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால், கிராம வளர்ச்சி ஊழியர்கள், அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான எல்லா அம்சங்களைக் குறித்த செய்திகளையும், அவ்வப்போது தெரிந்துகொண்டு வேலை செய்யவேண்டியது மிக அவசியம். கிராம வளர்ச்சித் திட்டம், நிலையாகத் தேங்கிக் கிடக்கும் ஒரு திட்டமல்ல. அதன் அளவும், உருவமும் வேகமாக மாறுகின்றன. ஆகவே, வளர்ச்சித் திட்ட ஊழியர், விழிப்பும், உழைப்பும் இல்லாதவராக இருந்தால், திட்டத்தை நிறைவேற்றும் தகுதியற்றவராகி விடுவர். கிராம ஊழியர்கள் சிறந்த தகுதியும் திறமையும் பெற்று விளங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, பணி செய்யும் காலத்திலேயே தக்க பயிற்சி, தக்க முறையில் கொடுக்கப்படுகின்றது. அடிக்கடி கொடுக்கப்படும் இது போன்ற பயிற்சிகள், கிராம சேவகர்களுக்கு மிகவும் அவசியமானவையாகும். ஏனென்றால், அவர்கள்தான், கிராம வளர்ச்சியின் அடிப்படை வேலைகள் அனைத்தையும் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

கிராம சேவகர் ஒவ்வொருவரும், தனது வேலையை ஏற்றுக்கொள்ளப்போவதற்கு முன்பு, நமது மாநிலத்தில் உள்ள கிராம சேவகர் பயிற்சி நிலையங்களுள் ஒன்றில் தீவிரப்பயிற்சி பெறுகிறார். பாடத்திட்டத்தையும் பயிற்சியின் அளவையும் நோக்கும்போது, இந்த கால அளவு மிகவும் குறுகியதாகும். பயிற்சியாளர்கள் அனைவரும் இந்த வேலைக்குப் புதியவர்கள். ஆகவே, இதற்கான பாடத்தைக் கற்பிப்பதுடன், வேலையை ஒட்டிய ஒழுங்கையும் கற்பிப்பது அவசியமாகும். ஆனால், அவர்கள் அந்த வேலையில் ஈடுபட்ட பின்புதான், உத்தரவுகளின் தன்மையைப் புரிந்துகொண்டு அதன்படி நடக்கிறார்கள். நமது மாநிலத்தில் கிராம சேவகர்களுக்கு, கீழ்க்கண்ட வகைகளில், பணிபுரியும் காலத்தில், பயிற்சிகள் (In Service Training) அளிக்கப்படுகின்றன :

(1) வெளித்துறை வேலையில் (Field-work) பயிற்சி.
(2) தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களில் குறிப்பிட்ட பாடங்களில் பயிற்சி
(3) நினைவூட்டும் வகுப்புகள் (Refresher Courses)
(4) வருஷந்தோறும் நடைபெறும் கருத்தரங்குகள்.

### வெளித்துறை வேலையில் பயிற்சி

விவசாயம், கூட்டுறவு, பஞ்சாயத்துகள் ஆகியவை பற்றி கிராம சேவக்குகளுக்கு பணி புரியும் காலத்தில், அடிக்கடி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்தக் குறுகிய கால வகுப்புகள், 3 அல்லது 4 நாட்கள் தொடர்ந்து நடக்கும். விவசாயம் பற்றிய பயிற்சிக்கு, மாவட்ட விவசாய அதிகாரிகள், ஏற்பாடு செய்கிறார்கள். சிறந்த முறையில நாற்றங்கால் தயார் செய்தல், உரமிடுதல், மண் வளப் பாதுகாப்பு, வாணிகப் பயிர்கள், தோட்டவேலை, நவீன கருவிகளைப் பயன்படுத்துதல், நீர்ப்பாசனம் ஆகியவை பற்றி, 'விவசாயம்' என்ற தலைப்பின்கீழ், சொல்லிக் கொடுக்கப்படுகிறது. 'கூட்டுறவு', 'பஞ்சாயத்து' ஆகியவை பற்றி, கூட்டுறவு சங்க வளர்ச்சி அதிகாரிகள், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோர் உதவியுடன் கூட்டுறவு சங்க துணைப் பதிவாளர்கள் (டெபுடி ரிஜிஸ்டிரார்), கோட்ட பஞ்சாயத்து அதிகாரிகள் (Divisional Panchayat Officers) ஆகியோர் பயிற்சி அளிக்கிறார்கள். பணி புரியும் காலப்பயிற்சியைக் கணிக்கும் வகையில், 6 மாதத்திற்கு ஒரு தடவை, மதிப்பீடு அறிக்கை (Progress Report) தயாரிக்கப்படுகிறது. மாவட்ட விவசாய அதிகாரிகள், கூட்டுறவு சங்க டெபுடி ரிஜிஸ்டிரார்கள், வட்டார பஞ்சாயத்து அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து கிடைக்கும் இந்த மதிப்பீடு அறிக்கைகளை உதவி அபிவிருத்தி கமிஷனர் (பயிற்சி) தொகுத்து அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்.

கிராம சேவக்குகள் வெளித்துறை ஊழியர்களாக இருந்தாலும், "அலுவலக முறை" (Office Procedure) பற்றிய விவரங்களைத் தெரிந்திருக்கவேண்டியது இப்போது அவசியமாகிவிட்டது. இதன்படி 1960–61-ல் கிராம சேவக்குகளுக்கு "அலுவலக முறை" பற்றி மாவட்ட கலெக்டர்களால் அந்தந்த வட்டாரங்களிலேயே, நான்கு நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

கிராமப் பஞ்சாயத்துக்கள் திறமையுடன் நடைபெறுவதற்காக, பஞ்சாயத்துக்களின் கணக்குகளைத் தயாரித்துச் சரிபார்க்கும் வகையில், பஞ்சாயத்துத் தலைவரின் செயலாளர் அல்லது குமஸ்தாவுக்கு உதவி செய்யும்படி, கிராம சேவகர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. கிராமக் கணக்குகளைத் தயாரித்துச் சரிபார்க்கும் கூடுதலான இந்த வேலையைத் தெரிந்துகொள்ள, கிராம சேவக்குகளுக்கு, ஒரு பயிற்சித் திட்டம் அமுலாக்கப்பட்டது.

### தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களில், குறிப்பிட்ட பாடங்களைப்பற்றி பயிற்சி

தே. கல்லுப்பட்டியில் உள்ள கிராம தொழிற்பயிற்சி மாதிரிப் பள்ளியில், தனிப்பயிற்சி பெறுவதற்காக, கிராம சேவக்குகள், அனுப்பப்படுகிறார்கள். அந்தப் பயிற்சியின் போது, கீழ்க்கண்டவை பற்றி சொல்லிக் கொடுக்கப்படுகின்றன :—

(1) எண்ணெய்த் தொழில், (2) தேனீ வளர்த்தல் (3) பனை வெல்லம் தயாரித்தல், (4) வெல்ல தயாரித்தல், நாட்டுச் சர்க்கரை தயாரித்தல், (5) சோப் செய்தல், (6) தோல் பதனிடுதல், (7) கைக்குத்தலரிசி தயாரித்தல், (8) கருமான் வேலை, (9) தச்சு வேலை, (10) கைக்காகிதம் செய்தல், (11) தீப்பெட்டி தயாரித்தல்.

பயிற்சி காலங்களில் ஒவ்வொரு கிராம சேவக்கிற்கும், மாதம் 40 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர, பயிற்சி நிலையத்திற்குப் போய்வர, பயணப் படியும் உண்டு. இதுவரை, 546 கிராம சேவகர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவை தவிர, கோழி வளர்ப்பு பற்றி, காட்பாடியில் (வட ஆர்க்காடு மாவட்டம்) உள்ள விவசாய நிலையத்திற்கும், மார்த்தாண்டத்தில் (கன்யாகுமரி மாவட்டம்) உள்ள ஒய். எம். சி. ஏ. கிராமத் தொழில் நிலையத்திற்கும் கிராமசேவக்குகள் தனிப்பயிற்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். மார்த்தாண்டத்தில் கோழி வளர்ப்பு தவிர, தேனீ வளர்த்தலும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. காட்பாடியில் 2 மாதங்களும், மார்த்தாண்டத்தில் 2½ மாதங்களும் பயிற்சி அளிக்கபடுகிறது. காட்பாடியில் பயிற்சிபெறும் கிராம சேவகர் ஒருவருக்கு, 120 ரூபாயும், மார்த்தாண்டத்தில் பயிற்சி பெறுகிறவருக்கு 175 ரூபாயும், அரசாங்கம் செலவளிக்கிறது. பயணப்படி இல்லாமல், உணவுக்கும், தங்குவதற்கும், பாடம் சொல்லிக் கொடுப்பதற்கும், இச்செலவு செய்யப்படுகிறது. கோழி வளர்ப்புப் பற்றி, காட்பாடியில் 355 பேர்களும், கோழி வளர்ப்பு, தேனீ வளர்த்தல் ஆகியவை பற்றி, மார்த்தாண்டத்தில 254 பேர்களும், இதுவரை பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

### நினைவூட்டும் பயிற்சிகள்

பவானிசாகர், சத்திய விஜயநகரம் ஆகிய ஊர்களிலுள்ள கிராம சேவகர் பயிற்சி நிலையத்தில், கிராம சேவகர்களுக்கு, குறுகிய காலத்தில் நினைவூட்டும் பயிற்சிகள் (Refresher Courses) அளிக்கப்படுகின்றன. இரண்டு மாதங்களுக்கு, இந்தப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. மூன்று ஆண்டு அனுபவம் பெற்றவர்கள், இந்தப் பயிற்சிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இவர்களுக்கு, சம்பளம் அலவன்ஸ் தவிர, மாதம் 50 ரூபாய் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையாக, கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிகளில், கீழ்க்கண்ட பாடங்களில் கவனம் செலுத்தப்படுகிறது :—

(1) விவசாயம், (2) கால்நடை, (3) பஞ்சாயத்து, (4) அலுவலக முறையும் கடன்களும்.

இந்தப் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்ப உத்தேசிக்கப்படுகிற கிராம சேவக்குகளுக்கு, உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி), முன்னதாகவே, ஒரு கேள்வித்தாள் அனுப்புகிறார். அவர்கள், இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கத் தயார் செய்துகொண்டு; பயிற்சி வகுப்புகளுக்கு வர வேண்டும். தங்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள், சந்தேகங்கள் பற்றிய விவரங்களை, கிராம சேவக்குகள் இந்தப் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும். கல்லூரி முதல்வரும், ஆசிரியர்களும் கிராம சேவக்குகளுடன் இதுபற்றி விவாதித்து, பிறகு பயிற்சிக்கான பாடத் திட்டம் தயாரிப்பார்கள். பயிற்சியாளரின் தேவைக்குத் தக்கபடி, பாடத் திட்டம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அனுபவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்தப் பயிற்சித் திட்டம், வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள பல பிரச்னைகளைத் தீர்க்கும் வகையில் அமைந்துள்ளதாகும். பவானி சாகரிலும், சத்திய விஜய நகரத்திலும், இதுவரை 525 கிராம சேவக்குகள், பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

### கருத்தரங்குகள்

சமூக வளர்ச்சித்திட்ட அதிகாரிகளுடன் கலந்து கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளும் வகையில், வருடந்தோறும், கிராம சேவக்குகள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், மற்ற வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோர்கள் அடங்கிய கருத்தரங்குகள் நடக்க வேண்டும் என்ற யோசனையை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராம சேவக்குகளின் கருத்தரங்குகள் கூட்ட வேண்டும் என்ற ஆலோசனையை, அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. இந்தக் கருத்தரங்குகள் அந்தந்த மாவட்டக் கலெக்டர்களால் கூட்டப்படும்.

இவ்வாறாக, வேலை செய்யும் காலத்தில் நடைபெறும் விசேஷப் பயிற்சித் திட்டங்கள், மிக ஆழப் பதிந்தும், அகல விரிந்தும் (Extensive & intensive) அமைந்துள்ளன. தமது வேலையை நன்றாகப் புரிந்துகொண்டு பணியாற்றும் வகையில், கிராம சேவகர், தம்மைத் தயாரித்துக் கொள்ளும் முறையில், இப் பயிற்சித் திட்டங்கள் அமைக்கப்பட்டு, நிறைவேறி வருகின்றன.

—(o)—

### மனம்தான் காரணம்

"வாழ்வில் இன்பம் நிறைந்த நாட்களை நான் கண்டதேயில்லை" என்று புகழ், கீர்த்தி, பதவி, பணம் ஆகியவற்றைப் பணிப்பெண்களாகக் கொண்டிருந்த வீரன் நெப்போலியன் வாய்விட்டுக் கதறியிருக்கிறான்!

ஆனால், கண்ணும் குருடு, காதும் செவிடு, வாயும் ஊமையான ஹெலன் கெல்லர் அம்மையார் "என் வாழ்க்கை ஒரு மகிழ்ச்சிச் சோலை" என்று வாய்நிறையச் சொல்லிச் சிரிக்கிறார்............

"மனம் தான் மனிதனின் பந்தய மைதானம். நரகத்தைச் சுவர்க்க மாக்குவதும் மனம் தான்; சுவர்க்கத்தை நரகமாக்குவதும் மனம் தான்" என்று ஆங்கிலப் புலவன் மில்டன் கூறியது முழுக்க முழுக்க உண்மை!

__கிராமப் பாதுகாப்பு:__

# சாந்தி சேனை சமுதாயத்தில் உயரிய பணி

## (மகாத்மா காந்தி)

கிராமங்களில் சாந்தி சேனை அமைக்க வேண்டுமென்று சிலநாட்களுக்கு முன்பு கருத்துத் தெரிவித்திருந்தேன். கிராமங்களில் கலகம் ஏற்பட்டால், குறிப்பாக சாதி சமயச் சண்டை ஏற்பட்டால், தங்களுடைய உயிரைக் கொடுத்தாவது, அதைத் தடுப்பதுதான் இவர்களது கடமை. இப்படி சாந்தி சேனை ஒன்றை அமைப்பதென்பது, போலீசுக்குப் பதிலாகவோ அல்லது ராணுவத்திற்குப் பதிலாகவோ இவர்கள் சேவை செய்யவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டதாகும். இது ஒரு பெரிய ஆசைதான். இத்திட்டம் வெற்றியடையாமல்கூட போகலாம். ஆனால், தனது அகிம்சைப் போராட்டத்தில் வெற்றியடைய வேண்டுமானால், மேற்குறிப்பிட்டபடி கலகங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகளில், சமாதான முறையில் அவற்றைச் சமாளிக்கும் சக்தியை, தேசிய இயக்கமானது, வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த சாந்தி சேனையில் உறுப்பினர்களுக்குத் தேவையான தகுதிகள் எவை என்பதை இனி பார்ப்போம்.

### மரணத்தை வெல்லும் வலிமை

சாந்தி சேனையில் ஆணும் பெண்ணும் உறுப்பினர்களாக இருக்கலாம். இவர்கள் அகிம்சையில் தளராத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும். இறைவன்மீது முழு நம்பிக்கை இல்லாதவர்களுக்கு அகிம்சை மீது நம்பிக்கை இருக்காது. இறைவனது சக்தியாலும், அருளாலும், அகிம்சையில் பற்றுக்கொண்ட மனிதன் எதையும் சாதிக்க முடியும். இந்தச் சக்தியும் அருளும் இல்லாவிட்டால், கோபம், பயம், பழி வாங்கும் குணம் ஆகியவைகளை உதறித்தள்ளி, மரணத்தையும் வெற்றி கொள்ளும் எண்ண வலிமை மனிதனிடம் இருக்காது. எல்லோருடைய மனத்திலும் இறைவன் குடியிருக்கிறான் என்ற நம்பிக்கையும், இறைவனின் சந்நிதானத்தில் அச்ச உணர்வுக்கே இடமென்பதே இல்லை என்ற உறுதியின் மூலம்தான், இந்த நெஞ்சுறுதி ஏற்படும். எதிரிகள், குண்டர்கள் என்று கூறப்படுகிறவர்களுடைய உயிர்களையும் மதிக்க வேண்டும் என்பது தான் இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதன் கருத்து. நான் குறிப்பிடுகிறவை, மனிதனிடம் மிருகத்தன்மை மேலோங்கி இருக்கும்போது, அவனை சாந்தப்படுத்துவதற்காகச் செய்யும் முறைதான்.

இந்த சமாதானத் தூதன் உலகிலுள்ள எல்லா மதங்களையும் சமமாக மதிப்பவனாக இருத்தல்வேண்டும். அவன் இந்துவாக இருந்தால், இந்தியாவில் உள்ள மதங்களனைத்தின் மீதும் மதிப்புக்கொண்டவனாக இருக்க வேண்டும். இந்த வகையில் நாட்டிலுள்ள சமய நெறிகள் எல்லாவற்றின் உட்கருத்துக்களையும், பொது நோக்கங்களையும் அவன் அறிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாகக் கூறும்போது, இந்த சமாதானப் பணியை, அந்தந்தப் பகுதிக்கு, அந்தந்தப் பகுதி மக்களால் தான் நடத்த முடியும்.

இந்த வேலையை ஒருவராகவோ அல்லது ஒரு குழுவினராகவோ செய்யலாம். இதற்காக துணை தேடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள், தங்கள் வட்டாரத்தில் சாந்திசேனை அமைக்கும்போது, துணை நாடுவது என்பது இயற்கை.

### நெறி தவறாதவன்

இந்த சமாதானத் தூதன், தன்னுடைய வட்டாரத்தை அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த எல்லா மக்களையும் நன்றாக அறிந்தவனாகவும், அவர்களுடன் தொடர்பு கொண்டவனாகவும் இருத்தல் வேண்டும். ஒரு விரச நிலை ஏற்படும்போது அதற்குக் காரணமானவர்களை, சந்தேகப்படத்தக்கவர்கள் என்றோ வேண்டப்படாதவர்கள் என்றோ எண்ணுகின்ற நிலைக்கு தன்னைத் தாழ்த்திக்கொள்ளாத ஒரு நிலையைக் கடைப்பிடிப்பவனாக, இந்த சமாதானத் தூதன் இருக்க வேண்டும்.

நெறி தவறாத நடுநிலைமையாளனாக இவன் இருத்தல் வேண்டும் என்பதை சொல்லத் தேவையில்லை.

கொந்தளிப்புப் புயல் வீசுவது பொதுவாகவே முன்கூட்டியே தெரிந்துவிடும். இதை அறிந்து சமாதானப் படையினர் பேராபத்து ஏற்படுவதற்கு முன், வருமுன் காப்போராக இருந்து, அதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் செய்யவேண்டும்.

இந்த இயக்கம் பரவுமானால், அதில் சில முழு நேரத் தொண்டர்கள் இருப்பது நல்லது. ஆனால், இது அவ்வளவு அவசியமானதல்ல. உண்மையும் நேர்மையும் வாய்ந்த ஆண்களும் பெண்களும் இருக்கவேண்டுமென்பதுதான் இயக்கத்தின் அடிப்படைக் கருத்து. வாழ்க்கையில் பல்வேறு துறையில் ஈடுபட்டவர்களாலும் தாங்கள் வாழும் வட்டாரத்தில் மக்களுடன் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொள்ளும் அளவுக்கு போதுமான கால அவகாசத்தைப் பெற்றிருப்பவர்களாலும் தான் இது சாத்தியமாகும்.



### எழுத்தாளர்களுக்கு

எழுத்தாள நண்பர்கள், "கிராம நல"த்திற்கு ஏராளமான கதைகளையும், கட்டுரைகளையும் அனுப்புகின்றனர். கிடைக்கின்ற பொதுவான விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பிரசுரிப்பது இயலாத காரியம். தவிர 'கிராம நலம்' முழுக்க முழுக்க பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான பத்திரிகை. ஆகவே, பஞ்சாயத்து சம்பந்தமான விஷயங்களுக்குத்தான், 'கிராம நல'த்தில் முதல் இடம் உண்டு. 'கிராம நல'த்திற்கு எழுதுவோர், இந்த அடிப்படையை மறந்து விடக்கூடாது.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், எவ்வளவோ நல்ல பணிகள் நடைபெற்றிருக்கலாம். ஆக்கப்பணிகள் பலவற்றை தனிப்பட்டவர்களே செய்திருக்கலாம். கிராமிய நல்வாழ்வுக்கு அடிகோலுகின்ற வகையில், தொண்டாற்றி, வெற்றியினை அடைந்திருக்கலாம். கிராம முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட்ட பணிகளைப்பற்றி எழுதுங்கள். உங்கள் பஞ்சாயத்தின் சாதனைகளைப் பற்றி எழுதுங்கள். வெறும் பாராட்டுப் பட்டியல் தேவையில்லை. உருப்படியான கருத்துக்களையும், அனுபவங்களையும் சுவைபட எழுதுங்கள். இந்த அடிப்படைக்கருத்தை மையமாகக் கொண்டு, சுருக்கமாக, தெளிவாக, கருத்துக்கும் அனுபவத்திற்கும் மதிப்பளித்து, கட்டுரைகள் எழுதுங்கள். திட்டங்களை உருவாக்கும்போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் அவற்றையெல்லாம் எவ்வாறு சமாளிக்க முடிந்தது என்ற விவரங்களையும், மற்றவருக்குப் பயன்படும் வகையில் புதிய பஞ்சாயத்து ஆட்சியை மையமாக வைத்து சிறுகதைகள் எழுதுங்கள். கவிதைகள் எழுதுங்கள். மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். கட்டுரைகள் "கிராம நல"த்தில் இரண்டு பக்கங்களுக்கு மேல் போகக்கூடாது.

கட்டுரை எழுதுகிறவர்கள் 'கிராம நலம்' 1963 மார்ச் இதழில் 17-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள "உங்கள் சாதனைகள் என்ன" என்ற கட்டுரையை படிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அந்தக் கட்டுரையிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களை நெஞ்சில் நிறுத்தி, எழுதுங்கள். தக்கவற்றை வெளியிட, "கிராம நலம்" எப்போதும் தயார்.

---

இந்த சமாதானப் படையினருக்குக் குறிப்பிட்ட தனித்துப் பிரித்துக் காட்டுகின்ற வகையில் உடை இருக்கவேண்டும். இதனால், பார்த்தவுடனேயே, மிகச் சுலபமாக இவர்களை அறிந்துகொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டவை பொதுவான கருத்துக்களேயாகும். இதையொட்டி, ஒவ்வொரு பகுதியும், தங்கள் வட்டாரத்திற்குப் பொருத்தமான வகையில் மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, சாந்தி சேனையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(அகமதாபாத், நவஜீவன் பிரசுராலயம் வெளியிட்டுள்ள "கிராம சுயராஜ்யம்" என்ற நூலிலிருந்து.)

*வசன கவிதை :*

### புன்னகையுடன் பொன்னகை தருவோம்

*குமாரி என். பங்கஜா, பாத்திமா கல்லூரி, மதுரை.*

அனைவர் கண்கவர் வைர அட்டிகை
கண்டவர் கலங்கும் பொலங் குழை
கேட்டவர் மயங்கும் பொற் கொலுசு
இனிய நாதம் இயம்பும் வளையல்
கலகல வெனக் குலுங்கு கம்மல்
விரல் கண்டவர் விம்மும் மோதிரம்
கொடியிடைத் தவழும் தங்க ஒட்டியாணம்
ஆடமைப் பணைத்தோள் தவழ்
மாற்றுக் குறையாப் பசும்பொன் வங்கி
நலங்கிளர் எருத்தில் தவழ் சங்கிலி
பார்ப்போரைப் பார்க்கத் தூண்டு தங்கப்பல்
அறல்போல் கூந்தலில் குடிகொள் ராக்கொடி
பிறைபோல் திருநுதல் தவழ் நுதற்சுட்டி
அடிக்கடி பார்க்கும் அங்கைக் கெடியாரம்
அனைத்தும் பதினாறு கேரட்டாய் மாறியதென
அதிகம்நீ அங்கலாய்க்காதேடி நங்காய் !
நாடு வாழ நல்லெண்ணம் கொள்ளடி
நகையைக் கண்டு நகைக் காதேடி.
நகையே யாகும் நீசெயும் வகையே.
பொன்னகை எதற்கடி பெண்ணே உனக்குப்
புன்னகையே பெரு நகையா யிருக்கேடி

—(o)—

__போர்ப்பரணி :__

### எடுங்கள் வாளை !

திரு ஏ. எஸ். சுப்பிரமணியன்

போருக்கு அழைக்கின்றான் நம்மை எல்லாம்
புவியாசை கொண்டுவிட்ட பாவிச் சீனன் !
நேருக்கு நேர் சொன்னான் அமைதி என்றான்
நிகரற்ற பாரதமே ! வாழ்க என்றான் !
ஊருக்குள் புகுந்திட்டான் சீனன் இன்று ;
உண்மையிலே வஞ்சகம்தான் ! எடுங்கள் வாளை !
பேராசை கொண்டுவிட்ட எதிரி தம்மை
வேரோடு வீழ்த்திடுவோம் எழுந்து வாரீர் !

எலிஎன்று நினைத்திட்டான் நம்மை எல்லாம்
இணையற்ற வீரத்தோள் துடிக்குதிங்கே !
புலிபோலப் பாய்ந்திடுவோம் ; புனித பூமி
பொலிவோடு திகழ்ந்திடவே உயிரை ஈவோம் !
வலுவேற்ற கரமுண்டு ; வைரம் பாய்ந்த
வணங்காத நெஞ்சம்தான் நமக்கே உண்டு ;
எலிக்கூட்ட சீனர்களை விரட்டிச்சென்று
பலியாக்க வேண்டாமா ! எடுங்கள் வாளை !

—(o)—

# கல்லூரிக் காளையரின் தொண்டார்வம்

## திரு. அ. அந்தோணிசாமி

[வாலிப உள்ளங்களிலே பொங்கி எழும் தொண்டார்வத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நகத்திலே அழுக்குப்படாமல், நகாசு வாழ்க்கை நடத்தி வந்த கல்லூரி மாணவர்களிடையே, கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள மனப் புரட்சி, அதன் விளைவாக சமுதாய நலத்துறையிலே மாணவ சமுதாயம் சாதித்துள்ள சாதனைகளை, நாடு கண்டு பாராட்டி வருகிறது. வெறும் பள்ளிப் படிப்பு மட்டும் முழுமை பெற்றதாகாது; தொண்டுள்ளமும் சமுதாயப் பணிபுரியும் ஆர்வமும், உழைப்புக்கு உயர்வளிக்கும் மனப் பண்பும் மாணவ சமுதாயத்திடையே பல்கிப் பெருக வேண்டும். இன்றைய நெருக்கடி நிலையில், தொண்டார்வம் படைத்த இளைஞர்கள் நாட்டுக்கு அவசியம் தேவை. மாணவச் சமுதாயம் விழிப்படைந்து வருகிறது. திருச்சிராப்பள்ளிக்கு புகழளிக்கும் புனித சூசையப்பர் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், தங்களுடைய புத்தகப் படிப்புக்கிடையே, கிராமப் புறங்களில், கரடுமுரடான கற்களைச் செப்பனிட்டு, பாதை அமைக்கும் புனித பணி புரிந்துள்ளார்கள். இந்தத் தூய தொண்டிலே கலந்து கொண்ட அத்தனை மாணவ மணிகளையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆசிரியர்.]

எளமணம் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வையம்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஒரு சிறு கிராமம். திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களாகிய நாங்கள், எங்களின் இயக்குநர் அருள்மிகு தந்தை ஜோ. அதிசயம், செ. ச., அவர்கள் தலைமையில், எளமணத்தில் பதினான்கு நாட்கள் முகாமிட்டிருந்தோம். அரசாங்கத்தின் உதவிப் பணத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களின் சொந்தப் பணம் கொடுத்தும், எங்கள் கல்லூரியிலிருந்து இயக்குநர் பெற்ற உதவித் தொகையைக் கொண்டும், நாங்கள் 'பொது நலத் தொண்டு முகாம்' நடத்தினோம். வடுகப்பட்டியிலிருந்து சடையம்பட்டி வழியாகச் சென்று வையம்பட்டி அருகே முக்கிய சாலையுடன் சேருகின்ற பாதையை அமைப்பதே எங்கள் இம்முகாமின் முக்கிய குறிக்கோளாகும்.

இயற்கை அன்னையின் எழில் வழியும் கிராமம் எளமணம். மகிழ்ச்சிப் பூத்திருந்த மக்களின் முகங்கள் எங்கள் மனத்தை கவர்ந்தன. வையம்பட்டி பஞ்சாயத்து யூனியன் ஆணையர், கல்வி வளர்ச்சி அதிகாரி, எளமணம் ஊராட்சி மன்றத் தலைவர், குமாரவாடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பெருமாள் நாயுடு ஆகியோரும் மற்ற கிராமப் பொதுமக்களும் எங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். எளமணம் பஞ்சாயத்து அலுவலகத்தின் முன்னிலையில் வையம்பட்டி பஞ்சாயத்து யூனியன் தலைவர் உயர்திரு. கின்னேபசப்பய நாய்க்கர் தலைமையில் நாங்கள் அமைக்கவிருந்த 'காமராஜ் சாலை'யை ஆணையர் அவர்கள் திறந்து வைத்துப் பேசினார்கள். சாலை வேலையை எங்கள் இயக்குநர் தொடங்கி வைத்தார்கள்.

அனுதினமும் காலை தேசியக் கொடியேற்றமும், வழிபாடும் நடைபெறும். அவ்வமயம், எங்கள் இயக்குநர் அந்நாளைய வேலைத் திட்டத்தைப்பற்றி எடுத்துரைப்பார். சரியாக எட்டு மணிக்கு வேலைத்தளத்தில் வேலை தொடங்குவோம். திட்டப்படி வேலை மிகத்தீவிரமாக நடந்தது சரியாக 11 மணிக்கு வேலையை நிறுத்திவிட்டு வீடு திரும்புவோம். சற்றே இளைப்பாறிய பின், நண்பகல் 12 மணிக்கு உணவருந்தி மீண்டும் சற்று ஓய்வு எடுத்தபிறகு 1½ மணிக்குப் புறப்பட்டு 2 மணிக்கு வேலைத்தளத்திலிருப்போம். மாலை 4 மணி வரை வேலை செய்து விட்டு திரும்பி வந்து சிற்றுண்டி அருந்தி விட்டு குளித்துக் களிப்போம். முகில் மோதும் மலை அடுக்கு, கயல் துள்ளும் காட்டாறு, குயில் கூவும் பூங்காக்களைக் கண்டு மகிழ்வோம். குறிப்பிட்ட சில நாட்களில் மாலை 6 மணி முதல் 7½ மணி வரை ஆய்வுக்கூட்டங்கள் நடக்கும். இரவு உணவிற்குப் பின் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

### அன்றாட அலுவல்—வேலைத்திட்டம்

முகாமின்போது திருச்சிராப்பள்ளி பொது விளம்பர அதிகாரியின் உதவியால் 'தேசீய சேமிப்பு' 'சிறு சேமிப்பு' 'கிராம நலம்' போன்ற விளம்பரப்படங்கள் காட்டப்பட்டன. திரளாக மக்கள் கூடிவந்து திரைப்படங்களைக் கண்டு களித்தார்கள். இவைதவிர, நாங்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தினோம். கிராமிய குழுக்நடனம், பாடல்கள் 'முன்னேற்றம் முக்கியம்' என்ற உரையாடல் 'பொதுமையின் சிகரம்' என்ற நாடகம் மற்றும் சில நிகழ்ச்சிகள் நடத்திக் காட்டப்பட்டன. புதூர் கிராமப் பொதுமக்கள் சேர்வையாட்டம், தேவராட்டம், குறவன் குறத்தி ஆட்டம் போன்ற ஆட்டங்களை ஆடி இனிய பாடல்களைப்பாடி குழலிசையை எழுப்பி இன்ப வெள்ளத்தில்



ஆழ்த்தினர். எங்கள் தந்தை குறிப்பிட்டதுபோல இந்த ஆட்டங்கள் இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரீகமே. நவீன நாகரீகத்தை நோக்கி இம்மக்கள் இப்பொழுதுதான் மெல்ல நடந்து கொண்டிருக்கிறார்கள்.

### மக்களோடு ஒன்று கலந்து பழகினோம்

எளமணத்தில் நாங்கள் முகாமிட்டது மண்ணை வெட்டிப் பாதையில் கொட்ட மாத்திரமல்ல. கிராம மக்களோடு நெருங்கி உறவாடி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் வாழ்க்கைத் தேவைகளையும் தெரிந்து முன்னேற்றப் பாதையிலே அவர்களை முறையுடன் நடத்திச் செல்லவே. இத் திட்டத்தின்படி, நாங்கள் சீத்தப்பட்டி, ரளத்துப்பட்டி, குப்பானூர், சடையம்பட்டி, தொப்பாநாய்க்கன்பட்டி போன்ற குக்கிராமங்களுக்கு குழுக் குழுவாகச் சென்று, அக் கிராம மக்களின் நிலையை நேரில் ஆராய்ந்து வந்தோம். கேட்டு வந்த கருத்துக்களை கிராம பெரிய மனிதர் முன்னிலையிலோ, பஞ்சாயத்துத் தலைவர்கள் முன்னிலையிலோ ஆராய்ந்து, விளக்கம் கண்டோம். அப்படி கலந்து பேசியபோது, ஒவ்வொரு கிராமத்தின் முக்கியத் தேவைகளான குடிநீர் வசதி, பள்ளி வசதி, மின்சார வசதி, மற்ற வசதிகள் மிகவும் தீவிரமான முறையில் வையம்பட்டி பஞ்சாயத்து யூனியனால் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. மிகப் பிற்போக்காக இருந்த இந்த வட்டாரத்தில், பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப்பட்டு ஓராண்டிற்குள் போற்றத் தகுந்த இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் வையம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர், ஆணையர், கல்வி வளர்ச்சி அதிகாரி, எளமணம், குமாரவாடி ஆகிய பஞ்சாயத்துக்களின் தலைவர்களே என்றால் மிகையாகாது. கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறையின் கைகண்ட பலனுக்கு இது ஒரு கண்கண்ட காட்சி. நாங்கள் நடத்திய இந்தக் குழு ஆய்வு முறையால் பஞ்சாயத்து ஆட்சியின் அமைப்பு, அதன் கருத்து முதலியவற்றை தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.

### கிராம மக்களின் ஒத்துழைப்பு

36 மாணவர்களாகிய நாங்கள் 7 பர்லாங் நீளமும் 18 அடி அகலமும் உள்ள பாதையை 7 நாட்களில் அமைக்க முடிந்தது என்றால் அதற்கு பஞ்சாயத்து தலைவர்களுடன் கிராமப் பொது மக்களின் ஒத்துழைப்பே காரணமாகும். இந்த ஒத்துழைப்பு இல்லாதிருந்தால், முகாமை வெற்றிகரமாக நடத்தியிருக்க இயலாது. மிகுந்த அளவில் ஒத்துழைப்பை அளித்தது இவ் வட்டாரமே என்று போற்றி புகழ்ந்தார் எங்கள் இயக்குநர்.

அடை மழை காரணத்தால் இறுதி மூன்று நாட்களில் வேலை தடைப்பட்டது. வேலை மேல் ஆவல் கொண்டிருந்த எங்கள் உள்ளங்கள் உடைப்பட்டன. சடையம்பட்டியில் நடத்தப்பட இருந்த சாலைத் திறப்பு விழாவும், பிரியாவிடை பெறும் விழாவும் விடாமழையின் காரணத்தால் நாங்கள் தங்கியிருந்த பள்ளியிலேயே நடத்தப்பட்டது. மணப்பாறை போலீஸ் டெபுடி சூபரின்டென்டெண்ட் தலைமை தாங்கினார். எங்கள் தந்தை சாலையைத் திறந்து வைத்தார். முகாமில் பங்கு கொண்ட மாணவர்களுக்கும், சமையல்காரர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 'சமையல்காரர்களே இம் முகாமின் தூண்கள்' என்று எங்கள் தந்தை குறிப்பிட்டது உண்மையே ஆகும்.

பதினான்கு நாட்கள் எப்படிப் பறந்தோடினவோ! இம் முகாமினால் நாங்கள் அடைந்த நன்மைகள் பல. கிராம வாழ்க்கையின் எளிமையும், இனிமையும் எங்கள் இதயங்களில் இடம் பெற்றன. உடலுழைப்பின் உயர்வு, ஒற்றுமையின் வலிமை, பிரார்த்தனையின் சக்தி, சேவையின் சிறப்பு ஆகிய பொன்னான பண்புகளை எங்களிடத்தில் வளர்க்க என்னாளும் பாடுபடும் எம் தந்தைக்கு இது ஒரு மகத்தான வெற்றியாகும்.

கிராமப் பஞ்சாயத்து ஆட்சிமுறை இவ் வட்டாரத்தில் மிக நல்லவேலை செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இச்சுற்று வட்டார மக்கள் சொல்வது போல், காட்டாற்றைத் தடுத்து ஓர் அணை கட்டிக்கொடுத்தால் இவ் வட்டாரம் நல்ல வளம் பெறும் என்று நம்புகிறோம். ஏனெனில், நீர்ப்பாசன வசதிக்குறையே இங்கு பெருங்குறை. இறுதியாக, இம் முகாமை வெற்றிகரமாக நடத்த உதவி புரிந்த எல்லோருக்கும் நன்றி.

—o—

### உறுதியின் எதிரொலி

**உற்பத்திப் பெருக்கம் !**

"உற்பத்தியைப் பெருக்குவது என்பது நமது கிராமப் புறங்களிலுள்ள பல இலட்சக்கணக்கான விவசாயிகள் காட்டும் உற்சாகத்தையும் ஆற்றலையுமே பெரிதும் பொறுத்திருக்கிறது. நாட்டின் தற்போதைய அவசர கால நிலையில், நம் மக்களின் ஒற்றுமையுணர்ச்சி, மன உறுதி இவற்றைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். மக்களிடம் பொங்கியெழும் இந்த உற்சாகத்தையும், உறுதியையும் விவசாய உற்பத்தியைப் பெருக்குகின்ற நடவடிக்கைகளில் திருப்பிவிடுவது நம்முடைய கடமையாகும்.

இவ்வாறு, நம் குடியானவர்களைத் தூண்டி, அவர்களுடைய திறன், வசதிகள் முழுவதையும் பயன்படுத்தி, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் முக்கிய பங்கு இருக்கின்றது."

*(நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம், பட்ஜட் உரையில்)*

# மீன் வளம்

மூன்றுவது திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள மீன் வளத் திட்டங்களின் முக்கிய நோக்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் :—

(1) அதிக ஊட்டச்சத்து கொண்ட புரதம் நிறைந்த உணவாகிய மீனின் உற்பத்தியை அதிகரித்தல்.

(2) மீனவரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தல்.

(3) ஏற்றம் பெற்ற இதர நாடுகளில் உள்ளதைப் போன்று நவீன முறையிலும், விஞ்ஞான ரீதியிலும் மீன் வளத் தொழிலை அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறிய நோக்கங்களின் அடிப்படையில் மீன் உற்பத்தியை அதிகரித்தல், அவற்றைப் பதப்படுத்தி பாதுகாத்தல், அவற்றின் விற்பனையை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்காக மூன்றுவது திட்டத்தில் பதினெட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மீனவர்களுக்கு நவீன இயந்திரப் படகுகளையும், செயற்கை வலைகளையும் பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கவும் அவர்களுக்கு நிதி உதவி கொடுப்பதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நவீன இயந்திரப் படகுகள் வழங்குதல்

மீன் பிடிப்பதற்காக மீனவர்களுக்கு நவீன கருவிகள் கொண்ட நவீன இயந்திரப் படகுகள் வழங்கப்படுகின்றன. படகுகள் கட்டப்பட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மீனவர் கோஷ்டியினருக்கும் வாடகை—கொள்முதல் முறையில் குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றன. 1961–62-ல், 30 படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1962–63-ல் மேலும் 70 படகுகள் கட்டப்படும். அரசாங்க வர்த்தகக் கழகம் மூலமாக 'யென்' நாணய முறையில் 61 கடல் படகுகள் தருவிக்கப்படுகின்றன. தேவையுள்ள எஞ்சிய இயந்திரங்கள் இந்திய நாணய முறையில் வாங்கப்படும். 1963–64-ம் ஆண்டில், 100 படகுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இயந்திரப் படகுகளுடன் செயற்கை ட்வைன் நூல் வலைகளைக் குறைந்த விலையில் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1961–62-ல் 18,651 ராத்தல் எடையுள்ள நூல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. இலக்கிட்ட படகுகள் கட்டி முடிக்கப்படவில்லையாதலால், இவ்வாண்டில் 7,061 ராத்தல் எடையுள்ள நூல் மட்டுமே வழங்கப்பட்டது. 1962–63-ல் 28,000 ராத்தல் எடையுள்ள நூல் வாங்கப்பட்டது. 1963–64-ல் ரூ. 3 00 லட்சம் மதிப்புள்ள நைலான் ட்வைன் வாங்கி இயந்திரப் படகுகளுடன் மீனவர்களுக்கு வழங்கப்படும். செயற்கை ட்வைன் நூல் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவதால் அந்நியச் செலாவணியின்றியே இத் திட்ட இலக்கினை எளிதில் அடையலாம்.

உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளைச் சேகரித்து வளர்ப்பதற்காகவும் மீன் வளத்தைப் பெருக்குவதற்காகவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சேகரிக்கும் மீன் முட்டைகளை அனுப்பி வைப்பதற்காக வண்டிகள், ஜீப்புகள், ஆகியவற்றை வாங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் 300 லட்சம் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. 1961-62-ல் 210 லட்சம் மீன் முட்டைகள் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. முட்டை சேகரிக்கும் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்தும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவகை மீன்களின் முட்டைகளைச் செயற்கை முறையில் பொரிக்கும் முறை கையாளப்பட்டது. செயற்கை முட்டை பொரிக்கும் நிலையங்கள் ஐந்து இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. 1962–63-ல் 300 லட்சம் மீன் முட்டைகள் சேகரிக்கப்படும்.

1962-ல் பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 வளர்ச்சி வட்டாரங்களிலும் விஸ்தரிக்கப்பட்ட ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ் ஏழு வளர்ச்சி வட்டாரங்களிலும் மீன் வளர்ப்புத் தொழிலை ஆரம்பித்திருப்பதால், இயற்கை ஆதாரங்களிலிருந்து கிடைப்பதைவிட மீன் முட்டைகள் அதிக அளவில் தேவைப்படும். எனவே, 1963–64-ல் மேலும் மூன்று நிலையங்களைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீனை வளர்க்கத் தகுந்த உள்நாட்டு நீர் நிலைகள் அனைத்திலும் மீனைப் பெருமளவில் வளர்த்து அவற்றின் விநியோகத்தை அதிகரிப்பதன் மூலம் பஞ்சாயத்துக்களின் வருமானத்தை பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகள் பாதுகாப்பாகக் கரை வந்து தங்கவும், பிடித்த மீன்களைக் கரை சேர்க்கவும் மீன்படி துறைமுகங்கள் அவசியமானவையாகும். மீன் வளம் பெற்ற கேந்திர நிலையங்கள் சிலவற்றில் மீன் பிடி துறைகளையும் தோணித் துறைகளையும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மீன் பதப்படுத்தும் கூடங்கள்

மீன் பதப்படுத்துபவர், மீன்களைப் பதப்படுத்துவதற்கு நல்ல உப்பினைப் பயன்படுத்துவதில்லை. பதப்படுத்தும் முறைகளும் சுகாதாரமானவையல்ல. மீனவர்கள் சுகாதார முறையில் மீனை பதப்படுத்துவதற்காக மீன் பதப்படுத்தும் கூடங்களை அரசினர் நிர்வகிப்பதோடு மீனவர்களுக்குக் குறைந்த விலையில் உப்பும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

மீனைக் கெடாமல் பாதுகாக்கவும், அவற்றை ஒரே முறையுடன் விற்பனை செய்யவும் பனி அறை சாதனமும் குளிர்ப்பதன வசதிகளும் மிகவும் இன்றியமையாத தேவைகளாகும். இரண்டாவது திட்டத்தில் பூர்த்தியாகாத குளிர்ப்பதன சாதனங்கள் நிறுவன வேலை 1961–62-ல் மேற்கொள்ளப்பட்டது. மனைகள் தேர்ந்தெடுத்தல் இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றுக்கான பூர்வாங்க வேலை முடிவடைந்தது. எண்ணூரில் குளிர்ப்பதன தொழிற்சாலை வேலை முடிவடைந்து இயங்கத் தொடங்கி விட்டது. கடலூரிலும், நாகப்பட்டினத்திலும் குளிர்ப்பதனச் சாதனங்களை நிறுவும் வேலைகள் தொடங்கப்பட்டன. பழவேற்காடு, சதுரங்கபட்டிணம், நீலாங்கரை, கீழ்க்கரை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இச்சாதனங்கள் ஏற்படுத்தும் பூர்வாங்க வேலைகள் முடிவுற்று இயந்திரங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1962–63-ல் மேற்கூறிய இடங்களில் பனி-குளிர்ப்பதன சாதனங்களும், நாகர்கோவிலில் குளிர்ப்பதன சாதனமும் நிறுவப்படும்.

1963–64-ல் இரண்டு முக்கிய மீன் துறைகளில் 2 டன் மீன் கெடாமல் பாதுகாக்கும் பனி அறை, குளிர்ப்பதன சாதனங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதியும் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீனவ வகுப்பாரின் நிலையை உயர்த்துவதற்கும் மீன் பிடி தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் மீன் விற்பனை உயிர்நாடியாகும். குளிர்ப்பதன சேமிப்பு வசதிகள், துரிதப்போக்குவரத்து வசதிகள், மீன்பிடிக்கும் படகுகளை இயந்திரப் படகுகளாக்குதல் ஆகியவற்றுக்கான திட்டங்களுடன் மீன் விற்பனை பற்றிய விஷயம் விஞ்ஞான ரீதியாக இயைந்து செயல்படவில்லை. எனவே குளிர்ப்பதன வசதிகளுடைய எட்டு இடங்களில் கூட்டுறவு விற்பனை யூனியன்களை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த யூனியன்கள் சங்க உறுப்பினர்களிடமிருந்து மீன்களை நேரடியாகவே வாங்கிக் குளிர்ப்பதன பெட்டியில் சேமித்து வைத்து மீண்டும் சிப்பஞ் செய்து வண்டியில் அனுப்பி வைத்து விற்பனை செய்கின்றன. இம்முறை மூலம் கிடைக்கும் இலாபத்தை மீன் வழங்கிய உறுப்பினர்கள் தம்முள் பங்கிட்டுக்கொள்கின்றனர். 1963–64-ல் மீனவர் சங்கங்களுக்குக் கடனுகை அளிப்பதற்கு ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம்—ஆளியாறு, பவானிசாகர் நீர்த்தேக்கங்களில் மீன் வளர்க்கும் வேலை 1961–62-ல் மேற்கொள்ளப்பட்டது. 17 லட்சம் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்பட்டு இந்நீர்த் தேக்கங்களில் விடப்பட்டன. 1962–63-ல் மணிமுத்தாறு, வைகை நீர்த்தேக்கங்களையும் பயன்படுத்திக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. குந்தாநீர் மின்சார திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட நீர்த் தேக்கங்களிலும் மீன் வளர்ப்பு வேலைக்காக மேற்கொள்ளபடும் நீர்த்தேக்கங்களில் 30 லட்சம் மீன் குஞ்சுகளைவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேட்டு நில ஏரிகளில் குளிர் நீர் வாழ் மீன் வகைகளைப்பற்றி ஆராய்வதற்காக நீலகிரியில் ஆய்வுக் கூடம் ஒன்று அமைக்கப்படும். 1963–64-ல் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[ 'மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்—தமிழ்நாடு—சாதனைகளும் திட்ட வேலைகளும்' என்ற புத்தகத்திலிருந்து]

# பூமிதேவியின் சிரிப்பொலி

ஏழை ஒருவன், ஏங்கி அழுதுகொண்டிருந்தான். "என்னிடம் ஒன்றுமில்லையே, எப்படி வாழ்வேன்" என்ற எண்ணம் அவனுக்குச் சோர்வையூட்டியது. சோர்வும், சோம்பலும் சேர்ந்து, அவன் மனத்தைக் குழப்பின. அவன் அழுகை அதிகமாகியது. ஆதரவற்ற அவன் நிலையைக் கண்டு, இரங்குவார் ஒருவருமில்லை. சோர்வுற்று வருந்திய அந்த ஏழையின் அவல நிலையை, ஒரு பெரியவர் பார்த்தார்; மனமிரங்கினார். அவன் ஏக்கத்தைப் போக்கும் வழியை, கவிதை நயத்தோடு விளக்கினார். அதாவது, தமது கற்பனைச் சக்தி மூலம், ஓர் அற்புதம் செய்து காட்டினார்;

திடீரென்று அசரீரியாக சிரிப்பொலி கேட்டது. "சிரிப்பது யார்" என்று, அழுதவன் பார்க்கிறான். அவன் கண் முன், பூமிதேவி நிற்கிறாள்; வாய் திறந்து பேசுகிறாள் : "நானிருக்க அழுகை ஏன் ? மண்ணில் பிறந்த மக்களையெல்லாம் வாழ்விக்க, நான் எப்போதும் தயார். சோம்பலோடு அழாமல், சுறுசுறுப்போடு வேலை செய் ! உன் உழைப்பிற்கேற்றபடி உணவளித்து உதவி செய்ய, நான் காத்திருக்கிறேன். சோர்வு வேண்டாம். உழைப்பில் நம்பிக்கை வைத்துப் பாடுபடு. பாடுபட்டால், பலன் உண்டு" என்று பூமித்தாய், புன்முறுவலோடு மொழிந்து ஊக்கமளித்தாளாம் ! இதைக் கேட்ட ஏழையின் துன்பம் நீங்கி, துணிவும் சுறுசுறுப்பும் ஏற்பட்டன என்று சொல்லவும் வேண்டுமோ ! இதுவே, பூமித்தாய்க்குள்ள அற்புத சக்தி ; மக்கள் துயரைத் துடைத்து, மகிழ்ச்சியூட்டும் மாபெரும் சக்தி.

" இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லாள் நகும் "

என்ற தெய்வத் திருக்குறளில் இக்கருத்து உள்ளடங்கிக் கிடக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட இந்த அறிவுரை, இன்றைக்கும் மிகுந்த பயனளிக்கும் அறவுரையாக விளங்குகிறது.

(பாரத நாட்டுப் பாராளுமன்றத்தில் முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. டி. தேஷ்முக் அவர்கள் இந்தத் திருக்குறளை எடுத்துக் கூறி விவசாய அபிவிருத்திக்கான அவசியத்தை வற்புறுத்தியது, பலருக்கு நினைவிருக்கலாம்.)

---

"கிராமநலம்:"

சந்தா விவரம் :—

**தனிப்பிரதி 0·13 ந.பை.**

**ஆண்டு சந்தா ரூ. 1·50.**

ஆறுமாத சந்தா கிடையாது.

## கிராம வேலைத் திட்டங்கள்

பஞ்சாயத்து யூனியன்களில் கிராம வேலைத் திட்டங்களை செயல்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றுவது திட்டத்தில், கிராம அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு முழு வேலைத் திட்டமும் மூன்று வகையாகப் பிரிக்சப்பட்டுள்ளது. அதாவது, கிராம தண்ணீர் சப்ளை, இணைப்புச் சாலைகள், கிராமப் பள்ளிகள் என்பனவே அந்த மூன்று வகை வேலைகளாகும். தேசியத்திட்டத்தின் நன்மைகள் விரைவில் பரவவேண்டும் என்பதும், மக்களின் அத்தியாவசியமான தேவைகள் கூடுமானவரை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமே என்பதும் இந்த ஏற்பாட்டின் நோக்கமாகும். நிர்வாக அனுமதிகள் வழங்கும் அதிகாரம் முழுவதும் யூனியன் கவுன்சில்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் தரக்கூடிய மானியங்களைக்கொண்டு திட்டங்களை படிப்படியான முறையில் நிறைவேற்றுவதற்கான தெளிவான நடைமுறைகளை இவை வகுத்துள்ளன. வேகமான முறையில் வேலைகள் ஆரம்பமாயின. 1961–62-ல் பஞ்சாயத்து யூனியன்கள், இதுவரை செய்திராத அளவில், பெருமளவு வேலைத் திட்டங்கள் மேற்கொண்டு நிறைவேறியுள்ளன. 1961–62-ல் ரூ. 3·14 கோடி செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் பஞ்சாயத்து யூனியன்கள் இதை விட அதிகமாக வேலைகளை முடிக்ககூடும். நடைமுதல் ஆண்டில் முடிவாக மானியத் தேவைப்பாடு சுமார் ரூ. 3·4 கோடியாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. பஞ்சாயதது யூனியன்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் திட்டமிட்டு, நிறைவேற்றி வைத்த வேலைகளின் அளவு, இந்த ஒவ்வொரு ஆண்டிலும், முந்தின ஆண்டுச் சாதனையைப்போல கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும். 1963-64-க்கு ரூ. 2·99 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக, வேலைத் திட்டங்களை 12½ சதவீதம் குறைத்துக்கொள்ளுமாறு இந்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அந்தக் கோரிக்கைக்கேற்ப, வேலைத் திட்டங்களுக்கான ஐந்தாண்டு ஒதுக்கீடு ரூ. 15 கோடியை, தற்சமயம் ஆறு ஆண்டுக் காலத்தில் செலவழிப்பதென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்ட பட்ஜெட் இதற்கேற்ப திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வேலைத் திட்டங்களை ஓர் ஆண்டு நீடிப்பதால் குறையும் செலவுத் தொகையின் கணிசமான பகுதி யுக்தானுசார வேலை மானியமாக வழங்கப்படும். இத்தொகை பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஒரு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ரூ. 20 என்ற விகிதத்தில் கணக்கிட்டுப் கொடுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு ரூ. 30 லட்சம் நிதி வசதி கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது. யுக்தானுசார வேலை மானிய முறை மூலம், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அவசரமான, அத்தியாவசியமான வேலைகளை நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படும். அந்த வேலைகள், கிராம வேலைத் திட்டங்கள் என்ற வரம்பில் சேராமலிருந்தால்கூட, அவைகளை மேற்கொண்டு நிறைவேற்ற வழி ஏற்படும்.

(தமிழ்நாடு சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட கிராம நல-தல நிர்வாகத் துறையின் மானியக் கோரிக்கை விளக்க உரையிலிருந்து.)

## படை வீரர் குடும்பங்களுக்கு உதவி

ஹிமாலய எல்லைப் பகுதியில் உள்ள போர் முனைகளில் சேவை புரிந்து வருகிற அதிகாரிகள், இதர படை வீரர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிற பல்வேறு விசேஷ சௌகரியங்கள், வசதிகள், சலுகைகள் ஆகியவை பற்றிய விவரங்களை மத்திய பாதுகாப்பு மந்திரி, திரு. ஒய். பி. சவான் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் வெளியிட்டார்.

கீழ்க்கண்ட சில சலுகைகளும், வசதிகளும் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்:—

(அ) குடும்பங்களுக்கு சம்பளத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளை, மணியாடர் கட்டணமின்றி, இலவசமாக அனுப்பி வைப்பது (ஜூனியர் கமிஷன் அதிகாரிகள் இதர படை அதிகாரிகள் ஆகியோர் விஷயத்திலும் அதிகாரிகள் விஷயத்திலும் பாங்கி வசதிகள் இல்லாதிருந்து வருகிற இடங்களுக்கு, மட்டிலுமே இச்சலுகை கிடைத்து வருகிறது).

(ஆ) தெரிந்தெடுக்கப்பட்ட வாசஸ்தலமொன்றுக்கு படை வீரர்களின் குடும்பங்களை இலவசமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது ; சம்பந்தப்பட்ட படை வீரர் வேறு ஓர் இடத்துக்கு மாற்றப்படுகையில் அங்கிருந்து அவர்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பது அல்லது குறைந்த வாடகையிலேயே குடும்பங்களின் இடவசதியை நீடித்துவருவது.

(இ) போர் முனையில் பணிபுரிந்து வருகிற ஜூனியர் கமிஷன் அதிகாரிகள், இதர படை வீரர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு, சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரி அளிக்கும் அத்தாட்சியின் அடிப்படையில், யுத்த சேவையில் ஈடுபட்டுள்ள படை வீரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படுகிற சிவில் கோர்ட் அல்லது ரெவின்யூ கோர்ட் நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதற்கான ஏற்பாடு.

படை வீரர்களுக்கோ, அவர்களுடைய குடும்பத்துக்கோ குத்தகைதாரர்களிடமிருந்தும், உள் குத்தகைதாரர்களிடமிருந்தும் சேரவேண்டிய குத்தகைகளை வசூலிப்பதில் சிரமங்கள் எதும் இல்லாதவாறும், படை வீரர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்கள் வரம் உள்ள நிலங்கள் விஷயத்தில் நடைபெற்று வருகிற வழக்குகளில் படை வீரர்களின் நலன்கள் பாதிக்கப்படாதவாறும் கவனித்து வரும்படியாக எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும், நிர்வாகங்களுக்கும் நெருக்கடி நிலை ஆரம்பமாகியதிலிருந்தே அறிவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சைன்யத்தில் சேவை செய்து வருகிற ஜூனியர் கமிஷன் அதிகாரிகள், இதர படை வீரர்கள், கடற்படையிலும், விமானப் படையிலும் அவற்றுக்குச் சரியான அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியோரின் குழந்தைகளுக்கு இலவச கல்வியளித்து வரும்படியும் படை வீரர்களின் குழந்தைகள் விஷயத்தில் பள்ளி, கல்லூரிக் கட்டணங்களைச் செலுத்துவதில் தாமதமேற்பட்டால் அதைப் பொருட்படுத்த வேண்டாமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான ராஜ்யங்கள் இவை சம்பந்தமாக கேட்டுக்கொண்டுள்ளபடியே ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளன. மற்றவை அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பது பற்றிப் பரிசீலித்து வருகின்றன.



# சீனர் ஆணவப் பரணி

### செருக்களம் புறப்படும் செருக்கு

தெருவிலே விளையாடும் சிறுவ ரெல்லாம்
  செருக்களம் புறப்படும் செருக்குக் கொண்டார்
மருவிய கல்லூரி அரிகளெல்லாம்
  மார்தட்டிப் போர்க்களம் புக்கே விட்டார்
உருவிய வாளொக்கும் இருக்கண் செல்வ
  உத்தம மாதர்கள் உருத்து நோக்கி
மருவிய கற்பென்னும் கவசம் பூட்டி
  மனமொத்த கணவரைப் போர்க்கே விட்டார்

### சீனமே ! உன் செயல் ஈனமே !

மக்கள் தொகையில் மிக்கு விட்டால் போதுமா ?
  மனத்தில் கினத்தைக் கொண்டு விட்டால் போதுமா ?
முக்கி முக்கிப் பேசி விட்டால் போதுமா ?
  முயலைக் கொன்று புலியை வெல்ல லாகுமா ?
தக்க நெறியில் நிற்கும் எங்கள் நேருவைத்
  தாக்கி விட்டால் ஆக்கம் வந்து சேருமா ?
திக்கு விஜயம் செய்ய விரும்பும் சீனமே
  தீயைக் கொன்று நீரை வெல்லல் ஈனமே.

### மருத்துவத் தொண்டர்களுக்குப் பாராட்டு

போரிலே புண்பட்ட வீரர்க் கெல்லாம்
  பொறுமையோ டாறுதல் கூறிக் கூறி
நேரிய மருத்துவத் தொண்டு செய்யும்
  நிகரில்லா அமரரைப் போற்றுவோமே,
சண்டையில் புண்பட்டுச் சாய்ந்த வீரர்
  தமக்கெல்லாம் ஆறுதல் சொல்லிச் சொல்லி
அண்டையில் அமர்ந்துநற் குருதி யூட்டும்
  அமரரைப் பாடிக்கொண் டாடு வோமே.
மண்காக்கப் புண்பட்ட வீரர்க் கெல்லாம்
  மருத்துவத் தொண்டாற்றும் தேவர்க் கெல்லாம்
விண்காக்கும் தேவர்கள் ஆசி கூறி
  விளையாடும் காட்சியைப் பாடு வோமே.

### மீசையில் மண் இல்லை என்றார்

பஞ்சமும் பிணியும் போக்க முயலா தந்தோ !
  பகைப்புலத்தில் எம்மை வெல்ல முயன்ற சீனர்
அஞ்சுவதற் கஞ்சும் நல்ல அறிவைக் கொன்றார்
  அறநலத்தைப் புறக்க ணித்தார் ஆணவத்தால்
நெஞ்சமெலாம் வஞ்சம் சூழும் அரக்க ரானார்
  நேர்மையில்லாப் போர்கள் செய்யும் அசுர ரானார்
வெஞ்சமரில் வந்தெம் முன்னர் வீழ்ந்து போனார்
  வீழ்ந்தபின்னும் மீசையில் மண் இல்லை என்றார் !

### ஞாலம் போற்றும் வீரம்

நேர்மை யற்ற முறையி லெங்கள்
  நிலத்தை வவ்வ வந்த அச்
சீர்மை யற்ற சீனர் தம்மைச்
  சிறகொ டிந்த பறவையாய்ப்
பார்மேல் வீழ்த்திப் புலம்ப வைத்துப்
  பரணி பாடும் எம்முடை
ஆர்வ மிக்க வீர மெல்லாம்
  அறிந்து ஞாலம் போற்றுமே.

### என்றும் புகழில் நின்று வாழ்வோம்

கட்டுப் பாடு மிக்க நாட்டைக்
  காலன் கூட எதிர்த்து வெல்லான்
கட்டுப் பாடு கெட்ட நாட்டைக்,
  கயவன் கூட எதிர்த்து வெல்வான்
கட்டுப் பாடு மிக்க நம்மைக்
  கலக்க வந்த சீனர் தம்மை
எட்டுத் திக்கும் விரட்டி ஓட்டி
  என்றும் புகழில் நின்று வாழ்வோம்.

### ஆணவத்தின் தோல்வி

துணிவிலா வஞ்ச நெஞ்சச்
  சூரர்கள் படைத்த நஞ்ச
அணுவெடி அனைத்தும் சூழ
  ஆணவம் தேரில் ஏறித்
துணிவுடன் பொருது தோற்றுத்
  தூயர்முன் தீயர் போலப்
பணிவுடன் வணங்கக் கண்ட
  பார்மகள் சோர்வு தீர்ந்தாள்.

### எல்லா நாட்டுக்கும் நன்மை செய்வீர்

பல்லுயிர் ஓம்பும் வாழ்க்கைப்
  பண்பினை அழிக்க வல்ல
கொல்லெண்ணம் வளர்த்து நாளும்
  கொலைத்தொழில் செய்யும் பொல்லாக்
கல்வன்ன மனத்தை நீக்கிக்
  கனியொத்த மனத்தில் பூக்கும்
நல்லெண்ணத் தாலே எல்லா
  நாட்டுக்கும் நன்மை செய்வீர்.

—0—

# மின்சார விபத்து தற்காப்பு விதிகள்

கிராம மின்சாரத் திட்ட நிறைவேற்றத்தில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது என்பது எல்லோரும் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமாகும். மின்சார விபத்துக்களைத் தவிர்க்கக்கூடிய தற்காப்பு விதிகளை கிராம மக்கள் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இக்குறிப்புகள், கிராமத்தொண்டர் படையினர் விளக்கப்பணிசெய்ய மிகவும் பயன்படும் என்று நம்புகிறோம்.

1. மின்சாதனங்கள், கம்பிகள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதும் புதிதாகப் பொருத்துவதும் நாமாகச் செய்ய முயற்சித்தல் கூடாது. தகுந்த மின்பொறியாளர்களின் உதவியை நாடவேண்டும். அறைகுறையாகத் தெரிந்தவர்கள் செய்வது, நல்ல சாதனங்களைக் கெடுப்பதுடன் விபத்தை வரவழைத்துக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கலாம்.

2. ஊறு விளைவிக்காமல் சிறு அதிர்ச்சி தரக்கூடியதாக இருப்பினும், மின்சாதனங்களையும், இணைப்புகளையும், தகுந்தவர்களைக்கொண்டு, உடனடியாக நிவர்த்தி செய்யத் தவறக்கூடாது. களையை முளையிலேயே கிள்ளி விடுவது போல், உடனே பழுது பார்க்க வேண்டும். தரக்குறைவான சாதனங்கள் இவற்றிக்குக் காரணம். கவனக்குறைவாக இருந்தால் விபத்து எற்படும்.

3. ‘சுவிட்’சைப் போட்டும் விளக்கு எரியாமல்—விசிறி சுற்றாமல் இருந்தால் மின்சாரம் இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. அந்நிலையிலும் மின்ஓட்டம் இருக்கக்கூடும். ஆகவே பழுது பார்க்க ஆரம்பிக்குமுன், மின் ஓட்டத்தை நிறுத்தி, மின்உருகிகளை எடுத்துவிட வேண்டும்.

4. பழுதடைந்த பல்புகளைப் புதுப்பிக்கும்போதும், மின் சாதனங்களைப் பொருத்தும் போதும், மின் ஓட்டத்தை நிறுத்த மறத்தல் ஆகாது. மறதியினால் உயிரிழந்தோர் பலர்.

5. மின்சார சாதனங்களை அதன் கம்பி கொண்டு தூக்குவதற்கும், அல்லது அதன் உலோகக் கைப்பிடிகளைக் கொண்டு தூக்குவதற்குமுன் அதனை மின்ஓட்ட இணைப்புகளிலிருந்து பிரித்தாகி விட்டதா என்பதை முதலில் கவனித்துக் கொள்ள வேண்டும். சுவிட்சைப் போடாமல் இருந்தால் போதும் என எண்ணிவிடக்கூடாது.

6. மின்கம்பங்களை, உறுதியாக நிலத்தில் நிற்கக் கட்டியிருக்கும் முட்டுக் கம்பிகளைத் தொட்டு விளையாடுதல் கூடாது.

7. ஈரக்கைகளால், அல்லது ஈரமான தரையில் நின்றுகொண்டு எந்த மின்சாதனத்தையும் தொடுதல் கூடாது.

8. மின்கம்பங்களிலும், முட்டுக் கம்பிகளிலும் கால் நடைகளைக் கட்டிவைக்கக் கூடாது.

9. மின்கம்பங்களில் ஏறக்கூடாது.

10. மின்கம்பித் தொடர்களின் அருகில் உள்ள மரங்களில் ஏறவோ, கிளைகளை வெட்டவோ கூடாது.

11. கம்பிகளையும், கயிறுகளையும் மின்கம்பிகளின்மேல் எறியக்கூடாது; அருகில் பட்டம் பறக்கவிடக்கூடாது. பட்டமோ, நூலோ கம்பிகளில் சிக்கிக்கொண்டால் கம்பங்களில் ஏறி எடுக்க முயற்சிக்கக்கூடாது. அது அபாயத்தை விளைவிக்கும்.

12. மிக உயரமாக, பாரம் அடுக்கப்பட்ட வண்டியின் உச்சியில் செல்லக்கூடாது. வழியில் மின்கம்பித் தொடர்களின் மேல் பட்டு, உயிரிழக்க நேரிடும்.

13. ஒரே ஒருவிளக்குச் சந்தியிலிருந்து பல மின் சாதனங்களை இணைத்து உபயோகிப்பது தவறு. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இணைப்பு அமைக்கவேண்டும். இல்லாவிடில் அதிக மின் ஓட்டத்தால் மின் கம்பிகளில் சூடேறி தீப்பிடிக்க நேரிடலாம்.

14. அதிக சக்தி கொண்ட சாதனங்களை அதற்கென தனி சக்தி சந்தி எற்படுத்தி உபயோகிக்க வேண்டும்.

15. மின்ஓட்ட இணைப்புகளில் மின்உருகிகளை உபயோகிப்பது மின்சாதனங்களைப் பாதுகாக்கவும் மின்கம்பிகள் தீவிபத்தினால் பழுதடையாமல் இருப்பதற்காகவும் தான்.

[25-ம் பக்கம் பார்க்க.]







**கிராமத் தொண்டர் படை :**

“ பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர்; இந் நினைவகற்றாதீர் ”

என்ற கவிஞரின் வாக்கை சிரமேற் கொண்டு, அக்கட்பணி பல புரியும் கிராமத் தொண்டர் படை, தேசிய நெருக்கடியில், கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டி, கட்டுப்பாடான பயிற்சிகளை அளித்து வருகிறது.



## செய்தி நிலையங்களின் சேவை

பஞ்சாயத்து அலுவலகம் ஒவ்வொன்றிலும் "செய்தி நிலையம்" (Information Centre) ஒன்று அமைந்துள்ளது. கிராமத் தொண்டர் படையின் ஒரு பகுதியான "அறிவு அணி" சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு, பத்திரிகைகள் படித்தல், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், திட்ட விளக்கக் கூட்டங்கள் முதலியன நடைபெறுகின்றன.

## கிராம வானொலி மன்றம்

இன்றுள்ள நெருக்கடி நிலையில், வதந்திகளுக்குப் புரளிகளுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. உண்மைச் செய்திகளை அறியவும், ஆதாரமற்ற செய்திகளை நம்பி ஏமாறாமல் இருக்கவும், கிராம வானொலி மன்றங்கள் சிறந்த பணி புரிய முடியும். கிராம மக்களின் சந்தேகங்களைப் போக்க "கேள்வியும்—பதிலும்" என்ற நிகழ்ச்சி ஒலி பரப்பாகிறது.



"பீரகுப்பம் கிராம வானொலி மன்றம்"
(திருத்தணி பஞ்சாயத்து யூனியன், செங்கற்பட்டு மாவட்டம்)

வில்லுப்பாட்டு நிகழ்ச்சி கிராம மக்களிடையே உயர்ந்த கருத்துக்களைப் பரப்ப உதவும் சிறந்த சாதனமாகும். கிராம வளர்ச்சித் திட்ட ஊழியர்கள் இத் துறையில் தக்க ஆர்வமும் பயிற்சியும் பெற்றுள்ளனர். (சத்திய விஜய நகரத்திலுள்ள கிராம சேவகர் பயிற்சியாளர் கோஷ்டி)



"ஆதனூர்"—(ஆரணி பஞ்சாயத்து யூனியன், வடார்க்காடு மாவட்டம்)







மாதர் சங்கங்கள்

(மேல் படம்).—பஞ்சாயத்து யூனியன்கள்தோறும் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகின்றன. (சமீபத்தில் நடந்த தமிழ்நாடு சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தில், நிதியமைச்சர் திரு. பக்தவத்ஸலம் அவர்கள் மாதர் சங்கங்களின் பணிகளைப் பற்றி விளக்கிக் கூறியதும், அதன் அடிப்படையில் நடைபெற்ற ரசமான விவாதத்தின் விவரமும் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம்).

(காங்கேயநல்லூர்—காட்பாடி பஞ்சாயத்து யூனியன், வடார்க்காடு மாவட்டம்)

(கீழ் படம்).—கிராமங்களிலுள்ள மாதர், தங்களுடைய ஓய்வு நேரத்தில், தையல் வேலை, பின்னல் வேலை முதலிய பயனுள்ள தொழில்களைப் பழகுகின்றனர். அதனால் குடும்பப் பொருளாதார நிலை உயர வழி ஏற்படலாம். பஞ்சாயத்து நிறுவனங்கள் இதற்கான உதவியும் உற்சாகமும் அளித்து வருகின்றன.

[திருத்தணி—செங்கற்பட்டு மாவட்டம்—
விவரம்—33-ம் பக்கம் பார்க்க]

### மனிதப் பண்பாட்டுக்கு வேண்டுவன :

| | | |
|---|---|---|
| செல்வத்திலும் | — | பணிவுடைமை |
| வறுமையிலும் | — | நேர்மை |
| கோபத்திலும் | — | பொறுமை |
| பகைமையிலும் | — | அன்பு |
| தோல்வியிலும் | — | விடாமுயற்சி |
| ஏமாற்றத்திலும் | — | புன்சிரிப்பு |

(கிராம ஊழியர் க. முத்துக்காமாட்சிப் பிள்ளை, பெரியகுளம்).

[20-ம் பக்கத் தொடர்ச்சி.]

ஆனால் மின் உருகுக் கம்பிகள் உருகிவிடுமாயின் உடனே வேறு ஒரு உருகுக்கம்பி போடுவதற்கு முன் எல்லா இடங்களினையும் மின்கம்பிகள் கெடாமலிருக்கின்றனவா என்று பார்த்து விட்டு அந்த இணைப்பிற்குரிய சரியான உருகுக் கம்பி உபயோகிக்கவேண்டும். தடித்த உருகுக் கம்பியை உபயோகிப்பது ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும். என் எனில், அதனால் அதிக மின் ஓட்டம் அனுமதிக்கப் பட்டு மின் கம்பிகளுக்கும், சாதனங்களுக்கும் ஊறு நேரும்.

**16.** வீட்டில் உபயோகிக்கும் எல்லா மின் சாதனங்களையும் நன்றாக நிலத்துடன் இணைக்க வேண்டும். இது நன்றாக உள்ளதா என்பதை அருகிலுள்ள மின் அலுவலர்கள் மூலம் சரிபார்த்துக்கொள்ளவேண்டும். நல்ல 'நில இணைப்பு' உருகுக் கம்பியை எளிதில் உருகச் செய்து மின் சாதனத்தின் குறையையும், மின் கம்பியின் குறையையும் எளிதில் காட்டிக்கொடுக்கும். இதனால் மின் சாதனங்களுக்கும், உபயோகப்படுத்துகிறவர்களுக்கும் சேதம் விளைவதைத் தவிர்க்கலாம்.

**17.** மின் ஓட்டக் கம்பிகள் வெளியிடங்களில் தாழ்ந்தோ அல்லது தரையிலோ கிடந்தால் அதனை உடனே தொடக் கூடாது. மற்றவர்களும் அதன் அருகில் செல்லாமல் பார்த்துக்கொண்டு மின் அலுவலர்களுக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

**18.** 'நில இணைப்பு'க் கம்பியாக இருந்தாலும், ஒன்றும் தெரியாமல் கைவைப்பது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடும். என் எனில், சில சமயம் அதிலும் மின்னோட்டம் இருக்கக்கூடும்.

**19.** சுவிட்சுகளை முழுதும் பிடித்துக்கொண்டு எல்லா விரல்களையும் உபயோகிக்கக்கூடாது. கூடுமானவரை ஒரே விரலினால் உபயோகிக்க வேண்டும்.

**20.** 'பிளக் பின்'னை உபயோகிக்கும்போது எல்லா விரல்களாலும் மூடியவாறு உபயோகிக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் கைவிரல்கள் நேரே மின்னோட்டக் கம்பிகளைத் தொட ஏதுவாகும்.

**21.** பறவைகள் மின்னோட்டக் கம்பியின்மேல் உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவை அபாயமற்றவை என எண்ணாதீர்கள். பறவைகள் மற்றொரு கம்பியையும் சேர்த்துத் தொடுமானால் எரிந்து சாம்பலாகிவிடும்.

[நன்றி : தலைவர், தமிழ்நாடு மின்சார போர்டு, சென்னை]

## திரண்டெழுந்து செல்லுவோம் !

(நல்லைக்கவி இளங்கோவன்)

1 சீனர் என்னும் ஈனரைச் சேர்த்த புத்துப் போக்கவே
தென்னகத்து வீரர்நாம் திரண்டெ ழுந்து
செல்லுவோம் !
வானம் முட்டும் இமயவெல்லை வழுவி டாமல் காக்கவே
வாளெ டுத்துத் தோளுயர்த்தி வரிந்து கட்டிச்
செல்லுவோம் !

2 இமைய நெற்றி தன்னில்நம் இலச்சி னைகள்
எழுதினோம்
எட்டுத் திக்கும் வெற்றிமுரசு கொட்டிக் கொடி
கட்டினோம் !
நமையெ திர்த்துச் சீனமென்னும் நாட்டுச் சிலந்திப்
பூச்சிகள்
நமது மலையில் கூடுகட்ட நாமும் காண
முடியுமோ ?

3 முறத்தி னாலே புலியடித்த மறக்கு லத்துத்
தமிழர்நாம்
மூண்டு விட்ட போருக்கஞ்சி முடங்கி விட்ட
நாளுண்டோ ?
அறத்தி னாலே நாடுகாக்கும் ஆண்மை யாளர்
நம்மிடம்
அறிவு கெட்டுச் சீனக்குரங்கு ஆட்டும் வாலை
வெட்டுவோம் !

4 வெற்றி வெற்றி வெற்றியென்று வீர ரேமு
ழங்குவோம்
வினை ரான சீனர்படையை வெட்டி வெட்டி
வீழ்த்துவோம் !
சுற்றிச் சுற்றி வரும்பகையைச் சுட்டுச் சுட்டுக்
கொல்லுவோம்
சூழ்ந்து வெற்றிக் கொடி பிடித்துத் தோழ
ரேநாம் வெல்லுவோம் !

5 இந்தி யத்தாய் மண்ணையெந்த எதிரி வந்து
தோண்டினும்
இரத்தம் நமக்குக் கொதிக்குமென்று
எடுத்துக்காட்டும் போரிது !
சொந்த மண்ணைக் காப்பதற்குத் துடித்தெழுந்து
கூடுவோம்
சுதந்தி ரத்தைப் பாதுகாத்துச் சூழ்ந்து
வாழ்த்துப் பாடுவோம் !

—:0:—

# பாரதியார் வளர்த்த தியாக வேள்வி

## அறம் வெல்வது உறுதி

"அறம் வெல்லும், பாவம் தோற்கும்" என்பது, அனுபவ சித்தாந்தம். உலக வரலாறும், சகல இலக்கியங்களும், இந்த உண்மையையே, வற்புறுத்தி வந்துள்ளன. அறத்துக்கும், பாவத்துக்கும் உள்ள நிரந்தரப் போராட்டம், கவிகளின் கற்பனைக்கு விருந்தாக அமைந்தது. "தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்" என்பது, பாரதியார் திருவாக்கு. "பாஞ்சாலி சபதம்" பாடிய அந்தப் பெரும் புலவர், சூது காரணமாக அறத்துக்குத் தற்காலிகமாக ஏற்படக் கூடிய தோல்வியை, இதிகாசக் கதையின் மூலம் அழகாக எடுத்து விளக்குகிருர்.

### இரு பெரும் சக்திகள்

நல்ல சக்திகளுக்கும், தீய சக்திகளுக்கும் இடையே எப்போதுப்போராட்டம் இருந்து கொண்டே வந்திருக்கிறது. உலகெங்கும், இந்தப் போராட்டத்தின் சாயலைக்காணலாம். பாரத நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது வேத காலத்திலேயே, இந்தப் போராட்டத்தின் எதிரொலியைக் கேட்க முடிகிறது. தேவர்கள், அசுரர்கள் ஆகியோருக்கு ஏற்பட்ட போராட்டங்களை, அங்கே விரிவாகக் காணலாம். எதிரிகளை அழிக்கக்கூடிய வல்லமையைப் பெறுவதற்கு, இரு தரப்பினரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வது, இயற்கையாக உள்ளது. அந்த வகையில் வல்லமை பெறுவதற்கு அசுரர்களும், ராட்சதர்களும் மிகப் பெரிய தவம் செய்ததும், ஐம்புலன்களை அடக்கி, இராப்பகல் இல்லாமல், மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாது, ஒரே லட்சியத்தோடு தவம் செய்ததாக, புராண இதிகாசங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இந்த அபூர்வ தவத்தின் பயனுக, அவர்கள் அற்புதமான சக்திகளைப் பெற்றதையும், அதன் பிறகு ஆணவம் கொண்டு பல்வேறு அக்கிரமச் செயல்களைச் செய்ததையும், முடிவாகத் தர்மத்தை மறந்து அதர்மச் செயல்களில் ஈடுபட்டபோது, அவர்கள் சக்திக்கு மேற்பட்ட ஒரு மாபெரும் சக்தியின் தலையீடு காரணமாக, அவர்கள் பெற்ற சக்தியெல்லாம் பாழாகி, அவர்களுக்கே அழிவு ஏற்பட்டதையும், அந்தக் கதைகள் விளக்குகின்றன. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகிலுள்ள பல்வேறு தேசங்களிலும் இது போன்ற பழங் கதைகள், பன்னெடுங் காலமாக மக்களால் மதிக்கப்பட்டு வந்துள்ளன.

தீய சக்திகளுக்கு இயற்கையாகவே, அதிக ஆற்றல் அமைந்துள்ளது. இது இயற்கையில் காணப்படும், ஒரு பெரிய உண்மை. நல்ல சக்திகள் இறுதியில் வெற்றி பெறுகின்றன. என்றாலும், அவை பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவது, இயற்கையே போலும்! அன்பு, தொண்டு, தியாகம் ஆகிய நல்ல பண்புகள், தொடர்ந்து வளரத்தக்க ஆக்க சக்திகள், இவற்றை நாமே வலியச் சென்று, கண்டுபிடித்து போற்றி வளர்த்துக் கொள்ளவேண்டும். என்ன இடையூறுகள் நேர்ந்தாலும், எத்தகைய போலிக் கவர்ச்சியும், மயக்கமும் குறுக்கிட்டாலும், நம் மனத்தை, நல்ல சக்திகளிடமிருந்து விலக்காமல், ஒரே நெறியில்-செந்நெறியில் செலுத்தும் மன உறுதியும் தெளிவான புத்தியும் தேவை. இந்த அற நெறியில் சென்றவர்களை அறவோர், முனிவர், ரிஷிகள் என்றெல்லாம் பழங்காலத்தில் வழங்கினர். தீய சக்திகளைக் கண்டு அவர்கள் அஞ்சுவதேயில்லை. "அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை" என்ற உறுதி, அவர்களின் தனிச் சொத்து. "நாம் ஆர்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்" என்பது அவர்கள் அருள் வாக்கு.

### வேள்வி என்பது என்ன?

பாரதியார் பாடல்களில், இந்தப் பழம் பெரும் பண்பாட்டின் எதிரொலியைக் கேட்கலாம். அவர்களுடைய கவிதைகளின் ஆதார சுருதியாக, இந்த அடிப்படையான பேருண்மை அமைந்திருக்கிறது. நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும் இடையே ஏற்படும் போராட்டத்தை, அவர் அரசியல் வாழ்வில் மட்டும் காணவில்லை. தத்துவ ரீதியாகவும் அதை விளக்குகிருர். குறிப்பாக, பழங் காலத்து ரிஷிகள், வேள்வி செய்வதன்மூலம் அசுரர்களை வெல்லும் ஆற்றலை வளர்த்தார்கள் என்ற கருத்தை, மறுமலர்ச்சித் தமிழில், வெகு அழகாகப் பாடியிருக்கிருர். இன்றைய தினம் நாம் அதைப் படிக்கும்பொழுது அக்கவிதையின் உண்மையொளி, நம்மை வியக்கச் செய்கிறது; புதிய ஊக்கம் பிறக்கிறது. சீனப் படையெடுப்பு காரணமாக, பாரத நாடெங்கும் இன்று நடைபெறும் தியாக வேள்வியின் உயிர்ச்சித்திரமாக, இந்தக் கவிதைகள் விளங்கி வருகின்றன.

வேள்வி என்பது, பொது நலத்தை முன்னிட்டுப் பலரும் ஒன்று சேர்ந்து, தாமே அமைத்துக்கொண்ட, கட்டு திட்டங்களுக்கு உட்பட்டு நடத்துகின்ற உயர்ந்த கூட்டு முயற்சியாகும். பழங்காலத்தில் இத்தகைய முயற்சியை, "யக்ஞம்" அல்லது யாகம் என்று கூறினூர்கள். இத்தகைய புனிதமான பொது நலக் காரியங்கள் நடத்துவதற்கு, ஒற்றுமை, கட்டுப்பாடு, ஐம்புலன் அடக்கம், மன உறுதி, அறிவுத் தெளிவு, லட்சியத்தில் நம்பிக்கை முதலிய உயர்ந்த குணங்கள் அவசியம். இத்தகைய நற்பண்புகளோடு மேற்கொள்ளப்படும் பொதுநலக் காரியங்களில், வெற்றி ஏற்படுவது நிச்சயம். ஆயினும், எத்தகைய நல்ல காரியங்களுக்கும், இடையூறு செய்ய, ஒரு சிலர் முயல்வார்கள். இதுதான் தீய சக்திகளின், இயற்கை. நல்ல காரியங்கள் நடைபெறுவதை அவர்கள் பொறுக்கமாட்டார்கள். எனவே, தம்முடைய சக்திகளை எல்லாம் பயன்படுத்தி, தடை ஏற்படுத்துவார்கள்; அழிக்க முற்படுவார்கள். இத்தகைய நிலையில்தான் "அறம் வாழுமா? தர்மம் நிலைக்



நாட்டை எதிர்நோக்கியுள்ள இன்றைய நிலையில், பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். 1963-64-ல் விவசாய வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு 69 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கியுள்ளோம். எல்லாக் கிராமங்களிலும் இப்பொழுது கிராமத் தொண்டர் படை எழுப்பப்பட்டு வருகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்கும் பணியில் இத்தொண்டர் படை முழு மூச்சுடன் இறங்கவேண்டும். இதுதான் கிராம மக்கள் நாட்டின் தற்காப்பு முயற்சிக்குச் செய்யக்கூடிய பெரும் சேவையாகும்.

(நிதி அமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம்—பட்ஜெட் உரையில்)

---

குமா? சத்தியம் ஜெயிக்குமா?" என்ற கேள்விக்குறி, பலருடைய உள்ளத்தில் தோன்றுகிறது. ஆனால், அறநெறியில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, அத்தகைய சந்தேகம் ஏற்படுவதேயில்லை; தர்மத்தில் அவர்களுக்கு, நம்பிக்கை தளர்வதில்லை. தம்முடைய முயற்சிகளுக்கு இது ஒரு பலத்த சோதனை எனக் கொண்டு, மனம் கலங்காமல், தம்முடைய முயற்சிகளைப் பலப்படுத்தி, தியாகச் சிகரத்தை நோக்கி, மேலும் அவர்கள் முன்னேறிச் செல்வார்கள். இத்தகைய உறுதியும், முயற்சியும், தியாகமும் காரணமாக, அவர்களின் ஆற்றல், பன்மடங்கு அதிகரிக்கிறது. இதையே, கவிதை மொழியில், "வேள்வித் தீயின், வேகம் மேலோங்குகிறது" என்று கூறுவார்கள். சுயநலத்தையே, அடிப்படையாகக் கொண்ட தீய சக்திகள், இத்தகைய தியாகத் தீயைக் கண்டு, உள்ளம் நடுங்கி, ஓடுவதில் ஆச்சரியமில்லை. அப்படி ஓடாமல், அசட்டுத் துணிச்சலோடு தியாகத் தீயை அழிக்க வரும் அசுர சக்திகள், சுயநல உருவங்களாக இருப்பதால், அச்சத்துக்கு இரையாகி, பொதுநலமே லட்சியமான தியாக வேள்வியில் மடிந்து சாம்பலாவது நிச்சயம். அக்கிரமம், சுயநலம், அச்சம் ஆகியவற்றின் உருவங்களையெல்லாம், பொசுக்கி அழிக்கும் பேராற்றல், தியாக வேள்வியின் தனிச் சிறப்பாகும்.

இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பாரதியார் பாடியுள்ள அமர கவிதை வரிகளில் சில இவை:

ரிஷி
"வானை நோக்கிக் கைகள் தூக்கி
வளருதே தீ! தீ!—இந்நேரம்
ஞானமேனி உதய கன்னி
நண்ணி விட்டாளே—இந்நேரம்

அசுரர்
உயிரை விட்டும் உணவை விட்டும்
ஓடி வந்தோமே—ஐயோ! நாம்
துயிலுடம்பின் மீதிலும் தீ
தோன்றி விட்டானே—அம்மாவோ!

ரிஷி
எங்கும் வேள்வி, அமரர் எங்கும்
யாங்கணும் தீ! தீ!—இந்நேரம்
தங்கும் இன்பம் அமர வாழ்க்கை
சார்ந்து நின்றோமே!—இந்நேரம்.

"அருள்"

—o

## திருமகளே நீ வாழ்க!

லம்போதர பாகவதர்

இந்தியத் தாயே வாழ்க—நீ
இன்புடன் என்றும் வாழ்க
துன்பம் தொலைந்துமே வாழ்க—நீ
சுபிட்ச முடன் என்றும் வாழ்க (வாழ்க)

நாங்கள் நாற்பத்து நான்கு கோடி
நல்ல மக்கள் உன் பணி செய்வோம்
தீங்கு செய்யும் சீனரை வெல்வோம்
திரு மகளே நீ வாழ்க (வாழ்க)

இருண்ட சூழ்நிலை மறைந்திட வேண்டும்
இன்பம் வந்து குவிந்திட வேண்டும்
நாட்டு மக்கள் நலம் பெறவேண்டும்
நல்லவளே நீ வாழ்க (வாழ்க)

ஒற்றுமை இல்லையேல் தாழ்வென அறிந்தோம்
ஒன்று சேர்ந்தே செயல்பட முனைந்தோம்
வேற்றுமை பிரிவினை, பகைமையை ஒழித்தோம்
வெற்றியுடன் நீ வாழ்க (வாழ்க)

—o—

## நாடு காப்பீர்!

அறந்தைத்திருமாறன்

நாட்டுக்கு நன்மைசெய நாட்டங் கொண்ட
நல்லவர்காள்! நற்றிறமை வாய்த்த மக்காள்!
வீட்டுக்குத் தன்தேவை பூர்த்தி செய்ய
விரைகின்ற நோக்கம் போல் பெற்ற இந்த
நாட்டுக்கும் தொண்டுசெய வாரீர்! உங்கள்
நற்றிறன்டை நாடின்று ஏற்றுப் போற்றும்!
கேட்டுக்கும் கேடுதரும் வதந்தி கட்கும்
கிளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் இடங்கொடாதீர்!

கிராமத்தில் தொண்டர்படை சேர்ப்பீர்! உங்கள்
கிராமத்து நலமனைத்துங் காப்பீர்! நல்ல
மராமத்து உங்களிடம் ஆட்சி ஈயும்!
மயங்காதீர்! தயங்காதீர்! திறமை கூட்டி
பொறுமை, தீ, கலகம் இவை தீர்த்து வைப்பீர்!
பொங்குவளப் பழம்கறிகாய் விளைத்துச் சேர்ப்பீர்!
வராதுஒரு பசிபஞ்சம் தீமை என்று
வயல்விளைத்து பெருஉழைப்பால் ஆட்சி காப்பீர்!

கூற்றமென நாட்டுக்குக் கேடு செய்யக்
குறிவைத்து அங்கங்கே கலகமூட்டி
வேற்றவர்க்கு இடமளிக்கும் வெறியர் தம்மை
வெருட்டுவதும் தபால்தந்தி தடைக ளின்றி
ஏற்றவர்க்குக் கிட்டவகை செய்வதூ உம்
இன்தேன்சொல் இரக்கமனம் அருளன் போடு
சீற்றத்தைக் களைந்துநல் விழிச்சல் கூட்டி
சீரோங்க பாரோங்க நாடு காப்பீர்!

—o—

# வரப்பு உயர்ந்தது ! வாழ்வும் உயர்ந்தது !!

## மண்வளம்! நமது பொன் வளம்!!

**நிலவளைவுக்கரைகளை அமைப்பதன் நோக்கம் :—**

நிலத்தின் வளத்தை நிரந்தரமாகப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதே நில வளைவுக்கரைகள் (Contour Bunding) அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். பொதுவாக, சமவெளியில், மழை குறைவாகவே பெய்கிறது. அவ்வாறு பெய்யும் மழையும் சரியாகப் பரவுவதில்லை. ஆகவே அத்தகைய இடங்களில் மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டியது, மிகவும் இன்றியமையாததாகிறது. சமவெளியில் பயிராகும் பயிர்களுக்கு உபயோகப்பட வேண்டிய மேற்பரப்பிலுள்ள மண் சத்துக்களை அடித்துச் செல்லாமல் காப்பதும், மண்ணரிப்பைத் தடுத்து மண் வளத்தை வீணாக்காமல் தடுப்பதுமே நில வளைவுக்கரைகளினால் ஏற்படுகின்ற பயனாகும்.

பத்து சதவீதத்திற்கும் குறைவாக மிதமாக உள்ள சரிவு நிலங்களிலேயே நில வளைவுக்கரைகள் அமைக்கப்படுகின்றன. இப்பொழுது, நமது மாநிலத்தில், செம்மண் பிரதேசங்களிலேயே இக்கரை அமைப்பு முறை இருந்து வருகிறது. ஒரு சரியான அரிப்புத் தடுப்பு முறையை அறிகின்ற வரையில், கருமண் பிரதேசங்களிலும் நில வளைவுக்கரை அமைப்புத் திட்டம் மேற்கொள்ளாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு கூறப்படுகின்ற உயர்தரச்சாகுபடி முறை, பராமரிப்பு முறை விவரங்கள் முதலியன மாநிலத்திலுள்ள செம்மண் பிரதேசங்களுக்கே பொருந்துவனவாகும். நல்ல மழை பெய்த ஆண்டுகளிலும், மழையற்ற வரண்ட ஆண்டுகளிலும் ஈரத்தைக்காத்து நல்ல விளைவைக் காண மேற்கொள்ளப்படும் பெரிய நிலவள வளர்ச்சி முறைகளின் துவக்கமே நில வளைவுக்கரை, மதகுக்கரை, தடுப்பணை முதலிய நில அரிப்புத் தடை அமைப்புக்களைக் கட்டுவதாகும்.

நில வளைவுக்கரை, மண் அரிப்பைத் தடுக்கின்றன. ஆனால் அவையும் காலப் போக்கில், சிதையும் தன்மையுடையன. அவற்றை அடிக்கடி பராமரிக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய நில அரிப்புத்தடைக் கரைகளைப் பாதுகாத்தலும், பாதுகாப்புப் பண்ணை முறைகளைப் பின்பற்றுவதும், இவை நெடுநாளைக்குத் தொடர்ந்து மண்வளத்தைப் பெருமளவுக்குப் பாதுகாக்க உதவும்.

சரிவுகளில் வேளாண்மை செய்யப்பட்டு வந்தால் அங்கு கட்டப்படும் கரைகளைப் பாதுகாத்தலும் எளிமையாகும்.

**நில வளைவுக்கரைகளைப் பராமரித்தல் :—**மழை பெய்யும் போது நில வளைவுக்கரைகளின் பக்கங்களிலும், மேலும் புது மண் பரப்பி, அருகு முதலான அங்கே கிடைக்கும் புல்வகைகளை அதன் மேல் பயிராக்க வேண்டும். இத்தகைய புல் பயிரிடுவதன் மூலம் மழையினால் கரைகள் அரித்துச் செல்லாமல் பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறு பயிராக்கப்படும் புல் வகைகளை ஆடுமாடுகள் மேய்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மண் வளப்பாதுகாப்புப் பணியாளர் அல்லது விவசாய வளர்ச்சிப்பணியாளர் ஆகியோர், கரைகளில் பயிரிடத்தக்க புல்வகைகளின் விதை கிடைக்க வழி செய்வார்கள்.

கரைகள் தாழ்ந்துவிடும்போதும் பெருமழை காரணமாக உடைப்பெடுத்துக் கொள்ளும் போதும், அதிக மண் நிரப்புவதன் மூலம் குறைந்த பகுதிகளையும், உடைப்புகளையும் நிரப்பவேண்டும். கரையின் உயரமும், அகலமும் வெகுவாகக் குறைந்தோ, கரைந்தோ விட்டதாயின், புது மண் போடும்பொழுது கரை இருக்க வேண்டிய அளவைக் காட்டிலும் அதிக மண் கொட்டவேண்டும். அப்போது தான் அது இருக்க வேண்டிய உயரத்திற்கும் அகலத்திற்கும் வந்து நிற்கும்.

வயல்களுக்கு ஏரு வண்டிகளை ஓட்டிச் செல்லவோ, விளைச்சலை ஓட்டி வரவோ, பிறவற்றுக்கோ வண்டிகள் செல்லக் கரைகளை விவசாயிகள் வெட்டி விடுவார்கள். இவ்வாறு கரைகள் வெட்டப்படுவது கரைகளை நிரந்தரமாகப் பாழ்படுத்தி விடும். இந்தத் திட்டமே தோல்வியடைய இது காரணமாக அமையும். ஆகவே கரைகளை வெட்டுபவர்கள் உடனடியாக, மழைக்காலத்திற்கு முன்னதாக அவற்றை அடைத்து விட வேண்டும். முடியுமானால் கரைகளை வெட்டாமல், வேறு வழிகளில் வண்டிகளை ஓட்டிச் செல்லலாம். மேலும் ஆடுமாடுகளை கரைகளின் மேல் ஓட்டிச் செல்வதாலும் அவை சரிந்து உயரம் குறைந்து விடுகின்றன. அவ்வாறு உயரம் குறைந்து கரைந்து விடும் பகுதிகளை உடனடியாக மண் போட்டு நிரப்பிவிட வேண்டும். முடிந்தால் ஆடுமாடுகள் போவதைத் தவிர்க்கலாம். இல்லையெனில் அடிக்கடி போக்குவரவு உள்ள பகுதிகளில் கப்பி போட்டு விடலாம்.

இக்கரைகள் மண் அரிப்பைத் தடுப்பதுடன், அவற்றிடையிலுள்ள நிலத்தில் பெய்யும் மழை ஈரத்தைக்காக்க உதவுகின்றன. இக்கரையை ஒட்டியுள்ள நிலங்களில் மழை நீர் தேங்கியிருக்கும். இவை சம அளவில் நிலமெங்கும் பரவவும், நீர் ஊறிய பகுதிகளை நன்கு பயன்படுத்தவும், இத்தகைய பகுதிகளில், கீழே விளக்கப்படும் புன்செய்ப் பயிர் முறையை விவசாயிகள் பின்பற்றவேண்டும். நில வளைவுக்கரைப் பிரதேசங்களில் உழுதல், விதைத்தல், கலப்புப்பயிர், மாற்றுப்பயிர், பகுதிப் பயிர் முதலிய எல்லா முறைகளையும் கரையை யொட்டியே செய்யவேண்டும். இவை முறையே செய்யப்பட்டால் மழை நீர் வீணாகாமலும் பள்ளப்பகுதி நோக்கி ஓடாமலும் தரை ஈரம் தாங்கும். மழைகால ஆரம்பத்தில் கரைகளை உழுதால், புல்பூண்டுகள்



நீங்கி நல்ல பயிராக விதைப்பதற்கான வகையில் நிலமிருக்கும். ஆரம்பத்தில் 6 அங்குலம் ஆழம் உழுது, பிறகு அதை மேலும் உழுவதால் 4 அங்குலம் அதிகமாக்கலாம். நிலங்கள் அதிகச் சரிவாக இருந்தால், முதல் தடவை உழுதபிறகு 10 செண்ட் பரப்புள்ள நிலமாகப் பிரிக்கப் வேண்டும். இதனால் நிலம் மழை காலத்தில் அதிக நீரை இழுத்துக் கொள்வதோடு விளைச்சலையும் அதிகம் கொடுக்கும்.

விதைப்பதற்கு நான்கு அல்லது ஆறு வாரங்களுக்கு முன்னால் 6 வண்டி சாணம் அல்லது 15 முதல் 30 வண்டி கரம்பை நிலத்தில் பரப்ப வேண்டும்.

மழைக்குப் பிறகு உள்ள நிலவளத்தைப் பொறுத்துத் தான் விதைக்க வேண்டும். விதைத்தானிய உபயோகத்தை 25 முதல் 50 சதவீதம் வரை குறைத்து உபயோகப் படுத்துவதனால், விதை சிக்கனப்படுவதுடன் மழை குறைந்த ஆண்டுகளிலும் நல்ல விளைச்சலைக் காணமுடியும். விதை பரவலாக விதைக்கப்படும் பொழுதும் கரையோரங்களில் விதைகளை லேசாக மூடவேண்டும்.

வரிசையாக விதைப்பதன் மூலம் குறைந்த அளவு விதையே போதுமானதாகும். கருவிகளைக் கொண்டு களையெடுத்தலும் இதனால் எளிதாகும். மண் வளங்காக்கவும், களையெடுக்கவும் கலப்புப்பயிர் செய்வது நல்லது.

**மாற்றுப்பயிர் :—(Rotation Crop)** சோளம் அல்லது கம்பு முதலிய புஞ்செய்ப்பயிரை தொடர்ந்து மாறாமல் செய்தால் விளைவு படிப்படியே குறைந்து கொண்டே வரும். மண்வளம் அழியாமலிருக்கவும் உயர்ந்த விளைவைக் காணவும் ஓராண்டு கம்பு , அல்லது சோளம். அடுத்த ஆண்டு வேர்க்கடலை அடுத்து கலப்புப் பயிர் என்று மாற்றிப் பயிரிட வேண்டும்.

மேற் குறித்தபடி உயர்தரச் சாகுபடிக்கான முறைகளைப் பின் பற்றுவதால், நிலம் சமமாக இருக்கும். சாரமுள்ளதாக இருக்கும். நிரந்தரமாக் நல்ல விளைவைக் கொடுக்கும். பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் தம் விவசாய வளர்ச்சிப் பணியாளர்களைக் கொண்டு மண் வளப் பாதுகாப்பு திட்டங்களைக் கண்காணிப்பதுடன், பழுது பார்த்தல், பராமரித்தல் வேலைகளைச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு இவ்வகையில் வழிகாட்டி உதவவேண்டும்.

— o —

# வரப்பெற்றோம்

## சென்னையில் வீட்டுக் காய்கறித் தோட்டம்

**ஆசிரியர். திரு. ந. கணேசமூர்த்தி, பி. எஸ். ஸி., ஏ. ஜி. மாவட்ட விவசாய அலுவலர் விலை 50 ந.பை.**

சென்னை காய்கறித் தோட்ட சாகுபடி அபிவிருத்திக் குழுவின் ஆதரவில் சென்னை விவசாய மன்றத்தார் வெளியிட்ட இந்தப் புத்தகத்தில் வீட்டுத் தோட்டத்திலே பயிர் செய்ய ஏற்ற காய்கறி, கீரை, வாழை, தென்னை முதலானவைகளைப் பயிரிடும் முறை பற்றி கூறப்பட்டிருக்கிறது. பயிர் செய்யும் காலம், பயிர் செய்யும் முறை. தேவையான உரம், பயிரின் வயது, பயிரைத் தாக்கும் நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறை ஆகியவை விவரமாகக் கூறப்பட்டுள்ளன. காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய இந்த நேரத்தில், இப்புத்தகம் மிகவும் பயனுடையதாகும்.

## விவசாயிகள் மன்ற நாட்குறிப்பு

திருந்திய முறையில் நன்செய், புன்செய் நிலங்களில் பயிரிடுதல், காய்கறித் தோட்டம், பூந்தோட்டம் அமைத்தல் கால்நடை விவரங்கள் ஆகியவை பற்றி விவசாயிகளுக்குப் பயன்படும்வகையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நாட்குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ள இந்த விவரங்கள் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

(வெளியிட்டவர்: 'தமிழ்நாடு விவசாயிகள் மன்றம்') 36–பி, மவுண்ட் ரோடு, சென்னை–2)

[மதிப்புரைக்குப் புத்தகங்கள் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். கிராம வளர்ச்சி வேலைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட புத்தகங்களே மதிப்புரைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.]

## நீயொரு இந்தியன்

"குகன்"

நீயொரு இந்தியன் என்னும் பெருமைதனை
நெஞ்சில் நினைப்பதே உன் கடமை
தாயவள் பாரதத்தாய் வலிமை — தனை
தரணிக் குணர்த்துவதே உன் கடமை
மேருவின் பொன்முடி அவள் முடியாம்—அதன்
மேன்மையைக் காப்பதே உன் கடமை
பேரும் புகழும் அவள் பேருளாம்—அதைப்
பேணி வளர்ப்பதே உன் கடமை
கண்ணியம் புண்ணியம் அவள் உடமை—அதை
காவல் செய்வதே உன் கடமை
அன்னைக்கு நீங்கிட என்னும் பகைவரை
அடியற வீழ்த்துவதும் உன் கடமை
பண்பில் அன்பில் உன்னைப் பழக்கி விட்டாள்—இந்த
பாரில் உனது நிலை உயர்த்தி விட்டாள்
வன்பகை கொண்டிங்கு வந்தவர்க்கே—தன்
வலிமை காட்ட உன்னை அழைத்து விட்டாள்

— o —

# எழுதப்பெறு இலக்கியம்

## "இசைத்தமிழ் வித்தகர்" குடந்தை திரு ப. சுந்தரேசன்

மறைந்தும், மறையாமலும் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் பயின்று வந்த நாட்டுப்பாடற் கலைக்கு, சென்னை தமிழிசைச் சங்கம், பண் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளில் (ராஜா அண்ணாமலை மன்றத்தில், 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ந் தேதி நடைபெற்ற கூட்ட நிகழ்ச்சிகளில்) இடமளித்துச் சிறப்பித்துள்ளது. பண்டைத் தெருக்கூத்துப் பாடல்களை, அவற்றை நன்கு பயின்ற கலைஞர்களைக் கொண்டே இசைத்துள்ளனர்.

பலநாள் பயிற்சிக்குப் பின்னரே பாடக்கூடிய சில கடினமான ராகங்களையும் இக்கலைஞர்கள, இலக்கணம் தப்பாமல், எளிதில் பாடியது கேட்ட, இசைப்பேராசிரியர் திரு சாம்பமூர்த்தி அவர்கள், அவர்களுடைய கலைத்திறனை வியந்து பாராட்டினர். இதற்கான பாடல்களை, சேகரித்த பெருமை, "இசைத்தமிழ் வித்தகர்" குடந்தை திரு. ப. சுந்தரேசன் அவர்களைச் சாரும்.

மண்ணிற்கிடந்த கலைகளை மன்றமேற்றி, அதன் மேன்மையைப் போற்றிய தமிழிசைச் சங்கம் நம் பாராட்டுக்குரியதாகும். சிறப்பாக, செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களும், திரு லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் அவர்களும் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்களும் இப்புதிய பணிக்குத் தரும் ஆதரவு, தமிழ் அன்பர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறோம்,

தமிழ்மொழி தொன்றுதொட்டு மூன்று தன்மைகளாகப் பகுத்து உரைப்பட்டு வந்தது. முத்தமிழ் என்று சிறப்பிக்கப்பெற்று வந்தது. இயல், இசை, கூத்து ஆகிய மூன்றும் இயைந்து வளர்ந்து வந்துள்ளன. அவற்றுள் இயற்றமிழுக்கு இல்லாத பெருமை, இசைத் தமிழுக்கும் கூத்துத் தமிழுக்கும் உண்டு. இயற்றமிழை, கல்வியிற் சிறந்த கவிஞர்களும், இலக்கியப்புலமை சான்ற புலவர்களுமே வளமாக்கிச் சிறப்பித்து வந்தனர். ஆனால் இசையும் கூத்தும் சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து எல்லா மக்களும் போற்றி வளர்த்த கலைகளாக விளங்கி வந்துள்ளன. அவ்வாறு, ஒரு காலத்தில் மக்களிடையே சிறந்து விளங்கிய இசைக்கலையும், கூத்துக்கலையும், மக்களுக்கேற்பட்ட பல்வேறு கலாச்சாரத் தொடர்புகளினால் சிறப்பு குன்றி "நாட்டுப்பாடல்கள்" "தெருக்கூத்து" என்ற பெயர்களால், ஆதரிப்பாரன்றி, அருகிய வழக்காய் விட்ட நிலை ஏற்பட்டது.

நாட்டுப்பாடல்கள் என்பவை, மக்களின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தும் வாயில்களாகவும், சமுதாயத்தில், கடினமான வேலைகளைச் செய்யும் பொழுது தம்முடைய வேலைத்துன்பம் தெரியாமல் இருக்கப்பாடப் படும் தொழில் சார்ந்த பாடல்களாகவும் அமைந்திருக்கின்றன. கல்வியறிவற்ற தாய்மார்கள் தம் கண்மணியை சேய்களை உறங்க வைக்கப் பாடும் தாலாட்டு, ஏற்றம், ஏரி நீர் இறைக்கும் உழவன் களைப்பு தெரியாமலிருக்கப்பாடும் ஏற்றப்பாட்டு—வயல்களிலே நாற்று நடுகின்ற உழவர்குலப் பெண்கள் பாடுகின்ற பள்ளு—முதலிய பாடல்கள்—எதுகையும் மோனையும், யாப்பும், இலக்கணமும் கற்றறியாத இவர்களின் பாடல்கள், உணர்ச்சியும் ஓசை நயமும் பொருந்தியனவாக அமைந்திருக்கின்றன. எனினும் இது, நாள்வரை, எழுதப்பெறு இந்த இலக்கியங்கள், கலை உலகில் கவனிக்கப்பெறு இலக்கியங்களாகவே இருந்து வந்துள்ளன.

அது போன்றே கூத்துக்கலையும் பாமர மக்களிடையே பல வகையாக பரிணமித்து—ஆனால் ஆதரவின்றி—கலையுலகில் உரிய இடம் பெறுமலேயே இருந்து வந்துள்ளது. நாட்டுப்பாடல்களும், கூத்து வகைகளும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்—பல்வேறு வடிவங்களில் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ந்து, விரவி வழங்கி வருகின்றன.

கலையுலகில் வேகமாக ஏற்பட்டு வரும் மாறுதல்களில், விஞ்ஞான வளர்ச்சியினால், அந்த பழம்பெரும் கலைச் செல்வம் அழிந்துபடாமல், மறதிக்கு ஆட்பட்டு மறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும். இந்தப் பணியின் இன்றியமையாமையை உணர்ந்த அறிஞர் சிலர் இத் துறையில் ஈடுபட்டு அவற்றைத் திரட்டி—அவற்றுக்குப் புதுவாழ்வு அளிக்கும் முயற்சியில் செயல்பட்டுள்ளனர்,



"அரிச்சந்திர நாடகம்" தமிழ்நாட்டில—இந்தியாவிலேயே தொன்று தொட்டு நடத்தப்பட்டு வரும் கூத்தாகும். காந்தியடிகளுக்கு, சத்தியத்தில் அசையாத நம்பிக்கை ஏற்படக் காரணமாக அமைந்தது, இளமையில் அவர் கண்ட அரிச்சந்திர நாடகமேயாகும். பசுமரத்தாணி போல் சத்தியத்தின் சக்தியை அவர் மனதில் பதித்து. அதனால் வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க புரட்சிகளுக்கு இந்த நாடகம், தூண்டுகோலாயிற்று என்பது உலக வரலாறு.

இவ்வாண்டில் (1962) நம் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தார், தஞ்சை மாவட்டத்தில் கிருஷ்ண விலாசம் அரிச்சந்திர நாடகம், வீரகுமார நாடகம், மார்க்கண்டேயர் நாடகம், இராம நாடகம், இரணிய நாடகம், சிறுத்தொண்டர் நாடகம் போன்ற நாடகங்களைச் சிறப்புற நடத்திப் பெயரும் புகழும் அடைந்திருந்த அன்னத்தம்மாள், கோவிந்தன், நடேசன் நாராயணி, கமலம் இவர்கள் பரம்பரையில் வந்த திருவாலி சுந்தரக்கண்ணு அம்மையாரையும் சகதாம்பாள் அம்மையாரையும், மத்தளம் நாகராசனையும, மாயூரவட்டம், வல்லம் சுந்தரம் என்பவரையும். வழுவூர் பரம்பரையைச் சார்ந்த செம்பனூர் கோயில் வி எஸ். எம். அருகம் அம்மையாரையும் சோழன்பேட்டைப் பரம்பரையில வந்த ஆர்மோனியம் என். என். கோவிந்தராவ் அவர்களின் மகள் கோ. அம்புசம்மாள் என்பவரையும், தென்னார்க்காடு மாவட்டம் குடிகாடு விநாயக நகர் எ. கிருட்டிணன் அவர்களையும் நாடகங்களில் புகழ் பெற்றுள்ளவரும், பாடல்கள் இயற்றும் ஆற்றல் வாய்ந்தவருமான ஆர்மோனியம், மாயூரம் திருவாளர் எஸ். டி. வேலன் அவர்களையும், ஆக எட்டு நாடகக்காரர்களை அறிமுகப்படுத்தினர்.

இவர்களின் இசைமுறை, மிகப்பழைய நாடகத்தமிழ்ப் பணியில் அமைந்திருப்பது சிறப்பான அம்சமாகும். இராகங்கள் யாவும் பண்டைய நாடகத் துறையில் கைக்கொள்ளப்பட்டவையாகவே இருந்து மிக்க விளக்கமாகவும் இருக்கின்றன. தாளங்களும், மிக்க பழைய முறையில் கஞ்சக்கருவியின் கூடம் ஒன்று இரும்பு மற்றொன்று வெங்கலமாக வைத்துக்கொண்டு, ஒத்துக்கள் முறையிலும், நடைமுறையிலும் போட்டுப் பாடுகின்றனர். பாட்டுக்களை இராகங்களில் எடுக்கும் முறையில் வலிவு நிலையில் அதாவது தாரஸ்தாயி ஷட்ஜத்திலேயே தொடங்குகின்றனர். ஒரு சில பாடல்களை சமநிலையில் அதாவது மத்திமஸ்தாயி பஞ்சமம் முதலாகத் தொடங்கிப் பாடுகின்றனர். நாடகத் தமிழ்க்கேயுரிய பழைய இராகங்களைத் தவிர, வேறு புதியவை, இவர்களிடத்தில் இதுகாறும் வந்து கலக்கப்பெறவில்லை. பழைய முறையில் செய்து வரும் இவர்களது நாடக முறையையும் பாடல்களின் அரிய பாணியும் எஞ்ஞான்றும் போற்றிப் பாராட்டக் கூடியதாகும். பழைய கல்யாணி மேளச்சுருதியே, இவர்களுக்கு ஆதார சுருதியாக இருக்கிறது.

இவர்களில் செம்பனூர் கோயில் வி. எஸ். எம். அருகத் தம்மாள் முதலில் அரிச்சந்திர நாடகப் பாட்டுக்களில் நான்கு பாட்டுக்கள் பாடினார்கள். பிறகு சுந்தரக்கண்ணு அம்மையாரும் சேர்ந்து, அரிச்சந்திரன் சந்திரமதி என்ற முறையில் ஒரு பாட்டுப்பாடினார்கள். பிறகு கிருஷ்ணன் என்பவரும் அம்புஜம் என்பவரும் சிங்கன் சிங்கி விருவை பழைய முறையில் பாடினார்கள். பிறகு சுந்தரக்கண்ணு அம்மையாரும் சகதாம்பாள் அம்மையாரும் பள்ளு (ஆடலும் பாடலும்) நிகழ்த்தினார்கள், வல்லம் சுந்தரம் என்பவர் தாளம் போட்டுக்கொண்டு உடன் பாடினர். எஸ். டி. வேலன் அவர்கள் ஆர்மோனியம் வாசித்தார். திருவாலி நாகராசன் மத்தளம் வாசித்தார். குறிப்பிட்ட ஒரு சில பாடல்களை எடுத்துக் காட்டுதற்காகவே இங்கே பாடினார்கள்.

❊

### பழங்காலத்து இசைக் கருவி

### தக்கை.

கருவியின் தொன்மை—தக்கை என்பதை ஒரு வகையான தோற்கருவி என்றே தமிழ் நூல்களில் குறித்திருப்பதை நன்கு காணலாம். இக்கருவி, இருபுறமும் மென் தோல் அதாவது மெல்லிய சவ்வுத்தோலால் கட்டப் பெற்றதாகும். மேலும் இது உடுக்கையை விட அளவிற் பெரிதாய கைக்கருவியாக இருப்பதுங் காணலாம். நம் தமிழகத்தில் மிக்க பழங்காலத்திலிருந்து இசைக்கலைக்குரிய முறையில் நிரம்ப தோற்கருவிகளும் துளைக் கருவிகளும் நரம்புக்கருவிகளும் இருந்து கொண்டிருப்பதையும் நாம் நன்குணரலாம். அக்காலத்தில் தோற் கருவிகளைச் செய்து பயன்படுத்தித் தொழில் புரிந்து வந்த பல்வேறு மக்களிடத்தும் பொதுவாக, பற்பலவான தோற்கருவிகள் நிறைந்து இருந்தன எனவும் அறியக்கிடக்கின்றது.

### தற்காலத்தில் இருக்குமிடம்

இக்காலம் நம் தமிழகத்தில் திருவரங்கம் பெரிய கோயிலில் தக்கை என்னும் இக்கருவி சிறப்புற இருந்து வருகிறது. இத்திருக்கோயிலில் உள்ள பலவகையான தோற்கருவிகளில் ஒன்றாகத் தனித்த நீர்மையோடு இந்தத் தக்கை என்ற ஒரு கருவி மட்டுமே இருந்து வருகிறது. இதுவரை பெயர் மாறுபாடு அடையாமலும் தோற்றங்கெடாமலும் இக்கருவி நன்கு பாதுகாக்கப்பெற்று வருவது மிகவும் மகிழ்ந்து பாராட்டக்கூடியதாகவுள்ளது.

### திருவரங்கம் கோயிலில் இக்கருவி வாசிக்கும் நாளும் விழாவும்.

இக்கருவி திருவரங்கத்தில் ஆண்டு தோறும் இருவிழாக்களில், அதாவது, கைசிக ஏகாதசி தினத்தன்றும், வைகுண்ட ஏகாதசித் திருநாளிலும், வாசிக்கப் பெறுவது வழக்கமாக இருந்து வருகிறது. மற்ற நாட்களில், இக்கருவி வாசிப்பதில்லை. நன்கு பாதுகாப்பாகவே கட்டி வைக்கப்படுகிறது. அரையர்கள் தங்கள் கையில் கஞ்சக்

(அடுத்த பக்கம் பார்க்க)

# வளரும் சமுதாயம்



## பஞ்சாயத்துக்களின் புதுமலர்ச்சி

# கண்டதும் கேட்டதும்

நமது நாட்டிலுள்ள பெரும்பாலான நிலம், சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆயினும், சில புன்செய்ப் பிரதேசங்களில், தரிசாகக் கிடக்கும் நிலம், ஏராளமாக இருப்பதை இன்றும் காணலாம். நீர்ப் பாசன வசதி இல்லாததால், சாகுபடி செய்ய இயல்வதில்லை. சில இடங்களில், உவர்மண்ணாக இருக்கும்; மற்றும் சில இடங்களில், சதுப்பு நிலமாக இருக்கும். இப்படிப்பட்ட நிலங்களையெல்லாம், தக்கமுறையில் சீர்திருத்தி, விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று, நமது பாரத நாட்டுத் திட்டக்கமிஷன் (Planning Commission) தீர்மானித்துள்ளது; சமீபத்தில், இதற்காக வேலைத் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

### விவசாயத் துறையில்....

'வாழ வகையில்லையே' என்று எங்கும் ஏழை மக்களுக்கு, நம் நாட்டில் குறைவில்லை. பாடுபடத் தயாராகவுள்ள ஏழை எளியவர்களுக்கு, உழைப்பதற்கான நிலமளித்து, சாகுபடிக்குத் தேவையான உதவியும் உற்சாகமும் அளித்தால், பயனற்றுக் கிடக்கும் பூமியெல்லாம், பயிர் பச்சைகளோடு வேளாண்மை பெருகி, மக்களுக்கு உணவளிக்க முடியும். "பாலைவனம் சோலைவனமாகும்" இன்பக்காட்சி, நாடெங்கும் தோன்றுவதற்கு இந்தப் புதிய திட்டம் வழி வகுக்க முயல்கிறது.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்கோட்டை சப்-கலெக்டர் ஆபீசில், இது சம்பந்தமாக ஒரு விசேஷக் கூட்டம் நடைபெற்றது. பஞ்சாயத்துத் திட்ட இயக்குநர் திரு. குலாம் மகமது பாக்ஷா அவர்கள், இத் திட்டத்தை விளக்கிப் பேசினர். அகில இந்தியாவிற்கும் சுமார் 8 கோடி ரூபாய் இதற்காக அளிக்கப்பட்டு, நமது தமிழ் நாட்டிற்கு, சுமார் 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தின்படி, தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர, மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும் சேர்ந்து, ஒவ்வொரு ஏக்கருக்கும் 150 ரூபாய் வீதம் உதவி புரிய முடியும். ஒரு குடும்பத்திற்கு 500 ரூபாய் வரையில் முன்பணம் கொடுத்து உதவலாம் (இந்தத் தொகையில் ரூ. 375 மானியமாகவும், ரூ. 125 கடனாகவும் இருக்கும்) இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும், குறைந்தது 5 ஏக்கர் தரிசு நிலத்தையாவது சாகுபடிக்குக் கொண்டுவர முயல்வதாக, உதவி கலெக்டர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் உத்தரவாதமளித்தனர். பாசன வசதிக்கான கிணறுகள் தோண்டவும், பம்பு செட்டுகள் அமைக்கவும், ஏரிகளை மராமத்து செய்யவும்; சிரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. "செம்பட்டு" என்ற கிராமத்தில், சுமார் 30 ஏக்கர் பாசன வசதியளிக்கும் கிணறு, ஏற்கனவே தோண்டப்பட்டு விட்டது. "புத்தாம்பூர்" என்ற கிராமத்தில், பாசன வசதி அளிப்பதற்காக, புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 600 ஏக்கர் நிலத்திற்குக் கூடுதலான நீராதார வசதி (supplemental irrigation source) ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை பிரதேசத்தில், இதுபோன்ற முயற்சிகள் மூலம், விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். இங்கே, தரிசு நிலங்கள் ஏராளமாக இருப்பதால், மக்களின் ஒத்துழைப்பாலும் அதிகாரிகளின் முயற்சியாலும், பயனுள்ள திட்டங்கள் உருவாகி விரைவில் நிறைவேறும் என்று நம்பலாம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கருவி எனப்படும் பெருந்தாளத்தை வைத்துக்கொண்டு திவ்யப்பிரபந்தம் சேவிப்பார்கள். அவர்கள் ஒரு பதிகத்தை தாள ஒத்து முறையில் பிரபந்தம் சேவிப்பார்களாம். அப்பொழுது அவர்களுக்குத் துணைக் கருவியாக தக்கை வாசிக்கப் பெறுவது வழக்கம்.

இப்பொழுது திருவரங்கத்தில் இராசேந்திரம் சீதாராமன் பரம்பரையினரே இக்கருவியைப் பாதுகாத்தும் வாசித்தும் வருகின்றனர். சீதாராமன் குமாரர்களில் ஒருவரான திரு. சீ. குமாரசாமி என்பவரே தமிழ் இசைச் சங்கத்தாரின் அழைப்பின் பேரில், தக்கையை அண்ணாமலை மன்றத்தில் வாசித்துக் காண்பித்தார். இக்கருவியை இதுணைக் காலம் பாதுகாத்து வந்த பரம்பரையினருக்கும் திருவரங்கம் பெரிய கோயிலாருக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வோமாக.

['தக்கை' என்ற பழம் பெரும் இசைக்கருவியை மறுபடியும் மக்கள் மன்றத்தின் முன்னுல் கொண்டு வந்த பெருமை தமிழ் இசைச் சங்கத்தைச் சாரும். வருகின்ற ஆண்டுகளில், மறந்து போய் விட்டிருக்கிற இம்மாதிரி பழம் பெரும் இசைக் கருவிகளை அறிமுகப்படுத்தி, 'அரையர் சேவை' போன்ற பழம் சிறப்பு வாய்ந்த தமிழ்க்கலை மரபுகளுக்கு தமிழ் இசைச் சங்கத்தார் புத்துயிர் ஊட்டுவார்கள் என நம்புகிறேம்.

—(o)—

இதேபோன்று, வடக்குத் திருச்சிப் பகுதியில், விவசாய அபிவிருத்திக்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 'துறையூர்' பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 'கொல்லப் பட்டி' என்ற ஊரில், அந்த கிராம மக்களின் உற்சாக ஒத்துழைப்பால் ஒரு புதிய ஏரி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த ஏரியை உண்டாக்க, சுமார் 60,000 ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் சுமார் 40,000 ரூபாய், கிராமத்தார் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்த்ததால், பல வருடங்களாக இவ்வேலை நடைபெறுமலே இருந்தது. சமீபத்தில், கிராம மக்கள் காட்டிய உற்சாகம் காரணமாக, சுமார் 6,000 ரூபாய் செலவில், புதிதாக ஏரிக்கரை உருவாக்கப்பட்டுவிட்டது. சிறிய நீர்ப்பாசன இலாகா எஞ்சினியர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவரும், அதிகாரிகளும், இதில் காட்டிய விசேஷ கவனம், பாராட்டு தற்குரியது. இந்தப் புதிய ஏரியின் மூலம் சுமார் 40 ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே போன்று, அநேகப் பஞ்சாயத்துகளில், ரஸ்தா ஓரங்களில் மரங்களைப் பயிரிடவும், ஏரி உள்வாயில் கருவேல மரங்களை வளர்க்கவும், பல திட்டங்கள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. 'ஆதனூர்' என்ற கிராமத்தில், சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வைத்த கருவேல மரங்கள் மூலம், ஏறக்குறைய 10,000 ரூபாய் வருமானம், அந்தப் பஞ்சாயத்திற்குக் கிடைத்ததாகத் தெரிகிறது.

### மாதர் சங்கங்கள்

எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் மாதர்சங்கங்கள் ஏற்பட்டு, பெண்கள், குழந்தைகள் ஆகியோர் நலனுக்கான திட்டங்கள், சிறப்பாக நடைபெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் ஆவல். இதற்கான பயிற்சித் திட்டங்களும், மற்ற ஏற்பாடுகளும் செய்வதற்கு, மாதர் நல இலாகா, தீவிரமாக முயன்று வருகிறது. சிறப்பாக, "கிராமத் தொண்டர் படை"யில், "மாதர் அணி", முக்கிய இடம் பெற்றுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணியில், ஆறு மாதத்திற்கு முன்பு தொடங்கப்பட்ட மாதர் சங்கம் 40 அங்கத்தினர்களைக் கொண்டு சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. நமது ராஷ்டிரபதி டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களின் சகோதரியான ஸ்ரீமதி ஜெயலெட்சுமி அம்மாள் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியுள்ள இந்தச் சங்கம், சீரிய பணி புரியும் என்று எதிர்பார்க்கலாம். இதே போல, வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காட்பாடி பஞ்சாயத்து யூனியனில் உள்ள 'காங்கேயநல்லூர்' என்ற கிராமத்தில் உள்ள மாதர் சங்கம், தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றில் பயிற்சி அளித்து வருகின்றது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 'முசிறி' என்ற இடத்தில், மாதர்களுக்கென தையல் பயிற்சி நிலையம் நடைபெற்று வருகிறது. இந்த சங்கங்களின் வேலை, மேலும் பயனுள்ள வகையில் நடைபெறத்தக்க வழிமுறைகள், ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

### சத்துணவுத் திட்டம்

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த ஆரணி பஞ்சாயத்து யூனியனில், ஊட்டச் சத்து வளர்ச்சிக்கான திட்டம் (Expanded Nutrition Programme) அமுலாகி வருகிறது. இதன் மூலம், சிறு குழந்தைகளுக்கு (இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ளவர்களுக்கு) பால் வழங்கவும், விளையாட்டு, பாட்டு, கதை முதலியன சொல்லிக்கொடுக்கவும், கர்ப்ப ஸ்திரிகளுக்கு பால், முட்டை, மீன் முதலிய சத்துள்ள ஆகாரம் கிடைக்கச் செய்யவும், பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கிராம சேவிகை, முக்கிய சேவிகை, ஆகியோருக்கு இதில் விசேஷ பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும், கோழிப் பண்ணை வளர்க்கவும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் காய்கறித் தோட்டம் போடவும், முயற்சி மேற்கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இவை தவிர, மதிய உணவுத் திட்டம் பல இடங்களில் செம்மையாக நடைபெற்று வருகிறது. திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த "மணச்சநல்லூர்" என்ற இடத்தில், சிறு வயது குழந்தைகளுக்கான பள்ளியிலும் (Pre-School Children) மதிய உணவு அளிக்க, பஞ்சாயத்து யூனியன் தலைவர் முன்வந்துள்ளது, பாராட்டத்தக்கதாகும்.

### பழத்தோட்டங்கள் வைத்தல்

பஞ்சாயத்துக்களுக்கு சமீபத்தில் வழங்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களில் பழத் தோட்டம் வைத்து வளர்ப்பதில், அநேக பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆரணியைச் சார்ந்த 'ஆதனூர்' பஞ்சாயத்திலும், காட்பாடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 'காங்கேயநல்லூர்', 'அம்முண்டி' முதலிய இடங்களிலும், மக்களின் கூட்டு முயற்சியால், பழத்தோட்டம் அமைக்கும் வேலை, நல்ல வகையில் நடைபெற்றுள்ளது. அம்முண்டியில் (சென்னையிலிருந்து செல்லும் பெங்களூர் பெருஞ்சாலையில், 79-வது மைல் கல் உள்ள இடத்தை அடுத்து), இன்னும் சுமார் ஐந்தாறு வருஷங்களில், பஞ்சாயத்தின் சொத்தாக, 700 மரங்களைக் கொண்ட ஓர் அழகிய மாந்தோப்பு உருவாகி வளரும். பயிராகியுள்ள செடிகளை, தீவிர கவனத்தோடு பராமரித்து வருவதில், பஞ்சாயத்தார், தொடர்ந்து கவனம் செலுத்தி வருவார்கள் என்று நம்புகிறோம்.

புதிய பஞ்சாயத்து சட்டத்தின்படி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கதர், கைத்தொழில் போர்டாரின் ஒத்துழைப்புடன், சென்ற சில காலமாக எல்லா மாவட்டங்களிலும் அநேக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றுள், திருத்தணியில் நடைபெறும் தச்சுப்பட்டறை குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பஞ்சாயத்து யூனியனின் தலைவர் திரு பி. ஸ்ரீராமுலு அவர்கள் தலைமையில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், இக் கைத்தொழில் நன்றாக நடைபெறுகிறது. மேஜை, நாற்காலிகள் செய்யப்படுவதோடு, விரைவாக விற்பனை ஆகியும் வருகின்றன.

# புதிய நூல்களுக்குப் பரிசு

புதிதாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் உபயோகத்துக்கான புத்தகங்களுக்கு நடத்தப்படவிருக்கும் பத்தாவது பரிசுப் போட்டிக்கு, கையெழுத்துப் பிரதிகளையும், அச்சிடப்பட்ட புத்தகங்களையும் அனுப்பிவைக்கும்படி ஆசிரியர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் மத்திய அரசாங்க கல்வி அமைச்சரகம் அறிவித்துள்ளது.

இப்போட்டி பற்றியும், அதில் அளிக்கப்படுகிற பரிசுகள், விலைக்கு வாங்கிக்கொள்ளப்படும் பிரதிகளின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தமான விரிவான தகவல்களையும், போட்டியில் கலந்துகொள்வதற்கான விதிகளையும், போட்டிக்கான புத்தகங்களுடன் அனுப்பப்பட வேண்டிய கடிதத்தின் நமூனாவையும் மத்திய சர்க்கார் கல்வி அமைச்சரக இலக்கியப் பிரிவு விசேஷ அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான விண்ணப்பத்துடன், அனுப்புபவரின் விலாசமடங்கிய தபால்தலை ஒட்டாத கவர் ஒன்றையும் வைத்து அனுப்பவேண்டும். விலாசங்கள் ஹிந்தியிலோ, ஆங்கிலத்திலோ எழுதப்பட்டிருந்தால், விண்ணப்பங்களைத் துரிதமாகக் கவனித்துப் பைசல் செய்ய மிகவும் உதவியாக இருக்கும்.

போட்டிக்கான புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும் மத்திய கல்வி அமைச்சரகத்தில், 1963 ஜூன் 30-ந் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இப்போட்டியில், ஒவ்வொன்றும் 500 ரூபாய் மதிப்புள்ள மொத்தம் 40 பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுவதற்குரியதாக மிகச் சிறந்ததாக உள்ள அச்சிடப்பட்ட புத்தகங்கள், அல்லது கையெழுத்துப் பிரதிகளை எழுதியுள்ள ஆசிரியர்களுக்கு இப்பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுகிற 40 புத்தகங்கள் அல்லது கையெழுத்துப் பிரதிகளில், மிகச் சிறந்ததாக உள்ள முதல் ஐந்து புத்தகங்கள் அல்லது கையெழுத்துப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் 500 ரூபாய் வீதம் அதிகப்படி பரிசுகள் வழங்கப்படும். இப்பரிசுகள் பல்வேறு இந்திய மொழிகளுக்கிடையே நியாயமான விகிதத்தில் வநியோகிக்கப்படும்.

---

இதே போல, திருச்சி மாவட்டத்தில் ஒரு புதிய கைத்தொழில் திறமையோடு நடைபெறத் தொடங்கியுள்ளது. "விச்வேஸ்வரய்யா' தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 'பூசிரி'யிலே, ரேடியோப் பெட்டிகள் தயாரிக்கும் தொழில் ஆரம்பமாகியுள்ளது. திரு. வெங்கடாசலம் என்ற வக்கீல் ஒருவர், இந்த நுட்பமான தொழிலில், மிகவும் உற்சாகத்தோடு ஈடுபட்டு, படிப்படியே முன்னேறி வருகிறார். திரு. குலாம் மகமது பாஷா அவர்கள், திருச்சி கலெக்டராக இருந்தபோது, இந்தத் தொழிலைத் தொடங்குவதற்கான ஆலோசனை கூறி ஊக்கமளித்தார். அதையடுத்து, ஐந்து மாதங்களுக்கு முன்பு, இந்தத் தொழில் நிலையத்தைத் தொடங்கி வைத்த அமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்கள், இந்தப் புதிய தொழிலின் வளர்ச்சிக்கு வாழ்த்துக் கூறியுள்ளார்.

—(o)—

## முக்கிய அறிவிப்பு

மாநிலத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளுக்கும் "கிராம நலம்" வழங்கப்பெற வேண்டுமென, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த முடிவினை ஒட்டி, இதுவரையில் மாதம் 20,000 பிரதிகள் என்ற அளவில் பிரசுரிக்கப்பட்டு வந்த 'கிராம நலம்' பத்திரிகையின் எண்ணிக்கை 1963-ம் ஆண்டு ஏப்ரல் இதழிலிருந்து மாதந்தோறும் 45,000 பிரதிகள் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

மிகப் பெருவாரியான அளவில் "கிராம நலம்" பிரதிகள் அச்சடிக்கப்பட வேண்டியுள்ளதால், பத்திரிகையின் பிரதிகளை விநியோகம் செய்கிற முறையில், அரசாங்கம் சில மாற்றங்களைச் செய்துள்ளது. இனிமேல், "கிராம நல" இதழ்களை பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளுக்கும் விநியோகம் செய்கின்ற பொறுப்பு, அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைச் சார்ந்ததாகும். அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குத் தேவையான 'கிராம நலம்' பிரதிகளை (பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளுக்குமாகச் சேர்த்து) மொத்தமாக, தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சகக் கட்டுப்பாடு அதிகாரி (Controller of Stationery and Printing) நேரே, அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அனுப்பி வைப்பார். இந்தப் பிரதிகளை அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பஞ்சாயத்துக்கள், சந்தா செலுத்தியுள்ள ஆரம்பப் பள்ளிகள் ஆகிய அனைத்திற்கும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், தன்னுடைய சிப்பந்திகள் மூலமாக விநியோகம் செய்வார். இந்த நடைமுறை, 'கிராமநலம்' 1963-ம் ஆண்டு ஏப்ரல் இதழிலிருந்து அமுலுக்கு வருகிறது. இனிமேல் 'கிராம நலம்' இதழ்கள் கிடைக்கப்பெறாத பஞ்சாயத்துக்களோ, ஆரம்பப் பள்ளிகளோ, பொதுஜனத் தொடர்பு அதிகாரிக்கோ, கிராமநல ஆசிரியருக்கோ, நேரிடையாக எழுத வேண்டிய தேவையில்லை. அப்படிப் பிரதி கிடைக்காதவர்கள், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடன் தொடர்புகொண்டால், போதுமானது. இந்த முக்கிய அறிவிப்பினை, சம்பந்தப்பட்ட அனைவரும் தெளிவாகப் புரிந்துகொண்டு, இதன்படி நடப்பார்களென நம்புகிறோம்.

ஆசிரியர், "கிராமநலம்",
பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
கிராம நல, தல நிர்வாகத்துறை,
சென்னை 9.





கிராம நலம் பகுதி
பஞ்சாயத்து வர்த்தமானி
PANCHAYAT GAZETTE

## கலெக்டர்கள் கிராம வானொலி மன்ற மாவட்ட அமைப்பாளர்களாகச் செயல்படல்

**[Radio Rural Forums—Collectors to function as District Organisers of Radio Rural Forums—Orders passed.]**

**(G.O. Ms. No. 551, R.D. & L.A., dated 12th March 1963.)**

இதுவரை 352 பஞ்சாயத்துக்களில், கிராம வானொலி மன்றங்கள் (அதாவது, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்டு—விவாதித்து—செயல்படும் குழுக்கள்) அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள 12,522 பஞ்சாயத்துக்களில் 12,513 பஞ்சாயத்துக்களுக்கு சமுதாய வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் கிராம வானொலி மன்றங்களை, விரைந்து அமைக்க வேண்டுமென்று கலெக்டர்களுக்குச் சமீபத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பொதுவாக, செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6-45 முதல் 7-15 வரை, விவசாய அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சிகளும், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-45 முதல் 7-15 வரை பாதுகாப்பு முயற்சிகள் பற்றிய நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படுகின்றன.

3. மாநிலத்தின் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், கிராம வானொலி மன்றங்கள் தொடங்கப்படுவதால் (சென்னை தவிர ஏனைய) எல்லா மாவட்டக் கலெக்டர்களும் தத்தம் மாவட்டங்களின் கிராம வானொலி மன்ற மாவட்ட அமைப்பாளர்களாகச் செயல்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இவ் வேலையில் மாவட்டக் கலெக்டர்களின் திட்டமிடல், அபிவிருத்தி பற்றிய தனி உதவியாளர்கள், கலெக்டர்களுக்கு உதவி செய்வார்கள். இதுபற்றிய கடிதப்போக்கு வரவுகளை கலெக்டர் அலுவலகங்களிலுள்ள அபிவிருத்திப் பிரிவுகள் கவனித்துக்கொள்ளலாம்.

4. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தத்தம் பகுதிகளில் உள்ள கிராம வானொலி மன்ற அமைப்பாளர்கள், திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கு பதிவேட்டு அறிக்கைகளையும், கேள்விகளையும் அனுப்பும்பொழுது சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கும் அதன் நகலை அனுப்ப வேண்டுமென்று அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். திருச்சி வானொலி நிலைய இயக்குநர் தாம் பெறும் கேள்விகளை, பொதுத் தன்மையானவற்றையும் அரசாங்கக் கொள்கை பற்றியவையும் என்று தேர்ந்து எடுத்து, சென்னை அரசாங்கத் தலைமை அலுவலகத்திலுள்ள கிராம நல தல நிர்வாகத்துறை, கிராம வானொலி மன்றங்களின் தலைமை அமைப்பாளருக்கு அனுப்பி வைப்பார். தலைமை அமைப்பாளர் சென்னையிலுள்ள அரசாங்கத்துறை தலைமை அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, விடைகளைப் பெற்று திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கு அனுப்ப ஏற்பாடு செய்வார். குறிப்பிட்ட மாவட்டங்கள் பற்றிய கேள்விகளை திருச்சி வானொலி நிலைய இயக்குநர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டர்களுக்கு அனுப்பி வைப்பார். அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பதில் பெற்று திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கு, ஒலிபரப்பில் சேர்த்துக்கொள்ள அனுப்பி வைப்பார்கள்.

5. கிராம வானொலி மன்றங்கள் நன்கு செயல்படும்படி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், கல்வி வளர்ச்சி அதிகாரிகளும் தவறாமல் பேணுவதைப் பார்த்துக்கொள்வதற்கு கலெக்டர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. கலெக்டர்களும், தம்முடைய சுற்றுப் பயணத்தின்போது, கிராம வானொலி மன்றங்களுக்கு விஜயம் செய்து, தம் ஆலோசனைகளை சென்னை, கிராம நல-தல நிர்வாகத்துறை பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநருக்கு அனுப்பலாம்.

6. சமுதாய வானொலிப் பெட்டிகள் பழுதாகியிருக்கும் போது, கல்வி வளர்ச்சி அதிகாரிகள் கலெக்டருக்கு நேரடியாக அறிவிப்பதுடன், அதன் நகலை சென்னை சேப்பாக்கத்திலுள்ள பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த தலைமை வானொலி அதிகாரிக்கு (Chief Radio Officer) அனுப்பி வைக்கும்படி, கலெக்டர் அவர்களுக்கு விளக்கமளிக்கலாம். கலெக்டர்கள் மாதந்தோறும் இத்துறைக்கு (கிராம நல-தல நிர்வாகத் துறைக்கு) அனுப்பி வைக்கும் அறிக்கையில், தம் மாவட்டத்தில் கிராம வானொலி மன்றங்கள் செயல்படும் வகை குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதிச் சேர்க்கலாம்.

7. கிராமத் தொண்டர் படைத் திட்டம் தொடங்கப்பட்ட பின்பு, கிராம வானொலி மன்றங்கள் பயனுள்ள வகையில், செய்தி விளக்கப் பணிக்கு ஒரு சிறந்த சாதன மாகச் செயல்படவும், கிராம மக்களிடையே 'பாதுகாப்பு முயற்சி'களுக்கு உற்சாகமான ஈடுபாடு ஏற்படுத்தவும எல்லா வகையான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று கலெக்டர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

8. கிராமத் தொண்டர் படை புரியும் சிறந்த பணி குறித்து இத்துறை (கிராம நல-தல நிர்வாகத்துறை) வெளியிடும் மாத இதழான 'கிராம நல'த்தின் மூலம் (பஞ்சாயத்து அரசிதழில்) விளக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, தங்களது தனி உதவி யாளர்கள் (திட்டம் வளர்ச்சி) அபிவிருத்தி மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள் இல்லாவிடில், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் ஆகியோர்களில் பத்திரிகை அனுபவம் வாய்ந்தவர்களை கௌரவ நிருபராக நியமித்து, அவர்கள் மூலம், தொண்டர் படையின் சிறந்த பணியையோ, அல்லது பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களைப்பற்றியோ உபயோகமுள்ள செய்திகளைத் தயாரித்து மாதந்தோறும் "கிராம நலம்" ஆசிரியருக்கு அனுப்ப, மாவட்டக் கலெக்டர்கள் வழிசெய்ய வேண்டும். இதற்காக பணம் எதுவும் தரப்படமாட்டாது. இதற்கென்று தனியாக அதிகாரிகள் வட்டாரங்களில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டியதில்லை. கிராமத் தொண்டர் படையின் நடவடிக்கைகள் பற்றி ஒவ்வொரு மாதத்திலும் கடைசி புதன்கிழமையன்று ஒலிபரப்புவதாக உத்தேசிக்கப் பட்டுள்ள "செய்தித் தாள்" என்ற புதிய நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளும் வகையில், இதை திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கும் அனுப்பலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 12—3—1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 551.)

## பஞ்சாயத்து யூனியன்களில் படக்காட்சிக் கருவிகளை வைத்திருக்கவும், பயன்படுத்தவுமான விளக்கங்கள்.

## [Panchayat Radio Maintenance Organisation—Cinema Trailor Units—Maintenance and Utilisation in Panchayat Unions—Instructions—Issued.]

## G. O. Ms. No. 404, R.D. & L.A., dated 21—2—63.

வட்டாரங்களிலுள்ள படக்காட்சிக் கருவிகள் முழு அளவுக்கு நன்குகப் பயன்படுத்தப்படவில்லையென்றும் அவற்றுள் பல, நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் உள்ளன என்றும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே படக்காட்சிக் கருவிகள் நன்கு பயன்படும் வகையில், இப்பொழுது இருக்கும் ஏற்பாடுகளை மாற்றவேண்டிய அவசியத்தை அரசாங்கம் பரிசீலனை செய்தது. இப்படக்காட்சிக் கருவிகளை ஒழுங் காகப் பயன்படுத்தப்படவும் பஞ்சாயத்து யூனியன்களில் அவ்வப்போது படங்களைக் காட்டவும் ஆன பொறுப்பை "பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனத்"திடம் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று யோசனை கூறப்பட் டுள்ளது. மேற்படி யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்தபின் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது. இவ் வாணைகள் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் தேதி யிலிருந்து அமுலுக்கு வரும்.

2. பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள படக்காட்சிக் கருவி களின் ஒழுங்கான உபயோகத்திற்கும், பராமரிப்பிற்கும் "பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்" பொறுப் பாகும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது. இப்போதைக்கு இம்மாநிலத்தின் பல்வேறு பஞ்சாயத்து யூனியன்களிலும் 54 படக்காட்சிக் கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. செங்கற்பட்டு, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, கடலூர், விருத்தாசலம், திருக்கோவிலூர், சிவகெங்கை, சிவகாசி, தர்மபுரி ஆகிய ரெவின்யூ கோட்டங்களுக்கு, ஒரு கோட்டத் திற்கு இரண்டு வானொலி மேற்பார்வையாளர் பதவிகள் வீதமும், ஏனைய ரெவின்யூ கோட்டங்களுக்கு, ஒரு கோட் டத்திற்கு ஒரு வானொலி மேற்பார்வையாளர் வீதமும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 46 ரெவின்யூ கோட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 55 வானொலி மேற்பார்வையாளர்களும் வட்டாரங்களில் இப்பொழுது இருக்கின்ற படக்காட்சிக் கருவிகளும் அநேகமாக ஒவ்வொரு வானொலி மேற்பார்வையாளருக்கும் ஒரு படக்காட்சிக் கருவி என்ற வகையில், இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டபடி, ரெவின்யூ கோட்டங்களுக்கு விநியோ கிக்கப்பட வேண்டும். பிராந்திய வானொலி அதி காரி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் படங்களைக் காட்டுவதற்காக படக்காட்சிக் கருவியை அனுப்பி வைப்பதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பார். அவ் வேலைத்திட்டத்தின் பிரதியை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அனுப்பி வைப்பதுடன் வானொலி மேற்பார்வையாளர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ரெவின்யூ கோட்ட அதிகாரி, மாவட்ட விளம்பர அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைப்பார். வானொலி மேற் பார்வையாளர், அவர் பொறுப்பில் விடப்பட்டுள்ள படக் காட்சிக் கருவியின் ஒழுங்கான பராமரிப்பிற்கும், பிராந்திய வானொலி அதிகாரி தயாரித்து அனுப்பிய வேலைத்திட்டத் தின்படி படங்களைக் காட்டுவதற்கும் பொறுப்பாளியாவார். படக்காட்சிக் கருவி இயக்குவோர் (Cinema Operators) பிராந்திய வானொலி அதிகாரி, வானொலி மேற்பார்வை யாளர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையிலும் தொழில் நுட்ப மேற்பார்வையிலும் பணி புரிவார். ரெவின்யூ



கோட்ட அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், கல்வி வளர்ச்சி அதிகாரி, ஆகியோர் பிராந்திய வானொலி அதிகாரி தயாரித்து அனுப்பிய வேலைத்திட்டத்தின்படி படக்காட்சிக் கருவிகள் இயங்குகின்றனவா என்று பார்த் துக்கொள்ள வேண்டும். படக்காட்சிக் கருவி ஒரு பஞ்சாயத் திலிருந்து மறு பஞ்சாயத்திற்கு செல்லும்போது வானொலி மேற்பார்வையாளரின் மேற்பார்வை எல்லைக்கு உட்பட்ட அடுத்தடுத்துள்ள பஞ்சாயத்துக்களுக்கு—போக்கு வரவுப் பயணங்கள் மிகாமல் இருக்கும் வகையில், அல்லது நீண்ட பயணங்கள் மேற்கொள்ளாமல் இருக்கும் வகையில் செல்லவேண்டும். படக்காட்சி ஞாயிற்றுக் கிழமை உட்பட, ஒரு நாளைக்கு ஒரு பஞ்சாயத்து வீதம் காட்டப்பட வேண்டும். படக்காட்சிக் கருவி ஒரு பஞ்சாயத் திலிருந்து அடுத்த பஞ்சாயத்துக்குச் செல்ல ஆகும் செலவுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பஞ்சாயத்துத் தலைவர் கள் செய்வார்கள். மேலும் அவர்கள், தங்கள் பஞ்சாயத் தில் படம் காட்டப்படுவது குறித்து, தண்டோரா அல்லது வேறு வழக்கமான முறைகளில், காட்டப்படும் படத்தை மிகத்திரளான மக்கள்கூடி பார்க்குமாறு, நன்கு விளம்பரப்படுத்த வேண்டும். படக்காட்சியைத் தருவிப்ப தற்கு பஞ்சாயத்துக்களுக்காகும் செலவுகளை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சமூகக் கல்வி நிதிகளிலிருந்து ஈடு செய் வார். பஞ்சாயத்துக்கள் இச்செலவை முதலில் ஏற்கின்ற நிலையில் அதன் நிதிநிலை இல்லாத பட்சத்தில், செஸ் அனுமதி முதலியன அனுமதிக்கப்படும்பொழுது, செலவை சரிக்கட்டிக்கொள்ளும் வகையில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இச்செலவை ஏற்றுச் செய்யலாம். கருவியை இயக்கும் யந்திரத்திற்கு வேண்டிய பெட்ரோல், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால், ஜீப் வண்டிகள் உபயோகத்துக்கு அவர்களுக்கு மாதத்திற்கு 325 லிட்டர் என்று வழங்கப்படும் பெட்ரோலில் இருந்து கொடுக்கப்படும். படக்காட்சி கருவி இயக்குவோரை நிர்வாக மேற்பார்வை செய்யும் பல்வேறு அதிகாரிகள், சம்பளம், படிகள் அளிக்கப்படும் முறை ஆகியவற்றில் இவ்வாணை எந்த மாற்றத்தையும் செய்யாது.

3. பிராந்திய வானொலி அதிகாரிகள், தம் பிராந்தியத் தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள படச் சுருள்களைக் கணக்கெடுத்து—அவற்றை மாற்றி மாற்றி அப்பிராந்தியத்திலுள்ள படக் காட்சிக் கருவிகளுக்கு விநியோகிப்பதற்கான பதிவேடு ஒன்றை வைத்திருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மேலும் அவர்கள் தமிழ்நாடு அரசாங்க செய்தித்துறை இயக்குநரிடமிருந்து புதிய படச்சுருள்களைப் பெற்று, விநி யோகிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். பிராந்திய வானொலி அதிகாரிகள் வைத்திருக்கும் பதிவேட்டில், செய்தித்துறை இயக்குநரிடமிருந்து புதிய படச்சுருள் பெற்ற தேதி, தம் பிராந்தியத்திலுள்ள பல்வேறு படக்காட்சிக் கருவிகளுக்கும் விநியோகித்த தேதி, இறுதியாக செய்தித் துறை இயக்குநருக்குத் திருப்பி அனுப்பிய தேதி ஆகியவை குறிக்கப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகள் முறையே நடைபெறுமாறு அவர் பார்த்துக்கொள்வதுடன் வானொலி மேற்பார்வையாளர்களின் வானொலிப்பெட்டிகள் படக்காட்சிக் கருவிகள் ஆகியவற்றின் ஒழுங்குப் பராமரிப்பு —படக்காட்சிக் கருவி இயக்குவோரின் வேலைகள், பட விநியோகம்—ஆகியவை குறித்து, பதினைந்து நாளுக்கு ஒரு முறை அனுப்பும் கால முறை அறிக்கை ஒன்றைத் தயாரித்து தலைமை வானொலி அதிகாரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். தலைமை வானொலி அதிகாரி அவ்வறிக்கை களை ஆராய்ந்து ஓர் ஆய்வறிக்கை தயாரித்து, கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்க வேண்டும். அவர் பிராந்திய வானொலி அதிகாரிகளின் செயல் முறையை ஒருங்கிணைத்து, படச் சுருள்கள் எந்தப் பகுதியிலும் நீண்டநாள் தங்கியிருக் காதவாறு அமைய, படச்சுருள் வழங்குதல்—விநியோ கித்தல் பற்றி செய்தித்துறை இயக்குநரைக் கலந்தாலோ சிப்பார். பஞ்சாயத்திலிருந்து பஞ்சாயத்துக்கு படக்காட்சிக் கருவிகள், திட்டமிட்டபடி எந்த மாற்றமுமின்றி போய்க் கொண்டே இருக்குமானால், ஒரு படம் அல்லது படக்காட்சிக் கருவி எந்தப் பஞ்சாயத்தில் இருக்கிறதென்றறிவதற்கு எளிதாக இருக்கும். படக்காட்சிக் கருவி, எக்காரணம் கொண்டும் ஒரு நாளுக்கு மேல் ஒரு பஞ்சாயத்தில் தங்க அனுமதிக்கக்கூடாது.

### இணைப்பு

மாவட்ட வாரியாக, 46 ரெவின்யூ கோட்டங்களிலும் 54 படக்காட்சிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விவரம் வருமாறு :

**செங்கற்பட்டு மாவட்டம் :**—சைதாப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கற்பட்டு (2), திருவள்ளூர்.

**வடார்க்காடு மாவட்டம் :**—திருவண்ணாமலை (2), செய்யாறு, இராணிப்பேட்டை (3), திருப்பத்தூர்.

**தென்னார்க்காடு மாவட்டம் :**—திண்டிவனம், கடலூர் (2), விருத்தாசலம் (2), திருக்கோவிலூர் (2).

**தஞ்சாவூர் மாவட்டம் :**—பட்டுக்கோட்டை, கும்பகோணம், தஞ்சாவூர், மாயூரம், மன்னார்குடி, நாகப்பட்டினம்.

**மதுரை மாவட்டம் :**—மதுரை, திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி.

**இராமநாதபுரம் மாவட்டம் :**—இராமநாதபுரம், சிவகெங்கை, தேவகோட்டை, சிவகாசி (2).

**திருநெல்வேலி மாவட்டம் :**—தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி, சேரன்மாதேவி.

**கன்யாகுமரி மாவட்டம் :**—பத்மனாபபுரம்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**—கரூர், முசிறி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை.

**சேலம் மாவட்டம் :**—ஓசூர், தர்மபுரி (2), சேலம், நாமக்கல், சங்கரி துர்க்கம்.

**கோயம்புத்தூர் மாவட்டம் :**—ஈரோடு, கோபிசெட்டி பாளையம், கோயம்புத்தூர், பொள்ளாச்சி.

**நீலகிரி மாவட்டம் :**—நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின், 21-2-63 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் : 404.)

## விதிகள்—1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—பஞ்சாயத்துக்கள், லேசென்சுகள், அனுமதிகள் முதலியன வழங்குதலை ஒழுங்குபடுத்தல் அல்லது தடைசெய்தல் பற்றிய விதிகளில் திருத்தம்.

## [Rules—Madras Panchayats Act, 1958—Rules regarding prohibition or regulation of grant of licences and permissions by panchayats—Amendment confirmed.]

### G. O. No. 2814, R.D. & L.A., dated 23—12—62.

பஞ்சாயத்துக்கள் லேசென்ஸ்கள், அனுமதிகள் முதலியன வழங்குலை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடைசெய்தல் பற்றிய விதிகளுக்குத் திருத்த வரைவு, செய்தி அறிவிப்பாகவும், ஆய்வுக்காகவும், 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பாகம் V-ல் வெளியிடப்பட்டது. எந்த ஒரு ஆட்சேபனையும், அல்லது ஆலோசனையும் அது விஷயத்தில் கூறப்படாமையால் அத்திருத்தம் இதன்மூலம் உறுதி செய்யப்படுகிறது.

### இணைப்பு

### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், பிரிவு 113, துணைப் பிரிவுகள் (1), (2) ஆகியவற்றில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதியிட்ட 1962-ன் அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண்: எ123(a)-டன் வெளியிடப்பட்ட பஞ்சாயத்துக்கள் லேசென்ஸ்கள், அனுமதிகள் முதலியன வழங்குதலை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல் பற்றிய விதிகளுக்கு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், இதன் மூலம் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்கிறார்.

### திருத்தம்

மேற்குறித்த விதிகளில் 12-வது விதியின் துணைவிதி (1)-க்குப் பதில் கீழ்க்கண்ட துணைவிதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அதாவது—

"(1) ஒவ்வொரு நகரப் பஞ்சாயத்தும், மாவட்ட சுகாதார அதிகாரி, நகரமைப்பு இயக்குநர் (Director of Town Planning) ஆகியோரின் அங்கீகாரத்துடன், நகரத்தில் குறிப்பிட்ட பகுதிகளை தொழில் நடத்துதற்கென்று தனியே வைத்திருக்கவேண்டும்".

(கிராம நல-தல நிர்வாகத்துறையின், 23-12-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 2814.)

---

## காந்திஜி நூல்கள் வெளியீட்டுக் குழுவினர் தமிழில் வெளியிட்டுள்ள "மகாத்மா காந்தி நூல்கள்"—என்ற நூலின் ஒன்பதாவது பாகத்தை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் உபயோகத்திற்கு வாங்க ஆகும் செலவு அனுமதி.

## [Books and Publications—Books entitled "Complete Works of Mahatma Gandhi" in Tamil—Published by Gandhiji's Works Publication Committee—Ninth volume—Purchase for the use in Panchayat Union Councils—Expenditure—Sanctioned]

### G. O. No. 284, R.D. & L.A., dated 5—2—63.

சென்னை, காந்திஜி நூல்கள் வெளியீட்டுக் குழுவினர், தமிழில் வெளியிட்டுள்ள "மகாத்மா காந்தி நூல்கள்" ஒன்பதாவது பாகத்தை, 2794 பிரதிகள் வாங்குவதற்கு, விற்பனை வரி, இதர செலவுகள் நீங்கலாக 20,955 ரூபாய்க்கு (ரூபாய் இருபதாயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து மட்டும்) மேற்படாமல், செலவு செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்நூலின் விலை ரூ. 7 50 ந.பை. ஏற்கெனவே எட்டு பாகங்கள் வழங்கப்பட்டுள்ள, இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 254 பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும், ஒவ்வொரு மன்றத்துக்கும் 11 பிரதிகள் வீதம் வழங்கப்படும்.

மேற்படி பிரதிகளில் ஒன்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் அலுவலகத்திற்கும், மற்றவை கிராம சேவகர்க்குமாக வழங்கப்படுகின்றன. கிராம சேவகர்க்கு புத்தகங்களை வழங்கும்பொழுது, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் அலுவலகத்தில், அதற்கென உள்ள பதிவேட்டில், பெற்றுக் கொண்டதற்கான கையெழுத்து வாங்கிக்கொள்ள வேண்டும். கிராம சேவகர் இப்புத்தகங்களைத் தாம் படிப்பதுடன், கிராமத் தலைவர்கள், படிக்கத் தெரிந்த பொதுமக்கள் ஆகியோரிடையே இந்நூல்கள் பிரபலமடையும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அவற்றை அவர்களுக்குக் கொடுத்து படிக்கத்தூண்ட வேண்டும். பத்து கிராம சேவகர்க்குக் குறைந்த அளவுள்ள, பஞ்சாயத்து யூனியன்களில் அல்லது வட்டாரங்களில், மீதியிருக்கும் புத்தகங்களை, கிராம சேவிகைகளிருப்பின் அவர்களிடமும், அல்லது சமூகக் கல்வி அமைப்பாளர்களிடமும் மேற்குறித்தபடி பெற்றுக்கொண்டதற்கான கையொப்பம் பெற்று, மேற்குறித்தவாறு பயன்படுத்தப்பட வழங்க வேண்டும்.

புத்தகங்களை உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி), சென்னை-2 என்ற முகவரிக்கு நேராக அனுப்பும்படி, காந்திஜி நூல்கள் வெளியீட்டுக்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தபால் செலவும், கட்டி அனுப்புகின்ற செலவும் வெளியீட்டாளர்களையே சார்ந்ததாகும். உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) இந்நூல்களைப் பெற்றதும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

முதற்பாராவில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைப் பெற்று, காந்திஜி நூல்கள் வெளியீட்டுக் குழுவினரின் விலைப்பட்டியல்படி (Bill of Cost) பணத்தை அவர்களுக்குச் செலுத்திடும்படி, உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின், 5-2-63 தேதியிட்ட அரசாங்க ஆணை 284-ன் சுருக்கம்.)



## பஞ்சாயத்துக்கள் பணியாளர் வருடாந்தர விவர அறிக்கை சமர்ப்பித்தல்—நிறுத்தம்.

## Establishment—Panchayats—Annual Establishment Returns—Discontinuance of submission.

### G. O. Ms. No. 373, R. D. and L. A., dated 19th February 1963.

தல நிர்வாகத்துறையின் 1956-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1356-ன் 3 (iii) (a) பாராவில், பஞ்சாயத்துக்கள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் 15 தேதிக்குள் தம் பணியாளர் வருடாந்தர விவர அறிக்கையை மாவட்டக் கணக்குத் தணிக்கை அதிகாரிக்கு (District Audit Officer) அனுப்பிவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையில் வரையறுக்கப்பட்டுள்ள பிற அறிக்கைகளைக் கொண்டு பணியாளர் வருடாந்தர விவர அறிக்கையின் செயல் ஈடு செய்யமுடியும் என்பதாலும், பஞ்சாயத்து பணியாளர் பற்றிய விவரங்களை பஞ்சாயத்துக்களின் வருடாந்தர தணிக்கையின் போது திரட்டமுடியும் என்பதாலும், நிதித்துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 867-ல் இடப்பட்ட ஆணைகளின் ஒப்புமைகளைக் கொண்டு, தல நிர்வாகத்துறையின் மேற்படி ஆணையில் வரையறுக்கப்பட்டுள்ள பணியாளர் வருடாந்தர விவர அறிக்கை சமர்ப்பிப்பதை இனி நிறுத்திவிடலாம் என்று தல நிதிக்கணக்குகள் ஆய்வாளர் யோசனை கூறியுள்ளார். அவருடைய இந்த யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, இனி பஞ்சாயத்துக்கள் பணியாளர் வருடாந்தர விவர அறிக்கைகளை கணக்குத் தணிக்கை அதிகாரிக்கு அனுப்பிவைக்கத் தேவையில்லை என்று ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 373.)

---

## பஞ்சாயத்து யூனியன்கள் அதிகாரத்தைச் செலுத்துதல்—தனி நிதி வைத்திருத்தல் பற்றிய விளக்கம்.

## Panchayats—Exercise of powers by Panchayat Union Councils—Maintenance of separate fund—Instructions issued.

### G. O. Ms. No. 334, R.D. and L.A., dated 13th February 1963.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 11-வது பிரிவு (2) துணைப் பிரிவில் கூறப்பட்டுள்ள விதிகளின்கீழ், ஒரு பஞ்சாயத்து யூனியனின் எந்தப் பகுதியிலேனும் பஞ்சாயத்து இல்லை என்றால் வரி விதிப்பு அதிகாரம், கடமைகளைச் செய்தல், வேலைகளை நடத்துதல், பஞ்சாயத்தின் வரவுகளை வரவு வைத்தல், செலவுகளை பற்று வைத்தல் முதலியன உட்பட எல்லா அதிகாரங்களையும், பஞ்சாயத்து யூனியன் மன்றம் செலுத்தவேண்டும். பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தின் அத்தகைய பகுதியின் கடமைகளையும், செயல்களையும், அதிகாரங்களையும், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரும், கமிஷனரும், முறையே பஞ்சாயத்துத் தலைவர், நிர்வாக அதிகாரி ஆகிய நிலைகளில் இருந்து பயன்படுத்துவார்கள். இதுமாதிரி விஷயங்களில், பஞ்சாயத்து யூனியன் மன்றம் பஞ்சாயத்துக்கென்று தனியாக நிதி வைத்திருப்பதுடன் சட்டத்தின் 137-வது பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ள வருவாய்களை அதில் வரவு வைக்க வேண்டும். பஞ்சாயத்து நிதியிலிருந்து ஆகின்ற செலவுகள், சட்டத்தில் வகை செய்துள்ளபடியும், அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படியும் (சட்டத்தின் 138, 139, 140, 142, 143 ஆகிய பிரிவுகளில் வகை செய்துள்ளபடி) செய்யப்பட வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 334.)

---

## பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின்கீழ் வேலை செய்யும் பணியாளர்களின் அகவிலைப்படி வீதம்—மறு ஆய்வு.

## Allowances—Dearness Allowance—Panchayat Union Councils—Revised—Orders issued.

### G. O. Ms. No. 383, R. D. and L. A., dated 20th February 1963.

1. மாதம் ஒன்றுக்கு 150 ரூபாயும் அதற்கு மேலும் 400 ரூபாய் வரையிலும் பெறுகின்ற அரசாங்கப் பணியாளர்களுக்கும், தல, ஸ்தாபனப் பணியாளர்களுக்கும் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் அகவிலைப்படி வீதங்களை உயர்த்துவதென்று அரசாங்கம் முடிவுசெய்தது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2045-ல்

அரசாங்கப் பணியாளர்க்கு உயர்த்தப்பட்ட அகவிலைப் படி வீதத்தை அனுமதித்து அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து ஊதியம் பெறுகின்ற பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின்கீழ் பணிபுரியும் (கல்விப் பணியாளர்களைத் தவிர) ஏனைய பணியாளர்கள் விஷயத்தில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப் படுகின்றன.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 57-வது பிரிவு, (3) துணைப் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் பணி புரியும் கல்விப் பணியாளர் நீங்கலாக ஏனைய பணியாளர்களின் அகவிலைப்படி வீதத்தை 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து அமுலாகும்படி (அதாவது, 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதி அல்லது அதற்குப் பின் பெறுகின்ற 1963-ம் ஆண்டு ஜனவரி மாத சம்பளத்தில்) கீழ்க்கண்டவாறு திருத்தி ஆணை பிறப்பிக்கிறது :—

| சம்பளம். | அகவிலைப்படி. |
|---|---|
| 150 ரூபாயும் அதற்கு மேலும் 300 ரூபாய்க்குட்பட்டு .. .. | 30 ரூபாய். |
| 300 ரூபாயிலிருந்து 320 ரூபாய் வரை | 330 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் அமைகின்ற தொகை. |
| 321 ரூபாயிலிருந்து 390 ரூபாய் வரை | 10 ரூபாய். |
| 391 ரூபாயும் அதற்கு மேலும் .. | 400 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் அமைகின்ற தொகை. |

3. இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப்படி வீத உயர்வினால், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் வரவுசெலவுத் திட்டத்தில், பற்றுக்குறை ஏதாவது ஏற்படுமானால், அதை ஈடு செய்ய, 1962-63 ஆண்டுக்கு, தேவைப்படும் அளவு, மாநில நிதிகளிலிருந்து மானியங்கள் வழங்கப்படும்.

4. 150 ரூபாய்க்குக் கீழ் சம்பளம் பெறும் தல ஸ்தாபன பணியாளர்க்கு 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதியிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப்படி வீத உயர்வினால், வரவு-செலவுத் திட்டத்தில் ஏதாவது பற்றுக்குறை ஏற்படுமானால் அதை ஈடு செய்ய 1962-63 ஆண்டுக்கு தேவைப்படும் அளவு, மாநில நிதிகளிலிருந்து மானியங்கள் வழங்க அரசாங்கம் ஏற்கெனவே உறுதியளித்துள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் இம் மானியங்களைப் பெறுவதற்கான நடைமுறைகளையும், விதிகளையும் பற்றிய விளக்கங்கள், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2651-ல் வெளியிடப்பட்டுள்ளன. அதே விளக்கங்கள் இப்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ள அகவிலைப்படி வீத உயர்வுக்கு மானியங்களைப் பெறும் விஷயத்திலும் பின்பற்றவேண்டும். மேற்படி 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதிய ஆணையில் வரையறுக்கப்பட்டுள்ள நமூனாவில் மானியங்களைக் கேட்கும் பொழுது, 150 ரூபாயிலிருந்து 400 ரூபாய் வரை சம்பளம் பெறும் பணியாளரின் அகவிலைப்படி வீத உயர்வினால் ஏற்படுகின்ற செலவையும் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். அதற்குத் தக்கவாறு அந்த நமூனா திருத்தப்பட்டு இவ்வாணையின் * இணைப்பில் தரப்பட்டுள்ளது. மற்ற விதிகளில் மாற்றமில்லை. அகவிலைப்படி வீத உயர்வுக்கான மானியத்திற்கு திருத்தி அமைக்கப்பட்ட நமூனாவில் ஒரே மனுவைத்தான் அனுப்பவேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 388.)

* இவ்வாணையின் இணைப்பு இங்கு வெளியிடப்படவில்லை. ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அரசாங்க ஆணையில் அவ்விணைப்பைக் காணலாம்.

---

## தல ஸ்தாபனங்களில் வரவேற்பளித்தல், அடிக்கல் நாட்டுதல் முதலிய விழாக்களுக்கு அதிகமாகச் செலவிடுவதில் சிக்கனம்.

## [Expenditure—Local Bodies—Incurring of Extraordinary charges—Economy in expenditure on ceremonies connected with presentation of welcome addresses and laying of foundation stones, etc.—Instructions issued.]

### G.O. Ms. No. 425, R.D. and L.A., dated 23rd February 1963.

தல நிர்வாகத் துறையின் 1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1742, 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 540, 1961-ம் ஆண்டு மே மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1384—ஆகியவற்றில் தல ஸ்தாபனங்கள் தம் பொது நிதியிலிருந்து எவ்வெவ்வற்றுக்கு உயர்ந்த அளவு எவ்வளவு செலவிடலாம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொருள்களின் விலை அதிகமாக உள்ள இன்றைய நிலையில், மேற்குறிப்பிட்ட ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகைகளுக்குட்பட்டு எந்த நிகழ்ச்சியையும் நடத்துவது முடியாததாக உள்ளது என்று சில நகர மன்றங்கள் எடுத்துக் கூறியுள்ளன.



ஆகவே அனுமதிக்கும் தொகைகளின் வீதத்தை உயர்த்தும்படி அவை கேட்டுக் கொண்டுள்ளன. இவ்விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்தது. இன்றைய தேசிய நெருக்கடி நிலையில், செலவினங்களின் தொகைகளை உயர்த்துகின்ற மறு ஆய்வு எதையும் செய்யத் தேவையில்லை என்றும், தேவையானால், தேசிய நெருக்கடி நிலை நீங்கியதும் இது விஷயத்தை கவனிக்கலாம் என்றும் அரசாங்கம் கருதுகிறது. மேலும், இன்றைய தேசிய நெருக்கடி நிலையில், செலவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது மிக அவசியத் தேவை என்பதால், புகழ்பெற்ற பிரமுகர்களுக்கு வரவேற்பளித்தல், அடிக்கல் நாட்டுதல், பொதுக் கட்டடங்கள் திறந்து வைத்தல் முதலியவை சம்பந்தப்பட்ட விழாக்கள், வரவேற்பிதழ், அழைப்பிதழ்கள் அச்சிடல், தபால் செலவு, மாலைகள் முதலிய சிறு செலவுகள் ஆகியவை கண்டிப்பாக மிக மிகக் குறைந்த அளவுக்கு செய்யப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் வருடம் பிப்ரவரி மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 425.)

---

## பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர் பதவி பற்றிய விளக்கம்.

## [Act—Madras Act 27 of 1961—Membership of Panchayat Union Council—Clarification issued.]

### (Memorandum No. 206417, R.D. and L.A., dated 22nd January 1963.)

திருத்தப்பட்ட 1960-ம் ஆண்டு, தமிழ்நாட்டுச் சட்டம் 17, பிரிவு 2-ல் " ஒரு குறித்த காலத்திற்கு பஞ்சாயத்துத் தலைவர் " என்கின்ற தொடர், உதவித் தலைவர், அல்லது பஞ்சாயத்தின் தற்காலிகத் தலைவர் ஆகியோரை, தலைவருடைய பணியை உதவித் தலைவர் அல்லது ஒரு உறுப்பினர் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 34-வது பிரிவின்கீழ் ஏற்றிருக்கும்பொழுது, அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடுமா, அவ்வாறாயின் இத்தகைய உதவித் தலைவர் அல்லது தற்காலிகத் தலைவர் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளலாமா என்கின்ற பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 34 (1) பிரிவு, பஞ்சாயத்துத் தலைவரின் இடம் காலியாக இருக்கும்போது, பஞ்சாயத்துத் தலைவர்களுடைய கடமைகளை, புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்கும்வரை, உதவித் தலைவர் ஏற்றுச் செய்ய வகை செய்கிறது. ஆகவே, இவ்வாறு தலைவர் பதவியிலுள்ள உதவித் தலைவர் " குறித்த காலத்திற்கு பஞ்சாயத்துத் தலைவர்" ஆக மாட்டார். வேறு வகையாகக் கூறுவதாயின், அவர் உதவித் தலைவராக இருந்துகொண்டு, காலியாக இருக்கின்ற தலைவருடைய கடமைகளைச் செய்கிறார். ஆகவே, 1961-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 27-ல் திருத்தப்பட்ட 1960-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 17-ன் பிரிவு 2 (1) (A) (i)-ல் கொடுக்கப்பட்ட பொருள்படி டீ உதவித் தலைவர், பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர் ஆகும் வகையில் " குறித்த காலத்திற்குப் பஞ்சாயத்து தலைவர் " என்று கூறப்பட மாட்டார்.

3. இரண்டாவது பாராவில் விளக்கப்பட்ட நிலை, தற்காலிகத் தலைவருக்கும் பொருந்துவதாகும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 206417.)

---

## பஞ்சாயத்து யூனியன்கள்

## உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகள், மதிய உணவுக் குழுக்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மானியங்கள் பற்றிய பதிவேடு.

## [Accounts—Panchayat Unions—Payment of Grants to Aided Elementary Schools and Midday Meals Committees—Opening of a register—Ordered.]

### (Memorandum No. 264231, R.D. and L.A., dated 19th February 1963.)

இப்பொழுது, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் மதிய உணவுக் குழுக்களுக்கும் வழங்கப்படும் மானியங்கள் பற்றிய பதிவேடு எதுவும் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் வரையறுக்கப் படவில்லை. அத்தகைய பதிவேடு இல்லாமையால் இருமுறை மானியம் வழங்காமல் பார்த்துக்கொள்ளவும், வழங்கப்படும் மானியங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரியின் அனுமதி பெற்ற தொகையுடன் ஒத்திருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொள்ளவும் முடியவில்லை. ஆகவே, தல நிதிக் கணக்கு ஆய்வாளர், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் வைத்திருக்க இதற்கென ஒரு பதிவேடு வரையறுக்கப்படலாம் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

2. அரசாங்கம், தல நிதிக்கணக்கு ஆய்வாளரின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் மதிய உணவுக் குழுக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அளிக்கின்ற உதவி மானியங்கள், பதிவேடு, இவ்வறிக்கையின் இணைப்பில் * குறிப்பிட்ட அமைப்பின்படி வைத்திருக்க ஆணையிடுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 264231.)

* இவ்வறிக்கையின் இணைப்பு இங்கே தரப்படவில்லை.

## தற்காலிக சமூக நலப் பணியாளர் பதவிகளை 1964-ம் வருடம் பிப்ரவரி மாதம் 29-ம்தேதி வரை நீடித்து அனுமதி.

## [Establishment—Temporary Social Welfare Workers—Continuance up to 29th February 1964—Sanctioned.]

### (G.O. Ms. No. 408, R.D. and L.A., dated 21st February 1963.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு, மார்ச்சு மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 501-ல், 238 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்திற்கு இருவர் வீதம் 476 சமூக நலப் பணியாளர் பதவிகளை 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை நீடித்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 963-ல், 1962-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை, மீதியுள்ள 135 வட்டாரங்களுக்கும் ஒரு வட்டாரத்திற்கு இருவர் வீதம் 270 சமூக நலப் பணியாளர்கள் பதவிகள் தோற்றுவிக்க அனுமதிக்கப்பட்டது.

2. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 69-ல், அவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 171 வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு இருவர் வீதம் 342 சமூக நலப் பணியாளர் பதவிகளை 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதியிலிருந்து நிரந்தரமாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. இப்பொழுது இவ்வாணையின் இணைப்பில் * கூறப்பட்டுள்ள 202 வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு இருவர் வீதம் மீதியிருக்கிற 404 தற்காலிக சமூக நல பணியாளர் பதவிகளை 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதியிலிருந்து மேலும் ஓராண்டுக்கு அல்லது தேவையிருக்கிற வரை—இவற்றுள் எது குறைவோ அதுவரை நீடித்திருக்க அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

4. " 37 சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—தேசிய வளர்ச்சிப் பணிகளும் தல அபிவிருத்தி வேலைகளும்—I. சாதாரணமானவை—ஏ. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—(பி) வட்டாரத் தலைமை அலுவலங்கள்—(vi) சமூகநலப் பணியாளர் செலவுகள்—பணியாளரின் சம்பளமும் படிகளும் ."

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 408.)

* இணைப்பு இங்கு வெளியிடப்படவில்லை.

---

## ராணுவத்தில் அவசரகாலக் கமிஷன்கள்—அரசாங்க ஊழியர் சேர்தல்—முதுநிலை தகுதிக்கான பருவம், உறுதிப்பாடு, உயர்வு முதலியன சம்பந்தப்பட்ட வசதிகள் அளித்தல்.

## [Emergency Commissions in Regular Army—Enrolment of Government Servants—Facilities to be accorded in respect of Seniority, Probation, Confirmation, Promotion, etc.—Orders issued.]

### (G. O. Ms. No. 139, Public (Services-A) Department, dated 28-1-1963.)

இன்றைய தேசிய நெருக்கடி நிலையை ஒட்டி, இந்திய அரசாங்கம், பெரிய அளவில் அவசரக் காலக் கமிஷன்களை அளிப்பது பற்றிய செயலில் முனைந்துள்ளது. அவசர காலக் கமிஷன்களுக்கு, சிறப்பாக, மருத்துவர்கள் (Doctors), பொறியாளர்கள் (Engineers) ஆகிய தொழில் நுட்பப் பணியாளர் மிகுதியும் தேவைப்படுகின்றனர். 20 முதல் 25 வயது வரையுள்ள அரசாங்க, தற்காலிகப் பணியாளரும், நிரந்தரப் பணியாளரும்—குறைந்த பட்ச ராணுவத் தேவைகள், தாங்கள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள் இந்த கமிஷன்களுக்கு மனுச் செய்து கொள்ளத் தகுதியுடையவர்களாவார்கள். மேற்குறித்த வயது வரையறுக்கப்பட்ட அரசாங்கப் பணியாளர்கள், தேசப் பாதுகாப்பு முயற்சிக்கு உதவுகின்ற வகையில், அவசரக்கால கமிஷன்களுக்கு மனுச் செய்து கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. அவ்வாறு மனுச்செய்து கொள்வோர்களின் பணி உரிமை (Service Rights) காப்பாற்றப்பட உறுதியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மருத்துவத் துறையின் மருத்துவ அதிகாரிகள், செவிலியர் (Nurses) மற்ற கீழ்நிலைப் பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், சுகாதாரத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் தேதியிட்ட குறிப்பு : 137469-ல் தனி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பணிகளின் அவசரகாலக் கமிஷன்களில் நியமிக்கப்படும் ஏனைய பணியாளர்களின் பணி விதிகள் பற்றிய ஆணைகள் கீழே தரப்படுகின்றன.

### (1) தேர்வுப் பேட்டிக்கு (Interview) செல்வோர்க்கு பயணப்படி, தினப்படி முதலியன.

பணித் தேர்வுக் குழுவின் தேர்வுப் பேட்டி மருத்துவக் குழுவின் மருத்துவச் சோதனை, அதிகாரிகள் பயிற்சிப்



பள்ளியில் பயிற்சி ஆகியவற்றுக்கு அழைக்கப்படுவோர் மாநில அரசாங்க விதிகளின்படி, பயணப்படியும், தினசரி படியும் பெறத் தகுதியுடையவர்கள். ஆரம்ப நிலை தேர்வுப் பேட்டிகளுக்கு ஏதாவது ராணுவ நிலையத்தில் செய்யப்படும் பயணங்களும் இதில் அடங்கும்.

### (2) தேர்வுப் பேட்டிக்காகச் செல்வோர் தம்முடைய வேலைக்கு வராதிருத்தல்.

மாநில அரசாங்கப் பணியாளர்கள், தேர்வுப் பேட்டிக்கு, அல்லது மருத்துவப் பரிசோதனைக்குச் செல்ல, ராணுவ வேலைக்குச் சேரும் போது அல்லது கமிஷனில் சேரும்போது தம் பதவி வேலைக்கு வாராமலிருக்கும் அந்நிய காலத்தை சிறப்புத்தற்செயல் விடுமுறையாக (Special Casual Leave) கருதப்படும்.

### (3) அவசரக்கால கமிஷனில் பணி புரிதல் ராணுவப் பணியாகக் கருதப்படல்.

ஆறு மாத கால பயிற்சி உட்பட, அவசரகாலக் கமிஷனில் இடம் பெறும் மாநில அரசாங்கப் பணியாளர்களின் பணி, அவர்கள் பணி புரியும் முதல் துறையில் பணி விதிகள் முறைப்படுத்தப்பட, ராணுவப் பணியாகக் கருதி ஏற்கப்படும்.

### (4) பதவி உயர்வு, உறுதிப்பாடு முதலிய விஷயத்தில் பாதுகாப்பு.

மாநில பணிகள், கீழ்நிலைப் பணிகள் பொது விதி 9-ன் கீழ், ராணுவக் கடமை செய்யும் பணியாளரின் பழைய பதவியில் மறு நியமனம், முதுநிலை (Seniority), உறுதிப்பாடு, பதவி உயர்வு முதலியன பற்றிய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. இந்த விதி அவசரகாலக் கமிஷனில் இடம் பெறும் எல்லா மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் பொருந்துவதாகும்.

### (5) சம்பளம், படி முதலியன.

அரசாங்க ஊழியர்கள் பயிற்சிக் காலத்தில் அவர்களுடைய சிவில் சம்பளமும், படிகளும் பெறுவார்கள். உறைவிட வசதி, நூல்கள், சீருடை, உணவு, மருத்துவ வசதி, முதலியன உட்பட பயிற்சிக் கால செலவுகள் எல்லாவற்றையும் ராணுவத்துறை ஏற்கும். கைச்செலவுகளை பயிற்சியாளர்களே ஏற்க வேண்டும்.

அவசரகாலக் கமிஷன் காலத்தில் அவர்களுக்கு அவர்கள் பதவி நிலைக்கொப்ப, ராணுவச் சம்பளம், படி வீதங்கள் வழங்கப்படும். அவர்களின் சிவில் சம்பள வீதங்களே உயர்ந்ததாக இருக்கும் பட்சத்தில் அவை பாதுகாக்கப்படும்.

(பொதுத் துறை (பணிகள்-4) யின் 1963-ம் வருஷம் ஜனவரி மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 139-ன் சுருக்கம்.)

---

## கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கிராமத் தொழில்கள் முதலியவற்றில் கிராம சேவகர் சிறப்புப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல் குறித்த விளக்கம்.

## [Training—Grama Sevaks deputed for special training in Poultry, Bee-keeping, Village Industry, etc.—Exemption of Grama Sevaks undergoing the training—Instructions.]

### [Memorandum No. 10062, R.D. and L.A., dated 30-1-1963.]

கிராம சேவகர்கள், கீழ்க்கண்ட பயிற்சிகளுக்காக அனுப்பப்படுகின்றனர் :—

(i) காட்பாடி விவசாய நிலையத்தில் கோழிவளர்ப்புப் பயிற்சி.

(ii) மார்த்தாண்டம், ஒய். எம். சி. ஏ. கிராமிய செய்முறை காட்சி நிலையத்தில், கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்புப் பயிற்சி.

(iii) தே. கல்லுப்பட்டி கிராமத் தொழில்கள் மாதிரி நிலையத்தில், கிராமத் தொழில் பயிற்சி.

(iv) பவானி சாகர் அல்லது எஸ். வி. நகரத்தில் மறுபயிற்சி (Refresher Courses).

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பல்வேறு காரணங்களுக்காக, கிராம சேவகர்களை மேற்படி பயிற்சிகளுக்கு அனுப்புவதிலிருந்து விலக்களிக்க வண்டி, கடைசி நேரத்தில் உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) அவர்களைக் கேட்டுக்கொள்கின்றனர் என்பது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே, உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) உடனடியாக அவ்விடங்களை நிரப்ப முடியாமையால், பயிற்சி வகுப்புகள் முழு அளவுக்குப் பயிற்சியாளர் இன்றி நடை பெறுகின்றன.

2. பயிற்சிக்காக கிராம சேவகர்கள் அனுப்பப்படும் பொழுது, அவர்களை வேலையிலிருந்து விடுவிக்க பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சி பெறுவதிலிருந்து, மிகவும் விதி விலக்கான விஷயங்கள் ஒன்றிரண்டிலும், மிகவும் சரியான காரணங்களுக்காகவும் மட்டிலுமே, விலக்களிக்கும்படி கேட்கவேண்டும். இத்தகைய விலக்கு கோரும் கோரிக்கைகளை உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) அவர்களுக்கு, பயிற்சி தொடங்குவதற்கு முன்னரே, உரிய காலத்தில் அவர் அவ்விடங்களை நிரப்புவதற்கேற்ப, அனுப்பிவிட வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 10062.)

---

## கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள், மே, 1963.

வாரந்தோறும், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் மாலை 6–45 முதல் 7–15 வரை 'கிராம வானொலி மன்ற' நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அவற்றுள் 'கேள்வியும் பதிலும்' பகுதி முதலிடம் பெறுகிறது. ஏனைய பகுதி வருமாறு :—

| | | |
|---|---|---|
| 3–5–1963 .. | வெள்ளி .. | கிராமத் தொண்டர் அணியும்—தேசிய சேமிப்பும். |
| 7–5–1963 .. | செவ்வாய் .. | உயர்ரக நெல்வித்துக்கள். |
| 10–5–1963 .. | வெள்ளி .. | சேவைக் கூட்டுறவு நாட்டிற்குத் தேவை. |
| 14–5–1963 .. | செவ்வாய் .. | நரம்புச் சிலந்தியைத் தடுப்பது எப்படி ? |
| 17–5–1963 .. | வெள்ளி .. | பள்ளிச் சீரமைப்புத் திட்டம். |
| 21–5–1963 .. | செவ்வாய் .. | குறுவை நாற்றங்கால் தயாரிப்பு. |
| 24–5–1963 .. | வெள்ளி .. | கால்நடைகளின் கால், வாய் நோய், |
| 28–5–1963 .. | செவ்வாய் .. | உணவு உற்பத்தியைப் பெருக்க—காய்கறித் தோட்டம். |
| 31–5–1963 .. | வெள்ளி .. | விபத்துக்களும் முதலுதவியும்—தீவிபத்து. |

# கேள்வியும்--பதிலும்

[கேள்விதான் அறிவுக்குத் தூண்டுகோல். கிராம மக்களுக்கு அறிவு வளர்ச்சிப் பணிபுரியும் வகையில் கேள்வியும் பதிலும் நிகழ்ச்சி கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பப் படுகிறது. இதில் கேள்வி கேட்பது எப்படி என்பதை விளக்கும்படி திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டி கிராம வானொலி மன்றம் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது. இதற்கான பதிலை திருச்சிராப்பள்ளி அகில இந்திய ரேடியோ நிலையம், ஒலிபரப்பியது. சந்தேகம் தெளிந்து கொள்ள மன்ற நிகழ்ச்சியில் கேள்வி கேட்கும் உறுப்பினர்களுக்கு வானொலி நிலையத்தின் கீழ்கண்ட பதில் மிகவும் பயனுடையதாக இருக்கும் எனக் கருதி, கேட்கப்பட்ட கேள்வியையும், அதற்கு வானொலி நிலையம் அளித்துள்ள பதிலையும் கீழே கொடுத்துள்ளோம்.]

**கேள்வி :** தஞ்சை, சேலம், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்துவரும் கேள்விகள்தான் அடிக்கடி 'கேள்வி-பதில்' என்ற தலைப்பில் இடம் பெறுகிறது. தெற்குப் பகுதியிலுள்ள மன்றங்களின் கேள்விகள் இடம் பெறுவது இல்லை. எங்கள் ஊரில் (ரெட்டியார்பட்டி) இருந்து எழுதிய கேள்விகளுக்கு இது வரை பதில் தரப்படவில்லை. இனிமேல் நாங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா? இதுவரை கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வானொலி மன்ற நிகழ்ச்சியில் பதில் வராத காரணமென்ன? என்று தெரிய விரும்புகிறோம்.

**பதில் :** இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கு முன்னால் ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். நிகழ்ச்சிக்குப் புறம்பான இது போன்ற கேள்விகளை மன்றத்தின் பதிவேட்டில் எழுதி அனுப்பவேண்டாம். இருந்தாலும், மற்ற கிராம வானொலி மன்றங்களுக்கு விளக்கும் வகையில் இந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்கப்படுகிறது. 'கேள்வியும் பதிலும்' என்ற நிகழ்ச்சியில் இன்றைக்கு முந்திய கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட விஷயம் பற்றிய வரும் கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் கூறுவது என்ற நிபந்தனை இருக்கிறது. அதாவது, கடந்த 22-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஒலிப்பரப்பான "நாட்டு நலனுக்காக செலவைக் குறைப்போம்" என்ற உரையாடல் பற்றிய நிகழ்ச்சிக்கு இன்று பதில் கூறுகிறோம். இதை விடுத்து, இம்மாதம் 15-ம் தேதியோ அல்லது 12-ம் தேதியோ ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்கப்படுமேயானால் அவற்றிற்கு பதில் கொடுப்பதில்லை. இத்துடன் கேள்விகள் அந்தந்த நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்டவைகளாகவே இருக்க வேண்டும். முந்திய கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சிக்குப் புறம்பான கேள்விகள் எவையாக இருப்பினும், அவற்றின் பதிலை எதிர் பார்க்கலாகாது என்பதை நினைப்பூட்டியே வந்திருக்கிறோம்.

"கேள்வியும்—பதிலும்" என்ற நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடம் தான். சில சமயங்களில் இது 15 நிமிடங்கள் ஆகி விடுகிறது. இந்தக் குறைந்த நேரத்தில், எல்லாக் கேள்விகளுக்கும், பதில் கூறுவதென்பது முடியாத காரியமாகிறது. ஏதோ கேள்வியைக் கேட்க வேண்டும் என்ற காரணத்தால் எல்லாவிதக் கேள்விகளும் வருமானால் அவற்றிற்கு நிலையத்தில் இருந்து எப்படி பதில் எதிர் பார்க்கக்கூடும்?

நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களைத்தான் நிலையம் ஒலிபரப்ப இயலும். சிலர் கிராமங்களில் இருக்கும் தங்கள் குறைகளை எல்லாம் எழுதி, நிவர்த்திக்க நிலையத்தைப் பரிகாரம் கேட்கிறார்கள். சிலர், தல அதிகாரிகள் மேல் குற்றம் கூறி எழுதுகிறார்கள். வேறு சிலர் அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய கேள்விகளை நிலையத்திடம் கேட்கிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்வது சாத்தியமல்ல.

நிற்க, நிலையத்துக்கு எல்லா மாவட்டங்களும் ஒன்று தான். வட மாவட்டம் என்றோ தென் மாவட்டம் என்றோ எவ்வித பாகுபாடும் இல்லை. கிராம ரேடியோ மன்றங்கள் அனைத்தும் நிலையத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாக இருக்க வேண்டுமென்பதுதான் நிலையத்தின் அவாவாகும். சில மாவட்டங்களில் இருந்து கேள்விகள் அதிகம் வருகின்றன. சில மாவட்டங்களிலிருந்து குறைந்த கேள்விகள் வருகின்றன. இவற்றுள், மிகவும் முக்கியமான கருத்துள்ள கேள்விகளைப் பொறுக்கியெடுத்து அவற்றிற்கு விளக்கம் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். முன்பு கூறியபடி சாதாரணக் கேள்விகளும் நிகழ்ச்சிக்குப் புறம்பான கேள்விகளும் எந்த மாவட்டத்தில் இருந்து வந்தாலும் ஒதுக்கப்படுகின்றன. இதைத் தவிர வேறு எவ்வித பாகுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உதாரணமாக ரெட்டியார்பட்டி கிராம ரேடியோ மன்றத்தின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறோம். 26-ம் தேதி ஆகிய இன்று கேள்வியும்-பதிலும் நிகழ்ச்சியில் சென்ற 22-ம் தேதி ஒலிபரப்பிய "நாட்டின் நலனுக்காக செலவைக் குறைப்போம்" என்ற நிகழ்ச்சி பற்றிய விஷயத்திற்குப் பதிலளிக்கிறோம். ஆனால் 12-ம் தேதி ஒலிபரப்பான "சர்க்கார் தானிய சேமிப்புக் கடன்கள்" பற்றிய உரையாடல் பற்றி ரெட்டியார்பட்டி மன்றத்தின் பதிவேடு வந்துள்ளது. அதில் தானிய சேமிப்புக் கிடங்கு பற்றிய கேள்வி ஒன்றுமேயில்லை. நிற்க, சர்க்கார் தானிய சேமிப்புக் கிடங்குகளின் நன்மை யாவை? என்ற நிகழ்ச்சி பற்றிய கேள்விகளுக்கு 15-ம் தேதியே பதில் கூறப்பட்டதைக் கேட்டிருக்கலாம். இன்று சேமிப்புக் கிடங்குகள் பற்றிய கேள்விகளுக்குப் பதில் கூறி நேரத்தை வீணாக்க எப்படி இயலும்? ஆதலால் நிலையத்தைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட முக்கியமான எல்லா கேள்விகளுக்கும் பதில் கொடுக்கப்படும். சம்பந்தப்பட்ட கேள்விகளை மறு தபாலிலேயே எழுதி அனுப்புங்கள், இதுதான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்

**வெளியிடுபவர் :**
திரு எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ்.

**ஆசிரியர் !**
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department. Government of Madras.



## ஊர்க்காவல் படை துவக்க விழா

தமிழ்நாடு கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் 9-3-63-ல் ராஜாஜி மண்டப ஸ்டேடியத்தில் சென்னை நகர ஊர்க்காவல் படையை (Home Guards) ஆரம்பித்து வைத்தார். மேலே உள்ள படமும் மத்தியில் உள்ள படமும் அவ்வமயம் நடைபெற்ற காட்சிகளைச் சித்தரிக்கின்றன.



கீழே : 15-3-63-ல், சென்னை மாவட்ட விளையாட்டு அமைப்பினை (Madras District Sports Council) நிதி அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் துவக்கி வைத்தார். திருமதி பக்தவத்ஸலம் பரிசுகள் வழங்கினார்.



Regd. No. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1963.

Panchayat Gazette

விலை : 13 ந.பை.

May 1963



ஜூன்
1963.

# கிராமநலம்



தியாகக் காணிக்கை
தருவோம்!

எல்லை காத்தும் ஜவான்களின் குழந்தைகள் நலனுக்காக
குறைந்தபட்சம் ஒருரூபாய் நன்கொடை

15055



### " ஆரோக்கிய உணவு . . . "

" தேகாரோக்கியத்துடன் இருப்பதற்குப் பழங்களும் கறி காய்களும் நம் உணவில் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

மாங்கொட்டைப் பருப்பின் உபயோகத்தை என்னுடைய இளம் வாலிபப் பருவத்திலிருந்தே அறிவேன். ஆனல், ஆகாரத்திற்கு என்று இப்பருப்பைச் சேர்த்து வைக்க யாரும் எண்ணுவதாகத் தெரியவில்லே. இது மாம்பழக் காலம். அதிக காலம் வீணுகிவிட்டதெனினும், இனி யாவது, ஒவ்வொரு மாங்கொட்டையையும் வீணக்காமல், அதன் பருப்பை வேகவைத்துத் தானியங்களுக்குப் பதிலாகச் சாப்பிட்டாலோ, அல்லது தேவையானவர்களுக்கு அதைக் கொடுத்தாலோ, அதுவே நல்ல காரியமாகும். மிச்சப்படுத்தும் ஒவ்வொரு அவுன்ஸ் உணவும் லாபமே யாகும். "

மகாத்மாவின் மணிமொழி

—(" ஹரிஜன் "—26-5-1916.)


# கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும் ?"

—பாரதியார்


GAZETTEER UNIT
13 JUN 1963
RECORD OFFICE BUILDINGS, MADRAS

மாடி. 8 | ஜூன், 1963 | படி 9

## நம்பிக்கை ஒளி வீசும் நல்ல திட்டம்

(பிரதமர் ஜவஹர்லால் நேரு)

" சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்பதன் பெயரால், பணம் விரயம் ஆக்கப்படுகிறது " என்று, சில அங்கத்தினர்கள் பேசினர்கள். இந்தக் குற்றச்சாட்டு, எனக்கு ஆச்சரியத்தைத்தான் தருகிறது. ' சமுதாய அபிவிருத்தித் திட்டம் ' இன்று மிகப்பெரிய மாறுதலேயும், வளர்ச்சியையும் அடைந்துள்ளது. " புதிய பஞ்சாயத்து ஆட்சியாக " அது பரிணமித்துள்ளது. பஞ்சாயத்து ஆட்சியுடன், சமுதாய அபிவிருத்தி இணைக்கப்பட்டுள்ளது. இன்றைய நாட்டு நிலேயில், மிகவும் " நம்பிக்கை ஒளிதருகின்ற ஒரு திட்டம் இது " என்று கூறுவேன்.

பாரத நாட்டில் எல்லா இடங்களிலும் மிகவும் சுத்தமாகவும், குற்றங்குறைகளே இல்லாமலும், இந்த அமைப்பு நடைபெறுகிறது என்று நான் சொல்லவில்லே. எவ்வளவு பெரிய வேலே என்பதையும், எவ்வளவு பிரம்மாண்டமான நிலப்பரப்பில் இந்த வேலே நடைபெற வேண்டியுள்ளது என்பதையும், நாம் மறந்துவிடக்கூடாது. பல இடங்களில் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு இன்னும் காரியங்கள் நடைபெறவில்லே என்பது உண்மைதான். ஆனல், இந்தப் பஞ்சாயத்து ஆட்சிமுறை அல்லது சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்பது, இந்த நாட்டின் அடிப்படைப் பிரச்னையைத் தீர்க்க முயல்கிறது கிராமப் புறங்களிலே உள்ள லட்சக்கணக்கான மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டி, அவர்களுடைய கூனலே நிமிர்த்தி, நாட்டிற்குப் பயனுள்ள பிரஜைகளாக அவர்களே உலவவிடவும், அவர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தவும், இந்த அமைப்பு உறுதுணையாக அமைந்துள்ளது.

பழைய வழியிலேயே கிராம மக்கள் இருக்கப் பழகிவிட்டனர். பல்லாயிரம் ஆண்டுகள் இப்படியே, பழமை முறைகளிலேயே, மக்கள் ஊறிப்போய் பழக்கமுமாகிவிட்டது. ஊறிப்போன பழைய எண்ண உணர்வினே மாற்றுவது என்றல், புதியதொரு மன மாற்றத்தை அவர்களிடம் ஏற்படுத்துவது என்றல், கடினமான காரியம் தான். ஆனல், இதுதான் நாட்டின் இன்றைய அடிப்படை பிரச்னே. இந்த மகத்தான பணியை, புதியதொரு சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியை, புதியதொரு மனமாற்றத்தை ஏற்படுத்துகின்ற வேலேயை பஞ்சாயத்து ஆட்சி, தன்னுடைய மிக முக்கிய சவாலாக ஏற்றுக்கொண்டு, பணியாற்றுகிறது.

முழுப் பிரச்னேயையும் யோசித்துப் பார்க்கும்பொழுது, இந்தியாவில் இந்தப் பிரச்னே நூறுக்கு நூறு என்ற அளவில் இருக்கிறதென்றல், 25 அல்லது 30 சத விகித அளவுக்கு நாம் அதில் வெற்றி பெற்றலேயே, அதுவே ஒரு மகத்தான வெற்றியாகும். ஏன் என்றல், பல லட்சக்கணக்கான மக்களே உள்ளடக்கியுள்ள பிரச்னே இது. எப்படி இந்தத் துறையில மேலும் வளர்ச்சி காணலாம் என்பதைப்பற்றி, நாம் யோசிக்கவேண்டும். இவைகளே அழித்து விடுவது என்பது, பாரத நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கான உறுதியான அடிப்படையை அழிப்பதாகும்."

(பாராளுமன்றத்தின் வரவு செலவுக் கூட்டத்தொடரில் " சமுதாய அபிவிருத்தி" பற்றிய விவாதத்தில், பிரதமர் நேரு அவர்கள் வெளியிட்ட கருத்துக்களின் சுருக்கம்)

**அட்டைப்பட விளக்கம் :**

*ராணுவ வீரர் குழந்தைகளின் நலப் பணிகளுக்கும், டெல்லியில், இந்தியக் குழந்தைகள் நல தேசியத் தலேமை நிலேயக் கட்டிடம் கட்டவும், நிதி திரட்டுவதற்கு, தமிழ்நாடு மத்திய குழந்தைகள நிதிக் குழு (The Central Special Children's Fund Committee, Madras State) ஒரு ரூபாய் டிக்கட் விற்பனேப் பணியைத் தொடங்கியுள்ளனர். சென்னை சேவா சமாஜச் செய்தி நிலேயத்தில, 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 2-ம் தேதி நடைபெற்ற விழாவில், முதல் அமைச்சர், திரு காமராஜ் அவர்கள் முதலாவதாக, ஒரு ரூபாய் டிக்கட்டை வாங்கி, விற்பனேயைத் தொடங்கிவைக்கும் காட்சி அட்டையை அலங்கரிக்கிறது.*

# “தனியொருவனுக்கு உணவில்லையெனில் . . . .”

## சென்னையில் பசிப்பிணி ஒழிப்பு வார விழா

மனித சமுதாயம் தோன்றிய காலம் முதல் இன்று வரை உலகின் தலையாய பிரச்னை, உணவுப்பிரச்னை ஆகும். “தனி மனிதனின் பசி, சமுதாயத்தின் பசி” என்ற கருத்தில் மகாகவி பாரதியார் ‘தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்’ என்று முழங்கினார். இந்த உணவுப் பிரச்னையை உலகுக்கு எடுத்துக் கூறி, அதனை நிவர்த்திக்க வழிகாண ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உணவு வேளாண்மைக் குழு (Food and Agriculture Organisation) “உணவைப் பெருக்க உலக இயக்கம்” ஒன்றை ஆரம்பித்து வைத்தது. நம் நாட்டிலும் ஜனாதிபதி அவர்களால் இவ்வியக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சென்னையில் சென்ற மார்ச் மாதம் நடந்த இந்த பசிப்பிணி ஒழிப்பு வார விழாவிற்கு தமிழ் நாடு அரசாங்க விவசாய மந்திரி திரு. கக்கன் தலைமை வகித்தார்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் அவர் பேசியதாவது :—

### சத்துள்ள உணவு

“மனிதன் தன்னைப் பேணிக்காத்து தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும். நமது ஜனாதிபதியால் துவக்கிவைக்கப்பட்ட இந்த பசிப்பிணி ஒழிப்பு வார விழாவின் நோக்கம் இதுதான். உலக மக்களுக்கும் நமது வருங்கால சந்ததிகளுக்கும் சமசத்துள்ள உணவு கிடைக்க வேண்டுமென்பதும், உணவுக்கும் தேவைக்கும் உள்ள வித்தியாசத்தையும் குறைக்க வேண்டுமென்பதும் தான் இந்தத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். உணவில் சீரான பங்கீடு, கலப்புணவு உண்ணும் பழக்கத்தை மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகியவை பரவ வழி செய்யவேண்டும். பஞ்சாயத்துகள், பாரத் கிருஷக் சமாஜ் இளம் விவசாயிகள் சங்கம் ஆகியவை இந்த வகையில் உதவவேண்டும். இதன் மூலம் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். நல்லெண்ணமும் சகோதர தத்துவமும் இருந்தால், பசிப்பிணி தானாக ஒழிந்துவிடும். நம் நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற இது நல்ல வழியாகும். எல்லோரும் சம சத்துள்ள உணவு உண்ண வேண்டும். உலக ஸ்தாபனங்களின் உதவி கொண்டு தமிழ் நாட்டில் ஏழு வட்டாரங்களில் இத்திட்டத்தை அமுலாக்க பரிசீலனை நடந்துவருகிறது. 21 வட்டாரங்களில் உள்ள பஞ்சாயத்துகளில் சத்துணவுத்திட்டம் படிப்படியாக அமுல் நடத்தப்படும். 1963—64-ம் ஆண்டில் தோட்ட வளர்ச்சிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உலக மக்களுடைய பசிப்பிணியைப் போக்க நாமும் உலக மக்களோடு பாடுபடவேண்டும்.

### இன்றைய நிலையில் நம் கடமை

நாட்டிற்கு சோதனை ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் ஜவான்களுக்கும் சேவை செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். உணவு உற்பத்தி, காய்கறி உற்பத்தி ஆகியவைகளை அதிகமாக்குவதாலும், ராகி, சோளம், காய்கறிகள் போன்றவைகளைச் சாப்பிட்டு பழகிக்கொள்வதன் மூலமாகவும் நாம் சேவை செய்தவர்களாவோம். எல்லோரும் காய்கறி சாப்பிடப் பழகிக்கொள்ளவேண்டியது முக்கியமாகும். காய்கறிகள் விலை அதிகமாகியிருக்கிறதே என்ற கேள்வி எழலாம். இதற்கும் அரசாங்கம் வழி செய்திருக்கிறது. காய்கறித்தோட்டம் பயிர் செய்கிறவர்களுக்கு அரசாங்கம் கடனுதவி அளிக்கிறது. “முயற்சி திருவினையாக்கும்”. நீங்கள் செய்யும் இந்த ஆக்கவேலைக்கு அரசாங்கம் ஊக்கம் தரும்” இவ்வாறு மந்திரி கக்கன் கூறினார்.

விழாவில் மாநில விவசாயத் துறை இயக்குநர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் பேசுகையில், எல்லோரும் சம சத்துள்ள உணவு உண்ண வேண்டுமென்றால், மக்கள் தொகை பெருக்கத்தைவிட உணவுப்பெருக்கம் அதிகமாக வேண்டும் என்றும், உணவுப் பொருட்களை உற்பத்திசெய்து அதை நல்ல முறையில் விநியோகித்து உடலுக்குத் தேவையான அளவில் பக்குவப்படுத்தி சாப்பிடும் வகையில் மக்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக்கொண்டுதான் இந்த விழா கொண்டாடப்படுகிறதென்றும், பொது மக்கள் இந்த இயக்கத்தின் குறிக்கோளைப் புரிந்து கொண்டு உற்பத்தியைப் பெருக்கி உணவு விரயத்தைத் தடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கோவை அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரித் தலைவர் திருமதி இராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் பேசுகையில் உபசாரமே உணவு விரயத்தின் அடிப்படை என்றும், உபசாரம் செய்வதாக எண்ணிக்கொண்டு இலை நிறைய உணவுவகைகளைக் கொட்டி வீணாக்குவது அபசாரம் என்று கூறினார். அடுத்தபடியாக பொது சுகாதார டைரக்டர் திருமதி எச். எம். சர்மா அவர்கள் பேசுகையில் பட்டினியும் நோய்களும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்றும், பட்டினி ஒழிந்தால் நோய்களும் ஒழிந்து விடுமென்று கூறினார். மேரி ராணி கல்லூரி முதல்வர் குமாரி ஐராவதி பேசுகையில் திருமணங்களில் விருந்து போடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார். கோழி வளர்ப்புத் திட்ட அதிகாரி எல். வி ராமசாமி, சென்னை கிறிஸ்தவ கல்லூரி பேராசிரியை திருமதி பிளாரன்ஸ் தியாசபிலஸ் ஆகியோரும் விழாவில் பேசினார்கள். விவசாயச் செய்தித் துறை அதிகாரி திரு. எம். ஜே. டேவிட் அவர்கள் நன்றி கூறினார்.

பச்சையப்பன் கல்லூரி, எஸ். ஐ. இ. டி. பெண்கள் கல்லூரி, எத்திராஜ் கல்லூரி ஆகியவைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் ராணுவப்படை அணிவகுப்பு நடந்தது.

ஆந்திர மகிளா சபா, ஔவை இல்லம், தேசியப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மேரி ராணி கல்லூரி சமூக சேவா சங்க ஆதாரப்பள்ளி ஆகியவைகளின் மாணவி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் விழாவில் நடந்தது.

சத்துணவுப் பொருட்கள், சிறுதானிய உணவு வகைகள், கோழி, உரம், ‘நவீன’ விவசாய சாதனங்கள், முட்டை, இறைச்சி ஆகியவைகளை விளக்கும் வகையில் ஒரு கண்காட்சி, விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சியை விவசாய அமைச்சர் திரு. கக்கன் பார்வையிட்டார்.



# தாயகம் காப்போம்

(திருமதி இந்திரா காந்தி)

அணிந்திருந்த நகைகளைக் கழற்றிவைத்து விட்டு, அரண்மனை வாழ்வின் சுகவாழ்வைத் துச்சமெனத்தள்ளி, கைப்பிடித்த கணவனின் பின்னால் கானகம் சென்றாள் சீதை. அதனால்தான் அவள் இலட்சியப் பெண்ணாகக் கருதப்படுகிறாள். “பாரதநாட்டு மாதர் குலத்திற்கே சிறந்த முன்மாதிரியாகக் கருதப்பட வேண்டியவள் சீதை” என்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். சீதையைப் போல் காட்டிற்குப் போகவேண்டிய கட்டாயத்தில் ஒன்றுமில்லை நாம். ஆனால், இன்றைய நெருக்கடி நிலையில், நம்மைச் சுற்றி நிகழ்ந்துள்ள மாற்றங்களுக்கொப்ப, சமுதாய நலனை முன்னிறுத்தி, நம்மாலான தியாகங்களையும், பணியையும் நாட்டிற்குப் புரிய நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### சுதந்திரப் போராட்டக் காலத்தில்

நம் நாட்டுச் சுதந்திரப்போராட்டக் காலங்களில், பாரத நாட்டுப் பெண்டிர் மகாத்மாவின் அறைகூவலை ஏற்று நாட்டுச் சுதந்திரத்திற்காக அரும் பணியாற்றியுள்ளனர். எத்தகைய துன்பம் வந்துற்றதாயினும், இடுக்கண்களை இன்முகத்துடன் ஏற்று, தியாகங்கள் பல புரிந்துள்ளனர். கள்ளுக்கடை மறியல், அந்நியத்துணி பகிஷ்காரப் போராட்டம் போன்ற இயக்கங்களிலெல்லாம் நம் நாட்டு மகளிர் குலம் புரிந்த தியாகங்களை யாரால் மறக்க முடியும்?

இப்பொழுது போர் நம்மை அண்டியுள்ளது. தற்சமயம் ஏற்பட்டுள்ள போலி அமைதியைக் கண்டு யாரும் ஏமாந்து விடவேண்டாம். ஏனெனில், மறுபடியும் எப்பொழுது எதிரி போர் தொடங்குவான் என்பதை நாம் சொல்வதற்கு இல்லை. நம்முடைய நாட்டின் மானத்தைக் காக்கவும், நம் எதிர்காலச் சந்ததிகள் நல்வாழ்வு வாழவும் வேண்டி, எந்தத் தியாகத்தையும் செய்ய நாம் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும்.

### சேமிப்பின் மூலம் செல்வம்

நாட்டுப்பொருளாதாரமானது கட்டுக்கோப்புடையதாகவும், வளருகின்ற தன்மையுடையதாகவும் அமைந்திருந்தால்தான், யுத்த முயற்சிகளை வலுவாகச் செய்ய முடியும். வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் அதிக நேரம் உழைப்பதின் மூலம், உற்பத்தியை நாம் பெருக்க முனைய வேண்டும். ஒவ்வொருவரும் இந்தத் துறையில் உதவி புரிய முடியும். வீடுகளிலும், நிறுவனங்களிலும் காலியாக உள்ள இடங்களில் காய்கறிச் செடிகளை வைத்துப் பயிராக்கலாம். உபயோகமில்லை என்று எந்த பொருளையும் தூக்கி எறிந்துவிடாமல் பார்த்துக்கொள்ளலாம். சேமிப்பு முறையை கையாள்வதின் மூலம் செல்வத்தைப் பெருக்கமுடியும். முன்பே பெரும் சுமையை ஏற்று, வாழ்க்கையே ஒரு போராட்டமாக உள்ள நம் மக்களுக்கு ஒரு போரினால் விளையக்கூடிய விளைவுகளைச் சமாளிப்பது என்றால், கடினம்தான். ஆனால், இந்தப் போர் நாமாக உண்டாக்கியதல்ல; நம் மீது சுமத்தப்பட்ட போர். எதிர்த்துப் போராடுவதைத் தவிர நமக்கு வேறு வழியே இல்லை.

“யுத்தமென்றால் எவ்வளவோ பணம் வேண்டும். அதிகப்பணம் தேவையென்றால் புதிய வரிகள், புதிய தியாகங்கள் என்றுதான் பொருள்; நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் - சேவை செய்யவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. போர்முனையில் போராடும் வீரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி, நம்முடைய, வசதிகளை, சுகங்களைக் குறைத்துக் கொள்வோம். அவர்களுடைய சுகத்திற்காக வேண்டி, நம்முடைய தேவைகளைத் தள்ளி வைத்து விடுவோம்”. அமெரிக்கக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. ரூஸ்வெல்டின் வாக்கு இது. இந்த நிலை நம் நாட்டிற்கு இப்பொழுது மிகவும் பொருத்தமுடையதாகும். இப்படிச் செய்தால் விலைவாசிகள் இறங்க உதவியாக இருக்கும். நமக்குள்ள வரையறுக்கப்பட்ட உற்பத்தி ஆதாரங்களை, அடிப்படைத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தவும் முடியும்.

### தங்கத்தின் மீது மோகம் வேண்டாம்

முற்போக்கான, பணம்படைத்த நாடுகளில் எல்லாம், தங்க மூலதனம் அரசாங்கத்தின் கையில் உள்ளதே தவிர, மக்கள் கையில் அல்ல. இந்தியாவிலே இதற்கு எதிர் மாறான நிலை உள்ளது. பாங்குகளே ஏற்படாத அந்தக் காலத்தில் ஏற்பட்ட சமூகப் பழக்கவழக்கங்களே நம் மக்கள் தங்கத்தின் மீது கொண்டுள்ள மோகத்திற்கு காரணம் எனலாம். இந்த ஆசை அனாவசியமானது. தேவையற்றது. நம்முடைய சேமிப்புகள் அப்படியே தூங்கிக் கிடக்கும்படியான ஒரு நிலையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. அவைகளை நாம் பயன்படுத்தித்தான் வேண்டும். அந்நியச் செலவாணியை

நாம் பெறும்படியாகவும், தேசிய முயற்சிகளைப் பெருக்கவும் இவைகளைப் பயன்படுத்தவேண்டும். தங்கத்தின் மீது நாம் கொண்டுள்ள போலி ஆசையை விட்டொழிப்போம். இதனால் நம் திருமணங்கள், நம்முடைய சடங்குகளில் நல்லதொரு மாற்றம் ஏற்படும். இதனால் மத்தியதர வகுப்பினருக்கு சற்றுச்சுமை குறையுமென நான் நம்புகிறேன். காலத்திற்குத் தகுந்த மாதிரி மற்ற நாடுகள் மாறியுள்ளன. நாம் மட்டும் ஏன் மாறக்கூடாது?

### உள்நாட்டுப் போர் அணி

இந்தியாவில் மனித சக்தி ஏராளமாக உள்ளது; ஆகவே நம் பெண்கள் ராணுவப் பயிற்சி பெறவோ, துப்பாக்கி தூக்கிப் போரிடவோ அவசியமில்லை. மற்றவர்கள் அந்த வேலையைப் பார்த்துக்கொள்வார்கள்.

போர்க்களங்களிலும் உள்நாட்டில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளாலும் போர்களில் வெற்றி பெறமுடிகிறது. உள்நாட்டின் நிலை பத்திரமாக உள்ளது என்ற ஒரு திருப்திகரமான நிறைவு போர்க்களங்களில் போரிடுகின்ற ஜவான்களுக்கு இருக்கும்படியாகச் செய்யவேண்டும். ஆகவே, உள்நாட்டில் மக்கள் சக்தியை, ஆக்கவேலைகளில் திரட்டுதல் என்பது யுத்த காலத்தின் மிகவும் அடிப்படையான வேலைகளில் ஒன்றாகும். அறிவு ஒளி பரவினால், அச்சம் அந்த இடத்தைவிட்டு ஓடிவிடும். உழைப்பு, தொண்டார்வம் இருந்தால், அங்கே மனக் கலவரத்திற்கே இடமில்லை. என்ன பயிற்சி உங்களால் பெறமுடியுமோ, அதைப் பெறுங்கள். ஊர்க்காவல் படை, உள்நாட்டுப் பாதுகாப்பு, கிராமத் தொண்டர் படை இவைகளில் ஏதாவது ஒன்றில் சேரலாம். இப்பொழுது இயங்குகின்ற இந்த அமைப்புகளில் எதிலும் சேர முடியாதவர்களுக்காக, நகர மக்களின் அணி என்று ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது நடைமுறையில் போர் நடக்கவில்லையென்றாலும், இப்படித் பயிற்சிகளில் பெறுவதினால் நிச்சயமாக நிரந்தரமான பயன்கள் உண்டு.

நம்முடைய மருத்துவமனைகளில் இப்பொழுதுகூட போதிய அலுவலர்கள் கிடையாது. போர்க்களங்களில் புதிய மருத்துவ மனைகள் திறக்கப்பட வேண்டும். அதிகப்படியான தேவைகளைச் சமாளிக்க அதிகமான மருத்துவச் சிப்பந்திகள் நமக்குத் தேவையாக உள்ளனர். போதிய, தேவையான மருத்துவ வசதிகள் இல்லாமல் நம்முடைய ஜவான்கள் அல்லலுறுவது உண்மையிலே வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். முதல் உதவிப் பயிற்சியும், வீட்டு மருத்துவப் பயிற்சியும் நம்முடைய குடும்பத்திற்கும் நம்முடைய சமுதாயத்திற்கும் மிகவும் பயனளிப்பவையாகும்.

பெண்கள் ஏற்று நடத்தக்கூடிய பொருத்தமான வேலைகள் பல உள்ளன. கார்கள், ஆம்புலன்ஸ் வண்டிகள் ஓட்டுதல்—சமையற் கட்டிடங்களையும், கான்டீன்களையும் நடத்துதல், யுத்த உதவியாளர்களாக மருத்துவ மனைகளில் பணி புரிதல், பிரதேச மொழிகளில் கடிதங்கள் எழுத உதவுதல் போன்ற வேலைகளைப் பெண்கள் செய்யலாம்.

### பல்வேறுவகையான பெண்டிர்

மாதர்களில் பலவிதமுண்டு. உழைக்க முடிந்து வேலையில் உள்ளவர்கள் முதல்வகை. அப்படிப்பட்டவர்களின் பெயர்கள் எல்லாம் பதிவு செய்யப்படவேண்டும். சில தொழில்களில் பயிற்சி பெற்று, அதைப் பயன்படுத்த முடியாமல் உள்ளவர்கள்—திருமணமான பெண்கள் இரண்டாவது வகை. அவர்கள் தங்களுடைய நேரத்தைச் சிறிது நேரம் இதற்காகச் செலவிட முடியாதா ? பயிற்சியே பெறாத பெண்டிர்களில், பயிற்சி பெற்றுக்கொள்ளப் போதிய கால அவகாசம் பெற்றுள்ள பெண்கள் கண்டிப்பாக இருப்பார்கள். விசேஷத் திறமை பெற்றவர்கள் என்று இல்லாதவர்கள் கூட, தையல், நூல் பின்னுதல், பொட்டலம் கட்டியனுப்புதல் போன்ற வேலைகளுக்கு தங்கள் நேரத்தைப் பயன்படுத்தலாம்.

இதுபோன்ற துறைகளில் திறமைசாலிகளாக விளங்குகின்ற பெண்களின் சேவை, போர்முனையில் சேவை புரிகின்ற வீரர்களின் நலன் சம்பந்தமாக பயன்படுத்துகின்ற தேவை ஏராளமாக உள்ளது. தட்டெழுத்துக்காரர்களாக, சுருக்கெழுத்துக்காரர்களாக, உதவியாளர்களாக பெண்கள் தாங்களே வந்து பணி புரிந்தால், நகரக் குழுக்கள் மற்றும் இதுபோல் உள்ள நலப் பணிக் குழுக்களின் நிர்வாகச் செலவானது எவ்வளவோ குறைவதற்கு ஏதுவாகும்.

### எப்பொழுதும் விழிப்புடனிருப்போம்

பனிமலையிலே, உள்ளத்தை உறையவைக்கும் குளிரிலே போராடும் நம் வீரர்களை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். 2,500 மைல் நீளமுள்ள வட எல்லையில், தங்களுடைய குடும்பங்களை மறந்து, சொந்த சுக துக்கங்களை மறந்து, இரவு பகலென்று பாராமல் உள்ளத்தை உறையவைக்கும் குளிரிலே, போராடுகின்ற நமது ஜவான்களை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். உள்ளத்தையே உறைய வைக்கும் பனி மட்டுமல்ல ; நமது ஜவான்களுக்கு இன்னும் எத்தனையோ இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகள் ; கொட்டும் மழை, பல்வேறுபட்ட சீதோஷ்ண நிலை —அன்றாட வாழ்க்கை நடத்துவதே இந்தப் பிரதேசங்களில் கடினம். மாதர் மனது வைத்தால் இந்தக் கஷ்டங்களை ஓரளவு போக்க முடியும். அவர்களுடைய வாழ்வின் பாரத்தை நாம் கொஞ்சம் குறைக்கமுடியும். போர்முனையில் புரிகின்ற ஜவான்களுக்கும், காயம்பட்ட போர்வீரர்களுக்கும் வேண்டிய சில வசதிகளை நாம் செய்து தரமுடியும். பத்திரிகைகள், போர்வீரர்கள் படிக்கப் புத்தகங்கள், கிராமபோன் ரிக்கார்டுகள், தண்ணீர் சுடவைக்கும் கருவிகள் இவை போன்ற பல கருவிகளை நாம் திரட்டித் தரமுடியும். நகர மக்களின் குழுக்களின் நலப் பணிக் குழுக்களில் அவ்வப்போது இப்பட்டியல்கள் கிடைக்கும்படி செய்யப்படுகிறது.

### அசையாத நெஞ்சுறுதி

சில தினங்களுக்கு முன்னால் வடகிழக்கு எல்லைப் பிரதேசத்தில் நாங்கள் ஜீப்பில் சென்று சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது, சமீபத்தில் நடைபெற்ற யுத்தத்தின் பயங்கர வெறித்தாண்டவத்தின் கொடுவினைவினை நெஞ்சிலே பதியவைக்கும் ஒரு காட்சியைக் காண நேர்ந்தது. நம் போர்வீரன் அணியும் இரும்புக் குல்லாய் ஒன்று பேர்பாரற்று உருக்குலைந்துபோன நிலையில் சிறுகுளம் ஒன்றின் அருகே கிடந்தது. அந்தக் குல்லாய்க்குச் சொந்தக்காரர்—அதை அணிந்திருந்த அந்த ஊர் பேர் தெரியாத நம் நாட்டு வீரன் ஒருவனின் சோகத்தைப் பிழிந்து கொடுக்கின்ற முடிவு—அதைப் பற்றியே என் எண்ண அலைகள் வட்டமிட்டன. அந்த வீரனுக்கென்று ஒரு குடும்பம் இருக்கத்தான் செய்யும். தாய் தந்தையர், அக்கா, தங்கை, சகோதரர்கள்—ஏன் தாலிகட்டிய இளம் மனைவிகூட இருக்கலாம்—அவர்களுடைய வாழ்க்கையெல்லாம் இன்று இருள்மூடிப்போய் விட்டிருக்கும்—வெறும் வார்த்தைகள் அவர்களுக்கு என்ன சாந்தியை, வாழ்வே மயானமாகிவிட்ட அவர்களுக்கு என்ன ஆறுதலை அளித்துவிட முடியும்? வெறும் வார்த்தைகளால் பயனில்லை. சோகம் கப்பியுள்ள அவர்கள் வாழ்விலே நம்மால் ஒளியேற்றி வைக்க முடியும். நமது ஜவான்களின் குடும்பங்கள் நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள குக்கிராமங்களில் எல்லாம் சிதறிக் கிடக்கின்றன. அவர்களுக்கு நம்மாலான பணிகளைச் செய்வோம்.

அவர்களுக்கு பல வகைகளில் நாம் உதவி செய்யலாம். மாநில அரசாங்கங்கள் அளிக்கின்ற உதவிப் பணங்கள், கல்விச் சலுகைகள் பற்றிய விவரங்களை அவர்கள் தெரிந்துகொள்ளும்படியாக நாம் அவர்களுக்கு வேண்டிய விவரங்களை எடுத்துச் சொல்லலாம். சில மாநிலங்கள், நிலங்கள், ரொக்கப்பணம்கூட அளித்திருக்கின்றன. உங்களுடைய மாநிலத்தில் என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு, உங்கள் பிரதேசங்களிலுள்ள போர்வீரர்கள், மாலுமிகள், ஆகாயப்படை வீரர்கள் போர்டு போன்ற நிறுவனங்களுடனும் கலந்து பணியாற்ற பெண்டிர் முன் வரவேண்டும். ஜவான்களின் குடும்பங்களில் உடனடியாகத் தீர்க்கமுடியாத பிரச்னை என்றால், அவைகளை நகர மக்கள் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலும்.

கடந்த சில மாதங்களுக்குமுன் மக்களிடையே காணப்பட்ட உத்வேகம், அவர்களிடையே பொங்கி எழுந்த உற்சாகம் இப்பொழுது சற்று குறைந்திருக்கிறது. அந்த உற்சாகமும் எழுச்சியும் மங்கிப்போய்விடக்கூடாது. நம் தாய்த் திருநாட்டின்மீது வீசப்பட்டுள்ள இந்தச் சவாலை, நம் வாழ்க்கையை, நம் வாழ்வில் உயர்ந்தது என்று நாம் போற்றுகின்ற சீரிய பண்பாட்டை குலைக்கப் பார்க்கும் இந்தச் சவாலை, சீன ஆக்கிரமிப்பை நாம் தீரத்துடனேற்று வீரப்போராட்டம் நடத்துகின்ற அசையா நெஞ்சுறுதி நம்மிடையே மலர்கின்ற முறையில், மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்ச்சியானது திருப்பி விடப்பட வேண்டும். “வரலாறு நாம் மீறமுடியாத ஒன்று ; நாம் ஏற்றுள்ள பயங்கரமான சோதனைகளை நாம் எப்படிச் சமாளிக்கின்றோமோ, அந்தச் செயல்கள்தான் நம்மை வாழவைக்கவோ, அன்றி வீழ்த்தவோ செய்யும். நமக்கென்ன என்று யாரும் இருந்துவிட முடியாது. இது ஜீவ மரணப் போராட்டம்—அசையாத நெஞ்சுறுதியுடன் இந்தப் போராட்டத்தில் இறுதிவரையில் போராடுவோம்.”

(Translated from an article in "Panchayati Raj", May 1963.)

## விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம்
## (Expanded Nutrition Programme)

—(o)—

தமிழ்நாடு அரசாங்கம், ஐக்கிய நாடுகள் உலகக் குழந்தைகள் அவசர நிதியின் உதவியுடன் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தை அமுலாக்கத் தொடங்கியுள்ளது. எஸ். வி. நகரம், கிருஷ்ணகிரி, பவானிசாகர், தே. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, ஆடுதுறை, கோயில்பட்டி ஆகிய கிராம நல வளர்ச்சிப்பயிற்சி நிலையங்களிலும், ஆரணி, கிருஷ்ணகிரி, பவானிசாகர், தே. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர், கோயில்பட்டி ஆகிய ஏழு வட்டாரங்களிலும் இத் திட்டம் தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. முட்டை, மீன், பால், பழங்கள் பருப்பு வகை முதலிய சத்துள்ள உணவுப்பொருட்களைத் தயாரிப்பது பற்றியும், முறைகளை எடுத்துரைக்கவும் விளக்கப்பயிற்சிகள் அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. வட்டார அளவிலும், கிராம நிலையிலும் கோழி வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துவது, நீர்நிலைகள் இருப்பின் அவைகளில் மீன் வளர்ப்பது, பள்ளிகளில் தோட்டம் அமைத்தல், கிராமங்களில் விளக்கமுறை காட்டும் பாத்திகள், பால் விநியோகம் ஆகிய பணிகளும் இந்த வேலைத் திட்டத்தில் உள்ளடங்கியவையாகும்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இத்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் உலகக் குழந்தைகள் அவசர நிதி ஸ்தாபனம் பால்பொடி வழங்குகின்றது. பஞ்சாயத்துக்களில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், மீன், காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளில் பெரும்பகுதி, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துப் பிரதேசத்தில் உள்ள கர்ப்பிணிகளுக்கும், பூர்வாங்க ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கும் வழங்கப்படவேண்டும்.

இத்திட்டம் ஆரம்பத்தில் நிதானமாகத் தொடங்கிய போதிலும், சென்ற ஆண்டில் கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஏழு வட்டாரங்களில் விஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம கோழிப் பண்ணைகள் ஏற்பட்டுள்ளன. பல பள்ளித் தோட்டங்களும் கிராமத் தோட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பால் விநியோகம் திருப்திகரமான முறையில் நடைபெற்று வருகிறது. ஏழு வட்டாரங்களிலும் உள்ள கிராமவாசிகள், இந்த வேலைத் திட்டத்தின் சிறப்பை நல்ல முறையில் உணர்ந்து வரவேற்கின்றனர். 1963–64-ம் ஆண்டுக்கு, வரவு, செலவுத் திட்டத்தில் இந்த வேலைக்காக ரூ. 9·86 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறை மானியக் கோரிக்கை—விளக்க உரையிலிருந்து).

# பஞ்சாயத்து யூனியன்களும் சமூகக் கல்வித் திட்டமும்

—(o)—

சமூகக் கல்வி சம்பந்தமாக, அரசாங்கம் தெரிவித்த வழிமுறைகளின் அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் வேலைத் திட்டங்களை வகுத்துக்கொண்டுள்ளன. இந்த வேலைத் திட்டங்களை அமுலாக்குவதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஆண்டுதோறும், தலைக்கு பத்து காசுகளுக்கு மேற்படாத அளவில் அரசாங்க மானியம் பெறும். சமூகக் கல்வி நிலையங்கள், இளைஞர் சங்கங்கள், விவசாயிகள் மன்றங்கள், பொருட்காட்சிகள் முதலியன இந்த சமூகக் கல்வி வேலைத் திட்டத்தில் அடங்கும்.

மாநிலத்தின் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் ரேடியோ வசதி அமைப்பு சம்பந்தமாக 1962–63 வேலைத் திட்டத்தில் விளக்கம் காட்டப்படவேண்டும். விரிவான முறையில் ரேடியோ வசதி ஏற்படுத்துவதற்கு இந்த ஏற்பாடு தொடங்கு முன்னரே, பஞ்சாயத்துக்களில் சுமார் 4,000 ரேடியோ செட்டுகள் இருந்தன. எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் ரேடியோ செட்டுகள் அமைக்கப்படவேண்டும் என்பதே வேலைத் திட்டத்தின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேற 8,000 செட்டுகளைப் புதிதாக ஏற்படுத்தவேண்டியிருந்தது. மாநிலத்தின் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் ரேடியோ செட்டுகள் அமைப்பதென்ற வேலைத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவிட்டது. இதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ரேடியோ செட் அமைக்கும் வகையில் ரூ. 180 உதவித் தொகையாகத் தரப்பட வேண்டும். அந்தந்த பஞ்சாயத்து யூனியனின் சமூகக் கல்வி மானியத்திலிருந்து இது தரப்பட வேண்டும். பஞ்சாயத்துக்களுக்குத் தகுதியான ரேடியோ செட்டுகளை சிபாரிசு செய்வதற்காக அரசாங்கம் தொழில் நுட்பக் கமிட்டி ஒன்றை அமைத்துள்ளது. கமிட்டியின் சிபாரிசுகள் பேரில், பல ரேடியோ செட்டுகள் சிபாரிசு செய்யப்பட்டன. புது ரேடியோ செட்டுகளையும் பழைய ரேடியோ செட்டுகளையும் நல்ல முறையில் பராமரித்து வருவது ஆகிய பணிகள், "பஞ்சாயத்து ரேடியோ பராமரிப்பு நிறுவனம்" என்ற ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ஸ்தாபனம் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. பஞ்சாயத்துக்கள் அனைத்திலும் ரேடியோ செட்டுகள் அமைக்கும் வேலை முடிவடைந்து விட்டதால் அந்த ரேடியோ செட்டுகளின் பராமரிப்பு வேலையில் இப்பொழுது நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது.

### கிராம வானொலி மன்றம்

பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள ரேடியோ செட்டுகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வது சம்பந்தமாக, கேட்போர் குழுக்களை (Listener's Groups) அமைப்பது பயனுடையதாக இருக்குமென்று அரசாங்கம் கருதியது. அகில இந்திய ரேடியோ நிகழ்ச்சிகளில் தங்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய நிகழ்ச்சிகளை இவர்கள், கேட்க வசதி இருக்க வேண்டும் என்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கமாகும். இந்தக் கருத்தில் தான், மாநிலத்தின் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களின் கிராம ரேடியோ மன்றங்கள் அமைக்கப்பட்டுளளன. கிராம ரேடியோ மன்றம், ரேடியோ செய்திகளை கேட்கும் குழுவாகவும் நிகழ்ச்சிச் செய்திகளை விவாதிக்கும் குழுவாகவும் விளங்குகிறது. இந்த ரேடியோ மன்றத்தில் கிராம மக்கள், செவ்வாய், வெள்ளிக் கிழமைகள்தோறும் தங்களுக்காக ஒலிபரப்பப்படும் ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்கிறார்கள். பின்பு அப் பொருள்பற்றி தங்களிடையே விவாதம் செய்கிறார்கள். சமூகக் கல்வியைப் பரப்புவதில் கிராம ரேடியோ மன்றங்கள் மிகப் பயனுள்ள சாதனமாக உதவுகின்றன. எல்லா கிராமங்களிலும் ரேடியோ செட்டு வசதியும், கிராம ரேடியோ மன்றங்களும் அமைப்பதன் விளைவாக, தேசிய நெருக்கடிக் காலங்களில் பரவலான சமூகக் கல்விப் பணிக்கு வசதி ஏற்படும் என்று நம்பப் படுகிறது.

—(o)—

பொதுப்பணியில் பயிற்சி :—வாலாஜாபாத் இந்து மத பாடசாலை மாணவர் அமைச்சரவையினர் சபாநாயகர் திரு எஸ். செல்லபாண்டியன், நிதி அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் ஆகியோருடன் காணப்படுகிறார்கள்.







# மேலத்திருப்பந்துருத்திப் பஞ்சாயத்தின் சாதனை

[திரு. வி. கருப்பன், எம்.ஏ., தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி.]

—(o)—

[பஞ்சாயத்து அபிவிருத்தித் துறையில், தஞ்சாவூர் மாவட்டம் சீரிய பணியாற்றி வருகிறது. குடிமராமத்து வேலைத் திட்டம் இம் மாவட்டத்தில் திறம்பட செயல்பட்டு வருகிறது. புதிய பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்டவர்கள், அக்கறையுடன் நாட்டின் வளம் பெருக பாடுபட்டு வருகின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் மேலத்திருப்பந்துருத்தி பஞ்சாயத்து ஆற்றியுள்ள பணிகளையும், அதற்கெல்லாம் மூலகாரணமாக அமைந்துள்ள திருவையாறு பஞ்சாயத்து யூனியன் தலைவரின் செயல்திறனையும், தொண்டார்வத்தையும் இக் கட்டுரை விளக்குகிறது. இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், மற்ற பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன.

—ஆசிரியர்]

சிவாஜி மன்னர் மராட்டிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அவர் பரம்பரையில் வந்தவர் திரு. எம். ராதாகிருஷ்ணகாடேராவ் சாகேப். அன்பும் செந்தமிழ்ப் பண்பும், அணிசெய்ய அடக்கமும் பிறர்க்குதவும் பேராண்மையும் மிக்கவர். "குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும்" என்ற குறளுக்கேற்ப, தனது கிராமத்தையும், 41 பஞ்சாயத்துக்களைக் கொண்ட தனது வட்டாரத்தையும் உயர்த்துவேன் என்ற சங்கற்பத்தோடு, பொதுப்பணியில் ஈடுபட்டிருப்பவர். தனது முழு நேரத்தையும் பொதுப்பணிக்கு அர்ப்பணிக்க வாய்ப்பும் வசதியும் உள்ளவர். இவரது தலைமையில் திருவையாறு பஞ்சாயத்து யூனியன் சீரிய முறையில் முன்னேறி வருகிறது. தஞ்சையில் பஞ்சாயத்து ராஜ்யத்தை அமைக்க தனது பஞ்சாயத்தை முன்னோடியாக வைத்திருக்கிறார். தனது பஞ்சாயத்தாகிய மேலத்திருப்பந்துருத்தியில் பற்பல அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றார். இங்கே, உழவும், தொழிலும், கல்வியும், கலையும் ஒருங்கே இணைந்து வளர்ந்துவருவது இளைய பாரதத்தின் எண்ணற்ற கிராமங்களின் புனருத்தாரணத்திற்கு கட்டியங்கூறி நிற்கிறது. மேலத்திருப்பந்துருத்தி பஞ்சாயத்தின் வருமானம் சராசரி ரூ. 10,000. ஜனத்தொகை 7,000. பஞ்சாயத்து ராஜ்யம் அமைப்பதற்கு முன்பு, இந்தப் பஞ்சாயத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 3,758. 1961-ல் மக்கள் எண்ணிக்கை கணக்குப்படி, எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 4,430 ஆக உயர்ந்துள்ளது.

### விவசாயத் துறையில் வியத்தகு சாதனை

இப் பஞ்சாயத்தின் பிரதான தொழில் விவசாயம். இங்கே தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் உள்ளது. 200 பண்ணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் இவர் ஒரு தீவிர விவசாயி. 1961–62-ம் வருடத்தில் எக்கர் ஒன்றுக்கு சராசரி 3,000 பவுண்டும், 1962–63-ம் வருடத்தில் மிகுதியான மழை காரணமாக எக்கர் ஒன்றுக்கு சராசரி 2,600 பவுண்டும் மகசூல் கிடைத்திருக்கிறது. வருமுன் காத்தல் என்ற முறைப்படி, நெல் விதைகள் நாற்று விடுவதற்கு முன்னர் அக்ரஸான் மருந்து கலந்து தெளிக்கப்பட்டது. குருவையில் முழுவதும் பொறுக்கு நெல் விதையான ஆடுதுறை 20, ஆடுதுறை 3 விதைவகைகளையே பயிரிடுகிறார். தாளடியில் அதிக அளவு பூச்சிதாக்குவதற்கு முன்னரே முன்கூட்டியே 'பாலிடால்', 'காப்பா' மருந்துகளை கலந்து பயிர் முழுவதும் ஸ்பிரே செய்யப்பட்டது. நிலங்களின் வளம் குறையாமல் இருப்பதற்கு அறுவடை செய்த பின்னர், கொளுஞ்சி தெளித்து நிலத்திற்கு நல்ல பசுந்தழை கிடைக்கின்றது. சராசரி ஒரு எக்கர் நிலத்தில் 6,000 முதல் 8,000 வரை கொளுஞ்சி தழை உரம் கிடைக்கிறது. மேலும் குருவை, தாளடி வயல்களுக்கு எக்கருக்கு 150 ராத்தல வீதம் "சூப்பர் பாஸ்பேட்" உரமிடுகிறார். இப்பொழுது அதிக தழை உரம் கிடைப்பதற்காக 100 கிளைசிரிடியா குச்சிகள் வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

### கிராமத் தொழில் வளர்ச்சி

கிராமத்தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து செங்கற் கால்வாய் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 15 கிராமத் தொழிலாளிகளுக்கு முழு நேர வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக கதர் மற்றும் கிராமக் கைத்தொழில போர்டாரின் கடன் ரூ. 3,000 வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள் நலனுக்கான திட்டமாக இவ்வூரில் நையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி நிலையமொன்றும் துவங்கப்பட்டு, சீரிய முறையில் நடைபெற்றுவருகிறது. இப் பயிற்சி நிலையத்தில் மொத்தம் 16 பேர்கள் பயிற்சி

மேலத்திருப்பந்துருத்தி கிராமத்தொண்டர் படை—தேசிய கீதம் பாடும்பொழுது அணிவகுத்து நிற்றல்.



பெறுகிறார்கள். இதில் 10 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் உதவிச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஓராண்டுக்காலம் பயிற்சி முடிந்த பின்பு, இந்தப் பெண்கள் தாங்களே சொந்தமாக ஒரு தொழில் செய்து சம்பாதிக்கக்கூடிய சக்தி பெறுகிறார்கள். இந்த நிலையத்திற்கான இடவசதியும் இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மாதர் முன்னேற்ற முயற்சியில் இவர் கொண்டுள்ள ஆர்வம் போற்றுதற்குரியது. இந்தப் பஞ்சாயத்து மாதர் சங்கத்தில், சுமார் 50 அங்கத்தினர்கள் உள்ளனர். தையல், பின்னல், நூற்பு, படிப்பு, சத்துணவு தயாரித்தல், வீட்டுத் தோட்டம் போடுதல், குழந்தை வளர்ப்பு, முதலிய பல துறைகளில் இச்சங்கத்தின் மூலம், பெண்கள் நல்ல பயிற்சியையும் பயனும் பெற்றுவருகின்றனர். மாதர் சங்கத்திற்கான இடவசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவர் விவசாயத்திற்கு உறுதுணையான கால்நடைகள் பராமரிப்பிலும் அக்கறை கொண்டவர். இந்தப் பஞ்சாயத்தில் கால்நடை முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக சர்க்கார் மானியத்துடன் ரூ 800 பெறுமதியுள்ள சிந்தி பொலிகாளையை வைத்து பராமரித்து அதன் மூலம் ஊருக்கு உதவி செய்கின்றார். கால்நடைக்கு நல்ல தீவனம் கொடுக்க வேண்டும் என்று கினியாம்புல் உற்பத்தி செய்வதற்கான மாதிரித் திட்டத்தையும் ஆரம்பித்திருக்கிறார்.

### மீன்வளம்

உணவு உற்பத்திப் பெருக்கில் அக்கறை கொண்டவர் இவர். மீன் வளத்தைப் பெருக்குவதில் முயற்சி மேற்கொண்டுள்ளார். தனது சொந்தக் குளத்தில் சுமார் 3,000 மீன் குஞ்சுகள் விட்டு வளர்த்துவருவதுடன், பஞ்சாயத்துக்குச் சொந்தமான எல்லாக் குளங்களிலும் மீன் குஞ்சுகள் விட்டு வளர்ப்பதற்கான ஏற்பாடுகளும் செய்து வருகின்றார்.

தோட்டக் கலையில் இவருக்கு அலாதிப் பிரியம். இவரது தோட்டத்தில் தென்னையும், வாழையும், பலாவும் இன்னோரன்ன யாவும் செழித்தோங்கி நிற்கும் காட்சி இவரது முயற்சிக்கு ஒரு சாட்சியாகும். அழகுக்காக மட்டும் தோட்டம் இருக்கக்கூடாது என்ற கொள்கையை உடையவர். ஆகவே, எந்த ஒரு இடத்தையும் வீணாக்காமல், கத்தரி, தக்காளியும், இன்னும் பல காய்கறிகளும் பயிரிட்டிருக்கிறார். இதில் சென்ற 26—1—63 தேதி அன்று தஞ்சை மாவட்டக் கலெக்டர் அவர்களால் நட்ட "திராட்சை" கொடி நன்கு வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தவிர, பழத்தோட்டம் ஒன்று அமைக்கவும் ஏற்பாடு செய்து வருகிறார். இதுபோலவே தனது பஞ்சாயத்து முழுவதும் ஒரு பொழில்தோட்டமாக வேண்டுமென்று விழைகிறார். இதுவரையிலும் 200 தென்னம்பிள்ளைகள் அகலமான பாடைகளிலும் பின்புறம்போக்குகளிலும் நடப்பட்டுள்ளன. பசுந்தாள் உரம் உற்பத்திக்கும் மரங்கள் வளர்ப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவர் தேனீயும் வளர்க்கிறார்.



கிராமத்தொண்டர் படை அணிவகுப்பு.

விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த பஞ்சாயத்தின் கூட்டுறவுச் சங்கம் சீரிய முறையில் செயலாற்றி வருகின்றது. இதன் மூலம் சுலபத்தில் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதுடன், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதலும் செய்யப்படுகிறது. இத்துடன் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பண்ணைத் திட்டம் பெற்றுள்ள 200 விவசாயிகள் பயன் பெற்றுவருகின்றனர்.

உணவு உற்பத்திப் பெருக்கத்தில் கம்போஸ்ட் உரத் தயாரிப்பு முக்கியபங்கு வகிக்கிறது. இத்துறையில் இப்பஞ்சாயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்து கம்போஸ்ட் மூலம் இந்த ஆண்டு 200 டன் களைவ உரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இன்னும் விஸ்தரிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### கல்வியும் சமூகக் கல்வியும்

இப்பஞ்சாயத்தில் இரண்டு யூனியன் பள்ளிகளும் ஒரு ஹரிஜன நல ஆரம்பப் பள்ளியும் உள்ளன. இத்துடன் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் சென்ற ஆண்டு முதல் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பள்ளிகளின் வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பல வழிகளில் இவர் உதவி புரிந்து வருகின்றார். மதிய உணவு திட்டத்திற்காக இரண்டு ஏக்கர் நஞ்சை நிலங்களை அன்பளிப்பாக கொடுத்துள்ளார். சமூகக் கல்வி நிலைய மன்றம் நடைபெற்று வருகிறது. கிராம வானொலி மன்றமும், வாசகசாலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

கிராமத் தொண்டர்படை அமைப்பில், இப்பஞ்சாயத்து முன் நிற்கிறது. தொண்டர் படையின் மூன்று அணிகளிலும் 100 பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பெண்கள் அணியில் 30 பேர்கள் உள்ளனர். காவல் அணியைச் சேர்ந்த 50 தொண்டர்களுக்கு 4 தினங்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. உடற்பயிற்சி, கட்டுப்பாடு, முதல் உதவி, தீயணைப்பு, ஊர்க்காவல் முதலிய வேலைகளின் பயிற்சி அளிக்கப்பட்டது.

கிராமங்கள் முன்னேற வேண்டுமானால், பள்ளியும், பஞ்சாயத்தும், கூட்டுறவுச் சங்கமும் நல்ல முறையில் இயங்கவேண்டுமென்பது இன்றியமையாதது. இப்பஞ்சாயத்தில் இம்மூன்று அங்கங்களும் செவ்வனே செயல்படுகின்றன. இப்பஞ்சாயத்தின் வெற்றிக்கு வேறென்ன வேண்டும்?

பஞ்சாயத்து யூனியன் தலைவர் அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.





# மரம் நடுவீர்! வளம் பெறுவீர்!

[திரு ஜே. தயானந்ராவ், பி.எஸ்·சி., (ஹானர்ஸ்), காட்டு வளத்துறை சென்னை].

[மரங்கள் நமது நாட்டின் செல்வம். சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன், நம் பாரத நாட்டை ஆண்ட மாபெருந்தலைவரான அசோகர், குடிமக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளை, ஆர்வத்தோடு செய்ததுடன், நாடெங்கிலுமுள்ள அநேக கல்தூண்களில் தம்முடைய அனுபவ அறிவுரைகளைச் செதுக்கி வைத்துச் சென்றார். அவை இன்னும் நமக்கு வழிகாட்டி நிற்கின்றன. அவர் நிறைவேற்றிய வேலைத்திட்டங்களுள் "பொது ரஸ்தாக்களில் மக்களுக்கும், மிருகங்களுக்கும் நிழல் தரும் மரங்களை நடவேண்டும்; தோப்புக்களை வளர்க்க வேண்டும்" (கல்தூண் சாசனம் : 7) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அசோக தர்மசக்கரத்தை மையமாகக் கொண்டுள்ள பாரத மணிக்கொடியின் கீழ், புதிய பஞ்சாயத்து ஆட்சி நடைபெறுகின்ற இந்நாளில், இச்செய்தியை நினைவூட்டி, கிராமக் காடு வளர்ப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்து, கிராம வளத்தைப் பெருக்குமாறு, தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்]

எல்லாப் பொருட்களின் விலைவாசி ஏறியுள்ளது. பொதுமக்களிடையே விலைவாசி உயர்வு பல சிக்கல்களை உண்டாக்கியுள்ளது. எல்லாவற்றை விட, விறகு விலை உயர்ந்து விட்டது தான் பொதுமக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. நமது நாட்டில் மின்சாரம் பரவாத கிராமங்கள் இன்னும் ஏராளமாக உள்ளன. மண்ணெண்ணெய், அடுப்பெரிக்க, விறகுக்குப் பதிலாக உபயோகப்படுத்துவது என்பது அவ்வளவாகப் பரவவில்லை. இந்த நிலையில், கிராமங்களில், அடுப்பெரிக்க, அந்தந்தக் கிராமங்களுக்கும் விறகு போதுமான அளவு கிடைக்கின்ற வகையில் பஞ்சாயத்துக்கள் திட்டமிட்டு செயல் புரிய வேண்டும்.

காடுகளிலிருந்து விறகு, தீவனம், உரத்திற்கு வேண்டிய பசுந்தழை மட்டுமல்லாமல், பழங்கள், தேன், மரப்பட்டைகளும் கிடைக்கின்றன. மொத்த நிலத்தில், மூன்றில் ஒரு பாகம் காடுகளாக இருக்கவேண்டுமென்பது தேசியக் காட்டு வள அபிவிருத்திக் கொள்கையாகும். தமிழ்நாட்டில் 13·3 சதவிகித நிலப்பரப்பு தான் காடுகள். இது தமிழ்நாட்டின் தேவைக்கு பாதிக்கும் குறைந்த அளவாகும். தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 50,331 சதுர மைல்கள். இதில், 6,655 சதுர மைல்கள் தான் ஒதுக்கப்பட்ட காடுகளின் நில அளவாகும். தமிழ்நாட்டின் ஜனத்தொகை 33,449,000. இந்தக் கணக்குப்படி தமிழ்நாட்டுக் காட்டுப்பரப்பளவு நிலம், தலைக்கு 0·16 ஏக்கர் தான். இந்தியாவுக்கு இது 0·35 ஏக்கர். அமெரிக்காவில் 3·0 ஏக்கர். ஸ்வீடனில் 7·9 ஏக்கர். கனடாவில் 22·2 ஏக்கர்.

நமக்குத் தேவையான விறகு கிட்டத்தட்ட 5·9 மிலியன் டன்களாகும். நம் காடுகள் உற்பத்தி செய்வதோ 1·02 மிலியன் டன்கள் தான். நாட்டின் பரப்பளவு மட்டும் போதிய அளவு இல்லை என்பதல்ல; காடுகள் இருக்கின்ற நிலையும் திருப்திகரமானதாக இல்லை. நமது நாட்டில் பெருவாரியான மக்கள் இன்னும் வீட்டு உபயோகத்திற்கு விறகைத்தான் உபயோகிக்கின்றனர். நமக்குள்ள இந்தக் காடுகளோ எனில், வெறும் புதர்களும் முட்களும் நிறைந்த திறந்த வெளிகளாகவே உள்ளன. இந்த நிலையில், நாம் காடுகளிலிருந்து பெறுகின்ற வசதிகள் எவ்வளவு கீழ்நிலையில் உள்ளன என்பதை மேலே காட்டியுள்ள புள்ளி விவரங்கள் கூறாமல் கூறுகின்றன.

### மரங்கள் வைத்துப் பயிர் செய்யவேண்டும்

ஒதுக்கப்பட்ட காடுகள், நிலங்கள், ஒதுக்கப்படாத காடுகள், நிலங்கள் இவைகளிலிருந்து, விறகுக்கு, அடுப்புக்கரிக்கென்று கிட்டத்தட்ட 2,00,000 டன்கள் மரமானது ஆண்டுதோறும் அகற்றப்பட்டு வருகின்றது. இன்னும் எஞ்சியுள்ள தேவையானது, காடுகள் என்று வகைப்படுத்தப்படாத நிலங்களிலிருந்தும், தனிப்பட்ட துறையிலிருந்தும், உரத்திலிருந்தும் அல்லது நிலத்திற்கு உபயோகப்படுத்தப்படும் விறகுக்கு மாற்றாக உபயோகப்படுத்துவதின் மூலமும் சமாளிக்கப்படுகிறது. நிலத்திற்கு உபயோகப்படுத்தப்படும் உரமானது விவசாயம் செய்யப்படுகின்ற நமது நிலங்களை மேலும்வளப்படுத்த பயன்படுத்தப்படவேண்டியவையாகும். ஆகவே, நாம் கிராமங்களைச் சுற்றியும், அருகாமையிலும் எங்கெங்கு இடங்கள் கிடைக்கின்றனவோ, அங்கெல்லாம், மற்ற உபயோகங்களுக்கு அவைகளைப் பயன்படுத்தாமல், மரங்கள் வைக்கவும் மர வகைகளை உற்பத்தி செய்யவுமே பயன்படுத்த வேண்டும்.

இப்படிக் கிராமக் காடுகளை ஏற்படுத்துதல் என்ற தேவையானது முன்பே, ஆக்ராவில் 1956-ல் நடைபெற்ற வனமகோற்சவம் பற்றிய கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும், இந்த விஷயமானது, வலியுறுத்தப்பட்டே வருகிறது. இதன் பயனாக, 50 கோடி ரூபாய் செலவில் 78 மிலியன் ஏக்கர் நிலங்களில் மரங்களைப் பயிரிடுவது என்ற ஒரு விஸ்தாரமான திட்டத்தினை, இந்திய அரசாங்கம், மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்த்தது.

இதன்படி, சராசரி ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கு, இப்படி மரங்கள் பயிரிட வேண்டிய நிலங்கள் 800 எக்கர் என்ற அளவில் இருக்கும்.

### கிராமக் காடு வளர்க்கும் திட்டம்

இந்த சந்தர்ப்பத்தில், நம்முடைய மாநிலத்தின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளைப் பற்றிச் சொல்வது பொருத்தமுடையதாகும். இரண்டாவது திட்டக் காலத்திற்கு மட்டும், 0.90 லட்சம் ரூபாய் கிராமக் காடு வளர்க்கும் திட்டத்திற்கு செலவிடப்பட்டது. இதன் மூலம் 2,345 எக்கர் நிலம் மட்டும்தான் இதற்காகப் பயன்படுத்தப் பட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில்—கிராமக் காடு வளர்த்தல் திட்டம் வனவளத் துறையின் பெரிய வேலைத்திட்டமாகும். வனவளத் துறைக்கு ஒதுக்கப் பட்டுள்ள மொத்தம் 215 லட்சம் ரூபாயில், 75 லட்சம் ரூபாய் இதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,67,000 எக்கர் நிலங்கள், வட்டாரத்திற்கு வருடத்திற்கு 100 எக்கர்கள் என்ற அளவில் கவியப் பெறும். விறகு, சிறுமூங்கில், பசுந்தழை ஆகிய கிராம மக்களின் தேவைகளைச் சமாளிக்க இந்தத் திட்டம் மூலம் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம், கிராம மக்கள், பாதுகாக்கப் பட்ட காடுகளை நம்பிக்கொண்டிருப்பதை மெள்ள மெள்ளக் குறைக்கவும் முடியும். அத்துடன், பயிர்தரும் பயிர்களை உற்பத்தி செய்தலின் கீழ், 3,000 எக்கர் நிலப்பரப்பளவில் சவுக்கு வைப்பதற்காக 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம், மணற்பாங்காக உள்ள படுகைகளிலும், ஆற்றுப் படுகைகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் சவுக்கு வைத்து வளர்ப்பதாகும். இதன் மூலம் மாநிலத்தின் விறகு கிடைக்கின்ற அளவை மேலும் அதிகப்படுத்தவும், மணல் சரிந்து போகாமலும் இருக்கவும் செய்யலாம்.

காடு சீர்திருத்தம் என்ற அளவில், மற்ருெரு திட்டத்தின் கீழ், மற்றும் 7 லட்சம் ரூபாய்க்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன்படி, முன்பு பஞ்சாயத்து காடுகளாகவும், ஜமீன்காடுகளாகவும் இருந்த பிரதேசங்களில் சிறு குன்றுப் பிரதேசம் 18,900 எக்கர்களில், விறகு தீவனம் ஆகியவைகளுக்கான பயிர்களை வைத்துப் பயிராக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணியங்குறிச்சியில் கிராமத் தொண்டர் படையினர் தென்னங்கன்று நடுகிருர்கள்.



மண்ணரிப்பைத் தடுத்து நிறுத்தலும், விறகு கிடைக்கக் கூடிய ஆதாரங்களை அதிகப்படுத்துதலும், இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்பு

கடந்த சில ஆண்டுகளில், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் வசம் அதிகப்படியான அதிகாரங்களும், பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மக்களின் உருப்படியான தேவைகளைப் புரிந்துகொண்டு, அவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மிகவும் திறம்பட ஏற்றுப் பணியாற்றி வருகின்றன.

கிராமக்காடு வளர்ப்புத் திட்டத்தின் முன்னேடி வேலைத் திட்டமாக, கிராமக்காடு வளர்ப்புத் திட்டமானது செங்கற்பட்டு மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம், ஸ்ரீபெரும்புதூர் வட்டாரங்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி, மேல்மலையனூர் வட்டாரங்களிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வெம்பாக்கம், பெரணமல்லூர் ஆகிய வட்டாரங்களிலும் துவக்கி வைக்கப்பட்டது. இந்த வேலைத் திட்டம் வெற்றியுடன் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, ஏரி குளங்களின் படுகைகளில் மரங்கள் வைக்கப்பட்டு நல்ல முறையில் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சில வட்டாரங்களில் இரண்டு வருடங்கள் வைத்து பயிராக்கப்பட்ட மரங்கள் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த ஆண்டு, இத்திட்டமானது செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் மேலும் 66 வட்டாரங்களில் இந்த வேலை துவங்கப்பட்டுள்ளது. படிப்படியாக இந்த வேலைத்திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது. 1966-ம் ஆண்டு மார்ச் முடிவுக்குள், 375 வட்டாரங்களிலும் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் செயல்பட வேண்டும் என்பதே காட்டு வளத் துறையின் நோக்கமாகும்.

### அக்கறையுடன் பாடுபடவேண்டும்

இந்தத் திட்டம் தொடங்கி $1\frac{1}{2}$ வருடங்கள்தான் ஆகின்றன. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்க இன்னும் மூன்று ஆண்டுகள் உள்ளன. ஆரம்பத்தில் முதல் இரண்டாண்டுகள் பயிர்களை வைத்துப் பாதுகாப்புடன் காட்டு வளத்துறையில் வேலை முடிந்து விடுகிறது. அதன்பிறகு உள்ள பொறுப்பெல்லாம் பஞ்சாயத்து ஸ்தாபனங்களைச் சேரும் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டமானது வருகிற ஆண்டுகளில் மிகவும் செம்மையான முறையில் செயல்படவும், அதற்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை அடைவதற்காப் பாடுபடவும் முடியுமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். ஒவ்வொரு கிராமமும், பஞ்சாயத்து யூனியனும், சிறு மூங்கில்கள், விறகு, தீவனம், பசுந்தழை உரம் ஆகியவற்றில் தன்னிறைவு நிலையைப் பெற்றுவிட்டால், மாநிலத்தில் ஒதுக்கப்பட்ட காடுகளிலிருந்து கிடைக்கும் ஆதாரங்கள் எல்லாம், பேப்பர் தயாரித்தல், ரயான், பதனிடுதல் போன்ற பலமுறைகளுக்கு வேண்டிய தொழில் துறைக்கான தேவைகளைச் சமாளிக்கப் பயன்படுத்தப்படலாம்.

# உழைப்பின் வெற்றி

(திரு. க. குழந்தைவேல், பி.எஸ்ஸி., புள்ளி விவர அலுவலர், பஞ்சாயத்து யூனியன், செங்கம், வட ஆர்க்காடு.

**[வெற்றியின் அடித்தளம் சலியாத உழைப்பு. உழைத்தவர் தாழ்ந்ததுமில்லை, வீழ்ந்ததுமில்லை. இந்தக் கட்டுரை மூலம் அறிமுகப்படுத்தப்படும் திரு. இராமானுஜ தாசர், உழைப்பால் வெற்றி கண்டவர். உங்கள் கிராமத்தில், வட்டாரத்தில், விவசாயம், கல்வி, சமூகம் ஆகிய துறையில் ஆக்கப்பணி புரிந்து வெற்றி கண்டவர்களைப்பற்றி சுருக்கமாக எழுதி அனுப்புங்கள், மகிழ்ச்சியுடன் வெளியிடுகிருேம்.**

**ஆசிரியர்.]**

அவர் ஒரு எளிய விவசாயி. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர். அவர் பெயர் இராமானுஜ தாசர். உழைப்பிலே வெற்றி கண்டவர் என்று கேள்விப்பட்டு, அவரைக் காணச் சென்ருேம். பழகுவதற்கு இனிமையானவரான அவர் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ருர். சிறிது நேரம் அவருடன் உரையாடினேம். உரையாடலைச் சுருக்கமாக முடித்துக் கொண்டு தனது வெற்றியின் களமாகிய வயலுக்கு எங்களை அழைத்துச் சென்ருர்.

### கரும்பா ! நெல்லா ! !

உயர்ந்து வளரும் கரும்பு கீழே விழாத வண்ணம் மூங்கில் விட்டம் கட்டிவிடுவதைப் பார்த்துள்ளேன். ஆனல் நெல் பயிர்க்கு மூங்கில் விட்டம் கட்டியதை நான் இதுவரை எங்கும் பார்த்ததுமில்லை. பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவுமில்லை. இவர் நிலத்திலோவெனில், கதிர் வந்தபோது நெல் பயிரின் உயரம் 5 அடி முதல் $6\frac{1}{2}$ அடி வரை வளர்ந்திருந்தது. சில கதிர்கள் எண்ணிப்பார்த்தபோது 340 மணிகள் முதல் 612 வரை இருந்தன.

" முன்னூறு நெல் இருந்தால் முழுவிளைச்சல் " என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இங்கோவெனில் 612 மணிகள் வரை இருக்கக் கண்டு ஆச்சரி பட்டேன்.

அங்குச் சென்றிருந்த விவசாய டிபுடி டைரெக்டர், வட்டார வளர்ச்சி அலுவலர், விவசாய வளர்ச்சி அலுவலர் ஆகியவர்களோடு நானும் அந்த நெல் வயலில் இறங்கிய போது, நெல் பயிர்கள் எங்களைவிட உயரமாக வளர்ந்திருப்பதைக் கண்டு வியந்தோம்.

அரசாங்கம் நடத்தும் விவசாய பண்ணைகளில் வேண்டுமானல் இதைவிட அதிகமாகச் சாதிக்கும் வாய்ப்பு உண்டு. ஆனல் தனிப்பட்ட விவசாயி ஒருவர் இவ்வளவு தூரம் விவசாயத்துறையில் முன்னேறியுள்ளார் என்று பார்க்கும் போது அவருடைய முயற்சியைப் பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கின்ருேம். அடுத்தபடி எல்லா விவசாயிகளும் இம்மாதிரி விவசாயம் செய்ய முடியுமா ? என்ற வினவும் எழுகின்றது. ஏன் முடியாது என்ற பதிலும் வரத்தான் செய்கின்றது. அவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட சில புள்ளி விவரங்களை கீழே தருகின்றேன். அவற்றைப் பார்க்கும்போது முதலில் வியப்பாகத்தான் இருக்கும். ஆனல், " முயன்ருல் முடியாதது ஒன்றுமில்லை " என்பதை நிருபிக்கும் அளவுக்கு அவர் புள்ளி விவரங்களை அவ்வப்போது ஒழுங்காக எழுதி வைத்துள்ளார்.

### சுண்ணும்பு மண்

எக்கர் ஒன்று ரூ. 112 வீதம் 16 எக்கர் நிலம் 1946-ம் ஆண்டு திரு. தாசர் அவர்கள் வாங்கியுள்ளார். இந்த நிலம் முதலில் வெறும் சுண்ணும்புக்கல் மயமாகக் காணப்பட்டதாம். எல்லாரும் இந்த நிலத்தைப் பார்த்து, சுண்ணும்பு காளவாய்ப் போடத்தான் பயன்படும். விவசாயம் செய்ய இந்த நிலம் பயன்படாது என்று சொல்லிவிட்டார்களாம்.

ஆனல் நிலத்தை வாங்கிய தாசரோ மனம் தளரவில்லை. இரவும் பகலும் அயராது உழைத்தார். அவர் உழைப்பு வீண்போகவில்லை. அந்த நிலத்தில் ரூ. 1,200 செலவு செய்து இரண்டு கிணறுகள் வெட்டி ஒரு மின்சார பம்புசெட்டும், ஒரு எண்ணை பம்பு செட்டும் வைத்துள்ளார். நெல் முதல் மிளகாய் வரையில் எல்லாவற்றையும் நவீன முறையிலேயே செய்து வருகின்ருர். வட்டார வளர்ச்சி அலுவலக பணியாளர்கள் சொல்லிவரும் முறைகளையெல்லாம் கையாளுவதோடு தனக்கென ஒரு வழியை வகுத்துக்கொண்டு மிகுந்த ஆராய்ச்சியோடு விவசாயம் செய்து வருகின்ருர்.

வெறும் சுண்ணும்புக்கல் என்று கூறிவந்த நிலத்தில் இன்று எக்கர் ஒன்றில் "பத்தாயிரம் பவுண்டு" நெல்வரை. விளைச்சல் எடுக்கின்ருர். அரசாங்கத்தார் கொடுக்கும் மிளகாய் விதையைக் கொண்டு மூன்று எக்கரில் பயிர்

செய்ததில் சுமார் ரூ. 8,000 வரை இலாபம் கிடைத்தது என்று சொல்லும்போது உண்மையிலேயே ஆச்சர்யப்பட வேண்டியுள்ளது.

தாசர் அவர்கள் நெல் பயிர் செய்த விவரங்களைப் பற்றிக் சேகரித்துள்ள சில தகவல்களை கீழே கொடுக்கின்றேன்.

### விதை நெல் பொறுக்கி எடுத்தல்

"பொறுக்கு விதை பெருக்க விளையும்" என்பது போன்று, நாற்றுவிட பொறுக்கு விதைகளையே பயன்படுத்த வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுக்கு விதையிலும் பதர் நெல் இருக்குமல்லவா? எனவேதான் தாசர் கீழ்கண்ட முறையைக் கையாண்டுள்ளார். இதற்கு செலவோ மிக குறைவு. ஆனால் விளைவோ மிக அதிகம் என்று தெரியவருகின்றது.

மூன்று பெண் ஆட்களைக் கொண்டு "6025" என்ற சிறுமணி நெல் 5 படி பொறுக்கி எடுக்க ஒரு நாள் ஆகியுள்ளது. பெண் ஒன்றுக்கு கூலி 8 அணு வீதம் இதற்கு செலவு ரூ. 1–50 ஆயிற்றும்.

நாற்றுவிட ஒரு வாரத்திற்கு முன்பு பொறுக்கி எடுத்த நெல்லில் 100 நெல் மணிகள் எடுத்து ஒரு (சிறிய வெள்ளை துணியில் முடிந்து, 24 மணி நேரம் வரையில் தண்ணீரில் அமிழ்த்து வைக்கப்பட்டது. பின்பு அதை எடுத்து துவாரமுள்ள கொட்டாங் குச்சியில் துணியோடு வைத்துவிடப்பட்டது.

மூன்று நாட்கள் கழித்து ஊரவைத்த 100 நெல்லையும் துணியோடு வெளியே எடுத்து, கீழே கொட்டி ஒரு குச்சியின் உதவியால் முளைப்பு எண்ணப்பட்டது, 100-க்கு 97 நெல் முளைத்திருந்தனவாம். கண்ணுங் கருத்துமாக பொறுக்கி எடுக்கப்பட்ட 100 நெல் மணிகளில் 3 நெல் பதர் என்றுல், பொறுக்கு விதை அல்லாத சாதாரண நெல்லை நாற்று விடுவதால் எவ்வளவு சதவீதம் முளைக்காமல் வீணுகின்றன என்று ஒவ்வொரு விவசாயியும் எண்ணவேண்டும்.

### பதர் நெல்லை நீக்குதல்

பொறுக்கு விதை, நெல்லாக இருந்தாலும்கூட பதர் நெல்லை நீக்காமல் விதைக்கக்கூடாது. அரைப்படி சாதாரண உப்பு எடுத்து மூன்றுபடி தண்ணீரில் கரைத்துக்கொள்ளப்பட்டது. பின்னர் பொறுக்கி எடுக்கப்பட்ட 5 படி சிறுமணி (6025) (ஒருபடியில் சுமார் 73,340 வீதம் 5 படியில் 366,700 நெல் மணிகள்) நெல்லை உப்பு கரைந்த நீரில் கொட்டப்பட்டன. மிதந்து வந்த பதரான நெல்லை நீக்கி சுத்தம் செய்து உயர்த்தப்பட்டது. எவ்வளவு பொறுமையாக எண்ணி கணக்குப்பார்த்துள்ளீர்கள் என்று நான் கேட்ட போது "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்ற முது மொழியைச் சொல்லி என்னை பேசாமல் செய்து விட்டார்.

### நாற்றங்கால் தயாரிப்பு

"சாண் உழவு முழ எருவுக்குச் சமம்" என்பது போல், 25 செண்ட் நிலத்தை (சுண்ணும்பு கலந்த மண்) தண்ணீர்ப் பர்ய்ச்சி உழவுச்செய்யப்பட்டது. கம்போஸ்ட் உரம் 5 வண்டியும், எருக்கம் தழை ஒரு வண்டியும், மாட்டு எரு 3 வண்டியும் போடப்பட்டு உழவு செய்யப்பட்டுள்ளது. நாற்றங்காலுக்கு மட்டும் 30 சால் உழவு செய்யப்பட்டது என்று சொன்ன போது, நிலத்தை நன்ருக உழுவதின் அவசியம் எவ்வளவு முக்கியம் என்று ஒவ்வொரு விவசாயியும் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று சொல்லாமலேயே விளங்குகின்றது. நெல் நாற்றுவிடும் முன்னர் சூப்பர் பாஸ்பேட் 26 பவுண்டு போட்டு, 2 உழவு உழுது சமன்செய்யப்பட்டது. பின்னர் 5 ஆட்களைக் கொண்டு மேலே மிதந்த குச்சி, சாணி முதலியவைகளைக் கையாலேயே அமுக்கப்பட்டனவாம்.

### விதை நெல் ஊர வைத்தல்

ஐந்து படி சிறுமணி நெல்லையும் எடுத்து கோணிப்பை ஒன்றில் போட்டு, ஓர் அவுன்ஸ் "அக்ராசான்" மருந்து தூவி நன்ருகக் குலுக்கப்பட்டது. கண்ணுக்குத் தெரியாத சிறிய நோய்க்கிருமிகளை "அக்ராசான்" மருந்து ஆரம்பத்திலேயே கொன்று விடுவதால், பின்ருல் கொலை நோய் போன்றவைகள் வராமல் பயிர் பாதுக்காக்கப்படுகின்றது. மருந்து கலந்த நெல்லை கோணிப்பையோடு 2 மணி நேரம் வரை தண்ணீரில் அமிழ்த்து வைக்கப்பட்டது. அதன் பிறகு அதை வெளியில் எடுத்து, காற்ருேட்டமுள்ள இடத்தில் வெய்யில் படாதபடி வைத்திருந்து மூன்ருவதுநாள் நாற்று விடப்பட்டது.

### களையெடுப்பு

நாற்று விட்டு சரியாக 27-வது நாளில் களையெடுக்கப்பட்டது. அதன்பின்பு டி.டி.டி. ½ புவுண்டு (D.D.T.), ½ பவுண்டு "காப்பர்சான்" மருந்து ஆகிய இரண்டையும் நன்ருகக் கலந்து ஸ்ப்ரேயர் மூலம் தெளிக்கப்பட்டது. நாற்றுஎடுக்க ஒரு வாரம் இருக்கும்போது ஓர் அவுன்ஸ் "பாலிடால்" என்னும் மருந்து தெளிக்கப்பட்டது.

நவீன முறை சாகுபடி செய்த மூன்று எக்கர் இருபத்தைந்து செண்ட் நிலத்திலும் சஸ்பேனியா விதைக்கப்பட்டது. அது சுமார் 2 அடி உயரம் வளர்ந்திருந்த போது அப்படியே மடக்கி இரும்பு கலப்பையால் மூன்று உழவும், போஸ் கலப்பையால் மூன்று உழவும் உழப்பட்டது.

பிறகு புங்கன் தழை 6 வண்டியும், ஆவாரம் தழை 2 வண்டியும், எக்கர் ஒன்றுக்கு பத்து வண்டி வீதம் போட்டு நாட்டுக்கலப்பையால் உழுது தழைகளை மூடப்பட்டது. மேலும் ஓர் எக்கருக்கு இருபது வண்டி கம்போஸ்ட் உரம் போடப்பட்டது. மொத்தம் 37 உழவுகள் செய்யப்பட்டன. கடைசி உழவில் எக்கர் ஒன்றுக்கு 160 பவுண்டு சூப்பர் உப்பு போட்டு, பிறகு நாற்று நடவு செய்யப்பட்டது.

### நாற்று நடுதல்

"அசிய பயிர் அடர விளையும்" என்ற பழமொழிக் கிணங்க, 9"×9" க்கு இடைவெளிவிட்டு எக்கர் ஒன்றுக்கு நடவு செய்ய பத்து பெண் ஆட்களும், கயிறுபிடிக்க



இரண்டு ஆண்களும் தேவைப்பட்டன. இந்த அளவில் ஓர் எக்கர் நடவு செய்ய (ஒருநாற்று வீதம்) 77,440 நாற்றுக்கள் நடப்பட்டன. எல்லா நாற்றுக்களும் வரிசை கிரமத்தில் நடவு செய்யப்பட்டன. நீண்ட நாள் பயிராயின் 12" × 9" இடைவெளிக்கு 67,240 நாற்றுக்களும், குறுகிய காலப்பயிராயின் இடை வெளி 6"× 4"க்கு, 2,61,360 நாற்றுகளும் தேவைப்படுமாம். திரு. தாசர் அவர்களின் முயற்சியை மிகவும் பாராட்ட கடமைபட்டுள்ளோம். நவீன முறை விவசாயம் செய்யும் போது ஆராய்ச்சியோடு செய்ய வேண்டுமென்பதற்கு இந்தப் புள்ளி விவரம் ஒரு சான்ருகும்.

பாலிடால் மருந்து எக்கர் ஒன்றுக்கு ஒரு பாட்டில் வீதம் தெளிக்கப்பட்டது. மேலும் பூஞ்சக்காளான் நோயால் பயிர் தாக்கப்படாமல் இருக்கவேண்டி முன்னெச்சரிக்கையாக காப்பர்சான் மருந்து இரண்டு பவுண்டு வீதம் எக்கருக்கு அடிக்கப்பட்டது.

### சோகை அறுத்தல்

நோய் முதலியவைகளால் தாக்கப்படாமலிருந்தால் பயிர் வேகமாக வளரும். கதிர் வருமுன்னர் அதிக உயரம் வளர்ந்துவிட்டால், கதிர் வந்த பிறகு கதிர்களைத் தாங்கமுடியாமல் பயிர் கீழே விழுந்துவிடும். எனவே கதிர் வருவதற்கு முன்பு அடிக்கடி சோகை அறுத்துத் தள்ள வேண்டும். நாற்றங்கால் நட்டு 40-வது நாளில் 2½ அடி முதல் 3 அடி வரை சோகை அறுத்துத் தள்ளப்பட்டது. இடையில் கலப்பு உரம் 80 பவுண்டு வீதம் போட்டு உழவு செய்யப்பட்டது.

வயலைச் சுற்றிப்பார்ப்பதற்கு திரு. தாசர் அவர்கள் நாள்தோறும் கூலி 4 அணு வீதம் கணக்கிட்டு மொத்த சாகுபடி செலவில் சேர்த்துக்கொண்டுள்ள கணக்கைப் பார்த்தப்போது மிகவும் வியப்பாகத் தோன்றியது.

நெல் கதிர் கதிர் வந்த போது பயிரின் உயரம் சுமார் 5 அடி முதல் 6½ அடி வரை வளர்ந்திருந்தது. அப்போது பயிர் 15 முதல் 60 வரை கிளைக்கப்பெற்று நல்ல கம்பீரமாக நின்று வானத்தைப்பார்த்துக்கொண்டு இருந்தது. மேலும் சில கதிர்களை எண்ணிப்பார்த்தப் போது கதிர் ஒன்றில் 340 முதல் 612 மணிகள் வரை இருந்தன. இது மிகவும் ஆச்சர்யப்பட வேண்டிய விஷயமாகும்.

பயிர்கள் உயரமாக வளர்ந்திருந்தமையாலும், கதிர்களில் அதிக அளவு நெல்மணிகள் இருந்தக் காரணத்தாலும் கீழே சாய்ந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. கீழே சாயாமல் இருக்கவேண்டி, கரும்புக்கு மூங்கில் விட்டம் கட்டுவதுபோல், இந்தப் பயிர்க்கும் வரிசை வரிசையாக விட்டம் கட்டப்பட்டிருந்தது. இதற்காக எக்கர் ஒன்றுக்கு செலவு ரூ. 18 ஆயிற்றும்.

### செலவும், வரவும்

மேற்சொன்ன விதங்களில் நெல் பயிரிட்ட திரு. இராமனுஜ தாசர் அவர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 312–40 செலவு ஆயிற்றும். (அவ்வப்போது செலவு செய்த விவரங்களைத் தேதிவாரியாகத் தனித்தனியாகக் குறித்து வைத்துள்ளார்.) ஆனல் எக்கர் ஒன்றுக்கு 'பத்தாயிரம் பவுண்டு' நெல் விளைந்துள்ளது. அறுவடை செய்யும்போது விவசாய இலாகா சிப்பந்திகள் உடனிருந்து அளவிடப்பட்ட அளவாகுமிது. மொத்தம் விற்பனைச் செய்ததில் ரூ. 1,060-க்கு விற்கப்பட்டதாம். எனவே நிகர இலாபம் எக்கருக்கு ரூ. 747–60 கிடைத்துள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, உத்தியோகம் செய்கிறவர்கள்கூட அதை விட்டுவிட்டு விவசாயம் செய்ய போய்விடலாம் போல் தோன்றுகிறதல்லவா?

---

## பிழை நீக்கி எழுதுவோம்

புதிய பஞ்சாயத்து ஆட்சியில், பல வெளியீடுகள், அழைப்பிதழ்கள் முதலியன அச்சாகி வருகின்றன. அவை தவிர, பஞ்சாயத்து அலுவலகங்களில், நிர்வாக சம்பந்தமான பல பதிவேடுகள், கணக்குப் புத்தகங்கள், பேரேடுகள் முதலியன எழுதப்பட்டு வருகின்றன. இவற்றில் எல்லாம், பெருவாரியாக, சில எழுத்துப் பிழைகள் இருப்பதைக் காண நேரிட்டது. சில சாதாரண சொற்கள், தவருகக் கையாளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பொது ஜனத் தலைவர்களும் ஓரளவு இதில் கவனம் செலுத்தினுல், எழுத்துப் பிழைகள் பலவற்றை எளிதில் தவிர்க்கலாம். இதற்கான சில குறிப்புகளை "கிராமநலம்" தொடர்ந்து வெளியிடும்.

### செலவும் தொகையும் :

சிலவு என்று எழுதுவது, தவறு. செலவு என்பதுதான், சரி. அதாவது செல்வது செலவு. வருவது வரவு. ஒருவரிடமிருந்து செலவாவது செலவு. இதே போல, துகை என்று எழுதுவது, தவறு. தொகை என்பது சரி. தொகுக்கப்படுவது, தொகை.

தமிழ் மொழிக்குள்ள ஒரு சிறப்பு என்னவென்றுல், ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிலும் உள்ள பகுதிக்கு (அதாவது, முதலில் உள்ள சொல் உறுப்புக்கு) பொருள் உண்டு. ஒவ்வொரு சொல்லையும், "பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்", என்று நுட்பமாக ஆராய்ந்து கூறுவது, தமிழ் இலக்கண மரபு. பேச்சு வழக்கில் இல்லாவிட்டாலும், எழுதும் போதாவது, இந்த மரபைக் கடைப்பிடிப்பது, நலம்.

# கிராமத் தொண்டர் படை

[கிராமத் தொண்டர் படை இவ்வாண்டு குடியரசு தினத்தன்று பாரத நாடெங்கும் ஆரம்பிக்கப் பட்டு சிறப்புடன் பணியாற்றி வருகின்றது. தமிழ்நாட்டில் கிராம மக்கள் இவ் விஷயத்தில் காட்டும் உற்சாகம் பாராட்டுதலுக்குரியது. தமிழ்நாட்டைப் போலவே, நமது நாட்டில் மற்ற மாநிலங்களி லும் கிராம்த்தொண்டர் படை, பாதுகாப்பு உழைப்பு பாங்க் அமைக்கப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களிலும் இவ்வமைப்புகள் பற்றிய விவரங்களைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

—ஆசிரியர்]

கிராமத்தொண்டர் படை நம் நாடெங்கும் குடியரசு தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டு, மகத்தானதொரு இயக்க மாக மலரத் தொடங்கியுள்ளது. மெள்ள மெள்ள கிராம மக்கள் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களைப்புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். இதுவரை கிடைத் துள்ள புள்ளி விவரங்கள் திருப்திகரமாகவே உள்ளன.

**ஆந்திரப் பிரதேசம்.**—இதுவரையில், 88,000 பேர் கிராமத் தொண்டர் படையிலும், 76,000 பாதுகாப்பு உழைப்பு பாங்கிலும் சேர்ந்துள்ளனர். கிராமங்களிலிருந்து உழைப்பு தானத்தின் மூலம் 33,000 ரூபாய் நன்கொடை யாக வசூலிக்கப்பட்டுள்ளது. 15,000 கிராமத்தொண்டர் படை அமைப்புக்கள், ஒரு அமைப்புக்கு 500 பேர் என்ற அளவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இதன்படி, சுமார் 75 லட்சம் கிராம மக்கள் இந்தப் படையில் தொண்டாற்ற முன்வருவர். கிராமப் புறங்களில் வசிக்கும் 80 லட்சம் மக்களும் இந்த அமைப்பில் பங்குகொண்டு பணி ஆற்றினால், ஓர் ஆண்டில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்புள்ள உழைப்பைச் சேகரித்துவிடமுடியுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

**அசாம்.**—இந்த மாநிலத்தில் உள்ள 2,535 பஞ்சாயத்துக்களிலும் கிராமத் தொண்டர் படை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்படை பற்றிய அறிவு விளக்கப் பணி இப்பொழுது நடைபெற்று வருகிறது.

**பீகார்.**—பீகார் மாநிலம் இத்திட்டத்தை மிகவும் உற் சாகத்துடன் நடத்தி வைக்க முன் வந்துள்ளது. உள் நாட்டுப் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்தும் முறையில் இத்திட்டத்தின் வேலைத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. உற்பத்தி முயற்சியும், அறிவு விளக்கப்பணி யும் இன்னும் கணிசமான அளவில் செய்யப்படவில்லை. 10,000 பஞ்சாயத்துக்களில் பரவிக்கிடக்கும் 30 லட்சம் பேர்களுக்குமேல் கிராமத்தொண்டர் படை திட்டத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். கிராம மக்களிடையே இந்த அமைப்பு பற்றிய எல்லா விளக்கங்களும் எடுத்துச் சொல்லப்படுகின்ற முறையில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பதல்பூர், தியோகூர், சோனேபூர், நாஞ்சி மற்றும் பல இடங்களில் பயிற்சி முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**குஜராத்.**—மாநிலத்திலுள்ள 10,000 பஞ்சாயத்துக் களில் உள்ள மக்கள் சிறு சிறு கூட்டமாகக் கூடி சபதம் எற்றுக்கொண்டுள்ளனர். ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் னுடைய வேலைத் திட்டத்தை வகுத்துக்கொண்டுள்ளது.

**ஜம்மு-காஷ்மீர்.**—இந்த மாநிலத்தில் சுமார் 1,000 பஞ்சாயத்துக்கள் உள்ளன. பஞ்சாயத்துக்கள் ஏற்பாடு செய்த குழுக்கூட்டங்கள் மக்களிடையே நல்ல விழிப்பு உணர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. கிராமத்தொண்டர் படையின் எண்ணிக்கை இரண்டு லட்சத்திற்கு மேல்போய் விட்டது. தரிசாகக் கிடக்கும் நிலங்களை வேளாண்மைக்குள் கொண்டுவர வேண்டிய பிரச்னை இந்த மாநிலத்தில் உள்ளது. இந்த வேலையை கிராமத் தொண்டர் படை ஏற்று நடத்தி உற்பத்தியை மேலும் பெருக்க பாடுபடும்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கிராமத் தொண்டர்படை அணிவகுப்பு.





**கேரளம்.**—மாநிலத்திலுள்ள 922 பஞ்சாயத்துக்களிலும் கிராமத்தொண்டர் படையும், பாதுகாப்பு உழைப்பு பாங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பஞ்சாயத்துக் களும் 200 பேர் என்ற இலக்கினை மாநில அரசு வரையறுத்துள்ளது. இதுவரையில் 127,997 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 23,000 ரூபாய் அளவில் நன்கொடை, உழைப்பு நன்கொடையின் பணம் மதிப்பீடாக கிடைத்துள்ளது. இத்துடன் பாதுகாப்பு உழைப்பு பாங்கால் உழைப்பு தானம் தர 66,000 பேர் உறுதி மொழி அளித்துள்ளனர். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு தளபதி நியமனம் செய்துள்ளனர். அத்துடன் வார்டு வாரியாக அமைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு பொறுப்பாக 70,29 உபதளபதிகள் நியமனம் செய்யப் பட்டுள்ளனர். சில பஞ்சாயத்துக்களில் பெண் தளபதிகள் தலைமை ஏற்று நடத்துகிறார்கள்; தனியாகப் பெண்கள் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**மத்தியப் பிரதேசம்.**—10,000 பஞ்சாயத்துக்கள் இந்த மாநிலத்தில் உள்ளன. பெருவாரியான பஞ்சாயத்துக் களில் குடியரசு தினத்தன்று கிராம மக்கள் கூடி சபதமேற்றுக்கொண்டுள்ளனர். இதுவரையில் 872,000 பேர் கிராமத் தொண்டர் படையில் சேரப் பதிவு செய்துள்ளனர்.

**தமிழ்நாடு.**—மாநிலத்தில் உள்ள 12,522 பஞ்சாயத்துக் களிலும் குடியரசு தினத்தன்று கூட்டங்கள் நடைபெற்றன. கிராம மக்கள் சபதமேற்றுக்கொண்டு, கிராமத்தொண்டர் படை அமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டு கிராம மக்கள் இந்தப் படையில் சேர மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரையில், சுமார் 1 லட்சத்து 76 ஆயிரம் பேர் கிராமத்தொண்டர் படையிலும், 14,000 பேர் பாதுகாப்பு உழைப்பு பாங்கிலும் சேர்ந்துள்ளனர். 360,000 கிராம மாதர் கொண்ட ஒரு தனியான பெண்கள் பகுதி ஏற்படுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பாரத நாட்டிலேயே இந்த மாதிரி அமைப்பு இப்பொழுது தான் முதலாக அமைக்கப்பெறுகிறது. 3,000 பெண் களுக்குமேல் கிராமத்தொண்டர் படையில் பெண்கள் பகுதியில் இப்பொழுதே சேர்ந்துவிட்டனர்.

**மகாராஷ்டிரம்.**—ஜில்லா பரிஷத்துகள் மூலமாக, இந்தத் திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்கள் காட்டும் உற்சாகம் திருப்திகரமாக உள்ளது.

**மைசூர்.**—இந்த மாநிலத்தில் 75,000 பஞ்சாயத்துக்கள் உள்ளன. மூன்று லட்சத்திற்குமேல், கிராமத் தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டுள்ளனர். எல்லாக் கிராமங்களிலும் பூர்வாங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. கிராம மக்களின் உழைப்பு தானத்தைக்கொண்டு, திட்ட ரீதியாக, பல வேலைகள் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**ஒரிசா.**—2,300 பஞ்சாயத்துக்களிலும் கிராம மக்கள் கூடி, குடியரசு தின சபதத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். கிராமத் தொண்டர் படை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

**பஞ்சாப்.**—மாநில பூராவும், கிராமத்தொண்டர் படை அமைக்கப்பட்டுள்ளது. "உழைப்பு தானம் தருகிறோம்". என்று கிராம மக்கள் உறுதிமொழி அளித்துள்ளனர். லூதியானாவின் சுற்றுப்புறத்தில் மக்கள் உழைப்புத் தானத்தைக்கொண்டே, 55 மைல் நீளமுள்ள ரோடு போடப்பட்டுள்ளது.



நாட்டின் வளம் பெருக்க தொண்டார்வம்.

**உத்தரப் பிரதேசம்.**—இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டவர் கள் முன்பே கிராமத்தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டு விட்டனர். 72,000 பஞ்சாயத்துக்களுக்குமேல் இந்த மாநிலத்தில் உள்ளன. எல்லாப் பஞ்சாயத்துக் களிலும் உழைப்பு தானம் மூலமாகவே என்னென்ன பணிகள் புரியவேண்டும் என்ற திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. பாதுகாப்பு உழைப்பு பாங்கில் சேர மக்கள் பேராதரவு காட்டி வருகின்றனர்.

**மேற்கு வங்காளம்.**—சுமார் 75,000 பேர் கிராமத் தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டுள்ளனர். உழைப்புத்தானம் மூலமாக பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிதுனபூர் மாவட்டத்தில் நடைபெறும் பாதை அமைப்பு வேலையைக் குறிப்பிடவேண்டும்.

**யூனியன் பிரதேசங்கள்.**—புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் ஆகிய பிரதேசங்களில் 10,000-க்கு மேல் கிராமத் தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டுள்ளனர். டெல்லியில் 8,000 பேர் இதுவரையில் சேர்ந்துள்ளனர். ஹிமாசலப் பிரதேசத்தில் கிராமத்தொண்டர் படையில் 25,000 பேரும், பாதுகாப்பு உழைப்பு பாங்கில் 15 லட்சம் மனிதர்கள் உழைப்பு நாட்களும் சேர்க்கப்பட்டுள்ளன. திரிபுராவின் 7,000 பேர் கிராமத்தொண்டர் படையில் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(Reproduced from "Panchayati Raj"—May 1963.)



# சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துகள்

## முத்தியால்பேட்டை பஞ்சாயத்து

[திரு. எம். பி. இராதாகிருஷ்ணன், தலைவர், முத்தியால்பேட்டை பஞ்சாயத்து.]

**வாலாஜாபாத் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த முத்தியால்பேட்டை பஞ்சாயத்து, கடந்த ஐந்தாண்டுகளில் ஆற்றியுள்ள பணிகளையும் அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ஆற்ற இருக்கும் பணிகளையும் கூறுகிறது இந்தக் கட்டுரை.**

**அமைப்பு.**—முத்தியால்பேட்டை பஞ்சாயத்து 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ந் தேதி துவக்கப்பெற்று, முத்தியால்பேட்டை, எரிவாய், படப்பம், வள்ளுவப்பாக்கம் ஆகிய நான்கு ரெவின்யூ கிராமங்களைக்கொண்டு, வேகவதி நதிக்கரையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பரப்பு 2·06 சதுர மைல். ஜனத்தொகை 2,000 ஆகும். மொத்தம் நான்கு வார்டுகளும் பதினோறு உறுப்பினர்களும் கொண்டுள்ளது.

**அலுவலகம்.**—இதுகாறும் இப்பஞ்சாயத்தின் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இருந்தது. தற்சமயம் உள்ள இந்த இடம், அரசினருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் 0·15 சென்ட் நிலம் பஞ்சாயத்து வசம் ஜாரி செய்யப்பட்டு, இக்கட்டிடம் ரூ. 6,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து, மேலும் உள்ள 0·10 சென்ட் நிலத்தைப் பஞ்சாயத்து வசம் ஒப்படைக்கும்படிக் கோரியுள்ளோம். அதன் மூலம் இக்கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றுச் சுவர் கட்டிச் சிறிய பூங்கா அமைக்க உத்தேசித்துள்ளோம்.

**உணவு உற்பத்தி.**—பஞ்சாயத்தின் மிக முக்கிய பணியாகிய உணவு உற்பத்தித் திட்டத்திற்கு சில பணிகளைச் செய்துள்ளது. முக்கியமாக, இப்பஞ்சாயத்தைச் சார்ந்த படப்பம் கிராமத்தில் நன்செய் நிலங்கள் வீணாகப் பயிரிடப்படாமல் இருந்தன. அதற்காக மிகவும் முயற்சித்து அங்கு ஒரு ஏரி அமைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், அவ்வூரில் விவசாயம் நன்கு பெருக ஏதுவாக இருக்கும். கம்போஸ்ட் உரத் திட்டத்தின்கீழ் ரூ. 3,600 கடனுதவி பெற்று கம்போஸ்ட் எரு தயாரிக்கப் பலதரப்பட்டவர்கள் குழிகளில் உரம் தயாரித்துள்ளனர். சுமார் 80 தென்னைமரங்கள் தனிப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பஞ்சாயத்து, பழச் சாகுபடி, விறகு, பயிர், பசுந்தாள் உரம் போன்றவைகளுக்காக இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிரிட ஆவன செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மருந்து அடிக்கும் கருவியும், மருந்து தெளிக்கும் கருவியும் வாங்கி வைத்துள்ளோம். மேலும், நவீன விவசாயக் கருவிகளையும் வாங்கிக் குறைந்த வாடகைக்குக் கொடுக்க உத்தேசித்துள்ளோம்.

**போக்குவரத்து.**—இப்பஞ்சாயத்தில் அடங்கியுள்ள கிராமங்களுக்கு ரோடு வசதி, மின் விளக்கு வசதி, ஆகியவை செய்யப்பட்டுள்ளன. மேலும், வானொலிப் பெட்டிகள் இரண்டு கிராமங்களுக்கு மட்டிலும் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றும், இரண்டு கிராமங்கட்கு அடுத்த ஆண்டு வழங்க உத்தேசித்துள்ளோம். எரிவாய் கிராமத்திலிருந்து படப்பம் அரிசனக்காலனிவரை ரோடு போட நிலச் சொந்தக்காரர்கள் யாவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். அரிசன க்ஷேமநல இலாக்காவின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இப்பஞ்சாயத்தில் மொத்தம் 50 விளக்குகளில் தேசிய நெருக்கடியை முன்னிட்டு 25 விளக்குகள் எரிவதற்கும் சம்மதித்து இந்த 25 விளக்குகளையும் பாதரச விளக்குகளாக மாற்றுவதென முடிவு செய்துள்ளோம்.

**கல்வி.**—இந்த ஊரிலுள்ள பழம்பெரும் துவக்கப்பள்ளி 1961 முதல் முதுநிலை ஆதாரப் பள்ளியாக உயர்த்தப்பட்டுச் செவ்வனே நடைபெற்றுவருகிறது. இப்பள்ளிக்கு தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 7,000-க்கு ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது. மேலும் இவ்வாண்டில் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ரூ. 11,000-க்குக் கட்டிடம் கட்டிவருகிறோம். பொதுவாக, எங்கள் வட்டாரத்தில் பொதுத்தேர்வு முறைத் திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் ஆரம்பப் பள்ளிகளின் தரம் உயர ஏதுவான சூழ்நிலை உண்டாகியிருக்கிறது. மேலும், புத்தகங்களை வாங்கிய கமிஷன் தொகை மூலம் ஏழை மாணவருக்கு இலவசப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. எங்கள் பள்ளியில் மின் விளக்குகள் எரிய ரூ. 300 தொகை ஆயிற்று. இதைச் சில பொது மக்கள் சீட்டு நடத்தி விளக்குகள் போட நன்



கொடை தந்துள்ளனர். இப்பஞ்சாயத்தில் சமூகக் கல்வி நிலையம் மற்றும், செங்கற்பட்டு மாவட்ட நூலக ஆணைக் குழுவின் சார்பில் நூல் வழங்கு நிலையம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. பலதிறப்பட்ட பத்திரிகைகள், நூல்கள் பொது மக்கள் படிக்க வசதி செய்துள்ளோம்.

மேலும் எரிவாய் கிராமத்திலும் வள்ளுவப் பாக்கம் கிராமத்திலும் புதிய துவக்கப்பள்ளிகள் திறக்க ஆவன செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் இப்பள்ளி சிறந்து விளங்குவதற்கு ஆசிரியர்கள் பாடுபட்டு வருகின்றனர்.

**பொது சுகாதாரம்.**—முத்தியால்பேட்டை கிராமத்தில் சாயத் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. இத்தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படும் தண்ணீர், துர்நாற்றம் வீசுவதுடன், பஞ்சாயத்துப் பொதுச் சுகாதாரத்தை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. தற்சமயம் இக்கழிவுத் தண்ணீர், பாசனக் கால்வாயில் விடப்படுகின்றது. இப்பஞ்சாயத்து செய்யவேண்டிய மிக முக்கியமான தேவையான அவசரமான காரியம் சாக்கடைத் திட்டமாகும். திறந்தவெளி, சாக்கடைத் திட்டம் கட்டச் சுமார் ரூ. 20,000 ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பஞ்சாயத்தில் போதுமான நிதி வசதி கிடையாது. ஆகவே அரசாங்கம் பிரத்தியேக மானியம் ஏதேனும் தர ஆவன செய்யுமென எதிர்பார்க்கிறோம். இத்திட்டம் இங்கு அவசியம் செய்யப்படவேண்டுமென்று மாநிலப் பொது சுகாதார இயக்குநர் அவர்களும் சிபாரிசு செய்துள்ளார்.

**குடிதண்ணீர்.**—முத்தியால்பேட்டையில் மட்டும் கிராமக் குடி தண்ணீர் திட்டத்தின்கீழ் மேல் நிலை நீர்த்தொட்டி கட்டி 11 குழாய்களின் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது. இதே போன்று மற்றைய மூன்று கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க இப்பஞ்சாயத்தும், அடுத்து உள்ள ஐயன்பேட்டை பஞ்சாயத்தும் சேர்ந்து இணைப்புத் திட்டமாக தேசியக் குடி தண்ணீர்த் திட்டத்தின் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அனுமதியாரும் தருவாயில் அரசினரால் இத்திட்டமே கைவிடப்பட்டது. இதனால், ஐயன்பேட்டையில் இத்திட்டத்திற்காக ரூ. 5,500 செலவில் எடுக்கப்பட்ட கிணறு வீணாக உள்ளது. இதனால் இங்குள்ள பொது மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எரிவாய் கிராமத்தில் குடி தண்ணீருக்காக ஒரு கிணறு வெட்ட ஆவன செய்யப்பட்டுள்ளது.

**தாய்சேய் நல விடுதி.**— தற்சமயம் தாய்சேய் நலவிடுதி வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. இப்பஞ்சாயத்து வாடகை தருகிறது. கட்டிடம் கட்ட புறம்போக்கு நிலம் 0·10 சென்ட் பஞ்சாயத்து வசம் ஜாரி செய்யப்பட்டு உள்ளது. கால்கோள் விழா நடைபெற்றுள்ளது. இடத்தில் விரைவில் கட்டிடம் ஒன்று பஞ்சாயத்து நிதியில் 50 சதவீதம், யூனியன் நிதியிலிருந்து 50 சதவீதம் பெற்று கட்டி முடிக்கலாமென்று தீர்மானித்துள்ளோம்.

**கூட்டுறவு.**—இப்புஞ்சாயத்தில் பல்நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு உள்ளன. மேலும் சென்னை பால் பண்ணைத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைக்கப்பெற்று இதுவரை ரூ. 24,000-க்கு மேல் கடன் வாங்கி உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெல்லி கறவை மாடுகளுக்கு ரூ. 10,000 கடன்வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்காக மாட்டுத்தொழுவம், அலுவலகம், கிணறு முதலியன ரூ. 15,000 மதிப்பீட்டில் சென்னை பால்துறை ஆணையாளரால் முழு மானியம் கொடுக்கப்பட்டு, கட்டிட வேலை நடந்துவருகிறது.

**புறம்போக்கு நிலங்கள்.**—இங்குள்ள புறம்போக்கு நிலங்களில், அதிகமான அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலும் குடிசைகள் போடப்பட்டுள்ளன. தற்சமயம் பஞ்சாயத்துக் காரியங்களுக்கே புறம்போக்கு நிலம் போதுமான அளவு இல்லை. இக்குடிசைகளில் உள்ளவர்களுக்கு மனைகள் வழங்க நகரப் பஞ்சாயத்துகளிலும், சென்னையிலும் மனைகள் வாங்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசினர் கடன்வழங்குவதுபோல், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், மனைகள் வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், இப்பஞ்சாயத்து அடுத்துவரும் ஐந்தாண்டுகளில் தொழில்வளம் பெருக செயல்முறைத் திட்டங்களைச் செய்ய முடிவு செய்துள்ளோம். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சிறு கைத்தொழில்கள் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டுவருகின்றன.

**நிதி நிலைமை.**—இப்பஞ்சாயத்திற்கு வருட வருமானம் சுமார் ரூ. 5,000 ஆகும். தமாஷாவரி மூலம் இவ்வருடம் ரூ. 5,000 வரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பஞ்சாயத்தின் வருமானத்தைப் பெருக்க மார்க்கெட்டுகள் கட்டுவது என்றும் அதற்காக ரூ. 10,000 அரசினரிடம் நீண்டகாலக் கடன் திட்டத்தின்கீழ் பெற்று ஆவன செய்வதென்றும் முடிவு செய்துள்ளோம். மேலும் இப்பஞ்சாயத்தில் நான்கு கிராமங்கள் உள்ளன. செலவினங்கள் அதிகமாக ஏற்பட ஏதுவாகிறது. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு, இப்பஞ்சாயத்து, எங்கள் வட்டாரத்திலேயே, நகரப் பஞ்சாயத்தை அடுத்து முன்னணியில் உதவி செய்துள்ளது.

**செய்ய இருப்பன.**—இப்பஞ்சாயத்து, பூங்கா, நூல்நிலையம் கட்டுவதற்காக சர்வே புறம்போக்கில் 0·40 சென்ட் நிலம் பஞ்சாயத்து வசம் ஒப்படைக்கும்படி கேட்டு இருக்கிறோம். மாதர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு 20 பேருக்கு மேல் உறுப்பினர்கள் உள்ளனர். தையல் தொழில் கற்றுத்தர தையல் இயந்திரம் கூடிய விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிசைத் தொழில்கள் ஏதேனும் ஆரம்பிக்கவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கிராமத் தொண்டர் படை மூன்று குழுவிற்கும் 21 பேரடங்கிய குழுக்களமைக்கப்பட்டு உள்ளன. வானொலி மன்றம் செவ்வனே நடைபெற்று வருகிறது.

# பெரும்பேடு பஞ்சாயத்து

எங்கள் கிராமம் பெரும்பேடு ஆகும். இக்கிராமம் பெரும்பேடு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகும். இக்கிராமத்தின் மொத்தப் பரப்பு 960·90 ஏக்கர். மொத்த நஞ்சை 557·64, புஞ்சை 118·26 ஏக்கர், புறம்போக்கு 285·0 ஏக்கர். மொத்த ஜனத்தொகை 703. ஆண்கள் 343, பெண் 360. இதில் கல்வியறிவு பெற்றவர்கள் 206. இக்கிராமததில் மொத்த வீடுகள் 147. இங்கு 1958-ம் வருடம் பஞ்சாயத்து அமைக்கப்பட்டது. இப்பஞ்சாயத்திற்கு முதல் முதலில் ஒரு பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். செங்கற்பட்டு மாவட்டத்திலேயே, எங்கள் பஞ்சாயத்திற்குத்தான் ஒரு பெண் தலைவராக வரும் பேறு பெற்றுள்ளோம். பஞ்சாயத்தின் பெண் அங்கத்தினர் உட்பட மொத்த அங்கத்தினர்கள் 6 பேர்.

### விவசாயத் துறையில் . . . .

பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட மேய்க்கால், களம், சுடுகாடு, குளம் முதலிய புறம்போக்குகளின் மொத்த பரப்பு 45·76. இக்கிராமத்தில் முக்கியமாக நெல், கேழ்வரகு, நிலக்கடலை பயிரிடப்படுகின்றன. நீர்ப்பாசன வசதிக்கு ஒரு பெரிய ஏரியும், கல் கட்டிடக் கிணறுகள் 42-ம், மண் கிணறுகள் 40-ம், பம்பு செட்டுகள் 30-ம் இருக்கின்றன. வருடத்திற்கு மொத்த நிலத்தீர்வை ரூ. 2,331·99, செஸ் ரூ. 1057·90, செஸ் சர்சார்ஜ் ரூ. 699·31. விவசாயச் சீர்திருத்த முறைகளைப் பின்பற்றி நெல்வகையில் கிச்சிலி சம்பா, வைகுண்டா, சிறுமணி, ஒட்டுக்கிச்சிலி, வாடன் சம்பா முதலிய பொறுக்கு வித்துக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பொறுக்கு வித்துக்கள் நிறைய உபயோகப்படுத்தப்படுகிறது. சணப்பு, கொளுஞ்சி, கிளைசிரிடியா முதலான தழை உரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. போஸ் கலப்பை, மருந்து தெளிக்கும் கருவி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பஞ்சாயத்தின் கால்நடை எண்ணிக்கை 527 ஆகும். இந்த ஆண்டும் 164 கால்நடைகளுக்கு நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது. 40 ஜாதிக் கோழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. 30 கால்நடைகளுக்கு சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில், ஒரு சமூகக் கல்வி நிலையமும், ஒரு மாதர் சங்கமும், சமூகக் கல்விக்குழுவும், கிராமத் தொண்டர் படையும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. ஒரு வானொலிப்பெட்டி கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் கல்வியறிவு பெற இரண்டு பள்ளிக் கட்டிடங்கள் ரூ. 10,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. இதில் சர்க்கார் ரூ. 5,000 மானியம் போக, பஞ்சாயத்து ரூ. 1,500-ம், பொதுமக்கள் உழைப்பு மூலமாகவும், பொருளாகவும் ரூ. 3,500 கொடுத்து உதவினர். பள்ளியில் இரண்டு ஆசிரியர்களும் ஒரு ஆசிரியையும் பணி புரிகின்றனர். 129 குழந்தைகள் கல்வி பெற்று வருகின்றனர். ஆசிரியைக்கு குடியிருப்பு வீடு ரூ. 4,000 மதிப்பில் கட்டித் தரப்பட்டுள்ளது. இதில் சர்க்கார் பங்கு ரூ. 3,000-ம் போக, மீதி ரூ. 1,000 மக்கள் உதவியாகும்.

### கூட்டுறவே நாட்டுயர்வு

இவ்வூரில் 1961-ல் ஒரு பலநோக்கு கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு 95 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ரூ. 1,500 பங்குத்தொகை செலுத்தப்பட்டது. ரூ. 13,800 இவ்வருடம் விவசாய காரியங்களுக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 8,350-க்கு அனுமதி ஆகியுள்ளது. ஹரிஜனங்களுக்கு ஒரு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 22 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு, ரூ. 550 பங்குத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 1,400 கறவை மாடுகள் வாங்கக் கடனாக கொடுக்கப்பட்டது. மேலும் ரூ. 4,400 கடன் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மொத்தத்தில், எங்கள் கிராமத்தில், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் கீழ், ஆக்கப்பணிகள் பல நடைபெற்றுள்ளன. ஆர்வம் குன்றாமல் மேலும் தொடர்ந்து பாடுபட்டு எங்கள் கிராமத்தை ஒரு இலட்சியக் கிராமமாக மாற்றி அமைக்க கிராம மக்கள் உறுதி கொண்டுள்ளனர்.

—[பெரும்பேடு கிராமவாசி]

---o---

# சௌட்டஹள்ளி பஞ்சாயத்து

[கே. புட்டே கவுண்டர், தலைவர், சௌட்டஹள்ளி பஞ்சாயத்து]

அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களில் பயனடைந்து வரும் பஞ்சாயத்துக்களில் எங்கள் பஞ்சாயத்தும் ஒன்று. சௌட்டஹள்ளி பஞ்சாயத்து, சேலம் மாவட்டத்தில் காவேரிப்பட்டணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது. இக்கிராமம், புண்ணிய நதியான தென் பெண்ணையாற்றங் கரையில் அமைந்துள்ளது. 720 வீடுகளையும் சுமார் 2,420 மக்கள் தொகையையும், ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 2,000 வருமானமும் 1,220 ஏக்கர் நிலப்பரப்பும் உள்ளது. இப்பஞ்சாயத்து ராமாபுரம், ராமாபுரம் காலனி குட்டூர், குட்டுவேடிச்சம்பட்டி, சின்னப்பள்ளிப்பட்டி, கவுண்டன்கொட்டாய், புழுகாண்டியூர், பட்டனூர் ஆகிய சேய் கிராமங்களையும் கொண்டது, சௌட்டஹள்ளி பஞ்சாயத்து. இது 1923-ம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதி தொடங்கப்பட்டது. 14 அங்கத்தினர்களைக்கொண்டு மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சித் திட்டம் ஆரம்பமானது முதல் இன்று வரை பல திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது.

உரங்கள், நிறைய வழங்கப்பட்டுள்ளன. ராட்டைகளும், நாட்டின் நிலையைத் தெரிய அரசாங்க வெளியீடுகள் (பத்திரிக்கைகள், புத்தகங்கள்) முதலியனவும் வழங்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்தியில் எங்கள் பஞ்சாயத்து தீவிர அக்கறை கொண்டு செயல்படுகிறது.



### பயிற்சித் திட்டமும்—சமூகக் கல்வியும்

1959-ம் ஆண்டு கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு சுமார் 50 பேர் தீவிர உணவு உற்பத்தித் திட்டம், கால்நடை அபிவிருத்தி, சிறு பாசனம் முதலிய துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது பஞ்சாயத்து பெண் அங்கத்தினர் உட்பட 4 பெண் உறுப்பினர்களை சேர்த்து மாதர் நலக்குழு, ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் காய்கறி உற்பத்தி, மற்றும் ராட்டை நூற்றல் முதலிய பணிகளைச் செய்து சிறு சேமிப்புத் திட்டத்தை நடத்துகின்றனர். சமூகக் கல்வி மன்றம் ஒன்று நல்ல முறையில் செயல்படுகிறது. ஆண்டுதோறும் இவ்வூரில் சுதந்தர தினம், குடியரசு தினம், பாரதிவிழா, முதலிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. வளர்ந்து வரும் ஜனப் பெருக்கைக் கட்டுப்படுத்தவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் எங்கள் பஞ்சாயத்து முக்கிய கடமையாகக்கொண்டு செயல்படுகிறது.

---

# குழிப்பாந்தண்டலம் பஞ்சாயத்து

எங்களுடைய கிராமம் குழிப்பாந்தண்டலம் கிராமம். சின்னஞ்சிறு ஊர், மொத்த ஜனத்தொகை 1,718 தான். ஆனாலும், சமுதாய நலத்துறையிலே எங்கள் கிராமம் நல்ல வேலைகளை செய்திருக்கிறது. அரசாங்கத்தின் உதவியும் எங்களுக்குத் தட்டாமல் கிடைத்து வருகிறது. முற்போக்குத் துறையில் எங்கள் கிராமம் அடியெடுத்து வைத்து, பாராட்டத்தக்க வகையில், ஆக்கப் பணிகள் பல புரிந்துள்ளது.

நாங்கள் பாதைகள் போட்டிருக்கிறோம். சமுதாய மன்றம் கட்டியுள்ளோம். மனமகிழ் மன்றம் அமைத்துள்ளோம். கிணறுகள், கக்கூசுகள் கட்டியுள்ளோம். நமது ஒப்பற்ற பிரதமர் பண்டித நேரு அவர்களிடமிருந்து ஆயிரம் ரூபாய் பரிசாகப் பெறும்படியான வாய்ப்பு எங்கள் கிராமத்திற்குக் கிடைத்தது. இந்த ஆயிரம் ரூபாய், தாய் சேய் நல விடுதி கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

### கிராமவாசிகள் நன்கொடை

மொத்தம் 10,000 ரூபாய் அளவில், இந்த வேலைகளுக்கெல்லாம் கிராமவாசிகளாகிய நாங்கள், நன்கொடையாக வழங்கியுள்ளோம். கல்வியின் வளர்ச்சியில் எங்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. எங்கள் கிராமத்தில் உள்ள பள்ளியை ஏழாம் வகுப்பு வரை படிக்க வசதியுள்ள பள்ளியாக உயர்த்தியுள்ளோம். 12,000 ரூபாய் செலவில் மேலும் ஒரு கட்டிடம் பள்ளிக்காகக் கட்டப்பட்டு வருகிறது. இந்த 12.000 ரூபாயில் 6,000 ரூபாய் எங்களுடைய பங்கு. மீதி 6,000 அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து சமாளிக்கப்படும். பஞ்சாயத்தைச் சேர்ந்த சமூகக் கல்விக்குழு, பள்ளிகளில் பிள்ளைகளைக்கொண்டு வந்து சேர்ப்பதில் தீவிர அக்கறை கொண்டு பணியாற்றி வருகிறது. தினந்தோறும் 75 ஏழைப் பிள்ளைகளுக்கு அரசாங்க மானியம், அத்துடன் அமெரிக்க நாட்டு "கேர்" திட்டத்தின் உதவியுடன், இலவச உணவு அளிக்கப்படுகிறது.

### புதிய பஞ்சாயத்து ஆட்சி.

புதிய பஞ்சாயத்துச் சட்டம் எங்களுக்கெல்லாம் ஒரு விடிவெள்ளியாக வந்தது எனலாம். இதனால் கிராம மக்களாகிய நாங்கள் அபிவிருத்தி வேலைகளில் நேரடிப் பங்கு கொள்ளவும், கிராமத்திற்குத் தேவையானவைகளைத் திட்டம் போட்டு வேலை செய்யவும் வசதி ஏற்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு பற்றி கிராமத்தில் நல்ல முறையில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இது வரையில் எங்கள் கிராமத்தில் ஆறுபேர் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

கிராமங்களில் நல்லதொரு மறுமலர்ச்சியை தோற்றுவித்த புதிய பஞ்சாயத்து ஆட்சி வாழ்க!

—குழிப்பாந்தண்டலம் கிராமவாசி

### எதிரிக்கு நிகரான படை!

"நாட்டின் அவசர கால நிலை காரணமாக இன்னல்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டிருப்பினும், நம் மக்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக மேற் கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கான நமது முயற்சிகளில் தளரக்கூடாது. ஏனென்றால், பொருளாதார வளர்ச்சியின் மூலமே நாட்டின் தற்காப்புத் திறனை வளர்க்கமுடியும் உண்மையில், தேசியப் பாதுகாப்பை முன்னிட்டு விவசாய, தொழில் உற்பத்திக்கான திட்டங்களிலும் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சாரம், போக்குரவத்து, முதலிய துறைகளிலும் நாம் இன்னும் அதிக அளவிற்கு முதலீடு செய்ய வேண்டும். நாட்டின் அவசர கால நிலையை முன்னிட்டு, குறிப்பிட்ட சில திட்ட வேலைகளைத் திருத்தவோ, குறைக்கவோ வேண்டி இருக்கலாம். ஆனால், நம் நாட்டில் எதிரிக்கு நிகரான படை அமைப்பை உருவாக்க வேண்டுமென்றால் திட்டத்தின் முக்கியமான பகுதிகள் எல்லாவற்றையும் நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும்."

(நிதி அமைச்சர் திரு பக்தவத்சலம், பட்ஜட் உரையில்)

## கண்களைப் பாதுகாப்பது எப்படி ?

உங்களுக்கு இரண்டு கண்கள்தான் உள்ளன. அவற்றை இழந்தால் மீண்டும் எப்போதும் அவற்றை நீங்கள் பெற முடியாது. இதை உணருங்கள். வேலை செய்தாலும், படித்தாலும் நல்ல வெளிச்சம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். கண்கள் கூசக்கூடிய வெளிச்சத்தைப் பார்க்காதீர்கள்; படிக்கும்போது அல்லது பொருள்களைக் கண்களுக்கருகில் வைத்துக்கொண்டு வேலை செய்யும் போது கண்களை மூடிக்கொள்வது மூலம் அல்லது தூரப் பொருட்களை சில நிமிஷங்களுக்குப் பார்ப்பது மூலம் கண்களுக்கு அடிக்கடி ஓய்வு கொடுங்கள். ஓடும் ரயில் வண்டிகளிலும், பஸ்களிலும் படிக்காதீர்கள். படுத்துக் கொண்டு அல்லது சிதறும் ஒளியில் அல்லது மங்கலான வெளிச்சத்தில் படிக்காதீர்கள். மிக நுண்ணிய எழுத்துக்களைக் கொண்ட புத்தகங்கள் அல்லது பத்திரிகைகளைப் படிக்காதீர்கள். அடுப்பங்கரையில் அல்லது தொழிற்சாலைகளில் உங்கள் கண்களில் புகை படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சுத்தமான நீரால் கண்களைச் சுத்தம் செய்து சுத்தமான துணியால் துடையுங்கள். கண்நோய், தலைவலி, கண்களில் நீர் கசிவது, கண்கள் சிவந்துபோவது, பார்வை மங்குவது, நமைச்சல், இதர கண் சம்பந்தமாக நோய்கள் ஏற்பட்டால் டாக்டரிடம் சென்று கண்களைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள். மூக்குக் கண்ணாடிகளை நன்றாகத் துடைத்து, கீரல்கள் எவையும் இல்லாமலும் வைத்துக்கொள்ளுங்கள். வைட்டமின் 'ஏ' இல்லாமலிருப்பது இரவில் கண் தெரியாது இருப்பதற்குக் காரணமாகும். கீரைத்தண்டு, பருப்புக்கீரை, அகத்திக்கீரை, பசலிக்கீரை, முட்டைகோஸ், கொத்துமல்லி, முருங்கைக் காய், காரட்டுகள், பப்பாளிக்காய், மாங்காய் இவற்றை அவசியம் உட்கொள்ளுங்கள். அவற்றில் வைட்டமின் 'ஏ' மிகுதியாக உள்ளன. அவை உங்கள் கண்களுக்கு பாதுகாப்பளிக்கும்.

சூரியனுடைய ஒளி நேரடியாகக் கண்களில் புகுவதைத் தவிர்க்கவும். ஏனென்றால், அதனால் கண்பார்வை பாதிக்கப்படும். போலி மருத்துவர்கள் விற்கும் மருந்துகளைக் கண்களுக்குப் போட்டுக்கொள்ளாதீர்கள். கண்களில் ஏதாவது விழுந்ததாக உங்களுக்குத் தோன்றினால், கண்களைக் கசக்காதீர்கள். 'கண்களில் சுத்தமான நீரை விட்டுக் கழுவினால் படிந்திருக்கும் தூசு போன்ற பொருள்கள் அகன்றுவிடும். பொருளைச் சுத்தமான ஈரத்துணியின் நுனியால் எடுத்துவிடும்படி எவரையேனும் கேட்கலாம். இதனால் குணம் ஏற்படாவிட்டால், டாக்டரிடம் போகவும்.

---

**நூல் நயம்**

## " உணவும் உணவுச் சீர்திருத்தமும் "

எழுதியவர் : மகாத்மா காந்தி

வெளியிட்டவர் :—தமிழ்நாடு காந்தி நினைவு நிதிக் குழு, மதுரை.

(பக்கங்கள் 143, விலை 1·50)

மனமும், உடலும் வலிமை பெற வேண்டுமானால் செம்மையான உணவு வேண்டும் என்பது காந்தியடிகளின் கருத்து. தன்னையே கருவியாகக்கொண்டு உணவு பற்றி மிக நுணுக்கமாக அவர் ஆராய்ந்து வந்தார். உடல்நலக்குறைவாக இருந்தபோதும் மருந்து அருந்தாமல், உணவுப் பழக்கத்தை மாற்றி அதனை வெற்றி கண்டார் என்பது எல்லோரும் அறிந்ததாகும். காந்தியடிகள் நடத்திய உணவு பற்றிய சோதனையின் தொகுப்பே இப்புத்தகம். வேப்பிலையில் உள்ள சத்துப்பொருள் முதல், செத்த மிருகங்களின் மாமிசங்களை புசிக்கலாமா என்பது வரை அவர் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்.

தமது விருந்தினராக வந்த கிராம ஊழியர்கள் 98 பேருக்கு 9 ரூபாய் 14 அணா 3 பைசா செலவில் விருந்து படைத்திருக்கிறார், என்பது ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியதோடு அல்லாமல் செயலில் கொண்டுவர வேண்டிய விஷயமாகும். 1935-ம் ஆண்டு விலை விவரப்படி மேற்கண்ட செலவு இருந்தாலும் இன்றைய நிலையில் அதே விகிதத்தில் குறைவான செலவில் உணவு தயாரிக்க முடியும். இதை நடைமுறையில் செய்து பார்த்தால் தெரியவரும். ஒவ்வொரு பொருளின் விலை விவரத்தையும், அணா, பைசா சுத்தமாகக் கொடுத்திருப்பதிலிருந்து இது புலனாகும்.

சைவ உணவின் சிறப்பு, சமைக்காத உணவின் நன்மை தீமைகள் ஆகியவை பற்றியும் காந்தியடிகள் இதில் விளக்கியுள்ளார்.

" யங் இந்தியா ", " ஹரிஜன் " ஆகிய வாரப்பத்திரிகைகளில் வெளிவந்த அவருடைய கட்டுரைகளின் தொகுப்பே இப்புத்தகம். திரு ரா. வேங்கடராஜுலு இந்தத் தொகுப்பை மிகச் சரளமான நடையில் மொழி பெயர்த்திருக்கிறார். உணவிலே சிக்கனம், சிறப்பு, சீர்திருத்தம் ஆகியவே தேவைப்படும் இக்காலத்தில் இது ஒவ்வொருவரும் படித்துப் பயனடைய வேண்டிய புத்தகமாகும்.





அகில இந்திய அம்பர் ராட்டை நூற்புப் போட்டி

31—3—63-ல், வீரபாண்டி திருப்பூரில் தமிழ் நாடு சர்வோதய சங்கம், கதர்கிராமக் கைத்தொழில் வித்தியாலயத்தின் அகில இந்திய அம்பர் ராட்டை நூற்புப் போட்டி நடைபெற்றது.

நான்கு கதிருள்ள அம்பர் ராட்டை நூற்புப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்; (1) குமாரி கே. புஷ்பாத்தாள் (முதற் பரிசு), (2) குமாரி கே. முத்துலட்சுமி (இரண்டாவது பரிசு), (3) குமாரி எம். முத்தாத்தாள் (மூன்றாவது பரிசு).



பரிசளிப்பு விழா

கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி, கதர் கிராமக் கைத்தொழில் கமிஷன் உபதலைவர் திரு. க. அருணாசலம், மாநிலக் கதர் கிராமக் கைத்தொழில் போர்டு உபதலைவர் திருமதி அமிர்தா ராமசுப்பிரமணியம் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.



ஆறு கதிருள்ள அம்பர் ராட்டை நூற்புப்போட்டியில் பரிசு பெற்றவர்கள்.—(1) திருமதி ஜயாபாய்மணியார் (முதற் பரிசு), (2) குமாரி சாவித்திரி அஸ்டேகர் (இரண்டாவது பரிசு), (3) குமாரி சரோஜினி துக்காரா (மூன்றாவது பரிசு).



1. திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் கிராமத் தொண்டர் படை ஆரம்பவிழா அணிவகுப்பு.

2. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்றாவது ஆண்டு அரசாங்க விருது அளிப்பு விழா : சென்னை ராஜாஜி மண்டபத்தில் 29—3—63-ல் நடைபெற்ற விழாவில் மாநிலக் கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி.



ஒரத்தநாடு பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியை திருமதி டி. நேசமணி அம்மாளுக்கு விருது அளிக்கிறார் 3. பாலர் நிலையங்களின் பயனுள்ள பணி : கதையும் பாட்டும் சிறு குழந்தைகளைக் கவர்கின்றன— படம் : சத்திய விஜய நகரம் வட்டாரம்.





## ஆக்கப்பணியில் கிராமத் தொண்டர் படை

1. இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரி பஞ்சாயத்து யூனியனைச்சேர்ந்த அணைக்கரைப்பட்டி பஞ்சாயத்து கிராமத் தொண்டர் படை—நாட்டின் நலன் காண தங்கள் நல் உழைப்பை வழங்குகிறார்கள்.

2. மாதர் சங்கம்.—தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மேலத் திருப்பந்துருத்தி மாதர் சங்க உறுப்பினர். [விவரம் 7-8 பக்கங்கள் பார்க்கவும்.]





3. தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கருப்பூர் கிராமத் தொண்டர் படை உறுப்பினர் ஆர்வத்துடன் செயல்படப் புறப்படுகின்ற காட்சி.




1. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி.- அம்பத்தூரில் புதியதாக தொடங்கப்பட்டிருக்கும் தொழிற்பேட்டையின் முதற் தொழிற்சாலையை, 12—4—63-ல், முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களும் தொழிலமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்களும் பார்வையிட்டனர்.




அன்பளிப்பு

2. ஸ்வீடன் அரசாங்கம் இந்தியாவுக்கு 8,000 டன் காகிதத்தை அன்பளிப்பாக அளித்துள்ளது. சென்னை அரசாங்கத் தலைமையகத்தில், 6—4—1963-ல், சென்னையில் உள்ள ஸ்வீடன் நாட்டுத் தூதுவர், தமிழ்நாட்டு கவர்னரிடம், அன்பளிப்பின் அடையாளமாகக் காகிதக் கட்டு வழங்குகிறார்




விளையாட்டு மன்றம்

3. திருச்சிராப்பள்ளி மாவட்ட விளையாட்டு மன்றத்தை, நிதியமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள் துவக்கி வைத்தார். (சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்களில், இத்தகைய விளையாட்டு மன்றங்களைத் தொடங்க, அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும், இதற்கென்று, 90,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.)

# வதந்திகளை முறியடிப்போம்

**தலைமை அமைப்பாளர், கிராம வானொலி மன்றம்.**

"வதந்திகளை நம்பாதீர்கள், வதந்திகளைப் பரப்பாதீர்கள்" என்ற சுவரொட்டிகள் இப்போது நாடெங்கிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன. தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த சமயத்தில் மக்களுக்குக் கட்டுப்பாடும் உறுதியும் மிகவும் அவசியமாகும். "எதையோ, யாரோ சொன்னார்" என்ற ஆதாரமற்ற செய்தி, மக்களின் மனத்தைக் குழப்புவதோடு மட்டுமல்லாமல், நாட்டுக்கே பெரும் தீங்கை விளைவிப்பதாகும். நாட்டின் நிகழ்ச்சியுடன் தமது கற்பனையில் உதயமான ஒரு செய்தியை ஒட்ட வைத்து அதை பயங்கரமாக வர்ணித்து தமது அருகில் உள்ளவர்களை பயமுறுத்துவதிலே மகிழ்ச்சி அடைகிறவர்கள் சிலர் உண்டு. "யாரோ சொன்னார்" என்று பொய்யையும் வதந்தியையும் கிளப்பும் இவர்கள்தான் நாட்டின் முதல் விரோதிகள். அறியாமை மிகுந்த மக்களிடம் இவர்களது பொய்யும், வதந்தியும் சுலபமாகப் பரவ முடியும். ஆனால் "கெட்டிக்காரன் பொய் எட்டு நாள் மட்டும்" என்றபடி, உண்மைச் செய்திகள் பரவும்போது இந்த பொய் வதந்திகள் தானாக ஓடிவிடும். சிறப்பாக, நமது கிராமப் பகுதிகளில் உண்மைச் செய்திகள் பரப்பும் இந்த முக்கியமான பணி திறமையாக நடைபெறவேண்டும். கிராமத் தொண்டர் படையில் இதற்கென விசேஷ அணி அமைக்கப்பட்டுள்ளது. அதுவே "அறிவு அணி" (Mass Education Wing of the Village Volunteer Force) என்பது.

### வானொலியின் சேவை

ஆதார பூர்வமான செய்திகளைத் தொகுத்து மக்களுக்கு அளிப்பதில் அகில இந்திய வானொலி நிலையங்கள் சிறந்த சேவை செய்து வருகின்றன. தினந்தோறும் காலை 7–15, பகல் 2, மாலை 6–10, இரவு 7–15 ஆகிய நான்கு தடவை செய்திகள் தமிழில் ஒலி பரப்பப்படுகிறது. கடந்த அக்டோபர் மாதம் முதல் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக விசேட அறிவிப்புகள், செய்திகள், நிகழ்ச்சிகள் ஆகியவை ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உடனுக்குடன் ஒலிபரப்பாகும் இந்தச் செய்திகளும் நிகழ்ச்சிகளும் உண்மையை அடிப்படையாக கொண்டவையாகும். நம் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் கிடைக்கிற ஆதாரப் பூர்வமான செய்திகளைக்கொண்டே, வானொலி அறிவிப்புகளும், விசேட நிகழ்ச்சிகளும் தயாராகின்றன. வீண் வதந்திகளையும், பொய் பிரச்சாரங்களையும், அனாவசியமான பீதியையும் முறியடிப்பதற்கு நமது வானொலி நிலையங்கள், சக்திவாய்ந்த சாதனமாகப் பயன்பட்டு வருகின்றன.

### பஞ்சாயத்தில் வானொலிப் பெட்டி

இந்த வகையில் வானொலி நிலையங்கள் மட்டும் இயங்கினால் போதுமா? அந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு பயனடைவதற்கான சாதனங்கள், மக்களிடம் இருக்க வேண்டுமல்லவா? வானொலிப் பெட்டி இல்லையென்றால் நிகழ்ச்சிகளை எப்படிக் கேட்பது? நகரங்களில் வானொலி பெட்டிகள் சர்வ சாதாரணமாக எங்கும் காணப்படுகிறது. பூங்கா, ஹோட்டல், டீ கிளப், பள்ளிக்கூடம், தொழிற்சாலை, ஓய்வு விடுதிகள் முதலிய பொது இடங்களிலும், பெரும்பாலான வீடுகளிலும், வானொலிப் பெட்டி ஒலித்து கொண்டிருக்கிறது. ஆனால், கிராமங்களில் இந்த நிலைமை இல்லை. அங்கே வீடுகளில் வானொலிப் பெட்டி வைத்திருப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு, ஆகவே, பொதுவாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு வானொலிப் பெட்டி இயங்க, அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குறிப்பாக, சென்ற நான்கு மாதத்திற்குள் ஏறக்குறைய 7,000 பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள 12,522 பஞ்சாயத்துக்களில், 12,513 பஞ்சாயத்துக்களுக்கு வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டு, இயங்கி வருகின்றன.

### கேள்வியும்—பதிலும்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள், எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டிகள் அமைய வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. ஆனால், இந்தத் தேதிக்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இத் திட்டத்தின் குறிக்கோள் நிறைவேறி விட்டது.

வானொலிப் பெட்டிகள் அமைப்பதுடன், காரியம் முடிவடைந்து விடவில்லை. நிகழ்ச்சிகளைக் கேட்க மக்கள் உற்சாகத்தோடு ஒன்று கூடவேண்டும். கேட்ட செய்திகளை, தமக்குள் கலந்து பேசவேண்டும். கலந்து பேசும்போது பல்வேறு கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளவேண்டும். இந்த நோக்கத்தையொட்டி, கிராம மக்களை இதில் ஈடுபடுத்தும் வகையில், "கிராம வானொலி மன்றங்கள்" அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், இம் மன்றங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கலெக்டர்கள், டெபுடி கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோர் மூலம், இது சம்பந்தமாக விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொண்டு, இன்றுள்ள நெருக்கடி நிலைமையில் நம் முன்னுள்ள முக்கிய கடமைகளையும், நாட்டு நலனுக்கான நமது பொறுப்புக்களையும் உணர்ந்து, தக்கமுறையில் பணியாற்றுவதற்கு இந்த வானொலி மன்றங்கள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. மக்களுக்கு ஏற்படும் நியாயமான சந்தேகங்களை இம் மன்றங்களின் வாயிலாக வானொலி நிலையத்திற்கு எழுதினால், அதற்குரிய பதில்கள், தெளிவாகவும்

விவரமாகவும் கூறப்படுகின்றன. குறிப்பாக, திருச்சியிலுள்ள வானொலி நிலையத்தார், கிராம வானொலி மன்றங்களின் கேள்விகளுக்கு அதிகாரபூர்வமான பதில்களையும் விளக்கங்களையும் சேகரித்து, உடனுக்குடன் ஒலி பரப்பி வருகின்றனர்.

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிப்பரப்பாகி வருகிறது. மாலை 6-45-லிருந்து 7-15 வரை ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில், உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான திட்டங்களும், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் வழிகளும், மற்றும் விவசாயிகளுக்கான குறிப்புகளும் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

### விசேஷ வெளியீடுகள்

இது தவிர, நாட்டின் பாதுகாப்பு முயற்சி பற்றிய துண்டுப் பிரசுரங்கள் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் அனுப்பப்படுகின்றன. பஞ்சாயத்துக்களுக்கு அனுப்பப்படும் இந்த வெளியீடுகளை, கிராம மக்களுக்குப் படித்துக் காட்டி விளக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். குறிப்பாக, பஞ்சாயத்து சங்கத்தினர்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும் இந்த வெளியீடுகளில் உள்ள விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு கிராமத்திலுள்ள மற்ற மக்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இவ்வாறாக, வானொலி, அரசாங்க வெளியீடுகள், ஆதாரபூர்வமாக செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் ஆகியவைமூலம், உண்மைச் செய்திகள் பரவிக்கொண்டே இருக்கும். "யாரோ சொன்னார்" என்று வீண் வதந்திகளைப் பரப்பிக்கொண்டிருக்கும் திண்ணைப் பேச்சாளர்களின் வீண் பேச்சு பயனற்றுப் போகும்.

### அறிவொளி பரப்பும் திருப்பணி

மக்கள் உள்ளத்தில் உண்மையும், நேர்மையும், நாட்டுப் பற்றும், கடமை உணர்ச்சியும், மேலோங்குவதற்காக, அறிவொளி பரப்பும் இந்தத் திருப்பணி ஓயாது ஒழியாது தொடர்ந்து நடைபெறும். கிராமத் தொண்டர் படையின் அறிவு அணியில் பொறுப்பு வகிப்போர் இதை மறக்காமல் பணி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். வீண் வதந்தியும், வெட்டிப் பேச்சும் ஆபத்தானவை. இதைச் சிந்தையில் இருத்தி செயலாற்றுவது, நமது முக்கிய கடமை.

---

### கிராம நலம்

சந்தா விவரம் :—

தனிப்பிரதி .. 13 ந. பை.

ஆண்டு சந்தா .. ரு.1·50

ஆறு மாத சந்தா கிடையாது.

---

## முத்துப்பற்கள் – முகத்திற்கு அழகு

சுத்தமான நல்ல பற்கள் உங்கள் அழகை அதிகரிக்கும். பற்களைச் சரிவரப் பயன்படுத்தினால் உங்களுக்கு நல்ல ஜீரண சக்தி ஏற்படும். தினந்தோறும் காலையிலும், இரவிலும் பல்குச்சி, பிரஷ், பற்பொடி கொண்டு பற்களைச் சுத்தம் செய்யுங்கள். பல் ஈறுகளிலிருந்து பற்களுக்கு பிரஷை நகர்த்தி உட்புறமும், வெளிப்புறமும் நன்றாகத் தேய்க்கவேண்டும்.

பற்களைச் சுத்தம் செய்யும்போது உங்கள் நாக்கையும் சுத்தம் செய்துகொள்ளுங்கள். உணவு சாப்பிட்ட பிறகு, குறிப்பாக இனிப்புப் பண்டங்கள் தின்ற பிறகு உங்கள் வாயை நன்றாகத் தண்ணீரால் சுத்தம் செய்துகொள்ளுங்கள். உங்கள் பற்களைக் கவனியாமல் இருந்து விடாதீர்கள். அப்படிச் செய்தால் உங்கள் பற்கள் சொத்தைப் பிடித்துவிடும் அல்லது உங்கள் பல் ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். அல்லது உங்கள் வாயிலிருந்து துர்நாற்றம் வீசும். இன்னும் பல கேடுகளும் விளையும். இவை மட்டுமின்றி ஜீரணக்கோளாறுகள், தீராத நோய், இதயக் கோளாறு, சிறுநீர்ப்பையில் கோளாறு போன்ற பல நோய்கள் உண்டாகும்.

வெற்றிலைப்பாக்குடன் புகையிலையை உபயோகிக்காதீர்கள். அதனால் கொடிய வியாதிகள் ஏற்படக்கூடும். முழுப்பருப்புகள், பால்கோவா, தக்காளி, கிழங்கு வகைகள், கீரை வகைகள், மீன் எண்ணெய் போன்ற வைட்டமின் 'சி', வைட்டமின் 'டி', சுண்ணாம்புச் சத்து ஆகியவை அடங்கியுள்ள உணவை உட்கொள்ளுங்கள். கேரட்டுகள், முள்ளங்கி, வெங்காயம், வெள்ளரிக்காய், கரும்பு, மென்று தின்னக்கூடிய பழவகைகள் இவற்றை உட்கொள்ளுங்கள். இவற்றில் வைட்டமின்கள் இருப்பதுடன் பற்களுக்கும் பல் ஈறுகளுக்கும் இவை வேலை தருகின்றன. உங்கள் பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாவிட்டால் உங்கள் உடல்நலம் கெடும். உங்களுக்குப் பல்வலி ஏற்பட்டால் அல்லது பல் ஈறுகளில் இரத்தம் கசிந்தால் பல் வைத்தியரிடம் காட்டவும். நீங்கள் எச்சில் துப்பினால் மற்றவர்களுக்கு அதிலுள்ள கிருமிகள் பரவிவிடும் என்பதை அறியவும்.

இனிப்புப் பண்டங்களை அடிக்கடி சாப்பிடாதீர்கள். ஏனென்றால் அதிகமாய் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடுபவர்களது பற்கள் சாதாரணமாய்க் கெட்டுவிடுகின்றன. மிகவும் சில்லிட்டுப்போன அல்லது மிகவும் சூடான உணவை அல்லது பானங்களை உட்கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் ஜீரணக் கோளாறு ஏற்படும். பற்களும் பாதிக்கப்படும். கண்ட இடத்தில் எச்சில் துப்பாதீர்கள்.

---





## கிராம சேவகர் பயிற்சி நிலையம் - பட்டுக்கோட்டை

இப் பயிற்சி நிலையம் 1954-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி ஆதார விவசாய பயிற்சிப் பள்ளியாக ஆரம்பிக்கப் பட்டது. ஆதார விவசாயப் பயிற்சி பள்ளிக்காக 1957-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி வரை செயல்பட்டு வந்தது. அப் பயிற்சியில் கிராம சேவக் பயிற்சியாளர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கதர் ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டும், பின் வளர்ச்சிப் பயிற்சிக்காக 6 மாத காலத்திற்கு வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தனர். 1957-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியிலிருந்து இந்த இரண்டு பயிற்சிகளையும் ஒருங்கிணைந்து 1½ வருட பயிற்சி நிலையமாக மாற்றப்பட்டு கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. பிறகு திரு பல்வந்தராய் மேதா கமிட்டியின் சிபாரிசின்படி இப்பயிற்சியின் காலத்தை 2 வருடமாக 1958-லிருந்து மாற்றப்பட்டது.

இதுவரை, இப்பயிற்சி நிலையத்தில் 229 பேர்களுக்கு ஆதார விவசாயப் பயிற்சியும், 111 பேருக்கு 1½ வருட ஒருங்கிணைப்பு பயிற்சியும், 98 பேர்களுக்கு 2 வருட ஒருங்கிணைப்புப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1960-ல் சேர்ந்த 67 பயிற்சியாளர்கள் 1 வருட பயிற்சிக்கு பிறகு பவானிசாகர் பயிற்சி நிலையத்திற்கு மாற்றப் பட்டார்கள். இப்பொழுது 174 பயிற்சியாளர்கள் 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து பயிற்சிபெற்று வருகின்றனர். இவர்கள் 1963-ம் ஆண்டு ஜூலை 31-ம் தேதியுடன் பயிற்சியை முடிப்பார்கள்.

### நிலையப் பயிற்சி முறை

இப் பயிற்சித் திட்டம் பயிற்சி நிலையத்தில் பாட சம்பந்தமான கருத்துரை, செயல் முறை கொண்டதாகவும், கிராமங்கள் சென்று செயல்பட்டு பழகும் முறையாகவும் (Village Visit), வேலை பழகுநிலை பயிற்சியைக் கொண்டதாகவும் (Job Training), கல்வி நோக்குப்பயணம் (Study Tour) கொண்டதாகவும், மேலும் சாரணர் பயிற்சி, நில அளவைப் பயிற்சி, யோகாசனப் பயிற்சி ஆகியவற்றைக் கொண்டதாகவும் இருக்கிறது.

நிலையப் பயிற்சி காலத்தில் போதனைமுறை வகுப்புகளும் செயல்முறை வகுப்புகளும் நடத்தப்பட்டு, பயிற்சியாளர்களுக்குச் செயல் மூலம் கற்றுக்கொடுக்கப் படுகிறது. கருத்துரைக்காக நல்ல விளக்கப் படங்கள் மூலமாகவும் குழு விவாதம் நிரூபணம் மூலமாகவும் தெளிவுபடுத்தப்படுகிறது. மேலும் நிலையத்தில் பமத்த



கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகளுக்கு (Executive Officers), சென்னையில், விசேஷ அதிகாரி (பயிற்சி) திரு எம். குஞ்சிதசரணம் அவர்கள் பயிற்சி வகுப்பு நடத்துகிறார்.

விவரங்களை கிராமச் சூழ்நிலையில் செய்து திறம்பெற வாரம் ஒருமுறை பயிற்சியாளர்கள் கிராமத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு பயிற்சியாளருக்கு 5–6 குடும்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அக் குடும்பத்தினருக்கான வளர்ச்சி வேலைகளை மேற்கொண்டு செயல்படவும், கிராம சம்பந்தமான பிரச்சினைகளை அறியவும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. கிராம வேலைகளில் வழி முறைகளைக் காட்ட பட்டுக்கோட்டை பயிற்சியாளர்கள், ஆசிரியரோடு தொடர்பு கொண்டு தங்களது குறைபாடுகளை நீக்கிக்கொள்கின்றனர். பயிற்சியாளர்களைப் 10 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளது.

### பஞ்சாயத்து முறை துணைக் குழுக்கள்

பயிற்சியாளர்கள் இப் பத்துப் பகுதிகள் கொண்ட ஓர் பஞ்சாயத்தை அமைத்துக்கொண்டு தங்களது அன்றாட வசதிகளை நிர்வகித்துக் கொள்கின்றனர். பஞ்சாயத்துக்கு அனுசரணையாக உப குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது உணவுக் குழு, கலாச்சாரக் குழு, சுகாதாரக் குழு, சமுதாய வேலைக் குழு முதலியன. இவ்வொவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவார். இக் குழுக்களுக்கு அதற்கான பஞ்சாயத்து அங்கத்தினர் தலைவராகவும், ஆசிரியர்கள் மேற்பார்வையாளராகவும் இருப்பார். பயிற்சியாளர்கள் உணவு விடுதியை நடத்துகிறார்கள். கூட்டுறவுச் சங்கம் நடத்துகிறார்கள். பண்ணையைப் பராமரிக்கிறார்கள். சமுதாய வேலைகளை மேற்கொண்டு காரியங்கள் செய்து வருகிறார்கள். இரவு காவல் வேலையை ஜாபிதா போட்டு வரிசைக்கிரமத்தில் பயிற்சியாளர்கள் செய்து வருகின்றனர்.

### நிலையத்தில் உள்ள வசதிகள்

பயிற்சி கொடுப்பதற்கான வசதிகள் அனைத்தும் இந் நிலையத்தில் உள்ளன. 10·80 ஏக்கர் பண்ணை, 2·00 ஏக்கர் அலங்காரத் தோட்டத்திற்கான நிலையப் பகுதி, கால்நடை முதல் உதவி நிலையம், கோழிப் பண்ணை, தேனீப் பண்ணை, கைக்குத்தல் அரிசி செய்யும் கருவிகள், வார்தா செக்கு, நெசவுக்கூடம், சோப்பு செய்யும் கருவிகள், தொழிற் பட்டறை, நூல் நிலையம், கூட்டுறவு பண்டக சாலை, காட்சி சாலை, நிதர்சனக் கருவிகள், விருந்தினர் தங்குமிடம், வகுப்பறை, ஊழியர் குடியிருப்பு முதலிய வசதிகள் இந் நிலையத்தில் செய்யப்பட்டுள்ளன.

பயிற்சியாளர்கள் நிலை அவ்வப்பொழுது மதிப்பிடப்படுகிறது. பாட சம்பந்தமாக ஒவ்வொரு 30 வகுப்புகளுக்கும் ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. பயிற்சியாளர்களின் அன்றாட நடத்தை, ஒழுக்கம், முயற்சி, முன்னின்று காரியம் செய்தல் போன்றவற்றை முதல்வர், ஆசிரியர்கள் மதிப்பீடு செய்கிறார்கள். மாதம் ஒரு முறை ஒவ்வொரு தொகுதி பயிற்சியாளர்களையும் மதிப்பீடு செய்து குறித்துக் கொள்ளப்படுகிறது.

### ஆசிரியர் மன்றம்

பயிற்சித் திட்டம் சம்பந்தமாகவும், பயிற்சி நிலைய நிர்வாக சம்பந்தமாகவும் உள்ள விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கவும், வழி முறைகள் வகுக்கவும் ஆசிரியர் மன்றம் நிறுவப்பட்டுள்ளது. இம் மன்றம் அடிக்கடி தேவைப்படும்போது கூட்டப்படும். இதற்கு முதல்வர் தலைவராவார். மாதாமாதம் ஒரு உபதலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார். வருடத்திற்கு ஒரு முறை செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்படுவர். இம் மன்றத்தின் சில குறிப்பிட்ட அலுவல்களை குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அதாவது பாடத் திட்டக் குழு (Time-table Committee), உபசாரக் குழு (Receiption Committee) முதலியவைகளாகும்.

வட்டார அபிவிருத்தி அலுவலர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுகிறது. பயிற்சி ஆரம்பித்து ஆறு மாதத்திற்குப் பிறகு தான் கிராமத்திற்குப் பயிற்சியாளர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

இம் மாதிரி 1 வருட நிலையப் பயிற்சிக்குப் பிறகு 2½ மாதத்திற்கு வேலை பழகுநிலை பயிற்சிக்கு (Job Training) அபிவிருத்தி வட்டாரங்களுக்கு பயிற்சியாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் வட்டார வளர்ச்சிப் பகுதியிலுள்ள அனுபவமுள்ள கிராம சேவகர்களுடைய மேற்பார்வையில் கிராம அபிவிருத்தி வேலைகளை சுயமாக தன் முயற்சியில் காரியங்கள் செய்து தன்னம்பிக்கையை அடைகிறார்கள். முதல் தடவையாக 1½ மாதமும், மறுமுறையாக 1 மாதமும் இப் பயிற்சி பெறுகிறார்கள்.

கல்வி நோக்குப்பயணம் 23 நாட்களுக்குப் பயிற்சியாளர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்கள் பாட சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்கள், ஸ்தாபனங்கள் இவற்றைச் சென்று நேரில் கண்டு பயிலுகின்றனர்.

மேற்கூறிய பயிற்சிகள் தவிர ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் நில அளவைப் பயிற்சி 15 நாட்களுக்கும், யோகாசனம் பயிற்சி 15 நாட்களுக்கும், சாரணர் பயிற்சி 7 நாட்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதோடு நிர்மாண ஊழியர்களின் உணர்ச்சியூட்டும் சொற்பொழிவுகளைக் கேட்க ஏற்பாடுகளும் இப் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறுகிறது.

இப் பயிற்சி நிலையத்தில் முதல்வர் உள்பட 14 ஆசிரியர்கள் உள்ளனர். இவர்கள் பயிற்சித் திட்டத்திலும் பயிற்சியாளர்களின் அன்றாட வாழ்க்கையிலும் பங்கு கொள்கின்றனர்.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பால் விநியோகம், மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, காய்கறித் தோட்டம் அமைத்தல் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் பங்கு கொண்டு, பஞ்சாயத்துடன் இணைந்து கிராம மக்களுக்கு பணி புரிந்து வருகின்றனர்.



# பயன் அளிக்கும் பள்ளித் தோட்டங்கள்

[விரைவில் பலனளிக்கத் தக்கவையும் சுலபமாக வளர்க்கக் கூடியவையுமான காய்கறிச் செடிகள், பழமரங்கள் ஆகியவற்றை வளர்க்கும் விதத்தை மாணவர்களுக்கு எடுத்துக்கூறும் நோக்குடன் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. பயனுள்ள தாவரங்கள் பற்றி மாணவர்களுக்குப் போதிக்க இது ஆசிரியர்களுக்கும் உற்ற துணையாக இருக்குமென நம்புகிறோம். இதில் தெரிவிக்கப்பட்ட செடி கொடிகள், பழ மரங்கள் ஆகியவை நமக்குத் தரும் காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளில் உள்ள ஊட்டச் சத்து மேன்மையானது: விலை குறைந்தவை.

—ஆசிரியர்]

### முருங்கை

முருங்கை மரம் குறைந்த காலத்தில் பலனளிக்கக் கூடியதொன்றாகும். இதை வளர்ப்பதும் சுலபம். சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களிலெல்லாம் முருங்கை மரம் இருப்பது தெரிந்ததே. பதியன்கள் மூலமோ, முருங்கை விதைகள் கொண்டோ இம் மரத்தை வளர்த்து விடலாம். பதியன் போட்டு இம் மரத்தை வளர்ப்பதுதான் எளிதான முறை. எனவே, பள்ளித்தோட்டத்திலும் இம் மரத்தை சுலபமாக வளர்த்து விடலாம்.

பசுமையான முருங்கை மரத்திலிருந்து சற்று பருமனுள்ளதும் சுமார் 3 அடி நீளமுள்ளதுமான பதியன்களை நறுக்கி வைத்துக்கொள்ளவேண்டும். மழை காலம் துவங்கும் சமயத்தில் பதியன் போடப்படவேண்டும். தயார் செய்த முருங்கைப் பதியன்களை 15 அடி இடைவெளிக்கொன்றாக சுமார் ஒரு அடி ஆழத்தில் நடவேண்டும். உரம் எதுவும் இடவேண்டுமென்ற அவசியமில்லை. நட்டபின் அதிகக் கவனிப்பும் தேவையில்லை. நட்டு சுமார் ஒரு ஆண்டு கழித்து மரம் காய்பிடிக்கத் தொடங்குகிறது. நட்ட இரண்டாவது ஆண்டிலிருந்து, ஆண்டு தோறும் மரமொன்று சாதாரணமாக 300 முதல் 500 காய்கள் காய்த்து வரும்.

முருங்கைக் கீரையில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி', சுண்ணாம்புச்சத்து ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன. முருங்கைக் காயில் வைட்டமின்கள் 'சி' சத்து உள்ளது.

### பப்பாளி

பப்பாளி மரமும் எளிதாக வளர்க்கக் கூடியதே. தண்ணீர் தேங்காத 'வளமான மண்ணிலும்' நடுத்தர களிமண் பகுதியிலும் இம்மரம் செழித்து வளரும். பப்பாளியிலும் உயர்ந்த ரகங்கள் பல உண்டு. சி. ஓ. ஐ. (C. O. I.) (குட்டையான மரமும் அதிக நெடியில்லாத பழங்களைத் தரக்கூடியது). வாஷிங்டன், ஹனிட்யூ (Honey Due) ஜயண்ட் (Giant) மதுபிந்து, பிலிப்பைன் முதலிய ரகங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

நாற்று நட்டு இம்மரத்தை வளர்க்கலாம். முற்றிய விதைகளை 24 மணி நேரம் சாணம் கரைத்த தண்ணீரில் ஊறவைத்திருந்து ஒரு பாத்தியில் விதைக்க வேண்டும். ஜூன் முதல் செப்டம்பர் வரை இந்நாற்றுப் பாவலாம். 6 முதல் 9 அங்குலங்கள் வரை வளர்ந்த நாற்றுகளே பறித்து நட ஏற்றவை. இவற்றை எந்தப் பருவத்தில் வேண்டுமானாலும் பறித்து விடலாம். என்றாலும் ஜூன் ஜூலை மாதங்களே நடுதலுக்கு ஏற்ற மாதங்களாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில் எட்டு அடி இடை வெளிக்கு ஒரு குழியென, குழிகள் தயார்செய்து கொள்ள வேண்டும். குழி ஒன்று 3 அடி நீளம், 3அடி அகலம், 3 அடி ஆழம் ஆக இருக்க வேண்டும். கம்போஸ்ட் உரம் அல்லது வண்டல் மண் கொண்டு இக் குழியை நிரப்ப வேண்டும். குழி நடுவில் ஒன்றுக்கொன்று ஒரு அடி இடைவெளியில் இரண்டு பப்பாளி நாற்றுகளை நட வேண்டும். நாற்று நட்ட முதலாவது ஆண்டில் ஒழுங்காக களையெடுத்து வர வேண்டும். ஆண்டுக்கு இரு தடவை மேலாவாரியாக உழுது விடலாம். முதலாவது ஆண்டில் பப்பாளிக் கன்றுகளின் இடைவெளியில் வெண்டி, மொச்சை ஆகிய காய்கறிச் செடிகளை வளர்த்துப் பயன் பெறலாம். பப்பாளிக் கன்றுக்கு அவ்வப்பொழுது தக்க உரமிடுதலும் ஒழுங்காக நீர்ப்பாய்ச்சுதலும் அவசியம்.

### ஆண்—பெண் மரங்கள்

நட்டு 6 மாத காலத்தில் கன்று பூவெடுக்கத் தொடங்குகிறது. ஒரு ஆண்டு காலத்தில் பழம் கொடுக்க ஆரம்பிக்கும். இந்த சந்தர்ப்பத்தில்தான் பலன் கொடுக்காத ஆண் மரங்கள் எவை எவை என்பது தெரிய வரும். பலன் கொடுப்பது பெண் மரம். 100 பெண் மரத்திற்கு ஒரு ஆண் மரம் என ஒதுக்கிவிட்டு எஞ்சியுள்ள ஆண் மரக்கன்றுகளைப் பெயர்த்து அப்புறப்படுத்திவிட வேண்டும். ஒரு ஏக்கர பரப்பில் இவ்விதம் நட பப்பாளி மரங்களிலிருந்து ஆண்டு தோறும் 25,000 பவுண்டு முதல் 50,000 பவுண்டு வரை பழங்கள் கிடைக்கும்.

பப்பாளிப் பழத்தில், உடல் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'பி-2' ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.

### தவசி முருங்கை

தவசி முருங்கை அல்லது மலேயா முருங்கை என்றழைக்கப்படும் இச்செடி அண்மையில் தான் மலேயாவிலிருந்து இந்நாட்டில் புகுத்தப்பட்டது. இதை "சகல



"கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றி தரும்.."

சத்து (Multivitamin) செடி" என்றும் அழைக்கிறார்கள். இச்செடியின் இலைகளும் தண்டுகளும் பல்வேறு வைட்டமின்கள் நிரம்பியதாக உள்ளன. இந்தச் செடியைப் பதியன் மூலமோ நாற்று நட்டோ சுலபமாக வளர்த்து விடலாம். இப் பதியன்கள் 1 அல்லது 1½ அடி இடைவெளிக்கொன்றாக நடப்பட வேண்டும். காய்கறித் தோட்டங்களில் பாத்திகளின் ஓரத்தில் வரிசைக் கிரமமாக இக் கீரை நடப்படலாம். ஆனால் இரு வரிசைகளுக்கிடையே குறைந்தது இரண்டு அடி இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

நட்டு நான்கு மாத காலத்தில் இலைகளைப் பறித்து உபயோகித்துக் கொள்ளலாம். இதை வளர்ப்பது மிகவும் சுலபம். நீண்ட காலத்திற்கு இச்செடி பலன் தரும். இச்செடியின் இலைகளும் இளந்தண்டுகளும் சத்துள்ள உணவுப் பொருட்களாகப் பயன்படுகின்றன. இதன் இலைகளிலும் தண்டுகளிலும் கரோடின் வைட்டமின் 'ஏ' வைட்டமின் 'சி' சத்துக்கள் நிறையவுள்ளன.

## சிலோன் பசலை

இது வெகு துரித காலத்தில் வளரக்கூடிய கீரை வகைகளிலொன்றாகும். மிகவும் சத்துள்ளது. விதைகள் மூலமோ, பதியன் வைத்தோ இச்செடியை வளர்க்கலாம். அநேகமாக வீட்டுத் தோட்டங்கள் முழுவதிலும் இக்கீரை வளர்க்கப்படுவதைக் காணலாம். இதன் இலைகளும் இளந்தண்டுகளும் சமைத்துண்ணப் பயன்படுகின்றன. நட்ட ஆறு வார காலத்திற்குள்ளாகவே இலைகள், இளந்தண்டுகள் ஆகியவற்றை பறிக்கத் தொடங்கலாமென்றால் இதன் வளரும் வேகத்தை யூகித்துக் கொள்ளலாம். இந்தக் கீரையில் வைட்டமின் 'சி' ஏராளமாக இருக்கிறது.

## அகத்தி

இது வேகமாக வளரக்கூடிய மரம். ஆனால் இது பலன் கொடுக்கக்கூடிய காலம் குறைவேயாகும். அகத்திக்கீரை பலராலும் விரும்பி சமைக்கப்படுவது தெரிந்ததே. விதைத்தோ அல்லது நாற்றுப்பாவி பெயர்த்து நடுவதன் மூலமோ இம்மரத்தை வளர்க்கலாம். வீட்டுத் தோட்டங்களில் ஓரத்தில் இக்கன்றுகளை வரிசையாக வைத்து வளர்க்கலாம். அகத்திக்கீரையில் உள்ள சத்துக்கள், ஒரு அவுன்சுக்கு கரோடின் சத்து 2,570 சர்வதேச யூனிட்டுகள், சுண்ணாம்புச் சத்து 320 சர்வதேச யூனிட்டுகள்.

## நாட்டு கொய்யா

மேற்கு பாராகுவே, தெற்கு பிரேஜில், அர்ஜெண்டைனா ஆகிய நாடுகளில் இக்கொய்யா விசேடமாக வளர்க்கப்பட்டு வருகிறது. கடல் மட்டத்திற்கு சுமார் 3,500 அடி உயரமுள்ள நிலப்பகுதியில் இக்கொய்யா செழிப்பாக வளரும் சாதாரணமாக விதைகள் மூலம் இம்மரம் வளர்க்கப்பட்டு வருகிறது. பதியன் வைத்தும், ஒட்டு வைத்தும் இம் மரத்தை வளர்ப்பது உண்டு. நாற்று நட்டால் 3 அல்லது 5 ஆண்டு காலத்திலும், பதியன் வைத்து வளர்த்த மரமெனில் 2 அல்லது 5 ஆண்டு காலத்திலும் பலன் கொடுக்கத் தொடங்கும். மரமொன்று ஆண்டொன்றுக்கு சுமார் 100 பழங்கள் வரை தரும். பார்வைக்கு நம் நாட்டு கொய்யா போலவே உள்ள இக் கொய்யா நல்ல மணமும் ருசியுமுடையது. இதிலிருந்து பழப்பாகு, ஜெல்லி ஆகியவை கூட தயாரிக்கலாம். கொய்யாப் பழத்தில் வைட்டமின் 'சி' சத்து அதிகமாக இருக்கிறது

கன்னியாகுமரியிலுள்ள பழமர ஆராய்ச்சி நிலையம், கோவையிலுள்ள மத்திய விவசாய நிலையம், குற்றாலத்திலுள்ள மாதிரி பழத்தோட்ட நர்சரி ஆகியவற்றில் நல்ல ரக கொய்யாக் கன்றுகளும் கருவேப்பிலைக் கன்றுகளும் கிடைக்கும்.

இதுவரை தெரிவிக்கப்பட்ட எல்லாச் செடி, மரங்களின் நோய்களுக்கான பூச்சி கொல்லி மருந்துகள் மாநிலத்தில் உள்ள எல்லா விவசாய இலாகா அதிகாரிகள், விவசாய வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் கிடைக்கும்.

(நன்றி: பொது சுகாதாரத் துறை)



# எழுதப்பெரு இலக்கியம்

[திரு அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்., தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.]

எழுதப்பெரு இலக்கியம் தமிழில் மொழி வரலாறு வரையறுக்க முடியாத காலந்தொட்டே இருந்து வருகின்றது. தமிழ்நாட்டின் தொன்மையை விளக்குவது தொல்காப்பியமாகும். எட்டில் எழுதப்பெற்ற இலக்கியங்களோடு இந்த எழுதப்பெரு இலக்கியமும் நாட்டில் உலவிற்று என்பதைத் தொல்காப்பியரும், அவர் நூலுக்கு விளக்கந் தந்த உரையாசிரியர்களும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள். 'பொருளொடு புணராப் பொய் மொழி', 'பொருளொடு புணர்ந்த நகைமொழி', 'பிசி', 'பண்ணத்தி', 'வாய்மொழி' என்றெல்லாம் தொல்காப்பியம் இந்த இலக்கியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

'பொய் மொழி' கண்டிக்கத்தக்கதாயினும் அதுவே பொருளோடு புணராதாயின் இலக்கியமாகும் நிலையை நன்கு அறிகின்றோம். அப்படியே வேடிக்கைக் கதைகளும் விடுகதைகளும் (பிசி) பிற நாடோடிப் பாடல்களும் (பண்ணத்தி) அக்காலத்தில்—இன்றைக்கு இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்தன என்பது தேற்றம்.

## பழந்தமிழ் இலக்கியங்களில் ......

எத்தனையோ கிராமச் சூழலும் நானில இயற்கை வாழ்வும் நம்முன் காட்டப்பெறினும், கடைச்சங்ககால வஞ்சியும், காஞ்சியும், புகாரும், மதுரையும் அன்றைய மனிதன் இயந்திர வாழ்வை மேற்கொண்டதைக் காட்டுகின்றனவே. எனவே அந்த இயந்திர வாழ்வுக்கு இடையிடையே இளங்கோவடிகள் இயற்கை வாழ்வு வாழ்ந்த பரதவர்—வேடுவர்—ஆயர்—குறவர் முதலியவர்களை நம்முன் கொண்டு வந்து நிறுத்தி, அவரவர் தம் 'வாய்மொழி இலக்கியங்களை' வண்ணப் பாடல்களாக நமக்கு வடிக்கிறார். அவர்தம் வரிப்பாடல்களும் குரவைப் பாடல்களும் கூடி ஆடிப்பாடும் வாய்மொழி இலக்கியங்களாக இருந்து, அவராலேயே எட்டில் இடம் பெற்றவையாக வேண்டும். எனவே, நாட்டிலே வாய்மொழி இலக்கிய வழக்காறு மங்குகின்றது என்றால் மனிதன் செயற்கையே நாடிச் செல்லுகிறான் என்பது பொருள் போலும்.

இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் எத்தனையோ வகையான 'வாய்மொழி' இலக்கியங்கள் தோன்றலாயின. வழிநடைப்பதம், சிந்து, நாடக மரபு, நலுங்குப் பாட்டு, கதைப்பாட்டு முதலியன இடைக்காலத்தில் எல்லையின்றி விரிந்தன. கடைச்சங்க கால இலக்கியமாகிய பரிபாடலில் ஆடற்பாணியும் வழிநடைப் பாணியும் எழுதப்பெரு இலக்கியங்களாக உள்ள தன்மையைக் காண்கிறோம்.

## எழுதாத இலக்கியத்தின் பெருமை

இந்த இலக்கியம் கல்லாமாக்கள் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் பாடப்படும் ஒன்று எனப் பலர் நினைக்கின்றனர். ஆய்ந்து பார்ப்பின் இந்த வாய்மொழி இலக்கியத்தின் பெருமை நன்கு விளங்கும். எனது இளமைக் காலத்திலே நான் கேட்டறிந்த சில இருசொல் முச்சொல் அலங்காரங்களை எண்ணிப்பார்க்கும்போது அவற்றின் சிறப்பும் சிலேடைப் பொருள்திறனும் பிற உண்மைகளும் விளங்குவதை இன்று அறிய முடிகின்றது.

'ஆலிலை பழுப்பதேன்?'
'இராவழி நடப்பதேன்?'

இவை இரண்டும் கேள்விகள். இரண்டிற்கும் ஒரே பதில் சொன்னால் எத்துணை சிறக்கும்! சொல்லுகிறார் ஒருவர். யார்? இந்த ஆசிரியர் பெயர் தாம் அறிய முடியாதே! எனவே ஒரு நல்ல அறிஞர் அவர். என்ன சொன்னார்? 'பறிப்பாரற்று' என்பதே பதில். ஆம், ஆலிலை பறிப்பார் இல்லாத காரணத்தாலே பழுத்து உதிர்கின்றது, அப்படியே இரவில் வழிப்பறி கொள்ளையர் இல்லாத காரணத்தாலேயே அனைவரும் நடக்கின்றனர். இவ்வாறு இரு பொருள்பட விளக்கும் திறன் சிறந்ததல்லவா! இப்படியே,

'ஆட்டுக்கறி கசப்பதேன்?'
'ஆண்டி பட்டினி கிடப்பதேன்?'

என இரண்டு கேள்விகளுக்கும் 'பிச்சை எடாமல்' என்ற பதில் உண்டு. இப்படியே,

'எருக்கிலை பழுப்பதேன்?'
'எருமைக் கன்று சாவதேன்?'

என்ற இரு வினாக்களுக்கும் 'பாலற்று' என்பது பதில். இவற்றை விரித்துப் பொருள் காணும்போது நம்மை நாம் மறக்கிறோமல்லவா! இப்படியே முச்சொல் அலங்காரங்கள். இவற்றுள் ஒரு சில அச்சிலும் வந்து, மெல்ல

மறுபடியும் மறைந்துகொண்டிருக்கின்றன என நினைக்கிறேன். இவையெல்லாம் இன்று வழக்கு வீழ்ந்து விடுமோ என்று அஞ்சத்தக்க வகையில் உள்ளன. இவ்வாறே எத்தனை பழமொழிகளும், அவற்றின் அடியெழுந்த பாடல்களும் சிற்சில இடங்களில் வாழ்ந்து மறைகின்றன. எழுத்து வாசனையறியாத—கல்லாத முக் கிராமங்களில் இருக்கும் இளையரும் முதியரும் இது போன்ற வாய்மொழி இலக்கியங்களை இன்றும் பாடிக் கொண்டே இருக்கின்றனர். கருத்தும் காதும் வேண்டும் கேட்பதற்கு !



சென்னை திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியர் கா. நமச்சிவாயம் நினைவுச் சொற்பொழிவு வரிசை நிறைவு விழா 18—3—63-ல் நடைபெற்றது. சென்னை நக்கீரர் கழகம் இவ்விழாவினை ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழாவில் பேராசிரியர் திரு கா. நமச்சிவாயம் அவர்களின் உருவப் படத்தை நிதியமைச்சர் திரு எம். பக்தவத்சலம் திறந்து வைத்தார்.

### விடுகதைகளும் வாய்மொழி இலக்கியமே

விடுகதைகளைப் பற்றித் தொல்காப்பியத்திலேயே குறிப்பு வருகின்றது. இதுவும் ஒரு வகை வாய்மொழி இலக்கியமேயாகும். உயர்ந்த வேதாந்தக் கருத்தில் தொடங்கி, எளிய உலக வாழ்க்கைப் பொருள் வரையில் இந்த விடுகதைகளில் இடம்பெறக் காண்கின்றோம். இந்த இலக்கியமும் இன்று நாட்டில் அருகியே வருகின்றது. காரணம் நாம் மேலே கண்டதுதான். மனிதன் இயந்திரமாக மாறிக்கொண்டு போவதுதான் இதற்குக் காரணம்.

இவைகளைத் தவிர்த்து காவடிச் சிந்து, புலந்திரன் களவு, அல்லி அரசாணி மாலை, நொண்டி கடிமாலை முதலிய ஒரு சில, சென்ற இரண்டொரு நூற்றாண்டுகளில் வந்தன. முருகன் சன்னதிக்கு அடியவர்தாம் வேண்டும் வரம்பெற்றபின் காணிக்கை செலுத்த காவடி எடுத்துக்கொண்டு செல்லும் மரபு இன்றுமுள்ளது. அவ்வாறு செல்லும்போது அவர்கள் பாடிக்கொண்டு செல்லும் ஆரவாரம் செந்தில், பழனி, தணிகை முதலிய முருகன் திருநகரங்களில் இன்றும் ஒலிக்கின்றது. அதையே 'காவடிச்சிந்தாக' அழகுபடப் பாடி வைத்தனர். புலந்திரன் களவு போன்றவை கதைக்கூறுகளை மையமாகக்கொண்டு, கல்லாத மக்கள், எழுத்தறியா மக்கள்—சொல்லிச் சொல்லி உணர்ந்து மகிழத்தக்கவகையில் ஆக்கப்பெற்றன. அதன் பின்வந்த தேசிங்குராஜன் கதைபோன்றவைகளும் இந்த வகையில் இணைக்கப்பெற வேண்டுபவையே. இவற்றுள் சில அச்சிடப்பெற்றுள்ளன.

### தாலாட்டும் ஒப்பாரியும்

இவைகளைத் தவிர்த்துக் குழந்தையைத் தாலாட்டுவதும் கையற்றுக் கதறி அழுவதும்கூட 'வாய்மொழி' இலக்கியமாகக் கொள்ளத்தக்கவையே. இழவு வீட்டில் பெண்கள் கூடிக் கட்டித் தழுவிக் கதறிப்பாடும் பாட்டுக்களும் எதுகை மோனை நயத்தோடு கருத்தாழமும் கொண்டு விளங்கவில்லையா !

### கூட்டுச் சமுதாயம்—கூட்டுப்பாடல்கள்

இனி, இந்த வாய்மொழி இலக்கியம் பாடும் வகை கண்டு அமைவோம். எங்கேயோ ஓரிரு பாடல்கள் தனிப்பட்டவரால் பாடப்படுவன என்றாலும், பெரும்பாலான பாடல்கள் கூட்டுப் பாடல்களே. இன்று கூட்டுச் சமுதாயம் காண விரும்பும் நிலையில் உள்ள நமக்கு, இந்தக் கூட்டுச் சமுதாயத்தை உருவாக்கி வளர்த்து வாழவைத்து வரும் 'வாய்மொழி இலக்கியம்' இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இவ்வாறு கூடிப்பாடும் சிறப்பினையெல்லாம் தொகுத்துத்தான் பாரதியார்,

"ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் 'குக்கு' வெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார் தம் சுவை மிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்"

தம் நெஞ்சைப் பறிகொடுத்ததாகக் கூறுகிறார். நாமும் இவ் வாழ்விலக்கியத்தில் 'வாய்மொழி இலக்கியத்தில்', —'எழுதப்பெறா இலக்கியத்தில்'—நம் நெஞ்சைப் பறிகொடுத்து ஒன்றிய உணர்வில் உலகம் செழிக்க உற்றுழி உதவுவோமாக !

(வானொலிப் பேச்சின் சுருக்கம்.)





# ந ர ம் பு ச் சி ல ந் தி

## —த டு ப் பு மு றை க ள்

நரம்புச் சிலந்தி என்று சொல்லப்படும் இவ்வியாதி, சாதாரணமாக, உஷ்ணப்பிரதேசங்களில் காணப்படும் பழங்கால வியாதிகளில் ஒன்றாகும். நம் நாட்டில், சென்னை மாகாணத்தில், உதகமண்டலம்–நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் பரவியிருக்கிறது. இது ஒருவகை நீண்ட வெள்ளைப் புழுவினால் உண்டாகிறது. அதிலும், பெண் புழுவே இவ்வியாதி பரவக் காரணமாக இருக்கிறது. இது சுமார் ஒரு அடியிலிருந்து மூன்றடி நீளம் வரை வளரும். இது சாதாரணமாக, குடி தண்ணீருக்காக உபயோகிக்கும் படிக்கிணறுகள், குளம் குட்டைகள் முதலிய நீர் நிலைகளில்தான் பரவியிருக்கிறது.

### வியாதி பரவும் விதம்

நரம்புச் சிலந்தி வியாதியினால் பீடிக்கப்பட்ட ஒரு மனிதன் உடலிலிருந்து இப்புழு வெளியில் வரவிருக்கும் பாகத்தைத் தண்ணீரில் அமிழ்த்தும்போது, அப்புழு தன் கர்ப்பப் பையில் நிறைந்திருக்கும் பல கோடிக்கணக்கான குட்டிகளைத் தண்ணீரில் சிதறவிடுகிறது. இக்குட்டிகள், "ஸைக்ளாப்ஸ்" என்று சொல்லப்படும் ஒருவகைத் தண்ணீர் பூச்சியினுள் புகுந்து பல மாறுதல்கள் அடையச் சுமார் இரண்டு வாரங்களாகும். அம்மாறுதல்களுக்குப் பின்பே அவை மனிதனின் உடம்பில் வியாதியை உண்டாக்கமுடியும். ஆகையால் இவை "ஸைக்ளாப்ஸி"னுள் வளரும் கட்டம் முக்கியமானது.

மேற்சொன்ன மாறுதல்களுக்குப்பின், இக்குட்டிகள் உள்ள ஸைக்ளாப்ஸ், மனிதர்கள் தண்ணீர் உட்கொள்ளும்போது, அவர்களின் இரைப்பையை அடைகிறது. இரைப்பையிலுள்ள அமிலத்தால் ஸைக்ளாப்ஸ் கொல்லப்பட்டு நரம்புச் சிலந்தி குட்டிகள் விடுவிக்கப்படுவதோடல்லாமல் மிகவும் சுறுசுறுப்படைகின்றன. மேற்கொண்டு, இவை, இரைப்பையைக் குடைந்து, அருகிலுள்ள மெல்லிய தசைகளில் தங்கி முழு வளர்ச்சியை அடைகின்றன. பிறகு ஆண், பெண் புழுக்கள் இணைந்து, பெண் புழு வெளிவரத் தயார் ஆகிறது. இப் புழுக் குட்டிகளை உட்கொண்டதிலிருந்து, தாய்ப்புழு குட்டிகளுடன் வெளிவர, சுமார் 9 மாதம் முதல் 12 மாதமாகும்.

இக்காலத்தில் நரம்புச் சிலந்தி உள்ளவனுக்கு, இவ் வியாதி இருப்பதாகத் தோன்றாது. புழு, வெளிவருமுன் ஒருவிதமான திராவகத்தை மனிதனின் உடலில் இறைக்கிறது. அதனால்தான் நரம்புச் சிலந்தி வருமுன் உடம்பு முழுவதும் "பேய் சொறி" உண்டாகிறது. இதன் பின், புழு வெளிவரவிருக்கும் பாகத்தில், முதலில் சிறு துவரையளவு ஒரு கொப்புளம் உண்டாகிறது. இது நாளுக்கு நாள் பெரிதாகி, தண்ணீர் பட்டவுடன் உடைந்து, அதனுள் இருக்கும் நரம்புச் சிலந்தி குட்டிகளை நீரில் சிதற விடுகிறது. இதைத் தொடர்ந்து, தாய்ப்புழுவும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்து விடுகிறது. இதுதான் இந்தப் புழுவின் வாழ்க்கைச் சக்கரமாகும்.

### இப்புழுவினால் ஏற்படும் அவதிகள்

புழு தானாகவே வெளிவருவதற்கு முன், சிலர் அதைச் சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டி அதைப் பலமாக இழுத்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதால் புழு அறுந்து, அறுந்த பாகம் உடலினுள் இழுக்கப்பட்டு வேறிடங்களில் "இடைக்கட்டு" கட்டிவிடுகிறது. அதோடல்லாமல், புழு வெளிவந்த பாகம் சீழ்பிடித்து, வீங்கி, வலியால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறது. இதனால் பலர் ஒரு குறுகிய காலத்திற்கு ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்கு நடக்கும் சக்தியை இழந்துவிடுகிறார்கள். நமது கிராமங்களில் பலரும் விவசாயம் செய்தோ, கூலி வேலை செய்தோ, தங்கள் தினசரி தேவையைப் பெறுகிறார்கள். இம்மாதிரி உள்ளவர்கள் நகரும் சக்தியை இழக்கும்போது அவர்களுக்குப் பிழைப்பு கஷ்டமாகிவிடுகிறது. இதனால் மரணம் உண்டாகாவிடினும் கைகால் முடமாகப்போவதுண்டு. இப்படியாக

**வரப்பு உயரட்டும் !**
**இதுவே குறிக்கோள் !!**

"நமது தேசிய வருமானத்தில் விவசாய வருமானம் ஏறக்குறைய சரிபாதியாகும். எனவே தேசிய வருமானம் உயர்ந்து, அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரம் வளம்பெற வேண்டுமென்றால், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தான் நாம் உணவுப் பற்றுக்குறையைப் போக்கித் தன்னிறைவு பெறமுடியும். அன்றியும், வளர்ந்து வரும் நம் தொழில்களுக்கு வேண்டிய பருத்தி போன்ற மூலப்பொருட்களையும் போதிய அளவிற்கு உறுதியாகப் பெறமுடியும். திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேலைகள் ஓரளவு நமக்கு வெற்றி அளித்துள்ளன. திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1961-62-ல், உணவுத் தானிய உற்பத்தி சுமார் 2·3 லட்சம் டன் அதிகரித்தது. இந்தச் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் இத்துடன் நாம் திருப்தியடைந்துவிடக் கூடாது. மூன்றாவது திட்டக் காலத்தில் நம்முடைய குறிக்கோளான 17 லட்சம் டன் அதிக உற்பத்தி அளவை எய்துவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தவேண்டும்."

(நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம், பட்ஜட் உரையில்.)

அவர்களுக்கும் அதன் மூலம் நாட்டிற்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது.

இந் நோய்க்கு மருத்துவம் கிடையாது. ஆனல் தவிர்ப்பது எளிது. இதற்குக் கீழ்க்காணும் முறைகளைப் பொது மக்கள் கவனிப்பார்களேயானல் மிகவும் எளிது.

### நோய் கண்டவர் பின்பற்ற வேண்டிய முறைகள்

(அ) கொப்புளம் பழுத்தவுடன் தண்ணீரில் பட்டு தானகவே வெடிப்பதற்கு முன், நன்ருகக் காய்ச்சி ஆறிய ஒரு ஊசி கொண்டு அதைக் குத்தி, அதனுள் உள்ள நீரோடு நரம்புச் சிலந்திக் குட்டிகளையும் ஈரத்துணி கொண்டு ஒத்தி எடுத்து விட்டு, வேறு ஒரு ஈரத் துணி கொண்டு கட்டிவிட வேண்டும். இத்துணிகளை எக்காரணம் கொண்டும் குடி தண்ணீர்த் தேக்கங்களில் விட்டு அலசுவது கூடாது.

(ஆ) தாய்ப்புழு கொப்புளம் உடைந்து வெளிவரும் போது, அதைப் பலமாக இழுத்துவிடாமல் ஒரு குச்சியில் புழுவைச் சுற்றி நிதானமாகக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே இழுக்கவேண்டும். குளிர்ந்த நீர் பட்டவுடன் புழு வெளிவர முயலுமாதலால் இழுப்பதற்குள் கொஞ்சம் குளிர்ந்த நீரை அதன்மேல் ஊற்றினல் இழுக்கச் சுலபமாக இருக்கும். இப்படி நிதானமாக வெளியிலிழுக்கும் பொழுது புழு 10 அல்லது 15 நாட்களுக்குள் முழுவதும் வெளிவந்து விடுகிறது. புண்ணும் எளிதாக ஆறி விடும்.

(இ) இவ்வியாதி உடையவர்கள் எல்லோரும் ஒரு மனதாகக் குடிக்கும் தண்ணீரில் இறங்காமல் இருக்க முயல வேண்டும்.

### கிராமத்தினர் கவனிக்க வேண்டியவை

(அ) தண்ணீரை, முக்கியமாகக் குடி தண்ணீரை எப்பொழுதும், நான்கு மடிப்பு மடித்த நல்ல துணி கொண்டு வடிகட்டி எடுத்துச் செல்ல வேண்டும். மீண்டும் அத் துணியை உபயோகிக்குமுன் வேறு ஒரு பாத்திரத்தில் தனியாக அலசி எடுக்கவேண்டும். இவ்விதம் அலசிய நீரை மீண்டும் தண்ணீர்த் தேக்கத்தில் கொட்டிவிடாமல் வெளியில் கொட்டிவிட வேண்டும்.

(ஆ) குடி தண்ணீரை நன்ருகக் காய்ச்சிக் குடிக்க வேண்டும். இப்படிச் செய்வதனல் ஸைக்ளாப்ஸூம் புழுக் குட்டிகளும் கொல்லப்படுகின்றன.

### நிரந்தரத் தடை முறைகள்

இறங்க வசதியுள்ள கிணறுகளும், குளங்களும் தான் இவ் வியாதி பரவ உதவுகின்றன என்று மேலே கண்டோமல்லவா? அம்மாதிரி இறங்க முடியாமல்—முக்கியமாக இவ் வியாதியுள்ள கிராமங்களிலாவது—கிணறுகளுக்குச் சுவர் கட்டித் தடுக்கலாம்; அல்லது புதிய கிணறுகளைத் தோண்டி தண்ணீரைச் சேந்தி எடுக்க வசதி செய்யலாம். அதுபோல் குளங்களின் கரைகளில் கிணறுகள் வெட்டியும், பம்புமூலம் தொட்டிகளில் நிரப்பியும் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யலாம். இதற்காக கிராம நீர் வழங்கு திட்டத்தின் மூலமும் (Rural Water Supply) தல அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும் (Local Development Scheme) இந்த சௌகரியங்களை அதிக அளவில் செய்து தர அதிகாரிகள் மிகவும் மும்முரமாக முயன்று வருகிருர்கள்.

### தற்காலத் தடை முறைகள்

சுண்ணும்பு, பிளீச்சிங் பவுடர் முதலியவைகளைத்தான் சுகாதார அதிகாரிகள் மாதம் இருமுறை குடி தண்ணீருள்ள நீர்த்தேக்கங்களில் கலக்குகிருர்கள். ஆனல் இது நிரந்தரமானதல்ல. மீன்களையும் வளர்த்து "ஸைக்ளாப்ஸை" ஒழிக்கலாம். ஆனல் இவை சரிவரப் பெருகாமல் இறந்து விடுகின்றன. மேலும் சில குளம் குட்டைகள் கோடையில் உலர்ந்துவிடுவதால், மீன்கள் இறந்துவிடுகின்றன.

இவையெல்லாம் சரிவர நடைமுறையில் கொண்டு வரவும், இவ் வியாதியை ஒழிக்கவும் பொது மக்களின் முழு ஒத்துழைப்பு கிடைக்குமாயின், இதை அடியோடு ஒழித்து அதன் மூலம் மக்களின் வருவாயை அதிகப்படுத்தி, நமது மாநிலம் நல்ல முன்னேற்றமடையச் செய்யலாம்.

[நன்றி: பொது சுகாதாரத்துறை]

### நமது கடமை என்ன?

"மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்நாட்டு மக்களின் முன் சமர்ப்பிக்கையில் அதை உருவாக்கியவர்கள் உலக சமாதானத்தின் அடிப்படையில் தான் திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்ற முடியும் என்பதை உணர்ந்திருந்தார்கள். உலகெங்கும் சமாதானம் நிலவுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் நாம் நம் மாபெரும் தலைவரின் கீழ் பாடுபட்டு வந்திருக்கிருேம். அப்படியிருக்க, நம் நாட்டு மண்ணிலேயே ஆக்கிரமிப்பு நடந்திருப்பது வருந்தத்தக்கது. இந்த ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதற்கு நட்பு நாடுகளிலிருந்து நமக்கு உதவி கிடைப்பதில் சந்தேகமில்லை. ஆனல், நமது தற்காப்பு அமைப்புகளைப் பலப்படுத்தி, இனியும் ஆக்கிரமிப்பு நடந்தால் அதைத் தடுத்து நிறுத்த, நாட்டைத் திரட்டுகின்ற பெரும் பொறுப்பு, கடமை மகத்தான இந்த நாட்டின் மக்களான நம்மைச் சேர்ந்ததாகும். ஏனென்ருல், இது தன்மான உணர்ச்சியுள்ள சுதந்திர நாடாகும்."

(நிதி அமைச்சர் திரு. பக்தவத்ஸலம், பட்ஜட் உரையில்)



## இன்றைய சூழ்நிலையில் பெண்கள் பங்கு

திருமதி பார்வதிஅர்ஜுனன், எம்.எல்.ஏ.

"பஞ்சசீலம்" என்ற பட்டுத் திரைக்குப் பின்னல், சீன படைக்கலன்களை அடுக்கிவைத்துக்கொண்டிருந்ததை, நாம் பார்க்காமல் இருந்துவிட்டோம். காரணம், சீனர்களை நாம் சகோதரர்கள் என்று நம்பிவிட்டோம்.

சமதர்ம சமுதாயத்தை அமைக்க இந்தியா தனது சக்தி முழுவதையும் பயன்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில், சீனர்கள் பாரதத்தின் எல்லை தாண்டி உள்ளே நுழைந்துவிட்டார்கள். உலகத்திற்கு சமாதானத்தை ஒலி பரப்பிக்கொண்டிருந்த இந்தியாவில், துப்பாக்கி-பீரங்கிக் குண்டுகளின் முழக்கத்தைக் கேட்கவைத்து கூத்தாடத் தொடங்கிவிட்டது சீன. அதனல் நமது பாரதத்தின் புகழ் காக்கும் வீரர்கள், தாயகத்தை மீட்கப் போர்க் கோலம் பூண்டுவிட்டார்கள்.

உலகத்தில், நல்லிதயம் படைத்த பல நாடுகள், நம்முடைய நேர்மைக்கும் வெற்றிக்கும் ஆதரவைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. எல்லையிலே எதிரிகள் நிற்கிருர்கள்; அங்கே அவர்களை ஒழிப்பதற்கு நமது வீரர்கள் நிற்கிருர்கள். இந்த நேரத்தில் நம்முடைய கடமை என்ன? வீண்பேச்சுப் பேசி பொழுதுபோக்க நேரமில்லை. நெருக்கடிமிக்க இந்தக் காலத்தில், தாய்மார்கள் தங்கள் குடும்பத் தலைவர்களை, பிறர் குடும்பப் பெரியோரைப் பாதுகாப்பு நிதிக்கு, நிதியளிக்க வழிகாட்ட வேண்டும். பெண்மணிகள், சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி, அதிலே மீதமாகும் தொகைகளைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கவேண்டும். நாம், நாடு காக்கவும், நாடு காக்கும் வீரர்களின் குடும்ப நலன் காக்கவும் பாடுபட வேண்டும்.

### தங்க நகைகளில் ஆசை வேண்டாம்

நமது அமரகவி பாரதி சொன்னதுபோல், "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக" உழைக்க வேண்டும். தாய்மார்கள், தங்க நகைகளின்மேல் கொண்டுள்ள ஆசையை, நெருக்கடிக் காலம் தீரும் வரையாவது ஒதுக்கிவைக்க வேண்டும். அதிக நகைகள் உள்ள தாய்மார்கள், மீதமுள்ள நகைகளைத் தாய் நாட்டின் பாதுகாப்புக்கு தந்துவிடவேண்டும். அல்லது, தங்கக் கடன் பத்திரங்களிலாவது போட்டுவைக்க வேண்டும். படித்த குடும்பப் பெண்கள் நாளுக்கு இரண்டு வீடுகளுக்காவது சென்று, சீனரின் கொடுமையைக் கூறி, இந்திய நேர்மையை விளக்கி ஆதரவைத் திரட்ட வேண்டும். தினமும், உணவிற்காக எடுக்கும் அரிசியில், ஒன்று அல்லது இரண்டு பிடி அரிசியை எடுத்துத் தனியாகப் போட்டுவைத்தால், அந்த அரிசி, பல டன்களாகும். அது, போராடும் வீரருக்குப் பேருதவியாகும்.

### படித்த பெண்களின் பணி

போர் நடக்கும் காலங்களில், படித்த பெண்கள், போர்க்களச் செய்திகளைப் படித்தறிந்து, படிக்காத பெண்களுக்கு விளக்கவேண்டும். ரத்தத்தை உறையவைக்கும் குளிரைப் பொறுத்துக்கொண்டு, முன்னணி இலக்குகளில் காத்து நிற்கும் அருமை வீரர்களுக்குக் கம்பளிச் சட்டைகள், கால் உறைகள், மப்ளர்கள் முதலிய உடைகள் பின்னி தைத்து அனுப்பவேண்டும். ஆண்கள், நெஞ்சுரமும், உணர்ச்சியும் பெறுவதற்குப் பெண்கள்தாம் பக்கபலமாக இருக்க வேண்டும். ஆண்கள், நம்மைவிடச் செலவாளிகள். பணத்தைப் பாழாக்காமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, தாய்க்குலத்தைச் சேர்ந்ததாகும். உங்களால் பாதுகாக்கப்படும் ஒவ்வொரு நயா பைசாவும், எதிரிகளை ஒழிப்பதற்கு உதவுகின்ற பீரங்கிக் குண்டுகளாகும். நமது சர்க்கார் அழைக்கின்ற நேரத்தில், படித்த பெண்கள் போர்க்களத்துப் பணிகளுக்குச் செல்ல ஆர்வம் கொள்ளவேண்டும்.

### வதந்திகளை நம்பாதீர்கள்

ஊருக்குள்ளே, நம்மிடமே இருந்துகொண்டு, எதிரிக்குத் துணைபோகும் துரோகிகள் சிலர், பொய் வதந்திகளைப் பரப்பி, மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள்; அத்தகைய வதந்திகளைத் தாய்மார்கள் நம்பவே கூடாது. வீடுகளில் மின்சார விளக்குகளை எரிப்பதில், சிக்கனத்தைக் கடைப்பிடித்து, மின்சாரத்தை மீதப்படுத்தவேண்டும். இதேபோல், மண்ணெண்ணெயையும் மிச்சமாக்கவேண்டும். இட வசதியுள்ள குடும்பங்களில், வீட்டிலேயே காய்கறிகள் பயிரிட்டு வளர்க்கவேண்டும்.

ஆடம்பர—அலங்காரப் பொருள்களை அதிகமாக உபயோகிக்கும் பெண்மணிகள், நாட்டின் தற்காப்பிற்காக அவற்றில் மனம் நாடாமல் இருந்து பழகிக்கொள்ளவேண்டும். வாரத்திற்கு இரண்டு மூன்று முறை சினிமாவிற்குச் செல்லும் பெண்கள், தயவுசெய்து அந்தச் செலவுகளையெல்லாம் குறைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வது நாட்டிற்கும் நல்லது, குடும்பத்திற்கும் நல்லது.

மாபெரும் தலைவர்களின் தியாகத்தால் கிடைத்த சுதந்திரத்தை, கொள்ளைக்காரர்களுக்கும் கொடுமைக்காரர்களுக்கும் உடமையாக்கிவிட்டால், நாளைய உலகம் நம்மைத்தான் பழிக்கும். எனவே, சகோதரிகளே, நமது அருமைத் தந்தை மகாத்மா காண்பித்த நல்ல பாதை அதோ தெரிகிறது. அந்தப் பாதையில் செல்வோம்.

ஆண்டவன் திருவருளும், மக்களின் மனவலிவும் வெற்றிதரும் என்று கொள்வோம்.



திருச்சி மாவட்டம் மணியக்குறிச்சி பள்ளி மாணவிகளுடன் பஞ்சாயத்துத் தலைவர்.

# அறிவுச் சுடர் ஒளி வீச . . .

பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொண்ட பெரிய அபிவிருத்தி வேலைகளில் ஆரம்பக்கல்வி வளர்ச்சி முக்கியமான ஒன்று ஆகும். பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிராமத் தலைவர்கள், பள்ளிகளில் அதிகமான பிள்ளைகளைச் சேர்ப்பதிலும், பள்ளிகளில் வசதிகளைப் பெருக்குவதிலும், ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து தருவதிலும் ஈடுபட்டுப் பணியாற்றினர். பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்ட பட்ஜெட்டில் மொத்த நிதி ரூ. 142 கோடியில், ஆரம்பக் கல்விக்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. **கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதென்ற இலக்கு, எதிர்பார்த்த அளவையும் மிஞ்சி விட்டது.** 1961–62-ல் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட குழந்தைகள் 3·83 லட்சமாகும். 1962–63-ல் நகராட்சிப் பகுதிகள், கிராமப் பகுதிகள் எல்லாவற்றிலுமாக 5 லட்சம் பேர் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பஞ்சாயத்துத் தலைவர்களின் ஊக்கமும் உற்சாகமும் இல்லையென்றால், இந்த அளவு சாதனை சாத்தியமாகி இராது. பஞ்சாயத்து தலைவர்களின் இந்த குன்றாத ஆர்வம் காரணமாக, மாநில அரசாங்கம், நிர்ணய கால அளவுக்கும் முன் கூட்டியே திட்ட லட்சிய அளவுகளை அடைய முடியும் என்று நம்பப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர் ஸ்தானங்களை அதிகப்படுத்தவும், பள்ளி இல்லாத பகுதிகளில் பள்ளிகளை ஆரம்பிக்கவும் அதிகாரம் பஞ்சாயத்து யூனியன்களுக்குண்டு. ஆரம்பப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதிலும் ஆசிரியர்கள் நிலைமையை உயர்த்துவதிலும் இந்த ஏற்பாடானது கணிசமாக உதவியுள்ளது. ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதில், பஞ்சாயத்து யூனியன்கள் தீவிர அக்கறை காட்டியுள்ளன. இந்த வகையில் 1961–62-ல் செலவிடப்பட்ட அரசாங்க மானியம் 54 லட்சம் ரூபாய் ஆகும். 1962–63-ல் எதிர்பார்க்கப்படும் அரசாங்க மானியச் செலவு ரூ. 45 லட்சமாகும்.

### பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்தல்

பள்ளிகளில் சேர்க்கப்படும் குழந்தைகள் தொகை அதிகரிப்பதற்கேற்ப, ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதம் 1:40 என்ற அளவில், ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக, கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம், இடையூறு எதுவுமின்றி முன்னேற்றம் அடைந்து வருகிறது. ஆரம்பக் கல்விச் செலவில் பஞ்சாயத்து யூனியன்களும் பங்கு ஏற்க வேண்டிய பொறுப்பு இருப்பதால் ஆசிரியர், மாணவர் விகிதத்தை கூடுமானவரை அனுசரிக்கச் செய்து, செலவைக்கட்டுப்படுத்த அவை முனைகின்றன. 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டமானது, ஆரம்பக் கல்வி விஷயமாக பஞ்சாயத்துகளுக்கு ஒரு பொறுப்பை விதிக்கிறது. அதாவது, ஆரம்பக் கல்விக்காக மூன்றாவது திட்டத்தில் ஆகும் செலவில் ஒரு பகுதியை பஞ்சாயத்து யூனியனே ஏற்க வேண்டும் என்று அச்சட்டம் கூறுகிறது. 1960–61, 1961–62 ஆண்டுகளில் பஞ்சாயத்துக்களுக்கு தல செஸ் உபரி வரிகளை விதிக்க கால அவகாசமில்லாததால் ஆரம்பக்கல்விக்கான செலவு தொகை பூராவும் அவைகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டது. 1961–62-ன் நிகர செலவு மானியம் உத்தரவாதமாகிவிட்டதால், 1962–63-ம் ஆண்டிலிருந்து பஞ்சாயத்து யூனியன்கள் சட்டத்தில் குறிப்பிட்டபடி, ஆரம்பக் கல்விச் செலவின் இரண்டாவது, மூன்றாவது நிலைப்படிகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பக்கல்வி மூன்றாவது நிலைப்படிச் செலவும், இரண்டாம் நிலையில் செய்யப்பட்டது போலவே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்விக்காக பஞ்சாயத்து யூனியன்கள் வசதி செய்ய வேண்டிய சுமார் 120 லட்சம் ரூபாய் தல வரியைத் தவிர்த்து, அவை தங்கள் பொது நிதியிலிருந்தும் ஆரம்பக் கல்விக்காகச் செலவிடும். இப்படி பொது நிதியிலிருந்து அவை செலவிடும் தொகை 1962–63-ல் ரூ. 64 லட்சமாகவும், 1963–64-ல் ரூ. 110 லட்சமாகவும், இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. ஆரம்பக் கல்வி விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் இப்படி, பொறுப்பின் பளுவை ஏற்க முன்வந்ததால் தான், பள்ளிகளில் கூடுதலாகக் குழந்தைகளைச் சேர்ப்பதில் கணிசமான முன்னேற்றம் காண முடிந்தது.

### பகல் உணவுத்திட்டம்

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் உறுதியான முறையில் அமைக்கப்பட்டுவிட்டதினால், நண்பகல் உணவுத் திட்டத்தை ஒரு முறையான ஏற்பாடாக ஆக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தல மக்களின் தரும சிந்தை ஒன்றை நம்பியே இத்திட்டம் இயங்குவது என்ற நிலை இனி இராது. பஞ்சாயத்துத் தலைவர்களை, நண்பகல் உணவுக்கமிட்டியின் தலைவர்களாக வைத்து, நண்பகல் உணவுக் கமிட்டிகளை அரசாங்கம் திருத்தியமைத்துள்ளது. குழந்தை ஒன்றுக்கு ஒரு உணவுக்கு தல நன்கொடை உதவி 4 காசுகள் என்பதில், பஞ்சாயத்துக்கள் 2 காசுகள் உதவலாம் என்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. நண்பகல் உணவுத் திட்டத்திற்கு உதவ, அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துகளுமே தீர்மானம் செய்திருக்கின்றன. இதன் மூலம், அரசாங்கம் தெரிவித்த வகையில் இந்த நண்பகல் உணவுத் திட்டத்தை ஒரு நிறுவன முறை ஏற்பாடாக ஆக்குவதில் பெருமளவு வெற்றி காணப்பட்டுள்ளது.

[அடுத்த பக்கம் பார்க்க].



# கிராமத் தொழில் வளர்ச்சி

### ஆர்க்காடு பஞ்சாயத்து யூனியன்

நாட்டு முன்னேற்றத்தில் விவசாயமும், தொழில் வளமும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டே ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்துறைகள்பற்றி மிகுந்த கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. கிராம மக்கள் அதிகமாக உள்ள நமது நாட்டில் கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டியது அவசியமாகும்.

இந்த வகையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆர்க்காடு பஞ்சாயத்து யூனியன் சிறந்த சேவை செய்துள்ளது. இந்த யூனியனில், தச்சு வேலை, கைக்காகிதம் செய்தல் ஆகிய தொழில்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர கூட்டுறவு முறையில் வெங்கலத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

சென்ற 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதியன்று வேலூரில் நடந்த மகாநாட்டில் பஞ்சாயத்துத் திட்ட இயக்குநரிடம் அளிக்கப்பட்ட உறுதியின்படி கீழ்க்கண்ட கிராமக் கைத்தொழில்கள் ஆர்க்காடு பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.



உழைப்பும் உயர்வும்

இந்த வட்டாரத்தில் செங்கல் செய்யும் தொழில் பற்றிய திட்ட விவரங்கள் மாவட்ட கிராமத்தொழில் வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆரம்பாக்கம் பஞ்சாயத்துத் தலைவர் தனனுடைய கிராமத்தில் செங்கல் தொழிலை ஆரம்பிப்பதற்கு ஒப்புதல் தெரிவித்து, இதற்கான வேலையையும் ஆரம்பித்திருக்கிறார். பச்சை செங்கல் தயாரிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வேலையாட்களை நியமித்திருக்கிறார். வேலை விரைவாக நடந்து வருகிறது. செங்கல் சூளை, கொட்டகைகள் ஆகியவை அமைப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவகளை அமைக்கும் வேலை சீக்கிரமே துவங்கவிருக்கிறது.

### சுண்ணாம்புத் தொழில்

ஆரம்பாக்கத்தில் சுண்ணாம்புதொழில் அமைப்பதற்கு வட ஆர்க்காடு மாவட்ட கிராமத்தொழில் வளர்ச்சி அதிகாரி அனுமதி அளித்துள்ளார். சுண்ணாம்பு தயாரிப்பதற்கான சுண்ணாம்புக்கல் ஆரம்பாக்கத்தில் ஏராளமாகக் கிடைக்கிறது. இந்தத்தொழிலை ஆரம்பிப்பதற்காக ஆரம்பாக்க பஞ்சாயத்துத் தலைவர் எல்லா உதவிகளையும் செய்திருக்கிறார். தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தின் புறம்போக்கு நிலங்களில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல்லை எடுக்க வேலையாட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சூளையும், கொட்டகையும் சீக்கிரமாக அமைப்பதற்கான வேலை விரைவாக நடைபெற்று வருகிறது.

### தையல் பின்னல் தொழில்

அத்தித்தாங்கலில் காமான்தொழிலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைத்தவிர தையல்-பின்னல் போன்ற தொழில்களை "முப்பது வெட்டி" கிராமத்தில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுபற்றிய உத்தேச ஏற்பாடுகள் மாவட்ட கிராமத்தொழில் வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. முப்பது வெட்டி கிராமத்தில் இதற்கான ஒரு வாடகை வீடு ஏற்பாடு செய்யப்பட்டு 12 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தையல்-பின்னல் வேலை தெரிந்த முக்கிய சேவிகா ஒருவர் இதற்குப் பொறுப்பாளராக இருக்கிறார். இதற்கு ஒரு பெண் ஆசிரியை (Lady Instructor) அனுப்பும்படி மாவட்ட கிராமத்தொழில் வளர்ச்சி அதிகாரி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

---

முன் பக்கத் தொடர்ச்சி,

### பூர்வாங்க ஆரம்பக்கல்வி

பூர்வாங்க ஆரம்பக்கல்வியும், ஆரம்பக்கல்வியைப் போலவே முக்கியமானது என்பதை மாநில அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. இதையொட்டி, மாநிலத்தில் 21 வட்டாரங்களில், அபிவிருத்தி வட்டாரத்துக்கு ஒன்று வீதமாக பூர்வாங்க ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தற்போது மொத்தம் 730 பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகள் எல்லாவற்றுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பள்ளிகளுக்கு கல்வி போதனைக்குரிய கருவிகளும், விளையாட்டுக் கருவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த பூர்வாங்க ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம், பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாகக் கண்காணிப்பிலும், மாதர் நலத்துறை நெறியாளரின் மேற்பார்வையிலும் செயல்படும்.

[கிராம நல தல நிர்வாகத்துறையின் மானியக் கோரிக்கை— விளக்க உரையிலிருந்து.]

பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது :—

# பஞ்சாயத்து அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

## கிராம அதிகாரிகளின் பஞ்சாயத்துக்கள் பற்றிய கடமை

## தமிழ்நாடு கிராமக் கணக்கர் சங்கக் கோரிக்கைகளும் அரசாங்கத்தின் முடிவுகளும்

**[Panchayat Development-Specification of duties to be performed by Village Officers on behalf of Panchayats—Payment of Panchayat Development Allowances—Representation of the Tamilnad Village Karnams Association—Orders Passed.]**

**(G.O. Ms. No. 514, R.D. and L.A., dated 8-3-63.)**

கிராம நலத்துறையின் 1961-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 614-ல் கிராம அதிகாரிகளின் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் பற்றிய கடமைகளை வரையறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கிராமக் கணக்கர் சங்கப் பிரதிநிதிகள், 1961 ஆண்டு நவம்பர் 21-ம் தேதியில் அரசாங்கத் தலைமைச் செயலாளரைச் சந்தித்து, புதிய நிர்வாக அமைப்பில், பணி விதி முறைகள் முதலியன குறித்த சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்துக்கொண்டனர். அந்த அறிக்கையும், அது குறித்து எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளும் 1962 நவம்பர் 2, 3 தேதிகளில் நடந்த நிர்வாகம்—வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்படி அறிக்கையின் கோரிக்கைகளையும், அதுகுறித்த குழுவின் பரிசீலனையும் அரசாங்கம் நன்கு ஆராய்ந்த பின்னர் சில முடிவுகளை எடுத்துள்ளது. அந்தக் கோரிக்கைகளும் அவை குறித்த அரசாங்க முடிவும் முறையே தரப்படுகிறது :—

**கோரிக்கை 1.**—அரசாங்கம் கிராம அதிகாரிகளை கிராமப் பஞ்சாயத்துக்களின் பகுதிநேர குமஸ்தாக்களாக எங்கும் நியமிக்கவேண்டும். பஞ்சாயத்து பகுதி நேர குமஸ்தாவுக்கு நிர்ணயித்துள்ள ஊதியத்தை அவர்கள் பெறத்தகுதியுடையவர்களாக்க வேண்டும். இது விஷயத்தில் பஞ்சாயத்து முடிவு செய்யும் நிலை இருத்தலாகாது.

**முடிவு.**—இப்பொழுதுள்ள முறைகளின்படி, பஞ்சாயத்துக்கள் கிராம கணக்கர்களைப் பகுதிநேர குமஸ்தாக்களாக அமர்த்திக்கொள்ளவோ, அமர்த்திக்கொள்ளாமல் இருக்கவோ அவை முடிவு செய்து கொள்ளலாம். அவ்வாறே கணக்கர்களும் பகுதி நேரக் குமஸ்தாக்களாக இருக்க மறுக்கலாம். அரசாங்கம் மேற்படி கோரிக்கையைப் பரிவுடன் ஏற்று, கணக்கர், கிராமப் பஞ்சாயத்தின் 'பதவி வழி வந்த' செயலாளராக விளங்குவது சிக்கனமான சிறந்த முறையாகும் என்று கருதுகிறது. ஒரு கணக்கர் கவனிக்க முடியாத மிகப் பெரியதாக இருக்கும் சில கிராமப் பஞ்சாயத்துக்களில், கணக்கருக்குத் துணை புரிய அவருடைய இடத்தை ஈடு செய்ய அல்ல—ஒரு பகுதிநேர குமஸ்தா அமர்த்தப்படலாம். இதுவே அரசாங்கத்தின் உறுதியான முடிவு என்ற போதிலும், இந்த ஏற்பாடுகளை கணக்கர்களின் பணி பாராட்டத்தக்க வகையில், திருப்திகரமாக அமைகின்ற வரையில், கணக்கர்களையோ பஞ்சாயத்துக்களையோ பின்பற்றும்படி கட்டாயப்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. 1963-ம் ஆண்டு இறுதிக்குள் இது விஷயத்தில் இறுதி முடிவு செய்யப்படலாம். இதே நேரத்தில் ஊர்ப் பொது நிலங்கள், ஆக்கிரமிப்புக்கள் பற்றிய விஷயங்களை பஞ்சாயத்துத் தலைவர், உறுப்பினர்கள், ஊர் மக்கள் ஆகியோர் திருப்திப்படும் வகையில் தீர்த்து வைக்கின்ற வேலை தீவிரமாக நடக்க கிராமக் கணக்கரின் பணி இப்போதிருப்பதைவிட அதிக உபயோகமாக இருக்கும் என்பதை உணர முடியும். ஆகவே இது குறித்த இறுதி முடிவு செய்வதைத் தள்ளிவைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

**கோரிக்கை 2.**—'பஞ்சாயத்துப் பகுதி நேர குமஸ்தா' என்ற பதவிப் பெயர் 'பஞ்சாயத்துச் செயலாளர்' என்று மாற்றப்படலாம்.

**முடிவு.**—பகுதி நேர குமஸ்தாவின் கடமைகள் கணக்கரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்களில் அவர் 'பஞ்சாயத்துச் செயலாளர்' என்று குறிக்கப்படுவார். இந்த யோசனையை அரசாங்கம் ஏற்கிறது.

**கோரிக்கை 3.**—பஞ்சாயத்து அலுவலகங்களுக்குத் தனிக் கட்டடங்கள் நன்கு அமைக்கப்படும்வரையில், பஞ்சாயத்துக் கணக்கு பற்றிய பதிவேடுகள், பதிவுக்கட்டுகள் ஆகியவற்றை கணக்கர் தம் வீட்டிலேயே வைத்திருக்க அனுமதிக்கப்படலாம்.



**முடிவு.**—பஞ்சாயத்து ஒரு சிறந்த நிறுவனமாகச் செயல்படவும் குறிப்பாக பஞ்சாயத்தும் கிராம அதிகாரிகளும் சுமுகமாகச் செயல்படவும் பஞ்சாயத்து அலுவலகங்களுக்கு நிலையான பொதுக் கட்டிடங்கள் கட்டவேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்கிறது. பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்களைக் கட்டும் மாதிரித் திட்டம் செயல்படுத்தப்பட கொள்கையளவில் அரசாங்கம் முடிவு செய்த போதிலும், இன்றைய தேசிய நெருக்கடி விளைவுடன் சேர்ந்து மேலும் நிதி வசதி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, அலுவலகக் கட்டிடத் திட்டத்தை இப்போதைக்கு நிறுத்தி வைப்பதுடன், பஞ்சாயத்துத் தலைவர்களும் கிராமக் கணக்கர்களும் இந்த ஏற்பாடுகளின்படி சுமுகமாகச் செயல்பட வேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. கணக்கர் வைத்திருக்கவேண்டிய பஞ்சாயத்துக் கணக்குகள் எல்லாம், அவரே, தம் பாதுகாப்பில் தம் வீட்டில் வைத்திருக்கலாம். ஆனால், பஞ்சாயத்து சாதாரணமாகக் கூடும் இடங்களில், பஞ்சாயத்தோ, அல்லது அதன் தலைவரோ, அவற்றைக் காண விரும்பினால் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

**கோரிக்கை 4.**—கிராம அதிகாரிகள், பஞ்சாயத்து அபிவிருத்தி வேலை சம்பந்தமாக செய்யும் பயணங்களுக்கு பயணப்படிகளும் தினப்படிகளும் அனுமதிக்கப்படலாம்.

**முடிவு.**—இந்தக் கோரிக்கை கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. உரிய ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

**கோரிக்கை 5.**—கிராமத் தலையாரிகள், வெட்டியான்கள் எல்லோருக்கும் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி அளிக்கலாம்

**முடிவு.**—இந்த யோசனையைக் கொள்கையளவில் அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. மேலும் இது குறித்துப் பரிசீலனை செய்து, தேவையான ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

**கோரிக்கை 6.**—நகரப் பஞ்சாயத்துக்களிலும், நகர மன்றங்களிலும் உள்ள எல்லா கிராம அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி கொடுக்கலாம்.

**முடிவு.**—நகர மன்றப் பகுதிகளில் உள்ள கிராம அதிகாரிகளுக்குப் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த மட்டில், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் ஆணைப்படி, பஞ்சாயத்து வரிவசூல் வேலை கிராம மணியக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின், அவர் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி பெறத்தகுதியுடையவராவார். கணக்கர்களைப் பற்றிய விஷயத்தில், பஞ்சாயத்து அபிவிருத்தி வேலை அவர்களிடம் ஒப்படைப்பது அவசியம் என்று ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி கருதுவாரானால், கணக்கர்களுக்கும் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கிராம அதிகாரியும், ஒவ்வொரு கிராம ஊழியரும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தி வேலை ஏதாவது செய்தால் மட்டுமே பஞ்சாயத்து அபிவிருத்திப்படி பெற முடியும். எந்த அதிகாரியும், இரண்டு பஞ்சாயத்துக்களின் வேலையைக் கவனித்தபோதிலும் ஒரு படித்தொகைக்குமேல் பெறத் தகுதியற்றவராவார். நகரப் பஞ்சாயத்துக்களிலுள்ள கிராம அதிகாரிகளுக்கு, பஞ்சாயத்து அபிவிருத்திப்படி செலுத்துவதற்குத் தேவையான ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

**கோரிக்கை 7.**—பஞ்சாயத்து அபிவிருத்திப்படி வழங்குவதில் சாதாரண ஊதியம், எளிய ஊதியம் என்ற வேறுபாடு நீக்கப்படலாம்.

**முடிவு.**—இது விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து, அந்த யோசனையை ஏற்க முடியாது என்று முடிவு செய்துள்ளது.

**கோரிக்கை 8.**—தொழிற்சாலை முதலியன இருத்தல் ஆகிய விசேஷ காரணங்களுக்காக ஏற்கனவே வரி வசூலிப்போரை அமர்த்தியிருக்கின்ற விஷயங்களில், வரி வசூலிக்கவென்று ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**முடிவு.**—மேற்படி கோரிக்கையில் குறித்தவாறு, விதிவிலக்காக சில வகைகளில் சில பஞ்சாயத்துக்களுக்கு வருவாய் வருவதுண்டு. அத்தகைய இடங்களில் வசூல் வேலையை வரி வசூலிப்போரிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது அந்தந்தத் தனி விஷயங்களைப் பொறுத்ததாகும். அத்தகைய விஷயங்கள் கலெக்டர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமாயின், அவர்கள் அவற்றின் நிலையைப் பரிசீலனை செய்து, வரி வசூலிப்போரை அமர்த்துவது அவசியம் என்று தோன்றினால், அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார். இதற்கென எந்தப் பொது முறைகளையும் விளக்கங்களையும் அரசாங்கம் வெளியிடுவதற்கில்லை.

**கோரிக்கை 9.**—பஞ்சாயத்து வேலைக்குத் தேவையான நமூனாக்கள், பதிவேடுகள், எழுதுபொருட்கள் முதலியன, அவ்வப்போது தவறாமல் கணக்கர்களுக்குக் கிடைக்குமாறு செய்யலாம்.

**முடிவு.**—இந்தக் கோரிக்கையை ஈடேற்ற அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. கலெக்டர், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள், இணை பஞ்சாயத்து அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டு இத்தகைய புகார்கள் இனிவராமல் பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க கலெக்டர்கள் காலமுறை அறிக்கைகளை வரையறுக்கவேண்டும்.

**கோரிக்கை 10.**—கிராம மணியக்காரர் 'கிராம வழக்கு மன்ற'மாக விளங்க, சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்க அதிகாரமளிக்கப்படலாம்.

**முடிவு.**—இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 514.)

## தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கத்தின் திருச்செங்கோடு தாலூகா கிளைச் சங்கத் தீர்மானங்களும் அரசாங்க முடிவுகளும்

**[Panchayat Administration—Association of Village Officers—Resolution passed by the Tiruchengode Taluk branch of Tamil nad Village Officers, Association—Orders passed].**

**[Memorandum No. 160607, R.D. and L.A., dated 25-3-63.]**

தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்க திருச்செங்கோடு தாலூகா கிளைச் சங்கம் 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ந் தேதிய கூட்டத்தில், பஞ்சாயத்து நிர்வாகம் குறித்து சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அத் தீர்மானங்களும், அவை குறித்து அரசாங்கத்தின் முடிவுகளும் வருமாறு :—

**தீர்மானம் 1.**—கிராம அதிகாரிகள், கிராமப் பஞ்சாயத்துக்களின் பதவி வழி (Ex-officio) உறுப்பினர்களாக்கப் படவேண்டும்.

**முடிவு.**—கிராம அதிகாரிகள், மணியக்காரர் அல்லது கணக்கர், பஞ்சாயத்துக்களின் (பதவி வழி) உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்ற முடிவு அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது.

**தீர்மானம் 2.**—பஞ்சாயத்து வரிவசூலுக்கு பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து கிராம அதிகாரிகள் வாரண்டு பெறுகின்ற இப்போதைய முறையைத் திருத்தி ரெவின்யூ அதிகாரிகள் வாரண்டு பிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்:

**முடிவு.**—வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரியே வாரண்டு பிறப்பிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளதால் இத்தீர்மானத்தை ஒப்புக்கொள்வது முடியாது.

**தீர்மானங்கள் 3 & 4.**—கிராம அதிகாரிகள், முழு நேர அரசாங்க ஊழியர்களாக்கப்பட்டு, கீழ்நிலை குமஸ்தாக்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், அகவிலைப்படி, விடுமுறை, ஓய்வுத்தொகை, வைப்புத்தொகை (Provident Fund) முதலியன அளிக்கப்படவேண்டும்.

தலையாரிகள், வெட்டியான்கள் முதலிய கிராம ஊழியர்கள், முழு நேர அரசாங்க ஊழியர்களாக்கப்பட்டு, கடைநிலை அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், அகவிலைப்படி, ஓய்வுத்தொகை, விடுமுறை, முதலியன அளிக்கப்படவேண்டும்.

**முடிவு.**—இந்த ஆலோசனைகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

**தீர்மானங்கள் 5 & 6.**—எல்லா கிராம ஊழியர்களும், ஒருவருக்கு மாதம் 5 ரூபாய் வீதம் பஞ்சாயத்து அபிவிருத்திப்படி அளிக்கப்படவேண்டும்.

கிராம அதிகாரிகளும், ஊழியர்களும் பஞ்சாயத்து வரி வசூல் வேலைக்காக பிற வேலைகளுக்கும், ஐந்து மைல்களுக்குமேல் பயணம் செய்யும்போது பயணப்படியும், தினப்படியும் அளிக்கப்படவேண்டும்.

**முடிவு.**—இந்த ஆலோசனைகள் குறித்துத் தனியே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**தீர்மானம் 7.**—பஞ்சாயத்து வரி வசூல் வேலை கிராம அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் வசூலாகாமல் இருக்கும் வசூல் பாக்கிகளுக்கு, கிராம அதிகாரிகளைப் பொறுப்பாக்கக் கூடாது.

**முடிவு.**—ஒழுங்கு நடவடிக்கையின்றி பழைய வசூல் நிலுவைத் தொகையை கிராம அதிகாரிகள் வசூலிக்கும்படி தூண்டப்படவேண்டும்.

**தீர்மானம் 8.**—பஞ்சாயத்து வரி வசூல் வேலைக்கு கிராம அதிகாரிகளுடன் பஞ்சாயத்துத் தலைவர்களும் பொறுப்பாளர்களாக்கப்படவேண்டும்.

**முடிவு.**—இத் தீர்மானத்தை ஏற்க முடியாது. எனினும் வரிவசூல் வேலையில் கூடியமட்டும் உதவி செய்யும்படி பஞ்சாயத்துத் தலைவர்கள் கூறப்பட்டுள்ளனர்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ந்தேதியிட்ட அறிக்கை எண் 160607.)

---

## மக்கள் பிறப்பு—இறப்பு புள்ளி விவரங்கள்

### 1963-ல் கிராமப் பகுதிகளில் மக்கள் தொகை ஆண்டு-இடை மதிப்பீடு செய்யக் கணக்கெடுத்தல்

**[Vital Statistics—Estimating mid—year population of rural areas in 1963-Conduct of another ad-hoc Census—Ordered.]**

**(G O. No. 1035, Health, dated 11-4-63.)**

சுகாதாரத் துறையின் 4-4-1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 939-ல், கிராமப் பகுதிகளில், 1962 ஜனவரி 14-ம் தேதியிலிருந்து (பொங்கல் திருநாளில் இருந்து) 1962 ஜூன் 30-ந் தேதி வரையில் நிகழ்ந்த பிறப்பு இறப்புக்களை பஞ்சாயத்து வட்டார அபிவிருத்தி வெளித்துறைப் பணியாளர் ஆகியோர் ஆண்டு-இடை மக்கள் தொகையை மதிப்பிடுவதற்கென்று, புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் இக்கணக்கெடுப்பை நடத்தவும் அதைக்கொண்டு அறிந்த முடிவுகளைப்பற்றிய அறிக்கை தயாரித்து



அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கவும், அதிகாரிகள் அடங்கிய ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. அதன்படி அந்தக் குழு அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தது. அக் குழு, சமர்ப்பித்த அறிக்கையின் முடிவுரையில், பிறப்பு இறப்புக்களை ஒழுங்காகப் பதிவு செய்யும் வகையில் கிராம மணியக்காரர்கள், பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் பயிற்சிபெற இக்கணக்கெடுப்பு நல்லமுறையில் பயன்பட்டுள்ளதென்றும், மக்கள் பிறப்பு இறப்புக் கணக்கெடுப்பின் இன்றியமையாமையை அவர்களுக்கு உணர்த்தியுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளது. மேலும், இத்தகைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை, இதே அடிப்படையில் 1962-ல் நடத்தியது போன்றே 1963 ஜூலை முதல் வாரத்தில் நடத்தலாம் என்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியுள்ளது. இந்த ஆலோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டதுடன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த ஆணை பிறப்பிக்கிறது.

2. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதற்கு கீழ்க்கண்ட ஏற்பாடுகளை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது:—

(அ) சென்ற ஆண்டைப் போன்று, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த குழு எதுவும் அமைக்கப்படவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலையைத் திட்டமிட்டு நடத்தவும், முடிவுகளை அறியவும், அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் சுகாதாரத்துறை இயக்குநர் (Director of Public Health) பொறுப்பாவார்.

(ஆ) கணக்கெடுப்பு வேலையை நடத்த, கிராம அபிவிருத்திக் கமிஷனர், புள்ளி விவரத்துறை இயக்குநர், சென்னை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலை மேற்பார்வையாளர் ஆகியோரின் உதவியையும், ஒத்துழைப்பையும், பெறும்படி சுகாதாரத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இது விஷயத்தில் தம் முழு ஒத்துழைப்பையும் நல்கும்படி கிராம அபிவிருத்திக் கமிஷனரும், புள்ளி விவரத்துறை இயக்குநரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(இ) இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்ட விளக்கங்களின்படி கணக்கெடுப்பு வேலை நடைபெறும். இவ்விளக்கங்கள், சுகாதாரத் துறையின் 4—4—1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 939-ன் இணைப்பாக வெளியிடப்பட்ட விளக்கங்களே ஆகும். (இவ்வாணையும், இதன் இணைப்பும் 1962 ஏப்ரல் ‘கிராமநல’ இதழில் வெளியிடப்பட்டுள்ளன) அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சில இடங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

(ஈ) இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்பற்றிய நமூனாக்களை உரிய காலத்தில் அச்சிட்டு அனுப்பவும், சுகாதாரத்துறை இயக்குநருடன் தொடர்பு கொண்டு அவற்றைத் தபாலில் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும்படியும், அரசாங்க எழுதுபொருள் அச்சுத் துறைத் தலைவர் (Controller of Stationery and Printing) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(உ) மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பல்வேறு வேலைகளுக்கும், அறிக்கை சமர்ப்பிக்கவும் வரையறுக்கப்பட்டுள்ள கால அட்டவணையை இவ்வேலை சம்பந்தப்பட்ட அனைவரும் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்.

3. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலை, கடந்த ஆண்டைப் போன்றே, உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

### இணைப்பு

**குறிப்பு.**—இவ்வாணையின் இணைப்பு பெரும்பாலும், சுகாதாரத் துறையின் 4—4—1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 939-ன் இணைப்பை ஒட்டியே அமைந்துள்ளது. 1962 ஏப்ரல் ‘கிராம நலம்’ பஞ்சாயத்து அரசிதழில் இவ்வாணையும் இதன் இணைப்பையும் வெளியிட்டுள்ளோம். அந்த இணைப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை மட்டும் கீழே கொடுத்துள்ளோம்:—

அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களிலும் நமூனாக்களிலும் 1962-ம் ஆண்டு என்றுள்ள இடங்களை எல்லாம் 1963-ம் ஆண்டு என்று திருத்திப் படிக்கவும். நமூனாக்களின் அமைப்புக்களையும் அந்த இணைப்பிலே காணலாம்.

பாரா VII-ல் மேற்பார்வை என்ற துணைத் தலைப்பில் உள்ள விளக்கத்தில் “மாவட்டக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகள் என்று இருப்பதை “மாவட்டச் சுகாதார அதிகாரிகள்” என்று திருத்திக்கொள்ளவும்.

பாரா **VIII.** பணியாளர்களுக்குப் பயிற்சி என்ற துணைத் தலைப்பின் கீழ் கூறப்பட்ட விளக்கத்துக்குப் பதில் அதே தலைப்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியைச் சேர்த்துப்படிக்கவும்:—

**VIII பணியாளர்க்குப் பயிற்சி**

“மக்கள் பிறப்பு இறப்புக் கணக்கெடுப்புத் திட்டத்தை சரியாக நிறைவேற்றுவதற்கு, சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும். 1962-ல் இக் கணக்கெடுப்பு நடந்தபொழுது, பெரும்பான்மையான சுகாதார மேற்பார்வையாளர்கள் இது விஷயத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கு மறுபடி பயிற்சி அளிக்கத் தேவையில்லை. பஞ்சாயத்து யூனியன்களில் இப் பயிற்சி பெறாத சுகாதார மேற்பார்வையாளர் சிலர் இருக்கலாம். அவர்களுக்கு, 1963-ம் ஆண்டு மே மாதம் 10-ந் தேதிக்குள், மாவட்ட சுகாதார அதிகாரிகள் தேவையான பயிற்சி அளிப்பார்கள். சுகாதார மேற்பார்வையாளர்கள் 1963-ம் ஆண்டு மே மாதம் 15 தேதி முதல் 31 தேதி வரையில், கிராம மணியக்காரர்களுக்கு, மூன்று தொகுதிகளாக இவ்வேலை குறித்த பயிற்சி அளிப்பார்கள். தேவைப்பட்டால் அவர்கள் மேலும் சில துணை வகுப்புக்களை (Supplementary Classes) நடத்தலாம். ஒவ்வொரு தொகுதி சுகாதார மேற்பார்வையாளர்கள் அல்லது கிராம மணியக்காரர்களின் பயிற்சியும் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நடைபெறலாம். கிராம மணியக்காரர்களின் பயிற்சிக்காகக் குறிக்கப்படும் நாட்கள் அவர்களுடைய ஜமாபந்தி வேலைக்கு இடையூறு இல்லாத வகையில் அமையும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். சுகாதார மேற்பார்வையாளர் இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்தில், அங்குள்ள சுகாதார உதவியாளருக்கு (Health Assistant) இப்பயிற்சி அளிக்கப்படும். ஏதாவது

காரணத்தினால் சுகாதார உதவியாளரும் இல்லையென்றால் யூனியனின் கல்வி வளர்ச்சி அதிகாரிக்கு இப்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியளிக்கப்பட்ட பணியாளருள் 10 சத வீதத்தினர் இருப்பில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இருப்பில் வைக்கப்படடும் இப்பணியாளர்கள், கூடிய மட்டும் மாவட்ட தலைநகரில் இருப்பவர்களாகவும் சுகாதார மேற்பார்வையாளர்கள் சுகாதார உதவியாளர்கள் கல்வி வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோராகவும் இருப்பார்கள்.

மக்கள் தொகை—பிறப்பு இறப்புக் கணக்கெடுப்புத் திட்ட நிறைவேற்றத்துக்கான கால அட்டவணை—

| | | |
|---|---|---|
| 1. | விளக்கங்கள் தயாரித்தலும் வழங்குதலும். | 1963 எப்ரல் 7. |
| 2. | நமூனுக்கள் அச்சிடுதலும் வினியோகித்தலும் | 1963, எப்ரல 30. |
| 3. | சுகாதார மேற்பார்வையாளர்களின் பயிற்சி. | 1963, மே 1முதல் 10 வரை. |
| | கிராம மணியக்காரர்களின் பயிற்சி. | 1963, மே 15 முதல் 31வரை. |
| 4. | பஞ்சாயத்துத் தலைவர்களின் பயிற்சி. | 1963, ஜூன் 5, 6, தேதிகள். |
| | பஞ்சாயத்தார்களின் பயிற்சி. | 1963, ஜூன் 10, 11 தேதிகள். |
| 5. | மக்கள் கணக்கெடுப்பு விசாரணை | 1963, ஜூலை 1 முதல் 6 வரை. |
| 6. | பஞ்சாயத்துக்களின் சிறப்புக் கூட்டம். | 1963, ஜூலை 7 |
| 7. | பதிவாளர்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அறிக்கை அனுப்புவதற்கான கடைசித் தேதி. | 1963, ஜூலை 14. |
| 8. | பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் சுகாதாரத்துறை இயக்குநருக்கு அறிக்கை (நமூனுவில்) அனுப்புவதற்கான கடைசி தேதி. | 1963, ஜூலை 21. |
| 9. | முதல் நிலை நகலை ஆராய்ந்து, தொகுத்துத் தயாரித்தல். | 1963, ஆகஸ்ட் 31. |
| 10. | சுகாதாரத்துறை இயக்குநர் இறுதி அறிக்கை சமர்ப்பித்தல். | 1963, செப்டம்பர் 15. |

(சுகாதாரத் துறையின் 11-4-1963 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1035—30-4-'63 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 41769-ன் படி திருத்தப்பட்டது.]

---

## தேசிய நெருக்கடி நிலைபற்றிய வெளியீடுகளை விநியோகித்தல்/பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் இதற்கான பதிவேடுகள் வைத்திருத்தல்

## [Publicity of the National Emergency—Distribution of Publicity Materials—Panchayat Union Councils—Maintenance of Registers—Instru.tions—Issued].

## Memorandum No. 20347, R.D. & L.A., dated 1-2 63.

மாநில அரசாங்கம் வெளியிடும் தேசிய நெருக்கடி நிலை பற்றிய எல்லா வெளியீடுகளும், எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் அவ்வப்போது அனுப்பி வைக்கப்படுகின்றன. அதே போன்று தேசிய நெருக்கடி பற்றிய இந்திய அரசாங்க வெளியீடுகளும் நேராக அனுப்பிவைக்கப்படுகின்றன. பொதுமக்களிடம் இந்த வெளியீடுகள் எந்த அளவுக்கு வரவேற்பைப் பெறுகின்றன என்பதை அறியும் வகையில், மாநில அரசாங்க வெளியீடுகளுக்கு என்றும், இந்திய அரசாங்க வெளியீடுகளுக்கு என்றும் இரண்டு பதிவேடுகள், இவ்வறிக்கையுடன் இணைத்துள்ள அமைப்பின்படி, எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் வைத்திருக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. அப்பதிவேடுகளில், ஒரு வெளியீட்டுக்கு ஒரு பக்கம் என்று ஒதுக்கலாம். ஆகவே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், விரைவில் இப்பதிவேடுகளைத் தயாரித்து வைத்திருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இவற்றை டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் அந்த வட்டாரங்களுக்கு வரும்பொழுது பார்வையிடுவதற்கு ஏற்ற வகையில இருக்கவேண்டும்.

### இணைப்பு

.........................பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அலுவலகம்.

மாநில அரசாங்க வெளியீடுகளின் விநியோகம் குறித்த பதிவேடு :—

| பிரதிகள் பெற்ற தேதி. | பிரதிகளின் எண்ணிக்கை. | விநியோகித்த தேதி. | விநியோகம் பற்றிய விவரம். | | நிலுவை பிரதிகள். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| | | | யாருக்கு விநியோகிக்கப்பட்டது. | எத்தனை பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. | | |



.........................பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அலுவலகம்.

இந்திய அரசாங்க வெளியீடுகளின் விநியோகம் குறித்த பதிவேடு :—

| பிரதிகள் பெற்ற தேதி. | பிரதிகளின் எண்ணிக்கை. | விநியோகித்த தேதி. | விநியோகம் பற்றிய விவரம். | | நிலுவை பிரதிகள். | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | யாருக்கு விநியோகிக்கப்பட்டது. | எத்தனை பிரதிகள் விநியோகிக்கப் பட்டன. | | |

(கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி 1-ந் தேதியிட்ட அறிக்கை எண் 20347.)

---

## கிராமத் தொண்டர் படை அமைப்பு—முன்னேற்ற அறிக்கை

## [National Emergency—Village Volunteer Force—Formation of—Progress report—Submission of—Proforma—Prescribed].

## Memorandum No. 33317, dated 30th March 1963.

1. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2793-ல், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும், உற்பத்தி அணி, அறிவு அணி, காவல் அணி ஆகிய முப்பிரிவுகள் அடங்கிய கிராமத் தொண்டர் படை அமைப்புத் திட்டத்தை வகுத்து வெளியிட்டுள்ளது. இத்திட்டம் 1963 ஜனவரி, 26—குடியரசுத் திருநாளில் துவக்கப்பெற்றது.

2. இந்திய அரசாங்க சமுதாய நல-கூட்டுறவு அமைச்சகம் (சமுதாய நலத் துறை) ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமத் தொண்டர் படைத் திட்ட நிறைவேற்றத்தில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங் குறித்து, முறைப்படி புள்ளி விவர முன்னேற்ற அறிக்கை பெறவேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளது. இதற்கென்று அவர்கள், இவ்வறிக்கையின் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ள முன்னேற்ற அறிக்கை அமைப்பை அனுப்பியுள்ளனர். மாநிலத்திற்கான முன்னேற்ற அறிக்கைத் தொகுப்பை இந்த அமைப்பின்படி அனுப்பும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

3. எல்லா மாவட்டக் கலெக்டர்களும், கோயம்புத்தூர் இணைக் கலெக்டரும்—கொடுக்கப்பட்டுள்ள அமைப்பின் படி—தத்தம் மாவட்டங்களில் கிராமத் தொண்டர் படைத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங் குறித்து, மாதாந்தர சிறப்பு அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஒவ்வொரு மாதத்திய அறிக்கையையும் அதற்கு அடுத்த மாதம் 5-ம் தேதி அளவில் இரண்டு பிரதிகளாக அனுப்பவேண்டும். கலெக்டர்களும் கோயம்புத்தூர் மாவட்ட இணைக் கலெக்டர்களும் தத்தம் மாவட்டங்களைப் பற்றிய தொகுப்பறிக்கையை, இப்பொழுது சமுதாய அபிவிருத்தி அமைச்சகத்துக்கு அனுப்பப்படும் வட்டார முன்னேற்ற அறிக்கையைப் போன்றே தவறாமல் ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதி அளவில் புள்ளி விவரத் துறை இயக்குநருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இது பற்றி, புள்ளி விவரத்துறை இயக்குநர் கலெக்டர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

4. கிராமத் தொண்டர் படைத் திட்ட முன்னேற்றங் குறித்த அறிக்கைகளை, சமுதாய அபிவிருத்தியின் புள்ளி விவர அதிகாரி தொகுத்து, முப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர், அறிக்கைகளில் அடங்கியுள்ள புள்ளி விவரங்களை ஆராய்ந்து, பரிசீலனை செய்து பார்த்து, ஒவ்வொரு வட்டாரத்தின் சாதனைகளையும் தனித்தனியே மதிப்பிடவேண்டும். ஒவ்வொரு மாதத்தைப் பற்றிய தொகுப்பறிக்கையையும்—மதிப்பீட்டுக் குறிப்புகளையும்—புள்ளி விவரத் துறை இயக்குநர்—அடுத்த இரண்டாவது மாதம் 5-ம் தேதி அளவில் அரசாங்கத்திற்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டும். வரையறுக்கப்பட்டுள்ள தேதிகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

### இணைப்பு

### கிராமத் தொண்டர் படை

1963,......................மாதத்திற்கான, மாதாந்தர முன்னேற்ற சிறப்பறிக்கை—

குறிப்பு.—இவ்வறிக்கை (1) பொது விவரங்கள் (2) கிராமத் தொண்டர் படை அமைப்பு (3) பயிற்சி (4) முன்னேற்றம் (5) பாதுகாப்பு உழைப்பு பாங்கு (6) பல்வகை என்ற பகுதிகளை உடையது. இதன் குழு அமைப்பையும்—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள ஆணையில் காணலாம்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 33317.)



# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

ஜூன், 1963

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்:**
*கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.*

**ஒவ்வொரு திங்கட்கிழமையும்:**
*ஒலிப்பதிவுப்பாடல்கள், விவசாயிகளின் வாராந்திர விமர்சனம்.*

**ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்:**
*திரைப்பட இசை, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்*

**ஒவ்வொரு புதன் கிழமையும்:**
*நாட்டுப்பாடல்கள்.*

**ஒவ்வொரு வியாழக்கிழமையும்:**
*பாட்டு, நமது திட்டம், மெல்லிசை, செய்தி விமர்சனம்.*

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்:**
*திரைப்பட இசை, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.*

**ஒவ்வொரு சனிக்கிழமையும்:**
*பாட்டு, முதியோர் கல்விக்கூடம், நம் மாதர் மன்ற நிகழ்ச்சிகள்.*

### இவையன்றி மற்ற சிறப்பு நிகழ்ச்சிகள்

*சனிக்கிழமை* (1—6—1963)
*நல்ல சமையல்—உரையாடல்.*

*திங்கட்கிழமை* (3—6—1963)
*பொன்னம்பலம்—இசைச்சித்திரம்— என். ராகவன் எழுதியது.*

*சனிக்கிழமை* (8—6—1963)
*ஆப்பக்கார அங்காயி—தொடர் சித்திரம்—என். வாசுதேவ் எழுதியது.*

*திங்கட்கிழமை* (10—6—1963)
*பட்டாளம் பரமானந்தம்—நாடகம்—எஸ். பூமிநாதன் எழுதியது.*

*புதன்கிழமை* (12—6—1963)
*சண்டைக்கோழி நாடகம்—என். ராகவன் எழுதியது.*

*சனிக்கிழமை* (15—6—1963)
*ஆப்பக்கார அங்காயி—தொடர் நிகழ்ச்சி—எழுதியது என். வாசுதேவ்.*

*ஞாயிற்றுக்கிழமை* (16—6—1963)
*சிரமதானம்—வழக்கு விசாரணை.*

*திங்கட்கிழமை* (17—6—1963)
*சக்திவேலு சந்தேகப்புலி—எஸ். எம். அப்துல் காதர் எழுதியது.*

*புதன்கிழமை* (19—6—1963)
*பல் பாதுகாப்பு.*

*வியாழக்கிழமை* (20—6—1963)
*நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள்—உரையாடல்.*

*சனிக்கிழமை* (22—6—1963)
*சிக்கனம் அவசியம்—உரையாடல்.*

*ஞாயிற்றுக்கிழமை* (23—6—1963)
*விசேட நாடக நிகழ்ச்சி.*

*திங்கட்கிழமை* (24—6—1963)
*வளரும் தமிழகம்—மதராஸ்.*

*புதன்கிழமை* (26—6—1963)
*செய்தித் தொழில்*

*வியாழக்கிழமை* (27—6—1963)
*பஞ்சாயத்தும் விவசாய முன்னேற்றமும்—உரையாடல்.*

*சனிக்கிழமை* (29—6—1963)
*திருக்குறள் விளக்கம்.*

*ஞாயிற்றுக்கிழமை* (30—6—1963).
*ஒன்றே குலம்.*

### கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் மாலை 6—45 முதல் 7—15 வரையில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அந் நிகழ்ச்சிகளில் "கேள்வியும்—பதிலும்" பகுதி முதலிடம் பெறுகிறது.

ஏனைய பகுதி வருமாறு:—

*செவ்வாய்க்கிழமை* (4—6—1963)
*சம்பா சாகுபடி பற்றிய குறிப்புகள்.*

*வெள்ளிக்கிழமை* (7—6—1963)
*நம் ஜவான்களின் நன்மைக்காக.*

*செவ்வாய்க்கிழமை* (11—6—1963)
*கோழியைத் தாக்கும் ராணிகட் நோய்.*

*வெள்ளிக்கிழமை* (14—6—1963)
*விபத்துக்களும் முதலுதவியும்—நீர்விபத்து.*

*செவ்வாய்க்கிழமை* (18—6—1963)
*மிளகாய் சாகுபடி.*

*வெள்ளிக்கிழமை* (21—6—1963)
*சாகுபடித் திட்டத்தினால் விவசாய முன்னேற்றம்.*

*செவ்வாய்க்கிழமை* (25—6—1963)
*கூட்டுறவுப் பண்ணையின் ஏற்றம்.*

*வெள்ளிக்கிழமை* (28—6—1963)
*கிராமத்துக் குடி நீர்.*

**வெளியிடுபவர் :**
**திரு டி. என். லக்ஷ்மி நாராயணன், ஐ.ஏ.எஸ்.,**

**ஆசிரியர் :**
**திரு எஸ். வேங்கடசாமி எம்.ஏ.,**

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.




**நூலாசிரியர் குழாம் தொடக்க விழா**

1. தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் ஆதரவில், நூலாசிரியர் குழாம் தொடக்க விழாவினை சென்னை அரசாங்கக் கலைக் கல்லூரியில், 10-4-63-ல் முதலமைச்சர் திரு. காமராஜ் துவக்கிவைத்து தமிழ் நூல் வெளியீட்டுக் கழக நூல்களை வெளியிட்டார்.

**கம்பர் விழா**

2. கம்பர் பிறந்த தேரழுந்தூரில், இவ்வாண்டு ஏப்ரல் முதல் வாரத்தில், கம்பர் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. 2-ம் நாள் விழாவுக்குத் தலைமை வகித்த் பாராளுமன்ற உறுப்பினர்






திரு. பி. ஜி. கருத்திருமன் தலைமையுரை நிகழ்த்துகிறார்.

**ஆங்கிலத் தமிழ் அகராதி வெளியீட்டு விழா**

3. சென்னைப் பல்கலைக் கழகம் தயாரிக்கும் ஆங்கிலத் தமிழ் அகராதியின் முதல் பாகத்தை, 1—4—63-ல், நிதியமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் வெளியிட்டார். பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் விழாவுக்குத் தலைமை வகித்தார்.



Regd.
No. M. 7277
©
தமிழ்நாடு
அரசாங்கம்
1963.

# கிராமநலம்



ஜூலை
1963.

# கிராமநலம்





## தியாக வாழ்வின் பெருமை

—(o)—

"உலகத்தில் அறம் தேய்ந்து மறம் மலியும் வேளையில், ஆண்டவன் அருளால் பெரியோர்கள் தோன்றி, அறம் வளர்த்து மறம் கடிவது வழக்கம். அவ் வழக்கம் கடந்த பல ஊழிகளில் நிகழ்ந்து வந்திருப்பதைச் சரித்திரம் கூறுகிறது. . . . ."

"காந்தி அடிகளின் உபதேசத்துக்குப் பெரிதும் தியாகம் வேண்டற்பாலது. காந்தியடிகளின் தியாகம் உலகறிந்ததொன்று. தியாகம் பெருகப் பெருகச் சுதந்திர உணர்வும் இன்ப நிகழ்ச்சியும் பெருகும். . . ."

"காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தைச் சிந்தனை செய்யுங்கள்; அத்தருமம் உலகமெங்கனும் பரவக் கடவுளைத் தொழுங்கள்; காந்தியடிகளைப் போற்றுங்கள். அவர் சொல்வழி உலகம் நடந்தால், உலகத்தில் மறந்தேய்ந்து, அறம் வளரும். உபநிடதம், பைபிள், குர்ஆன் முதலிய அருள் நூல்களின் உண்மை நிலவும். . ."

திரு. வி. கலியாணசுந்தரனர்

# கிராம நலம்

GAZETTEER UNIT
18 JUL 1963
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS-8

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 8 | ஜூலை 1963 | படி 10

15987

## "ஒற்றுமையுடன் கடமையைச் செய்வோம்"—காமராஜ்

——: o :——

" சீன ஆக்கிரமிப்பு காரணமாக, பாரத நாட்டின் மானத்தையும், மரியாதையையும் காக்க, [illegible] ஒன்று திரண்டனர். நம் நாட்டில், ஒற்றுமை உணர்வு வளர்ந்து வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த—ஏழ்மை, அறியாமை முதலியவைகளைப் போக்க—அரசாங்கம் அநேக அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வந்துள்ளது. இப்பொழுது, நமது முழு சக்தியையும் ஒன்று திரட்டி, நம் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க, பிரதமர் நேருவின் தலைமையில் ஒன்று திரண்டிருக்கிறோம்.

நமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அபாயம் நீங்கவில்லை. எனவே, கட்டுப்பாட்டைக் தளர்த்தாமல், ஒற்றுமை குலையாமல், ராணுவ வீரர்களாகப் பொறுப்பேற்று, தாய்நாட்டைக் காக்க, நமது கடமையைச் செய்வோம்."

இவ்வாறு, முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், பிரதமர் நேருவை சென்னையில் வரவேற்றுப் பேசினர்.

சென்னைக் கடற்கரையில், மகாத்மா காந்தியின் சிலை அருகே, 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், பிரதமர் நேருஜி பேசும்பொழுது, நாட்டின் பல்வேறு பிரச்சினைகளை, விரிவாக விளக்கினர். சிறப்பாக, நாட்டின் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், நெருக்கடி நேரத்தில் உதவியளித்த உலக நாடுகளுக்கு நன்றி தெரிவித்தல், நாட்டு மக்களிடையே நிலவியுள்ள தேசபக்தி, ஒற்றுமை உணர்ச்சி முதலியவற்றை அவர் எடுத்துரைத்தார்.

பாரத நாட்டின் வட கிழக்குப் பகுதியில் உள்ள அஸ்ஸாம் ராஜ்யத்திற்குப் போனதையும், இப்போது தெற்கே சென்னைக்கு வந்து புதுச்சேரி, நெய்வேலி முதலிய இடங்களைக் கண்டு ஒரு சில நாட்களில் காஷ்மீர் செல்லவிருப்பதையும் அறிவித்தார். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையே, நமது பண்பாட்டின் உயிர்நாடியாக விளங்கும் ஒற்றுமை உணர்ச்சியை வற்புறுத்தினர். கடற்கரைச் சொற்பொழிவில் நேருஜி குறிப்பிட்ட செய்திகளின் சாரத்தை, அடுத்த பக்கத்தில் மிகச் சுருக்கமாகக் காணலாம். சிறப்பாக, 'மொழிப் பிரச்சினை' குறித்து அவர் விளக்கிய உண்மைகள், பொது மக்களின் கவனத்திற்குரியன. கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ள அனைவரும், சிறப்பாக, அறிவணியில் உறுப்பினராக உள்ளவர், இச்செய்திகளைச் சிறந்த முறையில் அறிந்து, மக்களிடையே பரப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

**அட்டைப்பட விளக்கம் :**

*வஞ்சகச் சீனரின் படையெடுப்பை ஒடுக்குவது நமது போர்ப்படை மட்டுமல்ல, ஏர்ப்படையுமாகும். களத்திலே குவிக்கப்படும் நெல்மலைகளே நமது வெற்றியின் அடித்தளம். விளைச்சலைப் பெருக்கி, விரோதியை ஒடுக்கவேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையில் இப் படம் வெளியிடப்படுகிறது.*

# "மொழிப் பிரச்சினையால் நமது ஒற்றுமை குலையக்கூடாது"

—o—

## "உண்மை உணர்வோர் குறை சொல்லமாட்டார்கள்"

"நமது நாட்டின் வடக்கெல்லைப் போராட்டம் நீடித்து நடக்கும்போல் தோன்றுகிறது. எனவே, நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை உணர்வும், தேச பக்தியும் மேலும் வளர்ந்தோங்க வேண்டும்.

"அச்சம் தவிர்த்த அண்ணல், மகாத்மா காந்தி. 'மனித உள்ளத்தில் அச்சம் குடிகொள்ளுமேயானல், வாழ்க்கையில் உறுதி காண முடியாது' என்பது அவர் காட்டிய சித்தாந்தம். மனோபலம் இல்லாதவர்களிடத்தில் சுதந்திர உணர்ச்சி நிலைபெற முடியாது. அச்சத்திற்கு இரையாவோர், உரிமையை இழப்பது நிச்சயம்."

எனவே, சுதந்திரத்தைப் பெற்ற நாம், அதைப் போற்றிப் பாதுகாக்க உறுதியுடன் தொண்டாற்ற வேண்டும். வேற்றுமை உணர்வுகள், சுயநல ஆசைகள், பிற்போக்கு எண்ணங்கள் முதலியன காரணமாக, மக்களிடையே அச்சத்தையும், பிரிவினை மனப்பான்மையையும் ஏற்படுத்துவது, நமது நாட்டின் சுதந்திரத்துக்கு இழைக்கும் பெரிய துரோகமாக முடியும். எனவே, நம் நாட்டின் வெளித் தாக்குதலை எதிர்த்துப் போராடக் கடமைப்பட்டுள்ள நாம், உள் நாட்டிலே, பலம் வாய்ந்த சமுதாயம் ஒன்றை, சமூக நீதியின் அடிப்படையில், நிர்மாணிக்க உறுதி கொண்டுள்ளோம்.

இவை இரண்டுக்கும், அடிப்படையான செயல், பொருள் உற்பத்தியே. தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும், நம் நாட்டிலே, உற்பத்தி பெருக வேண்டும். ஆயுத உதவிக்காக, நாம் அயல் நாட்டாரையே எதிர்பார்த்திருப்பது நம்முடைய பலவீனத்தின் அறிகுறி. நமது நாட்டின் பாதுகாப்பை, அயல் நாட்டாரிடம் விட்டுவிடுவது சுதந்திரமாகாது. சுதந்திரத்தின் பெயரால், இந்தத் தவருன செய்கையை மேற்கொள்வது புத்திசாலித்தனமாகாது.

நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் எந்தப் பிரச்சினையையும், வளர விடக்கூடாது. நெருக்கடியான இந்த நிலையில், இது விரும்பத்தக்கதல்ல. ஆனல், துரதிருஷ்டவசமாக, மொழிப் பிரச்சினை பற்றி, ஒரு சிலர், தவருன கருத்துக்களைப் பரப்பி, மக்களிடையே மனக்குழப்பம் விளைவிக்க முயல்கிருர்கள். இது, மிகவும் வருந்தத்தக்க செயலாகும். எனவே, இந்தப் பிரச்சினையின் உண்மை நிலையை, பொதுமக்கள், சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மொழிப் பிரச்சினையால் நமது ஒற்றுமை குலையக்கூடாது.

மொழிப் பிரச்சினை பற்றிய உண்மை நிலை என்ன? பாரத நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, 1965-ம் ஆண்டுக்குமேல், ஹிந்திதான் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஆட்சிமொழியாக இருக்கும். ஆனல், ஹிந்தி பேசாத மற்ற மொழியினர் கருத்தை உணர்ந்து, இதற்கேற்ற முறையில், தக்க திருத்தம் செய்யப்படும் என்று, ஓரிரண்டு வருஷங்களுக்கு முன் நான் உறுதிமொழி தந்தேன். அதன்படி, "1965-ம் ஆண்டுக்குப் பின்பும், ஹிந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து அரசாங்க மொழியாக நீடிக்கும்" என்று இப்போது சட்டமாக்கியிருக்கிறேம்.

உண்மையில், ஹிந்தி பக்தர்கள், இந்தச் சட்டத்தை எதிர்ப்பதை, என்னல் ஓரளவு புரிந்துகொள்ள முடியும். ஆனல், ஹிந்தி பேசாத மொழியினர், இதை எதிர்ப்பதை, என்னல் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஹிந்தியுடன் ஆங்கிலமும், இந்திய நாட்டின் அரசாங்க மொழியாக இருப்பதற்கு, இப்போது வகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்க நிர்வாக விஷயங்களில், ஆங்கில உபயோகம் நீடித்து நிற்கும். அந்தந்த மொழிவாரி ராஜ்யங்களில் ராஜ்ய அரசாங்கத்தார் அங்குள்ள மக்கள் பேசும் மொழியையே, அரசாங்க மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனல், உயர்தரக் கல்வி போதிப்பதில், எந்த மொழி உபயோகிப்பது என்பதில், சிக்கல் ஏற்படுவது இயற்கையே. தொழில் நுட்பத்துறைகளுக்கெல்லாம் (Technological Studies) ஆதாரமாயுள்ள விஞ்ஞானக் கல்வியும், கணித சாஸ்திரமும், உலக மக்களுக்கெல்லாம், பொதுவானவை. உயர்நிலை தொழில்நுட்ப நூல்களைப் பார்ப்போமேயானல், அவற்றில் பாதிக்குமேல் குறியீடுகளாக (Symbols) இருப்பதைக் காணலாம். ஆகவே, போதன மொழி (Medium of Instruction) எதுவாக இருந்தாலும், உலக முழுமைக்கும் பொதுவாக உள்ள விஞ்ஞானக் குறியீடுகளை அப்படியே வைத்துக்கொள்ளுதல், மிகவும் அவசியம். அப்போதுதான், நவீன விஞ்ஞானக் கல்வி முன்னேற்றங்களை நமது நாட்டு மாணவர்களும், அறிஞர்களும், சுலபமாகத் தெரிந்து பயனடைய முடியும். எந்த மொழியின் மூலம் கல்வி கற்போரானலும், உயர்தர அறிவைப் பெற முயலும் போது, உலக முழுவதற்கும் பொதுவான சொற்களையும், குறியீடுகளையும் கற்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்,

பொதுமக்களோடு தொடர்பு கொண்டுள்ள அரசாங்கத்தின் நடவடிக்கைகள், மக்களின் மொழியிலேயே இருக்கவேண்டியது அவசியம். பல வருஷங்களுக்கு முன்பே, தாகூர், காந்திஜி முதலான நமது தலைவர்கள் பிரதேச மொழிகளின் வளர்ச்சிக்கான அஸ்திவாரமிட்டு, ஆக்க வேலைகளைச் செய்துள்ளனர். இதற்காகவே, ராஜ்ய அரசாங்கங்கள் அந்தந்தப் பிரதேச மொழிகளின் வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. கல்வித்துறைகளில், போதன மொழியும் அவ்வாறே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாரத நாட்டில், அந்நிய நாட்டு மொழியான ஆங்கிலம், எப்போதும் தேசிய மொழியாக முடியாது. இந்த நாட்டில் வாழும் மக்கள் அனைவரும், ஆங்கிலத்தைக் கற்றுத் தேர்ந்துவிடுவார்கள் என்று நினைப்பதும் சரியல்ல. எனவே, உண்மையான நிலையை அனுசரித்தும், நமது உடனடியான தேவையை முன்னிட்டும், ஹிந்தி மொழி தெரியாத பல்வேறு ராஜ்ய மக்களின் சௌகரியத்தை முன்னிட்டும், ஆங்கிலத்தைத் தொடர்ந்து அரசாங்கமொழியாக உபயோகிக்க, நாம் தீர்மானித்திருக்கிறேம். அனுபவ பூர்வமான இந்தத் தீர்மானத்தை, நியாய உள்ளம் படைத்த அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை".

—நேருஜி

தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும், மிகவும் இயற்கையானவை. மக்களிடம் ஆழமாக வேரூன்றிய இந்த அடிப்படை உணர்வுகளை, அரசியல் பிரச்சாரங்களுக்காகப்பயன்படுத்தி, நாட்டின் நெருக்கடி நிலைமையை மறந்து, வேற்றுமைகளை வளர்ப்பது மிகவும் தவருகும். மக்களின் தாய்மொழிப் பற்றுக்கு விரோதமாக, அரசாங்கம் எதுவும் செய்துவிடவில்லை. இந்த முக்கிய உண்மையை, மக்கள் மறந்துவிடக்கூடாது. பொதுமக்கள், மொழிப் பிரச்சினையை, விருப்பு வெறுப்பில்லாமல் ஆர அமற ஆராய்ந்து பார்த்தால், உண்மை நிலையை உணர முடியும். இன்றுள்ள நிலையில், மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதில், அரசாங்கம் அவசியமான நடவடிக்கை எடுத்திருப்பது நன்கு விளங்கும்.

—ஆசிரியர்.

---

# வீரர்களின் குடும்ப நலன்—
# —கிராமத்தொண்டர் படையின் கடமை

திரு டி. ஆர். சதீஷ் சந்திரன்

சென்ற ஜனவரி மாதம் 26-ம் தேதி கிராமத் தொண்டர் படையை ஆரம்பித்து வைத்து பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு பேசுகையில், "கிராம மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் கிராமத்தில் உதவி தேவையுள்ளவர்களுக்கு உதவவேண்டும். கிராமத்தை ஒரு குடும்பமாகப் பாவித்து ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும். இதே வழியில் பல மதத்தினர் வாழும் நமது தேசத்தை ஒரே குடும்பமாகப் பாவிக்கவேண்டும்" என்று கூறினர்.

### நமது கடமை

உதவி தேவைப்படும் மக்களில், எல்லையில் போராடும் வீரர்களின் குடும்பங்கள் மிக முக்கியமானவைகளாகும். நமது எல்லையில் பயங்கரமான சூழ் நிலைகளுக்கிடையில் அவர்கள் சேவை செய்தார்கள். தங்கள் உயிரையும் தியாகம் செய்தார்கள். அத்தகைய வீரப் பெருமக்களுக்கு நமது சமுதாயம் ஆற்றவேண்டிய பிரதி உபகாரம் அளவிடற்கரியதாகும். நமது சுதந்திரத்தைக் காப்பாற்ற, தங்கள் உயிரைக் கொடுத்த வீரர்களுக்கு, நமது பாராட்டுதலையும் அன்பையும் தெரிவிப்பதென்பது, அவர்களுடைய குடும்பங்களைக் கவனித்துக்கொள்வதுதான். ஆகவே, போர்வீரர்களின் குடும்ப நலனைக் கவனிப்பதுதான், நமது முக்கிய கடமையாகும். வீரர்களில் பெரும் பகுதியினர் கிராமப் பகுதியிலிருந்து வந்தவர்கள். ஆகவே, அவர்களுடைய குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பணி, பஞ்சாயத்து நிறுவனங்களைச் சேரும். கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு முக்கியமாக இதில் பெரும் பொறுப்புண்டு. ஏனெனில், அவர்கள்தான் கிராமங்களில் தனிப்பட்ட குடும்பங்களுடன் நேரடி தொடர்பு கொண்டவர்கள். கிராமத் தொண்டர் படைக்கான செயல் திட்டத்தில், படைவீரர்களின் குடும்ப நலனைப் பாதுகாக்கும் பணிக்கான பொறுப்பையும் இணைக்க வேண்டும். இந்த வேலைகளை தொண்டர் படையின் "மாதர் அணி" முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றல், இதுபோன்ற வேலைகளைக் கவனிக்க அவர்கள்தான் தகுதி ஆனவர்களாவார்கள். பஞ்சாயத்து அலுவலாளர்கள் போர் வீரர்களின் குடும்பத்திற்கு உதவி செய்ய ஆவல் உள்ளவர்களாக இருக்கிருர்கள் என்றலும், எப்படி செய்வது அதை என்பது பற்றி அறியாதவர்களாக இருக்கிருர்கள். ஆகவே, எப்படி உதவி புரிவது என்பதை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லவேண்டியது மிகவும் அவசியமாகும். மாநில அரசாங்கங்களும் மற்ற சமூக சேவை சங்கங்களும், படை வீரர் குடும்பங்களுக்குச் செய்து வருகிற உதவிகள் விவரம் கீழே கொடுக்கப்படுகின்றன.

### மாநில அரசாங்கம்

**மாநில அரசாங்கத்தில் உதவி.**—நாட்டில் பல மாநிலங்களில் போரில் உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. இலவச மருத்துவ உதவியும் ஒரு குறிப்பிட்ட அளவு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மரணமடைந்த வீரின் மனைவிக்கோ அல்லது வாரிசுகளுக்கோ இன்னும் சில மாநிலங்களில் பண உதவி அளிக்கப்படுகிறது. இலவச சட்ட ஆலோசனையும், குழந்தைகளின் மேல் படிப்புக்காக உதவிப் பணமும் சில மாநிலங்களில் கொடுக்கப்படுகின்றன.

### மத்திய சமூக நல போர்டு

போரில் மரணமடைந்த வீரர்களின் மனைவியருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில், அவர்களை ஆசிரியர்களாகவோ, அல்லது நர்ஸ்களாகவோ, ஆக்க வழி செய்யவும், அவர்கள் வாழ்க்கைச் செலவுக்கு பண உதவி செய்யவும், மத்திய சமூக நல போர்டு உதவி செய்கிறது.

பல மாநிலங்களில் படைவீரர்களின் குடும்ப நலனைக் கவனிப்பதற்காகவே தனிக்குழுக்களை மக்கள் குழுக்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த துணைக் குழுக்கள், நிதி திரட்டி வீரர்களின் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றன.

**வழக்கறிஞர் சங்கங்கள்.**—வீரர் குடும்பங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை உதவி செய்ய பல வழக்கறிஞர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

## உதவி நிலையங்கள்

பாரத் சேவக் சமாஜ் போன்ற உத்தியோகப் பற்றற்ற நிலையங்கள் வீரர்கள் குடும்பங்களுக்குப் பல வகைகளி லும் உதவி செய்கின்றன. இந்தக் குடும்பங்களைப் பற்றிய விவரங்கள், அவைகளின் தேவைகள் ஆகியவைகளைப் பற்றி இவர்கள் குறிப்பெடுத்து உதவுவார்கள்.

பஞ்சாயத்து உறுப்பினர்கள், கிராமப் பெரியோர்கள், இளைஞர் சங்கங்கள், மாதர் சங்கங்கள், மற்றும் கிராமத் தொண்டர் படையைச் சேர்ந்த உறுப்பினர்கள், எல்லை வீரர்கள் குடும்பத்தினருக்குப் பல வழிகளிலும் உதவி செய்யலாம்.

முதலாவதாக, அந்தக் குடும்பங்களின் நலனுக்காக கிடைக்கவேண்டிய எல்லா உதவிகளையும் அவர்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும். இது சுலபமாகத் தோன்றும். ஆனால் நடை முறையில் செய்து பார்க்கும் போதுதான் இதன் கஷ்டம் தெரியும். உதவியாக அளிக் கப்பட்ட நிலமோ, அல்லது உதவித் தொகையோ. போரில் மரணமடைந்த வீரரின் குடும்பத்திற்குச் சீக்கிரம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். எந்த நிலைமையிலும் அந்த வீரரின் மனைவியையோ அல்லது தாயையோ உதவி அற்ற நிலைமையில் விட்டு விடக்கூடாது.

போரில் அங்கமிழந்த வீரர்களுக்கு, அவர்கள் நிலை மைக்குத் தகுந்தபடி வேலை கொடுத்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த வேலைகளை வாங்கிக் கொடுப்பதில் கிராம மக்கள் உதவி செய்யவேண்டும். இதே போல மரண மடைந்த வீரர்களின் மனைவியருக்கு வேலை அளிக்கவும் திட்டங்கள் உள்ளன. சமூக நல போர்டின் இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் வேலை வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கச் செய்யலாம். வீரர்களின் குடும்பங்களுக்கு, பஞ்சாயத்து உறுப்பினர்களும், கிராமத் தொண்டர் படையினரும் பண உதவி செய்வதோடுமட்டும் நின்று விடக்கூடாது. அந்தக் குடும்பத்தினரின் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்யும்போது, அவை நல்ல விலையில் விற்பனை செய்யப்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். வீரர்களின் குடும்பங் களுக்கு பகைவர்கள் கிராமத்தில் இருக்கலாம். அவர்கள் இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு அக் குடும்பத்தினருக்குக் கெடுதல் செய்ய முற்படலாம். அப்படிப்பட்ட காலங்களில் கிராமப் பெரிய வர்கள் அக்குடும்பத்தினருக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

நமது கிராமங்கள் ஒற்றுமைக்கும், கூட்டுறவுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவனவாகும். இந்த நிலைமை என்றென்றும் நிலவ கிராம மக்கள் பாடுபட வேண்டும், கிராமத் தொண்டர் படை இதற்காகப் பாடுபடவேண்டும்.

[Adaptation from "Panchavati Raj", June, 1963.]

## உங்களுக்குத் தெரியுமா ?

### 'கிராம சகாயத் திட்டம்'

கிராம சகாயத் திட்டம், 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட உணவு, வேளாண்மைத் துறை அரசாங்க ஆணை எண் 3792-ல் தெளிவாக வகுக்கப்பட் டுள்ளது. (இந்த ஆணையை அப்படியே தமிழில் 'கிராம உணவு உற்பத்தித் திட்டம்' என்ற ஒரு சிறு புத்தக மாக கிராம நல—தல நிர்வாகத் துறை வெளியிட்டது நினைவிருக்கலாம்.)

கிராம சேவக் வேறு. கிராம சகாயக் (Grama Sahayak) வேறு. கிராம சேவக் அரசாங்க ஊழியர். கிராம சகாயக் என்பவர் அப்படியில்லை. 'கிராம சகாயக்குகள்', பஞ்சா யத்துக்களால் தேர்ந்தெடுக்கப்படும் குடியானவர்கள். பொறுக்கு விதைகளைத் தயாரித்து விநியோகிப்பதே கிராமத்துக்கு இவர் செய்யும் சகாயம் ஆகும். இவர் களுடைய நிலங்களில், விதைகள் இரண்டாம் முறை (Secondary seeds) பெருக்கப்பட்டு, மற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. அரசாங்க ஆராய்ச்சி நிலையமும், மாநில விதைப்பண்ணையும், உயிர்ச்சத்து மிகுந்த நல்ல பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்கின்றன. இவை முதல் தரமான மூல வித்துக்கள் (Nucleur seeds). இவை கிராம சகாயக்குகளுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் அவற்றை பெருக்கி, மற்றக் குடியானவர்களுக்கு நேரடி யாக வழங்குகிறார்கள். நஞ்செய், புஞ்செய் நிலங்களில், மூன்றில் ஒரு பாகத்திற்கு, ஒவ்வோர் ஆண்டும் பொறுக்கு விதைகளை வழங்க வேண்டும். இதன் மூலம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை, பொறுக்கு விதை களின் தரம் புதுப்பிக்க வேண்டும். இந்தத் திட்டம், தொடர்ந்து நடைபெற வேண்டிய முக்கியப் பணியாகும்.

1961-ல் கிராம சகாயக்குகளுக்குப் பண உதவி அளிக்கும் நெறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்து, பஞ்சா யத்துக்கள் நிர்ணயிக்கும் விலைக்குக் குடியானவர்களுக்கு விற்கும் பொறுக்கு விதைகளுக்கு, மணங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம், பண உதவி அளிக்கப்படும். இதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், வேளாண்மை மானிய ஒதுக்கீடு திட்டத்தின் கீழ், ரூ. 30,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

கிராம சகாயக்குகளைத் தேர்ந்தெடுப்பது, மிக முக்கிய மான விஷயம் ஆகும். பெருமளவு இதைப் பொறுத்தே திட்டத்தின் வெற்றி அமையும். கிராம சகாயக், ஆர்வ மும் துடிப்புமுள்ள முற்போக்கான குடியானவராக இருக்க வேண்டும்.

---

### அடுத்த இதழில்....

1. அரசாங்கத்தில் பொதுஜனத் தொடர்பு
2. எதைப்பற்றி எழுதலாம்?—திரு. எஸ். நடராஜன்.
3. 'பஞ்சாயத்து ஆட்சி'—பாராளுமன்றத்தில் கேள்வி யும் பதிலும்.

மற்றும் பல முக்கிய அம்சங்கள்.

## "ஊருக்கு நல்லது சொல்வேன்"

(பாரதியார்)

கிராம அபிவிருத்திக் கமிஷனர்

### ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் அந்தஸ்து

"ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைக் கண்டு பேசுவதில் எனக்கு எப்போதும் ஓர் அலாதியான சந்தோஷம். கிராம சமுதாயம் அறிவு வளம் பெற்று விளங்குவதற் கான சேவை செய்கிற பொறுப்பு, இந்த ஆசிரியர் களுக்கு உண்டு. சிறப்பாக பஞ்சாயத்து யூனியன் நிர்வா கத்தில் நடைபெறும் ஆரம்பப்பள்ளி ஆசிரியருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யும் பொறுப்பு எனக் குண்டு. எனவே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் சங்கங்கள் விடுக்கும் அழைப்பை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் சில அடிப்படையான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வ தில் எனக்கு எப்போதும் விருப்பம் அதிகம்.

ஆரம்ப ஆசிரியர் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் சம்பள உயர்வு, பதவி உயர்வு, அந்தஸ்து, அதிகாரம் முதலி யவைபற்றி நேரிடையாகவும் மறைமுகமாகவும் பேசப் படுவது சகஜம். பெரும்பாலும் எல்லாக் கூட்டங்களிலும் இது போன்ற விஷயங்கள் விவாதிக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், ஆசிரியர்களின் அந்தஸ்து பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

'அந்தஸ்து' என்பது ஒருவர் மனத்தைப்பற்றிய விஷயம். அது ஒருவர் கொடுத்து வருவதல்ல; நாமே உழைத்துப் பெறுவது; வாழ்க்கையில் உன்னதமான லட்சியங்களை அமைத்துக்கொண்டு வாழ்பவர்கள், தமது அந்தஸ்தைப் பற்றி, எப்போதும் கவலைப்படமாட்டார்கள். தமது லட்சியத்தை நிறைவேற்றும் வழியில் சலிப்பில் லாமல் உழைத்துக்கொண்டேயிருப்பார்கள்; லட்சியத்தை அடைவதில், தமக்குள்ள பங்கையும் பொறுப்பையும் உணர்ந்து கொண்டு, தமது சக்தி, சாகஸங்கள் அனைத் தையும் அந்த லட்சியத்திற்காகவே அர்ப்பணித்துக்கொள் வார்கள். இது, வெறும் உபதேச வார்த்தைகள் அல்ல. அனுபவத்தில் உணரக்கூடிய சித்தாந்தம். மகாத்மா காந்தியடிகள் தமது சேவையின் மூலம் நமது நாட் டில் இத்தகைய லட்சியவாதிகள், பலரை உருவாக்கினர். பாரத சமுதாயத்தின் நல்வாழ்வை லட்சியமாகக் கொண்டு, சேவை உள்ளத்தோடு பணியாற்றக்கூடிய பல்லாயிரக்கணக்கான தொண்டர்களை, நாடெங்கும் தோற்றுவித்தார். அதன் விளைவாகத்தான், இன்றைய தினம் நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். தலை நிமிர்ந்து வாழ்கின்றோம்.

#### அடிப்படை மாறுதல்

நான் சிறுவனாக இருந்தபோது, ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் படிக்கும் புத்தகங்களில் எல்லாம் இங்கிலாந்து மன்னரையும், ராணியையும் வாழ்த்துகின்ற பாடல் தான், இருக்கும். முதலில் நமது அடிமை வாழ்வின் சின்னமாக அந்தக்கால ஆரம்பப் பள்ளிக்கூடப் புத்தகங்கள் இருந்தன. இன்று புதிய பாரதத்தில் சுதந்திர பிரஜைகளாய் நமது குழந்தைகள் விளங்குகின்றன. இந்த அடிப்படையான மாறுதலை, நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, எதிர்கால பாரத சமுதாயத்தை மிகச் சிறந்த முறையில் உருவாக்கும் மகத்தான பணி ஆரம்ப ஆசி ரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் வாழும் லட்சக்கணக்கான சிறுவர், சிறுமியர் உள்ளங் களில் பாரத சமுதாயத்தைப் பற்றிய உயர்ந்த லட்சியங் கள் உருவாகும் முறையில் ஆசிரியர்கள் உழைக்கவேண்டி யுள்ளது. சுதந்திர இந்தியாவின் பலம் அதன் எதிர் கால சந்ததியினரின் எண்ணத்தைப் பொறுத்திருக்கிறது. எல்லா மக்களுக்கும் வயிறார உணவு, எல்லோருக்கும் நல்ல ஆடைகள், சிறந்த இருப்பிடம், தொழில் வசதி முதலியன ஏற்பட வேண்டும். நம் நாட்டில் வாழும் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற எண் ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நன்றாகப் பதிய வேண்டும். முக்கியமாக, குழந்தைகள் உள்ளத்தில் பிரி வினை மனப்பான்மையும், குறுகிய புத்தியும் அடியோடு விலக்கப்படவேண்டும். அப்போதுதான் பாரத சமுதாயம் எந்தவித ஆக்கிரப்புகளையும் சமாளித்து வெற்றிப் பாதை யில் தொடர்ந்து முன்னேற முடியும்.

#### ஒற்றுமை—ஒரே வழி

பழைய "கிராம சமுதாயம்" மிகவும் பிற்போக்கடைந் ததற்கு முதல் காரணம், அங்குள்ள சண்டை சச்சரவு களே என்பது அனுபவபூர்வமான உண்மை. ஜாதிச் சண்டை, மொழிச் சண்டை, மதச் சண்டை முதலியவை காரணமாக நம் நாட்டில் ஏற்பட்ட தீமைகளை நமது கடந்த கால சரித்திரம் பறைசாற்றி வருகிறது. நமது சரித்திரம் போதிக்கும் உண்மையை நம் மனத்தில் நன்றாக வேரூன்ற வேண்டும். குழந்தைகளுக்கு அறிவூட்டும் ஆசிரியர்கள் இந்த முக்கிய விஷயத்தை மறக்கவே கூடாது. ஒற்றுமையே நமது சமுதாய வாழ்வின் விமோ சனத்துக்கான ஒரே வழி என்பதை மகாத்மா காந்தி நமக்கு மெய்ப்பித்துக் காட்டினார்.

ஆகவே, ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வு என்னும் சிறந்த விதைகளை குழந்தைகள் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டும். அன்பு, முயற்சி, கட்டுப்பாடு, சேவை முதலிய நல்ல பண்புகளை அவர்களிடையே ஊட்டி வளர்க்க வேண்டும். இயற்கையாகவே குழந்தை

களிடம் சில நல்ல சக்திகள் அடங்கி உள்ளன. அவற்றைத் தக்கவாறு வெளிக்கொணர்ந்து சமுதாய நன்மைக்கு பயன்படுத்தும் உத்தமர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டும்.

"எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்" என்ற வாசகம் பிறந்தது இந்த நாட்டில்தான். ஆசிரியரை, இறைவனுக்குச் சமமாக எண்ணி மதிப்புத் தருவது நமது பாரதப் பண்பாடு. எனவே, சமுதாயத்தில், அதுவும் கிராம சமுதாயத்தில், ஆசிரியருக்கு எப்போதும் உயர்ந்த ஸ்தானம் உண்டு. ஸ்தானத்தின் புனிதத் தன்மையைப் புரிந்து கொண்டு, அதன் மதிப்பை மேலும் வளர்க்கும் வகையில் இப்போதுள்ள ஆசிரியர்கள் அனைவரும் உழைக்க வேண்டுமென்பதே என் வேண்டுகோள். இந்த உயர்ந்த லட்சியத்தை, ஆசிரியர்கள் மறக்காமல், தமது அன்றாடக் கடமைகளை ஒழுங்காகச் செய்வார்களேயானால், அவர்களுடைய அந்தஸ்துக்கு எப்போதும் குறைவு வராது.

### கடமை புரிவதில் இன்பம்

தமது கடமையை உணர்ந்து ஒழுங்கான வகையில் சலிப்பில்லாமல் வேலை செய்வோரை 'தவம் செய்வோர்' என்று வள்ளுவர் அழைக்கின்றார். "தவம் செய்வார் தன் கருமம் செய்வார்" என்பது வள்ளுவர் கருத்து. ஆயினும், எல்லோரும் இத்தகைய லட்சிய நெறியோடு வாழ்வதில்லை என்பதை , அனுபவத்தில் நாம் பார்க்க முடிகிறது. உயர்ந்த குறிக்கோளோடு கடமை செய்யாதவர்களைக் கண்டு நாம் என்ன செய்ய முடியும்? வருத்தப்படலாம். பரிதாபம் தெரிவிக்கலாம். அவர்கள் திருந்தவேண்டுமென்று பிரார்த்திக்கலாம். கடமையை ஆர்வத்தோடு புரிவதில் இன்பம் காண்பதையே நம் பெரியோர்கள் நோன்பு என்று கூறுவார்கள். நோன்பு நோற்பவர்தாம் மேற்கொண்டுள்ள செயல்களில் இன்பம் காணுவார்கள். ஆனால் மற்றவர்களோ அந்த இன்பத்தை புரிந்துகொள்ள முடியாது. உலகத்தில் பெரும்பாலோர் இத்தகைய நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த உண்மையை திருவள்ளுவர் நன்றாக வெளியிட்டிருக்கிறார். ஒருசிலர் தாம் செய்யும் காரியங்களை திறமையோடும் வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றல் பெறுகின்றனர். ஆனால் பலர் அவ்வாறு ஒழுங்காகச் செய்யாமல் மனம் புழுங்கி வாடுகின்றனர். இந்த இரு சாராருக்கிடையே என்ன வேற்றுமை? என்ற கேள்வியைப் போட்டுக்கொண்டு அதற்கு பதில் கூறுகிறார் திருவள்ளுவர். முதலில் சொன்னவர்கள் பேராற்றல் படைத்திருப்பதற்குக் காரணம் அவர்கள் வாழ்வை தவமாக (நோன்பாக) நடத்தி வருகின்றனர். மற்றவரோ அவ்வாறு செய்வதில்லை.

**"இலர் பலராகிய காரணம், நோற்பார்**
**சிலர், பலர் நோலாதவர்"**

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே மக்களிடையே ஆற்றல் பெறுவதற்கான மூல காரணம் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்துள்ளது. உயர்ந்த லட்சியத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு அதற்காக அல்லும் பகலும் உழைப்பவர்கள் தமது ஆற்றலை—சக்தியைப் பெருக்கிக் கொள்கின்றனர். எப்படி வாழ்ந்தால் என்ன என்று நினைத்து ஒழுங்கில்லாமல் மனம் போனபடி வாழ்வதில் திருப்தியடைபவர்கள் முன்னேற முடியாது. அவர்களிடம் ஆற்றலும் சக்தியும் குறைந்து கொண்டே போகும். அத்தகையவர்களுக்கு யார் எவ்வளவு அந்தஸ்து கொடுத்தாலும் அதிக நாள் நிலைத்திருக்க முடியாது.

### வாழ்க்கை வளர்ச்சிக்கான ஒற்றுமை

நமது மகாகவி பாரதியார் அவர்கள் ஆசிரியர் சமுதாயத்தின் லட்சியப் புருஷராக வாழ்ந்தார். தமது தொழிலில் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கண்டு அவர் சோர்வு கொண்டதேயில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவரைக் கேலி செய்யும் நோக்கத்தோடு அவர் சம்பளத்தைப்பற்றி அலட்சியமாக குறிப்பிட்டிருப்பார்கள். ஆனால் அவர் மனம், உயர்ந்த லட்சியத்தில் உறுதியாக நிலைத்திருந்தது. அறிவை வழங்கும் புனிதமான பணியைத் தாம் புரிந்து வந்ததாக பாரதியார் மனப்பூர்வமாக நம்பினார். அதனால் தான் சம்பளத்தைப்பற்றி குறை கூறுவோர்களைக் கண்டு அவர் தம் தொழில்துறை பற்றிய இறுமாப்போடும் தமக்கே உரிய வீரத்தோடும் பெருமிதத்தோடும் பதில் சொன்னார்—

"நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்,
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

என்று சொன்ன அவர்கள் வாசகத்தை, எல்லா ஆசிரியர்களும் நன்குணர வேண்டும்.

புதிய பாரத சமுதாயத்தின் புது வாழ்வை நிர்மாணிக்கும் சிற்பிகளாகிய ஆசிரியர்கள் உள்ளத்தில் எழுதப்பட வேண்டிய மந்திரமொழி மேற்சொன்ன பாரதியார் மொழியேயாகும். குழந்தைகளுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிப்பதோடு, வாழ்க்கை வளர்ச்சிக்கான ஒற்றுமையும், உயர்ந்த ஒழுக்க நெறியையும் கற்றுத்தர வேண்டும். தேச பக்தியும், சமுதாய சேவையும் அவர்கள் உள்ளத்தில் இடம் பெறவேண்டும்.

இத்தகைய உயர்ந்த லட்சியத்தை உள்ளத்தே கொண்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒன்றுபட்ட இந்தியாவை—வேற்றுமைகளற்ற சமுதாயத்தை—காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்யத்தை உருவாக்க பெரிதும் பாடுபடுவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

'மக்கள் சேவையே மாதவன் சேவை' என்ற லட்சியத்தைக் காந்தியடிகளுக்கு முன்பே நமது நாட்டிற்கு உணர்த்தியவர் உயர்தவச் செல்வர் ஸ்ரீ ராமானுஜர். அவர் பிறந்த ஸ்ரீ பெரும்புதூரில் நடைபெறும் இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டம் சேவையின் சின்னமாகவும் உயர்ந்த லட்சியத்தின் ஒளி விளக்காகவும் திகழ்ந்து சிறந்து பணியாற்றும் என்று நம்புகிறேன்."

(28-4-1963-ல் ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், கிராம அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.)



## உற்பத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியின் இரண்டாவது கூட்டம்

——o——

### நிகழ்ச்சிக் கோவை

உற்பத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியின் இரண்டாவது கூட்டம் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதி சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. (இக் கமிட்டியின் முதல் கூட்டம், 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. அக் கூட்ட விவரங்களை வாசகர்கள் செப்டம்பர் மாதம் 1962, 'கிராம நலம்' இதழில் படித்திருக்கலாம்). மாநில அமைச்சர்களும், கமிட்டி உறுப்பினர்களும், சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறையின் முக்கிய அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு குழுவின் தலைவர் முதலமைச்சர் திரு. காமராஜ் தலைமை வகித்தார். கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வேங்கடாசலபதி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

### உணவு உற்பத்தி

முக்கியமாக, உணவு உற்பத்தி, பொறுக்கு விதைகள் விநியோகம் பற்றி விவாதம் நடைபெற்றது. ஆரம்பத்தில் மாநில விவசாயத்துறை இயக்குநர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., உறுப்பினர்களுக்கு தெளிவாக விவசாயம் சம்பந்தமான கருத்துக்களை எடுத்து விளக்கினார். இந்த நெருக்கடி நிலையில் உணவு உற்பத்தியின் அவசியத்தை அவர் வலியுறுத்தியதுடன், பொதுவாக விவசாயம் சம்பந்தமான முக்கிய அம்சங்களை அவர் விரிவாக விளக்கினார். (1) கிராமங்களில் இருக்கும் தரிசு நிலங்களை, அது சர்க்கார் நிலமாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களுடைய் நிலமாக இருப்பினும் சரி, அவற்றையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வருதல் ; (2) பொறுக்கு விதைகள் விநியோகமும்—கிராம சகாயக் வேலைத் திட்டமும் ; (3) உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான விதிமுறைகளை ஆராய்தல்—ஒரு போகம் மட்டும் பயிராகும் நிலத்தில் இரு போகம் சாகுபடிக்கு ஏற்பாடு செய்தல் (4) ரசாயன உர விநியோகம் (5) மண்வளப் பாதுகாப்புத் திட்டம் (6) தனிப்பட்டவர்களின் கரம்பாக உள்ள நிலங்களையும், தோட்டங்களாக உள்ள நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வருதல்— (7) கிராமப் புறங்களில் விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துதல் ஆகிய முக்கிய விஷயங்கள் பற்றி விரிவாக விவாதம் நடைபெற்றது. விவசாயத் துறையில் கடந்த சில மாதங்களில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை, உறுப்பினர்கள் எடுத்து விளக்கினார்கள். பொதுவாக, கிராம சகாயக் வேலைத் திட்டம் பற்றியும், விவசாயத்திற்கு மின்சார சக்தியை பயன்படுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகள், சிக்கல்கள் பற்றி உறுப்பினர்கள் பெரும்பாலோர் தங்களுடைய அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். 'கிராம சகாயக் வேலைத் திட்டம்' என்றால் என்ன, கிராம சகாயக் என்றால் யார்? அவருடைய வேலை என்ன?" என்ற விஷயங்களை சில பேருக்கு தெளிவாகப் புரிவதில்லை. அவை பற்றி போதிய விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்று ஓர் அங்கத்தினர் கருத்துத் தெரிவித்தார். மாவட்ட வாரியாக உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்கள் விவசாயம் சம்பந்தமாக உள்ள நிலைகளை எடுத்து விளக்கினார்கள்.

இந்த நெருக்கடி நிலையில், உணவு உற்பத்தியின் அவசியத்தை எல்லோரும் வலியுறுத்தினார்கள். உறுப்பினர்கள் வேலை முறையிலுள்ள சிற்சில குறைபாடுகளை எடுத்துச் சுட்டிக்காட்டினாலும், பொதுவாக விவசாய வளர்ச்சியில் நமது மாநிலத்தில் நல்ல வேலை நடைபெற்று வருகிறது. பஞ்சாயத்து யூனியன்களும் பஞ்சாயத்துக்களும் தீவிர அக்கறை கொண்டு பாடுபடுகிறார்கள். நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளோம் எனபது தெளிவாகஉள்ளது.

நடைபெற்ற விவாதத்தில் முதல் அமைச்சர் கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களையும் உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

பொறுக்கு விதைகள் விநியோகம் சம்பந்தமாகவும், விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துதல் சம்பந்தமாகவும், நடைமுறையில் ஏற்படுகிற சிக்கல்களையும், கஷ்டங்களையும் அங்கத்தினர்கள் எடுத்து விளக்கினார்கள். விவாதிக்கப்பட்ட விஷயங்களைப் பரிசிலனை செய்து உசிதமான முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்டது. தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளர் திரு. எஸ், கே. செட்டூர், ஐ.சி.எஸ். தன்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூறியபின், கூட்டம் நிறைவெய்தியது.

### கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் :

#### அமைச்சர்கள்

1. திரு கே. காமராஜ், முதலமைச்சர்.
2. திரு எம். பக்தவத்ஸலம், நிதியமைச்சர்.
3. திரு ஆர். வெங்கட்ராமன், தொழில் அமைச்சர்.
4. திரு பி. கக்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்.
5. திரு நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், கூட்டுறவுத் துறை அமைச்சர்.

#### உத்தியோக சம்பந்தமில்லாத உறுப்பினர்கள் :

1. திரு ஷண்முக சுந்தரம் பிள்ளை, தலைவர், உணவு வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

2. திரு எஸ். ராஜகோபால், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

3. திரு ஆர். சௌந்தரராஜன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தஞ்சாவூர் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

4. திரு ஏ. நாச்சியப்பன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

5. திரு ஆர். விஸ்வநாதன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, திருச்சிராப்பள்ளி வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

6. திரு வி. எஸ். சிவநேசன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வேலூர் வடக்கு மாவட்ட அபிருத்தி மன்றம்.

7. திரு ஆர். ஜீவரத்தின முதலியார், எம். எல். ஏ., தலைவர், தொழில் தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, வேலூர் வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

8. திரு பி. ஸ்ரீநிவாச ரெட்டியார், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வேலூர் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

9. திரு ஜி. சி. சேகர், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, வேலூர் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

10. திரு வி. கே. பழனிச்சாமி கவுண்டர், எம். எல். சி., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

11. திரு கே. பொன்னையா, எம். எல். ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

12. திரு கே. எஸ். ராமசாமி, எம். பி., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி கோயம்புத்தூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

13. திரு எஸ். தியாகராஜன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கடலூர் வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

14. திரு டி. எஸ். ராமபத்திர ரெட்டியார், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கடலூர் வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

15. திரு கே. பெருமாள் ரெட்டியார், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கடலூர் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

16. திரு வி. கே. பாலசுப்பிரமணிய பிள்ளை, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கடலூர் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

17. திரு ஏ. குஞ்சன் நாடார், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கன்னியாகுமரி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

18. திரு ஜே. நேசமணி, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கன்னியாகுமரி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

19. திரு எம். பி. எம். மீரான், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, மதுரை தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

20. திரு ஏ. சேனுபதி, எம். எல். ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, மதுரை வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

21. திரு ஆர். சுந்தரராஜன் சேர்வை, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, மதுரை வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

22. திரு வி. சுப்பையா பாண்டியன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, திருநெல்வேலி தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

23. திரு எல். குத்தாலலிங்கம் செட்டியார், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, திருநெல்வேலி தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

24. திரு எஸ். சங்கரநாரயண பிள்ளை, உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, திருநெல்வேலி வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

25. திரு எம். ஏ. கணேச பாண்டியன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, திருநெல்வேலி வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

26. திரு சி. சிரஞ்சீவலு நாயுடு, எம்.எல்.ஏ., தலைவர் உணவு வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

27. திரு பி. ஒபுல் ரெட்டி, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக்கமிட்டி, செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

28. திரு டி. கர்ச்சா கவுடர், எம். எல். ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, நீலகிரி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

29. திரு ஜே. மாதா கவுடர், எம். எல். ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, நீலகிரி மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

30. திரு எஸ். ஜெயராம் ரெட்டியார், எம். எல். சி., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, இராமநாதபுரம் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

31. திரு ஏ. பெருமாள், எம். எல். ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, இராமநாதபுரம் மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

32. திரு கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி சேலம் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

33. திரு ஏ. வேலுசாமி, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, சேலம் தெற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

34. திரு டி. சொக்கலிங்கம், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, சேலம் வடக்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

35. திரு கே. முருகேசன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, சேலம் வக்டகு மாவட்ட அபிவிருத்தி மன்றம்.

# சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

## அகிலாண்டபுரம் பஞ்சாயத்தின் ஆக்கப் பணிகள்

அகிலாண்டபுரம் பஞ்சாயத்து 1—9—1956-ல் ஆரம்பிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டம், கயத்தாறு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இப் பஞ்சாயத்தில், அகிலாண்டபுரம், கரிசல்குளம், சத்திரப்பட்டி, சாலைப்புதூர் ஆகிய நான்கு குக்கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. இப் பஞ்சாயத்தில் தலைவர் உட்பட பதினைந்து அங்கத்தினர்களும், ஒரு பெண் அங்கத்தினரும் ஆக, மொத்தம் பதினாறு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

### கல்வி வளர்ச்சி

இப்பஞ்சாயத்தில் ஜனத்தொகை 3,123. ஆண்கள் 1,598 பெண்கள் 1,525. அகிலாண்டபுரத்தில் கார்ப்பரேஷன் உயர் ஆரம்பப் பள்ளியும், ஆர். சி. ஆரம்பப் பள்ளியும், கரிசல் குளத்தில் ஹரிசன நல உரிமைப் பள்ளியும், சத்திரபட்டியில் ஓர் ஆரம்பப் பள்ளியும், சாலைப்புதூரில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியும் ஆக மொத்தம் ஐந்து பள்ளிகள் இருக்கின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 589 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். மேற்படி பள்ளிகளில் மதிய உணவு வழங்கும் திட்டம் செவ்வனே நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 220 மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

இப் பஞ்சாயத்து எல்லைக்குள் 4,700 ஏக்கர் 36 சென்ட் புஞ்சை நிலமும், 74 ஏக்கர் 45 சென்ட் நஞ்சை நிலமும் இருக்கின்றன.

இப்பஞ்சாயத்தில், அகிலாண்டபுரத்திலும், சத்திரபட்டியிலும் 30 தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டு, உள்ளன. கரிசல் குளத்திலும் சாலைப்புதூரிலும் மின் விளக்குகள் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன,

### அறிவு விளக்கப் பணியும் தொண்டர் படையும்

இப்பஞ்சாயத்தில் கிராம வானொலி மன்றம் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. வானொலி மன்றத்தில் இருபது உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1963-ம் வருடம் ஜனவரி மாதம் 26-ம் தேதி குடியரசு தினத்தன்று கிராமத் தொண்டர் படை இங்கு ஆரம்பிக்கப்பட்டது. நூறு உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 40 பேர் பாதுகாப்புப் பிரிவிலும, 30 பேர் விவசாயப் பிரிவிலும், 30 பேர் கல்விப் பிரிவிலும் இருக்கிறார்கள். இவர்கள் மாதம் ஒரு முறை கூடி பொது வேலையில் ஈடுபட்டு நல்ல முறையில் செயலாற்றி வருகிறார்கள்.

இங்கு சமூகக் கல்வி நிலையம், கிராமப் படிப்பகம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டு இயங்கிவருகின்றன.

### கலவை எரு தயாரிப்பு

தனி நபர் கம்போஸ்டு உரம் தயார் செய்யும் திட்டத்தின் கீழ் 15 குழிகள் வெட்டி நிரப்பப்பட்டு 105 டன் கம்போஸ்டு உரம் தயார் செய்யப்பட்டு இருக்கின்றது. பஞ்சாயத்து கம்போஸ்டு உரம் தயார் செய்யும் திட்டத்தின் கீழ் 2 குழிகள் வெட்டப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து கம்போஸ்டு தயார் செய்யும் திட்டத்தை விரிவாகச் செய்யும் பொருட்டு அரசாங்கக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது

இப்பஞ்சாயத்தின் எல்லாத் தெருக்களும் சரள் விரித்து ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன, ஒரு பாலம் பழுது பார்க்கப்பட்டு இரண்டு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு குடி தண்ணீர் கிணறுகள் தோண்டப்பட்டு, இரண்டு குடி தண்ணீர் கிணறுகள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. கயத்தாறு, கடம்பூர் ரோட்டிலிருந்து, அகிலாண்டபுரம் வரை ஒரு சாலையும், கோவில்பட்டி, திருநெல்வேலி சாலையிலிருந்து கரிசல் குளம் வழியாக அகிலாண்டபுரத்திற்கு ஒரு சாலையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அகிலாண்டபுரத்தில் ரூபாய் 24,500 மதிப்புள்ள மேல்நிலைத் தொட்டி ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்திற்கு தளவாடச் சாமான்கள் வாங்கப்பட்டிருக்கின்றன.

மக்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே கரிசல் குளத்தில் ரூபாய் 1,500 மதிப்புள்ள ஒரு வானொலிப் பெட்டி வைப்பு அறை கட்டியிருக்கிறார்கள். இப்பஞ்சாயத்தில் ஒரு வானொலிப் பெட்டி இயங்கி வருகிறது. மேற்கொண்டு எல்லா குக்கிராமங்களுக்கும் தனித்தனியாக வானொலிப் பெட்டிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பஞ்சாயத்து மரம் நடும் திட்டத்தின் கீழ் 276 புளியங் கன்றுகளும் 23 தென்னங்கன்றுகளும் நடப்பட்டு அவை நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### கால்நடை பராமரிப்பு

பரிவர்த்தனை மூலம் மூன்று பொலி காளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1,224 கால்நடைகளுக்கும், 317 கோழிகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. தனியார் கோழிப் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

### பஞ்சாயத்து புறம்போக்கு

கிராமக் கர்ணம் பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களைக் காட்டும் படம் கொடுத்து விட்டார். அதில் பாதை புறம் போக்கு சேர்க்கப்படவில்லை. புறம்போக்கிலுள்ள கரம்பை ஏலம் விட்ட வகையிலும், புளி மகசூலிலும் அந்த வருடத்தில் சுமார் 500 ரூபாய் வரை வருமானம் வந்துள்ளது. மேலும் பஞ்சாயத்தில் வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகள் செய்து வருகின்றோம்.

**கடம்பூரில் நடந்த முதலாவது பஞ்சாயத்து யூனியன் ஆண்டு விழாவில் அகிலாண்டபுரம் பஞ்சாயத்து, சிறந்த பஞ்சாயத்து என்ற சிறப்பையும், அதற்கான கேடயத்தையும் பெற்றிருக்கிறது.**

### நடப்பு ஆண்டுல் வேலை விவரம்

கரிசல் குளத்தில் ஒரு மேல்நிலை நீர் தேக்கம் கட்டி குடி தண்ணீர் வசதி செய்யவும், மேற்படி கிராமத்திற்கு தெரு மின்விளக்குகள் அமைக்கவும், சாலைகளில் பாக்கியுள்ள இடங்களில் புளியங்கன்றுகளும் மற்றும் பசுந்தழை உரம் தரக்கூடிய மரங்கள் வளர்க்கவும், சாலைப் புதூரில் ஒரு பள்ளி கட்டிடமும், கரிசல் குளத்திற்கு ஒரு வானொலிப்பெட்டியும் வழங்கவும் தெருக்களுக்கு வார்கால் அமைக்கவும், புறம்போக்கு நிலங்களில் புளியங் கன்றுகள் நட்டு, தோப்பு உண்டு பண்ணவும், பசுந்தாள் உரப்பயிர்கள் பயிரிட்டு, கம்போஸ்டு உரம் தயார் செய்யவும், வேலிக் கருவேல் வளர்த்து, பஞ்சாயத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் பஞ்சாயத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடம் கட்டவும், கிராமத் தொண்டர் படையை விரிவு படுத்தவும் மேற்கண்ட வேலைகளை சர்க்கார் உதவி பெற்று செய்து முடிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(அகிலாண்டபுரம் பஞ்சாயத்து ஆண்டு அறிக்கையிலிருந்து)

---

## து. ரெங்கநாதபுரம் பஞ்சாயத்து

### —வளரும் சமுதாயம்—

து. ரெங்கநாதபுரம் பஞ்சாயத்து, துறையூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முசிறி வட்டதைச் சேர்ந்தது இக் கிராமம். திருச்சியிலிருந்து வடமேற்கு திசையில் சுமார் 32 மைல் தொலைவில் பெயரும், புகழும் படைத்த பச்சைமலைத் தொடருக்கு அருகாமையில் உள்ளது.

இப்பஞ்சாயத்து 13 உறுப்பினர்கள் கொண்டது. திரு ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் சிறப்புற நடந்து வருகிறது. துவக்கம் 1959-ம் ஆண்டு ஜனத்தொகை 1961-ம் ஆண்டு. சென்சஸ்படி 2,038 ஆகும். இப் பஞ்சாயத்து முக்கியமாக ஓர் காடாரம்ப விவசாயப் பகுதி ஆகும்.

### விவசாயத்தில் ஆர்வம்

இக்கிராம மக்கள் விவசாயத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். விவசாய இலாகாவினால் தேர்ந்தெடுக்கப் பட்ட தானிய விதைகளை விநியோகித்தும், திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டும், நல்ல பலன் பெற்று வருகிறார்கள்.

விவசாயப் பகுதியில் உள்துறை எரு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், உர அபிவிருத்தி ஆய்வாளர் அறிவுரைப் படி, பஞ்சாயததில் எருக்குழி நிலையம் ஒன்றமைக்க இந்தப் பஞ்சாயத்து 1961-ம் ஆண்டு தீர்மானித்து; அதற்குண்டான நீண்டகால அரசாங்கக் கடன் ரூ, 3,500 கேட்டுக்கொண்டோம்.

ரூபாய் 3,500 மாநில அரசாங்கத்திடமிருந்து 20 ஆண்டுகளில் திரும்பக் கட்டும் தவணை முறைகளில் முன்பணமாக வழங்கப்பட்டது.

மேற்படி முன்பணத்தின் உதவியைக் கொண்டு, பஞ்சாயத்திற்குச் சொந்தமான சுமார் 80 சென்டு பாழ் நிலத்தை பசுமை மிகு சோலையாக மாற்றி அவ்வப்போது உர அபிவிருத்தி ஆய்வாளரது அறிவுரைப்படி எரு தயாரிக்க முற்பட்டோம். 1961-62-ம் ஆண்டில் 115 டன் எரு தயாரிக்கப்பட்டது. 1962-63-ம் ஆண்டில் 125 டன் எரு தயாரிக்கப்பட்டது. 135 டன் எரு விற்கப் பட்டது. 1962-63-ம் ஆண்டில், எரு உற்பத்தியில் கிடைத்த வருமானம் ரூ. 380 ஆகிறது. இவ்வாண்டில் கட்ட வேண்டிய தவணைத் தொகை ரூ. 269 கட்டப்பட்டது, அதிக வருமானம் ரூ. 111 கிடைத்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்,
தலைவர், து. ரெங்கநாதபுரம் பஞ்சாயத்து.



து. ரங்கநாதபுரம் பஞ்சாயது எருக்குழி நிலையம்.



## குளத்தூர் பஞ்சாயத்து

### —பஞ்சாயத்து பழப்பண்ணை—

திருநெல்வேலி வடக்கு மாவட்டம், விளாத்திகுளம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த, குளத்தூர் பஞ்சாயத்திலே சுமார் 10½ ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு பழப் பண்ணை அமைத்துள்ளார்கள். 2/3 பாகம் அரசினர் உதவித்தொகையுடன் சுமார் ரூ. 9,750 மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், வெகு உற்சாகத்துடன் குளத்தூர் பஞ்சாயத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விளாத்தி குளத்திலிருந்து தூத்துக்குடி செல்லும் பெருஞ்சாலையின் ஓரத்தில் கெச்சிலாபுரம் மஜராவையடுத்து அமைத்துள்ள இப்பண்ணை இவ்வாண்டு குடியரசு தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெங்களூர், பங்கனபள்ளி, நீலம் முதலிய ஜாதி மாங்கன்றுகள் 400-ம், தென்னங்கன்றுகள் 100-ம் நடப் பட்டு வளர்ச்சியடைந்து தளிர்விட்டு மிளிர்கின்ற காட்சி காண்போர் கண்ணைக் கவருகின்றது. திராட்சை, கொய்யா, பலா போன்ற இதர பல்வேறு கனி வர்க்கங்கள் வைப்பதற்கென மாரிக் காலத்தை எதிர்நோக்கி தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாற்புறமும் மண்கரை போட்டு முள்ளினால் வேலியமைத்து, கீழ்புறம் அமைக்கப்பட்ட வாயலும், பெருஞ்சாலையை ஒட்டி "குளத்தூர் பஞ்சாயத்துப் பழப்பண்ணை" என்று பொறிக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையும் குளத்தூர் பஞ்சாயத்தின் உற்பத்தி வேலை முன்னேற்றத்திற்கு எடுத்துக் காட்டாக திகழ்கின்றது.

### அடித்தளக் கல்நாட்டு விழா

ஒன்பது கெஜ தூரத்தில் வெட்டப்பட்டுள்ள பண்ணையின் கிணறு, உவர் நீர்ப் பெருக்குள்ள இந்தப் பகுதியிலே இனிமையான தண்ணீரைக் கொடுத்து தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. ஏப்ரல் மாதம் 17-ம் தேதி கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கோ. வெங்கடாசலபதி அவர்கள் இப் பண்ணையைப் பார்வையிட்டு பம்பு அறைக்கு அடித்தளக் கல் நாட்டியுள்ளார்கள். அன்னார் பண்ணைக்கு வருகை தந்தபோது, கிராமத் தொண்டர் படையினர் 100-க்கும் மேற்பட்டவர்கள் கதர் சீருடை அணிந்து, அணி வகுத்து, ஜெய் ஹிந்த் கோஷத்துடன் வரவேற்பளித்த காட்சி அப்பகுதி மக்களின் மன எழுச்சியையும், உற்சாகத்தையும் எடுத்துக்காட்டியது. அடித்தளக்கல் நடும் விழாவில் கிராமத்திலிருந்து சுமார் ஒரு மைலுக்கப்பால் அமைக்கப்பட்டுள்ள இப் பண்ணையில் 500 மேற்பட்ட பொது மக்கள் கூடி, ஆரவாரத்துடன் "வாழ்க பஞ்சாயத்து ராஜ்யம்" என்ற கோஷத்துடன் வரவேற்பு அளித்த காட்சி அப் பகுதி மக்களின் ஒருமைப் பாட்டையும், பஞ்சாயத்து பரிபாலனத்தில் உள்ள நம்பிக்கையையும் எடுத்துக் காட்டியது. இத்தொகுதி சட்டசபை உறுப்பினர் திரு. எ. எல். ராமகிருஷ்ண நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின்போது, கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு வேங்கடாசலபதி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் தமிழ் நாட்டிலேயே பஞ்சாயத்துக்களால் இயக்கப்பட்டு வரும் பழப்பண்ணைகளிலே இப்பண்ணைதான் பரப்பிலும், மண் வளத்திலும் இயற்கைத் தோற்றத்திலும் தலை சிறந்தது எனப் பாராட்டினார்கள்.

---

### "நல்ல காடு வளர்ப்போம்"

—o—

" நிழல் கொடுத்திடும் மரமனைத்தையும் விரகெரித்
துள நிந்தையால்
தழல்புகுந்து நம் சமையல் செய்திட சாணிமுற்றிலும்
வெந்ததால்
தழையிலாமலும் எருவிலாமலும் தகுதியற்றுள
மண்ணிலே
விழல் முளைக்கவும் சாரமில்லை, பின் விளைவு எப்படி
எண்ணலாம் ?
வனமிருந்திடில் மழைபொழிந்திடும் ; வான நீதி
யின் சத்தியம்,
வனமழிந்தது ; மழை குறைந்தது ; வாய்மை
கண்டனம் இத்தினம்.
மனமுவந்தினி நாட்டிலெங்கனும் மர மடர்ந்திடச்
செய்குவோம்
தினமிருந்திடும் தானியக் குறை தீர்ந்திடும்படி
உய்குவோம்."

—நாமக்கல் கவிஞர்.

' வனமகோத்சவம் என்ற பாடலிலிருந்து.'

---



G N — 2A

# கிராம சேவகர் பயிற்சி நிலையம், —கோவில்பட்டி—

— —0——

[தமிழ்நாட்டில் உள்ள கிராம சேவகர் பயிற்சி நிலையங்களில், கோவில்பட்டியும் ஒன்றாகும். இதுவரை ஐந்து நிலையங்களைப் பற்றிய கட்டுரைகளை 'கிராம நல'த்தில் வெளியிட்டிருக்கிறோம். இக்கட்டுரை இந்த வரிசையில் கோவில்பட்டியில் உள்ள பயிற்சி நிலையத்தைப் பற்றியதாகும்.]

'பொன்திணைந்துபுனல் பெருகும் பொருநை நல்லாளா'ல் வளம் கொழிப்பது திருநெல்வேலி மாவட்டம். இந்த மாவட்டத்திற்கு அணிகலனாக விளங்கும் கோவில்பட்டி நகரில் தான் கிராம சேவகர்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் அமைந்திருக்கிறது. 1962–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் தேதியன்று நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதிக அளவு 120 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப் போதிய வசதிகளை, இந்தப் பயிற்சி நிலையம் கொண்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள மற்ற பயிற்சி நிலையங்களைப் போல் அரசாங்கத்தாரால் வரையறுக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி, விவசாயம், கால்நடை, கூட்டுறவு, சமூகக் கல்வி, பொதுச்சுகாதாரம், சுதேசிராமக் கைத்தொழில்கள், பஞ்சாயத்து விஸ்தரிப்பு, ஆதாரப்பொறியியல், முதல் உதவி சிகிச்சை ஆகிய பாடங்கள் பயிற்சியாளர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

### பயிற்சி முறைகள்

வகுப்பறைப் பயிற்சியை விட நேர்முகப் பயிற்சிகளுக்கே இங்கு முதலிடம் தரப்படுகிறது. பக்கத்து கிராமங்களில் நடக்கும் கிராமப் பஞ்சாயத்து சபையின் மாதாந்திரக் கூட்டத்தின்பொழுது பயிற்சியாளர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அங்கு நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளையும், பார்வையாளர்களாக இருந்து, கிராமப்பஞ்சாயத்து செய்ய வேண்டிய பணிகளையும், வருமான விபரங்களையும், நிர்வாகிக்க வேண்டிய தஸ்தாவேஜுகளைப் பற்றியும், நேரடியாகத் தெரிந்து கொள்கிறார்கள். இதேபோல் பஞ்சாயத்து யூனியன் மாதாந்திரக் கூட்டங்களிலும் பார்வையாளராக இருந்து நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறார்கள்.

விவசாயம் முதல் பாடமாயும் இருந்து வருகிறது. இந்தப் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமாக நீரிறைக்கும் மின்பொறியுடன் கூடிய ஒரு கிணறும் 2 எக்கர் நிலமும் உள்ளன. நிலத்தை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் ஒரு மாணவர் குழுவிற்கு விவசாய அலுவல்களைச் செயல் முறையில் செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பயிர்களை மாணவர்களே நேரடியாகச் சாகுபடி செய்து வருகின்றனர். இத்தகைய முறைகளினால் ஒவ்வொரு பயிரின் சாகுபடிப் பருவம், அந்த நிலத்திற்குச் செய்ய வேண்டிய முன்செய் நேர்த்திகள், பொறுக்கு விதைகளின் அவசியம், உரம், உரத்தின் அளவு, பயிரைத் தாக்கக் கூடிய பூச்சிகள், பூஞ்சாள வியாதிகள், அவற்றின் தடுப்பு முறைகள், மகசூல், சாகுபடிச் செலவு, மொத்த நிகர வருமானங்கள் முதலிய விவசாயம் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான பணிகளிலும் நேரடி அனுபவம் பெறுகின்ற வாய்ப்பும் வசதியும் ஏற்படுகின்றன.

மேலும் நிலையத்தில் ஒரு சிறு பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக பூங்காவின் முக்கிய அம்சங்கள் வருடாந்திரப் பூச்செடிகள், நிரந்தரப் பூச்செடிகள், புல்தரை அமைக்கும் விதம் முதலியவற்றைப் பற்றி அறிவு தானாகவே வளர்க்கப்படுகிறது.

கோவில்பட்டி நகரில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் உள்ளது. அங்கு, தினசரி காலை செயல்முறை வகுப்பின் போது ஒவ்வொரு குழுவாகச் சென்று, கால்நடை சம்பந்தமான தொத்து நோய்கள், அது பரவாது தடுக்கும் முறைகள் சாதாரண நோய்களுக்கு நாமே கொடுத்து குணப்படுத்தக்கூடிய எளிய முறை மருத்துவம் போன்ற அறிவு விளக்கங்கள் பெற்று வருகின்றனர். பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலையைச் சேர்ந்த கோழிப்பண்ணையில் 20 வெள்ளை லெகான் கோழிகளும், இரண்டு சேவல்களும் இருக்கின்றன. இவற்றை தாங்களே பராமரிப்பதன் மூலமாக, கோழிப் பண்ணை நிர்வாக முறைகளையும் கற்றுக் கொள்கிறார்கள். பிரதி தினம் காலை 11–30–லிருந்து 12–00 வரை நூற்பு வேள்வி நடத்துவது போக, ஓய்ந்த நேரங்களிலும் அக்கரை காட்டி நூற்கின்றனர். வாரம் இரண்டு சிட்டங்கள் வீதம் கொடுக்கும் இவர்கள் நூலை நெசவாளர் ஒருவர் மாணவர்களின் உதவியைக் கொண்டே நெய்து, அவர்களுக்கே துணியாகத் தந்து விடுவதோடு நெசவுத் தொழிலிலும் ஓரளவிற்குப் பயிற்சி பெறும் வாய்ப்பினையும் நல்குகிறார். அம்பர் ராட்டை இங்கிருப்பதால் அதிலும் பயிற்சியாளர் பழகித் தேர்கின்றனர். நிலையத்தையே ஒரு சிறு கிராமமாக எண்ணி கிராமத்தில் செய்ய வேண்டிய சுகாதார முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

### சுகாதாரம்

வாரம் ஒரு முறை அருகாமையிலுள்ள கிராமங்கட்குச் சென்று அங்குள்ள சுகாதாரக் குறைபாடுகள், அவற்றைக் களையும் முறைகள் முதலியவற்றை அறிந்து கொள்கிறார்கள். அம்மைக் குத்துதல் போன்ற வேலைகளை அவ்வப்போது நேரடியாய் பார்வையிட்டு வருகிறார்கள். கோவில்பட்டி பல நோக்கு கூட்டுறவு பண்டகசாலை, மத்திய கூட்டுறவு விற்பனைச் சங்கம், கூட்டுறவு ஒன்றிப்புச் சங்கம், பால் விநியோகக் கூட்டுறவு ஒன்றிப்பு முதலிய எல்லா விதமான கூட்டுறவு சங்கம் இருக்கின்றன. வாரம் ஒரு முறை ஒரு சங்கத்தைப் பார்வையிட்டு அதன் நோக்கங்கள், அமைப்பு முறை, செயல்முறை, நிர்வாகிக்கவேண்டிய குறிப்பேடுகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்கிறார்கள்.

கிராம மக்கட்கு அவர்கள் புரியும் வண்ணம் எளிதாக உள்ள சாதனங்களான பொம்மலாட்டம், பாவைக்கூத்து, முதலியவற்றில் பயிற்சி பெறுவதுடன் சுவரொட்டிகள், மின் அட்டைகள் முதலியவற்றை மாணவர்களே தயார் செய்கிறார்கள். மேலும் அவ்வப்போது தேசிய நலனுக்கு ஏற்ற செயல்களை வில்லுப்பாட்டு, நாடகம், கோலாட்டம் முதலியவற்றின் மூலமாக மக்கட்கு விளக்கப்படுகிறார்கள். சமுதாய நலத் திட்டத்தில் கிராமத் திருப்பணிகளான கிராமச் சாலைகள், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மன்றம் கட்டுதல், பள்ளிக்கூடம் கட்டுதல் முதலியவை பற்றி பயிற்சி கொடுப்பதுடன், அவ்வேலை நடக்கும்போது பார்வையிட வாய்ப்பும் ஏற்படுத்தப்படுகிறது. இதைத் தவிர, சாரணர் பயிற்சியும், நில அளவுப் பயிற்சியும் கொடுக்கப்படுகின்றன. அரசியலாரின் இலாக்காக்களின் ஒவ்வொரு துறை நிபுணர்கள் வரும்போது மாணவர்கட்கு விளக்கவுரையாற்ற வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது.

### கிராமங்களில் நேர்முகப் பயிற்சி

இரண்டாண்டு பயிற்சிக் காலத்தில் முதல் மூன்று மாதங்கட்குப் பிறகு 21-வது மாதப் பயிற்சி வரை ஒவ்வொரு சனிக்கிழமையும் மாணவர்கள் கிராமங்கட்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதற்காக மாணவர்கள் நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்திற்கு, தொடர்ச்சியாக வாரந்தோறும் சென்று வருவார்கள். இதன் மூலம் விவசாயம், கிராமக் கைத்தொழில்கள், உற்பத்தி விநியோகம் அரசின் உதவி முதலியவைகளைத் தெரிந்து கொள்வதுடன் கூட்டுறவு, பஞ்சாயத்துப் பாடத் திட்டங்கள் பற்றி நேரடி முறையில் தெரிந்து கொள்ளவும், வாய்ப்பு கிடைக்கிறது. மாதம் ஒருமுறை இக் கிராமங்களில் விவசாயம், கால்நடை சுகாதாரம் போன்ற பாடப்பிரிவு சம்பந்தப்பட்ட திரைப் படங்கள் காட்டப்படுகின்றன.

பயிற்சியாளர்கள் தங்கள் இருவருடப் பயிற்சிக் காலத்தில் 21 நாட்களுக்கு மேற்படாது இரண்டு கல்வி நோக்குச் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளல் வேண்டும். இதற்கு அரசினர் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 45 ரூபாய் ஒதுக்குகின்றனர். பயிற்சி கால முதலாண்டில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் முதல் சுற்றுப் பயணமும், இரண்டாவது ஆண்டில் ஜூலை, ஆகஸ்டு மாதத்தில் இரண்டாவது சுற்றுப் பயணமும், செய்வதுண்டு. இவ்விதச் சுற்றுப் பயணத்திற்காக பயிற்சியாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவையும் வழி நடத்த இரு ஆசிரியர்களும் உடன் செல்வதுண்டு. அவர்களில் ஒருவர் விவசாய ஆசிரியராக இருப்பார்.

பயிற்சிக் கால முதல் மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பாடங்களிலும் தேர்வு வைத்து தேர்வில் மிகவும் குறைவான மதிப்பெண்கள் வாங்கியவர்களும், நன்நடத்தை அற்றவர் என எண்ணப்படுவர்களும் பயிற்சியிலிருந்து விலக்கப்படுகிறார்கள்.

மேலே கூறியபடி, இரண்டு ஆண்டுப் பயிற்சி, சிறிது கடினமாக இருந்தாலும் மாணவர்கள் இங்கு சேர்ந்த பின்னர் அப்பயிற்சியையே தங்கள் வாழ்க்கையின் முக்கிய அம்சமாகக் கொண்டு பழகி வருவதால், அவர்கள் கடினமானது என்று எண்ணுவதில்லை. இவ்விதமாக ஈராண்டு கடினமான பயிற்சிக்குப் பிறகுதான் கிராமத் திருப்பணியாளராகவும், மக்களுக்கு உற்ற தோழனாகவும், வழிகாட்டியாகவும், சேவை செய்ய அரசினரால் கிராம நல ஊழியர் என்ற பெயரில் அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு சிறந்த பயிற்சி பெற்ற கிராம நல ஊழியர்களை நன் முறையில் பயன்படுத்திக் கிராமத் திருப்பணிகளில் ஆர்வம் காட்ட வேண்டுகிறோம்.

—0—

## வெற்றி நமதே!

—(o)—

திரு பி. ஜெயராமன்

—o—

தூக்கி நிறுத்துவீர் பீரங்கியை—குண்டு
சீறிப் பறந்திட வீரர்களே!
தாக்கி விரட்டுவீர் சீனர்களை—யார்க்கும்
தாழ்ந்தவ ரில்லைநாம் வீரத்திலே
தீக்கிரைக் கான சருகுபோல்—அந்த
சீனர் உடலங்கள் கருகவே
ஆக்கிட வல்லக் கருவிகள்—கொண்டு
அண்டம் நடுங்கிடப் பொருதுவீர்!

தாயின் மணித்திரு மார்பினிலே—ஒளி
தந்து விளங்கிடும் ஓர் அணியை
தீய குணமுடையார் சிலபேர்—கூடி
திருட முயன்றிடும் நேரத்திலே
சேய்கள் விழிகளை மூடிக்கொள்ள—கற்
சிலைகளோ நாற்பது கோடிமக்கள்
பாயும் புலிகளாய் மாறிடுவீர்—சீனப்
படைகள் சிதறிடப் போரிடுவீர்!

வையம் ஒதுக்கிய சீனத்திற்கு—நாம்
வக்காலத்து வாங்கி வாதாடினோம்.
செய்த உதவிக்கு நன்றியிதே—எனச்
செப்பிடும் செஞ்சீனப் பன்றியினை
நையப் புடைத்துமே கொன்றிடுவீர்—அதை
நாய்நரிக் கூட்டங்கள் தின்றிடவே!
ஐயமில்லை நாமே வென்றிடுவோம்—வெற்றி
அன்னைநம் பக்கமே நின்றிடுவாள்!

மாணவர்களுக்கு :



# விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்



" தண்ணீர் விட்டோ வளர்த்தோம் ? சர்வேசா ! இப்பயிரைக் கண்ணீராற் காத்தோம்.... " என்றும், " எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரினுள் வளர்ந்த வண்ணவிளக்கிஃது " என்றும் சுதந்திரத்தின் அருமையை அழகாகக் கூறுகிருர் பாரதியார். கண்ணீரும், செந்நீரும் விட்டு வளர்த்தது சுதந்திரப் பயிர். சிறையிலே செக்கிழுத்து, சுக போக்கியங்களைத் துச்சமென உதறித் தள்ளி, சிறை வாழ்வை மேற்கொண்டு, தடியடிப்பட்டு, துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தெறியப்பட்டு, வாழ்வையே பணயமாக வைத்து, தியாகங்கள் பல புரிந்து நம் நாட்டின் சுதந்திரத்தைப் பெற்ருேம். பாரத நாட்டின் சுதந்திர வரலாறு உலக வரலாற்றில் மிக முக்கியமான கட்டத்தைக் குறிக்கும். இந்த நாட்டு விடுதலைக்காக, தியாகத்தின் நெறி நின்று, அறப்போரில் ஈடுபட்டு, பாடுபட்ட பெரியோர்களை, விடுதலைக்கு வித்திட்ட வீரர்களை, யாரால் மறக்கமுடியும் ? ' நேற்றைய செய்தி இன்றைய வரலாறு ' என்பர். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை சுருக்கமாகத் தொடர்ந்து ' கிராம நல'த்தில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இந்தக் கட்டுரைத் தொடர், எல்லோருக்கும், சிறப்பாக, பள்ளி மாணவர்களுக்கும் சிறுவர், சிறுமிகளுக்கும் பெரிதும் பயன்படும் என நம்புகிருேம்.

—ஆசிரியர்.

## மோதிலால் நேரு

(செல்வி ரா. லோகநாயகி, சென்னை-30.)

எல்லா வளமும் நிரம்பப் பெற்றவர் ; கலைமகள் அருள் மட்டுமல்ல, திருமகளின் அருளும் நிரம்பப் பெற்றவர். அரசனைப்போல வாழ்க்கை நடத்தியவர்; அப்படிப்பட்டவர், ஆண்டியைப் போல வாழ்க்கை நடத்த மனமுவந்து ஏற்றுக் கொள்வதென்பது, சாதாரணமாக நடக்கக் கூடியதல்ல. மாடமாளிகைவாசி ; ஆனந்த வாழ்வு; கவலையே இல்லாத வாழ்க்கை; எல்லா சுக போகங்களும் அவர் காலடியில்; தன் மகன் சிறைப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும், அந்தச் செல்வந்தர் சிறை வாழ்வு எவ்வளவு கொடியதாக இருக்கும் என்று உணர்ந்து கொள்ள, பஞ்சு மெத்தையை விட்டிறங்கி கட்டாந்தரையில் படுத்துப் பார்த்தார்.

உலகில் எங்கும் தந்தை காட்டும் பாதையில்தான் தனயன் செல்வது வழக்கம். அது தான் இயற்கை. ஆனால், தனயன் காட்டிய பாதைதான் சிறப்பானது என்று தந்தையும் தனயனைப் பின் தொடர வேண்டியதாயிற்று. அந்தத் தந்தைதான், நமது பாரதப் பிரதமராக உள்ள திரு ஜவஹர்லால் நேருவின் அருமைத் தந்தையார் மோதிலால் நேரு அவர்கள்.

ஒரு நாட்டின் விடுதலைக்காகத் தந்தையும், மகனும் சேர்ந்து போராடியதாக நாம் இதுவரையில் வரலாற்றில் படித்ததில்லை. ஆனால், இவர்களிருவரும் நம் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் எடுத்துக்கொண்ட பங்கு பாரத நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

### விடுதலை இயக்கத்தில் பங்கு

திரு மோதிலால் நேரு 1861-ம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி பிறந்தார். இவருடைய முன்னோர் காஷ்மீர் நாட்டிலிருந்து அலகாபாத்தில் குடியேறியவர்கள். மோதிலால் நேரு வக்கீல் தொழிலில் ஈடுபட்டு, பெரும் பொருள் சம்பாதித்து வந்தார். இவருடைய வாக்கு வன்மைக்காக கட்சிக்காரர்கள் இவர் வீட்டை மொய்த்துக் கிடப்பார்கள். பெரும் பொருள் ஈட்டிய இவர், மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கி, பழக்க வழக்கங்களிலும், நடை உடை பாவனைகளிலும், வெள்ளைக்காரர்களைப் போலவே வாழ்ந்து வந்தார். இவருடைய ஆடம்பர வாழ்க்கையைப் பற்றிப் பல புனைக்கதைகளும் வழங்கி வந்தன. தன் அருமை மகனான ஜவஹர்லாலுக்கு ஆங்கிலப் படிப்பை அளிக்க வேண்டுமென்று விரும்பினார். இங்கிலாந்திலுள்ள ஹாரோ, காம்பிரிட்ஜ் ஆகிய கலாசாலைகளில் பயில சிறு வயதிலேயே மகனை அனுப்பி வைத்தார். பாரிஸ்டராக 1912-ம் ஆண்டு இந்தியா திரும்பிய மகனுக்கு, வக்கீல் தொழில் செய்ய நாட்டம் செல்லவில்லை. பாரத நாட்டில் விடுதலை முழக்கம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. எங்கும் மக்களின் கொந்தளிப்பும், அமைதியற்ற நிலைமையும் சூழ்ந்திருந்தன. ஜவஹர்லால் நேரு நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்ள விரும்பினார். மோதிலால் நேரு இதை விரும்பவில்லை. தந்தையும் மகனும் நீண்டநேரம் விவாதங்கள் நடத்தினர். இறுதியில் தனயனே வெற்றி கண்டார்.

நாட்டின் அரசியல் சூழ்நிலை அப்பொழுது அவ்வளவு திருப்தியாக இல்லை. வெறும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் சபையாக காங்கிரஸ் மகாசபை இருந்த காலம். மிதவாதக் கொள்கையின் ஆதிக்கம் அதிகம். ஆங்கிலமொழி மீது ஒரு மோகம். அவர்களுடைய



நாகரீகத்தில் ஒரு பிரமை. ஆங்கிலம் படித்த வகுப்பாரே, சமுதாயத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள், பொதுவாக, மிதவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். 1905-ல் இருந்து இருபது ஆண்டுகள் இவர்களுடைய செல்வாக்கு காங்கிரசில் ஓங்கியிருந்தது. 1919-ம் ஆண்டு ரௌலட் சட்டம் என்ற ஒரு கொடுமையான சட்டத்தை பிரிட்டிஷ் ஆட்சி நிறைவேற்றியது. இந்தச் சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட சமயமும், காந்தியடிகள் இந்திய அரசியலில் காலடி எடுத்து வைத்த சமயமும் ஒன்ருக இருந்தது. ஒத்துழையாமை இயக்கம் துவங்கியது. காந்திஜி நடத்திய அறப் போரில், ஜவஹர்லால் நேரு தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

மோதிலால் நேருவுக்கு மனப்போராட்டம். தானும் விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்வதா? அப்படியாயின், தன் வருவாய் மிக்க தொழில் என்ன ஆவது? குடும்பம் என்ன ஆகும்? இந்த நிலையில், 1919-ம் ஆண்டில் பஞ்சாபில் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுங்கோலாட்சி தாண்டவமாடியது. மோதிலால் நேருவின் இதயத்தில் கனன்று கொண்டிருந்த சுதந்திரக் கனல் ஒளி வீசியது. தம் தொழிலைத் துறந்தார். சுக வாழ்வைக் கைவிட்டார், பாரத அன்னையின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பிறகு பல போராட்டங்கள், சிறை வாழ்வு எல்லாம். 1919-ம் ஆண்டில் "சுதந்திரன்" என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து, மக்களிடம் சுதந்திர வேட்கையை வளர்த்தார்.

காந்திஜி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் 1921-ம் ஆண்டு சேர்ந்து சிறைப்பட்டார். காந்திஜியின் எளிய தோற்றம், எளிய வாழ்க்கை, மக்கள் அவரிடம் வைத்த அன்பு ஆகியவை மோதிலால் நேருவை பெரிதும் கவர்ந்தன.

### விடுதலை வீரர்களின் தாய்வீடு

அலகாபாத்தில் அவர் இல்லமாக விளங்கிய "ஆனந்த பவனம்" என்ற அழகிய மாளிகை தேச விடுதலை வீரர்களுக்கு எல்லாம் அபயம் அளிக்கும் தாய் வீடு போல் விளங்கியது. இன்று அது நாட்டின் பொதுச்சொத்தாக இருந்து வருகிறது.

"பிரிட்டிஷ் ஆட்சியை வெளியில் இருந்து மட்டிலும் எதிர்த்துப் பயனில்லை" என்பது மோதிலால் நேருவின் கருத்து. இந்தக் கருத்தை தேசபக்தர் சித்தரஞ்சன் தாசும் ஆதரித்தார். இந்த இரு பெரும் தலைவர்களும் சேர்ந்து, **சுயராஜ்யக் கட்சி** என்றதொரு கட்சியை ஆரம்பித்தனர். நாடு முழுவதும் நடந்த தேர்தலில் இக் கட்சியினர் நாட்டின் பிற்போக்கு சக்திகளை முறியடித்து பல ராஜ்யங்களில் வெற்றிமாலை சூடினர்.

மத்திய சட்டசபையில் அங்கத்தினரான மோதிலால் நேரு தன்னுடன் வேறு பல முற்போக்கு வாதிகளையும் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியைத் திணற அடித்தார். வீரம் செறிந்த, வாக்கு வன்மையுள்ள அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு பிரிட்டிஷ் ஆட்சி நடுங்கியது. பல தடவைகளில் அரசாங்கத் திட்டங்களைத் தோற்கடித்தார்.

1929-ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற காங்கிரசில், இந்தியாவின் லட்சியம் "பரிபூரண சுயராஜ்யம்" என்று தீர்மானம் நிறைவேறியது. இந்த லாகூர் காங்கிரசுக்கு தலைமை வகித்தவர் திரு ஜவஹர்லால் நேரு. 1928-ம் ஆண்டு காங்கிரஸ் தலைவர் மோதிலால் நேரு. தந்தை, தனயனிடம் ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைமையை ஏற்று நடத்தும்படி பொறுப்பை ஒப்படைத்தது கண்டு நாடு பூரிப்பெய்தது.

"நாம் நன்கு சிந்தித்து, நம்முடைய சக்திகள் எவ்வளவு என்று கணக்கிட்டு, அவைகளை ஒன்று திரட்டி, இறுதியாக, நம் பலமனைத்தையும் நாட்டுச் சுதந்திரம் என்ற மகத்தான இலட்சியத்தை அடைய அர்ப்பணிப்போம்" என்று தன் தலைமையுரையிலே மோதிலால் நேரு முழங்கினார். பிரிட்டிஷ் ஆட்சியை எப்படியேனும் இந்திய மண்ணிலிருந்து நீக்கவேண்டுமென்று சபதம் பூண்டிருந்த மோதிலால் நேரு 1931-ம் ஆண்டு மரணமடைந்தார். இறக்கும்போதும் "நாடு விடுதலை பெறவில்லையே" என்று ஏங்கிக்கொண்டிருந்தார்.

விடுதலைப் போராட்டம் நடத்தியதோடு நில்லாமல் உலகம் போற்றும் உத்தமரான நமது ஜவஹர்லால் நேருவையும் நாட்டுப் பணிக்கு என்று அளித்துச் சென்ருர். மேலும், இந்தியப் பெண்ணினம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றும் கருத்துக்கொண்ட அவர், தன் பெண்களுக்கெல்லாம் உயர்ந்த கல்வியறிவு அளித்தார். அதன் விளைவாக அவர்கள் உயர்ந்த நோக்கும், பரந்த அறிவும் பெற்றனர்.

### பெண் இனத்தின் வழிகாட்டி

டாக்டர் விஜயலட்சுமி பண்டிட் இன்று, இந்தியப் பெண் இனத்திற்கே ஒரு வழிகாட்டியாக உள்ளார். ஐக்கிய நாட்டுச் சபையில், இந்தியப் பிரதிநிதியாகவும், அச் சபையின் தலைவராகவும் இருந்து உலகப் புகழ் பெற்றுள்ளார்.

இன்று "நேரு குடும்பம்" என்று உலகப் புகழ் பெற்றுள்ள மோதிலால் நேருவின் குடும்பம் இந்திய வரலாற்றில், ஏன் உலக வரலாற்றிலேயே தனி இடம் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் மோதிலால் நேருவின் தன்னலமற்ற சேவை, ஆழ்ந்த தேசப்பற்று, பண்பட்ட மனம் ஆகியன. அவரது அஞ்சா நெஞ்சம், சேவை மனப்பான்மை, தேசபக்தி முதலியவை என்றும் இளைஞர்களுக்கு வழிகாட்டக் கூடியவை.

மோதிலால் நேரு மரணப் படுக்கையில் இருந்தபோது அவரைப் பார்க்க வந்த காந்திஜியிடம் பின்வருமாறு கூறினார். "நான் விரைவில் இறந்துவிடப் போகிறேன், சுதந்திரம் கிட்டப்போவதை நான் உயிருடன் இருந்து பார்க்கப் போவதில்லை. ஆனாலும், நீங்கள் அதை வெற்றி

[அடுத்த பக்கம் பார்க்க.]

# பஞ்சாயத்து ஆட்சி—சில விளக்கங்கள்

(மத்திய அரசாங்கத்தின் சென்ற 'பட்ஜெட்' கூட்டத்தில் பஞ்சாயத்து ஆட்சி பற்றிய விவாதத்தில், பாராளு மன்ற அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினுர்கள். விவாதத்திற்கு மத்திய அரசாங்க சமுதாய நல அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். கே. டே. பதிலளித்துப் பேசினுர். திட்டத்தை விளக்கும் வகையில் உள்ள அந்தப் பேச்சின் சுருக்கத்தை கீழே கொடுத்திருக்கிருேம். —ஆசிரியர்.

"சமுதாய நலத்திட்டத்தின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது அது எப்படி நான்கு படிகளாக வளர்ச்சியடைந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும். சென்ற 1952-ம் ஆண்டு ஆரம்பத்தில், மக்களுக்கு நலன் அளிக்கும் முயற்சியில் அது அரசாங்க இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனுல், இதில் மக்களும் தொடர்பு கொள்ளவேண்டுமென்பது சீக்கிரமாக உணரப்பட்டது. ஆகவே, இந்தத் திட்டத்தின் அடுத்தபடியாக சென்ற 1955-ம் ஆண்டு வட்டார அளவில் திட்டம் தீட்டி செயல்படுத்த, அதிகாரிகளுக்கு ஆலோசனை கூற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். அடுத்து 1959-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் கொண்ட பஞ்சாயத்து ராஜ்யம் ராஜஸ்தான் மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலும் அமைக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ்ய அமைப்பின் கடைசிப்படிதான் கிராமத்தொண்டர் படையாகும். இதைப் பிரதமர் நேரு சென்ற ஜனவரி மாதம் 26-ம் தேதி அன்று ஆரம்பித்துவைத்தார். இந்தத் தொண்டர் படைத் திட்டம் படிப்படியாக, மெதுவாக, ஆனுல் உறுதியாக வளர ஆரம்பித்திருக்கிறது.

இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு படிப்படியாக பயிற்சி அளிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. பஞ்சாயத்துத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கு பயிற்சியளிக்க 80 உத்தியோகப் பற்றற்ற நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களின் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில், அகில இந்தியப் பஞ்சாயத்து பரிஷத் அமைக்கப்பட்டிருக்கிறது.

தேசத்தில் 9 மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்பட்டுள்ளது. சென்ற எப்ரல் 1-ம் தேதி முதல் குஜராத்திலும் பத்தாவதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக, மத்தியப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் சட்டம் இயற்றப்பட்டுள்ளன. பீகார் மாநிலம் 4 மாவட்டங்களில் வருகிற ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியிலும், மீதியுள்ள 13 மாவட்டங்களில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள்ளும் பஞ்சாயத்து ராஜ்யத்தை அமைக்கும்.

பஞ்சாயத்து ராஜ்யத்தில் இளைஞர்கள், பெண்கள் பங்கு பற்றி குறிப்பிடப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு முன் பெண்கள் இந்த வகையில் பங்கெடுத்துக் கொள்ளாததும் கூறப்பட்டது. சில தென் மாநிலங்களில் அவர்கள் இதில் பங்கு பெற்றுலும் தீவிர ஆர்வம் செலுத்தியவர்களாக இல்லை.

பெண்கள் கல்வி முன்னேற்றத்தில் கல்வி அமைச்சகம் அக்கறை காட்டியது. பெண்களுக்கென பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களிலே ஏராளமானவர்கள் படித்தார்கள். நாட்டில், தற்போது பெண்களே நடத்தும் பஞ்சாயத்துக்கள் இயங்கிவருகின்றன. இதுமட்டுமின்றி, பஞ்சாயத்து சமிதியிலும், ஜில்லா பரிஷத்துகளிலும் உறுப்பினராகப் பெண்கள் இருக்கிருர்கள்.

விவசாயிகளுக்கு, நவீன விவசாய முறைகளைக் கற்றுக் கொடுப்பதில், கிராமசேவக்குகளைத் தனிக்கவனம் செலுத்த வகை செய்யும்படி, மாநில அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. அதாவது, விவசாயம், கால்நடை, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, கூட்டுறவு ஆகிய வகைகளில் இவர்கள் கவனம் செலுத்தும்படி பணிக்கப்பட்டனர். விவசாய வளர்ச்சித் திட்டத்தைச் சீர்திருத்தும் முறையில், சமூக நல இலாகாவின் 'பட்ஜெட்' அமைப்பு மாற்றப்பட்டது. ஆரம்பத்தில், மொத்தச் செலவான 12 லட்ச ரூபாயில், 3·40 லட்ச ரூபாய், விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டது. அவசர நிலையின்போது, இது 4·50 லட்சமாக உயர்த்தப்பட்ட பிறகு மேலும் 1 லட்சம் அதிகமாக்கப்பட்டது. அவசர நிலைமையை முன்னிட்டு, கிராமங்களில் "பாதுகாப்பு உழைப்பு பாங்கு"கள் (Defence Labour Banks) அமைக்கப்பட்டிருக்கின்றன. அவசர நிலைமைக்குப்பின், இவை உள்ளூர் வசதிகளைப் பெருக்க உதவி செய்யும். கிராமத் தொழிலை வளரச் செய்ய தற்போது தொழிற் பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல், அவைகளுக்கு மூலப்பொருட்கள், இரும்பு, எஃகு, மின்சாரம், போக்குவரத்து ஆகிய வசதிகள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. நாட்டில் பல்வேறு பாகங்களில், வர்த்தக தொழில் அமைச்சகத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட ஏராளமான கிராமத் தொழிற் பேட்டைகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை."

[Adapted from ' Panchayath Raj ' June, 1963.]

]முன் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு விட்டீர்கள். விரைவில் அனுபவிக்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்". அவர் வாக்கு பொய்க்கவில்லை. காந்திஜியின் ஆயுட்காலத்திலேயே நாம சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். இன்று நாம் சுதந்திர நாட்டில் வாழக் கொடுத்து வைத்திருக்கிறோம் என்றுல், அதற்கு மோதிலால் நேரு போன்ற தன்னலங்கருதாத தலைவர்களின் சேவையே காரணமாகும். பாரத நாட்டு விடுதலைக்கு வித்திட்ட வீரர்களின் முன்னணிப் படையைச் சேர்ந்தவர் மோதிலால் நேரு. நம் நாட்டு சுதந்திரப் போராட்ட வரலாற்றில் அவருக்கென்று ஒரு தனி இடம் நிச்சயமாக இருக்கும்.



# கிராமத் தொண்டர் படை

[திரு என். சுப்பிரமணியம், உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி)]

கிராமத் தொண்டர் படை மூன்று பெரும் பிரிவுகளாக முறையே உற்பத்தி, கல்வி, காவல் அணிகளாகச் செயல்படவும், கிராமம்தோறும் செய்யப்பட வேண்டிய வேலைகளைத் தங்களுக்குள்ளே வகுத்து, அவற்றை அணிகளிலுள்ள அங்கத்தினர்களின் முழு ஒத்துழைப்புடன் செய்து, குடியினை உயரச் செய்ய முனைந்துள்ளது. வள்ளுவர் நாட்டின் அணி என்ற பட்டியலில் ஐந்து அம்சங்களைக் கூறுகிருர். அந்த அம்சங்களாகிய பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் (காவல்) ஆகியவற்றுள் விளைவு நடுவாக அமைந்துள்ளது. வள்ளுவர் சொல்லிய ஐந்து அணிகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது, நமது மூன்று அணிகளும்.

கிராமத் தொண்டர் படையினர் ஏற்றுக்கொள்வதற்கான சரியான வழிமுறைகள் தெளிவாக, நடைமுறைக்கேற்ப கொண்டு வரப்படவில்லை. சில இடங்களில் ஆங்காங்கே பரவலாக பல முறைகளில், இப்படையினர் பங்கு கொண்டு வருகின்றனர். இதை மனதிற்கொண்டு, ஆர்வம் கொண்ட தொண்டர் படையினர் தங்களுடைய ஆர்வத்தையும், தங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பையும் தகுந்த முறையில் செயல்படுத்த, சில குறிப்புகளைக் கொடுக்க விரும்புகிறேன்.



தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கிராமத்தொண்டர் படையினர் தில்லை விளாகம் கிராமத்திற்கு இணைப்புச் சாலை அமைத்தனர்.

தொண்டர் படையில் சேர்ந்துள்ளவர்களுக்கு அவர்களைப் பொறுத்த அளவில், மேற்கொள்ள வேண்டிய தனிப்பட்ட செயல்களையும், சமுதாயத்தைப் பொறுத்த வரையில் மேற்கொள்ள வேண்டிய கூட்டுச் செயல்களையும் தொகுத்து அவர்கள் புரிந்து கொள்ளவும், அதன்படி செயல்படச் செய்வதும் அவசியமாகும்.

### மூன்று அணிகளின் கடமை

கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்கள் இருக்கும் தாலுகாக்களில் உள்ள வட்டாரங்களில் தொண்டர் படை சிறந்த முறையில் செயல்படச் செய்யவும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனை ஆரம்பிக்கும் மூகத்தான், பட்டுக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், மதுக்கூர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இவர்களைக் கூட்டி ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, வழிமுறைகளைப்பற்றி விவாதிக்கப்பட்டது. அதன்படி பட்டுக்கோட்டை தாலுகா குழு நிலையில் கிராமத் தொண்டர் படையினா செயல்படக்கூடிய காரியங்கள் பற்றி பரிசீலிக்கப்பட்டது.

மூன்று அணிகளில் இருக்கும் அங்கத்தினர்கள் ஒவ்வொருவராலும், சில குறைந்தபட்ச காரியங்கள் செய்யப்பட வேண்டும். அதன்படி ஒவ்வொருவரும் வீட்டுக் காய்கறித்தோட்டமும், ஒரு கம்போஸ்ட் குழியும் கட்டாயமாகப போடுவதோடு மற்றையோருக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப் படப்பட்டது. வீட்டுக்கொரு அங்கத்தினர் என்று ஏற்பாட்டை ஏற்படுத்தி, மேற்கூறிய இரண்டு அம்சங்கள் வீடு தோறும் காணும்படியாய் செய்யவேண்டும். அவர்கள் குறைந்தது ஒரு தென்னையாவது, அதோடு வசதிக்கேற்ப இலவு, வேம்பு, வாகை போன்ற மரங்களையும் நடுதல் வேண்டும் கம்போஸ்ட் தயார் செய்வதில் பயிற்சியும், போதனையும். தகுந்தவர்கள் மூலம், ஒரு நாளுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கொடுக்க பயிற்சி நிலையத்தவரும் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தவரும் ஏற்பாடு செய்யவேண்டும். கம்போஸ்ட் குழி தயார் செய்யப்பட்டால், அதனை நிரப்புவதற்கான தழைகளை அக்குழியின் கிளிரிசிடியா ஐபோமியா, வாத நாராயணன், பூவரசு, ஆடாதோடை போன்றவற்றை நடுவதும், அதற்கான விதைப் பொருட்களை, பயிற்சி நிலையமும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

காய்கறித் தோட்டத்திற்கான தக்காளி, கத்தரி, வெண்டை, புடலை, பூசணி, முள்ளங்கி, அவரை, நிரந்தரக் காய்கறிகள் ஆகிய அகத்தி, முருங்கை, கருவேப்பிலை இவற்றைப் பயிர் செய்ய வேண்டும். அதற்கான விதைப் பொருட்களை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம் ஏற்பாடுகள் செய்து கொள்ளவும், வசதியுள்ள வீட்டுப் புறங்களில் தென்னை, மா, பலா, வாழை போன்ற பலன் தரும் மரங்களை நடவும், இதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும் விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

அதிக விளைவை ஏற்படுத்துவதற்கும், அதனால் தனி நபருக்கும் பஞ்சாயத்துகளுக்கும் நல்ல வருவாயையும், தன்மையையும் ஏற்படுத்தும் வகையில், கூட்டான முயற்சிகள் பல வகுக்கப்பட்டன. குளத்தில், வண்டல் நீக்கி, அதனைக் கொண்டு கரைகளை வலுப்படுத்தியும், அகலப்படுத்தியும்; அவற்றில் தென்னை, வாழை, போன்ற பலன் தரும் மரங்களை நடுவது. கரை ஓரங்களிலும், குளத்திற்கு உள் வாயிலும் கருவேலத்தை உற்பத்தி செய்வது. புறம்போக்கு தரிசு நிலங்களில் அதிகப் பலனும் நாட்டிற்கு அந்நிய செலாவணியை அளிக்கின்ற முந்திரியை நடுதலும், அதோடு ஆங்காங்கே அன்றுட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மூங்கில் தரும் பண்ணைகளை ஏற்படுத்துவது, பஞ்சாயத்துத் தோட்டம், பள்ளித் தோட்டம் இவற்றைப் பாதுகாப்பது, நல்ல வேலிகளை ஏற்படுத்தி நிரந்தர பாதுகாப்பு ஏற்படுத்துவது, அதனைக் கூட்டு முயற்சியில் எல்லோரும் பங்கு கொண்டு செய்து முடிப்பது, வேலைக்கான பொருட்களை பஞ்சாயத்து ஏற்பாடு செய்து கொடுப்பது.


இளையான்குடிப் பஞ்சாயத்து யூனியனில் அரியாண்டிபுரத்திலிருந்து கருஞ்சத்திக்கு கிராமத் தொண்டர் படையினர் சாலை அமைக்கிறார்கள்.

பாசன வாய்க்கால்களில் உள்ள வண்டலை நீக்கி அவற்றைச் சீர் செய்வது, வடிகால் வாய்க்கால்கள் வெட்டுவது.

கூட்டாக பூச்சி, பூஞ்சாளன் எலி இவற்றைக் கட்டுப்படுத்துவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், எல்லா நிலங்களிலுள்ள பயிர்களுக்கு நாசினிகளைத் தெளித்தல், கூட்டாக எல்லா வரப்புகளிலுமுள்ள எலிகளை மார்ச்சிலிருந்து மே மாதத்திற்குள் வேட்டையாடிப் பிடித்தல். இதற்காக பள்ளிச் சிறுவர்களையும் இணைத்துக் கொள்ளல் ஆகியவையாகும்.

### அங்கத்தினர்களுக்குப் பயிற்சி

கல்வி அல்லது அறிவு அணியில் உள்ள எல்லோரையும் மாலை 6 முதல் 7–30 மணி வரை திருச்சி நிலையச் செய்திகளைக் கேட்கச் செய்யவும், விளம்பரப் பலகைகளில் அன்றுட முக்கியச் செய்திகளை எழுதி வெளிப்படுத்தவும் தேசிய கீதத்தை சிறந்த முறையில் எல்லோரும் பாடும் திறனை ஏற்படுத்துவதும் ஆகும். பாதுகாப்பு அணியிலுள்ள அங்கத்தினர்கள் டிரில், கொடி யேற்றம், கொடி வணக்கம் இவற்றில் தேர்ச்சி பெறவும் அதற்காக மாதம் இருமுறை கொடியேற்று விழாவை நடத்த வேண்டுமென்று கருதப்பட்டது. பஞ்சாயத்து உற்பத்தித் திட்டங்களைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்திக் கொள்வதென்றும், இதற்கு தினமும் இருவரை முறைப்படி நியமிப்பது என்றும் கருதப்பட்டது. மேலும் ஆங்காங்கே இணைப்பு கிராம ரஸ்தாக்களைச் செப்பனிட்டு சீர் செய்வதும், புது ரஸ்தாக்கள் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறிய திட்டங்களை கிராமத் தொண்டர் படையினரின் கூட்டத்தில் வைத்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அனுபவங்களையும் கேட்டறிய வாய்ப்பு, பொன்னவராயன் கோட்டை பஞ்சாயத்து, துவரங்குறிச்சி பஞ்சாயத்துக்களில் கிடைத்தது. தொண்டர் படையினர் இம்மாதிரியான திட்டங்களைத் தாங்கள் நினைத்துள்ளதாயும் அதற்கு அம்மாதிரியான வழிமுறை அதாவது திட்டம் வகுத்துச் செயல்படுதல் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்தனர்.

1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி ஏற்கனவே பஞ்சாயத்தால் தீர்மானித்துள்ளபடி பொன்னவராயன் கோட்டையில் 200 மீட்டர் நிலத்திற்குப் பாசனக்கால்வாய் தொண்டர் படையினரால் வெட்டிச் சீர் செய்யப்பட்டது. அதற்கு மூன்று அணியினரும் பங்கு கொண்டனர். அவர்களின் திட்டங்களின்படி 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதியில் இருந்து 20-ம் தேதி முடிய நிலக்கடலை பூச்சிகளுக்கு மருந்து தெளிப்பது என்றும், ஏப்ரல் முதல் வாரத்தில் உள்ளூர் ரோடுகளைச் சரி செய்வதென்றும் ஏரியை சரி செய்வதால் 60–70 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வருமென்றும் தீர்மானித்துள்ளது.

### கிராம நலப் பணி

அடுத்து துவரங்குறிச்சி பஞ்சாயத்திலுள்ள தொண்டர் படையினர் 100 தென்னங்கன்றுகளை ரோடு ஓரமாக நெடுஞ்சாலை இலாகாவினரின் அனுமதி பெற்று நட்டனர். இன்னும் 250 கன்றுகளை நடத் திட்டம் உள்ளது. அக்கன்றுகளின் மகசூலை பஞ்சாயத்திற்கு கிடைக்க நெடுஞ்சாலை இலாகாவினர் ஏற்றுக்கொண்டதாயும் கூறப்பட்டது, 150 ஏக்கர் நஞ்சை வரப்புகளை கொத்தி 540 எலிகளை பிடித்துக் கொன்றனர். அடுத்து குளம் ஒன்றை ஆழப்படுத்திக் கரைகளை வலுப்படுத்தவும் தீர்மானித்துள்ளது. அறிவிப்புப் பலகையை பொது இடத்தில் நிறுவுவதாகவும் தீர்மானித்தது.

1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதியன்று மதுக்கர் பஞ்சாயத்துக்களின் தொண்டர் படையினர் கிராம ரோடு போடவும், குளத்தை ஆழம் செய்யவும் தென்னங்கன்றுகளை குளக்கரையில் நடவும், தீர்மானித்து அதன்படி ஈடுபட்டு உள்ளதைக் காணவும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களும் இம்மாதிரியான திட்டங்களை வரவேற்றனர். அதன்படி திட்டம் வகுப்பதாகவும் ஏற்றுள்ளனர்.

மேற்கூறிய சில அனுபவங்களிலிருந்து கிராமத்தில் தொண்டர் படைகள் ஏற்படுத்தப்பட்டு அப்படையினர் தங்களால் இயன்ற முறையில் செயல்பட்டு வருகின்றனர் என்று தெரியவந்தது. ஆர்வத்தோடு, இம்மாதிரியான கிராம நலப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்களுடைய பணியை மதிப்பீடு செய்துக்கொள்ளவும், செய்தவற்றை பதிவு செய்து கொள்வதற்கும், மேற்கூறிய முறைகள் அனுசரணையாக இருக்கும்.

## பயனளிக்கும் பனைமரம்

தமிழ்நாட்டில் பனைமரத் துணைத் தொழில்கள் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன, அரசாங்கம் இத்தொழில்களை ஊக்குவிக்க, தொழிற் கூட்டுறவுகளை அமைத்து உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துள்ளது, தமிழ்நாட்டில் 1,400 பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் 80,000 பேருக்கு, பதனீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சென்னையில் மட்டும் பதனீர் விற்பனை வண்டிகள் ஒன்பதும் விற்பனை நிலையங்கள் பதினைந்தும் இயங்கி வருகின்றன, நாளொன்றுக்கு 3,500 புட்டி பதனீர் விற்கப்படுகிறது,

ஆண்டுதோறும் சுமார் 6,00,000 ரூபாய் மதிப்புள்ள பனைநார் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது உலகில் 37 நாடுகள் பக்குவப்படுத்தப்பட்ட இப்பனை நாரை வாங்கி பயனடைகின்றன, ஒவ்வோராண்டும் பனை வெல்லத் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் 7 லட்ச ரூபாய் செலவிட்டு வருகிறது.

இந்தத் தகவல்களை நாகர்கோயிலில் நடந்த அகில இந்திய பதனீர் இறக்குவோர் கருத்தரங்கில் (All India Climbing and Tapping Seminar) அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள் தெரிவித்தார், அவர் மேலும் பேசுகையில் கிராமத்தில் விளைகின்ற அனைத்தையும், கிராம மக்களின் வாழ்வை உயர்த்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும், அதன் மூலம், வேலை குறைவாக உள்ளவர்களுக்கு மேலும் வேலையும், வேலை வாய்ப்பற்றவர்களுக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்துவதுடன் அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு வழி செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

நன்றி : "ஜாக்ரிதி." Courtesy : "Jagriti"

# முழு நிதி உதவித் திட்டம்

முழுநிதிஉதவித் திட்டம் (Full Finance Scheme) என்பது விவசாயிகளின் குறுகியமத்தியக் கடன்தேவைகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே அவர்களுக்கு வழங்கும் ஓர் ஏற்பாட்டைக் குறிக்கும். தமிழ்நாட்டில் 1956-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கோயம்புத்தூர் ஜில்லா, ஈரோடு பிர்க்காவிலும். இராமநாதபுரம் ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூர் பிர்க்காவிலும் இத்திட்டம் துவங்கப்பட்டது. பின்னர் 1958-ல் இருந்து 1963-ம் ஆண்டு வரை 105 வட்டாரங்களில் இத் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. 1963-64-ம் ஆண்டில் மேலும் 70 வட்டாரங்களில் இத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் (1) வில்லிவாக்கம், (2) பரங்கிமலை, (3) காட்டாங் கொளத்தூர், (4) மதுராந்தகம், (5) காஞ்சிபுரம், (6) பூண்டி, (7) ஊத்துக்கோட்டை, (8) மீஞ்சூர், (9) கும்மிடிபூண்டி, (10) சைதாப்பேட்டை ஆகிய வட்டாரங்களில் அமுலில் இத்திட்டம் இருந்து வருகின்றது.

இத்திட்டத்தை அமுல் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசம் முழுவதும் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில், புதிய கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் அல்லது ஏற்கனவே உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவகார எல்லைகளை அந்தக் கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும்.

எல்லா விவசாயக் குடும்பங்களும் (நிலச் சொந்தக்காரர்கள் ஆனாலும் சரி, குத்தகைக்காரர்களானாலும் சரி) கூட்டுறவு சங்கங்களினுள் கொண்டு வரப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது ஒரு நபராவது கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்க்கப்படுவோர்.

விவசாய உற்பத்திக்காக குடியானவர்களுக்குத் தேவைப்படும் கடன் முழுவதையும் (குறுகிய காலக்கடன், மத்தியக் காலக்கடன் ஆகியவைகளை) நிர்ணயம் செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கூடிய மட்டில் உரம் போன்ற சில விவசாயத் தேவைகளை பொருள்களாகவே விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

குடியானவர்களின் விவசாய உற்பத்திப்பொருட்களை விற்றுத் தருவதில் விற்பனைச் சங்கங்கள் வேண்டிய உதவியைச் செய்யும்.

ஒவ்வொரு அங்கத்தினருக்கும் விவசாய உற்பத்திக்குத் தேவையான கடனைக் கணக்கிட்டு, அவர் நிலச் சொந்தக்காரர் ஆனாலும் சரி, அல்லது குத்தகை விவசாயியாக இருந்தாலும் சரி அதைப் பொருட்படுத்தாமல், வேண்டிய அளவு கடனை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ரூ. 1,000 வரையுள்ள கடன்கள் நபர் ஜாமீன் பேரிலும், ரூ. 3,000 வரையுள்ள கடன்கள் பூமியின் அடமானத்தின் பேரிலும் வழங்கப்படும்.

விவசாயிகள் ஆங்காங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர வேண்டும். அங்கத்தினர்களுக்குத்தான் கூட்டுறவில் நாணய வசதி அளிக்கப்படுகிறது. இன்சால்வெண்ட், குற்றவாளி போன்ற அசாதாரண சந்தர்ப்பங்களில் தவிர, ஒவ்வொரு விவசாயியும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர உரிமை உடையவராவர். அங்கத்தினராகச் சேர்க்க மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட நபருக்குக் கூட்டுறவுத் துணைப்பதிவாளருக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமை உண்டு. கிராமச் சங்கமாயிருந்தால் அதன் பஞ்சாயத்தார்கள் விவசாய பாங்காயிருந்தால், நிர்வாக சபை, மத்திய பாங்கு மேற்பார்வையாளர் உதவியுடன் கடன் விண்ணப்பங்களைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட அடக்கங்களுடன் மத்திய பாங்கிற்கு மேற்பார்வை யூனியன் மூலம் அனுப்பப்படும். மத்திய பாங்கானது கடனைச் சங்கத்திற்கு சாங்ஷன் செய்து, தகவல் அனுப்பினதும், சங்கம் மெம்பர்களிடமிருந்து அவசியமான பத்திரங்களை எழுதி வாங்கவேண்டும். மத்திய பாங்கின் சார்பாக சங்கமும் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இதன் பிறகு மத்திய பாங்கு சங்கத்திற்குக் கடனைப் பட்டுவாடா செய்யும். அத்தொகையை கொண்டு சங்கம் மெம்பர்களுக்குக் கடனை வழங்கும்.

கடனைக் கொடுப்பதில் ஏற்படும் தாமதங்களை குறைக்க மத்திய பாங்கு, விவசாய பாங்குகளுக்கும் நன்முக வேலை செய்யும். கிராம சங்கங்களுக்கும் "கேஷ் கிரடிட்" வசதியைச் செய்து ஒரு தொகையைச் சங்கத்தின் பொறுப்பில் விட்டு வைக்கும். அக்கணக்கிலிருந்து சங்கம் பணம் பெற்று அங்கத்தினர்களுக்குக் காலா காலத்தில் கடன்கள் பட்டுவாடா செய்துவிடும். பட்டுவாடா செய்த பின்பு சங்கம் விதிமுறைப்படி கடன் விண்ணப்பத்தைத் தயார் செய்து பாங்குக்கு அனுப்பி "கேஷ் கிரடிட்" கணக்கை ஈடு செய்துவிடும்.

முழுநிதி உதவித் திட்டம் அமுலிலுள்ள பிரதேசங்களில் தக்காவிக்கடன்கள் (குறுகிய, மத்திய, நீண்டகால அரசாங்கக் கடன்கள்) கொடுக்கக்கூடாது என்பதாகவும், இந்தப் பிரதேசங்களில் இது சம்பந்தமாய் செய்யப்படும் விண்ணப்பங்கள் இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பபடவேண்டும் என்பதாகவும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இந்த விதியிலிருந்து சிலவகையான அரசாங்கக் கடன்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, சில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் பிளாக் பட்ஜெட்டில், நீர்ப்பாசனம், சில அபிவிருத்தி வகைகளுக்காக வழங்கப்படும் கடன்களில் மானியம் பற்றிய அம்சம் கொண்ட கடன்கள் புதிய கிணறுகள் வெட்டும் திட்டத்தின்கீழ் மான்ய உதவி கொண்ட கடன்கள் ஆகியவை விஷயங்களில் இந்த விதி விலக்குப் பொருந்தும்.

மேலே விவரித்துள்ளபடி, முழு நிதித் திட்டம் இவ் வட்டாரங்களில் துவக்கப்பட்டது. விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பும், உதவியும் அளிக்கும் என்பதிலும், மேலும் அதன் மூலம் விவசாயத்தை நல்ல முறையில் செய்வதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் இத்திட்டம் பயன்படும் என்பதில் ஐயமில்லை.





திரு. க. சந்தானம், எம். பி., அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து நிதி ஆராய்ச்சிக் குழுவினர் (Study Team on Panchayat Raj Finances) பஞ்சாயத்து அமைப்பு நிதி பற்றி ஆராய, தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். சென்னையில் இந்தக் குழுவினர் முதலமைச்சர் காமராஜ் அவர்களுடனும் மற்றும், அமைச்சர்கள், அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்துவதைப் படத்தில் பார்க்கலாம்.



பூண்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நெய்வேலி கிராமத்தில், மரவளம் பெருக்கும் வகையில், சிறுமிகள் தென்னங்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றும் காட்சி.



1



2



3



8

# பூண்டி பஞ்சாயத்து யூனியனில் ஆக்கப்பணிகள்

1. காந்தி கிராமத்தைச் சேர்ந்த இருளர் வகுப்புப் பெண்கள் அரசாங்கத்தின் அறிவு விளக்கப் பணியில் ஆவலுடன் ஈடுபடுகிறார்கள்.
2. காந்தி கிராம ஆரம்பப்பள்ளி மாணவ, மாணவியர்.
3. பிளேஸ்பாளையம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள்.
4. கூனிப்பாளையத்தைச் சேர்ந்த மாதர் சங்கத்தினர் தையல், பின்னல் வேலைகள் செய்யும் காட்சி.
5. வேளகாபுரத்தைச் சேர்ந்த கிராமவாசிகள்.
6. கூனிப்பாளையத்தில் முர்ரா எருமை வளர்ப்பு.
7. சென்றாயன்பாளையத்தில் கால்நடை வளர்ச்சி.
8. பூண்டி கிளை நூல் நிலையம்.



4



7



6



5









1. விவசாயிகளுக்கு உதவியளிக்கும் முழுநிதி உதவித் திட்டம் (Full Finance Scheme) சென்னையை அடுத்துள்ள பரங்கிமலை, வில்லிவாக்கம் ஆகிய யூனியன்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. பரங்கிமலையில் நடந்த விழாவில், இத்திட்டத்தை தமிழ் நாட்டு நிதியமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் ஆரம்பித்துவைத்துப் பேசுகிறார்.

2. பல்லடம் பஞ்சாயத்து யூனியனில் கிராமத் தொண்டர் படையினருக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் இறுதி நாளன்று நடந்த அணி வகுப்பு.

3. பூவிருந்தவல்லியில் நடந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்ட ஆரம்ப விழாவில், திருமதி கௌசல்யா அனந்தபத்மனுபன் குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

# வாழ்வின் ஒளி—மின்னொளி

கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வதில் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முதலிடம் வகிக்கிறது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு பகுதிகளிலுமாக, நகரங்கள், குக்கிராமங்கள் உள்பட 14,420 கிராமங்கள், மின்சார வசதி பெற்று வருகின்றன. மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் 25 சதவிகிதம், வேளாண்மைக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப் படுகிறது. 161,490 பம்பு செட்டுகள் மின்சாரத்தினல் இயக்கி, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவுகின்றன.

வேளாண்மைக் காரியங்கள் தவிர்த்து, கிராமங்களில் குடிசைத் தொழில்களுக்கும், வேளாண்மைத் தொழில்களுக்கான கட்டண அளவிலேயே மின்சார சப்ளை அளிக்கப்படுகிறது. வேளாண்மைப் பொருள்களைப் பதனப்படுத்தும் காரியங்களுக்கும் மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது.

### விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள்

கிராமங்களுக்கு மின்சார வசதிப் பெருக்கத்தை ஊக்குவிப்பதற்காக குடியானவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. குறைந்த விகிதக்கட்டணம், இலவச சர்வீஸ் கனெக்ஷன், கிணறுகள் வறண்டிருக்கும்போது விசேஷ குறைந்தபட்ச உத்தரவாதக் கட்டணத் தள்ளுபடி முதலியவை அதில் குறிப்பிடத்தக்கவை ஆகும். வேளாண்மைக்கு மின்சாரம் உபயோகப்படுத்துபவர்கள் விசேஷ உத்தரவாதத்தைப் பொறுத்தவரையில் அதிகப்பட்ச வரம்பை, குதிரை சக்தி ஒன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 35 ஆக மின்சார போர்டு குறைத்திருக்கிறது. பஞ்சாயத்துக்கள், தெரு விளக்குகளை அமைக்கும்படி ஊக்குவிப்பதற்காக, தெரு விளக்கு சப்ளை மீட்டர் குறைந்தபட்சம் மாதத்துக்கு 2,000 யூனிட்டாக இருக்கவேண்டும் என்றிருந்ததை, 1,000 யூனிட் அளவுக்கு போர்டு குறைத்திருக்கிறது.

மின்சார வசதியைப் பெருக்கும் திட்டத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. கிராமப் பகுதிகளில் மின்சார வசதி வேண்டுமென்று கேட்போர் தொகை மிகப் பெருமளவில் உயர்ந்துள்ளது. பெரிய தொழில்களும், நடுத்தரத் தொழில்களும், வளர்ந்து வரும்படியான ஒரு நிலைமையில், நகரங்களிலிருந்து தொழில்களுக்காக மின்சாரத் தேவை அதிகரிக்கும். அதே நேரத்தில் கிராமங்களிலும் மின்சாரத் தேவை அதிகரித்து வருவதைச் சமாளிப்பதென்பது உண்மையில் ஒரு பிரச்சினையே ஆகும். இதன் விளைவாக, சப்ளையில் தொகுதி வாரி, முறைவாரி கட்டுப்பாடுகள் தவிர்க்கமுடியாதவை ஆகிவிட்டன.

கிராமங்களுக்கு மின்சார வசதி சம்பந்தமாகத் தமிழ்நாடு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரக் அட்ஹாக் கமிட்டி ஒன்று, இப்பிரச்சினையைப் பரிசீலனை செய்து இக்கட்டுப்பாடுகள் நீடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. ஆனால் முடியுமான இடங்களில், தொகுதிவாரிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் மற்றொரு வரவேற்கத்தக்க அம்சம் உண்டு. அதாவது கிராமங்களுக்கு மின்சார வசதி விஸ்தரிப்பால் கிடைக்கும் வருமானங்களைப் போர்டு ஆண்டுதோறும் பரிசீலிக்கும். விஸ்தரிப்பு வேலைகளில் கூடுதல் லோடுகள் காரணமாக, மின்சார விஸ்தரிப்புப் பணியானது கட்டுப்படியாகக் கூடியதாகத் தென்படுமானுல், மின்சார உபயோகிப்பாளர்கள் ஒப்புக்கொண்டுள்ள விசேஷ உத்தரவாதத்தை இறக்கி நிர்ணயிக்க அனுமதிப்பதே இந்தப் பரிசீலனையின் நோக்கம் ஆகும்.

### எங்கும் மின்னொளி—இருள் அகல்கிறது

சுமார் 5,000 ஜனத்தொகைக்கு மேற்பட்டவைகளுள் அநேகமாக எல்லாப் கிராமங்களும் மின்சார வசதி பெற்றுவிட்டன. மின்சார வசதி பெறவேண்டியிருக்கும் கிராமங்கள் பெரும்பாலும் பின்னடைந்த பகுதிகளாக இருக்கின்றன. மின்சார வசதி பெற்ற கிராமங்களுக்கு அருகில் இருக்கும் ஹரிஜன கிராமங்கள், ஹரிஜன குடியிருப்புகள் ஆகியவைகளுக்கு மின்சார வசதி செய்யப் போர்டு விசேஷ கவனம் செலுத்துகிறது. ஹரிஜனக் கிராமங்கள், குடியிருப்புகள் ஆகியவைகளுக்கு மின்சார வசதி செய்துதரும் திட்டங்கள் பொருளாதார முறையில் கட்டுப்படியாகாமல் இருக்குமானுல், ஹரிஜன நல நிதியிலிருந்து அரசாங்கம் அப்பணிகளுக்கு உதவித் தொகை வழங்குகிறது.

### மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில்

மின்சார வசதிப் பெருக்கம் சம்பந்தமாக மூன்றும் திட்டத்தில் அமுலாக்குவதற்காக ஒரு பெரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தில் கிராமங்களுக்கு மின்சார வசதி விஷயம் முக்கிய இடம் வகுக்கிறது. இத் திட்டக் காலத்தில் கிராமங்களில், மின்சார வசதியை அதிகரிப்பதற்கென ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்ரும் திட்டக்காலத்தில் ஆண்டுக்கு 1,600 கிராமங்கள் வீதமாக 8,000 கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிக்கவும், வேளாண்மைப் பெருக்கத்துக்காக லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார சப்ளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 1,600 கிராமங்களுக்கு மின்சார வசதி என்ற லட்சிய அளவு விஷயமாக மூன்ரும் திட்டத்தின், இரண்டாவது ஆண்டாகிய 1962–63-ல் 1,955 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. 22,240 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

### இன்றைய நெருக்கடி நிலையில்

தேசீய நெருக்கடி நிலைமை காரணமாகவும், பாதுகாப்பு சம்பந்தமான தொழில்களுக்கு மின்சார வசதியை ஈடுபடுத்த வேண்டியிருப்பதன் நிமித்தமாகவும் 1963-64-ம் ஆண்டில் கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பரப்பும் திட்டத்தின் வேகத்தை அதிகரிப்பதில்லை என்றும், 1963–64-ல் சுமார் 750 கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரிப்பதென்றும், அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆயினும், நிலைமையில் அபிவிருத்தி எற்படுமாளுல், இந்த ஆண்டில் மின்சார வசதி பெறும் கிராமங்களின் எண்ணிக்கை 1,600 அளவுக்கு உயர்த்தப் படும்.

மூன்ரும் திட்ட முடிவுக்குள் சாத்தியமானவரை எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியை அளிக்க வேண்டும் என்பதும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி ஒவ்வொரு வீட்டிலும் சுபிட்சமும் ஒளியும் எற்படுத்த வேண்டும் என்பதுமே அடிப்படை நோக்கமாகும்.

[தமிழ்நாடு மின்சார போர்டு தலைவர் திரு வி. பி. அப்பாதுரை அவர்கள் அளித்த குறிப்புகளிலிருந்து]

### கிராம நலம்

சந்தா விவரம் :—

**ஆண்டு சந்தா ரூ. 1·50.**

ஆறுமாத சந்தா கிடையாது.

தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

முகவரி.—பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல தல நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

## நூல்நயம்

### உழவும் தொழிலும்
### (FARMING AND INDUSTRY)

ஆசிரியர் : எஸ். மீனட்சி,
வெளியிடுபவர் : என். கிருஷ்ணன்,
66, முத்து முதலி தெரு, சென்னை-14.
ஆண்டு சந்தா ரூ. 5.

தமிழில் தொழில் நுட்பச் செய்திகளைத் தாங்கி வெளி வரும் பத்திரிகைகள் மிகவும் குறைவு எனலாம். அந்தக் குறையை ஓரளவு தீர்த்துவைக்கும் புதிய முயற்சியாக ‘ உழவும் தொழிலும் ’ என்ற மாத இதழ் வெளி வந்துள்ளது. உழவுத் தொழில் பற்றிய நுண்மையான கருத்துக்களைத் தெளிவாகக் கூறும் கட்டுரைகளும் கைத்தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய பல விளக்கக் கட்டுரைகளும் தாங்கி இவ்விதழ் வெளிவருகிறது. மாசி மாத இதழில் (பிப்ரவரி-மார்ச் '63) பயிர்களுக்கு இன்றியமையாத பொட்டாஷ் உரம் பற்றிய கட்டுரையும், டென்மார்க் நாட்டில் காணப்படும் விவசாய முன்னேற்றம் பற்றிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கன. அதேபோன்று, புதிய தொழில் தொடங்க விழைவோருக்குப் பயனளிக்கத் தக்க பல குறிப்புக்களும் அவ்விதழில் வெளிவந்துள்ளன.

உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கும், பிற தொழில்களை நடத்த விழைவோருக்கும் இவ்விதழ் நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

### பிழை திருத்தம்

1962, டிசம்பர் ‘‘கிராமநலம்’’ சிறப்பிதழாக வெளியிடப்பட்ட 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், அத்தியாயம் II, 9-ம் பக்கத்தில், ‘தேர்தல்களும் உறுப்பினர்களின் பதவிக்காலமும்’ என்ற துணைத் தலைப்பில், 14-வது விதி, இரண்டாவது பாராவின் முதல் வரியில் ‘ உறுப்பினராக’ என்று இருப்பதை “ பஞ்சாயத்து உறுப்பினராக ” என்றும்’

அதே பாராவின் கடைசி வரியில் “ உடையவராவார்” என்று இருப்பதற்குப் பதில் ‘உடையவராகார்’ என்றும் திருத்திப் படிக்கவும்.

—ஆசிரியர்



## புதியதோர் உலகு செய்வோம்

### ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்

“ வாழ்க்கையில் சீரும் சிறப்பும் பெற்று வாழ, ஒரு நாட்டின் சக்தியும் பெருமையும் வழிவழி வளரச் செய்வது குழந்தைகள்தான். ஆகவே, நாடு நலம்பெற வேண்டுமானல், கருவிலிருந்து குழந்தை பாலியப் பருவம் எய்தும் வரை, நல்ல முறையில் திடகாத்திரமாய் பண்புகளோடு வளர்க்கப்பட, ஒருங்கிணைந்த திட்டம் குழந்தைகளுக்கென அமுலிலிருக்க வேண்டும். ” இது மகாத்மாவின் பொன்மொழி. குழந்தைகள் இந்த நாட்டின் விலைமதிக்க முடியாத செல்வங்கள். அந்தச் செல்வங்களைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து பேணி வளர்த்து, எதிர் காலத்தில் நாட்டிற்கு நல்ல பயனுள்ள பிரஜைகளாக அவர்களை ஆக்குகின்ற பணி மிகவும் உயரிய திருப்பணியாகும். புதிய பஞ்சாயத்து ஆட்சியில், குழந்தைகள் நலன் பேணி பாதுகாக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலேயே, முதன் முதலாக, பூவிருந்தவல்லி வட்டாரத்தில், துவக்கிவைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம் (Integrated Child Welfare Pilot Project) குழந்தைகள் நலனில், தமிழ்நாட்டில் ஆற்றப்படுகிற அரும்பணிகளுக்கு, எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 28-ல் பூவிருந்தவல்லி வட்டாரத்தில், புதிதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தை, மத்திய அரசாங்க துணைக்கல்வி அமைச்சர் டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார். மாநில நிதி அமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

நாசரத்பேட்டை பால்வாடி வகுப்பைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகளின் இறைவணக்கப் பாட்டுடன் விழா ஆரம்பமாகியது.

சமூகநல போர்டின் தலைவி திருமதி அம்புஜம்மாள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்ருர்.

பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தினர் மேற்படி திட்டத்தின் நன்மைகளை விளக்கி, வில்லுப்பாட்டு முறையில் கலாநிகழ்ச்சி நடத்தியது மிகவும் கவர்ச்சியாக இருந்தது.

கல்வி அமைச்சர் திரு பக்தவத்ஸலம், சௌந்தரம் மாளுடைய ஆதரவிளுல் தான் நமது மாநிலத்திற்கு இத் திட்டம் கிடைத்துள்ளதென்றும், குழந்தைகளின் பாதுகாப்பை ஒரு கடமையாகக் கருதவேண்டுமென்றும் கூறினர்.

மத்திய அரசாங்க துணைக்கல்வி அமைச்சர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் விழாவை துவக்கி வைத்துப் பேசுகையில், ஒருங்கிணைந்த குழந்தை நலத்திட்டமானது கருவில் உருவாகும் நாளிலிருந்து குழந்தையை ஒவ்வொரு கட்டத்திலும் கவனித்து, பால்வாடி வகுப்பு முடிந்து பள்ளிப் பருவமான ஆருவது வயது வரை தாயுடன் சேயையும் சேர்த்துப் பாதுகாக்கும் அபூர்வமானதொரு திட்டம் என்ருர். இத் திட்டத்திற்கு வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகுமென்றும், இத் திட்டம் ஓர் ஒருங்கிணைந்த திட்டம் என்றும் தமிழ் நாட்டில் இப்பொழுதுதான் இத் திட்டம் செயல்முறையில் கொண்டு வரப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

மாதர் நல இலாகா டைரக்டர் திருமதி அஞ்சனி தயானந்த் அறிக்கை வாசித்தார்.

திருமதி சரோஜினி வரதப்பன் இத் திட்டம் உருப் பெறுவதற்கு அகில இந்திய குழந்தைகள் கவுன்சில் மிகவும் உதவியாக இருந்தது என்பதை எடுத்துக் கூறினர்.

கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு கே. வேங்கடாசலபதி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் முறையில் இத்திட்டம் வெற்றி பெறுமென நம்புவதாகக் கூறினர்.

மாவட்ட கலெக்டர் திரு அனந்தபத்மனுபன், ஐ.ஏ.எஸ். யூனியனைச் சேர்ந்தவர்கள் இத்திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றி வைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். திருமதி கௌசல்யா அனந்தபத்மனுபன் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினர். மற்றும் திரு ராமச்சந்திரன், திருமதி கிளப்வாலா ஜாதவ், மாநில பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் திருமதி சர்மா, திரு சேஷாச்சாரி எம்.எல்.சி. ஆகியோரும் பஞ்சாயத்து போர்டு தலைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு சாரி நன்றி கூறினர்.

### குழந்தைகள் நலத்திட்டம்

குழந்தைகளின் பராமரிப்பிற்கும், வளர்ச்சிக்கும், 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது. குழந்தைகளின் நலமே சமுதாயத்தின் நலமாகும்.

இத் துறையில் நீண்ட நாட்களாக தேவைப்பட்ட ஒருமுக ஒருங்கிணைந்த குழந்தை நல திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். தமிழகத்திலுள்ள 373 பஞ்சாயத்து யூனியனில் பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன் மட்டும் இந்திய அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து லட்ச ரூபாய் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டம் குழந்தை பிறந்ததிலிருந்து 16 வயது எய்தும் வரை அன்ருட முழுத் தேவைகளைக் கவனிப்பதோடு, குழந்தையின் பூர்ண வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்துகிறது. மேலும் இத் திட்டத்தில் சுத்தம், சுகாதாரம், உணவு, சுற்றுபுறம், கல்வி, தேகப்பயிற்சி முதலியவைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

குழந்தை கருவுற்றிருக்கும் போதே, அதன் வளர்ச்சியை கண்காணிக்கும் பொருட்டு, தாய் நலத்திலும் அக்கறை காட்டுகிறது.

# அரும்புகின்ற சமுதாயம்

[பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியனில் 28-4-63-ல் நடைபெற்ற ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டத் துவக்க விழாவில் நடைபெற்ற வில்லுப் பாட்டு கலைநிகழ்ச்சி.]

பாட்டு :

வேங்கடமும் அலை ஓங்கிடும் தென் திசை
ஆழியதும் உடையாள்—குற்றம்
நீங்கிய தொல்புகழ் தாங்கியவள் வளம்
ஈந்திடுவாள் எங்கள் தாய்—எங்கள் தாய்
எங்கள் தாய் !

கன்னல் வயலுடன் செந்நெல் கழனிகள்
கொண்ட வளாம் எங்கள் தாய்—இடை
மின்னல் நிகர் எழில் பொன்னை நிகர் இந்த
மேதினியில் சிறந்தாள் எங்கள் தாய்
எங்கள் தாய் !

முக்கோடி என்றிடும் மக்கள் தொகுதியைக்
கொண்டவளாம் எங்கள் தாய்—எட்டுத்
திக்கும் புகழ் மிகுத்தக்க குறள் சிலம்
பாட வ்ளர்ந்தவளாம்—எங்கள் தாய்
எங்கள் தாய் !

பாரதநாடு ஒரு பழம்பெரு நாடு. ஆங்கிலேயன் ஆட்சியிலே அவதிப்பட்ட மக்களின் நிலை மாறிக்கொண்டே வருகிறது. (ஆமா). தலைவிரித்து ஆடிய வறுமையும் பிணியும் அகன்று விட்டது. (ஆமா). ஆனால் மேல் நாடுகளில் காண்கின்ற முன்னேற்றம் இங்கு உண்டா ? (இல்லை) நம்நாடு முன்னேற வேண்டுமானல் பெண்கள் முன்னேற வேண்டும். (ஆமா). பெண்ணடிமை தீருமட்டும் மண்ணடிமை தீராது. கிராமத்திலே வாழும் பெண்கள் சமுதாய அமைப்பிலே தீவிர பங்கு கொள்ள வேண்டும். (ஆமா). நாட்டின் சக்திக்கும், பெருமைக்கும் வளர்ச்சிக் கருவிகளாக இருப்பவர்கள் பெண்கள். பெற்ற குழந்தைகளை சக்தியோடும் ஆண்மையோடும் வளர்ப்பது பெண்கள். இருந்தும் மேல்நாடுகளில் உள்ள குழந்தைகளின் சக்தி, ஆண்மை, நம் நாட்டுக் குழந்தைகளுக்கு உண்டா? (இல்லை). கருப்பிணிகள் சாவதும் குழந்தைகள் பிறந்தவுடன் இறப்பதும் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஏன் ? அதற்குரிய திட்டமில்லை. செயல்படுத்த செல்வம் இல்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக அத்திட்டம் இங்கு வந்துவிட்டது. (ஆமா). அதைத் துவக்கி வைக்க அமைச்சர் பலர் அதிகாரிகள் பலர் வந்திருக்கின்றார்கள். (ஆமா). அதைப்பார்த்து முழு ஆதரவு கொடுக்க மக்களும் திரண்டு வந்திருக்கின்றார்கள். (ஆமா). பல வேலைகளுக்கு இடையில் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எங்களது வணக்கம்.

பாட்டு :

கூடி வந்த பெரியோரே !
நாடி வந்த தாய்மாரே !
தேடிவந்த சிறியோரே !—பாருமே !
எங்களின் உளங்கனிந்த
வணக்கமதைக் கேளுமே !
ஒருங்கிணைந்த குழந்தை நலப்
பணிகள் கொண்ட திட்டமதை
ஒருமனமாய் ஒழுகுவதாய் ஒன்றியே
நாங்கள் உறுதியுடன் உரைத்திடுவோம்.
ஊன்றியே.

நம்நாட்டிலே கருத்தரித்த பெண் மரணம். சிசு மரணம், பயங்கரமாகவே இருக்கிறது. (ஆமா). மருத்துவப் பெண்கள் பலரிருந்தும் மருத்துவ விடுதிகளை அதிகப்படுத்தியும் பலன் என்ன ? ஒன்றுமில்லை. தாய்மை அடைந்தவுடன் தாயின் ஆரோக்கியம் மிக முக்கியம் என்று தெரிகின்றதா ? (இல்லை). சத்துள்ள உணவுடன் கிராமத்திலேயே செலவு சிறிதும் இல்லாமல் தன்னை ஆரோக்கியமாக வைத்து கருவிலிருக்கும் குழந்தை காலத்திற்கும் காப்பாற்றப்பட வேண்டுமே என்று தெரிகிறதா ? (இல்லை). கருவிலே சிசு உதித்துவிட்டால் போதாது. அதை நன்ருக பராமரிக்க மருத்துவப் பெண்களின் உதவியை நாடவேண்டும். (ஆமா). அவர்கள் சொல்லும் அறிவுரைகளை ஏற்று அதன்படி நடக்கவேண்டும். கேளுங்கள்.

பாட்டு :

கருவில் சிசு உதித்து விட்டால் போதாதுங்க
அங்கே சுகமாக அது வளர கவனங்கொள்ளனுங்க
தாயான பெண்மணியும் தாய்மை அடைந்தவுடன்
தன்னை ஆரோக்கிமாய் வைக்க வேனும்—அவள்
பலம் தரும் வைடமின்கள், பல பல காய்கறிகள்
பக்குவமாய்க் கொண்டுடம்பைப் பேணவேனும்
—கருவில்

தினமும் குளித்து தன்னைச் சுத்தமாக வைத்து சற்று
சுறுசுறுப்பாகவே இருக்க வேனும்—முகம்
மலர்ந்து மனங்கனிந்து மற்றவரும் பெற்றவரும்
போற்றும் நல்ல மாதாவாக காண வேனும்—
—கருவில்



இந்தனை குறிப்புகளும் இதமுடன் கற்றுணர்ந்து
இன்பந் தரும் சிசுவையே பேணி வந்தால்—அதை
திடமாக பெற்று நோயும் அணுகாத திடமுற
வளர்ந்து மகிழ வழி கொள்ளலாகும்.

பெற்ற குழந்தையை நன்ருகப் பேணி வளர்க்க வேண்டாமா ? வேண்டும், குழந்தையை இடைவிடாது கூர்ந்து கவனிக்கும் சக்தி குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்ற முறைகளை மேற்கொள்ளும் ஆற்றல் அனுபவத்தின் மேல் திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளும் தன்மை நல்ல முறையில் மருத்துவர்கள் எடுத்துச் சொல்லும் விஞ்ஞான முறைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இவைகள் தாயிடம் அமைந்திருக்க வேண்டிய பண்புகள். (ஆமா). வேலைக்கு செல்லும் வேலம்மாள் குழந்தையை விட்டுவிட்டு, வீறுநடை போடுகின்ருள் ரோட்டிலே. (ஆமா). குழந்தை கவனிப்பாரன்றி கதறுகிறது. கண்களை மூடிக் கதறுகிறது. கதறி என்ன பயன் ? கவனிப்பார் ஒருவருமில்லை. இந்தக் கவலை வேண்டாம், உங்களுக்கு இனிமேல் (ஆமா) அரசாங்கம் அருமையாகக் கொடுத்த ஒருங்கிணைந்த குழந்தை நலத்திட்டத்திலே இருக்கிற வசதிகளைக் கேளுங்கள்:—

பாட்டு :

பெற்ற குழந்தையைப் பேணி வழி
தெற்றத்தெளிவுடன் கேளீரம்மா—நீரும்.

சத்தான உணவும் சுத்தமுமே
நித்தம் கொடுத்திடும் நிச்சயமே—நீரும்

அன்றுடம் வேலைக்கு போவதாலே—பெண்கள்
அமர்ந்திட்ட குழந்தையை ஆதரிக்க
அம்மையர் பலருமே அங்கு காண்பீர் நீரும்
இவ்விதமே குழந்தைகளை
குறைவின்றியே காத்து வந்தால்
குன்றாத செல்வங்களாய்
குவலயத்தில் காண்பீரம்மா—நீரும் காண்பீரம்மா.

குழந்தைக்கு ஐந்து வயதாகிவிட்டது. (ஆமா). பால்வாடி வகுப்பைப் பாங்குடனே முடித்துப் பயமில்லாமல் ஆரம்பப் பள்ளிக்கு செல்கின்ருள். (ஆமா). எவருமே எங்குமே கண்டிராத காட்சி. (ஆமா). குழந்தையின் சுகநலத்தை சோதிக்க ஒரு டாக்டர். தொத்து வியாதிகள் குழந்தையைத் தொத்திக் கொள்ளாத வகையில் பல தடுப்பு ஊசிகள். மதிய உணவிலே சத்துள்ள உணவு. நல்ல ஆரோக்கியம் கொடுக்கத் தகுந்த சூழ்நிலை. இவைகள் தான் அங்கு பிரதானமாகக் காணப்படுகின்றன. (ஆமா). பட்டணங்களில் கூட காணப்படாத பல்வேறு திட்டங்கள் பட்டிக்காடுகளில் புகுந்து விட்டதைக் கேளுங்கள்.

பாட்டு :

ஐந்து வயதானதுமே அருகிலுள்ள பள்ளிகளில்
அழகாக குழந்தைகளை அமைத்து அரும் பயனடைவீரே. ஆ . . . ஆ . . .

சீராக வளர்ந்திடவே வைத்தியநல் சோதனைகள்
செம்மையாய்ச் செய்து அவர் சிறப்புறவே-செழித்திடவே
சத்துள்ள உணவுகளும் சரிவரக் கொடுத்திடவும்
மதிய உணவுத் திட்டம் மாண்புறவே நடத்திடவும்
—ஐந்து

மங்காமல் மலர்ந்து நிற்கும் மலர்களைத் திடுந்திடவே
மங்கையரும் பெற்றெடுத்த மதலைகளும் தழைத்திடவே

நோயேதுவும் நலியச் செய்து
நோக்கங்களை நொடித்திடாது
நோய்கள் நெருங்கிடாமல் ஊசிகொண்டு தடுத்திடும்

குழந்தை ஆரம்பப்பள்ளியில் படிக்கின்ருள் (ஆமா). பள்ளியின் சுற்றுப்புற சுகாதாரம் சீரான முறையில் அமைக்கப்படுகிறது. (ஆமா). குடி தண்ணீர் வசதியும் சிறுநீர் கழிக்குமிடமும் திடமான உருவாகின்றன. (ஆமா.) பள்ளியை விடுகின்ருள். (ஆமா). பள்ளியை விட்ட குழந்தைக்கும் திட்டமிருக்கிறது. (ஆமா). தொழிற்சாலைகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் கிராமங்களில் தோன்றுகிறது. கேளுங்கள்.

பாட்டு :

பாலர் பள்ளியை விட்டு—வெளி
வந்தவுடனே அவர்
வாழ பல வழிகள் வகுத்தோமே
நாட்டில் தொழிற்சாலை கட்டி வைக்கவும்
நல்ல தொழில் நாலு கற்றுக்கொள்ளவும்
மேலும் தொழிற்பள்ளி வேறமைக்கவும்
நல்ல பணி கொண்டு
உள்ளம் களி கொண்டு
நுள்ள அவர் வாழ்ந்து
நன்மை காண்பாரே.

படிக்கும் பள்ளி
குடிக்கும் தண்ணீர்
கக்கூஸ்கள் அமைக்கவும்
பயன் அடைவார்
வளம் பெறுவார்
கிராமம் எங்கும் பாருமே.

இப்படியாகத் தானே நம்முடைய தமிழ நாட்டிலே இயங்கும் 373 யூனியன்களில் பூவிருந்தவல்லி யூனியன் தான் தேர்ந்தெடுத்து ஒப்பற்ற ஒருங்கிணைந்த குழந்தை நலத்திட்டத்தை அரசாங்கம் அமுல் படுத்துகிறது. (ஆமா). பாரதபூமியின் பாலையில் பாந்த நோக்கமும் பல்வேறு திட்டங்களில் பாங்குடன் பங்கு கொள்ளும் பூவிருந்தவல்லி வட்டாரப் பெண்கள் சக்தி கனல் கொண்டு சாதுரியமாக இச்சாதனையை மேற்கொள்ளவேண்டும். (ஆமா).

[34-ம் பக்கம் பார்க்க.]

## பஞ்சாயத்து ரேடியோ—முக்கிய குறிப்புக்கள்

—(o)—

தமிழ்நாட்டிலுள்ள 12,522 பஞ்சாயத்துக்களில் 12,513 பஞ்சாயத்துக்களுக்கு வானொலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், வானொலிப் பெட்டிகள் அமைய வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஆனால் இந்தத் தேதிக்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, இத் திட்டத்தின் குறிக்கோள் நிறைவேறிவிட்டது.

வானொலிப் பெட்டிகள் பழுதானால் அவைகளை உடனடியாக பழுது பார்க்க வேண்டியது அவசியமாகும். இதைக் கருத்தில் கொண்டு பஞ்சாயத்துகளில் தொடர்பு கொண்டவர்களுக்கு உபயோகமாக இருக்கும்பொருட்டு கீழ்க்கண்ட குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

1. வானொலிப் பெட்டிகளுக்கான பாட்டரிகள் சக்தியிழந்துவிட்டால் உடனடியாக புது பாட்டரிகள் பொருத்துவது அவசியமாகும். பாட்டரிகள் மாற்றப்படவேண்டியவைகளா என்பதை வானொலிப்பெட்டிக்கான மேற்பார்வையாளர் (Radio Supervisor) சோதித்துக் கூறுவார். வானொலிப்பெட்டியை சீர் செய்வதற்காக மேற்பார்வையாளரிடம் எடுத்துச்செல்லும்போது "எனர்ஜிசர்" (Energiser) போன்ற வானொலிப் பெட்டியின் மற்ற பாகங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் பெட்டிகளை நல்ல முறையில் பழுது பார்க்க இயலும். சில சமயங்களில் வானொலிப் பெட்டிகள் பழுதில்லாமலும், பாட்டரிகள் பழுதுள்ளவைகளாகவும் இருக்கலாம்.

2. பாட்டரிகள் பெறுவதில் பஞ்சாயத்துக்களுக்கு சில சமயங்கள் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆனால் தலைமை வானொலி அதிகாரி (Chief Radio Officer) மூலம் சென்னையிலிருந்து நேரடியாகப் பெற வசதி செய்து கொள்ளலாம். ஒரே சமயத்தில் ஆறு பாட்டரிகள் பெறுவதாக இருந்தால், அவைகளைக் கட்டுவதற்கான கூலியும், அனுப்புவதற்கான செலவும் இல்லாமல் பெறலாம்.

3. பழுது பார்ப்பதற்காக வரும் வானொலிப் பெட்டிகள் எல்லா வால்வுகளும் (Valves) எரிந்துபோனதாகவோ, அல்லது குறைந்த அளவு இரண்டு வால்வுகள் எரிந்ததாகவோ வருகின்றன. இது தவறான முறையில் பாட்டரி பிளக்கை (Battery Plug) பாட்டரியுடன் பொருத்துவதால் ஏற்படுகிறது. பிளக் முனைகளையும், பாட்டரியிலுள்ள சந்துகளையும் ஊன்றிப் பார்த்தால், பிளக் முனைகளை ஒரே வகையில்தான் பாட்டரியில் பொருத்த முடியும் என்பதை அறியலாம். வேறு வகையில் திணிக்க முயல்வது பழுதடையக் காரணமாகும். பாட்டரியில் பிளக்கை சரியான முறையில் பொருத்துவதன் மூலம் வால்வுகள் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பிளக்கை எடுக்கும்பொழுதும், பிளக்கை மட்டும் இழுத்து எடுக்க வேண்டுமே தவிர, அத்துடன் இணைந்திருக்கும் கம்பியை (Wire) பிடித்து இழுக்கக்கூடாது. பிளக்கை தினந்தோறும் எடுத்து விட வேண்டுமென்பதில்லை. ஸ்விட்சை அணைத்தால் போதுமானது.

4. வானொலிப் பெட்டி ஒரு நுட்பமான கருவியாகும். அதை எச்சரிக்கையுடன் கையாளவேண்டும். சரிபார்க்க வானொலி மேற்பார்வையாளரிடம் கொண்டுசெல்லும் பொழுது, அதை அதனுடைய அட்டைப்பெட்டியில் வைத்து பத்திரமாக எடுத்துச் செல்ல வேண்டும். துணியில் கட்டி, தலைமேல் மூட்டை போல் எடுத்துச் செல்வதால், அதனுடைய திறந்த அடிப்பாகத்தில், கம்பி இணைப்புகள் இடம் பெயர்ந்து பழுதுபடக் காரணமாகும்.

5. வானொலிப் பெட்டிகள் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது பஞ்சாயத்துத் தலைவரின் கடமையாகும். வானொலி ஒன்றுதான், செய்திகளை அறியவும், விளக்கங்களைப் பெறவும் பயனுள்ள வகையில் பொழுது போக்கவும் நம் மக்களுக்குக் கிடைத்துள்ள அரிய சாதனமாகும். கிராம மக்களும் பஞ்சாயத்து ஆட்சித் தொடர்புள்ளவர்களும் இதை உணர்ந்து பணி புரிய வேண்டும்.

[நன்றி : தலைமை வானொலி அதிகாரி, சென்னை.]

---

## உலகநாடுகள் மகாசபையில் திருக்குறள் முழக்கம்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று நாம், நம் நாட்டில் பெருமையுடன் சொல்லி வருகிறோம். நமது தமிழ்நாட்டின் கல்வி, நிதி அமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள், பாரத நாட்டின் சார்பாக, வாஷிங்டனில் நடைபெற்ற உலக மகாநாடுகளின் உணவு மகாசபையில் (World Food Congress) பேசுகையில், திருவள்ளுவர் வாய்மொழியை மேற்கோள் காட்டி, தமிழ்நாட்டின் பழம்பெரும் அனுபவ ஞானத்தை உலகப்பேரறிஞர்களிடையே வெளிப்படுத்தினர்.

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்ற குறள் யாவரும் அறிந்ததே. (இதைப்பற்றி விளக்கம் 'கிராம நலம்' மே இதழில் 17—பக்கம் பார்க்க)

"திறமான புலமையெனில், வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று பாரதியார் கனவு கண்ட நமது திறமையை, உலக மக்கள் பாராட்டியதற்கும், நமது மாபெரும் இலக்கியச் செல்வங்களை தக்க முறையில் எடுத்துச் சொல்லும் தகுதி நமக்குண்டு என்பதையும், இந்தச் சரித்திரப்பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி வலியுறுத்துகிறது.



# கண்டதும் கேட்டதும்



## பூண்டி பஞ்சாயத்து யூனியனில் ஆக்கப் பணிகள்

சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, அகில உலக பாங்கின் தலைவர் திரு "யூஜின் பிளாக்" என்பவர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார், கோடிக்கணக்கான ரூபாய்களை பல்வேறு நாட்டு அரசாங்கங்களுக்கு கடனாக அளித்துதவும் அதிகாரம் பெற்றவர், அவர். உலக நாடுகளின் பொருளாதார வளத்தை அளந்தறியும் திறமையில் தலைசிறந்தவர். அமெரிக்க நாட்டின் மிகச் சிறந்த பொருளாதார நிபுணராகிய அவர், நமது பாரத நாட்டிற்கு வந்திருந்த சமயம், அரசாங்கத் தலைவர்களையும், தொழில் துறை நிபுணர்களையும் கண்டு பேசினார். அரசாங்கத் துறை, தனியார் துறை ஆகியோரின் நிதி நிலைமைகளை ஆராய்வது அவர் பொறுப்பாகும்.

இத்தகைய செல்வமும் செல்வாக்கும் பெற்ற அவர் சென்னை வந்திருந்தபோது, மனமகிழ்வுக்காக மாமல்லபுரம் சென்று அங்குள்ள சிற்பச் சின்னங்களைக் கண்டு களிக்க விரும்பினார். அரசாங்கத்தின் சார்பாக, அவருடன் செல்லும் கடமையும், அச் சமயம் சுமார் 8 மணி நேரம் அவருடன் இருந்து அளவளாவும் வாய்ப்பும், எனக்குக் கிடைத்தன. அப்போது, அவரிடமிருந்து நான் தெரிந்து கொண்ட அரிய செய்தி மிகவும் பயனுள்ளது; என்றும் மறக்க முடியாதது.

மாமல்லபுரம் செல்வோர் இளநீர் பருகாமல் வர முடியாது. வெய்யிலுக்கும் தாகத்திற்கும் மிகவும் உகந்தது, இளநீர். அங்குள்ள கடற்கரைக் கோயிலுக்கு உள்ளே போனால் பகல் வேளையிலும் 'கும்'மிருட்டாக இருக்கும். அங்கே உள்ள இறைவன் கோலத்தைப் பார்ப்பதற்கு "ஹரிக்கேன்" விளக்குடன், ஒரு சிலர் காத்துக் கொண்டிருப்பார்கள். இருட்டை விலக்கும் சேவைக்காக அவர்களுக்கு, அங்கு செல்லும் யாத்ரீகர்கள் ஏதாவது சில்லறை கொடுப்பது வழக்கம். அத்துடன் கிளிஞ்சல், பூ முதலியனவும், அங்கே விற்பனையாகும். அகில உலக பாங்கின் தலைவரான இவரும் இந்தச் சிறு செலவுகளை முறைப்படி செய்தார். (இங்கு ஏற்படும் எல்லாச் செலவையும் தாமே செய்யவேண்டும் என்று அவர், கண்டிப்பாகச் சொல்லி இருந்ததால், நான் எதையும் தடை செய்யவில்லை.)

பிரயாணம் முடிந்து காரில் நாங்கள் சென்னை திரும்பும் போது, அவர் தம்முடைய 'டைரி'யில் (நாட்குறிப்பில்) அன்றைய செலவை (அதாவது 9 அணு 6 பைசா) விவரமாகக் குறித்துக்கொண்டு இருந்தார். இதைக்கண்ட எனக்கு, ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "கோடீஸ்வரராக உள்ள இவர் ஒரு ரூபாய்க்கும் குறைந்த செலவு கணக்கின் விவரத்தை சிரமப்பட்டு எழுதுகிறாரே" என்று நான் எண்ணினேன். என் முகக்குறிப்பையறிந்து அவரே (60-க்கு மேற்பட்ட வயதும் அனுபவமும் நிரம்பியவர்) விளக்கம் கூறினார்.

"கோடிக்கணக்கான பணமாக இருந்தாலும், ஒரு சில சில்லறைக் காசுகளாக இருந்தாலும், வரவு செலவு கணக்கை ஒழுங்காக வைத்துக்கொள்ளும் பழக்கம் மிகவும் அவசியம். அது தான் பொருளாதார வெற்றியின் ரகசியம். தனி மனிதனாக இருந்தாலும் சரி; பெரிய ஸ்தாபனமாக இருந்தாலும் சரி, நிதிநிலை மேம்பாட்டுக்கான அஸ்திவாரம் சரியான வரவு செலவு கணக்கு வைத்திருப்பதே" என்று அவர் குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து, "உலக பாங்கியின் லேவாதேவிக்கு முக்கிய அளவுகோலாக இருப்பது ஒழுங்கும் நாணயமும் தான்" என்று விரிவாக எடுத்துரைத்தார்.

### சரியான பாதையில் புதிய பஞ்சாயத்து ஆட்சி

இவ்வாண்டு மே மாதம் 2-ம் வாரத்தில், செங்கல்பட்டு மாவட்டம், பூண்டி பஞ்சாயத்து யூனியனில், சுற்றுப் பிரயாணம் செய்தபோது, மேற்சொன்ன பழைய நிகழ்ச்சி, என் நினைவுக்கு வந்தது. யூனியன் தலைவர் திரு முனிரத்னம் அவர்களும், கமிஷனர் அவர்களும் என்னைக்கண்டு அன்புடன் அளாவி, "தேசியப் பாதுகாப்பு நிதி கொடையாளர் பட்டியல்" என்ற புத்தகம் ஒன்றை என்னிடம் தந்தனர். சுமார் 50 பக்கம் கொண்ட அந்த நூலில், நமது மாநிலக் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்கள் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் தேதியில் பூண்டிக்கு விஜயம் செய்தபோது, அந்த யூனியனைச் சார்ந்த கிராமத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சுமார் ஒரு வார காலத்திற்குள் வசூலித்த நிதியின் விவரங்கள் கிராம வாரியாக அதில் காணப்பட்டன. சுமார் 82 கிராம் தங்கமும், ரூ. 25,000 ரொக்கமும் கிராம மக்கள் அளித்துள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலுள்ள பெருவாரியான மக்கள், ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக கொடுத்துள்ளனர். கிராமத் தலைவர்கள் இந்த வசூல் வேலையில் ஈடுபட்டு, மக்களின் உற்சாகத்தை ஒன்று திரட்டியதை, மிகவும் பாராட்டவேண்டும். அதைவிட, இந்த வசூல் பற்றிய கணக்கை பொது மக்களிடம் விவரமாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது, மிகவும் போற்றவேண்டிய நடவடிக்கையாகும்.

என் பிரயாணத்தில் இந்த யூனியனைச் சார்ந்த நெய் வேலி, வேளகாபுரம், அதிலவாக்கம், பெருஞ்சேரி, அம்மம் பாக்கம், கூனிப்பாளையம், திம்மபூபாலபுரம், பிளேஸ் பாளையம், ராமஞ்சேரி, காந்தி கிராமம், திருப்பாசூர், சென்றுயன்பாளையம் முதலிய கிராமங்களுக்குச் சென்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டதோடு, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுடன் கலந்து பேசும் வாய்ப்பையும் பெற்றேன்.

### அன்றும் இன்றும்—போற்றத்தக்க மாறுதல்

"கூட்டுறவு இயக்கம்" என்று சொன்னாலே, சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு இங்கேயுள்ள ஜனங்கள் பரிகாசம் செய்தார்கள்; ஆனால் சமீப காலத்தில், நிலைமை ஓரளவு சீர்திருந்தியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வசதியளிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், ஏழை ஜனங்கள், சங்கத்தின் ஆதரவில் நவீன முறையிலே கூட்டுறவு விவசாயம் செய்து, லாபம் பெறவும், வழி காட்டப்பட்டுள்ளது.

வேளகாபுரம் என்ற ஊரைச் சேர்ந்த ஹரிஜன காலனியில், கூட்டுறவு இயக்கத்தின் மூலம், சிறந்த பணிகள் நடைபெற்று வருவதை, நேரில் கண்டேன். சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியால் "டிராக்டர்" மூலம், புஞ்சை நிலம் சீர்திருத்தப்பட்டது. சமீபத்தில், விவசாய அபிவிருத்திக்காக, ஒரு புதிய ஏரி நிர்மாணிக்கப்பட்டு, நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது. குடியிருப்புக்கான அழகான வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இன்றைய தினம் மூன்று பெரிய களஞ்சியங்களில், சுமார் 250 மூட்டை நெல், சேகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய கிராமத்தின் பொருளாதார நல்வாழ்வுக்கு, இது ஒரு சிறந்த சான்றாகும். மேலும் இதன் வளர்ச்சிக்கான திட்டங்களை, கூட்டுறவு ரிஜிஸ்திரார் திரு பாலசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்களும், பஞ்சாயத்து ஆட்சியாளரும் மாவட்டக் கலெக்டரும் உற்சாகத்தோடு செய்து வருகின்றனர். இங்குள்ள மக்கள், இந்த அபிவிருத்திகளுக்கெல்லாம் காரணமானவர்களை, நன்றியுடன் போற்றி வருகின்றனர். நமது முதலமைச்சர் திரு காமராஜ் அவர்களும் மத்திய அரசாங்கத்தின் சமுதாய நல துணை அமைச்சர் திரு பி. எஸ். மூர்த்தி அவர்களும் இந்தச் சாதனையைக் கண்டு தமது பாராட்டுதலைத் தெரிவித்தனர்.

### மகிழ்ச்சி தரும் கிராமம்

இந்த யூனியனின் தென்மேற்குப் பகுதியில் காடு மேடுகள் அதிகம். ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் எல்லையை ஒட்டிய மலைப் பகுதியில் உள்ள பிளேஸ் பாளையம் என்ற கிராமத்திற்கு காட்டு ரஸ்தா போடப்பட்டிருப்பது பாராட்டுதற்குரிய சாதனையாகும். இந்த ரஸ்தா மேலும் செப்பனிடப்பட வேண்டியுள்ளது. இந்தக் கிராமத்தில் அழகான பள்ளிக்கூடக் கட்டிடம் ஒன்று மக்களின் ஒத்துழைப்பால் உருவாகியது. மலைகளுக்கிடையே உள்ள இந்தக் கிராமத்திலிருந்து பல இளைஞர்கள் படித்து பட்டமும் பெற்றுள்ளனர். இந்த ஊரைச் சுற்றியுள்ள குக்கிராமத்தைச் சேர்ந்த மக்களிடையே சிறந்த ஒற்றுமையும் உழைப்புத் திறனும் காணமுடிகின்றது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இந்த ஊருக்கு ஜில்லா கலெக்டர் ஒருவர், நேரில் வந்து, அபிவிருத்தி வேலைகளுக்கு உற்சாகமூட்டும் வாய்ப்புக் கிடைத்தது. அதாவது, திரு கே. திரவியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றியபோது இந்த வனாந்தரக் கிராமத்திற்கு விஜயம் செய்ததை, இங்குள்ள மக்கள் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் குறிப்பிடுகின்றனர்.

மாதர் சங்கங்கள், கிராமத் தொண்டர்படை, பள்ளிக்கூட ஆசிரியர் சங்கம், நூல்நிலையம் முதலியன நல்ல முறையில் இயங்கி வருவதை அறிந்தேன். பஞ்சாயத்து யூனியன் கூட்டங்கள் கட்சிப் பூசல்கள் எதுவுமின்றி, கண்ணியமான முறையில் நடைபெற்று வருகின்றதை அறிந்து மகிழ்ந்தேன்.

### செய்தி நிலையங்கள்—செய்யப்படவேண்டியவை

திருப்பாசூர் கிராமத்தில் ஒரு புதிய பயிற்சி முகாம் நடைபெற்றதைப் பார்வையிட நேர்ந்தது, நமது மாநில சமூகநல போர்டின் (Madras State Social Welfare Board) ஆதரவில் ஆரம்பமான இந்த முகாமில், சென்னை நகரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் சுமார் 50 பிள்ளைகள் கிராம வாழ்க்கைப் பற்றிய பயிற்சி பெறவசதி செய்யப்பட்டது. சென்னை ஒய். எம். சி. ஏ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு ஜே. ஜாகப் அப்பாதுரை இந்த முகாமின் தலைமை பொறுப்பாளராக பணியாற்றினார். கிராமத்தையே பார்த்திராத சென்னை நகர மாணவர்களுக்கு, கிராமத்தைப் பற்றிய அனுபவம் ஏற்படவும், ஒன்றுபட்டு வாழும் முறையை வளர்க்கவும், இந்த முகாம் பயன்பட்டது. திருப்பாசூர் கிராமப் பஞ்சாயத்தாரும், பூண்டி பஞ்சாயத்து யூனியன் பொறுப்பாளரும், இந்த முகாம் வெற்றி பெற ஆவன செய்துள்ளனர்.



வேளகாபுரம் ஹரிஜன் காலனி.

[34-ம் பக்கம் பார்க்கவும்]



# நோயற்ற வாழ்வு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஒரு நாட்டைப் பொறுத்த வரையில் நலமான மக்களே நயமான செல்வமாவர். மக்களின் நலத்தைப் பொறுத்துத்தான், நாட்டின் எந்த நடவடிக்கையும் முன்னேற்றமும் நிகழ முடியும்.

'உடன் பிறந்தே கொல்லும் நோய்' என்பார்கள். நம் நாட்டில் நாட்டுப்புறத்தில், நோயே பெரும் பகையாக இருந்துவருகிறது. மக்களுக்குக் கல்வி இல்லை; செல்வ வசதி இல்லை; போதிய ஊட்டமும் இல்லை. எனவே மலேரியா, என்புருக்கி, காலரா, வயிற்றுழைச்சல், வயிற்றோட்டம் என்னும் கொடுநோய்கள் அவர்களிடம் நிலையாக வாழ்கின்றன. ஆண்டுதோறும் மலேரியாவினால் 10 லட்சம் மக்கள் மடிகிறார்கள், என்புருக்கி 5 லட்சத்திற்கும் அதிகமான மக்களைப் பலி கொள்ளுகிறது; காலரா, வயிற்றோட்டம், விஷக்காய்ச்சல்கள் இன்னும் பல லட்சம் மக்களை அழிக்கின்றன. சிசு மரணம், மகப்பேற்று மரணம், நோய்த்தொல்லை ஆகியனவும் மிக அதிகம்.

நோயை எதிர்த்துப் போராட வேண்டும். ஆனால் இந்தப் போராட்டம் மட்டும் நடந்தால் போதாது. பிணிகளின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்கள் 'காலந் தள்ளும்' ஆயிரக்கணக்கான கிராமங்களில், இந்த 'நோய் எதிர்ப்புப் போர்' நடைபெறவேண்டும்.

புதிய பஞ்சாயத்து ஆட்சி கிராம மக்களின் பலதுறை முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ளது. எனினும், இந்த முயற்சி வெற்றிபெற வேண்டுமானால், கிராம மக்கள் முதலில் சுகவாழ்வு பெறவேண்டும். "சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும்."

### இணைந்த நோக்கு

சமுதாய நல வளர்ச்சித் திட்டப் பகுதிகளின் சுகாதாரத் திருப்பணிகளுக்கான 'ஓர் இணைப்புத் திட்டம் உருவாகியுள்ளது. இதன்படி, சிகிச்சையும் தடுப்பும் இணைந்த மருத்துவ முறை மேற்கொள்ளப்படும். அதிலும் தடுப்பு முறைக்கே அதிக முக்கியத்துவம் உண்டு. இதன்படி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஆதார சுகாதார நிலையம் (Primary Health Centre) அதன் மூன்று உதவி நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பகுதி முழுவதுக்கும் போதிய மருத்துவ வசதி ஆதார சுகாதார நிலையத்திலிருந்து கிடைக்கிறது. அவை பின்வருமாறு :—

(1) சிகிச்சை.

(2) மலேரியா ஒழிப்பும், தொத்து நோய்த் தடுப்பும்.

(3) நல்ல தண்ணீர் வழங்கல், மலம் அகற்றல் திட்டங்களின் மூலம் சூழ்நிலை சுகாதாரத்தைப் பாதுகாத்தல்.

(4) தாய்-சேய் பராமரிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, "செவிலிகள்" பயிற்சி.

(5) பள்ளிகளில் வைத்தியப் பரிசோதனை.

(6) சுகாதாரக் கல்வி.

(7) சுகாதார, மற்றும் முக்கியமான "அளவீடுகள்" சேகரித்தல்.

இந்தத் திட்டங்களிலெல்லாம், மக்களைப் பங்கு கொள்ளத் தூண்டுவது மிக முக்கியமாகும். இந்த நற்பணியை, கிராம சேவகர், சேவிகள் செய்து வருகிறார்கள். கிராம சேவிகள், பெண்களுக்கு சுகாதார ஆலோசனைகள் கூறும் வகையில் குடும்பக்கலைப் பயிற்சி பெறுகிறார்கள். கிராம சேவகர்களுக்கும் பொது சுகாதாரம், சூழ்நிலை சுத்திகரிப்பு முதலியவைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. மாறிவரும் சுகாதார மறுமலர்ச்சிகளை ஏற்று, மக்கள் சுகவாழ்வு பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கவும், இவர்களுக்கு நல்ல பயிற்சி தரப்படுகிறது.

### தொத்துத் நோய் தடுப்பு

பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் மலேரியாவை ஒழித்து, யானைக்கால், மேக நோய், குட்டம், என்புருக்கி, கண்டமாலை முதலியவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், பல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றால் மக்களின் பொது சுகாதார நிலை உயர்ந்து வருகிறது.

வைசூரி, காலராத் தடுப்பு, அம்மை ஊசி குத்துதலும் பெருவாரியான பி.சி.ஜி. ஊசிகளுமாகச் சேர்ந்து, இந்த நோய்கள் பரவாதபடி அநேகமாகத் தடுத்துவிட்டன.

சூழ்நிலைச் சுத்திகரிப்பைப் பொறுத்தவரை, நல்ல தண்ணீர் வழங்குதல், ஒதுக்கிடங்கள் அமைத்தல், நவீன சுகாதார அமைப்புகளுடன் வீடு கட்டுதல் போன்றவை மிக முக்கியமாகும். காலரா, விஷக் காய்ச்சல், வயிற்றுழைச்சல் போன்ற பல நோய்கள் சுத்தமான தண்ணீரும், சுகாதார முறையில் கழிவு அகற்றும் வசதிகளும் இல்லாததாலேயே ஏற்படுகின்றன.

### சுகாதாரக் கல்வி

மக்கள் தீவிரமாக ஒத்துழைக்க முன் வந்தால்தான், நோய் தடுப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னேற முடியும். இதற்கு முதற்படியாக, சுகவாழ்வின் அவசியத்தை மக்கள் உணரவேண்டும். அதற்கு சுகாதாரக் கல்வியை மக்களிடையே பரப்புவதே சிறந்த வழியாகும். குழந்தைகளும் பெண்களுமே குடும்பத்தின் பெரும் பகுதி. எனவே பெண்கள் பெறும் கல்வி, குடும்பம் பெறும் கல்வியாகும். ஆகவே, சுகாதார ஊழியர்கள் நோய்களுக்கு சிகிச்சை செய்வதுமட்டும் போதாது. அவர்களே நோய் வராமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய முறை, அவசியம் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி, மக்களிடையே சுகாதார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் வேண்டும்.

## முக்கிய அறிவிப்பு

தமிழ் நாட்டிலுள்ள சமூகப்பணி புரியும் தனி நிறுவனங்களிடமிருந்து, மத்திய சமூக நல போர்டு மானிய உதவித் திட்டத்தின் கீழ், 1964–65 அல்லது 1964–66 ஆண்டுக் காலத்துக்கு உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களைத் தமிழ்நாடு சமூக நல போர்டு வரவேற்கிறது.

மாதர்கள், குழந்தைகள் நலத்திற்காகப் பணிபுரியும் நிலையங்கள், உடல், மனம் முதலியன நலிவுற்ற பெண்கள், குழந்தைகள் சேவை நிலையங்கள் ஆகியவை தாம் செய்து வரும் பணிகளை ஒன்று திரட்டிப் பலப்படுத்துவதற்கும், விரிவாக்குவதற்கும், பயன்படுத்த இம்மானியத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.

நன்கு அமைக்கப்பட்டதாய், சாதாரணமாகச் செய்து வரும் வேலைகளுக்குச் செலவு செய்து வருவதுடன், அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்குமான திட்டங்களுக்குப் போதுமான பொருள்வருவாயைத் திரட்டும் திறமையுள்ள நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மட்டுமே மானியம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும். தமிழ்நாடு சமூக நல போர்டு அலுவலகத்திற்கு இவ் விண்ணப்பங்கள் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப நமூனுக்கள் எழுதிக் கேட்டுப் பெறலாம்.

தலைவி, தமிழ்நாடு சமூக நல போர்டு, 54, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

**அஞ்சனி தயானந்த்**
மகளிர் நலத்துறை நெறியாளர்,
சமூக நல போர்டு செயலாளர்.

---

(32-ம் பக்கம் தொடர்ச்சி)

### மகாத்மா கண்ட கனவு நனவாகிறது

ராமஞ்சேரி என்ற கிராமத்தை அடுத்துள்ள பொது நிலத்தில் இருளர் என வழங்கும் பிற்போக்கு வகுப்பினருக்கான ஒரு புதிய காலனி ஒன்று உருவாகியுள்ளது. நாடோடிகளாக வாழும் இந்த வகுப்பார் (செஞ்சுக்கள் என்றும் வழங்கப்பெறுவர்) குடியிருப்புக்கான வீடுகளும், விவசாய வசதியும் பெற்று திருப்தியோடு உழைத்து வாழ வழி செய்யப்பட்டுள்ளது. இவர்களின் குழந்தைகள் படிப்பதற்கான பள்ளிக்கூடம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய காலனிக்கு "காந்தி கிராமம்" என்ற பெயர் அளித்திருப்பது மிகவும் பொருத்தமாகும். ஹரிஜனநல இலாக்காவினர் இந்த இடத்தில் படிக்கும் குழந்தைகளுக்கு கதரில் அமைந்த சீருடை வழங்கியுள்ளனர். இத்துறையில் மாவட்ட ஹரிஜன நல இலாகா அதிகாரி திரு சுப்பையன் புரிந்து வரும் சேவை மிகவும் புனிதமானது.

உழைப்பில் நம்பிக்கையும், கட்டுப்பாடு உணர்ச்சியும் உள்ள இந்த வகுப்பினரின் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படிப்பதைக்கண்டு அவர்களின் குடும்பங்கள், சிறப்பாக, பெண்கள் ஆனந்தத்தால் பூரித்துப் போகிறார்கள். காந்தியடிகள் சுயராஜ்யம் கேட்டது, இத்தகைய எளிய மக்களின் வாழ்வில், புதிய நம்பிக்கை பிறப்பதற்காகத் தானே? இந்தப் புதிய காந்தி கிராமம் உருவாக்க முன் வந்த பஞ்சாயத்து யூனியன் ஆட்சியாளர் எல்லோரையும் மனமுவந்து பாராட்டுகிறோம். நமது நாடெங்கும் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும், இத்தகைய "காந்தி கிராமங்கள்" அநேகம் மலருமாக!

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டார பஞ்சாயத்துக்களும் சுகாதார வைத்திய, கல்வித் துறையினரும் ஒருங்கிணைந்த குழந்தை நலத்திட்ட செயற்குழுவோடு ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். (ஆமா). திட்டமும் வந்து விட்டது. (ஆமா). செயலிலும் இறங்கி விட்டோம். (ஆமா). இவ்வட்டாரம் செய்யாத செயலில்லை. பார்க்காத பணியில்லை. மேற்கொள்ளாத நிகழ்ச்சியில்லை. எங்கள் தலைவர்கள் தானத்தை தாராளமாக தருவார். (ஆமா). உழைப்பைக்கொடுத்து உயர்த்துவார். (ஆமா). திட்டத்தை திறம்பட நடத்துவார். (ஆமா). ஆனால் ஆண்டவன் கருணை வேண்டும். அமைச்சர் ஆதரவு வேண்டும். அதிகாரிகள் அன்பு வேண்டும். அவை அருள இறைவனை இதயத்தில் இருத்தி ஆனந்த பாஷ்பம் சொரிந்து திட்டத்தை ஆரம்பிப்போம். வாருங்கள். "வணக்கம்.

**சிங்கார நாட்டினில் சிசுக்கள் நல திட்டம்**
**சீரும் சிறப்புற்று வாழியவே**
**அண்ணல் மகாத்மாஜி வகுத்துக் கொடுத்திட்ட**
**ஐந்தாண்டு திட்டமும் வாழியவே**
**நிதி கல்வி நலங்களில்**
**நிறைந்த நன்மை புரியும் அமைச்சர்**
**பக்தவத்ஸலம் வாழியவே.**
**நாடும் ஆரோக்கியமும் அடைந்து சுகம் பெறவே**
**நாடு ஜோதி அம்மையும் வாழியவே**
**தன்னலங்கருதாது தரணியில் பணி கொண்ட**
**சௌந்தரம் அம்மையாரும் வாழியவே**
**அரிவையர் திட்டங்களை அழகுடன்**
**இயக்கிடும் அஞ்சனி அம்மையாரும் வாழியவே**

**சமூக நலப்பணியில் சாலவே உழைத்திடும்**
**சரோஜினி வரதப்பன் வாழியவே !**
**அறிவும் ஆற்றலுங்கொண்டு அரும் நலம்**
**ஆற்றிடும் அம்புஜம் அம்மையாரும் வாழியவே !**
**மாநிலம் வியக்கவே மாபணி இயற்றிடும்**
**மாவட்டத் தலைவரும் வாழியவே !**
**வாழ்க தமிழகம் வளர்க சமுதாயம்**
**வாழிய வாழிய வாழியவே.**





# கேள்வியும் பதிலும்

**சேலம் மாவட்டம் கந்ரநாயக்கன் பட்டி கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி:** கிராமங்களில் கால்நடைகளுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? விளக்கிக் கூறவும்.

**பதில்:** மலட்டுத் தன்மைக்குக் காரணம்:—

(1) மாட்டிற்கு போதிய சத்தான ஆகாரம் கொடாமலிருப்பது;

(2) கால்நோய், வாய்நோய், இதனால் பாதிக்கப்பட்டதின் காரணம்;

(3) கருவுற்றிருக்கும்போது புருஸிலோஸிஸ் என்ற ஒரு வகை விஷ நுண்ணம் பீடிக்கப்படுவதால் ஏற்படலாம்;

(4) மாட்டின் உள் உறுப்புக்கள் வளர்ச்சியடையாமலோ, நோயாலோ பீடிக்கப்பட்டதால் ஏற்படலாம்;

(5) நோயுள்ள பொலி காளைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படலாம். ஆகவே இது போன்ற முக்கியமான காரியங்களில் நாம் கவனமாக இருக்க வேண்டும்;

**திருச்சி மாவட்டம், கண்ணனூர் கிராம வானொலி மன்றம்**

**கேள்வி:** கருச்சிதைவு என்பது தொத்து வியாதியா? அந்த வியாதி உள்ள மாடுகளை மற்ற கால்நடைகளுடன் சேரவிடக்கூடாதா? அவ்வியாதி மனிதர்களுக்கும் பரவுமா? விளக்கமாகக் கூறவும். —

**பதில்:**—கருச்சிதைவு எல்லாம் தொத்துநோயல்ல. புருஸிலோஸிஸ் என்ற நுண்ணத்தால் தாக்கப்பட்டு, அதனால் மாட்டிற்கு கருச்சிதைவு ஏற்பட்டு இருந்தால் அது கொடிய தொத்துநோய். அந்த மாட்டை, மற்ற மாடுகளும் சரி, மனிதர்களும் நெருங்குவது கூடாது. ஏனென்றால் புருஸிலோஸிஸ் என்ற நுண்ணம் மனிதரையும் தாக்கக்கூடும்.

**வடஆற்காடு மாவட்டம், பில்லந்தாங்கல் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி:** சாதாரணமாக நோய் தாக்கினால் ஜுரம் இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஜுரம் இருப்பதை நாம் எவ்வாறு உணரலாம்?

**பதில்:** சாதாரணமாக நமக்கு ஜுரம் வந்தால் நாம் அதற்கு "தர்மா மீட்டரைத்" தேடியா தெரிந்து கொள்கிறோம். இல்லை. இது போன்று மாட்டிற்கும் ஜுரம் கண்டிருந்தால் மாட்டைப்பார்த்தாலே தெரிந்து விடும். மேலே தொட்டுப்பார்த்தாலும் அதிக சூடாக இருக்கும். பரிதாபமான பார்வை. சோம்பல், பசியில்லாமை, நகருவதற்கும் இஷ்டமில்லாதிருத்தல், பலவந்தமாய் ஓட்டினால் நொண்டுதல், வேகமாக மூச்சு விடுதல், முதுகு வளைந்து நடுங்குதல் போன்ற இந்த குறிகளால் எல்லாம் மாட்டிற்கு நோய் கண்டிருக்கிறதென்று அறியலாம்.

**கேள்வி:** சந்தடைப்பான் நோய் கண்டு இருந்த பிராணியின் தோலை உரித்துக்கொண்டு புதைத்து விடுவதால் நோய் பரவ வழி உண்டா?

**பதில்:** சந்தடைப்பானால் இறந்த மாட்டை எரித்து விட வேண்டும். அல்லது போக்குவரவில்லாத இடத்தில் ஆறடிக் குழி தோண்டி போதுமான அளவு சுண்ணாம்பு பால் மூடி, புதைக்க வேண்டும். இல்லையேல் இந்த நோய் ஒரு மாட்டிடமிருந்து பல மாடுகளுக்கு பரவ வழி உண்டாகும்.

**கோவை மாவட்டம், பள்ளியம்பாளையம் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி:** பிராணிகளுக்கு சந்தடைப்பான் நோய் முற்றின பிறகு சிகிச்சை செய்தால் தப்புவிக்க முடியுமா?

**பதில்:** சந்தடைப்பான் நோயை உண்டாக்கக்கூடிய கிருமிகள் உடம்பினுள் சென்று ரோகமுண்டுபண்ணி இந்த வியாதியின் பயங்கரமான குறிகள் வெளிக்குக் காட்டப்படுங்காலம், ஒன்றிலிருந்து மூன்று நாட்கள் ஆகின்றன. சில அபூர்வமானதும், கடுமையானதுமான கேசுகளில் சில மணி நேரங்களில் குறிகள் தோன்றுகின்றன. அதி சீக்கிரத்தில் மரணமும் சம்பவிக்கிறது. அதனால் சந்தடைப்பான் நோயை வருமுன் தடுப்பது தான் சிறந்தது. கால்நடைகளுக்கு முற்றியபின் சிகிச்சை செய்வது, அவ்வளவு நல்ல பலனைத் தருவதில்லை. வருமுன் காப்பதே மேல்.

**செங்கற்பட்டு மாவட்டம், நுகும்பல் கிராமவானொலி மன்றம்.**

**கேள்வி:** சோளப்பயிர் சிறியதாக இருக்கும்போது மாடு மேய்ந்தால் மேய்ந்தமாடு இறந்துவிடுகிறது ஏன்?

**பதில் :** சோளப் பயிரில் ஸைனோ, ஜெனடிக்-க்ளுகோ ஆஸிட் அப் பிட் என்ற ஒருவித அமிலம் இருக்கிறது. இது ஒவ்வொரு ரக சோளத்திலும் வெவ்வேறு அளவிலே இருக்கிறது. அதிலும் சோளச்செடி இளம் பயிராக இருக்கும்போது ஓர் அளவு அதிக மாகவே இருக்கிறது. இதை மாடுகள் தின்று தண்ணீர் குடித்தவுடன் இது ஹைட்ரோஸைனிக் ஆசிட் என்ற விஷப் பொருளாக மாறி கால் நடைகளைக் கொன்றுவிடுகிறது. 75 நாளுக்கும் அதிகமாய் முத்தின பயிரில் இந்த விஷப்பொருள் அநேகமாக இருப்பதில்லை என்று கூறலாம். அதனால் நன்கு முற்றிய சோளத் தட்டுகளையே தீவனமாகப் போட வேண்டும். இளம்பயிரை மாடு மேயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு முதலுதவியாக சர்க்கரை அல்லது கருப்பட்டி பாகு போன்றதைக் கொடுக்கலாம் அல்லது "எப்சம் சால்ட்" என்ற பேதி உப்பு லின்ஸீட் எண்ணெயில் கலந்து கொடுக்கலாம். எப்சம் ஸால்டும் லின்ஸீட் எண்ணெயும் மருந்துக் கடைகளில் கிடைப்பதுண்டு.

**சேலம் மாவட்டம், கூகுட்டப்பட்டி கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி :** கோழிகளுக்கு அடைச்சல், ஆணிக்கால், முட்டையிடாமை போன்ற வியாதிகள் வராமல் தடுக்க முடியுமா ? எவ்வாறு ?

**பதில் :** அடைசல்வராமல் தடுக்க, சரியான அளவில் தீனி கொடுக்க வேண்டும். ஆணிக்கால் வராமல் தடுக்க கோழி மேயும் மைதானம், கரடு முரடாகவும் முள் முதலியனவும் இல்லாதிருக்க வேண்டும். முட்டை இடாமலிருத்தல், தீனி பற்றுக்குறையினாலா அல்லது ஏதேனும் வியாதியினாலா என்பதை முதலில் அறிந்த பிறகே, அதற்குப் பரிகாரம் தேடலாம்.

**கேள்வி :** சாதாரணமாக 3 நாட்கள் கழிச்சல் ஏற்பட்ட சில கோழிகள் உடனே இறந்து விடுகின்றன. மற்ற கோழிகட்கும் பரவுகின்றன. அது என்ன வியாதி ? எவ்வாறு தடுப்பது ?

**பதில் :** இது ராணிகெட் என்னும் வியாதி. இதற்கு தடுப்பூசி போடவேண்டும்.

**கோவை மாவட்டம், பள்ளிப்பாளையம் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி :** கோழிகளுக்கேற்படும் நோய்களின் மூலம் கால் நடைகளுக்கும் மனிதர்களுக்கும் பரவக்கூடுமா ?

**பதில் :** சில வியாதிகள் உதாரணமாக ராணிகட் வியாதி "சிட்டோ கோஸிஸ்" என்ற கோழி பார்ஸ வாய்வு க்ஷயரோகம் முதலியன மனிதர்களை மட்டும் தாக்கக்கூடும். கால்நடைகளைத் தாக்குவதாக தெரியவில்லை.

**காரைக்கால் தொகுதி, களத்தெரு கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி :** நான் ஒற்றை மாட்டு செக்கால் எண்ணெய் வியாபாரம் செய்ய விரும்புகிறேன். இதற்கு அரசாங்கம் எவ்வளவு கடன் தரும் ? சொத்து எவ்வளவு இருக்க வேண்டும் ? சொத்து இல்லாது போனால் கடன் வசதி பெறமுடியாதா ? இதன் விபரங்களை தெரிவிக்க.

**பதில் :** வார்தா செக்கு என்றழைக்கப்படும் அபிவிருத்தி செய்யப்பட்ட செக்குகளை வாங்கிப் பயன்படுத்த 150 ரூபாய் கடனாகத் தரப்படுகிறது. இந்தத் தொகைக்கு வட்டியில்லை. கடன்தொகையையும், வாங்கும் தேதியில் இருந்து 5 வருஷத் தவணையில் செலுத்தலாம். இதைத் தவிர, எண்ணெய் ஆட்டி எடுக்க விதைகளைச் சேமித்து வைப்பதற்கான செலவுக்கும், கடன் தொகைகள் தரப்படுகின்றன. இந்தக் கடன்தொகைக்கு முதல் மூன்று வருஷங்களுக்கு வட்டியில்லை. அடுத் தடுத்த வருஷங்களுக்கு 3 சதவீதம் வட்டி வசூலிக்கப்படும். கடன் பெறுபவர்கள் ஜாமீன் காட்டுவதற்கு போதுமான சொத்து வசதியிருக்க வேண்டும். சொத்தில்லாதவர்களுக்கு நண்பர் ஜாமீன் பேரில் கடன் தரப்படும். இது விஷயமாக இன்னும் விவரங்கள் தெரிய அந்தந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியையோ அல்லது மாவட்ட கிராமத் தொழில் அதிகாரி அவர்களையோ அணுகவும்.

**கோவை மாவட்டம், பாண்டியம்பாளையம் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி :** மூங்கிலில் தீக்குச்சி செய்ய அரசாங்கம் அளிக்கும் உதவிகள், கடன் வசதிகள் யாவை ?

**பதில் :** தீக்குச்சி செய்யும் தொழிலானது 4 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 'எ' பிரிவு தீக்குச்சித் தொழிற்சாலை வருஷத்திற்கு 5 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் தயாரிப்பவை. 'பி' பிரிவு, முப்பதினாயிரத்துக்கு மேல் இருந்து 5 லட்சம் குரோஸ் தயாரிப்பவை. 'சி' பிரிவு 30 ஆயிரத்துக்கு கீழே தீப்பெட்டிகள் தயாரிப்பவை. 'டி' பிரிவு வருஷத்திற்கு சுமார் 9 ஆயிரம் குரோஸ் தீக்குச்சிகள் தயாரிப்பவை. அதாவது நாள் ஒன்றுக்கு 25 குரோஸ் தயாரிப்பவை. அரசாங்கம் 'டி' பிரிவு தொழிற்சாலைகளை ஊக்குவிக்க பெரிதும் விரும்புகிறது. இந்த 'டி' பிரிவு தொழிற்சாலை 40 தொழிலாளர்களுக்கு வேலை தருவதாக இருக்கும். இதற்கு நிர்வாக மூலதனமாக 3 ஆயிரத்து 200 ரூபாயும்; தளவாடச்செலவுக்கு 700 ரூபாயும், கட்டிடச் செலவுக்கென்று ஆயிரத்து ஐந்நூறு ரூபாயும் கடன் தரப்படுகிறது.

—(O)—

கிராம நலம் பகுதி-II
பஞ்சாயத்து அரசிதழ்
GRAMA NALAM PART II
PANCHAYAT GAZETTE

*பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது :*

## கிராம வேலைத் திட்டம்—மேல்மட்ட நீர்த்தொட்டியிலிருந்து நீர் விநியோக அமைப்புக்களுக்கு கலாய் குழாய்களையும் (G. I. Pipes) பம்பு செட்டுகளையும் வாங்குதல் குறித்த விளக்கம்

**[Village Works Programme—Overhead tanks and distribution system—Purchase of M. S. Rods, G. I. Pipes, and pump-sets—Instructions Issued—Clarified.]**

**Memorandum No. 64750, R. D. & L. A., dated 15—4—63.**

கிராம வேலைத் திட்டத்தின் கீழ் நடைபெறும் வேலைகளுக்குத் தேவையான கலாய் குழாய்கள் (G. I. Pipes) வாங்குவது குறித்து, கிராமநல தலநிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் தேதியிட்ட அறிக்கை 154934-ல் சம்பந்தப்பட்ட டிவிஷனல் பொறியாளர்கள், போட்டி விலைக் குறிப்புகளை (Competitive quotations) தருவித்து, அவைகளை வாங்குவதற்கான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும், அவ்வாறு டிவிஷனல் பொறியாளர் நிர்ணயித்த விலைக்கே, பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் வாங்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டார வளர்ச்சி அதிகாரி, மேல் மட்ட நீர்த் தொட்டிக்குத் தேவைப்படும் கலாய் குழாய்களை வாங்கி, அவ்வேலையை நிறைவேற்ற நியமிக்கப்பட்டவரிடம் ஒப்படைத்திருப்பதாக கணக்குத் தணிக்கையின்போது முறைக்கேடு கண்டுபிடிக்கப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே இது விஷயத்தில் மேற்படி அறிக்கையில் வெளியிடப்பட்ட விளக்கத்தை மேலும் தெளிவுபடுத்தவேண்டி அரசாங்கம் இந்த விளக்கத்தை வெளியிடுகிறது.

2. கிராம வேலை திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் வேலைகளுக்குத் தேவைப்படும் கலாய் குழாய்களை, அவ்வேலைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகியவற்றால் துறை வேலையாக எடுத்துச் செய்யும் போது மட்டிலுமே, அவை தம் நிதியிலிருந்து இவற்றை வாங்கலாம் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். பஞ்சாயத்துக்களால் நியமிக்கப்பட்டவர் அல்லது ஒப்பந்தக்காரர் (Contractors) வேலைகளை எடுத்துச் செய்யும்போது பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் தம் நிதியிலிருந்து கலாய் குழாய்களை வாங்கி வழங்குவது, பஞ்சாயத்துக்களால் வேலை செய்ய நியமிக்கப்பட்டவர்களுக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும் அனுமதிக்கப்படாத உதவியைச் செய்வதாகும். ஆகவே அவ்வாறு வாங்கி வழங்கக்கூடாது. அத்தகைய சந்தர்ப்பங்களில், டிவிஷனல் பொறியாளர் அங்கீகரித்த பொருள்களின் விவரமும், அவர் நிர்ணயித்துள்ள விலை வீதமும், கிராமநல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் தேதியிட்ட அறிக்கை எண் 154934-ல் (2)-வது இனமாகக் கூறப்பட்ட விளக்கத்தின்படி; வேலைகளைச் செய்ய நியமிக்கப்பட்டோருக்கு, அவரே அப்பொருட்களை வாங்கிக்கொள்வதற்காக, அனுப்பிவைக்க வேண்டும்.

*கிராமநல-தல நிர்வாகத் துறையின் 15—4—63 தேதியிட்ட அறிக்கை எண். 64750.*

---

## பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரின் பயணப்படி குறித்த விளக்கம்

**[Travelling Allowance—Travelling allowance to Chairman, Vice Chairman and Members of the Panchayat Union Councils—Clarification of]**

**Memorandum No. 24024 R. D. and L. A. dated 15—4—63.**

தமிழ்நாடு பயணப்படி விதிகளின் 27-வது விதியின்படி திருத்தி, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1677 உடன் இணைக்கப்பட்ட அறிவிப்பு 9-ல் வெளியிடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத் தலைவர் உறுப்பினர்கள் ஆகியோரின் பயணப்படி விதிகளின் விதி 2-ன் கீழ் வரும் குறிப்பு (1)-ன்படி, செலுத்தத்தக்க பயணப்படியின் வீதங்களும் மைல் தொலைவு வீதங்களும்—நாமக்கிரிப்பேட்டை பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அறிவிக்கப்படுகிறது, பொதுப் போக்குவரவு வசதி

யுள்ள இடங்களுக்கிடையில், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் செய்யும் பயணத்திற்கு—மைல் வீதத்தில் அரை வீதத்தைப் பெறத் தகுதியுடையவர்களாவார்கள்—கிராமநல—தல நிர்வாகத் துறையின் 1961-ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 110260-ஐக் காண்க.

[கிராமநல—தல நிர்வாகத் துறையின் 15—4—63 தேதியிட்ட அறிக்கை எண். 24024].

---

## கால்நடை மருந்தகங்களை நடத்த தல ஸ்தாபனங்களிடமிருந்து நன்கொடை பெறுவதை நிறுத்திவிடுதல்

## [Veterinary Dispensaries—Animal Husbandary Department—Recovery of contribution from Local Bodies towards the maintenance of Veterinary Dispensaries—waiving of—Orders issued].

### G. O. Ms. No. 1226, F. and A., dated 3—4—63.

உணவு-விவசாயத்துறையின் 1958-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 665-ல், கால்நடை மருந்தகங்களை நடத்துவதற்கு தல ஸ்தாபனங்கள் முதலானவற்றிடமிருந்து பெறவேண்டிய நன்கொடை, மருந்தகம் நடத்த ஆகும் வருடாந்தர சராசரி செலவில் ஒரு குறித்த சதவீதத் தொகையாக நிர்ணயித்து அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, ஓராண்டுக்கு கால்நடை மருந்தகம் நடத்த ஆகும் சராசரி ஆண்டுச் செலவு 7,200 ரூபாய் என்றும், அந்தச் சராசரி ஆண்டுச் செலவு மூன்றாண்டுகளுக்கொருமுறை திருத்தத்துக்கு உட்பட்டதென்றும் வரையறுக்கப்பட்டது. அந்த சராசரி ஆண்டுச் செலவு அடிப்படையில், சம்பந்தப்பட்ட தல ஸ்தாபனங்கள் செலுத்தவேண்டிய நன்கொடைத் தொகைகள், உணவு, விவசாயத் துறையின் 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2601-ன் இணைப்பில் வெளியிடப்பட்டது.

கால்நடை மருந்தகங்களை நடத்த ஆகும் சராசரி ஆண்டுச் செலவு 8,500 ரூபாயாக உயர்ந்துள்ளதென்று கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார். மேலும், அவர், மேற்படி அரசாங்க ஆணை 665-ன் பாரா 1, துணைப்பாரா (iii)-ல் கூறியுள்ளபடி மருந்தகப் பராமரிப்புக்கு உயர்ந்துள்ள சராசரி ஆண்டுச் செலவின் அடிப்படையில், தலஸ்தாபனங்கள் தரவேண்டிய நன்கொடைத் தொகை வீதங்களைத் திருத்தி நிர்ணயிக்கலாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரின் ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலனை செய்தது. கால்நடை மருந்தகச் செலவுகளுக்கு, நகர மன்றங்கள் உள்பட தல ஸ்தாபனங்கள் தரவேண்டிய நன்கொடைகளின் மொத்த நன்கொடை ஓராண்டுக்கு, உத்தேசமாக ஒரு லட்ச ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலான தல ஸ்தாபனங்கள், பல ஆண்டுகளுக்கு இந்த நன்கொடைகளை ஒழுங்காகச் செலுத்தாமல் தவறு செய்துள்ளன என்பதை அரசாங்கம் கவனித்துள்ளது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தமக்குள்ள குறைந்த வருவாய்களைக்கொண்டு, இந்த நன்கொடைகளைத் தருவது முடியாது. அவை, கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்ட நன்கொடை அளித்தலே போதுமானதாகும்.

3. ஆகவே, இந்த நிலையில், நகர மன்றங்கள் உட்பட தல ஸ்தாபனங்கள் அரசாங்கத்துக்கு அளிக்கவேண்டிய கால்நடை மருந்தகப் பராமரிப்பு வருடாந்தர நன்கொடையை, 1963–64 ஆண்டிலிருந்து நிறுத்திவிட அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மேலும், நகரமன்ற பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள கால்நடை மருந்தகங்கள் 1963–64 ஆண்டிலிருந்து, மாநில கால்நடை பராமரிப்புத்துறை அரசாங்க நிதிகளைக்கொண்டே நடத்தும் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

[உணவு-விவசாயத் துறையின் 3—4—63 தேதியிட்ட அரசாங்க ஆணை 1226].

---

## கால்நடை மருந்தகக் கட்டடங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் ஈட்டு மானியம் அளித்தல் குறித்த விளக்கம்

## [Animal Husbandary—Construction—Veterinary Dispensary—Matching grant by Panchayat Unions—Clarified.]

### Memorandum No. 70632., R. D. and L. A. dated 30—4—63.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல், கட்டுகட்டும் கொட்டகை முதலிய வசதிகளுடன் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட, பஞ்சாயத்து யூனியன் நன்கொடையான 8,750 ரூபாய் உட்பட மொத்தம் 26,250 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து



யூனியன் ஈட்டு மானியமாக அளிக்கும் 8,500 ரூபாயில் மருந்தகக் கட்டடம் கட்டுவதற்கான இடத்தின் மதிப்பு சேராதா என்று ஐயம் எழுப்பப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து யூனியன்கள், கால்நடை மருந்தகம் கட்ட அளிக்கும் ஈட்டுமானியமான 8,500 ரூபாயில் மருந்தகக் கட்டடம் எழுப்பப்படும் நிலத்தின் விலை சேராது என்பது எல்லா கலெக்டர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது. கால்நடை மருத்துவமனைக்கு சுமார் $1\frac{1}{4}$ அல்லது 2 எக்கர் மட்டும் போதுமானதென்றும், கூடியமட்டிலும் நகரத்தை ஒட்டிய இடமாக இருத்தல் நலமென்றும், அங்கு அல்லது அருகில் தண்ணீர் வசதி தேவை என்றும், பாதையோரம் இருத்தல் நலமென்றும் அவர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண்: 70632)

---

## பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் செயல்படுதல் குறித்த விவரங்கள் அனுப்புதல்

## [Panchayat Radio Maintenance Organisation—Working of radio sets installed in the Panchayats—Particulars—Called for.]

### Memorandum No. 202767, R. D. and L. A., dated 14—4—63.

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ல், 1962-ம் ஆண்டு முடிவுக்குள் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், வானொலிப் பெட்டிகள் அமைப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அதையொட்டி பஞ்சாயத்துக்களில் அமைக்கத்தக்க வானொலிப் பெட்டிகளின் வகைகள் மாதிரிகளை அங்கீகரித்தும் ஒலி அலை வாங்கிப் பெட்டி (Aerial Kit), புற ஒலிபெருக்கி (External Loud-Speaker) முதலியன வாங்க அனுமதித்தும் தொடர்ந்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மாநிலத்தில் அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், குறித்த காலத்தில் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டன. கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-ல் வெளியிடப்படுவதற்கு முன்னும், அதன் பின்னும் பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் செயல்படும் வகை குறித்து ஆய்வு நடத்த அரசாங்கம் விழைகிறது. தத்தம் யூனியன்களிலுள்ள பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டுள்ள வானொலிகள் செயல்படும் வகை குறித்த விவரங்களை இவ்வறிக்கையின் இணைப்பில் குறித்த நமூனவில், சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு அனுப்பும்படி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தத்தம் பகுதிகளிலிருந்து அவ்வாறு பெற்ற விவரங்களைத் தொகுத்து அத்தொகுப்பறிக்கைகளை 1963-ம் ஆண்டு மே மாதம் 25-ந் தேதிக்குள் அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கும்படி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இணைப்பு

1962–ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியில் பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வரும் வானொலிப் பெட்டிகள் குறித்த விவரம்:

| வரிசை எண். | பஞ்சாயத்து யூனியன் பெயர். | பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை. | வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்கள். | | வானொலிப் பெட்டிகள் சரியாக இயங்கி வரும் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| | | | ஒலிபெருக்கியுடன். | ஒலிபெருக்கியின்றி. | |

| வானொலிப் பெட்டிகள் பழுதடைந்துள்ள பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை. | | | பழுதைப்பற்றி வானொலி மேற்பார்வையாளருக்கு அறிவித்த தேதியும் பழுது பார்த்தலும் காலதாமதமாகக் காரணங்களும். | வானொலிப் பெட்டி பராமரிப்பில் ஏதாவது குறிப்பிடத்தக்க இடையூறு இருப்பின். |
|---|---|---|---|---|
| மூன்று மாதத்துக்குக் குறைவாக. | மூன்று மாதத்துக்கு மேலாக. | பழுது செய்ய முடியாதவை. | | |

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட அறிக்கை: 202767.)

## பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் மகாத்மா காந்தியின் உருவப்படங்களை வாங்குவதற்கான விளக்கம்

## Expenditure—Panchayats and Panchayat Union Councils—Purchase of Portraits of Mahatma Gandhi—Instructions—Issued.

### Memorandum No. 243879A., R.D. & L.A., dated 23—4—63.

தல நிர்வாகத் துறையின் 1953-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 17-லும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2635-லும், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், தம்முடைய பொது நிதியிலிருந்து 50 ரூபாய் அளவு வரை செலவு செய்து, மகாத்மா காந்தியின் உருவப் படங்களை வாங்கி, தம் இடங்களில் வைக்க அனுமதிக்கப் பட்டுள்ளன. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் வைக்கத் தகுந்த அளவில் [24"× 20" அளவில் நிழற்பட ஆப்செட்டில் (Photo offset)] அச்சிடப்பட்ட மகாத்மா காந்தியின் உருவப் படங்கள், சென்னை–(28), மைலாப்பூர், விஸ்வலிங்கச் செட்டித் தெருவில், 8–எண்ணுள்ள கட்டிடத்தில், 'யுனைடட் ஆர்ட்ஸ்' என்ற நிறுவனத்தில் விற்பனைக்குக் கிடைக்கும். ஒரு படத்தின் விலை 3 ரூபாய். படம் தேவைப்படும் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் சென்னையில் மேற்குறித்த இடத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

2. டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள், தத்தம் பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் தேவைப்படும் படங்களின் எண்ணிக்கையை அறிந்து மேற்குறித்த நிறுவனத்தி லிருந்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

3. இவ்வாணை விளக்கத்தை எல்லாப் பஞ்சாயத்துக் களும் அறியச் செய்யும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 243879A.)

---

## சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் செயல்பட்டுவரும் தொழில் நிலைய எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரச் சேகரிப்பு

## [Statistical Information relating to number of Industrial Units functioning in Community Development Blocks.]

### Memorandum No. 72599, R.D. & L.A., dated 1—5—63.

இந்திய அரசாங்க சமுதாய அபிவிருத்தி கூட்டுறவு அமைச்சகம் (சமுதாய அபிவிருத்தித்துறை) தம்முடைய 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ம் தேதிய கடிதத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும், 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியில், பஞ்சாயத்துக்களில் ஆண்டு வாரியாக அமைந்துள்ள தொழில் நிலையங்கள் பற்றிய புள்ளி விவர அறிக்கை தயாரித்தனுப்பும்படி கேட்டுள்ளது. இந்த அரசாங்க அறிக்கையுடன் புள்ளி விவரம் தயாரித்து அனுப்பவேண்டிய அறிக்கைகள் இணைத்து அனுப்பப் பட்டுள்ளன. அந்தப் புள்ளி விவர அறிக்கைகளைப் பூர்த்தி செய்யுமுன்னர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அதற்கென குறிக்கப்பட்ட விளக்கங்களைக் கவனத்துடன் படிக்கவேண்டும். இவற்றை அனுப்பத் தனி உறை பயன்படுத்தத் தேவையில்லை. கேட்கப் பட்டுள்ள விவரங்களை அந்த அறிக்கைகளில் பூர்த்தி செய்த பின்னர், அவற்றில் காட்டியபடி மடித்து, கிராம நல-தல நிர்வாகத்துறை, அரசாங்க இணைச் செயலாளருக்கு, 1963-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 72599.)

---

## பஞ்சாயத்து யூனியன்களுக்கு 1963-64-ம்ஆண்டுக்கான தல பாதை மானியம் அனுமதி

## [Grants—Local Roads Grants—Payment to Panchayat Unions for the year 1963-64 Sanctioned.]

### G.O. Ms. No. 985, R.D. & L.A., dated 3—5—63.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 131-வது பிரிவின்கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றங் களுக்கு, 1963–64-ம் ஆண்டுக்கான தல பாதை மானிய மாக மொத்தம் 1,07,50,209 ரூபாய் (ஒரு கோடியே ஏழு லட்சத்தி ஐம்பதாயிரத்தி இருநூற்று ஒன்பது ரூபாய் மட்டும்) வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.



2. இவ்வாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள மானியம், 1961-ல் எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தலைக்கு நாற்பது நயா பைசா வீதம் கணக்கிடப்பட்டுள்ளது. இம் மானியத் தொகை, பஞ்சாயத்து யூனியன்களுக்கு, இரண்டு அரையாண்டுத் தவணைகளில் அளிக்கப்படும்.

3. மானிய விநியோகத்தைக் கிளைக் கஜானாக்களில் நடத்த அதிகாரமளிக்கும்படி கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. யூனியன்களுக்கு மானியத் தொகை வழங்குகையில், இவ்வாணையின் இணைப்பில் அனுப்பப்பட்டுள்ள முதல் பாதித் தொகை, முதல் தவணையாக உடனடியாக வழங்க வும், அக்டோபர் மாதம் அளிக்கவேண்டிய இரண்டாவது அரையாண்டுத் தவணை மானியத் தொகையை, அரசாங்கம் விரைவில் வெளியிட இருக்கும் விளக்கங்களைப் பெற்ற பின்னரே வழங்கப்படும்.

5. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஒரு பல்வகைப் பட்டியலில் (Miscellaneous bill) தொகையைக் கேட்டு, பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதி யில் வரவு வைத்துச் சரி செய்தபின் இது விஷயத்தைக் கலெக்டருக்கு அறிவிக்கவேண்டும்.

6. இந்தச் செலவு, "50. பொது வேலைகள் உதவி மானியம்—G. உதவி மானியம்—C. கிராமத் தொடர்பு களுக்காக தல ஸ்தாபனங்களுக்கு மானியம்—பஞ்சாயத்து யூனியன்களுக்கு தல பாதை மானியம்" என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

குறிப்பு.—இவ்வாணையுடன், மாவட்ட வாரியாக, பஞ் சாயத்து யூனியன்கள், முதல் தவணையாக 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பெறத்தக்க மானியத் தொகை விவரம் இணைத்து, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 985.)

---

## "கிராம நலம்", "கிராம ராஜ்யம்" இதழ்களை ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும் வழங்குவது குறித்த விளக்கம்

## [Books and Publications—"Grama Nalam" and "Grama Rajyam"—Supply of Journals to Elementary Schools and Higher Elementary Schools—Instructions—Issued.]

### Memorandum No. 79098, R.D. & L.A., dated 3—5—63.

கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 317-ல் பஞ்சாயத்து யூனியன்கள் சந்தா கட்டுவதன்மூலம், எல்லா பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கும் "கிராம நலம்" இதழ் வழங்கப்பட வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. பிரதிகளைப் பெற்று, சம்பந்தப்பட்ட பள்ளி களுக்கு விநியோகிப்பதற்கு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பொறுப்பாளர்களாக்கப்பட்டுள்ளனர்.

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 254528-ல், எல்லாப் பஞ்சாயத்து யூனியன் மன்றங் களுக்கும் கீழ்க்கண்ட விளக்கங்கள் பிறப்பிக்கப் பட்டுள்ளன :—

(i) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், செய்தி நிலையத்துக்காக 'கிராம ராஜ்யம்' ஒரு பிரதியையும், அப்பகுதியில் வேலை செய்யும் ஒவ்வொரு கிராம சேவகர்க் கும், கிராம சேவிகைக்கும் ஒரு பிரதியையும் வாங்கலாம்.

(ii) அவை, ஒவ்வொரு சமூகக் கல்வி நிலையத்துக் காகவும் 'கிராம ராஜ்யம்' பிரதி ஒன்று வாங்கலாம்.

(iii) எத்தனை பள்ளிகளுக்கு முடியுமோ அத்தனை பள்ளிகளுக்கு 'கிராம ராஜ்யம்' வாங்கி வழங்க அவை (பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்) முயலவேண்டும்.

(iv) இவற்றை வாங்குவதற்காகும் செலவுகள், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அனுமதியுடன் (சமூக) கல்வி வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளைக்கொண்டு செய்யவேண்டும்.

3. மேலும், "கிராம நலம்", "கிராம ராஜ்யம்" இதழ்களை வாங்கி, அவை வழங்கப்படாத எல்லா ஆரம்பப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப் பள்ளிகள் (பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும், அரசாங்க உதவி பெறும் பள்ளி களும்), சமூகக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுக்கும் வழங்கும்படி பஞ்சாயத்து யூனியன்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

4. சமூகக் கல்வி வரவு செலவுத் திட்டத்தில் செய்யப் பட்டுள்ள நிதி வசதிகளைக்கொண்டு இதற்காகும் செலவுகளை ஈடு செய்யலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 79098.)

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

ஜூலை 1963

**ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் :**

*கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.*

**ஒவ்வொரு திங்கட்கிழமையும் :**

*விஞ்ஞானகூடம், விலைவாசிகளின் வாராந்திர விமரிசனம்.*

**ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் :**

*திரைப்பட இசை, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்*

**ஒவ்வொரு புதன்கிழமையும் :**

*சரித்திரக் கதைகள்*

**ஒவ்வொரு வியாழக்கிழமையும் :**

*நமது திட்டம், திருக்குறள் விளக்கம், செய்தி விமர்சனம்.*

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :**

*திரைப்பட இசை, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.*

**ஒவ்வொரு சனிக்கிழமையும் :**

*நம் மாதர் மன்ற நிகழ்ச்சிகள்.*

## இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்

*திங்கட்கிழமை (1—7—63)*

*வேட்டைப் புலி வீரப்பன் (என். வாசுதேவ் எழுதியது)*

*புதன்கிழமை (3—7—63)*

*கோடங்கிகுப்பன்–நாடகம்.*

*சனிக்கிழமை (6—7—63)*

*கோழியின் சிறகு உதிரும் நோய்–உரையாடல்.*

*திங்கட்கிழமை (8—7—63)*

*போனமச்சான்–நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது)*

*புதன்கிழமை (10—7—63)*

*பலே பாலவன்–நாடகம்.*

*சனிக்கிழமை (13—7—63)*

*கால் நடை அடைப்பான் நோய் பற்றிய உரையாடல்.*

*ஞாயிற்றுக்கிழமை (14—7—63)*

*மிளகு சாகுபடி–உரையாடல், நம் நாட்டு விவசாயி : கடிதம்.*

*திங்கட்கிழமை (15—7—63)*

*மாப்பிள்ளை உத்தியோகம்—நாடகம் (என். ராகவன் எழுதியது)*

*புதன்கிழமை (17—7—63)*

*வரும்படி வரதசாமி—நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது)*

*சனிக்கிழமை (20—7—63)*

*ஆப்பக்கார அங்காயி.*

*ஞாயிற்றுக்கிழமை (21—7—63)*

*கிராமச் சாவடியில் வழக்கு விசாரணை.*

*திங்கட்கிழமை (22—7—63)*

*அப்பா வரட்டும் : நாடகம் (எஸ். எம். ஏ. காதர் எழுதியது)*

*புதன்கிழமை (24—7—63)*

*திருவிழாக்கோடை : சித்திரம் (என். ராகவன் எழுதியது)*

*ஞாயிற்றுக்கிழமை (28—7—63)*

*லாவணி.*

*திங்கட்கிழமை (29—7—63)*

*வளரும் தமிழகம்.*

*புதன்கிழமை (31—7—63)*

*பாட்டுக்கச்சேரி : சித்திரம்.*

## கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் மாலை 6—45 முதல் 7—15 வரையில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அந்நிகழ்ச்சிகளில் "கேள்வியும்—பதிலும்" பகுதி முதலிடம் பெறுகிறது.

ஏனைய பகுதி வருமாறு :—

*செவ்வாய்க்கிழமை (2—7 63)*

*குறுவைப் பயிர் பற்றிய குறிப்புகள்.*

*வெள்ளிக்கிழமை (5—7—63)*

*நல்ல பழக்கம்—சேமிப்பு.*

*செவ்வாய்க்கிழமை (9—7—63)*

*கோழிப் பண்ணை வைக்க அரசாங்க உதவி.*

*வெள்ளிக்கிழமை (12—7—63)*

*சிக்கனமும் தேசிய நெருக்கடியும்.*

*செவ்வாய்க்கிழமை (16—7—63)*

*கடலை சாகுபடி உரையாடல்.*

*வெள்ளிக்கிழமை (19—7—63)*

*கிராமத் தொண்டர் நடைமுறை.*

*செவ்வாய்க்கிழமை (23—7—63)*

*உணவும் வளர்ச்சியும்.*

*வெள்ளிக்கிழமை (26—7—63)*

*அவசர நிலைமையும் நமது கடமையும் : தேசிய சேமிப்பு.*

*செவ்வாய்க்கிழமை (30—7—63)*

*கிராமப் பால்பண்ணை.*

**வெளியிடுபவர் :**
**திரு. டி. என். லட்சுமி நாராயணன், ஐ.ஏ.எஸ்.**

**ஆசிரியர் :**
**திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.**

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



1. *சென்னையை அடுத்த பூவிருந்தவல்லியில் 28—4—63-ல் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம்* (Integrated Child Welfare Scheme) *துவக்கி வைக்கப்பட்டது. மாநில நிதியமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் விழாவுக்குத் தலைமை வகித்தார். மத்திய அரசாங்க துணைக் கல்வி அமைச்சர் டாக்டர் (திருமதி) சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் திட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகிறார்* [*விவரம்* 27-ம் பக்கம் பார்க்க].



2

2—3. *மத்திய அரசாங்க சமூக நல வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. எஸ். கே. டே., திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனுக்கு வருகை தந்தார். கிராமத் தொண்டர் படை அணி வகுப்பை அவர் பார்வையிட்டு, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.*



3



## கிராமங்களுக்கு உரிய அந்தஸ்து

—(o)—

"இந்தியா எவ்வளவு புராதனமானதோ, அவ்வளவு புராதனமானவை இங்குள்ள கிராமங்கள். ஆனால், நகரங்களோ வெளி நாட்டார் ஆதிக்கத்தால் உருவானவை. இன்று நகரங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. கிராமங்களைச் சுரண்டுகின்றன. இதனால் கிராமங்கள் மேலும் மேலும் வறுமை அடைந்து அழிந்துவிடும் கட்டத்திலிருக்கின்றன. ஆகையால், நகரங்களின் ஆதிக்கம் நீங்கவேண்டும். அதற்குப் பின்பு, கிராமங்களுக்கு நகரங்கள் துணை புரிபவையாக இருக்கவேண்டும். என்னுடைய 'கதர் மனோபாவம்' இதையே கூறுகிறது. கிராமங்கள் சுரண்டப்படுவதே கட்டுப்பாடாக நடைபெறும் இம்சைதான். அஹிம்சையின் அடிப்படையில் சுயராஜ்யம் நிர்ணயிக்கப்பட வேண்டுமானால், கிராமங்களுக்கு உரிய ஸ்தானத்தை நாம் அளிக்க வேண்டும்."

—மகாத்மாவின் மணிமொழி.


# கிராம நலம்


"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்


மாடி. 8 | ஆகஸ்டு, 1963 | படி 11



GAZETTEER UNIT
29 AUG 1963
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS


கிராமத் தொண்டர் படை

## மூன்று ஆலோசனைகள்

(கிராம அபிவிருத்திக் கமிஷனர்)

——(o)——

கிராமத் தொண்டர் படை ஆரம்பிக்கப்பெற்று ஆறுமாத காலம் ஆகிறது. இந்த ஆறு மாத காலத்தில், தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஜில்லாக்களிலும் கிராமத் தொண்டர் படை நல்ல விதமாகவே ஆரம்பமாகியிருக்கிறது என்று சொல்லலாம். ராஜ்யத்தில் உள்ள 375 வட்டாரங்களில், சுமார் 50 வட்டாரங்களுக்கு நான் நேரில் சென்று கிராமத் தொண்டர் படை வேலையைப் பார்வையிட்டபோது, நேரில் பார்ப்பவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தரக்கூடிய வண்ணம் நல்ல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று எனக்குத் தோன்றியது. தொண்டர் படையில் சேர்ந்த பெரும்பாலோர், காக்கியில் அரைக்கால் சட்டையும், வெள்ளை அரைக்கைச் சட்டையும், பாட்ஜும் அணிந்து, நேராக, நிமிர்ந்து நடை போட்டுச் செல்வது, காண்போருக்கு ஆனந்தமான காட்சியாக இருக்கிறது. இத்தொண்டர் படையினர் தம் முயற்சியால், சில ஊர்களில், நல்ல ரோடுகள் அமைத்திருக்கிறார்கள். சில இடங்களில், நூற்றுக் கணக்கான மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நட்ட மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு, அந்தந்த இடங்களில், கேணிகளும் தோண்டியிருக்கிறார்கள். ஊரைச் சுத்தமாகவும், சுகாதார வசதியுடனும், வைத்துக்கொள்வதற்கான வேலைகளையும் சில இடங்களில், செய்து முடித்து இருக்கிறார்கள். சுருங்கக் கூறின், தொண்டர்கள் அந்தந்த ஊர்களில் நல்ல வேலைகள் செய்வதற்கான ஊக்கமும், உற்சாகமும் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லலாம். சென்ற மூன்று மாத காலத்திற்குள், இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் இருக்கும் தலைமைத் தொண்டர்களும் தேகப் பயிற்சி, கொடி வணக்கம், அணியணியாகச் சேர்ந்து செல்கின்ற பழக்கத்திற்கான பயிற்சி முதலியன கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பயிற்சி ஆங்காங்குள்ள உயர்நிலைப்பள்ளி தேகப் பயிற்சி ஆசிரியர்களாலும், ஏ.சி.சி., என்.சி.சி. அதிகாரிகளுடைய உதவியாலும் நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது.

கிராமத் தொண்டர்கள், இனிமேல் செய்யவேண்டியதற்கான வேலைத் திட்டத்தை, அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. சென்ற ஒரு மாத காலமாக, நான் சில ஜில்லாக்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள கிராம சேவகர்கள், விஸ்தரிப்பு அதிகாரிகள், கமிஷனர்கள் இவர்களைக் கண்டு, பேசி வருகிறேன். அது சமயம், ஊழியர்களுக்கு நான் சொல்லிவரும் என்னுடைய ஆலோசனைகளை இன்று, எல்லோருக்கும் சொல்ல விரும்புகிறேன். அதாவது :—

### பத்து குடும்பங்களுக்கு ஒரு தொண்டர்

ஒரு கிராமத்திலுள்ள பத்து குடும்பங்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு தொண்டராவது இருந்து வர வேண்டும். அந்த ஒரு தொண்டருக்கு, நான் பிறந்த 'இந்த ஊரில் இந்தப் பத்து குடும்பங்களின்

---

**அட்டைப் படம் :**

*தமிழ்நாட்டின் தலைநகருக்கு, குடிதண்ணீர் வழங்க, "பூண்டி நீர்த்தேக்கத் திட்டம்" உருவாக்கிய செயல்வீரர்—முன்னாள் மேயர்-நாவலர்-சத்தியமூர்த்தியின் உருவச்சிலையை, பாரதப் பிரதமர் நேருஜி, 14—6—63-ல் சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் முன்பு திறந்துவைத்தார்.*

*அச்சமயம் நேருஜி காலஞ்சென்ற அந்தத் தியாகியின் குடும்பத்தினர் வீட்டிற்குச் சென்று, அவர்களின் நலம் விசாரிப்பதையும், முதல் அமைச்சர் திரு காமராஜ், சென்னை மேயர் திரு ஜி. குசேலர், கமிஷனர் திரு குலாம் முகமது பாட்சா முதலியோர், பிரதமரை வரவேற்பதையும் காணலாம்.*


*(தீரர் சத்தியமூர்த்தி அவர்களைப்பற்றிய கட்டுரையை 6-ம் பக்கம் பார்க்கலாம்.)*

தொண்டனுக இருந்து நான் வேலே செய்யப்போகிறேன்' என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். கிராமத்திற்கு சேவை செய்வதற்குத் தொண்டனுகப் பதிவு செய்துகொண்டபோதிலும், விவசாயம், அறிவு விளக்கம் முதலிய வேலேகளில், ஒவ்வொரு தொண்டரும் தனக்கு என்று ஒரு பகுதியைக் கிராமத்தில் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குத் தன்னுடைய தொண்டினேத் திறம்படச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

இப்படிப் பத்து குடும்பங்களுக்கு ஒரு தொண்டர் வீதம் ஏற்படுவார்களானுல், ஆயிரம் ஜனத்தொகை உள்ளதும், சுமார் இருநூறு குடும்பங்களேயுடையதுமான ஒரு சிறிய கிராமத்தில், குறைந்தபட்சம், இருபது தொண்டர்கள் இருந்துவருவார்கள். மனப்பூர்வமாகச் சேவை செய்வதற்கு அர்ப்பணித்துக் கொண்ட இந்த இருபது பேர்களுடன், அந்த ஊர்ப் பஞ்சாயத்துத் தலேவரும், அங்கத்தினர்களும் சேர்ந்துகொள்வார்களானுல், ஒவ்வொரு சிறிய கிராமத்திலும், 20 முதல் 30 பேர்கள் அடங்கிய, ஒரு தொண்டர் படைக் குழு, இருந்துவரும். எனவே, ஒவ்வொரு ஊரிலும், பத்து குடும்பங்களுக்கு ஒரு தொண்டர் இருக்கிருர் என்ற நிலே, தமிழ் நாட்டுக் கிராமங்களில் ஏற்படுவதற்கு, எல்லோரும் முயற்சிக்க வேண்டும். இம்மாதிரி, ஊருக்குத் தொண்டு செய்வதற்கு மனமுள்ள இந்த 20, 30 பேர்களும், செய்ய வேண்டியது என்ன ?

## வாரம் ஒரு முறை கூடிப் பேசுங்கள்

என்னுடைய அபிப்பிராயத்தில், " ஊர் உயர, உழைக்க வேண்டும் " என்ற எண்ணமுள்ள இந்தக் கிராமத் தொண்டர்கள், வாரம் ஒரு முறை, ஊரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திலோ, சமூகக் கல்வி நிலேயத்திலோ, பஜனே மடத்திலோ, அல்லது வேறு வசதியான ஒரு இடத்திலோ, கூடவேண்டும். இம்மாதிரி எல்லோரும் ஒன்று சேர்ந்து கூடிப் பேசும் நாள் ஒவ்வோர் வாரத்திலும் வெள்ளிக் கிழமையா, சனிக்கிழமையா அல்லது ஞாயிற்றுக்கிழமையா எது என்று நிச்சயித்துக்கொள்ள வேண்டும். அந்தக் கிழமையில், எத்தனே மணிக்குக் கூடுவது என்பதையும், தொண்டர்கள் தீர்மானித்துக்கொள்வது நல்லது. உதாரணமாக, "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், மாலே 7 மணிக்கு எங்கள் ஊர்த் தொண்டர் படைக் கூட்டம், இந்த இடத்தில் நடக்கும்," என்று எல்லாத் தொண்டர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

கிறிஸ்துவ குடும்பங்களில் உள்ளவர்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை வந்ததும், அன்று குறித்த நேரத்தில் சர்ச்சுக்குச் செல்ல வேண்டுமென்ற நினேவு ஏற்படுவதுபோல, கிராமத் தொண்டர்களுக்கும் ஒவ்வொரு வாரத்திலும் இந்தக் கிழமையில் இத்தனே மணிக்கு தொண்டர் படைக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்ற நினேவுப் பழக்கம் ஏற்படுமாயின், அது ஊர் வேலேகள் நல்ல முறையில் ஆரம்பமாவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்த வாராந்திரக் கூட்டத்திற்குக் கிராமத் தொண்டர்களுடன், அந்த ஊர்ப் பஞ்சாயத்து அங்கத்தினர்களும், பஞ்சாயத்துத் தலேவரும், அவசியம் வந்து கலந்துகொள்ள வேண்டுமென்ற நியதியும், இருந்துவர வேண்டும்.

பஞ்சாயத்து வேறு, தொண்டர் படை வேறு, என்ற பிரிவு ஏற்படும்படி விட்டுவிடக் கூடாது. குறிப்பிட்ட இடத்திலே, குறிப்பிட்ட நேரத்திலே, தொண்டர்கள் வந்து சேர்ந்தவுடன், மன அமைதியைத் தர வல்லதும், தெய்வ பக்தியை ஊட்டுவதுமான சில பிரார்த்தனேப் பாடல்கள், அல்லது பஜனேப் பாடல்கள் பாடி மௌனமாகச் சிறிது நேரம் பிரார்த்தனே செய்து, கிராமத்தின் அபிவிருத்திக்கான காரியங்களேப் பற்றிப் பேச ஆரம்பிப்பது நல்லது. ஒவ்வொரு ஊரிலும் செய்யப்பட வேண்டிய வேலேகள் எத்தனேயோ இருக்கின்றன.

உதாரணமாக, குடி தண்ணீர் வசதிக்கான நீர்த்தேக்கம் கட்டுவது, ஊரைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் செய்வது, விவசாய அபிவிருத்திக்கான விஷயங்கள், கால்நடைகள், கோழிகள் முதலியன வளர்ப்பது, கிராமப் பள்ளிக்கூடம் இப்போது இருப்பதைவிட இன்னும் சிறந்த முறையில் வேலே செய்து வருவதற்கான விஷயங்களேப்பற்றி யோசித்து, குழந்தைகளுக்கு மத்தியான உணவு இன்னும் நல்ல முறையில் செய்து தருவது, விவசாய வேலே இல்லாத சமயங்களில் வேறு என்ன வேலேகளேக் கிராமங்களில் ஏற்படுத்துவது, என்பது பற்றி ஆலோசிப்பது, விவசாயமும், தொழிலும், கூட்டுறவு முறையில் நடைபெறுவதற்கான விஷயங்களேப்பற்றி சிந்திப்பது, ஏரி குளங்களேச் செப்பனிடுவது, ஊரெல்லாம் ஒரு குடும்பம் போல இருந்து இயங்குவதற்காகச் செய்ய வேண்டியது என்ன என்பதைப்பற்றி கலந்து ஆலோசிப்பது, இத்தகைய எத்தனேயோ விஷயங்களேப் பற்றி பேசுவதற்கு முடியும். வேண்டியதெல்லாம், ஊரிலுள்ள தொண்டர்களும், பஞ்சாயத்து அங்கத்தினர்களும், எந்த ஓர் இடத்திலாவது ஊருக்கு நல்லது செய்யும் வேலேகளேப்பற்றி பேச வேண்டும் என்ற



எண்ணமே, முதலில் எல்லோருடைய உள்ளங்களில் ஏற்பட வேண்டும். ஊரில் ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமென்ருல் இந்த நல்ல காரியம் நடைபெற வேண்டுமென்ற, அந்த நல்ல எண்ணம் ஊரார் சிலர் மனதிலாவது ஏற்பட்டாலன்றி, காரியங்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கில்லே. எனவே, இந்த வாராந்தரக் கூட்டம், இடைவிடாமல், ஒழுங்கான முறையில், வாரந்தோறும், நடைபெறுவதற்காக, என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றை நன்கு சிந்தனே செய்து, வாராந்தரக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளில், நாம் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய யோசனே.

## மாதம் ஒரு முறை ஊர்ப் பொதுக்கூட்டம்

கிராமத்தில், வாரம் ஒரு முறை, தொண்டர்களுடைய கூட்டம் நடப்பதுபோல, இந்தக் கிராமத் தொண்டர்களின் முயற்சியால், மாதம் ஒரு முறை, பௌர்ணமி அன்ருே, அமாவாசை அன்ருே, கார்த்திகை, பூசம் அல்லது கடைசி வெள்ளிக்கிழமை முதலிய ஏதாவது ஒரு தினத்தில், குடும்பத்திற்கு ஒரு முக்கியஸ்தர் விதம், ஊரிலுள்ள எல்லா குடும்பங்களிலிருந்தும், மாதாந்தர ஊர்க்கூட்டத்தில், கலந்து கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வாறு கூடி, சென்ற வாரங்களில் கிராமத் தொண்டர்கள் பேசிய விஷயங்களேப்பற்றிப் பரிசிலித்து, ஊரை அபிவிருத்தி செய்தவதற்கான வேலேத் திட்டங்கள் என்னென்ன, இந்த வேலேத் திட்டத்தில் எந்த அம்சத்தை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும், அதற்கு என்ன செலவாகும், கிராமத்தினுடைய பொருள் பலமும், ஆள் பலமும் எவ்வளவு, கிராமத்தாருடைய சக்திக்கு மிஞ்சிய வேலேயாக இருந்தால், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் அல்லது ராஜ்ய சர்க்கார் இவர்களுடைய உதவியைப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வது, என்ற விஷயங்கள்பற்றியெல்லாம் பேசலாம். இந்த ஊர்ப் பொதுக்கூட்டம், அந்த பொதுக்கூட்டத்திலே நடைபெறுகிற விவாதங்கள், எல்லோரும் ஒன்றுபட்டு தீர்மானிக்கிற விஷயங்கள், ஊர் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

ஊர்ப் பொதுக்கூட்டம் கூடவேண்டிய தேதியும், இடமும், [நேரமும், முன்னதாகவே, ஊரிலுள்ள எல்லா குடும்பத்தினருக்கும், கிராமத் தொண்டர்கள் மூலம், அறிவிக்கப்பட வேண்டும். அவசியமானுல், ஒவ்வொரு தொண்டரும், தன்னுடைய பகுதியிலுள்ள பத்து குடும்பத்தார்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்லி அவர்களேக் கூட்டத்திற்கு அழைத்து வருவதை, ஊருக்குச் செய்யும் திருப்பணியின் முதல்படியாகக் கருத வேண்டும். ஜனநாயக ஆட்சி முறை நல்லவிதமான முறையில் நடைபெறுவதற்கு, இவ்வாறு மாதமொரு முறை ஊரிலுள்ள முக்கியஸ்தர்களேயும், கிராமத் தொண்டர்களின் உதவியால், கூட்டிப் பேசுவதும், விவாதிப்பதும், உதவியாக இருக்கும். ஊர் கூடி, பேசி, தீர்மானிக்கிற விஷயங்களே, அந்த ஊரின் பஞ்சாயத்து மூலமாகவோ, அல்லது பஞ்சாயத்து யூனியன் வாயிலாகவோ செய்து முடிப்பதற்கு, இம்மாதிரி ஊர்ப் பொதுக் கூட்டங்கள் உதவியாக இருக்கும்.

எனவே, என்னுடைய இந்த மூன்று யோசனேகளே, அதாவது, ஒவ்வொரு ஊரிலும் குறைந்த பட்சம் பத்து குடும்பங்களுக்கு ஒரு தொண்டர் விதம், ஊருக்குத் தொண்டு செய்ய நல்லமனமுள்ள இளேஞர்கள், முன் வர வேண்டும் என்பது ; இரண்டாவது, இங்ஙனம் தொண்டு செய்வதற்கு முன்வரும் கிராமத் தொண்டர்கள், வாரம் ஒரு முறை கூடி, ஊருக்கு நல்ல விஷயங்களேப்பற்றி உரையாட வேண்டும் என்பது ; மூன்ருவதாக, ஊரிலுள்ள கிராமத் தொண்டர்களின் முயற்சியால் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரும், மாதம் ஒரு நாள், ஊர்ப் பொதுவிடத்தில் பொதுக் கூட்டமாகக் கூடி, ஊருக்கான அபிவிருத்தி வேலேகளேப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்பது.

இந்த மூன்று யோசனேகளேயும் நடைமுறையில் நிறைவேற்றி வைக்க, பஞ்சாயத்து யூனியனேச் சேர்ந்த எல்லா அலுவலாளர்களும் தங்களால் முடிந்த அத்தனேயும் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

" அன்பர் பணி செய்ய என்னே ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலே தானே வந்தெய்தும் " என்ற நினேவு, நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும், நிலேயாக இடம் பெற, ஆண்டவன் அருள் செய்வானுக.

*(ஆசிரியர் குறிப்பு : கிராம அபிவிருத்திக் கமிஷனர் 1963-ம் ஞூ ஜூலே 19-ம் தேதி அகில இந்திய ரேடியோவில் கிராமிய நிகழ்ச்சியில் பேசிய சொற்பொழிவினே அப்படியே பிரசுரித்துள்ளோம். சொற்பொழிவில் கண்டுள்ள கருத்துக்களே கிராம ரேடியோ மன்ற அங்கத்தினர்கள் மட்டுமின்றி, கிராமப் பஞ்சாயத்து அலுவலர்கள் அனேவரும் விரிவாக ஆலோசித்து, ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிருேம்.)*




## பொம்மிடி பஞ்சாயத்து—பாபிரெட்டிபட்டி யூனியன், சேலம் மாவட்டம்

பொம்மிடி பஞ்சாயத்து 1912-ம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டது. இப்பஞ்சாயத்து துரிஞ்சிப்பட்டி, சாலை வலசு, கொட்டாயூர், நடூர், சந்தையூர் என்ற ஐந்து கிராமங்களைக் கொண்டது. பொம்மிடி என்ற ரெவின்யு கிராமத்தில் இக் கிராமங்கள் அமைந்துள்ளதால், இப் பஞ்சாயத்துக்கு பொம்மிடி என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மக்கள் தொகை 4,165. பதினைந்து ஆண் உறுப்பினர்களும் ஒரு பெண் உறுப்பினரும் ஆக மொத்தம் பதினாறு உறுப்பினர்கள் கொண்டது இப்பஞ்சாயத்து. தற்சமயம் மூன்று அங்கத்தினர்கள் ராஜினாமா செய்து விட்டபடியால் மூன்று இடங்கள் காலியாகவே உள்ளன.

இப் பஞ்சாயத்தின் தலைவர் 35 வயதுள்ள ஆர்வமுள்ள ஓர் இளைஞர். பொதுத் தொண்டு செய்வதே தனது தலையாய கடமையாக கொண்டுள்ளவர்.

**உணவு உற்பத்தி.**—இப் பஞ்சாயத்தில் மூன்று வருட காலமாக உணவு உற்பத்தித் திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகின்றனர். அதன்படி, சென்ற ஆண்டில் கிராம சகாயத் திட்டத்தின் கீழ் பொறுக்கு விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. எரு உற்பத்தியை அதிகரிக்க சுமார் 100 எருக்குழிகளுக்கு மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. பயிர்கள் யாவற்றுக்கும் எல்லா விவசாயிகளும் தவறாது காலத்தில் மருந்துகள் தெளித்து விடுகின்றனர். மருந்து தெளிப்பதற்கு பயிற்சி பெற்றவர்கள் மூன்று பேருக்கு மருந்து தெளிக்கும் கருவிகள் மானியத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றும், கூட்டுறவுச் சங்கத்திலும் பஞ்சாயத்திலும் கருவிகள் வாங்கி வைத்து, விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு அளித்து வருகின்றனர்.

**கல்வி.**—இப் பஞ்சாயத்தில் ஓர் உயர் நிலைப்பள்ளியும் இரண்டு ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன. அவைகளில், மொத்தம் 700 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இரண்டு கட்டிடங்களை ஊர் பொது மக்களே சொந்தமாகவும் நான்கு கட்டிடங்களை அரசாங்க மான்யத்துடனும் கட்டி முடித்துள்ளனர். மாணவர்களுக்கு போதுமான இடவசதியின்மையால், ஆரம்பப்பள்ளிக்கென்று ஒரு கட்டிடம் இலவசமாக கட்டிக்கொடுக்கவும் ஊர் பொது மக்கள் திட்டம் வகுத்துள்ளனர். மாணவர்கள் விளையாடுவதற்கென்று சுமார் நான்கு ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளது. பள்ளி சீரமைப்புக்காக ஊர்ப் பொது மக்கள் ஆரம்ப பள்ளிக்கு சுமார் 600 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை நன்கொடையாக கொடுத்துள்ளனர். சமூகக் கல்வி கூட்டம் அடிக்கடி, நடத்தப்பட்டு பள்ளியின் வளர்ச்சிக்கு திட்டமிடப்படுகிறது.

இப் பஞ்சாயத்தில் இரண்டு சமூகக் கல்வி நிலையங்களும் பஞ்சாயத்து வாசகசாலை ஒன்றும், மாவட்ட நூலக பகுதிநேர நூல் நிலையம் ஒன்றும் உள்ளது.

**சாலை வசதிகள்.**—இப் பஞ்சாயத்தில் சென்ற ஆண்டில் சுமார் 2,500 ரூபாய் செலவில் நான்கு பர்லாங் நீளமுள்ள சாலை போடப்பட்டது. இந்த ஆண்டில் 8,500 ரூபாய் செலவில் ஆறு பர்லாங் நீளமுள்ள சாலை போடவும் திட்டமிடப்பட்டு வேலை நடந்து வருகிறது.

**குடிதண்ணீர்.**—இப்பஞ்சாயத்தில், போதுமான குடி தண்ணீர் கிணறுகள் இல்லாமல் இருந்தது. சென்ற ஆண்டில் மூன்று குடிநீர்க் கிணறுகளும் இந்த ஆண்டு மூன்று கிணறுகளும் வெட்டப்படுகின்றன. இதனால் எல்லாக் கிராமங்களிலும் குடிநீர்க் கிணறுகள் வெட்டியாகி குடிநீர் பிரச்னை தீர்க்கப்பட்டது. மற்றும் மூன்று பழைய கிணறுகளை வெட்டியும் சீர்திருத்தியும் அமைப்பதற்கான வேலைகள் நடந்துவருகின்றன.

**கூட்டுறவு.**—இப்பஞ்சாயத்து விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்க ஒரு பல நோக்கு கூட்டுறவு சங்கம் உள்ளது. வருடம் ஒன்றுக்கு இதன் மூலம் சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாய் கடன்கொடுத்து வசூல் செய்யப்படுகிறது. இங்கு குறுகிய காலக்கடன்களாகவும் டம்செட் வைக்க மூன்றாண்டு கடன்களும் விவசாயப் பயிர்களின் மதிப்பின் மீது கடன்களும் கொடுக்கப்படுகிறது. ஆர்வமும், அறிவும், பொதுத் தொண்டில் ஆர்வமுள்ள இதன் தலைவர் கூட்டுறவுச் சங்கத்தை மிகவும் திறம்பட நடத்தி வருகின்றார். இச் சங்கம் 1921-ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இச் சங்கத்துக்கு விளை பொருள்களை வைப்பதற்கு தானியக் கிடங்கு ஒன்று கட்டுவதற்கான திட்டமும் உள்ளது. விவசாயிகளுக்கு மருந்து தெளிக்கும் கருவிகள் குறைந்த வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன.

**புறம் போக்கு.**—இப்பஞ்சாயத்துக்கு சுமார் 250 ஏக்கர் அளவுள்ள புறம்போக்கு நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலான நிலங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. இருப்பினும், பஞ்சாயத்து சார்பில் 10 ஏக்கர் நிலத்தில் மாங்கன்றுகள்; தென்னங் கன்றுகள் நடப்பட்டு, சிறந்த முறையில் பராமரித்து வருகின்றனர். இந்த ஆண்டில் புறம்போக்கு நிலத்தில் இலவன் கன்றுகள் வைக்கவும் விறகுக்காக சீமைக் கருவேலன் செடிகள் வைக்கவும், பசுந்தாள் உர அபிவிருத்திக்கு மூன்று ஏக்கர் அளவில் சக்கைப் பூண்டு விதை விதைக்கவும் நடவடிக்கை எடுத்து வேலைகள் நடந்து வருகின்றன.

**தாய் சேய்நல விடுதி.**—இங்கு யூனியனால் நடத்தப்படும் தாய் சேய்நல விடுதி ஒன்றும் உள்ளது. தற்சமயம் வாடகை கட்டிடத்தில் உள்ளது. சொந்தக் கட்டிடம் கட்ட, நிலம் வாங்கப்பட்டுள்ளது. மற்றும், இப் பஞ்சாயத்திலிருந்து இதுவரை 22 ஆண்களும் ஒரு பெண்ணும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ளனர்.

**விசேஷத் திட்டங்கள்.**—இப்பஞ்சாயத்துக்கு "மனித சக்தியை பயன்படுத்தி" பொது வேலைகள் செய்ய சர்க்காரிலிருந்து மானியமாக சுமார் 6,000 ரூபாய் யூனியன் மூலமாக வழங்கப்படவிருக்கிறது. அத்திட்டத்தின் கீழ், பஞ்சாயத்து பழத் தோட்டத்தில் ஒரு கிணறு வெட்டப்படுகிறது. தோட்டத்தை சுற்றி உயர் வேலி போடவும், ஒரு மைல் நீளத்தில் ஒரு சாலை அமைக்கவும், பாசன வசதிக்கு ஒரு ஏரிக்கு குடி மராமத்து வேலை செய்யவும், திட்டமிடப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

**வானொலி.**—இப்பஞ்சாயத்தின் கிளைக் கிராமமான கொட்டியூரில் வானொலி வைக்கப்பட்டு கிராம வானொலி மன்றம் பணி செய்து வருகிறது.

தெ. சுந்தரமூர்த்தி,
கிராம சேவக்,
பொ. துரிஞ்சிப்பட்டி



## மாங்குளம் பஞ்சாயத்து—(மானாமதுரை யூனியன்)

### மாங்குளம் பஞ்சாயத்தில் முந்திரி சாகுபடி

கிராமப் பஞ்சாயத்தான மாங்குளம் பஞ்சாயத்து மிகவும் பின்தங்கிய மாவட்டமென பெயர் வாங்கிய கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மானாமதுரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்ததாகும். 1961-ம் வருஷம் ஜனகணிதப்படி இதன் ஜனத்தொகை 500. இப்பஞ்சாயத்தில் 6 குக்கிராமங்கள் உண்டு. தமிழ்நாட்டிலே மிகவும் பிற்போக்கான கிழக்கு இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதிலிருந்து, பொருளாதாரத்திலும் விவசாயத்திலும் மிகவும் பிற்பட்டவர்கள் நாங்கள் என்பது சொல்லாமலே விளங்கும். பருவமழை காலா காலத்திலும், போதிய அளவு தண்ணீர் வசதி கிடைக்காததாலும், வேறு பாசன வசதிகள் இல்லாததாலும், விவசாயத்தினால் பொருளாதாரம் சீர் அடையவில்லை. விதை விதைக்கும்போது அறுவடை செய்ய முடியுமோ முடியாதோ என்ற ஐயப்பாடு ஏற்படும். வருவாய் தரக்கூடிய வேறு தொழிலும் இல்லை. இக்காரணங்களால் அதிக அளவு புன்செய் நிலங்களை விவசாயிகள் தரிசாக பல வருஷங்களாக விட்டுவிட்டார்கள். எவ்வித விவசாயமின்றி புன்செய் பெருமளவு நிலமத்தனையும் வீணாகக் காய்ந்து கொண்டே கிடந்தன. நிலம் இருந்தும், அதிலே பயிரில்லை என்ற நினைவை எண்ணும்போதெல்லாம் வாழ்விலே ஒருவித ஏக்கப்பெருமூச்சு எழுந்துகொண்டேயிருந்தது. இங்குள்ள புன்செய் நிலங்கள் சிறிது சரளை உள்ள செவல் நிலங்களாகும். இந் நிலங்களில் வறட்சியைத் தாங்கக் கூடிய ஏதாவது ஒரு பயிரையாவது, மரத்தையாவது உண்டாக்கி பசுமை காட்ட வேண்டுமென்று ஆர்வம் நீண்ட நாட்களாக எங்களுக்கு இருந்துகொண்டு வந்தது.

#### நல்லதொரு திருப்பம்

இச்சமயத்தில்தான் கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து எங்கள் ஜில்லாவிற்கு கலெக்டராக வந்த ஸ்ரீமான் அப்பாசங்கர் ஐ. ஏ. எஸ். அவர்கள் இப்பகுதிகளில் முந்திரி சாகுபடி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி சிவகங்கை ஜில்லா விவசாய அதிகாரியான ஸ்ரீமான் எம். என். மீனாட்சிசுந்தரம் பி.ஏ, பி.எஸ்சி. (விவசாயம்) அவர்களுடன் ஆராய்ந்து கொடுத்த அறிவுரைகளின் பேரில், இந்நிலங்கள் முந்திரி சாகுபடிக்கு ஏற்றது என்று மானாமதுரை விவசாய வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியவர்கள் மூலம் அறிந்து, முந்திரி சாகுபடியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தோம். தனிநபர்கள் முதன் முதலில் இப்புதிய விவசாயத்தைச் செய்ய சற்றுத் தயங்கினர். ஆகவே, பரீட்சார்த்தமாக, பஞ்சாயத்தின் பராமரிப்பில் விடப்பட்டுள்ள தரிசு நிலம் ஒன்றில் முந்திரி சாகுபடி செய்யத் தீர்மானித்தோம், எங்கள் கிராமத்தைச் சேர்ந்த கர்ணம் ஸ்ரீ வீரபசாமி அவர்கள் சுமார் 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள யாமூல்தரிசு நிலத்தை இதற்காக ஒதுக்கிக் கொடுத்தார். 1962ஆம் அக்டோபர் 1-ந்தேதி அன்று கமிஷனர், விவசாய வளர்ச்சி அலுவலர், கிராமசேவக் ஆகியவர்கள் இந்த ஸ்தலத்திற்கு வந்து, முந்திரி சாகுபடிக்குச் செய்ய வேண்டியவைகளை கூறினர். அதன்படி 2'2 2" அளவுள்ள குழிகள் 20 அடி இடைவெளியில் வெட்டப்பட்டன. சுமார் 5 ஏக்கரில் இவ்வேலை முதலில் ஆரம்பமாகியது.

1962ஆம் நவம்பர் 12உ அன்று மானாமதுரையில் முகாம் செய்த கலெக்டர் அவர்களின் விஜயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களை முந்திரி சாகுபடியை ஆரம்பித்து வைக்கக்கேட்டுக் கொண்டோம். அதன்படி கலெக்டர் அவர்கள் ஒரு முந்திரி சாகுபடியை ஆரம்பித்து வைத்தார்கள். அதன்பின் ஜில்லா விவசாய அதிகாரி, கோட்டாட்சித் தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், கமிஷனர், டிப்டி தாசில்தார் முதலியவர்களும் ஒவ்வொரு செடியை நட்டு எங்களைக் கௌரவித்தனர். முந்திரி சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வரும் எங்கள் கலெக்டர் அவர்களால் இச் சாகுபடியை பஞ்சாயத்து யூனியனில் முதலாவதாக எங்கள் பஞ்சாயத்தில் ஆரம்பித்தது எங்கள் அதிர்ஷ்டமே. அதனால் இன்று 50 ஏக்கரில் பஞ்சாயத்திலிருந்தே முந்திரி பயிரிட்டிருக்கிறோம். எங்களைப் பின்பற்றி தெற்கு சந்தனூர், ஜனதிக்கோட்டை பஞ்சாயத்துக்களும் இதர தனிப்பட்ட நபர்களுமாகச் சேர்ந்து 1962-63-ம் ஆண்டில் சுமார் 500 ஏக்கரில் பயிரிட்டிருக்கிறார்கள்.

#### நல்ல வளர்ச்சி

நாங்கள் முந்திரி சாகுபடி செய்திருக்கிற இடம் ஊருக்கும் ரஸ்தாவிற்கும் மிகவும் சமீபமானது. செடிகளும் நன்றாய் வளர்ந்து வருகின்றன. அதனால் முந்திரி சாகுபடியில் அசிரத்தையாக இருந்தவர்கள்கூட இப்போது இந்தச் சாகுபடி செய்ய அதிக ஆவலோடு இருக்கின்றனர். 1963-ம் ஆம் மார்ச்சு 12உ தமிழ்நாடு விவசாய செய்தித் துறையைச் சேர்ந்த பிரசார மோட்டார் வண்டியின் மூலமாக 'முந்திரி சாகுபடி' என்ற ஒரு சினிமாப்படம் காட்டப்பட்டது. இந்தப் படம் பாமர விவசாய மக்களுக்கு முந்திரி சாகுபடியைப் பற்றி நன்கு விளக்கிக் காட்டியது. மாவட்டக் கலெக்டர் அவர்களும் தனி நபர்கள் முந்திரி சாகுபடியில் ஆர்வம் காட்டுவதற்காக கடன் வசதி அளிக்கிறார்கள். இதனால் 1963—64ம் ஆண்டில், மேலும் சற்று அதிக அளவில் இச் சாகுபடியை இந்த யூனியனில் மேற்கொள்ள வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

முந்திரி சாகுபடிக்காக நாங்கள் செலவு செய்த தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரைதான். சுமாரான மழையின் உதவியால் ஆரம்பித்த இந்த விவசாயம் பின்னால் இடையிடையே வாரம் ஒரிரண்டு முறை முதல் 3 மாதங்கள் வரை தண்ணீர் விட்டதுடன்

நன்ருக விருத்தியடைந்தது. மிகவும் சிக்கனமாக பஞ்சாயத்து நிதியிலிருந்து முந்திரித் தோட்டம் அமைத்த தற்காக மதுரை விவசாய டிப்டி டைரக்டர் அவர்கள் எங்களைப் பாராட்டியுள்ளார்கள். இவ்விதமாக பலதிறப் பட்ட உயர்தர அதிகாரிகள் எங்களது முந்திரித்தோட்டத்தை பார்வையிட்டு எங்களை உற்சாகப்படுத்தியதால், இந்த வருஷமும், இன்னும் 50 ஏக்கரில் இச்சாகுபடியை அதி கரிக்க எண்ணியிருக்கிருேம்.

இந்தச் சாகுபடிக்கு ஆடுமாடுகளால் எந்த உபத்திரவ மும் கிடையாது. 3 மாதத்திற்குப் பின் தண்ணீர்விட வேண்டிய சிரமமுமில்லை. செடிகள் இப்போது நல்ல வளர்ச்சியடைந்து சேதமடையாமல் இருக்கின்றன. அடிக்கடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அலுவலர்கள் இத்தோட்டத்தைப் பார்வையிட்டு மேலும் செய்ய வேண்டிய வற்றைப் பற்றி ஆலோசனை கூறி வருகிருர்கள். பல வருஷங்களாகப் பொட்டல் தரையாயிருந்த இந்நிலம் இப்போது பசுமை நிறைந்த முந்திரிச் செடிகளாய் காணப் படுவது எங்கள் சாதனை என்று பெருமிதத்துடன் கூறிக் கொள்கிருேம்.

எங்கள் பஞ்சாயத்து பண வசதியுள்ள பஞ்சாயத்து அல்ல. ஆகவே, இத் திட்டத்தை நிறைவேற்றுமுன் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அலுவலருக்கு நிதி நிலைமையைப் பற்றி சந்தேகமிருந்தது. ஆனுல், நாளாவட்டத்தில் நாங்கள் ஒருங்கே நின்று செய்த வேலைகளைக் கண்டு இந்த சந்தேகம் நீங்கியது. எங்கள் பஞ்சாயத்திற்கு கிடைக்கக் கூடிய சொற்ப மானியத் தொகையையும், யூனியனி லிருந்து கிடைக்கும் மானியத் தொகையையும் கொண்டு, உற்பத்திப் பெருக்கத் திட்டங்களில் அதிக எச்சரிக்கையோடு செலவு செய்கிருேம். 1962-ம் வருஷம் அக்டோபர் மாதக் கடைசியில் ஆரம்பிக்கப்பட்ட இத் தோட்டத்தில் கன்றுகள் இதுவரை சுமார் 2 அடி வரை வளர்ந்திருக்கின்றன. இந்த முந்திரிச் செடிகள் பூத்துக்காய்க்க ஆரம்பித்தும், எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் அதைக்கொண்டு இன்னும் பல ஆக்க வேலைகளை மேற் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிருேம். எங்கள் பகுதியில் முந்திரி சாகுபடி வெற்றியடைந்து தமிழ் நாட்டிற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகம் இருக்கிறது. செடி வளர வளர அதன் செழுமையும், குளுமையும், எழிலும், இளமையும் எங்கள் இதயத்திலே ஒரு புத்துணர்வை ஊட்டுகிறது. எங்கு பார்த்தாலும் ஒரே வறண்ட தரை யாகக் காட்சியளித்த செம்பொட்டல், இன்று பசுமை எழிலோடு தென்றலிடையே ஆடி மகிழும் முந்திரிச் செடியாக, எங்கள் முன்னேற்ற வாழ்வில் அறிகுறியாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது.

[மாங்குளம் கிராமவாசி.]

—(o)—

## தாளவாடி பஞ்சாயத்து யூனியன்

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோபிச்செட்டிபாளையம் தாலுகா வடமேற்கு மூலையில், திம்பம் மலைகளுக்கிடையே மைசூர் மாநிலத்தை ஒட்டி அமைந்துள்ளது தாளவாடி பஞ்சாயத்து யூனியன் பிரதேசம். முன்பு இது பவானி சாகர் வட்டாரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1960-ல் பவானிசாகர் வட்டாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தாள வாடி பஞ்சாயத்து யூனியன் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந்தேதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் மழை அதிகம். யூனியன் தலை நகரம் தாளவாடி. சமீப காலம் வரை தாளவாடி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வசதி எதுவும் இல்லாமலிருந்தது. இப்பொழுது மேல்மட்ட நீர்நிலைத்தொட்டி ஒன்று கட்டப்பட்டு, தெருக்களில் குழாய்கள் வைக்கப்பட்டுள்ளன. ஓர் உயர்நிலைப்பள்ளி உண்டு.

இந்த யூனியனில் எல்லாக் கிராமங்களிலும் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டுள்ளது. பனகாஉறள்ளி கிராமத்தில் ஸ்ரீ ராமராவ் என்பவர் தொண்டர்களுக்கு நல்ல பயிற்சி அளித்துள்ளார். இவர் இந்திய தேசிய ராணுவத்தில் இருந்தவர். தொட்டாபுரம் கிராமப் பஞ்சா யத்தில் உபதலைவர் ஸ்ரீ பசவன்ன என்பவர். இவரே ஒரு மாஜி ராணுவத்தினர். அந்தக் கிராமத்தின் எல்லாத் தொண்டர்களுக்கும் இவர் நல்ல பயிற்சி அளித்துள்ளார். நன்கொடைகளின் மூலமாக கிராமத் தொண்டர் படையி னருக்கு சீருடை வழங்க பஞ்சாயத்துத் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.

தொட்டாபுரம் கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பழத்தோட்டம் வைத்து பராமரிக்கப்படுகிறது. தாளவாடியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சொசைட்டி ஒன்று நடைபெறுகிறது.

இந்தப் பஞ்சாயத்து யூனியனில் கிராம அதிகாரிகளுக் கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்குமிடையே நல்ல சுமுகமான உறவு நிலவுகிறது.

இந்த யூனியனில் செய்ய வேண்டிய வேலைகள் பல உள்ளன. பஞ்சாயத்து தலைவர்களும், யூனியன் பெருந் தலைவரும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பாடுபடு கின்றனர். இந்தப்பிரதேசம் இன்னும் அபிவிருத்தியடைய வேண்டியுள்ளது. அதற்கான வசதிகள் செய்து தரப் பட்டால், நல்ல முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் நிச்சயமாகப் பெறமுடியும்.







# விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்



## போராட்ட வீரர் சத்தியமூர்த்தி

(திருமதி விருதாம்பாள் நாதன்)

சொற்பொழிவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி, மக்களைத் தட்டியெழுப்பி ஆக்க வேலைகளில் செலுத்திய பெரியோர்கள் எல்லா நாடுகளிலும் தோன்றியுள்ளனர். ஆனுல், ஒரு சொற்பொழிவாளர் இரு மொழிகளில் வல்லவராக இருப்பது அரிதினும் அரிது. தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மக்களை நெகிழ வைக்கும் மாபெரும் சொற்பொழி வாளராக சென்ற தலைமுறையில் விளங்கியவர், காலஞ் சென்ற சத்தியமூர்த்தி அவர்கள்.

தன்னுடைய நாவன்மையை அவர் அப்போது ஆட்சி செலுத்திய ஆங்கிலேயருக்கு அடிமையாக்கியிருந்தால், மாபெரும் பதவிகளை வகித்து பெரும்புகழ் எய்தியிருப்பார். ஆனுல், அவர் அவ்வாறு செய்யவில்லை. தூய உள்ளம் படைத்த சத்தியமூர்த்திக்கு நம் பாரத அன்னை அந்நியனுக்கு அடிமைப்பட்டிருந்தது மனதை உருக்கியது. 'சுதந்திரம் நமது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவோம்' என்ற வீரவாக்கு அவரை சுதந்திரப் போராட்ட வீரராக ஆக்கியது. தனது தலிப்பெரும் நாவன்மையை, அறிவாற்றலை, நாட்டின் விடுதலை இயக்கத்திற்கு அர்ப்பணித்தார்.

சத்தியமூர்த்தியின் இடிமுழக்கச் சொற்பொழிவுகள் கன்னியாகுமரி முதல் இமயம் வரை எதிரொலித்தன. மக்களை வீறு கொண்டு எழச்செய்து சுதந்திரப் போராட்டத் தில் குதிக்கச் செய்தன. அந்நிய ஆட்சியாளரை கதிகலங்கச் செய்தன. சத்தியமூர்த்தி என்ற பெயர் கேட்டதுமே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நடுநடுங்கினர்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக விளங்கிய சத்திய மூர்த்தி தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவராக பல்லாண்டுகள் பணிபுரிந்தார். சட்ட மன்றத்தில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு ஆட்சியாளரின் குற்றங்குறை களைத் தெளிவாக எடுத்துரைத்தார். சத்தியமூர்த்தியின் பிரசங்கம் என்றுலே மக்களுக்கு 'அல்வா' துண்டுபோல. ஆட்சியாளர்களுக்கோ வேம்பு போல் கசக்கும்.

### செயல் வீரர்

அவர் வெறும் பேச்சாளர் மட்டுமல்ல, மாபெரும் செயல் வீரர். சென்னை நகரசபையின் மேயராக அவர் ஓராண்டு காலம் பதவி வகித்தபோது, பல அரிய காரியங் களைச் செய்தார். அவற்றில் ஒன்று இன்று சென்னையின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பூண்டி நீர்த்தேக்கம். அவர் காலத்தில்தான் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது கட்டி முடிந்த பின், அவரின் நினைவாகவே 'சத்தியமூர்த்தி சாகரம்' என வழங்கி வருகிறது. சென்னையிலிருந்து சுமார் முப்பது மைல் தொலைவிலுள்ள இந்த நீர்த்தேக்கம் இன்று ஒரு பொழுது போக்கும் உல்லாச இடமாகவும் இருக்கிறது.

### பேச்சுக் கலையில் தீரர்

சொற்பொழிவு என்றுல் எவ்வாறு இருக்கவேண்டு மென்பதற்கு அவரது பேச்சுக்கள் இலக்கணமாக இருந்தன. சாதாரணமாக, மேடைப் பேச்சாளர்கள் தனிப் பட்ட முறையில் தாக்கிப் பேசுவது வழக்கம். ஆனுல், சத்தியமூர்த்தி தன் கொள்கைகளை விளக்கியும், மாற்றுக் கட்சியினரின் கொள்கைகளைத் தாக்கியும் பேசுவார். பேச்சு முடிந்த பிறகு, அது சட்டசபையாகயிருப்பினும் தனிப்பட்ட மனிதர்களிடம் நட்பு முறையில் பழகுவார். இதற்கு உதாரணமாகப் பல நிகழ்ச்சிகள் உண்டு.

சென்னையில், சத்தியமூர்த்தி மத்திய சட்டசபை தேர்த லுக்கு காங்கிரஸ் கட்சி அபேட்சகராக நின்றுர். அவரை எதிர்த்து நீதிக் கட்சி அபேட்சகராக (சர்) ஏ. ராமசாமி முதலியார் போட்டியிட்டார். இருவரும் தெருத்தெருவாக வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்டு வந்தனர். ஏனெனில் போட்டி மிகக் கடுமையாக இருந்தது. அப்போது ஓரிடத்தில் இருவரும் நேருக்குநேர் ஒரே வீட்டில் சந்திக்க நேரிட்டது. இருவரும் சிரித்துக் கொண்டு குசலம் விசாரித்தனர். தேர்தல் வேறு, தனிப்பட்ட முறையில் பழகுவது வேறு என்று சத்தியமூர்த்தி சொல்லுவார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது முதன் முதலாக நடத்தப் பட்ட பொது தேர்தலின் போது, காங்கிரஸ் பெருவாரியான இடங்களில் வெற்றிப் பெற்று மாற்றுக் கட்சியினரைத் தோற்கடித்த பெருமை பெரிதும் சத்தியமூர்த்தியையே சேரும். அவரது வாக்கு வன்மை ஈடு இணையற்றது.

1887-ம் ஆண்டு புதுக்கோட்டை அருகில் உள்ள திருமயம் என்ற ஊரில் பிறந்த சத்தியமூர்த்தி, தன் தந்தையார் சுந்தர சாஸ்திரியைப் போன்று வடமொழி யிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். சுதந்திரப் போராட்டங்களில் அடிக்கடி பங்கு கொண்டு சிறை சென்றமையால், உடல் நலம் பாதிக்கப்பட்டு, 1943-ம்

ஆண்டு உயிர் நீத்தார். அவர் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டார்.

அரசியல் மட்டுமின்றி, கல்வித்துறை, கலைத் துறை ஆகியவைகளிலும் சத்தியமூர்த்தி பெரும் ஈடுபாடு கொண்டவர்.

சத்தியமூர்த்தி அரசியல் வாதிகளுக்கு ஓர் உதாரண மனிதராக விளங்குகிறார். சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு அவர் ஓர் ஒப்பற்ற வழிகாட்டி. எந்த விஷயத்தையும் நீர ஆராய்ந்து, ஆழ்ந்து படித்தே கேள்விகள் கேட்பார், சொற்பொழிவு நிகழ்த்துவார். ஆகவே, அவரிடமிருந்து தப்புவது முடியாத காரியம். அவரது சட்டமன்றச் சொற்பொழிவுகளை இன்றும் நாம் படித்துப் பயன்பெறலாம். வாக்குவாதம் செய்வதில் திறமை மிக்கவர். அவர் பேசும் போது இடைமறித்து யாராவது கேள்வி கேட்டு விட்டாலோ, சுடச்சுடப் பதிலளிப்பார். இவ்வாறு அவர் அளித்த பதில்கள் நாடெங்கிலும் பெருமையாகப் பேசப்படும்.

சத்தியமூர்த்திக்கு செயல் வீரர்களைக் கண்டால் மிகவும் பிடிக்கும். அவரே ஒரு செயல் வீரர் அல்லவா! பொதுவாக நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நமது பண்டைய கலாச்சாரங்களில் ஆழ்ந்த புலமையும், பற்றுதலும் கொண்ட சத்தியமூர்த்தி தன்னை பொதுப்பணிக்கே அர்ப்பணித்திருந்தார். நாட்டின் விடுதலையைக் காணவேண்டுமென்று பேராவல் கொண்டிருந்த அவர், நமது நாடு சுதந்திரம் பெறுமுன்பே, காலமாகியது வருத்தத்தை அளிக்கின்றது. அவரும், அவரைப் போன்றவர்களும் தன்னலமறந்து விடுதலைப் போரில் பெரும் பங்கு கொண்டதன் காரணமாகவே, இன்று நாம் சுதந்திர இந்தியாவில் மற்ற சுதந்திர நாடுகளுக்கிடையே தலை தூக்கி நிற்கின்றோம்.

சத்தியமூர்த்தி சென்னை மேயராகவும், தேசத் தலைவராகவும் ஆற்றிய தொண்டுகளை மக்கள் நினைவு கூற வேண்டுமென்பதற்காகவே, சமீபத்தில் அவரது முழு உருவச்சிலையை ரிப்பன் கட்டிடம் முன்பாக நமது பாரதப் பிரதமர் நேருஜி திறந்து வைத்தார். வரும் காலத்தில் அவரைப் போன்ற பண்பட்ட தலைவர்கள் தமிழ் நாட்டில் பலர் தோன்ற வேண்டும். அப்போதுதான் காந்திஜி கனவு கண்ட 'ராமராஜ்யத்தை' நாம் உருவாக்கமுடியும்.

## கிராம நலம்

சந்தா விவரம் :—

### ஆண்டு சந்தா ரூ. 1·50.

ஆறுமாத சந்தா கிடையாது.

தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

முகவரி:—பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல தல நிர்வாகத் துறை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

## கிராமத் தொண்டர் படை

### புதிய திட்டம்

இவ்வாண்டு குடியரசு விழாவில் பாரத நாடெங்கும் தொடங்கப்பட்ட கிராமத் தொண்டர் படைக்கு இப்போது புதிய திட்டம் ஒன்று தரப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாதத்திற்குள் இதைப்பற்றிய விரிவான நடவடிக்கைகள் தமிழ் நாடெங்கும் மேற்கொள்ளப்படும். கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. சோ. வேங்கடாசலபதி அவர்கள் இதற்கான ஆலோசனைகளை எல்லா மாவட்டக் கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள், முதலியோருடன் கலந்து பேசி வருகிறார். அனுபவ பூர்வமாக இந்தத் திட்டங்கள் அமைய வேண்டுமென்பதே, இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் அனைவரும் (பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பல்வேறு வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவகர்கள், முக்கிய சேவிகைகள், கிராம சேவிகைகள், சமூக நல ஊழியர்கள் முதலியோர் அனைவரும்) வில்லிவாக்கத்தில் கூடி மாவட்டக் கலெக்டர் திரு. அனந்தபத்மநாபன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் விரிவாகக் கலந்து ஆலோசித்தனர். மூன்று முக்கிய விஷயங்கள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன :—

1. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பத்துக்குடும்பங்களுக்கு ஒரு தொண்டர் வீதம் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளல்,
2. ஒவ்வொரு கிராமத்திலும் வாரத்திற்கு ஒரு நாள் கூட்டம் கூடி கலந்து பேசுதல்,
3. மாதம் ஒரு நாள் (பௌர்ணமியன்றோ அல்லது அமாவாசையன்றோ), வீட்டுக்குக் குறைந்தது ஒருவர் வீதம், கிராமத்தில் கூட்டம் நடத்தி, கிராம நல வேலைகளை மேற்கொள்ளுதல்.

இந்த மூன்று ஆலோசனைகளைப் பற்றி யோசித்து, அந்தந்த இடங்களுக்கு ஏற்ப, தக்க முறையில் திருத்திக் கொள்ள யோசனை கூறப்பட்டது.

இது சம்பந்தமாக, கிராம அபிவிருத்திக்கமிஷனர் அவர்கள் தென் ஆர்க்காடு மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியவற்றில் ஜூன் மாதத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தை ஜூலை மாதத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். சுற்றுப்பயணத்தின் அனுபவத்தை ஒட்டி, அவர் கிராமத் தொண்டர் படைக்கான குறைந்த பட்ச திட்டத்தை (Minimum Programme) உருவாக்கி அறிவிப்பார்.

(கிராம அபிவிருத்திக் கமிஷனரின் விளக்கமான அறிவிப்பை, பக்கங்கள் 1-3-ல் பார்க்கவும்.)



# உணவு உற்பத்தி — பஞ்சாயத்துக்களின் கடமை



1958-ம் ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 66-வது பிரிவின்படி, சமுதாய நலத் திட்டங்கள், தேசிய நலப்பரப்புப் பணி, குறிப்பாக வேளாண்மை அபிவிருத்திக்கான நடவடிக்கைகள், கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், கிராமத் தொழில்கள், சமூகக் கல்வி, மாதர்—குழந்தைகள் நலன் சம்பந்தமான வேலைகள் ஆகியவைகளை அரசாங்கம், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்துள்ளது.

தங்கள் அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில், திட்டமிட்ட முறையில் வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்காக, பஞ்சாயத்து யூனியன்கள் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இதற்கென, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், மூன்றும் திட்டக் காலத்திற்கு வேளாண்மை மானியமாக, ரூ. 2 லட்சம் கிடைக்கும். இந்த நிதி வசதியைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேலைத்திட்டக் குறிப்புகள் அனுப்பப்படுகின்றன. பஞ்சாயத்துப் பகுதிகளில் மரங்கள் வளர்ப்பது, கிராம சகாயத் திட்டத்தின் கீழ் பொறுக்கு விதைகள் உற்பத்தியை அதிகரிப்பது, உள்ளூர் எரு உற்பத்தியை தீவிரப்படுத்துவது, முன்னேற்றமான சாகுபடி முறைகளை விளக்கிக் காட்டுவது முதலியனவெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களில் சிறப்பான பணிகளாக விளங்கி வருகின்றன.

### கிராம உணவு உற்பத்தித் திட்டம்

இந்த எல்லாச் செயல்முறைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது கிராம உணவு உற்பத்தித் திட்டமாகும். பொறுக்கு விதைகள், உர உற்பத்தி ஆகியவைகளைப் பொறுத்தவரையில் தன்னிறைவு காணும்படியாக, உற்பத்தியைப் பெருக்க இதன் மூலம் முயற்சி செய்யப்படுகிறது. அநேகமாக, எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுமே கிராம உணவு உற்பத்தித் திட்டங்களை வகுத்துக்கொண்டுள்ளன. வேளாண்மை மானியங்களுக்கும் வகை செய்து கொண்டு, அவை திட்டங்களை அமுலாக்கி வருகின்றன. தங்கள் வசமுள்ள அல்லது பல்வேறு அரசாங்க உத்தரவுகள் மூலம், தங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள, பொது நிலங்களில் மரங்களை வளர்க்க பஞ்சாயத்துக்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், பொறுக்கு விதைகளைப் பெருக்கி, பல்வேறு பஞ்சாயத்துக்களில் நேமகம் செய்யப்படும் குடியானவர்களுக்கு விதைகளை வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

### கிராம சகாயக் வேலைத் திட்டம்

பொறுக்கு விதைகளைப் பெருக்கி விநியோகிக்க வகை செய்யவும் கிராம சகாயக்குகள் திட்டம், ஆரம்ப கால சங்கடங்களைக் கடந்து, இப்போது நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. இத்திட்டப்படி, குறிப்பிட்ட அனுபவ குடியானவர்கள் பஞ்சாயத்துக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தரமான விதைகளைப் பெருக்கி, பஞ்சாயத்துக்களால் நேமகம் செய்யப்படும் குடியானவர்களுக்கு விதைகளை வழங்கும் பொறுப்பு இவர்களிடம் விடப்படுகிறது. இது சம்பந்தமாக, கிராம சகாயக்குகளுக்கு, தாங்கள் பெருக்கி விநியோகித்த பொறுக்கு விதைகளுக்கு மெயில்வே மணங்குக்கு ரூ. 2 வீதம் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் சரிபார்த்து சான்று வழங்கியதின் பேரில் இத்தொகை வழங்கப்படும்.

கிராம சகாயச் சேவைத் திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்குவதில், கூட்டுறவுச் சங்கங்கள் தீவிரமாகப் பங்கு பெறும்படிச் செய்யும் பிரச்சினையை, மாநில அரசாங்கம் கொஞ்சகாலமாகவே பரிசீலனை செய்து வருகிறது. கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் விதைகளை கொள்முதல் செய்து வைத்துக்கொள்வதன்மூலம், கூட்டுறவு நிறுவனங்கள் இதில் உதவலாம். அல்லது கிராம சகாயக்குகள், அடுத்த விதைப்புக்காலம் வரை விதைகளை வைத்திருப்பதற்கு வசதியாக அவர்களுக்குக் கடன் வழங்கலாம். அல்லது, விதைகள் வாங்க நேமகம் செய்யப்படும் குடியானவர்களுக்கு கடன் உதவி அளித்து அவர்கள் கிராம சகாயக்குகளிடமிருந்து விதைகளை வாங்கிவைத்துக் கொள்ள உதவலாம். கூட்டுறவு நிறுவனங்கள் இதில் எந்த அளவுக்குப் பணியாற்ற முடியும் என்பது, இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. எனவே, இத்

திட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் எந்த அளவுக்குப் பங்கு கொள்ளலாம் என்பதில் விளக்கம் தருவது அவசியம் என்று அரசாங்கம் கருதியது. நேமகம் செய்யப்படும் குடியானவர்களுக்கு, கிராம சகாயக்குகளிடமிருந்து விதைகளை வாங்குவதற்காக, கடன் வழங்கலாம் என்று அரசாங்கம் கட்டளையிட்டது. இதன் மூலம் கிராம சகாயக்குகளுக்கு, அடுத்த விதைப்புக் காலம் வரை விதைகளை சேமித்துக் காக்க வேண்டிய தொல்லை குறையும். அளிக்கப்படும் கடன், பொருள் வடிவில் தரப்படும். நேமகம் செய்யப்படும் குடியானவர்கள், அடுத்த அறுவடைக் காலத்தில் இந்தக் கடனைத் திருப்பித் தரவேண்டும். கிராம சகாயகுகள் உற்பத்தி செய்யும் தரமான விதைகள், நேமகம் செய்யப்படும் குடியானவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கமும், அரசாங்கத்தின் இந்த உத்தரவு மூலம் கைகூடுகிறது. அதே சமயத்தில், குடியானவர்களிடையே கூட்டுறவுச் சங்கங்களின் பணி அதிகரிக்கவும் இது வகை செய்கின்றது.

### தேசிய நெருக்கடியும் உணவு உற்பத்தியும்

தேசிய நெருக்கடியை ஒட்டி, வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதின் அவசியம், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் நன்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் வகுத்துக்கொண்டுள்ள வேளாண்மைப் பெருக்குத் திட்டங்களை தீவிரமான முறையில் அமுலாக்கி, உற்பத்தியை மிக விரைவாக அதிகரிக்குமாறும் அவை கேட்டுக்கொள்ளப்பட்டன. 1960–61-ல் பஞ்சாயத்து யூனியன்கள் வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டங்களுக்காக ரூ. 41·38 லட்சம் செலவிட்டன. 1962–63-ல் இந்த வகையில் எதிர் பார்க்கப்படும் செலவு சுமார் ரூ. 70 லட்சமாகும். 1963–64-ம் ஆண்டுக்கு, இக்காரியத்துக்கென, வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 69 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### சிறுபாசன வசதிகளும் பஞ்சாயத்து யூனியன்களும்

பழைய நிலையில் அமைக்கப்பட வேண்டிய நீர் நிலைகள், மாறியுள்ள உடைமை முறைகளில் சம்பந்தப்பட்ட நீர்நிலைகள் நீங்கலாக, எல்லாச் சிறு பாசனங்களும், பராமரிப்புக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்டன. தற்போதைய மற்ற பாசன நீர்நிலைகளும், பழைய நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டவுடன், பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்படும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்ட சிறு பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக, தலபாசன மானியம் என்ற பெயரால் ஒரு மானியம் வழங்கப்படுகிறது. இந்தப் பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதில் சென்ற ஐந்து ஆண்டுக் காலச் செலவையும், ஏக்கருக்கு ரூ. 1·5 என்பதிலிருந்து ரூ. 2·5 வரை என்னும் விகிதத்தையும் அடிப்படையாக வைத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்த மானியம் வழங்கப்படும். 1961–62-ல் தல பாசன மானியமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ. 40 லட்சம் வழங்கப்பட்டது. 1962–63-ம் ஆண்டுக்கு இவ்வகையில் ரூ. 36·14 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதின் காரணமாக, பஞ்சாயத்து யூனியன்கள், சிறு பாசன ஆதாரங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்து கொண்டுள்ளன. சிறுபாசன ஆதாரங்களைச் சிறப்பான முறையில் பராமரிக்க, அவை தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதே சமயத்தில், அவை, தங்களுக்குத் தரப்படும் தல பாசன மானியம் போதுமானதாக இல்லை என்றும், குறிப்பாக நீண்ட காலமாக கவனிக்கப்படாமல் இருந்த பாசன ஆதாரங்களைச் சீரமைப்பதில் மானிய உதவி குறைவாக இருப்பதாகவும் எடுத்துரைத்துள்ளன. பராமரிப்பு வேலைகள் மிக அதிகமாக பாக்கி நின்றுள்ள பஞ்சாயத்து யூனியன்களின் சங்கடங்களைத் தீர்க்க உதவும் முறையில், சில வகை விசேஷ வேலைகளை நிறைவேற்றுவதற்கென்று, 1962–63-ல் அரசாங்கம் தனி ஒதுக்கீடாக மேற்கொண்டு ரூ. 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. தல பாசன மானியம் தருவதற்காக, 1963-64-ம் ஆண்டுக்கு, வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 34 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### பஞ்சாயத்து யூனியன்களும் குடிமராமத்தும்

குடிமராமத்து முறை பழஞ்சிறப்பு வாய்ந்ததாகும். அந்தமுறையின் கீழ் குடியானவர்கள், பாசன ஆதாரங்களுக்குப் பழுது பார்க்கும் வேலைகளை தாங்களே செய்து வந்தனர். ஆனால், இந்த முறையில் பல பகுதிகளில் வருந்தத்தக்க முறையில் புறக்கணிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்த முறையைப் பின் பற்றுவதால், கால்வாய்கள் பழுதடைந்திருந்தன. 1961–62-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கூட்டுப் பொறுப்பான முறையில் குடிமராமத்து மேற்கொள்ளப்பட்டது. தொடக்கத்தில் பாபநாசம், கீவளூர் ஆகிய இரு யூனியன்கள் இந்த வேலைகளை மேற்கொண்டன. பின்னர் வேறு 14 யூனியன்கள் தாமாகவே இந்த முறையைப் பின்பற்றி நடவடிக்கை எடுத்தன. இப் பழக்கம் இப்பொழுது முறைப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் குடிமராமத்து வேலைகளை மேற்கொள்ள அரசாங்கம் தெளிவான முறையில் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. இத்திட்டப்படி, கால்வாய்கள் பழுது பார்க்கப்பட்டதின் பேரில், இதற்கான செலவுக்காக ஒரு ஏக்கர் ஆயக்கட்டுக்கு ஒரு ரூபாய் விதம் மக்கள் தர வேண்டும். ஒவ்வொரு ஏக்கருக்கும் குடிமராமத்து செலவில் மூன்றில் இரண்டு பகுதியை, உபரி குடிமராமத்து மானியமாக அரசாங்கம் வழங்கும். ஆண்டு தோறும், மாமூல் குடிமராமத்து வேலைகளை மக்கள் தாங்களே நேரடியாக நிறைவேற்ற வேண்டும் அல்லது பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக நிறைவேற்ற வேண்டும். இதற்கு வகை செய்யும் முறையில் இத்திட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்தின் காவிரி, பெண்ணாறு, நீராதாரங்கள் முழுவதற்கும் நீடிப்பதற்



## குடும்பக் கட்டுப்பாடு—
## தமிழ் நாட்டிற்கு முதல் பரிசு

தேசிய குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் பற்றிய தேசிய பரிசுக்கான தேர்வுக் கமிட்டி, குடும்பக்கட்டுப்பாடுத் துறையில் சிறந்த வேலைகளுக்காக, 1961-ம் ஆண்டுக்கான பரிசை தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

குடும்பக்கட்டுப்பாடு கிளினிக்குகளுக்கும், குடும்ப க்ஷேம நல ஊழியர்களுக்கும் பரிசுகளையும், தகுதி அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்க, ராஜ்ய சர்க்கார்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

காக ஓர் அளவெடுப்பு மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. கால்வாய்களை வகையாகப் பிரித்துக் கொள்ளுமாறும் குடியானவர்கள் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியோர் செய்ய வேண்டிய வேலைகளை விளக்குமாறும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவீடு வேலை நடைபெற்று வருகின்றது. விரைவில் இந்த வேலை முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குடியானவர்கள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியோரின் பொறுப்புகள் தெளிவாக விளக்கப்படும். ஆண்டுதோறும் குடிமராமத்து வேலைகளை அவர்கள் சுயமாக மேற்கொண்டு நிறைவேற்ற வகை செய்யப்படும். தஞ்சை மாவட்டத்தின் வெற்றிகரமான அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு, மாநிலத்தின் இதர மாவட்டங்களிலும் நிர்ணயமான ஆற்றுப்பாசனப் பிரதேசங்களுக்கு இத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

### விவசாயிகளுக்கு கடன் வசதிகள்

1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து மாநிலம் முழுவதிலும் பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டு விட்டபடியால், குடியானவர்களுக்கு வெவ்வேறு நிறுவனங்கள் கடன் வழங்குகின்ற நிலைமாறி, ஒரு திட்டமான நடைமுறை உருவாகியிருக்கிறது. தாசில்தார்களுக்கு இனி கடன் வழங்கும் அதிகாரம் இல்லை. தக்காவிக் கடன்கள் வழங்குவதில் முழுப் பொறுப்பும் இனி பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைச் சாரும். புதுக் கிணறுகள் வெட்ட உதவி அளிக்கும் திட்டம், எல்லா வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. 1963–64—வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 190 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வாடகைக் கிரய அடிப்படையில் பம்பு செட்டுகள், மோட்டார்கள் வழங்கும் திட்டம் சமீபகாலம் வரை வேளாண்மைத் துறையால் அமுலாக்கப்பட்டு வந்தது. இலாகா அதிகாரிகள் மூலமாக, அதாவது மாவட்ட நிலையில் உதவி வேளாண்மை எஞ்சினியர்கள் மூலமாக இத்திட்டம் நடத்தப்பட்டு வந்தது. இத் திட்டம் இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

[கிராம நல தல நிர்வாகத் துறையின் மானியக் கோரிக்கை—விளக்க உரையிலிருந்து எடுக்கப்பட்டது.]

## ஒருநரைப்போம் !

திரு. இர. வெங்கடேசன், பி.ஏ.

1. நேர்வழிப் பாதையில் சென்றிடுவோம்! – கண்ணே
   நேர்மையிலாச் சீனரை வென்றிடுவோம்!
   வீறுடன் போர்முனை சென்றிடுவோம்! – இதில்
   வெற்றி நமதென்று கூறிடுவோம்.

2. பெற்ற சுதந்திரம் காத்திடுவோம் – அதன்
   பெருமை உணர்ந்து நாம் போற்றிடுவோம்
   உற்ற துயரை விரட்டிடுவோம் – என்றும்
   உலகில் நேர்மையை நாட்டிடுவோம்.

3. சாந்தி பிறந்த திருநாடு – இது
   கருணை நிறைந்த பெருவீடு
   சாந்தி நமது சுதந்திரமும் – எளிதும்
   சரணடைதல் என்றுமே இல்லையடி!

4. கண்ணிழந்து நிற்றல் பார்க்கமாட்டோம்! – அந்தக்
   கவிதைகள் கேட்டின்றும் தூங்கமாட்டோம்
   புன்னகைக்கும் போரென்று மூண்டு விட்டால் – இந்தப்
   பொன்னாட்டை அன்னியர் தீண்டிடவோ?

5. சீனரை வெல்லாமல் ஓயமாட்டோம் – அந்தச்
   சிறுநரியை ஓட்டாமல் மாயமாட்டோம்.
   வீணில் பின்விரு பயமாகோம் – வந்த
   வின்வங்கை விரட்டாமல் சாயமாட்டோம்.

6. தாய்நாட்டைக் காத்திடச் சென்றிடுவேன் – கண்ணே
   தயங்காமல் நல்விடை தந்திடுவாய்
   ஆய்ந்த மறத்தோம் அல்லவோ நாம் – அவர்
   ஆணவம் கொன்றிட ஒருநரைப்போம்.

7. வெற்றி முடியைக் கொட்டுவோம் – கண்ணே
   வீட்டில் விளக்கேற்றி வைத்திடுவாய்!
   பெற்றதாய்க்குத் தொண்டு செய்யும் பெருமைபெற்றேன் — எனவே
   பீடுடன் போர்க்களம் நாடுகின்றேன்.

## ரேடியோ லைசென்சுகளைப் புதுப்பித்துக் கொடுக்க, கிராமக் கிளைத் தபால் நிலையங்களுக்கு அனுமதி

ரேடியோ லைசென்சுகளைப் புதுப்பித்துக்கொடுக்க கிராமங்களில் உள்ள கிளைத் தபால் நிலையங்களுக்கும் இப்பொழுது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு ஜூன் 1-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. கிராமங்களில் உள்ளவர்கள், அவர்களுடைய ரேடியோ லைசென்சுகளைப் புதுப்பித்துக்கொள்வதில், இதுவரை இருந்த சிரமங்கள், புதிய ஏற்பாட்டின் விளைவாக, நீங்கிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிராமங்களில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

திரு. ஜி. கிட்டுராவ், தொழில் நுட்ப அதிகாரி, சுகாதாரத்துறை

நாட்டில் திறமையுள்ள நிர்வாகம் நடைபெற, மக்கள் தொகை பற்றிய சரியான புள்ளி விவரம் தெரிய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். குறிப்பாக, சுகாதாரத் துறையின் நிர்வாகத்துக்கு அவை கண் போன்றன. அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களின் நிறைவேற்றத்திற்கும், இப்புள்ளி விவரங்கள் மிகவும் முக்கியமானவை. மக்கள் தொகையின் மொத்தக் கணக்கெடுப்பு, பத்தாண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது. மாநிலத்தின் கிராமப் பகுதிகளில், 1963-ம் ஆண்டு இடையில் மக்கள் தொகைக் கணக்கெடுக்க, மக்கள் தொகைப் பெருக்கத்தை மதிப்பிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற, கிராமப் பகுதி மக்கள் தொகையை அறிய வேண்டியது மிகவும் அவசியமாகவும், குறிப்பாக, (1) உணவு உற்பத்தியும், விநியோகமும் (2) மக்கள் தொகைப் பெருக்கத் தடுப்பு (3) சுகாதார நிலையங்கள், ஆரம்பப் பள்ளிகள் (4) நீர் வழங்குத் திட்டம் முதலிய முக்கிய தேசியத் திட்டங்களை நிறைவேற்ற இந்த விவரங்கள் அறிய வேண்டியது அவசியமாகும். நம்முடைய வருங்கால சுகவாழ்வை அமைப்பதற்கான அடிப்படையே மக்கள் தொகை பற்றிய சரியான புள்ளி விவரங்களேயாகும்.

இன்றைய சமுதாயத்தில், பிறப்புக்களையும், இறப்புக்களையும் ஒழுங்காகப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். **பிறப்பு பற்றிய சட்டபூர்வமான பதிவு, பெற்ருேர், முறையான பிறப்பு, குடும்பச்சார்பு முன்னேர் அல்லது பாரம்பரியம் முதலான குடும்ப உறவுகளை நிறுவ முதல் தேவையாகும். வாக்குரிமை பெறவும் பள்ளியில் சேரவும் சட்டபூர்வமான தொடர்புகளுக்கும் பிறப்புப் பதிவு இன்றியமையாததாகும். பிறப்புப் பதிவு தேசிய உரிமையை நிறுவுவதற்கான சட்டபூர்வமான பதிவேடாகும்.** அதே போன்று, ஒருவருக்குச் சேரவேண்டிய பல்வேறு வகையான குடும்ப வருமானத்தைப் பெறுவதற்கு, குடும்பத்தில் சம்பாதித்து வந்தவரின் இறப்பை நிரூபிக்கின்ற பதிவு தேவையாகும். வாரிசுரிமையுடையவர் பெற வேண்டிய இன்ஷ்யூரன்ஸ் கணக்குகள் தீர்த்துக்கொள்ள, இறப்புப்பதிவு மிகவும் முக்கியமாகும். சுகாதாரத் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும், பயனை மதிப்பிடவும் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் தேவைப்படுகிறது. ஒரு பகுதியின் மக்கள் தொகை, அங்கு நிகழும் பிறப்புக்களாலும், வெளியிலிருந்து வந்து குடியேறுகிறவர்களாலும் அதிகமாகிறது. அங்கு நிகழும் இறப்புக்களாலும், அங்கிருந்து வெளியிடங்களுக்குக் குடியேறுவோராலும் அது குறைகிறது. ஆனால், கிராமப் பகுதிகளில் இடமாறிக் குடியேறுவோர் தொகை மிகவும் குறைவாகும்.

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும், 1963 ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் 6-ந் தேதி வரையில் பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப்பகுதி குடும்பத் தலைவர்களைச் சந்தித்து, அங்கு 1963 ஜனவரி 14 (பொங்கல் திருநாளிலிருந்து) முதல் ஜூன் 30-ம் தேதி வரை நிகழ்ந்துள்ள பிறப்பு-இறப்பு எண்ணிக்கையை அறிவார்கள். இந்தக் காலத்தில், அவ்வப்பகுதிகளில் நிகழ்ந்த பிறப்பு-இறப்பு பதிவேட்டுப் பிரதிகளை, அதற்கென வழங்கப்பட்டுள்ள தனி நமூனக்களில் எடுத்து, கிராம மணியக்காரர்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தினருக்கு அளிப்பார்கள். கிராம மணியக்காரருக்கும், பஞ்சாயத்தாருக்கும் இக்கணக்கெடுப்பு வேலைக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. பஞ்சாயத்தார்கள், அவர்களிடம் அளிக்கப்பட்ட பிறப்பு-இறப்புப் பதிவுப் பிரதிகளைப் பரிசோதித்து, விடப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இந்தப்பணி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்ட சுகாதார அதிகாரிகள், யூனியனிலுள்ள சுகாதாரப்பணியாளர் ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெறும். இவ்வாறு சேகரிக்கப்படும் பதிவு செய்யப்படாத பிறப்பு-இறப்புக்கள் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 7-ந் தேதியில் நடைபெறும் பஞ்சாயத்துச் சிறப்புக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்ட விவரங்களை, பிறப்பு-இறப்புப் பதிவேட்டில் பதிய வேண்டும். பின்னர், பிறப்பு-இறப்புப் பதிவாளர், 1963-ம் வருடம் ஜனவரி மாதம் 14-ந் தேதியிலிருந்து 1963-ம் வருடம் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை நிகழ்ந்துள்ள மொத்தப் பிறப்பு-இறப்புக்கள் பற்றிய அறிக்கை தயாரித்து, சுகாதாரத்துறை இயக்குநர் தொகுப்புக்கு அனுப்புவதற்கென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பிவைப்பார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து, ஆண்டு முழுதும் நிகழ்ந்துள்ள மக்கள் தொகைப் பெருக்கம் கணக்கிடப்படும்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்தார்களும் இப்பணியின் பயனையும் இன்றியமையாமையையும் உணர்ந்து, இம் முயற்சிக்குப் பெருவெற்றி தேடித்தருவார்கள் என்று நம்புகிறேம்.

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் நிலையை உயர்த்துவது தான் ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய குறிக்கோள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. கிராமப் பகுதிகளில் பெருகும் மக்கள் தொகை பற்றிய சரியான புள்ளி விவரத்தை நாம் அறிவதன் மூலமே, இக் குறிக்கோளை எய்தமுடியும்.

இத்தகைய கணக்கெடுப்பு முறையைச் செயல்படுத்துவது இந்தியாவிலேயே இது முதல் தடவையாகும். இதை முதலில் நடத்துகின்ற பெருமை தமிழ் நாட்டுக்கே சேருகிறது. இப்போதுள்ள பிறப்பு-இறப்புப் பதிவு முறையைத் திருத்தி அமைக்க, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.



# மீன் அரங்கம்

பஞ்சாயத்துக்களில், தகுந்த இடங்களில், மீன் வளர்ப்புப் பண்ணைகள் வைத்து, உள்நாட்டு மீன் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமானது, விவசாய உற்பத்தி நடவடிக்கையில் அடங்கிய ஈட்டு மான்யத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் முக்கியமான திட்டமாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும், 10 மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 54,000 ஆகும். இதில் அரசாங்கம் மான்யமாக ரூ. 36,000-மும் பஞ்சாயத்துக்கள் ரூ. 18,000-மும் அளிக்கின்றன. இத் திட்டத்தை அமுல்செய்ய, ஆரம்பத்தில், 100 வட்டாரங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டி இருந்தன. ஆனால், வட்டாரங்களில் உள்ள நீர் நிலைகளைப்பற்றிய சர்வே அறிக்கைகளை ஆராய்ந்த பின்பு, மீன்களை வளர்ப்பதற்கு இயற்கையான நீர்நிலைகளைத் தேர்ந்தெடுப்பதே லாபகரமானதென்று யோசனை கூறப்பட்டது. இந்த வசதி இல்லாத இடங்களில், நீர்நிலைகள் நிர்மாணிக்கப்படவேண்டியிருந்தன. இயற்கை நீர்நிலைகளில் மீன்களின் வளர்ச்சிக்கும், புஷ்டிக்கும் தேவையான இயற்கை உணவு இருக்குமாதலால், இங்கு மீன் குஞ்சுகளை வளர்க்கவும் ஏதுவிருக்கும். மீன்களை வளர்ப்பதற்கு ஒன்று முதல் இரண்டு ஏக்கர்கள் போதும். இந்த நீர் நிலைகளில் தூரெடுப்பது முதலிய மராமத்துக் காரியங்கள் செய்யவும் தண்ணீர் வரவும், போகவும் மதகுகள் அமைக்கவும் ரூ. 2,000-க்கு மேல் செலவாகாது என்றும் மதிப்பிடப்பட்டது. இத்தகைய நீர்நிலைகளில் ஒவ்வொன்றிலும் 300 மீன்கள் வளர்க்க முடியும். இந்த மீன்கள் வருஷம் ஒன்றுக்கு 50 ஜோடி இனவிருத்தி மீன்களை உற்பத்தி செய்யும். இந்த 50 ஜோடி மீன்கள் வருஷத்துக்கு 10 லட்சம் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்யும். இவ்விதம், ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள இரண்டு நீர் நிலைகளிலிருந்தும் 20 லட்சம் மீன்குஞ்சுகள் கிடைக்கும். இந்த 20 லட்சம் முட்டைகளிலிருந்து மீன் குஞ்சுகள் உண்டாக்குவதற்காக, ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொன்றும் நான்கு மீன்வளர்ப்புப் பண்ணைகளைக்கொண்ட இரண்டு நிலையங்கள் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையத்திலும் நான்கு நீர்நிலைகளைக் கொண்ட ஒரு யூனிட் இருக்கும். நீர் நிலைகளின் அளவு 20 அடி ×15 அடி ×5அடி. வருடத்துக்கு 2.50 லட்சம் மீன் குஞ்சுகளை வளர்க்க இவை ஏற்றதாக இருக்கும். இயற்கையான நீர் வசதி உள்ள இடங்களில்தான் (ஊற்று நீர் அல்லது பாசனத்துக்கு விடப்படும் நீர்) இந்தப் பண்ணைகளை நிர்மாணிக்க வேண்டி இருந்தது. ஒரு செட் பண்ணைகளை நிர்மாணிக்கவும், மீன்வளர்ப்பு நீர்நிலைகளில் மராமத்து வேலைகள் செய்யவும் ரூ. 5,400 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. இந்தச் செலவுத்தொகை அரசாங்க மான்யத்திலிருந்தும், பஞ்சாயத்துக்கள் தரும் நிதியிலிருந்தும் சரி செய்யப்படும். இந்த விகிதாச்சாரம் 2 : 1 ஆகும். ஆகவே, ஒரு வட்டாரத்திலுள்ள இரண்டு நிலையங்களுக்கு அரசாங்கம் தரும் மான்யம் ரூ. 7,200 ஆகும். எஞ்சிய ரூ. 3,600-ஐ பஞ்சாயத்து தரவேண்டும்.

இந்தப் பண்ணைகளில், வளர்ப்பதற்கென்று, கெண்டை மீன் இனங்களைக் கருத்தரிக்கச் செய்து மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய வேண்டும். வட்டாரங்கள், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களையும், மற்றும் இதர தொழில் நுணுக்க வசதிகளையும் பெற்றிராமையால், அவைகளால் இந்தக் காரியத்தை நிறைவேற்றமுடியாது. எனவே, இந்தப் பணியை மீன் வளத்துறைதான் கவனிக்க வேண்டும். மணிமுத்தாறு, வைகை அணை, அமராவதி, பூண்டி, சாத்தனூர் அணை இந்த ஐந்து இடங்களிலும் ஒவ்வொரு கருத்தரிக்கச் செய்யும் நிலையம் ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது. 1963-64-ம் ஆண்டுக்கான இரண்டாம் பிரிவு திட்டத்தின் கீழ், மேட்டூர் அணை, லால்பேட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொரு நிலையம் ஏற்படுத்தப்படும். இந்த நிலையங்களில் உற்பத்தியாகும் முட்டைகள் வட்டாரங்களில் உள்ள பண்ணைகளில் வளர்ப்புக்காகத் தரப்படும். இந்தப் பண்ணைகள் மீன்களை வளர்த்து அவைகளைத் திரட்டும். பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான நீர் நிலைகள்மட்டுமின்றி, அரசாங்கத்துக்குச் சொந்தமான

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் தொகைக் கணக்கெடுப்பும், பிறப்பு இறப்புக் கணக்கெடுப்பும் சிறந்த முறை என்பதோடு, பல நாடுகளும் பயன்படுத்தும் முறையுமாகும். இப்புள்ளி விவரங்கள், சில ஆராய்ச்சிகளுக்கு, உண்மையான, மதிப்புள்ள விவரங்கள் என்பதோடு மட்டுமன்றி, மக்கள் தொகையைப் பகுத்தறிந்து ஆராயவும், எடுத்துக்காட்டாகத் தேர்ந்தெடுக்கவும், பிற மக்கள் தொகைக் கணக்குடன் ஒத்திட்டுப் பார்க்கவும், செயல்படும் திட்டங்களின் பயனை மதிப்பிட்டுப் பார்க்கவும் பயன்படும் முக்கியமான விவரங்களாகும். இந்த எண்ணத்துடன் தான், அரசாங்கம், இந்த ஆண்டிடை மக்கள் தொகை மதிப்பீட்டுப் பணியை நடத்த முடிவு செய்துள்ளது. பஞ்சாயத்தார்களுக்குச் சரியான விவரங்களைக் கொடுப்பதன் மூலம், பொது மக்கள் இப்பணியில் முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேம்.

[கிராமப் பகுதிகளில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவது குறித்த அரசாங்க ஆணைகள், 1962, ஏப்ரல்; 1963, ஜூன் கிராம நல இதழ்களின் "பஞ்சாயத்து அரங்கத்தில், வெளியிடப்பட்டுள்ளன.]

ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் செய்முறைப் பயிற்சி காட்டுவதற்கான நீர்நிலைகளும் உள்ளன. இவைகளும் மீன் உற்பத்தித் திறன் பெறவேண்டும் என்பதற்காக, இங்கும் மீன் குஞ்சுகளை வளர்த்துத் திரட்ட வேண்டியிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 1,500 மீன் குஞ்சுகள் என்ற பழைய மீன் வளர்ப்பு அடிப்படை வீதத்தில் 57·4 ஏக்கர்களுக்கு மீன்குஞ்சுகள் தேவைப் படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வட்டாரங்களில் உள்ள பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்களில் 25 சத வீதம் உயிருடன் இருக்குமானால், இத்திட்டம் செயல்படத் தொடங்கி ஐந்தாவது ஆண்டான 1966-67-ல் 48 கோடி மீன் குஞ்சுகள் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. திட்டமிடப்பட்டுள்ள 100 வட்டாரங்களிலும் உரிய காலத் தில் எல்லாப் பண்ணைகளையும் கட்டினால்தான் இது சாத்தியம். மீன் அளத்துறையின் நிர்வாகத்தில் உள்ள நீர்நிலைகளில் மீன்களை வளர்த்துத் திரட்டுவதற்காக மீன் அளத்துறை மீன் வளர்ப்புப் பண்ணைகள் நடத்த ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 11 நிலையங்களில் மீன் வளர்ப்புக் குளங்கள் நிர்மாணிக்கப்படும். இவைகள் 3 கோடி மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும். இதற் கான நிர்மாண வேலை திட்டமிடப்பட்ட முறையில் மூன்று ஆண்டுகளில் பூர்த்தி அடையும். இவ்விதமாக வட்டாரங்களில் மீன் வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டம்; கருத்தரிக்கச் செய்யும் நிலையங்களை ஏற்படுத் தும் திட்டம்; மீன் அளத்துறையின் தீவிர மீன் முட்டை சேகரிப்புத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :

1. கருத்தரிக்கச்செய்யும் நிலையங்கள், குஞ்சு பொரிக்கச்செய்யும் நிலையங்கள் வட்டாரங்களுக்கும் அரசாங்க மீன்அளத் துறைக்கும் பொதுவானவை. 96 வட்டாரங்களில் உள்ள பண்ணைகளில் வளர்ப்புக்காக மீன் முட்டைகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும். அரசாங்க மீன்அளத் துறைப் பண்ணைகளில் தேவையான மீன் குஞ்சுகள் அதன் பண்ணைகளிலேயே உற்பத்திச் செய்யப்படும். குஞ்சு பொரிக்கச் செய்வதற்கான பெரிய மீன்கள் கிராமப்புற மீன்கள் செய்முறைப்பயிற்சி காட்டும் நீர் நிலைகள் சிலவற்றில் வளர்க்கப்படும். இவை இன விருத்தி செய்யும் மீன் வளர்ப்பு நீர் நிலைகளாகவே ஒதுக்கப்படும்.

2. ஒவ்வொன்றும் நான்கு பண்ணைகளைக்கொண்ட 10 யூனிட்டுகள் கட்டும் வேலை 96 வட்டாரங்களிலும் நடை பெறும். இந்தப் பண்ணைகளில் மீன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கவைத்து, அவற்றை வளர்த்தப் பின்பு, அவை களைத் தனது எல்லைக்குள் அடங்கிய நீர்நிலைகளில் வளர்க்க அனுப்புவது பஞ்சாயத்துக்களின் வேலை. பஞ்சாயத்து களுக்கு முட்டைகளை இலவசமாக வழங்கலாம். அருகி லுள்ள முட்டை உற்பத்தி நிலையங்களிலிருந்து முட்டை களைக் கொண்டு வருவதற்கான செலவுகளை மட்டும் பஞ்சா யத்துக்கள் செலுத்தவேண்டி ஏற்படலாம். மற்றப்படி, பண்ணைகளை நிர்மாணிப்பது, பராமரிப்பது, மற்றும் மீன் வளர்ப்பைக் கண்காணிப்பது ஆகியவை பஞ்சாயத்துக் களின் பொறுப்பாகும். மீன் அளத்துறையினரால் தொழில் நுணுக்க உதவிகள் தரப்படும்.

ஆகவே இந்த ஒருங்கிணைப்புத் திட்டமானது பண்ணைகள் நிர்மாணிப்பதிலும், பஞ்சாயத்து நீர் நிலைகளில் மீன்களை வளர்த்துத் திரட்டுவதற்காக மீன் முட்டைகளை உற்பத்தி செய்வதிலும் ஒரு முக்கியமான இணைப்பை ஏற்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(மீன் அளத்துறை டைரக்டர் அளித்த குறிப்புகளிலிருந்து)




திரு கா. வெ. தியாகராசன், பரமலை.

வேலெடுத்து வெம்பகைவர் கூட்டம் நோக்கி
விரநடை வெற்றிநடை விரிந்த மார்பும்
தோளெடுத்து நெஞ்சுயர்த்தித் துணிவை ஏற்றி,
இடங்கொண்ட இதயத்தின் நடையைத் தாங்கி,
தாளெடுத்து நமதெல்லை வைத்த சீனன்
தாளறுத்துச் சூளுரைத்துத் தலையைச் சாய்த்து
வாளெடுத்து வெற்றியுடன் வாகை சூடி
வந்திடவே புறப்படுவீர் வெற்றி கொள்வோம் !

பாட்டுக்குப் புகழ்மாலை சூட்ட வந்தோம்,
பழிசெய்யும் எண்ணத்தால் பதுங்கி வந்தான்,
கூட்டுப்புள் விடுதலைக்கு வழியைச் செய்தோம்,
கொலைசெய்யும் நெஞ்சத்தால் கலகம் செய்தான்,
வீட்டுக்கு வழி செய்து எழிலைச் செய்தோம்,
வீரர்கள் என்பதையே விளக்கி விட்டார்,
நாட்டுக்கு எல்லையினை வகுத்துத் தந்தோம்,
நாடாளும் எண்ணத்தால் நெருங்கி விட்டான் !

ஆதிக்கம் செலுத்திடவே சூழ்ச்சி செய்து
அடியெடுத்து வைத்திட்டான் அமுத மண்ணில்,
பாதிக்கப் படுவோர்நாம் ; நமது சொந்தம்
பயந்தோடும் இனமல்ல ; வேலைத் தாங்கி
வீதிக்குப் பலவீரர் கிளம்பி விட்டார்,
வீரர்கள் நெஞ்சத்தை உடைத்து விட்டார்,
நீதிக்குச் சாவில்லை, நேர்மை யோங்கும்,
நின்றுலவும் புகழ்வாழும் வெற்றி கொள்வோம்!

* * *

உடலென்ன ? உயிரென்ன ? உவகை என்ன ?
உழைத்தற்குப் பதில்சொல்ல உறக்க மென்ன ?
மடலென்ன ? மகிழ்வென்ன மனைவி யர்க்கு ?
மாற்றானின் திறம்பாடும் படையோ டுக்க ?
கடலென்ன ? நிலமென்ன ? கயவர் தன்னைக்
கணக்கின்றி வீழ்த்திவிடத் தடையைச் சொல்ல ?
குடலென்ன பாம்புள்ளும் தருக்கர் சீனர்
கொள்கைக்குச் சாவுமணி அடித்து வெல்வோம் !





## பொள்ளாச்சி வட்டார மாதர் சங்கம்

திருமதி முத்துலட்சுமி பாலதுரைசாமி, மாக்கினாம்பட்டி, கோயமுத்தூர் மாவட்டம்.

பொள்ளாச்சி பஞ்சாயத்து யூனியனில் 25 மாதர் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில், சுமார் 500 அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கிறார்கள். இந்த மாதர் சங்கங்களிலிருந்து 45 பெண்களைக் கொண்டு ஒரு கல்விச் சுற்றுலா அமைக்கப்பட்டது. நெய்வேலியிலும், சென்னை யிலும் தங்க முறையே பொதுநலத் துறை பங்களாவிலும் எம். எல். ஏ. ஹாஸ்டலிலுமாக தக்க வசதிகள் சர்க்காரால் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. ஆகவே, பெண்கள் ஐந்து தினங்களும் எவ்வித அசௌகரியமோ, மனச் சோர்வோயின்றி வெகு உற்சாகமாக சென்று வந்தார்கள். நெய்வேலியில் கிடைக்கும் வெள்ளைக் களிமண்ணால் கோப்பை, பொம்மை முதலியன போன்ற பொருள்களை கிராமங்களிலும் குடிசைத் தொழில்கள் மூலம் செய்து கொள்ளமுடியும் என்பதைத் தெரிந்து அதற்கான தகுந்த ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து வருகின்றோம்.

அதே போன்று, சென்னையில் கவர்னர் திரு. மேதி அவர்களும், கவர்னரின் மனைவியார் திருமதி மேதி அவர் களும் எங்களை ராஜபவனில் வரவேற்று தேனீர் கொடுத்து உபசரித்து, கவர்னர் அவர்கள் சுமார் 45 நிமிடங்கள் எங்களுக்கு ஒரு விரிவான சொற்பொழிவு ஆற்றினார்.

கவர்னர் அவர்களும் அவரது மனைவியார் அவர்களும் எங்களது மத்தியிலிருந்து எடுத்துக்கொண்ட புகைப் படங்கள் எங்களது வீடுகளில் என்றென்றும் நினைவூட்டும் சின்னமாக விளங்கும் என்பதை இங்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமத்தில் வாழ்ந்துவரும் எங்களை, கவர்னர் அவர்கள் ராஜபவனத்தில் வரவேற்று உபசரித்து நல்லுரை வழங்கியது கவர்னர் அவர்களும் அவரது மனைவியாரும் பரந்த உள்ளத்தை படைத்தவர்கள் என்பதையும் அவர்கள் கிராம அபிவிருத்தியில் மிகவும் அக்கறை கொண்டுள்ளவர்கள் என்பதையும் எடுத்துக் காட்டுவதாகும். இது கிராமப் பெண்களுக்கெல்லாம் ஊக்கத்தை அளிப்பதாகும்.

### தாம்பரம் சேவை இல்லம்

மற்றொரு விஷயம் : எங்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது தாம்பரத்திலுள்ள சேவை இல்லம். இந்த இல்லம் குடும்ப வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த தாய் மார்களுக்கும், மணமாகாத, மனமுடைந்த இளம் பெண்களுக்கும் வாழ்க்கையளிக்கும் ஒரு இல்லமாகும். இங்கு நூற்றுக்கணக்கான அனாதைப் பெண்களும் அவர் களது சிறு குழந்தைகளும் இருக்கின்றார்கள். இத்தகைய இல்லங்கள் இல்லாமற் போகுமேயானால், இவர்களது வாழ்க்கை என்னவாகுமென்பதை சிந்திக்கவே முடியாது. ஆனால், இத்தகைய இல்லங்களில் சேரமுடியாத பெண்கள் இன்றும் அனாதையாக வெளியில் இருந்து வருகிறார்கள். இந்த சேவையில்லத்தில் வந்து சேரும் பெண்கட்கு வயது கட்டுப்பாடின்றி எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப் படுகிறது. மேலும், அவர்களுக்குப் பாய் முடைதல், நூற்றல், தேனீ வளர்த்தல், நெய்தல், தையல், பாட்டு போன்றவைகள் கற்பிக்கப்படுகிறது. ஆகவே, இங்கு பயிற்சி பெற்றவர்கள், வெளியில்சென்று, உடனே ஒரு தொழிலில் அமர்ந்து அவர்களது வாழ்க்கைக்கான வருவாயைத் தேடிக்கொள்ள இந்த இல்லம் பெரிதும் உதவுகிறது. அத்துடன், சில பெண்களின் சிறு குழந்தைகளுக்கும் உணவளித்து கல்வி கற்பிக்கப்படுகிறது. பெண்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரு. 25 வீதம் அரசாங்க மானியம் தருகிறார்கள். இன்னும் பெண்கள் சிக்கனமாக வாழ்ந்து அந்தத் தொகையிலேயே அவர்களும், குழந்தைகளும் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள்.

இல்லத்தின் சிறப்பிற்கு முக்கிய காரணம் அதன் கண் காணிப்பாளரும் அதன் ஆசிரியைகளும் எடுத்துக் கொள்ளும் சேவை மனப்பான்மையுமேயாகும். நல்ல சூழ்நிலையில் அமைக்கப்பட்ட இந்த இல்லத்தில் மன முடைந்து வந்த பெண்களின் முகத்தில் ஒளியையும், அமைதியையும் காணமுடிகிறது. குழந்தைகளின் குதூகல முகங்கள் எங்கள் மனதை விட்டு அகலாத ஒரு காட்சியாகும். இத்தகைய இல்லமொன்றை எங்களது வட்டாரத்திலும் அமைக்க நாங்கள் உறுதி கொண்டுள் ளோம். எல்லா வட்டாரத்திலுள்ள மாதர்களும் இந்த சேவை இல்லத்திற்கு விஜயம் செய்ய நேருமேயானால், இத்தகைய இல்லங்களை அவரவர்களது வட்டாரங்களிலும், அமைக்க அது ஊக்குவிக்கும் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை.

### மகாத்மாவின் கனவு நனவாக.

நாங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு சுற்றுலாவை அமைத்ததின் மற்றொரு பலன் மாநிலக் கிராம அபி விருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர் களின் அறிவுரையையும் நேரில் கேட்கக் கிடைத்த வாய்ப்பே யாகும். அவர்கள் தனது அறிவுரையில் நம் நாட்டுத்தந்தை மகாத்மாகாந்தி கண்ட புத்துணர்வு பெற்ற கிராமங்கள்

# பிழை நீக்கி எழுதுவோம்

ㅇ "கேழ்வி" என்பது பிழையாகும்—
இதனைக் "கேள்வி" என்றெழுதுதல் வேண்டும்.
(கேள்—பகுதி) உதாரணம் கேள்வி முயல்
(ஆத்திச்சூடி)

ㅇㅇ "கோர்த்து" என்றெழுதுவது தவறு.
இதனைக் "கோத்து" என்றெழுதுதல் வேண்டும்.
உதாரணம் "தெள்ளிதிற் கோத்து"—
(நைடதம்)
இதே போல் "கோர்வை" என்பதும் [பிழையாம்
இதனைக் "கோவை" என்றெழுதுக.

ㅇㅇㅇ 'எண்ணை' என்றெழுதலாகாது. இதனை
'எண்ணெய்' என்றெழுதுக.
(எள் நெய் எண்ணெய்)
இதே போல் 'வெண்ணை' என்பதும் தவறு.
இதனை 'வெண்ணெய்' என்றெழுதுதல் [சரியாகும்.

ㅇㅇㅇㅇ பலர் "அடமானம்" என்று எழுதுகிறார்கள்.
"அடமானம்" என்பது தவறு.
"அடைமானம்" என்பதுதான் சரியான சொல்.

ㅇㅇㅇㅇㅇ "ரொம்ப" என்ற சொல் பிழையாகும்.
"நிரம்ப" என்பது எளிய சொல். நல்ல தமிழ்.

---

எப்படியிருக்க வேண்டுமென்பதை வெகுவாக விளக்கிக் கூறினர். அவர்கள் எங்களுக்கு ஆற்றிய அறிவுரையில் ஒவ்வொரு கிராமங்களிலும் தொண்டர் படை அமைப்பது, அதில் பெண்கள் என்ன பங்கு கொள்ள வேண்டுமென்பதையும் கூறினர்.

காந்தியடிகள் சொல்லியது போல, கிராமத் தொண்டர் படை அமைத்து, கிராமத்திற்குத் தேவையான பொதுக் காரியங்களை கிராமத்தார்களே தொண்டர் படையிலே தாஞகவே முன் வந்து தங்களது உழைப்பைக் கொடுத்து கிராமத்தை சுத்தமாகவும், நல்ல குடி தண்ணீர் வசதிகளுடனும், பள்ளிகள் அமைத்தும், உணவு உற்பத்திக்குத் தேவையான எருவை சேகரித்தும், பயிர்களை கிருமிகளிலிருந்து காப்பாற்றியும், கோழிப் பண்ணைகளமைத்தும், ஆடு, மாடுகள், மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு முதலியவைகளில் அதிகக் கவனம் செலுத்தியும், குடிசைத் தொழில்களாலான தையல் மிஷின், ராட்டை முதலியவைகளாலும் கிராமத்தில் வருவாயைப் பெருக்கியும், அதே சமயத்தில்

கிராம வானொலி மன்றங்களுக்கு

## முக்கிய அறிவிப்பு

தமிழ் நாடெங்கும் 'கிராம வானொலி மன்றங்'கள் அமைக்கப்பட்டு, செயல்புரிந்து வருவது யாவரும் அறிந்ததே. வானொலியில் கிராம நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்புகள், மன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் முதலியன அடங்கிய "ரேடியோ மன்றம்" என்ற தமிழ் மாத வெளியீடு ஒன்றை, 1963 ஜூலை மாதம் முதல் அரசாங்கம் வெளியிடும். கல்வி வளர்ச்சி அதிகாரிகள் (Extension Officers for Education) இந்த வெளியீட்டைத் தவருமல், கவனமாகப் படித்து, அதில் அடங்கியுள்ள விவரங்களை, 'கிராம வானொலி மன்றங்'களின் அமைப்பாளர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். இந்தப் புதிய வெளியீடு, பஞ்சாயத்து யூனியன் செய்தி நிலையங்கள், கல்வி வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோருக்கு மட்டும் (ஒவ்வொருவருக்கும் ஒரே பிரதி வீதம்) அனுப்பப்பெறும். வானொலி சம்பந்தமான தொழில் நுட்பச் செய்திகளும், கிராம வானொலி மன்றங்கள், கிராம நலத்திட்ட நிகழ்ச்சிகள் சம்பந்தமான விவரங்கள் அடங்கியுள்ள இந்த வெளியீடு, கிராமத் தொண்டர் படையின் அறிவுச் சாதனமாக பயனளிக்கும் வகையில் சேவை செய்யும் என்று நம்புகிறோம்.

—தலைமை அமைப்பாளர்,
கிராம வானொலி மன்றம்.

## நமது பண்பாட்டின் கலங்கரை விளக்கு

### "பாரத நாட்டு மாதரசிகள்"

**புதிய கட்டுரைத் தொடர்**

பாரத நாட்டின் நல்வாழ்வுக்கு, தாய்க்குலம் அரும் பணியாற்றியுள்ளது. கஸ்தூரிபா காந்தி, அன்னி பெசண்ட் அம்மையார், சரோஜினி தேவி முதலான மாதரசிகளின் திரு நாமங்களை, யார்தான் மறக்க முடியும்? பாரத நாட்டுப் பழம் பெரும் பண்பாட்டின் ஒளிவிளக்குகளாயுள்ள மாண்பு மிக்க மாதரசிகளின் வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்து, கட்டுரைத் தொடராக மாதந்தோறும் "கிராம நல"த்தில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இக் கட்டுரைத் தொடர் மாதர் அனைவருக்கும், சிறப்பாக, பள்ளிக்கூட மாணவிகளுக்கு, பெரிதும் பயன்படும் என நம்புகிறோம்.

—ஆசிரியர்

---

சிக்கனத்தைக் கையாண்டு, ஈட்டிய பொருளை சேமிப்பு திட்டங்களில் செலுத்திப் பாதுகாத்து அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்ற எல்லாக் கிராம ஆண், பெண் அனைவரும் இரண்டு முன் வருவார்கள் என உறுதியாக நம்புகிறேன்.



## கூட்டுறவே நாட்டுயர்வு

**விளாத்திகுளம் வட்டாரத்தில் கூட்டுறவு வேளாண்மை நிலக் குடியேற்ற சங்கம்.**

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் காடும், செடியுமடர்ந்து தரிசாக இருந்த ஓர் இடம், இன்று பொன் கொழிக்கும் விளைநிலமாக மாறியுள்ள காட்சியை, கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்கள் திருநெல்வேலி வடக்கு அபிவிருத்தி மாவட்டம் விளாத்திகுளம் பஞ்சாயத்து யூனியன் சுற்றுப்பயணத்தின்போது கண்டு மகிழ்ந்தார். வைப்பார் நதியின் தென் கரையிலே புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 100 ஏகர் புறம்போக்கு தரிசு நிலங்களைக் கூட்டுறவு முறையில் வேளாண்மைச்சங்கம் நிறுவி, பண்படுத்தி, விளை நிலமாக்கப்பட்டிருக்கிறது. 52 அங்கத்தினர் கொண்ட இந்த வேளாண்மை நிலக் குடியேற்றச் சங்கத்தில் 22 ஆதி திராவிடர்கள் பங்கு கொண்டுள்ளனர். ஏனைய 30 அங்கத்தினர்களும், மறவர், ரெட்டியார் முதலிய பல வகுப்பைச் சார்ந்த விவசாயிகள். ரூ. 1,763 பங்குத் தொகையுடன் ஆரம்பிக்கப்பட்டு திருநெல்வேலி கூட்டுறவு மத்திய பாங்கின் மூலதன உதவியுடன், இச் சங்கம் நடைபெற்று வருகிறது. மொத்தம் நிலப்பரப்பு 82·50 ஏக்கரையும் சரி சமமாக 52 அங்கத்தினர்களுக்கும் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. விளைபொருட்களை சங்கத்தின் மூலம் விற்பனை செய்தும், கூட்டுறவு முறையில் விவசாயத்திற்கு வேண்டிய கடன் உதவி பெற்றும், இன்னும் பல்வேறு துறைகளிலும் கூட்டுறவு இலாகாவின் உதவி பெற்று, இச் சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. குடியேற்றப்பட்ட பண்ணையில் சுமார் ரூ. 200 செலவில் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு கிணறு தோண்டி, தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ஏக்கர் 1·52-ல் கம்பு, மிளகு வத்தல், தக்காளி ஆகிய பயிர்கள் சாகுபடி செய்கிறார்கள். ஆற்றோரமாய் அமைந்த இக்கிணறுகள் ஊற்றுல் பெருக்கெடுத்து போதிய பாசன வசதி அளித்து வருகின்றன.

வண்டல் படிந்த இந் நிலங்கள், உரச் சத்து நிரம்பப் பெற்று, உயர்ந்த மகசூல் அளித்து வருகின்றன. குடியேற்றப்பட்ட 82·50 செண்டு நிலமும் ஆண்டு 1-க்கு சராசரி ரூ. 60,000 முதல் 1,00,000 மதிப்புள்ள மகசூல் கொடுத்து வருவதினால் ஆண்டு 1-க்கு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நிகர வருமானம் ரூ. 900 வரை கிடைக்கிறது.

**கடன் வசதி—**

ஆண்டுதோறும் அங்கத்தினர்களுக்குத் தேவையான மூலதனக் கடனாக ரூ 5,200 திருநெல்வேலி கூட்டுறவு மத்திய பாங்கு வழங்கி வருகிறது. இது தவிர, அங்கத்தினர்களுக்குத் தேவையான உரமும், இதர விவசாயப் பொருள் வாங்கும் பொருட்டு, ரூ. 10,000 வரை இச்சங்கத்திற்கு தூத்துக்குடி விற்பனை விநியோகச் சங்கத்தின் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. இக் கடன்களை அங்கத்தினர்கள் தவணைப்படி தவருமல் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கும், நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்குத் தேவையான நிலமும் பாசன வசதியும், பொருள் உதவியும் அளிப்பதற்கும், கூட்டுறவு முறையில் அமைந்த ஓர் முன்னோடித் திட்டமாக இச் சங்கம் அமைந்துள்ளது. இவ்வட்டாரத்திலுள்ள இதர தரிசு நிலங்களையும், குறிப்பாக வைப்பாற்றின் கரை ஓரங்களிலுள்ள தரிசு நிலங்களை பயன்படுத்தும் பொருட்டு, பல இடங்களிலும் இம்மாதிரிச் சங்கங்களை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

---

## தமிழ் நாட்டில் கிராமத் தொண்டர் படையில் பதினறு லட்சம் பேருக்குமேல் சேர்ந்துள்ளனர்

—x—

கிராமத் தொண்டர் படையில், நாடு முழுவதிலுமாக, இதுவரை மொத்தம் 97 லட்சம் பேருக்கு மேல் சேர்ந்துள்ளனர் என்றும், மொத்தம் 184 லட்சம் நபர் நாட்களுக்கு மேல் உடலுழைப்பை அளிக்க பாதுகாப்பு வேலைகள் தொழிலாளர்கள் திரள்கள் பலரிடமிருந்து உறுதி பெற்றுள்ளன என்றும் ராஜ்யங்களிலிருந்தும் மத்திய நிர்வாகப் பிரதேசங்களிலிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கைகளிலிருந்தும் தெரிய வந்துள்ளது. உறுதியளிக்கப்பட்டுள்ள உழைப்பின் ரொக்க மதிப்பு 2.5 கோடி ரூபாய்க்குக் கணக்காகிறது.

தமிழ்நாடு உள்பட, பல ராஜ்யங்களில், மாதர்கள் இத்திட்டத்தில் பெரிதும் அக்கறை காட்டியுள்ளதுடன், பெருவாரியாகவும் படையில் சேர்ந்துள்ளனர். இப்படை மேற்கொண்டுள்ள திட்டங்கள், ஆக்க ரீதியில் உள்ளவையாகவும், ஸ்தல நிலைமைகளுக்கு ஏற்பதாகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கிராமத் தொண்டர் படைக்கான தளபதிகள், உப-தளபதிகள், அங்கத்தினர்கள் ஆகியோரின் பயிற்சி ஏற்பாடுகள் விஷயத்திலும் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 11,25,000 பேர் கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ளனர். இவர்களில் 42,000 பேர் பெண்களாகும். பாதுகாப்பு வேலைகள் தொழிலாளர் திரள்களுக்கு மொத்தம் 25,08,000 நபர் நாட்களுக்கு உழைப்பை நன்கொடையாக அளிக்கவும் உறுதி கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் மாதர்கள் கிராமத் தொண்டர் படையில் காட்டிவரும் தீவிர ஆர்வத்தைக் கண்ணுற்று, தமிழ்நாடு அரசாங்கம் ஸ்திரீ தொண்டர்களுக்கென தனியாக தீவிரப் பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

## சீரமைக்கப்பட்ட செகண்டரி கல்வித் திட்டம்

ஆரம்பக் கல்வியையும், செகண்டரி கல்வியையும் திருத்தியமைக்கக் கல்வி வெள்ளையறிக்கை பற்றிய சட்டசபைக் கமிட்டி தெரிவித்த சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு, பள்ளிப்படிப்பை 1 முதல் 7 ஸ்டாண்டர்டுகள் கொண்ட ஏழாண்டுக்கால ஆரம்பக் கல்வியும் 8 முதல் 11 ஸ்டாண்டர்டுகள் கொண்ட நான்காண்டுக் கால உயர் தர செகண்டரி கல்வியும் ஒருங்கிணைந்த கல்வி முறையாக அமலாக்க, 1957-ல். அரசாங்கம் உத்தரவிட்டது. மேற்கொண்டு கல்விமுறை திருத்தியமைக்கப்படும்வரை, 1962–63-ல் திறக்கப்பட்ட வேண்டிய 11 ஸ்டாண்டர்டைத் தள்ளி வைத்தும், அது ஏற்படுத்தப்படும் வரை 1961–62-ல் திறக்கப்பட்ட 10 ஸ்டாண்டர்டு செகண்டரி பள்ளிப்படிப்பில் இறுதி வகுப்பாக இருக்கும் என்றும், 10 ஸ்டாண்டர்டு முடிவில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை நடத்தப்படும் என்றும் அரசாங்கம் 1961-ல் உத்தரவிட்டது.

அரசாங்கம் பின்னர் பரிசீலனை செய்து, ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களையும் ஆராய்ந்து, மாநிலக்கல்வி ஆலோசனைக் கமிட்டியின் ஆலோசனையைக் கேட்டது. கமிட்டி தெரிவித்த கருத்துக்களை, ஒரு குறிப்பில, அரசாங்கம் 1963 மார்ச் 25-ம் தேதி சட்டசபை முன்பு வைத்தது. அந்தக் குறிப்பில் சொல்லப்பட்ட கல்வி முறையைச் சட்டசபை ஏற்றுக்கொண்டது.

எனவே, முந்திய உத்திரவுகளை நீக்கிவிட்டு அரசாங்கம் தற்போது பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது :—

இந்த மாநிலத்தில் பள்ளிப்படிப்பு 11 ஆண்டுகள் கொண்ட செகண்டரி கல்வியாக இருக்கும் ; அதில் 1 முதல் 11 ஸ்டாண்டர்டுகள் இருக்கும். இவை பின்வரும் வகையில் அமையும்.

1 முதல் 5 ஸ்டாண்டர்டுகள் — ஆரம்பக்கல்வி.

6 முதல் 8 ஸ்டாண்டர்டுகள் — உயர்தர ஆரம்பக் கல்வி.

9 முதல் 11 ஸ்டாண்டர்டுகள் — செகண்டரி கல்வி.

11 ஸ்டாண்டர்டு முடிவில் எஸ்.எஸ் எல்.சி. பொதுப் பரீட்சை நடத்தப்படும். உயர்தர செகண்டரிக் கல்வி ஆரம்பிக்கப்பட மாட்டாது. செகண்டரிக் கல்வி முடிந்த பிறகு, ஓராண்டு பிரி-யூனிவர்சிட்டி வகுப்பு இருக்கும். அது தற்போதுள்ளது போலவே, கல்லூரிகளில் இருந்து வரும். புதிய பதினோராண்டு ஒருங்கிணைந்த செகண்டரி கல்வி 1963–64 பள்ளி ஆண்டு முதல் அமலாக்கப் படும்.

புதிய 8 ஸ்டாண்டர்டு 1963–64-ல் தொடங்கப்படும். தற்போது 1 முதல் 6 ஸ்டாண்டர்டுகளில் உள்ள மாணவர்கள் 1963–64 பள்ளி ஆண்டுத்தொடக்கத்தில் முறையே அடுத்த உயர் ஸ்டாண்டர்டுக்குச் செல்வார்கள். 1 முதல் 6 ஸ்டாண்டர்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் அந்த அந்த ஸ்டாண்டர்டுகளிலே மேலும் ஓராண்டுக் காலத்திற்குப் படிப்பார்கள். தற்போதைய ஒருங்கிணைந்த 7 ஸ்டாண்டர்டில் படிக்கும் மாணவர்கள் புதிய ஸ்டாண்டர்டு 8-க்குப் போவார்கள்.

1963–64-ல் ஏற்படும் புதிய ஸ்டாண்டர்டு 8, உயர்தர ஆரம்பக்கட்டத்தில் இறுதி வகுப்பாக இருக்கும். இந்த கட்டத்தின் இறுதியில் பொதுப்பரீட்சை எதுவும் இருக்காது. 1963–64-ம் ஆண்டு புதிய ஸ்டாண்டர்டு 8-ல் பின்வரும் பிரிவு மாணவர்கள் இருப்பார்கள் (1) தற்போதைய ஸ்டாண்டர்டு 7 அல்லது பேசிக் கிரேடு 7 தேறிய மாணவர்கள் ; (2) ஸ்டாண்டர்டு 8 ஈ.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறாத மாணவர்கள் ; (3) மூன்றாவது பாரத்தில் தேறாத மாணவர்கள்.

1963–64-ல் ஸ்டாண்டர்டு 8-ல் பின்பற்றப்படும் பாடத் திட்டமும் பாடப் புத்தகங்களும் பெரும்பாலும் 1962–63-ல் மாணவர்கள் ஸ்டாண்டர்டு 7-ல் இருந்தபொழுது பரிச்சய மானவையாகவே இருக்கும். ஆகையினால், தற்போதைய ஸ்டாண்டர்டு 7-ல் உள்ள மாணவர் எவரும் 1962–63-பள்ளி ஆண்டு இறுதியில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

தற்போதைய ஒருங்கிணைந்த ஸ்டாண்டர்டுகள் 8, 9, 10 முறையே 9, 10, 11 ஸ்டாண்டர்டுகள் என மறு பெயர் பெறும். தற்போதைய ஒருங்கிணைந்த 8, 9 ஸ்டாண்டர்டுகளில் தேறிய மாணவர்கள் முறையே 10, 11 ஸ்டாண்டர்டுகளுக்குச் செல்வர். அதே சமயத்தில், தற்போது 10 ஸ்டாண்டர்டு முடிக்கும் மாணவர்கள் 1962–63 இறுதியில் பள்ளியை விட்டுவிடுவர். 1963-64-ல் புதிய 9 ஸ்டாண்டர்டில் (மூன்றாவது செகண்டரி படிப்பில் முதல் வகுப்பு) பின்வரும் மாணவர்கள் இருப்பர்: (1) மூன்றாவது பாரம் தேறிய மாணவர்கள் ; (2) ஆங்கிலத்தை இஷ்டபாடமாகக் கொண்டு ஸ்டாண்டர்டு 8 ஈ.எஸ் எல்.சி. தேறிய மாணவர்கள் ; (3) ஆங்கிலத்தை இஷ்ட பாடமாகக் கொண்டு சீனியர் பேசிக் பள்ளி 8 கிரேடு தேறிய மாணவர்கள் ; (4) தற்போதைய 8-வது ஸ்டாண்டர்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் 1962–63 இறுதியில் தற்போதைய ஒருங்கிணைந்த 8, 9 ஸ்டாண்டர்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் முறையே 9, 10 புதிய ஸ்டாண்டர்டுகளில் படிப்பர். 10 ஸ்டாண்டர்டு முடித்து 1963-ல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குப் போன மாணவர் எவரேனும் மறுபடியும் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பினால், அவர் 11 புதிய ஸ்டாண்டர்டில் சேர்த்துக்கொள்ளப்படுவார்.





## கி ரா ம ந ல ம்

### கௌரவ நிருபர்கள் (HONORARY CORRESPONDENTS) நியமனம்

தமிழ்நாடெங்கும் கிராமத் தொண்டர் படை அமைக்கப் பட்டு, சீரிய பணியாற்றிவருகிறது. இப்படையினர் ஆற்றி வரும் ஆக்கப்பணிகளும் மற்றும், பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தமான விவரங்களும் "கிராம நலத்தில்" தக்க வகையில் இடம் பெறவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த முடிவினை ஒட்டி, "கிராம நல"த்திற்கு இச்செய்திகளைத் தொகுத்து அனுப்புகின்ற பணியினைச் செய்ய ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் கௌரவ நிருபரை அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நியமனம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. (1963-ம் ஆண்டு மார்ச்சு மீ 12-ந் தேதியிட்ட கிராம நல—தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் : 551)

இந்த உத்தரவின்படி, கீழ்க்கண்டவர்கள், "கிராம நல"த்தின் கௌரவ நிருபர்களாக, அந்தந்த மாவட்டக் கலெக்டர்களால், நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

### தஞ்சாவூர் மாவட்டம்—

(அ) கிழக்கு தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்—கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி) கிழக்கு தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்.

(ஆ) மேற்கு தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்—கலெக்டரின் தனி உதவியாளர், (பஞ்சாயத்து அபிவிருத்தி) மேற்கு தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்.

### சேலம் மாவட்டம்—

(அ) தெற்கு சேலம் அபிவிருத்தி மாவட்டம்—ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, நாமக்கல்.

(ஆ) வடக்கு சேலம் அபிவிருத்தி மாவட்டம்—ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, தர்மபுரி.

### கன்னியாகுமரி மாவட்டம்—

(அ) திரு ஈ. வி. சோமசுந்தரம், கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில்.

### செங்கற்பட்டு மாவட்டம்—

(அ) திரு. எம். கே. கோமேதகவேலு, கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), சென்னை-35.

### தென் ஆற்காடு மாவட்டம்—

(அ) திரு. ஏ. கே. விஜயபானு, கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), வடக்கு தென் ஆற்காடு அபிவிருத்தி மாவட்டம்.

(ஆ) திரு. கே. பழனிவேலு, கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), தெற்கு தென் ஆற்காடு அபிவிருத்தி மாவட்டம்.

(இ) திரு. கே. எஸ். சீதாபதி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, விருத்தாசலம்.

(ஈ) திரு. ஆர். முத்துக்கண்ணு, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, சிதம்பரம்.

திரு. ஜெ. அருள்பிரகாசம், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, திருக்கோயிலூர்.

திரு கே. மாதவன், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, திண்டிவனம்.

### நீலகிரி மாவட்டம்—

(அ) திரு. ஏ. ஜி. வேதசுந்தரராஜ், கலெக்டரின் தனி உதவியாளர், நீலகிரி மாவட்டம்.

### வட ஆற்காடு மாவட்டம்—

வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

திரு. வி. சீனுவாசன், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, ராணிப்பேட்டை.

(ஆ) திரு. அயோத்தி, சப் கலெக்டர் (இன் சார்ஜ்), திருப்பத்தூர்.

தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்—

(அ) திரு. கே. ஷண்முகம், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, திருவண்ணாமலை.

(ஆ) திரு. வி. திருமலாச்சாரி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, செய்யாறு.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

தெற்கு திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி மாவட்டம்—

கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி) தெற்கு திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி மாவட்டம்.

வடக்கு திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி மாவட்டம்—

கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), வடக்கு திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி மாவட்டம்.

### மதுரை மாவட்டம்—

திரு. மோன்ஸி ஜோசப், கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), வடக்கு மதுரை அபிவிருத்தி மாவட்டம்.

திரு. என். லட்சுமணப் பெருமாள், கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), மதுரை தெற்கு அபிவிருத்தி மாவட்டம்.

### இராமநாதபுரம் மாவட்டம்

திரு. பி. முத்துமாயன், கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), மேற்கு இராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்.

திரு. எல். சி. ரிச்சர்ட், கலெக்டரின் தனி உதவியாளர், கிழக்கு ராமநாதபுரம் அபிவிருத்தி மாவட்டம்.

# கண்டதும் கேட்டதும்



பழங்கால நிகழ்ச்சிகளையும், நிகழ்கால நிலைமைகளையும், இணைத்து வைத்து, நேரில் ஆராயும் முயற்சி, மிகவும் பயனுள்ளதாகும். இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் நன்கு உணர முடியும். இத்தகைய வாய்ப்பு எனக்கு சமீபத்தில் கிடைத்தது.

### வரலாற்றுப் புகழ் படைத்த உத்திரமேரூர்

உத்திரமேரூர் என்ற பெயரைக் கேட்டதும், சரித்திர மாணக்கர்களுக்கு பழங்காலத்து ஊராட்சியைப் பற்றிய செய்திகள் நினைவுக்கு வருவது இயற்கை. குடவோலை மூலம் தேர்தல் நடந்த முறை, பல்வேறு வாரியங்கள் செய்த தொண்டு முதலியன இந்த ஊர் கல்வெட்டுக் களிலிருந்து கிடைத்தமை, சரித்திர உலகம் நன்கு அறியும். ஆனால், தற்சமயம் அந்த ஊர் எப்படி உள்ளது, அங்கு நடைபெறும் புதிய பஞ்சாயத்து ஆட்சி எவ்விதம் அமைந்துள்ளது என்பதை ஒரு சிலர் நுட்பமாக ஆராய விரும்புவதில் ஆச்சரியமில்லை. தமிழ்நாட்டவர் மட்டு மின்றி, உலக நாடுகளின் பிரதிநிதிகளும் இத்துறையில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சார்பில், தல ஸ்தாபன ஆட்சி அபிவிருத்தியைப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று அடுத்த அக்டோபர் மாதம் டெல்லி மாநகரத்தில் நடை பெற ஏற்பாடாகி வருகிறது. பல்வேறு நாட்டின் தல ஸ்தாபன ஆட்சி நிபுணர்கள் இந்த முக்கிய ஆராய்ச்சிக் கூட்டத்திற்கு விஜயம் செய்ய இசைந்துள்ளனர். இத் துறையில், முதல் முதலாக, இந்தியாவில் கூட்டப்படும் கருத தரங்கின் (U.N.O. Seminar on Local Administration) கௌரவ காரியதரிசி பேராசிரியர் திரு என். சீனிவாசன் அவர்கள் ஜூன் மாதத்தில் சென்னைக்கு வந்திருந்து, தமிழ் நாடு அரசாங்கத்தின் தல நிர்வாகத் திட்டங்களைப்பற்றி கிராம அபிவிருத்திக் கமிஷனர், பஞ்சாயத்து வேலைத்திட்ட டைரக்டர் முதலியோருடன் ஆலோசனை நடத்தினார். அகில உலகக் கருத்தரங்குக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய முக்கிய செய்திகளைப்பற்றி அறிவதற்கான கேள்வித்தாள் ஒன்றிற்கு, நேரிலேயே பல தகவல்களை சேகரிப்பதற்காக, உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு அவர் சென்றார். அவருடன் நானும் போயிருந்தேன்.

புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பொறுப்புகள், நிதி நிலைமை, நடைமுறைச் சிக்கல்கள் முதலியவற்றைக் குறித்து, உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. ஞானசேகரன், பி.ஏ.,பி.எல். அவர்களுடனும் திரு. ஓ. சீனுவாச ரெட்டியார், எம்.எல்.ஏ. (பஞ்சாயத்து யூனியன் உப தலைவர்) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகி யோருடனும் பல அடிப்படை விஷயங்களைக் குறித்து விவாதம் நடத்தப்பட்டது.

சுமார் ஒன்பது மணி நேரம் உத்திரமேரூரில், இப் போதுள்ள பஞ்சாயத்து யூனியன் ஆட்சியைப்பற்றி, பேரா சிரியர் சீனிவாசன் ஆராய்ச்சி நடத்தினார். அதாவது பஞ்சாயத்துத் தலைவர்கள், வேலைத் திட்டங்கள் அனுபவக் கருத்துக்கள் முதலியவற்றைக் குறித்து அநேக செய்திகளை பரிமாறிக்கொள்ள முடிந்தது. குறிப்பாக, மற்ற நாடு களில் தல ஸ்தாபனங்கள் அதிகப்படியான வரிகளை விதிக் கவும், இலவசக் கல்வி, சுகாதார வசதிகள் முதலிய வற்றைப் பற்றிய முழுப் பொறுப்பையும் தாமே ஏற்று நடத்தி வருவதையும் எடுத்துரைத்தார்.

### கவனத்தை ஈர்த்த களியாம்பூண்டி

காரணை, வயலூர், மானம்பதி, களியாம்பூண்டி முத லிய கிராமங்களுக்குச் சென்று பஞ்சாயத்துத் தலைவர் களையும் அங்கத்தினர்களையும் கண்டு பேசினோம். குறிப் பாக, களியாம்பூண்டி என்ற ஊர், கிராம நலனுக்கான பல்வேறு வசதிகளையும் பெற்று. சிறந்து விளங்கியதை பேராசிரியர் சீனிவாசன் பெரிதும் பாராட்டினார். சுமார் 2,000 ஜனத்தொகை கொண்ட இந்தக் கிராமத்தில், உயர்நிலைப் பள்ளி, பிரசவ வசதியுடன் கூடிய மருத்துவச் சாலை, கால்நடை ஆஸ்பத்திரி, கூட்டுறவு விவசாய பாங்கு, கைத் தொழில் பயிற்சி நிலையம், திறந்தவெளி நாடக அரங்கு, நூல் நிலையம் முதலியன உருவாகியுள்ளன. நவீன முறையில் அமைந்த சுண்ணாம்புக் காளவாய் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. சமுதாய கம்போஸ்டு உரத் தயாரிப்பு தக்க வகையில் நடைபெறுகிறது. கடந்த சுமார் பதினைந்து வருடங்களாக இந்தக் கிராம முன் னேற்ற வேலைகள் படிப்படியே வளர்ந்து வந்துள்ளன. இதற்குக் காரணமாக இருந்தவரும் கிராம மக்கள் அனை வருடைய குறிப்பாக திரு சீனிவாச ரெட்டியார், திரு ராம கிருஷ்ண ரெட்டியார் ஆகியோரின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது.

### வெற்றிக்குக் காரணம்

புதிய பஞ்சாயத்து ஆட்சியின் வளர்ச்சிக்கு ஆணி வேராக இருப்பது, நல்ல வகையில் அமைந்த கூட்டுப் பொறுப்பும், சிறந்த தலைமையுமேயாகும். பஞ்சாயத்து யூனியன் மன்றம், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புதிய பொறுப்புக்களை உற்சாகத்தோடு நிறைவேற்றக் கடமைப் பட்டுள்ளது. உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்

[26-ம் பக்கம் பார்க்க]









## திருக்கோவிலூர் பஞ்சாயத்து யூனியன்

**மேல் படம் :**—விதைப் பெருக்குத் திட்டத்தின்கீழ், மணிலாக் கொட்டை பொறுக்கு விதைகள் வழங்கப்படுகின்றன.

**நடுவில் :**—இந்த யூனியனில், திம்மச்சூர் கிராமத்தில் 1½ ஏக்கர் நிலத்தில் உருவாகியுள்ள பஞ்சாயத்துப் பழத்தோட்டமும், காய்கறித் தோட்டமும். யூனியன் தலைவர் திரு தங்கவேலு உடையார், பஞ்சாயத்துத் திட்டங்களுக்கு மிகுந்த உற்சாக மளிக்கிறார்.

**கீழ்ப் படங்கள் :**—திம்மச்சூர் மாதர் பயிற்சி முகாம்—மாதர் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.



1



2



3



4

## சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படை பயிற்சி முகாம்

கிராமத் தொண்டர் படை பயிற்சி முகாம் 1—4—63 முதல் 10—4—63 வரை நடைபெற்றது

1 பயிற்சி முகாமின்போது, சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு எஸ். பி. கே. எல். இலட்சுமணன் செட்டியார், எம்.எல்.சி., பாதுகாப்பு நிதித் தொகையை, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கக்கன் அவர்களிடம் அளிக்கிறார்.

2 கிராமத் தொண்டர் படையினர் :— வானொலியில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர்.

3 பயிற்சி வகுப்புப் பாடங்களைக் கூர்மையாகக் கவனிக்கின்றனர்.

4 நாடெங்கும் உள்ள பஞ்சாயத்துக்களிலிருந்து அநேகர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.



1

படம் 1:—சாத்தூர் பஞ்சாயத்து யூனியன் பயிற்சி முகாமின்போது, தொண்டர் படைத் தளபதியாகப் பணியாற்றிய திரு டி. வி. கேசவன் அவர்களை, மாநிலக் கல்வித்துறை இயக்குநர் திரு என். டி. சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டினார்.



2

படங்கள் 2-ம், 4-ம் :—திருக்கோயிலூர் பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படையினர் பயிற்சி முகாமில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியிலே பங்கு கொண்ட குழந்தைகள்.

தொண்டர்கள் தேகப் பயிற்சி செய்தல்.

படம் 3 :—தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோழிப்பண்ணை.



3





படம் 1 :—இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமத் தொண்டர் படையினர் குடிமராமத்து வேலையில் ஈடுபட்டுள்ளனர்.



படம் 2 :—வட ஆர்க்காடு மாவட்டம், போளூர் பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படை பயிற்சிமுகாம் 5—4—63 முதல் 11—4—63 வரை நடைபெற்றது.

அவ்வமயம், பஞ்சாயத்து யூனியனின் இரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு ஜி. கோதண்டம் கவுண்டர், கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

卐



படம் 3 :—பெரம்பலூர் பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படையினர் பயிற்சி பெறுகிறார்கள்.



படம் 4 :—ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படையினர் மணல் ரஸ்தா அமைத்தல்.

# பாதுகாப்பு முயற்சியில் கிராமத் தொண்டர் படை

## ஒவ்வொரு கிராமமும் ஒரு கோட்டையாக அமைய வேண்டும்

இவ்வாண்டு குடியரசு தினத்தன்று, பிரதம மந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேருவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள கிராமத் தொண்டர் படைத் திட்டம் நாடெங்கிலும் பெருவாரி உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டிருக்கிறது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், ஏராளமான பெண்கள் உட்பட, இதுவரை, 97 லட்சம் பேருக்கு மேல் இப்படையில் பணியாற்ற முன் வந்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள 5,57,000 கிராமங்கள் ஒவ்வொன்றிலும், விவசாயத்துறை உற்பத்தியைப் பெருக்குவதும், மக்களுக்கு விஷயஞானம் ஏற்படும்படி செய்வதும், சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதுமே கிராமத் தொண்டர் படையின் நோக்கங்களாகும். கிராமங்களில் வசிக்கும் லட்சக் கணக்கான மக்கள் நாட்டின் பலத்தை வலுப்படுத்துவதற்குத் தங்களால் இயன்ற காணிக்கைகளைச் செலுத்த, இத்தொண்டர் படை சிறந்ததொரு மார்க்கமாகத் திகழ்கிறது.

ஈவிரக்கமற்ற, வலிமை வாய்ந்த ஒரு விரோதி நமது எல்லைகளில் நம்மை எந்தச் சமயத்திலும் தாக்கக் காத்துக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், இந்தியாவின் கௌரவத்தைக் காப்பதற்காக எத்தகைய மகத்தான தியாகத்தையும் புரிய ஒவ்வொரு இந்தியரும் தயாராயுள்ளனர். ஆனால், எல்லோருமே பாதுகாப்புப் படைகளில் சேர்ந்து பணியாற்றுவதென்பது இயலாத காரியம். உண்மையில் பார்க்கப்போனால், போர் முனையில் பணியாற்றும் நமது படை-வீரர்களுக்கு என்னென்னவோ தேவைப்படுகின்றன; வெற்றி கிட்டும் வரை போராடச் சித்தமாயிருக்கும் நம் வீரர்களின் அத்தேவைகள் அனைத்தையும் உள்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள், தங்கள் தாரா முயற்சிகளின் மூலம் பூர்த்தி செய்து வைக்க வேண்டும். மக்களின் மனப்பூர்வமான ஆதரவு தங்களுக்கிருக்கிறது என்ற நம்பிக்கை நமது படை வீரர்களுக்கு ஏற்படும்படி செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும்.

ஜவான்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்கள் மட்டுமின்றி, தாயகத்தின் தற்காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு தொழில்களுக்குத் தேவையான எத்தனையோ வகை மூலப் பொருட்களும் கிராமங்களிலிருந்துதான் வந்தாக வேண்டும். இந்த அவசரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, ஒவ்வொரு கிராமத்திலும், கிராமத் தொண்டர் படை ஒன்றை அமைப்பதன் மூலம், இந்தியாவின் கிராமங்களில் உள்ள பெருமளவு ஆள் பலத்தைத் தக்க முறையில் பயன்படுத்தியாக வேண்டியிருக்கிறது.

### பாதுகாப்பு உழைப்பு பாங்க்

ஒவ்வொரு கிராமத் தொண்டர் படையின் இணைப்பானதொரு அங்கமாக, பாதுகாப்பு உழைப்பு பாங்க் (Defence Labour Bank) ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின்படி, கிராமத்திலுள்ள தேகதிடம் உள்ள இளைஞர்களும் பெண்களும் தாங்களாகவே முன் வந்து வழங்கும் உழைப்பு—நாட்கள் ஒரு நிரலாகச் சேர்க்கப்படும். தேவைப்படும்போது, அவர்கள் தங்களுடைய உழைப்பைக் கொடுத்து உதவச் சித்தமாக இருக்க வேண்டும். இந்தியாவின் இஷ்டபூர்வ ஊழியர்களின் இந்த உழைப்பு நாட்கள், குளங்கள் வெட்டுவது, பாசனக் கால்வாய்கள் வெட்டுவது, குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்டுவது, மரம் நடுவது, சாகுபடிக்கான நிலங்களை மீட்பது ஆகிய வேலைகளுக்கும், பாதுகாப்பு முயற்சிகளுக்கு உதவக்கூடிய சமுதாய ஆஸ்திகளை உருவாக்குவதற்கான இதர அலுவல்களுக்கும் பயன்படுத்தப்படும். இதுவரை அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உழைப்பு பாங்குகளுக்கு மொத்தம் சுமார் ஒரு கோடியே 24 லட்சம் உழைப்பு-நாட்கள் பதிவாகியிருப்பது மிகவும் பெருமைப்படத்தக்கதொரு அம்சமாகும்.

### உணவு உற்பத்திக்கு முதலிடம்

கிராமத் தொண்டர் படையின் கடமைகளில், உணவு உற்பத்திப் பெருக்க முயற்சி முதலிடம் வகிக்கிறது. ஆனால், மக்களுக்கும் விஷயஞானம் ஏற்படும்படி செய்யும் திட்டமும், கிராமப் பாதுகாப்புத் திட்டமும் இதற்குச் சற்றும் பின்வாங்கியவையல்ல.

மக்களுக்கு விஷயஞானம் ஏற்படும்படி செய்வது என்பது, கிராமவாசிகளின் உற்சாகம் குன்றாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு, மக்களுக்கு தவறில்லாத சரியான செய்திகள் கிடைக்கும்படி செய்வதும், வதந்திகள் பரவாமல் தடுப்பதுமேயாகும்.

சிவில் பாதுகாப்புத்துறையில், கிராமத் தொண்டர்களுக்கு முதல் உதவி, வீட்டு வைத்தியம், தீ அணைப்புப் பயிற்சி, உடல் தகுதி ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும். இதோடுகூட, கிராமத்தின் காவல்-கண்காணிப்பு வேலைகளை நிறைவேற்றுவதற்கும், செய்திப் போக்குவரத்துத் தொடர்புகளைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் அழைக்கப்படலாம்.

கிராமத் தொண்டர் படையை ஏற்படுத்துவதில் முதல் நடவடிக்கையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பல இளைஞர்களுக்குத் தளபதிப் பயிற்சியும் உப தளபதிப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன; தங்களுடைய பயிற்சி பூர்த்தியடைந்த பிறகு, அவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்கு வந்து, கிராமத் தொண்டர்களுக்கு மேற்கொண்டு பயிற்சியளிப்பார்கள். இதுபோல, நாட்டின் பல்வேறு இடங்களிலும், இத்தகைய தலைவர்கள் பலருக்கு மேன்மேலும் பயிற்சியளிக்கப்படும்.

இந்தியாவின் சுதந்திரக் காவலனாகப் பணியாற்றுவதற்காக ஒரு வாய்ப்புத் தனக்குக் கிட்ட வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்த ஒவ்வொரு கிராம இளைஞருக்கும், இத்தொண்டர் படை ஒரு வரப்பிரசாதமாகத் திகழும் என்பதில் சந்தேகமேயில்லை.

[20-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஞானசேகர முதலியார் அவர்கள் உழைப்புத் திறனும் உற்சாகமும் மிக்க இளைஞர். அனேக பொது நல ஸ்தாபனங்களில் தீவிரமாகப் பாடுபடும் வாய்ப்பையும் அனுபவ அறிஞர்களிடம் சிறந்த பயிற்சியும் பெற்றுள்ளார். இவரும், விவசாயத் துறையில் பட்டம் பெற்றுள்ள இவர் தம்பியும் தமது கிராமங்களிலேயே வாழ்ந்து விவசாயத்தை நேரில் கவனித்து வருகின்றனர். இந்த யூனியனைச் சேர்ந்த எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களிடமும் சுமுகமாகப் பழகி, பொதுநலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இவர் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார். உதாரணமாக, மாணும்பதி என்ற கிராமத்திற்குச் சென்றபோது, செய்யாற்றிலிருந்து அந்த ஊருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் ஒன்றை உருவாக்கி நிறைவேற்றுவதற்கு ஆவன செய்து வருவதை எடுத்துரைத்தார். பூமிதான கிராமமான வயலூரை அடுத்து, நரிக்குறவர்களுக்கான காலனி ஒன்றை அமைத்துள்ளது, பஞ்சாயத்து யூனியனுக்கு மற்றொரு சிறப்பாகும்.

எங்கோ ஒரு சிறிய கிராமத்தில், அமைதியாக நடைபெறும் கிராம நல வேலைகள், இன்று உலகெங்குமுள்ள பலவேறு நாடுகளின் ஆராய்ச்சிக்கும் பொருளாதார அரசியல் துறை நிபுணர்களின் நேர் பார்வைக்கும் இலக்காகி வருகின்றன. ஆக்கப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு, அகில உலக ரீதியில் நடைபெறும் இதுபோன்ற கருத்தரங்குகளும், ஆராய்ச்சிகளும் பெரிதும் ஊக்கமளிக்கும் என்று நம்பலாம்.

### வைணவ ஸ்தலம்—திருக்கோவலூர்

உத்திரமேரூர் என்ற ஊரைப்போலவே, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள **திருக்கோவலூர்** தமிழ்நாட்டு வரலாற்றில் பிரசித்தி பெற்றதாகும். சிறப்பாக, வைணவ உலகில் புகழ்பெற்ற முதலாழ்வார்கள் ஒன்றுகூடிய புனிதத் தலம் இது. பெண்ணையாற்றின் தென் கரையில் அமைந்துள்ள இந்த ஊர், பஞ்சாயத்து யூனியனின் தலைநகராக அமைந்துள்ளது. இந்த யூனியன் தலைவர் திரு. டி. கே. தங்கவேலு உடையார் அவர்கள் இந்த இடத்திற்கு பழம் பெருமையோடு புதிய புகழையும் சேர்த்துவருகிறார்.

இந்த பஞ்சாயத்து யூனியனில் புஞ்செய் நிலங்கள் ஏராளமாக உள்ளன. அநேகக் கிராமங்களுக்கு ரஸ்தா வசதியும் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்த பஞ்சாயத்து யூனியன் வேலைசெய்து வருகிறது. விவசாயத் துறையில் மண்வளப் பாதுகாப்புக்காக சுமார் 400 ஏக்கர் நிலத்தில் வரப்பு கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 110 கிராம சகாயக்குகள் மூலம் பத்து டனனுக்கு மேற்பட்ட பொறுக்கு விதை விநியோகிக்கப்பட்டுள்ளது. பொலி காளைகள் சுமார் 15-ம், பொலி (செம்மறி) கிடாக்கள் சுமார் 50-ம் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### மாதர் சமுதாயம் மாண்புற....

திம்மச்சூர் என்ற கிராமத்தில் நடைபெற்று வந்த மாதர் பயிற்சி முகாம் ஒன்றை பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பொருளாதார நிலையில் மிகவும் பிற்போக்காய் காணப்படும் அந்தக் கிராமத்திலும், பொது மக்கள் உற்சாகத்தோடு பஞ்சாயத்து வேலைகளில் ஈடுபட்டு வருவதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். பஞ்சாயத்துத் தலைவர் திரு ராஜு உடையார், மற்ற அங்கத்தினர் ஆகியோரின் முயற்சியால் 1¾ ஏக்கர் கொண்ட பொது நிலத்தைச் செப்பனிட்டு பஞ்சாயத்துப் பழத்தோட்டமும் காய்கறித் தோட்டமும் வைக்கப்பட்டிருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியைச் சார்ந்த கல்ராயன் குன்றுகள், அதன் அருகில் உள்ள கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், சங்கராபுரம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களை காணும் வாய்ப்பும் கிடைத்தது. இவற்றில் கல்ராயன் குன்றுகள் வட்டாரத்தில் பஞ்சாயத்து யூனியன் இன்னும் அமைக்கப்படவில்லை. ரஸ்தா வசதி இல்லாத இந்த மலைப் பிரதேசத்திற்கென வட்டார வளர்ச்சி அலுவலகம் கள்ளக்குறிச்சியிலிருந்து இயங்கி வருகிறது.

மற்ற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் முக்கிய அலுவலர்களையும் காணும் வாய்ப்பு எனக்கில்லாமல் போய்விட்டது. (அவர்கள் அனைவரும் வேறு முக்கிய கூட்டத்திற்குச் சென்றிருந்த நேரம், நான் அங்கு சென்றிருந்தேன்). எனவே இந்த யூனியன்களைப் பற்றிய விரிவான குறிப்புக்கள் தர இயலவில்லை. ஆயினும், இந்தப் பிரதேசத்தின் முன்னேற்றத்தில் தனிப்பட்ட சிரத்தை காட்ட வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது. குறிப்பாக, ரிஷிவந்தியம் யூனியன் தலைமை அலுவலகத்தை ஒரு மையமான இடத்திற்கு மாற்றி அமைப்பது நலம் என்று தோன்றுகிறது. மிகவும் பிற்போக்கான நிலைமையில் உள்ள இது போன்ற பஞ்சாயத்துக்களுக்காக விசேஷ அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது நலம்.

### பொதுநல ஆர்வம் பெருகட்டும்

திருக்கோவிலூர் புகழ்பெற்ற வைஷ்ணவ ஸ்தலம். இந்த ஸ்தலத்தின் திருக்கோவில் நல்ல முறையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு, அழகுடன் திகழ்கிறது. இந்த நற்பணிக்கு, நமது நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் ஆர்வமும் முயற்சியுமே காரணமாகும். எம்பெருமான் உறையும் கோயிலில் மட்டுமல்ல, இந்தப் பிரதேசத்து மக்கள் உள்ளங்களிலும் மலர்ச்சி தோன்றப் பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பாடுபடவேண்டும்.

நட்ட நடு நிசியில், மழை பெய்துகொண்டிருக்கும் போது முதலாழ்வார்கள் மூவரும் ஒன்று கூடும் அரிய வாய்ப்பு இந்த ஊரில் ஏற்பட்டது. "வையம் தகளியா" என்று தொடங்கி புறவிளக்கேற்றினார் பொய்கையாழ்வார். "அன்பே தகளியா" என்று தொடங்கி ஞானத் தமிழ்மூலம் உள்ளொளி காட்டினார் பூதத்தாழ்வார். உள்ளும் புறமும் ஒளிபெறவே இறைவனின் அழகுத் தோற்றத்தை. "திருக் கண்டேன்" என்று தொடங்கி பேயாழ்வார் அந்தாதித் தமிழ் பாடினார்.

இந்த சரித்திர நிகழ்ச்சியை மனத்தில் கொண்டு, இன்று இந்தப் பிரதேசத்தைச் சார்ந்த இடத்தில் வாழும் மக்களையும், பொருளாதார பிற்போக்கையும் காணும் பொழுது, மனம் வாடத்தான் செய்கிறது. இறைவன் அருளால், மக்கள் உள்ளத்தில் பொது நல ஆர்வம் பெருகினால், பொருளாதார வளம் பெருகுவது நிச்சயம். உழைப்பும், ஒற்றுமையும், பொது நலத் தொண்டும் ஒன்று சேருமேயானால், இறைவன் அருள் ஏற்பட்டு, லட்சுமி தாண்டவம் நடைபெறுவது உறுதி.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சென்ற மே மாதம் சுற்றுப் பயணம் செய்து திரும்பும்போது, திருக்கோவலூர் எம்பெருமானை நோக்கி பின்வருமாறு இறைஞ்சினேன். முதலாழ்வார்கள் நெறியைப் பின்பற்றி, ஓங்கி உலகளந்த ஒளிவண்ணனிடம் என் பிரார்த்தனையை வெளியிட்டேன் :

"உழைப்பே தகளியா, ஒற்றுமையே நெய்யாய்
தழைத் தோங்கும் பஞ்சாயத் தொண்டே
—இழைதிரியா,
நந்தா விளக்கேற்றி, நாடெல்லாம் இன்புறவே
தந்தருள்வீர் தங்கள் திரு"

—0—

# கிராம சேவகர் பயிற்சி நிலையம் பவானிசாகர்

திரு கே. நரசிம்மயூ, திரு எஸ். கணேசன்

[தமிழ் நாட்டில் இயங்கும் கிராம சேவகர் பயிற்சி நிலையங்கள் (Rural Extension Training Centres) பற்றிய கட்டுரைத் தொடரில் இது கடைசிக் கட்டுரை. இது வரையில், ஆறு நிலையங்கள் பற்றி வெளியிட்டிருந்தோம். பவானிசாகர் கிராம சேவகர் பயிற்சி நிலையத்தைப் பற்றிய இக் கட்டுரையுடன், இக்கட்டுரைத் தொடர் நிறைவு பெறுகிறது—
ஆசிரியர்.]

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மலைவளம் செறிந்த சூழலில், பவானி சாகர் கிராம சேவகர் பயிற்சி நிலையம், ஒரு விவசாய ஆரம்பப் பள்ளியாக சென்ற 1954-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் தேதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. பவானிசாகர் நீர்த்தேக்க வேலை முடிவுற்றதும், பொதுப் பணித்துறை பணியாளர்களுக்கு அமைந்த இருப்பிட வசதிகளும், 500 ஏக்கராவிற்கு மேற்பட்ட சாகுபடிக்குகந்த தரிசு நிலமும் இருக்கவே, அதைப் பயன்படுத்தும் வகையில் பயிற்சி நிலையம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. ஆதாரப் பயிற்சிக்கேற்ற அமைதியான, அழகான சூழ்நிலையும் இருந்தது பரந்துகிடக்கும் நீர்ப் பரப்பும் பசுமை கொழிக்கும் மலைத் தொடரும் இங்கு கண் கொள்ளாக் காட்சி.

பயிற்சியாளர்கள் 60 பேர்களுடன் ஆரம்பமான இந் நிலையத்தில் தற்சமயம் 300-க்கு மேற்பட்டவர்கள் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறுகிறார்கள்.

### கிராம சேவகர்களுக்குப் பயிற்சி

இங்கு கிராம சேவகர்களுக்கு இரண்டு வருடப் பயிற்சி தரப்படுகிறது. விவசாயம், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு, கதர்—கிராமக் கைத்தொழில்கள், பொது சுகாதாரம், கூட்டுறவு, சமூகக் கல்வி, பஞ்சாயத்து ஆகிய பாடத் திட்டங்கள் வகுப்பறைகளிலும், செய்முறை மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

இங்கு பயிற்சி பெறும் மொத்த மாணவர்கள் 190. அணிகள் பத்து. ஒவ்வொரு அணியோடும் போதகர் ஒருவர் வழிகாட்டியாக விளங்குவார். அணிக்கு (ward) இரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, 20 பேர் கொண்ட பஞ்சாயத்து அமையும். இதற்கு தலைவரும் துணைத் தலைவரும் உண்டு. பஞ்சாயத்தின் கீழ், கல்வி, உணவு, கலாச்சாரம், சுகாதாரம், பண்ணை என 5 குழுக்கள் உண்டு. பஞ்சாயத்து செயற்குழு உறுப்பினரே இக் குழுக்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்பார். ஒவ்வொரு அணியும் இக் குழுக்களுக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும். பஞ்சாயத்து மாதந்தோறும் மாறுவதால் ஒவ்வொரு பயிற்சியாளரும், பணிபுரிந்து பஞ்சாயத்தின் அமைப்பை, நன்கு உணர்கின்றனர்.

### பயிற்சிப் பண்ணை

பயிற்சிப் பண்ணை 50 ஏக்கர் பரப்புடையது. மாநிலத்தின் முக்கிய பயிர்கள் நவீனமுறையில் பயிரிடப்படுகின்றன. தற்சமயம் 36 ஏக்கரில் சாகுபடி நடக்கிறது. ஆற்றோரமாக, மண் அரிப்பினால் மேடுபள்ளமாக சாகுபடிக்குப் பயன்படாத முறையில் இருக்கும் தரிசு நிலத்தில் மண் அரிப்பு தடுப்பு முறைகளின் மாதிரி (Soil conservation model) அமைக்கப்பட்டு இருக்கிறது.

பண்ணையில் ஒரு மீன் குட்டை இருக்கிறது. குறுகிய காலத்தில் பலன் தரும் மீன் குஞ்சுகள் வளருகின்றன. ஒரு நடுத்தரக் குடும்பத்திற்கு வருடம் பூராவும் தேவைப்படும் காய்கறிகள் பழவகைகளை வீட்டுத் தோட்டத்தில் எவ்வாறு பயிரிடலாம் என்பதற்கு நிதர்சனமாக "மாதிரித் தோட்டம்" அமைத்திருக்கிறோம்.

தோட்டக் கலை சம்பந்தமாக, விடுதியின் நடுவேயுள்ள நிலத்தில், பழம் தரும் மரங்களையும் விடுதியைச் சுற்றிலும் காய்கறி வகைகள் பயிரிட்டும் உணவு விடுதியின் தேவையை பூர்த்தி செய்கிறோம்.

"மூரா" எருமைகள் 4, சிந்திப் பசுக்கள் 8, சிந்திக் காளை ஒன்றும் கொண்ட ஒரு சிறிய பால் பண்ணை 100 கோழிகளைக் கொண்ட ஒரு கோழிப் பண்ணை, முதலுதவி யூனிட் (Fisst-Aid unit) ஆகியவை இருக்கின்றன.

பருத்தி சுத்தம் செய்தல், கொட்டை நீக்குதல், பஞ்சு வெட்டுதல், நூற்பு நெசவு சம்பந்தமானவைகளை செய்யும் வாய்ப்பும், கைக்குத்தலரிசி தேனீ வளர்த்தல் போன்ற குடிசைத் தொழில்களையும் அறியும் வாய்ப்பு இங்கு உண்டு.

சுவரொட்டி, மின் அட்டை போன்றவை குறைந்த செலவில் கவர்ச்சிகரமாக தயாரிக்கும் ஆற்றலையும் பெற வாய்ப்பு இங்கு உண்டு.

அறிவைப் பெருக்க 2,500-க்கு மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட ஒரு நூலகமும், பார்ப்போரைக் கவரும் ஒரு செய்தி நிலையமும் (Information Centre) இங்கு உண்டு.

### குடும்ப நலப் பகுதி

கிராம நலப் பணியில் பெண்கள் பங்குகொள்ள கிராம சேவிகைகள் பயிற்சி 23-7-1956 அன்று துவங்கியது. பள்ளி இறுதி வகுப்பு தேர்வு முடித்தவர்கள், 20 வயதுக்கு மேல் 35க்கு உட்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு ஓர் ஆண்டு பயிற்சி பெறுகிறார்கள்.

கிராம சேவகர்களின் பயிற்சி கால அளவு 6 மாதங்களில் இருந்து படிப்படியாக வளர்ந்து 2 வருடங்களாக்கப்பட்டது. முதலில் பயிற்சி பெற்றவர்களுக்கு இவ் வாய்ப்பு கிட்டவில்லை. இக் குறையை ஈடு செய்யவும், புது சாதனைகளை அறிந்துகொள்ளவும் மத்திய உணவு, விவசாய அமைச்சகத்தின் ஆணைப்படி, குறைந்த அளவில் 3 வருடங்களுக்கு மேல் வட்டாரத்தில் அனுபவம் பெற

# உங்களுக்குத் தெரியுமா?

## உணவு—சில உண்மைகள்

1

உலகத்தின் நிலப்பரப்பில், பத்தில் ஒரு பாகத்தில் மட்டுமே, இன்று விவசாயம் செய்யப்படுகிறது. காடுகள் 29 சத விகிதம் உள்ளன. சதுப்பு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் 18 சத விகிதம் நிலப்பரப்பை உள்ளடக்கி உள்ளன. ஏறக் குறைய பாதிக்கு (43 சத விகித நிலப்பரப்பு) தரிசாகவோ, விவசாயம் அல்லாத வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட்டோ வருகிறது. ஆகவே, இன்றைய நிலையில் அவை விவசாயத்திற்கு உபயோகமானவையாக இல்லை. இத்துறையில் ஆராய்ச்சியும், பணமும் செலவிடப்பட்டால், மேற்கொண்டு பிரம்மாண்டமான நிலப்பரப்பை விவசாயத்திற்கு லாயக்குள்ள தாகச் செய்ய முடியும்.

2

மிகக் குறுகிய காலத்தில், பால் உற்பத்தியை எவ்வளவு தூரம் அதிகப்படுத்தலாம் என்பதற்கு இசரேல் நாடு நல்ல உதாரணமாகத் திகழ்கிறது. உள் நாட்டில் கிடைக்கின்ற பசுக்களிலிருந்து, இசரேல் நாட்டில், ஒரு பசுவுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, சுமார் 1,350 பவுண்டு பால் கிடைத்துவந்தது. உயர்ரக பசுக்களை தயார் செய்து, தீனி, மாடு வளர்த்தல், நிர்வாகம் ஆகிய முறைகளில் சிரிய முறைகளைக் கையாண்டதின் மூலம், இப்பொழுது, பசு ஒன்றுக்கு, ஆண்டுக்கு 8,800 பவுண்டு பாலுக்குமேல் இசரேல் நாட்டில் கிடைக்கிறதாம்!

உலகத்திலேயே அதிகமாகக் கிடைக்கக்கூடிய அளவு இது!

3

உலகத்திலேயே, மிகவும் வளம் பொருந்திய நாடுகளில் ஸ்விட்ஜர்லாந்தும் ஒன்று. ஆனால், அந்த நாட்டில், மலைப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களில் பெரும் பாலோரின் சுகாதாரம், போதிய சத்துணவு கிடைக்காத காரணத்தினால், மிகவும் பாதிக்கப்படுகிற நிலையில் உள்ளது. சுவிஸ் ஐக்கிய உணவுக் கமிஷன் 1962–ல் வெளியிட்ட அறிக்கை கூறும் உண்மை இது.

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

கிராம நல ஊழியருக்கு 2 மாத கால பயிற்சி கொடுக்கும் திட்டத்தை நம் மாநிலத்தில் முதன் முறையாக இப் பயிற்சி நிலையத்தில் 25–1–1960-ல் மாநில அரசு ஆரம்பித்தது.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக தச்சு, கருமார் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து ஓராண்டு காலம் பயிற்சி தரப்படுகிறது. நவீன முறை சாகுபடிக் கருவிகளான இரும்புக் கலப்பை, தழை மிதிக்கும் கருவி, பர்மிய சட்டம் ஆகிய கருவிகளை யும், மண்வெட்டி, களைக்கொத்து, அறிவாள் போன்ற வைகளையும் நவீன யந்திர சாதனங்களின் உதவியால் செய்யத் தேர்ச்சி பெறுவதற்கு தேவையான அடிப்படைப் பொறியியல் அறிவு சொல்லித் தரப்படுகிறது. அகப்பை, அறிவாள்மனை, படி, பூட்டு, மரச்சாமான் போன்றவைகளை யும் செய்ய தேர்ச்சி அடைகின்றனர். வெற்றியுடன் பயிற்சி முடித்தவர்களுக்கு, சொந்தமாக பட்டறை வைக்க ரூ. 350 கடன் உதவி செய்ய அரசாங்கம் முன் வந்திருக் கிறது.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளில் தொடர்புகொண்ட பொது மக்கள், அரசு ஊழியர்களுக்கு போதிய பயிற்சி கொடுக்க சென்னை மாநிலத்திற்குரிய ஒரே பயிற்சி நிலையம் 1–5–1962-ல் இங்கு ஆரம்பமானது.

### சத்துணவுத் திட்டம்

பயிற்சி நிலையம் இருக்கும் வட்டாரத்தில், விரிவு படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இத் திட்டத்தின்படி, கிராமங்களில் கைக்குழந்தையுடைய தாய்மார்கள், கர்ப்பிணிகள், 2-வயதுக்கு மேல் 5-வயதுக் குட்பட்ட சிறுவர், சிறுமியர் ஆகியோருக்கு ஊட்ட உணவு கொடுக்கவேண்டும். இதற்காக 2,000 மக்கள் தொகைக்கு ஒரு கோழிப் பண்ணையும், பஞ்சாயத்து தோறும் குறைந்த அளவில் 5 ஏக்கரில் ஒரு பழத் தோட்டமும் காய்கறி சாகுபடியும், நீர்நிலைகளில் மீன்களையும் வளர்த்து வினியோகம் செய்வதோடு, புட்டிப்பால் வினியோகமும் நடைபெறுகிறது.

கிராம மறுமலர்ச்சி என்ற புனிதப் பணியில், அடிக் கல்லாகத் திகழும் கிராம சேவகர்களை பயிற்றுவிக்கும் திருப்பணியில் எங்கள் நிலையத்தின் பங்கை நாட்டு மக்களுக்கு காணிக்கையாக ஆக்குகிறோம்.





# கேள்வியும் பதிலும்

### திப்பிரமகாதேவி கிராம வானொலி மன்றம்—சேலம் மாவட்டம்

**கேள்வி.**—கால்நடைகளுக்கு எல்லாக் காலங்களிலும் நோய் வருமா? ஏதாவது குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வருமா?

**பதில்.**—எல்லாக் காலங்களிலும் எல்லா நோய்களும் வரலாம். ஆனால், சில குறிப்பிட்ட காலங்களில், சில நோய்கள் வருவது அதிகமாக இருக்கலாம்.

**கேள்வி.**—கால்நடைகளுக்கு கால் நோய், வாய் நோய் தவிர இதர நோய்கள் வருவதுண்டா? இதர நோய்கள் என்னென்ன?

**பதில்.**—கால்நடைகளுக்கு சப்பை நோய் அடைப்பான்—தொண்டை அடைப்பான்—வெக்கை ஆகிய கொடிய தொத்து நோய்கள் வருவதுண்டு.

**கேள்வி.**—கால்நடைகளுக்கு வரும் வியாதிகளுக்கு நாட்டு வைத்தியம் செய்து குணமடைவதற்கு வழி வகை உண்டா?

**பதில்.**—கால்நடைகளின் நோய்களுக்கு நாட்டு வைத்தியம் செய்வது அவர் அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. கால்நடை இலாகா அதைப்பற்றி கூறுவதற்கில்லை.

### சேலம் மாவட்டம்–தூக்கூர் கிராம வானொலி மன்றம்

**கேள்வி.**—கால் வாதம் என்ற நோய் கால்நடைகளுக்கு ஏற்பட்டால் நிவர்த்திக்கும் வழியாது?

**பதில்.**—கால்வாதம் என்று எந்த நோயைக் குறிப்பிடப் படுகிறதென்று தெரியவில்லை. கால் நோயைக்குறிப்பிடு வதாக இருந்தால் சிகிச்சை முறையை அறிவிக்கிறோம்.

நோய் உள்ள மாடுகளையும் அதன் அக்கம் பக்கங்களையும் பரிசுத்தமாகவும். அவைகளை மிகவும் அமைதியாகவும் வைத்திருப்பது மிகவும் முக்கியம். மாட்டுக் கொட்டங் களின் கட்டுத் துறை, ஈரமில்லாமலும், சுத்தமாகவும் இருக்கவேண்டும். தளத்தை அப்போதைக்கப்போது எடுத்து புதிய உலர்ந்த மணலோ அல்லது மரத்தூளோ தளத்தில் போடுவதுடன் சுத்தப்படுத்தக்கூடிய வாஷிங் சோடா, தாளிக்காத சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் முதலியவை களை தளத் தளத்தில் தெளிக்கவேண்டும். தளங்களையும், மாட்டுக்கொட்டத்திலுள்ள இதர பொருள்களையும் பூச்சி கொல்லும் ஏதாவது ஒரு திரவத்தால் சுத்தம் செய்ய வேண்டும். இதற்கு நான்கு சதவிகிதம் வாஷிங் சோடா கலந்த 140 டிகிரி உள்ள வெந்நீரில் சுத்தம் செய்வது நல்லது, கிராமங்களில் சாதாரணமாகக் கிடைக்கும் படிகாரம் 60 நெல் எடையை ஒருபடி சுத்தமான தண்ணீரில் கலந்து அதனால் வாய், காம்பு முதலிய இடங்களில் உள்ள புண்களை சுத்தம் செய்யலாம். அதே படிகாரத் தண்ணீரினால் புண்களைக் கழுவி சுத்தம் செய்த பிறகு, நாட்டுத் தாருடன் அதாவது கீலெண்ணெயுடன் தேங்காய் எண்ணெயையும் கலந்து போடலாம். அல்லது துளிரான வேப்பிலையை வெண்ணையாக அரைத்துப்போடலாம்.

### கோயம்புத்தூர் மாவட்டம்—ஊராட்சிக் கோட்டை கிராம வானொலி மன்றம்

**கேள்வி.**—வியாதியுள்ள மாட்டின் பாலை மனிதர்கள் குடித்தால் மனிதர்களுக்கு கெடுதல் உண்டா?

**பதில்,**—நோய்கண்ட மாட்டின் பாலைச் சாப்பிடுவது ஆரோக்கியக் குறைவாகும், கால்வாய் நோய் மனிதர் களையும் பற்றக்கூடியது. இந்தமாட்டின் பாலை குழந்தை களுக்குக் கொடுத்தால் மரணமும் ஏற்படக்கூடும்.

### காரைக்கால் பகுதி—தளத் தெரு, கிராம வானொலி மன்றம்

**கேள்வி :** கால், வாய் நோய் கண்ட கால்நடைகளை காலை, மாலை தண்ணீரில் அடித்துக் குளித்துக் குளிப்பாட் டுவது நன்மையா? தீமையா?

**பதில் :** நன்றாக பினாயில் கலந்த தண்ணீரால் புண்ணை கழுவி விட்டு, தினம் குளிப்பாட்டுவது நல்லதுதான்.

### செங்கற்பட்டு மாவட்டம்—கொடூர் கிராம வானொலி மன்றம்

**கேள்வி :**—பொறுக்கு விதைகள் தயார் செய்வது எப்படி?

**பதில் :**—பொறுக்கு விதை தயார் செய்வதென்பதை சுருக்கமாக கூற வேண்டுமென்றால், இரண்டு வகை நெல் வித்துக்களை ஒட்டு சேர்த்து ஒரு புது ரகம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது, பிறகு, மூன்று வருடம் அரசாங்க ஆராய்ச்சிப் பண்ணையில் பயிரிடப்பட்டு, கவனிக்கப்பட்டு, பிறகு பொறுக்கி எடுத்த விவசாயி களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்களால் மூன்று வருடம் சாகுபடி செய்யப்பட்டு பார்த்த பிறகே மற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு புது ரக நெல் வித்தைக் கண்டுபிடிக்க சுமார் எட்டு வருட காலமாகிறது.

# இனி எதைப்பற்றி எழுதலாம்?

திரு. எஸ். நடராஜன், பி. ஏ.

சுதந்திரம் பெற்ற பதினைந்து ஆண்டுகளில் நம் அரசாங்கம் சாதித்த மாபெரும் சாதனைகளில் ஒன்று பஞ்சாயத்து ஆட்சியாகும். கிராம மக்களுக்குப் பொறுப்பும் அதிகாரமும் மாற்றப்பட்டாலொழிய, கிராம மக்களுக்காக நிறைவேற்றப்படும் எந்தத் திட்டமும் பயனளிக்காது என்பதை உணர்ந்துதான் பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப் பட்டது.

இப்போது அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆகியவை மாநில அளவிலும், மத்திய அளவிலும் இயங்கிவரும் மக்களாட்சி முறையை வலிவுறச் செய்ய ஏற்படுத்தப்பட்டவைகளாகும். கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கும், இவைதான் பொறுப்பு. இந்த மகத்தான பொறுப்பை, கிராம மக்களின் பூரண ஒத்துழைப்பின் மூலமே நிறைவேற்ற முடியும். இந்த ஒத்துழைப்பை எப்படிப் பெறுவது ?

கட்டுரை, கதை, நாடகம் ஆகியவை மூலம் விளக்க வேண்டியவைகளை விளக்கமாகச் சொன்னால், மக்களின் ஒத்துழைப்புக் கிடைப்பதில் தடை எதுவும் இருக்காது. ஆகவே தான், எதைப் பற்றி எழுதலாம் என்பதைப் பற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெற நீங்கள் எத்தனையோ வகையில் முயற்சி செய்யலாம். ஒவ்வொரு முயற்சியிலும் எவ்வளவோ அனுபவங்கள் பெறலாம். நீங்கள் செய்யும் இந்த முயற்சிகளைப்பற்றி விரிவாக எழுதலாம்.

### உங்கள் பிரச்சினைகள் என்ன ?

கடந்த இரண்டு ஆண்டுகளில், பஞ்சாயத்து நிறுவனங்கள் பொதுப் பணிகளில் பெரும் அக்கறை காட்டி, அவை களிடம் ஒப்புவிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை உற்சாகத் துடன் நிறைவேற்றி வருகின்றன. குறிப்பாக, அரசாங்கம் பெருமளவில் தரும் மானியங்களைக் கொண்டும், பொது மக்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடைகளைக் கொண்டும் கிராம மக்களுக்கு, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்களில் கவனம் செலுத்தி வருகின்றன. இந்த இரண்டு வருட அனுபவத்தில் சில கஷ்டங்களைத் தெரிந்து கொண்டிருக்கலாம். உங்களுக்கு என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன ? சட்டத்தில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட வேண்டும். இவைகளைப் பற்றி எழுதலாம்.

சென்ற சில ஆண்டுகளில் எத்தனையோ நல்ல காரியங்கள் செய்து இருக்கிறோம். எத்தனையோ தவறுதல்களும் இருக்கலாம். நாம் எல்லோருமே மனிதர்கள்தானே. தவறு செய்யாமல் முன்னுக்குவர முடியுமென்று நினைக்கிறீர்களா ? கீழே விழுந்தால், மீண்டும் எழுந்து நடப்பது போல, தவறு செய்தாலும் திருத்திக்கொள்ள வேண்டும். தவறைக்கண்டால் பயமும் இருக்கவேண்டும்.

ஏற்றத்தாழ்வுள்ள சமுதாயம் ஒன்றாக இருக்க முடியாது. வசதியில்லாமல் வாழ்க்கை நடத்தும் நிலைமையிலிருப்பவர்களுக்கு இத்தகைய மனப்பான்மை இருந்து கொண்டே இருக்கும். பெரும்பாலானவர்களை ஏழைகளாக வைத்துக்கொண்டு, சிறுபான்மையோர் வசதியாக வாழ்வது நியாயமில்லை. இக்கண்ணோட்டம் மிக அவசியம். இதைப் போக்குவது எப்படி என்பது குறித்து சிந்தித்து அதைக் குறித்து எழுதலாம். இதற்கான வழியை பொருளாதார நிபுணர்கள் தான் கண்டுபிடிக்க முடியுமென்பதில்லை.

காந்தியடிகள் கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்பதற்காக சுதந்திரம் கிடைக்கும் முன்பே மக்கள் மனதைப் பக்குவப்படுத்தினார். சுதந்திரம் வந்தவுடன் கிராம ராஜ்யத்தை உருவாக்க, கிராம வளர்ச்சியில்தான் மக்களாட்சி பரவவேண்டும் என்று அதற்கான அஸ்திவாரம் அமைத்தார். சுயராஜ்யம் என்பது கிராம ராஜ்யம் தான் என்றும், ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அவர் விரும்பியது இப்பொழுது உருவாகி வருகிறது. தமிழ்நாட்டில் 12500-க்கு மேற்பட்ட சிறு அரசாங்கங்களாக ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒவ்வொரு விஷயத்திலும் தன்னிறைவு பெற்றிருப்பது மிக அவசியம். உங்கள் பஞ்சாயத்துக்கள் எந்தெந்தப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது ? அதை எப்படி சாதிக்க முடிந்தது ? இதைப்பற்றிய விவரங்களை எழுதலாம்.

### ஒத்துழைப்பு தேவை

கிராம மக்கள் வாழ்க்கைத் தரம் நன்றாக வளருவதற் காக அமைக்கப்பட்ட நிறுவனம் தான் பஞ்சாயத்து. அதனுடைய முன்னேற்றம்தான் நம் முன்னேற்றம். மாநில நிர்வாகம் எப்படி நடைபெறுகிறதோ, அதே முறையில்தான் பஞ்சாயத்து நிர்வாகம் அமைக்கப் பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள், சட்டத்தை இயற்றிக் கொடுத்து விடுகிறார்கள். நிர்வாகத்தை எப்படி நடத்த வேண்டுமென்று மந்திரி சபை முடிவு செய்கிறது. தலைமைச் செயலாளரின் தலைமையின்கீழ் உள்ள எல்லா அதிகாரிகளும், எல்லா வேலைகளையும் நடத்தி வருகிறார்கள். அதே மாதிரிதான் பஞ்சாயத்து யூனியனுக்கும் கீழே



யுள்ள வளர்ச்சிப்பணி அதிகாரிகள், கிராம சேவகர்கள் எல்லாம், கமிஷனர் மேற் பார்வையில் நன்றாக நடந்து கொள்ளவேண்டும்.

கமிஷனரும், பஞ்சாயத்துத் தலைவரும் ஒன்றாக சேர்ந்து பணியாற்ற வேண்டும். பல இடங்களில் இந்த ஒத்துழைப்பு இருந்து வருகிறது. இம்மாதிரி ஒத்துழைப்பினால் எவ்வளவு நன்மைகள் செய்யமுடிகிறது என்பதை பற்றி எழுதலாம்.

### வரலாற்றுப் பெருமை

ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்கள் சாதனைகளை மட்டும் எடுத்துக் கூறுவதில் திருப்தியடைந்து விடக்கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பண்டைக்கால விசேஷம் ஏதாவது இருக்கும். அந்த ஊர் ஒரு புண்ணிய தலமாக இருக்கலாம்; சரித்திர சம்பந்தப்பட்ட இடமாக இருக்கலாம்; நாட்டிலுள்ள மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியான விசேஷங்கள் ஏதாவது இருக்கலாம். புதிய சாதனைகளுடன் பழைய பெருமைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். உங்கள் பஞ்சாயத்தின் பழங்கால முக்கியத்து வத்தைப் பற்றி நீங்கள் எழுதலாம்.

உதாரணமாக இரண்டொரு விஷயங்களை இங்கு குறிப் பிடுகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூரில் வைகுண்ட பெருமாள் கோவிலிலே ஓர் அபூர்வ கல்வெட்டு உள்ளது. சோழர் காலத்தில் தேர்தல் எப்படி நடைபெற்று வந்தது என்ற முறையை இக் கல்வெட்டு விளக்குகிறது. அக்காலத்திலேயே ஜனநாயக முறையில் நம் மக்களுக்குள்ள நம்பிக்கையை இது அறிவிப்பதோடல்லாமல், வாக்களிக்கும் முறை எப்படி இருந்தது; யார் யார் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந் தனர் என்ற விளக்கமும் இக்கல்வெட்டிலிருந்து தெரிய வருகின்றன.

இதே போல தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தில்லைஸ்தானம் என்ற இடத்தில் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அவ்வூர்க் கோயிலில் உள்ள இந்தக் கல்வெட்டில் கிராம சபைக்கு நடைபெறும் தேர்தல் பற்றிய விதிகள் காணப் படுகின்றன. பத்து வருடங்கள் பதவி வகிக்காதவர்களாக இருப்பவர்கள், கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள், 40 வயதுக்கு மேற்பட்டவர்களே தேர்ந் தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள் என்று இக் கல்வெட்டு கூறுகிறது.

இம்மாதிரி சரித்திரப் பெருமை பெற்றுள்ள இடங்கள் எவ்வளவோ உள்ளன. சில ஊர்களில் உள்ள அழகிய சிலைகளைப்பற்றி, வெளியூர்களிலுள்ளவர்களுக்குத் தெரியா மலேயே இருக்கலாம். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செண்பகராமநல்லூர் கோவிலிலுள்ள, கல்லினால் உரு வாக்கப்பட்ட ஒரு மன்மதன் சிலையை ஒவ்வொரு இடத்தில் தட்டினால் ஒவ்வொருவிதமான நாதம் உண்டாகிறது. இத்தகைய பெருமைகளைப்பற்றி நீங்கள் எழுதினால் அவைகளை நேரில் காண ஆவலுடன் பலர் உங்கள் ஊருக்கு வருவார்கள். அப்படியே உங்கள் சாதனைகளையும், நேரில் காண அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். அவர் களுடைய அனுபவங்களைப் பற்றி நேரிலேயே அவர்களுடன் பேசித் தெரிந்து கொள்ளலாம்.

இம்மாதிரி இடங்களை, பெருமைகளைப்பற்றி எழுதும் கட்டுரைகளுடன் அவற்றின் புகைப்படங்களையும் எடுத்து அனுப்பலாம். இதைப் பற்றி ஒரு வார்த்தை. புகைப்படங்கள் பளிச்சென்று இருந்தால்தான் அதை பிளாக் செய்து பிரசுரிக்க முடியும்.

---

## தமிழ்நாட்டில் 20,000 பேர் கொண்ட ஊர்க்காவல் படை—ஆள் சேர்ப்பது பற்றிய அறிவிப்பு

தற்போதைய தேசிய நெருக்கடியை முன்னிட்டு, உடனடியாக 20,000 பேர்களைக் கொண்ட ஊர்க்காவல் படை ஒன்றை அமைக்க தமிழ்நாடு அரசாங்கம் உத்தர விட்டுள்ளது.

உடல் வலுவும் சேவை ஆர்வமும் உள்ளவர்கள் ஊர்க் காவல் படையில் அங்கம் வகிப்பர். இப்படை போலீஸ் படைக்குத் துணைப்படையாக நடந்து, உள்நாட்டுப் பாது காப்புக்குப் பாடுபடும். விமான விபத்து, தீ விபத்து, வெள்ளம், கொள்ளை, நோய் போன்ற சந்தர்ப்பங்களில் சமுதாயத்திற்கு உதவிசெய்யும். மோட்டார் போக்கு வரத்து, சிக்னலிங், தீத்தடுப்பு, நீச்சல், முதலுதவி நீர் சப்ளை மின்சார சப்ளை யந்திரங்களை இயக்குதல் ஆகிய துறைகளிலும் படைப் பிரிவுகள் இயங்கும்.

சேவை மனப்பான்மையும், ஓய்வு நேரத்தை நாட்டின் பாதுகாப்புக்கு செலவிடும் உள்ளமும் உடைய யாவரும் இந்தப் படையில் சேரலாம். அவர்களுக்கு ஒன்றரை மாத காலம் பயிற்சியளிக்கப்படும். விடுமுறை நாட்கள் நீங்கலாக, முதல் 15 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் வீதமும், அதன் பிறகு 15 நாட்களுக்கு ஒன்றுவிட்ட நாளுக்கு ஒன்றரை மணி நேரம் வீதமும் பயிற்சி அளிக்கப்படும். உடற்பயிற்சி, கவாத்து, முதலுதவி, கிளர்ச்சிகளை கட்டுப்படுத்தல், துப்பாக்கி சுடுதல் ஆகியவை பயிற்சியில் அடங்கும். ஊர்க்காவல் படையினருக்குச் சீருடையும், ஓய்வு நிவாரணமும் கொடுக்கப்படும்.

ஊர்க்காவல் படையில் சேர 18 முதல் 45 வயது வரை யுள்ள எழுதப் படிக்கத் தெரிந்த யாரும் விண்ணப்பிக் கலாம். இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள விண்ணப் பங்களைச் சென்னை எழும்பூரிலுள்ள நகரப் போலீஸ் அலுவலகத்திலிருந்தோ, அல்லது மாவட்டங்களிலுள்ள மாவட்டப் போலீஸ் அலுவலகங்களிலிருந்தோ இலவச மாகப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப பாரங்களை சென்னை நகரப் போலீஸ் கமிஷனருக்கும், மாவட்டங்களில் போலீஸ் சூப்பரிண்டெண்டுகளுக்கும் உடனடியாக அனுப்ப வேண்டும்.

# PANCHAYAT GAZETTE

[பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளது].


## பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களுக்குக் "குறித்த தொகைப் பயணப்படி" கொடுத்தல் பற்றிய விளக்கம்

## (Allowance—Fixed Travelling Allowance—Payment to Chairmen of Panchayat Union Councils—Clarifications issued.)

### Memorandum No. 11918, R.D. & L.A., dated 13th May 1963.

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 73-ல், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தம் நிதியிலிருந்து, மன்றத் தலைவர் யூனியனுக்குள் செய்யும் பயணங்களுக்கு, சில விதிகளுக்குட்பட்டு, பயணப்படி விதிகளின் கீழ் அளிக்கத்தக்க பயணப்படிக்குப் பதிலாக, மாதத்திற்கு ரூ. 100 மேற்படாத அளவில் ஒரு குறித்த பயணப்படித் தொகையை அளிக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

இது விஷயத்தில், கலெக்டர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் எழுப்பியுள்ள ஐயங்கள் கீழே தெளிவுபடுத்தப்படுகின்றன :—

2. (1) ஒரு மாதத்தில் பயணம் செய்யத்தக்க குறைந்த அளவு நாட்களின் எண்ணிக்கை எதாவது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா.?

(2) மன்றத் தலைவர் வட்டார ஜீப் வண்டியில் பயணம் செய்தால், பயணப்படியில் எதாவது விதாசாரக் கழிவு செய்யவேண்டுமா?

(3) மன்றத் தலைவர், யூனியனுக்கு வெளியே செய்யும் பயணங்களுக்கு பயணப்படியில் வீதாச்சாரக்குறைப்பு எதாவது செய்யவேண்டுமா?

பயணம் செய்யும் நாட்களின் குறைந்த அளவு எண்ணிக்கையோ, வீதாச்சாரக் குறைப்போ நிர்ணயிக்க வேண்டிய தேவையில்லை. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் வட்டார ஜீப் வண்டியைப் பயன்படுத்துவது குறித்து விவரமான திருத்த ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

(4) மன்றத்தலைவர், 1963 ஜனவரி மாத முழுதுக்கும் குறித்த பயணப்படித் தொகை பெறத்தக்கவரா அல்லது கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 73—பிறப்பிக்கப்பட்டதிலிருந்து குறித்த தொகை பெறத்தக்கவரா?

மேற்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து, அதாவது 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியில் இருந்து மன்றத் தலைவருக்குப் பயணப்படித் தொகை அனுமதிக்கலாம்; அல்லது, அதற்குப் பிறகு, பஞ்சாயத்து யூனியன் மன்றம் முடிவு செய்யும் எதாவதொரு தேதியிலிருந்து மேற்படி ஆணையை நடைமுறைக்குக் கொண்டு வரலாம்.

(5) குறித்த பயணப்படித்தொகையை, சாதாரண சம்பளப்பட்டியலில் கேட்டுப்பெற வேண்டுமா அல்லது பயணப்படி பட்டியலில் கேட்டுப்பெற வேண்டுமா?

(6) மன்றத் தலைவர் ஒவ்வொரு மாதமும் பயணப்படி கேட்டுப்பெற வேண்டுமா ?

குறித்த தொகைப் பயணப்படியை மன்றத் தலைவர், பயணப்படி பட்டியலில் (Travelling Allowance Bill) ஒவ்வொரு மாதமும் கேட்டுப்பெற வேண்டும்.

(7) சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள பயணப்படி அளித்தல் பற்றிய விதிகளில் நிர்ணயித்துள்ள உயர்ந்த அளவு பயணப்படித் தொகைக்கு அதிகமாகப் பயணப்படி அளிப்பதாயின் கலெக்டரின் அனுமதி பெற வேண்டுமா ?

இதற்குத் தக விதிகளைத் திருத்தும் விஷயம் தனியே எடுத்து ஆராயப்படும். அது வரையில் தேவையான போதெல்லாம், கலெக்டர், விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள உயர்ந்த அளவு பயணப்படித் தொகைக்கு அதிகமாகப் பயணப்படி அனுமதிக்கலாம்.

3. "குறித்த தொகைப் பயணப்படி"யை உயர்த்தக் கோரியுள்ள, கொடைக்கானல் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கோரிக்கை எற்றுக்கொள்ளப்படவில்லை. "குறித்த தொகைப் பயணப்படி"யைக் காட்டிலும், பயணப்படி விதிகளின்படி கிடைக்கும் தொகை இலாபமானதாக இருக்குமாயின், குறித்த தொகைப் பயணப்படிக்குப் பதில் அவர்கள் அந்தத் தொகையையே பெறலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ஆம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 11918.)

## கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

## (Third Five Year Plan—Elementary Education—Construction of quarters for women teachers in rural areas—1963-64—Proposals—Approved.)

### G.O.Ms. No. 993, R.D. and L.A., dated 13th May 1963.

கல்வித் துறையில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1385, 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 916—ஆகியவற்றில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஆசிரியைகளுக்கென்று ஒரு குடியிருப்பு கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இப்பொழுது 1963-64 ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் இரண்டாவது குடியிருப்பு கட்ட அரசாங்கம் அனுமதி வழங்குகிறது.

2. குடியிருப்பின் மதிப்பு, அமைப்பு, மானிய அங்கீகாரம் முதலிய விஷயங்களில், முதல் குடியிருப்பு கட்ட, மேற்படி ஆணைகளில் கூறப்பட்டுள்ள ஆணைகள் இந்த இரண்டாவது குடியிருப்பு விஷயத்திலும் பொருந்தும்.

3. இத்திட்டத்திற்காகும் செலவுகள், "28. கல்வி. வி அபிவிருத்தித் திட்டங்கள்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள திட்டங்கள்—iii—முதல் நிலை (iii) தல ஸ்தாபனங்களுக்கு மானியங்கள்—பி. கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்" என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் செலவுகளைத் திருப்பிப் பெறுகின்ற (கழிக்கின்ற) விஷயத்தில், கல்வித்துறையின் 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 916-ன் 2-வது பாராவில் கூறப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படவேண்டும்.

(கல்வித்துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 993.)

## கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்குக் கட்டப்படும் குடியிருப்பு மதிப்புயர்வு அனுமதி

தமிழ் நாட்டுக்கான மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கல்வி என்ற தலைப்பில், கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குப் பயன்படுத்த என்று 25 லட்சம் ரூபாய் நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு குடியிருப்பு 3,300 ரூபாய் உத்தேச மதிப்புடன் 750 குடியிருப்புக்கள் கட்டுவதற்கு கல்வித்துறையின் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1385-ல் திட்டம் வகுக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்டுள்ள அமைப்பின்படி குடியிருப்பு கட்டுவதற்கு 3,300 ரூபாய் போதவில்லை என்றும், உண்மையான மதிப்புக்குக் குறைவாக அந்தத்தொகை உள்ளது என்றும், ஆகவே அந்தத் தொகையை மேலும் உயர்த்த வேண்டுமென்றும் சில பஞ்சாயத்து யூனியன்கள் கேட்டுக்கொண்டுள்ளன. இது, விஷயத்தை நெடுஞ்சாலை கிராம வேலைகள் துறை—தலைமைப் பொறியாளரை கலந்தாலோசித்ததில், கட்டிட அமைப்பில் எந்த ஒரு மாற்றமும் செய்யவேண்டியதில்லையென்றும், பொருட்களின் விலையும் ஆட்களின் கூலியும் உயர்ந்து விட்டதால் ஒவ்வொரு குடியிருப்பின் மதிப்பையும் உயர்ந்த அளவு 5,500 ரூபாயாக நிர்ணயிக்கலாம் என்றும் தலைமைப் பொறியாளர் ஆலோசனை கூறியுள்ளார்.

ஒவ்வொரு குடியிருப்புக்கும், உயர்ந்த அளவு 5,500 ரூபாய் என்று நிர்ணயிக்கும் தலைமைப் பொறியாளரின் ஆலோசனையை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. இந்த மதிப்பு வீதம் இதுவரை கட்டுவதற்குத் தொடங்கப்படாத எல்லாக் குடியிருப்புக்கும் பொருந்தும். இந்த நிலையில் இக்கட்டிடங்களின் மதிப்பை உயர்த்தியதன் விளைவாக, இதற்கென்று திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி வசதி அதிகப்படுத்த வேண்டிய தேவையில்லை என்று அரசாங்கம் உறுதி செய்கிறது. கல்வித்துறை இயக்குநர் இக் கட்டிட வேலை முன்னேற்றத்தைக் கண்காணித்து இவற்றிற்குச் செய்யப்பட்டுள்ள பொருள் வசதியின் நிறைவைப்பற்றி 1964 ஜனவரியில் ஒரு அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கல்வித்துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1012.)

## ஆதாரப்பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றில் 1963-64-ம் ஆண்டில் நூலகங்கள் வைப்பதற்கான விளக்கம்

## (Education—Elementary—Libraries—Provision of in Lower and Higher Elementary Schools including basic schools during 1963-64—Proposals—Orders issued.)

### G.O.Ms. No. 1016, Education, dated 16th May 1963.

ஜூனியர் ஆதாரப்பள்ளிகள் உட்பட 4,400 ஆரம்பப் பள்ளிகளிலும், சீனியர் ஆதாரப் பள்ளிகள் உட்பட 1,000 உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும், 1963-64 ஆண்டுக்காலத்தில் நூலகங்கள் வைக்க, மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. ஜூனியர் ஆதாரப் பள்ளி உட்பட ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கும் 15 ரூபாய் என்ற வீதத்திலும், சீனியர் ஆதாரப்பள்ளி உட்பட ஒவ்வொரு உயர்தர ஆரம்பப் பள்ளிக்கும் 25 ரூபாய்

என்ற வீதத்திலும் இம்மானியம் வழங்கப்படும். பள்ளி நிர்வாகத்தினர் இதற்கீடான தொகையை நூலகத்திற்கு அளிக்கவேண்டும்.

பஞ்சாயத்து யூனியனல்லாத பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு கல்வித்துறை இயக்குநர் தன்னுடைய மேற்பார்வை அதிகாரிகள் மூலம் மானியங்கள் வழங்குவார். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், மானியங்கள் வழங்குவார்கள். பஞ்சாயத்து யூனியனல்லாத பகுதிகளிலுள்ள ஆதாரப் பள்ளிகள் உட்பட 670 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 254 உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும் கல்வித்துறை இயக்குநர் மூலம் மானியம் வழங்குவதற்காக 16,400 ரூபாய் மானியத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. கல்வித்துறை இயக்குநர் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து பட்டியலை அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பார்.

முன் ஆண்டில் மானியம் வழங்கப்பட்ட பள்ளிகளுக்கு 1963–64 ஆண்டில் மானியம் வழங்கப்படமாட்டா.

தத்தம் பகுதிகளிலுள்ள ஜூனியர் ஆதாரப் பள்ளிகள் உட்பட 10 ஆரம்பப்பள்ளிகளிலும், சீனியர் ஆதாரப் பள்ளிகள் உதவிபெறும் பள்ளிகள் உட்பட இரண்டு உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் நூலகங்கள் அமைப்பதற்கென்று ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும், 200 ரூபாய் மானியம் அளிக்கப்படும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தம் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், அவற்றின் நிதியிலிருந்து மானியத்திற்கு ஈடான தொகையை இதற்கென அளிக்கவேண்டும். மானியம் அளிக்கத்தக்க பள்ளிகளை (யூனியன் பள்ளிகளும், உதவிபெறும் பள்ளிகளும்), மன்றத் தலைவரையும், பள்ளிகளின் துணை மேற்பார்வையாளரையும், கலந்து ஆலோசித்து, கமிஷனர் தேர்ந்தெடுப்பார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1010-ன் சுருக்கம்.)

---

## பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளின் அலுவலகங்கள், கலெக்டர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றில், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வைத்திருக்கவேண்டிய நிதிநிலைப் பதிவேடுகள், காலமுறை அறிக்கைகள், நமூனாக்கள் முதலியவற்றில் தொடர்ந்து இருக்கவேண்டியன, நீக்கப்படவேண்டியன, திருத்தப்படவேண்டியன பற்றிய விவரங்கள்

**(Panchayat Development—Administration—Offices of Panchayat Unions, Revenue Divisional Officers and Collectors—Financial Registers, Periodicals and Forms maintained under Community Development Programme—Continuance, Revision, and Deletion—Orders issued.)**

### G.O.Ms. No. 1141. R. D. and L. A., dated 22nd May 1963

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 540-ல், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களிலும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளின் அலுவலகங்களிலும், கலெக்டர்களின் அலுவலகங்களிலும் வைத்திருக்க வேண்டிய பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல்வேறு நமூனாக்களும், பதிவேடுகளும், வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வாணையில், தேசிய வளர்ச்சிப்பணி நமூனாக்கள் சில திருத்தியமைக்கப்பட வேண்டியனவும், நீக்கப்பட வேண்டியனவுமுள்ளன என்றும் அவை குறித்துத் தனியே ஆணை பிறப்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2. அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களிடம், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணிகளை ஒப்படைத்தும், கிராம நல-நல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 341-ல் அவை பற்றிய நமூனாக்கள், பதிவேடுகள் குறித்துத் தனி ஆணை பிறப்பிப்பதை நிறுத்திவைத்து, தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ள நமூனாக்களும், பதிவேடுகளும் தொடர்ந்து பயன்பட ஆணையிடப்பட்டது. இப்பொழுது, திருத்தப்பட்ட அமைப்பில், ஏற்கெனவே இருந்த தேசிய வளர்ச்சிப்பணி நமூனாக்களைப் பற்றி ஆராய வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து, இவ்வாணையின் இணைப்புகள் 1, 2-ல் கொடுக்கப்பட்டபடி முடிவு செய்யப்பட்டுள்ளன. இணைப்பு 1-ல், தொடர்ந்து இருக்கவேண்டிய பதிவேடுகளும், நமூனாக்களும்-நீக்கப்பட வேண்டிய நமூனாக்களும் பதிவேடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இணைப்பு 2-ல பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் கலெக்டருக்கும், கலெக்டர் அரசாங்கத்துக்கும் அனுப்ப வேண்டிய மாத இறுதி செலவு அறிக்கையின் திருத்தப்பட்ட அமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் நமூனாக்களைத் திருத்தப்பட்டுள்ள நமூனாக்கள், பதிவேடுகள் குறித்து தனியே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.



3 கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 540-ல் வரையறுக்கப்பட்டுள்ள நமூனாக்கள், பதிவேடுகள் ஆகியவற்றுடன் இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பதிவேடுகளையும், நமூனாக்களையும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் வைத்திருப்பார்.

### இணைப்பு I

வட்டார அலுவலகங்களில் (பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில்) வைத்திருக்கும் பதிவேடுகள், நமூனாக்கள் ஆகியவற்றில் தொடர்ந்து இருக்க வேண்டியன வருமாறு :—(1) ரொக்கப் புத்தகம் (பொது), (2) செலுத்து பட்டியல் பதிவேடு, (3) பயணப்படிப் பட்டியல் பதிவேடு, (4) பயணப்படி கேட்புக்கணக்கு, (5) பயண முன்பணப் பதிவேடு, (6) தப்புப் பதிவேடு, (7) சம்பள நிலுவைப் பதிவேடு, (8) பட்டியல் பதிவேடு, (9) கஜானா பட்டியல் புத்தகம், (10) உதவித் தொகைக் கணக்குப் பதிவேடுகள், (11) கணக்குச் சரிக்கட்டுதல், மாற்றுதல் அறிக்கைப் பதிவேடு, (12) மோட்டார் வண்டிகள் பற்றிய பதிவேடுகள், (13) அலுவலகக் கிடங்கு, மேஜை நாற்காலி இருப்புப் பதிவேடு, (14) பணிப் புத்தகங்களின் பதிவேடும் பணியாளர் பெயர்ப் பட்டியலும், (15) பட்டியல் புத்தகங்கள், ரசீது புத்தகங்களின் பதிவேடு, (16) இழப்புப் பதிவேடு, (17) கடன் கணக்குகள், (18) விவசாயக் கிடங்குக் கணக்குகள்.

வட்டார அலுவலகங்களில் இப்போதுள்ள பதிவேடுகள்; நமூனாக்களில் இனி நீக்க வேண்டியன வருமாறு :—

(1) நிரந்தர முன்பண விநியோகப் பதிவேடு, (2) சில்லறைச் செலவுப் பதிவேடு, (3) தினசரி தபால் வில்லைக் கணக்கு, (4) வரம்பு நிர்ணயிக்கப்பட்ட செலவுப் பதிவேடு, (5) திட்டங்களின் அங்கீகாரப் பதிவேடு, (6) அங்கீகாரப் பதிவேடு, (7) கொடுத்தல் பதிவேடு, (8) வரவுப் பதிவேடு, (9) காப்புப் பதிவேடு, (10) புத்தக வரவுப் பதிவேடு, (11) பணம் அனுப்புப் புத்தகம், (12) திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஒட்டி செய்து வரும் செலவுப் பதிவேடு, (13) வேலைக் களங்களிலுள்ள பொருட்கள் பற்றிய ஆண்டு இறுதிப் பதிவேடு, (14) கட்டு வேலைக் கணக்கு, (15) மாற்றுப்பதிவுப் புத்தகம், (16) குறித்த செலவு அனுமதிப் பதிவேடு, (17) அனுமதிக்கப்பட்ட உத்தேச வேலைப் பதிவேடு, (18) ஒப்பந்தப் பதிவேடு, (19) அளவைப் புத்தகப் பதிவேடு, (20) அன்றுடப் பணியாளர் வருகைப் பட்டியல் பதிவேடு, (21) இயந்திரங்கள், கருவிகள் பதிவேடு, (22) பொருள் வரவுக் குறிப்புக் கணக்கு, (23) அளவை சரிபார்த்தல் பதிவேடு, (24) வேலைகள் பட்டியல் பதிவேடு.

ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளின் அலுவலகங்களில் வைத்திருக்கும் பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தப்பட்ட பதிவேடுகள், நமூனாக்கள் ஆகியவற்றில் நீக்க வேண்டியன வருமாறு :—

(1) பட்டியல் பதிவேடு, (2) கொடுத்தல், செலவிடுதல் விநியோக அதிகாரிகள் பதிவேடு, (3) உதவித் தொகைக் கணக்குப் பதிவேடு, (4) கொடுத்தல் பதிவேடு, (5) கணக்குச் சரிகட்டுதல், மாற்றுதல் அறிக்கைப் பதிவேடு (6) வரவுப் பதிவேடு, (7) வேலைக் களங்களில் உள்ள பொருட்கள் பற்றிய ஆண்டு இறுதிப் பதிவேடு, (8) கட்டு வேலைக் கணக்கு, (9) குறித்த செலவு அனுமதிப் பதிவேடு, (10) ஒப்பந்தப் பதிவேடு, (11) அளவைப் புத்தகப் பதிவேடு, (12) அன்றுடப் பணியாளர் வருகைப் பட்டியல் பதிவேடு, (13) யந்திரங்கள், கருவிகள் பதிவேடு, (14) மிகுதியாக இருக்கும் பொருட்களின் பதிவேடு, (15) பொருள் வரவுக் குறிப்புக் கணக்கு, (16) அளவை சரி பார்த்தல் பதிவேடு (17) வேலைகள் பட்டியல் பதிவேடு.

கலெக்டர் அலுவலகங்களில் வைத்திருக்கும் பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகம் பற்றிய பதிவேடுகள், நமூனாக்கள் ஆகியவற்றில் நீக்க வேண்டியன வருமாறு :—

(1) அனுமதிகள் பற்றிய பதிவேடு, (2) கொடுத்தல், செலவுகள் விநியோக அதிகாரிகள் பதிவேடு, (3) வரவுகள் பதிவேடு, (4) வேலைகளின் அமைப்புப் படிவங்கள் பதிவேடு.

### இணைப்பு II

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் ஒப்படைக்கப்படாத வேலைகள் பற்றிய மாத இறுதி அறிக்கையின் திருத்தப்பட்ட அமைப்பு—ஆர். டி. எப். எம். 19 ஆக குறிக்கப்பட்டு—இவ்விணைப்பு 2-ல் வெளியிடப்பட்டுள்ளது. அது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1141.)

---

## பஞ்சாயத்து மரங்களின் பாசன வசதிக்கு கிணறுகள் வெட்டக் கடன்—1937-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபனக் கடன் விதிகளின் கீழ், கடன் வழங்க அனுமதி

**[Panchayat Development—Loans and Advances—Loans for sinking of Irrigation wells for Panchayat Plantations—Loans under the Madras Local Authorities Loans Rules, 1937 Sanctioned].**

### G.O.Ms. No. 1072, R.D. and L.A., dated 14th May 1963.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாய அபிவிருத்தித் திட்ட நிறைவேற்றத்திற்கென்று 2,00,000 ரூபாய் விவசாய மானியம் கிடைக்க வகை செய்யப்பட்

கின்றது. பல பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் மரம் நட்டு வளர்க்கின்ற திட்டத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. திட்டத்தில் சில குறிப்பிட்ட வேலைகளுக்கு, விவசாய மானியத்திலிருந்து பஞ்சாயத்துக்கள் தனி உதவித் தொகை கேட்டுப் பெறலாம். 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் சென்னையில் நடைபெற்ற உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பல்வேறு உற்பத்தித் திட்டங்கள் நிறைவேறுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் ஆராயப்பட்டது. அப்போது, பஞ்சாயத்து மரம் நடும் திட்டம் வெற்றிபெற, நீர்ப்பாசனத்திற்குக் கிணறுகள் வெட்ட பஞ்சாயத்துக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

பஞ்சாயத்துக்களுக்கு இவ்வகையான கிணறுகள் வெட்ட கடன் அல்லது 'உதவித்தொகையும் கடனும்' (Subsidy Cum Loan) வழங்கலாம் என்றும் ஆலோசனைகூறப்பட்டது. விவசாய மானியத்தைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டிய திட்டங்களாக ஏற்கெனவே பல திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளபடியால், இந்த வேலைக்கும் அம்மானியத் தொகையைப் பயன்படுத்துவதென்பது, பிற திட்டங்கள் தடையின்றி நடைபெற முடியாத நிலை ஏற்படுத்தும்.

அரசாங்கம் இது விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து பஞ்சாயத்து மரம் நடும் திட்டத்தில் கிணறுகள் வெட்ட வசதி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொள்கிறது. இதற்கென கடன்கள் அங்கீகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி, 1937-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபனங்கள் கடன் விதிகளின் கீழ், பஞ்சாயத்துக்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை அங்கீகரிக்கிறது. இத்திட்டத்திற்குப் பொருந்தக் கூடிய மேற்படி விதிகளைப் பஞ்சாயத்துக்கள் கவனிக்கவேண்டும். அவற்றுடன், கீழ்க்குறித்த சிறப்பு விதிகளுக்கு உட்பட்டு கடன் வழங்கப்படும்:—

1. பஞ்சாயத்து மரங்கள் வைக்க அல்லது பராமரிக்க வெட்டப்படும் கிணறு அல்லது கிணறுகள்.

2. பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது நிர்வகிக்கப்படும் பொது நிலத்தில் கிணறு வெட்டப்பட வேண்டும்.

3. பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது நிர்வகிக்கப்படும் பொது நிலத்தின் பாசனத்திற்கே கிணறு பயன்பட வேண்டும்.

4. பாசன வசதி பெறுகின்ற, மரம் நடப்படும் பொது நிலம், மேற்குறித்த தன்மையுடன் ஒரே இடத்தில், ஒரே பரப்பாக குறைந்த அளவு மூன்று ஏகர் பரப்புள்ளதாக இருக்க வேண்டும்.

5. வைக்கப்படும் மரங்கள், எரிபொருள் அல்லது பழ விளைச்சல், அல்லது தீவனம் தரும் வகையாக இருக்க வேண்டும்.

6. தமிழ்நாடு தல ஸ்தாபனக்கடன் விதிகளின் கீழ் கடன் வாங்கி வெட்டப்படும் கிணறு பொதுக்கிணறாக கருதப்படுவதுடன், கிராமத்தின் பொது நன்மைக்குப் பயன்படும் நோக்கத்துடன் வைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து மரங்களின் பாசனத்திற்குப் பயன்பட என்று இருக்க வேண்டும்.

மேற்படி கடன் கேட்டு வரும் மனுக்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும். மனுக்கள் கீழ்க்கண்ட விவரங்களுடன் சேர்ந்து வரவேண்டும் :—

1. எந்த வேலைக்குக் கடன் தேவை என்பதைக் குறித்தும், 1937-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபனக் கடன் விதிகளில் கூறப்பட்டுள்ள பொது விதிகளுக்கும், சிறப்பு விதிகளுக்கும், அரசாங்கம் குறித்துள்ள விதிகளுக்கும் உட்படுவதாய் ஒப்புதல் தெரிவித்தும், கடன் கேட்டு மனுச் செய்யும் பஞ்சாயத்து நிறைவேற்றிய தீர்மானம்.

2. பஞ்சாயத்தின் மரம் வளர்ப்புத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியனின் விவசாய மானிய ஒதுக்கீடு திட்டத்தில் ஏற்றுக் கொண்டதாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றம் நிறைவேற்றிய தீர்மானம்.

3. பாசனம் பெறும் நிலம், கிணறு வெட்ட உத்தேசித்துள்ள நிலம் ஆகியவற்றைக் காட்டும் படம்.

4. சிறுபாசன மேற்பார்வையாளர் (Minor Irrigation Overseer) அல்லது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனின் பொறியாளர் (Union Engineer) ஒப்புதல் பெற்ற அமைப்புப் படத்துடன், வேலையின் உத்தேசச் செலவு மதிப்பீடு.

5. இன்றைய விலைவாசியில், நடப்படும் மரங்களிலிருந்து கிடைக்கும் ஆண்டு இறுதி மகசூலின் உத்தேச மதிப்பும் (மரங்களின் எண்ணிக்கையும் வகையும் குறிக்க வேண்டும்), அத்தகைய மகசூல் கிடைக்கக்கூடிய கால அளவும்.

6. பஞ்சாயத்தின் நிதி நிலை காட்டும் அறிக்கை.

மேற்குறித்த தல ஸ்தாபனக் கடன் விதிகளின் கீழ், பஞ்சாயத்து மரம் நடும் திட்டத்திற்குக் கிணறு வெட்டத் தரப்படும் கடன், பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்டும் திருப்பித் தரத்தக்கதாகும். முதல் தவணைப் பணம் கட்டுதல், கடன் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது ஆண்டிலிருந்து தொடங்கும்.

கடன் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து, அன்று உள்ள அரசாங்க வட்டி வீதத்தில், பஞ்சாயத்து வருவாயிலிருந்து பஞ்சாயத்து வட்டி செலுத்தும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1072.)



## 1961-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபன நிதிச் சட்டத்தின்கீழ் சர்சார்ஜ் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது பற்றிய விளக்கம்.

## [Madras Local Authorities Finance Act., 1961—Implementation—Instructions regarding Grant of exemption from payment of surcharge.]

### Memorandum No. 160339., R. D. and L. A., dated 18th May 1963.

1961-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபன நிதிச் சட்டத்தின் 5-வது பிரிவின்கீழ், எந்த ஒரு தல ஸ்தாபனத்திற்கும் அதாவது மாநகராட்சி, நகரமன்றம், நகர் குடியிருப்புக் குழு முதலியவற்றிக்கு அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் பஞ்சாயத்து யூனியன் மன்றம் கீழ்க்கண்ட விதிவிலக்குகளை அளிக்கலாம்:—

(1) 1961-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபன நிதிச் சட்டம் பிரிவு 3 துணைப் பிரிவு (1) உட்பிரிவு (a)-ன் கீழ் வரிவிதிப்புக்குட்டும்பொழுது போக்கு வகை, அல்லது பொழுது போக்குக்கு அனுமதிப்பதற்கு—

(ii) மேற்படி சட்டம், பிரிவு 3, துணைப் பிரிவு (1) உட்பிரிவு (b)-ன் கீழ் வரி விதிப்புக்குட்டும் கண்காட்சி வகைகள் அல்லது நிழற்படக்காட்சி காட்டுவதற்கும் உரிய வரியிலிருந்து விலக்கு.

மேற்படி சட்டத்தின் பிரிவு 5-ன் கீழ் விதிவிலக்கு கேட்கும் போது தல ஸ்தாபனங்கள், நிர்வாக வசதிக்காக, அரசாங்கத்திற்கு முன்னதாகவே மனுச் செய்துகொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகிறது. இதற்கான மனுவுடன், இதுபற்றிய தீர்மானத்தின் நகலையும் வைத்தனுப்ப வேண்டும்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 18 ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 160639.)

---

## சமூகக் கல்வி நிலையங்களுக்கு வேண்டிய "கிராம நல" இதழ்களை மொத்தமாக அனுப்புதல் பற்றிய விளக்கம்

## [GRAMANALAM—Despatch of copies intended for Social Education Centres-Bulk Supply.]

### Memorandum No. 94306., R. D. and L. A., dated 15th May 1963.

சமூகக் கல்வி நிலையங்களுக்கு "கிராம நலம்" இதழ்கள் தவறாமல் கிடைப்பதற்காக, அவற்றுக்கு அனுப்ப வேண்டிய இதழ்களை மொத்தமாகப் பதிவுசெய்யப்பட்ட நூல் அஞ்சலில் (Registered Book Post) பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அனுப்பி வைப்பதென்றும், அவர்கள் அவற்றை சம்பந்தப்பட்ட சமூகக் கல்வி நிலையங்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, சமூகக்கல்வி நிலையங்களுக்குத் தேவையான பிரதிகளுக்குரிய சந்தாத்தொகையை, சஜானுவில் முன்னதாகவே கட்டிவிட்டு எத்தனை பிரதிகள் தேவை என்பதையும், சந்தாத் தொகையைக் கட்டியதற்கான கஜானா சீட்டையும் இந்தத் துறைக்கு அறிவிக்கும்படி எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேற்படி செய்தி கிடைத்ததும், ஒவ்வொரு கமிஷனரும், சமூகக் கல்வி நிலையங்களுக்காக சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ளப்பட்டு, சந்தா எண் கொடுக்கப்படுவர். "கிராம நல"த்தின் ஆண்டுச் சந்தா ரூ. 1-50 என்று கணக்கிடப்பட வேண்டும். ஏற்கெனவே சந்தா கட்டி, சந்தாதாரராக உள்ள சமூகக் கல்வி நிலையங்களுக்கு, சந்தா முடியும்வரை, தனித்தனியே இப்பொழுதுள்ள முறைப்படியே அனுப்பப்படும். புதிய சந்தாதாரர்களைப் பொறுத்தமட்டிலும் இப்புதிய முறை பின்பற்றப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 94006.)

---

## ஆயுதபூஜை முதலான விழாக்களுக்குப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து செலவிடல்

## [Expenditure—Extraordinary—Panchayat Unions—Incurring of expenditure on such items as celebration of Ayudha Puja—Instructions—Issued.]

### Memorandum No. 86970., R. D. and L. A., dated 15th May 1963.

ஒரு பஞ்சாயத்து யூனியன், தன் நிதியிலிருந்து, பள்ளிகளில் ஆயுத பூஜை கொண்டாட்டத்துக்காக 101 ரூபாய் வரை, செலவு செய்ததாக ஒரு நிகழ்ச்சி அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்தச் செலவு, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத ஒன்று. ஆகவே, அவ்வாறு

செலவிடுவது ஒழுங்கீனமானது. பஞ்சாயத்து யூனியன் மன்ற நிதிகளிலிருந்து இத்தகைய செயல்களுக்குச் செலவுகள் செய்வதை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தவிர்க்க வேண்டும். சட்டம் அல்லது சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின்படி, அனுமதிக்கப்படாத எந்தச் செலவையும், தகுந்த அதிகாரியின் முன் அனுமதி பெறுமல் செய்தல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அத் தொகைகளைத் திருப்பி வசூலிக்க வழி ஏற்படுத்தும் என்பதையும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 86970.)

---

## மாற்றப்பட்ட பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு 1950 ஆண்டு தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் பொருந்துதல் உறுதிசெய்யப்படுகிறது

## [Rules—Madras Village Panchayats Act, 1950—Application to Panchayats in the transferred territory—confirmed.]

### G. O. Ms. No. 1164., R. D. and L. A., dated 25th May 1963.

1950 ம் ஆண்டு தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் உள்ள சில பணி விதிகள், மாற்றப்பட்ட பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துப் பணியாளர்களுக்குப் பொருந்துதல் பற்றிய வரைவு விதிகள் (Dratt Rules) பொது அறிவிப்பாகவும், கருத்தறியவும் 13—3—63 தேதிய செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்டது. எந்த ஒரு ஆட்சேபணை அல்லது ஆலோசனையும் கூறப்படாமையால் அவை உறுதி செய்யப்படுகின்றன.

### இணைப்பு

#### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 178-வது பிரிவு (1) துணைப் பிரிவின்படி கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்படி சட்டத்தின் 179-வது விதி (2) துணை விதியில் கேட்டுக்கொண்டுள்ளபடி, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள கீழ்க் கண்ட விதிகளைத் தமிழ்நாடு கவர்னர் அவர்கள் செய்கிறார் :—

#### விதிகள்

**தலைப்பு**.—இவ்விதிகளை, 1963-ம் ஆண்டு தமிழ்நாடு மாற்றப்பட்ட பகுதி (பஞ்சாயத்துப் பணிகளுக்கு விரிவுபடுத்தல்) விதிகள் என்று குறிப்பிடலாம்.

**விதிகள் பொருந்தும்வகை** —1950-ம் ஆண்டு தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டு, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் அமுலில் இருப்பதாகக் கருதப்பட்டு வரும் கீழே அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள விதிகள், கீழ்க்குறித்த திருத்தங்களுக்குட்பட்டு, திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய பகுதிகளில் (இவ் விதிகளில் மாற்றப்பட்ட பகுதிகள் என்று குறிக்கப்பட்டவை) உள்ள பஞ்சாயத்துப் பணியாளருக்கும் பொருந்தும்.

(1) மேற்படி விதிகளில் "மேற்பார்வையாளர்" என்று இருப்பின் அது மாவட்டக் கலெக்டரைக் குறிக்கும்.

(2) மேற்படி விதிகளில் "பிராந்திய மேற்பார்வையாளர்" என்று இருப்பின் அது சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியைக் குறிக்கும்.

(3) நீக்கம் .—இவ்விதிகளின் தொடக்கத்தில், 1950-ம் ஆண்டு திருவாங்கூர்–கொச்சி பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் கீழ்க் கொடுக்கப்பட்ட அட்டவணையில் குறித்த விஷயங்களிலும், மாற்றப்பட்ட பகுதிகளுக்குப் பொருந்துவனவும் இனி மாற்றப்பட்ட பகுதிகளில் அமுலில் இரா.

#### அட்டவணை

1. பஞ்சாயத்துக்களின் பொது பணித்துறை, அதிகாரிகள், பணியாளர் நியமனம், தண்டனை முதலியன.
2. பஞ்சாயத்துப் பணியாளரின் நிலுவைத் தொகைகளைச் செலுத்துதல்.
3. பஞ்சாயத்துக்களின் கடைநிலை ஊழியர், பணியாளர் சேமநிதி விதிகள் (Provident Fund Rules).
4. நிர்வாக அதிகாரியின் அவசர கால நியமனங்களைக் கட்டுப்படுதல்.
5. சுகாதாரப் பணித் துறைக்குப் பணி பதவிகளை அனுமதித்தல்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1164.)



## பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் தனி குமாஸ்தா, ஏவலர் ஆகியோரின் தலைமை நிலையம் பற்றிய விளக்கம்

## (Panchayat Union Office—Personal Clerk and Peon to Chairman—Headquarters—Fixing of—Orders passed.)

### G. O. Ms. No. 1166, R. D. and L. A., dated 25th May 1963.

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் கீழ் பணிபுரிய, அரசாங்கம் ஒரு தனி குமாஸ்தாவையும் (Personal clerk) ஏவலரையும் (Peon) அமர்த்த அனுமதித்துள்ளது. தனி குமாஸ்தாவும், ஏவலரும் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் வீட்டையே தம் தலைமை நிலையமாகக் (Headquarters) கொள்ளவேண்டுமென்று சில மன்றத் தலைவர்கள் கேட்டுள்ளனர். மேலும், இந்த தனி குமாஸ்தாவும், ஏவலரும் யூனியன் மன்ற அலுவலகத்தில் பணி புரிய வேண்டுமா என்பதை விளக்க வேண்டுமென்று சில பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர். இது விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்தது.

எல்லா நாட்களிலும் மன்றத் தலைவர் அலுவலகம் வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை என்பதால், பெரும்பான்மையான அலுவலக வேலைகளை அவர் தம் வீட்டிலிருந்தே செய்ய வேண்டி இருக்கும். கிராம நல-தல நிர்வாகத் துறையின் 16—11—62 தேதியிட்ட அரசாங்க ஆணை 2496-ல், எல்லா தபால்களையும் கமிஷனர் பார்த்த பின்னர் மன்றத் தலைவரின் பார்வைக்கு அனுப்ப வேண்டும் என்று விளக்கப்பட்டுள்ளது. ஆகவே மன்றத் தலைவர் தம்முடைய கடமைகளைச் செய்ய தனி குமாஸ்தாவின் துணை மிகவும் தேவைப்படுகிறது. எனவே, தனி குமாஸ்தாவும், ஏவலரும் மன்றத் தலைவரின் வீட்டில் இருந்து வேலை செய்வது அவசியமாகிறது. தனி குமாஸ்தா, ஏவலர் ஆகியோரின் தலைமை நிலையம், மன்றத் தலைவர் தங்கியுள்ள இடமாகவே இருக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1166.)

---

## தேசிய நெருக்கடி நிலையின்போது சென்னை மாநகராட்சி, நகர மன்றங்கள், பிற தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பணியாளர் சேமிப்பு நிதி அளித்தல் பற்றிய விளக்கம்

## (Provident Fund—Employees of Madras Corporation and Municipal Councils and other Local Bodies—Contribution during the National Emergency—Further Instructions—Issued.)

### Memorandum No. 81787, dated 27th May 1963.

பணியாளர் சேமிப்பு நிதி அளிக்கும் விஷயத்தில், இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுடன், கீழ்க் கண்ட விஷயத்தில் விளக்கம் வெளியிடப்படுகிறது :—

**"1962-ம்ஆு ஜனவரிமீ 1-ம்உக்குப்பின் பணியிலிருந்து ஓய்வுபெறுபவரிடமிருந்து. பெறப்பட்டுள்ள அதிக சேமிப்பு நிதியை** (Additional Provident Fund) அவருடைய **சேமிப்பு நிதியுடன்** திருப்பித்தரலாமா ? இல்லையென்றால், சேமிப்பு நிதிகேட்டு ஓய்வுபெற்ற பணியாளரிடமிருந்து மனு வந்ததும் அவருடைய சேமிப்பு நிதிக் கணக்கு **தீர்க்கும்பொழுது அதிகத் தொகை சேமிப்பை** எந்தக் **கணக்கில் வைப்பது ?"**

1963-ம்ஆு ஜனவரிமீ 1உலிருந்துபெற்ற அதிகத் தொகை சேமிப்பு நிதியையும் பணியாளர் ஓய்வு பெறும்போது அளிக்கப்படும் அவருடைய சேமிப்பு நிதியுடன் திருப்பி அளித்து விடலாம். கமிஷனர் சேமிப்பு நிதிக்கணக்கை உரிய முறையில் தீர்ப்பதற்கு வசதியாக, அரசாங்கத்தில் பணம் செலுத்தியுள்ள கணக்கிலிருந்து பணம் எடுக்க அனுமதிக்கப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 27-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 81787.)

---

## சமூக நலப் பணியாளர்கள், அவர்களுடைய சொந்த வட்டாரத்துக்கு வெளியே அமர்த்தப்படுதல் குறித்த விளக்கம்

## (Social Welfare Workers—Posting outside their native blocks—Instructions—Issued.)

### Memorandum No. 83167, dated 31st May 1963.

கிராம நலத்துறையின் 30—9—58-ந் தேதியிட்ட அறிக்கை 117173-ல், எக்காரணம் கொண்டும் கிராம சேவகர், அவர்களுடைய சொந்த வட்டாரங்களில், நியமிக்கப்படக்கூடாது என்று, கலெக்டர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சமூகநலப் பணியாளர் விஷயத்திலும் அத்தகைய ஆணை பிறப்பித்தல் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது.

2. சமூகநலப் பணியாளர்கள், எக்காரணம் கொண்டும் அவர்களுடைய சொந்த வட்டாரத்திலேயே அமர்த்தப்படக் கூடாது என்பது, சென்னை தவிர, ஏனைய மாவட்டக் கலெக்டர்களெல்லாருக்கும் அறிவிக்கப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 31-ந்தேதியிட்ட அறிக்கை எண் 83167.)

## தல ஸ்தாபனங்கள் லைசென்ஸ் கேட்டுவரும் மனுக்களை உடனடியாகத் தீர்த்தல் பற்றிய விளக்கம்

## (Licence—Local Bodies—Expeditious disposal of application for licences—Instructions—Issued.)

### Memorandum No. 59678, R.D. and L.A., dated 31st May 1963.

தொழிற்சாலைக் கட்டடங்களைக் கட்டுதல் அல்லது விரிவுபடுத்துதல் ஆகிய வேலைகளுக்கு அனுமதி பெறுவதில், பல அதிகாரிகளைத் தொடர்புகொண்டு ஆராயவேண்டியிருப்பதால், மிகவும் காலதாமதமாகிறதென்றும், பல்வேறு அதிகாரிகளின் தொடர்பைக் குறைத்து, அனுமதி வழங்குவதில் ஆகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கின்ற நோக்கத்துடன் இவ்விஷயத்தை ஆராயலாம் என்றும், தமிழ்நாடு வணிகக் கழகச் செயலாளர் (Secretary, Madras Chamber of Commerce) எடுத்துக் கூறியுள்ளார்.

2. தொழிற்சாலைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு, நகர மன்றம், தொழிற்சாலைகளின் தலைமை மேற்பார்வையாளர் (Chief Inspector of Factories) முதலான பல்வகை அதிகாரிகளிடம் அனுமதி பெறுவதென்பது, பல்வேறு சட்டங்களின்கீழ் செய்யப்பட்டுள்ள வழிவகைகளின்படி நடைபெறுவதாகையால் அது அவசியமான ஒன்று என்பதோடு நீக்கமுடியாததுமாகும். இருந்தபோதிலும் இத்தகைய கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதில் பெருமளவுக்குக் காலதாமதத்தைத் தவிர்க்க விழைகிறது. ஆகவே, தொழிற்சாலை கட்டடங்கள் முதலானவை கட்ட அனுமதி கேட்டு வரும் மனுக்களை ஒவ்வொரு நிலையிலும் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கும்படி, பஞ்சாயத்து யூனியன்கள், நகர மன்றங்களின் நிர்வாக அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 59678.)

---

## வட்டாரத் தலைமை நிலையங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் வீட்டுத் தோட்டங்களை வைத்தல் பற்றிய விளக்கம்

## (Agriculture—Raising of Kitchen gardens by the Panchayat Unions at Block Headquarters—Enjoyment of fruits—Instructions—Issued.)

### Memorandum No. 84342, R.D. and L.A., dated 4th June 1963.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 29-3-63 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 9317-ல் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், வட்டாரத் தலைநகரில் மாதிரி வீட்டுத் தோட்டங்களை வைப்பதற்கான ஏற்பாடு செய்தல் குறித்து, விளக்கம் வெளியிடப்பட்டது. தஞ்சாவூர் கலெக்டர், தம்முடைய 22-4-63 தேதிய கடிதத்தில், வீட்டுத் தோட்டத்தின் விளைபொருட்களை யார் அனுபவிப்பது என்பது குறித்து விளக்கம் கேட்டுள்ளார். இது விஷயத்தில், விவசாயத்துறை இயக்குநர் கலந்தாலோசிக்கப்பட்டார்.

2. வட்டாரத் தலைநகரில் வைக்கப்படும் வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்கும் பொறுப்பு அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. விவசாயத்துறை அதிகாரிகள் இது விஷயத்தில் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவேண்டும். காய்கறித் தோட்டங்களுக்கு விதை வழங்குதல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் ஆகியவற்றுக்கு ஆகும் சிறு செலவுகள், பஞ்சாயத்து யூனியன் செய்யவேண்டும். தோட்டங்களின் விளைபொருட்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் விற்பனை அல்லது ஏலமிடுதல் செய்யப்படவேண்டும். அதனால் கிடைக்கும் வரவுகளை, பஞ்சாயத்து யூனியன் கணக்கில், உரிய தலைப்பின்கீழ் வரவு வைக்கவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 84342.)



## 1963–64-ம் ஆண்டில் கிராம நிலைப் பணியாளர்/கிராமங்கள் பரிசுப்போட்டி—திருத்தம்

## (Panchayat Development—Prize competition among Village Level Workers/Villages during 1963-64—Errata—Issued.)

### Memorandum No. 104327, R.D. and L.A., dated 6th June 1963.

1. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1-4-63 தேதியிட்ட அரசாங்க ஆணை 741-ல், 1963–64 ஆண்டில், கிராம நிலைப் பணியாளர்/கிராமங்களிடையே பரிசுப்போட்டி நடத்துதல் குறித்து விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது. புள்ளி விவரத்துறை இயக்குநர் கீழ்க்கண்ட கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார் :—

(1) கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1-4-63 தேதியிட்ட ஆணை 741—4-வது பாராவில், கிராம நலப் பணியாளர் எல்லாம் (ஆண்கள்) போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியுடையவர்கள் என்றும், 31-5-63 வரையில், கலந்துகொள்ளமுடியும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் தேதி, போட்டியில் கலந்துகொள்ளும் கிராமங்கள் விஷயத்திலும் கடைசி தேதி என்று கருதப்படுகிறது. போட்டிக்குரிய காலம் 1-4-63-லிருந்து 31-3-64 வரை என்றிருப்பதால், போட்டியிடுவோர் 31-5-63-க்குள் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பதில் 30-6-63 வரை கலந்துகொள்ள அனுமதிப்பது பொருத்தமாகத் தெரிகிறது.

(2) மேற்படி ஆணையின்படி, வட்டார நிலையில் உள்ள தீர்வுக்குழுக்கள், 28-2-64-க்குள், வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கிராம நிலைப் பணியாளரின் பெயரையும் சிறந்த கிராமத்தின் பெயரையும் கலெக்டருக்கு அறிவித்துவிட வேண்டுமென்றும், கலெக்டர்கள் 31-3-64-க்குள் அரசாங்கத்தக்கு அனுப்பிவிட வேண்டுமென்றும் வகுக்கப்பட்டுள்ளது. பணியின் தரத்தை மதிப்பிட்டுத் தேர்ந்தெடுக்க இக் கால வரையறை போதாது என்பதால், இவை முறையே 30-4-64 ஆகவும் 31-5-64 ஆகவும் மாற்றப்படலாம்.

(3) மேற்படி ஆணை 6-வது பக்கம், 2-வது பாராவில், வட்டார அளவில் 1-4-62 முதல் 31-3-63 வரையுள்ள காலத்தில், நேர்ந்தெடுக்கப்பட்ட வேலை இனங்களில், ஒவ்வொரு கிராம நிலைப் பணியாளரின் சாதனைகளையும், அந்த வட்டாரத்திலுள்ள எல்லா கிராம நிலைப்பணியாளர் சாதனைகளின் சராசரி அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கால வரையறை, போட்டிக்குக் குறித்த கால வரையறையைப் போன்றே, அதாவது 1—4—63 முதல் 31—3—64 வரை என்று இருக்க வேண்டும்.

2. புள்ளி விவரத்துறை இயக்குநரின் ஆலோசனைகளை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

(1) கிராமநிலைப் பணியாளர்/கிராமங்கள், போட்டியில் கலந்துகொள்ளும் கடைசி தேதி 31—5—63-க்குப் பதில் 30—6—63 ஆகும்.

(2) வட்டார நிலை தீர்வுக்குழு தம் முடிவைக் கலெக்டருக்கு அறிவிக்கும் கடைசித் தேதி 30—4—64 ஆகவும், கலெக்டர்கள் அரசாங்கத்துக்கு அனுப்பும் கடைசி தேதி 31—5—64 ஆகவும் இருக்கும்.

(3) மேற்படி ஆணை, பக்கம் 6, பாரா 2-ல் குறிப்பிட்டுள்ள கால வரையறை 1—4—1963-லிருந்து 31—3—1964 வரையில் என்று திருத்தப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 104327)

---

## பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ஒலி பெருக்கிக் கருவிகளைச் சரிபார்த்தல் பற்றிய விளக்கம்

## Panchayat Radio Maintenance Organisation—Servicing of public address equipments in Panchayat Union—Instructions—Issued

### Memorandum No. 42832, R.D. & L.A. dated 6th May 1963.

சில பஞ்சாயத்து யூனியன்கள் சமீபத்தில் சில ஒலி பெருக்கிக் கருவிகளை (amplifiers, microphones, loud speakers, etc.), மாவட்டக் கலெக்டர்களின் அனுமதியுடன் வாங்கியிருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்தல் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்தது.

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம், ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிடமிருந்து 20 ரூபாய் சரிபார்த்தல் செலவு வசூலித்து, பஞ்சாயத்து வானொலிகளைச் சரிபார்த்து வருவதுபோன்றே, இவ்வொலி பெருக்கிக் கருவிகளின் பராமரிப்பையும் கவனித்துக் கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

வட்டாரத் தலைநகரங்களுக்கு வானொலி மேற்பார்வையாளர் (Radio Superviser) வரும்பொழுது, இக் கருவிகளைச் சோதித்து, ஏதாவதொரு கருவியைச் சரிபார்க்க வேண்டி இருந்தால், அவ்விஷயத்தை பஞ்சாயத்து யூனியன் கமிஷ

ருக்கு அறிவிப்பார். கருவி புழுது பார்க்கவேண்டியது அவசரமும் அவசியமுமானது என்றால், வானொலி மேற்பார்வையாளரின் தலைமை நிலையத்துக்கே எடுத்துச் செல்லப்படலாம். கருவி வேலை செய்வதற்குத் தேவைப்படும் பாகங்களை வானொலிமேற்பார்வையாளருக்கு வாங்கித் தரவேண்டிய பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடையதாகும். வானொலி மேற்பார்வையாளர் வட்டாரத் தலைநகருக்கு வரும்பொழுதெல்லாம் கூடுமான வரை, இக்கருவிகள் நன்கு வேலை செய்கின்றனவா என்று சோதித்துப் பார்த்துக் கொள்வார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 42832)

---

## பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், மேல் அதிகாரிகளுக்கு எழுதுதல் குறித்த விளக்கம்

## Education—Elementary—Teachers employed in Panchayat Union Elementary Schools—Addressing Higher Authorities—Instructions—Issued

### Memorandum No. 75795, R.D. & L.A. dated 6th June 1963

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், தங்கள் அலுவலகக் கடமைகள் தம் சொந்த நலனை பாதிப்பது குறித்து, அமைச்சர்கள் உட்பட உயர்தர அதிகாரிகளுக்கு நேரடியாக எழுதுகின்றனர். இத்தகைய செயல், தலநிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 1667-உடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிப்பு 20-ல் வெளியிடப்பட்ட, "பஞ்சாயத்து யூனியன் மன்ற அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் தனி ஒழுங்கு முறை" பற்றிய விதிகளில் 19-வது விதிக்கு முரணானது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தம் யூனியன் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்விதியை எடுத்துரைப்பதுடன், இத்தகைய விஷயங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறையையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முறையான வழியில் சரியான நடைமுறைப்படி எடுத்துக் கூறப்படாத விஷயங்களை அரசாங்கம் கவனிக்காது.

இந்த விளக்கம் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் பணிபுரியும் இதர அதிகாரிகள், பணியாளர்க்கும் பொருந்தும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந் தேதியிட்ட அறிக்கை 75795)

---

## பாதை போடுவதற்குத் தேவைப்படும் நிலப் பகுதிகளைக் கைப்பற்றுதல்

## Panchayat Development—Workers Roads Lands required for formation of roads—Acquisition in Cases where it is necessary to acquire small strips of lands from recalcitrant owners—Instructions—Issued

### Memorandam No. 196909, R. D. & L. A. dated 7th June 1963.

இப்போதுள்ள ஆணைகளின்படி, அரசாங்க மானியம் பெறத்தக்க வேலையின் உத்தேச மதிப்பீட்டில், நிலம் பெறுவதற்கான செலவு சேர முடியாது. அந்தச் செலவை மக்களேதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. நெடுஞ்சாலை—கிராம வேலைகள் துறைத் தலைமைப் பொறியாளர், நிலம் பெறுவது சங்கடமாக உள்ள இடங்களில் கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டியது தேவையாகிறது என்றும், ஆகவே பாதை வேலைகளின் உத்தேச மதிப்பீட்டில் நிலத்தின் மதிப்பை சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறியுள்ளார். அரசாங்கம் இது விஷயத்தில், மாவட்டக் கலெக்டர்களைக் கலந்தாலோசனை செய்தபின், கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

நிலத்தின் மதிப்பு பாதை போடும் உத்தேச மதிப்பீட்டில் சேராது. மேலும், கிராம வேலை மானியத்தின் ஈட்டு நன்கொடையாகவும் நிலத்தின் மதிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நிலத்தைக் கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டிவரும் இடங்களில், இதற்காக பொது மக்கள் நன்கொடை கிடைக்கிறதா என்று முதலில் அறிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு பொது நன்கொடை கிடைக்கவில்லை எனில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன், நிலம் பெறுவதற்கான செலவை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இந்த முறையை விதிவிலக்கான மிகச் சில இடங்களிலேயே ஏற்றுக் கொள்ளவேண்டும். சாதாரணமாக பாதை போடத் தேவையான நிலத்துக்கு மக்களே வகை செய்ய வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 196909)



## 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 1961-62, 1962-63-ம் ஆண்டுகளுக்கான தலபாதை மானியத்தில் மிகை மானியம் உதவும் மறு ஆய்வு

## [Grants—Local Roads Grant—Revision of grant for 1961-62 and 1962-63 based on the Population recorded in 1961 Census—Payment of additional grant—Sanctioned].

### G. O. Ms. No. 1266, R.D. & L.A., dated 11th June 1963.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 131-வது பிரிவின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களுக்கு, அளிக்கத்தக்க தலபாதை மானியம், 1961-62, 1962-63 ஆண்டுகளுக்கு அனுமதித்து, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1213, 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 831 ஆகியவற்றில், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த மானியம், எல்லை நிர்ணயிப்பு ஆணைகளில் பின்பற்றப்பட்ட மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. நிர்வாகம்-வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கப்படும் தலபாதை மானியத்தை 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கண்ட மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்கிட்டு அனுமதிக்கலாம் என்று அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது. இந்த ஆலோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 985-ல் 1963-64 ஆண்டுக்கான தலபாதை மானியத்தை, அரசாங்கம், சென்னை, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலைகளின் மேற்பார்வையாளர் (Superintendent of Census Operations, Madras) சமர்ப்பித்த 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் கணக்கிட்டு அனுமதித்துள்ளது. ஆகவே, 1961-62, 1962-63-ம் ஆண்டுகளுக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு இன்னும் சேரவேண்டிய தலபாதை மானியங்களை வழங்க அரசாங்கம் 19,02,025 ரூபாய் இப்பொழுது அனுமதித்துள்ளது. (பஞ்சாயத்து யூனியன் வாரியாக அனுமதிக்கப்பட்டுள்ள மானியத் தொகை விவரம் இவ்வாணையுடன் இணைத்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது).

2. மேற்குறித்த மிகை மானியத் தொகையை ஒரே தவணையில் அளிக்க, அதிகாரமளித்து நியமிக்கும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

3. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் இம்மானியத் தொகையை பல்வகைப் பட்டியலில் (Miscellaneous bill) கேட்டுப் பெற்று, பஞ்சாயத்து, யூனியன் (பொது) நிதியில் வரவு வைத்துவிட்டு இச் செய்தியை கலெக்டருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1266-ன் சுருக்கம்)

---

## முக்கிய அறிவிப்பு.

"கிராம நலம்" பிரதிகள், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கும் விநியோகம் செய்ய வேண்டி, மொத்தமாக, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பப்படுகின்றன. பிரதிகள் கிடைக்கப் பெறுதவர்கள், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடம் தொடர்பு கொள்ளவும். இது சம்பந்தமாக, தனிப்பட்ட முறையில், ஆசிரியர்களுக்கு எழுதப்படும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தாதாரர்கள், கடிதப்போக்குவரத்துக்களில் தங்கள் சரியான சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டுகிறோம். எழுத்தாளர்கள் பிரசுரத்துக்கு அனுப்பும் விஷயத்துடன் தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டாம்.

ஆசிரியர் "கிராம நலம்"

———:x:———

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்—தீரர் சத்தியமூர்த்தி. | 7 |
| உணவு உற்பத்தி—பஞ்சாயத்துக்களின் கடமை. | 9 |
| மீன் அளம். | 13 |
| 'கண்டதும் கேட்டதும்'. | 20 |
| கிராம சேவகர் பயிற்சி நிலையம்—பவானி சாகர். | 27 |
| எதைப்பற்றி எழுதலாம் ? | 30 |

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

ஆகஸ்டு 1963

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் :—
இராமச் சிறுவர்களுக்கான நிழ்ச்சி.
ஒவ்வொரு திங்கட்கிழமையும் :—
ஊர்ச் சாவடி, விஞ்ஞானக் கூடம்.
ஒவ்வொரு செவ்வாய்ச் கிழமையும் :—
ஊர்ச் சாவடி, கிராம வானொலி மன்றம்.
ஒவ்வொரு புதன்கிழமையும் :—
ஊர்ச் சாவடி. சாத்திரக் கதைகள்.
ஒவ்வொரு வியாழக் கிழமையும் :—
திருக்குறள் விளக்கம், நமது திட்டம்.
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :—
ஊர்ச் சாவடி, கிராம வானொலி மன்றம்.
ஒவ்வொரு சனிக்கிழமையும் :—
ஊர்ச் சாவடி, நம் மாதர் மன்றம்.

## இவையன்றி மற்ற சிறப்பு நிகழ்ச்சிகள் :—

சனிக்கிழமை (3—8—1963)
கோழிக் குஞ்சு வளர்ப்புக் கு பெட்டிகள்.
ஞாயிற்றுக் கிழமை (4—8—1963)
உருளைக் கிழங்கு சாகுபடி : உரையாடல்.
திங்கட்கிழமை (5—8—1963)
ஏழு பவுன் சங்கிலி—நாடகம்.
புதன் கிழமை (7—8—1963)
நிதம் ஒரு அலங்காரம்—இசைச் சித்திரம்.
(என். ராகவன் எழுதியது.)
சனிக்கிழமை (10—8—1963)
கோழிகளுக்கு உணவு : உரையாடல்.
ஞாயிற்றுக் கிழமை (11—8—1963)
காலிப்ளவர் சாகுபடி : உரையாடல்.
திங்கட்கிழமை (12—8—1963)
பகல் வேஷம் : சித்திரம் : என். ராகவன் எழுதியது.
புதன்கிழமை (14—8—1963)
பிலே பலுவன்—நாடகம்.
வியாழக் கிழமை (15—8—1963)
சுதந்திரக் கனல்—நாடகம்.
சனிக்கிழமை (17—8—1963)
கால்நடைகளைத் தாக்கும் வெக்கை நோய் : உரையாடல்.
ஞாயிற்றுக் கிழமை (18—8—1963)
ஆப்பிள் மரம் வளர்ப்பு : உரையாடல்.
திங்கட்கிழமை (19—8—1963)
குத்து விளக்கு—நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது)
புதன் கிழமை (21—8—1963)
கக்குவான் : உரையாடல். சூரியோதயம் : நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது)

சனிக்கிழமை (24—8—1963)
கால்நடைகளுக்கு முதலுதவி.
ஞாயிற்றுக் கிழமை (25—8—1963)
பப்பாளி : உரையாடல்.
திங்கட்கிழமை (26—8—1963)
வளரும் தமிழகம்.
புதன்கிழமை (28—8—1963)
பேனும் ஒழிப்பு முறையும்
செய்தித்தாள்.
வியாழக் கிழமை (29—8—1963)
நமது சாதனை : சம்பாஷணை.
சனிக்கிழமை (31—8—1963)
கண்காட்சிக்கு பறவைகள்— தேர்ந்தெடுத்தலும், தயாரிப்பும்.

## கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்:—

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக் கிழமையும் மாலை 6-45 மணி முதல் 7-15 வரையில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அந் நிகழ்ச்சிகளில் " கேள்வியும்—பதிலும் " பகுதி முதலிடம் பெறுகிறது.

## மற்ற பகுதிகள் வருமாறு

வெள்ளிக்கிழமை (2—8—1963)
அவசர நிலைமையும், நமது கடமையும் (தேசியப் பாது காப்பு)
செவ்வாய்க்கிழமை (6—8—1963)
தீவிர சாகுபடியும் பலனும்.
வெள்ளிக்கிழமை (9—8—1963)
நெருக்கடியில் நமது பணி : பணபு.
செவ்வாய்க்கிழமை (13—8—1963)
செயற்கை முறையில் கால்நடை இன விருத்தி.
வெள்ளிக்கிழமை (16—8—1963)
நமது பஞ்சாயத்து ராஜ்யம்—நிர்வாகம்.
செவ்வாய்க்கிழமை (20—8—1963)
கிராம நூல் நிலையத் திட்டம்.
வெள்ளிக் கிழமை (23—8—1963)
நமது பஞ்சாயத்து ராஜ்யம்—பணிகள்.
செவ்வாய்க்கிழமை (27—8—1963)
பழ மரங்கள் நடுதல் : உரையாடல்.
வெள்ளிக்கிழமை (30—8—1963)
நமது பஞ்சாயத்து ராஜ —.
பொதுஜன ஒத்துழைப்பு.

வெளியிடுவோர் :
திரு டி. என். லட்சுமிநாராயணன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



**பாரதப் பிரதமரின் சென்னை விஜயம்.**

12—6—63-ல் கிண்டி ரயில் நிலையத்தில் பிரதமர் நேருஜியுடன் அமைச்சர்கள், மாநில கவர்னர், அதிகாரிகள் ஆகியோர்.







சென்னைக் கடற்கரையில் காந்திஜி சிலை அருகே நடந்த மாபெரும் பொதுக் கூட்டம்—'மொழிப் பிரச்னை' குறித்து பிரதமர் அளித்த விளக்கம், அனைவருடைய கருத்தையும் கவர்ந்தது.



**நெய்வேலியில், வரைப் படங்களை நுட்பமாகக் கவனிக்கிறார் நேருஜி**

**கீழ்ப் படம் :—**"கிராம நலம்" வெளியிடுபவர்.
கிராம நலதல நிர்வாகத் துறையின் செயலாளராகப் பதவியேற்றிருக்கும் திரு. டி. என். லட்சுமிநாராயணன், ஐ.ஏ.எஸ். அவர்கள்.

# கிராம நலம்

Regd. No. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1963

## புதுவையில் நேருஜி

பிரதமர் நேருஜி, 13—6—63-ல், புதுச்சேரிக்கு விஜயம் செய்தார். சுதந்திர உணர்வும், தமக்கென்று ஒரு விசேஷமான கலாசாரத்தையும், வாழ்க்கை முறையும் கொண்டுள்ள புதுவைவாழ் மக்கள், தங்கள் கண்ணினுமினிய தலைவரை, மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். புதிதாக மக்களாட்சி மலரத் தொடங்கியுள்ள புதுச்சேரி ராஜ்யத்தில், சமீபத்தில் புதிய மந்திரிசபை பதவியேற்றுள்ளது. மக்களின் எதிர்கால நல்வாழ்வு மேலும் சிறந்து விளங்கும் என்பது உறுதி.







படம் 1 நகரசபை வரவேற்பு

படம் 2 தாகூர் கலைக்கல்லூரி அடித்தளக் கல்நாட்டு விழா

கீழ்ப்படம் :—நெய்வேலியில் உள்ள ரஷ்ய எஞ்சினியர்களின் குடும்ப நலனை, பாரதப் பிரதமர் அறிந்து மகிழ்கிறார்.

# கிராம நலம்

செப்டம்பர்
1963

229 செ.
24 SEP 1963
RECORD OFFICE BUILDINGS, MADRAS





## சத்தியமும், அகிம்சையும் சோஷலிஸத்தின் இரு தூண்கள்

—(o)—

"சோஷலிஸத்தில், சத்தியமும், அகிம்சையும் நிறைந்திருக்க வேண்டும். அவை, அவ்வாறு இருந்து வருவதற்கு, அக் கொள்கையைப் பின்பற்றுகிறவருக்கு, ஜீவனுள்ள கடவுள் நம்பிக்கை இருக்கவேண்டும். சத்தியத்தையும், அகிம்சையையும் யந்திரம்போல் அனுசரித்து வருவதனால், நெருக்கடியான சமயம் வரும்போது, அவை உடைந்து விடும். இதனாலேயே சத்தியமே கடவுள் என்கிறேன். இந்தக் கடவுள் ஜீவனுள்ள சக்தி. அந்தச் சக்தியினாலானது, நம்வாழ்வு. அந்தச் சக்தி நம்முள் இருக்கிறது. ஆனால், உடல் அல்ல அது. அந்த மகத்தான சக்தி இருக்கிறது என்பதை மறுப்பவர், வற்றாத அந்தச் சக்தி தனக்குப் பயனாவதை மறுத்துக் கொள்ளுபவராவதோடு, அதனால் சக்தியற்றவராகவும் இருந்து வருகிறார். சுக்கான் இல்லாத கப்பலைப்போன்றவரே அவர். அந்த வாழ்வு, அங்கு மிங்குமாக அலைப்புண்டு, முன்னேற முடியாது அழியும். அப்படிப்பட்டவரின் சோஷலிஸம், அவரை எங்கும் கொண்டுபோய் விடாது என்றால், அவர் வசிக்கும் சமூகத்தைப் பற்றிச்சொல்ல வேண்டியதே இல்லை."

மகாத்மாவின் மணிமொழி.
(மகாத்மா காந்தி நூல்கள் 6—பக்கம் 138.)


# கிராம நலம்



GAZETTEER UNIT
24 SEP 1963
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS


" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.


| மாடி. 8 | செப்டம்பர் 1963 | படி. 12 |
|---|---|---|


## " நமது கலாச்சாரத்தின் உறைவிடமாக, கல்லூரி விடுதிகள் திகழட்டும் "

### உப-ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் வேண்டுகோள்

————(o)————

" நமது கலாச்சாரம் பரம்பரை பரம்பரையாக உருவாக்கப்பட்டதாகும். இந்தப் பண்பாட்டின் உறைவிடமாக, நமது உயர்ந்த கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக, கல்லூரி விடுதிகள் திகழும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்".

" மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குடியிருப்பு வசதியில்லாத கல்லூரி, பூரணமான ஸ்தாபனம் ஆகாது. நன்றாக நடத்தப்படும் விடுதியில், மாணவர்கள் ஒழுங்காக, கட்டுப்பாட்டுடன் வாழ, வாய்ப்புக் கிடைக்கிறது. சேர்ந்து வாழ்வதன் முக்கியத்துவம், இதில் நன்கு புலனாகிறது. ஒன்று சேர்ந்து வாழும் வாழ்க்கை, மனிதனின் குணத்தை உருவாக்குவதில், பெரும் பங்கு வகிக்கிறது. குணம், கூட்டு வாழ்க்கையில் வளர்கிறது. திறமை, தனிமையில் வளர்கிறது."

#### கலாச்சாரத்தின் உறைவிடம்

" வீடு, கலாச்சாரத்தின் உறைவிடமாக விளங்குகிறது. அங்கு, ரசனைகள் உருவாகி, நயம் பெருகின்றன. வாழ்க்கையின் நல்ல குணங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அனுஷ்டிக்கப்படுகின்றன. மாணவ, மாணவியர் விடுதிகள், இப்படிப்பட்ட வீடுகளாகத் திகழ வேண்டும். உயர்ந்த பண்பாட்டு உணர்வை, ஆத்மீக ஞானத்தை உருவாக்கும் செயல் கூடமாக, அவற்றை ஆக்கிக்கொள்ள வேண்டும். நம் பண்பாட்டின் உறைவிடமாக, நமது கல்லூரி விடுதிகள் திகழ வேண்டும்."

(சென்ற ஜூலை மாதம் 2-ம் தேதியன்று, கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியில், " திருமகள் நிலையம்" என்ற மாணவியர் விடுதியை, உப-ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன் திறந்து வைத்தார். இரண்டு லட்சம் ரூபாய் செலவில் இந்த விடுதி கட்டப்பட்டதாகும். இதில். சுமார் 75 மாணவிகள் தங்க வசதி உள்ளது. விடுதியைத் திறந்து வைத்து, உப-ராஷ்டிரபதி பேசிய பேச்சின் சுருக்கத்தை, மேலே வெளியிட்டுள்ளோம்)

---

**அட்டைப் படம் :**

*நாம் உடல் நலத்துடன் வாழவேண்டுமானால், நாம் உண்ணும் உணவு, சீரான உணவாக இருக்கவேண்டும். உடல் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா சத்துக்களும் நிரம்பிய உணவே, சீரான உணவாகும். உடல் நலம் மட்டுமன்றி, நாம் நம்முடைய கடமைகளைச் செய்ய; உற்சாகமும் உடல் வலுவும் வேண்டுமானால், சத்துள்ள உணவுப் பொருளை உட்கொள்ளவேண்டும். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு. தமிழ்நாட்டு அரசாங்கம், இப்பொழுது 'விரிவு படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம்' (Expanded Nutrition Programme)-ஒன்றினைச் செயல்படுத்திவருகிறது. அந்த வகையில், பள்ளி செல்லும் இளஞ் சிறுவர்களுக்குப் பால் வழங்குவது ஓர் அம்சமாகும். குழந்தைகள் ஆர்வமுடன் பால் பருகும் காட்சி, இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது.*




## திருப்பாச்சேத்தி பஞ்சாயத்து

(திரு. வெங்கடேசன், எழுத்தர், திருப்பாச்சேத்தி பஞ்சாயத்து.)

**அமைப்பும் நிர்வாகமும்.**—இராமனுதபுரம் மாவட்டம் திருபுவனம் பஞ்சாயத்து யூனியனின் ஒரு முக்கிய அங்கமாக திருப்பாச்சேத்தி பஞ்சாயத்து விளங்குகிறது. எங்கள் மன்றம் ஏற்பட்டு ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இன்று நாள் வரை மூன்று தலைவர்கள் பதவியேற்று நிர்வகித்து வந்திருக்கின்றனர். அன்று எங்கள் பகுதியில் "வானொலி" என்ருல் என்ன உருவில் இருக்கும் என்று தெரியாமலிருந்தபொழுது, எங்கள் பஞ்சாயத்தில் அமைக்கப்பட்ட வானொலியை பல்லாயிரக்கணக்கில் மக்கள் கண்டு பரவசமடைந்தனர் என்ருல் மிகையாகாது.

**பஞ்சாயத்து செய்துள்ள அரும்பெரும் பணிகள்.**—கிராமத்திற்கு மின்விளக்குப் போடும் திட்டம்நிறைவேற்றப்பட்டிருந்தது. 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் தேதியில் மின்விளக்குகள் தெருக்களுக்குப் போடப்பட்டு வெளிச்ச வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. அலுவலகத்திற்கென ஒரு கட்டிடம் இல்லாத பெருங்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இம்மன்றத்தின் முன்னுள் தலைவர் அவர்களால் அடித்தளக்கல் நாட்டப்பெற்ற இடத்தில், நிதி வசதியில்லாமலிருந்தும் சுமார் பத்து தினங்களில், பல இன்னல்களுக்கிடையில் ஐயாயிரம் ரூபாய் பெறுமான கட்டிடத்தைக் கட்டி, திரு இ. சி. பி. பிரபாகர், ஐ.எ.எஸ்., அவர்கள் முன்னிலேயில் தமிழ்நாடு கவர்னர் உயர்திரு விஷ்ணுராம் மேதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மன்றத்தின் வருமானத்தைப் பெருக்கவும் பொதுமக்களின் நலன்களே அபிவிருத்தி செய்யவும், அலுவலகத்திற்கருகில் தினசரிச் சந்தைக்கு என ரூ. 5,000 பெறுமான கட்டிடம் கட்டப்பட்டு, தமிழ்நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்களால் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந் தேதியில் திறந்து வைக்கப்பட்டிருப்பது, கிராமத்திற்கே தனிச் சிறப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தினரின் உதவித் தொகையைப் பெற்று ஆராயிரம் ரூபாய் பெறுமான நூல் நிலேயக் கட்டிடம் ஒன்று கட்டி, மன்றத்தின் வாசகசாலே அக்கட்டிடத்தல் நடைபெற்று வருகிறது. இத்துடன் இராமனுதபுரம் மாவட்ட நூலக ஆணைக் குழுவினர் கட்டிடத்தில் நூலகம் திறக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அலுவலகத்திற்கு முன் ஓர் அழகிய பூங்கா நிறுவப்பட்டு வானொலியும் அமைக்கப்பட்டு 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ந் தேதியில் உயர்திரு சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. அது வ. உ. சி. பூங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது. நாள்தோறும் பூங்காவிற்குப் பலர் வந்து அகமகிழ்கின்றனர்.

கிராம மக்களின் நன்மையைக் கருதி, இருபதினுயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு தெப்பக்குளம் மன்றத்திலிருந்தும் கிராம மக்களின் பெரும் ஒத்துழைப்பாலும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

**செய்ய இருக்கும் பணிகள்.**—எங்கள் ஊரில் உள்ள தெருக்களுக்கும், அரசினரால் கட்டப்பட்டிருக்கும் ஹரிஜன குடியிருப்புக்கும் தெரு மின்விளக்குக்ள் பற்ருக்குறையாக இருப்பதால், மன்றத்தில் இருந்து முப்பத்தைந்து தெரு மின் விளக்குகள் போட நடவடிக்கை எடுத்து, முடியும் தருவாயிலிருக்கிறது.

கிராம வீதிகளேப் பழுது பார்க்கவும், நில அளவை செய்யவும் அரசினருடன் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது. இக்கிராமத்தின் குடி தண்ணீர்மேல் நிலே நீர்த்தொட்டிக்கு தமிழ்நாடு கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்கள் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதியில் அடிக்கல் நாட்டினுர்.

**கிராம முன்னேற்றம்.**—எங்கள் கிராமத்தின் முக்கிய தொழில் விவசாயம், எங்கு பார்ப்பினும் இயற்கை எழிலும், வளம் கொழிக்கும் கரும்பு, வாழை, நெல் முதலிய நன்செய்ப் பயிர்களும், ஏனைய புன்செய்ப் பயிர்களும் தோற்றமளிக்கும். பயிர்களில் விழும் பூச்சிகளேத் தடுப்பதற்கு மருந்து தெளிக்கும் கருவியும், மருந்து தூவும் கருவியும் வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுத்து உதவப்படுகிறது.

திருப்புவனம் பஞ்சாயத்து யூனியனில் இருந்து கொடுக்கப்படும் உர உப்பு மூட்டைகள், மன்றத்தில் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து ஆலோசித்து கிராம



விவசாயிகளுக்கு பாரபட்சமற்ற முறையில் பகிர்ந்து அளிக்கப்படுகின்றது. திருப்புவனம் பஞ்சாயத்து யூனியன் நிர்வகிக்கும் ஒரு தொடக்கப்பள்ளி இங்குண்டு. 20 பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச நண்பகல் உணவு அளிக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் ஓர் உயர்நிலேப் பள்ளி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. எங்கள் ஊரில் அறியாமை இருள் அகல, கல்வி ஒளி பரவவேண்டியது இன்றியமையாததாயிருக்கின்றது. உயர்நிலேப் பள்ளிக்கென ஒரு கட்டிடம் அரசினரின் பங்குத்தொகை பெற்றுக் கட்டிமுடியும் தறுவாயிலிருக்கிறது. யூனியன் தலைவர் தன் சொந்தப் பொறுப்பில் ரூபாய் ஆருயிரம் பெறுமான ஒரு கட்டிடத்தை உயர்நிலேப் பள்ளிக்கென நன்கொடையாகக் கட்டிவிட்டிருக்கிருர்.

**பஞ்சாயத்தின் சிறப்பு**-தன்னலங்கருதாத் தலைவரையும் உறுப்பினர்களேயும் கொண்டிலங்குவது எங்கள் பஞ்சாயத்தின் முக்கிய சிறப்பாகும். கருத்து வேறுபாடிருப்பினும், அரசாங்கம் தரும் சகாயத் தொகைகளேக் கொண்டு ஐந்தாண்டுத் திட்டங்களே நிறைவேற்றுவது இந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜையின் கடமை என்றுணர்ந்து ஒன்றுபட்டு ஆக்க வேலேகளே ஊக்கமுடன் செய்துவருவது தேசிய ஒருமைப்பாடு என்ற தத்துவத்தின் முக்கிய அம்சமாகும்.

## தச்சக்காடு பஞ்சாயத்து

(திரு. வெங்கடராமன், ஆணையாளர், பறங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியன்)

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பறங்கிப்பேட்டை வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களில் காலத்தால் முதிர்ந்தும், கடமையாற்றுவதில் சிறந்தும் இலங்கும் பஞ்சாயத்து, 2,741 மக்களேயும், அருண மொழித்தேவன், தச்சக்காடு என்ற இரு அரசிறை கிராமங்களேக் கொண்ட தச்சக்காடு பஞ்சர்யத்தெனில், அது மிகையாகாது.

### விவசாய வளர்ச்சி

தலேயாய உழுதொழில் வளர்ச்சிக்கு இப்பஞ்சாயத்து ஆற்றும் பணிகள் பலருடைய பாராட்டிற்குரியனவாகும்.

பார் செழித்தலும், பயிர் செழிக்கப் பண்பட்ட உரமிடுதலும் இன்றியமையாதன என்பதை உணர்ந்து, இப்பஞ்சாயத்து, நடப்பு ஆண்டில் 40 கலவை உரக் குழிகளேக் கொண்ட சமுதாய மக்கு உரத்திடலே ஏற்படுத்தி, கலவை உரத் தயாரிப்பில் ஈடுபட்டு உள்ளது. கலவை உரக்குழிகளேச் சுற்றிலும் 36 தென்னைகளே நட்டும், திடலேச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் 'சணப்பு'ப்பயிர் விதைத்தும் மக்கு உரத்திடலேக் காண்போர் களிகொள்ளும் வகையில் பயனுடையதும் கவன் மிகுந்ததுமாக அமைத்துள்ளது வியந்து பாராட்டத்தக்கது. அம்மட்டுமோவெனில் இல்லே. மலமக்கு உரம் தயாரிக்க மாநில அரசிடமிருந்து ரூ. 3,600 கடன் பெற்று மலமக்கு உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

### மரம் நடுதல்

சாலேகளின் மருங்குகளிலும், புறம்போக்குகளிலும் 400 தென்னைகளே அரசினரின் மூன்றில் இரு பங்கு உதவித் தொகை பெற்று, வைத்து வளர்த்து பஞ்சாயத்துக்கள் பயன்தரும் மரங்களே வளர்த்தல் என்ற திட்டத்தினைத் திறம்பட செயலாற்றி, இவ்வட்டாரத்தில் நல்லிடம் வகிக்கின்றது.

திருந்திய முறை வேளாண்மைக் கருவிகளே அரசினர் உதவித்தொகையில் பெற்று, பஞ்சாயத்துக் கிராமத்தில் வாழும் வேளாளர்கட்கு எடுத்துக்காட்டாகவும், சிறு விவசாயிகள் குறைந்த வாடகையில் ஷெ கருவிகளேப் பயன்படுத்துவதற்காகவும் வைத்துள்ளது.

அலுவலகக் கட்டிடத்தில், புதிய முறைச் சாகுபடி விளக்கப் படங்களே அழகுற, பலரும் கண்டு பயனுறும் வண்ணம் அமைத்து, உழவர்களே பழையன கழிந்து வேளாண்மையில் புதியன புகுத்தல் வழுவல என்பதை எடுத்துக்காட்டி ஊக்குவிக்கின்றது.

## வடமணிபாக்கம் பஞ்சாயத்து

[திரு. வி. என். கோவிந்தசாமி, தலேவர், வடமணிபாக்கம் பஞ்சாயத்து]

(செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் பஞ்சாயத்து யூனியனேச் சேர்ந்த, வடமணிபாக்கம் பஞ்சாயத்து 1958-க்குப் பிறகு, ஆற்றியுள்ள பணிகளே விளக்குகிறது இக்கட்டுரை.)

**அமைப்பு.**—வடமணிபாக்கம் பஞ்சாயத்து, 1934-ம ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதி துவக்கப்பட்டது. வடமணிபாக்கம் மதுரா எட்டிப்பட்டு ஆகிய கிராமங்களேக் கொண்டு 5 அங்கத்தினர்களுடன் அமைக்கப்பட்டது. நிலப் பரப்பு 1,348 ஏக்கர் 23 செண்டு. தற்போது வடக்கு புத்தூர், வேப்பங்கரணை ஆகிய கிராமங்களே 1961-ல் உடன் சேர்க்கப்பட்டது. தற்போது 11 அங்கத்தினர் உள்ளனர். இதில் பெண் அங்கத்தினர் ஒருவர்.

**அலுவலகம்.**—1958-க்குப் பிறகு தலேவருக்குச் சொந்தமான ஒரு தனிக் கட்டிடத்தில் வாடகை இல்லாமல் இருந்து வந்தது. தற்போது அக்கட்டிடம் வாடகைக்கு அமர்த்தப்

பட்டுள்ளது. அதில் வானொலி அமைத்து, அதன் எதிரில் ஒரு கொட்டகை அமைக்கப்பட்டு வானொலி கேட்பதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

**உணவு உற்பத்தி.**—உணவு உற்பத்தியில் கிராம மக்கள் புதுமுறையைக் கையாளுகின்றனர். ஆர்வத்துடன் கம்போஸ்ட்டு உரம் தயாரிக்க, சுமார் 30 குழிகள் அரசாங்க மான்யத்துடன் வெட்டப்பட்டு, புதுமுறையுடன் எரு தயாரிக்கின்றனர். சுமார் 100 தென்னை மரங்கள், தனிப்பட்டவருக்கும், பஞ்சாயத்தின் பள்ளியிலும் விநியோகம் செய்யப்பட்டு நன்கு கவனித்து வரப்படுகின்றன. பழச்சாகுபடி, 4 ஏக்கர் நிலத்தில், பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கென, மருந்தடிக்கும் கருவியும் வைக்கப்பட்டிருக்கிறது. போஸ் கலப்பையும் மக்கள் உபயோகப்படுத்துகின்றனர். ரூபாய் 3,600 செலவில் மல உரக்குழி திட்டம் விரைவில் துவங்க இருக்கிறது.

**போக்குவரத்து.**—இப்பஞ்சாயத்தில் அடங்கியுள்ள கிராமங்களுக்கு ரோடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. வடமணிபாக்கத்திலிருந்து மேற்படி ஊர் ஹரிஜன் காலனிக்கு 2 பர்லாங் தூரம் ரோடும், எட்டிப்பட்டியிலிருந்து வடக்குபுத்தூருக்கு $1\frac{1}{2}$ மைல் ரோடும், வடக்குபுத்தூரிலிருந்து வேப்பங்கரணைக்கு $1\frac{1}{2}$ மைல் ரோடும், யூனியன் மூலம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே, 1956-ல், ஓரத்தியிலிருந்து வடமணிபாக்கம் வழியாக அனந்தமங்கலம் வரை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 5 மைல் நீளம் ரோடு போடப்பட்டு உபயோகத்தில் இருந்துவருகிறது. அநேகமாக, ரோடு வசதி பூர்த்தியடைந்துவிட்டது. வடமணிபாக்கத்திற்கும் எட்டிப்பட்டிக்கும் ஒரு பாதை அமைக்க முயற்சிகள் நடந்துவருகின்றன.

**மின்சாரம்.**—விவசாயத்திற்கென சுமார் 33 நீர் இறைக்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் தற்போது 12, விவசாயத்திற்கு (மோட்டார்கள்) மட்டும் இயங்கிவருகின்றன. தெருவிளக்குகள் 15 அமைக்கப்பட்டுள்ளன. 1963-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி முதல் மின்விளக்குகள் செயல்படுகின்றன. இத்திட்டத்தை மற்ற கிராமங்களுக்கும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

**கல்வி.**—இப்பஞ்சாயத்தைச் சேர்ந்த எட்டிப்பட்டு கிராமத்திலும் வடமணிபாக்கம் கிராமத்திலும், தனித்தனி தொடக்கப்பள்ளிகள் இருந்தன. அவைகளை ஒன்றாக இணைத்து, இவ்விரண்டு கிராமங்களுக்கும் மத்தியில் ஒரு கட்டிடம் கட்டவேண்டும் என்ற முயற்சியால் 0·75 சென்ட் நிலம் தானமாகப் பெறப்பட்டது. அவ்விடத்தில் தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்களால் கால்கோள் இடப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. 2—1—1961 முதல் இரண்டு பள்ளிகளும், புதிய பள்ளியில் இணைந்து, 5 ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளியாக இயங்கிவந்தது 23—6—63 முதல் இப்பள்ளி உயர் தொடக்கப்பள்ளியாக வளர்ந்துள்ளது. மேலும், பிரதானக் கட்டிடத்தில் இடவசதி போதாமையால், ரூ. 750 மதிப்புள்ள ஒரு கூரைக் கட்டிடம், பஞ்சாயத்து யூனியனின் உதவிபெற்று, கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளியில், 240 மாணவ, மாணவிகள் பயின்றுவருகிறார்கள். 5 ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். சுமார் 120 ஏழை மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. இவையன்றி, இப்பஞ்சாயத்தைச் சேர்ந்த வேப்பங்கரணை கிராமத்தில், ஒரு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவைகளன்றி, முதியோர்களின் கல்வி வளர்ச்சியை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், சமூகக் கல்வி நிலையம், நூல் வழங்கும் நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டு உள்ளன.

**குடிநீர்.**—வடமணிபாக்கத்தில், அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 1950-ல் ஒரு கிணறும், பிறகு வடக்குபுத்தூரில் ஒரு கிணறும், தற்போது வடமணிபாக்கம் ஹரிஜன காலனியில் ஒரு கிணறு வேலையும், நடந்துவருகிறது. இன்னும் எட்டிப்பட்டிற்கும், வேப்பங்கரணைக்கும் கிணறு தேவைப்படுகிறது.

**சிறு கைத்தொழிற்சாலை.**—எட்டிப்பட்டில், குயவர்களுக்கென்று தனியாக புறம்போக்கு ரூ. 8,000 செலவில் ஒரு சிறு கைத்தொழில் பேட்டை அமைக்க, யூனியன் மூலம் அரசாங்க முழுப்பணமும் பெற்று வேலை ஆரம்பிக்க இருக்கிறது. வடமணிபாக்கத்தில் ஒரு சுண்ணும்புக்காளவாய் 700 ரூபாய் செலவில் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

**புறம்போக்கு நிலங்கள்.**—புறம்போக்கு நிலங்களிலுள்ள வருமானங்களை, சரியான முறையில் இப்பஞ்சாயத்து கண்காணித்துவருகிறது. வடக்கு புத்தூர் ஏரிக்கரையில் சுமார் 3 ஆயிரம் பனங்கொட்டையும் வடமணிபாக்கம் ஏரிக்கரையில் 2 ஆயிரம் கொட்டைகளும் போடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. பனைமரங்களின் மாசூலை ஏலத்தில் வருவாயை அதிகப்படுத்த வழி செய்திருக்கிறது.

**நிதி நிலைமை.**—இந்தப் பஞ்சாயத்திற்கு வருட வருமானம் சுமார் 2 ஆயிரம். இதை நான்கு கிராமங்களுக்கும் பகிர்ந்தளித்து, பிரமாதமான நன்மை செய்ய இயலாமையால், பஞ்சாயத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் செயல்பட இயலவில்லை.

— o —

<u>மாணவர்களுக்கு :</u>




## லோகமான்ய பால கங்காதர திலகர்

திரு. சி. சுந்தரலிங்கம்

[" விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்," வரிசையில், இது மூன்றாவது கட்டுரை. பாரதப்பிரதமர், 'மனித குல மாணிக்கம்', நேருஜியின் தந்தை மோதிலால் நேருவின் வாழ்க்கை வரலாறும், போராட்டவீரர் சத்தியமூர்த்தி அவர்களின் வாழ்க்கை வரலாறும், சென்ற இதழ்களில் இடம் பெற்றன. 'சுதந்திரம் எமது பிறப்புரிமை' என்று முழக்கமிட்ட மகாபுருஷர் பால கங்காதர திலகரின் வாழ்க்கை வரலாற்றை, சிறப்பியல்புகளை, சுருக்கமாகக் கூறுகிறது இக்கட்டுரை —ஆசிரியர்]

தமிழ் நாட்டைப் போலவே வீரத்திற்குப் புகழ்பெற்றது மராட்டிய மாநிலம். வீர சிவாஜி அவதரித்த புண்ணிய பூமி. இங்கு இரத்தினகிரி என்னும் நகரில் இராமச்சந்திர திலகர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஓர் ஆசிரியராக எளிய வாழ்வு மேற்கொண்டிருந்தார். இவர் வடமொழியிலும் மராட்டிய மொழியிலும் நல்ல புலமை மிக்கவர். இப்பெருமகனாரின் திருமகனாக, பாரத நாட்டின் தவப் பயனே போன்று, 1856-ம் ஆண்டில் பால கங்காதர திலகர் பிறந்தார்.

### விளையும் பயிர் முளையிலே....

தந்தையின் பண்புகள் அனைத்தும் திலகரிடம் குடிகொண்டிருந்தன. சுதந்திர ஆர்வமும், நல்லொழுக்கமும் மிக்கவராக வளர்ந்தார். திலகருக்கு ஐந்தாம் பிராயம் நடக்கும்போது, அவரது கல்வி ஆரம்பமாயிற்று. அவரைப் பத்து வயது வரையில், பள்ளிக்கு அனுப்பாமல் தந்தையாரே எழுத்தறிவித்து வந்தார். வட மொழியையும், மராட்டிய மொழியையும் போதித்தார். அவருடைய வீட்டில் ஒரு நூல் நிலையம் இருந்தது. அதிலுள்ள நூல்களைத் திலகர் ஆவலோடு எடுத்துப் படிப்பார். ஒரு முறை படித்ததை மறக்காமல், அப்படியே மனத்தில் பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல் அவருக்கு உண்டு. கணக்குகளைத் தாளில் போட்டுப் பார்க்காமல், மனத்திலேயே செய்து விடையைச் சொல்லி விடுவார்.

திலகரின் பத்தாவது வயதில் அவருடைய தாயார் காலமானார். பதினோராவது வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பதினான்காவது வயதில் 'மெட்ரிகுலேஷன்' தேர்ச்சி பெற்றார். அதைக் கண்டு மகிழ்ந்த தந்தையாரும் அந்த ஆண்டே இறைவனடி சேர்ந்தார். 'தந்தையோடு கல்விபோம்' என்பது பழமொழி. ஆயின், திலகருக்கு அந்த நிலை ஏற்படவில்லை. அவருடைய சிற்றப்பனார் அவரை மேற்கொண்டு படிக்க வைத்தார். கல்வியைக் கசடற கற்றுவந்த திலகர், தமது இருபதாவது வயதில் பி.ஏ. பட்டம் பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரில் சேர்ந்து இருபத்து மூன்றாவது வயதில் எல்.எல்.பி. பட்டம் பெற்றார்.

### " உடம்பை வளர்த்தேன்..உயிர் வளர்த்தேன் "

மன வளர்ச்சிக்கு எப்படிக் கல்வி இன்றியமையாததோ, அப்படி உடல் வளர்ச்சிக்கு உடற்பயிற்சி அவசியமாகும். இதைப் பெரும்பாலான மாணவர்கள் புறக்கணித்து வாழ்வதை நாம் பார்க்கிறோம். ஆனால், திலகர் அப்படிப்பட்டவர் அல்லர். அவருக்கு உடற்பயிற்சியில் மிகுந்த ஆர்வம் உண்டு. நீரில் நீந்துவதில் இணையற்ற ஈடுபாடு. ஒரு சமயம் அவர் கங்கையில் நீந்தி மறுகரை சென்றார். படகு ஓட்டுவதிலும், குத்துச் சண்டை செய்வதிலும் அவர் பயிற்சி பெற்றிருந்தார். தம்மோடு பயிலும் மாணவ நண்பர்களையும், உடற்பயிற்சி செய்யுமாறு அவர் தூண்டுவது வழக்கம்.

திலகருக்குப் பதினைந்தாம் பிராயம் நடந்து கொண்டிருந்தபொழுது, அவருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. அவருடைய துணைவியாரின் பெயர் தபிபாய் என்பதாகும். அவர் கணவரது மனமறிந்து நடக்கும் கற்பரசியாகத் திகழ்ந்தார். பண்டிகை நாட்களில் திலகருக்கு அவருடைய மாமனார் பரிசுகள் கொடுக்க ஆசைப்படுவார். அந்தச் சமயங்களில், ஆடம்பரப் பொருள்களை விரும்பாமல் அறிவு தரும் நூல்களையே வாங்கித் தரும்படி திலகர் கேட்பார்.

கல்லூரியில் பயின்றபோது, திலகர் வெறும் புத்தகப் புழுவாக இல்லை. தாய்நாட்டைப் பரிவோடும், பாசத்தோடும் பார்த்தார். அந்நியர் ஆட்சியினால் ஏற்பட்டிருந்த அவல நிலையைக் கண்டு. மனங் கொதித்தார். தாய்நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய உறுதி பூண்டார். வழக்குரைஞராகப் பணியாற்றிப் பொருளீட்டிச் செல்வ வாழ்வு வாழ்வதைவிட, நாட்டின் சுதந்திரத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்கத் திருவுள்ளங்கொண்டார்.

மக்களுக்கு அறிவொளி பரப்பும் நோக்கத்தோடு, தமது நண்பர்களுடன் சேர்ந்து, பூனா நகரில் ஓர் ஆங்கிலப் பள்ளியைத் திலகர் 1880-ம் ஆண்டில் நிறுவினார். அத்துடன் 'மராட்டா' என்னும் ஆங்கிலப் பத்திரிகையையும், 'கேசரி' என்னும் மராத்திப் பத்திரிகையையும் நடத்தினார். இவற்றை மக்கள் ஆதரித்து, ஆவலோடு வாங்கிப் படித்தனர்.

### ஆசிரியத் தொழில்

ஆங்கிலப் பள்ளிக்கு ஆதரவு பெருகியதால், அது 1885-ல் கல்லூரியாக மாற்றப் பெற்றது. அக்கல்லூரியில் திலகர் கணிதப் பேராசிரியராகவும், வடமொழிப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். இந்திய நாட்டின் இன்னொரு தவப் புதல்வரான கோபாலகிருஷ்ண கோகலேயும் ஆங்கில ஆசிரியராக அமர்ந்தார். திலகர் ஆசிரியப் பணியைத் திறம்பட நிறைவேற்றி வந்தார். மாணவர்கள் அவரிடம் அன்போடும், மரியாதையோடும் நடந்து கொண்டனர். அவர்களுக்குக் கல்லூரி ஒரு கோயிலாகவே தோன்றியது. பின்னர், திலகர் இக் கலைக் கல்லூரியிலிருந்து விலகி, சட்டக் கல்லூரி ஒன்றைத் தொடங்கி நடத்தினார். சட்டத் தேர்ச்சி பெற்ற சிறிது காலத்திலேயே சட்டக் கல்லூரி வைத்து நடத்தும் திலகரின் துணிவையும், நுண்ணறிவையும் அறிஞர்கள் பாராட்டினர்.

### சுதந்திரப் போராட்டத்தில் குதித்தல்

தாய் நாட்டுக்குச் சேவை செய்ய, 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது. நான்கு ஆண்டுகள் கழித்து, 1889-ல் இந்தச் சபையில் உறுப்பினராகத் திலகர் சேர்ந்தார். அப்போது ஆங்கிலக் கல்வி கற்றவர்களே அச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். அந்நிலையை மாற்றிப் படிக்காதவர்களும் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்று திலகர் முயற்சி செய்தார். அரசியல் அறிவு அனைவருக்கும் அவசியம் என்பது அவரது கொள்கை. அவருடைய முயற்சியின் பயனாகப் பலபேர் காங்கிரசில் சேர்ந்தனர்.

சில ஆண்டுகள் கழித்துப் பம்பாய் சட்டசபையில் திலகர் உறுப்பினரானார். அங்கு மக்களின் லட்சியங்களை எடுத்துரைத்து, உரிமை முழக்கம் செய்தார். ஆங்கில ஆட்சியில் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை என்று எடுத்துக் காட்டினார். இதனால் அந்நிய அரசாங்கம் அவர் மேல் சீற்றங் கொண்டது. திலகர் பல ஆண்டுகள் பம்பாய் பல்கலைக் கழக உறுப்பினராகவும், 1895-ல் பூனா நகராண்மைக் கழக உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

### நிரமிக்க தியாக வாழ்வு

பம்பாய் மாகாணத்தில் 1896–97-ம் ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் துடித்தனர். மனங்கொதித்த திலகர் அரசாங்கத்தைச் சாடினார். கிளர்ச்சி புரிந்தார். நில்வரி கொடுக்க வேண்டாம் என்று இயக்கம் நடத்தினார். ஆங்கிலேய அரசாங்கம் அவருடைய தொண்டர் பலரைச் சிறையிலிட்டது. பஞ்சம் பரவிய அந்நாட்களில் 'பிளேக்' என்னும் கொள்ளை நோயும் அதனையடுத்துப் பரவியது. அதனைத் தவிர்க்கத் தம்மாலான சேவையைச் செய்தார் திலகர். ஆனால் அவர் மீதும் கொலை ஒன்றுக்குக் காரணமாக இருந்ததாக அநியாய வழக்குத் தொடர்ந்து அந்நிய அரசாங்கம் அவரை வெஞ்சிறையில் வைத்து வாட்டியது.

திலகருக்குத் திருவிழாக்கள் நடத்துவதில் விருப்பம் அதிகம். கணபதி விழா, சிவாஜி நாள் போன்ற விழாக்களை அவர் நடத்தினார்.

திலகர் தீரராகவும் தீவிரவாதியாகவும் விளங்கியதனால் ஆங்கில அரசாங்கம் அவரைக்கண்டு அஞ்சி நடுங்கியது. திலகரின் பேச்சுக்களின் காரணமாகவே மக்கள் ஆங்காங்குக் கிளர்ந்தெழுந்து வெள்ளையரை எதிர்க்கின்றனர் என்று குற்றம் சாட்டி, 1908-ல் அவரைச்சிறை செய்தது. அவரை ஜாமீனில் விடவும் மறுத்தது. திலகர் தாமே வாதாடினார். எனினும், அநியாய ஆட்சியில் நீதி நிலை நிற்பது எப்படி முடியும்? திலகருக்கு ஆறு ஆண்டுகள் தீவாந்தர சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

### 'கீதா ரகசியம்'

உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாய் நாட்டுக்கே அர்ப்பணித்த திலகர் பெருமான், முதலில் சிறிது காலம் அகமதாபாத் அருகில் உள்ள சபர்மதி சிறையிலும், பின்னர் பர்மாவில் உள்ள மாண்டலே சிறையிலும் வைக்கப்பட்டார். இங்கே திலகர் பழைய காவியங்களை ஆராய்ந்தார். கீதையை உள்ளமும் உணர்வும் ஒன்றிப் படித்துக் 'கீதா ரகசியம்' என்னும் ஒப்பற்ற நூலை எழுதினார்.

திலகர் 1914-ல் விடுதலை பெற்றார். தீவிரவாதிகளைத் தட்டியெழுப்பினார். 1916-ல் அவருக்கு அறுபது ஆண்டு நிறைந்ததையொட்டி பொது மக்களின் சார்பில் இலட்சம் ரூபாய் பணமுடிப்பு அளிக்கப்பட்டது. திலகர் அதைப் பொதுப்பணிக்கே கொடுத்துவிட்டார்.

ஓயாமல் உரிமைப்போர் புரிந்த திலகர் பெருமான், தமது லட்சிய நிறைவேற்றத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. அவர் 1920-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் தேதி இரவு ஒரு மணிக்கு இறைவனடி சேர்ந்தார். இந்தத் தியாக சீலரின் பூத உடம்பு அழிந்தாலும், புகழுடம்பு என்றும் நின்று நமக்கு வழிகாட்டிவரும்.

# கிராமக் காடு வளர்ப்புத் திட்டம்

நமது தேசிய வனக்கொள்கையின்படி, மொத்த நிலப் பரப்பில் 33 சதவீதம் காடுகளாக இருக்கவேண்டும். ஆனால் தற்போது இந்தியாவில் மொத்த நிலப் பரப்பில் 22 சதவீதம்தான் காடுகளாய் உள்ளன. தமிழ் நாட்டில் 17·5 சதவீதம் காடுகள். உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், சாரசரி நபர் வனப்பொருள்களை உபயோகிப்பதும், நம் நாட்டில் குறைவாக உள்ளது. இவ்வாறு உபயோகம் குறைவாக இருந்தும், மக்களுக்குத் தேவையான எரிபொருள்கள், மரங்கள் மற்றும் இதர பொருள்களுக்கான கிராக்கியைச் சமாளிக்க முடியவில்லை. நாளாவட்டத்தில் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, ஜனத்தொகையும் அதிகரித்தால், தற்போதைய வனப் பொருள் உற்பத்தி போதாது.

### விவசாய முறையில் உள்ள குறைபாடுகள்

நம் நாட்டில் இதுவரை விவசாய அபிவிருத்தியானது, விஸ்தாரமான முறைகளில் இருந்ததேயன்றித் தீவிரமான முறைகளில் இல்லை. ஜன நெருக்கம் அதிகமாயுள்ள பகுதிகளில், வேறு எதையும் கவனத்தில் கொள்ளாமல், விவசாயம் விஸ்தரிக்கப்பட்டது. மரங்கள் வளரும் இடங்களையும், மேய்ச்சல் நிலங்களையும் பாதிக்கக் கூடிய இந்தத் திட்டமிடப்படாத விஸ்தரிப்பால் ஏக விவசாய சமநிலைக்குக் (Agronomical balance) குந்தகம் ஏற்பட்டுவிட்டது. சீரான விவசாயப் பொருளாதாரம் நிலவ வேண்டுமென்றால் விவசாயம், வனவளம், மேய்ச்சல் நிலம், மற்றும் இதர விவசாய சம்பந்தப்பட்ட நிலங்களில் இந்தச் சமநிலையானது இருந்துவரவேண்டும். இந்த ஒருசாரியான அபிவிருத்தியானது (Lopsided development) இயற்கையின் நியதிப்படி, விவசாய உற்பத்திக் குறைவிலேயே போய் முடிந்தது.

நம் நிலங்களிலிருந்து, கிடைக்கக்கூடிய விளைச்சலை, மற்ற நாடுகளின் விளைச்சலோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் நாட்டில் சராசரி ஏக்கருக்கு உற்பத்தி மிகவும் குறைவாக இருப்பதைக் காணலாம். இங்கே மண்வளம் இருக்கிறது. இருந்தாலும், உற்பத்திக் குறைவுக்குக் காரணமென்ன? குறைந்த வளமுள்ள நிலங்களுக்கும் விவசாயத்தை விஸ்தரிப்பதானது, உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயிகள் தீவிர விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதபடி செய்துவிடுகின்றது. இது மட்டுமல்லாமல், ஏழைக் குடியானவர்களின் பொருளாதாரத் தொல்லைகளும் உள்ளன. தீவிரமான சாகுபடி முறைகளைக் கையாள்வதால், அதனாலாகும் செலவுக்கு அதிகமாகவே வரவு கிடைக்கும் என்ற நிலையிருந்தும், இவர்களின் பொருளாதார வசதி தீவிர விவசாயக் காரியங்களில் ஈடுபட இடம் தருவதில்லை.

ஜனநெருக்கம் அதிகமுள்ள பகுதிகளில், திட்டமிடப்படாத விவசாய விஸ்தரிப்பால், காடுகள் இருக்க வேண்டிய இடங்களில் இல்லாமற்போக நேர்ந்தது. மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய எங்கே காடுகள் அவசியமோ, அங்கே அவை அறவே இல்லை, பெருவாரியான காடுகள் அழிக்கப்பட்டு, அங்கே விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. தற்போதுள்ள காடுகள் குறைந்த ஜன நெருக்கம் உள்ள பகுதிகளுக்காக மட்டுமே உள்ளன.

### திட்டத்தின் நோக்கங்கள்

காடு வளர்ப்பின் நோக்கங்களாவன:—

(அ) கிராம மக்களின் எரிபொருள், மற்றும் இதர மரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது.

(ஆ) வயல்களுக்குத் தழை உரம் வாங்குவது.

(இ) கிராமக் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் ஏற்பட வகை செய்வது.

(ஈ) மரங்களை எரிபொருளாகத் தருவதன்மூலம், கிராமங்களில் மாட்டுச்சாணத்தை எரி பொருளாக உபயோகிப்பதைத் தவிர்த்து, அவற்றை வயல்களுக்குப் பயன்படுத்துதல்.

(உ) விவசாய மேம்பாட்டுக்கு முக்கியமாகத் தேவையான மண் வளத்தைப் பாதுகாத்தல்.

எரிபொருள், தீவனம், தழை உரம் ஆகிய விஷயங்களில் ஒவ்வொரு கிராமமும், முடிவாக ஒவ்வொரு பண்ணையும் தன்னிறைவைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலையை உண்டாக்குவதும், மண் வளத்தைப் பாதுகாப்பதும், கிராமக் காடு வளர்ப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த மாநிலத்தில் கிராமக் காடு வளர்ப்புத் திட்டம் 1960-ல் ஆரம்பிக்கப்பட்டது.

1963-ன் போது 213 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும், மொத்தம், 21,300 ஏக்கர்களில் (ஒவ்வொரு வட்டாரத்திலும் 100 ஏக்கர்கள்) மரம் வளர்க்க வேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டது. இந்த 213 வட்டாரங்களில் 138 வட்டாரங்கள் சேலம் சர்க்கிளிலும், 25 வட்டாரங்கள் மதுரை சர்க்கிளிலும், 50 வட்டாரங்கள் கோயம்புத்தூர் சர்க்கிளிலும் உள்ளன.

அந்தந்தப் பகுதியின் மண்வளம், மற்றும் இதர இயற்கை வசதிகளையொட்டி, கருவேலம், வேம்பு, வாகை புளியம், புங்கம் ஆகிய மர வகைகளில் பல இனங்கள் நடப்பட்டன. இதன் நோக்கம், எரிபொருள், மரத் தேவைப்பாடு மற்றும் தழை உரம் ஆகிய விஷயங்களில், கிராம மக்களின் தேவைப் பாட்டைப் பூர்த்தி செய்வதாகும். இதுவரை கிடைத்த முடிவுகள் பொதுவில் வெற்றிகரமாகவே உள்ளன.

### பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைத்தல்

1961—62-ல் இத் திட்டத்துக்கான அனுமதியை வழங்கியபோது, அரசாங்கம், இத் திட்டம் ஆரம்பகாலத்தில்

இரண்டு ஆண்டுகளுக்கு வனத் துறையால் செயல்படுத்த படவேண்டும் என்றும், இந்தக் காலம் முடிவடைந்ததும், வனத் துறையின் உதவியோடு, இத் திட்டத்தைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பதா அல்லது தொடர்ந்து வனத்துறையே இதை நடத்துவதா என்பது பரிசீலிக்கப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. வட்டார ஊழியர்களைகொண்டு இத் திட்டத்தை அமுல் செய்யவேண்டும் என்று இந்திய அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது. இந்த யோசனையை நன்கு பரிசீலித்துக் கீழ்க்காணும் ஆறு வட்டாரங்களில் இத் திட்டம் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படவேண்டும் என்றும் இந்த அனுபவப் பயனைக் கொண்டு இந்த நடைமுறையை மற்ற வட்டாரங்களுக்கும் விஸ்தரிப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும் என்றும், 1962 அக்டோபரில் உத்தரவிடப்பட்டது.

(1) ஸ்ரீபெரும்புத்தூர், செங்கற்பட்டு மாவட்டம்.

(2) திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு மாவட்டம்.

(3) வேம்பாக்கம், வடஆர்க்காடு மாவட்டம்.

(4) பெரணமல்லூர், வடஆர்க்காடு மாவட்டம்.

(5) தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

(6) பெத்தநாயக்கன்பாளையம், சேலம் மாவட்டம்.

இந்த வட்டாரங்களில் வனத்துறையால் வளர்க்கப்பட்ட மரங்கள் அந்தந்த வட்டாரப் பஞ்சாயத்து யூனியன்கள வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் அதிகாரத்தின் கீழ் விடப்பட்டுள்ளனர்,

பஞ்சாயத்து யூனியன்கள் இத் திட்டத்தை அமுல் நடத்துவதில் சற்று அனுபவம் ஏற்பட்டபின், கூடுதலான வட்டாரங்களுக்கு இதை விஸ்தரிப்பது பற்றியும், எதிர் காலத்தில் திட்ட அமுல் கொள்கைப் பற்றியும் பரிசீலிக்கலாம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

### பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்பு

பஞ்சாயத்துக்கள், மற்றும் கிராமவாசிகளின் ஒத்துழைப்பில்தான், பெரும்பாலும் இந்தத் திட்டத்தின் வெற்றி அடங்கியுள்ளது. ஆக்கிரமிப்பு ஆன நிலங்களிலிருந்து வெளியேற்றி, அவை வனத்துறைக்குக் கிடைக்குமாறு செய்வதற்கு வருவாய்த் துறையின் ஒத்துழைப்பும்தேவைப் படுகிறது.

ஒவ்வொரு விவசாயியும் தனக்குச் சொந்தமான இடத்தில் (விளைச்சல் இல்லாத வளக்குறைவு உள்ள நிலம் உட்பட) உபயோகமான மரவகைகள், தீவன வகைகள் விளைவிக்குமாறு தூண்டுவது, இத்திட்டத்தின் மற்றொரு முன்னேற்ற நடவடிக்கையாகும். இதற்கு உதவியாகத் தேவையான செடிகள் நியாய விலையில் கிடைக்குமாறு செய்யலாம். தொழில் நுணுக்க உதவிகளும் பெறலாம். கிராமங்களில் தன்னிறைவைப் பூர்த்தி செய்வதே இதன் நோக்கமாக இருக்க வேண்டும்.

(வனவளத்துறை பிரதம அதிகாரி தயாரித்த குறிப்புகளிலிருந்து.)

## ஓரணு, காலணு, அரையணு நாணயங்கள் அடுத்த ஆண்டில் செலாவணியிலிருந்து நீக்கப்படும்

யூனியன் சர்க்கார், 1964 ஜனவரி 1–ந் தேதி, அணு, அரையணு, காலணு, வரிசையைச் சேர்ந்த பின்வரும் நாணயங்களை செலாவணியிலிருந்து நீக்கிவிடுவார்கள் : (1) செம்பு-நிக்கல் ஒரு அணு நாணயம் ; (2) செம்பு அரையணு நாணயம்; (3) செம்பு-வெண்கலம் காலணு நாணயம். 1–1–1964 தேதியிலிருந்து, இந்த நாணயங்கள் சட்ட பூர்வமான செலாவணியாக இருக்காது. ஆயினும், இந் நாணயங்களை, 1964 ஜூன் 30-ந் தேதி வரையில், இந்திய ரிசெர்வ் பாங்கு காரியாலயங்களும், சர்க்கார்வேலையைச் செய்து வருகிற இந்திய ரிசெர்வ் பாங்கின் ஏஜென்சி ஸ்தாபனங்களும், உப கஜானுக்களும், சர்க்கார் கட்டணங்களுக்காகவும், நாணய மாற்றுக்காகவும் ஏற்றுக் கொள்ளும். ரயில்வே காரியாலயங்கள், தபால், தந்தி நிலையங்கள் ஆகியவற்றிலும், ரயில்வே டிக்கட்டுகள், ரயில்வே சரக்குக் கட்டணங்கள், தபால் ஸ்டாம்பு, பிற தபால் பொருள்கள், ரேடியோ லைசென்ஸ்கள் கட்டணம் முதலியவற்றுக்காக மட்டும், அந்நாணயங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

ஆனல், இந்த நாணயங்கள் 1964 ஜூன் 30-ந் தேதிக்குப் பிறகும், மேல் அறிவிப்பு வருவது வரையில், பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், புது டில்லி, பங்களூர், நாகபுரி ஆகிய இடங்களிலுள்ள இந்திய ரிசெர்வ் பாங்குவெளியீட்டு இலாகாவில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது மக்கள், 1963 ஜூலை 1-ந் தேதி முதல் 1963 டிசம்பர் 31-ந் தேதி வரையில், வருமான வரி, விற்பனை வரி, தமாஷா வரி முதலியவற்றையும், பிற டிப்பாசிட் கட்டணங்களையும் செலுத்தும்போது, தங்களிடமுள்ள ஒரு அணு, கால் அணு, அரை அணு, நாணயங்களைக் கஜானுக்களிலும், உப கஜானுக்களிலும், இந்திய ரிசெர்வ் பாங்கிலும், சர்க்கார் வேலையை நடத்துகிற அந்த பாங்கின் ஏஜென்சி ஸ்தாபனங்களிலும் செலுத்தவேண்டுமென்றும், தபால் நிலையத்தில் கிடைக்கும் கார்டு முதலியவைகளையும், ரயில் டிக்கட்டு முதலியவற்றையும் வாங்கும்போதும், தபால், தந்தி, ரயில் நிலையங்களில் கூடுமான வரையில் இந்த நாணயங்களையே தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 1963 டிசம்பர் 31-ந் தேதிக்குப் பிறகும்கூட, இந்த நாணயங்களை மாற்றுவதற்கு வசதி இருக்கும். ஆனல், அவற்றில் குறிப்பிட்ட காரியாலயங்களில், குறிப்பிட்ட முறைப்படித்தான், மாற்றிக்கொள்ள முடியும்.

இந்த நாணயங்களைச் செலாவணியிலிருந்து எடுப்பது, தசாம்ச நாணயங்கள் அமுலுக்கு வந்தபிறகு, பழைய நாணயங்களைச் செலாவணியிலிருந்து நீக்கும் நடவடிக்கையில் நான்காவதாகும். ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள், எப்போதும் போல, சட்ட பூர்வமான நாணயங்களாகவே இருக்கும்.

# கூட்டுறவே நாட்டுயர்வு

## கூட்டுறவுப் பண்டகசாலைகளால் விலையேற்றத்தைத் தடுக்க முடியுமா?

[பேராசிரியர் ஒ. இரா. கிருட்டிணசாமி, எம். ஏ., எம். காம்., இணை முதல்வர், கிராமியக்கல்லூரி, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம்.]

[கோவை மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம், பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படை பயிற்சி முகாம் ஜூன் கடைசிவாரத்தில் நடைபெற்றது. அப்பயிற்சி முகாமை ஒட்டி, சிறப்புமலர் ஒன்றை, அப் பஞ்சாயத்து யூனியன் வெளியிட்டிருக்கிறது. இக் கட்டுரை, அச்சிறப்பு மலரிலிருந்து எடுக்கப்பட்டது. இச் சிறப்பு மலர் வரவேற்கத்தக்க முயற்சியாகும். மற்றப் பஞ்சாயத்து யூனியன்களும், இதைப்போல் செய்திருந்தால், அவற்றை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். —ஆசிரியர்.]

கடந்த இருபது ஆண்டுகளில் பண்டங்களின் விலை பன்மடங்காக உயர்ந்துள்ளது. இரண்டாவது உலகப் போர் காலத்தில் விலை மிகுதியாக ஏறியது. போர் முடிந்த பின் விலை சற்றுக் குறைந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1951–56) பண்டங்களின் விலை அவ்வளவாக ஏறவில்லை. ஆனல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு பண்டங்களின் விலைகளும் ஏறலாயின. மொத்த விற்பனை விலை சராசரியில் 30 சத வீதம் உயர்ந்தது.

### விலை ஏன் ஏறுகின்றது ?

இவ்வாறு விலை ஏறுவதற்குக் காரணங்கள் யாவை ? காரணங்கள் பல. மக்கட் தொகைப் பெருக்கத்தால் பண்டங்களுக்குரிய தேவை பெருகுதல், அதற்கேற்ப உற்பத்தி பெருகாமை, பணப் புழக்கம் மிகுதல், பணவருமான உயர்வு முதலியன விலை ஏறுவதற்குக் காரணங்களேயாகும். பொருளாதாரத் திட்டத்தை வகுத்து, தொழில் வணிகம், போக்கு வரவு, கல்வி போன்றவைகளைப் பெருக்க முற்படும் பொழுது, தொழிற்சாலைகளை நிறுவவும் போக்கு வரவு சாதனங்களைக் பெருக்கவும் அணைகள் கட்டவும், பிறசெயல்களைச் செய்யவும் பெருமளவில் பணம் முதலீடாகிறது. அத் திட்டங்களின் பயனை அடையச் சில பல ஆண்டுகளாகலாம். அதற்கிடையே பணப் புழக்கம் பெருகி விலைகள் ஓரளவாவது ஏறும். இது திட்டத்தை நிறைவேற்றுங் காலத்தில் இயல்பாக நிகழக்கூடியது. பணப்புழக்கத்தை ஒழுங்கு செய்வதின் மூலமும் உற்பத்திப் பெருக்கத்தை விரைவாக்குவதின் மூலமும், விலைகள் மிகுதியாக ஏருமல் தடுத்து விடலாம்.

### நெருக்கடியும் விலையேற்றமும்

ஆனல் போர், வெள்ளப்பெருக்கு, மழையின்மை, பஞ்சம் போன்ற நெருக்கடி காலங்களில் அரிசி, பருப்பு, எண்ணெய் முதலிய அன்றாட நுகர்வுப் பண்டங்களில் விலைதிடீரென நஞ்சுபோல் ஏறிவிடுகின்றது. கூலிக்காரர்களும், சம்பளக்காரர்களும் சொல்லொணுத்துன்பத்துக்கு ஆளாகின்றனர். எடுத்துக்காட்டாகப் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள கொரியாவிலே 1951-ல் போர்நடந்து கொண்டிருந்த காலத்தில் நம் நாட்டில் பண்டங்களின் விலை பன்மடங்காக உயர்ந்தது. போருக்கு முன் ஒரு ரூபாய்க்கு விற்ற பொருள் போர்க் காலத்தில் ஐந்து ரூபாய்க்கு கிடைப்பது அரிதாகி விட்டது. இவ்வாறு திடீரென விலை பன்மடங்காக ஏன் ஏறுகிறது ? கொரியாப் போருக்கும் கோயம்புத்தூர் கத்தரிக்காய்க்கும் ஏதேனும் தொடர்புண்டா ? நேரடித் தொடர்பும் ஏதும் கிடையாது ? அவ்வாறெனில், வெகு தொலைவிலே நடக்கும் போர் நம்மைப் பாதிப்பானேன் ? உள்ளூரிலே விளையும் அரிசி, பருப்பு, காய்கறி முதலிய பண்டங்களின் விலை பன்மடங்காக ஏறுவது ஏன் ? காரணம், வணிகப் பெருங்குடி மக்களின் இலாப நோக்கமே. எங்கேனும் போர் மூண்டு விட்டால், உலக வணிகம் தடைப்பட்டு விடும் ; வெளி நாட்டிலிருந்து பண்டங்கள் இறக்குமதியாகா ; பண்டங்கள் கிடைப்பது அரிதாகி விடும் என்று எண்ணிக்கொள்வர். இருக்கும் சரக்கைப் பதுக்கி வைத்து விடுவர். சரக்கு இருப்பு அல்லது மிகவும் குறைந்து விட்டது என்று காட்டுவர். இவ்வாறு பற்றுக்குறை எண்ணத்தைத் தோற்றுவிப்பர்.

### மக்கள் மனநிலை

பற்றுக்குறை என்றவுடன் பொதுமக்களின் மனநிலையும் அதற்கேற்ப உடனே மாறிவிடுகிறது. இனிமேல் சர்க்கரையோ, அரிசியோ, பருப்போ, எண்ணெய்யோ, கிடைக்காவிட்டால் என்ன செய்வது அல்லது விலை மிகுதியாக ஏறிவிட்டால் என்ன செய்வது என்று திகில் அடைகின்றனர். கிடைக்கும்பொழுதே மிகுதியாக வாங்கி வைத்துக்கொள்வோம் என்று துணிந்து விடுகின்றனர். வாங்குவோர் போட்டியிட, வணிகர் சரக்கு இருப்பு குறைந்து விட்டது என்று காட்டக் காட்ட, விலை நஞ்சுபோல் ஏறுகின்றது. வணிகர், விலை நன்கு ஏறும் வரையில் பொறுத்திருந்து, பதுக்கிய சரக்கைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவிட்டு நல்லவிலைக்கு விற்று, கொள்ளை இலாபம் அடிக்கின்றனர். இத்தகைய சூழ்நிலை இன்று நம்நாட்டில் ஏற்பட்டிருப்பதைக் காண்கின்றோம். கடந்த அக்டோபரில் செஞ்சீனப்படை நம்நாட்டின் வட எல்லையில்

திடீரெனத் தாக்கிப் படையெடுத்தபின், நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டு விட்டது. போர்க்கால நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆட்களையும் பொருட்களையும் மிகுதியும் போர்த் துறைக்குப் பயன்படுத்தி வருகின்றோம். இந்நிலை நெருக்கடி நிலையில் பண்டங்களின் விலை திடுமென ஏறும் வாய்ப்பு இருக்கின்றது. விலை ஏறி வருகின்றது. இதைத் தடுப்பதற்குரிய வழி வகைகளில் சிறப்பானது கூட்டுறவு.

### விலையேற்றத்தைத் தடுப்பது எவ்வாறு ?

வணிகர்கள் நெருக்கடி நேரத்தில் விலையை ஏற்றவே முயற்படுவர். இதைத் தடுப்பதற்குரிய ஒரே வழி கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பல இடங்களிலும் அமைப்பதே. கூட்டுறவுப் பண்டகசாலைகள் விலை உயர்வை எவ்வாறு தடுக்க முடியும் ? இதை ஆராய்வோம்.

### பொருளாதார மோதல்

தனி வணிகத்தில், விற்போர் வாங்குவோர் என்ற இரு வேறு திறத்தினர் இருக்கின்றனர் இவ்விருதிறத்தார்களின் நலன்களும் நாட்டமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. வணிகரின் நாட்டம் யாது ? பண்டத்தின் அளவையும் தரத்தையும் குறைத்தோ விலையை உயர்த்தியோ இலாபம் தேடுவதே. ஆனால் வாங்குகின்றவர் விரும்புவது வேறு. அவருடைய நாட்டமெல்லாம் குறைந்த விலைக்கு நிறையப் பண்டங்களை வாங்க வேண்டும் என்பதே. எனவே விற்போரின் நலனும் நாட்டமும் வாங்குவோரின் நலனுக்கும் நாட்டத்திற்கும் எதிரானவை. இதைப் பொருளாதார மோதல் (Economic conflict) என்றே சொல்லலாம். இந்த மோதலில் எந்தக் கட்சியினர் வெற்றி பெறுவார் ? வலியவர் என்று சொல்லவும் வேண்டுமோ! விற்போர், வாங்குவோர் என்ற இரு கட்சியினரில் வலியவர் யார் ? பெரும்பாலும் விற்போர் என்பதில் ஐயமில்லை. அதுவும், நெருக்கடி காலத்தில், பண்டங்கள் வேண்டுமளவுக்குக் கிடைக்காத காலத்தில், விற்போரே வலியவர். அவர் வைப்பதே சட்டம். அவர் கேட்கும் விலையை வாங்கியவர் கொடுத்தால் தான் பண்டம், இல்லையென்றால் கிடையாது. கூட்டுறவுப் பண்டகசாலை, இந்நிலையை அடியோடு மாற்றுகிறது. அதில் வாங்குபவரே விற்பவர், இது மந்திரமா ? தந்திரமா ? மந்திரமும் இல்லை. தந்திரமும் இல்லை. கண் கூடான உண்மை.

### கூட்டுறவுப் பண்டகசாலை என்பது என்ன ?

பண்டங்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோர் ஒன்று சேர்ந்து அமைக்கும் சங்கமே கூட்டுறவுப் பண்டசாலை. அவர்கள் தம் சங்கத்தின் மூலம் பண்டங்களை மொத்தமாக வாங்கித் தமக்கே விற்றுக் கொள்கின்றனர். விற்பது சங்கம் என்றாலும் சங்கம் அவர்களுடையது தானே. எனவே, கூட்டுறவுப் பண்டகசாலையில் விற்பவரும் வாங்குபவரும் ஒருவரே. ஆகையால், இலாப நோக்கத்திற்கோ, சுரண்டலுக்கோ இடமேது ? நல்ல பண்டங்களை மொத்தமாக வாங்கி நியாயமான விலைக்கு விற்பதே கூட்டுறவுப் பண்டகசாலையின் நோக்கம். கூட்டுறவுப் பண்டகசாலையின் மூலம் நுகர்வோர் தம் நலனைத் தாமே பேணிக் கொள்கின்றனர். வணிகரின் சுரண்டலுக்கு ஆளாகாமல் தப்பி பிழைக்கின்றனர். நெருக்கடி காலங்களில்லாமல், சாதாரண காலங்களில் கூட, நமக்கு வேண்டியது இலாப நோக்கமற்ற விற்பனை அமைப்பே. அத்தகைய அமைப்பு தனி வணிக நிலையமன்று, கூட்டுறவுப் பண்டகசாலையே.

### நியாய விலை—கலப்பட ஒழிப்பு

கூட்டுறவுப் பண்டகசாலையின் நோக்கம் நியாய விலைக்குப் பண்டங்களை வழங்குவது மட்டுமன்று ; கலப்பற்ற உயர்ந்த தரமுள்ள பண்டங்களை, நிறையோ, அளவோ குறையாமல் வழங்குவதுமாகும். இது நம் நாட்டிற்கு மிகமிக இன்றியமையாதது. கூட்டுறவுப் பண்டகசாலையில் கலப்படம் இருக்காதா என்ற வினா எழலாம், கூட்டுறவுப் பண்டகசாலை யாருடையது ? அதில் பண்டங்களை விலைக்கு வாங்கும் உறுப்பினர்களுடையதுதானே, அது. எனவே, உறுப்பினர்கள் தமக்குத் தாமே தீங்கு செய்வார்களா ? செய்ய மாட்டார்கள் ; ஆகையால் கலப்படத்துக்கு வழியே இல்லை.

### விற்பனை விலை மாறாது

அடுத்தபடியாக கூட்டுறவுப் பண்டகசாலையில் விற்பனை விலை அடிக்கடி மாறாது. வணிக நிலையங்களில் விற்பனை விலை அன்றாடம்—என்—நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடும். சரக்கு வரவு, வாங்குவோரின் தேவை இவைகளை அனுசரித்து சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் விலையை உயர்த்துவர் தனி வணிகர். ஒரு பண்டத்தின் விலை இன்று ரூ.10-ஆக இருக்கலாம். அதே இருப்பைச் சேர்ந்த அதே பண்டத்தின் விலை அடுத்த நாள் ரூ. 12-ஆக உயரக்கூடும். ஆனால், இலாப நோக்கமற்ற கூட்டுறவுப் பண்டகசாலையில் இவ்வாறு விலை அடிக்கடி உயராது, ஏனென்றால், வந்து சேரும் பண்டத்திற்கு விற்பனை விலையை முடிவு செய்துவிட்டால், அப்பண்டத்தின் இருப்புத் தீரும் வரையில் அதே விலைதான். சந்தை நிலவர விலை ஏறினாலும், அவ்விலை ஏறாது.

கூட்டுறவுப் பண்டகசாலையில் விற்பனை விலையை எவ்வாறு முடிவு செய்கின்றனர் ? தனி வணிக நிலையத்தில் செய்வது போன்ற விருப்பம் போலன்று. நியாயமான அடிப்படையிலேயே முடிவு செய்கின்றனர். பண்டகசாலையை நடத்துவதற்குக் கட்டிட வாடகை, ஆள் சம்பளம் போன்ற செலவுகள் ஆகுமல்லவா ? அவைகளையும் ஆண்டின் இறுதியில் செலவு போக மீதமிருக்கும் வருமானத்தில் கணிசமான தொகையைக் காப்பிருப்புக்கு ஒதுக்கவேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு, அடக்கவிலையுடன் ரூபாய்க்கு ஐந்து நயாபைசாவோ பத்து நயாபைசாவோ சேர்த்து விற்பனை விலையை முடிவு செய்கின்றனர். முடிவு செய்கின்றவர்கள் யார் ?

அப்பண்டங்களை வாங்கவிருக்கும் உறுப்பினர்களின் பிரதிநிதிகளே. அவர்கள் தம்மைத் தாமே சுரண்டுவார்களா ? எனவே, விற்பனை விலை நியாயமாக முடிவு செய்யப்படும் என்பதில் ஐயமில்லை.

[14-ம் பக்கம் பார்க்க]



## இராமநாதபுரம் மாவட்டம்

# தொழில் கருத்தரங்கு

### பொருளாதார வளம் பெருக, கூட்டு முயற்சி

(இராமநாதபுரம் மாவட்டம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டம், நெடுநாட்களாகவே வளர்ச்சியுறுமல், தொழில் துறையில் பின் தங்கிப்போன பகுதி. தமிழ்நாடு, கடந்த சில ஆண்டுகளில் பலதுறைகளில் மகத்தான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றாலும், தொழில் வளர்ச்சிக்கான விசேஷத் திட்டங்கள் பிற்போக்கான இடங்களில் உருவாவது மிகவும் அவசியமான, பொதுத் தொண்டாகும். கடந்த ஜூலை மாதம் 15-ம் தேதியில் காரைக்குடியில் நடைபெற்ற இராமநாதபுரம் மாவட்டத் தொழில் கருத்தரங்கு, தொழில் துறையில் அந்த மாவட்டத்தில் தோன்றியுள்ள விழிப்புணர்ச்சிக்கு, நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றிலே இந்த மகநாடு, நல்லதொரு திருப்புமையம். இராமநாதபுரம் மாவட்டத்தின் எதிர்காலம், நல்ல செழுமை பெற்றுத்திகழ, எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதிப்பாட்டை, இக்கருத்தரங்கு நமக்கெல்லாம் அளிக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற தொழில் வளர்ச்சிக்கான கருத்தரங்குகள் நடைபெறுமென்று நம்புகிறோம்.
—ஆசிரியர்)

கடந்த ஜூலை 15-ல் காரைக்குடியில் இராமநாதபுரம் மாவட்டத் தொழில் கருத்தரங்கு நடைபெற்றது. இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தபிரமுகர்கள், கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மத்திய மின்-ரசாயன ஆராய்ச்சிக் கழகத்தில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து, முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள் பேசுகையில், "ராமநாதபுரம் ஜில்லாவை எப்படியாவது தொழில்துறையில் வளர்ச்சி பெற்ற ஜில்லாவாக்கும் காலம் வந்துவிட்டதென்றும், அதற்கு வழிவகைகள் காணவே இந்த கருத்தரங்கு நடத்தப்படுகிறது" என்றும் குறிப்பிட்டார்.



காரைக்குடி மத்திய மின்-ரசாயன ஆராய்ச்சிக் கழகத்தில் "மக்னீஷியம்" பூர்வாங்கத் தொழிற்சாலைக்கு திரு காமராஜ் அடிக்கல் நாட்டினார்.

முதல் அமைச்சர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

"இந்த ஜில்லாவில் போதுமான மூலதனமும், தொழில் அனுபவமும, புதிய தொழில்களில் பணம் போடும் ஆர்வமும் இருக்கிறது. ஆனால், எத்தகைய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பது குறித்து சரியான ஆலோசனைக் கிடைக்கப்பெற வேண்டும். இது விஷயத்தில் இந்த கருத்தரங்கு தேவையான ஆலோசனை அளிக்கும் என்று நம்புகிறேன்."

"தொழில் அபிவிருத்தியில் ராமநாதபுரம் ஜில்லா பின் தங்கிவிட்டது உண்மைதான். அதற்குக் காரணம், அக்கறையின்மையோ, உற்சாகக்குறைவோ அல்ல. மலேயா முதலிய நாடுகளில் இந்த ஜில்லாக்காரர்கள் தொழில் நடத்தி வந்தார்கள். இப்போது அதில் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதால், அவர்கள் தங்கள் சொந்த ஜில்லா மீது கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். மூலதனம் போடும் ஆர்வம் காணப்படுகிறது. ஆனால், ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. தன்னம்பிக்கையும் தெரியமும் தொழில் நுட்பத் திறமையும் தேவை."

"இந்த ஜில்லாவின் தாதுவளங்களைக் கண்டறிவது அவசியம். பூமிக்கடியில் என்ன இருக்கிறதென்று யாருக்கும் தெரியாது. அந்த வளங்கள் கண்டறியப்படும் வரை, கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டும் முன்னேற்றம் காண வேண்டும்."

"பெரிய தொழிற்சாலைகள் நடத்தும் தொழிலதிபர்கள் இந்த ஜில்லாவில் சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து, தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருட்களை தயாரித்துக் கொள்ளலாம். புதுவகையான விவசாயக் கருவிகளைக்கூட தயாரிக்கலாம்."

"3-வது திட்ட காலத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் 10,000 பேர்கள் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, ஒவ்வொரு ஜில்லாவிலும் தொழிற் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பித்து வருகிறோம்," என்று குறிப்பிட்டார்.

'மக்னீஷியம்' பூர்வாங்கத் தொழிற்சாலைக்கு திரு காமராஜ் அடிக்கல் நாட்டினர்.

### "இன்னுமொரு நெய்வேலி"

தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் பேசுகையில் :—

"இந்த ஜில்லாவில், பரவலான பகுதியில் சுண்ணாம்புக் கல் காணப்படுகிறது. கீழக்கரை, முதுகுளத்தூர் பகுதிகளில் "ஜிப்ஸம்" தாது இருக்கிறது. பழுப்பு நிலக்கரி படிவங்களைக் கண்டு பிடிக்கவும் சோதனை நடத்தயிருக்கிறோம். இந்தப் பகுதியில் மற்றொரு "நெய்வேலி" ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்."

"ராமநாதபுரம் ஜில்லாவில் 12 பஞ்சாலைகள் இருக்கின்றன. விரைவில் மேலும் 6 பஞ்சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. விருதுநகரில் உருக்கு உருட்டாலையும், ராஜபாளையத்தில் ரணசிகிச்சைப் பஞ்சுத் தயாரிப்பு ஆலையும் இருக்கின்றன. விருதுநகர் அருகேயுள்ள சிமெண்ட் தொழிற்சாலை இன்னும் சில நாட்களில் தனது முழு உற்பத்தி திறனை 600 டன் (தினசரி) உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். சிவகாசிப் பகுதியில் தீப்பெட்டித் தொழில் உன்னதமான நிலைமையில் நடந்து வருகிறது. இதற்கு "பைரோ டெக்னிக்" அலுமினியப்பொடி பெருமளவில் தேவைப்படுகிறது. அதை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை சிவகாசி பகுதியில் நிறுவலாம்."

"இந்த ஜில்லாவில் "சோடா காரம்" தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் வாய்ப்பும் இருக்கிறது. இது சம்பந்தமாக, ஜப்பானிய நிபுணர் கோஷ்டியின் அறிக்கை இன்னும் சில வாரங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையை நிறுவ சிபாரிசு செய்யப்பட்டுள்ள இடங்களில் 2 ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளன. இதற்கு ரூ. 10 கோடி செலவாகும்."

"எந்தெந்த இடத்தில் எத்தகைய தொழிற்சாலைகள் அமைக்கலாம்; அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விஷயங்களில் நமது ராஜ்யத்திற்கு ஆலோசனை கூற அபிவிருத்திப் பிரிவு அதிகாரி ஒருவரை விரைவில் இந்திய சர்க்கார் அனுப்பவிருக்கிறது. அவரது சேவையை தொழிலதிபர்கள் பயன்படுத்திக்கொள்வர் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் மாவட்டக் கலெக்டரும், கருத்தரங்கு கமிட்டித் தலைவருமான திரு அம்பாசங்கர், ஐ.ஏ.எஸ்., பேசுகையில், இயற்கை வளங்கள் இல்லாத, ஆனால் கடினமாக உழைக்கும் மக்களைக் கொண்ட இந்த ஜில்லா, தொழில்துறை வளர்ச்சியின் மூலமே முன்னேற்றமடைய முடியுமென்றார்.

மின்-ரசாயன ஆராய்ச்சிக் கழக டைரக்டரான பேராசிரியர் கே. எஸ். ஜி. தாஸ், மக்னீஷியம் பூர்வாங்க தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும்படி திரு காமராஜைக் கேட்டுக் கொண்டார். இத்திட்டத்திற்கு ரூ. 3·2 லட்சம் செலவாகும்.

கருத்தரங்குக் கமிட்டி அங்கத்தினர் திரு. சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு தி. மாணிக்கவாசகம் செட்டியார் கருத்தரங்கு சிறப்பு மலரை வெளியிட்டார். மலரின் பிரதி ஒன்றை அவர் முதன் மந்திரியிடம் வழங்கினார். திரு காமராஜ் அதை திரு எம். ஏ. முத்தையா செட்டியாரிடம் கொடுத்தார்.

திரு முத்தையா செட்டியார் பேசுகையில், ராமநாதபுரம் ஜில்லா முழுவதிலும் பூதத்துவ ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும் என்று கோரினார்.

திரு ஆர். வி. சாமிநாதன், எம்.எல்.ஏ., கருத்தரங்கு சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழுக்களை அறிவித்தார். அவர்கள் மூன்று பிரிவுகளாக விவாதம் செய்தனர். கோஷ்டி விவாதத்திற்கு பின், மாலையில் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெற்றது. கோஷ்டி விவாதங்களில் கூறப்பட்ட யோசனைகள் குறித்து, மூன்று பிரிவுகளின் தலைவர்கள் திரு ஏ. எம். எம். முருகப்ப செட்டியார், திரு டி. மாணிக்கவாசகம் செட்டியார். திரு. பி. அய்ய நாடார் ஆகியோர் அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

டாக்டர் பி. எஸ். லோகநாதன், டாக்டர் பி. நடராஜன், எம்.எல்.ஏ., இருவரும், இப்பகுதியில் நீண்ட முறையில் பூகர்ப்ப ஆராய்ச்சியும் தொழில் நுட்ப பொருளாதார ஆராய்ச்சியும் செய்வதின் மூலம், இப்பகுதி தொழிலின் அபிவிருத்தி அடைய வாய்ப்புகள் உள்ளன என்று தங்களின் கருத்துக்களைக் கூறினர்.

திரு சா. கணேசன், எம்.எல்.ஏ., பேசுகையில், "பெருந் தொழில்கள் வளரவேண்டும். விவசாயம் வளராமல் எந்தத் தொழிலும் வளரமுடியாது. விவசாயத்திற்கு ஊறு விளையாதவாறு தொழில்களை நிறுவ வேண்டும்" என்றார். திரு வி. வி. ராமசாமி நாடார் பேசுகையில் சேது சமுத்திர திட்டத்தை நடப்பிலுள்ள 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்க வகை செய்யவேண்டுமென்றார்.

இறுதியில் திரு ஏ. கே. டி. ரங்கசாமி ராஜா நன்றி கூறினார்.

---

# சீரிய நல்வாழ்வுக்கு சிறு சேமிப்பு

**திரு சு. மதனகோபால், மாவட்ட சேமிப்பு அமைப்பாளர், சென்னை.**

நீலவானை முட்டி நிற்கும் மலை மீது துஞ்சி நிற்கும் மஞ்சு தரும் மழை, நிலத்திற்கு வளமாகிறது. வளம் பெற்ற நிலம், உழவனுக்கு வாழ்வு தருகிறது. அதுபோல, பொருளாதார வாழ்வெனும் கழனி, நென்மணி தந்திட சேமிப்பெனும் மழை அவசியமாகிறது. சேமிப்பு ஒருவனுக்கு துயர் துடைக்கும் நண்பனாகவும்—"தேவை" (wants) யெனும் இருள் கப்புங்போது ஒளியுமிழ் விளக்காகவும்—வாழ்வில் "பொருளாதார அணி" (economic front) வலியுற நல்லதோர் படைக்கலனாகவும் விளங்குகிறது. ஒருவனுடைய வாழ்வில் சேமிப்பு பெற்றுள்ள முக்கியத்துவத்தை, ஆங்கிலேய இலக்கியத்தின் புகழ் மிகு எழுத்தாளரான சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பவர் "ஒருவன் 20 பவுன்களை சம்பாதித்து அதற்கு மேல் 21 பவுன்கள் செலவிடின், அவன் தன்னைமட்டுமின்றி, தன் இல்லத்தையும் மீளாத்துயருக்கு ஆளாக்குகிறான். அவ்வாறன்றி, அவன் 19 பவுன்களையே செலவிடின் தனக்கும், தன் இல்லத்திற்கும் மகிழ்ச்சி முகிழ்த்து தங்கிட அடிகோலுகின்றான்"—என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

### வளர்ச்சி பெற்றுள்ளோம்

தேசீய சேமிப்பு நிறுவனத்தின்மூலம் 1947–48-ம் ஆண்டு திரட்டிய தொகையான 12·72 கோடி ரூபாய்க்கும், 1962–63-ல் பெற்ற தொகையான 82·11 கோடி ரூபாய்க்கும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் திரட்டிய தொகையான 236 கோடி ரூபாய்க்கும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெற்ற தொகையான 401 கோடி ரூபாய்க்கும் காணப்படுகின்ற வேறுபாடுகளிலிருந்து, நல்ல ஒத்துழைப்புடன் சேமிப்பு பெற்றிருக்கின்ற வளர்ச்சி வெள்ளிடை மலை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சிறு சேமிப்பு மூலம் திரட்டப்பட வேண்டிய குறியீட்டுத் தொகை ரூ. 600 கோடியாகும். அக்குறியீட்டினை அடைவதற்கும், உலகிலேயே அதிகமான சேமிப்பாளர்களைக் கொண்டுள்ள ஜப்பான் (20%), ஹாலண்டு (16·1%) மேற்கு ஜெர்மனி (14·7%) டென்மார்க் (10·8%) அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்தும் தனித்தனியாக (6·6%) போன்ற நாடுகளின் சேமிப்புத் தரத்தை (savings standard) நாம் அடைய மக்களிடையே சேமிப்பை ஓர் கட்டாயப் பழக்கமாக (savings as a must habit) ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

அத்தகைய நல்லதோர் பழக்கத்தை ஏற்படுத்த–(1) அதிக அளவில் தனிப்பட்டவர்கள் சிறு சேமிப்புப் பத்திரங்களில் (12 year National Defence Certificates, 10 year Defence Deposit certificates and 15 year Annuity Certificates) மூலம் சிறு சேமிப்பு செய்யவும் பெருவாரியான சேமிப்பு விற்பனையாளர்களை (savings agents) நியமித்து, அதிக அளவில் சேமிப்பைத் திரட்ட ஊக்குவித்தலும் வேண்டும்.

(2) வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் (Block Development areas) கிராம மக்களுக்கு சேமிப்பு மனப்பான்மையை வளரச் செய்ய உண்டியல் சேமிப்பை (Hundy savings) ஊக்குவித்து, அதன் மூலம் அஞ்சலக கணக்கினையோ (Post Office Savings Bank Account) அல்லது வளரும் மாத சேமிப்புத் திட்டக் கணக்கினையே (C. T. D. Account) ஏற்படுத்திக் கொடுத்தல்.

(3) அலுவலகங்களில் சேமிப்புக் குழுக்களை (Savings groups) ஏற்படுத்தல்.

(4) பெரிய தொழிற்கூடங்கள், நிறுவனங்களில் சம்பளப்பட்டியல் சேமிப்புக் குழுக்களை (Pay roll savings groups) ஏற்படுத்தல்.

(5) நகர, முக்கியமாக கிராமப் பகுதிகளில், சிறு சேமிப்பு நிறுவனத்தின் நோக்கம் பற்றியும், பங்கு பெறும் முறைகளைப்பற்றியும், அதனால் ஏற்படும் பலன்களைப் பற்றியும் சேமிப்புப் பிரச்சாரத்தை (Savings publicity) அதிகமாக்கி தொடர்ந்து செய்து வருதல்—போன்ற பணி முறைகள் பெரிதும் உதவும்.

மேற்சொன்ன பணிமுறைகள் மூலம் மக்களின் சேமிப்புப் பழக்கம் வளர்ந்து செயல்படின், தற்போது நம்நாடு இருக்கின்ற நெருக்கடி நிலையில், வெள்ளிப்பனி மலையில் வீரமும் உறைந்து கிடக்கிறதென்று உணர்த்தவும்—ஈனச் சீனரின் படையெடுப்பை கவி பாரதியின் "எட்டி நில் பகையே; துள்ளி வருகுது வேல்" என்ற வீரவரிக்கேற்ப சூளுரையேற்று முறியடிக்க ஆயுதபலம் பெருக்கவும், நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறவும்—சேமிப்பு அதிக அளவில் உதவும் என்பது உறுதி.

---


**கிராம நலம்**

சந்தா விவரம் :—

**ஆண்டு சந்தா ரூ. 1·50.**

ஆறுமாத சந்தா கிடையாது.

தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

முகவரி:—பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நலத நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

### வணிக உலகத்திலே காணமுடியாத விந்தை

தனி வணிக நிலையங்களில் காணமுடியாத புதுமையைக் கூட்டுறவுப் பண்டகசாலையில் காணலாம். தனி வணிகர்கள் நமக்குப் பண்டங்களை விற்கிறார்கள். நாம் கொடுக்கும் விலையில் அவர்களுடைய இலாபமும் சேர்ந்திருக்கிறது. இலாபம் சம்பாதிக்கின்றனர். ஆனால் அந்த லாபத்தில் ஒரு பைசாக்கூட நமக்குத் திரும்பி வராது. ஆனால் கூட்டுறவுப் பண்டகசாலை தன் செலவு போக மீதமிருக்கும் வருமானத்தில் பெரும்பகுதியைச் சரக்கு வாங்கியவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடுகிறது. இது ஆண்டுக்கொருமுறை கொடுக்கப்படும். இதற்கு கொள்முதல் ஈவு அல்லது போனசு எனப்படும். இது நூற்றுக்கு ஐந்து ரூபாய் என்றால் ஆண்டில் மொத்தமாக 500 ரூபாய்க்குச் சரக்கு வாங்கியவருக்கு கொள்முதல் ஈவு ரூ. 25 கிடைக்கும். ரூபாய் ஆயிரத்துக்கு வாங்கியவருக்கு ரூ 50 கிடைக்கும். நம்மால் கிடைக்கும் இலாபம் நமக்கே திரும்பி வருகின்றதல்லவா?

### கூட்டுறவுப் பண்டகசாலையை நன்கு நடத்துவது எவ்வாறு?

இந்நோக்கம் நிறைவேறுவது, கூட்டுறவுப் பண்டகசாலையை நன்கு நடத்துவதைப் பொறுத்ததாகும். கூட்டுறவுப் பண்டகசாலை பலர் சேர்ந்து மக்கள் ஆட்சி அடிப்படையில் நடத்தப்படும் சங்கம். எனவே உறுப்பினர் அனைவரும் விழிப்புணர்ச்சியுடன் சங்கத்தின் செயல்களில் அக்கறையுடன் ஈடுபட்டால்தான், சங்கம் நன்கு நடைபெறும். மற்றும் உறுப்பினர் தமக்கு வேண்டிய பண்டங்களைப் பண்டசாலையின் மூலமே வாங்க முற்பட வேண்டும். அப்போதுதான் சங்கத்தைச் சிக்கனமாக நடத்த முடியும். பண்டகசாலை, கண்ட கண்ட பொருட்களையெல்லாம் வாங்கிக் கொள்முதலை முடிக்கக்கூடாது. உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் பண்டங்களையே வாங்கி வைக்க வேண்டும். நல்ல தரமான சரக்காகத் தேர்ந்து வாங்க வேண்டும். கலப்பற்ற தூய சரக்கையே தேர்ந்தெடுக்க வேண்டும். எந்தெந்த பருவத்தில் சரக்கு மலிவாகக் கிடைக்குமோ, அந்தந்தப் பருவத்தில் சரக்கை வாங்கி சேகரிக்க முற்பட வேண்டும் கணக்குகளை ஒழுங்காக வைக்க வேண்டும். சங்க நிர்வாகி திறமையுள்ளவராக இருக்க வேண்டும். சந்தை நிலவரங்களை நன்கறிந்து சிக்கனமாகக் கொள்முதல் செய்யும் ஆற்றல் அவருக்கு இருக்க வேண்டும். திறமை மட்டும் போதாது. நேர்மையும் முக்கியம்.

மற்றும் பிரதம பண்டகசாலைகள் பல சேர்ந்து மத்திய பண்டகசாலையை அமைத்து அதை நன்கு நடத்த வேண்டும். மத்திய பண்டகசாலை, சரக்குகளை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக வாங்கியும், சில சரக்குகளைத் தானே உற்பத்தி செய்தும் நியாயமான விலைக்குப் பிரதம பண்டகசாலைகளுக்கு வழங்க வேண்டும். அப்போதுதான் பண்டகசாலைகள் குறைந்த விலைக்குப் பண்டங்களை விற்று, நிலவர விலை குறைய முடியும்.

சங்கம் தங்களுடையது என்ற எண்ணம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்கவேண்டும். இவ்வாறெல்லாம் இருந்தால், கூட்டுறவுப் பண்டகசாலை இயக்கம் வெற்றிகரமாக நடைபெறும்.

—:x:—

# நூல் நயம்

## "ரேடியோ மன்றம்"

(கிராம வானொலி மன்றங்களுக்கான மாத வெளியீடு)

**வெளியிடுவோர்: கிராம நல தல நிர்வாகத் துறை— சென்னை-9.**

சடந்த ஆண்டு, திருச்சிராப்பள்ளியில் கூடிய பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் மகாநாடு, "முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களின் பிறந்த தினமாகிய ஜூலை 15-ம் தினத்தை ஒவ்வொரு ஆண்டும், 'பஞ்சாயத்து தினமாக'க் கொண்டாட வேண்டும்" என்று முடிவு செய்தது. அம்முடிவை ஒட்டி, இவ்வாண்டு, தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், ஜூலை 15-ம் தேதி "பஞ்சாயத்து தினமாக", சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந்த மகாநாட்டு நிகழ்ச்சிகளையொட்டி, முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள், கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார். "பஞ்சாயத்து தினமாகக்" கொண்டாடப்பெறும் இவ்வாண்டு ஜூலை 15-லேயே, கிராம வானொலி மன்றங்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய "ரேடியோ மன்றம்" என்ற மாத வெளியீட்டின் முதல் இதழ் வெளிவந்தள்ளது, மிகவும் பொருத்தமுடையதாகும். வானொலி பற்றிய நுணுக்கமான செய்திகளும், கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள், கிராம வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய முழு விவரங்களும், பயன்தரத்தக்க கட்டுரைகளும், இவ்விதழில் அடங்கியுள்ளன. கிராம வானொலி மன்ற அமைப்பாளர்களும், கல்வி வளர்ச்சி அதிகாரிகளும், இவ் வெளியீட்டை கவனத்துடன் படித்து, கிராம மக்களிடையே "கிராம வானொலி மன்றங்கள்" பற்றிய செய்திகளை நல்ல முறையில் எடுத்துக் கூற வேண்டும். கிராமத் தொண்டர் படையின் அறிவு விளக்கப் பணிக்கு "ரேடியோ மன்றம்" பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வ.ச.

—(o)—

## 'வானொலி' வெள்ளி விழா மலர்

அகில இந்திய ரேடியோ நிலையம் வெளியிட்டுவரும் "வானொலி" இதழின் வெள்ளி விழா மலர் கிடைக்கப் பெற்றோம். ரேடியோ நிகழ்ச்சி விவரங்களையும், ஒலி பரப்பப்பட்ட விஷயங்களில் சிறந்தவற்றையும் வெளியிடுவது பயனுள்ள முறையாகும். அறிஞர் பலரின் சொற்பொழிவுகள், தலைவர்கள், கலைஞர்கள் ஆகியோரின் படங்கள் முதலியன நிறைந்த இவ் வெள்ளி விழா மலர், சென்ற 25 வருட கால சேவையின் சின்னமாக விளங்குகிறது.

"ஜேகன்"

# ஏழ்மையை ஒழிக்க உலக நாடுகள் முயற்சி

## உலக உணவு காங்கிரஸ்

உலகில் மக்கள் எண்ணிக்கை இது வரையில்லாதபடி இப்போது பெருகி வருவது மிகப் பெரியதொரு பிரச்னையாக இருந்து வருகிறது. மக்களுக்கு வேண்டிய அளவு உணவு கிடைப்பதில்லை என்பது ஒரு புறமிருக்க, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உணவும் போதிய சத்து நிறைந்ததாக இல்லை; உணவுத் தேவையின் அளவைத் திட்ட வட்டமாகத் தெரிந்து கொள்வதற்கான முயற்சி 1946-ல் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டது. அப்போது சுமார் 70 நாடுகளில், **உலக உணவு விவசாய ஸ்தாபனம்** சர்வே நடத்தியதில், உலகில் பெரும் பகுதியிலும் உணவு பற்றுக்குறையாக இருப்பதாகத் தெரிய வந்தது.

1952-ல் இரண்டாவது சர்வே நடந்த போது இன்னும் பல முக்கிய விஷயங்கள் தெரிய வந்தன. உலக மக்களில் சுமார் 60 சதவிகிதத்தினர் வாழும் பகுதிகளில் தினமொன்றுக்கு 2,200 கலோரி உணவு கூடக் கிடைக்க வழியில்லாமலிருந்தது.

### உணவு உற்பத்தி பெருகியுள்ளது

இப்போது உணவு உற்பத்தி, யுத்த காலத்திற்கு முன்பிருந்ததை விட 50 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. முன்னேறியுள்ள நாடுகளிலும், பிற நாடுகளிலும், இந்த அளவு சமமாகவே இருக்கிறது. முன்னேறிய நாடுகளில், மகசூல் அதிகரிப்பின் காரணமாகத்தான், முக்கியமாக, உணவு உற்பத்தியும் பெருகி இருக்கிறது. பிற நாடுகளில், மேலும் பல நிலங்களில் பயிர் செய்வதன் மூலமாக உற்பத்தியை அதிகரிக்க முடிந்திருக்கிறது. பின்தங்கிய நாடுகளில், உற்பத்தி பெருமளவில் உயராமல் இருப்பதற்குக் காரணம், விவசாயிகளின் வருமானம் போதுமானதாக இல்லாமலிருப்பது, நிலவளமின்மை, ஜனநெருக்கடி ஆகியவையே.

பசிப்பிணி உலகிலிருந்து அறவே ஒழியுமா? ஊட்டக் குறைவு தொலையுமா? இதன் விடை இந்தப் பிரச்னை எப்படி எப்பொழுது சமாளிக்கப்படுகிறது? என்ற இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது.

### உலக உணவு மகாநாடு

அமெரிக்காவில், வாஷிங்டன் நகரில் இவ்வாண்டு, ஜூன் 4-ம் தேதி தொடங்கிய உலக உணவு மகாநாடு (World Food Congress) இந்த அறைகூவலை ஏற்க முன்வந்தது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாய ஸ்தாபனம் (Food and Agriculture Organisation) இந்த உணவு மகாநாட்டை கூட்டியது. 1960-ம் ஆண்டில், இந்த ஸ்தாபனம் ஐந்தாண்டு இயக்கம் ஒன்றைத் துவக்கியது. **பசிப்பிணியிலிருந்து விடுதலை இயக்கம் (Freedom From Hunger)** என்பது இதன் பெயர். இதன் தலையாய நிகழ்ச்சியாக, இந்த மகாநாடு நடைபெற்றது.

105 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,200 உணவு நிபுணர்கள் இந்த மகாநாட்டில் பங்கு கொண்டனர். உலகம் முழுவதிலும் பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்களின் அவல நிலையைக் களைந்தெறிய வழிவகைகளை ஆராய்ந்து திட்டங்கள் வகுக்கப்பட்டன. நம்நாட்டு உணவு விவசாய மந்திரி **திரு. எஸ். கே. பாட்டீல்**, தமிழக நிதி, கல்வி மந்திரி **திரு. எம். பக்தவத்ஸலம்**, மற்றும் சில இந்தியப் பிரதிநிதிகள் மகாநாட்டில் சிறப்புரை நிகழ்த்தினர்.

### பாரத ராஷ்டிரபதியின் உரை

பாரத நாட்டு ராஷ்டிரபதி **டாக்டர் ராதாகிருஷ்ணன்**, மகாநாட்டில் உரை நிகழ்த்துகையில், "வறுமையையும் பட்டினியையும் ஒழித்து அவற்றிலிருந்து விடுதலை பெறுவதுதான் இன்று எழுச்சியுறும் நாடுகளின் முக்கியப் பணியாக இருக்கிறது", "உலகிலிருந்து பட்டினியை ஒழிக்க உலக மக்களின் மனச்சான்றை இந்த உலக மகாநாடு தட்டி எழுப்பவேண்டும்" என்றார். மேலும் அவர் பேசுகையில், "பட்டினியையும் வறுமையையும் ஒழித்து, அவற்றிலிருந்து விடுதலை பெறுவது தான், இன்று எழுச்சியுறும் நாடுகளின் முக்கிய வேலையாக இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

"சமூக, அரசியல் புரட்சிகளுக்கு மூல காரணமாக இருப்பவை, பட்டினியும், மனிதனுக்கு இருக்கும் அத்தியாவசியத் தேவைகளும் தான். ஏழ்மை, தங்களுக்குக் கடவுள் ஆணையால் ஏற்பட்டதென்பதை, இனி மக்கள் நம்பிக் கொண்டிருக்கத் தயாராக இல்லை. அவநம்பிக்கையால் ஏற்படும் மூர்க்கத்துடன் இந்த நிலையை ஒழிக்கப் போராடுவதற்கு அவர்கள் தயார்" என்றும், "இந்தத் தேவைகளை இரக்கத்தோடு நோக்காத மக்கள், மனிதப்பண்புகளான இரக்கமும் அன்பும் இல்லாதவர்களென்ற கண்டனத்துக்கு ஆளாகின்றனர்" என்றும் அவர் தம் உரையில் குறிப்பிட்டார்.

"இந்த உலக உணவு மகாநாட்டை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கூட்டியிருக்கிறது. உலகில் பட்டினியை ஒழிக்க உலக மக்களின் மனச்சான்றை இந்த உலக மகாநாடு தட்டி எழுப்ப வேண்டும்" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் வற்புறுத்தினர்.

(19-ம் பக்கம் பார்க்க.)

## கிராம மக்களின் தோன்ருத் துணைவன்

திரு விஷ்ணுதத், ஆசிரியர் "பஞ்சாயத்து ராஜ்")

கிராம மக்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லி, வேண்டிய உதவியும் செய்கின்ற கிராமத் தொண்டர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் மிகவும் தேவை. பஞ்சாப் மாநிலத்தில் படித்து, அனுபவம்பெற்ற கிராம மக்களுக்குச் சேவை செய்ய முன் வந்தார் ஒரு பெரியார். அவருடைய பெயர் சாந்தசிங். அவர்புரிந்துள்ள சாதனைகள் நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்க வேண்டும்.



ஆறுதலும், உதவியும் பெற்ற குடும்பங்களில் ஒன்று

பஞ்சாப் மாநிலத்தில் காருவான் கிராமம் சற்றுப் பெரிதுதான். இக்கிராமத்தின் ஜனத்தொகை 2,000. இந்தக் கிராமம் மிகவும் புண்ணியம் செய்தது சேவா உணர்ச்சி கொண்ட சாந்தசிங் என்ற இந்தத் தொண்டரின் சேவை, இக் கிராம மக்களுக்குக் கிடைத்ததே பெரும் பாக்கியம்தான். சாந்தசிங் ராணுவத்தில் கேப்டன் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். ராணுவத்தில் சிப்பாயாகச் சேர்ந்து, கேப்டன் பதவி வரையில் உயர்ந்தவர். போர்ப் படையில் கல்விப் பிரிவில் பணியாற்றினர். இரண்டாவது மகாயுத்தத்தின்போது, சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும் நம்முடைய போர்வீரர்களை தோட்டவேலை, விவசாய வேலை, கூட்டுறவுச்சங்கங்கள் நடத்தல் போன்ற துறைகளில் அமர்த்தி, அவர்களைப் பாடுபடச்செய்தார். இந்த அனுபவம், பிறகாலத்தில், அவருக்கு கிராமப்புனருத்தாரண பணியில் ஈடுபடும்பொழுது, பெரிதும் உதவியாக இருந்தது.

"நீங்களோ போர்ப்படையில் இருந்தவர், கிராமத் தொண்டின் வேலை எப்படி உங்களுக்குப் பிடிக்கிறது ? என்று நான் அவரைக் கேட்டேன். "ஏன் இரண்டும் ஒன்று தானே. நான் ஆசிரியத் தொழில்தானே அப்பொழுதும் செய்து கொண்டிருந்தேன். அதே வேலையைத்தான் இப்பொழுதும் கிராம மக்களுக்குச் செய்கிறேன்" என்று உடனே பதில் சொன்னர் அவர்.

கிராம மக்களுக்குச் சேவை புரிவதிலே தனி இன்பம் காண்கிருர் சாந்தசிங். காருவான் என்ற அந்தக் கிராமத்தில் அவர் எவ்வளவோ சாதனைகளைப் புரிந்துளளார். நகர வாழ்க்கையின் தடபுடல் போலி ஆடம்பரம், அவசரம் ஆகியவை பிடிக்காமல், கிராம வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அவர்செய்துள்ள ஆக்கப்பணிகள் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

கிராமத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ன, பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் என்ன, சுகாதார முறையில் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள குடி நீர்க் கிணறு என்ன, எல்லாம் அவருடைய ஆர்வத்தினுல் கிராமத்தில் உண்டாகியுள்ளன. தெருக்கள் எல்லாம் சரளை போட்டு சுத்தமாக உள்ளன. கிராமத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் பள்ளி செல்கின்றனர். சிறு ஆரம்பப் பள்ளியாக இருந்த பள்ளி, இன்று உயர்நிலைப்பள்ளியாக காட்சி அளிக்கிறது. 25,000 ரூபாய் செலவில் பள்ளிக்கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளது. கிராமத்திற்கு மின்சாரம் வந்து விட்டது. வீட்டில் மின்சாரம், தெருக்களில் மின்சார விளக்குகள், மின்சார சாதனங்கள் என்று கிராமமே ஒளி பெற்றுத் திகழ்கிறது. எல்லாம் சாந்தசிங்கின் அற்புத முயற்சியின் விளைவுதான்

கிராம மக்களுடன் ஆலோசனை.



உணவு உற்பத்தியில் அவர் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். கிராமத்தில் எல்லோரும் பொறுக்கு விதைகளை உபயோகிக்கின்றனர். தரமான விவசாயக் கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுக் கடைகளிலிருந்து போதிய உரங்களும், பூச்சு மருந்துகளும் கிடைக்கின்றன. கூட்டுறவுச் சங்கத்தில் 260 பேர் உறுப்பினராக உள்ளனர். வழங்கப்பட்ட மூலதனம் 10,000 ரூபாய். 19,000 ரூபாய் அங்கத்தினர்கள் சேமிப்பு பணமாகப் போட்டுள்ளனர். 17,000 ரூபாய் வரையில் அங்கத்தினர்களுக்குக் கடனுக வழங்கப்பட்டுள்ளது. ஆனுல், இதற்காக சங்கம் ஒரு நயா பைசா கூட, அரசாங்கத்திடமிருந்து பெறவில்லை.

சீன ஆக்கிரமிப்பின்போது, இந்தக் கிராமம் மகத்தான பணி புரிந்துள்ளது. சாந்த சிங், மாஜி ராணுவத்தினர். கேட்க வேண்டுமோ ? தங்க நகைகள் தவிர, 6,500 ரூபாயை, இக்கிராமம், தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கியுள்ளது.

கிராமத்தின் வழிகாட்டி சாந்தசிங் ; காருவான் கிராம மக்களின் தேவைகளைக் கவனிப்பவராக. கிராமத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் பாடுபடும் தொண்டராக, கிராம மக்களின் வழிகாட்டியாக, ஆசானுக, அவர் விளங்குகிருர்.

(Reproduced from an article appeared in "Panchayati Raj" dated July, 1963).





# பாரத நாட்டு மாதரசீகள்

### அன்னை கஸ்தூரிபாய் காந்தி

[திரு வெ. சாமிநாத சர்மா]

[நமது நாட்டுப் பண்பாட்டின் கலங்கரை விளக்கு நமது தாய்க்குலம். நாட்டின் வரலாற்றை உருவாக்கிய மாபெருந்தலைவர்களை ஈன்றெடுத்த மாதரசிகள் பலர் அவதரித்த புண்ணியத் திருநாடு பாரதநாடு. சமூகம்வாழ, மாதர் குலம் ஆற்றியுள்ள நல்ல தொண்டுகளை யார்தான் மறக்க முடியும் ? வரலாற்றுப் புகழ் படைத்துள்ள பாரத நாட்டு மாதர்களின் வாழ்க்கை வரலாறுகளை, சிறப்பியல்புகளை, சின்னஞ்சிறு கட்டுரைகளாக, தொடர்ந்து வெளியிட, முடிவு செய்துள்ளோம். பண்பட்ட முதுபெரும் எழுத்தாளர் திரு வெ. சாமிநாதசர்மா அவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். 'காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்' என்ற தொடர் கட்டுரையை 'கிராம நல'த்தில் எழுதியவர். அன்னை கஸ்தூரிபாய் பற்றி அவர் எழுதும் இக்கட்டுரையுடன், இக் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது. பெண்கள், குறிப்பாக மாணவிகளுக்கு, இக்கட்டுரைகள் பெரிதும் பயன்படும் என நம்புகிறோம். —ஆசிரியர்.]

காந்தியடிகளும் அவருடைய வாழ்க்கைத் துணைவியாராக அமைந்த கஸ்தூரிபாய் அம்மையாரும் சம வயதினர்; இருவரும் ஒரே வருஷத்தில்—1869-ம் வருஷத்தில் பிறந்தார்கள். ஏறக்குறைய பதின்மூன்ருவது வயதில் இல்லற வாழ்க்கையைத் தொடங்கினூர்கள். சுமார் அறுபத்திரண்டு வருஷகாலம், இந்த இல்லற வாழ்க்கை நடைபெற்றது. 1944-ம் வருஷம், அம்மையார் அடிகளாரைத் தனியராக்கி விட்டுத் தெய்வநிலை எய்தினூர். அதற்குப் பிறகு சுமார் நான்கு வருஷங் கழித்து, 1948-ம் வருஷம் அடிகளாரும் அந்த நிலைக்குச் சென்றுவிட்டார். இருவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தனர். வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டனர். இருவருடைய தொண்டும், தியாகமும் பாரத மக்களின் இதயத்தில் அழியாத முத்திரையிட்டிருக்கின்றன.

### இல்லற வாழ்க்கை

அம்மையாரும் அடிகளாரும் சேர்ந்து நடத்திய அறுபத்திரண்டு வருஷ கால இல்வாழ்க்கையில், இருவரும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்ததெல்லாம், சுமார் இருபது வருஷ காலந்தான். இதற்குப் பிறகு, சுமார் நாற்பது வருஷ காலம், இருவரும் ஒருவரையொருவர் நன்கறிந்துகொண்ட இரண்டு நண்பர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். "சோதனைக்குட்பட்டுத் தேறிய நண்பர்கள் நாங்கள்" என்று தமது சுய சரிதத்தின் ஓரிடத்தில் குறிப்பிடுகிருர் காந்தியடிகள்.

நண்பர்கள் என்ற உறவு முறையில் இருவரும் வாழத் தலைப்பட்டபிறகு தான், ஒருவர் புகழுக்கு மற்ருெருவர் அடிகோலியவர்களானூர்கள். கஸ்தூரிபாய் 'பா' ஆனூர். காந்தி 'மகாத்மா' ஆனூர். கஸ்தூரிபாயினிடத்தில் 'பா'வைக் கண்டார் காந்தி ; காந்தியினிடத்தில் 'மகாத்மா'வைக் கண்டது உலகம்.

### தாய்மையின் இருப்பிடம்

'பா' என்ருல் தாய் என்று அர்த்தம். கஸ்தூரிபாய் தாம் பெற்றெடுத்த நான்கு பிள்ளைகளுக்கு மட்டும் தாயாக இருக்கவில்லை. 'பாரத மக்களின் தந்தை' என்று போற்றப்பட்ட காந்தியடிகளுக்கும் தாயாயிருந்தார். 'பா' என்றே அவரை அழைத்து வந்தார் காந்தியடிகள். அவரிடத்தில் தாய்மையை கண்டது தான் இதற்குக் காரணம்.

கஸ்தூரிபாய்க்கு, அதிகமாக எழுதபடிக்கத் தெரிந்திருக்கவில்லை. சிரமத்தின்பேரில் சாதாரண கடிதங்களை எழுதிக் கொள்ளவும், எளிய குஜராத்தி மொழியைப் புரிந்து கொள்ளவுமே அவருக்குத் தெரிந்திருந்தது. இதைக் காந்தியடிகள் ஒரு குறையாகக் கருதவில்லை. அவரிடத்திலுள்ள ஓர் அருங்குணத்தையே பெரிதாகக் கருதினூர். "அவளிடம் ஒரு பெரிய அருங்குணம் மிகுந்த அளவில் இருக்கிறது. ஹிந்து மனைவிகள் பெரும்பாலாரிடம் ஓரளவுக்கு இருக்கும் குணமே அது. அதாவது, விரும்பியோ விரும்பாமலோ, அறிந்தோ அறியாமலோ என் அடிச்சுவட்டைப்பின் பற்றி நடப்பதே தனக்குப் பாக்கியம் என்று அவள் கருதி வந்திருக்கிருள்", என்று ஓர் இடத்தில் கூறுகிருர் காந்திஜி.

### மகாத்மாவின் அடிச்சுவட்டில்..

காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது என்ருல் என்ன? அன்ருட வாழ்க்கையில் சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப்பிடிப்பதுதான். இது எவ்வளவு கடினம் என்பது, கடைப்பிடித்துப் பார்த்தால் தான் தெரியும். ஆனுல், கஸ்தூரிபாய் சுலபமாகக் கடைப்பிடித்து வந்தார். இதனுல்தான் காந்தியடிகளும் இவரும் ஒன்றுகி விட்டார்கள். "பா" இல்லாமல் வாழ்க்கையை என்னுல் கற்பனை செய்துகூடப் பார்க்க முடிய

வில்லை. என்னிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகவே அவள் இருந்தாள்" என்று காந்தியடிகள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்.

கஸ்தூரிபாய் அம்மையார், குடும்ப வாழ்க்கையிலோ, தேசப் பணியிலோ எதிலும் தலைமை தாங்கவில்லை. தமக்கென்று ஒரு ஸ்தானத்தை வகுத்துக்கொள்ளவில்லை. என்றாலும், காந்தியடிகளுக்கு நிகரான புகழ் இவருக்கு ஏற்பட்டிருந்தது. இதற்குக் காரணம், "அவள், தன்னை என்னிலே இழந்து விடக்கூடிய சக்தியைப் பெற்றிருந்தாள்" என்று கூறுகிறார் அடிகளார். அதாவது அம்மையார், தம்மை வேறாகக் கருதாமல், காந்தியடிகளின் ஓர் அம்சமாக, ஓர் அங்கமாகக் கருதி வந்தார். தமக்கென்று ஒரு வாழ்க்கையை வகுத்துக் கொள்ளவில்லை. காந்தியடிகளின் வாழ்க்கையோடு தம் வாழ்க்கையை இணைத்துக்கொண்டு விட்டார். எப்படி காந்தியடிகள், பொதுநலப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டாரோ, அப்படியே கஸ்தூரிபாய் அம்மையாரும், தம்மை காந்தியடிகளிடத்தில் ஈடுபடுத்திக் கொண்டுவிட்டார்.

## தாய்மை என்பது என்ன ?

தாய்மை என்பது ஒரு பட்டமல்ல, பதவியல்ல, கௌரவமல்ல. அது மகத்தான பொறுப்பு. அதில் உரிமையைக் காட்டிலும், கடமைதான் அதிக பங்கு பெறுகிறது. அது பொறுமையின் வடிவம். அன்பின் எல்லை, தியாகத்தின் விளக்கு, நிதானத்தின் வழிகாட்டி, இத்தனையுமாக இருந்தார் கஸ்தூரிபாய்.

இல்லற வாழ்க்கையின் ஆரம்ப திசையில் கஸ்தூரிபாய் அம்மையார், கணவனாரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து வரவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார். அப்பொழுது இவர் பட்ட சிரமங்கள் பல. ஆயினும், இவர் பொறுமையை இழக்கவில்லை.

ஒருசமயம், தென்னாப்பிரிக்காவில் குடித்தனம் நடத்தி வந்தபோது, அழுக்கு நிறைந்த வேறொருவருடைய மட்பாண்டத்தைக் கழுவ வேண்டுமென்று அடிகள் அம்மையாருக்குக் கூறினார். அம்மையார் மறுத்து விட்டார். கோபம் வந்து விட்டது அடிகளுக்கு. அம்மையாரை வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட முயன்றார். அப்பொழுது அம்மையார், கண்களில் நீர்வடிய "இப்படியும் உங்களுக்கு சுய உணர்வு அற்றுப்போய்விட வேண்டுமா? எனக்குப் போக்கிடம் எங்கே இருக்கிறது? எனக்குப் புகலிடம் அளிப்பதற்கு இங்கே என் பெற்றோர்களாவது உறவினர்களாவது இருக்கிறார்களா? நான் உங்கள் மனைவி என்பதனால் அடித்தாலும் உதைத்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டியது தான் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் காந்தியடிகளுக்கு கோபம் நீங்கிவிட்டது. "உண்மையில் நான் வெட்கமடைந்தேன்" என்கிறார். "சகிப்புத்தன்மையில் இணையில்லாத சக்தியினால் எப்பொழுதும் வெற்றிபெறுகிறவள் மனைவியே" என்று கஸ்தூரிபாய்க்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பது போல், இன்னோரிடத்தில் கூறுகிறார்.

## அசைக்க முடியாத நெஞ்சுறுதி

கஸ்தூரிபாயைப் போல் நெஞ்சுறுதி படைத்தவரைக் காண்பது அரிது. 1930–ம் வருஷம் உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது, அம்மையார் சிறைத்தண்டனைப் பெற்று 'சி' வகுப்புக் கைதியாக வைக்கப்பட்டார். அதைப்பற்றி சிறையிலிருந்த காந்தியடிகளிடம் சர்தார் பட்டேல் பேசிக்கொண்டிருந்தபொழுது "அகிம்சையின் சரியான உருவமே 'பா'. வேறு எந்தப் பெண்ணின் முகத்திலும் அத்தகைய அகிம்சையை நான் கண்டதில்லை. 'பா' வின் அடக்கமும் எளிமையும் பிரமிப்பைக் கொடுக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

கஸ்தூரிபாய் அம்மையார், எளிய வாழ்க்கையையே நடத்தி வந்தார். காந்தியடிகளின் விருப்பத்திற்கிசையவோ, அவருடைய கட்டாயத்தின் பேரிலேயோ, இந்த வாழ்க்கையை அவர் மேற்கொள்ளவில்லை. இல்வாழ்க்கையின் ஆரம்ப திசையில், உடை, நகை முதலியவற்றால் அவருக்கு ஓரளவு பற்று இருந்தது உண்மை. ஆனால் பின்னர் அதை, கணவனாரின் போக்கறிந்து, தாமே சுயமாக ஒழித்துவிட்டார்.

## எளிய வாழ்வு-இன்பத்தின் உறைவிடம்

எளிய வாழ்க்கையில்தான் இனிமை இருக்கிறது, மன நிம்மதி பெறமுடியும், அஞ்சாமை உண்டாகும். நம்முடைய தேவைகளை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்துக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் சுதந்திரமிழந்தவர்களாகிறோம். அச்சத்திற்கு ஆட்படவேண்டியவர்களாகிறோம். நம்மிடத்திலே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கீழான இச்சைகளெல்லாம் மேலுக்கு வந்து நம்மீது அதிகாரஞ் செலுத்தத் தொடங்குகின்றன. இந்த மாதிரியான நிலைமைகளிலிருந்து நாம் தப்பவேண்டுமானால், எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுதல் அவசியமாகும். இதைக் கஸ்தூரிபாய் அம்மையார் நன்கு உணர்ந்திருந்தார்.

தவிர, ஒருவர் உடுத்தும் உடையினாலோ, அணியும் நகைகளினாலோ, செலுத்தும் வாகனங்களினாலோ அவருக்குப் பெருமை உண்டாவதில்லை. அவர் நடத்தும் தூய வாழ்க்கையைக் கொண்டுதான், அவருக்குப் பெருமை ஏற்படுகிறது. தூய வாழ்க்கை என்றால் என்ன? பிறருடைய துன்பத்தைத் துடைப்பதற்காக வாழ்கின்ற வாழ்க்கைதான்–அப்படித்துடைத்து–அதில் இன்பங்காண்கின்ற வாழ்க்கைதான் தூய வாழ்க்கை. கஸ்தூரிபாய் அம்மையார் இத்தகைய வாழக்கையையே நடத்தி வந்தார்.

தமது கணவனார், தேசத் தலைவர், உலகம் போற்றும் நாயகர் என்பதற்காக கஸ்தூரிபாய் அம்மையார் சிறிதும் கர்வம் கொண்டது கிடையாது. உண்மையில், அடிகளாரின் புகழ் ஏற ஏற, அம்மையாரின் அடக்கமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. தம் கணவனாரின் சேவைகளைப் புகழ்ந்து அவர் தற்பெருமையாக ஒரு வார்த்தை கூடச்



சொன்னது கிடையாது. மனிதப் பிறவி எடுத்த யாரும் பிறருடைய நலனுக்காக உழைக்கக் கடமைப்பட்டவர் என்ற பேருண்மையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். தவிர, தம் கணவனாருக்குச் சேவை செய்வதில், உலகத்திற்குச் சேவை செய்கின்ற திருப்தியை அவர் அடைந்து வந்தார்.

தவிர கஸ்தூரிபாய் அம்மையார், தாம் ஒரு தலைவருடைய மனைவி என்பதற்காக யாரிடமிருந்தும் எந்தவிதமான சலுகையையும் எதிர்பார்த்ததில்லை; பெற்றதும் கிடையாது. உண்மையில் அவர், மற்றவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களைக் காட்டிலும் அதிகமான பொறுப்புக்களை ஏற்று நிர்வகித்துவர வேண்டியதாயிருந்தது. அப்படியே திறம்பட நிர்வகித்தும் வந்தார்.

## விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்றல்

சேவா கிராம ஆசிரமத்திற்கு விருந்தினர் பலர் அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருப்பர். இவர்களை உபசரிக்க வேண்டியது, ஆசிரமத்தில் குடும்பத்தோடு நிரந்தரமாக வசிக்கின்றவர்களுடைய பொறுப்பாக இருந்தது. எனவே, வரும் விருந்தினர்களை ஒரு குடும்பத்திற்கு இத்தனை பேர் என்று பகிர்ந்துகொண்டு உபசரிப்பது வழக்கம். கஸ்தூரிபாய் அம்மையாரும், மற்றவர்களைப்போல் ஒரு தனிக் குடும்பம் நடத்தி வந்தார். வரும் விருந்தினர்களில் அதிகமான பேரை உபசரிக்கின்ற பொறுப்பு இவருடையதாயிருந்தது. அதாவது, மற்ற குடும்பத்தினருக்கு விருந்தினர்களைப் பகிர்ந்து கொடுத்ததுபோக, எஞ்சி நிற்கும் விருந்தினர்களை உபசரிக்கும் பொறுப்பை தாமே ஏற்றுக் கொள்வார். இப்படி எஞ்சிநிற்கும் விருந்தினர், மற்ற குடும்பத்தினருக்கு ஏற்பட்ட விருந்தினரைக் காட்டிலும் அதிகம் பேராகவே இருப்பர். எத்தனை பேராயிருந்தாலும், அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, உபசரிப்பார் அம்மையார். இதில் இவர் சிறிதுகூட அலுப்புக் காட்டிக்கொண்டது கிடையாது. அடிகளாரே அநேக சந்தர்ப்பங்களில் இவருடைய உபசரிப்பு முறையைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார்.

## வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கை

உலகத்தார் காந்தியடிகளை மகாத்மா என்று போற்றி வந்ததற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. ஆனால் ஒரு முக்கியமான காரணம், மேலே சொன்னபடி, அவர் வாழ்வாங்கு வாழ்ந்ததுதான், அதாவது இல்லையென்று சொல்லாத இல்லாளோடு அறத்தின் வழிநின்று வாழ்க்கையை நடத்தி வந்ததுதான். இதற்குத் துணையாய் நின்ற இல்லாள் யார் ? கற்பெனும் திண்மையுடைய கஸ்தூரிபாய் அம்மையார் தானல்லவா ? அந்த அம்மையார் ஒருவர் காந்தியடிகளோடு இருந்ததால், காந்தியடிகளுக்காகவே இருந்ததால், அவர், அந்த காந்தியடிகள் எல்லாம் உடையவராக இருந்தார். அதனால் எல்லாருக்காகவும் வாழ அவரால் முடிந்தது. "இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை" என்பது திருக்குறள்.

இந்தமாதிரியான சில உண்மைகளை நமது தாய்மார்கள், கஸ்தூரிபாய் அம்மையாரின் வாழ்க்கையிலிருந்து தெரிந்துகொண்டு, அவற்றைப் பின்பற்ற முயலவேண்டும். அது மட்டுமன்று; அடிகளார் கூறும் பின்வரும் நல்லுரைகளையும் நாம் பின்பற்ற வேண்டும் :—

"பாரதமாதாவின் புதல்விகள், விஷய ஞானமுடையவர்கள். எனவே, அவர்கள் மேலைநாட்டை, அதாவது மேலைநாட்டு வாழ்க்கைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் அப்படியே பின்பற்றக்கூடாது. அந்த மேலைநாட்டாருடைய வாழ்க்கை முறைகளும் பழக்கவழக்கங்களும், அவர்களுக்கமைந்த சூழ்நிலைக்கு ஏற்றவையே தவிர, நமக்கல்ல. நம்முடைய சகோதரிகள், இந்தியாவின் இயல்புக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற முறைகளையே தெரிந்தெடுத்துப் பின்பற்ற வேண்டும். மற்றும் நமது சகோதரிகள், இந்தியாவினுடைய பரம்பரையான கலாச்சாரத்தின் நல்ல அம்சங்களை ஏற்றுப் பின்பற்றுவதிலும், காலத்திற்கொவ்வாத அம்சங்களை அடியோடு நிராகரிப்பதிலும், உறுதி காட்ட வேண்டும். நமது கலாச்சாரத்தை மேலும்மேலும் தூய்மைப்படுத்திக் கொண்டு போவதிலும், அதனை நிதானப் போக்குடையதாகச் செலுத்திக்கொண்டு போவதிலும், அதனைக் கட்டிக் காப்பதிலும், நமது சகோதரிகளின் கடமை மிகப் பெரிது".

---

(15-ம பக்கத் தொடர்ச்சி)

"உலகில் பட்டினியால் வாடும் மக்களுக்காக, தாமும் ஜனாதிபதி கென்னடியும் முற்றிலும் வேறான நிலைகளிலிருந்து ஒரே மாதிரி வேண்டுகோளை விடுக்கிறதாக" கூறினார் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன். "ஜனாதிபதி கென்னடி, உணவு உபரியாக இருக்கும் நாட்டின் பிரதிநிதியாக இருக்கிறார். நான், உணவு பற்றாக்குறையாக இருக்கும் நாட்டின் பிரதிநிதியாக இருக்கிறேன்" என்றார் அவர்.

## ஜனாதிபதி கென்னடியின் வரவேற்புரை

ஜனாதிபதி கென்னடி தமது வரவேற்புரையில், பசிப்பிணி ஒழிப்பு இயக்கத்திற்கு அமெரிக்காவின் முழு ஆதரவையும் தருவதாக உறுதி கூறினார். "பட்டினியை விரட்டி ஒழித்துக்கட்ட உலக வியாபகமான பணியொன்றைச் செய்வதற்கு மீண்டும் உறுதி கூற நாம் இங்கே கூடியுள்ளோம்......உலகிலிருந்து பட்டினியை ஒழிக்க நமக்குத் திறமை இருக்கிறது; ஆற்றல் இருக்கிறது. நமக்குத் தேவையாக இருப்பது, இதைச் செய்வதற்கு வேண்டிய விருப்பம் மட்டுமேயாகும்", என்று அழகாகக் குறிப்பிட்டார்.

## முக்கிய நோக்கம்

இந்த உலக உணவு மகாநாட்டின் முக்கிய நோக்கம் : உலகின் பல பகுதிகளில் இருக்கும் பசிப்பிணியையும், ஊட்டக் குறைவையும் போக்குவதற்கு சர்வதேச முயற்சியை இன்னும் விரிவானதாகவும் திறம்படப் பயன் தரக்கூடியதாகவும் ஆக்குவது; வளர்ச்சி பெறும் நாடுகளில் உணவு உற்பத்தியையும் பயன்படுத்துவதையும் எப்படிச் சீர்திருத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிவது என்பவையாகும்.

தெற்கு திருநெல்வேலி மாவட்டத்தில்

# கிராமத் தொழில் வளர்ச்சி

(திரு டி. வி. வெங்கட்ராமன், ஐ. ஏ. எஸ்., பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குநர், தமிழ்நாடு அரசாங்கம்.)

"கிராமத் தொழில் வளர்ச்சி பெறவேண்டும். கிராம வளம் செழிக்க கிராமத் தொழில் பெருக வேண்டும்" என்று நாம் சொல்லும் பொழுதெல்லாம், நம்மை ஏதோ ஓர் அதிசயப் பொருளைப் பார்ப்பதைப் போல் பார்க்கின்ற ஒரு சில பெரிய மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் ஒன்றும் விஷயம் தெரியாதவர்கள் அல்ல. "கிராமத் தொழிலா? அவைகளுக்கு எதிர்காலம் உண்டா? எதிர்காலத்தில் அவை நிலைத்து நிற்குமா? அல்லது தரத்தில்தான் அவை மேலோங்கி நிற்க முடியுமா?" என்ற கேள்விகளை, சந்தேகமான வினாக்களை, அவர்கள் நம்மிடையே தொடுப்பது போல் இருக்கிறது, அவர்களுடைய சந்தேகப் பார்வை. இன்றைய பொருளாதாரத்தில், கிராமத் தொழில்களுக்கு இடமே கிடையாது என்று சிலர் ஒரேயடியாகப் பிரச்சினைக்கு முடிவு கூட கண்டு விடுவார்கள்.

### பழைய நிலை

சில நூற்றாண்டுகளுக்கு முன், நம்முடைய கிராமங்களில் பெரும்பாலானவை தன்னிறைவு பெற்று விளங்கின. அப்பொழுது, கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொருட்களைச் செய்து தருகின்ற கைவினைஞர்கள், தச்சர், நெசவாளர், சக்கிலியர் மற்ற வகையினர் என்று கிராமப்புறங்களில் இருந்தார்கள். அவர்களுடைய வருவாய் ஒன்றும் பிரமாதமானதல்ல. சம்பளம் ஒன்றுமில்லாமல், அவர்களில் பெரும்பாலோர், அவரவர்கள் தொழில் சார்புள்ள குடும்பங்களிலிருந்து, தங்களுடைய ஊதியத்தை அடைந்து வந்தனர். ஆனால், அவர்களுக்கு வேலை இருந்தது. செய்த வேலைக்கு ஊதியம் கிடைத்தது. அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியிருந்தது.

### அந்நியர் பிரவேசம்—அழிவின் ஆரம்பம்

வெள்ளைக்காரர்கள் நம் நாட்டில் காலடி எடுத்து வைத்தார்கள். நவீனப் போக்குவரத்து வசதிகளும் கூடவே வந்தன. பழங்கால முதல் நிலவி வந்த கட்டுக்கோப்பான கிராமப் பொருளாதாரம் சிதறத் தொடங்கியது. நாடுபூராவும் கிராமக் கைவினைஞர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. "மறுபடியும் இந்தக் கிராமத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டும்; காலங் காலமாக வளர்ந்து வந்துள்ள அவர்களுடைய கைத்திறமை அழிந்துவிடக் கூடாது. அந்தத் திறமை மேலும் தொழில் நுட்ப முறையில் வளர்ச்சி பெற்று, அவர்களுடைய வருவாய் பெருகவேண்டும்." இன்று நாம் இந்த லட்சியத்திற்காகத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இது ஒரு பெரிய வேலை. அவ்வளவு சுலபத்தில் முடியக் கூடியது அல்ல. நம் சக்தி, போதிய பணம் எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த லட்சியத்தை அடைவதில் நமக்கு வேண்டிய தளராத உறுதி—லட்சிய நோக்கு எல்லாம் நம்மிடையே வேண்டும். அப்பொழுது தான், எதிர்காலத்தில் நம் நாட்டிலுள்ள கிராமக் கைவினைஞர்களைப் பயன்தரத் தக்க, உற்பத்தி காணுகின்ற தொழில்களில் அமர்த்த முடியும். ஆனால், இந்தத் துறையில் பார்க்கும்பொழுது, இந்த வேலை ஒன்றும் அப்படியே ஒரே இடத்தில் மட்டும் ஏற்படுகின்ற வளர்ச்சியாக இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுத்த பிறகு, அவர்களுடைய வருவாயைப் பெருக்க வேண்டும் என்றால், அவர்கள் சார்ந்துள்ள தொழில், உள்ள தொழில் நுட்பத் தரத்தினையே நாம் மேலும் பெருக்க வகை செய்தாக வேண்டும். கிராமக் கைத் தொழில் வளர்ச்சி என்ற நிலையில், இப்படி செய்வது மிகவும் அவசியம் ஆகும். வேறுமாதிரி நினைப்பதே சரியில்லை. இந்தப் பாடத்தைத்தான் ஜப்பான் நாட்டில் ஏற்பட்டுள்ள கிராமத் தொழில் வளர்ச்சி நமக்கு சுட்டிக் காட்டுகிறது. அந்த உதாரணத்தைப் பின்பற்றி நாம் அதிகப் பயன் பெறவேண்டும்.

### முதலில் செய்ய வேண்டிய பணி

ஆனால், முதலில் எந்த வேலை செய்யவேண்டுமோ, அதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். இன்றைய நிலையில், நம் கிராமங்களில், பெரும்பாலான தொழிலாளர்கள் கிராமத் தொழில் உற்பத்தியில் கையாளுகின்ற முறைகள் மிகவும் பழமையானதாகவும், சிரமமானதாகவும் உள்ளன. அவர்கள் தங்களுடைய பொருட்களை, அவைகளுக்கு நல்ல மார்க்கெட் இருந்தும், மத்தியில் உள்ள தரகர்களிடமும், வியாபாரிகளிடமும் மிகவும் குறைந்த விலையில் விற்று விடுகின்றனர். அவர்களுக்கு தரமான நவீன சாதனங்களையும் யந்திரங்களையும் அளிக்க வேண்டும். அதனால் அவர்களுடைய உற்பத்தித் திறன் பெருகும். இது நம்முடைய அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும். உற்பத்தி பெருகினால் மட்டும் போதாது. உற்பத்தி செய்த பொருட்களை அவர்கள் வியாபாரிகளிடமும், இடையில் உள்ள தரகர்களிடமும் மிகவும் குறைந்த விலைக்குக் கொடுக்கின்ற நிலை உள்ள வரையில், அவர்கள் இந்த அதிகப்படியான உற்பத்தியின் பயனை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. ஆகவே, கிராமக் கைத்தொழில் பொருட்களை உற்பத்தி

[28-ம் பக்கம் பார்க்க.]







### சத்துள்ள உணவே சரியான உணவு

கிராம மக்கள், தமக்குக் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களில் உள்ள சத்துப் பொருட்களை வீணாக்காமல், நல்ல உணவுப் பழக்கங்களை மேற்கொள்ளும் வகையில் நிறைவேற்றப்பட்டு வருவது, தமிழ்நாடு அரசாங்கத்தின் "விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம்". (Expanded Nutrition Programme) அந்த திட்ட சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளை, படங்கள் விளக்குகின்றன.











கிராம மக்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையிலும், அவர்களின் தேவைகளுக்கும் வருவாய்க்கும் உதவும் வகையிலும் செலவிட—கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களை, தமிழ்நாடு அரசாங்கம் வகுத்து, நிறைவேற்றி வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் பழக்கத்தில் உள்ள தொழில்களுக்குப் பொருளுதவி செய்து விரிவுபடுத்துவது அவசியமாகும். அந்த வகையில், தெற்கு திருநெல்வேலி மாவட்டத்தில், கிராமத் தொழில் அடைந்துள்ள வளர்ச்சியை, பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநர் திரு டி. வி. வெங்கட்ராமன், ஐ.எ.எஸ். அவர்கள் பார்வையிட்டார். சிறப்பாக, நாங்குநேரி, அம்பாசமுத்திரம், வள்ளியூர், கடையம், தென்காசி, செங்கோட்டை, சேரன்மாதேவி ஆகிய பஞ்சாயத்து யூனியன்களுக்கு விஜயம் செய்து, கிராமத் தொழில் வளர்ச்சியில் அவை அடைந்துள்ள முன்னேற்றங்களைக் கண்டு களித்தார்.

(விவரம் 21ம் பக்கக் கட்டுரையில் காண்க)



# கிராம வளம் செழித்தோங்க — கிராமத் தொழில்கள் வளர்ச்சி







1. சென்னை பச்சையப்பன் கல்லூரி விளையாட்டு வெளியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை அணிவகுப்பை, தேசிய மாணவர் படைகளின் தலைமை இயக்குநர் மேஜர் ஜெனரல் விரேந்திரசிங் பார்வையிடுகிறார்.



1

2. திருவையாறு பஞ்சாயத்து யூனியன் கண்டியூரைச் சேர்ந்த கிராமத் தொண்டர் படையினர் உழைப்பு தானம் செய்த காட்சி. தொண்டர் படையுடன், தமிழ் நாடு சட்டசபை சபாநாயகர் திரு. செல்ல பாண்டியன் காணப்படுகிறார்.



2

3. திருச்சி மாவட்டம் சோரத்தூர் கிராமத் தொண்டர்படையினர், இணைப்புப் பாதை அமைக்கின்றனர். துறையூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. ரா. கஸ்பர் அவர்களும் இப்பணியில் கலந்து கொண்டார்.



3

1. உதகமண்டலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மஞ்சூரில் கிராமத் தொண்டர் படைத் தளபதிகள் காய்கறி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

5. கோவை மாவட்டம், தாராபுரம் பஞ்சாயத்து யூனியனில் நடந்த கிராமத் தொண்டர் படை பயிற்சி முகாமில், மாவட்ட போலீஸ் அதிகாரி திரு. முருகேசன், ஐ.பி.எஸ்., அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார்.



4



5

# உழைப்பின் வெற்றி

## கோட்டூர் காட்டும் வழி

திரு. வி. கருப்பன், எம். ஏ., தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி).

[போக்குவரத்துக்கு லாயக்கில்லாத நிலையில் கிடந்த பாதை. பாதையின் நீளம் 5 மைல். இந்தப் பாதையை அகலப்படுத்தி, செப்பனிட்டால், விளையும் பலன் மகத்தானதாக இருக்கும் என்பதை ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் உணர்ந்தார். மக்களைக் கேட்டார் "உத்தரவிடுங்கள்" என்றனர் மக்கள் உத்தரவு பிறந்தது. கமிட்டி அமைக்கப்பட்டது. மக்கள் சக்தி திரண்டது. அரசாங்கத்தின் பணம் ஒரு காசுகூடக் கிடையாது. 15,000 மக்கள், தாமே முன்வந்து, தம் உழைப்பை நல்கினர். ஆறு மணி நேரத்தில், ஐந்து மைல் நீளமுள்ள பாதை அகலப்படுத்தப்பட்டு, செப்பனிடப்பட்டுவிட்டது. நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியிலே, கோட்டூர் பஞ்சாயத்து யூனியனிலே, இந்த அதிசயம் நடைபெற்றிருக்கிறது. கட்டுரையைப் படியுங்கள். —ஆசிரியர்.

நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுவது தஞ்சை. அன்னை காவேரியின் கருணையால், ஏறக்குறைய 14 லட்சம் ஏக்கர்கள் தண்ணீர் வசதி பெற்றுள்ளது. "சோழ நாடு சோறுடைத்து" என்ற பெருமைக்குரிய தஞ்சை, உணவு உற்பத்தியை பல ஆண்டுகளாக பெருக்கிக் கொண்டிருக்கிறது. காவேரியின் கருணையால் நீர்வளம் பெருகினும், ஏறக்குறைய 3,000 சதுர மைல்கள் வளைந்து வளைந்து ஆறு ஓடுவதால் கால்வாய்களாகப் பிரிந்து பின்னிப் பின்னி போக்கு வரவுக்குப் பெரிதும் தடை ஏற்படுத்துகின்றது. போக்குவரவு, தஞ்சையில் ஒரு பெரும் புதிர். அநேக இடங்களிலே, சிறு பாலங்களும், பாலங்களும் கட்டப்பட்டிருந்தாலும், இன்னும் எவ்வளவோ இடங்களில் சிறுபாலங்களும், பாலங்களும், பாதைகளும் அமைத்தால்தான், போக்குவரவு எளிதாக இருக்கும். குறிப்பாக, கடலோரங்களில் உள்ள பகுதிகளில், தண்ணீர்த் தேக்கத்தினால் மழை காலங்களிலும், கடல்பெருக்கு காலங்களிலும் போக்கு வரவு மிகவும் கடினமான காரியம். வாய்க்கால் உடைப்பு, ஆற்றின் மண்சரிவு, தஞ்சை ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் வெகு சாதாரணமாக நிகழ்கின்றன. தஞ்சையின் பாதைகளிலே ரோடு முழுமையும் தார் ரோடாகவோ, ஜல்லி ரோடாகவோ, கப்பி ரோடாகவோ அமைக்காவிட்டால், பலமுள்ளதாகவோ, பயனுள்ளதாகவோ, போக்குவரவு வசதியுள்ளதாகவோ இருக்கும் என்பது மிக மிக அரிது. ஆனால், கப்பி ரோடு அமைக்கவும், தார்ரோடு அமைக்கவும், தஞ்சையில் வசதி மிகக்குறைவு. தஞ்சையின் பாதைகளுக்கு கப்பி தென்னார்க்காட்டில் இருந்தும், திருச்சியிலிருந்தும் பெற வேண்டியதிருக்கிறது. ஏறக்குறைய 35, 40 மைல்களுக்கப்பால் இருந்துதான் கல் ஜல்லிகளை பெற முடியும். இதனால் ரோடுகளைத் திடமாக அமைக்க முடியாமல் இருக்கிறது. இதன் காரணமாக, தஞ்சையில் உற்பத்தியாகும் நெல்லை வியாபார ஸ்தலங்களுக்கு அனுப்புவதற்கும், நெல் உற்பத்திக்கு தேவையான உழவுக் கருவிகள், உரம் முதலியவைகளை கழனிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் பெரும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக சொல்லப்போனால், ரயிலில் இருந்து வரும் ஒரு பிரயாணி ரயிலில் இருந்து இறங்கி, பஸ்ஸில் தார் ரோட்டில் சென்று கட்டை வண்டியில் ஆற்றின் கரை வழியே சென்று, படகுகள் மூலம் ஆற்றைக் கடந்து வயல்களுக்கிடையில் நடந்துதான் வீட்டைச் சேரவேண்டியிருக்கிறது.

### போக்குவரத்து—பெரிய பிரச்னை

கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் விளைபொருட்களிலுள்ள வித்தியாசம் 1 ரூபாயில் இருந்து 2 ரூபாய் வரை உண்டு. பட்டணங்களில் நெல் மூட்டை 20 ரூபாய் என்றால் கிராமங்களில் அதன் விலை 18 அல்லது 19 ரூபாயாகத்தான் இருக்கும். அந்த விலைக்கும், வாங்குவதற்கு ஆள் இல்லை. தஞ்சையில் நெல் ஒரே காலத்தில் விளைவதால், போக்குவரவு வசதியின்மை காரணமாக, நெல் விலை திடீரென்று சரிந்துபோவது சகஜம். இது விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. இவற்றையெல்லாம் தவிர்க்க நல்ல பாதைகளும், விரிவான பாலங்களும், மிகமிக அவசியம் என்று சொன்னால் அது மிகையாகாது.

தஞ்சையின் ரோடுகளுக்கான நீளத்தை தஞ்சையில் ஓடும் ஆறுகளின் கரைகளை அளந்தால் கண்டுவிடலாம். ஆறுகளின் கரைகளையே தஞ்சையில் ரோடுகளாக அமைத்து இருக்கிறார்கள். இந்தப் பாதைகளை ஓரளவுக்கு செப்பனிட்டும், திருத்தியும் வந்தாலும் இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் மிகமிக அதிகமாக இருக்கின்றன.

இது குறுகிய காலத்தில் முடியாது என்று சொன்னாலும், மக்கள் சக்தி இதை முடியச் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுடைய ஒத்துழைப்பும், விரும்பி உழைக்கும் தன்மையும் தூண்டிவிடப்பட்டு விட்டால், இந்த வேலை வெகுவிரைவில் முடிந்துவிடும்.

### முன்னாள் கதை—இன்றைய நிலை

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில், மக்கள் ஒத்துழைப்பில் ஆரம்பித்து இன்றுவரை பல வேலைகளும் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது ஒன்று, மன்னார்குடி–முத்துப்பேட்டை ரோடு அமைப்பு. இது சமுதாய அமைப்புத் திட்டத்தின் கீழே அமைக்கப்பட்ட ரோடுகளுக்கும், கிராமத் தொண்டர் படை மூலம் ஆக்கப்பட்ட ரோடுகளுக்கும் ஒரு புறத்திருப்பத்தை உண்டுபண்ணி இருக்கிறது; புத்துணர்ச்சியை ஊட்டி இருக்கிறது. இந்த ரோட்டின் பெரும் பகுதி கோட்டூர் பஞ்சாயத்து யூனியனில் ஓடுகிறது. இந்த ரோடு பாமினி ஆற்றின் இடது கரையில் 21 மைல் நீளம் செல்கிறது. மன்னார்குடியையும் முத்துப்பேட்டையும் இணைக்கிறது. இதன் வழியாய் சுமார் 30 ஆயிரம் ஜனத்தொகைகொண்ட 50, 60 சிறு கிராமங்கள் இணைக்கப்படுகின்றன. இதிலே 12 மைல் நீளம் நல்ல பாதை அமைந்திருக்கின்றது. இதிலே பஸ் வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றொரு 9 மைலில் 4 மைல் சுமாராக இருக்கின்றன, 5 மைல் நிச்சயமாக விரிவாகவும், பலமாகவும், திருத்தியும் அமைக்கப்படவேண்டும். இந்த 5 மைல் பாதையை புதுப்பிப்பதன் மூலம், ஏறக்குறைய 20 ஆயிரம் ஜனங்களைக்கொண்ட 20 கிராமங்களையும் பஸ் போக்குவரத்து வசதியின்மூலம் வியாபார ஸ்தலங்களுக்கு இணைக்க முடியும். கிராமத்தார்கள் இந்த ரோடுகள் வழியாக பஸ் போக்குவரத்து வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் பதில், நீங்கள் இந்தப் பாதையை இருமருங்கிலும் அகலப்படுத்தினால், மேற்படி வசதி செய்து கொடுக்கப்படும் என்பதே. கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அநேக முறை இதுபற்றி அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அவருக்கு அளிக்கப்பட்ட பதிலும் கிராமத்தார்க்கு அளிக்கப்பட்ட பதிலேதான்.

### கிராமத் தொண்டர் படை என்னும் வரப்பிரசாதம்

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டது. கிராமங்கள் தோறும் சிறு சிறு வேலைகளும் செய்யப்பட்டுவந்தன. பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு முருகையன் இந்த ரோட்டை அகலப்படுத்தும் வேலையை ஏன் தொண்டர் படையின் மூலம் செய்யக்கூடாது என்று யோசித்துக்கொண்டிருந்தார். பிறகு தஞ்சை கோட்டப் பொறியாளரிடம் கலந்து ஆலோசித்து செயலில் ஈடுபடுவது என்றும் தீர்மானித்தார். எண்ணம் செயலாக மாறியது. அவர் செய்த வேலை, தமிழ்நாட்டிலே அவர் அந்தத்துறையில் முதன்மை ஸ்தானம் பெறுகின்ற தகுதியினை ஏற்படுத்தியது. இந்தியாவிலேயே இது ஒரு மிகச் சிறந்த வேலை எனக் குறிப்பிடலாம். அவர் செய்த சேவை இதுதான். கிராம மக்களைச் சந்தித்தார். ரோடு அகலப்படுத்துவதன் அவசியத்தை வற்புறுத்தினார். இதற்குத் தனிச் சிறப்பு பெற்ற நுண்ணறிவு பெற்ற அதிகாரிகள் அவசியமில்லை; கிராம மக்கள் உடல் உழைப்பின் மூலம் இக்காரியத்தை செய்யலாம் என்று கேட்டுக்கொண்டார். தன்னுடைய பஞ்சாயத்து யூனியனில் உள்ள 47 பஞ்சாயத்துகளும் இந்த வேலையில் ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மக்களுடைய ஒத்துழைப்பை பெற்றவுடன், 17 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. திரு. தங்கவேல் தலைவராகவும், திரு. முருகையன் காரியதரிசியாகவும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் திரு தங்கராஜ் பொருளாளராகவும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. கோபாலசாமி தென் கொண்டார், சென்னைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அங்கத்தினர்களாகவும் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. மற்ற கிராமங்களுக்கும் இது பற்றி எடுத்துரைக்கப்பட்டது. சில பொதுக் கூட்டங்களின் மூலம் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. 20 ஆயிரம் அறிவிப்புத் தாள்கள்மூலம், கிராமங்களுக்கும் செய்தி வெளியிடப்பட்டது.

### ஆதரவு பெருகிற்று

எல்லாக் கிராம பஞ்சாயத்துக்களும், கிராம மக்களும் இந்த வேலையை உற்சாகத்தோடு செய்வதாக ஏற்றுக்கொண்டனர். கிராமத் தொண்டர் படையினர் முன்னின்று வேலை செய்வதாக ஆர்ப்பரித்து எழுந்தனர். அவர்கள் மட்டுமல்ல; கிராமத்தில் உள்ள வயோதிகர்களும், முடமானவர்களும், பெண்களும், பள்ளிச் சிறுவர்களும் குழந்தைகளும், ஆசிரியர்களும், இப்பணியிலே ஈடுபடுவதாக அறிவித்தனர். சில கிராமங்களில் ஆண், பெண், அத்தனைபேரும் இந்த வேலையில் ஈடுபடுவதற்கு முன் வந்தனர். ஏழையும், பணக்காரரும், குத்தகைதாரரும், நிலச் சொந்தக்காரரும் சாதி, சமய, கட்சி வேறுபாடின்றி இதிலே சமபங்கு கொள்ள அவா உற்றனர். குறிப்பிட்ட நேரத்திலே, கிராமத் தொண்டர் படை அனைவரையும் மண்வெட்டி, கடப்பாறை, கூடை முதலியவைகளுடன் குறிப்பிட்ட இடங்களுக்கு வர வேண்டும் என்று செயற்குழு மூலம் கேட்டுக் கொண்டது. வேலைக்கு வருபவர்களுக்கு உணவு அளிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. திரு. தங்கவேல் ஒத்திரியரும், தென்பாரை உத்தராபதி மடமும் உணவு அளிக்க முன் வந்தனர். கமிட்டியின் மூலம் 500 கூடைகள் வாங்கப்பட்டன. கரை ஓரங்களை பலப்படுத்த 1000 ரூபாய் மதிப்புள்ள சவுக்கு இனாமாக வாங்கப்பட்டது.

### அந்த நாள்

1963-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாள் காலை 8 மணிக்கு வேலை செய்வதென தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே மக்கள் வந்து வேலை செய்யவேண்டிய இடத்துக்கு சேர வேண்டுமென்று, கேட்டுகொள்ளப்பட்டது. ரோட்டின் நீளம் 13 பாகங்களாகக் பிரிக்கப்பட்டது.



47 பஞ்சாயத்துக்களுக்கும் இடங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. 17-ம் தேதி காலை கதிரவன் தன் தங்கக் கதிர் வீசி வெளிக்கிளம்ப, மக்கள் படை, தப்பட்டை, கொம்பு, மேளங்கள் முரசொலிக்க கையிலே மண்வெட்டி, கடப்பாறை, கூடை ஏந்தி, கத்தியின்றி ரத்தமின்றி பெற்ற நமது நாட்டை கடப்பாறை, மண்வெட்டிகொண்டு ரோடுகள் அமைத்துப் பாலங்கள் கட்டிப் பலமுள்ளதாக ஆக்கவேண்டுமென்று சாரி சாரியாக வேலை செய்யவேண்டிய இடத்திற்கு வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஏறக்குறைய 8 ஆயிரம் ஆண்களும்,பெண்களும் திரண்டு அந்த இடத்தை 8 மணிக்கு முன்பே அடைந்து விட்டனர். 5 மைல்களுக்கு அப்பாலுள்ள 7 ஆயிரம் ஆண்களும், பெண்களும் மற்ற வாகனங்களின் மூலம் 8 மணிக்கு முன்பே அவ்விடத்திற்கு கொண்டுவரப்பட்டனர். பெண்கள் குடம் ஏந்தி கையில் தம்ளருடன் தண்ணீர் வேண்டுமா, வேண்டுமா என்று கூறிச் சென்றது, இந்த நாட்டில் ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோம் என்பதை நிரூபித்துவிட்டது. 8 மணிக்கு இவர்களுடைய வேலைகளுக்கு உதவிசெய்ய பஞ்சாயத்து யூனியன் மன்ற ஊழியர்கள் அனைவரும் 13 பகுதிகளுக்கும் பிரித்து விடப்பட்டனர். ஒவ்வொரு பகுதிக்கும் 1000-லிருந்து 1200 பேர் வரை வேலையில் ஈடுபட்டனர். ரோட்டின் அளவு, ரோட்டின் புதுப்பிக்கவேண்டிய அளவு இவை அனைத்தும் குச்சி அடித்து கயிறு கட்டி நேர்படுத்தப்பட்டன. மணி 8 அடித்தது தப்பட்டை, கொம்பு முரசொலி வானத்தை இடிப்பதுபோல் முழங்கின. தஞ்சை கலெக்டர் திரு. பி. என். வேதநாராயணன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் மண்வெட்டியால் முதல் மண் கட்டியை எடுத்து கூடையில் வைத்து ரோடு அகலப்படுத்தினார். 15 ஆயிரம் மக்களும் 30 ஆயிரம் கைகளும் கட்டிகளைப் பிளப்பதிலும் மணலை வாரிக் குவிப்பதிலும், கூடையில் வாரி சுமப்பதிலும் முனைந்தனர். இது சரித்திரமும் கண்டிராத ஒரு நிகழ்ச்சி. இவ்வேலை செய்பவர்கள் கட்டாயமாக வரவழைக்கப்படவில்லை. அவர்கள் விரும்பி தங்கள் வேலையை பூர்த்தி செய்வதிலே ஆர்வம் கொண்டு மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் வேலை செய்ததைப் பார்த்தால், உலகத்திலே ஓர் ஒப்பில்லாத சமுதாயத்தை அமைப்பதில் இந்தியாவுக்கு ஈடு ஏது என்று யாரும் கூறுவர். மணல் குவியல்களும், மணல் மலைகளும், புதர்களும், திடல்களும் நொடிப்பொழுதில் மறைந்தன. சரிந்தும், இடிந்தும், பிரிந்தும் இருந்த ரோடு, 16 அடி அகலத்திலே சென்னை மெரினா கடற்கரை ரோடு போல விரிந்து பளிச்சென காட்சி அளித்தது. காலையில் 8 மணிக்கு வந்த மக்கள் 2 மணிக்குள் வேலையை முடித்துவிட்டனர்.

### வரலாற்றில் குறிக்க வேண்டிய நிகழ்ச்சி

இந்த வேலை முடிந்ததைப் பார்த்தால், புராணங்களில் சொல்லப்படுகின்ற கணங்கள் தான் இந்த வேலையை முடித்தனவோ என்று ஐயுறும்படி இருந்தது. பெண்களும், மாணவர்களும் ஓடி, ஓடி தண்ணீரை வாரி வாரி அளித்ததைப் பார்த்தால், இந்த ஒப்பில்லாத சமுதாயம் உலகத்திலேயே ஒரு புதுமை என்பது விளங்கிற்று. எதிர்பார்த்த 10 ஆயிரம் பேருக்கு 15 ஆயிரம் பேர், வந்துவிட்டதால், எல்லோருக்கும் உணவு அளிப்பதிலே சிறிது சிரமம் ஏற்பட்டது. 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்ற மக்கள் 6 மணி நேரத்திலே அந்த வேலையை முடித்துவிட்டார்கள். இந்த வேலையை, இலாகா மூலமோ, அல்லது வேறு ஒரு ஏஜென்ஸி மூலமோ செய்வதாக இருந்தால், 2, 3 மாதங்கள் நிச்சயமாக ஆகியிருக்கும். 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் நிச்சயமாக செலவாகியும் இருக்கும். ஆனால் கோட்டூர் வாழ் மக்கள் சக்தி, இந்த வேலையை, 6 மணிகளிலே, அரசாங்கத்திற்கு—யாருக்கும் எந்த விதமான செலவுமின்றி முடித்துவிட்டது.

### கோட்டூர்—ஒரு வழிகாட்டி

கோட்டூர் நமக்கு இன்று ஒரு நல்ல வழிகாட்டி. தேங்கிக் கிடக்கும் மனித சக்தியை நல்ல முறையிலே திருப்பி விட்டால், விளைவு மிக மிக உயர்ந்ததாக இருக்கும். கோட்டூர் செய்த வேலை அநேக பஞ்சாயத்து யூனியன் மன்றங்களைத் தூண்டி விட்டுவிட்டது. ஒரத்தநாடு, நீடாமங்கலம், மன்னார்குடி, நாகப்பட்டினம் மக்கள் இந்த வேலையை மேற்கொண்டு 5,000, 6,000 ஆட்களை வைத்து ஒரே நாளில் 3, 4 மைல் நீளமுள்ள ரோடுகளை அமைத்தும், புதுப்பித்தும், செப்பனிட்டும் மக்கள் சக்தியை பயன்படுத்தி சிறப்பு பெற்றனர்.

இந்த வேலையைச் செய்வதிலே கற்றுக்கொண்ட பாடம், மக்கள் உணர்ச்சி வசப்பட்டு பெரும் திரளாகக் கூடும் பொழுது, அவர்களுக்கு வேண்டும் கருவிகளை முன்னேக்கியே வைத்திருக்க வேண்டும்; எதிர்பார்க்கும் அளவுக்கு மேல் மக்களுக்கு உணவு வசதி செய்யவேண்டும் என்பதாகும். தேங்கிக்கிடக்கும் மனித சக்தியை பயன்படுத்த நல்லதோர் வாய்ப்பு, தஞ்சையில் ஏற்பட்டிருக்கிறது. பொது வேலை செய்வதிலேயே பொது மக்களுடைய ஒத்துழைப்பு பெருகி வருகிறது. பலருடைய தேவை என்று தெரிந்தால், மக்கள் எந்தவித வேறுபாடுமின்றி இந்த வேலையைப் பூர்த்தி செய்வதிலேயே உற்சாகத்தோடு முனைகின்றனர். எப்படி எரிகிற விளக்குக்கும் ஒரு தூண்டுகோல் வேண்டுமோ, அதுபோல, உணர்ச்சியும், உற்சாகமும் வேலை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டு மக்களுக்கு அவ்வப்போது தூண்டுகோலாக-துணையாக அரசாங்க ஊழியர்களும், பொது சேவகர்களும் இருந்தால், கோட்டூர் செய்ததைப் போல் பல மடங்கு வேலையை, தஞ்சையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுமையும் செய்ய முடியும். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பாரதத்தின் ஜனநாயக ஆட்சியை வேரூன்றி நின்று, வெற்றி பெறச் செய்யும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

—(o)—

[20-ம் பக்கத் தொடர்ச்சி.]

செய்யவும், அவைகளைச் சேகரித்து விற்கவும், கிராமத் தொழில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ வேண்டியது, மிகவும் அவசியமான அடிப்படைத் தேவையாகும்.

### கூட்டுறவுமுறையில் செயல்படவேண்டும்

இந்தத் துறையில், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ஒரு நல்ல தெளிவான முறையைக் கையாளுகின்றனர். தங்களுடைய பிரதேசங்களில் உள்ள மக்களின் பொருளாதார நலனைப்பேணி வளர்ப்பது தான் இந்த தல நிர்வாக நிறுவனங்களின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும். உற்பத்திச் சாதனங்கள் போன்ற வசதிகளை அளித்தல், தேவைப்பொருட்களை உற்பத்தி செய்வதைப் போல அவ்வளவு முக்கியமானது. அது வேறு, இது வேறு என்றில்லை. ஆகவே,. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் பஞ்சாயத்தும் தங்களுடைய பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய இப்படிப்பட்ட தொழில் திறனைத் திரட்ட வேண்டும். அவர்களுக்குப் பொதுவான வசதிகளைச் செய்து தரவேண்டும். நவீன சாதனங்களையும் யந்திரங்களையும் பயன்படுத்த அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கூட்டுறவு முறையில் பண்டங்களை உற்பத்தி செய்யவும், சேகரிக்கவும், விற்கவும் வசதிகளை அமைத்துத் தரவேண்டும்.

நமது மாநிலத்தில், மேலே சொன்ன எல்லா முறைகளும், பல பஞ்சாயத்து யூனியன்களில் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த வேலைமுறை நம்மைப் பொறுத்தவரையில் புதிதல்ல. தங்களுடைய பிரதேசங்களில் கிராமத்தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் பாடுபடுகின்ற பல பஞ்சாயத்து யூனியன்களை, நான் சமீபத்தில் தெற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும்பொழுது கண்டேன். ஒருசில யூனியன்களைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட்டால் போதும் என்று நினைக்கிறேன். நாங்குநேரி, அம்பாசமுத்திரம், வள்ளியூர், கடையம், தென்காசி, செங்கோட்டை, சேரன்மாதேவி ஆகிய பஞ்சாயத்து யூனியன்களைக் குறிப்பிடவேண்டும். இந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் கிராமத்தொழில் பயிற்சி நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள்,சாதாரண வசதிகளைச் செய்துதரும் நிலையங்கள் என்று பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், கிராமத்தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உற்பத்தி நிலையங்கள், கூட்டுறவு நிறுவனங்களில் பெரும்பாலானவை மிகவும் சீரிய முறையில் வேலை செய்து வருகின்றன. வீரவநல்லூர் பாய்முடைவோர் கூட்டுறவு உற்பத்தி-விற்பனை சங்கம், காருக்குறிச்சி மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுக் கிராமத் தொழில் சங்கம், வடக்கன் குறிச்சி ஹரிஜன் செங்கல் தயாரிக்கும் கூட்டுறவுக் கிராமத் தொழில் சங்கம், செங்கோட்டை மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவுச் சங்கம் முதலிய நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கன.

உதாரணமாக, காருக்குறிச்சி மண்பாண்டம் செய்வோர் கூட்டுறவு சங்கத்தில் 52 பேர் உறுப்பினராக உள்ளனர். இதனுடைய வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 5,525. ஜனதா குளிர் சாதனப்பெட்டி, மகன்சூலா, தண்ணீர் குழாய்கள் முதலான பாண்டங்களை தரமான மண்ணிலேயே இந்தச் சங்கம் உற்பத்தி செய்கிறது. மெருகு பூசப்பட்ட பொருட்களையும் இந்தச் சங்கம் உற்பத்தி செய்கிறது. பொதுமக்களுக்கு பிடித்தமான ரகங்களை உற்பத்திசெய்து தருவதில், இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும், பாடுபடுவதை, நான் கண்டேன். 1962–63-ல் இந்தச் சங்கம் ரூ. 38,590 மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளது. இதனால் சங்கத்திற்கு கிடைத்த நிகரலாபம் ரூ. 2,814. தொழிலாளர்களுக்கு ஊதியமாக ரூ. 23,329 கொடுக்கப்பட்டது. தரமான வகைப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிலாளிக்கு மாதம் 120 ரூபாய் ஊதியமாகக் கிடைக்கிறது. சங்கத்தின் உறுப்பினர்கள், சம்பாதித்த ஊதியத்தொகையில் ரூபாய்க்கு 6 ந.பை. என்ற அளவில் சிக்கன நிதி (Thrift fund)-யில் போட்டு வைத்துள்ளனர். 1962–63-ல் இப்படிப் போட்ட தொகை ரூ. 1,600-58 ந.பை. ஆகும். இதனால் உறுப்பினர்கள் தங்களுடைய பழைய கடன்களைத் தீர்க்கவும், தங்களுக்கென்று நிலம் வாங்கவும், திருமணம் போன்ற செலவினங்களைச் சமாளிக்கவும், அவர்களுக்கு மிகவும் அனுகூலமாக உள்ளது. சங்கம், தன்னுடைய பணியினைச் செய்யவும் வேண்டிய நிதியைப் பெறுகின்ற ஓர் ஆதாரமாகவும் இந்த முறை அமைந்துள்ளது. தங்களுடைய குழந்தைகளின் படிப்பு விஷயத்தில், உறுப்பினர்கள் மிகவும் சிரத்தை கொண்டுள்ளதையும் நான் கண்டேன். இந்த சிக்கனச் சேமிப்பு முறையினால், குழந்தைகளுக்கு வேண்டிய துணிமணிகள், பலகை, புத்தகங்கள் ஆகியவற்றை அவர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் இந்த மாதிரி பயன்தரத்தக்க பணியாற்றும் சங்கங்கள் நிறைய உள்ளன. இந்த நடைமுறையைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமானதல்ல. வேண்டிய மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. தேவையான மனித சக்தியும் கைவசத்தில் உள்ளது. கிராம மக்களுக்கு பயன்படுகின்ற முறையில், இந்த இரண்டையும் ஒன்றாகப் பிணைத்து பணியாற்றுகின்ற ஒரு நிறுவனம்தானே தேவை. இந்த வேலையைச் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள்தான் பொருத்தம்.

சங்கத்தின் அங்கத்தினர்களிடையே பரஸ்பர நம்பிக்கையுணர்வு, கடுமையான உழைப்பு, தங்களுடைய சங்கத்திற்காகவும் தங்களுக்காகவும் பாடுபடுகின்ற விருப்பமும் ஆர்வமும்—இவையே ஒரு கூட்டுறவுச்சங்கம் செம்மையான முறையில் நடப்பதற்கு அடிப்படை ஆதாரங்களாகும். இவை மட்டும் இருந்துவிட்டால் கிராமத்தொழில் வளர்ச்சியில், கூட்டுறவு நிறுவனங்கள் வெற்றி காண்பது உறுதி.

— o —

# நோயற்ற வாழ்வு

## பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கும் கிராமத் தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோள்

[செப்டம்பர் மாதத்தில் பெரியம்மை ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. பெரியம்மையால் பாதிக்கப்பட்டு அவதியுறுவோர், கிராமப்புறங்களில் அதிகம். மாநில பொது சுகாதாரத்துறை இயக்குநர் அவர்கள் வெளியிட்டுள்ள வேண்டுகோளை, பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்டவர்கள், கிராம மக்கள் எல்லோரும் புரிந்துகொண்டு பூரண ஒத்துழைப்பை நல்குவார்கள் என நம்புகிறோம்—ஆசிரியர் .]

நம் மாநிலத்தில் தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம், சென்ற மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி இருக்கிறது. நமக்கெல்லாம் நம்முடைய சந்ததிக்கெல்லாம் பெரும் நன்மை தரப்போகும் இந்தத் திட்டம் இரண்டு ஆண்டு கால அளவில் நிறைவேறப்பட வேண்டும்.

உலகம் முழுவதிலும் பெரியம்மையால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் 80 சதவிகிதம்பேர் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற நிலைமை இன்னும் இருப்பது நமக்கு வெட்கக்கேடு.

1958-ம் ஆண்டில், உலகம் முழுவதிலும் பெரியம்மை வியாதியால் பீடிக்கப்பட்டவர்களின் தொகை 2,42,000.

இவர்களில் 2,18,000 பேர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளைச் சேர்ந்தவர்கள்.

### மகிழ்ச்சியும் வேதனையும்

" காந்தியடிகளின் நாட்டைச் சேர்ந்தவர், சாந்தியில் நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டைச் சேர்ந்தவர் ", என்று நம்மைப் பார்த்து வெளிநாட்டுக்காரர்கள் சொல்லும்பொழுதெல்லாம், நமக்குப் பெருமையாக இருக்கிறது. " உலகத்திலே இன்று பெரியம்மை வியாதி பரவுவதற்கு காரணமே இந்தியாவும், பாகிஸ்தானும்தான். உலகத்திலுள்ள பெரியம்மை வியாதிஸ்தர்களின் மொத்த தொகையில், சுமார் 80 சதவிகிதம் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் " என்று அவர்கள் கூறும்போது வேதனையடைகிறோம்.

அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் பெரியம்மையை ஒழித்துவிட்டார்கள்.

ஐரோப்பா நாடுகள் பலவற்றிலும் இவ் வியாதி கிடையாது.

அண்டை நாடான இலங்கை கூட, தக்க நடவடிக்கையெடுத்து, பெரியம்மையை ஒழித்துவிட்டது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் மட்டுமே இன்னும் பெரியம்மை நோய் இருப்பது துக்ககரமான நிலையாகும்.

இந்த நிலைமையை இனியும் நீடிக்கவிடலாமா ?

இந்த நிலைமையை நீங்கள் மாற்றலாம். உங்களால் தான் மாற்ற முடியும்.

### பெரியம்மை வருவதற்குக் காரணம் என்ன ?

**பெரியம்மை வியாதி.**—இந்த வியாதியைப் பற்றிய பின்வரும் விஷயங்கள் உங்களில் சிலருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும்.

இவ்வியாதி உயிருள்ள சிறு கிருமி வகையொன்றால் ஏற்படுகிறது.

நோயாளியின் சுவாசத்திலும் அவன் உடலிலிருந்து உதிரும் அம்மை கொக்குகளிலும், பெரியம்மை கிருமிகள் நிறைந்திருக்கின்றன. இவை பிறருக்கு பெரியம்மை வியாதியை பரப்பி விடக்கூடியவை.

குழந்தையாக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, இந்த வியாதி கண்டவர்களில் 100-க்கு 30 முதல் 40 பேர் வரை இறந்துவிடுகின்றார்கள்.

அம்மை வைக்கப்படாத சிசுக்களும் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் இந்த வியாதி வந்தால் அவர்கள் பிழைப்பதரிது.

பெரியம்மை வந்து உயிர் தப்புவோரும் அடியோடு உருமாறிவிடக்கூடும். பலர் பார்வையை இழந்து குருடாகிவிடுகிறார்கள். சிலர் செவிடாகிறார்கள். முகம் எங்கும் தழும்பு ஏற்பட்டு விகாரமேற்படலாம்.

பலனளிக்கும் விதத்தில் அம்மை வைத்துக்கொள்வது ஒன்றே, பெரியம்மையிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளக்கூடிய ஒரே வழியாக இருக்கிறது.

### அம்மை வைப்பதால் தடுப்புச் சக்தி ஏற்படுகிறது

பெரியம்மை வியாதிக்கு எதிரான தடுப்பு சக்தியை நம் உடம்பில் உண்டாக்கக்கூடியது, அம்மைப்பால். குழந்தைகளுக்குப் பிறந்து ஆறு மாத காலத்திற்குள் அம்மை வைத்துவிட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கொரு தடவை மறுமுறை அம்மை (Re-vaccination) வைத்துவிட வேண்டும்.

### தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் தத்துவமென்ன?

ஒரு நகரம் அல்லது கிராமத்தில் வாழும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிசுக்கள் ஆகிய அத்தனை பேருக்கும் ஏக காலத்தில் (அதாவது திட்ட காலமாகிய 2 வருடத்திற்குள்) முதல் முறையும் மறுமுறையுமாக அம்மை வைத்துவிட்டால், அந்தக் கிராமத்தில் அல்லது

அந்த நகரத்தில் பெரியம்மைக் கிருமி வளராவோ, வாழவோ வழியில்லாமல் போய்விடுகிறது. அந்த ஊரிலுள்ள எல்லோருடைய உடல்களிலும், அம்மை வைத்ததன் மூலம் கிடைத்த பெரியம்மை தடுப்புச் சக்தி இருப்பதால், பெரியம்மைக் கிருமி வாழ இடமில்லை, வழியில்லை. இவ்விதம் நம் நாட்டிலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள எல்லோருக்கும் ஒருவர் விடாமல் ஏக காலத்தில் அம்மை வைத்து விட்டால், நம் யுகத்தில் பெரியம்மைக் கிருமி பரவும் மார்க்கம் பூரணமாகத் தடைப்பட்டு விடும். தங்கவும் இனவிருத்தி செய்யவும் வழியில்லாத இக்கருவி பூண்டோடு நசித்துவிடும். தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின் அடிப்படைத் தத்துவம் இதுதான்.

### உங்கள் கடமை என்ன ?

இந்த நடவடிக்கையில் கிராமத் தலைவராகவும் பஞ்சாயத்து யூனியன் ஊழியராகவும் உள்ள உங்கள் கடமை என்ன ?

பெரியம்மை பற்றியும் அதன் தடுப்பு முறையான அம்மை வைப்பது குறித்தும் உங்கள் கிராம மக்கள் தெரிந்துகொள்ள உதவி புரியுங்கள். சுகாதார இலாகாவினரும் மற்றவரும் அம்மை வைத்தலின் பலனைப்பற்றி பொதுமக்களிடையே எடுத்துக் கூறுவது ஒரு புறமிருந்தபோதிலும், உங்கள் ஊரைச் சேர்ந்தவர்களுக்கு நீங்களே விளக்குவது மிகவும் அவசியமாகிறது.

உங்கள் குடும்பாரும், நீங்களும் அம்மை வைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் கருத்துக்கும் உங்கள் கிராமத்தினர் மிகவும் மதிப்பு அளிப்பார்கள். இதனால் லாபமடைவது உங்கள் ஊரிலுள்ளவர்கள் அனைவருமே என்பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

யாருடைய நன்மைக்காக இத்திட்டம் அமுல் செய்யப்படுகிறதோ, அவர்களது குன்றாத, குறையாத மனப்பூர்வமான ஒத்துழைப்பின்றி, திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது கடினம். பொதுமக்கள், இந்த நடவடிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தாங்களாகவே ஈடுபட்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். இதற்கான சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை நீங்கள் உங்கள் பகுதியில் முன்னின்று நடத்தித் தரவேண்டும்.

பெரியம்மை பற்றியும் அம்மை வைப்பது பற்றியும் ஜனங்களிடையே ஏற்கெனவே நிலவி வரும் தவறான நம்பிக்கைகளை அகற்ற உதவி புரியுங்கள்.

இத்திட்டம் சம்பந்தமான பயிற்சி முகாம்கள் அல்லது போதனை வகுப்புகள் உங்கள் பகுதியில் நடைபெற வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஏற்பாடு செய்வார்கள். அவ்வகுப்புகளில் அல்லது முகாம்களில் தவறாது கலந்து கொள்ளுங்கள்.

உங்கள் ஊரில் இருக்கும் குழந்தைகள், மாணவ மாணவிகள், வாலிபர், வயோதிகர்கள் முதலியோர் அனைவருக்கும் அம்மை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வது, உங்கள் கிராமத்திற்கோ அல்லது பஞ்சாயத்திற்கோ ஒரு சிறந்த காரியத்தைச் செய்வதாவதுடன், நம் தேசத்திற்கே ஒரு பெரிய தொண்டு செய்வதாகும். அத்துடன், நாட்டின் பெருமையை நிலைநாட்டுவதற்கு அடிகோலியவர் ஆவீர்கள்.

சுகாதார இயக்குநர், தமிழ்நாடு அரசாங்கம்.

## நான்மாடக்கூடலில், நாளிலும் மறக்க முடியாத வைபவம்

தொன்மை சிறப்புற்ற மதுரை மீனாட்சி அன்னையின் ஆலய மகா கும்பாபிஷேகம், ஜூன் 28-ம் தினத்தில் 4 லட்சம் பக்தர்களின் கண்களில் 'பக்தி' பரவசமாக நீர் மல்கி நின்றபோது, குறித்த வேளையில் நடைபெற்றது. சுமார் 3 வருஷமும் ஒரு மாதமும் நடந்த இந்தத் திருப்பணிக்கு, ரூ. 20 லட்சத்திற்குமேல் செலவாகியிருக்கிறது.

மீனாட்சி ஆலயத்திற்கு நடத்திவைக்கப்பட்ட இம்மகா கும்பாபிஷேகமும், அதைக் கண்குளிரக் கண்டுகளித்து தரிசிக்கக் குழுமியிருந்த 4 லட்சம் சகோதர, சகோதரியரின் குதூகலவதனங்களும், பார்த்தவர்களின் எண்ணத்திலிருந்து அகலாது. நேரில் கண்ட இக்காட்சி, அவர்கள் நெஞ்சிலே உறைந்திருக்கும்.

### வெள்ளம் போல் தமிழர் கூட்டம்

தமிழகத்தின் எட்டாக்கையில் உள்ள இடங்களிலேயிருந்தெல்லாம், பக்தர்கள் அலை அலையாக வந்து கூடினர். தெருக்களிலும் சரி, ஆலயத்தின் சுற்றுவட்டப்பகுதிகளிலும் சரி, எள் போட்டால் எண்ணெயாக பிழிந்து வெளிப்படும் அளவுக்கு, மக்கள் திரண்டிருந்தார்கள். கும்பாபிஷேகக் காட்சியை கண்டு வணங்க, ஆலயத்தை அடுத்துள்ள கட்டிடங்கள், வீடுகள், அனைத்திலும் ஒரே ஜனத்திரள்.

ஆலயத்தின் ஸ்வர்ணமயமான விமானங்களுக்கும், ஆலய மூர்த்திகளுக்கும், புனித நீராட்டம் நாதஸ்வர மங்கள இசையோடு நிகழ்ந்தது. வேத கோஷங்களும் தேமதுரத் தமிழில் பக்திப்பாடல்களும், சிந்தையைக் கவரக் கூடியவாறு பக்திவெள்ளத்தில் மிதந்து வந்தன.

### பக்தி மனம் பொங்கிய காட்சி

கும்பாபிஷேக வைபவத்துக்காகப் பிடித்த அவகாசம் இரண்டே நிமிஷம். அடுத்தபடியாக, அபிஷேகமான கலசங்களுக்குப் பட்டுத்துகில்களால் அலங்காரம் செய்விக்கப்பட்டது. பின்னர் கற்பூர ஆரத்தி நடைபெற்றது. இவ்விதழின் கடைசி அட்டைப்படம் இக்கவினுறு காட்சியைச் சித்தரிக்கிறது.

ஆடவரும் பெண்டிருமாகக் குழுமியிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் தங்கள் சிரத்தின் மேலே கரங்களை உயர்த்தி, பக்திப்பாடல்களை மெய்மறந்து பாடிப் பரவசப்பட்டார்கள். கற்பூர ஜோதி பக்தர்களின் கண்களைக் களிக்கச் செய்ததென்றால், அதன் மணம் பக்தர்களுடைய பக்தி மணத்தோடு இழைந்து இரண்டறக்கலந்தது.

கும்பாபிஷேகக் காட்சியை தமிழக கவர்னர் திரு மேதி, திருமதி மேதி, கேரள மாநிலக் கவர்னர் திரு கிரி, மத்திய அரசாங்க உதவி அமைச்சர்கள் திரு சி. ஆர்.பட்டாபிராமன், திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன், தமிழக நிதி அமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம், மற்றும் லட்சக்கணக்கான மக்கள் கண்டு தரிசித்தனர்.

இந்த மகத்தான விழாவினை, வரலாற்றிலே இடம் பெறத்தக்க முறையில் நடத்திக்கொடுத்த, தமிழவேள் திரு பி. டி. ராஜன் அவர்களையும், அவர்களுடைய சகாக்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

---

பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது :

# கிராம நலம் பகுதி — பஞ்சாயத்து அரசிதழ் — PANCHAYAT GAZETTE

## 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் பற்றிய விதிகளின் திருத்தத்திற்குப் பிழை திருத்தம்

**[Rules—Madras Panchayats Act, 1958—Rules relating to Panchayat Union Councils Amendments—Erratum issued.]**

**(Memorandum No. 11958, R.D. & L.A., dated 21st June 1963.)**

### பிழை திருத்தம்

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் தேதியிட்ட அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண் : ஏ. 524 உடன் வெளியிடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தம் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு பயணப்படி கொடுத்தல் பற்றிய விதிகளின் திருத்தத்தில், "மேற்குறித்த விதிகளின் 3-வது விதியில்" என்ற வாசகத்திற்குப் பதில், "மேற்குறித்த விதிகளின் 4-வது விதியில்" என்று திருத்திப் படிக்கவும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 11958)

—: o :—

## வனமகோற்சவமும் வாலிபர் சங்கங்களும்

**[Vanamahotsava and Youth Organisations]**

**(Memorandum No. 145184, R.D. & L.A., dated 22nd June 1963)**

மரங்கள், காடு, மண், நீர், வன விலங்கு முதலிய இயற்கை வருவாய்களைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதும் இன்றியமையாததானதும் ஆகும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

இவ்விஷயத்தில் வாலிபர்கள், இருக்கின்ற மரங்களைப் பாதுகாப்பதுடன் மேலும் புதிய மரங்களை ஒழுங்காக வைப்பதன் மூலம் நாட்டிற்குத் தேவைப்படும் உணவு, நார், விறகு முதலானவை கிடைக்க வழி செய்யவேண்டும். ஆகவே இந்திய அரசாங்கம், மரம் நடும் பணியில் வாலிபர் சங்கங்கள் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளது. இந்தப் பணியில் (1) ஆடு மாடுகள் மூலம் செடிகள், மரங்கள் முதலியன அழியாமல் காத்தல், (2) செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், (3) கம்போஸ்டு, எருக்குழிகளில் உரம் தயாரித்து உரிய காலத்தில பயன்படுத்தல், (4) புழு பூச்சிகளாலும், நோய்களாலும் செடிகள் அழிந்துவிடாமல் பாதுகாத்தல் முதலியன அடங்கும். வாலிபர் மன்ற உறுப்பினருக்கு 2-3 ஆண்டுகளாக ஒட்டுச் செடிகளைக் கொடுத்து, அவர்களுடைய உழைப்பின் பயனைக் கண்டு, திறமையான சாதனைக்குப் பரிசு வழங்கலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம்; வாலிபர் மன்றங்களுக்கான இவ்வனமகோற்சவ வேலைத் திட்டம், வாலிபர் வேலைத்திட்டத்தின் முக்கிய பகுதியாகக் கருதப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளதுடன், கிராம சேவகர் பயிற்சி நிலையங்கள் நிறுவியுள்ள முன்மாதிரி வாலிபர் மன்றங்கள் (Pilot Youth Clubs) எடுத்துச் செய்வதற்கான மரம் நடும் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது.

2. இது விஷயத்தில், விவசாயத்துறை இயக்குநர் கலந்தாலோசிக்கப்பட்டார். இந்த மாநிலத்தில், வாலிபர் மன்றங்களை அமைக்கின்ற பணியே தொடக்க நிலையில் உள்ளபடியால், இதற்கென்று அவை நிறைவேற்றத்தக்க ஒருங்கிணைந்த திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய தேவையில்லை என்று அவர் கருத்து தெரிவித்தார். மேலும், அத்தகைய வாலிபர் மன்றங்கள் இயங்கி வரும் இடங்களிலெல்லாம் வனமகோற்சவ வேலைக்கு அவற்றின் பணியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

3. ஏற்கெனவே மாநிலத்தில், பல்வேறு நிலைகளில் பல பரிசுத் திட்டங்கள் இருப்பதாலும், வாலிபர் சங்கங்களின் செயல்கள் மிகக்குறைவாக இருப்பதாலும் பரிசுத் திட்டம் எதுவும் தேவையில்லை என்று, பரிசுகள் வழங்குவது குறித்து விவசாயத்துறை இயக்குநர் எடுத்துக் கூறியுள்ளார். மேலும், அவர், வனமகோற்சவ காலத்தில் பசுந்தழை தரும் மரங்களின் விதைகள், நாற்றுக்கள் முதலியன இலவசமாகவோ, மிகக் குறைந்த விலைக்கோ விநியோகிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார். பழ நாற்றுகளுக்கு 50 சதவிகித விலைச்சலுகை காட்டப்படுவதால், வாலிபர் சங்க உறுப்பினர் தம் சொந்த நிலத்தில் பழச்செடிகள் நட இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. அரசாங்கம் விவசாயத்துறை இயக்குநரின் ஆலோசனையை ஒப்புக்கொள்கிறது. வனமகோற்சவ வேலையில், வாலிபர் சங்கங்களின் பணி நன்கு பயன்படும் வகையில் பார்த்துக்கொள்ளும்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலைய முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கிராமத் தொண்டர் படையின் உற்பத்தி அணியும் இப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவேண்டும்.

## வாலிபர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களில் செயல்படவேண்டிய மரம் நடும் திட்டத்தின் சுருக்கம்

### மரம் நட வேண்டியதன் அவசியம்

நம் நாட்டில் பன்னெடுங்காலமாக குழந்தைகளை எப்படி செல்வம் என்று போற்றி வருகிறோமோ, அதே போல் மரங்களையும் செல்வமாகக் கருதிப் போற்றி வந்துள்ளோம். நல்ல உணவு, உடை, இருப்பிடம், மருந்து, கட்டிடங்களுக்குரிய மரச் சாமான்கள், விறகு, எரு முதலான வாழ்க்கைத் தேவைகளை அளித்து மனித சமுதாயத்துக்குப் பல வழிகளிலும் பயன்படுவன மரங்கள். அடிக்கடி நம்மைத் தொல்லைக்குள்ளாக்கும் மண் அரிப்பு, வெள்ளம் முதலியவற்றிலிருந்து மரங்கள் நம்மைக் காக்கின்றன. மாநகரங்களும், நகரங்களும் பூங்காக்களாலும், சோலைகளாலும் அழகு பெறுகின்றன. தேன், அழகிய புது மலர்கள், கண்ணுக்கு இனிய பசுமைக் காட்சிகள், அழகிய துறைகள், அழகிய பறவைகள், மிருகங்கள் முதலியவற்றை நமக்களிப்பன செடிகள். விவசாயப் பருவங்களுடனும், பொருளாதார நிலையுடனும் மரங்கள் நேரடித் தொடர்பு கொண்டுள்ளமையாலேயே நாம் அவற்றை 'நாட்டின் செல்வமாகக் கருதுகிறோம்.'

உணவு உற்பத்தியைப் பெருக்க, பல வழிகளிலும் நாம் முயன்று வரும் இந்நாளில் பயிர்களும், விளை நிலங்களும் வெள்ளத்தாலும், மண் அரிப்பினாலும் பாழாகின்றன. இந்தப் பேரிழப்பைத் தடுக்க, இருக்கின்ற மரம் செடிகளைக் காப்பாற்ற வேண்டியதும், புதியதாக வைத்து வளர்க்க வேண்டியதும் நம்முடைய கடமையாகும். இக் கடமையைச் செய்வதில் வாலிபர்களும், வாலிபர் மன்றங்களும் முதற்படியாக, முயல வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வட்லிபர் சங்க உறுப்பினர்களுக்கு மரம் நடும் பணி தொடர்ந்து ஆர்வம் தருவதாகவும், பொருளாதார உயர்வுக்கு இத் திட்டம் வழி செய்வதால் பெற்றோர்களின் கவனத்தை இத்துறையில் திருப்புவதாகவும் அமையும். கிராம சேவகர் பயிற்சி நிலையங்களைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள வாலிபர் சங்கங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இது ஒரு முக்கிய பணியாக விளங்க வேண்டும். மரங்களை வைப்பதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும், பாதுகாப்பதிலும் நன்கு வளர்ப்பதிலும் அவர்கள் முன்னின்று அனைவரையும் ஊக்க வேண்டும்.

### திட்டத்தை செயல்படுத்தும் முறை

ஆண்டு தோறும் வனமகோற்சவ காலத்தில், மரங்கள் அதிகமாக நடப்படுகின்றன. ஆனாலும் ஒழுங்கான பராமரிப்பு இன்மையால், பெரும்பான்மையானவை மடிந்துவிடுகின்றன. ஆகவே, நாம் எவ்வளவு அதிகமாக மரங்களை நடுகிறோம் என்பது முக்கியமல்ல, எவ்வளவு மரங்களை நாம் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம் என்பதுதான் முக்கியம்.

கிராம சேவகர் பயிற்சி நிலையங்கள், முன்மாதிரி வாலிபர் சங்கங்களை அமைத்து, அருகிலுள்ள அபிவிருத்தி வட்டாரங்களில் மரம் வைத்து வளர்க்கும் திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் யோசனைகளையும் கருவிகளையும், பயிற்சி நிலையப் பணியாளர், பயிற்சியாளர் ஆகியோரின் பணி உதவியையும் அளிக்கும்.

கிராம சேவகர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றும் பத்து முன்மாதிரி வாலிபர் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் பல ஏற்கெனவே அமைக்கப்பட்டு இரண்டு மூன்று ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராம சேவகர் பயிற்சி நிலையமும் சங்க உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து அந்தப் பகுதியில் எந்த வகை மரங்களை வைத்து வளர்க்கலாம், எந்த இடத்தில் நடலாம், எவ்வளவு விதைகள் நாற்றுக்கள் தேவைப்படுகின்றன, இவற்றை எங்கிருந்து பெறலாம், அவற்றை எப்படி பராமரிக்கலாம், பயிற்சி நிலையம், பஞ்சாயத்து யூனியன் ஆகியவற்றிடமிருந்து எந்த வகை உதவி தேவைப்படுகிறது என்பவற்றையெல்லாம் குறித்து, பல்வேறு வாலிபர் சங்கங்களுக்கும் வேலைத்திட்டம் தயாரிக்க வேண்டும். திட்ட நிறைவேற்றத்தில் எந்த ஒரு தடையும் ஏற்படாத வகையில், ஒவ்வொரு கிராம சேவகர் பயிற்சி நிலையமும், முன்னதாகவே திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டும். பிரதேசத் தேவைக்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற வகையில் எவ்வகை மரங்களை நடவேண்டுமென்று முடிவு செய்வதில் சங்க உறுப்பினர்களுக்கு முழு உரிமை உண்டு. குழிகளை வெட்டுவதிலும், கம்போஸ்டு எருவைக் குழிகளில்



நிரப்புவதிலும், செடிகளை நடுவதிலும், பின்னர் பராமரிக்க வேண்டிய வகையிலும் பயிற்சி நிலையப் பணியாளர்கள் ஆலோசனை கூறி உதவவேண்டும். பயிற்சி நிலையங்களும், சம்பந்தப்பட்ட வட்டாரங்களும், கிராம வாலிபர் சங்கங்களுக்கு பழச் செடிகள் முதலியன சலுகை விலையிலோ அல்லது இலவசமாகவோ கிடைக்க வகை செய்யவேண்டும்.

### மரம் நடுவதற்குரிய இடம்

. மரம் நடுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பது இத்திட்டத்தில் முக்கிய அம்சமாகும். பொதுவாக, சமுதாய அடிப்படையில், பயிரிடப் பயனற்ற தரிசு நிலங்களில் தான் பல காலமாக மரங்கள் நடப்பட்டு வந்தன. இத்தகைய நிலங்களில் வாலிபர் சங்கங்கள் மரங்களை நடவேண்டியதில்லை. செடிகள் நன்கு வளரக்கூடிய இடங்கள் மட்டுமே, வாலிபர் சங்கங்கள் மரம் நட, ஒதுக்கித் தரப்படும். பல ஊர்களில் இத்தகைய பொது நிலங்கள் கிராமப் பஞ்சாயத்துக்கள் வசம் உள்ளன. பஞ்சாயத்துக்கள் ஓரளவு நிலத்தை வாலிபர் சங்கங்களுக்கு அளிக்கலாம். அவ்வாறு பஞ்சாயத்திடமிருந்து பெற்ற நிலத்தை வாலிபர் சங்கத்தினர் தாமே வேலியில் செடிகள் பயிரிட்டு வேலியிடலாம். பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன், வேலியிட அச் சங்கங்களுக்கு உதவலாம்.

ஊர் தெருக்கள், ஊருக்கு வரும் பாதைகள், குளக் கரைகள், கோயில் சுற்றுப்புறங்கள், மசூதிகள், மாதா கோயில்கள், பள்ளிகள், சமுதாய நிலையங்கள் முதலிய இடங்களிலெல்லாம் மரங்களை வைத்துப் பாதுகாக்கலாம்.

### வைக்கத் தக்க மரங்கள்

வளமான பொது நிலங்கள் உள்ள இடங்களிலும் சமுதாயச் சோலைகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் பழ மரங்களை வைக்கலாம். தெரு ஓரங்களில் நிழல் தரும் மரங்களை (நிழலும் மலரும் தருவன) வளர்க்கலாம். பசுமையான தழையுடன் நிழல் தரும் மரங்களை ஊருக்கு வரும் பாதை ஓரங்களிலும், கரைகளிலும் நட்டு வளர்க்கலாம். கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள், பள்ளிகள், பொதுக் கட்டிடங்கள் முதலிய இடங்களில், பழ மரங்களையும், நிழல் தரு மரங்களையும் வைக்கலாம். கிராமத்தின் சுற்றுப்புறங்களில், கிராம கம்போஸ்டு எருக்குழி முதலியன உள்ள இடங்களிலெல்லாம், வேகமாக வளரக்கூடிய விறகுக்குப் பயன்படும் மரங்கள் வைத்து வளர்க்கலாம்.

### திட்டத்தின் வெற்றிக்குரிய வழிகள்

இதற்கு முன் நடத்திய மரம் நடும் திட்டங்களினால் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, வாலிபர் சங்கங்கள் ஏற்று நடத்தும் இத் திட்டம் வெற்றி பெறுவதற்குரிய வழிகள் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும். ஆகவே இத்திட்ட வெற்றிக்கு, பயிற்சி நிலையங்கள், கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று யோசனை கூறப்படுகிறது :—

1. வாலிபர் சங்கத் தனி உறுப்பினர்கள்/வாலிபர் சங்கம் மொத்தமாக, எளிதில் செயல்படுத்தத்தக்க ஒரு குறைந்த அளவுத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

2. திட்டத்துடன் தொடர்பு கொண்டவர்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பையும் குறிப்பிட்டு வரையறுத்து விடுவதுடன், மரம் நடும் திட்டம் முன்னதாகவே தயாரித்து விடவேண்டும்.

3. நம்பிக்கையுள்ள இடங்களிலிருந்து, செடிகளை உரிய காலத்தில் பெறவேண்டும். செடிகள் கிராமங்களுக்கு உரிய காலத்தில் வந்து சேரும்படி பயிற்சி நிலையங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. மிருகங்கள், புழு பூச்சிகள், நோய்கள் முதலியவற்றால் செடிகள் அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

5. செடிகளுக்கு ஒழுங்காக எருவிட்டு வளப்படுத்த வேண்டும்.

6. செடிகளுக்கு உரிய காலத்தில் தவறாமல் நீர் பாய்ச்சி வரவேண்டும்.

7. பழச் செடிகளைப் பொறுத்த மட்டில், வாலிபர் சங்க உறுப்பினருக்கு, செடி வைத்த 3 அல்லது 4 ஆண்டுகளில் பலன் கண்டு மகிழும் வகையில், அவர்களுக்கு 2 அல்லது 3 ஆண்டு கால ஒட்டுச்செடி நாற்றுக்களை வழங்க வேண்டும்.

8. சங்க உறுப்பினர்க்கு, சிறப்பாக செடிகளை ஒட்டு போடுவதிலும், பொதுவாக மேற்குறித்த பிற வேலைகளிலும், பயிற்சி அளிக்கலாம்.

9. இத்திட்டம் தயாரிக்கப்படும் நிலையிலிருந்து கிராமப் பஞ்சாயத்துக்கள் தீவிரமாக ஒத்துழைக்கலாம்.

10. செடிகள் நடப்பட்ட பின் அவற்றைப் பராமரிக்கின்ற விஷயத்தில் மிக முக்கியமாகக் கவனித்துக்கொள்ள பயிற்சி நிலையப் பணியாளர், சங்க உறுப்பினர்களையும், கிராமப் பஞ்சாயத்தையும் கலந்தாலோசித்து ஒரு திட்டம் தயாரித்து, செடிகள் அழியாமல், நன்கு வளரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 145184)

## பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—அரசாங்க மானியங்களைப் பயன்படுத்துதல் குறித்த சில விளக்கங்கள்

## [Panchayat Radio Maintenance Organisation—Installation of Radio sets in Panchayats—Utilisation of Government Grants—Certain Clarifications.]

### (Memorandum No. 251309, R. D. & L. A., dated 22nd July 1963.)

பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைக்கவும், அவற்றுக்கு நிதி வசதி செய்யவும் கிராம நல-தல நிர்வாகத்துறை ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்துள்ளது. எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டிகளை அமைக்க நிதி வசதி செய்வதில் உள்ள சங்கடங்களை, வடார்க்காடு மாவட்டக் கலெக்டர் எடுத்துக்கூறியுள்ளார். எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டி அமைக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற, ஆண்டொன்றுக்கு, ஒரு வட்டாரத்துக்கு 10 ந.பை. என்று குறித்துள்ள வரையறையைத் தளர்த்தலாம் என்று அவர் யோசனை கூறியுள்ளார். மேலும், கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருடம் செப்டம்பர் மாதம் 8-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் விவசாய மானியம் கிராம வேலைகள் மானியம் பற்றி வெளியிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின் பற்றுவது குறித்தும் யோசனை கூறியுள்ளார். அரசாங்கம் கலெக்டரின் யோசனைகளைப் பரிசீலனை செய்து, கீழ்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :

சமூகக் கல்வி மானியத்தின் கீழ், எடுத்துக் செய்யப்படும் திட்டங்களை நிறைவேற்ற, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் தலைக்கு 50 ந.பை. நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் முறையே சொல்பட, இந்த மானியம் ஆண்டொன்றுக்கு, தலைக்கு 10 ந.பை. ஆக இருக்கலாம் என்று யோசனை கூறப்பட்டது. இந்த மானியம் ஐந்தாண்டுகளுக்கு மட்டும் அளிக்கத்தக்கது. ஆகவே, முன் ஆண்டுகளில் செலவு செய்யாமல் நின்றுள்ள மானியத் தொகையை, பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகள் வைப்பது உட்பட சமூகக் கல்வித் திட்டங்களை நிறைவேற்ற, வரும் ஆண்டுகளில் பயன்படுத்தலாம் என்று ஆணையிடப்படுகிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜுன் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 251309).

---

## தமிழ்நாடு தல ஸ்தாபன நிதிச் சட்டத்தின் கீழ், கேளிக்கை வரி, காட்சி வரிகளின் மேல் சர்சார்ஜ் விதித்தல் பற்றிய விளக்கம்

## [Tax—Madras Local Authorities Finance Act—Surcharge on Entertainment Tax and Show Tax—Levy of.]

### (G.O. Ms. No. 1349, R.D. & L.A., dated 25th June 1963.)

இந்த மாநிலத்தில், தமிழ்நாடு தல ஸ்தாபன நிதிச் சட்டம் அமுலில் வரத் தொடங்கியதிலிருந்து, அநேகமாக எல்லாப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும், நகர மன்றங்களும், இச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வழி வகைகளைக் கொண்டு, கேளிக்கை வரி, காட்சி வரி முதலியவற்றின் மேல் சர்சார்ஜ் விதித்துப் பயனடைந்து வருகின்றன. எனினும், இச்சட்டத்தைச் சரியாகச் செயல்படுத்துவதில் சில மன்றங்களும் அதிகாரிகளும் ஐயங்களை கொண்டுள்ளனர், என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறு வரி விதிப்பு செயல்படாத நிலைமைக்கான ஐயங்களை விளக்கி அரசாங்கம் கீழ்க்கண்ட விளக்கங்களை வெளியிடுகிறது :

தல ஸ்தாபனம், மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ், சர்சார்ஜ் விதிக்கத் தான் எடுத்துள்ள முடிவை வெளியிடும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர்மானத்தில், விதிக்க இருக்கும் சர்சார்ஜ் எந்த விகிதத்தில் விதிக்க உத்தேசிக்கப்படுகிறது என்றும், எந்தத் தேதியிலிருந்து விதிக்கப்படுமென்றும் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். வரிவிதிப்பு நடைமுறைக்கு வருகின்ற தேதியை நிர்ணயிக்கும்பொழுது, வரையறுக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் வெளியிடவும், வணிக வரித்துறை அதிகாரிகள் நிர்வாக ஏற்பாடுகள் செய்து கொள்வதற்கும் தேவையான கால இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதிக்கும், வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் தேதிக்கும் 30 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

அறிவிப்பு வெளியிடப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டு, வரிவிதிப்பு நடைமுறைக்கு வருவதாகக் குறித்த நாளுக்குப் பின்னர் அறிவிப்பு வெளிவருமானால், அந்த வரிவிதிப்பு சட்ட விரோதமானதாகும். வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் அதே நாளில் அறிவிப்பு வெளிவந்தாலும் அது சட்ட விரோதமாகாது. பின் தேதியிலிருந்து வரிவிதிப்பு அறிவிப்பது மட்டுமே சட்டவிரோதமானசெயலாகும்.



அறிவிப்பு கீழ்க்கண்ட முறைகளில் வெளியிடப்பட வேண்டும் :—

(a) செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழிலும், சம்பந்தப்பட்ட மாவட்ட அரசிதழிலும் வெளியிடுதல்.

(b) அறிவிப்புப் பிரதியை (தமிழில்) சம்பந்தப்பட்ட தல ஸ்தாபன அலுவலகத்திலோ, சாவடி அல்லது சாவடிகள் சம்பந்தப்பட்ட தல ஸ்தாபனப் பகுதிக்குள் இருப்பின் அவ்விடங்களிலோ, அல்லது அத்தகைய பிற இடங்களிலோ, தல ஸ்தாபனம் குறிப்பிடும் இடத்தில் பலருடைய கவனத்தையும் கவர்கின்ற வகையில் ஒட்டி வைத்தல்.

(c) சம்பந்தப்பட்ட தல ஸ்தாபனப் பகுதியில் தண்டோரா (டாம் டாம்) அடித்து அறிவித்தல் முதலிய பொது அறிவிப்பு முறையில் அறிவித்தல்.

இத்தகைய அறிவிப்பு முறைகளெல்லாம் வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்னதாகப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றுள் ஏதாவதொரு முறையில் அறிவிப்பு வெளியிடுவது, வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்த நாளுக்கு அடுத்த நாளில செய்யப்பட்டாலும், அந்த வரிவிதிப்பு முறையற்றதாகி விடும்.

சில இடங்களில் வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் தேதியைக் குறிப்பிடாமல், அறிவிப்பு வெளியிடப்பட்ட நாட்களுக்குப் பின்னர் வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்பட்டு, வரிவிதிப்பு தொடங்கி விட்ட இடங்களில், வேறு திருத்த அறிவிப்போ, புது அறிவிப்போ வெளியிடத் தேவையில்லை.

சில தல ஸ்தாபனங்கள், ஏற்கெனவே சர்சார்ஜ் வரி விதிப்பு விகிதத்தையும், அது நடைமுறைக்கு வரும் தேதியையும் தீர்மானத்தின் மூலம் நிர்ணயித்து விட்டு, பின்னர் அவற்றை மாற்றியும் நீக்கியும் தீர்மானங்கள் நிறைவேற்றுகின்றன. 1961-ம் ஆண்டு தமிழ்நாடு தல ஸ்தாபனங்கள் சட்டத்தில் 3 (3) பிரிவு எல்லா தல ஸ்தாபனங்கள் கவனத்துக்கும் கொண்டு வரப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கு வரி விதிப்புத் தீர்மானம் நடைமுறைக்கு வந்த பின்னர், அந்த ஆண்டைப் பொறுத்தமட்டில் எந்த வகையிலும் வரிவிகிதத்தை மாற்றவோ, வரிவிதிப்பு நடைமுறைக்கு வரும் தேதியை மாற்றவோ முடியாது. ஏற்கெனவே வரி விதிப்பு நடைமுறைக்கு வராமல் இருப்பின் தல ஸ்தாபனங்கள் தம் முன்னைய தீர்மானத்தை மாற்றிக்கொள்ள எந்த ஆட்சேபணையும் இல்லை. எனினும், அத்தகைய மாற்றம், நிர்வாகத் தொல்லைக்கும் வரிவிதிப்புச் சட்ட அமுலில் குறையை ஏற்படுத்தவும் காரணமாவதால் அவ்வாறு தீர்மானத்தை மாற்றுவதை தல ஸ்தாபனங்கள் தவிர்க்க வேண்டுமென்று அரசாங்கம் விழைகிறது :

ஒரு தல ஸ்தாபனம் வரிவிதிப்பு விகிதத்தைக் குறைக்க விரும்பினால், அடுத்த நிதி ஆண்டிலிருந்து அவ்வாறு குறைக்க ஒரு தீர்மானம் நிறைவேற்றி, மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவு துணைப்பிரிவு (4)-ல் கூறியுள்ள அனுமதியைப் பெறுவதற்கு முன்னதாகவே அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சில இடங்களில் தல ஸ்தாபனங்கள், வரிவிதிப்பு நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து வரிவிதித்து, வசூலிக்கத் தவறியுள்ளன. சில இடங்களில், படக்காட்சி உரிமையாளர்கள் (Cinema Owners) படம் பார்ப்போரிடம் சர்சார்ஜ் வசூலிக்கவில்லை என்று கூறப்படுகிறது. வரி விதிப்பு அறிவிப்பு முறையே, முன்னதாக வெளியிடப்பட்ட பின்னர், வரிவிதிப்பு நடைமுறைக்குக் குறித்த தேதியிலிருந்து வரி வசூல் செய்ய முடியும். சர்சார்ஜ் வசூலிப்பது நீக்கும் சில இடங்களைப் பொறுத்த மட்டில் தனியே ஆணைகள் வெளியிடப்படும். தவறாக அறிவிக்கப்பட்டும், வரிவிதிப்பு முறை தவறி செய்யப்பட்டும் உள்ள சில இடங்களில், சில காலத்திற்கு சர்சார்ஜ் வசூலிக்கப்பட்டு விட்டது. இத்தகைய வசூல் தொகைகளைப் பற்றியும் தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

தல ஸ்தாபனம் வரிவிதிக்கத் தீர்மானம் நிறைவேற்றிய உடன், அத் தீர்மான நகல்களை, வணிக வரி அதிகாரிக்கும் வணிக வரி துணை அதிகாரிக்கும் அனுப்பிவிட வேண்டும். தல ஸ்தாபனம், வரிவிதிப்பு குறித்து, சம்பந்தப்பட்ட எல்லாப் படக்காட்சிக் கொட்டகைகளுக்கும் (Cinema Theatres) உரிய காலத்தில் தெரியப்படுத்திவிடலாம். இவ்வாறு தெரிவிக்க வேண்டும் என்று விதிகளில் இல்லையெனினும், வரிவிதிப்பை எளிதாக்க இந்த யோசனை கூறப்படுகிறது.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜுன் மாதம் 25-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1349-ன் சுருக்கம்).

---

## கிராமத் தொண்டர் படையின் காவல் அணி பயிற்சியாளருக்கு பயணப்படியும், தினசரிப்படியும் அளித்தல் பற்றிய விளக்கம்

**[National Emergency—Village Volunteer Force—Units for Village Defence—Imparting of Training—Payment of Travelling Allowance and Daily Allowance to Trainees—Instructions issued.]**

**(Memorandum No. 108284, R. D. & L. A., dated 26th June 1963)**

தஞ்சாவூர் கலெக்டர், தம்முடைய 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதிய கடிதத்தில், கிராமத் தொண்டர் படையின் காவல் அணி பயிற்சியாளர்கள், ஏதாவது ஊதியம் பெறத் தகுதியுடையவர்களா, அவ்வாறுயின் எந்த வீதத்தில் பெறுவர், அவர்கள் பயணப்படி, தினசரிப் படி முதலியன பெறத்தக்கவரா என்று கேட்டுள்ளார்.

கிராமத் தொண்டர் படை குறித்து ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஆணைகளுடன் மேலும் சில விளக்கங்கள் வெளியிடப்படுகின்றன. அவை வருமாறு :—

(1) கிராமத் தொண்டர் படைத் திட்டம், கிராம மக்கள் தாமே விரும்பி முன்வந்து பணிபுரிய வகுக்கப் பட்ட திட்டமானதால், பயிற்சியாளர் எவ்வகை ஊதியமும் அளிக்கப்படவேண்டியதில்லை.

(2) சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிதியிலிருந்து, பஞ்சாயத்து உறுப்பினர் பெறத்தக்க பயணப்படி, தினசரிப் படியாகக் குறித்துள்ள அளவில், பயிற்சியாளர்கள் பயணப்படியும், தினசரிப்படியும் அளிக்கப்படலாம்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 26—6—63-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை : 108284)

---

## வட்டார ஜீப் வண்டிகளை கலெக்டரின் தனி உதவியாளர்கள் (பஞ்சாயத்து அபிவிருத்தி) வட்டாரத்துக்கு வெளியில், அபிவிருத்தி மாவட்டத்திற்குள் பயன்படுத்துவது குறித்த விளக்கம்

கிராம நலத்துறையில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள விதிகளின்படி, வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஜீப் வண்டிகள், சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டரின் ஆணையின்றி வட்டாரத்திற்கு வெளியே எடுத்துச் செல்லக் கூடாது. இப்பொழுது, திருநெல்வேலி கலெக்டர், கலெக்டரின் தனி உதவியாளர்கள் (பஞ்சாயத்து அபிவிருத்தி) பயண அதிகாரிகளாதலாலும் (Touring Officers), அவர்கள் ஒரு மாதத்தில் மூன்று முதல் நான்கு வட்டாரங்களை தனிக்கை செய்ய வேண்டியிருப்பதாலும், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் பல்வேறு வேலைகளைப் பார்வையிட வேண்டியிருப்பதாலும் வட்டார ஜீப் வண்டிகளை அவர்கள் பயன்படுத்தவேண்டியுள்ளது என்று எடுத்துக் கூறியுள்ளார். மேலும், அவர், தணிக்கை செய்ய வேண்டிய வட்டாரத்தில் பல நேரங்களில் ஜீப் வண்டிகள் அவருடைய உபயோகத்திற்குக் கிடைப்பதில்லை. ஆகவே பஞ்சாயத்து அபிவிருத்தி—தனி உதவியாளர்கள், சமுதாய அபிவிருத்தி வேலைகளுக்காக, ஒரு வட்டாரத்தின் ஜீப் வண்டியை, அவர்களின் அபிவிருத்தி மாவட்ட எல்லைக் குட்பட்ட வேறு வட்டாரங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கலாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்கம் இவ்விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து மேற்குறித்த விதியைத் திருத்தி, கலெக்டரின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி), அவர்களின் அபிவிருத்தி மாவட்டத்திற்குள், சமுதாய அபிவிருத்தி வேலைகளுக்காக, கலெக்டரின் முன் அனுமதியின்றி, ஒரு வட்டாரத்தின் ஜீப் வண்டியை வேறு வட்டாரத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்று அனுமதிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 26—6—63-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 72532)

---

## நகரமன்றங்கள் பெறுகின்ற அரசாங்கக் கடன்கள், முன்பணம் ஆகியவற்றிற்கு 1963-64-ம் ஆண்டு வட்டிவீதங்கள்

**[Loans—Local Bodies—Loans and Advances by State Government and Advances drawn by Officers and Servants of Municipal Councils—1963-64—Rates of Interest—Communicated].**

**(G. O. Ms. No. 1393, R. D. and L. A. dated 1st July 1963.)**

1963-64-ம் ஆண்டில் தல ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் அனுமதிக்கும் கடன்கள், முன்பணம் ஆகியவற்றுக்கான வட்டிவீதங்கள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன :—

| கடன் அல்லது முன் பணத்தின் வகை. | ஆண்டொன்றுக்கு வட்டி சதவீதம். |
|---|---|
| 1. சென்னை மாநகராட்சிக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி போர்டுக்கும் அளிக்கப்படும் கடன்கள். | 5 |
| 2. மாவட்ட தல நிதிக் குழுக்களுக்குக் கடன்கள். | 5 |
| 3. வெளியூர் நகரமன்றங்களுக்குக் கடன்கள். | 5 |
| 4. பற்றுக்குறையை ஈடுசெய்ய தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படும் கடன்கள். | 5¼ |

போக்குவரவு வசதிக்கான வண்டி வாங்குவதற்காக, நகர மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நகர் குடியிருப்புக் குழுக்கள் ஆகியவை தம் அதிகாரிகளுக்கு வழங்குகின்ற முன்பணத்திற்கு, ஆண்டொன்றுக்கு, 5½ சதவீத வட்டி குறிக்கவேண்டும் என்பது நகரமன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்களின் கமிஷனர்கள், நகர் குடியிருப்பு நிர்வாக அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவிக்கப்படுகிறது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1—7—63 தேதியிட்ட அரசாங்க ஆணை 1393)

---

## 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்—பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு பஞ்சாயத்து யூனியன் மன்றம் பயணப்படி அளித்தல் பற்றிய விதிகளுக்குத் திருத்த வரைவு

**[Rules—Madras Panchayats Act, 1958—Rules relating to payment of Travelling Allowance by Panchayat Union Commissioners to their Chairman, Vice-Chairman, Members and Members of their Committees—Amendment—Draft published.]**

**(G. O. Ms. No. 1437, R.D. and L.A., dated 6th July 1963)**

### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 178 பிரிவு (2) துணைப் பிரிவு (x) உட்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ந் தேதியிட்ட அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண். ஏ. 385/60 உடன் வெளியிடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தம் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர், குழுக்களின் உறுப்பினர் ஆகியோருக்குப் பயணப்படி அளித்தல் பற்றிய விதிகளுக்குக் கீழ்க்கண்ட திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு திருத்தம்—செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆறு வாரங்களின் இது குறித்து அனுப்பப்படும் ஆட்சேபனை அல்லது ஆலோசனைகளை அரசாங்கம் கவனிக்கும். ஆலோசனைகளும், ஆட்சேபனைகளும் அரசாங்கச் செயலாளர், கிராம நல-தல நிர்வாகத்துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

### திருத்த வரைவு

மேற்குறித்த விதிகளின், 4-வது விதியுடன், கீழ்க்கண்ட பகுதியைச் சேர்க்கவேண்டும். அதாவது குறித்த பயணப் படித்தொகை (Fixed Travelling Allowance) பெறுகின்ற பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் பகுதிக்குள் செய்யும் பயணங்களுக்கு, உட்பிரிவு (a)-ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள உயர்ந்த அளவு பயணப்படி பொருந்தாதாயின்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 6—7—63 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1437)

---

## 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 119(3) பிரிவின்கீழ் விவசாய நிலத்தின்மேல் வரி விதித்து வசூலித்தல் பற்றிய விதிகளுக்குத் திருத்த வரைவு

## Rules—Madras Panchayats Act, 1958—Rules for the assessment and collection of levy on agricultural land under section 119(3) of the Act—Amendment—Draft published.]

### (G. O. Ms. No. 1441, R. D. and L. A. dated 8th July 1963.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 178-வது பிரிவு (2) துணைப்பிரிவு (xx) உட்பிரிவின்படியும் 119-வது பிரிவு (3) துணைப்பிரிவின்படியும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் தேதியிட்ட அறிவிப்பு எஸ். ஆர். ஓ. எண். ஏ. 162/1962 உடன் வெளியிடப்பட்ட, பஞ்சாயத்துக்கள், விவசாய நிலத்தின்மேல் வரி விதித்து வசூலித்தல் பற்றிய விதிகளுக்குக் கீழ்க்கண்ட திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டம், 179-வது பிரிவு (2) துணைப் பிரிவில் கூறியபடி, கீழ்க்கண்ட திருத்த வரைவு பொது அறிவிப்பாக வெளியிடப்படுகிறது.

இத்திருத்த வரைவு—செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆறு வாரங்களுக்குப்பின் கவனிக்கப்படும். இது குறித்த ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும், செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை. செயின்ட் ஜார்ஜ் கோட்டை சென்னை-9 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### திருத்த வரைவு

மேற்குறித்த விதிகளின் 3-வது விதியுடன் கீழ்க்கண்ட பகுதியைச் சேர்க்கவேண்டும். அதாவது, "தகுந்த காரணத்திற்காக, பஞ்சாயத்து, உரிய அதிகாரியின் அனுமதியுடன் ஆணையில் குறித்த காலத்திற்குள் வரி வீதத்தை மாற்றவோ, வரி விதிப்பைத் தள்ளி வைக்கவோ அல்லது நீக்கவோ செய்யுமாயின். . . "

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 8—7—63 தேதியிட்ட அரசாங்க ஆணை 1441-ன் இணைப்பு)

—o—

## கேந்திர கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்ட பொலிகாளைகளைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தல் பற்றிய விளக்கம்

## [Animal Husbandry—Livestock—Key village Extension Centres-Distribution of bulls to Panchayat Boards—Instructions issued.]

### (Memorandum No. 68207, R.D. and L.A. dated 10th July 1963.)

செங்கற்பட்டு மாவட்டக் கால்நடைப் பாதுகாப்பு அதிகாரி, தம் பகுதியில் சில இடங்களில் வழங்கப்பட்டுள்ள பொலி காளைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்றும், ஒரு காளைக்கு ரூ. 30 என்ற உதவித்தொகையுடன் அவற்றைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்துவிடலாம் என்றும் ஆலோசனை கூறியுள்ளார். தல விவசாயக் குழுவும் இந்த ஆலோசனையை ஆதரித்துள்ளது. செங்கற்பட்டு கலெக்டர், இது விஷயத்தில் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் விளக்கம் வெளியிடலாமா என்று கேட்டுள்ளார்.

ஒரு காளைக்கு, மாதம் 30 ரூபாய் என்ற உதவித்தொகையைக் கொண்டு, காளைகளைப் பராமரிக்க வசதிகளைக் கொண்டுள்ள பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் காளைகளை வழங்கலாம் என்று இது விஷயத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் யோசனை கூறியுள்ளார்.

இவ்விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது: கேந்திர கிராமத்திட்டத்தின்கீழ் தனிப்பட்டவர்களுக்குக் காளைகள் வழங்கப்பட்டுள்ள இடங்களில் சரியாகப் பராமரிக்கப்படவில்லையெனில், அவற்றை ஒழுங்காகத் தீனி வைத்தல், கொட்டகை இடுதல், வரையறுக்கப்பட்டுள்ளபடி பதிவேடு வைத்திருத்தல் முதலான கேந்திர கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தனிப்பட்டவர்களுக்குப் பொருந்தும், காளை விநியோகம் பற்றிய விதிகளுக்குட்பட்டு பராமரிக்க முன்வரும் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றலாம். இப் பராமரிப்புக்கு, பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்க உதவித் தொகை 30 ரூபாய் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் ஆகும் செலவுகளை பஞ்சாயத்துக்களே செய்துகொள்ளவேண்டும். கலெக்டர்கள், மாவட்டக் கால்நடை பாதுகாப்பு அதிகாரியைக் கலந்தாலோசனை செய்து, தகுந்த விளக்கங்களை வெளியிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 10—7—63 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 68207)



## பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கணக்காளர்கள் ஆகியோருக்கு கணக்குகள் பற்றிய மறுபயிற்சி

## [Panchayat Development Administration—Maintenance of accounts—Conduct of refresher course to Panchayat Union Commissioners and Accountants—Orders passed.]

### (G.O. Ms. No. 1463, R.D. and L.A., dated 11th July 1963.

பஞ்சாயத்து அபிவிருத்தி நிர்வாகத்தின் வெற்றி, சரியாகவும், ஒழுங்காகவும் கணக்கு வைத்திருத்தலைப் பொருத்தே அமைந்துள்ளது. சில பஞ்சாயத்து யூனியன்களின் பல்வேறு பதிவேடுகள் அன்றாடம் ஒழுங்காக வைக்கப்படவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாதந்தோறும்—ஆண்டுதோறும் சமர்ப்பிக்கவேண்டிய கணக்குகளை சமர்ப்பிப்பதிலும் கால தாமதங்கள் நிகழ்ந்துள்ளன. நிதிநிலை நிர்வாக விஷயத்தில் கணக்குகளை வைப்பதிலும், சமர்ப்பித்தலும், காலமுறை அறிக்கைகள் அனுப்புவதிலும் கால தாமதம் இருக்கக்கூடாது என்று அரசாங்கம் விழைகிறது. வருங்காலத்தில் பஞ்சாயத்து நிர்வாக முறை நிலைபெற்றுச் சிறந்து விளங்க, ஒழுங்கான கணக்கு வைக்கும் அமைப்பு ஒரு முக்கிய அம்சமாகும். கணக்கு வைப்பு முறை திறம்பட இயங்க, இரட்டை அம்ச முயற்சி மேற்கொள்ள வேண்டியது தேவை என்று அரசாங்கம் கருதுகிறது.

(1) கணக்கு சரியாக வைக்கப்படுகின்றனவா என்பதை கலெக்டர்கள் மிகவும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

(2) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கணக்காளர்கள் (Accountants) ஆகியோர், கடைசிவரை பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாங்க ஆணைகளையும் நன்கறியும் வகையில், ஆண்டுதோறும் நினைவூட்டும் மறுபயிற்சி வகுப்புக்கள் நடத்தவேண்டும். இத்தகைய பயிற்சி வகுப்புக்கள், போதிய பயிற்சி பெறாமல் கணக்காளர்களாக அமர்த்தப்பட்டுள்ளோர்க்கு நல்ல பயிற்சியாக அமையும்.

2. ஆண்டுதோறும் சமர்ப்பிக்க வேண்டிய கணக்குகளைச் சரியாகத் தயாரித்து சமர்ப்பிக்கும் வகையில் இந்த இரட்டை முயற்சி (Two fold attempt) தகுந்த காலத்தில் நல்ல பலனளிக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. இக்குறிக்கோள்களுடன் அரசாங்கம் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

கீழ்க்கண்ட வகையில், ஆண்டுதோறும் நினைவூட்டும் மறுபயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும் :—

| பதவிப் பெயர். | பயிற்சிப் பருவம். | பயிற்சிக் காலம். | பாடத் திட்டம். |
|---|---|---|---|
| கணக்காளர்கள். | எப்ரல் மாதப் பிற்பகுதி (பதினைந்தாம் தேதிக்குப் பின்). | மூன்று நாட்கள். | * |

| பதவிப் பெயர். | பயிற்சிப் பருவம் | பயிற்சிக் காலம். | பாடத் திட்டம். |
|---|---|---|---|
| பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள். | மே மாத முற்பகுதி (10-ம் தேதிக்குப் பின்). | இரண்டு நாட்கள். | * |

* குறிப்பு.—இவ் வகுப்புகளுக்குரிய பயிற்சிப்பாடத் திட்டம் இவ்வாணையுடன் இணைத்து, கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்கள், மாவட்டத் தலைநகரில், ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும், ஒரு தொகுதியாக நடத்தப்படும். ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்தின் தனித்தனி உதவியாளரும் (பஞ்சாயத்து அபிவிருத்தி) தல நிதித் தணிக்கைத் துறை அதிகாரிகளை (Officers of Local Fund Audit Department) கலந்தாலோசித்து, பயிற்சி வகுப்புக்களுக்கான வேலைத் திட்டத்தை வகுத்து, சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளுக்கும் முன்னதாகவே அனுப்பிவிட வேண்டும். கணக்காளர்களுக்கான பயிற்சி நடத்தும் அதிகாரியாக, தல நிதிக்கணக்குகளின் மாவட்ட மேற்பார்வையாளரும் (District Inspector of Local Fund Accounts) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கான பயிற்சி நடத்தும் அதிகாரியாக, தல நிதிக் கணக்குகளின் உதவி தணிக்கையாளரும் (Assistant Examiner of Local Fund Accounts) விளங்குவர். இவ்விருவகை பயிற்சி வகுப்பு நிர்வாக விஷயங்களிலும் தனி உதவியாளர் (பஞ்சாயத்து அபிவிருத்தி) பங்கு கொள்வார். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், பஞ்சாயத்து நிதி இயக்குநரும், துணை இயக்குநரும் (Director of Panchayat Finance and Deputy Director of Panchayat Finance) இப் பயிற்சிகளை நடத்துவதில் ஒத்துழைப்பு நல்குவர். இப்பயிற்சித் திட்டம் தொடர்ந்து நடத்தப்படவேண்டுமா என்பது குறித்து 1965-ல் பரிசீலனை செய்யப்படும்.

3. ஒவ்வோராண்டும், ஜூன் மாத முற்பகுதியில், கலெக்டர்கள், கணக்கு வைத்திருக்கும் நிலை பற்றிய ஆய்வு நடத்தி, ஜூன் 20-ம் தேதி அளவில், அரசாங்கத்திற்கு ஆய்வறிக்கையை அனுப்பிவைக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இதற்காக, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், இவ்வாணையில், இதற்கென இணைத்து (இணைப்பு-சி) அனுப்பப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதி நிரப்பி கலெக்டர்களுக்கு அனுப்ப வேண்டும். கலெக்டர்கள் இவ் விவரங்களைக் கொண்டும், மேலும் அவர் தேவையென்று

கருதும் விவரங்களைக்கொண்டும் ஆண்டுதோறும் கணக்கு களும், இதர விவரங்களும் ஒழுங்காக சமர்ப்பிக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். வசதிப்படி, தொகுதிகளாக பஞ்சாயத்து யூனியன்களைப் பிரித்துக்கொண்டு, இந்த ஆய்வு, கலெக்டராலேயே நேரடியாக செய்யப்பட வேண்டும்.

கலெக்டர் ஆண்டுதோறும் தயாரித்து அனுப்புகின்ற ஒரு நிரந்தர அம்சமாக இந்த ஆய்வறிக்கை விளங்கும். இது பயிற்சி வகுப்பு நடத்துவதனின்று வேறுபட்ட வேலை யாகும்.

4. பஞ்சாயத்து நிதி இயக்குநர், அல்லது துணை இயக்குநர் தம் யூனியனுக்கு வருவதாயிருக்கும்போது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இவ்வாணையுடன் இணைத்து (இணைப்பு-C) அனுப்பப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தயாரித்து அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

5. நடப்பு ஆண்டுக்கு, மேற்குறித்த கால அட்டவணையை கீழ்க்கண்டவாறு திருத்தி, அரசாங்கம் ஆணை பிறப்பிக் கிறது :—

| | |
|---|---|
| கணக்காளர்களுக்கான நினைவூட்டும் மறுபயிற்சி வகுப்புக்கள். | ஆகஸ்டு மாதம் முதல் வாரம். |
| பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் களுக்கான நினைவூட்டும் மறு பயிற்சி வகுப்புக்கள். | ஆகஸ்டு மாதம் இரண்டாவது வாரம். |
| கலெக்டரின் ஆய்வு. | ஆகஸ்டு மாதம் மூன்றும் வாரம். |

கலெக்டரின் ஆய்வறிக்கை, செப்டம்பர் 10-ம் தேதிக்குள் அரசாங்கத்திற்கு வந்து சேரவேண்டும். கணக்கு வைப்பு விஷயத்தில், ஆகஸ்டு மாதத்திற்குள் எல்லாப் பகுதிகளும் முடிந்துவிடும்படி கலெக்டர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கலெக்டர் அரசாங்கத்திற்கு அனுப்பும் ஆய்வறிக்கை, பஞ்சாயத்து யூனியன் வாரியாகச் செய்யப்பட்ட ஒரு நிறைவு அறிக்கையாக (Completion Report) விளங்கும் தன்மை யதாக இருக்க வேண்டும்.

பயிற்சியாளர்கள், பயிற்சி காரணமாக, தலைநகரில் இல்லாத நாட்களில், அவர்கள் வேலையிலிருந்து கடமை (on duty) செய்வதாக கருதப்படுவதுடன், விதிகளின்படி அவர்கள் பெறத்தக்க பயணப்படியும் பெறுவர். இச்செலவு களை, அவர்களின் சம்பளம், படிகள் பற்றி வைக்கப்படும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1468-இணைப்புகள் நீங்கலாக.)

---

## குடும்பக்கட்டுப்பாடு- பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்படும் ஈடுசெய்மானியத் தொகையைக் கணக்கு வைக்கும் முறை

## [Family Planning—Payment of Compensatory Grant to Panchayats—Accounting Procedure—Instructions—Issued.]

### (Memorandum No. 169186-A. R. D. and L. A. dated 17th July 1963)

சுகாதாரத் துறையின் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2240-ன் பாரா 18-ல், வெளியூர்களில் குடும்பக்கட்டுப்பாடு அறுவை முறை சிகிச்சையைப் பரப்பும் தீவிரத் திட்டத்தின்கீழ், பஞ்சா யத்துக்களுக்கு ஈடுசெய் மானியம் (Compensatory Grant) அளிப்பதில் பின்பற்ற வேண்டிய நடைமுறை வரையறுக் கப்பட்டுள்ளது. இது விஷயத்தில் பின் பற்ற வேண்டிய கணக்கு வைப்பு நடைமுறையை கிராம நல—தல நிர் வாகத்துறை வெளியிடும் என்றும் அவ்வாணையில் கூறப் பட்டுள்ளது. அதன்படி, இது விஷயத்தில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட விளக்கங்களைத் திருத்தியமைத்து, கீழ்க் கண்ட கணக்கு வைப்பு முறை வரையறுக்கப்படுகிறது:—

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்துக்களின் அங்கீகாரத்துடன், 10 ரூபாய்க்கு மேற்படாமல், பஞ்சாயத்து நிதியிலிருந்து முன்பணம்பெற அரசாங்கம் அங்கீகரிக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு அறுவை முறை சிகிச்சைக்காக ஆட் களை அனுப்ப ஆகும் போக்கு வரவு செலவுகளுக்கு இந்த முன் பணம் பயன்படவேண்டும். தலைவரிடம் இந்த முன் பணத் தொகை குறையும் போது, குறைவை ஈடு செய்து கொள்ளலாம். ஏதாவதொரு பஞ்சாயத்து முன் பணம் பெற்று, அதற்கு உரிய செலவுக்கு வாய்ப்பில்லை என்று கண்டால் அத்தொகையை அதன் நிதியில் திருப்பிக் கட்டி விட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ் சாயத்து யூனியன் நமூனு எண் 89 (நிரந்தர முன் பண விநியோகப் பதிவேடு) போன்ற ஒரு பதிவேட்டில் இந்த முன் பணக்கணக்கு வைத்திருக்க வேண்டும்.

ஒரு பஞ்சாயத்து, போக்கு வரவு செலவுகளுக்காக உண்மையில் செய்த செலவை பத்து ரூபாய்க்கு குறைவாக இருந்த போதிலும், ஈடுசெய் மானியமான 10 ரூபாய் முழுவதையும் பெறுவதற்கு அது தகுதி உடையது தானு என்ற ஐயம் எழுப்பப்பட்டுள்ளது. இத்தகைய விஷயத்தி லும் ஈடுசெய் மானியம் பத்து ரூபாயைப் பெறுவதற்கு பஞ்சாயத்து தகுதியுடையதே என்று எடுத்துக் கூறப்படு கிறது.



சுகாதாரத் துறையின் 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2101-ன் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ள நமூனு எண். II-ன் இரண்டு பிரதி கள் தயாரித்து, முதற்பிரதியை அறுவை சிகிச்சைக்கு அனுப்பப்படும் நபருடன், அங்கீகரிக்கப்பட்ட குடும்பக் கட்டுப் பாடு அறுவை நிலைய மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதனுடைய நகலை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு அனுப்பவேண்டும்.

அவ்வாறு அனுப்பப்படுபவருக்கு அறுவை சிகிச்சை செய் யும் மருத்துவ அதிகாரி (Medical Officer) சுகாதாரத் துறையின் 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 17-ந் தேதி யிட்ட அரசாங்க ஆணை 2101-ன் இணைப்பு II-ல் வெளி யிடப் பட்டுள்ள நமூனு I-ஐப் பூர்த்தி செய்து, நமூனு I-ஐயும் II-ஐயும் சம்பந்தப்பட்ட மருத்துவ நிலையத் தலைவருக்கும், நமூனு I-ன் பிரதியை, சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கும், பஞ்சாயத்து யூனி யன் கமிஷனருக்கும் அனுப்பி வைக்கவேண்டும். சம் பந்தப்பட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், நமூனு I-ன் பிரதியைப் பெற்றதும், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் நிரந்தர முன் பணத் திலிருந்து, கிராமப் பஞ்சாயத்திற்குச் சேர வேண்டிய ஈடு செய் மானியத் தொகையை, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலுள்ள பணப்பெட்டகத்தின் மூலம், தல நிதிக் கணக்கு எண் II-ல் பணம் கட்டி, நமூனு பிரதியைப் பெற்ற உடனே, அதே நாளில் சரிகட்ட வேண்டும். கிரா மப் பஞ்சாயத்துத் தொகுநிதிப் பேரேட்டில், சம்பந்தப் பட்ட பஞ்சாயத்துக் கணக்குப் பேரேட்டில் வரவு வைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாத இறுதியிலும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், தம் யூனியனிலுள்ள எல்லாக் கிராமப் பஞ் சாயத்துக்களுக்கும் சேரவேண்டிய ஈடு செய் மானியத் தொகைக்கான தொகுப்புக் கேட்பு (Consolidated claim) தயாரித்து, சம்பந்தப்பட்ட மருத்துவ நிலையங்களின் தலைவருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அவற் றைப் பெற்றதும், மருத்துவ நிலையத் தலைவர், மருத் துவ அதிகாரிகள் அனுப்பி வைத்த நமூனுக்கள் I, II ஆகியவற்றுடன் இத் தொகுப்புக் கேட்பை ஒப்பு நோக்கி, பஞ்சாயத்து யூனியன் பகுதியைச் சேர்ந்த எல்லாப் பஞ் சாயத்துக்களுக்கும் உரிய ஈடுசெய் மானியத்தொகையை அதற்குரிய அனுமதி ஆணை நமூனுவில் (இவ்வறிக்கை யுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது) அனுமதிப்பார். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் எம். டி. சி. நமூனு எண் 40-ல் பட்டியல் (Bill) தயாரித்து, மருத்துவ நிலையத் தலைவரின் அனுமதி ஆணையுடன் இணைத்து, பஞ்சாயத்து யூனியன் தல நிதிக்கணக்கு எண் 1-ல் வரவு வைப்பதன் மூலம், கணக்கைச் சரி கட்டுவார். பஞ்சாயத்து யூனியன் களுக்கு ரொக்கமாகப் பணம் கொடுக்கக்கூடாது என்று மருத்துவ நிலையத்தலைவர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள், மூன்று மாதத்துக் கொருமுறை தாம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்குத் தணிக் கைக்குச் செல்லும்பொழுது, ஏதாவது முன் பணம் உண்மையில் தேவையின்றி எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, அதைக் கிராமப் பஞ்சாயத்துக்கள் திருப்பிச் செலுத்திவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 169186)

---

## கிராமப் பெண்களுக்கான ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்—கிராமப் பகுதிகளில் மாதர் வானொலி மன்றங்களை அமைத்தல்

## [Broadcast of Programmes for Rural Women—Organisation of Women's Listening Clubs in rural areas.]

### (Memorandum No. 20153, R. D. & L. A., dated 16th July 1963.)

1962-ம் வருடம் அக்டோபர் மாதம் டெல்லியில் நடை பெற்ற மாநில செய்தித்துறை இயக்குநர்கள் கூட்டத்தில், கிராமப் பகுதிகளில் மாதர் வானொலி மன்றங்கள் அமைத்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் அலுவலகத் தில், சமீபத்தில் நடந்த கிராம நிகழ்ச்சிகள் பற்றிய ஆலோசனைக் குழுவில், இவ் விஷயம் மேலும் ஆராயப் பட்டது. டெல்லியில் மாநில செய்தித்துறை இயக்குநர்கள் கூட்டத்தில் இவ் விஷயம் குறித்து நடந்த விவரங்கள் ஏற்கெனவே மாதர் நலத்துறை இயக்குநருக்கு அனுப் பப்பட்டுள்ளன.

2. இந்த மாநிலத்தில் உள்ள சுமார் 12,500 பஞ்சாயத் துக்களுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கியுள்ளதால், மாதர் மன்றங்களுக்குத் தனியே வானொலிப் பெட்டிகள் வழங்கத்தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. இந்த மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் "கிராம வானொலி மன்றங்கள்" (ஆண்களுக்கான மன்றங்கள்) அமைக்கப்பட்டுள்ளன என்பதும், மாவட்டக் கலெக்டர்கள், கிராம வானொலி மன்றங்களின் மாவட்ட அமைப்பாளர்க ளென்று அறிவிக்கப்பட்டுள்ளனர் என்பது மாதர் நலத் துறை இயக்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பொழுது, பஞ்சாயத்துக்களில், மாதர்களுக்கென்று மட்டும் தனி வானொலி மன்றங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள் ளது. ஆகவே, கீழ்க்குறித்தவகையில், பஞ்சாயத்துக் களில் மாதர் வானொலி மன்றங்களை அமைப்பதற்காக

நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாதர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(i) தமிழ் நாட்டிலுள்ள 374 பஞ்சாயத்து யூனியன்களிலும் முதற்படியாக, ஒவ்வொரு யூனியனிலும் தேர்ந்தெடுத்த பஞ்சாயத்தில் ஒரு மாதர் வானொலி மன்றம் வீதம் அமைக்கப்படலாம். இம் மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைக் கலந்தாலோசித்து, அமைக்கப்படவேண்டும். சுமார் 20 பெண்கள் கூடி, மாதர் வானொலி மன்றங்களுக்கென்று ஒலி பரப்பப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கவும், அவர்களுள் விவாதம் நடத்தவும், வேண்டிய வசதியுள்ள பொது இடத்தில், வானொலிப் பெட்டிகள் அமைந்திருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மாதர் வானொலி மன்றத்திற்கும், பஞ்சாயத்து வானொலிப் பெட்டியையே பயன்படுத்த வேண்டும். மாதர் வானொலி உறுப்பினர் அவர்களுக்கென ஒலிபரப்பப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளைத் தாமே வசதியுடன் கேட்கும்படி செய்ய வேண்டியது அவசியம். இதற்கென ஒவ்வொரு யூனியனிலிருந்தும் பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, இக் கருத்தை மனதில் கொள்ள வேண்டுமென்று மாதர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ii) ஒவ்வொரு மாதர் வானொலி மன்றத்திற்கும் அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில், கிராம சேவிகைகளும், முக்கிய சேவிகைகளும் நேர்முகமாக ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

(iii) ஒலிபரப்பு நிகழ்ச்சி கேட்ட பின்னர் அறிக்கை தயாரித்து அனுப்ப வேண்டியிருப்பதால், அமைப்பாளர், படித்தவராக இருக்கவேண்டும். மன்றப்பதிவேடு வைத்திருக்கும் பொறுப்பு அமைப்பாளரைச் சார்ந்ததாகும். இவ்வேலைகளை அவர் தாமே முன்வந்து செய்ய வேண்டுமே தவிர, ஊதியம் எதுவும் அளிக்கப்பட மாட்டாது. இந்த வேலைக்கு ஆசிரியைகள் பொருத்தமானவர்கள்.

(iv) மன்ற உறுப்பினர்கள் நடத்தும் விவாதங்கள் பற்றிய அறிக்கைகளை, அமைப்பாளர்கள், திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநருக்கு அனுப்பி வைப்பதுடன், ஒரு பிரதியை மாதர் நலத்துறை இயக்குநருக்குக் குறித்து அனுப்பவேண்டும். அந்த விவாதங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, அநேகமாக அடுத்த வாரத்திலேயே பதில்கள் ஒலிபரப்ப வானொலி நிலையம் ஏற்பாடு செய்யும்.

(v) இதற்கான மன்றப்பதிவேடு, அறிக்கைகள் முதலியவற்றிற்கு நோட்டுப் புத்தகங்கள், காகிதங்கள், தபால் செலவுகள், ஆகிய செலவுகளை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) இதற்காக கிராம வானொலி மன்றங்களை அமைப்பது குறித்த கிராம நல-தல நிர்வாகத்துறை வெளியிட்ட விளக்கங்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாதர் வானொலி மன்றங்கள், கிராம வானொலி மன்றங்களிலிருந்து வேறானவை. மாதர் வானொலி மன்றங்களில் பெண்கள் மட்டுமே உறுப்பினராகத் தகுதியுடையவர்கள்.

(vii) மாதர் வானொலி மன்ற அமைப்பு வேலைகள் முடிந்ததும், அவற்றுக்காக, திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம், ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப ஏற்பாடு செய்யும்.

3. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைக் கலந்தாலோசனை செய்து, மாதர் வானொலி மன்றங்களை அமைப்பதற்கு, மாவட்ட மாதர் நல அதிகாரிகள், கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் ஆகியோருக்கு விளக்கம் வெளியிடும்படி மாதர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவ்விளக்க நகலையும், இம்மன்றங்களின் அமைப்பு வேலை குறித்த அறிக்கையையும் (இவ்வறிக்கையை 1963-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15 தேதிக்குள்) இந்தத்துறைக்கு அனுப்பி வைக்கும்படி மாதர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் வருடம் ஜூலை மீ 16-ந் தேதியிட்ட அறிக்கை எண், 20153.)

---

## 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் கீழ் உள்ள சில விதிகள் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குப் பொருந்துமாறு உறுதி செய்யப்படுதல்

## [Rules—Madras District Boards Act, 1920—Application of certain rules to Panchayat Union Councils—Confirmed.]

### (G. O. Ms. No. 1508, R.D. & L.A. dated 17th July 1963.)

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட சில விதிகள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் பணிபுரிவோருக்குப் பொருந்துமாறு ஒரு விதி வரைவு (Draft rule) 1963-ம் வருடம் ஏப்ரல் மீ 10-ந் தேதிய செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில், பொது அறிவிப்பாகவும், கருத்தறியவும் - வெளியிடப்பட்டது. தலைவாசல் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் மட்டும் இது விஷயத்தில் சில யோசனைகள் கூறியிருந்தார். அவை பரிசீலனைக்குப்பின், ஏற்றுக்கொள்ள முடியாதன என்று தள்ளப்பட்டன. ஆகவே, அந்த விதி வரைவு உறுதி செய்யப்படுகிறது.



### இணைப்பு

### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 178-வது பிரிவு, (1) துணைப்பிரிவு 58-வது பிரிவு (1) துணைப்பிரிவு ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1960-ம் வருடம் அக்டோபர் மீ 2-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்படி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள் கீழ்க்கண்ட விதியைச் செய்கிறார்கள்.

### விதி

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக்கழகங்கள் சட்டத்தின் கீழ், முன்பு மாவட்டக்கழகங்களில் பணிபுரிந்து வந்த அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் பணி விதிமுறைகள் குறித்த எல்லா விதிகளும், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளினால் தள்ளப்பட்டவை நீங்கலாக கீழ்க்குறித்த திருத்தங்களுக்குட்பட்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் பணி புரிவோருக்குப் பொருந்துவனவாகும்:—

(i) 'மாவட்டக்கழகம்' அல்லது 'தல ஸ்தாபனம்' (Local Board) என்று இருப்பவை, சம்பந்தப்பட்ட 'பஞ்சாயத்து யூனியன் மன்ற'த்தைக் குறிப்பதாகக் கருதப்படவேண்டும்.

(ii) நகரமன்றங்கள், தல ஸ்தாபங்களின் மேற்பார்வையாளர் (Inspector of Municipal Councils and Local Boards) என்றிருப்பது, கிராம அபிவிருத்திக் கமிஷனரைக் (Additional Development Commissioner) குறிப்பதாகக் கருதப்பட வேண்டும்.

(ii) 'மாவட்டக் கழகத் தலைவர்' என்று இருப்பது 'பஞ்சாயத்து யூனியன் கமிஷன'ரைக் குறிப்பதாகக் கருத வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் வருடம் ஜூலை மீ 17 தேதியிட்ட அரசாங்க ஆணை 1508.)

---

## பஞ்சாயத்து குடிமராமத்து வேலைத்திட்டம்—மிகுதி குடிமராமத்து மானியத்தொகை—அளிப்பது குறித்த விளக்கம்

## [Panchayat Kudimaramat Programme—Excess Kudimaramat Grant—Payment—Procedure Clarifications—Issued.]

### (Memorandum No. 104918, R. D. & L. A., dated 18th July 1963.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் வருடம் மார்ச்சு மீ 25-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 674-ல் ஒவ்வொரு விஷயத்திலும் கலெக்டரின் சிபாரிசின் பேரில், ரெவின்யூ போர்டு மிகுதி குடி மராமத்து மானியத்தொகையை அனுமதிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம நலத்துறை கணக்குப் பிரிவின் 1963-ம் வருடம் ஏப்ரல் மீ 19 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 53279-ல், ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், மிகுதி குடிமராமத்து மானியக் தொகையை ஈடுகட்டக்கேட்கும் பிரத்யேக உரிமை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. மிகுதிக் குடிமராமத்து மானியத்தொகை ஈடு கட்டுதற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் குறித்து விளக்கம் வேண்டுமென்று தஞ்சாவூர் கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

1. அரசாங்கம் இவ்விஷயத்தைக் கவனத்துடன் பரிசீலனை செய்து, மிகுதிக் குடிமராமத்து மானியத்தொகை அனுமதிப்பதில், மேற்குறித்த அரசாங்க அறிக்கையில் அறிக்கை எண் 53279 1963-ம் வருடம் ஏப்ரல் மீ 19 தேதி வரையறுத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அனுமதி வழங்கும் அதிகாரம் பெற்ற அதிகாரியாக இருப்பார் என்றும், ஆணை பிறப்பிக்கிறது. ரெவின்யூ போர்டு, வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைத் தொடர்ந்து செலுத்தும். மேற்குறித்த அரசாங்க ஆணையின் (ஆணை எண்: 674/25—3—1953) 6-வது பாராவில் குறித்துள்ள நடைமுறை திருத்தப்பட்டதாகக் கருதப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் வருடம் ஜூலை மீ 18-தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 104918,)

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

செப்டம்பர், 1963

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்:**
கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

**ஒவ்வொரு திங்கட்கிழமையும்:**
ஊர்ச்சாவடி. விஞ்ஞான கூடம்.

**ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்:**
ஊர்ச்சாவடி, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

**ஒவ்வொரு புதன்கிழமையும்:**
ஊர்ச்சாவடி.

**ஒவ்வொரு வியாழக்கிழமையும்:**
ஊர்ச்சாவடி, திருக்குறள் விளக்கம், நமது திட்டம்.

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்:**
ஊர்ச்சாவடி, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

**ஒவ்வொரு சனிக்கிழமையும்:**
ஊர்ச்சாவடி, நம் மாதர் மன்றம்.

## இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்

ஞாயிற்றுக்கிழமை (1—9—1963)

சிவப்பு பூசணி வண்டு ; கிராமம் போவோமே—செய்தி சித்திரம்.

திங்கட்கிழமை (2—9—1963)

வாகை மரம் : சித்திரம்—(என். ராகவன்).

புதன்கிழமை (4—9—1963)

காலராவும் தடுப்பு முறையும் ; சரித்திரக் கதைகள் : சகாய விலைக் கடைகள் அமைத்த அரசன் ; அன்பின் விளைவு—(எஸ். எம். ஏ. காதர்).

சனிக்கிழமை (7—9—1963)

இனவிருத்திக்காக கோழிகளை வாங்குதல்.

ஞாயிற்றுக்கிழமை (8—9—1963)

பசுந்தாள் உரம் ; எங்கள் தொழில்—பேட்டி ; வில்லுப் பாட்டு.

திங்கட்கிழமை (9—9—1963)

பூக்கடை—நாடகம்—(எஸ். பூமிநாதன்).

புதன்கிழமை (11—9—1963)

அம்மை குத்தலும், அதன் உபயோகமும் ; கவி அரசரின் வரலாறு : உரையாடல் ; எது எழுத்தாம் : என். ராகவன் எழுதியது.

சனிக்கிழமை (14—9—1963)

கானைமாட்டு ஈக்களை ஒழிப்பதெப்படி ?

ஞாயிற்றுக்கிழமை (15—9—1963)

சிறந்த தேங்காய் சாகுபடி; கிராமச் சாவடியில் வழக்கு விசாரணை.

திங்கட்கிழமை (16—9—1963)

வரப்பு வெட்டு—நாடகம்—(என். ராகவன்).

புதன்கிழமை (18—9—1963)

ரத்த அழுத்தம் ; சரித்திர கதைகள்—பாரியும் கபிலரும்; நர்ஸ் நளினி—(என். ராகவன்).

சனிக்கிழமை (21—9—1963)

கோழிகளில் நாடாப் புழு.

ஞாயிற்றுக்கிழமை (22—9—1963)

கேள்வி நேரம்.

திங்கட்கிழமை (23—9—1963)

ஸ்டேண்ட் மானேஜர்.

புதன்கிழமை (25—9—1963)

நிமோனியா : உரையாடல்; செய்தித்தாள்; ஊருக்கு உபகாரி—(எஸ். பூமிநாதன்).

சனிக்கிழமை (28—9—1963)

முட்டைகளைக் கெடாமல் வைத்தல்.

ஞாயிற்றுக்கிழமை (29—9—1963)

விசேஷ நாடகம்.

திங்கட்கிழமை (30—9—1963)

வளரும் தமிழகம்.

## கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

**வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிழமைகளில் ஒலிபரப்பப்படும். அதில், முதல் அம்சமாக, கேள்வியும் பதிலும் இடம் பெறுகிறது. அத்துடன் ஒலி பரப்பாகும் சிறப்பு நிகழ்ச்சிகள் வருமாறு :—**

செவ்வாய்க்கிழமை (3—9—1963)

பருத்தி சாகுபடி.

வெள்ளிக்கிழமை (6—9—1963)

ஜவான்கள் சேம நலக்குழு.

செவ்வாய்க்கிழமை (10—9—1963)

கன்றுக்குட்டி வளர்ப்பின் அவசியம்.

வெள்ளிக்கிழமை (13—9—1963)

கிராமியக் கடன்.

செவ்வாய்க்கிழமை (17—9—1963)

மீன் வளர்ப்பு பற்றிய சில குறிப்புகள்.

வெள்ளிக்கிழமை (20—9—1963)

நற்பழக்கம்—சேமிப்பு.

செவ்வாய்க்கிழமை (24—9—1963)

முப்படையில் சேர்வது எப்படி?

வெள்ளிக்கிழமை (27—9—1963)

பெரியம்மை தடுப்பு.

**வெளியிடுபவர் :**
**திரு. வி. பாலசுந்தரம், ஐ.ஏ.எஸ்.**

**ஆசிரியர் :**
**திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.**

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



1. இராமநாதபுரம் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு சென்ற 15-7-63-ல் நடந்தது. காரைக்குடியில் உள்ள மத்திய மின்-ரசாயன ஆராய்ச்சிக் கழகத்தில் நடந்த இக் கருத்தரங்கை, தமிழ்நாடு முதலமைச்சர் திரு காமராஜ் ஆரம்பித்து வைத்தார். மாநிலத் தொழிலமைச்சர் திரு வெங்கட்ராமன் தலைமை வகித்துப் பேசுகிறார்.
(விவரம் 11-ம் பக்கம் பார்க்கவும்.)



2. தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த ஐந்தாண்டுத் திட்ட விளம்பர ஆய்வுக் குழுவுக்கு (Study Team on Five Year Plan Publicity) செய்தித் துறை அமைச்சர் திரு பூவராகன் தேநீர் விருந்தளித்தார். திரு அடர்நாத் வித்யாலங்கர் தலைமையில, இக் குழுவினர் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்தனர்.



3. சென்னை பாலர் அரங்கில், சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் 61-வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அவ்வமயம், முதலமைச்சர் திரு காமராஜ், அவருக்கு, பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.



4. ஐக்கிய நாடுகள் சபையின் உணவு-விவசாய நிறுவன உறுப்பினர்கள் சென்னை வந்திருந்த போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு என். எஸ். எஸ். மன்றாடியார் அவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள்.



5. இலண்டனுக்குச் சென்று திரும்பிய தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு செல்லபாண்டியன் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது. அமைச்சர் திரு இராமையாவும், மற்றும் பலரும், அவரை வரவேற்றனர்.

Regd. No. M. 7277
©





# கிராமநலம்

அக்டோபர் 1963



"சுய கௌரவம் என்பது, மற்றவர் கொடுப்பதல்ல. நாமே உழைத்துப் பெறுவது. கடின உழைப்பின் மூலம், மகத்தான காரியங்களைச் சாதிக்கலாம். இதை, மகாத்மாஜி, அனுபவ வாயிலாக நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவர் வகுத்துக் கொடுத்திருக்கும் நிர்மாணத் திட்டம், எப்போதும் நமக்கு வழிகாட்டியாய் விளங்கவேண்டும். —>

வெறும் பேச்சால் பயனில்லை. உழைப்பே, நம் செல்வம். கிராம நலம் ஓங்க, எல்லோரும் ஆர்வத்தோடு உழைக்க முன் வரவேண்டும். பொதுநலவேலைகளில், சொந்த விருப்பு வெறுப்புகளைப் புகுத்தாமல், எல்லோருடனும் சேர்ந்து உழைக்கவேண்டும். அப்படிச் செய்தால், கிராமாந்தரங்களில் வாழும் லட்சக்கணக்கான ஜனங்களின் வாழ்வில், புதிய நம்பிக்கையும் உயர்வும், ஏற்படுவது நிச்சயம். அதை, நாம் கண்ணெதிரே பார்த்து வருகிறோம்."

—காமராஜ்

# கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

மடி 9 | அக்டோபர், 1963 | படி 1

## இரண்டும்—இருபதும்

——o)——

அக்டோபர் இரண்டு, காந்தி ஜெயந்திநாள். ஆக்கப் பணிகளில் நம்மை ஈடுபடுத்திக்கொள்கின்ற ஆர்வத்தினை, மக்களிடையே ஊட்டுகின்ற புனிதத் திருநாள். அத்துடன், இவ்வாண்டு அக்டோபர் 20-ம் [illegible], மிகவும் விசேஷம் பொருந்தியதாகும். சென்ற ஆண்டு அக்டோபர் 20-ம் தேதி, [illegible]தின் பாதுகாப்புக்கு மகத்தான சோதனை ஏற்பட்டது. அன்றுதான், சீனா நம்மீது அநியாயமாக, திடீர் என்று போர் தொடுத்தது. அதன் விளைவாக, நாட்டின் ஒருமைப் பாட்டையும், ஒற்றுமை உணர்வினையும் கட்டிக் காத்து, அவற்றைப் போற்றிப் பேணுகின்ற திருப்பணியிலே, பாரத நாட்டு மக்கள் அனைவரும், தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, விரசபதமேற்கிற முக்கியமான நாளாக, இது கருதப்படுகிறது.

ஒற்றுமையே நமது தாரக மந்திரமாக அமையவேண்டும். சிறுசிறு வேற்றுமைகளையும், பிரிவினை மனப்பான்மையையும் களைந்தெறிந்துவிட்டு, பாரத மக்கள் ஒன்றுபட்ட சக்தியாகச் செயல்படவேண்டும். பூசல்களிலும், விருப்பு வெறுப்புகளிலும் நம்மைப் பறிகொடுத்து விடாமல், பயனுள்ள ஆக்கப்பணிகளில் நம் கவனத்தைச் செலுத்தி, நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து, இந்த நாட்டை உயர்த்தவேண்டும். இதுவே, அக்டோபர் இரண்டும்—இருபதும், நமக்குப் போதிக்கும் அறிவுரைகளாகும். ஒன்றுபட்டு நிற்போம்! ஒற்றுமையுடன் செயலாற்றுவோம்!

இவ்வாண்டு அக்டோபர் 20-ம் தேதியை, எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பது பற்றிய முழுவிவரங்களை பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் கமிஷனர்களுக்கும், தனியாக அனுப்ப, அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

"கிராம நலம்" தொடங்கி, இன்றுடன் எட்டு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. 1955-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியில், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், "கிராம நல" முதல் இதழ் வெளியிட்டு விழா நடைபெற்றது. 'கிராம நல'ப் பத்திரிகையின் முதல் இதழ், பாரதத்தின் தவப் புதல்வர், பிரதமர் நேருஜி அவர்களால் வெளியிடப்பெறும் பேறு பெற்றது. அச்சமயம், "கிராம நல"த்தை வாழ்த்தி, முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் அளித்த செய்தியின் ஒரு பகுதியை, எதிர்ப்பக்கத்தில் காணலாம். "கிராம நலம்" ஒன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில்–நவபாரதத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கான புனித யாத்திரை, புதிய வீறுடன் தொடர்ந்து நடைபெறும் பொன்னான இந்த நேரத்தில், இந்த வாழ்த்துச் செய்தியில் கண்டுள்ள கருத்துக்களுக்கு, விசேஷ மதிப்பும், தீர்க்க தரிசனமும் உண்டு. எனவே, ஆரம்ப விழா வாழ்த்தை, வாசக நேயர்களுடன் இப்போது பகிர்ந்து கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# " ஒன்றுப் நின்றினி குன்றுது ஓதுவோம், ஜெய்ஹிந்த் "

பண்டைக் காலத்தில், பாரதநாடு எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்று, சீரும் சிறப்புமாக திகழ்ந்ததாக வரலாறு சான்று பகர்கின்றது. ஒரே தேசம் என்று இருந்த உணர்ச்சி, துரதிஷ்டவசமாக, குறைந்து, அந்த ஒரே தேசம் என்பது, அங்க தேசம், வங்க தேசம், கலிங்க தேசம், அந்த தேசம், இந்த தேசம் என்று 56 தேசங்களாக பிரிந்துபோன கதை, நாம் அனைவரும் அறிந்ததே. பிரிவினை என்று ஒன்று ஏற்பட்டுவிட்டால், ஒன்று 56 ஆக மட்டும் நிற்காது; அது பெரிதும் சிறிதுமாக மேலும் பெருகிவிடும் என்பதற்கு, இந்தத் தேசத்தில் இருந்த சமஸ்தானங்களின் எண்ணிக்கையே சான்றாக உள்ளது. 560 சமஸ்தானங்கள் என்று ஏற்பட்டதின் பயனாக, 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜமீன்கள், இந்தத் தேசத்தில் தோன்றியதையும் நாம் கண்டோம்.

## கவிஞனின் குமுறல் !

பிரிவினையின் காரணமாக சிதைந்துபோன பழம்பெருமை மிக்க பாரதத்தைக் கண்டு, மனம் நொந்த பாரதியார் "கொஞ்சமோ பிரிவினைகள்? ஒரு கோடி என்றால் அது பெரிதாமோ? நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால் " என்று, மனம் குமுறிப் புழுங்கினார்.

ஆண்டவன் அருளாலும், தேசப் பிதா காந்தியடிகளின் தவமுயற்சியாலும், எண்ணற்ற தேசபக்தர்களின் தியாகத்தாலும், 16 ஆண்டுகளுக்கு முன்னர், நம்நாடு, அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றது. விடுதலை பெற்ற பாரதம், தன்னை, ஜனநாயக, சமதர்ம சமுதாயமாக ஆக்கிக் கொள்வதற்காக, ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, உலகமே கண்டு அதிசயிக்கும் வண்ணம், முன்னேறியுள்ளது. சுதந்திரப் பாரதத்தின் மின்னல் வேக முன்னேற்றத்தினையும், பாரத சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் பண்டித நேருவின் கீர்த்தியையும், செல்வாக்கினையும் கண்டு மனம் பொறாத நயவஞ்சக சீனத்தலைவர்கள், ஒரு காரணமும் இன்றி, இந்தியா மீது திடீர் என்று போர் தொடுத்தனர். "ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி ?—ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ ?" என்று அன்று பாரதியார் கூறிய வாக்கை மெய்ப்பிப்பது போல, சீனப் படையெடுப்புக்கு முன் தினம் வரை இந்தத் தேசத்தில் இருந்துவந்த அரசியல் கட்சி வேறுபாடுகளும், மொழிவெறியும், பிரதேசப் பித்தும், ஆதவனைக் கண்ட பனிபோல், மறைந்து ஒழிந்தன. ஒற்றுமை உணர்வும், வீர உணர்ச்சியும், பாரத நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பொங்கி எழுந்தது.

## பராசக்தியின் வீராவேசம்

" பூமியினும் பொறை மிக்க உடையாள் " என்றும், " பெரும்புண்ணிய நெஞ்சினள் " என்றும் புகழ் பெற்ற பாரத அன்னை, கையிலே சூலாயுதம் ஏந்திய பராசக்தியாக மாறியதையும், பாரதத்தின் ஒற்றுமையையும், வீராவேசத்தையும் கண்டு நடுங்கிய வஞ்சகச் சீனர்கள், ஏதோ காரணம் சொல்லி பின்வாங்கியதையும், இன்று மலைகளுக்குப் பின் நின்று யுத்த ஆயத்தங்கள் செய்து வருவதையும், உலகம் கண்டு வருகிறது.

" ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியை "—பாரத சுதந்திரத்தை—நாம் பறிகொடாதிருக்க வேண்டுமானால், வடக்கே இமயம் உள்ளமட்டும், நமக்கு வடநாட்டவராகிய சீனத்தவர் உள்ள மட்டும்—இன்றுபோல் என்றும், நாம் அனைவரும் " ஜெய் ஹிந்த் " " ஜெய் ஹிந்த் " என்று, " ஒன்றுப் நின்றினி என்றுபினும் உயிர் சென்றுபினும் வலி குன்றுது ஓதுவோம் ". இந்த " ஜெய் ஹிந்த் " என்ற வீரிய வாசகம், நமக்கு மட்டுமல்ல, இந்தப் புண்ணிய பூமியில் தோன்றும் நமது பின் சந்ததிகளுக்கும், தேசிய உணர்ச்சியை ஊட்டும் தாரக மந்திரமாக இருந்துவரும் என்று நம்புவோம். எக்காரணத்தைக்கொண்டும்—ஜாதி, மதம், மொழி, பிரதேசம்—எது பற்றியேனும் நம்மிடையே பிரிவினை மனப்பான்மைகளோ, சண்டை சச்சரவுகளோ எக்காலத்தும் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வோமாக !

" எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும் " என்றும்,
" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே " என்றும்,

அமரகவி கூறிய வார்த்தைகள் நம் எல்லோருக்கும் மறை மொழியாக, மந்திரச் சொற்களாக, தாரக மந்திரமாக விளங்கட்டும்.

கோ. வெங்கடாசலபதி

# " நாட்டின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுவோம் "

(திரு கே. காமராஜ்)

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம், எல்லாரும் இந்திய மக்கள்" என்பதைச் சுதந்திர தினம், நம் மக்களுக்கு, ஆண்டுதோறும் நினைவூட்டுகிறது. சுதந்திரமாக வாழ்வது மக்களின் பிறப்புரிமை. இதனை யாரும் மறுக்க முடியாது. எனவே, ஓர் இனம் ஆளப்பிறந்த இனம் என்றும், இன்னோர் இனம் ஆளுகைக்கு உட்பட்ட இனம் என்றும் யாராவது கூறினால், அது பேதைமையாகும். இந்த உண்மையைக் காந்தி அடிகள் மிகவும் வற்புறுத்தி வந்தார்.

இந்த உயரிய லட்சியத்தை நிலைநாட்டச் சாத்துவிகப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி, இந்திய மக்களுக்கு அவர் நல்வழி காட்டினார். உண்மையும், அன்பும்தான் அவருக்கு ஆயுதங்களாக இருந்தன. அவற்றைக் கொண்டு அவர் அந்நிய ஆட்சியை அடிபணியச் செய்தார். அவருடைய அறவழியைப் பின்பற்றி நடந்த நாம், இன்று முழு உரிமை பெற்ற குடிமக்களாக, மகிழ்ச்சியுடன் வாழ்கிறோம்.

## புனிதத் திருநாள்

இந்திய மக்களுக்கு, சுதந்திர தினம் ஒரு புனிதமான நாளாகும். பிறந்த நாட்டில் நமக்கு உள்ள உரிமையையும், கடமையையும் சுதந்திர நாள் நமக்கு உணர்த்துகிறது. இன்று நாம் அனைவரும், நமக்குள் இருக்கும் எல்லாவித வேறுபாடுகளையும் மறந்து, உற்சாகத்துடனும், சரிசமமான மகிழ்ச்சியுடனும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில், சுதந்திரத்திற்காக எல்லாவிதமான கஷ்டநஷ்டங்களுக்கும் ஆளான எண்ணற்ற தேசபக்தர்களுக்கு, நாம் நமது மனப்பூர்வமான அஞ்சலியைச் செலுத்திக் கொள்வோமாக.

நம்முடைய தாய்நாடு அன்று அடிமைப்பட்டதற்குக் காரணம் என்ன ? இந்திய மக்களிடம் அப்போது ஒற்றுமையில்லை. பிரிந்து கிடந்தார்கள். அதனால் அடக்கி ஆள்வது சுலபமாயிற்று. மக்கள் ஒற்றுமையாகத் திரண்டு எழுந்தபோது, சுதந்திரம் கிடைத்தது. இந்த ஒற்றுமையை மட்டும் நாம் பேணி வளர்த்து வந்தால் போதும். நாம் யாருக்கும், எந்த நாட்டுக்கும் அஞ்சத் தேவையில்லை. எல்லையில் தொல்லை கொடுக்கும் சீனன் தன் கனவு பலிக்காது என்று திரும்பிப் போய்விடுவான். அவனாகப் போகாவிட்டால், நம்மால் போகச் செய்ய முடியும். அதற்கு நம்மிடையே ஒற்றுமையும் உறுதியும்தான் தேவை. இவற்றைக் கட்டிக் காக்கும்படி, தமிழ்ப் பெருமக்களை இந்தப் புனிதமான சுதந்திர தினத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## உரிமையும் கடமையும்

சுதந்திரம் வந்த உடனே எல்லா நன்மைகளும் கிடைத்து விடும் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறான கருத்தாகும். நாமாகச் சிந்தித்து, நமது நலத்திற்காக உழைக்கும் உரிமையைத்தான், நாம் சுதந்திரத்தின் மூலம் அடைகிறோம். நாம் எந்த அளவுக்கு உழைக்கிறோமோ, அந்த அளவுக்கு இன்பம் அடைய முடியும். அதிக உழைப்பு—அதிக இன்பம். இதுதான் சுதந்திரத்தின் குறிக்கோள். சகல நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று நினைப்பது தவறல்ல. ஆனால், நாம் அதற்காகக் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். இந்த வழியில் நம்மை ஊக்குவித்து, நல்வாழ்வுக்கு அடிகோலுவதுதான் சுதந்திரம்.

சுதந்திர அரசாங்கத்தின் முதல் சாதனை, நிலையான நிர்வாகத்தை உருவாக்கி, நாட்டில் அமைதியை ஏற்படுத்தியது ஆகும். அத்துடன், நாம் குடியாட்சி அமைப்பை ஏற்றுக் கொண்டு, நல்ல ஜனநாயகப் பாரம்பரியத்தை நிறுவியிருக்கிறோம். புதிதாகச் சுதந்திரம் பெற்ற பல நாடுகளில், நாம் இத்தகைய முன்னேற்ற நிலைமைகளைக் காண முடிவதில்லை. ஆனால், சுதந்திரம் அடைந்ததிலிருந்து, நமது நாட்டின் நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

## சாதனைகளின் சின்னம்—ஐந்தாண்டுத் திட்டங்கள்

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து, நாம் பொருளாதார, சமூக முன்னேற்றங்களுக்காக அயராது உழைத்து வருகிறோம். இந்த உழைப்பின் சின்னங்களே ஐந்தாண்டுத் திட்டங்கள். இவை மிகப் பெரிய திட்டங்கள். இவற்றை நாம் முழுமூச்சுடன் செயல்படுத்தக் காரணம், மக்களின் ஒத்துழைப்பில் நமக்கிருக்கும் நம்பிக்கைதான். இன்று நமது வாழ்க்கை வசதிகள் பெருகுவதுடன், எதிர்காலச் சந்ததியினரும் செழிப்பாக வாழவேண்டும். அதற்கு நாம் வழி வகுக்க வேண்டிய பொதுமக்கள் திட்டங்களுக்குத் தங்கள் நல்லாதரவைக் கொடுத்து வருகின்றனர். எதிர்காலத்திலும் இத்தகைய ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கச் சுதந்திர தினம் வழிகாட்டும் என்று நம்புகிறேன்.

தற்போதைய சூழ்நிலையில், விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நமது தேசிய வருமானத்தில் விவசாய வருமானம் ஏறக்குறையச் சரிபாதியாக இருக்கிறது. ஆகையினால், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம், தேசிய வருமான

அதிகரித்து, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். உற்பத்திப் பெருக்கத் திட்டங்களில் கிராமப் பஞ்சாயத்துகளும், குடியானவர்களும் முழு மூச்சுடன் ஈடுபடுவது அவசியம்.

கிராமங்களில் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு குடியானவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மக்களின் தேவையும், வாங்கும் சக்தியும் அதிகரித்து வருகின்ற காரணத்தினுல் உணவுப் பொருள்களின் விலை ஓரளவு உயர்ந்திருக்கிறது. ஆனுல், அது கட்டுக்கடங்காமல் போய்விடவில்லை. திட்டமிட்ட அபிவிருத்தியில், இவ்வாறு விலைகள் ஓரளவு அதிகரிப்பது எல்லா நாடுகளிலும் ஏற்படும் அனுபவமாகும். எனினும், அத்யாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். இந்த வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த பணியாற்ற முடியும். ஆகையினுல், இன்று அரசாங்கம், பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி வருகிறது.

தொழிற் பெருக்கத்துக்கும் நமது திட்டங்களில் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளோம். பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் தொழில்கள் செழித்து வளர அக்கறை காட்டி வந்திருக்கிருேம்.

தனியார் துறையிலும் புதிய தொழில்களைத் தொடங்குவதற்குச் சாத்தியமான எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்து வருகிறது. சென்ற ஆண்டில், பலவிதத் தொழில்களுக்கு மூன்று கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அரசாங்கம் அளிக்கும் உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, புதிய தொழில்களை உருவாக்குவதில் பல தொழிலதிபர்கள் ஊக்கம் காட்டி வருவது பாராட்டத்தக்கதாகும்.

### இருள் அகல....

தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது மின்சாரம். ஆகையினுல், மின்சார அபிவிருத்தியில் நாம் மிகுந்த அக்கறை காட்டி வருகிருேம். கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் நாம் இந்தியாவிலேயே தொடர்ந்து முன்னணியில் நிற்கிருேம். மேற்கொண்டு நீர் மின்சாரத் திட்டங்களைப் பரிசீலிப்பதுடன், பருவ மழை தவறிப் போனுலும் மின்சார உற்பத்தி பாதிக்காமல் இருக்க அனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்துவது பற்றியும், அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

தேசிய நெருக்கடி காரணமாக, நாம் இன்று செலவில் சிக்கனம் காட்டி வருகிருேம். ஆனுல், கல்வித் திட்டங்களின் வளர்ச்சி அதனுல் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொண்டிருக்கிருேம்: தமிழ்நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் எல்லா அபிவிருத்தித் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்குத்தான் அதிகம் செலவிடுகிருேம். ஏழை மாணவர்களுக்குப் பகலுணவு அளிக்கும் திட்டமும் நல்ல முறையில் நிறைவேறி வருகிறது.

நாம் சமீப காலத்தில் மேற்கொண்ட சமூக நலப் பணிகளில் மிக முக்கியமானது, 65 வயதுக்கு மேற்பட்ட

### மகாத்மாவின் மாண்பு

" தனி மனித அறம், பொதுப் பணி இரண்டும் ஒன்ருய் இணைந்த சின்னமே மகாத்மா காந்தி. மனிதனின் மனச்சாட்சி என்பது வீட்டிலே மட்டும் வாழ்ந்து, தொழிற்சாலை, காரியாலயம், வகுப்பறை, சந்தைக்கடை இங்கெல்லாம் வாழவில்லை என்ருல், ஊழல், கொடுமை, சர்வாதிகாரம் இவற்றுக்கு ராஜபாட்டைதான் திறந்து கிடக்கும்.

அரசியலிலே அறச் செல்வத்தைக் காந்தி நிறைத்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் எழும்பிரச்னைகளை என்றென்றும் நிலைக்கும் நிரந்தரஒளியிலே, அகில பிரபஞ்சத்துக்கும் உரிய மதிப்புகளைக்கொண்டு அலசிப்பார்த்தார். நிலையா தொழியும் பொருளிலிருந்து, என்றும் நிலைக்கும் சாசுவத அம்சத்தையே எப்போதும் வடித்தெடுத்தார். எல்லோரும் வழக்கமாக மதிப்பிடக் கைக்கொள்ளும் அளவு கோலை, இந்தவிதமாக அவர் முறித்தெறிந்தார். ஏனென்ருல், மனிதனின் செயல் திறனை அமுக்கி நெருக்கிவிடுவது அந்த அளவுகோல். செயலுக்குப் புதிய பரிமாணம் ஒன்றை அவர் கண்டுபிடித்தார். சொந்த வெற்றியோ, சுகமோ பற்றிய யோசனைகளுக்கு அவர் கட்டுப்படவில்லை. அதனுல், சமூக ' அணு ' வைப் பிளந்து, புதியதொரு சக்தியைக் கண்டார். அது அவருக்குத் தந்த ஆயுதங்களைக்கொண்டு தாக்கினுர். எதிரிகளுக்கு அவற்றிலிருந்து பெரும்பாலும் தற்காப்பே இல்லாது போயிற்று. ஒவ்வொருவரும் செய்யக்கூடியது: ஆனுல் எவரும் செய்யாதது—இதைத்தான் அவர் செய்தார் ; இதிலேதான் அவருடைய பெருமை அடங்கியிருக்கிறது.

கவியரசர் தாகுர் எழுதினுர் : " உயிரோடுலவும் காந்தி, ஒரு வேளை தம் லட்சியத்திலே வெற்றி பெருமல் போகலாம் : மக்களை அவர்களுடைய தீச்செயல்களிலிருந்து திருத்த முடியாமல், புத்தர் தோற்றதைப்போல, கிறிஸ்து தோற்றதைப்போல, இவரும் ஒருவேளை தோற்கலாம். ஆனுல், வரும் யுகங்களுக்கெல்லாம், தம் வாழ்வை படிப்பினையாக்கிய ஒருவர் என்பதாக என்றென்றும் மக்கள் இவரை நினைவு கூர்வார்கள்."

—லூயிபிஷர் " காந்தி வாழ்க்கை."

---

ஆதரவற்ற முதியோர்கள் அனைவருக்கும் பென்ஷன் தரும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், இதுவரை பலர் பயனடைந்து வருகின்றனர்.

இன்று பல துறைகளிலும் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் அரசாங்கம் மட்டும் அல்ல; பொது மக்கள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் முதலான சகல தரப்பினரும் காரணமாவார்கள். இதனை நல்ல முறையில் உணர்ந்து கொண்டு, நாட்டின் வளர்ச்சிக்காக நாம் மேலும் பாடுபட வேண்டும். அதற்கு வேண்டிய ஊக்கத்தைச் சுதந்திர தினம் நமக்கு அளிக்கும் என்று நம்புகிறேன். அனைவருக்கும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள். ஜெய் ஹிந்த்.

(வானொலிப் பேச்சு—1963-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி நிகழ்த்தியது.)



# எனது அமெரிக்க சுற்றுப்பயணம்

திரு. எம். பக்தவத்ஸலம்

தேசியக் கவி பாரதியார் "தனியொருவனுக்கு உணவில்லை யெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினுர். தீர்க்கதரிசனமான வாசகம் அது. அதன் அடிப்படையில், உலக நாடுகளின் உணவுப் பிரச்னையில் கவனம் செலுத்த, 1963 ஜூன் மாதம் 4-ந் தேதி அன்று வாஷிங்டனில் உலக மகாநாடு முதன் முதலாகக் கூடியது. வறுமையும், இல்லாமையும், பசிப்பிணியும் உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும், உலகம் அனைத்தையும் அவை பாதிக்கும் என்ற கருத்தோடு, அவைகளை அகற்றுவதற்காக, உலக நாடுகள் எல்லாம் கலந்து கொண்ட மகாநாடு அது. உணவுப் பொருள்கள் உபரியாக உள்ள அமெரிக்க நாடு, உணவுப் பற்ருக்குறை உள்ள நாடுகளின் உணவுப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் தனக்குள்ள பங்கை உணர்ந்து, இந்த மகாநாட்டைக்கூட்டியது. 104 நாடுகளிலிருந்து சுமார் 1,300 பிரதிநிதிகள் இம்மகாநாட்டிற்கு வந்திருந்தனர்.

### புதியதோர் ஊக்கம்

உணவுப் பிரச்னை பற்றி நாம் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில், இந்த மகாநாடு, நமக்குப் புதியதோர் ஊக்கத்தை அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. மகாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் மிகுந்த அக்கறையோடு உணவுப் பிரச்னை பற்றிய பல அம்சங்களையும் நன்கு விவாதித்துத் தெளிவு படுத்தினுர்கள். உணவுப் பற்ருக்குறையை நீக்குவதோடு மக்கள் உண்ணும் உணவில் சத்துள்ள பொருள்களைப் போதிய அளவு சேர்க்கவேண்டும் என்ற கருத்தும் வற்புறுத்தப்பட்டது. அதோடு, ஆண்டு தோறும் ஜனத்தொகை வேகமாக அதிகரித்துக் கொண்டே போகின்ற நிலையில், அதைக் கட்டுப்படுத்தாமல் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்று மகாநாட்டிலே உள்ள எல்லாரும் ஒப்புக் கொண்டனர். இது சம்பந்தமாகக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் இந்த மகாநாட்டில் போதிய இடம் பெற்றது. குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், அதை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் மக்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இந்த உணவு மகாநாட்டில் கலந்து கொண்ட தலை சிறந்த விஞ்ஞானிகள், நிர்வாகிகள், மற்ற பிரமுகர்கள் ஆகிய அனைவரும் உணவுப் பிரச்னையின் பல அம்சங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்தார்கள். பல குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும், குறிப்பிட்ட பிரச்னைகளை நன்கு ஆராய்ந்து, சிபார்சு செய்தன. மகாநாட்டின் இறுதி நாளான ஜூன் மாதம் 18-ம் தேதியன்று, மகாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் "எல்லாரும் ஒன்று சேர்ந்து உணவுப் பிரச்னையைத் தீர்ப்போம்" என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். முதன் முதலாகக் கூடிய இந்த மகாநாடு உலக உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் சிறந்த ஒரு வழி காட்டியாகத் திகழ்ந்து, இதில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினருக்கும் பொது நல ஊழியர்களுக்கும் புதியதோர் உற்சாகத்தை அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்ற எனக்கு, அந்த நாட்டைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. மிகவும் செழிப்பான நாடு அது. அந்த நாட்டின் வளத்தைக் காணும்பொழுது, கடந்த 100 ஆண்டுகளில் அவர்கள் எத்தகைய மகோன்னதமான சாதனைகளைச் சாதித்திருக்கின்ருர்கள் என்பதை நாம் உணர்கிருேம். எவ்வாறு அவர்களால் இவற்றைச் சாதிக்க முடிந்தது என்ருல், அதற்குக் காரணம் அவர்களுடைய உயர்ந்த பண்பாடும், தேசிய உணர்ச்சி, கட்டுப்பாடு, தியாக உணர்ச்சி இவைகளேயாகும்.

ஒரு நாட்டிலே உள்ள காட்சிகளையும், நினைவுச் சின்னங்களையும் பார்க்க வருகின்றவர்கள் அநேகமாக அந்நிய நாட்டினராகத்தான் இருப்பார்கள். ஆனுல், அமெரிக்காவில் உள்ளவர்கள் தங்கள் நாட்டின் சிறப்புகளை தாங்களே அடிக்கடி சென்று காண்கின்றனர். அமெரிக்காவில் ஆங்காங்கு உள்ள தலைவர்களின் நினைவுச் சின்னங்களை அமெரிக்கர்களே திரும்பத் திரும்பக் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்க்கின்றனர். தங்கள் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து, அவற்றை நன்கு விளக்கிக் காட்டுகின்றனர். நூறு ஆண்டுகளுக்கு முன்பு, கடைசியாக சுதந்திரப் போராட்டம் நடந்த ஸ்தலத்தில் மிக அழகிய தேசிய ராணுவப் பூங்கா ஒன்று அமைத்திருக்கின்ருர்கள். அந்தப் போர் நடந்த விவரங்களையெல்லாம் கண்ணுரக் கண்டு பேரார்வம் அடையக்கூடிய அளவுக்கு 'பனோரமா படங்களைக் காட்டுகின்றனர். அந்த ராணுவப் பூங்காவிலே

குழந்தைகள் அனுபவிப்பதற்கென்று ஒரு தனிப் பூங்கா அமைத்திருக்கின்றனர். 'பாண்டசி லாண்டு' என்னும் அந்தப் பூங்கா, குழந்தைகளுக்கென்று நல்ல முறையிலே அமைக்கப்பட்டு, விஸ்தரிக்கப்படக் கூடியதாக விளங்குகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில், நாமும் நம்முடைய தலைசிறந்த பண்பாட்டை இன்னும் வளர்க்கவேண்டும், பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதிப்படுகின்றது.

## பொன் கொழிக்கும் நாட்டில் விவசாயம்

விவசாயத்தைப் பொறுத்த மட்டில், முக்கியமாக சில ஆண்டுகளுக்குள்தான் மகத்தான அபிவிருத்தி அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விவசாயி 23 பேருடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்கிறார். எனவே, விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கின்றது. அதே சமயத்தில், தொழில் துறையில் அவர்கள் சிறந்த முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர். உதாரணமாக டெட்ராய்ட் என்ற இடத்தில் உள்ள ஒரு மோட்டார் தொழிற்சாலையில், 54 வினாடிகளுக்கு ஒரு கார் வீதம், ஒரு நாளைக்கு 1064 கார்கள் தயாரிக்கப்படுகின்றன.

## அறிவொளி பரப்பும் வேலை

கல்வி அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில், எல்லா நிலைகளிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. செகண்டரி படிப்பு வரை இலவசக் கல்வி தரப்படுகிறது. அதேபோல் பாடப் புத்தகங்களும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. பள்ளிப் பிள்ளைகளின் மத்தியான உணவுக்கு அதிகமாக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆரம்பப்பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துள்ள உணவு கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுப்பதற்காக மட்டுமே மத்திய அரசாங்கத்திடமிருந்து ஆரம்பப் பள்ளிகளுக்கு உதவி கிடைக்கின்றது.

தாய்மார்கள் தொண்டர்களாக வந்து ஒவ்வொரு பள்ளியிலும் பகல் வேளைகளில் குழந்தைகளுக்குப் பரிமாறுகின்ற காட்சி இனியதொரு காட்சியாகும். வசதி உள்ள பிள்ளைகளும் பள்ளிக்கூடத்திலே சாப்பிடுவது நல்லது என்ற கருத்தில், அவர்கள் தங்களுக்குத் தரப்படுகின்ற உணவுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு மற்ற மாணவர்களுடனும் ஆசிரியைகளுடனும் சேர்ந்து உண்ணக் கூடிய ஓர் ஏற்பாடு சிறந்த ஏற்பாடாகும். அது அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

சிகாகோவில் உள்ள நகராண்மைக் கழகக் கல்வி ஸ்தாபனம் மிகப்பெரிய ஸ்தாபனம். அந்த ஸ்தாபனம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி வகுப்பு என்று ஒரு தனிப் பிரிவு. பாடம் சொல்லிக் கொடுப்பதற்கென்று மற்றொரு பிரிவு. பாடத் திட்டங்களிலும் பாடப் புத்தகங்களிலும் விசேஷக் கவனம்செலுத்துவதற்கு வேறு ஒரு பிரிவு. பள்ளிக்கூடத்திற்குத் தகுதியான கட்டிடம் கட்டுவதிலே ஆராய்ச்சி செய்வதற்குப் பல மாதிரிக் கட்டிடங்கள் இங்கு வர்ணப்படங்களாகக் காட்சி அளிக்கின்றன.

கல்வி வளர்ச்சியில் அமெரிக்க மக்கள் எவ்வளவு தூரம் ஆர்வம் காட்டி உதவி செய்கின்றனர் என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பள்ளிப் படிப்புக்காகச் செலவு செய்யப்படுகின்ற ஏராளமான தொகையிலே 100–க்கு 80 பங்கு அந்தந்தப் பகுதி மக்களால் வரியாகவும் நிதியாகவும் செலுத்தப்படுகின்றது என்று கேள்விப்பட்டேன். மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் ஓரளவுதான் மானியமாகக் கொடுக்கின்றன. பள்ளிக்கூடக் கட்டிடங்களும் 100-க்கு 75 வீதம் மக்களிடம் கட்டுகை வாங்கித்தான் கட்டப்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள் சிறிய வகையிலே நடைபெறுகின்றன. ஆனால் அவைகளிலே கூட பெரும்பாலானவை அரசாங்கத்தின் உதவியின்றி, மக்களுடைய ஆதரவைக் கொண்டும், தர்ம ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டும் நடைபெற்று வருகின்றன. மத்திய ஆட்சி, பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கும் உதவிகள் ஆராய்ச்சிக்காக செலவிடப்படுகின்றன.

கலிபோர்னியாவில் உள்ள பெர்க்லி என்ற பல்கலைக் கழகத்திற்கு என்னை அழைத்திருந்தார்கள். பல பேராசிரியர்கள் பல பிரச்னைகளைப் பற்றியும் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். நம் நாட்டுப் பிரச்னைகளைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் மூன்று பேர் நம் நாட்டுக்கும் வந்தவர்கள். அவர்களிலே ஒருவர் இந்திய அரசியல் விவகாரங்களைப் பற்றி படித்துக் கொண்டிருக்கிறார். நம் நாட்டிலே நடைபெறுகின்ற அரசியல் நடவடிக்கைகளை யெல்லாம் ஒன்று விடாமல் கவனித்து உணர்ந்திருப்பதை நான் கண்டேன்.

அந்தப் பல்கலைக் கழகத்தின் நூலகத்தைச் சுற்றிக் காட்டினார்கள். அந்த நூலகத்திலே பத்திரிகைப் பிரிவு ஒன்று இருந்தது. நம் நாட்டு ஆங்கில, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடப் பத்திரிகைகளையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஹிந்து, சுதேசமித்திரன், ஆந்திர பத்திரிகா போன்ற பத்திரிகைகளை நான் கண்டேன். மிகப் பழைய பத்திரிகைப் பிரதிகளையும் அவர்கள் சேர்த்து வைத்திருந்தார்கள்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலே நம் நாட்டு மாணவ மாணவிகள் பலர் இருக்கின்றனர். ஏழாயிரம் இந்திய மாணவர்கள் அங்கே சேர்ந்து படிப்பதாகக் கேள்விப்பட்டேன். மாணவர்கள் உதவிப் பணம் பெற்றுப் படிப்பவராக இருந்தாலும், ஒழிந்த நேரங்களில் ஏதேனும் வேலை பார்த்து, தங்களுடைய செலவைச் சமாளித்துக் கொள்கின்றார்கள்.

போக்குவரத்துக்குப் போதிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. வாஷிங்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் பல பெரிய பாலங்கள் கட்டி, போக்குவரத்து வசதி செய்திருக்கிறார்கள். புதிதாகவும் பாலங்கள் கட்டிக்



கொண்டு வருகிறார்கள்; போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்குபோல் பாதைகளை அமைத்திருக்கிறார்கள்.

## தூய்மையின் இருப்பிடம்

அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்தபோது முக்கியமாக ஒன்று என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதுதான் துப்புரவு. அதைத்தான் நாம் முக்கியமாக உணர்ந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவேன். நகரங்களிலாகட்டும், கிராமப் புறங்களிலாகட்டும், அல்லது பாதைகளிலாகட்டும், எங்கும் துப்புரவே காணப்படுகிறது. தப்பித் தவறிகூட, ஒரு துண்டுக் காகிதமோ அல்லது வேறு அழுக்கோ—அவை போடப்பட வேண்டிய இடம் தவிர—வேறு இடங்களில் போடப்படுவதில்லை. குழந்தைகள் கூட அந்தத் தவறுகளைத் செய்வதில்லை. அப்படி யாராவது தவறு செய்தார்களானால், அது உடனுக்குடன் கவனிக்கப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு இடமில்லாமல் இந்த நற்பழக்கம் மக்களிடம் படிந்திருக்கிறது. நகரங்களைச் சுற்றி அழகான ஏரிகளும், ஆறுகளும், அடர்ந்த காடுகளும் இருந்தபோதிலும், கொசு என்பது அடியோடு கிடையாது. மருந்துக்குக்கூட காண முடியாது. அமெரிக்கர்கள் இனிப்பு சாப்பிடுவதில் மிக ஆசையுள்ளவர்களாகக் காணப்பட்டாலும், ஈக்களை எங்குமே காண முடியவில்லை.

அமெரிக்காவின் முக்கியமான பிரச்னை,விபத்துக்களாகும். நகரங்களில் தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதாகத் தோன்றுகிறது. புராதனக் கட்டிடங்கள் அநேகமாக மரத்தினால் கட்டப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக, தீ விபத்துகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் இப்பொழுது கட்டப்படுகின்ற வீடுகளில் மரத்தைக் குறைத்து விடுகின்றனர். அவ்வாறே நல்ல ரோடுகள் இருந்தும் ஏராளமான மோட்டார்கள் இருப்பதனால் கார் விபத்துகள் ஏற்படுகின்றன. போக்குவரத்தைச்சமாளிக்கவும், நெரிசலைத் தவிர்க்கவும் பல சாதனங்கள் இருக்கின்றன. தவறுகளைக் கண்காணிப்பதற்குத் திறமையுள்ள போலீசார்களும் இருக்கின்றனர். இருந்தும், ஆண்டுதோறும் 30,000 பேர் விபத்துக்குள்ளாகின்றனர், என்று கூறப்படுகின்றது. வண்டிகளை ஓட்டுவதிலேயும், அவற்றை நிறுத்தி வைப்பதிலேயும் தவறுகள் செய்யப்பட்டால், போலீசார் உடனுக்குடன் கவனித்து, அந்த வண்டிகள் மேற்கொண்டு போகவொட்டாமல் நிறுத்தி விடுகின்றனர். அந்த வண்டிகளில் டிக்கெட் ஒன்று வைத்து விடுகின்றனர். அந்த டிக்கெட்டில் குறித்தபடி 10 டாலரோ, 15 டாலரோ அல்லது 20 டாலரோ அபராதம் செலுத்த வேண்டும். அதுவும் மூன்று தினங்களுக்குள் செலுத்தவேண்டும். மற்றபடி நீதி மன்றங்களுக்குப் போகவேண்டிய அவசியம் இல்லை. குற்றத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள்தான் அங்கே போகவேண்டி இருக்கும். ஆனால் இவ்வாறு குற்றம் செய்பவர்களோ, அபராதம் செலுத்துபவர்களோ அதிகமாக இல்லை என்று அறியும்போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

அமெரிக்கர்கள் விடுமுறையை அனுபவிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். விடுமுறையை அனுபவிப்பதற்குத் தவறமாட்டார்கள். இந்த மகாநாடு நடந்து கொண்டிருந்த இரண்டு வாரங்களில் அதற்கு வந்திருந்த பிரதிநிதிகளும், விடுமுறையை அனுபவிக்க வேண்டுமென்று, அவர்களை சனி, ஞாயிறுகளில் தங்கள் வீடுகளுக்கு அழைத்து மகிழ்வித்தார்கள். தங்கள் வீடுகளில் தங்கள் குடும்பத்தோடு விடுமுறையைக் கழிக்க வேண்டும் என்பதற்காக பிரதிநிதிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தந்தனர்.

## அமெரிக்க மக்களின் குடும்ப வாழ்க்கை

நம் மக்களைப்போல் குடும்ப வாழ்க்கை நடத்துவதில் அவர்களுக்கு ஆசை அதிகம். மற்றவர்களோடு அன்போடும் அன்னியோன்யமாகவும் பழகுகிறார்கள். தங்கள் குடும்பங்களை நல்ல முறையிலே பராமரிக்கவேண்டும் என்ற ஆர்வம், அமெரிக்கப் பெண்மணிகளுக்கு நிரம்ப உண்டு. நன்றாகப் படித்திருப்பதுடன் உத்தியோகம் செய்ய ஆசைப்பட்டு, அவ்வாறு உத்தியோகத்தில் ஈடுபட்டபோதிலும் குடும்பத்திற்கு அவர்கள் முதலிடம் கொடுத்து வருகிறார்கள். சிலர் குடும்ப வேலைகளே பிரதானம் என்று கருதி தாங்கள் வகித்துவரும் உத்தியோகங்களை விட்டு விடுகின்றனர்.

ஒருவருக்கொருவர் நம்பிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையை அமெரிக்கர்கள் பரிபூரணமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். அங்கு கடன் வசதி சுலபமாகக் கிடைக்கும். அவ்வாறு சுலபமாகக் கடன் கொடுப்பதால் வாங்குகிறவர்கள் ஒழுங்காக நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை பரிபூரணமாக இருக்கிறது. வேறு ஊருக்குச் சென்றவர்கள் தங்கள் செக்கைக் கொடுத்து எந்தப் பொருளையும் வாங்கலாம். ஓர் ஊரிலே பெட்ரோல் கணக்கு வைத்துக்கொண்டு 200 மைலுக்கு அப்பால் உள்ள வேறோர் ஊரில் பெட்ரோல் போட வேண்டியிருந்தால் அதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. சுருக்கமாக, வர்த்தகப் பரிவர்த்தனையில் அமெரிக்கர்கள் பணத்தைக் காட்டிலும் மனிதர்களின் பண்பாட்டில் அபார நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

அமெரிக்கர்கள் பணம் திரட்டுவதிலே மிகுந்த ஆசை உள்ளவர்கள்தான். ஆனால், தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை நேரங்களில் ஒவ்வொரு கோயிலிலும் ஏராளமான பேர்கள் பக்தியோடு பிரார்த்தனை செய்வதைக் காணலாம். நிறைய கோயில்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள இந்தப் பொருளாதார, சமுதாய வளர்ச்சிகள் கடந்த நூறு ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டவையாகும். நாம் சுதந்திரம் அடைந்து பதினாறு ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆனால் இந்தப் பதினாறு ஆண்டுக்கால வளர்ச்சியானது, அமெரிக்காவின் நூற்றாண்டுக் கால வளர்ச்சியைப் பார்த்தபிறகு நமக்கு நம்பிக்கை தருவதாகவே எனக்குத் தோன்றுகிறது. இந்த நம்பிக்கை, நம் மக்கள் அனைவரது உள்ளத்திலும் ஏற்படவேண்டும்; அதன் பயனாக, நாம் மேலும் மேலும் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதே என் அவா.



# விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்



## கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனர்

[''விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்'' வரிசையில், இது நான்காவது கட்டுரை. சென்ற இதழில், லோக மான்ய பாலகங்காதர திலகரின் வாழ்க்கை வரலாறு இடம் பெற்றிருந்தது. அவருடைய பிரதம சிஷ்யராகத் திகழ்ந்து, ''தென்னாட்டுத்திலகர்'' எனப் புகழ் பெற்ற தமிழ் வீரர் வ. உ. சிதம்பரனாரின் வரலாறு, இவ்விதழில் இடம் பெறுவது பொருத்தமே. கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த தியாகி, தமிழ் உணர்வின் சின்னம், திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு, பள்ளிச்சிறார் களுக்குப் பெரிதும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

— ஆசிரியர்.]

நாட்டு மக்களின் தேச பக்திக் கனலைத் தூண்டிவிட்டு வெள்ளைக்கார ஏகாதிபத்யத்தை நேருக்கு நேர் எதிர்த்து நின்று போராடிய தியாகச் செம்மல்களில், கப்பலோட்டிய தமிழர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரை முன் வரிசையில் குறிப்பிடவேண்டும். அவர் வாழ்ந்த காலம், மக்கள் வெள்ளையர் ஆதிக்கத்தைக் கண்டு மருண்டு கொண்டிருந்த காலம். வீரத்தின் விளைநிலமான தென் பாண்டி நாட்டில் தோன்றிய வீரர் சிதம்பரம் பிள்ளை, மக்களிடையே மங்கிப்போய்க் கிடந்த தேசியக் கனலை கொழுந்து விட்டு எரியச் செய்தார். நாட்டு மக்களின் தேச பக்தியைத் தூண்டிவிட்டார். தமிழ் நாட்டில் தொழிலாளர் இயக்கம் கண்டவர் அவர். அவருடைய வீர வரலாறு, தமிழனுக்கு மங்காத காவியம் ஆகும்.

தென் பாண்டி நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில், உலக-நாதபிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் திருக்குமாரராக, வ. உ. சிதம்பரனர் 1872-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5-ம் தேதி வியாழக்கிழமை பிறந்தார்.

### " விளையும் பயிர் முளையிலே.... "

அவர் முதன் முதலில் கல்வி பயின்றது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே. "விளையும் பயிர் முளையிலே" என்பது போல, இளமையிலேயே, இவரது உள்ளத்தில் தமிழ்ப் பற்று ஆழ்ந்து பதிந்து வளரலாயிற்று. பின்னர், இவர் தூத்துக்குடி செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் ஆங்கிலம் பயின்றார். மெட்ரிகுலேஷன் பரிட்சையிலும், பின்னர் வழக்கறிஞர் பரிட்சையிலும் தேர்ச்சிபெற்றார்.

இவர், வயதில் இளைஞராகயிருந்தும், அந்தக்காலத்திலேயே, சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். வருமானம் ஒன்றையே பிரதானமாக நாடாமல், ஒழுக்கம் வாய்மை இவற்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இந்தச் சீரிய நோக்கு இவரிடம் வாழ்நாள் முழுதும் காணப்பட்டது. சிதம்பரனருக்கு ஏழைகளிடத்தில் இரக்கம் அதிகம். அவர்களுக்காக, பொருளை எதிர்பாராமல் வழக் கெடுத்துரைப்பதுண்டு.

இவருடைய 23-ம் வயதில், சிதம்பரம் பிள்ளைக்கும், திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் செல்வி வள்ளியம்மை என்ற மங்கை நல்லாளுக்கும் திருமணம் நடைபெற்றது. அவ்வம்மையார், கணவன் குறிப்பறிந்து நடக்கும் குணக்குன்றாக விளங்கினார்.

இயற்கையிலேயே, பிள்ளையவர்களிடம், தேசபக்தி அந்த வயதிலேயே மிகுந்து காணப்பட்டது. பழம்பெருமை வாய்ந்த பாரத நாடு, அந்நியரிடம் அடிமைப்பட்டு நம் நாட்டுமக்கள் மிகவும் கேவலமானநிலையில் நடத்தப்படுவது கண்டு அவருடைய சுதந்திர உள்ளம் குமுறியது. மக்களின் அரசியல் சுதந்தரம் பறிபோயிற்று. அந்நிய அட்சி, தமிழரின் வாணிபத்துக்கே உலைவைத்துவிட்டது. தமிழரது உரிமையைப் பறித்து, உடைமையையும் கொள்ளை கொள்ளும் வெள்ளை வணிகரை விரட்டியடிக்க எண்ணியவராய், காலத்தை எதிர்பார்த்திருந்தார் சிதம்பரனர்.

### வங்காளப்பிரிவினை—தேசபக்தர்களின் குமுறல்

இந்த நிலையில்தான், வங்கப் பிரிவினைக்கிளர்ச்சி வலுக் கலாயிற்று. ஒன்றுபட்டு ஒரே. தேசிய இனமாக இருந்த வங்காளியரை, இந்து என்றும் முஸ்லீம் என்றும் பிரித்து, வங்க மாநிலத்தை இந்து வங்காளம், முஸ்லீம் வங்காளம் என்று இரண்டாகத் துண்டாட நினைத்தார் வைசிராய் லார்டு கர்சான். ஆனல் ஏகாதியபத்தியத்தின் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு வங்காளிகள் இரையாக வில்லை. வங்க மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இந்த அக்கிரமத்தை எதிர்க்க ஆர்ப்பரித்து எழுந்தனர். வங்கப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டமானது, வங்காளத்தோடு நிற்காமல், பாரதநாடெங்கினும் பரவியது. காலத்தை எதிர்பார்த்து இருந்த சிதம்பரம் பிள்ளை சீற்றங்கொண்ட சிங்கமென எழுந்தார். சுதந்திரப் போர்க்களத்திலே குதித்தார். வீரத்திற்கு விளைநிலமான பாண்டிய நாட்டில் படை திரட்டினர். சவரத் தொழிலாளர், சலவைத்தொழிலாளர், வண்டி ஓட்டுபவர்கள் ஆகிய பாட்டாளி மக்களும் அவரது படையில் சேர்ந்தனர். எங்கு பார்த்தாலும், மூலைக்கு மூலை கூட்டங்கள் போட்டு பேசி மக்கள் மனத்தில் சுதந்திரக் கனலை மூட்டினார். சுதேசி இயக் கத்தை முன்னின்று நடத்திய சிதம்பரம்பிள்ளை, அந்நிய ஆட்சியின் உயிர்நாடியாக உள்ள ஆங்கிலேய வாணிகக் கூட்டத்தின் மீதே தன்னுடைய முதல் தாக்குதலை ஆரம்பித்தார்.

### 'மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்'

தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் இடையில் வாணிகப் பொருள்களை ''பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி''யின் கப்பல்களே ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. அதற்கு எதிராக, பிள்ளையவர்கள், தூத்துக்குடி இந்திய வர்த்தகர்களின் ஆதரவு கொண்டு 1906-ம் ஆண்டில் "சுதேசிக் கப்பல் கம்பெனி" ஒன்றைத் தோற்றுவித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த பால நத்தம் ஜமீந்தார் திரு. பாண்டித் துரைசாமித் தேவரைக் அக்கம்பெனியின் தலைவராக்கினர். தாம் செயலாளராக இருந்து காரியங்களைக் கவனித்தார், பங்குக்கு 10 ரூபாய் வீதம் பத்து லட்சம் ரூபாய் மூலதனம் என்று நிர்ணயித்து நிதி திரட்டினர். எனினும் சுதேசிக் கம்பெனிக்கு பொருள் வசதி போதுமானதாக இல்லை. எனவே, அவர், வடநாட்டில் பல இடங்களுக்குச் சென்று பொருள் தேடினர். "ஆங்கிலேயர் நம் அரசைப் பறித்தது பொருள் பறிக்கவேயாகும். ஆகவே, பொருள் பறிக்கும் வாணிபக் கப்பலுக்கு வேட்டுவைத்தாலொழிய ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறமாட்டார்கள் " என்று வீர முழக்கம் செய்தார்.

இந்தக் காலத்திலேதான், வங்கத்திலே விபின சந்திரபாலரும், பாஞ்சாலத்தில் லாலா லஜபதி ராயும் மராட்டியத்தில் லோகமான்ய திலகரும் சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தார்கள். வடநாட்டிற்கு சென்றிருந்த பொழுது, சிதம்பரனருக்கு லோகமான்ய திலகரின் நெருங்கிய நட்பு கிடைத்தது. ஆங்கில ஆட்சியை ஒழிக்க சிங்கநாதம் செய்த பெருந் தலைவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மிக நன்ருகப் புரிந்து கொண்டனர். இந்த நட்பு, கடைசிவரையில் குன்றின் மேல் இட்ட விளக்குபோல் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

பம்பாய்க்குச் சென்ற சில மாதங்களுக்குப் பிறகு சிதம்பரம்பிள்ளை அவர்கள் ''லாவோ'' என்ற பெயருள்ள கப்பலுடன் தூத்துக்குடி துறைமுகம் வந்து சேர்ந்தார். ''காலியா'' என்ற மற்றொரு கப்பலை திரு. எஸ். வேத மூர்த்தி முதலியார் என்பவர் பிரான்ஸ் நாட்டிற்கு நேரில் சென்று வாங்கி வந்தார்.

### அந்நிய அரசாங்கம் பழி தீர்த்துக்கொண்டது

சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்கு நாள் வலுப்பெற்று வளர்ந்தது. அதன் செல்வாக்கு பெருகுவதைக் கண்ட வெள்ளையர்கள், தங்கள் கம்பெனியின் கப்பல் கட்டணங் களைக் குறைத்தார்கள். சுதேசிக் கம்பெனியை எதிர்த்து பொய்ப்பிரசாரங்கள் செய்தார்கள். என்னென்ன தில்லு முல்லுகள் செய்ய முடியுமோ, அத்தனையும் செய்தனர். ஆனல், மக்களின் ஆதரவை அசைக்கமுடியவில்லை. மக்களின் மன உறுதி மாறவில்லை. இதற்கு மாருக சுதேசிக் கம்பெனிக்கு மேலும் ஆதரவு பெருகிக் கொண்டே வந்தது. சுதேசி இயக்கம் மட்டுமல்ல; அரசியலிலும் தீவிர பங்கு கொண்டார் சிதம்பரம் பிள்ளை. காங்கிரஸில் தீவிரவாதிகளின் தலைவராகத் திலகர் விளங்கினர். பிள்ளையவர்கள், திலகரின் வலது கையாக தென்னாட்டில் திகழ்ந்தார். பிள்ளையவர்களின் முயற்சியால் 1908-ல் திருநெல்வேலியில் ''தேசாபிமான சங்கம்'' தோற்றுவிக்கப்பட்டது. சிறந்த தேச பக்தர் சுப்ரமணிய சிவா, பிள்ளையவர்களுடன் சேர்ந்துகொண்டார். தமிழ் நாட்டில் இவர்கள் இருவரும் செய்த சூருவளிப் பிர சாரம் அன்னிய அரசாங்கத்தை கிடுகிடுக்க வைத்தது. சிதம்பரம் பிள்ளை அன்னிய அரசாங்கத்தின் கண்களில் மிகப் பெரிய பயங்கரமான எதிரியாகக் காட்சியளித்தார். விட்டு வைக்குமா ஆங்கில அரசாங்கம் ? சிதம்பரம் பிள்ளையும், சிவாவும் கைது செய்யப்பட்டார்கள். சிதம்பரனர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, அரச நிந்தனைக் குற்றத்திற்காக 10 வருட தீவாந்திரத் தண்டனையும் சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக, 10 வருட தீவாந்திர தண்டனையும் விதிக்கப்பட்டது. கடைசியாக, பிரிவு கவுன்ஸில், அந்தமான் சிறைவாசத் தண்டனை ரத்து செய்து, ஆறு வருடக் கடுங்காவல் தண்டனையாக மாற்றியது.

### சிறையில் செக்கிழுத்தல்—கவிஞனின் குமுறல் !

சிதம்பரனர் சிறையில் பட்ட துன்பம் கொஞ்சமன்று; தமிழ் அறிஞர் சிதம்பரனரை சிறையில் செக்கிழுக்க வைத்தனர், அன்றைய அதிகாரிகள். தன் அருமை நண்பர் படும் அவதி கண்டு, நெஞ்சம் கொதித்து, பாரதியார்,

**''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும்**
**நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ ''**

என்று பாடினர். 1911-ம் ஆண்டு டிசம்பரில் சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து விடுதலையானர். எஞ்சிய காலத்தை நாட்டின் நலனுக்காகவும் உழைப்பாளிகளின் நலனுக்காகவும் செலவழித்தார். தன் வாழ்நாளில் அன்பும் அருளும் நிரம்பப்பெற்ற அருளாளர் சிதம்பரம் பிள்ளை. தம்மை

## மக்களைக் கவர்ந்த மனிதர் . . .

"மந்திரக் கோல் போல், காந்தியின் செய்தி, இந்தியாவை தொட்டு விட்டது. மெல்ல மெல்ல ஒரு புதிய கனவு உதயமாயிற்று. தன் நாடு இழந்த பெருமையையெல்லாம் மீண்டும் அடையவேண்டும் என்று இந்தியனின் உள்ளம் வேதனைப்பட்டது. அந்த வேதனை தீர்க்கும் தைலத்தைக் காந்தி கொண்டு வந்தார். அரைத் துண்டு உடுத்து, சலனமற்று, தவக்கோலத்தில், மரங்களின் மத்தியிலே அமர்ந்த காந்தி, ஆங்கிலக் கனவான்களைப் போல் நடிக்க வில்லை. பழைய ரிஷிகளையே ஒத்திருந்தார். 'தன்னிடம் வந்த எத்தனையோ ஜயசீலர்களை இந்தியா கண்டிருக் கிறது. தனக்குத் தானே உண்மையாக நிலைத்து நின்ற தன் மூலம் அவர்கள் அத்தனைபேரையும் அது ஜயித்து விட்டது' என்று இந்திய நாட்டுக்கு அவர் ஞாபகப் படுத்தினார். இந்தியாவின் பெருமை உணர்ச்சியையும் நம்பிக்கையையும் அவர் தூண்டி விட்டார். காந்தியின் மந்திரக் கோல், பிரங்கிக்கு மருந்து கிட்டிக்கும் கடப்பாரை ஆகிவிட்டது."

லூயிபிஷர், "காந்தி வாழ்க்கை".

---

நாடிவரும் எளியார்க்கு இல்லை என்னாது ஈந்து வாழ்ந்த செம்மல் அவர். சிறந்த தமிழ் அறிஞர். சங்க இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். "மெய்யறிவு", "மெய்யறம்" முதலிய நீதிபோதனை நூல்களை இயற்றியுள்ளார். திருக்குறள்—மணக் குடவர் உரை—அறத்துப்பால் — தொல்காப்பியம் எழுத்து — சொல் — பொருள் — இளம் பூரணம்; ஆகிய நூல்களைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். பாடுபடும் உழைப்பாளியின் துயர் துடைக்கப் பாடுபட்ட உத்தமர் அவர். உழைப்பாளி களின் துயர்கண்டு உருகிப் போவார் சிதம்பரம் பிள்ளை. சென்னையில் திரு. வி. கல்யாணசுந்தரனாருடன் சேர்ந்து, பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் நிறுவ உறு துணையாக இருந்தார்.

நாட்டிற்கு உழைத்த இந்தப் பெரியார் 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

சிதம்பரம் பிள்ளை மாசுமறுவற்ற அரசியல்வாதி. உண்மையாளர். நன்னெறி நின்ற நேர்மையாளர். அநீதி கண்டு ஆர்ப்பரித்து எழும் இயல்பு கொண்டவர். அணையாத நெஞ்சுறுதி படைத்தவர். தொழிலாளரின் துயர் துடைக்கப் பாடுபட்ட உத்தமர். மக்களிடையே சுதந்திரக் கனலைத் தூண்டிவிட்டு, நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட வீரர் அவர். அவர் நாமம் வாழ்க!

# சொர்க்க பூமி

திரு ஏ. எஸ். சுப்பிரமணியன்

வளமான வயலெங்கும் காண வேண்டும்!
வளப்பான முகமெங்கும் தெரிய வேண்டும்
ஊரெல்லாம் உற்சாகம் பொங்க வேண்டும்
ஊரெல்லாம் கல்விபெற கூடம் வேண்டும்!
அளவற்ற தொழிற்சாலை பெருக வேண்டும்!
அத்தனையும் நாம் செய்யும் வாய்ப்பு வேண்டும்!
களஞ்செல்லத் துடிக்கின்ற வீரர் கூட்டம்;
கணக்கற்றோர் எனச்சொல்லும் நாளும் வேண்டும்!
எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று
இறுமாந்து நடக்கின்ற பேறு வேண்டும்!
நல்லோரே! கேளுங்கள்; அடிமை என்றும்
நாட்டினிலே மேலோர்கள் செல்வர் என்றும்,
சொல்லுகின்ற பேச்செல்லாம் இனிமேல் இல்லை!
எல்லோரும் உரிமையுடன் வாழ்கின்றார்கள்;
கல்லாதார் எங்குமில்லை; இந்த நாடு
கற்றறிந்த பூமிஎன போற்ற வேண்டும்!
அடுத்தவனைக் கேட்கின்ற நிலமை மாறி,
அத்தனையும் இந்நாட்டில் செய்ய வேண்டும்!
கெடுத்தவனை ஒருநொடியில் அழிக்க வேண்டி
கேட்கின்ற போர்க்கருவி இங்கே வேண்டும்!
கொடுத்துவைத்த பூமிஇது; என்ன இல்லை;
குமரிமுதல் இமயம் வரை அழகின் தேகம்!
பாடிவைத்த பாரதியும் சொன்னதைப்போல்
பார்முழுதும் ஒன்றுபட்டு உயரவேண்டும்!
சத்தியமே ஜெயமென்றார் அண்ணல் காந்தி;
சற்குருவாம் அவர்சொன்ன வற்றைச் செய்து,
நித்தநித்தம் பாடுபடும் நேரு பின்னால்
நிந்தனையை விட்டொழித்து நாமும் சேர்ந்தால்,
அத்தனையும் பொன்னாகும்! சீனாவைப் போல்
எத்தனைபேர் ஆனாலும் நொடியில் வீழ்வர்!
இத்தரணி பாரதத்தை என்றும் பாடும்;
ஏற்றமிகு பாரதமே சொர்க்க பூமி!

# மகாத்மா காந்தி—தலைசிறந்த பத்திரிகையாளர்

(திரு. ரா. வேங்கடராஜுலு)

காந்திஜி, உலக உத்தமர்; மகாத்மா, மனித இனம் இன்புற்று வாழ்வதற்குள்ள சிறந்த வழிகளை வகுத்துக் காட்டிய பெரியார். உலக மக்கள் நல்வழிப்பட்டு வாழ்வதற்குள்ள வழி துறைகளிலெல்லாம் அவர் கவனஞ் செலுத்தினார். அவ வழிகளிலேயே அவர் வாழ்ந்தும் காட்டினார். மனிதனின் வாழ்வில் இன்று முக்கியமான தொன்றாகிவிட்ட பத்திரிகைத் தொழிலிலும் அவர் ஈடு படாமல் இல்லை. உத்தமமான பத்திரிகாசிரியரின் உண்மையான பொறுப்பும் கடமையும் இன்னதென்பதை யும் தாமே அனுசரித்தும் மகாத்மா காந்தி உலகுக்குக் காட்டினார்.

தென்னாப்பிரிக்காவில் 1904-ம் ஆண்டு முதல் "இந்தியன் ஒப்பீனியன்" என்ற பத்திரிகையை மகாத்மா ஆரம்பித்து நடத்தி வந்தார். இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு "எங் இந்தியா," "நவஜீவன்" பத்திரிகைகளுக்கு அவர் ஆசிரியராக இருந்தார். பின்னர் அவர் அமரத்துவம் அடையும் வரையில் "ஹரிஜன்" பத்திரிகையும் நடத்தி வந்தார் என்பதையும் எல்லோரும் அறிவார்கள். லட்சக் கணக்கானவர்கள் அப்பத்திரிகைகளைப் படித்தும் வந்திருக் கிறார்கள். பத்திரிகைத் துறையிலும் அவர் சிறந்த வழி காட்டியாக இருக்கிறார் என்றால், அவ்வழி தான் என்ன? கண்டபடியெல்லாம் பத்திரிகைகள் மலிந்து மிகுந்து போய்விட்ட இக் காலத்தில், இது முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும். பத்திரிகை என்றால் என்ன? பத்திரிகாசிரியர் என்பவர் யார்? அவர் பொறுப்புகள் யாவை? என்பதையும், சிந்திப்பது இதற்கு அவசியம்.

### நல்ல பத்திரிகையாளன் யார்?

நல்ல பத்திரிகையாளன் என்பவன்தான் யார்? சுருக்க மாகச் சொன்னால், சிறந்த லட்சியங்களோடு கூடிய பத்திரிகையாளன் சமுதாயத்திற்கு நன்மை பயப்பவன்; எந்த லட்சியங்களுமே இல்லாதவன் சமூகத்தைப் பிடித்த சனியன். பொது ஜனங்களுக்கு எதில் இச்சை இருக் கிறதோ அதைக் கொடுப்பதுதான் தம் பொறுப்பு. அதுவே தம் சொந்த லாபத்திற்கும் வெற்றிக்கும் வழி என்று எண்ணும் பத்திரிகையாளர்களும் உண்டு. பொது ஜன இச்சை எவ்வளவுக்கெவ்வளவு தாழ்மையானதாக இருக் கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இவர்களுக்கு வெற்றியும் நிச்சயம், என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சரியான பத்திரிகையாளன், இதற்கு நேர்மாறாக எண்ணுவான். சமூகத்தில் பொதுவான லாபம்தான், இத்தகைய பத்திரிகையாளர்களின் குறியாக இருக்கும். தன்னுடைய சொந்த லாபத்தையோ அல்லது நஷ்டத்தையோ பற்றி, அவன் சிந்திக்கவே மாட்டான். சமூகத்தின் நன்மை ஒன்றையே லட்சியமாகக்கொண்டு, தான செய்யும் பணியில் பொது ஜன வெறுப்பு வந்து குறுக்கிட்டாலும், அவன் பொருட்படுத்தமாட்டான்.

மக்களுடன் தொடர்பு இல்லாதவர்கள் எழுதுவதில் மக்களின் எண்ணம் பிரதிபலிக்கிறது என்று எண்ணு வதற்கு இடமில்லை. எனவே அவர்கள் எழுதுவது அவர்கள் கருத்தாகத்தான் இருக்க முடியுமேயன்றி,பொதுஜன அபிப் பிராயமாகவோ, பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்த கருத்தாகவோ இருக்க முடியாது. ஆகையால், பத்திரிகா சிரியர்களுக்குப் பொதுஜனத் தொடர்பு இருப்பது முக்கியம். ஆனால், பொதுஜனப் போக்குப் போகும் திசையெல்லாம் போய்க்கொண்டிருப்பதென்றால் அத்தகைய பத்திரிகை யாளர் தம்முடைய கடமையில் தவறிடவரேயாவார். மக்களை ஓட்டிப் பத்திரிகையாளருடன் போகவே வேண்டும். என்றாலும், அப்போது மக்களின் எண்ணங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கின்றன என்பதை அறியும் அளவுக் குத் தான் அவர் அவர்களுடன் போகவேண்டும். அதற்கு மேல் ஒரு பத்திரிகையாளரின் முக்கியமான கடமை, நடத்திச்செல்வதேயன்றி அவர்கள் போன திக்கெல்லாம் தானும் ஓடிக்கொண்டிருப்பதன்று.

உண்மையான, மக்களுக்கு நன்மை செய்யவல்ல, பத்திரிகையாசிரியர்களின் பொறுப்பும் கடமையும் இன்னின்னவை என்பதைக் குறித்து ஓரளவு இதுவரை கவனித்தோம். மகாத்மா காந்தி தமது பத்திரிகைச் சேவையை எவ்விதம் நிறைவேற்றிவந்தார் என்பதை இந்த நோக்கத்தோடு கவனித்தால், அவர் எவ்விதம் தலை சிறந்த பத்திரிகையாளராக இருந்தார், பத்திரிகை யாசிரியர்களுக்கே மகத்தான வழிகாட்டியாக இருந்தார் என்பது நன்கு விளங்கும்.

### பத்திரிகையின் நோக்கம்

பத்திரிகையின் நோக்கம் எதுவாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்து மகாத்மா கூறியிருப்பதை முதலில் கவனிப்போம். அவர் எழுதிய "சுய சரிதை"யில் இதைக் குறித்து அவர் பின் வருமாறு கூறுகிறார்:—

"பத்திரிகைத் தொழிலின் ஒரே நோக்கம், சேவை யாகவே இருக்கவேண்டும் என்பதை 'இந்தியன் ஒப்பீ னியன்' ஆரம்பமான முதல் வாரத்திலேயே அறிந்து கொண்டேன். பத்திரிகை ஒரு பெரிய சக்தி. ஆனால், கரையில்லாத நீர்ப் பிரவாகம், எவ்விதம் கிராமப் புறங் களையெல்லாம் மூழ்கடித்துப் பயிர்களையும் நாசமாக்கி விடுமோ, அதே போல, கட்டுத் திட்டத்திற்கு உட்படாத பேனாவும் நாச வேலைக்குத் தான் பயன்படும். கட்டுத் திட்டம் வெளியிலிருந்தே வருவதாயிருந்தால் சட்டத்திட்டம் இல்லாததைவிட, அது அதிக விசேஷமானதாகும். கட்டுத் திட்டம் உள்ளுக்குள்ளிருந்தே வருவதாக இருந்தால்தான் அதனால் லாபம் உண்டு. இந்த நியாயமே சரியானது என்றால், உலகில் இப்பொழுது இருக்கும் பத்திரிகைகளில்

எத்தனை இந்தச் சோதனையில் தேறும்? ஆனால், பயனில்லாதவைகளாக இருப்பவைகளை யார் நிறுத்துவார்கள்? மேலும், இதில் முடிவு கூறுவது யார்? பொதுவாக நல்லதையும் தீயதையும்போல பயனுள்ளவையும் பயனில்லாதவையும் கலந்து இருந்து கொண்டுதான்வரும். மனிதனே அதில் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

### மூன்று காரியங்கள்

பத்திரிகையின் அபார சக்தியையும், பத்திரிகைகளில் நல்லவையும் தீயவையும் கலந்தே இருந்த போதிலும் அதில் சிறந்தது எது என்பதை மனிதனே தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் கூறிய மகாத்மா, பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டிய முக்கியமான மூன்று. நோக்கங்களைக் குறித்தும் மற்றோரிடத்தில் இன்னும் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர் சொல்வதாவது :— "பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்று, பொதுஜன உணர்ச்சியை அறிந்து அதை வெளியிடுவதாகும். மற்றொன்று, மக்களிடையே சிலகுறிப்பிட்ட விரும்பத்தக்க உணர்ச்சிகளை எழுப்புவது. மூன்றாவது நோக்கம், பொதுஜனங்களிடையே இருந்துவரும் குறைபாடுகளைப் பயமின்றி அம்பலப்படுத்துவது." ஆகையால், பொதுஜனங்களின் உணர்ச்சியை அறிந்து, அதை வெளிப்படுத்துவதைப் பத்திரிகைத் தொழிலில் மகாத்மா தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். அதே சமயத்தில், பொதுஜன உணர்ச்சி போகிற போக்குக்குத் தானும் பின்தொடர்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று அவர் எண்ணவில்லை. இதற்கு மாறாக மக்களிடையே குறிப்பிட்ட நல்ல உணர்ச்சிகள் ஏற்படும்படிச் செய்வதையும் பத்திரிகாசிரியரான காந்தி தமது கடமையாகக் கொண்டிருந்தார்.

### மேற்கொண்ட தன்னடக்கம்

பத்திரிகையின் மூன்றாவது நோக்கம், பொது ஜனங்களிடம் இருக்கும் குறைபாடுகளை அச்சமின்றி அம்பலப்படுத்துவது என்று மகாத்மா கூறுகிறார்கள் என்பதை முன்னால் பார்த்தோம். குறைபாடுகளை அப்போதைக்கப்போது இடித்துரைத்தால் தான் பயனுண்டு. சமூகம் திருந்துவதற்கோ, அல்லது அரசாங்கத்தின் போக்கைத் திருத்துவதற்கோ, செய்ய வேண்டிய அவசியமான காரியமும் இதுதான். 1925 ஜூலை 2-ம் தேதி "எங் இந்தியா"வில் மகாத்மா எழுதியதாவது :—

> "ராஜ்யங்களில் நடக்கும் துர்க்காரியங்களைச் சொல்லியாக வேண்டியது, பத்திரிகையின் அவசியமான வேலையே என்பதில் சந்தேகமில்லை. பொதுஜன அபிப்பிராயத்தை எழுப்புவதற்குள்ள ஒரு வழி இது. இதில் எனக்கு இருக்கும் சந்தர்ப்பம் கண்டிப்பான எல்லைக்குட்பட்டது."

### லட்சியத்தைப் பரப்பும் கருவி

"பத்திரிகையாளனாக இருக்கவேண்டும் என்பதற்காக நான் பத்திரிகையாசிரியனாக இல்லை, எதை என் வாழ்வின் லட்சியம் என்று நான் கொண்டிருக்கிறேனோ, அதற்கு உதவியாக இருக்கட்டும் என்பதற்காகவே, நான் பத்திரிகையாசிரியனாக இருக்கிறேன். அகிம்சைக்கு நேரிடையான தொடர்பு கொண்டது சத்தியாக்கிரகம். இணையற்றதான அந்த ஆயுதத்தின் உபயோகத்தை உதாரணத்தின் வாயிலாக உபதேசித்து, கடுமையான தன்னடக்கத்துடன் அதை அளிப்பதே என் லட்சியம். கல் போன்ற கடும் மனத்தையும் கரைந்துவிடும்படிச்செய்யும் சக்தி வாய்ந்தது, அந்த ஆயுதம். ஆகையால், என்னுடைய தருமத்தை அனுசரித்து, நான் கோபத்திலோ அல்லது துவேஷத்திலோ எழுத முடியாது. வீணுக்கும் நான் எழுதிக் கொண்டிருக்கவும் முடியாது. உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதற்கு என்றும் நான் எழுத முடியாது. வாரந்தோறும் எதைப்பற்றி எழுதுவது என்பதையும், அதற்கு வார்த்தைகளையும் தேர்ந்தெடுப்பதில் நான் எவ்வளவோ தன்னடக்கத்தை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது."

### சொந்தக் குறைகள் விலக்கும் பயிற்சி

"இதுவே எனக்கு ஒரு பயிற்சியாகிறது. என்னுள்ளேயே நான் பார்த்துக் கொண்டு என்னுடைய குறைபாடுகளை அறிந்துகொள்ளுவதற்கு இது எனக்கு உதவியாகிறது. என் அகந்தை, ஒரு கடுமையான சொல்லை உபயோகிக்க அடிக்கடி சொல்லுகின்றது. என் சினமோ, கடுமையான நோக்கத்தை ஆக்ஞாபிக்கிறது. இது பயங்கரமானதோர் வேதனை. என்றாலும், இக்குறைகளை அப்புறப்படுத்திக் கொள்ளுவதற்கு இது சிறந்ததோர் பயிற்சி."

### பக்தி சிரத்தையோடுகூடிய பணி

"சிறந்த முறையில் இப்பத்திரிகை இருக்கும்படிக் கவனமாகவும் பக்தியோடும் வளர்க்கப்படுகிறது என்பதை உலகம் அறியட்டும். யாருடைய கருத்துக்களை நான் போற்றுகிறேனோ, அவர்களை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இது நிரூபிக்கப்படுமானால், வாசகர்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ளட்டும். சிறப்பாக இருப்பது முற்றிலும் இயற்கையானதாகிவிடும்போது, அதாவது தீமை என்பதைச் செய்ய முடியாதவனாக நான் ஆகிவிடும்போது, அச்சமயத்திற்கே என்றாலும், என் எண்ணத்தில் கடுமை அல்லது அகம்பாவம் அப்பொழுது இல்லாதிருக்கும் வரையில், எல்லா உலகங்களின் உள்ளங்களையும் என் அகிம்சை மாற்றிவிடும். சாத்தியமில்லாத எந்தக் கருத்தையோ அல்லது சிரமத்தையோ என் முன்பும் என் வாசகர் முன்பும், நான் வைக்கவில்லை."

மகாத்மா, தலைசிறந்த பத்திரிகையாளராக இருந்தார்; உலகப் பத்திரிகையாளருக்கு உத்தமமான வழிகாட்டியாகவும் விளங்குகிறார். காந்தி மகான் நடத்திய பத்திரிகைகளையும், அவர் அனுசரித்த சிறந்த கொள்கைகளையும்விட இதற்கு வேறு சான்று என்ன வேண்டும்?

# பாரத நாட்டு மாதரசிகள்

## அன்னி பெசன்ட்

(திரு. வெ. பரஞ்சோதி, எம்.ஏ.)

இந்திய விடுதலை இயக்கம் உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளது. பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடைபெற்ற இயக்கங்கள், புரட்சிகள் யாவும் அந்நாட்டு மக்களாலும், தலைவர்களாலுமே நடத்தப்பட்டன. ஆனால், இந்திய சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்களும், மேலை நாட்டினர் பலரும் காந்தியடிகளின் தலைமையின்கீழ் பங்குகொண்டு, விடுதலை இயக்கத்திற்கு ஊக்கமளித்துள்ளனர். அவர்களில் டாக்டர் அன்னி பெசன்ட், திரு. சி. எட். ஆன்ட்ரூஸ், மீராபென் முதன்மையானவர்களாவார்கள்.

### பிரம்மஞானக் கொள்கை

அன்னி பெசன்ட் அம்மையார் 1847-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இங்கிலாந்தில் பிறந்தார். இளம் வயதில், சமூக சேவை, மத ஆராய்ச்சி, சம தர்மக் கொள்கைப் பிரசாரம் ஆகிய பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சுதந்திர உணர்வும், சுய மரியாதையும் இவருக்கு உயிர் போன்றவை. கிறிஸ்தவ மதக் கட்டுப்பாடும், அதன் கொள்கைகளும் இவருக்குப் பிடிக்கவில்லை. கிறிஸ்தவ மதத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். இவர் கணவர் பிராங்க் பெசன்ட் ஒரு கிறிஸ்தவ பாதிரியார். நீதி மன்றம் மூலம் இவரிடமிருந்து விவாக ரத்து செய்து கொண்டார் பெசன்ட் அம்மையார். 1889-ல் இவரது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. பிரம்ம ஞானக் கொள்கையை வகுத்த ரஷ்ய அம்மையாரான பிளாவர்ஸ்க்கியின் சீடரானார், அன்னி பெசன்ட். இந்த இயக்கம் மனிதனுக்கும், தெய்வத்திற்கும் இடையேயுள்ள உறவு பற்றி விளக்கியது. உலகமெங்கும் பிரம்மஞானக் கொள்கை பரவ அன்னி பெசன்ட் வழிகாட்டினார்.

### முழுக்க முழுக்க இந்தியர்

டாக்டர் பெசன்ட் 1893-ல் இந்தியாவுக்கு வந்தார். இந்திய நாகரிகமும், பண்பாடும், இந்து மதமும், சாஸ்திரங்களும் இவரது மனத்தைக் கவர்ந்தன. அன்றைய இந்திய மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, ஆங்கிலக் கல்வி பெற்று, மேலை நாட்டு நாகரிகமே சிறந்தது என்று எண்ணி மயங்கிய மக்கள். இரண்டாவதாக, இந்தியப் பண்பாட்டில் நம்பிக்கை இழக்காதவர்கள். மூன்றாவதாக, சாதாரண மக்கள்; எதையும்பற்றி சிந்திக்காதவர்கள். இம் மூன்று பிரிவினரையும் கவர்ந்தவர் பெசன்ட் அம்மையாரவர்கள் இந்தியாவுக்கு வந்ததிலிருந்து அவர் தன்னை ஒரு இந்தியராக்கிக் கொண்டார்.

இந்து தர்மம், கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் எழ வேண்டும்; இத்தகைய கல்வி பெறுபவர்கள் "தாங்கள் இந்தியர்கள்" எனப் பெருமை கொள்ளும்படி போதனை அளிக்கப்படவேண்டும் என்பது பெசன்ட் அம்மையாரின் குறிக்கோளாகும். இந்த அடிப்படையில்தான் 1898-ல் காசியில் மத்திய இந்துக் கல்லூரியையும், 1904-ல் இந்து உயர்நிலைப்பள்ளியையும் இவர் நிறுவினார். இந் நிறுவனங்கள் அமைக்கப்பட உறுதுணையாக நின்ற இந்தியர்களில் காலஞ்சென்ற டாக்டர் பகவான்தாசு குறிப்பிடத்தக்கவர். நமது மாநிலத்தின் முன்னாள் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்களின் தந்தை இவர்; திரு. ஸ்ரீ பிரகாசா காசி மத்திய இந்துக் கல்லூரியின் பழைய மாணவர், பெசன்ட் அம்மையாரின் அன்பைப் பெற்றவர். 1907-ல் பெசன்ட் அம்மையார் அடையாறு பிரம்ம ஞான சபையின் தலைவரானார். "அடையாறு" என்று சொன்னவுடன் ஆலமரமும், அன்னி பெசன்ட் அம்மையாரின் உருவமும்தான் நம் மனக்கண் முன் தோன்றும். இன்று அடையாற்றில் அமைந்துள்ள கல்விக்கூடங்கள், மாதர் நல நிறுவனங்கள் ஆகிய யாவும் அம்மையாரின் சேவையின்பால் எழுந்த சின்னங்களேயாகும்.

### அன்னை பாரதத்தின் சீரிய புதல்வி

டாக்டர் பெசன்ட், பாரத மாதாவின் சீரிய புதல்வி. பாரத தேவியின் கால்கள் விலங்கிடப்பட்டுள்ளதை விரும்பாத அம்மையார், இந்திய அரசியலில் தீவிரமாகப் பங்கு கொண்டார். நாவன்மையும், எழுத்துத் திறனும் பெற்ற அம்மையார் கனல் தெரிக்கும் அறிவுச் செறிவுள்ள சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

"கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு;
என்ன முறையி(து) எனிதை வேறு
இன்னொரு நாட்டினர் ஆள்வது கூறு;
சொன்னவர் கேட்டவர் யாரையும் நம்பிச்
சோர்ந்து கிடந்தது தீர்ந்தது தம்பி!
என்னுடை நாட்டினை நானிருந் தாள
இந்தத் தினமுதல் எண்ணுவன்மீள."

அம்மையாரின் பேச்சு சுதந்திர தாகத்தைக் கிளறியது

இவரது பேச்சைக் கேட்டவர்கள் மேலே கூறிய பாட்டினை தன்னை அறியாமலே பாடினர். தேசிய உணர்வைத் தட்டி எழுப்பப் பத்திரிகைகள், நாளிதழ்கள் சிறந்த சாதனம் என்பதை அறிந்த பெசன்ட் அம்மையார் 1914-ல் "பொது நலம்" என்ற ஆங்கில வார இதழையும், சில தினங்கள் சென்ற பின்னர் "மதராஸ் ஸ்டாண்டர்டு" என்ற தினசரியையும் ஆரம்பித்தார். "புதிய இந்தியா" என்ற தினசரியையும் சென்னையில் நடத்தினர். "சுய ஆட்சி" இயக்கக் கருத்துக்கள் இப் பத்திரிகைகளில் விளக்கப்பட்டன.

### காங்கிரசில் தலைமைப் பதவி

1917-ல் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னி பெசன்ட் அம்மையார் தலைமை தாங்கி, முதன் முதலாக காங்கிரஸின் தேசியக் கொடியை ஏற்றினர். காங்கிரஸ் மகா சபையின் முதல் பெண் தலைவர், இவர் தான். மாதர் கல்வி, தேசியக் கல்வி, பள்ளிகளில் மத போதனை, சாரணர், சுதேசி இயக்கம் ஆகிய பல்வேறு துறைகளில் இவர் மிகுந்த கவனம் காட்டினர். தான் போதித்த கருத்துக்கள் யாவற்றையும் செயல்படுத்தியும் காட்டினர். தான் மரணமடைவதற்கு முன்னரே இந்தியா விடுதலை பெற வேண்டுமென்பது இவர் விருப்பம். ஜே. கிருஷ்ணமூர்த்தி, நித்தியானந்தம் எனும் இரு இந்தியச் சிறுவர்களை இவர் சுவீகாரம் செய்துகொண்டார். இன்னும் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி உலக நாடுகளில், பிரம்மஞானக் கருத்துக்களைப் பரப்பி வருகிறார். பெசன்ட் அம்மையார் 1933-ல் மரணமடைந்தார். அவரது பூத உடல் மறைந்தது; ஆனால் அவருடைய ஆக்கப் பணியின் சின்னங்களாக—அவர் இந்திய மக்களுக்கு ஆற்றிய தொண்டின் சாட்சிகளாக இன்றைய காசி இந்து பல்கலைக் கழகமும், அடையாறு சங்கமும், மதனபள்ளி கல்லூரியும் விளங்குகின்றன.

சத்திய வாழ்க்கையைப் பேசினர்—அருள் சாந்தத் தவக்கனல் வீசினர்; இந்திய தேசத் திருப்பணி ஒன்றை உண்மை தெய்வப்பணி என்று சாற்றினர் அன்னி பெசன்ட். அவர் வழி நடக்க நாமும் முயல்வோமாக.

---


**கிராம நலம்**

*சந்தா விவரம் :—*

**ஆண்டு சந்தா ரூ. 1·50.**

ஆறுமாத சந்தா கிடையாது.

தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

முகவரி:—பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல தல நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.


---

### "வாழ்வின் தத்துவத்தை உணர்ந்த தலைவர்"

"உலகத்தின் சமீப வரலாற்றிலே இடம் பெற்ற பெரிய பெயர்கள் இவை : சர்ச்சில், ரூஸ்வெல்ட், லாயிட் ஜார்ஜ், ஸ்டாலின், லெனின், ஹிட்லர், வுட்ரோ வில்ஸன், கெய்ஸர், லிங்கன், நெப்போலியன், மெட்டர்னிக், டால்லிராண்ட், இன்னும்பல. இவர்கள் கையிலெல்லாம் அரசாங்க பலம் இருந்தது. அரசாங்க அதிகாரம் இல்லாமலே, மக்களின் மனத்தை ஆட்டி வைத்ததில், காந்தியோடு ஒப்பிட்டுக் கூறக்கூடிய ஒரே ஒரு புருஷர் மட்டுமே உண்டு. அவர்தான் கார்ல் மார்க்ஸ். ஆயினும், அவர் செய்த உபதேசமும் அரசாங்கம் பற்றியதே. அரசாங்க அமைப்பு இன்னவிதம் இருக்கவேண்டும் என்ற முறை பற்றியதே. தனிப்பட்ட மக்களின் மனச் சாட்சியையெல்லாம் காந்தியைப் போல் வலுவாகக் கவர்ந்த மனிதர்களை நாம் காணவேண்டும் என்றால், சென்ற காலத்தின் பல நூற்றுண்டுகளுக்குப் பின்னேதான் செல்ல வேண்டும். அந்த மனிதர்களெல்லாம், சமய புருஷர்கள்—வேறு யுகத்தைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்து, சில கிறிஸ்தவப் பாதிரிகள், புத்தர், சில ஹீப்ரு தீர்க்கதரிசிகள், கிரேக்க ரிஷிகள் இவர்களுடைய ஆத்ம சக்தியை நவீன காலத்திலும் நவீன அரசியலிலும் பிரயோகிக்கலாம் என்று காந்தி காட்டினர். கடவுளைப் பற்றியோ, சமயத்தைப் பற்றியோ அவர் உபதேசிக்கவில்லை. அவருடைய வாழ்க்கையே ஓர் உபதேசம். உலகத்தை அதிகாரம், செல்வம், டம்பம் இவற்றின் செல்வாக்கு அரித்து அழிவு செய்துகொண்டிருக்கிறது. இதை எதிர்த்து நிற்பவர் அபூர்வமாயிருக்கிறார்கள். இத்தகைய உலகத்திலே தோன்றிய ஒரு நல்ல மனிதர் காந்தி. மின்சாரம், ரேடியோ, குழாய் நீர், டெலிபோன் போன்ற எதுவும் இல்லாமல், இந்தியக் கிராமம் ஒன்றின் மண்குடிசையிலே, வெறும் தரைமீது, ஐந்தில் நாலு பங்குதிறந்த உடம்போடு, அவர் உட்கார்ந்திருந்தார். பிரமிப்பூட்டவோ, குரு உபதேசத்துக்கோ, அதிசயக் கதை பிறக்கவோ ஏற்ற கோலமல்ல இது. அவர் முழுக்க முழுக்கப் பூலோக மனிதராகவே இருந்தார். வாழ்க்கையின் சின்னஞ்சிறு அம்சங்களெல்லாம் அடங்கியதே வாழ்வு என்று அறிந்திருந்தார்."

—லூயிபிஷர் "காந்தி வாழ்க்கை."

# பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள்—பணிகளும் வருவாய் ஆதாரங்களும்


(திரு. கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்., பஞ்சாயத்து நிதி இயக்குநர், தமிழ்நாடு அரசாங்கம்.)


பஞ்சாயத்துக்கள், நமக்குப் புதியன அல்ல. ஆனால், சமீப காலத்தில்தான் நாடு முழுவதும் பஞ்சாயத்துக்களும், பிற ஸ்தல ஸ்தாபனங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும், பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு பெரிய ஸ்தல நிர்வாக அமைப்பு முறை எதற்காக ? இதனால் நமக்கு என்ன பயன் ? இதை நாம் எந்த வழியில் பயன்படுத்தவேண்டும் ? ஆகிய விஷயங்களை முதலில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலம்தான் சாதாரண மனிதனுக்கு, ஜனநாயகத்தில் பங்கெடுத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது ; ஜனநாயகத்தில் பயிற்சியும் கிடைக்கிறது. ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வோட்டு போடுவதைத் தவிர, ஒரு சாதாரண மனிதனுக்கு மாநில அளவிலோ அகில இந்திய அளவிலோ அவ்வப்போது பங்கு கொள்ள வாய்ப்பு கிடைக்காது. அவனுக்கு நேரமும் இருக்காது. ஆனால் சிறிய அளவில், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் ஜனநாயகத்தில் பங்கு கொள்ள அவனுக்கு வாய்ப்பும், பயிற்சியும் ஏற்படுகின்றன. சிறிய அளவில், மற்றவர்களுடன் சேர்ந்து ஜனநாயக முறையில் முடிவுகள் எடுக்கவும் பழக்கமேற்படுகிறது. உதாரணமாக, தன் கிராமத்தில் ரோடு போட வேண்டுமா, அதை எங்கிருந்து எதுவரை போட வேண்டும் என்றெல்லாம் மற்றவர்களுடன் கலந்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பார்க்கப்போனால், அதுமாதிரி முடிவுகளை அந்தந்தக் கிராமத்தில் இருப்பவர்கள்தான் நன்கு எடுக்க முடியுமே தவிர, வெளியாரால் எடுக்க முடியாது.

### தல நிர்வாக நிறுவனங்களின் அவசியம்

இது மாத்திரமல்ல. அரசாங்கத்தினுடைய கடமைகளில் சிலவற்றை கிராம அளவிலோ, சிறு பிராந்திய அளவிலோ தான் செய்யமுடியும். ஊர் சுகாதாரம், தெரு சுத்தம், தெருக்களில் விளக்குகள் போடுதல், குடிதண்ணீர் வசதி செய்தல் ஆகிய காரியங்களை ஆங்காங்கு உள்ளவர்கள் தான் ஆங்காங்கு இருக்கும் நிலைமைகளுக்கேற்ப செய்ய முடியுமே ஒழிய, தூர இருக்கும் அரசாங்கத்தால் செய்ய முடியாது. இதுமாதிரி வாழ்க்கையின் அன்றாட அடிப்படை வசதிகளை நன்கு புரிந்து, செய்து கொடுக்க ஸ்தல ஸ்தாபனங்கள் இன்றியமையாதவை. ஸ்தல ஸ்தாபனங்கள் இல்லாமல் அப்பேர்ப்பட்ட காரியங்களை நன்கு செய்து கொடுக்க முடியாது.

இவ்வளவுதானா என்று கேட்கலாம். ஆனால் இன்னும் கூட ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறந்த சாதனங்களாக விளங்குகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுகிறோம். அவற்றில் கிராம அளவில் செய்யவேண்டிய திட்டங்களும் உள்ளன. அப்பேர்ப்பட்ட திட்டங்களை எங்ஙனம் நன்கு நிறைவேற்றலாம் ? எவ்விதம் செய்தால் ஆங்காங்கு வாழும் மக்களுக்கு திருப்தியளிக்கும் ? எவ்விதம் செய்தால் அவர்கள் உற்சாகம் பெற்று, அந்த வேலைகளை துரிதப்படுத்த முன் வருவார்கள் ? என்றெல்லாம் பார்க்கும் போது, பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் இல்லாமல் அந்தத் திட்டங்களைச் செவ்வனே செய்ய முடியாது என்ற முடிவுக்குத் தான் நாம் வரமுடியும். நாம் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பொருளாதாரத்தைத் துரிதமாகவும், கணிசமாகவும் உயர்த்த முயல்கிறோம். அவ்வளவு துரிதமாகவும், கணிசமாகவும் குறைந்த நிர்வாகச் செலவிலும் தேவைகளைப் புரிந்தும் திட்டங்களைச் செய்வதற்கு எந்த அரசாங்க நிர்வாகத்தாலும் முடியாது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களால் தான் முடியும்.

பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் எந்தெந்த வேலைகள் ஒப்படைக்கப்படவேண்டும் ? இந்த ஸ்தாபனங்களின் அவசியத்தை, நாம் ஆராயும்போதே நாம் இந்த கேள்விக்குப் பதில் அளித்துவிட்டோம். பொதுவாகக் கூறினால், இந்நிறுவனங்கள், அந்தந்த பிரதேசத்தின் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். மேலும், இவை பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும். இதை, நாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், மூன்று வகையான அலுவல்கள் இருப்பதைக் காண்கிறோம். அவையாவன : (1) இன்றியமையாத அலுவல்கள் (Obligatory Functions), (2) யுக்தானுசாரமான அலுவல்கள் (Discretionary Functions), (3) ஏஜென்சி அலுவல்கள் (Agency Functions). இந்தக் கடமைகள் என்னென்ன என்பதை விரிவாக ஆராய்வோம்.

### பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனின் அலுவல்கள்

பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், கிராமப் பாதைகளைப் போடுதல், பராமரித்தல், பொதுப் பாதைகளுக்கும், பொது இடங்களுக்கும் விளக்கு போடுதல், தெருக்களைச் சுத்தமாகவும் துப்புரவாகவும் வைத்திருத்தல், குடிதண்ணீர் வசதி செய்தல் முதலான கட்டாயமாகச் செய்து தீரவேண்டிய அலுவல்கள் அதற்குண்டு. யுக்தானுசாரமான அலுவல்களாக, மரம் நடுதல், பராமரித்தல்,

பொதுச சந்தைக் கடைகளை ஏற்படுத்தி நடத்துதல், விழாக்களையும், சந்தை கூடுவதையும் கட்டுப்படுத்தல், படிப்பகங்கள், வானொலிப் பெட்டிகள், விளையாட்டு வெளிகள், பூங்காக்கள் முதலியவற்றை வைத்துப் பராமரித்தல், முதலான வேலைகளை பஞ்சாயத்துக்கள் மேற்கொள்ளலாம்.

இதேபோன்று, பஞ்சாயத்து யூனியன்களுக்கும், ன்றியமையா அலுவல்களும், யுக்தானுசாரமான அலுவல்களும் உள்ளன. பாதைகள், மருந்தகங்கள் (Dispensaries), தாய்சேய் நல நிலையங்கள், பொதுச் சந்தைகள், முதலானவற்றை நிறுவிப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களுக்கு உண்டு. ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குதல், பராமரித்தல் ஆகிய மற்றொரு பெரிய பொறுப்பும், பஞ்சாயத்து யூனியனுக்கு உண்டு. சுருங்கச் சொன்னால், அரசாங்கம் தாமே மேற்கொண்டு செய்வது என்று எடுத்துக்கொண்டவற்றைத் தவிர, முன்னாள் மாவட்டக் கழகங்கள் (District Boards) செய்து வந்த பெரும்பான்மையான அலுவல்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் செய்து வருகின்றன.

அடுத்து, ஏஜென்சி அலுவல்களுக்கு வருவோம். இந்தக் கருத்தே, திட்டமிட்ட அபிவிருத்தி என்னும் அடிப்படையில் எழுந்த, ஒரு புதிய கருத்தாகும். தேசிய வளர்ச்சிப்பணித் திட்டங்கள், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்ட நிறைவேற்றத்தைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியன்களின் ஏஜெண்டுகளாகப் பணியாற்றுகின்றன. மேலும், சில திட்ட அபிவிருத்தி வேலைகளும் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஏஜென்சி அலுவல்களை நிறைவேற்றும் போது தான், பஞ்சாயத்து யூனியன்கள் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை இயக்கும் இயந்திரங்களாக, நேரடியாகச் செயல்படுகின்றன.

### வருவாய் ஆதாரங்கள்

இதுவரை, இந்த ஸ்தாபனங்களின் அலுவல்கள் என்ன என்று கண்டோம். இனி, இவற்றை நிறைவேற்ற அமைந்துள்ள வருவாய் ஆதாரங்களைப்பற்றி ஆராய்வோம். வருவாய் இல்லாமல், அலுவல்கள், திட்டங்கள் என்று சொல்வது வெறும் வாய்ப்பேச்சு தான். முன்னாளில் ஸ்தல ஸ்தாபனங்கள், திருப்தியளிக்கும் வகையில் நடைபெறுததற்கு முக்கிய காரணம் அவற்றின் குறைந்த அளவு பொருளாதார வசதிகளேயாகும். ஆகவே, நிறுவனங்கள் எந்த அளவுக்கு, தம் அலுவல்களைத் திருப்திகரமாக நிறைவேற்ற முடியும் என்பதும், வருங்காலத்தில், மேலும் எவ்வளவு வேலைகளை அவர்களிடம் ஒப்படைப்பது என்பதும், அவற்றின் வருவாய் ஆதாரங்களைப் பொறுத்தே முடிவு காணவேண்டிய விஷயங்கள்.

### சிக்கல்கள் எப்படித் தீர்க்கப்பட வேண்டும் ?

ஸ்தல ஸ்தாபனங்களின் பொருளாதார விஷயங்களில் பல சிக்கல்கள் உள்ளன. அவைகளைச் சுருக்கமாகக் கூறுகிறேன். முதலாவதாக, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுயமாகவே வரிவிதிக்கும் அதிகாரம் கிடையாது. மாநில அரசாங்கம்தான் சட்டங்கள் இயற்றி, அவைகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரம் அளிக்கிறது. ஆனால், மாநில அரசாங்கத்திற்கே வருவாய்கள் போதாததினால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஓரளவுக்கே உதவ முடிகிறது. இரண்டாவதாக, ஸ்தல ஸ்தாபனங்களின் வருவாய் ஆதாரங்கள் குறைவாக இருப்பதால், அவை, தம் கடமைகளை நிறைவேற்ற, அரசாங்க மானியங்களையே, அதிக அளவுக்கு நம்பியிருக்க வேண்டியுள்ளது. கிடைக்கக் கூடிய அரசாங்க மானியங்களின் அளவு முதலியன குறித்து முன்கூட்டியே உறுதியாகத் தெரிய முடியாததால், அவை, தம் வேலைகளைச் சரிவரத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதில் சிரமம் இருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் மூன்றாவது திட்ட காலத்திற்கு கிடைக்கக்கூடிய வருவாய் ஆதாரங்கள், மானியங்கள் எவ்வளவு என்பதை திட்டமாக வரையறுத்து, பஞ்சாயத்து அபிவிருத்தி வரவு செலவுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் தனக்கும், தன்னுள்ளேயிருக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் இம்மாதிரியான திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இந்த ஏற்பாட்டினால், ஐந்து வருட காலத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களை முன்னோக்கியே திட்டமிட ஊக்கமும் வழியும் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் புது டெல்லியில் நடந்த சமுதாய அபிவிருத்தி மகாநாடுகளில் தமிழ்நாட்டில் வகுத்திருக்கும் பஞ்சாயத்து அபிவிருத்தி வரவு செலவுத் திட்டம் போல், எல்லா ராஜ்யங்களிலும் வகுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் ஓரளவு பெருமையுடன் சொல்லிக்கொள்ள வேண்டும்.

### வரி விதிப்பு அதிகாரங்கள்

அடுத்து, ஸ்தல ஸ்தாபங்களின் வரிவிதிப்பு அதிகாரங்களைப்பற்றிப் பேசலாம். பஞ்சாயத்துகளைப் பொறுத்த மட்டில், அவை வீட்டு வரி, வாகன வரி, தொழில் வரி, ஆகிய மூன்றையும் கட்டாயம் விதித்தே ஆக வேண்டும். இவற்றைத் தவிர, குறிப்பிட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக நிலங்களின் பேரில் ஒரு வரியையும் விதிக்கலாம். பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டோமானால் அவை, நிலவரியின் மீது பிரதேச செஸ் சர்சார்ஜ் ஒன்று விதிக்கலாம். அதே போல் கேளிக்கை வரியின் மீதும் சர்சார்ஜ் ஒன்று விதிக்கலாம். நமது மாநிலத்தில் அநேகமாக எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் பிரதேச செஸ் சர்சார்ஜ் வரியை விதித்துள்ளன. பெருவாரியான யூனியன்கள் கேளிக்கை வரி மீது சர்சார்ஜையும் விதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றன. இந்த முறையில் வருடத்திற்கு சுமார் 2 கோடி ரூபாய் பெறுமான வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதில் பஞ்சாயத்து யூனியன்களும் பஞ்சாயத்துக்களும் காட்டியுள்ள ஆர்வமும் அக்கறையும் நமக்குப் பெருமைதரும் விஷயங்களாகும். இதனால் யூனியன்கள் எதிர்காலத்தில் திறம்பட இயங்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது. இந்த வருவாய்களைக் கொண்டுதான், யூனியன்கள் ஆரம்பக் கல்வி முதலான காரியங்களில் வெகுவாக முன்னேறியிருக்கின்றன.

பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும், புதிய வருவாய் ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள, அவற்றைத் தூண்டும் வகையில், அரசாங்கம் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தன்னுடைய பிரதேசத்தில் வசூலிக்கப்படுகிற பிரதேச செஸ் சர்சார்ஜ்க்கு ஈடாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஈட்டு மானியம் அளிக்கப்படுவதை, இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதே போல், தங்களுடைய பிரதேசங்களில் வசூலிக்கப்படுகிற வீட்டு வரிக்கு ஈடாக, பஞ்சாயத்துக்களுக்கு, ஈட்டு மானியம் அளிக்கப்படுகிறது.

நான் மேலே கூறிய வகையில், ஸ்தல ஸ்தாபனங்கள் திறம்பட செயல்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாம் செய்தாகிவிட்டது என்று திருப்திப்பட்டுக்கொண்டிருப்பதற்கு இடமில்லை என்று தான் சொல்ல வேண்டும். பார்க்கப்போனால், ஸ்தல ஸ்தாபனங்கள் தங்களுடைய வருவாய் ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்வதற்கு ஒரு வரையறை இருக்கிறது. அதே போல் அரசாங்கம் கொடுக்கும் மானியத் தொகைகளுக்கும் ஒரு வரையறை இருக்கிறது. ஆகவே, வருவாய்களைப் பெருக்க இன்னும் பல வழிகளை ஆராய்வது அவசியமாகும். இத்தகைய முயற்சிகளில் பயன்படத்தக்க தொழில்களை ஆரம்பிப்பது ஒன்றாகும். இதற்காக அரசாங்கம் கடன் தொகைகளை வழங்குகிறது. பழத் தோட்டங்களை அமைத்தல், மரம் நடுதல் முதலியவற்றையும் மேற்கொள்ளலாம். இப்படி வருவாயைப் பெருக்கி புதிய காரியங்கள் செய்யப் பயன்படுத்தலாம். ஆனால் ஒன்று ; வருவாயைப் பெருக்கினால் மாத்திரம் போதாது. செலவு செய்வதில் சிக்கனம் வேண்டும். செலவழிக்கும் ஒவ்வொரு காசுக்கும் முழுப்பலன் பெறும் வகையில் செலவு செய்யவேண்டும்.

[வானொலிப் பேச்சு]



## மெட்ரிக் எடைகளே சட்டபூர்வமானவை

1-4-1962 முதல்,மாநிலமெங்கும் மெட்ரிக் எடைகளின் உபயோகம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் மெட்ரிக் எடைகளை மட்டுமே உபயோகிக்க வேண்டும். வீசை, சேர், பவுண்டு முதலான வகை எடைகள், அவர்களிடமிருக்குமானால், அவற்றை உடனடியாக அப்புறப்படுத்திவிட வேண்டும். அங்கீகரிக்கப்படாத அத்தகைய எடைக்கற்களை வியாபாரத்தலங்களில் வைத்திருந்தால், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு எடை-அளவு (நிறைவேற்றம்) சட்டத்தின் கீழும், இந்திய தண்டனை விதித்தொகுப்பின் கீழும், தண்டனைக்குரிய குற்றமாகும்.

எடை அளவு கட்டுப்பாடு அதிகாரி,
(Controller of Weights and Measures)
தமிழ்நாடு அரசாங்கம்.

## [illegible]

### திரு. தி அரசமணி

(பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், சின்னசேலம்)

விரட்டுவோம் ! விரட்டுவோம் ! ! விரட்டுவோம் ! ! !
பாரதத்தின் எல்லை தொட்ட பாம்பு உண்ணும் சீனனை!
வீரமில்லாக் கூனன் ! வெட்டி வீம்பு பேசும் வீணனை!
—விரட்டுவோம் !

பஞ்ச சீலம் தந்த நேரு பகன்று விட்டார் தோழரே!
வஞ்சம் சூதுவாது எண்ணும் வம்பர் செத்து வீழவே !
—விரட்டுவோம் !

நன்றியுள்ள நாயைக் கொன்று மென்று உண்ணும் ஈனனை!
வென்று வீழ்த்தி இமயம் நின்று மிரண்டு ஓட விரட்டுவோம்!
—விரட்டுவோம் !

கள்ளன் போலே மெல்லவந்து கன்னம் வைத்தான் ஓயுமுன்
குள்ளன் வீழக்கொடுங்கள் தங்கம் ! கொள்வோம் நல்ல ஆயுதம்
—விரட்டுவோம் !

வங்கம் வந்து பங்கம் செய்து தங்க எண்ணும் புல்லனை
சிங்கம் போன்று சீறிப்பாய்ந்து சின்னபின்னமாக்குவோம் !
—விரட்டுவோம் !

ஒளியை வீசும் வழியைக்காக்கும் இமையை ஒத்த இமயத்தை
ஒளிந்திருந்து சமயம்பார்த்து விழுங்க எண்ணும் பகைவனை
—விரட்டுவோம் !

ஊக்கம் மிக்க உழவர்களே ! ஊனன் சீனன் வருவானோ !
ஆக்கம் நாடி நாட்டைக் காக்க அதிகம் செய்க பொருளினை
—விரட்டுவோம்

நச்சரவம் வந்ததிங்கு ! நாளும் தயக்கமின்றியே
சச்சரவு சள்ளு எல்லாம் தள்ளிவைப்போம் ! குன்றிடோம் !
—விரட்டுவோம் !

ஊர்கள்தோறும் அணிவகுத்தோம் ! ஒன்று சேர்க வீரரே
பாரதத்தாய் மானம் காக்கப் பாய்ந்து செல்க தீரரே
—விரட்டுவோம்

வீரமிக்க தொண்டர் படை வீறு கொண்டு ஆர்க்கட்டும் !
வீணன் சீனன் வீழ்ந்தான் ! இனி மீண்டும் வந்து பார்க்கட்டும் !
—விரட்டுவோம் !

## நேருஜி கண்ட "உழைப்பின் ஆலயம்"

அது ஒரு சிறு கிராமம். பஞ்சாப் ராஜ்யத்தில் லூதியானுவுக்கு 34 மைல் தூரத்தில் உள்ள அதன் பெயர் "ரெய்ப்பூர் மஜ்ரி". சென்ற ஜூலை மாதம் 8-ம் தேதி திருவிழா கோலம்பூண்டு இருந்தது. வீதிகள் எல்லாம் சுத்தப்படுத்தப்பட்டு, வீடுகள் எல்லாம் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. வரவேற்பு வளைவுகளும், தோரணங்களும் கிராமத்தை அழகுபடுத்தின. கிராம மக்கள் அனைவரும் புத்தாடை பூண்டு, மகிழ்ச்சி பொங்க அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். சுற்றுபுறக் கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சேர்ந்தவண்ணமிருந்தார்கள். கூட்டத்தை ஒழுங்குபடுத்தி அமைதியை நிலைநாட்டுவதில் போலீசார் சுறுசுறுப்புடன் இருந்தார்கள். இது ஏன்? அன்று அந்த கிராமத்திற்கு இந்தியப் பிரதமர் நேரு வருவதுதான் காரணம்!

அந்தக் கூட்டத்திலே மிகவும் மகிழ்ச்சி கொண்டவராக இருந்தவர் சுபேதார் நகேந்திரசிங். ஏனென்றால், அவர்தான் பிரதமர் நேருவை அந்த ஊருக்கு அழைத்தவர். முன்பு அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை பிரதமர் நேரு தற்போது நிறைவேற்றுகிறார்.

அது ஓர் ஆண்டுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி! அந்த கிராமத்தில், பெண்கள் பள்ளி, கால்நடை ஆஸ்பத்திரி, கூட்டுறவு பண்டகசாலை ஆகியவை அமைவதற்கு காரணமாக இருந்தவர் நாகேந்திரசிங். இந்த விவரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

பிரதமர் நேரு இதைக் கேள்விப்பட்டு, அவரை டெல்லிக்கு அழைத்தார். நாகேந்திரசிங்கின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. டெல்லி சென்று பிரதமரைப் பார்த்து மகிழ்ந்தார். தன்னுடைய கிராமத்தை வந்து பார்க்கும்படி நேருஜியை அழைத்தார். வருவதாக பிரதமர் வாக்குறுதி கொடுத்தார். அதன் விளைவே தற்போதைய வருகையாகும். சண்டிகார் நகரத்தில் நடந்த பஞ்சாயத்து மகா நாட்டிற்கு வரும்போது இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது. "ரெய்ப்பூர் மஜ்ரி" என்ற அந்த சிறு கிராமத்திற்கு நேருஜி போகும்போது, அவருக்கு பிரமாண்டமான வரவேற்பு காத்து இருந்தது. அவர் மக்கள் வரவேற்பை ஏற்றார். "தன கையே தனக்குதவி" என்ற அடிப்படையில் நாகேந்திரசிங்கும் அவருடைய துணைவர்களும் நிறுவிய நிலையங்களைக் கண்டார். இந்த ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், நூல் நிலையம், கால்நடை ஆஸ்பத்திரி, கூட்டுறவு சங்கம் ஆகியவை பொதுமக்களுக்குச் சிறப்பான முறையில் சேவை செய்து வந்தன. இவையனைத்தும் அமைந்துள்ள இடத்திற்கு "குருநானக் காலனி" என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்த காலனியை பிரதமர் நேரு திறந்து வைத்தார். பிறகு நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில், தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையின் ஆலயமாக அமைந்திருக்கும் இந்த நகரைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகவும், தங்களுக்கு உதவி செய்வதுடன் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் இது இருக்கும் என்றும் கூறினார்.

தன்னுடைய பணிகள் எல்லாம் தேசத் தலைவரால் பாராட்டப்பட்டது கண்டு நாகேந்திரசிங் பெருமிதமடைந்தார். அவர் ஒரு முன்னாள் ராணுவ வீரர். சென்ற 1949-ம் ஆண்டு வேலையில் இருந்து ஓய்வு பெற்றார். அந்த கிராமத்தில் இவரைப்போல் ஏராளமான வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பிரதமருடன் கை குலுக்கினார்கள். போர்க்களம் கண்ட வீரர்கள் அனைவரும் தற்போது நாட்டு வளர்ச்சி என்ற களத்தில் பணி புரிந்தனர். இருகளமும் ஒரேமாதிரிதான். இரண்டிலும் வீரம், தேசபக்தி, உயர்ந்த பண்பு ஆகியவை தேவை. ஆகவே, ராணுவ வீரர்களாக இருந்தவர்கள் அனைவருக்கும் வளர்ச்சிப் பணி புரிவது எளிதாக இருந்தது. நாகேந்திரசிங் சென்ற காலத்தை எண்ணிப் பார்த்தார். ராணுவத்திலிருந்து விடுமுறைக்காக கிராமம் திரும்பிய போது தரிசாகக் கிடந்த வயல்கள் வழியாக நடந்து வந்தார். தாகத்திற்குத் தண்ணீர் இல்லாமல் மரத் தடியில் உட்கார்ந்ததை நினைவுக்குக் கொண்டுவந்தார். தண்ணீர் வசதிக்கு ஆவன செய்யவேண்டும் என்று உறுதி எடுத்தார். அந்த கிராமத்தில் இருந்த பழைய கிணறு ஒன்றைச் செப்பனிட்டு, அதற்கு அருகே ஒரு குடிசை கட்டினார். வழிப்போக்கர்களுக்கு தண்ணீர் கொடுக்க 5 ரூபாயில் ஒரு ஆளை அமர்த்தினார். தனக்குக் கிடைத்த சிறு ஊதியத்தில் இருந்து இந்தப் பணத்தை கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியா சுதந்திரமடைந்ததும், மக்கள் தேசமுன்னேற்றத்தில் ஈடுபட்டனர். ராணுவத்தில் இருந்து அவர் ஓய்வு பெற்றதும் ஒவ்வொரு திட்டமாக நடைமுறைக்குக் கொண்டுவந்து செவ்வையாகச் செய்து முடித்தார். அரசாங்கத்தின் உதவியை அவர் எதிர்பார்ப்பதில்லை. அவர் செயலைக் கண்டு பலர் எள்ளி நகையாடினார்கள். இதை அவர் பொருட்படுத்தவில்லை. நிதி 10 ஆயிரம் ரூபாய் திரட்டினார். அதில் 5 ஆயிரம் ரூபாய்க்கு பஞ்சாயத்து கட்டிடம் கட்டினார். பிறகு பெண்கள் பள்ளியும், அதேபோல் ஆஸ்பத்திரி, நூல் நிலையம், ஆகியவைகளையும் கட்டி முடித்தார். அவரது திட்டத்தின் 7-வது ஆண்டு தொடக்கத்தில் பிரதமர் நேரு அந்த ஊருக்கு வந்தார். அப்போது அந்த கிராமத்திற்கு சாலை வசதி சரியாக இல்லை. 5 மைல் நீளமுள்ள இந்த சாலையை மக்களின் உதவியாலேயே அவர் அமைத்தார்.

நாகேந்திரசிங் தற்போது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். பள்ளி மாணவர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளித்து வருகிறார்.

இந்தச் செயல் வீரர் பல்வேறு வகையான 10 திட்டங்கள் மூலம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறார். வளர்ச்சிப் பணியில் அவர் ஒரு நாள் கூட ஓய்ந்ததில்லை. அவர் பணி நாட்டு மக்களுக்கு சீரிய உதாரணமாகும்.

[Reproduced from "Panchayati Raj", September, 1963.]



## புதிய பஞ்சாயத்து ஆட்சியில் கல்வி வளர்ச்சி



(திரு எம். ரகுராம்சிங், M. A., M. Ed.,—கிராமிய உயர்நிலைக் கல்லூரி, ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்.)

### ஆரம்பக்கல்வி நிர்வாகம்

தமிழ்நாட்டில் 1960-ம் ஆண்டில் அக்டோபர் மாதம் 2-ம் தேதி புதிய பஞ்சாயத்து ஆட்சி துவக்கப்பட்டு 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் மாநிலம் முழுவதும் இவ்வாட்சியின்கீழ் வந்துள்ளது.

இந்த பஞ்சாயத்து நிர்வாக அமைப்பில், பஞ்சாயத்து யூனியனுக்கு மிக முக்கியமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான், ஆந்திர மாநிலங்களைப்போலவே, தமிழ்நாட்டு அரசாங்கமும் ஆரம்பப் பள்ளிக் கூடங்களை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்துள்ளது. 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து, நம் மாநிலம் முழுவதும் உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை முழுவதும் நிர்வகிக்க துவங்கின.

மாவட்டக் கழகங்கள் (District Boards) பள்ளிக்கூடங்களைத் திறம்பட நடத்தவில்லை. மாவட்டம் என்பது பெரிய நிலப்பரப்பு. எனவே, திறம்பட நடப்பதற்கு வசதியில்லாமல் இருந்தது. பஞ்சாயத்து யூனியன் என்பது நிர்வாகத்திற்கு வசதி உடைய நிலப்பரப்பு. மேலும், ஆரம்பக் கல்விப் பொறுப்பை, மக்கள் தலைவர்களிடமே ஒப்படைக்க வேண்டும். தமிழ்நாடு அரசாங்கம் கட்டாயக் கல்வித் திட்டத்தை மூன்றும் திட்டகாலத்தில் அமுலாக்குவதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஆரம்பப் பள்ளிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடமே ஒப்படைப்பதால், கட்டாயக் கல்வி வெற்றியடைவதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படும். நிர்வாகத்தில் மாறுதல்கள் நிகழ்ந்தமைக்கு இவையே நோக்கங்களாகும்.

### ஆரம்பக் கல்வி என்றால் என்ன?

ஆரம்பக் கல்வி என்பது, நம் மாநிலத்தில் பள்ளி வயது வந்த குழந்தைக்கு முதல் 8 ஆண்டுகளில் அளிக்கப்படும் கல்வியாகும். இந்த ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியைக் கவனிப்பது பஞ்சாயத்து யூனியனின் கடமையாகும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஒரு கல்விக் குழுவினை நியமித்து இருக்கிறது. ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியை இக்குழு திட்டமிடுகிறது. அடிக்கடி இக்குழு கூடி, தன்னுடைய யோசனைகளையும் சிபார்சுகளையும் பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கு தெரிவிக்கிறது.

பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஆரம்பப் பள்ளிகள், ஆதாரப் பள்ளிகள், உயர் ஆரம்பப்பள்ளிகள், உயர் ஆதாரப் பள்ளிகள் ஆகியவற்றைக் கவனிக்க, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு, கல்வித் துறை, ஒரு துணைக் கல்வி மேற்பார்வையாளரை (Deputy Inspector of Schools) நியமித்துள்ளது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கல்வி மேற்பார்வையாளர் இருப்பதால், அவர் பள்ளிகளை சரிவரக் கண்காணிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இவர் கல்வி சம்பந்தமான விஷயங்களை மேற்பார்வையிட்டு அரசாங்கம் அளிக்கும் மானியத்திற்குச் சிபார்சு செய்து மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்புகிறார். மாவட்டக் கல்வி அதிகாரியின் அங்கீகாரம் பெற்றபின், அது பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அனுப்பப்படுகிறது. தனியார் பள்ளிக்கூடங்களுக்கு ஆணையாளர் மூலம் மான்யம் வழங்கப்படுகிறது.

### நிர்வாக அதிகாரி

பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அமைப்பில், ஆரம்பப் பள்ளிகளுக்கெல்லாம் ஆணையாளர்தான் நிர்வாக அதிகாரி. ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதும், நீக்குவதும், தண்டிப்பதும், இடம் மாற்றுவதும் ஆகியவை பற்றிய அதிகாரங்கள் அவருக்கே உரியன. ஆணையாளருக்கு ஆரம்பக் கல்வித் துறையில் உதவ, கல்வி வளர்ச்சி அதிகாரி (Education Extension Officer) ஒருவர் இருக்கிறார். முன்பு சமூகக் கல்வி அமைப்பாளர்களாக (Social Education Organisers) இருந்தவர்கள் தற்போது கல்வி வளர்ச்சி அதிகாரிகள் என்ற பெயரில், முன்பிருந்த பொறுப்போடு, புதிய பணியையும் இணைத்துச் செய்கிறார்கள். ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சிலரையும், கல்வி வளர்ச்சி அதிகாரிகளாக பதவி உயர்த்தியுள்ளார்கள். கல்வி வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களின் நிர்வாக அம்சத்தை மேற்பார்வை செய்கிறார். பள்ளிகளுக்கு வேண்டிய பொருட்களை யூனியன் அலுவலகத்திலிருந்து வழங்குகிறார். மதிய உணவுத் திட்டத்தின் நிர்வாக மேற்பார்வையையும் இவர்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

கல்வித் துறையைச் சார்ந்த பள்ளித் துணை மேற்பார்வையாளரும் (Deputy Inspector of Schools), பஞ்சாயத்து யூனியனின் கீழ் பணிபுரியும் கல்வி வளர்ச்சி

அதிகாரியும் இணைந்து வேலை செய்ய, பள்ளி ஆலோசனைக் குழு (School Advisory Committee) ஒன்றுள்ளது. இந்த பள்ளி ஆலோசனைக் குழுவின் தலைவர் ஆணையாளரே. கல்வி மேற்பார்வையாளரும், கல்வி வளர்ச்சி அதிகாரியும் இக்குழுவின் இதர இரண்டு உறுப்பினர்கள். இந்தக் குழுவானது குறைந்தது ஆண்டிற்கு ஆறு முறையாவது கூடி ஆலோசிக்க வேண்டும். இக்குழுவின் பல்வேறு வேலைகளில் குறிப்பிடத் தக்கவை—(1) பஞ்சாயத்து யூனியன் பகுதியில், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியை ஓர் ஐந்தாண்டுத் திட்டமாகத் தீட்டுவது, (2) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் மதிய உணவு திட்டம் செயல்படுவதைக் கவனிப்பது, (3) கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டம் யூனியனில் செயல்படுவதைக் கவனிப்பது, (4) பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்து சமூகக்கல்விக் குழுக்களுக்கு (Panchayat Social Education Committees) வேண்டிய ஆலோசனையையும் உதவியையும் செய்வதோடு, அவை செயல்படுவதையும் கவனிப்பது, (5) கல்வி மேற்பார்வையாளரும் கல்வி வளர்ச்சி அதிகாரியும் மோதல் இன்றி இணைந்து ஒரு முகமாகப் பணிபுரிய திட்டமிடுவது·

### கட்டாய–இலவச–ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக, பஞ்சாயத்து யூனியனுக்கு பிரதேச செஸ் சர்சார்ஜ் (Local Cess Surcharge)-ஐ மக்களிடமிருந்து வசூலிக்கப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. தமிழ்நாட்டு அரசாங்கம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கட்டாய இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்தை மாநிலம் முழுவதும் அமுல் செய்வது என்ற கொள்கையை அறிவித்துள்ளார்கள். அக்கொள்கைப்படி, கட்டாய இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 6 வயதிலிருந்து 11 வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியர் அனைவரும் 3-ஆவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள், பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பப் பெற்றோர்களை ஊக்குவிக்கவேண்டும். கல்வியின் பெருமையைப் பெற்றோர்கள் உணர்ந்தால் தான் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவார்கள். இதற்குத் தேவையான சூழ்நிலையையும், பொது அபிப்பிராயத்தையும் மக்களிடையே தோற்றுவிக்க ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து—சமூகக் கல்விக் கமிட்டியை (Panchayat Social Education Committee) அமைக்க வேண்டும் என்று பஞ்சாயத்துச் சட்டம் கூறுகிறது. இந்தக் கமிட்டியை அமைக்கும் பொறுப்புக் கிராம பஞ்சாயத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்துத் தலைவரே இந்தக் கமிட்டிக்கும் தலைவராவார். கட்டாய இலவச ஆரம்பக் கல்வியினால், குழந்தைகள் பெறும் பயன்களை, அவர்களின் பெற்றோர்களுக்கு எடுத்துரைப்பது, இந்தக் கமிட்டியின் சிறப்பான பணியாகும். ஆண்டுதோறும், பள்ளி வயதுக் குழந்தைகள் கணக்கீட்டின்படி, பள்ளி வராத குழந்தைகளின் விவரத்தையும், அவர்களின் பெற்றோர்களின் விவரத்தையும் தலைமை ஆசிரியர், இந்தக் கமிட்டிக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும் ஒரு பருவத்தில் 15 நாட்கள் தொடர்ந்து வராத குழந்தைகளின் விவரத்தையும், பள்ளி வயது முடிவதற்கு முன்னரே, பள்ளி விட்டு விலகும் குழந்தைகளைப் பற்றியும், தலைமை ஆசிரியர் தெரியப்படுத்தவேண்டும். இந்தப் பஞ்சாயத்து சமூகக் கல்விக் குழு, அந்தப் பெற்றோர்களை விசாரணை செய்கிறது. பெற்றோர்களை மன்னிப்பது அல்லது தண்டிப்பது பற்றி இந்தக் கமிட்டி ஆலோசித்துப் பஞ்சாயத்துக்குத் தன்னுடைய சிபார்சை அனுப்புகிறது. பஞ்சாயத்துதான் இறுதியாக முடிவு செய்கிறது.

மேலும், கட்டாயக் கல்வித் திட்டத்தில் குழந்தைகளைக் கட்டாயமாக பள்ளியில் சேர்க்கும்படி திட்டம் இல்லை. பள்ளியில் சேரும்படி தூண்டுவதே ஒழிய, கட்டாயப்படுத்துவது கிடையாது.

### கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தின் பிரச்சினைகள்

எல்லாக் குழந்தைகளும் கல்வி பெறப் பல பள்ளிகள் தேவை. குழந்தைகள், சிரமமின்றி பள்ளிக்கு வந்து செல்வதற்கு ஏற்ற முறையில் பள்ளிகள் அமையவேண்டும். பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், தொழிற் கருவிகள் (Craft Materials) போதனைத் துணைக் கருவிகள் (Teaching aids) பாடப் புத்தகங்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போன்றவற்றை தக்கவாறு ஏற்பாடு செய்யவேண்டும். இவை அனைத்திற்கும் ஏராளமான பணம் தேவை. பஞ்சாயத்து யூனியனிடம் அவ்வளவு பணம் இருக்கிறதா என்ற கேள்வி எழுகின்றது. கல்வியின் வளர்ச்சிக்காக, (Local Cess surcharge) என்ற வரிப்பணத்தை மக்களிடமிருந்து வசூலிக்க யூனியனுக்கு அதிகாரம் இருந்தும், யூனியன் மன்றம், மக்களின் அதிருப்தியைத் தேடிக்கொள்ள விரும்பாமல், சரிவர வரிப் பணம் வசூலிப்பதில்லை. ஆகவே, எல்லாக் குழந்தைகளும் படிக்க எவ்வாறு வசதி செய்து கொடுப்பது என்பது இத்திட்டத்தின் முதல் பிரச்சினை ஆகும்.

இரண்டாவது பிரச்சினை, பள்ளி வயது குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது. ஆரம்பக் கல்வியானது ஒரு கிராமிய பிரச்சினை என்பது தெரிந்ததே. கிராமங்களில் வசதி குறைவினால் அநேக பெற்றோர்கள் சமீபகாலம் வரையில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப தயங்கினர். மக்களிடையே நிலவிவரும் சாதி, மதம், மொழி, வேற்றுமைகளும், சமூக பழக்கவழக்கங்களும் கட்டாயக் கல்விக்குப் பாதகமாக இருக்கின்றன. பள்ளி சேரும் இயக்கங்களை (School Enrolment Drives) நடத்திக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கத் தூண்டவேண்டும். பள்ளி சேரும் இயக்கங்களை நடத்தும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் கிராமத் தலைவர்களுக்கும் உரியது. கட்டாயக் கல்வி

[31-ம் பக்கம் பார்க்க.]





மேல் படம்.—அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக உணவு காங்கிரசில் கலந்து கொண்டு, திரும்பிய அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்களுக்கு, சென்னை விவசாயிகள் மன்றம் 4-8-63-ல், வரவேற்பளித்தது.



நடுவில்.—திருவொற்றியூர் கன்யாகுருகுலம் வாசுகி பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்தை, குத்துவிளக்கேற்றி, மாநிலக் கவர்னர் திரு விஷ்ணுராம்மேதி அவர்கள் 27—7—1963-ல் திறந்து வைத்தார்.



கீழே.—கிராமத் தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைக் குழு, 29-8-63-ல், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கூடியது.



1



2

படங்கள் 1, 2.—சேலம் மாவட்டம், தாரமங்கலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மல்லிக்குட்டை பஞ்சாயத்தில், மாவட்டக் கலெக்டர் திரு எ. பத்மநாபன், ஐ.எ.எஸ். அவர்களால், 12—7—1963-ல், கிராமத் தொண்டர் படையினர் அமைக்க இருந்த இணைப்புப் பாதை வேலையும், பஞ்சாயத்து பழத் தோட்டம் அமைக்கும் வேலையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

படம் 3.—திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த முருகூர் பஞ்சாயத்தில் கிராமத் தொண்டர் படையினர் பாதை அமைக்கின்றனர்.



3



1



2

1. 1961—62 ஆண்டில், திருச்சி மாவட்டம் துறையூர் பஞ்சாயத்தில், கம்போஸ்டு உரம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டதற்கு, தமிழ்நாடு அரசாங்கத்தினால்வழங்கப்பட்டசுழற்கேடயத்தை, 18—7—1963-ல், மாவட்டக் கலெக்டர் திரு கே. சொக்கலிங்கம், ஐ. ஏ. எஸ்., அவர்கள் பரிசாக வழங்குகிறார்கள்.

2. வட ஆர்க்காடு மாவட்டம், மாதனூர் பஞ்சாயத்து யூனியன் சோலூர் பஞ்சாயத்து பெண்கள் தொண்டர் படை பயிற்சி முகாம்.

3. வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் பஞ்சாயத்து யூனியன், பிஞ்சூர் பஞ்சாயத்து கிராமத் தொண்டர் படையினர், பஞ்சாயத்து பழத் தோட்டத்தில், கிணறு வெட்டுகின்றனர்.



3










படங்கள் 1, 2.—தஞ்சாவூர் மாவட்டம், கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் கிராமத் தொண்டர் படையினர் பாதை அமைக்கின றனர். (விவர செப்டம்பர் இதழில்—பக்கங்கள் 25–26 பார்க்க.)

படம் 3.—திருவை யாறு பஞ்சாயத் யூனியன் கண்டியூ பஞ்சாயத்து கிராம தொண்டர் படையின பாதை அமைப்ப வேலையில் ஈடுபட்டு ளனர்.

# நோயற்ற வாழ்வு

## குஷ்டரோகம்—சில தவமுன கருத்துக்கள்

குஷ்டரோகத்தைப்பற்றி சில தவறுன நம்பிக்கைகள் நாட்டில் நிலவி வருகின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்க சிலவற்றைத் திரட்டி இங்கே கொடுத்துள்ளோம். அவை தவறுனவை என்பதற்கான விளக்கங்களையும் எடுத்துக்கூறி இருக்கிறோம்.

குஷ்டரோகம் தெய்வீக சாபத்தால் ஏற்பட்ட வியாதி என்று பெரும்பாலோர் நம்புகிறார்கள். இது கரும வியாதி என்றும் அநேகரால் அழைக்கப்படுகிறது. பெரும் பாவங்கள் புரிந்ததன் விளைவாகவும், சாபங்களுக்கு இலக்காகியும் இந்நோயால் பீடிக்கப்பட்ட பலரது கதைகளை நமது புராண இதிகாச நூல்கள் விரித்துரைக்கின்றன. கர்ண பரம்பரையாக நிலவி வரும் இந்த நம்பிக்கைகளை பொது மக்களின் உள்ளத்தில் ஆழப்பதிந்து நிற்கும் இந்த சரியில்லாத கருத்துக்களை அகற்றுவதென்பது எளிதான காரியமல்ல. இந்த வியாதி தப்பித்தவறி யாருக்காவது வந்துவிட்டால், அவருக்கு ஏற்படும் நிலை "சமூகப் பிரஷ்டம்" தான்.

எனவேதான் இந்நோயாளி கூடுமானவரை இந்நோய் தமக்கு வந்திருப்பதை பிறர் அறிந்து கொள்ளாதிருக்க பிரயத்தனங்கள் செய்கிறார். நோய்ப்படை இருக்கும் இடங்களை மூடி மறைத்து வைத்துக்கொள்கிறார். பிறர் தம்மை கேவலப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் விளைவிக்கும் துன்பம், அவரது உடல் நோய் விளைவிக்கும் துன்பத்தைக் காட்டிலும் சகிக்க முடியாததாக இருக்கிறது. நிலைமை தலைக்கு மிஞ்சும் சமயத்தில்கூட, இவர் தற்கொலை செய்யத்தான் தயாராக இருப்பாரே தவிர, இந்நோய் சம்பந்தமாக யாரேனும் டாக்டரைக் கலந்து ஆலோசிக்கலாம் என்ற மனநிலை அவருக்கு வராது.

இந்த சூழ்நிலை மாற வேண்டாமா? குஷ்டரோகத்தைப் பற்றியும், இந்த வியாதியால் பீடிக்கப்படுவோரைப் பற்றியும் இன்னும் தவறுன, காலங்கடந்த கருத்துக்களை நாம் கொண்டிருப்பது சரிதானு? குஷ்டமும் மற்ற வியாதிகளைப் போன்றதொரு வியாதிதான். "லெப்ரா பெசில்லி" என்றழைக்கப்படும் சிறு கிருமிகள்தான் இவ்வியாதிக்குக் காரணம். இவற்றை நாம் நுண்பொருள்காட்சிக்கருவி (Microscope) மூலம் பார்க்கமுடியும்.

### குஷ்டரோகத்தின் இரு பிரிவுகள்

"குஷ்டரோகமா? அடேயப்பா, அது பெரிய தொத்து வியாதியாச்சே" என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இந்தியாவிலுள்ள குஷ்ட நோயாளிகளில் 75 சத விகிதத்தினருக்கு இருக்கும் குஷ்டம் தொற்றும் அபாயமில்லாதது (Non Infectious) என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. எஞ்சிய 25 சத விகிதம் பேருக்கு ஏற்பட்டிருக்கும் வியாதிதான் தொற்றும் அபாயமுள்ளது. அதுவும் பெரியவர்களுக்கு இவ்வியாதி தொற்றும் அபாயம் அதிகமில்லை. குழந்தைகளுக்குத்தான் சுலபமாக இவ்வியாதி தொற்றக்கூடியது. எனவே குஷ்டரோகத்தைத் தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளுள், குழந்தைகள் குஷ்டரோக நோயாளிகளிடம் நெருங்கிப் பழகுவதைத் தடுப்பதே, மிக முக்கியமானதாகக் கருதப்படவேண்டும்.

நம் நாட்டில் தேர் விழாக்கள், கோவில் வாசல்கள், சந்தைகள் இதுபோன்ற ஜனசந்தடி அதிகமுள்ள இடங்களிலெல்லாம் குஷ்டரோகமுள்ள பிச்சைக்காரர்கள் உட்கார்ந்திருப்பதையும், முடங்கிய கை கால்களையும் அங்கமெல்லாம் குறைந்தழுகி நிற்கும் அவலக் காட்சியையும், வருவோர் போவோருக்குக் காட்டி அவர்கள் பிச்சைக் கேட்பதையும் சகஜமாகப் பார்க்கிறோம். இந்தக் காட்சி பார்ப்போர் உள்ளத்தில் வேதனையையும் கழிவிரக்கத்தையும் உண்டாக்குகிறது. இவர்கள்தான் நோய் பரவக்காரணமாகிறார்கள் என பொதுவாக ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் குஷ்டரோக தடுப்பு சேவையில் நன்கு பழக்கப்பட்ட ஊழியர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமா? "இவர்களால் நோய் பரவும் அபாயம் இல்லை; இவர்களை ஆஸ்பத்திரியிலே வைத்து சிகிச்சை தர வேண்டுமென்பதில்லை. இவர்கள் மருந்து மட்டும் சாப்பிட்டு வந்தால் போதும். ஆனால் அதே சமயம் உடம்பில் புண்கள் இல்லாமல் கை கால்கள் முடங்காத நிலையில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாரே அவரைத்தான் ஆஸ்பத்திரியில் அல்லது தனியான இடத்தில் வைத்து சிகிச்சை செய்ய வேண்டும், அவருடைய நோய்தான் தொற்றும் அபாயம் உடையது" என்று சொல்லுவார்கள்.

தொற்றும் ரகத்தைச் சேர்ந்த குஷ்டத்தை எப்படி இனங்கண்டுகொள்வது? முகம், காதுகள், பின்கை, முழங்கால், முதுகு, புட்டம் ஆகியவற்றில் பளபளப்பான செம்பழுப்பு நிறமேற்பட்டிருந்தால், அது தொற்றும் ரகம் என்று தெரிந்து கொள்ளலாம். புருவ மயிர் உதிர்ந்திருப்பது, உதடு, தாடை, காதுகள் வீங்கியிருப்பது ஆகியவையும் தொற்றும் ரகத்தில் அறிகுறிகளாகும், இந்த நோயாளிகளுள் சிலருக்கு முகம், காதுகள், உடம்பின் வேறு சில பகுதிகள் ஆகியவற்றில் சிறு கொப்புளங்கள் போன்ற வீக்கங்களும் ஏற்பட்டிருக்கும். இந்த ரக குஷ்ட நோயாளிகளின் மேல்தோல் மூலமாகவும், சில சமயங்

களில் மூக்கு, வாய் மூலமாகவும் குஷ்டநோய்க் கிருமிகள் வெளியேறிப் பரவத் தொடங்குகின்றன.

### குஷ்டரோகம் பரம்பரை வியாதியல்ல

சிலர் குஷ்டரோகம் பரம்பரை வியாதி என்று எண்ணிக்கொண்டுள்ளார்கள். குஷ்ட ரோகமுள்ளவர்களின் வீட்டில் குழந்தைகள் பலவற்றுக்கு இந் நோய் இருப்பதைக் கண்டுதான் அவர்கள் அவ்விதம் பரம்பரை வியாதி என எண்ணிக்கொண்டுள்ளார்கள் போலும். ஆனால், குஷ்டரோகமுள்ள தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகளை உடன் பரிசோதித்துப் பார்த்தால் அவை இந்நோயால் பீடிக்கப்படவில்லை என்பதும், நோயாளிகளான பெற்றோர்களிடமிருந்து அக் குழந்தைகளைப் பிரித்து சுகாதாரமுள்ள சூழ்நிலையில் அவற்றை வளர்த்து வந்தால் அக்குழந்தைகள் ஆரோக்கியமுடனும் குஷ்டரோகத்தால் பீடிக்கப்படாமலும் இருக்கும் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இக்குழந்தைகள் நோயாளிகளான தம் பெற்றோர்களுடனேயே வாழ வேண்டிய அவல நிலை இருந்தால், இவைகளுள் 50 முதல் 80 சத விகித குழந்தைகள் நிச்சயம் குஷ்டரோகத்தால் பீடிக்கப்படும் என்பதும் நன்கு தெரிந்த விஷயமாக இருக்கிறது. குஷ்ட நோயாளிகளான தம் பெற்றோர்களிடம் இடைவிடாது நெருங்கிப் பழகுவதே, இக்குழந்தைகளுக்கு குஷ்டம் வரக் காரணம் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

### மேக வியாதியும் குஷ்டரோகமும்

மேகவியாதி, குஷ்டரோகம் ஆகியவை இரு வேறு நோய்களாக இருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளவை என்று பலர் நினைக்கிறார்கள். குஷ்ட ரோகம் உடையவரின் உடலில் ஏற்படும் புண்களும் அங்கவீனங்களும், மேக நோய் முற்றி ஏற்பட்ட விளைவுகளாக, சிலரால் தவறாகக் கருதப்படுகின்றன.

இவ்விரு வியாதிகளும் முற்றிலும் வெவ்வேறானவை. இந்நோயாளிகளைக் கவனமாகப் பரிசோதித்து, இவ்வியாதிகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டை நிச்சயம் தெரிந்து கொள்ள முடியும். நாட்டின் சில இடங்களில் குஷ்ட ரோகம் அதிகமாகப் பரவியிருக்கலாம்; மேகவியாதி மிகக் குறைவாக இருக்கலாம். அல்லது மேகவியாதி அதிகமாக இருந்து குஷ்டரோகம் குறைவாக இருக்கலாம். ஒரே நபருக்கு இவ்விரண்டு வியாதிகளும் ஏற்பட்டிருக்கவும் ஏதுவுண்டு.

### வெண்குஷ்டம்

"லியூகோடர்மாவா? வெண்குஷ்டம் என்று தான் புரியும்படியாக தெளிவாகக் கூறுங்களேன்" என்று சிலர் கூறலாம். என்னதான் கூறினாலும் "லியூகோடர்மா" ஒருவித குஷ்டமாகிவிடாது. "லியூகோடர்மா" வியாதியை "லியூகோடர்மா" என்றுதான் கூறவேண்டுமே தவிர "வெண்குஷ்டம்" என்று கூறவே முடியாது. ஆயுர்வேத நூல்களில் என்னவோ இது "ஸ்வித்ர குஷ்டா" என்று கூறப்பட்டிருப்பது வாஸ்தவந்தான். எக்ஸிமா, சொராஸிஸ் ஆகியவற்றையும் இவ்விதம் "குஷ்டா" அடைமொழி கொடுத்து ஆயுர்வேத நூல்கள் கூறியுள்ளன என்பது இங்கு, குறிப்பிடத்தக்கது.

"லியூகோடர்மா"வுக்கும் குஷ்டத்துக்கும் கொஞ்சமும் தொடர்பு கிடையாது. தோலுக்கு நிறம் தரும் மூலபொருள் ஒன்று குறைந்திருப்பது காரணமாக இந்த வெள்ளை நிறம் ஏற்படுகிறது. இது ஒரு தொற்று வியாதி அல்ல. பார்ப்பதற்குத்தான் அருவருப்பாக இருக்குமே ஒழிய, இதன் காரணமாக யாரும் அங்கவீனமடைவதோ புண்களால் அவதியுறுவதோ இல்லை. ஆனால், ஆரோக்கியமுள்ள மற்றவர்களைப் போலவே லியூகோடர்மாக்காரருக்கும் குஷ்டம் வரக்கூடும்.

### குஷ்டத்தை குணப்படுத்த முடியும்

குஷ்டம் வந்தால் குணப்படுத்தவே முடியாது என்று கூறி வந்தகாலம் மலையேறி விட்டது. அதிர்ஷ்டவசமாக நமக்குக் கிடைத்துள்ள "சல்வோன்" மருந்துகள் மூலமும், நல்ல அறுவை சிகிச்சை வசதிகள் மூலமும், நோய் கடுமையைத் தணிப்பது மட்டுமல்ல, குஷ்டநோயாளியைக் குணப்படுத்தவும் முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. "சல்வோன்" சிகிச்சை என்ற விடிவெள்ளி கிளம்பி விட்டது. குடும்பத்தினரால், நண்பர்களால், கூடப்பிறந்தவர்களால் சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டு கையறு நிலையிலே விடப்பட்ட இந்நோயாளிகளுக்குப் புதுவாழ்வு இனித் தோன்றத்தான் போகிறது.

("ஸ்வஸ்திக் விந்த்" இதழில் வெளியாகிய டாக்டர் டி. என். முகர்ஜியின் கட்டுரை ஒன்றைத் தழுவி "ஆரோக்கிய மார்க்கம்" இதழில் வெளியான கட்டுரை.)

---

### பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு

"கிராம நலம்" பத்திரிகையின் வளர்ச்சியில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தனிப்பட்ட அக்கறை காட்டவேண்டும். சில கமிஷனர்கள், இத்துறையில், நல்ல பணி புரிந்துள்ளார்கள். உதாரணமாக, பட்டுக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், "கிராம நல"த்திற்கு, 269 புதிய சந்தாதாரர்களையும், குருவிக்குளம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் 72 புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துள்ளார்கள். இது பாராட்டப்படவேண்டிய பணி. இதே மாதிரி, மேலும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும், அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

கோ. வேங்கடாசலபதி,
*கிராம அபிவிருத்திக் கமிஷனர்.*



காந்தியப் பொருளாதாரம்—
தத்துவ விளக்கம்.—

# குஜராத்தி வணிகர்

திரு மி. லி. சபரிராஜன்

அன்று ஒரு திருமணம்.

குப்புசாமி தன் மகளுடனும் மனைவியுடனும் அங்கு போயிருந்தான், காலை பத்தரையிலிருந்து பன்னிரண்டு வரை, முகூர்த்தம். மணம் முடிந்ததும் அவசரமாய் புறப்பட்டான். ஆனால் பஸ் கிடைக்க வேண்டுமே!

மூவரும் காத்துக் கொண்டேயிருந்தார்கள்.

அப்போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

எதிர்த்தாற்போல ஒரு பழக்கடை இருந்தது. அங்கு எல்லாவிதமான பழங்களும் இருந்தன. கடைக்காரன் அவற்றை ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து அழகாக அடுக்கியிருந்தான். அந்தக் கடையை ஒட்டி ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் மேல் ஒரு குரங்கு இருந்தது. கடைக்காரன் சற்று அப்புறம் பார்த்துக் கொண்டிருந்தபோது, குரங்கு திடீரென்று கீழே குதித்தது. ஓர் ஆப்பிள் பழத்தைக் கௌவிக்கொண்டு ஓடிப்போய் விட்டது. பழம் முக்கால் ரூபாய் அல்லது ஒரு ரூபாய் பெறும்.—நஷ்டம் பெரிதல்ல. ஆனால் குரங்கு குதித்த வேகத்தில் கடையிலிருந்த பழங்கள் அத்தனையும் கீழே விழுந்து மூலைக்கொன்றாக உருண்டு ஓடின. கடைக்காரனுக்குக் கோபமும், ஆத்திரமும் பொங்கி வந்தது. கீழே விழுந்த பழங்களை யெல்லாம் எடுத்து, துடைத்து முன்போல அடுக்கி வைக்க அரை மணி நேரத்துக்கு மேலேயே ஆச்சு.

குப்புசாமி இதைப் பார்த்துக்கொண்டேயிருந்தபோது பஸ் வந்தது. மூவரும் ஏறி உட்கார்ந்தார்கள். வீட்டுக்குப் போனார்கள். சாப்பிட்டுவிட்டு, அன்று நடந்த திருமணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று, "உனக்கு இப்போது வேலை ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான் குப்புசாமி தன் மனைவியைப் பார்த்து.

"இல்லை.—ஏன்?" என்றாள் செல்லம்.

"எப்போதும் ஏதாவது செய்துகொண்டே யிருக்க வேண்டுமாம்; சும்மா இருக்கக் கூடாதாம். எங்கள் புத்தகத்தில் எழுதியிருக்கிறது அம்மா!" என்றாள் அலமு.

"அதுதான் இன்று பள்ளிக்கூடம் கூடப் போகாமல் உட்கார்ந்திருக்கிறாயோ, குழந்தை!" என்றாள் செல்லம்.

"சரி அதெல்லாம் இருக்கட்டும்.—இன்று பழக்கடையில் நடந்ததைப் பார்த்தாயா?" என்றான் குப்புசாமி.

"பாவம் அந்தக் கடைக்காரன்!" என்றாள் அலமு.

"ஒரே ஒரு பழத்துக்காக அந்தக் குரங்கு ஒரு கடையையே நாசம் செய்துவிட்டது, பார்த்தாயா?" என்றான் குப்புசாமி.

"இதில் புதுமை என்ன இருக்கிறது? குரங்குக்குப் புத்தி கிடையாது, அது அப்படித்தான் செய்யும்" என்றாள் செல்லம்.

"ஓகோ, அப்படியா!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் குப்புசாமி. பிறகு, "புத்தி படைத்த மனிதர்களாகிய நாமும் அந்தக் குரங்கைப்போலத்தானே நடக்கிறோம்" என்றான்.

"எப்படி?" என்று கேட்டாள் செல்லம்.

"நாம் ஒரு கடைக்குப் போகிறோம் என்று வைத்துக் கொள், அங்கு ஒரு பொருள் நமக்குப் பிடித்திருக்கிறது. அப்போது என்ன செய்கிறோம்? அது நல்லதாயிருக்கிறதா என்று பார்க்கிறோம். விலை கேட்கிறோம். பொருள் நல்லதாயிருந்து விலையும் குறைவாயிருந்தால் உடனே பணத்தைக் கொடுத்துவிட்டு அதை வாங்கிவிடுகிறோம். இப்படிச் செய்வதன் மூலம் நம்நாட்டுப் பொருளாதாரத்தையே நாம் நாசம் செய்துவிடுகிறோம்."

"பழக்கடையில் குதித்த குரங்கைப் போலவா, அப்பா?" என்றாள் அலமு.

"ஆம், ஆம்" என்றான் குப்புசாமி.

"பின் எப்படி வியாபாரம் செய்வதாம்?" என்று கேட்டாள் செல்லம்.

"அப்பா எங்கிருந்தோ வியாபாரம் செய்யக் கற்றுக் கொண்டு வந்திருக்கிறாரம்மா!" என்றாள் அலமு.

செல்லம் சிரித்தாள், "அதுதான் நாற்றம் பிடித்த நல்லெண்ணெயைக் கிலோ இரண்டரை ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு வந்தாரோ!" என்றாள்.

"இதோ பார், அதெல்லாம் சின்ன விஷயம். இப்போது நான் சொல்லவருவதோ மெத்தப் பெரிது.—பொருளாதார சம்பந்தமானது."

"எங்கே, அதைத்தான் கொஞ்சம் சொல்லுங்களேன், பார்ப்போம்"

"கேள்.—ஒரு பொருளை வாங்குவதற்குமுன் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் புத்தியை உபயோகப்படுத்த வேண்டும்.—அது எங்கே செய்தது, எப்படிச் செய்தது, அதை வாங்குவதன் மூலம் நம் நாட்டுக்கு நாம் நன்மை செய்கிறோமா என்று யோசிக்க வேண்டும்.

"ஏன்? நம்முடைய பணத்தைக் கொடுத்து நமக்கு விருப்பமானதை வாங்குகிறோம். அதையெல்லாம் நாம் ஏன் யோசிக்க வேண்டும்?"

"அல்ல, யோசிக்க வேண்டும்.—கட்டாயம் யோசிக்க வேண்டும். அந்தக் குரங்கைப் போல மரத்தின் உச்சியில், நாம் மாத்திரம் தனியாயிருந்தால் எதைப்பற்றியும்

யோசிக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் அப்படி இல்லை. இதோ, பூலோகத்தில் அல்லவா இருக்கிறோம். அதுவும் தனியாகவா ? ஒரு சமூகத்தில் அங்கமாக இருக்கிறோம். சமூகத்தின் நன்மையில் தான் நம் நன்மையும் இருக்கிறது. அதற்கு எதாவது தீமை நேர்ந்தால் அது நம்மையும் பாதிக்கும். கால் கட்டை விரலில் புரையோடினால் அது உடம்பு முழுவதும் பரவி விடுகிறது அல்லவா ? அதைப்போலத்தான். இன்று பாரத சமூகம் எப்படி இருக்கிறது ? நாம் நாற்பத்து மூன்று கோடிப் பேர் இருக்கிறோம். வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகமாயிருக்கிறது, கோடிக்கணக்கான மக்களுக்கு நாம் உடனே, இப்போதே எதாவது வேலை கொடுத்தாக வேண்டும். இதற்கு நம் நாட்டுக் கிராமக் கைத்தொழில்களைத் தவிர வேறுவழியே இல்லை. அதற்கு அதிக மூலதனம் வேண்டியதில்லை. இருந்த இடத்தில் இருந்துகொண்டே செய்யலாம். இதை நமக்கு முதலாவது எடுத்துச்சொன்னவர் காந்தி. எல்லோரும் கதரையே உடுத்தவேண்டும் என்று அவர் வற்புறுத்தியதற்குக்கூட காரணம் இதுதான்".

"உங்கள் தந்திரம் இப்போது தான் தெரிந்தது ! என்னைக் கதர் புடவை வாங்க வைக்கத்தானே இத்தனைச் சுற்று?" என்றாள் செல்லம் சிரித்துக்கொண்டே.

குப்புசாமியும் சிரித்தான். பிறகு, "புடவை மாத்திரமல்ல; கைவினைப் பொருள்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நாம் ஆதரவு கொடுக்கவேண்டும்" என்றான்.

"பனஞ் சர்க்கரைக்கும் பனை வெல்லத்துக்கும் நான் ஆதரவு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். அப்பா!" என்றாள் அலமு.

குப்புசாமி புன்னகையுடன், "அது மாத்திரம் போதுமா? மீதிப் பொருள்களுக்கும் ஆதரவு கொடுக்க வேண்டும்" என்றான்.

"பணத்துக்கு எங்கே போவது? அவை விலை அதிகமாயிருக்குமே !" என்றாள் செல்லம்.

இதைக் கேட்டதும் குப்புசாமி, "அதுதான் தப்பு" என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறினான். மேலும் அவன் கூறியதாவது, "மேல்நாட்டுப் பொருளாதாரத்தில் உள்ள மாயைகளில் விலை என்பதும் ஒன்று. இதன் உண்மையைக் காந்தி அம்பலமாக்கியிருக்கிறார். எது நல்லதாகவும் விலை குறைவாகவும் இருக்கிறதோ அதைத்தான் வாங்கவேண்டும் என்பது தப்பு. எது அதிக மக்களுக்கு அதிக நன்மை அளிக்கிறதோ அதைத்தான் நாம் வாங்க வேண்டும். அதுவே நல்ல பொருளாதாரம். நீ ஒரு கதர்ப் புடவை வாங்குகிறாய் என்று வைத்துக் கொள்வோம். கஞ்சிக்கு வாடும் பத்து ஏழைகளுக்கு உயிர்கொடுக்கிறாய். ஓர் ஆலைப்புடவையை வாங்குகிறாய். எங்கோ உல்லாசமாய்க் காரில் போய்க்கொண்டிருக்கும் ஓர் ஆலை முதலாளியின் கோட்டுப் பைக்குள் அந்தப் பணம் போய்ச்சேருகிறது. சமூகத்தில் செல்வம் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா ? கடல் நீரைப் போலப் பரவலாயிருக்க வேண்டும். கோபுரம் போல, ஒரே இடத்தில், மேலே மேலே குவிந்துகொண்டு போகக் கூடாது."

செல்லம் ஒரு பெரு மூச்சு விட்டாள். அங்குமிங்கும் பார்த்தாள். பிறகு, "ஒவ்வொரு தடவையும் ஐந்து ரூபாய் ஆறு ரூபாய் அதிகமாக கொடுத்துப் புடவை வாங்கித் தருமம் செய்துக் கொண்டிருக்க முடியுமா ?" என்றாள்.

"இது ஒரு தருமமல்ல; கடமை. சமூகத்தின் நன்மைக்காக ஒவ்வொருவரும் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியது கடமையாகும்" என்றான்.

இதுவரை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அலமு, மெதுவாக, "அப்பா !" என்றாள்.

"என்ன" என்று கேட்டான் குப்புசாமி.

"குழந்தைகள் உள்பட எல்லோரும் தானே அப்பா தியாகம் செய்யவேண்டும் ? என்றாள்.

"ஆமாம் கண்ணே!"

"மாதம் ஒரு புத்தகம் கெட்டுப்போக்கிவிட்டு வருகிறேனல்லவா ? அது யாராவது ஓர் ஏழைக்குழந்தைத்குத்தானே போய்ச்சேரும் ? அதுவும் தியாகந்தானே ?" என்று கேட்டாள் அலமு.

குப்புசாமி திகைத்தான், பிறகு சிரித்துவிட்டு, "பொல்லாதவள் நீ !—தியாகம் செய்வதற்கு வேறொன்று இருக்கிறது. இன்று நான் உனக்கு வாங்கிக் கொடுத்தேனே மைசூர்ப்பாகு, அதை அப்படியே வைத்திருந்து. நம் வேலைக்காரி வரும்போது அவள் குழந்தைக்குக் கொடு ; அதுதான் தியாகம் !" என்றான்.

அலமு திடுக்கிட்டவள் போலானாள். "போங்கள் அப்பா!" என்றாள்.

செல்லம் மௌனமாயிருந்தாள். அவள் எதோ யோசிப்பது போலிருந்தது.

"என்ன, காந்தியின் கருத்து உனக்குப் பிடித்திருக்கிறதா !" என்று கேட்டான் குப்புசாமி.

செல்லம் தலையை ஆட்டிவிட்டு, "பொருளாதாரம் நன்றாய்ப் படித்திருப்பார் போலிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்டதும் குப்புசாமி சிரித்தான். பிறகு "உனக்கு பொருளாதாரத்தைப் பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் காந்திக்கும் தெரியும்."

"பின் எப்படி இது வெல்லாம் அவருக்குத் தெரிந்தது ?"

"உனக்குத் தெரியாதா ?—காந்தி பிறப்பில் ஒரு வணிகர். குஜராத்தி வணிகர். அதனால் குலவித்தைக் கல்லாமலே வந்து விட்டது. படிக்காமலே பொருளாதாரத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்" என்றான் குப்புசாமி, மறுபடியும் சிரித்துக்கொண்டே.

[அடுத்த இதழில் முடியும்.]





# கேள்வியும் பதிலும்

தஞ்சாவூர் மாவட்டம்—பட்டுக்கோட்டை கிராம வானொலி மன்றம்.

**கேள்வி :** கிராமங்களில் தீவிபத்து நேரிட்டால், தீப்புண்களுக்கு கிராமச் சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய எந்தப் பொருட்களைக் கொண்டு முதலுதவி செய்யலாம் ?

**பதில் :** தீவிபத்து ஏற்பட்டு அதனால் உண்டாகும் புண்களுக்கு அது கிராமமாயிருந்தாலும் நகரமாயிருந்தாலும் செய்ய வேண்டிய முதல் உதவி காரியங்கள் ஒன்றே தான். தீ உருகிய உலோகம் மின்சாரம் முதலியவற்றின் வெப்பத்தால் புண்கள் ஏற்படுகின்றன. பிரக்ஞையற்ற நோயாளிகளின் சிகிச்சைக்காக உபயோகிக்கும் வெந்நீர் புட்டிகளைப் பத்திரமாக வைக்காவிட்டால் அந்தப் புட்டிகளின் வெப்பத்தாலும் புண் ஏற்படும். தவிர காஸ்டிக் சோடா நீற்றுத சுண்ணும்பு முதலிய காரப்பொருட்களும் கந்தக அமிலம் போன்ற அமிலங்களும் புண் உண்டாக்கக் கூடியவை. இந்தப் புண்கள் எல்லாம் ஈரப்பசையற்ற உலர்ந்த வெப்பத்தால் ஏற்படுபவை. இவற்றை வெப்பப் புண்கள் என்று கூறலாம். வேறொரு வகைப் புண்களும் உண்டு. அவற்றைக் கொப்புளப் புண்கள் என்று கூறலாம். கொதிநீர் நீராவி, கொதி எண்ணெய், சூடான தார் ஈரப்பசையுள்ள வெப்பங்களால் ஏற்படும் புண்கள் இவை.

இந்த இருவகைப் புண்களும் மேலெழுந்தவாரியோ ஆழமாகவோ ஏற்படலாம். மேலெழுந்தவாரியாக இருந்தால், தோல் கன்னிப்போகும். அல்லது தோலின்மேல் திசுக்கள் வெந்து போகக்கூடும். ஆழமான புண்கள் என்றால் தோலும் அதை ஒட்டிய திசுக்களும், அடியோடு அழிந்து போகும். கடுமையான விபத்துகளின் போது தசைகள், நரம்புகள் இரத்த நாளங்கள் ஆகியவையும் எலும்புகளும் கூட அழியக் கூடும், வெப்பப்புண்களின் விளைவாக அதிர்ச்சிகள் இரத்தத்தில் நச்சுக் கலத்தல் நிரந்தரமான அங்க விகாரம் முதலியவையும் ஏற்படலாம்.

ஒருவருக்கு வெப்பப் புண்பட்டால் அந்தப் புண்ணை உண்டாக்கிய பொருள் அல்லது இடத்திலிருந்து அவரை முதலில் அப்புறப்படுத்த வேண்டும், உடனே டாக்டருக்கு ஆள் அனுப்ப வேண்டும். அவர் வருவதற்குள் கீழ்க்கண்ட உஷார் ஏற்பாடுகளை நாமே செய்ய வேண்டும்.

1. கதகதப்பான இடத்தில் அந்த நபரைக் கிடத்த வேண்டும். புண்பட்ட பாகம் மேலே இருக்க வேண்டும்.

2. புண்பட்ட பாகத்தின் மீதுள்ள துணியை விலக்கக் கூடாது. விலக்கினால் புண்ணில் காற்று பட்டு வலியும் அதிர்ச்சியும் அதிகரிக்கும்.

3. புண்ணைச் சுத்தம் செய்வதற்கு முயல வேண்டும்.

4. கொப்புளத்தைக் குத்தாமல் அப்படியே வைத்திருக்க வேண்டும்.

5. புண்பட்ட பாகத்தில் எண்ணெய், கிரீஸ் அல்லது தண்ணீரைத் தடவக்கூடாது.

6. புண்பட்ட பாகத்தைச் சுத்தமான துண்டுத் துணியால் அல்லது பஞ்சால் மூடி அதை லேசாக சுற்றிக் கட்டி வைக்கவும்.

7. புண்பட்ட பாகத்தைப் பதனமாகக்கையாள வேண்டும். கூடுமானவரை தொடக்கூடாது.

8. புண்பட்ட அங்கத்தை அசைக்கவிடாமல் இருந்தால் வேதனை குறையும்.

9. பைகார்பனேட் ஆப்ஸோடா என்றது கிடைத்தால் அதைக் கரண்டி அளவு 1 படி சுத்த ஜலத்தில் போட்டுக் கலந்து அந்தத் தண்ணீரைப் பஞ்சில் நனைத்து அந்தப் பஞ்சை புண் மேல் வைத்து மெதுவாகக் கட்டிவிடலாம். சோடா பைகார்பனேட் கிடைக்காத இடத்தில் சாதாரண உப்பை ஒரு கரண்டி எடுத்து சுத்தமான தண்ணீரில் கரைத்து அந்தத் தண்ணீரில் பஞ்சை நனைத்து புண் மேல் வைத்து கட்டி விடலாம்.

செங்கற்பட்டு மாவட்டம்—நுகும்பல் கிராம வானொலி மன்றம்.

**கேள்வி :** எந்த விதங்களில் தீபிடித்துக்கொள்ள சாத்தியமாகிறது ?

**பதில் :** அணையாத தீக்குச்சிகளை அல்லது சிகரெட் துண்டுகளைக் கண்டபடி வீசி எறிகிறோம். புகை பிடிக்கும் போதே தூங்கிவிட்டால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. தூங்கும்போது கையிலிருந்து சிகரெட் விழுந்து அறை முழுதையும் எரித்துச் சாம்பலாக்கி விடுகிறது. அடுப்பின் அருகே தீப்பெட்டியை

வைப்பரம் விபத்தில் கொண்டு விடும். குழந்தைகள் கையில் தீப்பெட்டி இருப்பது மற்றொரு ஆபத்து. நமது வீடுகளில் மண்ணெண்ணெய் பெட்ரோல் அல்லது ஸ்பிரிட் புட்டிகளைக் கண்ட கண்ட இடங்களில் அஜாக்கிரதையாக வைக்கிறோம். இவை அபாயகரமான திரவங்கள். நொடிப்பொழுதில் தீப்பிடிக்கக்கூடியவை. இவற்றில் தீப்பற்றினால் வீடு முழுதுமே எரிந்துவிடக் கூடும்.

திறந்த வெளிகளில் குப்பை, கூளங்களை எரிப்பது சர்வசாதாரணமாக நடக்கிறது. காம்பவுண்டு மூலையில் அல்லது முற்றத்தில் அல்லது பக்கத்துச் சந்தில் சருகுகள், சிறிசல், காகிதங்கள் முதலியவற்றைக் குவித்துக் கொள்ளி வைத்து விடுகிறார்கள். சிறிது சிறிதாகக் கனியும் அந்தத் தீ பெரிய சொக்கப் பானையாக வீட்டையோ அண்டை வீட்டையோ எரித்து விடக்கூடும்.

எரியும் மெழுகுவர்த்தி, விளக்கு அடுப்பு, ஸ்டவ் அல்லது மின்சார ஹீட்டர் இத்தகைய விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கிறது. எரியும் மெழுகு வர்த்திகளையும் அகல் விளக்குகளையும் குழந்தைகளுக்கு எட்டும் இடத்தில் வைத்து விடுகிறோம். விளையாடுவதும் குழந்தைகளின் இயல்பு. அவர்கள் மெழுகு வர்த்தியை அணைத்து அணைத்து ஏற்றுகிறார்கள். அல்லது அதில் காகிதத் துண்டுகளைக் கொளுத்துகிறார்கள். இவ்விதம் குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருக்கும்போது அவர்கள் உடையில் தீப் பிடித்துக்கொள்கிறது. அவர்கள் வெந்து மாய்கிறார்கள். அல்லது படுகாயம் அடைகிறார்கள்.

அடுப்பு ஸ்டவ், கைவிளக்கு அல்லது ஹீட்டருக்கு வெகு அருகில் தாய்மார்கள் உட்கார்ந்து கொள்கிறார்கள். சில சமயங்களில் விளக்கிற்கு முதுகைக் காட்டியும் நிற்கிறார்கள். அதனால் அவர்களது ஆடையில் அகஸ்மாத்தாகத் தீப்பிடித்து விடுகிறது.

மின்சார ஹீட்டர் அல்லது சிம்னி இல்லாத விளக்குகளைப் படுதாக்களுக்கு அருகில வைப்பது. காற்றில் படுதா ஆடும்போது அதில் தீப்பற்றி அந்த அறை முழுதிலும் பரவிவிடும்.

சமையல் ஆனபிறகு அடுப்பை அணைக்காமல் இருப்பதும் தவறு. ஸ்டவ் அல்லது பெட்ரோமாக்ஸ் விளக்கைப் பொருத்திய பின் சிலர் அதில் எண்ணெய் விடுகிறார்கள்.

அதைக் கொளுத்தவோ அல்லது அணைந்த தீயை மறுபடி மூட்டவோ மண்ணெண்ணெய், பெட்ரோல், ஸ்பிரிட் அல்லது காகிதத் துண்டைப்போடுகிறோம். இதன் விளைவாக ஸ்டவ் அல்லது விளக்கில் குபீர் என்று தீப்பிடித்து நம் ஆடைகளுக்குத் தாவி விடும். ஆபத்தான காரியம் இது.

தீவிபத்துக்கு மற்றொரு காரணம் பட்டாசு. பட்டாசு வெடிப்பது குழந்தைகளின் உயிருக்கு எமனாகிறது. அல்லது அவர்களைப் படுகாயப் படுத்துகிறது.

## செயல் புரிய வாரீர். . .

"ஆத்மிக வாழ்வுக்கு நம் நாடு பெயர் பெற்றது; அதில் ஈடு இணையில்லாதது. இந்த ஆத்மிக வாழ்வை உதட்டால் உச்சரிப்பதன் மூலமே மற்றவருக்கு அளித்து விடலாம் என்று நினைப்பீர்களானால், அது தவறாகும். நான் சொல்வதை நம்புங்கள். உலகத்துக்கு ஒரு நாள் இந்தியா ஒரு செய்தியை அளிக்கப் போகிறதென்று நான் நம்புகிறேன். அந்தச் செய்தியைக் கேவலம் உதட்டு உச்சரிப்பின் மூலம் நீங்கள் ஒரு நாளும் அளிக்கமுடியாது. நம்முடைய பிரசங்க வல்லமைகளையெல்லாம் காட்டுவதிலே இறுதிக்கட்டத்தை நாம் எட்டி விட்டோம் என்று உங்களுக்கு நான் துணிந்து சொல்கிறேன். நம் செவிக்கு விருந்தளிப்பது போதாது; நம் கையும் காலும் இயங்கவேண்டும்".

—மகாத்மா காந்தி

## மகாத்மாவின் ஆத்ம சாந்தி

"இத்தாலி நாட்டில் அஸிஸி என்ற இடத்தில் பிறந்த ஸெயிண்ட் பிரான்ஸிஸ் மஹான், தமது தோட்டத்தை தாமே கொத்தி விட்டுக் கொண்டிருந்தார். "இன்று மாலை சூரியன் மறையுமுன்பே உங்களுக்குச் சாவு நேரும்என்றால் என்ன செய்வீர்கள்? என்று அவரை யாரோ கேட்டார்கள்.

அவர் சொன்னார்: "என் தோட்டத்தைக் கொத்தி முடிப்பேன்" என்று.

காந்தியும் தம் வாழ் நாளெல்லாம் தாம் வேலை செய்து வந்த தோட்டத்தைத்தான் கொத்திவிட்டுச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார். கற்களையும் கசுமலத்தையும் தோட்டத்திலே பாவிகள் எறிந்துகொண்டிருந்தார்கள். அவர் தொடர்ந்து கொத்திவிட்டுக் கொண்டேயிருந்தார்.

தோல்விக்கும் துன்பத்துக்கும் மாற்றாகக் காந்தி கைகொண்ட மருந்து தளராத பிடிவாதந்தான். செயல் புரிவதே அவருக்கு ஆத்ம சாந்தி அளித்தது."

லூயிபிஷர் "காந்தி வாழ்க்கை"

## சிங்கம்போல எழுங்கள் !

"நில்லுங்கள் : அமைதியாய், உறுதியாய், செறிந்தகாடு போல் வாய்பேசாது, கட்டிய கைகளுடன், தோலாத போரின் ஆயுதமான தோற்றத்தோடு நில்லுங்கள்.

கொடுங்கோலர்களுக்குத் துணிவிருக்குமானால், அவர்கள் தங்கள் குதிரைகள் மீதேறி உங்கள் நடுவே வந்து புகட்டுமே! வெட்டி குத்தி, அங்கம் குலைத்து பிளக்கட்டுமே! தங்களுக்கு இஷ்டப்பட்ட படியெல்லாம் செய்யட்டுமே !

கட்டிய கையும், உறுதியான பார்வையும், துளியும் அஞ்சாது, சற்றும் திடுக்கிடாது, அவர்களை நோக்குங்கள் : தங்கள் ஆத்திரமெல்லாம் மடிகிறவரையில், அவர்கள் வெட்டிமாய்த்துக்கொண்டிருப்பதை நோக்குங்கள்.

அதன்பின், அவர்கள் மானமிழந்து, தாங்கள் வந்த இடத்துக்கே திரும்பிச் சென்றுவிடுவார்கள் ; இப்படி நாம் சிந்திய ரத்தம் சுடச்சுடப் பாய்ந்து அவர்களுடைய கன்னம் வெட்கத்தால் கன்றிச் சிவக்கச் செய்துவிடும்.

உறங்கி விழித்த சிங்கங்களைப்போல் எழுங்கள் ! பனித் துளிபோல், உறக்கத்திலே உங்கள் மீது சுற்றிவிட்ட விலங்குகளை மண்ணிலே உதறித்தள்ளுங்கள் ! நீங்கள் பலர் :அவர்கள் சிலர்."

—கவிஞர் ஷெல்லி,



[10-ம் பக்கத் தொடர்ச்சி]

வெற்றியடைய வேண்டுமானால், ஆசிரியர்கள், பொது மக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகிய மூன்று சாராரிடத்தும் ஒருமித்த மனப்பான்மை இருப்பது முக்கியமானது.

எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்கவேண்டும் என்பது மகத்தான முயற்சி. ஆனால் எத்தனையோ குழந்தைகள் சரிவர உணவு உடை இன்றிப் பள்ளிக்கு வர இயலாத நிலையில் உள்ளனர். அவர்களும் பள்ளிக்கு வர, அவர்களுக்கு இலவச, மதிய உணவு, உடை, இலவசப் புத்தகங்கள் ஆகியன கொடுக்கவேண்டும்.

பள்ளிக்கு வரும் சிறுவர் சிறுமியர்கள், தொடர்ந்து பள்ளி வயது முடிகின்றவரையில், பள்ளியை விட்டு இடையே விலகிவிடாமல் நிரந்தர எழுத்தறிவு பெறும்படி செய்யவேண்டும். இது மூன்றாவது பிரச்சினை. பொருள் வசதி குறைவான காரணத்தால் நம் நாட்டில், மேல் நாட்டில் இருப்பதுபோன்று (Attendance Officers)-களை அமர்த்த முடியாது. (Attendance Officers)-களுக்குப் பதிலாக அப்பணியை ஆசிரியர்களும் பஞ்சாயத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் திறமையுடனும் ஊக்கத்துடனும் விருப்பத்துடனும் பணிபுரிகிறார்களா ? அவர்கள் அவ்விதம் சிறப்பாக பணி செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை பஞ்சாயத்து யூனியன் ஆட்சியில் இருக்கிறதா ? பஞ்சாயத்துத் தலைவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வராதக் குழந்தைகளைத் தண்டிக்கத் தயாராக இருக்கிறார்களா ? கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை செயல்படுத்துவதற்கான பஞ்சாயத்து சமூகக் கல்விக் குழுக்கள் ஒழுங்காகத் தம் பணியைச் செய்கின்றனவா ? இந்தியாவிலுள்ள சுமார் 10 லட்சம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் சுமார் 20 லட்சம் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுலாக்குவதில் பயிற்சி அளிக்க வேண்டுமல்லவா? என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன. இவற்றிற்கெல்லாம் தீர்வுகாண்பது என்பது மிக முக்கிய கடமை என்பது ஒருபுறமிக்க, இவ்வளவு சிறப்பான கட்டாய இலவச கல்வித் திட்டம் பஞ்சாயத்து ஆட்சி சூழ்நிலையில் வெற்றியடைய வேண்டுமென்றால் அது ஆசிரியர்கள், பெற்றோர்கள், பஞ்சாயத்துத்தலைவர்கள் ஆகிய மூன்று சாராரின் ஆர்வத்தையும், மனப்பான்மையையும் ஒட்டியுள்ளது. இந்த மனப்பான்மையை எந்த அளவு வளர்க்கிறோமோ அந்த அளவுக்கு இந்தத் திட்டம் வலிமை பெறும் என்பது உறுதி.

## உண்மையான கலை....

"ஏசுநாதர் மகோன்னதமான கலைஞர் என்பது என் கருத்து. ஏனென்றால், அவர் சத்தியத்தைக் கண்டு, தன் கருத்துகளை வெளியிட்டார்கள். அநேகர் தங்களைக் கலைஞர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் : மற்றவரும் அவர்களை அப்படியே ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களுடைய படைப்பிலே, ஆத்மா மேல் நோக்கிப் பொங்கிய கொந்தளிப்பும் பரபரப்பும் இல்லை. இப்படிப் பலர் இருப்பது எனக்குத் தெரியும் . . . உண்மையான கலை ஆத்மாவின் வெளியீடே . . . ஆத்மா, அதன் அகநிலையைக் கண்டு அநுபவிக்கவே, சகல கலைகளுக்கும் உதவவேண்டும். என் சம்பந்தப்பட்ட மட்டும், ஆத்மாநுபவத்துக்குப் புற உருவங்கள் எவையுமே துளியும் தேவைப்படவில்லை. எனவே, என் வாழ்வில் உண்மையிலே போதிய கலை இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள முடியும். என்றாலும், நீங்கள் கலைப் படைப்புகள் என்கிறீர்களே, அவற்றில் எதுவும், என்னைச் சுற்றிலும் இருக்காது. என் அறைச் சுவர்கள் காலியாக இருக்கலாம். கூரை கூட எனக்குத் தேவையில்லை. அப்போது என் தலைக்கு மேலே எல்லையற்று நீண்டு கிடக்கும் அழகின் பரப்பான நட்சத்திரக் கூட்ட வானவெளியை உற்றுக் காண்பேன் . . . அங்க லட்சணங்கள் உள்ள பெண் எவளுமே அழகி என்று சொல்லமுடியுமா ?.. . ஸாக்ரட்டிஸின் காலத்தில், மனிதருக்குள்ளே மகா சத்திய சந்தனாக இருந்தவர் அவரே என்று நாம் அறிவோம். ஆயினும், கிரேக்க நாட்டுக்குள்ளே மகா அவலட்சணமான உருவம்படைத்தவர் அவர் என்கிறார்கள். என் மனசுக்கு அவர் அழகரே; ஏனென்றால், சத்தியத்தைக் தேடி, ஸாக்ரட்டிஸ் போராடினார் . . . முதலில் நாம் சத்தியத்தைத் தேடவேண்டும் ; அப்புறம், அழகும் நலமும் தாமாகவே நம்மை வந்தடையும் . . . உருவத்தை மட்டும் கவனிப்பது உண்மையான கலை ஆகாது. அதற்கும் மேல் உள்ள ஜீவன் வேண்டும். கலையிலே கொலலும் கலை உண்டு, உயிர்கொடுக்கும். கலை உண்டு, கலைஞனின் மகிழ்ச்சி, திருப்தி, தூய்மை இவற்றுக்கெல்லாம் உண்மையான கலை சான்று பகரவேண்டும்."

மகாத்மா காந்தி.

## தனித்து இயங்க முடியாது . . .

. . . . "நான்" என்ற ஆணவத்தை விட்டொழித்து, மனித சமூகம் என்ற சமுத்திரத்திலே கரைந்து கலந்து விடும்போதுதான், அந்தச் சமுத்திரத்தின் பெருமையிலே நாம் பங்கு பெறுகிறோம். நம்மை என்னவோ தனித்துப் பிறந்தவர்களாகக் கருதுவோமானால், நமக்கும் கடவுளுக்கும் இடையே தடைச்சுவர் ஒன்றை எழுப்பிக் கொண்டவர்களாவோம். கடலிலே ஒரு துளி, தன் தந்தையான கடலின் மாண்பிலே பங்கு பெறுகிறது. ஆயினும், இதை அது உணராதிருக்கலாம். ஆனால், கடலைச் சாராது தனித்துவாழ அந்த நீர்த்துளி முயலும்போது, அது வற்றி மறைந்துபோம்".

—மகாத்மா காந்தி—" யர்வாடா மந்தரிலிருந்து,,

# கிராமத் தொண்டர் படையின் அவசியம்

### திரு பலவந்த் ராய் மேத்தா

நாட்டில் ஏற்பட்ட அவசர நிலைமையை முன்னிட்டு, தேச மக்களின் ஒவ்வொரு செயலும் பாதுகாப்பு முயற்சியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தேசத்தை பாதுகாக்கும் முயற்சியில் மக்கள் அனைவரும் அரசாங்கத்திற்கு எல்லா உதவிகளையும் செய்துவந்தார்கள். நாடே ஒரு மனிதனாகத் திரண்டெழுந்த காட்சியைக் கண்டு தேச பக்தர்கள் அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தார்கள். இந்தியா கிராமங்கள் அதிகம் உள்ள நாடு. ஆகவே பாதுகாப்பு முயற்சியில் அவர்கள் ஆற்றவேண்டிய பணி அதிகமாகும். தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள கிராம மக்கள் காலம் தாழ்த்துவதில்லை. தேசத்தைக் காப்பாற்றும் பணியில் அவர்கள் பின்தங்கியதே இல்லை.

தங்கள் கிராமத்தில் உள்ள சாவடியில் கூடினார்கள். தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற என்ன உதவி செய்வது என்பதை, தாங்களாகவே முடிவு எடுத்தார்கள். இந்த வகையில் அவர்களுக்குப் பணிபுரிய கிராம பஞ்சாயத்து இருந்தது. கிராமத்தில் உள்ள இளைஞர்களும், பெரியோர்களும், தங்கள் உழைப்பை நாட்டுக்கு எப்படி அளிப்பது என்பது பற்றி ஆலோசனை செய்தார்கள். இந்தச் சமயத்தில், சமுதாய நல கூட்டுறவு அமைச்சகம் கிராமப் பகுதிகளில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் பணிகளை ஒருமுகப்படுத்தும் வழியில், திட்டம் தயாரித்துக் கொடுத்தது.

கிராமத் தொண்டர் படைத் திட்டம் என்பது ஒரு திட்டமாகவும், திட்டங்களைச் செயல்படுத்தும் கருவியாகவும் உள்ளது. இதில் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருப்பார்கள். இதில் சேர்ந்துள்ளவர்களுக்கு திட்டம் தயாரித்துக் கொடுத்து, பயிற்சி அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களையும், தொல்லைகளையும் பொருட்படுத்தாமல் அமைதியுடன் வாழ்ந்துவந்த நமது நாட்டு மக்களுக்கு சீனப் படையெடுப்பு பேரதிர்ச்சியாக அமைந்தது. சாதாரண காலத்தில் தங்களது நிலைமையை உயர்த்த வழி செய்திருந்த இந்த மக்களுக்கு, சீன ஆக்கிரமிப்பு புத்துணர்ச்சி ஊட்டியது. இதன் மூலம் அவர்கள் செயல்களத்திலே தள்ளப் பட்டார்கள். அவர்களுக்கு இதனால் கட்டுப்பாடு, தன்னடக்கம், சுயவளர்ச்சி ஆகியவை கிடைத்தன. இதுதான் கிராமத் தொண்டர் படையின் குறிக்கோளுமாகும். கிராம இளைஞர்களுக்குத் தேவையாக இருந்த கட்டுப்பாடு, கூட்டுறவு எண்ணம், ஒற்றுமை முயற்சி ஆகியவற்றை தொண்டர்படை அளித்தது.

இதைத் தவிர, சாதாரண ராணுவப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இது கிராம வாழ்க்கையில், மாற்றம் ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட முயற்சியாகும். இதைத் தவிர, மக்களுக்கு வேறு ஒரு முக்கியமான கடமையும் உண்டு. அதாவது தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதாகும். இந்த வேலையை கிராமத் தொண்டர் படையின் ஒரு பிரிவு செய்கிறது. இதற்காக இந்தப் பிரிவினருக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. தங்கள் கிராமத்திலேயே உள்ள 'தேவையற்ற மனிதர்கள்' பற்றி இவர்கள் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். கிராமத் தொண்டர் படையின் மற்ற பிரிவுகளின் ஒத்துழைப்புடன் காவல் அணியைச் சேர்ந்தவர்கள் கிராமத்தில் நாசவேலைகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கிராமத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் ஓரளவுக்கு பாதுகாக்கும் முயற்சியை கிராம மக்களே எடுத்துக்கொள்ள வேண்டும். போலீசுக்குப் பதிலாக கிராமங்களில் இந்தத் தொண்டர் படையினர் கடமையாற்றவேண்டும்.

தேசத்தின் மானம், மரியாதை, ஆகியவற்றைக் காப்பாற்ற நம்மிடம் ராணுவம் உள்ளது. இது விரிவுபடுத்தப்படுகிறது. இதற்கு அடுத்ததாகப் பாதுகாப்பு முயற்சிக்காக பிரதேச ராணுவமும் உண்டு. இந்த வரிசையில் மூன்றாவது ஏற்பாடுதான் கிராமத் தொண்டர்படை.

கிராமத் தொண்டர் படையினருக்கு நல்ல பயிற்சி கொடுத்துவிட்டால், எந்த விதமான அபாய நிலைமையையும் சமாளிக்கும் அளவுக்கு நாம் பலம் பெற்றவர்கள் ஆவோம். நாட்டின் செல்வத்தை உயர்த்த நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இது மிக முக்கியமானதாகும். இது சாதாரண காலங்களில் முடியாமல் போனாலும், அவசர நிலைமையில் ஏற்படும் எழுச்சியின் மூலம் உயர்த்தலாம்: இந்த வகையில் காடு வளர்ப்பு, மீன் பண்ணை, கோழிப் பண்ணை, கூட்டுறவுப் பண்ணை, கூட்டுறவுத் தொழில்கள் மூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கலாம். கிராமத் தொண்டர் படை இந்த முயற்சிக்குத் தூண்டுகோலாக இருக்கும். சிரமதானம் மூலம் இதை சிறப்பாகச் செய்யலாம்: நம் நாட்டின் மனித சக்தியைச் சிரமதானத்தின் மூலம் பயன்படத்தக்க வழிகளில் செலவழிக்க வேண்டும். இது நமது தேசத்தின் நிரந்தர செல்வத்தை வளர்க்கும் வழியாகும்:

விவசாயத்தின் மூலமாகவும், தொழில் மூலமாகவும் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்து வருகிறோம். இதில் ஓரளவு முன்னேற்றமும் அடைந்திருக்கிறோம். ஆனால் தன்னிறைவு பெற்றோம் என்ற அளவுக்கு இது அதிகமாகவில்லை. நமது உழைப்புச் சக்தியை இருமடங்காக்கி உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இந்த வகையில் கிராமத் தொண்டர் படை சேவை செய்யவேண்டும். வேலை தேவைப்படுகிறவர்களுக்கு அதற்கான வாய்ப்பு அளிக்கவேண்டும். அவர்கள் உணர்ச்சிக்கும் உற்சாகத்திற்கும் தகுந்த முறையில் இதை அமைக்கவேண்டும். இதற்கான சக்திகளை ஒன்று திரட்டி அந்த மக்கள் ஆவலுடன் பணியாற்ற வகை செய்ய கிராமத் தொண்டர் படை முன்வரவேண்டும்.

கிராமத் தொண்டர் படை நாட்டிற்கு முக்கியமான பணிகள் செய்ய ஏற்படுத்தப்பட்டதாகும். சரியான தலைவரின் தலைமையின்கீழ், இது நாட்டுக்குச் சிறப்பாகச் சேவை செய்யும் என்று நம்புகிறேன்.

[Adaptation from " Panchayati Raj "
September, 1963.]



பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது :



## சமுதாய கலவை எருநிலையத் திட்டத்திற்கு விவசாய மானியத்தைப்பயன்படுத்துதல் குறித்த விளக்கம்

**[Panchayat Development—Agricultural production-- tilisation of Agricultural grant for Community Compost Yard Scheme–Clarification Issued]**

**(Memorandum No. 15194 R.D. & L.A. dated 25—7—63.)**

கிராமநல—தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460, இணைப்பு I, பிரிவு I. இனம் 2-ல், கலவை ஒருமுறை முன்னேற்றத்துக்கும், கலவை எரு நிலையம் வைத்துப் பராமரிக்கவும் ஈட்டு மானியத்தின் ரூ. 4,000 ஒதுக்கப் பட்டுள்ளது. அவ்வாணையின் இணைப்பு II, பிரிவு I பாரா 2 (3)-ல் கொடுக்கப்பட்டுள்ள விரிவான விளக்கங்களில், இந்த நிதி வசதியை, பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்களுக்கு உதவி நிதியாக விநியோகித்தல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு எருக்குழிக்கு, ஆண்டொன்றுக்கு (தொடர்ந்து) ரூ. 4-க்கு மேற்படாமல் பஞ்சாயத்துக்களுக்கு உதவித் தொகை அளிக்க வகை செய்யப் பட்டுள்ளது. பஞ்சாயத்துக்கள் கலவை எருவை விற்பதனால் வரும் வருவாய்க்கும், எருக்குழி நிலையங்களை, வைத்துப் பராமரிக்க ஆகும் செலவுகளுக்குமுள்ள வித்தியாசத் தொகையை ஈடுகட்டுவதே இவ்வுதவித் தொகையின் நோக்கமாகும்.

2. மேற்படி விதிமுறையின் விளைவாக, இத்துறையில், பெரும்பான்மையான பஞ்சாயத்து யூனியன்களில் பாராட்டத்தக்க முன்னேற்றமெதுவும் ஏற்படவில்லை என்று விவசாயத் துறை இயக்குநர் எடுத்துக்காட்டியுள்ளார். ஆகவே, இந்தத் தலைப்பின்கீழ் பஞ்சாயத்துக்களுக்கு எருக்குழிகளை நிரப்புவதைக்கொண்டு, ஒவ்வோராண்டும், நிரப்பப்பட்டு மூடப்பட்ட ஒரு குழிக்கு ரூ. 4 உதவித் தொகை—என்ற வீதத்தில் கொடுக்க, பஞ்சாயத்து யூனியன்கள் அனுமதிக்கப்படலாம் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்.

3. இப் பிரச்சினையை, அரசாங்கம் பரிசீலனை செய்து விவசாயத்துறை இயக்குநரின் ஆலோசனையை ஒப்புக் கொள்கிறது.

4. கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், இந்த வகையில் திருத்தப்பட்டதாகக் கருதப்படும்.

(கிராமநல—தல நிர்வாகத்துறையின் 1963—ம் ஆண்டு ஜூலை மாதம் 25—ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை. 15194)

---

## கால்நடை மருந்தகங்களைக் கட்டுவதில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் கால்நடைப் பராமரிப்புத் துறையினரும் ஒருங்கிணைந்து வேலை செய்தல்

**[Panchayat–Animal Husbandry—Utilisation of Agricultural grant—Construction of Veterinary Dispensaries—Co-ordination between the Panchayat Union Commissioners and the Animal Husbandry Department—Instructions—Issu ed**

**(Memorandum No. 28997 R. D. & L. A. dated 27—7—63)**

கால் நடை மருந்தகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு இந்த தடை நீக்க ஆணைகள் வெளியிடப்பட்ட, கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை (எண் : 43915) —சென்னை நீங்கலாக ஏனைய மாவட்டக் கலெக்டர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், கால்நடை மருந்தகங்களைத் திறக்கின்றவேலையை, கால்நடை பராமரிப்

புத்துறை, மருந்தகத்துக்கு வேண்டிய தொழில் நுட்ப அதிகாரிகள், வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதிவசதிகள் ஆகியவற்றைப் பொருத்து எடுத்து நடத்தப் படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள் மருந்தகத்திற்கான கட்டடங்களைக் கட்டி முடித்துவிட்ட இடங்களிலெல்லாம் மருந்தகங்களைத் திறப்பதற்கு முடியவில்லை.

சில பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கால்நடை பராமரிப்புத் துறையைக் கலந்தாலோசிக்காமலேயே கட்டிட வேலையைத் தொடங்குவதுடன், அதன் அடிக்கல் நாட்டு விழாவை சில முக்கியப் பிரமுகர்களைக் கொண்டு நடத்தவும் ஏற்பாடு செய்வதாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த கட்டடங்கள், சில இடங்களில், மருந்தகம் வைத்து நடத்தத் தகுதியில்லாத பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன. சில இடங்களில், ஏற்கெனவேயுள்ள கால்நடை பராமரிப்புத்துறை மருந்தகங்களுக்கு மிக அருகில் அமைந்துள்ளன. இவ்வாறு கட்டப்பட்ட சில மருந்தகக்கட்டடங்கள், இறுதியாக வரையறுக்கப்பட்டுள்ள அமைப்புப்படத்தின் படியும் (CA.921/61-ன் படி) கட்டப்படவில்லை. இத்தகைய பஞ்சாயத்துக்களில், கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டதும், அவற்றில் கால்நடை மருந்தகங்களைத் திறக்கின்ற பொறுப்பு, கால்நடை பராமரிப்புத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவமனைகளை அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்றத்தக்க முறையை வகுக்கவும், பிரதேசத் தேவைகளை அல்லது ஏற்கெனவே அருகில் உள்ள மருத்துவ மனைகளைக் கவனிக்காமல் மருத்துவமனை கட்டப்படுவது முதலியவற்றைத் தவிர்க்கவும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கால்நடை மருந்தகங்கள் கட்டும் வேலைத்திட்டம் குறித்தகால முறைப்படி நிறைவேறுகின்ற வகையில் விளக்கங்கள் வெளியிடப்படுகின்றன :—

(1) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கால்நடை மருந்தகக் கட்டடங்களைக் கட்ட இடம் தேர்ந்தெடுக்கும்முன் மாவட்டக் கால்நடைத்துறை அதிகாரிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

(2) இணைப்பு I-ல் குறிப்பிடப்பட்ட 1961-62, 1962-63 ஆண்டுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட 56-கால்நடை மருந்தகக்கட்டடங்களைப் பொறுத்தவரையில், தடை ஆணையினால் ஏற்கெனவே கட்டட வேலை நிறுத்தப்பட்டிருப்பின் வேலை மறுபடி தொடங்கி கட்டப்பட வேண்டும்.

(3) இணைப்பு II-ல் குறிக்கப்பட்டுள்ள, 1963—64 ஆண்டில் மருந்தகம் நிறுவ தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உடனடியாக வேலை எடுத்துச் செய்யப்பட வேண்டும்.

(4) ஏற்கெனவே வாடகையிடத்தில், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புப்படத்தின் படி அமையாத கட்டடத்தில் கால் நடை மருந்தகம் வைத்து நடத்தப்பட்டுவரும் பஞ்சாயத்து யூனியன்களில், கால்நடை மருந்தகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். வாடகைக் கட்டடங்களில் மருந்தகம் நடைபெற்றுவரும் இடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் கட்டடம் கட்டும் வேலையைத் தொடங்கலாம். எனினும் கட்டடத்துக்குத் தேர்ந்தெடுத்த இடத்திற்கு கால்நடைத்துறையின் அனுமதி முன்னதாகவே பெற வேண்டும்.

(5) மேற்கண்ட பாராக்களில் கூறப்பட்ட வகை இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் கால்நடை மருந்தகங்களைக் கட்ட, கால்நடை பராமரிப்புத் துறையிடம் சிறப்பாகக் குறிப்பிட்டு அனுமதிபெற வேண்டும்.

## இணைப்பு I

1961-62 ம் ஆண்டில் கால்நடை மருந்தகங்கள் திறக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் :—

செங்கற்பட்டு மாவட்டம் :—(1) பூந்தமல்லி (2) உத்திரமேரூர், வடஆர்க்காடு மாவட்டம் : (3) வெம்டாக்கம் (4) சோளிங்கபுரம் (5) கீழ்வைத்திணங்குப்பம் (6) சேத்துப்பட்டு. தென்ஆர்க்காடு மாவட்டம் :—(7) குறிஞ்சிப்பாடி (8) உளுந்தூர்ப் பேட்டை (9) விளாகம், தஞ்சாவூர் மாவட்டம்:-(10) கருங்கண்ணி திருச்சிராப்பள்ளி மாவட்டம்:-(11) குளித்தலை (12) லால்குடி திருநெல்வேலி மாவட்டம் :—(13) கோயில் பட்டி (14) புதுக்கோட்டை (15) சாத்தன் குளம் (16) சிந்தாமணி கோயம்புத்தூர் மாவட்டம் (17) பெரிய நாயக்கன் பாளையம் (18) அவனாசி (19) ஆலூர் (20) தாலிவாடி நீலகிரி மாவட்டம் (21) கோத்தகிரி சேலம் மாவட்டம் :—(22) திருச்செங்கோடு (23) காவேரிப் பட்டணம் (24) ஒசூர் கன்னியாகுமரி மாவட்டம்:— (25) ஆரம்போலி.

1962—63 ஆண்டில் கால் நடை மருந்தகங்கள் திறக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் :—செங்கற்பட்டு மாவட்டம் (26) நந்தி வரம் (27) பேரம்பாக்கம் (28) அச்சரப்பாக்கம் (29) வில்லி வாக்கம். வடஆர்க்காடு மாவட்டம்: — (30) செங்கம் (31) திருப்பத்தூர் (32) பெரணமல்லூர் (33) ஆர்க்காடு. தென் ஆர்க்காடு மாவட்டம்:—(34) சின்ன சேலம் (35) திருநாவலூர் (36) டி. எலமங்கலம் தஞ்சாவூர் மாவட்டம் (37) பாம்பப்படையூர் (38) ராஜகோபாலபுரம் (நாகப்பட்டிணம்) திருச்சிராப்பள்ளி மாவட்டம்:—(39) கே. பரமத்தி (40) வேப்பந்தட்டை (41) தொட்டியம் மதுரை மாவட்டம் (42) செம்பட்டி கோயம்புத்தூர் மாவட்டம்:— 43) வெள்ளக்கிணறு (44) நல்லாட்டி பாளையம் (அல்லது) வாதசித்தூர் சேலம் மாவட்டம்:—(45) வேலூர் (46) சேஷஞ்சாவடி ராமநாதபுர மாவட்டம் (47) சிங்கம்புணரி (48) கண்டனூர் திருநெல்வேலி மாவட்டம் :— (49) உடங்குடி (50) மானூர் (51) ஆயிக்குடி (52) ஒட்டப்பிடாரம் (53) செய்துங்க நல்லூர் (54) ஆலங்குளம் கன்னியாகுமரி மாவட்டம் (55) ராதாபுரம் ராமநாதபுரம் மாவட்டம்:—(56) வத்திராயிருப்பு.



## இணைப்பு II

1963-64 ஆண்டில் கால்நடை மருந்தகங்கள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் :—

வடஆர்க்காடு மாவட்டம் : (1) வாணியம்பாடி (2) மாதனூர் தென்ஆர்க்காடு மாவட்டம் : (3) திருவெண்ணெய் நல்லூர் (4) ஒலக்கூர் (5) பறங்கிப்பேட்டை (6) வளவனூர் தஞ்சாவூர் மாவட்டம் : (7) செம்பொனார்கோயில் (நாகப்பட்டினம், மாவட்ட கால்நடைப் பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்) மதுரை மாவட்டம் : (8) தே. கல்லுப்பட்டி (9) கள்ளிக்குடி (10) கூடலூர் (11) வத்தலகுண்டு (திண்டுக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்) இராமநாதபுரம் மாவட்டம் : (12) வைம்பக் கோட்டை (13) நரிக்குடி (14) காரியப்பட்டி திருநெல்வேலி மாவட்டம் : (15) பாப்பாகுடி (16) புதூர் (17) திருச்செந்தூர் (18) கடையம் (19) நாங்குனேரி (நாகர்கோயில், மாவட்ட கால்நடைப் பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்). திருச்சிராப்பள்ளி மாவட்டம் : (20) தாந்தோணி. சேலம் மாவட்டம் : (21) கொளத்தூர் (22) ஏர்க்காடு (23) மாதனூர் (24) கொங்கணபுரம் கோயம்புத்தூர் மாவட்டம் : (25) மொடக்குறிச்சி (ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்), (26) தொண்டா முத்தூர் (27) மாடத்துக்குளம் (28) குண்டாடம். திருச்சிராப்பள்ளி மாவட்டம் : (29) உப்பிலியாபுரம் (அரியலூர், மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்) (30) ஆண்டிமடம் (அரியலூர், மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரியின் மேற்பார்வையில்).

(கிராமநல-தல நிர்வாகத்துறையின் 1963 ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை: 28979)

---

## ஆறுவது சர்வோதய இலக்கிய வாரம்—பஞ்சாயத்து யூனியன்களில் கொண்டாடுதல்

## [Gramdan Movement—Sixth Sarvodaya Literature Week—Celebration in Panchayat Unions.]

## (G. O. Ms. No. 1598, R. D. and L. A., dated 30—7—63.)

சர்வோதய இலக்கிய வாரத்தை, அகில இந்தியா அடிப்படையில், 1963 செப்டம்பர் 11-ம் தேதி முதல் (விநோபாஜி பிறந்த நாள்-பாரதி தினம் முதல்) 1963 அக்டோபர் 2-ம் தேதி வரையில் (காந்தி ஜெயந்தி—சர்க்கா ஜெயந்தி வரையில்) கொண்டாடுவதென்று, காசி, ராஜ்காட் அகில பாரத சர்வ சேவா சங்கம் முடிவு செய்துள்ளது. இந்த மாநிலத்தில், வத்தலகுண்டு 'தமிழ்நாடு சர்வோதய மண்டலம்' திருப்பூர் 'தமிழ்நாடு சர்வோதய சங்கம்,' தஞ்சாவூர் 'சர்வோதய பிரசுராலயம்' ஆகியவை, 1963 செப்டம்பர் 11-ம் தேதி முதல் அக்டோபர் 2-ந்தேதி வரையில் சர்வோதய இலக்கிய வாரம் கொண்டாட உத்தேசித்துள்ளன.

2. பஞ்சாயத்து அபிவிருத்தி மூலம் நிறைவேற்றப்படும் சமுதாய அபிவிருத்தி இயக்கத்தின் குறிக்கோள்களும், சர்வோதய இயக்கத்தின் குறிக்கோள்களும் பெரும் அளவுக்கு ஒத்துள்ளன. ஆகவே, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், வட்டார நிறுவனங்களும், சர்வோதய இலக்கிய வார விழாவில் பங்குகொண்டு, சர்வோதய கொள்கைகளை மேலும் பரப்புவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமாகும்.

3. இவ் விழாவில் பஞ்சாயத்து யூனியன்கள் பின்பற்றக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன:—

1. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஏதாவதொரு பள்ளியிலோ அல்லது வேறு பொருத்தமான இடத்திலே சர்வோதய இலக்கியக் கண்காட்சிகள் குறைந்த அளவு இரண்டாகிலும் அமைக்கப்படலாம். பஞ்சாயத்து யூனியன் நூலகங்களிலுள்ள சர்வோதய இலக்கியங்கள் எல்லாவற்றையும் காட்சிக்கு வைப்பதுடன், அவை குறித்து மக்களுக்கு விளக்கப்படலாம்.

2. பஞ்சாயத்து யூனியன் பணியாளர்கள், பஞ்சாயத்து நூலகங்களுக்கும், பள்ளிகளுக்கும், பொதுமக்களுக்கும், சர்வோதய இலக்கியங்களை விற்பனை செய்வதில் உதவி புரியலாம். அவை காந்திய சர்வோதய இலக்கியத் தொகுதி முழுவதையும் வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம். அவற்றின் நூலகங்களில் ஏற்கெனவே அவை இல்லை என்றால், வாங்கி வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்.

3. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் குறைந்த அளவு மூன்று இடங்களிலேனும், ஏதாவதொரு குறித்த புத்தகத்தின் அடிப்படையில் அமைந்த சர்வோதயக் கொள்கை பற்றிய பல்வேறு தன்மைகள் குறித்தும் ஆய்வுக் குழுக்கள், விவாத அரங்குகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியன நடத்தலாம்.

4. கீழ்க் கண்ட இதழ்களுக்கு உயர்ந்த அளவு, எவ்வளவு சந்தாதாரர்களைச் சேர்க்க முடியுமோ அந்த அளவுக்குச் சேர்ப்பதற்காக முயலவேண்டும் :—

(a) 'கிராமராஜ்யம்'—சென்னையிலிருந்து வெளிவரும் தமிழ் வார இதழ்.

(b) 'சர்வோதயம்'—தமிழ் மாத இதழ் } தஞ்சாவூரிலிருந்து வெளிவருவன.
(c) 'சர்வோதயம்'—ஆங்கில மாத இதழ் }

5. பஞ்சாயத்து யூனியனில் இந்த இலக்கிய வார விழாவை வெற்றிகரமாகக் கொண்டாடுவதற்கு, மக்களின்

எல்லாப் பிரிவையும் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு, இதற்கென ஒரு குழுவை, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அமைக்கலாம்.

4. சர்வோதயப் பிரசுராலயம், காந்திய சர்வோதய இலக்கியங்களின் பட்டியலை, எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் அனுப்பி வைக்கும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தமக்குத் தேவையான நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை அனுப்பிவைக்கும்படி கேட்டு, பிரசுராலயத்துக்குக் கடிதம் எழுதுவர். பிரசுராலயம் புத்தகங்கள் கேட்டு வரும் கடிதத்தைப் பெற்றதும் ரூ. 75 முதல் ரூ. 150 வரை மதிப்புள்ள புத்தகங்களை, 'விற்பனை அல்லது திருப்புகை' என்ற அடிப்படையில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பிற நிறுவனங்கள் அகியவற்றுக்கு கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு புத்தக இருப்பையொட்டி அனுப்பிவைக்கும் :

(i) புத்தகங்கள் கேட்டுக் கடிதம் அனுப்புவோருக்கு, விளம்பரப் பொருள்கள் இலவசமாக அனுப்பிவைத்தல்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வோதய இலக்கியங்களின் தொகுதியை, சிப்பம் கட்டுச் செலவு, (அனுப்ப, திருப்பி அனுப்ப) தபால்—ரயில் செலவுகள் எதுவுமின்றி அனுப்பி வைத்தல்.

(iii) புத்தக விற்பனையில், மொத்த மதிப்பில், அனுப்புகின்ற செலவு அல்லது மணியார்டர் கமிஷன் அல்லது பாங்கு நீங்கலாக மீதித் தொகை ஒப்புக்கொள்ளப்படும்.

(iv) விற்கப்படாத புத்தகங்களை, நல்ல நிலையில் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந்தேதிக்குள் அனுப்பி வைத்தால், அனுப்புகின்ற செலவின்றி அனுப்பலாம். அவை ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பிறகு அனுப்பப்படுபவை திருப்பி எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

(v) அந்தந்தப் பகுதிகளிலுள்ள பள்ளிக் குழந்தைகளின் மதிய உணவுக்கு, விற்பனைத் தொகையில் $12\frac{1}{2}$ சதவீத கமிஷன் எடுத்துக்கொள்ளலாம்.

(vi) 6-வது சர்வோதய இலக்கிய விழாக் கணக்குகள் 1963 அக்டோபர் 30-ந் தேதிக்குள் தீர்க்கப்படவேண்டும்.

சர்வோதய இலக்கிய விழாவினால், நல்ல பலனைக் காண்பதற்கு, 1963 செப்டம்பர் 11-ந் தேதியிலிருந்து அக்டோபர் 2-ந் தேதி வரையில், ஒருமுகமாகக் கவனம் செலுத்திப் பணி புரியவேண்டியது அவசியம். குறிப்பாக மாணவர்களிடையே காந்திய சர்வோதயக் கொள்கை பற்றிய அறிவும் ஆர்வமும் பெருகவும், மிகுந்த பயனளிக்கவும் தக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்றும், எவ்வாறேனும் 1963 அக்டோபர் 31-ந் தேதிக்குள் கணக்குகள் தீர்க்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்படுகிறது.

6. இவ் விழா சம்பந்தமான இடை நிகழ் செலவுகளுக்காக ஒரு பஞ்சாயத்து யூனியன் ரூ. 25-க்கு மேற்படாத அளவில், செலவு செய்ய அனுமதிக்கப்படுகின்றன. மேற்படி செலவு, யூனியனின் கல்வி நிதியில், "சமூகக் கல்வி" என்ற தலைப்பில் பற்று வைக்கப்படலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை : 1598.)

—(o)—

## பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—வட்டாரத் தலை நகரங்களில் வானொலிப் பெட்டிகளைச் சரிபார்த்தல்—பாதுகாப்பில் வைத்திருத்தல் பற்றிய விளக்கம்

## [Panchayat Radio Maintenance Organisation—Servicing of Radio sets at the Block Head-quarters—Safe custody—Instructions—Issued.]

### (Memorandum No. 110448, R. D. and L. A., dated 5—8—63.)

பஞ்சாயத்துத் தலைவர்கள், வானொலிப் பெட்டிகளைப் பழுதுபார்க்க, வட்டாரத் தலை நகரங்களுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்கள் என்றும், சம்பந்தப்பட்ட ரெவினியூ டிவிஷனுடன் இணைக்கப்பட்டுள்ள வானொலி மேற்பார்வையாளர், குறித்த நாட்களில், அங்கு வந்து பழுதுகளைச் சரிபார்த்துச் செல்வார் என்றும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ந் தேதியிட்ட அரசாங்க ஆணையில் 2337 விளக்கப்பட்டுள்ளது. சில பஞ்சாயத்துத் தலைவர்கள், வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கப்பட்ட உடனே திருப்பி எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வதில்லை. ஆகவே, அவ்வாறுள்ள வானொலிப் பெட்டிகளை வட்டார அலுவலகத்திலுள்ள ஓர் அதிகாரி தம் பாதுகாப்பில் வைத்திருக்கும் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. பஞ்சாயத்து யூனியன் அலுவலக நிர்வாகி (Manager), பழுது பார்க்க வருகின்ற வானொலிப் பெட்டிகளையும், பழுதுபார்த்து முடிந்த வானொலிப் பெட்டிகளையும் தம் பாதுகாப்பில் வைத்திருக்கவேண்டிய பொறுப்பினை ஒப்படைக்கப்படுகிறார் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. வானொலிப் பெட்டி வட்டாரத் தலைநகருக்குக் கொண்டுவரப்பட்டதும், அலுவலக நிர்வாகி அதைப் பெற்றுக்கொண்டு, பெற்றுக்கொண்டதற்கான சீட்டினை (Acknowledgment) பஞ்சாயத்துத் தலைவர், அல்லது



வானொலிப் பெட்டியைக் கொண்டு வருபவருக்குக் கொடுக்க வேண்டும். அந்த வானொலிப் பெட்டியை, அவர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் இரட்டைப் பூட்டிட்ட சேமக்காப்பு அறையில் அல்லது வேறு தகுந்த அறையில் வைத்திருக்கவேண்டும். வானொலி மேற்பார்வையாளர் வட்டாரத்துக்கு வரும்போது, வானொலிப் பெட்டியை பழுது பார்க்க அல்லது சரிபார்க்க அவரிடம் ஒப்படைக்கவேண்டும். மேற்பார்வையாளர் பழுதுபார்த்து அல்லது சரிபார்த்து முடித்ததும் நிர்வாகியிடம் வானொலிப் பெட்டியை ஒப்படைக்கவேண்டும். நிர்வாகி இதைத் தம் பாதுகாப்பில் வைத்திருந்து பஞ்சாயத்துத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டு அனுப்பப்படுபவரிடம் கொடுத்துவிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் அலுவலக நிர்வாகி வட்டாரத்தலைமை நிலையத்துக்குக் கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் வானொலிப் பெட்டியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாளரே தவிர, பழுது பார்த்தலுக்கோ அன்றி சரிபார்த்தலுக்கோ அவர் பொறுப்பாளராகார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை: 110448.)

————

## கிராம வேலைத் திட்டத்தின்கீழ் பாலங்களும், நடை பாலங்களும் கட்டுதல் பற்றிய திருத்த ஆணைகள்

## [Works—Village Works Programme—Construction of bridges and foot bridges—Revised instructions—Issued.]

### (Memorandum No. 106204. R. D. and L. A., dated 7—8—63.)

அரசாங்கம், இதுவரை கிராம வேலைத் திட்டத்தின்கீழ், சிறு பாலங்கள் கட்டுவதை அனுமதிக்கவில்லை. கிராம வேலை மானியத்தின் கீழுள்ள நிதி வசதிகள், இணைப்புப் பாதைகள் முதலான அத்தியாவசிய வேலைக்குப் போதுமான அளவு உள்ளதே அதற்குக் காரணமாகும். கிராம வேலைத் திட்டத்தின்கீழ் சிறு பாலங்களும் (Culverts), குறுக்குப் பாலங்களும் (Causeways) கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை ஒட்டி, பாலங்கள் (Bridges) கட்டுவதற்கும் சலுகை காட்டப்படலாம் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனையை, கிராம வேலை மேற்பார்வைப் பொறியாளர் (Superintending Engineer, Rural Works) ஆதரித்துள்ளார். மேற்படி ஆலோசனைகளைக் கொண்டும், மாநிலத் திட்டத்தின் கீழ் புதிய பாலம் கட்டும் வேலைகளை எடுத்துச் செய்யும் சூழ்நிலை இருப்பதாலும், இவ்விஷயத்தில் அரசாங்கம் மறு பரிசீலனை செய்தது. அதன்படி, இது விஷயத்தில் இதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட எல்லா ஆணைகளையும் தள்ளுபடி செய்து கிராம வேலை மானியத்தின் கீழுள்ள நிதி வசதிகளைக் கொண்டு, தனியொரு வேலைக்கு, அரசாங்க மானியம் ரூ. 15,000-க்கு மேற்படாத வகையில், சிறு பாலங்கள் கட்டும் வேலையை எடுத்துச் செய்யலாம் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. எனினும், கிணறுகள், இணைப்புப் பாதை வேலைகளினால் உயர்ந்த அளவு பலன் கிடைப்பதால் செலவதிகமான வேலைகளை எடுத்துச் செய்யாமல் வேலை நிறைவேற்றங்களைப் பார்த்துக்கொள்ளும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 220296 தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும், கிராம வேலைத் திட்டத்தின்கீழ் நடை பாலங்கள் கட்டும் வேலையை எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை, எந்தக் கட்டுப்பாடுமின்றி, மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்று கிராம வேலை மேற்பார்வைப் பொறியாளர் ஆலோசனை கூறியுள்ளார். மேலே முதற்பாராவில் பிறப்பிக்கப்பட்ட திருத்த ஆணைகளை ஒட்டி, மேற் குறித்த யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, கிராமவேலைத் திட்டத்தின்கீழ் நடை பாலங்கட்டும் வேலையும் எடுத்துச் செய்யலாம் என்று ஆணை பிறப்பிக்கிறது.

3. எனினும், கிராம-வேலைத் திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து யூனியன் பாதைகளில் சிறு பாலங்கள் கட்டும் வேலைகளை எடுத்துச் செய்ய அனுமதிக்கலாம் என்னும் யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியிட்ட அறிக்கை: 106204.)

கோ. வெங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
1963-ம் ஆண்டு ஆகஸ்டு 1-ம் தேதி.

அன்புடையீர்,

வணக்கம். ஆகஸ்டு 15-ந் தேதி வியாழக்கிழமை, இந்தத் தேசத்தின் பதினாறாவது சுதந்திர தினம். புதிய இந்தியா, பிறந்த தினம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு சுதந்திர தினத்திற்கு, ஒரு முக்கியத்துவம் உண்டு. காரணம், சீனர்களின் அநியாய ஆக்கிரமிப்பு என்பது, தாங்கள் அறிந்ததே. இந்தத் தேசத்தில் பிறந்துள்ள ஒவ்வொருவரும், நம் தேச சுதந்திரத்திற்குச் சீனாவினால் ஏற்பட்டுள்ள ஆபத்தையும், நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைகளையும், நன்கு சிந்தித்துச் செயலாற்றுவதற்கும், தேச சேவைக்கு நம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வதற்கும் இவ்வருஷத்திய சுதந்திர தினம், எல்லோருக்கும் நினைவூட்டும் ஒரு விசேஷ தினமாகும்.

ஆகஸ்டு 15-ம் தேதி சுதந்திர தினத்தை, தங்களுடைய பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் எல்லா கிராமங்களிலும், மிக நல்ல முறையில் கொண்டாடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும், தாங்களும், தங்களுடைய யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களும், யூனியன் அலுவலக ஊழியர்கள் எல்லோரும், சேர்ந்து செய்யத் திட்டமிட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். என்றபோதிலும், இது சம்பந்தமாக என்னுடைய ஆலோசனைகளையும், இக்கடிதம் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

1. 15-ந் தேதி காலை 8 மணிக்கு, நம்முடைய பிரதமர் டெல்லியிலுள்ள தேசியகொடி செங்கோட்டையில் ஏற்றி வைப்பார். அதே நேரத்தில், ஒவ்வொரு ராஜ்யத்திலும், ராஜ்யத் தலைநகர்களிலும், மாவட்டத் தலைநகர்களிலும், கொடி ஏற்றமும், கொடி வணக்கமும் நடைபெறும். அது போலவே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும், கொடி வணக்கம், நல்ல முறையில் நடைபெறுவதற்குரிய முன்னேற்பாடுகள் எல்லாவற்றையும், முன்னதாகவே கவனிக்க வேண்டும்.

2. சுதந்திர தின வைபவத்தை, கிராமப் பஞ்சாயத்துச் சபையும், கிராமத்திலுள்ள வேறு பொது ஸ்தாபனங்களும், மாதர் சங்கமும், ஒன்று சேர்ந்து, கொண்டாடுவதற்கான ஏற்பாடு செய்வது நல்லது.

3. கிராமப்பள்ளி—பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்ததாயிருந்தாலும் சரி, தனியார் பள்ளியாய் இருந்தாலும் சரி, ஆசிரியர்களும், மாணவர்களும் இந்தக் கொண்டாட்டத்தில், விசேஷ பங்கு கொள்ளும்படி செய்யவேண்டும்.

4. சுதந்திரம் பிறந்த வரலாறும், சுதந்திரம் அடைவதற்காக மகாத்மா காந்தியடிகளும், மற்ற தலைவர்களும் தொண்டர்களும் செய்த தியாகங்களும், சுதந்திர இந்தியா, உலக தேசங்களிடையே, இன்று பெருமையுடன் விளங்குவதற்கு, இந்தத் தேச சுதந்திரம் காரணமாயிருப்பதும், சுதந்திர இந்தியாவுக்குச் சீன தேசத்தினால் ஏற்பட்டுள்ள ஆபத்தும், இந்த நிலையில், இந்தத் தேசத்தினுடைய கடமை என்ன என்ற விவரங்களையும், பள்ளிச்சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும், நன்றாக மனதில் பதியச் செய்வதற்கான நிகழ்ச்சிகள், கிராமங்கள்தோறும், நடைபெறவேண்டும். சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டறியாத இன்றைய இளைஞர்களுக்கு, சுதந்திரப் பற்று ஏற்படுவதற்கு, என்னென்ன செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்வீர்கள் என்று நம்புகிறேன். பாரதியாருடைய தேசிய கீதங்கள்—காந்தியடிகளுடைய திருவுருவப்படத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்லுதல்—சீருடையணிந்த கிராமத் தொண்டர்கள் அணிவகுத்துச்செல்லுதல்—கிராமத்தெருக்களைச் சுத்தம் செய்து பச்சிலைத் தோரணங்களால் அலங்கரித்தல்—தேசிய பஜனை—இது போன்ற மற்ற அம்சங்கள் நிறைந்த நல்ல திட்டம் வகுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

5. சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் மூலம் கிராமங்களில் சீனத் தாக்குதலை எதிர்ப்பதற்கு உரிய புதிய ஊக்கமும், உற்சாகமும், கிராம மக்களுக்கு ஏற்படுவதற்கு உரிய முறையில், என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்வீர்கள். பஞ்சாயத்து அலுவலகத்திலுள்ள எல்லா ஊழியர்களும் கிராம சேவகர்களும் இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டம் வெற்றிகரமான முறையில் நடைபெறுவதற்கு, தங்களால் முடிந்த எல்லா உதவிகளையும் மனப்பூர்வமாக செய்வார்கள் என்று நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
**கோ. வேங்கடாசலபதி.**

## பஞ்சாயத்து யூனியன் வாரியாக மக்கள்தொகைக் கணக்கு

## [Census figures, 1961—Panchayat Union wise figures of population—Communicated]

**(Memorandum No. 64067, R. D. & L. A., dated 16-7-63.)**

தமிழ்நாடு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலைகளின் மேற்பார்வையாளர் (Superintendent of Census Operations, Madras) அனுப்பிவைத்த 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தயாரிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்வாரியான மக்கள் தொகை விவரங்கள், எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் இவ்வறிக்கையின் இணைப்பாக அனுப்பப்பட்டுள்ளன. நில வருவாய் ஒப்படை (Land Revenue Assignment), தல பாதை மானியம் (Local Roads Grant) முதலான அரசாங்க மானியங்களைக் கணக்கிடுதல் உட்பட எல்லா அலுவலக வேலைகளுக்கும், இந்த, மக்கள் எண்ணிக்கை—அதிகார பூர்வமானதாகக் கருதப்பட்டு பின்பற்றப்படவேண்டும்.

### இணைப்பு

### செங்கற்பட்டு மாவட்டம்

| தாலுகா | பஞ்சாயத்து யூனியன் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| பொன்னேரி | சோழவரம் | 52,875 | 26,792 | 26,083 |
| | மீஞ்சூர் | 91,219 | 46,750 | 44,469 |
| | கும்முடிபூண்டி | 86,706 | 44,549 | 42,157 |
| திருவள்ளூர் | திருவள்ளூர் | 57,792 | 29,445 | 28,347 |
| | பூண்டி | 65,734 | 33,385 | 32,349 |
| | ஊத்துக்கோட்டை | 66,529 | 33,849 | 32,680 |
| | கடம்பத்தூர் | 60,602 | 30,470 | 30,132 |
| திருத்தணி | திருவாலங்காடு | 53,465 | 26,921 | 26,544 |
| | ராமகிருஷ்ணராஜுபேட்டை | 51,052 | 25,915 | 25,137 |
| | திருத்தணி | 51,542 | 26,016 | 25,526 |
| | பள்ளிப்பட்டு | 57,755 | 29,240 | 28,515 |
| ஸ்ரீபெரும்புதூர் | குன்றத்தூர் | 78,172 | 39,806 | 38,366 |
| | பூந்தமல்லி | 95,067 | 49,590 | 45,477 |
| | ஸ்ரீபெரும்புதூர் | 62,488 | 31,385 | 31,103 |
| சைதாப்பேட்டை | மாதவரம் (ராணுவப் பகுதி நீங்கலாக) | 58,331 | 30,077 | 28,254 |
| | பறங்கிமலை | 1,80,310 | 93,182 | 87,128 |
| | வில்லிவாக்கம் | 1,07,800 | 55,662 | 52,138 |
| செங்கற்பட்டு | காட்டாங்கொளத்தூர் | 69,505 | 35,314 | 34,191 |
| | திருக்கழுக்குன்றம் | 85,130 | 43,513 | 41,617 |
| | திருப்போரூர் | 65,465 | 33,062 | 32,403 |
| காஞ்சீபுரம் | காஞ்சீபுரம் | 59,325 | 29,619 | 29,706 |
| | வாலாஜாபாத் | 77,255 | 38,888 | 38,367 |
| | உத்திரமேரூர் | 92,773 | 46,507 | 46,266 |
| மதுராந்தகம் | மதுராந்தகம் | 90,896 | 46,107 | 44,789 |
| | சித்தாமூர் | 70,110 | 35,268 | 34,842 |
| | அச்சரப்பாக்கம் | 70,806 | 35,661 | 35,145 |
| | லத்தூர் | 51,815 | 26,158 | 25,657 |

## வடார்க்காடு மாவட்டம்

| தாலூகா | பஞ்சாயத்து யூனியன் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| அரக்கோணம் .. | அரக்கோணம் (நகரமன்றப் பகுதி நீங்கலாக அரக்கோணம்) .. | 47,607 | 23,893 | 23,714 |
| | நெமிலி .. | 82,118 | 40,855 | 41,263 |
| | காவேரிப்பாக்கம் . | 93,148 | 46,782 | 46,359 |
| வாலாஜாபேட்டை .. | வாலாஜாபேட்டை .. | 46,274 | 23,335 | 22,939 |
| | சோளிங்கபுரம் .. | 92,189 | 46,165 | 46,024 |
| | ஆர்க்காடு .. | 69,625 | 34,946 | 34,679 |
| | திமிரி .. | 92,888 | 46,825 | 46,063 |
| குடியாத்தம் .. | காட்பாடி .. | 65,656 | 33,297 | 32,359 |
| | கீழ்வைத்தினாங்குப்பம் .. | 73,250 | 36,886 | 36,364 |
| | பேர்ணாம்பட்டு .. | 1,09,593 | 55,188 | 54,405 |
| | குடியாத்தம் .. | 86,345 | 43,653 | 42,692 |
| திருப்பத்தூர் .. | திருப்பத்தூர் .. | 1,59,472 | 80,650 | 78,822 |
| | ஆலங்காயம் .. | 61,061 | 30,810 | 30,251 |
| | நாட்ரம்பள்ளி .. | 49,714 | 25,116 | 24,598 |
| | கந்திலி | 64,490 | 32,397 | 32,093 |
| வேலூர் .. | வேலூர் .. | 61,681 | 32,043 | 29,633 |
| | கணியம்பாடி .. | 58,919 | 29,249 | 29,670 |
| | அணைக்கட்டு .. | 85,378 | 42,719 | 42,659 |
| | மாதனூர் .. | 50,298 | 25,422 | 24,876 |
| ஆரணி .. | ஆரணி .. | 61,145 | 30,404 | 30,741 |
| | கஸ்தாம்பாடி .. | 77,343 | 38,387 | 38,956 |
| செய்யார் .. | அனக்காவூர் .. | 58,288 | 29,052 | 29,236 |
| | செய்யார் .. | 75,647 | 37,888 | 37,759 |
| | வெம்பாக்கம் .. | 75,921 | 37,985 | 37,936 |
| வந்தவாசி .. | வந்தவாசி .. | 82,642 | 41,538 | 41,104 |
| | தெள்ளார் .. | 74,162 | 36,976 | 37,186 |
| | பெரணமல்லூர் .. | 64,493 | 32,183 | 32,310 |
| போளூர் .. | போளூர் .. | 1,05,445 | 53,093 | 52,352 |
| | சேத்துப்பட்டு .. | 65,546 | 32,589 | 32,957 |
| | கலசப்பாக்கம் .. | 74,801 | 37,561 | 37,240 |
| செங்கம் | செங்கம் .. | 81,838 | 41,488 | 40,350 |
| | புதுப்பாளையம் .. | 55,726 | 28,115 | 27,611 |
| | தண்டராம்பட்டு .. | 85,139 | 42,981 | 42,158 |
| திருவண்ணாமலை .. | திருவண்ணாமலை .. | 77,285 | 38,830 | 38,455 |
| | கீழ்பெண்ணாத்தூர் .. | 72,617 | 36,278 | 36,339 |
| | துரிஞ்சாபுரம் . | 62,529 | 31,798 | 30,731 |



## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| பெரம்பலூர் .. | வேப்பந்தட்டை .. | 75,892 | 37,708 | 38,184 |
| | ஆலத்தூர் .. | 63,774 | 31,456 | 32,318 |
| | பெரம்பலூர் .. | 64,828 | 32,424 | 32,404 |
| | வரகூர் (வேப்பூர்) .. | 82,245 | 40,905 | 41,340 |
| உடையார்பாளையம் .. | ஜெயங்கொண்டம் .. | 90,719 | 45,730 | 44,989 |
| | செந்துறை .. | 63,489 | 31,552 | 31,937 |
| | திருமானூர் .. | 76,390 | 38,019 | 38,371 |
| | தா. பழூர் .. | 65,556 | 32,947 | 32,609 |
| | ஆண்டிமடம் .. | 70,342 | 35,261 | 35,081 |
| | அரியலூர் .. | 71,196 | 35,930 | 35,266 |
| லால்குடி .. | புல்லம்பாடி .. | 73,446 | 36,347 | 37,099 |
| | மணச்சநல்லூர் .. | 95,663 | 47,025 | 48,638 |
| | லால்குடி .. | 97,123 | 47,761 | 49,362 |
| முசிறி .. | முசிறி .. | 79,452 | 39,352 | 40,100 |
| | தொட்டியம் .. | 86,941 | 43,151 | 43,790 |
| | தாதையங்கார்பேட்டை .. | 67,376 | 33,112 | 34,264 |
| | துறையூர் .. | 85,335 | 42,083 | 42,352 |
| | உப்பிலியாபுரம் .. | 64,616 | 32,243 | 32,373 |
| கரூர் .. | அறவக்குறிச்சி .. | 65,096 | 31,635 | 33,461 |
| | கரூர் .. | 76,005 | 37,470 | 38,535 |
| | தாந்தோணி .. | 74,167 | 36,377 | 37,790 |
| | கே. பரமத்தி .. | 70,330 | 39,388 | 30,942 |
| குளித்தலை .. | கடவூர் .. | 62,221 | 30,837 | 31,384 |
| | கிருஷ்ணராஜபுரம் .. | 82,388 | 41,183 | 41,205 |
| | குளித்தலை .. | 1,08,980 | 54,774 | 54,206 |
| | மணப்பாறை .. | 71,520 | 35,917 | 35,603 |
| | மருங்காபுரி .. | 62,748 | 31,136 | 31,612 |
| | வையம்பட்டி .. | 57,498 | 28,696 | 28,802 |
| திருச்சிராப்பள்ளி .. | மணிகண்டம் .. | 50,025 | 25,202 | 24,823 |
| | ஸ்ரீரங்கம் .. | 57,244 | 28,838 | 28,406 |
| | திருவரம்பூர் ... | 83,736 | 42,331 | 41,405 |
| குளத்தூர் .. | கீரனூர் ... | 45,757 | 23,212 | 22,545 |
| | அன்னவாசல் ... | 62,719 | 30,975 | 31,744 |
| | விராலிமலை ... | 60,824 | 30,479 | 30,345 |
| ஆலங்குடி .. | திருவரங்குளம் .. | 89,830 | 44,458 | 45,372 |
| | கரம்பகுடி .. | 50,161 | 25,062 | 25,099 |
| திருமயம் .. | அரிமளம் .. | 49,831 | 23,686 | 26.145 |
| | பொன்னமராவதி ... | 62,234 | 29,161 | 33,073 |
| | திருமயம் ... | 50,594 | 23,745 | 26,849 |

## தஞ்சாவூர் மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| சீர்காழி | சீர்காழி | 1,00,200 | 49,647 | 50,553 |
| | ஆணைக்காரன் சத்திரம் | 85,578 | 42,337 | 43,241 |
| மாயூரம் | மாயூரம் | 96,898 | 48,138 | 48,760 |
| | குற்றாலம் | 89,584 | 43,712 | 45,872 |
| | செம்பொனார்கோயில் | 1,26,214 | 61,640 | 64,574 |
| கும்பகோணம் | திருப்பனந்தாள் | 69,327 | 34,572 | 34,755 |
| | கும்பகோணம் | 91,729 | 45,967 | 45,762 |
| | திருவிடமருதூர் | 1,14,231 | 56,662 | 57,569 |
| நன்னிலம் | நன்னிலம் | 73,476 | 35,975 | 37,501 |
| | கொடவாசல் | 70,216 | 34,359 | 35,857 |
| | திருமருகல் | 59,660 | 28,813 | 30,847 |
| | கொரடாச்சேரி | 63,665 | 31,344 | 32,321 |
| பாபநாசம் | பாபநாசம் | 92,841 | 45,164 | 47,677 |
| | அம்மாப்பேட்டை | 76,962 | 38,366 | 38,596 |
| | வலங்கிமான் | 63,098 | 31,545 | 31,553 |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 98,686 | 49,149 | 49,537 |
| | பூதலூர் | 66,372 | 33,061 | 33,311 |
| | திருவையாறு | 85,493 | 42,938 | 42,555 |
| ஒரத்தநாடு | ஒரத்தநாடு | 1,13,621 | 56,750 | 56,871 |
| | திருவோணம் | 80,534 | 40,279 | 40,255 |
| மன்னார்குடி | மன்னார்குடி | 90,715 | 44,397 | 46,318 |
| | நீடாமங்கலம் | 76,815 | 38,086 | 38,729 |
| | கோட்டூர் | 70,740 | 35,243 | 35,497 |
| நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 92,249 | 45,461 | 46,788 |
| | கீழ்வேளூர் | 49,416 | 24,567 | 24,849 |
| | திருவாரூர் | 48,444 | 23,799 | 24,645 |
| திருத்துறைப்பூண்டி | முத்துப்பேட்டை | 62,046 | 30,821 | 31,225 |
| | திருத்துறைப்பூண்டி | 57,047 | 28,581 | 28,466 |
| | தலைஞாயிறு | 44,125 | 22,073 | 22,052 |
| | வேதாரணியம் | 97,996 | 48,374 | 49,622 |
| பட்டுக்கோட்டை | பட்டுக்கோட்டை | 1,14,279 | 56,985 | 57,294 |
| | மதுக்கூர் | 47,291 | 23,439 | 23,852 |
| | பேராவூரணி | 74,244 | 37,557 | 36,687 |
| | சேதுபாவாசத்திரம் | 55,093 | 27,520 | 27,573 |
| அறந்தாங்கி | அறந்தாங்கி | 97,284 | 48,326 | 48,958 |
| | ஆவுடையார்கோயில் | 58,349 | 28,165 | 30,184 |



## தென்னார்க்காடு மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| செஞ்சி .. | செஞ்சி .. | 95,977 | 48,539 | 47,438 |
| | மேல்மலையனூர் .. | 86,267 | 43,400 | 42,867 |
| | வல்லம் .. | 72,199 | 36,204 | 35,995 |
| திண்டிவனம் .. | ஒலக்கூர் .. | 59,090 | 29,621 | 29,469 |
| | மரக்காணம் .. | 93,079 | 46,818 | 46,261 |
| | மயிலம் .. | 75,371 | 37,838 | 37,533 |
| | வானூர் .. | 90,934 | 45,751 | 45,183 |
| விழுப்புரம் .. | கானை .. | 75,478 | 37,939 | 37,539 |
| | விக்கிரவாண்டி .. | 78,663 | 39,799 | 38,864 |
| | கண்டமங்கலம் .. | 80,517 | 40,745 | 39,772 |
| | கோலியனூர் .. | 78,458 | 39,874 | 38,584 |
| திருக்கோயிலூர் .. | திருநாவலூர் .. | 67,704 | 34,096 | 33,608 |
| | உளுந்தூர்பேட்டை .. | 76,987 | 38,906 | 38,081 |
| | திருவெண்ணெய்நல்லூர் .. | 77,169 | 39,032 | 38,137 |
| | முகையூர் .. | 1,04,967 | 52,638 | 52,329 |
| | திருக்கோயிலூர் .. | 73,284 | 36,897 | 36,387 |
| கள்ளக்குறிச்சி .. | கள்ளக்குறிச்சி .. | 80,075 | 39,871 | 40,204 |
| | சங்கராபுரம் .. | 75,435 | 37,833 | 37,602 |
| | ரிஷிவந்தியம் .. | 66,890 | 33,740 | 33,150 |
| | சின்னசேலம் .. | 80,566 | 40,085 | 40,481 |
| | தியாகதுர்க்கம் .. | 60,332 | 30,108 | 30,224 |
| விருத்தாசலம் .. | விருத்தாசலம் .. | 87,057 | 43,204 | 43,853 |
| | மங்களூர் (திட்டக்குடி) .. | 89,443 | 44,351 | 45,092 |
| | நல்லூர் .. | 80,341 | 39,593 | 40,748 |
| | கம்மாபுரம் .. | 90,031 | 46,892 | 43,139 |
| கடலூர் .. | கடலூர் .. | 97,774 | 50,286 | 47,488 |
| | நெல்லிக்குப்பம் .. | 1,15,655 | 58,407 | 57,248 |
| | குறிஞ்சிப்பாடி .. | 1,10,850 | 56,521 | 54,329 |
| | பண்ருட்டி .. | 97,883 | 49,812 | 48,076 |
| சிதம்பரம் .. | ஒரத்தூர் .. | 75,102 | 37,215 | 37,887 |
| | மேல்புவனகிரி .. | 70,049 | 35,245 | 34,804 |
| | பரங்கிப்பேட்டை .. | 84,206 | 41,788 | 42,418 |
| | கொமராட்சி .. | 71,027 | 35,443 | 35,584 |
| | காட்டுமன்னார்கோயில் .. | 92,919 | 46,632 | 46,287 |
| நெய்வேலி நிலக்கரிச் சுரங்கப் பகுதி .. | | 18,309 | 10,420 | 7,889 |

குறிப்பு:—இவ்வட்டவணையின் இணைப்பு அடுத்த இதழிலும் தொடர்ந்து வெளியிடப்படும். மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, சேலம், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்கள் பற்றிய மக்கள் தொகைக் கணக்கு—அடுத்த இதழில் இடம் பெறுகிறது.

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

**அக்டோபர், 1963**

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் :—
கிராமச் சிறுவர்கள் நிகழ்ச்சி.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் :—
ஊர்ச் சாவடி, விஞ்ஞானக் கூடம்.

ஒவ்வொரு செவ்வாய்ச் கிழமையும் :—
கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

ஒவ்வொரு புதன்கிழமையும் :—
ஊர்ச் சாவடி. சரித்திரக் கதைகள்.

ஒவ்வொரு வியாழக் கிழமையும் :—
ஊர்ச் சாவடி, நமது திட்டம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :—
கிராம வானொலி மன்றம் நிகழ்ச்சிகள்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் :—
ஊர்ச் சாவடி, நம் மாதர் மன்றம்.

**இவையற்ற ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் :—**

புதன் கிழமை (2—10—1963)
சுற்றுப்புற சுகாதாரம்—காந்தி வழி.

வியாழக் கிழமை (3—10—1963)
அபூர்வ விலங்குகள்—உரையாடல்.

ஞாயிற்றுக் கிழமை (6—10—1963)
கிராமம் போவோமே.

திங்கட்கிழமை (7—10—1963)
கோணை எழுத்து குஞ்சிதபாதம்—சித்திரம்.
(என். வாசுதேவ் எழுதியது.)

புதன்கிழமை (9—10—1963)
அக்கரைப் பச்சை—நாடகம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது.)

வியாழக் கிழமை (10—10—1963)
(செய்தி விளக்கம்.)

ஞாயிற்றுக் கிழமை (31—10—1963)
நம்நாட்டு விவசாயி :—கடிதம்.
கிராமியக் கலை.

திங்கட்கிழமை (14—10—1963)
புளியம்பழம்—சித்திரம்.

புதன் கிழமை (16—10—1963)
எங்கள் மாமா :—நாடகம்.

வியாழக்கிழமை (17—10—1963)
ஊருக்கு ஒரு கூட்டுறவு சங்கம் : உரையாடல்.

ஞாயிற்றுக் கிழமை (20—10—1963)
கத்தரி மகசூல்.
(கிராமச் சாவடியில்—பொன் ஆலூன்)
வழக்கு விசாரணை
(தனஞ்செயன் எழுதியது)

திங்கட்கிழமை (21—10—1963)
எழுதத் தெரியாதவர்— நாடகம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது).

புதன்கிழமை (23—10—1963)
பஜனைக்கூடம் :
(என். ராகவன் எழுதியது.)

வியாழக்கிழமை (24—10—1963)
சிறு தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் : உரையாடல்.

ஞாயிற்றுக் கிழமை (27—10—1963)
முந்திரிக்கொட்டை மரம்—உரையாடல்.
கிராம முன்னேற்றம்—பேட்டி.

திங்கட்கிழமை (28—10—1963)
நம்பிக்கை—நாடகம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது)

புதன்கிழமை (30—10—1963)
கம்பளிச்சட்டை : சித்திரம்.
(என். ராகவன் எழுதியது.)

வியாழக்கிழமை (30—10—1963)
செய்தி விளக்கம்.

**கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்:—**

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக் கிழமையும் மாலை 6-45 மணி முதல் 7-15 மணி வரையில் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. அந் நிகழ்ச்சிகளில் "கேள்வியும்—பதிலும்" முதலிடம் பெறுகிறது.

---

## "கிராம நல" இதழ் ஆலோசனைக் குழு :

1. திரு ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — தலைவர்
2. திரு கோ. வெங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர். — துணைத் தலைவர்.
3. திரு டி. வி. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ். பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநர் கிராம நல-தல நிர்வாகத் துறை. — உறுப்பினர்.
4. திரு கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்., பஞ்சாயத்து நிதி இயக்குநர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — ,,
5. திரு வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர், கிராம நல-தல நிர்வாகத்துறை. — ,,
6. திரு கே. சங்குண்ணி மேனன், துணைச் செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — ,,
7. திரு எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, துணைச் செயலாளர் (சிறப்பு) கிராம நல-தல நிர்வாகத் துறை. — ,,
8. திரு கே. பி. கீதா கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர், நிதித் (திட்டம்-அபிவிருத்தி) துறை. — ,,
9. திரு பி. கே. பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்., செயலாளர், பொதுத் துறை. — ,,
10. திரு சி. பி. கேலு எராடி, ஐ.ஏ.எஸ்., தலைவர், அரசாங்க எழுதுபொருள் அச்சுத் துறை. — ,,
11. திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ., பொது ஜனத் தொடர்பு அதிகாரி, ஆசிரியர், 'கிராம நலம்'. — உறுப்பினர்/செயலாளர்.

---

**வெளியிடுவோர் :**
ஏ. வெங்கடேசன், ஐ. ஏ. எஸ்.

**ஆசிரியர் :**
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

படம் 1.—சென்னையில் மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டிடத்தை, 12—8—1963-ல், திரு. காமராஜ் திறந்து வைத்தார். கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

படம் 2.—10—8—1963-ல், சென்னையில் பாரத அரசாங்க அமைச்சர் பேராசிரியர் ஹூமாயூன் கபீர் அவர்கள், அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில், மொழி பெயர்ப்புக் கருத்தரங்கினைத் (Translation Seminar) துவக்கி வைத்தார்.

படம் 3.—இந்திய அரசாங்க கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழுவினர் 12—8—1963-ல் மாநிலக் கூட்டுறவு அமைச்சரையும், இதர அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர்.





கிராம நல-தலநிர்வாகத் துறையின் செயலாளர் 22-9-63 வரை)
**திரு. வி. பாலசுந்தரம், ஐ.ஏ.எஸ்.**





[illegible]
அதில், உரிமையைக் காட்டிலும், கடமைதான், அதிக பங்கு பெறுகிறது. அது, பொறுமையின் வடிவம் ;
அன்பின் எல்லே ; தியாகத்தின் விளக்கு ; நிதானத்தின் வழிகாட்டி. இத்தனையுமாக இருந்தார், கஸ்தூரிபாய்."



# கிராம நலம்

நவம்பர் '63



"1930-ல், காந்திஜி இரண்டு காரியங்களைச் செய்தார். இந்தியாவைப் பிரிட்டன் கொடுமையாக அடிமைப்படுத்தி வருவதைப் பிரிட்டிஷ் மக்கள் அறியச் செய்தார். தாங்கள் கூனிக் குறுகாது, தலை நிமிர்ந்து நின்றாலே, தங்கள் தோள்களிலே சுமந்திருந்த நுகத்தடியைக் கீழே தள்ளிவிடலாம் என்று இந்தியர்கள் திடநம்பிக்கை பெறச்செய்தார். இதன் பிறகு, இந்தியாவை ஆள, பிரிட்டன் ஒரு நாள் மறுத்துத் தானாகவேண்டும்; தன்னைப் பிறர் ஆள்வதற்கு இடங் கொடுக்க, இந்தியா மறுத்துத்தானாக வேண்டும். இது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

தடியாலும், துப்பாக்கிக் கட்டையாலும் இந்தியரைப் பிரிட்டிஷார் அடித்தார்கள். இந்தியர் கெஞ்சவில்லை; புகார் செய்யவில்லை; பின்வாங்கவும் இல்லை. அதனால், இங்கிலாந்து சக்தியற்றதாகிவிட்டது; இந்தியா வெல்லமுடியாததாகிவிட்டது....".

— லூயி பிஷர் "காந்தி வாழ்க்கை".

தமிழ்நாடு
600 008.

# கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும?"

—பாரதியார்.

மடி 9 | நவம்பர் 1963 | படி 2

## மக்களின் ஒத்துழைப்பே நல்லாட்சிக்கு அடித்தளம்

இவ்வாண்டு காந்தி ஜெயந்தி நாள், தமிழகத்தின் வரலாற்றிலே மிகவும் முக்கியமான நாளாகும். பொது மக்களின் நல்வாழ்வுக்காக, நேரடியான பணியில் ஈடுபடவேண்டி கடந்த சுமார் ஒன்பதாண்டுகளாக வகித்து வந்த முதலமைச்சர் பதவியை திரு காமராஜ் துறந்து, புதிய முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் தலைமையில் தமிழ் நாட்டில் புதிய அமைச்சரவை, அன்று பதவி ஏற்றது. அப்போது திரு காமராஜ் அவர்கள் உடனிருந்து, புதிய அமைச்சரவைக்கு வாழ்த்துரை வழங்கினார். அமைச்சரவை பதவி ஏற்பு முடிந்ததும், திரு. காமராஜ் அவர்கள் நிருபர்கள் கூட்டத்தில் பேசினார். அவ்வமயம்,

"திரு. பக்தவத்ஸலம், மிகுந்த அனுபவமுள்ளவர். நான் அமைத்த மந்திரி சபைக்கு ஒத்துழைப்பு கொடுத்தது போல திரு. பக்தவத்ஸலம் மந்திரி சபைக்கும் பொது மக்கள் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொது மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான், அரசாங்கத்திற்கு ஆர்வம் ஏற்படும். அரசாங்கம் மக்களின் தேவைகளை உணர்ந்து அதைப் பூர்த்தி செய்யப் பாடுபடும். அதற்கான உதவியை மக்கள் எப்பொழுதும் அளிக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர், புதிய முதலமைச்சர், திரு. பக்தவத்ஸலம் அவர்கள், நிருபர்களிடையே பேசும்பொழுது குறிப்பிட்டதாவது.—

"நம்மை எதிர்நோக்கியுள்ள மகத்தான வேலையைச் செய்வதிலும், பெரிய பொறுப்பை நிறைவேற்றுவதிலும், முழு ஒத்துழைப்பைக் கோருகிறேன். திரு காமராஜ் அவர்கள் தனிப்பெருமை வாய்ந்த அரிய வழியைக்காட்டி, அழைப்பு விடுத்துள்ளார். அவர் தமது மாபெரும் தியாகத்தின் மூலம், அவ்வழியை, நமக்குக் காட்டியிருக்கிறார். அதற்கேற்ப, நாம், நமது கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்ற முற்படவேண்டும்."

---

**அட்டைப் படம்:**

நவம்பர் 14, பிரதமர் நேருஜியின் பிறந்த நாள். பாரதநாடு முழுவதும், அந்த நாள், ஆண்டுதோறும் "குழந்தைகள் தின"மாகக் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் என்றால் நேருஜிக்கு உயிர். அவர்களை விலை மதிக்கமுடியாத பொக்கிஷங்களாக அவர் கருதுகிறார். அவருடைய பிறந்த தினத்தை, "குழந்தைகள் தின" மாகக் கொண்டாடுவதன் மூலம், குழந்தைகள் நலனில் அரசு காட்டுகின்ற ஆர்வமும், அக்கறையும் தெளிவாகிறது.

---

கிராம நலம்: சந்தா விவரம்:—ஆண்டு சந்தா ரூ. 1-50. ஆறுமாத சந்தா இடையாது. தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முகவரி:—பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராமநல தல நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

# பசிப்பிணியைப் போக்க

## உலக உணவு மகா சபையில்

சென்னை மாநகரில், 1963-ம் ஆண்டு அகஸ்டு மாதம் 27-ந் தேதியில், நடைபெற்ற "விவசாயிகள் மன்ற"க் கூட்டத்தில் (Farmers' Forum, Madras) பேசிய அமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்கள், வாஷிங்டன் நகரத்தில் கூடிய உலக உணவு மகாசபைக் கூட்டத்தைப்பற்றி, விரிவாக விளக்கினார். உலகிலுள்ள 104 நாடுகளிலிருந்து வந்த, சுமார் 1,400 பிரதிநிதிகள் ஒன்றுகூடி, இந்த மகாசபைக் கூட்டத்தின் முடிவில் மேற்கொண்ட உறுதிமொழியை, எல்லோரும் அறியும்பொருட்டு, அதன் முழு வாசகத்தையும் படித்துக் காட்டினார். இந்த உறுதிமொழியின் விவரங்களை, நமது நாட்டு மக்கள் எல்லோரும் அறிய வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அந்த உறுதிமொழியின் தமிழாக்கத்தைக் கீழே காணலாம்).

நிலச் சீர்திருத்தத்தின் அவசியத்தை, இந்த சர்வதேச மகாநாடு ஏற்றுக்கொண்டுள்ளது. அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளும், இக் கொள்கையை ஒப்புக்கொண்டுள்ளன என்பது இதிலிருந்து தெளிவாகிறது. நிலச் சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள், இதனை உணர்ந்து, உலக நாடுகளின் ஏகோபித்த அபிப்பிராயத்தையறிந்து நடப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஜப்பான் நாட்டின் மொத்தப் பரப்பில், 18 சத விகித அளவு நிலமே, விவசாயத்திற்குத் தகுதி வாய்ந்த நிலமாகும். அந்த குறைந்த அளவு நிலத்தை, ஜப்பான் மக்கள் நன்கு பயன்படுத்தி, விவசாயத்தில் தீவிரக் கவனம் செலுத்தி, சிறந்த பலனைக் காண்கின்றனர் என்பதை அமைச்சர் எடுத்துக்காட்டினார். இன்றைய நெருக்கடி நிலையில், நம் நாட்டு விவசாயிகள், மேலும் அதிக உற்சாகத்தோடும், விஞ்ஞான, தொழில் நுட்ப உதவியோடும், உணவு உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று நம்புகிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"

## உலக உணவு மகா சபையின் உறுதிமொழி

பசி, ஊட்டச்சத்து குறைந்த உணவு ஆகியவற்றைப்பற்றிய பிரச்சினைகளை அளந்தறியவும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளை ஆராயவும், வாஷிங்டன் நகரத்தில் "பசிப்பிணி நீக்கும் இயக்க"த்தின் (Freedom from Hunger Campaign) சார்பில், உலக உணவு மகாசபையில் கலந்துகொண்டு, கூடியிருக்கிற நாங்கள்,

### இதன் மூலம் செய்துகொள்ளும் சபதம் :

பசிப்பிணியிலிருந்து விடுதலை பெறுவது மனிதனின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை, தேசிய முயற்சி மூலமாகவும், சர்வதேசிய ஒத்துழைப்புடனும், எல்லா மக்களும், எந்தவித வேற்றுமையும் இல்லாமல், அடைந்தே தீரவேண்டும் என்பதை கருத்தில் கொண்டுள்ளோம்.

இருபது ஆண்டுகளுக்கு முன், கோடை வஸந்தகால மாநாடு (Hot Spring Conference) நடந்தது. அதன் விளைவாக, உலக உணவு விவசாய நிறுவனம் (FAO) தோன்றியது. அன்று முதல் இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்குப் பின்னும், பசி, ஊட்டச் சத்துக் குறைந்த உணவு, வறுமை (Hunger, Malnutrition and Poverty) ஆகிய சாபக்கேடுகள் மனித வர்க்கத்தில் பாதிக்கு மேற்பட்டவர்களை வாட்டி வதைத்து வருவதை உணர்ந்துள்ளோம்.

உற்பத்தியின் அளவு எட்டிப்பிடிக்க முடியாத விகிதத்தில், மக்கள் தொகை கன வேகமாகப் பெருகிவருகிறது. இந்த ஜனத்தொகைப் பெருக்கத்தின் வேகத்தையொட்டி, மக்களின்



# உலக நாடுகள் உறுதி

## நிறைவேறிய சபதம்

தேவைகளும் தீவிரமாகப் பெருகி வருகின்றன. இதன் விளைவாக, மக்களின் பசிப்பிணியை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று, முன்னெச்சரிக்கை ஏற்பட்டுள்ளது.

உலக ஜனத்தொகையில் பல கோடி மக்கள் சமீபகாலத்தில், அரசியல் சுதந்திரம் அடைந்துள்ளனர். அதன் விளைவாக, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற அபிலாஷையின் அடிப்படையில், புதிய வேகமும், புதிய கண்ணோட்டமும் தோன்றியுள்ளன. எனவே, முதலாவதாகச் செய்யவேண்டிய முக்கிய வேலை, மக்களின் பசிப்பிணியை நீக்குவதேயாகும் என்பதை நன்கு அறிந்திருக்கிறோம்.

அறிவியல் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் உலகத்தைப் பசிப் பிணியிலிருந்து இப்போது விடுவிக்கக்கூடியது என்பதை உறுதியாக நம்புகிறோம். அந்த விடுதலை லட்சியத்தை அடைய, உலகத்திலுள்ள இயற்கை வளம், மனித சக்தி அனைத்தையும், சீரான பொருளாதார, சமூக அபிவிருத்தியின் மூலம், ஒருமுகப் படுத்திச் செயல்படுத்தவேண்டும் என்று, திடமாக நம்புகிறோம்.

### இவ்வாறு பிரகடனம் செய்கிறோம் :

பசி, ஊட்டச்சத்துக் குறைந்த உணவு, ஆகியவற்றை, உலகில் நீடிக்கவிடுவது நீதிக்கு மாறுபட்டது ; சமூக நெறிக்கும் விரோதமானது ; மனிதருக்குரிய கண்ணியத்திற்கும், சம சந்தர்ப்ப உரிமைக்கும் பொருந்தாதது ; சமூக அமைதிக்கும் சர்வதேச சமாதானத்திற்கும் அறைகூவல் விடுவது.

மனித வர்க்கத்தின் அங்கமாய் அமைந்து, தமது கடமைகளையும் உரிமைகளையும் ஒருங்கே பெற்றுள்ள ஆண் பெண் அனைவரும், பசிப்பிணியை ஒழிக்கவேண்டியது, தமது முக்கியமான முதல் வேலையாகக் கொள்ளவேண்டும். அத்துடன், உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும், பசியிலிருந்து விடுதலைப் பெறப் போராடவேண்டும். மேலும், இந்தக் கடமை, ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழுள்ள நாடுகள் மேற்கொண்ட சபதத்திலும் அடங்கியுள்ளது. அதாவது, சமாதானத்திற்கு இன்றியமையாத அம்சங்களான, வாழ்க்கைத் தர உயர்வு, அனைவருக்கும் முழு வேலை வாய்ப்பு, பொருளாதார, சமூக, முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்குமான வழிவகைகள், ஆகியவற்றை அடைய, தனித்தனியாகவும், கூட்டாகவும் செயல்படவேண்டும் என்று, அந்த சபதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பசிக்கொடுமையிலிருந்து உலகத்தை மீட்கவேண்டியது, பலர் சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய கூட்டுப் பொறுப்பாகும். அதாவது, இக்குறிக்கோளை அடைய,

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், தம் அதிகாரத்துக்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

உலகிலுள்ள எல்லாப் பகுதிகளும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. எனவே, உலகம் முழுவதிலும், பசிப்பிணி அடியோடு நீங்கவேண்டுமானல், எந்தப்பகுதியிலும் அது இருக்கக்கூடாது. அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள், இதை உணர்ந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள மேற்கொள்ளும் முயற்சிகளில் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் எல்லா நாடுகளுக்கும் உதவுகின்றவகையில் ஐக்கிய நாடுகளும் இதற்கென சிறப்பாக அமைந்த ஏஜென்ஸிகளும் அவற்றின் முயற்சிகளைத் தீவிரப்படுத்தி, ஒருமுகப்படுத்தவேண்டும். உலக நாடுகளிலுள்ள எல்லா அமைப்புகளும், சிறப்பாக, அரசாங்க சார்பற்ற அமைப்புகள், உதாரணமாக, சமய, வாலிபர், மாதர் நிறுவனங்கள், பிற பொது நல சேவா சங்கங்கள், விவசாய, தொழிலாளர் ஸ்தாபனங்கள், வாணிக, தொழிற்சங்கங்கள் முதலியன மக்களுக்கு, இவ்விஷயங்களை எடுத்துரைத்து, அவர்கள் அறிவாற்றலுடன் பணிபுரிய, உற்சாகப்படுத்தவேண்டும்.

## ஆகவே நாம் வலியுறுத்துவதாவது:

உலகத்திலிருந்து பசிப்பிணியை ஒழிக்கின்ற வேலையை, அனைத்துலக அபிவிருத்தி என்ற முழு உருவ அமைப்பின் ஓர் அம்சமாகக் கருதவேண்டும். அதாவது, மனித சக்தி, இயற்கை வளங்கள் அனைத்தையும், வேகமான பொருளாதார, சமூக வளர்ச்சிக்காக, முழுதாகவும், மிகத் தீவிரமாகவும் பயன்படும்வகையில், அர்ப்பணிக்க வேண்டும்.

(1) இதற்காக, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் எல்லா அரசாங்கங்களும் வேகமாக மேற்கொள்ளவேண்டிய உறுதியான நடவடிக்கைகளாவன.—

(a) இப்போது பெரும்பாலும் சரிவரப் பயன்படுத்தப்படாமலுள்ள வளங்களைத் திட்டமிட்டு, ஒருங்கிணைத்துப் பயன்படுத்த வேண்டும்.

(b) பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குத் தேவையான முறையில், அவற்றின் ஸ்தாபனங்களை மாற்றி அமைக்கவேண்டும். குறிப்பாக, மிகத் திறமையோடு இயங்கும் நிர்வாக யந்திரத்தை நிலைபெற அமைக்கவேண்டும். உற்பத்திப் பெருக்கத்திற்கு உற்சாகம் அளிக்கும் வகையில், விலைகள் நியாயமாகவும், நிலையாகவும் இருக்கும்படி, உறுதியளிக்கவேண்டும். மேலும் அவசியமான இடங்களில், நியாயமற்றதும் காலத்திற்குப் பொருந்தாததுமான அமைப்புகளையும், நில உரிமை முறைகளையும் நில உபயோக வகைகளையும் சீர்திருத்தவேண்டும். அதாவது, நிலம் உழைப்பவனுக்கு ஆகும் வகையிலும், அவனுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு அடிப்படையாகவும், க்ஷேம நல வளர்ச்சிக்கு அஸ்திவாரமாகவும், அவனுடைய சுதந்திரத்திற்கும் கண்ணியத்திற்கும் உத்திரவாதம் அளிப்பதாகவும் அது அமையவேண்டும்.

( ) விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவுக் களஞ்சியத்தை உச்ச அளவுக்குப் பயன்படுத்தவேண்டும். அத்துடன், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சூழ்நிலைகளுக்கும், தேவைகளுக்கும் பொருந்தும் வகையில், நீண்டகால, குறுகிய கால நடைமுறை ஆராய்ச்சியைப் பெருக்க வேண்டும்.

(3) கிராம மக்கள், நவீன தொழில் நுட்பங்களையும், முறைகளையும் உபயோகிக்கும் விதத்தில், அவர்களிடையே மிகப்பெரிய அளவில் பயனுள்ள அறிவை வளர்ப்பதுடன், எல்லோருக்கும் சம சந்தர்ப்பத்தை விரிவுபடுத்துவதற்காக உலகப் பொதுக் கல்வியைப் பரப்பவேண்டும்.

## மேலும் வற்புறுத்துவதாவது:

தேசிய முயற்சிகளுக்கு உதவும் வகையிலும், அனைத்துலக உருவ அமைப்புக்குள் நிறைவேற்றப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேலும் விரைவாக நிறைவேற்றும் வகையிலும், அளிக்கப்படுகின்ற சர்வதேசிய ஒத்துழைப்பை வலுப்படுத்தவேண்டும். சிறப்பாக,

(1) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வாணிபத்தில் இப்போது இருந்து வரும் மாறுபட்ட, குழப்பமான நிலையைத் திருத்தியமைத்தல், அதற்காக, தேவையான ஒருங்கிணைந்த பண்ட ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல், அபிவிருத்தித் திட்டங்களை ஒருமுகமாக்குதல், பொருத்தமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

(2) நிதி உதவி, பொருளுதவி, தொழில்நுட்ப உதவி ஆகியவற்றின் அளவையும், சக்தியையும் அதிகப்படுத்துதல்.

(3) உலகத்தின் உபரிப் பொருள்களையெல்லாம், மேலும் நியாயமான வகையிலும், சரியான முறையிலும், பங்கிடு செய்தல். அதாவது, பொருளாதார, சமூக அபிவிருத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு, உபரியாக உள்ள உணவுப் பொருளை, விநியோக முறையிலும், சிரமத்த முறையிலும், பயன்படுத்துதலும், இதில் அடங்கும்.

## நம்பிக்கை தெரிவிப்பதாவது:

உலகெங்கும், ஆயுத பலத்தைக் கைவிட மேற்கொள்ளப்படும் இன்றைய முயற்சிகள், வெற்றிபெறும். அழிவுக் கருவிகளுக்காக இப்போது செலவாகும் ஏராளமான பணம், பசிப்பிணி, ஊட்டச்சத்து குறைந்த உணவு, ஆகியவற்றை நீக்கி, மனித சமுதாயத்தின் க்ஷேம நலனை உயர்த்த, மேலும் அதிகமாகப் பயன்படும்.

## ஆகவே நாங்கள் சபதம் கூறி, மிகுந்த உறுதியுடன் தீர்மானம் செய்வதாவது :

இந்தத் தலைமுறையின் முக்கியமான முதல் வேலை, பசிப்பிணி, ஊட்டச்சத்து குறைந்த உணவு ஆகியவற்றை, நீக்குவதற்கான அறைகூவலை ஏற்பதேயாகும். மனித இனம் முழுவதுக்கும், சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும் அடிப்படை ஆதார நிலைகள் இதன் மூலம் உருவாகின்றன.

மேற்சொன்ன குறிக்கோளை அடைய, உலக மக்களின் கருத்தைக் கவர்ந்து, அவர்களை வீறியுறச் செய்யத்தக்க எல்லா நடவடிக்கைகளையும், தனிப்பட்ட முறையிலும், பொதுவான வகையிலும், தேசிய நிலையிலும், சர்வதேச அளவிலும், உற்சாகத்தோடு, மேற்கொள்ள நமது சக்தியையெல்லாம் ஒன்று திரட்டவேண்டும்.

இந்த நோக்கத்தோடு, இறுதிக் குறிக்கோளை அடையும்வரையில், 'பசிப்பிணி நீக்கும் இயக்கத்திற்கு, மனமுவந்து முழு ஆதரவு தருகிறோம்.

— லூயி பிஷர், ''காந்தி வாழ்க்கை''.



# வளரும் மனித சக்தி

ஜவஹர்லால் நேரு.

"நாம் சமுதாய நலத்திட்டத்தை வரவேற்கிறோம். ஏனெனில், அது நமது திட்டங்களின் அடிப்படையான மக்கள் சக்தியை உருவாக்குகிறது. இதுதான், இன்றைய நிலையில் மிக முக்கியமானதாகும். உற்பத்தியைப் பெருக்குவதுகூட, அதற்கு அடுத்ததுதான். சமுதாய நலத்திட்டம், மக்களுக்கு, குறிப்பாக கிராம மக்களுக்கு, சக்தியையும், திறனையும் அளிக்கிறது. ஆனால், சில சமயங்களில், சட்டதிட்டங்களாலும், விவாதங்களாலும், நாம் எதிர்பார்த்த அளவுக்கு, மக்கள் சக்தி பெருகவில்லை. தங்களுடைய வேலையை எப்படிச் சிறப்பாகச் செய்வது என்பதை, ஒவ்வொருவரும் செவ்வையாக உணர்ந்தால், இந்த சக்தியின் வளர்ச்சி தடையின்றி வளரும். இந்த வளர்ச்சியை யாரும் தடைசெய்ய முடியாது.

பஞ்சாயத்து ராஜ்யம் என்பது, மக்கள் தங்கள் சொந்த சக்தியையும், திறனையும் வளர்த்துக் கொள்ள, வழி செய்வதாகும். அரசாங்கத்தின் வேலைகளை, புதியவர்களுக்குப் பரவலாகக் கொடுப்பதும், இதன் நோக்கமாகும். ஆனால், அதிகாரம் அற்ற "பெரிய மனிதர்களின்" அபாயமும், இதில் ஏற்பட வழி உண்டு. எப்படி இருந்தாலும், மக்களை அதிக அதிகாரத்திற்கு உட்படுத்தாமல், வழிகாட்டி வாழச்செய்ய பஞ்சாயத்து ராஜ்யம்தான் சிறந்ததாகும். நான் கூறுவது கூட்டுறவு இயக்கங்களுக்கும் பொருந்துவதாகும். மக்கள் கூட்டுறவு இல்லாமல் அதிகாரிகளால் நடத்தப்படும் கூட்டுறவு இயக்கம், வெறும் நாடகமேயாகும்.

நாம் உற்பத்திப் பெருக்கம் பற்றிப் பேசுகிறோம். ஆனால், சுதந்திரம் பெற்ற 15 ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் சுலபமாக சமாளிக்க முடியும் என்று எளிய பிரச்னைகளைப் பற்றித்தான் இன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

மக்களைவிட தாங்கள் மிக உயர்ந்தவர்கள் என்று கிராம ஊழியர்கள் எண்ணுவதாக என்னிடம் கூறப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிக்கு, இது நேர் எதிரான எண்ணமாகும்.

## எண்ணத்திலே ஒரு புரட்சி

நாட்டின் வளர்ச்சியை நோக்கி நாம் விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நாட்டின் அடிப்படையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கிராம மக்களும் மாறுதல் அடைந்து வருகிறார்கள். வெளியிலே மட்டுமல்லாமல் மக்கள் மனத்திலும் ஒரு புதுமை ஏற்பட்டு இருக்கிறது. பல்வேறு பிரச்னைகள் பற்றி நான் கூற விரும்பவில்லை. ஆனால், நமக்குப் பிறரால் எதன் மூலம் மதிப்பு ஏற்படுமோ அதைவிட்டு, சாதாரண விஷயங்களில் கவனம் செலுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, பஞ்சாயத்து ராஜ்யம் மூலமாகவும், சமுதாய நலத்திட்டம் மூலமாகவும் அந்த உயர்ந்த குறிக்கோளை அடைய, நாம் முயற்சி செய்யவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

## தியாக உணர்வு ஏற்படவேண்டும்

இப்போது நமக்கு முன்னால் உள்ள பிரச்சினை தற்காப்பு ஆகும். நாம் என்ன தியாகங்களைச் செய்ய வேண்டும் என்பதை யாரும் கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்துடன், நமது வளர்ச்சித் திட்டங்களும் அமுல் நடத்தப்பட வேண்டும். இதுவும் தியாகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இதை மனத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும்.

நமது நோக்கம் சமதர்மக் குடியரசினை அமைப்பதாகும். இதுதான் நமது தேச மக்களுக்கு சக்தியையும், திறனையும் தருவதாகும். சில பணக்காரர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்குவது நமது நோக்கமல்ல. பொருளாதாரத்தில், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் உள்ள பெரும் இடைவெளி குறையவேண்டும். இதுதான் பொதுத்துறை (Public Sector)யில் உள்ள நியாயமாகும். தனியார்துறை (Private Sector) கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், அது நமது பொருளாதாரத்தை மாற்றும் தன்மை கொண்டதாக இருக்கக்கூடாது என்று விரும்புகிறேன்.

விவசாயம் மிக முக்கியமானதாகும். மாநில அரசாங்கமும், பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களும், இதில் போதிய கவனம் செலுத்தாவிட்டால், நமது திட்டங்கள் அனைத்தும் பயனற்றதாகிவிடும். இதை மனத்தில் கொண்டு, நாம், ஒவ்வொரு விவசாயியையும் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும். வளரும் மனிதசக்தி செய்ய வேண்டியதும் இதுதான்."

(1963-ம் ஆகஸ்டு 1-ம் தேதியன்று, டெல்லியில் நடந்த மாநில சமுதாய நல அமைச்சர்கள் மகாநாட்டை பிரதமர் நேருஜி ஆரம்பித்துவைத்துப் பேசியதன் சுருக்கம்.) (From: "Panchayat Raj", October, 1963.)

# வானொலிப் பராமரிப்பு

திரு எம். என். பார்த்தசாரதி, பிரதம வானொலி அதிகாரி (Chief Radio Officer), சென்னை-5.

உங்கள் பஞ்சாயத்திலுள்ள வானொலிப் பெட்டிகள் தினமும் தவறாமல் பாடிக்கொண்டிருக்கின்றனவா? இல்லையேல், அவற்றை உடனே பழுதுபார்த்து, சரிவர வேலைசெய்ய வையுங்கள். உங்கள் வானொலிப் பெட்டிகளை பழுதுபார்க்கும் பொருட்டே, பல மேற்பார்வையாளர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கோட்டாட்சித் தலைவரின் (Revenue Divisional Officer) கீழும் ஒன்று அல்லது இரண்டு வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors) இருந்து வருகிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கும் பதினைந்து நாட்களுக்கொரு முறை இவர்கள் செல்கிறார்கள். யூனியன் அலுவலகத்தில் வந்திருக்கும் வானொலிப் பெட்டிகளைப் பழுதுபார்ப்பதே அவர்கள் கடமை. நீங்கள் தவறாமல் செய்யவேண்டியது பாடாத பெட்டிகளை யூனியன் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியதே. பாடாத பெட்டிகளில் சில உடனே செப்பனிடக்கூடியவைகளாகவிருக்கலாம். அவற்றை உடனடியாக செப்பனிடுவார்கள். சில பெட்டிகளுக்கு மாற்றுச் சாமான்கள் தேவைப்படலாம். தேவையான சாமான்களின் குறிப்பை மேற்பார்வையாளர்கள் உங்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். நீங்கள் அந்த உறுப்புக்களைத் தருவித்துக் கொடுத்தபின் பெட்டிகளை முழுதும் பழுதுபார்த்து வைப்பார்கள். பெட்டிகள் தாமதமின்றி பழுதுபார்க்கப்படுவது உங்கள் முயற்சியையும் சுறுசுறுப்பையும் பொருத்திருக்கிறது.

### அறிவு பரப்பும் அரிய சாதனம்

நம் நாட்டில் கிராமங்களில் பெரும்பான்மை மக்கள் இன்னும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருப்பதை நீங்கள் நன்கறிவீர்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்களே தவிர, அவர்கள் விஷயங்கள் பல தெரிந்தவர்கள். மேலும் விஷயம் தெரிந்துகொள்ளும் ஆற்றலும் படைத்தவர்கள். இம்மக்களது அறிவு வளர்ச்சிக்கேற்ற கருவி ரேடியோவைக் காட்டிலும் சிறந்ததொன்று கிடையாது. முன்னாட்களில் நம் நாட்டு மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருந்தும் கதாகாலக்ஷேபங்கள் கேட்டு நம் புராணக் கதைகளையும் தர்ம சாஸ்திரங்களையும் நன்கறிந்திருந்தார்கள். ரேடியோவினால் நாம் மிகப் பயனடையலாம். காதால் கேட்கக்கூடிய கருவியாதலால், மக்கள் நூற்றுக்கணக்கில் ஓரிடத்தில் கூடி ரேடியோவின் ஒலியைக் கேட்கலாம். உலகத்தின் பல தேசங்களின் மேதைகள், அறிஞர்கள் அவர்களின் உரைகளை நாம் இருக்கும் இடத்திலிருந்தே கேட்டறியலாம். இவ்வளவு பயன் தரக்கூடிய ஒரு கருவியின் முழு உபயோகத்தையும் பெற நம்மெல்லாருடைய முழு முயற்சியும் தேவை. உங்கள் உதவியை தவறாமல் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

# படைவிரிப்பாய் தம்பி!

திரு வேலை க. துரையரசன்

படைக்கஞ்சாப் போர்மறவர் பண்பிலுயர் மேலோர்
பாசறையாம் நம்நாட்டில் பகைப்புலத்தார் இன்று
படையோடு நடைபோட்டுப் புகுந்துவிட்டார் இங்கே
பாய்ந்துவரும் கொல்புலியே! பாரதத்தின் செல்வ!

" தடைக்கற்கள் எங்குண்டு? தகர்த்திடுவோம் " என்றே
தோளுயர்த்தித் தாவுகின்ற சிங்கத்தைப் போன்றோர்
மடைதிறந்த வெள்ளம்போல் கூடிவிட்டார், நீயும்
மார்தட்டிக் களம் நோக்கிப் புறப்படுவாய் தம்பி!

அம்மாவென் றழைக்கின்ற குழவிதனைப் பெற்றே
அகமகிழும் பெண்பாலர் அக்குழவி தன்னை
தம் வயிற்றில் சுமந்திருந்த பொழுதினிலே மண்ணைத்
தேனூறும் வாயாலே உண்பதன்றி, வேற்றூர்

இம்மண்ணைத் தொட்டுவிட்டால் துடிக்கின்ற செல்வ!
இதுவரையில் நம்முறவாய் இருந்தவர்கள் இன்று
நம்நாட்டின் எல்லையிலே கடைவிரித்தார், நீயும்
நந்தாயைக் காத்திடவே படைவிரிப்பாய் தம்பி!

வேலெடுத்துப் பகையெறிந்து வெற்றிதனைக் கொண்டால்
' வீரனிவன் ' என நாட்டார் விருதுபல நல்கி
பாலெடுத்த மொழிதனிலே அன்புதனைச் சேர்த்துப்
போற்றியுனை வாழ்த்திடுவர், நின்பெருமை சாற்ற

நூலெடுப்பர் பெரும்புலவர், நின்பின்னோர் எண்ணி
சித்தநித்தம் உருகிடுவர், உனைப்பெற்ற அன்னை
சேலெடுத்த விழியினிலே மகிழ்வுதனைச் சேர்த்துத்
தலை நிமிர்ந்து நடக்கையிலே தோன்றுமடா இன்பம்

---

### பிழை திருத்தம்

1963, பிப்ரவரி, " கிராமநலம் ", பஞ்சாயத்து அநுபந்தத்தில் பக்கம் ii—iv-ல் வெளியிடப்பட்டுள்ள, பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் பற்றிய விளக்கத்தில், பாரா 7 (iii) (a)ல் " ஒவ்வொரு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கும் 25 ரூபாய் என்ற விகிதத்தில் அமையவேண்டும்" என்றிருப்பதை, "ஒவ்வொரு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கும் 20 ரூபாய் என்ற விகிதத்தில் அமைய வேண்டும் " என்று திருத்திப் படிக்கவும்.

ஆசிரியர்,
" கிராம நலம் "



# சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

## பூலாநந்தபுரம் பஞ்சாயத்து

திரு மா. மாரி நாயக்கர், கிராமத் தொண்டர் படைத் தலைவர், பாதுகாப்புப் பிரிவு, பூலாநந்தபுரம்.

பூலாநந்தபுரம் பஞ்சாயத்து, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் தாலுகாவில் உள்ள சின்னமனூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களில் ஒரு கிராமப் பஞ்சாயத்து ஆகும். இது ஒரு தனி ரெவின்யூ கிராமமும் கூட. பஞ்சாயத்துத் தலைவர், பெண் அங்கத்தினர் உள்பட மொத்தம் ஆறு அங்கத்தினர்கள். பஞ்சாயத்தின் வருட வருமானம் ரூ. 6,000.

இப்பஞ்சாயத்தின் எல்லைக்குள் நஞ்சை 527 எக்கர் 88 செண்டும், புஞ்சை 42 எக்கர் 85 செண்டும், புறம்போக்கு நிலம் 65 எக்கர் 5 செண்டு நிலமும் உள்ளது. 67 வீடுகளும், 80 குடும்பங்களும் கொண்டது இப் பஞ்சாயத்து.



பூலாநந்தபுரம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணிய அய்யர்.

### விவசாயத் திட்ட வளர்ச்சி

விவசாயத் திட்டத்தின் கீழ், எங்கள் பஞ்சாயத்தைச் சேர்ந்த புறம்போக்கு நிலங்களில் பலன் தரும் மரங்கள் தென்னை 120 நடப்பட்டு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பஞ்சாயத்து கம்போஸ்ட் உரம் தயார் செய்யும் திட்டத்தின் கீழ் கம்போஸ்ட் எருக்குழிகள் வெட்டப்பட்டு, நிரப்பப்பட்டு வருகின்றது. பசுந்தழை உரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ளரிசிடியா நாற்றங்கால் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த பஞ்சாயத்தைச் சேர்ந்த நிலங்களில் போடப்பட்ட பயிர்களில் தாக்கும் நோய், பூச்சிகளை அகற்ற பயிர்பாதுகாப்பு கருவிகள் ஸ்பிரேயர், டஸ்டர் வாங்கி வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் கொடுக்கப்படுகிறது.

### அறிவு விளக்கப் பணியும், தொண்டர் படையும்

எங்கள் பஞ்சாயத்தில் வானொலி ஒன்று, 1962-ம் வருடம் வாங்கி வைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது. மற்றும் 20 அங்கத்தினர்கள் கொண்ட கிராம வானொலி மன்றம் அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல் பட்டு வருகிறது. மேலும் சின்னமனூர் பஞ்சாயத்து யூனியன் மூலம் ' சமூகக் கல்வி நிலையம் ' ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டு, 35 அங்கத்தினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பாதுகாப்பு பிரிவில் 24 பேர்களும், விவசாயப் பிரிவில் 5 நபர்களும், கல்விப் பிரிவில் 6 பேர்களும் இருக்கிறார்கள். மாதம் ஒரு முறை தொண்டர் படையினர் கூடி, பொது வேலையில் ஈடுபட்டு நல்லமுறையில் செயலாற்றிவருகிறார்கள்.

### பொது சுகாதாரமும், போக்குவரத்தும்

குடிதண்ணீர் வசதிக்காக இரண்டு குடிதண்ணீர் கிணறுகளும் இரண்டு போரிங் பம்புகளும் அமைக்கப் பட்டிருக்கிறது. வீடுகளிலிருந்து வெளியேறும், கழிவு நீர் தெருக்களில் தேங்கி அசுத்தம் ஏற்படுவிடாதிருக்க ஒவ்வொரு வீட்டிற்கு முன்புறம் சிமிண்டினால் கழிவுநீர் தொட்டி அமைக்கப்பட்டிருப்பதுடன் அந்த கழிவு நீரை அப்புறப்படுத்த பஞ்சாயத்து தோட்டி வசதியும் செய்து தந்திருக்கிறது. 1957-ம் வருடத்திலிருந்து 15 மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பெரியகுளம் - குமுளி செல்லும் நெடுஞ்சாலையுடன் இணையும்படி 4 பர்லாங் மெட்டல் ரோடு ஒன்று பஞ்சாயத்து போட்டிருக்கிறது. ஊரில் உள்ள நான்கு தெருக்களுக்கும் கிணற்றுச் சாலை போடப்பட்டிருக்கிறது. மற்றும் இணைப்புச் சாலையில், ரூ. 4,000-/ செலவில் 5 கல்வெர்டுகளும் கட்டப்பட்டிருக்கிறது. பெரியகுளம்–குமுளி ரஸ்தாவில் பஸ் நிற்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### கிராமக் கைத்தொழில்

கிராமக் கைத்தொழில் வளர்ச்சி திட்டத்தில் அதிக அக்கறை கொண்டவர் எங்கள் பஞ்சாயத்துத் தலைவர்



— லூயி பிஷர் " காந்தி வாழ்க்கை ".

ரின் விடாமுயற்சியால் கிராமக் கைத்தொழில் வர்த்தக இலாகா உதவியுடன், "செங்கல் காளவாய்" ஆரம்பிக்கப்பட்டு தற்போது முதல் தடவையாக 55,000 செங்கல் சுடப்பட்டு விற்பனைக்கு தயாராக உள்ளது.

### எங்கள் தலைவர்

எங்கள் புளாந்தபுரம் பஞ்சாயத்தில் இவ்வளவு அபிவிருத்தி வேலைகள் சிறந்த முறையில் நடைபெற்று வருவதற்கு காரணம் எங்கள் பஞ்சாயத்துத் தலைவர் திரு ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்களின் தன்னலமற்ற சேவை யென்றால் மிகையாகாது. தமிழ்நாட்டிலேயே கடந்த 33 வருடங்களாக எந்தவிதமான போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர் என்று குறிப்பிடத்தகுந்தவர் இவர் ஒருவர் தான் இருக்க முடியும். வயது 66 ஆகியும், பஞ்சாயத்தின் சட்ட திட்டங்களில் பெற்றுள்ள தெளிவு அனுபவம், சேவை மனப்பான்மையில் சிறிதும் சளைத்தவர் அல்லர் எங்கள் தலைவர்.

—o—

# இசா பல்லாவரம் பஞ்சாயத்து

## (தலைவர் சந்திப்பு)

திரு. ஏ. ரங்கநாதன், இசா பல்லாவரம்

"இசாபல்லாவரம் பஞ்சாயத்து செயல்படத் தொடங்கி ஐந்தாண்டுகள் ஆகிவிட்டனவே" நீங்கள் தலைவராயுள்ள இந்த பஞ்சாயத்து நிர்வாகத்தில் என்னென்ன ஆக்க வேலைகள் சாதித்துத் தந்துள்ளீர்கள் செய்யப்பட்டுள்ளன? இந்தக் கேள்வியை இசாபல்லாவரம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. அப்துல் ரசாக் அவர்களிடம் கேட்டேன்.

"பிரமிக்கத்தக்க முன்னேற்றம் என்று குறிப்பிடும் வகையில், எதும் இல்லையென்றாலும், பஞ்சாயத்துக்குத் தக்கபடி எங்களால் இயன்றவரை சில அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றியுள்ளோம்" என்று திரு. அப்துல் ரசாக் அவர்கள் தன்னடக்கத்துடன் பதில் சொன்னார்.

இசாபல்லாவரம் என்னும் கிராமம் சென்னையிலிருந்து சுமார் 12 மைல் தொலைவில் உள்ளது. சைதாப்பேட்டை தாலூகாவைச் சேர்ந்த கண்டோன்மெண்ட் பல்லாவரத்துடன் சேர்ந்திருந்த இந்தக் கிராமத்தில் 1958-ம் ஆண்டு கிராமப் பஞ்சாயத்து தொடங்கப்பட்டது. இப் பஞ்சாயத்து 1 சதுர மைல் பரப்புள்ளது. ஜனத்தொகை 5,222 நான்கு பகுதிகளாக கொண்டது. பதினைந்து அங்கத்தினர்களைக் கொண்டது. பெண் உறுப்பினர் ஒருவரும் ஒதுக்கப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஷெட்யூல்ட் வகுப்பு உறுப்பினர் ஒருவரும் இப் பஞ்சாயத்தில் இடம் பெற்றுள்ளனர். 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து இப் பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்தாக உயர்த்தப்பட்டுள்ளது. இது பரங்கிமலை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது.



இசா பல்லாவரம் நகரப் பஞ்சாயத்தின் தலைவர் திரு அப்துல் ரசாக் அவர்கள்.

இப் பஞ்சாயத்து தொடங்கப்பட்ட நாளிலிருந்தே திரு அப்துல் ரசாக் அவர்கள் இதன் தலைவராக இருந்து வருகிறார். இவர் செல்வமும் செல்வாக்கும் படைத்த வியாபாரப் பிரமுகர். சுமார் 41 வயதான இவர் எல்லோரிடமும் நட்பு முறையில் பழகி தொடர்பு கொள்ளும் தன்மையுடையவர். பஞ்சாயத்து செய்துள்ள பணிகளைப்பற்றி அவரிடம் கேட்டபோது அவர் கூறியது வருமாறு:—

"பஞ்சாயத்து அமைக்கப்பட்ட பின்னர் சுமார் மூன்றரைமைல் நீளமுள்ள பாதை போடப்பட்டுள்ளது. இப்புதிய பாதைக்கு சுமார் 7,000 ரூபாய் செலவாகியுள்ளது. சுமார் 1,500 ரூபாய் செலவில் 5 சிறு பாலங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. இரண்டு தெருக்களுக்கு ரூ. 2,500 செலவில் சாக்கடைக் கால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன".

இதுவரை பல திட்டங்களை நிறைவேற்றியிருந்த போதிலும், திரு ரசாக் அவர்கள் அத்துடன் திருப்தியடையாமல் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை இசாபல்லாவரம் பஞ்சாயத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று தணியாத ஆர்வம் கொண்டுள்ளார். இதுவரை செய்தவை குறித்தும் இனி செய்ய வேண்டியன பற்றியும் அவர் கூறுவதைக் கேளுங்கள்.

"எங்கள் பஞ்சாயத்தில் செய்யவேண்டிய வேலைகள் பல உள்ளன என்பதை நான் நன்கு உணர்கிறேன். ஆனால் இதுவரை செய்திருக்கும் வேலைகளையும் நான் குறைவாக மதிக்கவில்லை. பஞ்சாயத்து எல்லையில் மின்சார இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தெருக்களில் விளக்குகள் போடப்பட்டு விட்டன. 62 சாதாரண விளக்குகளும் 10 குழல் விளக்குகளும் தெருக்களை ஒளிமயமாக்கி வருகின்றன. இவ்விளக்குகளுக்காக பஞ்சாயத்து ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாய் மின்சாரக் கட்டணமாகக் கட்டி வருகிறது."

"இப்பஞ்சாயத்தில், ஓர் அரசாங்க உயர்நிலைப் பள்ளியும், பஞ்சாயத்து யூனியன் உயர் துவக்கப் பள்ளியும், முஸ்லிம் ஆரம்பப் பள்ளிக்கூடமும் அமைந்துள்ளன. சுமார் 2,100 சிறுவர், சிறுமிகள் அங்கு கல்வி கற்று வருகின்றனர். புதிய உணவுத் திட்டமும் இங்கு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதற்காக, மூன்று மாதத்திற்கு ஒரு முறை பஞ்சாயத்திலிருந்து 100 ரூபாய் செலவு செய்ய ஒதுக்குகிறோம்."

"பஞ்சாயத்து வானொலியும் அமைத்துள்ளோம். அது நன்கு வேலைசெய்து வருகிறது. கிராம மக்களுக்குக் குடிநீர் வசதிகளுக்காக மூன்று கிணறுகள் பராமரிக்கப்படுகின்றன"

"தெருக்களையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு:— "தெருக்களையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்ய ஆறு ஊழியர்களையும், ஒரு சுகாதார கண்காணிப்பாளரையும் அமர்த்தியுள்ளோம். தனிப்பட்ட கழிப்பிடங்களை சுத்தம் செய்ய நான்கு ஊழியர்கள் உள்ளனர். அழுக்குத் தண்ணீரையும், சாக்கடைகளையும் வண்டிகள் மூலம் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்துள்ளோம்."

"உங்களுடைய உழைப்பு பெருமைக்குரியது. பஞ்சாயத்து ஆற்றவேண்டிய பணிகளை நன்கு உணர்ந்து செயல்படுத்தியுள்ளீர்கள்—உங்கள் பாராட்டத்தில் மிக்க மகிழ்ச்சி" என்று கூறி அவரிடம் விடை பெற்றேன்.

# பஞ்சாயத்து ஆட்சி

## —நிர்வாகம்—

—(0)—

திரு எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்.

கிராமப் பஞ்சாயத்து என்பது, நமது நாட்டில் தொன்றுதொட்டு நிலவி வந்த பழமை வாய்ந்த ஒரு நிறுவனமாகும். பாண்டியர்கள் ஆட்சியிலும், பல்லவர்கள் ஆட்சியிலும், ஏறக்குறைய எட்டாம் நூற்றாண்டு தொடக்கக் காலத்திலேயே, கிராம சுய ஆட்சி நிறுவனங்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்ததாக, வரலாறு சான்று பகர்கின்றது. சோழர்கள் காலத்தில், இந்தக் கிராமச் சபைகள், சீருடனும் சிறப்புடனும் இயங்கி வந்துள்ளன. உள்ளாட்சி முறையில், குடும்பமானது, மிகவும் மேம்பாடு அடைந்திருந்த ஒரு நிலையினை, உத்திரமேரூர் கிராமச் சபை இயங்கி வந்த தன்மை, நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

### பஞ்சாயத்துச் சட்டம்—புதியதோர் திருப்பம்

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், பஞ்சாயத்துக்களும் மற்ற உள்ளாட்சி நிறுவனங்களும் (Local Bodies) மாநில அரசின் வெறும் ஏஜென்சிகளாகவே இருந்து வந்துள்ளன. மக்களின் சபைகளாக அவை திகழவில்லை. புதிய பஞ்சாயத்துச் சட்டம், இந்தத் துறையில் ஒரு பெரிய மாறுதலைச் செய்துள்ளது எனலாம். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, நல்லதொரு புத்துணர்ச்சியையும், முக்கியமான புதிய பொறுப்புக்களையும் புதிய பஞ்சாயத்துச் சட்டம் அளித்துள்ளது.

கிராமப் பிரதேசங்களில் இப்பொழுது இயங்கிவரும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், அன்றாட நிர்வாகத்தினை மட்டும் கவனித்துக்கொள்கிற வெறும் நிர்வாக சபைகள் அல்ல; அந்த வேலையுடன், கிராம வளர்ச்சிக்கான எல்லா அபிவிருத்தி வேலைகளையும் ஏற்று நடத்துகின்ற பொறுப்பினை பெற்றுள்ள சுய ஆட்சி நிறுவனங்களாக, அவை, இன்றைய நிலையில் உள்ளன.

சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்ற உள்ளாட்சித் துறையில் ஏற்பட்டுள்ள இந்த முக்கிய பிரிவுகளின் அமைப்பு விவரங்கள் (Constitution) பற்றி, ஒவ்வொரு பிரஜையும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்கள் கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து என்று இரு வகைப்படும். 5,000-க்கு குறையாத ஜனத்தொகையினையும், ரூ. 10,000-க்கு குறையாத வருட வருவாயையும் பெற்றுள்ளது நகரப் பஞ்சாயத்தாகும். ஜனத்தொகை 500-க்குக் குறையாத ஒரு கிராமத்தினையோ, அல்லது கிராமத்தின் ஒரு பகுதியையோ கொண்டு அமைக்கப்பெறுவது கிராமப் பஞ்சாயத்து. நகரப் பஞ்சாயத்தின் அலுவல்களை நடத்திச் செல்வதற்கென்று தனியாக ஒரு நிர்வாக அதிகாரி (Executive Officer) உண்டு. கிராமப் பஞ்சாயத்திலோ, இந்த வேலையை பஞ்சாயத்துத் தலைவரே செய்கிறார்.

### பஞ்சாயத்து—அடிப்படை அங்கம்

உள்ளாட்சித் துறையில் பஞ்சாயத்துதான் அடிப்படை அங்கமாகும். ஜனநாயகம் என்றால் என்ன என்பதை கிராம மக்கள் புரிந்துகொள்கின்ற ஒரு வாய்ப்பினை, பஞ்சாயத்து, அவர்களுக்கு அளிக்கிறது; அத்துடன் கிராம மக்களின் உண்மையான தேவைகளையொட்டி, கிராமத்திற்கான ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கவும், பஞ்சாயத்து வகை செய்கிறது. பஞ்சாயத்துக்களின் முக்கிய அலுவல்கள் என்ன என்பதைப் பார்ப்போம்:– கிராம உணவு உற்பத்தியினைப் பெருக்குதல்; கிராமப் பாதைகளை அமைத்து, அவற்றைப் பராமரித்தல், குடி நீர் வழங்குதல், துப்புரவு வசதிகளை செய்து தருதல், தெருக்களிலும் பொது இடங்களிலும் விளக்குப் போடுதல்; இவையே கிராமப் பஞ்சாயத்தின் முக்கிய அலுவல்களாகும். வட்டார அளவில் செயல்படுவது, பஞ்சாயத்து யூனியன் ஆகும்.

### பஞ்சாயத்து யூனியன் மன்றம்—அலுவல்கள்

பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் முக்கிய அலுவல்கள் என்னவென்று பார்ப்போம்:—கிராம அபிவிருத்தி வேலைகளை ஏற்று நடத்துதல்; பஞ்சாயத்துக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல்; அத்துடன், பஞ்சாயத்து யூனியன் சாலைகளை அமைத்து, அவற்றைப் பராமரித்தல்; மகப்பேறு நிலையங்களையும் மருந்தகங்களையும் (Dispensaries) பராமரித்தல் ஆரம்பப் பள்ளிகளை நடத்துதல்; போன்ற முக்கிய அலுவல்களை இங்கே குறிப்பிட வேண்டும். இத்துடன், சமுதாய அபிவிருத்தித் திட்டவேலைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பும், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைக்காகவேயாடி, வட்டார அளவில் உள்ள வளர்ச்சி அதிகாரிகளின் சேவை, பஞ்சாயத்து யூனியன் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட அபிவிருத்தி மன்றம்—பணிகள்

மாவட்ட அளவில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அல்லது மாவட்டத்தின் ஒரு பிரிவிற்கென்று, ஒரு மாவட்ட அபிவிருத்தி மன்றம் உள்ளது. பஞ்சாயத்து யூனியன்களின் பிரதிநிதிகளும், மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளுமே இந்த மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். சரியான விவரங்களையும், தகவல்களையும் மக்களிடையே எடுத்துப் பரப்புகின்ற ஓர் அமைப்

பாக, மாவட்ட அபிவிருத்தி மன்றம் பணியாற்றுகிறது. அத்துடன், அபிவிருத்தி வேலைகள் எவ்வளவுதூரம் நடைபெற்றுள்ளன என்பதைப் பரிசிலனை செய்யவும், இந்த வேலையில் ஈடுபட்டுள்ள பல்வேறு வகையான சக்திகளையும் ஒன்றாக இணைத்து வேலை சிறப்பாக நடைபெறுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற பணியினையும், மாவட்ட அபிவிருத்தி மன்றம் செய்கிறது. மக்களுடைய குறைகளை அரசாங்கத்திற்கு அவை நல்ல முறையில் எடுத்துக் கூறுகின்றன. மேலும், அவ்வப்பொழுது அரசாங்கத்துக்கு வேண்டிய ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்கின்றன.

### பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள்

பல்வேறு வகையான வேலைத் திட்டங்களை எடுத்து நடத்தும்போது செய்யவேண்டிய அவசியமான மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் எடுத்துச் சொல்லி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறவும், பஞ்சாயத்து ஆட்சியில் ஏற்படுகின்ற பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவும் மாநில அளவில் ஓர் அமைப்பு வேண்டுமல்லவா? அதற்காகவேண்டி, நம் அரசாங்கமானது, பஞ்சாயத்து அபிவிருத்திக்காக 3 ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. நிர்வாகம், கட்டு வேலைகள் பற்றிய குழு; உற்பத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய குழு; க்ஷேம நலப் பணிகள் பற்றிய குழு என்பவைகளே, இந்த மூன்று குழுக்களாகும். மற்றவர்களுடன், மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பிரதிநிதிகளும், இந்தக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு, பயன்தரத் தக்க ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு அளித்து வருகிறார்கள்.

### எந்த அடிப்படையில் இயங்கவேண்டும் ?

பல்வேறு அளவுகளில் இயங்குகின்ற இந்தப் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களிடையே நிலவவேண்டிய உறவானது, ஒருவரோடு ஒருவர் ஒருங்கிணைந்து சேர்ந்து பணியாற்றுதல் என்ற அடிப்படையில் அமைந்து இருக்கவேண்டுமே தவிர, உயர்வு தாழ்வு, அதிகார அந்தஸ்து என்ற அடிப்படையில் இருக்கலாகாது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனின் கீழ்நிலையில் செயல்படுகின்ற நிறுவனம் அல்ல. ஒரு கட்டுக்கோப்புடன் அவை இயங்குவதற்காகவேண்டி, அவைகளிடையே ஓரளவு கட்டுப்பாடுகள் தெளிவான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன.

### இராமத் தலைவர்களின் பொறுப்பும் கடமைகளும்

பஞ்சாயத்து ஆட்சி ஏற்பட்டதன் விளைவாக, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலம், இராமத் தலைவர்கள் சில முக்கிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இந்தக் கடமைகளை அவர்கள் திருப்திகரமாக செய்யவேண்டி, தேவையான பயிற்சியினை அவர்களுக்கு அளித்து அவர்களைத் தயார்ப்படுத்துவது அவசியம். இந்த அவசியத்தை உணர்ந்த அரசாங்கம், பஞ்சாயத்துத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியோர் தம்முடைய புதிய பொறுப்புகளை உணரும் வகையில், எல்லாப் பஞ்சாயத்து தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும் ஏற்கெனவே பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளது. பஞ்சாயத்து உறுப்பினர்க்கும் இத்தகைய பயிற்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முக்கிய பொது ஜனத் தலைவர்களும், இப்பயிற்சி பெற, பயிற்சி நிலையங்கள், ஆய்வு நிலையங்கள் ஆகியவற்றுக்குப், பயிற்சிக்கென அனுப்பப்பட்டுள்ளனர்.

மாவட்டக் கலெக்டர்கள், இதர அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஆகியவற்றின் வேலைகளை மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும், தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

### இப்பொழுது என்ன செய்ய வேண்டும் ?

சீன ஆக்கிரமிப்பின் விளைவாக, தேசிய உணர்வும் தேச பக்தியும், மக்களிடையே பெருக்கெடுத்திருப்பதைக் காண்கிறோம். இந்த உற்சாகத்தையும், ஊக்கத்தையும், உணர்ச்சியையும் ஒருமுகப்படுத்தி, பாதுகாப்பு முயற்சிகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பயன்படுத்தும் குறிக்கோளுடன், **உற்பத்தி அணி, காவல் அணி, அறிவு அணி**, என்ற முப்பிரிவுகளுடன் கூடிய **கிராமத் தொண்டர் படைத் திட்டத்தை** அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இந்த கிராமத் தொண்டர் படையை அமைத்து, அவற்றிற்கு நல்ல செயல் திட்டங்களை வகுத்துக் கொடுக்கின்ற பொறுப்பு பஞ்சாயத்திடம் விடப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பெற்றுள்ளது. இவ்விஷயத்தில் பஞ்சாயத்துக்கள் கணிசமான அளவுக்கு ஆர்வம் காட்டியுள்ளன.

இறுதியாக, பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றி, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் பங்கு பெறும் மக்கள் தலைவர்களின் உண்மை உணர்வு, சேவை மனப்பான்மை, நேர்மையான தொண்டு முதலானவற்றையே பெரிதும் பொறுத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் தங்களிடையே உள்ள சிறு சிறு வேற்றுமைகளை உதறித் தள்ளிவிட்டு, மக்களின் நலனுக்காக ஒன்றுபட்டு பணியாற்றவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் துணைச் செயலாளராகப் பணியாற்றிய பொழுது, 27-8-63-ல் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட வானொலிப் பேச்சு.)

### மனித உறவை உயர்த்திய உத்தமர்

"ஒருவன், வழக்கமான சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் கையாண்டுதான், தன்னை ஏராளமான மனிதர்கள் பின்பற்றச் செய்யமுடியும் என்பதில்லை; முன்னுக்குப்பின் முரண்பாடில்லாமல், தொடர்ச்சியாக, மிக உயர்ந்த தர்மத்தைக் கடைபிடித்து வாழ்வதன் மூலமே, இதைச் சாதித்துவிடலாம். இந்த உண்மையையே காந்தி நிரூபித்தார். தர்மம் அடியோடு இழிந்து விழுந்து கிடக்கும் நம்முடைய இந்தக் காலத்திலே, அரசியல் துறையில், மனித உறவு உயர்ந்த நிலையில் அமைவதற்குப் பாடுபட்ட ஒரே ஒரு ராஜதந்திரி அவர்தான்."

பேராசிரியர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்





# முயற்சி திருவினை ஆக்கும்

(திரு. பெ. வெங்கடாசலத் தேவர், எம்.எல்.சி., தலைவர், வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியன்.)

நீர்வளமும் நிலவளமும் நிறையப்பெற்ற தமிழகத்தில் "சோறுடைத்து சோழநாடு" என்று ஆன்றோரால் போற்றப்படும் சோழ வள நாட்டில், வான் பெய்ய மறப்பினும் அன்னை காவேரி தன் புனலால் வளம் சுரக்க வைக்கும் தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற் களஞ்சியம். இத்தஞ்சைப் பகுதியில், எங்கள் வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியன் பகுதி வளமற்ற பகுதியாகும்.

நீர் வளத்தால் நிந்திக்கப்பட்ட பகுதியும், அன்னை காவேரியின் கருணை விழி காணாத பகுதியும், கோடையில் மண்மாரி பொழியும் மானாவாரி பகுதியாகும், எங்கள் தொகுதி. எங்கள் தொகுதியில் உயிர்த் தொழிலாகிய பயிர்த்தொழிலை பயிர் செய்துவிட்டு, திரண்டு வரும் கார் முகிலைக் கண்டு, அகமும், புறமும் மலரும். கார்முகிலை காற்றரக்கன் கடத்திச் சென்றால், எங்கள் கண்களில் கண்ணீர் சிந்தும். இயற்கையன்னை இந்த நிலையில் எங்களை ஏமாற்றுவாள். புத்துயிரும், புதுமைப் பொலிவளிக்கும் புகையிலைச் சாகுபடி சற்றுத் தெம்பூட்டும். உடலுக்கு உறுதியளிக்கும் உயிர்ச் சத்துள்ள ராகிப் பயிர் மிகச் சொற்பமாக ஏனோ! தானோ! என்று பயிர் செய்யப்படும்.

### தீவிர விவசாயத் திட்டம்

எங்கள் ஊராகிய கருப்பம்புலத்தில், 1961-ம் ஆண்டு, விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் ஊட்டும் தீவிர விவசாயத் திட்டம் அமுலாக்கப்பட்டது. விவசாய வளர்ச்சி அலுவலர் சீர்திருந்திய செம்மையான முறைகளை எடுத்துக் கூறினார். அவர் கூறிய கருத்துக்களைக் கேட்டு சிந்தனையில் ஆழ்ந்தேன். ஆன்றோரின் அறமொழி அலை, அலையாக எழுந்து "முயற்சி செய், முயற்சி செய், முடியும் மட்டும் முயற்சி செய்" என்று என்னை ஊக்குவித்தது. "உழைப்பாலாகாதது ஒன்றுமில்லை" என்ற ஊக்க மொழியும் உள்ளத்தில் பதிந்தது. மறுதினமே, மானாவாரி 'ராகி' சாகுபடியில் தீவிரமாக இறங்கிப் பயிர் செய்தேன். பச்சைப் பசேலென பருவத்தே பயிர் செழித்து வளர, பார்ப்போர் உள்ளத்தைமலரச் செய்தது. உள்ளக் களிப்படைந்தேன். அந்த ராகி 6 அடி 8 அங்குலம் வளர்ந்து விட்டோமே என்று வாளா நின்றதா? இல்லை, தன்னால் தாங்க முடியாதஅளவிற்கல்லவா தானியத்தைத் தாங்கிக்கொண்டு தன்னடக்கத்துடன் நின்றது!

பார்ப்போர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது. தென்றல் ராகியினூடே தவழ்ந்து செல்லும்பொழுது பார்த்தால், மனத்திற்கு எவ்வளவோ ரம்யமாக இருந்தது. "ராகிப் பயிர்" உயர்ந்து வளர்ந்தது. தாங்க முடியாத தானியத்துடன் தலை நாணி நின்றது. கடைசி அறுவடை எங்களையெல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒரு ஏக்கருக்கு (100 செண்ட்) 1,126 ராத்தல் விளைந்தது. எப்படி இந்த சாதனையை அடையமுடிந்தது? நான் 'ராகி' பயிர் செய்வதில் கையாண்ட முறைகளைக் கூறுகிறேன்.

### கையாண்ட முறைகள்

1. என் பண்ணையில் உள்ள ஆடு, மாடுகளைக் கிடை நிறுத்தினேன். இது தவிர ஏக்கராவிற்கு 30 வண்டி வீதம் வண்டல் அடித்தேன்.

2. போஸ் கலப்பை உபயோகித்து 2 உழவுகள் அடித்தேன்.



ராகித் தோட்டம்

3. ஏக்கராவிற்கு 12 ராத்தல் விதை தெளித்து, நாட்டுக் கலப்பையால் ஒரு உழவு அடித்தேன்.

4. ஒரு மழை பெய்தது, ஊடு பிடுங்கி நடவும் செய்து, ஏக்கராவிற்கு 50 ராத்தல் வீதம் அமோனியம் சல்பேட் போடவும் சாதகமாய் இருந்தது.

5. இரண்டு முறை வெட்டிக் கொடுத்தேன். பயிர்தூர் கட்டி நன்றாக செழித்து வளர்ந்தது.

6. பூச்சியினின்று பாதுகாக்க தடுப்பு மருந்தாக பி. எச். சி. 10% ஏக்கராவிற்கு 20 ராத்தல் வீதம் தூவப்பட்டது.

அத்துடன், சலியா உழைப்பும், ஊக்கமும் உறுதுணையாய் நின்று, நல்லதொரு படிப்பினையும், மகசூலையும் கொடுத்து, நாட்டின் பசிப்பிணியை அகற்றுகின்ற திருப்பணியில், சிறு உதவியைச் செய்கின்ற வாய்ப்பினை எனக்கு அளித்தது.





— லூயி பிஷர் "காந்தி வாழ்க்கை".

## மைசூர் மாநிலத்தில் புதுவழிகாட்டிய தொண்டர்

புல் பூண்டற்றுக் கிடந்த வெறும் கரம்பு நிலத்தைப் பழம் பழுத்துக் குலுங்கும் சோலை வனமாக்கிய வரலாற்றை, மைசூரைச் சேர்ந்த முனியப்பா, மகிழ்ச்சியும் வெற்றிப் புன்னகையும் கலந்து கூறுவதைக் கேட்டால், எந்த விவசாயியும் புத்துணர்ச்சி பெறுவார்.

முனியப்பா திராட்சைச் செடிகளைப் பயிரிடத் தொடங்குவதற்குமுன், நான்கு ஆண்டுகளுக்கு முன், அவருடைய நிலத்தில் ராகியும் நெல்லுமதான் பயிராயின; அவர் தந்த உழைப்புக்கேற்ற ஊதியம் நிலத்தில் கிடைக்கவில்லை; நாட்கள் செல்லச்செல்ல, நிலைமை இன்னும் மோசமாகிக் கொண்டே வந்தது; தண்ணீர் தட்டுப்பாடு மிகுந்தது; உரங்களின் விலை உயர்ந்தது; பங்களூர் நகரைச் சுற்றித் தோன்றிய தொழிற்சாலைகளை நோக்கி விவசாயிகள் சென்றனர். எந்நிலை நேர்ந்தாலும், நிலத்தை விட்டு விட்டுச் செல்லக்கூடாது என்று உறுதிபூண்ட முனியப்பா புதிய வழிகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்.

அவருடைய பிரச்னைகளைத் தோட்டப் பயிர் இலாகாவிடம் முறையிட்டுத் தீர்வுகாணத் தொடங்கினார்; நிலத்தைச் சோதித்துப் பார்த்த அதிகாரி, அதில் பழச் செடிகளைப் பயிரிடும்படி யோசனை கூறினார்; திகைத்து நின்ற முனியப்பாவுக்கு சிறிய கணக்கு மூலம் அவர் நம்பிக்கை ஊட்டினார்; திராட்சைச் செடிகளைப் பயிரிட்டால், ராகிப் பயிருக்கு எவ்வளவு தண்ணீர் தேவைப்பட்டதோ, அதில் மூன்றில் ஒரு பங்கு போதும்; உரத்தின் அளவும் அப்படித்தான்; தோட்ட வேலையை அவரேகூடக் கவனித்துக் கொள்ளலாம்; வேண்டுமென்றால், ஒரு பணியாளையும் வைத்துக்கொள்ளலாம். ஆனால், வருமானம் பத்து மடங்கு ஆகப் பெருகிவிடும்; இந்த எளிய கணக்கைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?

திராட்சைப் பழச் செடிகளை நட்ட ஒவ்வொரு ஏக்கராவிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ 4,000 வருமானம் கிடைத்ததால், அவருடைய முப்பது ஏக்கராவிலும் திராட்சை பயிரிடத் தொடங்கிவிட்டார் முனியப்பா.

### முனியப்பா—சிறந்த வழிகாட்டி

முனியப்பாவின் வெற்றியைக் கண்ட நூற்றுக்கணக்கானவர்கள் இப்போது தோட்டப் பயிரில் ஈடுபட்டிருக்கின்றனர். பங்களூரைச் சுற்றி சுமார் 10,000 ஏக்கராவில் 'பங்களூர் நீலம்' என்னும் ஒருவகைத் திராட்சைக் கொடிகள் படர்ந்து வளர்ந்து பழந்தருகின்றன. ஒன்று அல்லது இரண்டு ஏக்கரா நிலம் முதல் 20 ஏக்கரா நிலம் வரையில் அதைப் பயிரிட்டு வருகின்றனர். ஏக்கரா ஒன்றில் ஆண்டொன்றுக்கு இரு மகசூல்களாக சுமார் 20,000 பவுண்டு திராட்சைப் பழங்கள் கிடைக்கின்றன. பவுண்டொன்றுக்கு 4 அணா என்று பார்த்தால் கூட ஒரு ஏக்கராவிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 5,000 கிடைக்கிறது.

## முக்கிய அறிவிப்பு

— o —

**நீங்கள் 'கிராம நல'த்திற்கு சந்தாதாரர் ஆக விரும்பினால் :**

"கிராம நலம்" ஆண்டு சந்தாத் தொகையான ரூபாய் 1—50-ஐ, "பொது ஜனத்தொடர்பு அதிகாரி, கிராம நல தலநிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும். அதில் உங்களுடைய முழுத் தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மணியார்டர் கிடைத்ததும், எந்த மாதத்திலிருந்து எந்த மாதம் வரை, உங்களுக்கு "கிராம நலம்" இதழ் அனுப்பப்படும் என்பது பற்றி கடிதம் வரும். அக்கடிதத்தில், உங்களுடைய சந்தா எண் குறிக்கப்பட்டிருக்கும். உங்களுடைய சந்தாவைப் புதுப்பிக்கும்போதும், கடிதம் எழுதும்போதும், இந்த சந்தா எண்ணை, தவறாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

சந்தாத் தொகை "கிராம நலம்" அலுவலகத்தில், மாதத்தில் 15-ம் தேதிக்குள் கிடைக்கப்பெறவேண்டும். அப்பொழுதுதான் 'கிராம நல' அடுத்த மாத இதழ் அனுப்ப சௌகரியமாக இருக்கும். உதாரணமாக நவம்பர் 15 க்குள் சந்தாத் தொகை அனுப்பப்பட்டுவிட்டால் டிசம்பர் மாத இதழ் முதல் அனுப்ப இயலும். ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்படவேண்டியிருப்பதாலும், முதல் வாரத்திற்குள்ளேயே அச்சாகும் பிரதிகளின் தொகை நிர்ணயிக்கப்பட்டு விடுவதாலும், குறிப்பிட்ட தேதிக்குள் சந்தாத் தொகையை அனுப்பி, தங்களுடைய ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

**நீங்கள் உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க விரும்பினால் :**

'கிராம நலம்' அனுப்பப்படும் மேலுறையில் காணப்படும் உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, "கிராம நலம்" ஆண்டு சந்தாத் தொகையான ரூபாய் 1—50-ஐ, மேலே குறித்த முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பிவையுங்கள். மணியார்டரை, சந்தா காலம் முடிவதற்கு முன்னதாகவே, அனுப்பினால்தான் 'கிராம நலம்' தொடர்ந்து கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

பங்களூர், கோலார், தும்கூர், மண்டியா, மைசூர் ஆகிய ஜில்லாக்களில் பயிராகிற "பங்களூர் நீலம்" பழ ரசத்துக்குப் பொருத்தமாக இருக்கிறது. பிற ரகங்களைவிட நெடுநாட்கள் கெட்டுவிடாமலிருக்கும் தன்மை வாய்ந்தவை இவை.

—(o)—





# புதியதோர் உலகு செய்வோம்

### மேலநீலிதநல்லூர் பஞ்சாயத்து யூனியனில் மாதர் சங்கங்களின் ஆக்கப்பணிகள்

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலூகா மேலநீலிதநல்லூர் பஞ்சாயத்து யூனியன் 25 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. இந்த யூனியனில் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், மாதர் நலக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் மூன்று பெண்கள் அங்கம் வகிக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் இருபது மாதர் சங்கங்கள் பணியாற்றுகின்றன. இந்த வட்டாரத்தில், மாதர்நலப் பயிற்சி முகாம்கள், குழந்தைகள் கண்காட்சிகள், குழந்தைகள் திலைவிழாக்கள், சுற்றுலாக்கள், பெண்கள் தொண்டர் படை பயிற்சி முகாம்கள் பல நடைபெற்றுள்ளன. சமுதாய நலத்திட்டம், ஐந்தாண்டுத் திட்டம், பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அமைப்புகள், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் முதலியன பற்றி, மாதர்களுக்கு போதிக்கப்படுகிறது. தையல் வேலை, கதர்நூல் நூற்றல், பின்னல் வேலை முதலிய கைத்தொழில்களோடு, சமையல் கலை, குழந்தை வளர்ப்பு, சுகாதாரம் போன்ற கலைகளும் கற்பிக்கப்படுகின்றன. இருபது மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, செம்மையாக செயல்பட்டு வருகின்றன.

### தையல் வேலை பயிற்சி

மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களின் பெயர்கள் பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. | மேலநீலிதநல்லூர் | 2. | இலந்தக்குளம் |
| 3. | குருக்கன்பட்டி | 4. | வடக்குபனவடல் |
| 5. | மேஜியாபுரம் | 6. | தேவர்குளம் |
| 7. | மேலஇலந்தக்குளம் | 8. | பன்னிருத்து |
| 9. | கண்டன்குறிச்சி | 10. | மூவிருந்தாளி |
| 11. | தடியாபுரம் | 12. | கோமருதப்புரம் |
| 13. | பெரிய கோவிலான் குளம் | 14. | நடுவக்குறிச்சி |
| 15. | வென்றிலிங்கபுரம் | 16. | சருமத்தூராணி |
| 17. | சேர்ந்தமரம் | 18. | வெள்ளாளன்குளம் |
| 19. | வேலப்பநாடானூர் | 20 | தன்னூத்து |

மேலே கண்டுள்ள கிராமங்களில் உள்ள இருபது மாதர் சங்கங்களுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தையல் வேலை செய்வதில், பல மாதர்கள் பங்கு கொண்டுள்ளார்கள். தையல் வேலையுடன், நூல் பின்னல் வேலை, பாசிப் பின்னல் வேலை, பாக்கட்டுகள் தைத்தல் முதலியனவும் நடைபெறுகின்றன. தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லா மாதர் சங்கங்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் மூலம், துணிகளும் நூல்களும் பூவேலைப்பாடுகளுக்குத் தேவையான துணிகள், கலர் நூல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலஇலந்தக்குளம் கிராமத்தில், பெண்கள் தையல் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் தையல் பயிற்சி நிலையத்தை 22–2–63-ல் தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் திரு எஸ். செல்லப்பாண்டியன் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த வட்டாரத்தில் பெண்கள், பனை நார் பெட்டிகள் முடையும் தொழிலில் ஈடுபட்டு உள்ளார்கள். பெண்கள் கவர்ச்சியான கலர் நார்பெட்டிகள் முடைகிறார்கள். பனைநார்பெட்டி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, இந்த வட்டாரத்தில் தேவர்குளம் கிராமத்தில் செயல்பட்டு வருகிறது.

### குடும்பக் கட்டுப்பாட்டின் நன்மை

பெண்களுக்கு குடும்பக்கட்டுப்பாட்டினால் ஏற்படும் நன்மைகள், மகிழ்ச்சி, வாழ்க்கை வசதி, ஆரோக்கியம் முதலியன பற்றியும், குழந்தைகளை நாட்டிற்கு நல்லவர்களாக, பண்போடு கல்வி அறிவு ஆற்றல் படைத்தவர்களாக வளர்க்கவும் வழிவகைகள் செய்யப்படுகின்றன. சிறு சேமிப்பு திட்டம் பற்றியும் கூறப்படுகிறது.

மாதர் சங்கங்களில், பெண்கள் அடிக்கடி கூடி மாதர்களின் முன்னேற்றம் பற்றிய திட்டங்களைப்பற்றி ஆலோசனை செய்கிறார்கள். கோரிக்கைகளைக் கூறுகிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம், சமுதாய நலத்திட்டம் சம்பந்தமான அரசாங்க வெளியீடுகளைப் படித்து, தங்கள் ஓய்வு நேரங்களை நல்லபடியாக கழிக்கிறார்கள். சமுதாய நலத்திட்டம் மூலமாக, இந்த வட்டாரத்தில், மாதர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

[தமிழ் நாட்டில் பல பஞ்சாயத்துக்களில் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு சிறந்த பணியாற்றி வருகின்றன. உங்கள் ஊர் மாதர் சங்கத்தின் ஆக்கப் பணிகளைப் பற்றி, சுருக்கமாக, தெளிவாக எழுதி அனுப்புங்கள். மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்—ஆசிரியர்.]



— ஞாப பஷா " காந்தி வாழ்க்கை ".

# தமிழ்நாடு அரசாங்கம்

———(o)———

## புதிய அமைச்சரவை

**திரு எம். பக்தவத்ஸலம்,** *முதலமைச்சர்.*

*பொதுத்துறை, ரெவினியூ போர்டு, மாவட்ட ரெவினியூ பணியாளர் உட்பட பொது நிர்வாகம், திட்டம், நிதி, கல்வி, தொழிலாளர், சட்டப் பேரவை, தேர்தல்கள், அறநிலையங்கள், ஆட்சிமொழி.*

**திரு ஆர். வெங்கட்ராமன்,** *தொழில் அமைச்சர்.*

*தொழில்கள், வாணிகவரிகள், தேசியப் போக்குவரத்து, தொழில் நுட்பக் கல்வி, மின்சாரம், வீட்டு வசதி, கைத்தறி, நூல், ஜவுளி, சுரங்கங்களும், கனிப்பொருள்களும், இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, விலைகள் பண்டக வழங்கு சட்டம், கம்பெனிகள், காகிதக் கட்டுப்பாடு, ஓய்வு பெற்ற பணியாளர், சீட்டு அமைப்புச் சட்டம், போக்குவரத்து.*

**திரு பி. கக்கன்,** *உள்துறை அமைச்சர்.*

*போலீஸ், விவசாயம், சிறு பாசனம், கால்நடைப் பராமரிப்பு, அரிஜன நலம், மதுவிலக்கு, பூதானமும் கிராமதானமும்.*

**திரு வி. ராமையா,** *பொதுப்பணி அமைச்சர்.*

*பொதுப்பணிகள், ரெவினியூ, கடன்வழங்கு அமைப்புமுறை (கிராமக் கடன்கள்), எடை அளவு அமைப்பு முறை, இந்தியக் கடல் போக்கு வரத்து, அகதிகளும் வெளியேற்றப்படுவோரும், வெளிநாட்டுப் பயண அனுமதிகள், துறைமுகங்கள்.*

**திருமதி ஜோதி வெங்கடாசலம்,** *சுகாதார அமைச்சர்.*

*பொது சுகாதாரமும், மருத்துவமும், மாதர்-குழந்தைகள் நலன், அனாதை இல்லங்கள், வீட்டுவசதிக் கட்டுப்பாடு, பிச்சைக்காரர், சினிமா சட்டம்.*

**திரு என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்,** *உணவு அமைச்சர்.*

*உணவு, கூட்டுறவு, நீதிமன்றங்கள், காடுகளும் சிறைகளும், கதர்-கிராமத் தொழில்கள்.*

**திரு ஜி. பூவராகன்,** *செய்தி விளம்பர அமைச்சர்.*

*செய்தி, விளம்பரம், பதிவு, எழுதுபொருள், அச்சு, அரசாங்க அச்சகம், சிறைகள், அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளும் உஷார் விடுதிகளும், மீன்வளம்.*

**திரு எஸ். எம். ஏ. மஜீது,** *தல நிர்வாக அமைச்சர்.*

*நகரமன்ற நிர்வாகம், சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்துக்கள்.*

# நேரு வாழ்கவே!

**தேவிதாசன்**

நேரு மாமா நல்லவர்—இங்கே
யாரும் போற்ற வல்லவர் !
தந்தை போலே படித்தவர்—தியாகச்
சிந்தை யால்பேர் எடுத்தவர் !
சொல்லைச் செயலில் காட்டுவார்—இதழில்
முல்லைச் சிரிப்பைக் கூட்டுவார் !
காந்தி வழியை மதிப்பவர்—புவிச்
சாந்திக் கொள்கை விதிப்பவர் !
வீரச் சரிதம் பெற்றவர்—தொண்டில்
நேரம் கழிக்கக் கற்றவர் !
ஆட்சி செய்யப் பிறந்தவர்—மக்கள்
மாட்சிப் பணியில் சிறந்தவர் !
சீரில் வளர்ந்த பெரியவர்—சீனப்
போரில் வெல்ல உரியவர் !
நேசம் மனத்தில் சேர்ப்பவர்—பிறந்த
தேசம் தன்னைக் காப்பவர் !
பார தத்தாய் புதல்வராம்—இந்த
பார தத்தின் முதல்வராம் !
நேரு மாமா வாழ்கவே—பண்பின்
மேரு போன்றார் வாழ்கவே !

(குழந்தைகள் பாட்டு)

# நூல் நயம்

## ‘எலும்பு உரச் செல்வம்’

*ஆசிரியர் :* *சதிஷ் சந்திரதாஸ் குப்தா.*

*தமிழாக்கம் : சீனு ரா. இராமசுப்பு, காந்தி நிகேதன் ஆசிரமம்.*

*வெளியீடு : காந்தி நிகேதன் ஆசிரமம், கல்லுப்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம்.*

*விவசாய உற்பத்திக்கு உரம் அவசியம். ரசாயன உரங்கள் தான் உபயோகிக்கவேண்டும் என்ற தேவையற்ற கவர்ச்சிக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் ஆட்படக் கூடாது. அங்கே உரங்கள் கிடைக்கும் வகையில் நாம் பாடுபடவேண்டும். இந் நிலையில், இறந்த பிராணி களின் உபயோகம் மிகவும் முக்கியமானது. எலும்பு உரத்தின் பெருமையை இந் நூலாசிரியர் அழகாக விளக்கி யுள்ளார். அத்துடன், எலும்பு உரம் பற்றிய விவரங் களும். நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்குப் பயன் தரத்தக்க நூல்.*



# கேள்வியும் பதிலும்

## கிராமக் கைத்தொழில்

**காரைக்கால் பகுதி : தளத் தெரு, கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி.—***மண்பாண்டத் தொழிலுக்கேற்ற புதுமுறைச் சக்கரம் எங்கு கிடைக்கும் ? என்ன விலை ? தனி நபருக்குக் கிடைக்குமா ? கூட்டுறவுச் சங்கம் மூல மாகத்தான் கிடைக்குமா*

**பதில்.—***மண்பாண்டத் தொழிலுக்கேற்ற புதுமுறைச் சக்கரம் தனி நபருக்குக் கிடைக்கும். இது பாதி விலைக்கு விற்கப்படுவதற்கான வசதியும் செய்யப் பட்டுள்ளது. இந்தப் பாதி விலையையும், தவணை யாகச் செலுத்தவும் வசதியுள்ளது. இதைப் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்கள் மூலமாகவோ அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ பெறலாம். இல்லையென்றால், அந்தந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியை அணுகி அவர் மூலமாகவும் மண் பாண்டத் தொழிலுக்கான கருவிகளைப் பெறலாம். மேற்கொண்டு இது சம்பந்தமான விவரங்களை அந்தந்த மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி அவர்களை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.*

**கேள்வி.—***எங்கள் கிராமத்தில் பாய் பின்னும் கோரைகள் கிடைக்கின்றன. பாய் பின்னுகிறவர்கள் 10 பேரைக் கொண்டு பாய் பின்னல் தொழில் ஆரம்பிக்க அரசாங்க உதவி கிடைக்குமா ? எவ்வளவு கிடைக் கும் ?*

**பதில்.—***நீங்கள் எண்ணுகிறபடி 10 பேர்களைக்கொண்டு பாய் பின்னும் தொழிலை ஆரம்பிக்கலாம். அந்தப் 10 பேர்களை ஒரு கூட்டுறவு சங்கமாகச் சேர்க்க வேண்டும். இப்படிச் செய்தால் மத்திய கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உங்கள் பாய் பின்னும் கூட்டுறவு சங்கத்துக்கு கடன் மானிய உதவிகள் கிடைக்கும். அந்தந்த வட்டாரத்தில் உள்ள கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியையோ அல்லது மாவட்ட கூட்டுறவு டெபுடி ரிஜிஸ்தராரையோ அணுகினால் தகவல் பெறலாம்.*

**செங்கற்பட்டு மாவட்டம் : நுகும்பல் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி.—***கிராமங்களில் உள்ள சிறு தொழிலாளர்களுக்கு (தச்சு, மண்பாண்டத் தொழில் போன்றவைகளைச் செய்கிறவர்கள்) எந்தந்த இடங்களில் பயிற்சி கொடுக்கப்படுகிறது ?*

**பதில்.—***ஒவ்வொரு வட்டாரத்திலும், பிளாக்கிலும், கருமார், தச்சர் போன்ற தொழிலாளர்களுக்கு பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிலையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழி லாளர்களுக்குப் புது விதப் பயிற்சிகள் கொடுக்கப் படுகின்றன. உதாரணமாக, திருச்சி மாவட்டத்தில் குளித்தலையில் தச்சர்கள், கொல்லர்களுக்குப் பயிற்சி யும், ஆலங்குடியில் மரவேலை செய்வோருக்குப் பயிற்சியும், அரியலூரில் தோல் பதனிடுதல் பயிற்சி யும் தரப்படுகின்றன. இது போலவே, அந்தந்த மாவட்டங்களிலும் பயிற்சிக்கான வசதி உண்டு. இது பற்றி மேலும் விவரங்களுக்கு வட்டார வளர்ச்சி அதி காரியை அணுகவும். அவர் ஆவன செய்வார்.*

**தென் ஆர்க்காடு மாவட்டம் : மருதூர் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி.—***கிராமத் தொழிலாளர்கள் பயிற்சி பெறவும் பயிற்சி பெற்றபின் கூட்டுறவு சங்கம் நிறுவிக் கடன் வசதி பெறவும், எந்த அதிகாரியை யார் மூலம் அணுகவேண்டும் ?*

**பதில்.—***பயிற்சி பெறுவது குறித்தும், பயிற்சிக்குப் பிறகு கூட்டுறவு சங்கங்கள் அமைத்து உதவிகள் பெறவும் தேவைப்படும் விவரங்களை அறிய அந்தந்த ஊர் “கிராம சேவக்”குகளை அணுகினால் போதும். கிராம சேவக்குகள் இம்மாதிரி தொழிற் பயிற்சி பெற்று இருப்பார்கள். அவர்கள் இது குறித்து வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். இதோடு அந்தந்த பஞ்சா யத்து யூனியன் கமிஷனரிடமும் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.*

**கோயமுத்தூர் மாவட்டம் : பள்ளிபாளையம் கிராம வானொலி மன்றம்.**

**கேள்வி.—***சிறு தொழிலுக்குக் கடன் வசதி எந்த விதத் தில் கொடுக்கப்படுகிறது ? எத்தனை நாட்களில் திருப்பித் தரவேண்டும் ?*

**பதில்.—***சிறு தொழில்களுக்குக் கடன் 5, 10 வருட தவணையில் தரப்படுகிறது. இவற்றில் சில கடன் களுக்கு வட்டியும் உண்டு. சில கடன்களுக்கு வட்டி யில்லை. இது குறித்து விவரமாக அறிய, மாவட்ட தொழில் வாணிகத்துறை உதவி இயக்குநர் (District Assistant Director of Commerce and Industries) அலுவலகத்திற்கு எழுதிப் பெறலாம்.*

## கிராமத் தொண்டர் படையில் ஒரு கோடியே 41 லட்சம் தொண்டர்கள் !

கிராமத் தொண்டர் படையில் ஒரு கோடியே 41 லட்சம் தொண்டர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களில் 4 லட்சத்து 56 ஆயிரம் பேர் பெண்கள். இந்தியா முழுவதிலும், ஒரிசா மாநிலத்தில் தான் பெண் தொண்டர்கள் அதிகம். இங்கு 2 லட்சத்து 6 ஆயிரம் பெண்கள், தொண்டர் படையில் சேர்ந்திருக்கிறார்கள்.

“பாதுகாப்பு உழைப்பு பாங்க்”கிற்கு இதுவரை, 5 கோடியே 62 லட்சம் நாட்கள் உழைப்பு தானம் செய்யப் பட்டிருக்கிறது. பணமாக, 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் “பாதுகாப்பு உழைப்பு பாங்”கிற்கு நன்கொடை யாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.



— லூயி பிஷர் “ காந்தி வாழ்க்கை ”.

# கூட்டுறவே நாட்டுயர்வு

## கூட்டுறவுப் போதனைப் பயிற்சித் திட்டம்

இன்றைய சூழ்நிலையில், திட்டமிட்ட கிராமப்புற அபிவிருத்தியில், கூட்டுறவு முறையை வளர்ப்பது நமது தேசியக் கொள்கையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த லட்சியத்தை எய்தும் நோக்கத்துடன், கூட்டுறவு ஸ்தாபன அமைப்பு, கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிரளித்தல், புனரமைப்பு வேலை ஆகியவற்றுக்கான விரிவான திட்டங்களை மத்திய அரசாங்க சமுதாய நல அபிவிருத்தி கூட்டுறவு அமைச்சரகம் வகுத்து, நிறைவேற்றி வருகிறது.

தற்போது, இந்நாட்டில் மொத்தம் சுமார் 180 லட்சம் உறுப்பினர்கள் கொண்ட சுமார் 2·12 லட்சம் விவசாயக் கடன் வசதிக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கிவருகின்றன. மூன்றாவது திட்ட இறுதிவாக்கில், இக்கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 2·40 லட்சமாகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 370 லட்சமாகவும் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தற்போது கிராம, பிராந்திய ஜில்லா அல்லது ராஜ்ய மாவட்டங்களில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு விவசாய சங்கங்கள், கூட்டுறவு மத்திய பாங்கிகள், உச்ச ஸ்தாபன பாங்கிகள், நில அடமான பாங்கிகள் முதலியவை செயல்பட்டு வருகின்றன.

### விசேஷப் பயிற்சி வகுப்புகள்

கூட்டுறவு விற்பனையில் சீனியர் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், விசேஷப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்காகவும், புனாவில் தேசியக் கூட்டுறவுக் கல்லூரி ஆராய்ச்சி நிலையமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக, உத்தியோகச் சார்பற்ற கூட்டுறவுத் துறைப் பிரமுகர்கள் அடங்கிய ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுப் பயிற்சிக்கான இக்கமிட்டி, இதுவரை ஐந்து தனித்தனிப் பயிற்சி வகுப்புகளை நடத்தியிருந்திருக்கிறது. தொழில் துறைக் கூட்டுறவு சங்கச் சிப்பந்திகளுக்காகவும் இரண்டு விசேஷப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்நாட்டிலுள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களிலும், சென்ற ஆண்டு இறுதிவரையில், எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த சிப்பந்திகள் மொத்தம் நாற்பதாயிரம் பேருக்கு மேல் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 1961—62-ல், கூட்டுறவுப் பயிற்சி போதனைத் திட்டங்களுக்காக மத்திய சர்க்கார் 50 லட்சம ரூபாய்க்கு மேல் செலவழித்திருக்கின்றனர்.

கூட்டுறவு உறுப்பினர் போதனைத் திட்டத்தை நிறைவேற்றிவரும் பொறுப்பை தேசியக் கூட்டுறவு யூனியனே தொடர்ந்து வகித்துவருகிறது. கூட்டுறவுப் பயிற்சி பற்றிய அய்யூக் குழு தெரிவித்துள்ள பரிந்துரைகளையொட்டி, இத்திட்டத்தை இந்த யூனியன் திருத்தியமைத்திருக்கிறது. சென்ற ஆண்டு இறுதி வரையில், இத்திட்டத்தின் கீழ், 88,000 கூட்டுறவு சங்க அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது; இதோடுகூட, 16 லட்சம் உறுப்பினர்களும் உறுப்பினர் அல்லாதவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

தேசீயக் கூட்டுறவு யூனியன், ஊர் ஊராகச் செல்லும் கோஷ்டிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் போதகாசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, 1961—62-ல் மூன்று பயிற்சி வகுப்புகளையும் (ஒவ்வொன்றும் இரண்டு மாதம்) நடத்தியது; அதோடுகூட, கூட்டுறவுப் பயிற்சி போதகாசிரியர்களுக்காக இரண்டு புனர் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

### கல்லூரிகளில் கூட்டுறவுப் பாடங்கள்

யூனியன் சமுதாய நல அபிவிருத்தி கூட்டுறவு அமைச்சரகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பட்டம் பெறுவதற்கு முற்கால பிற்காலக் சட்டங்களில், வர்த்தகம், பொருளாதாரம், விவசாயம் ஆகிய பாடப் பிரிவுகளில், கூட்டுறவை ஒரு விருப்பப் பாடமாக வைக்கலாம் என்றும், ஒரு வருட அல்லது இரண்டு வருட கூட்டுறவு டிப்ளொமா வகுப்புகளையும் ஆரம்பிக்கலாம் என்றும், பல்கலைக் கழக மானியக் கமிஷன் பல்கலைக் கழகங்களுக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. பரோடா பல்கலைக் கழகமும், ஆந்திரப் பிரதேசப் பல்கலைக் கழகமும் கூட்டுறவு டிப்ளொமா வகுப்பு ஒன்றையும், கூட்டுறவு எம். ஏ. பட்டப் படிப்பு வகுப்பு ஒன்றையும் ஏற்கெனவே ஆரம்பித்துள்ளன.

இரண்டு கிராம உயர்தரக் கல்வி நிலையங்களும், பட்டம் பெறுவதற்கு முற்கால, பிற்காலக் கூட்டுறவு வகுப்புகளை ஆரம்பித்துள்ளன. உஸ்மானியா பல்கலைக் கழகம் ஒரு வருடப்பட்ட பிற்காலக் கூட்டுறவு வகுப்பு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையைக் கொடுத்துதவ பல்கலைக் கழக மானியக் கமிஷன் ஒப்புக் கொண்டிருக்கிறது.

பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திலும், கூட்டுறவைப் பாடத்தைச் சேர்க்கும் விஷயம் பற்றி, மாநில சர்க்கார்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுவருகிறது. இதில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாடு, மைசூர், ஆந்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய ராஜ்யங்களில் ஹையர் செகண்டரிப் பள்ளிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும், கூட்டுறவுப் பாடம், சமூகப் பாடங்களில், ஒரு கட்டாயப் பாடமாக இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.



# எதிர்பாராதன் நிகழ்ந்தால்...

விபத்துக்கள் அநேகமாக எங்கும் நிகழலாம். வீட்டிலே, பாதையிலே, தொழிற்சாலையில், அலுவலகத்தில், பள்ளிக்கூடத்தில்—எங்கும் விபத்து ஏற்பட வாய்ப்புண்டு. அவை முழுதும் எதிர்பாராமல் நிகழும் என்பதில்லை. சிலருடைய அஜாக்கிரதையின் விளைவால்கூட, அவை நிகழலாம். எச்சரிக்கையுடன் இருப்பதன்மூலம், அவற்றைத் தவிர்க்கமுடியும்.

நாம் எதிர்பாராத தாக்குதலைச் சந்திக்க வேண்டிவரலாம். அத்தகைய நேரங்களில் நம்பிக்கையையும், மன உறுதியையும் இழந்துவிடக்கூடாது. விபத்து முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அங்கு டாக்டர் வந்து சிகிச்சை தொடங்கும் வரையில், நம்மாலானதைச் செய்து, அவர்களுக்கு வசதி செய்யவேண்டும். அத்தகைய அவசர நிலைகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பாக கிராமத்தொண்டர்படை உறுப்பினர்கள் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை அவசியம் அறிந்திருக்கவேண்டும்.

விபத்துக்குட்பட்டவர் அல்லது திடீரென நோயினால் பீடிக்கப்பட்டவருக்கு டாக்டரின் உதவி கிடைக்கும் வரையில், உடனடியாக, தற்காலிகமாகச் செய்யவேண்டிய உதவிகள்தாம் முதலுதவி எனப்படும்.

### முதலில் செய்ய வேண்டுவன

முதலில் நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். விபத்துக்குள்ளான, அல்லது நோயுற்றவரின் நிலை—அவர் அப்போது எந்த நிலையில் உள்ளார் என்பது—மேலும் என்ன காயங்கள் ஏற்படலாம் என்பது—குளிர் அல்லது ஈரத்தினாலும் பாதிக்கப்படுவாரா என்பது முதலியவற்றை, நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

1. காயமடைந்தவரை வசதியான நிலையில் கிடத்தி வைக்க வேண்டும். மிகவும் பலத்த காயம் என்று அறிகிற வரையில், அவருடைய தலையும் உடலும் சம நிலையில் இருக்கும்படி கிடத்தி வைக்க வேண்டும். மயக்கம் வராமல் தடுக்கவும், அதிர்ச்சியடையாமல் காப்பாற்றவும் இது ஒரு தடுப்பு முறையாகும்.

2. அதிகமாக ரத்தம் கொட்டுவது, மூச்சு நின்று விடுதல், காயங்கள், தீப்புண்கள், எலும்புமுறிவுகள் முதலியவற்றை உடனடியாகக் கவனிக்கவேண்டும்.

3. முதலில், அதிகமாக ரத்தம் கொட்டுதல், மூச்சு நின்றுவிடுதல், விஷம் குடித்தல்—முதலியவற்றைக் கவனிக்க வேண்டும்.

4. காயமடைந்தவரைக் கதகதப்பாக வைத்திருக்க வேண்டும். பலத்த அதிர்ச்சியைத் தடுக்க, இது மிகவும் அவசியம். உடலுக்கு வெளிப்புறச் சூடேற்றக்கூடாது. ஆனால் உடலைச் சாதாரண சீதோஷ்ண நிலையில் வைத்திருக்க வேண்டும்.

5. டாக்டர் அல்லது, சிகிச்சை வண்டியை (Ambulance) அழைத்துவர யாரையேனும் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படுபவர், காயமடைந்தவர் இருக்குமிடத்தையும், காயத்தின் தன்மையும், அதற்கான காரணத்தையும், காயத்தின் அளவையும் சரியாக எடுத்துக்கூறத்தக்கவராக இருக்க வேண்டும்.

6. கட்டாயத் தேவை ஏற்பட்டாலொழிய, காயம் அடைந்தவரை இடம் பெயர்க்கக்கூடாது. காயத்தின் தன்மையையும், அளவையும் பற்றித் தெளிவாக அறியும் வரையில், அவரை அசைக்கக்கூடாது.

7. காயமடைந்தவர் உணர்வற்றிருக்கும்போது, தண்ணீரோ, வேறு திரவ உணவோ, குடிக்கக் கொடுக்க முயலக்கூடாது. அவ்வாறு தண்ணீர் கொடுத்தால், அது காற்றுக்குழலில் சென்று மூச்சுத்திணறும்படி செய்யும். காயமடைந்தவர் உணர்வுடனிருந்து, வயிற்றுப்பகுதியில் காயமெதுவும் இல்லை என்று தெரிந்தால், தண்ணீர், மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கலாம்.

8. சூழ்ந்து நின்று வேடிக்கை பார்ப்பவர்கள் சிகிச்சையின் போது அடிக்கடி குறுக்கிடுவார்கள். எனவே, அவர்களை விலகிச்செல்லுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். காயமடைந்தவருக்கு நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும்.

9. நோயாளி தன் காயத்தைப் பார்க்கும்படி விடக்கூடாது. பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தணிக்க வேண்டும்.

### மயக்கம் அல்லது அதிர்ச்சி....

பலத்த காயங்களுக்குப் பின்னால் உணர்வற்ற நிலை ஏற்படும். அது வெறும் மயக்கமாகவும் இருக்கலாம்; அல்லது சாகின்ற நிலையாகவும் இருக்கலாம். பலத்த



— லூயி பிஷர் " காந்தி வாழ்க்கை ".

காயங்களுக்குப் பின் ஏற்படும் இந்த மயக்கம், மின்சார முதலான அதிர்ச்சிகளிலிருந்து வேறுபட்டதாகும். பெரிய அளவில், வெளியே அல்லது உட்புறத்தில் இரத்தம் இழப்பதால் இந்த மயக்க நிலை ஏற்படுகிறது.

உடல் மேல்தோல் வெளுத்துவிடுதல், சில்லிட்டுவிடுதல், நனைந்துவிடுதல், கண்மணிகள் விரிந்துவிடுதல், நாடி அடங்கி விரைவாகத்துடித்தல், ஒழுங்கின்றி மூச்சு விடுதல் தொடர்ந்து வாந்தி எடுக்கும் அறிகுறிகள் தோன்றுதல் முதலியன மயக்கநிலை அல்லது அதிர்ச்சிக்கு அடையாளங்களாகும்.

செய்ய வேண்டியன—

மயக்க நிலையைப் போக்குவதை விட, வாராமல் காத்தல் எளிது.

1. கால்களை உயரத்தில் இருக்கும்படி நோயாளியைப் படுக்க வைத்திருக்க வேண்டும். அந்த நிலையில் படுக்க வைப்பது. மிகுதியாக இரத்தம் தேவைப்படுகின்ற தலை, மார்பு ஆகிய பகுதிகளுக்கு இரத்தம் செல்ல உதவியாக இருக்கும்.

2. கால்களைச் சற்று உயர்த்தும்பொழுது வலி ஏற்படுவதாக நோயாளி சொன்னாலோ, மூச்சுத்திணறல், அல்லது தலையில் காயம் இருந்தாலோ அவ்வாறு கால் பகுதியை உயர்த்தி வைக்கக்கூடாது.

3. நோயாளியைக் கதகதப்பாக வைத்திருக்க வேண்டும். கம்பளி அல்லது ஜமுக்காளம் போர்த்தி வைக்க வேண்டும். வெந்நீர்பாட்டில் முதலியவற்றால் ஒத்தடம் கொடுப்பதன்மூலம் சூடேற்றக்கூடாது.

# அறிவிப்பு

சில பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து டைரி பிரதிகள் கேட்டு, நேரடியாகக் கடிதங்கள் எழுதுகின்றனர். பஞ்சாயத்து டைரி, ஒரு பிரதி கூட, கைவசமில்லை. பஞ்சாயத்து டைரிகள், முன்பே, எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கும் விநியோகம் செய்வதற்காக, அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன. டைரி கிடைக்கப் பெறாதவர்கள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம்.

கிராம அபிவிருத்திக் கமிஷனர்

4. உணர்வற்ற நிலையில் இருக்கும்போது குடிக்க ஒன்றும் கொடுக்கக்கூடாது. உணர்வுடன் இருந்தால், கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீரோ அல்லது சூடான தேநீரோ கொடுக்கலாம்.

5. நோயாளியை இடம் பெயர்க்கக்கூடாது. ஏனெனில், அதிர்ச்சி மிகுதியாகலாம்; காயத்திலிருந்து இரத்தம் அதிகமாக வெளியேறலாம்.

6. இரத்தம் கொட்டுவதை முதலில் நிறுத்த வேண்டும். கொதிநீரில் போட்டு சுத்தம் செய்த மெல்லிய சல்லாத் துணி (Sterile Gauze) அல்லது சுத்தமாக இருக்கும் கைக்குட்டையை காயத்தின் மேல் வைத்து, கெட்டியாய் அழுத்திப்பிடித்து இரத்தம் வருவதை நிறுத்தவேண்டும்.

7. உடனே மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



பூலாநந்தபுரம் கிராமத் தொண்டர் படையினர் பள்ளிக்கட்டிடம் கட்டுகின்றனர்.

## தீப் புண்கள் !

தீ விபத்தினால் புண் ஏற்பட்டவருக்கு, நோவைக் குறைக்கவும், மயக்கம் நேராமலும், தொத்தும் தன்மையிலிருந்தும் காப்பாற்றவும் முயல்வதே முதலுதவியாளரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

தீப்புண்கள் லேசானதாக இருந்து, தோல் கழன்று பெரிதாக இல்லை என்றால், எரிச்சலைத் தணிப்பதற்கு, சுத்தமான களிம்பு எதையும் பூசலாம், காயத்தை, கொதிநீரில்சுத்தம் செய்த மெல்லிய சல்லாத் துணியினாலோ அல்லது சுத்தமான கைக்குட்டையினாலோ மூட வேண்டும்.



தீப்புண் ஆழமானதாகவும், தோல் மிகவும் பாதிக்கப்படும் இருப்பின் காயம் அடைந்தவரைப் படுக்க வைக்க வேண்டும்.

அவருக்கு குளிர் எடுக்காமல் பாதுகாக்க வேண்டும். அவரைக் கதகதப்பாக வைத்திருப்பதுடன் குடிக்க, கொஞ்சம் கொஞ்சமாக, சூடான தேநீர் அல்லது தண்ணீர் கொடுக்கவேண்டும்.

காயத்தை சுத்தமான துணியினால் மூடவேண்டும். கொப்புளங்கள் எழும்பியிருந்தால் லேசாகக் கட்டு போட வேண்டும். கொப்புளங்களை உடைக்கக்கூடாது.



திருச்சியில், 17—9—63-ல், ஹரிஜன விடுதியை, திரு. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார். அவ்வமயம், பஞ்சாயத்துத் தலைவர் ஒருவரிடம் வானொலிப் பெட்டி ஒன்றினை அன்பளிப்பாக அளிக்கிறார்.

## எலும்பு முறிவு

எலும்புமுறிவு என்பது எலும்பு உடைதல் அல்லது எலும்பில் ஓட்டை விழுதலாகும். எலும்பு உடைந்த இடத்திற்கு நேராகக் காயம் இருந்தால் அந்த முறிவு 'திறந்த அல்லது சிக்கலான முறிவு' எனப்படும். முறிந்த இடத்தில் அத்தகைய காயம் எதுவுமில்லை என்றால் அந்த முறிவு 'மூடிய அல்லது சாதாரண முறிவு' எனப்படும்.

எலும்பு முறிவைக் கண்டறியும் போது, மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பயிற்சியின்றி, எலும்பு முறிவான இடத்தைக் கையாளுதல் நிலைமையை மோசம் ஆக்கும். எலும்பு முறிவைக் கண்டறிய, முறிந்த உடலுறுப்புடன் முறிவு ஏற்படாத பகுதியை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

சில அறிகுறிகள்—

(1) முறிந்த இடத்தில் அல்லது அருகில் வலி எடுத்தல்.

(2) காயமடைந்த பகுதியை எளிதில் அசைக்க முடியாமலிருத்தல்.

(3) முறிவேற்பட்ட பகுதி இயல்புக்கு மாறான நிலையில் இருத்தல்.

(4) முறிவு ஏற்பட்ட இடத்தில் இயல்புக்கு மாறான அசைவு.

செய்ய வேண்டியன—

முறிவு ஏற்பட்டவரை வசதியாக இருக்கச் செய்ய வேண்டும். காயம் அடைந்த பகுதியை அசைக்கக் கூடாது. காயமடைந்தவரை, அந்த இடத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டியிருப்பின் முறிவேற்பட்ட பகுதிக்கு 'பத்தை' வைத்துக்கட்டியபின் எடுத்துச்செல்ல வேண்டும். (முறிவு ஏற்பட்ட பகுதி நேராக அமைய ஏதாவது ஒன்றை 'பத்தை'யாகப் பயன்படுத்தலாம்.)

இரத்தம் கொட்டினால் உடனே அதை நிறுத்த வேண்டும். முதுகெலும்பு முறிந்ததாகத் தெரிந்தால், காயமடைந்தவரை இடம் பெயரச் செய்யக்கூடாது. உடனடியாக, மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நன்றி : " Madras Health Education ",

## ஆத்மாவின் கட்டளை

"காந்திஜி சிறைப்பட்டிருந்த ஒரு சமயத்தில், உடனிருந்த கைதி ஒருவரைத் தேள் கொட்டி விட்டது. காந்திஜி அந்த விஷத்தை வாயால் உறிஞ்சி எடுத்து விட்டார். பர்சுரே சாஸ்திரி என்பவர் ஒரு குஷ்டரோகி; சமஸ்கிருத பண்டிதர்; சேவாக்கிராம ஆசிரமத்தில் தம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டாராம். ஆசிரமவாசிகள் சிலர் இதை ஆட்சேபித்தார்கள். இது தொத்து நோய் என்று அவர்கள் பயந்தார்கள். காந்திஜி அவரை ஆசிரமத்தில் ஏற்றுக்கொண்டார். அது மட்டும் அல்ல; அவருக்கு உடம்பு பிடித்தும் விட்டார். ராஜ்கோட் சமஸ்தான மக்களின் பிரஜா உரிமைகளுக்காக 1939 மார்ச் மாதத்தில், சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கக் காந்திஜி தொடங்கினார். அவர் சின்னப் பையனாக இருந்தபோது பள்ளியில் படிக்கச் சென்றது அங்கேதான். உபவாசம் வேண்டாம் என்று மகாத்மாவை டாக்டர்கள் தடுத்துப் பார்த்தார்கள். ஏனென்றால், " மையோ கார்டைட்டிஸ்"—அதாவது இருதயத்தில் சதைகள் வீங்கியோ தடித்தோ போகிற நோய்—அவருக்கு ஏற்பட்டிருப்பதன் சின்னங்கள் தோன்றின.

ஆனால், ஆத்மாவுக்கு உடம்பை அடங்கியிருக்கச் செய்வதே, காந்திஜியின் தத்துவம். அந்நோக்கில் ஒரு காரியத்தைச் செய்வது அவசியமாகும்போது, அதை நிராகரிக்கும் உரிமை உடம்புக்கு இல்லை; நலிந்தாலும், துன்புற்றாலும், செத்தாலும்கூட, ஆத்மாவின் கட்டளையை அது மறுக்கக் கூடாது. காந்திஜியின் சமாதான வாதத்தின் மூலாதாரம் இதுவே."

—லூயிபிஷர் " காந்தி வாழ்க்கை."



— லூயி பிஷர் " காந்தி வாழ்க்கை ".

கண்டதும் கேட்டதும்

ஆசிரியர்

கிராம நலம்

## வளர்ந்துவரும் மதுரை மாவட்டம்

" மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை "—என்பது

பாரதியார் வாக்கு. பழம் பெருமையுடன், புதுப் புகழும் ஒன்று சேர்வது, பொன்மலர் மணம் பெறுவது போலாகும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நன் நாடு, இப்போது, புதிய புகழுக்கும் இலக்காகி வருகிறது. மதுரையில், புதிய பல்கலைக் கழகம் நிறுவும் முயற்சி நடப்பது யாவரும் அறிந்ததே.

### பாண்டியநாடு காட்டிய புதிய பாதை

வைகை அணைத் திட்டம், மஞ்சளாறு திட்டம் முதலியன, இங்கு வாழும் மக்களின் வாழ்வில் வளம் ஏற்பட வழி செய்கின்றன. அத்துடன், அண்மையில், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி வரலாற்றில், ஒரு புதிய படலம் ஆரம்பமாகியுள்ளது. கிராமப் பிரதேசங்களிலுள்ள இயற்கை வளம், மனித சக்தி, தொழில் நுணுக்கத் திறன், நிதி முதலீடு முதலியவற்றை, ஒன்று திரட்டவும், அரசியல் கட்சி வேறுபாடுகளில்லாமல், தொழில் வளர்ச்சிக்கான முயற்சிகளில் தீவிரமான நடவடிக்கை எடுக்கவும் பாண்டியநாட்டைச் சார்ந்த ராமநாதபுரம் மாவட்டம், 1963–ம் ஆண்டு ஜூலை மாதம் 15–ந் தேதியில் புது வழிகாட்டியுள்ளது. இத்துறையில், அரசாங்கத்தின் சார்பாக, மாவட்டக் கலெக்டரும், அமைச்சர்களும், மற்ற தொழில் பிரமுகர்களும் மேற்கொண்ட விசேஷ சிரத்தை குறிப்பிடத்தக்கது. அதையடுத்து, மதுரை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கான கருத்தரங்கு 1963–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந் தேதியில் நடைபெற்றது. தனியார் துறை, அரசாங்கத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த, எல்லா முக்கிய பிரமுகர்களும், இதில் பங்கெடுத்துக்கொண்டனர். பொருளாதார முன்னேற்றத்துக்கான ஆக்க வழிகளில் மக்களின் கவனத்தைத் திருப்ப, இந்தக் கருத்தரங்குகள் பெரிதும் துணைபுரிந்துள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் கலெக்டரின் நேரடிப் மேற்பார்வையில் தொகுக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ளன. இது மிகவும் போற்றத்தக்க முயற்சியாகும்.

### அறிவொளி பரப்பும் பணியில்....

மதுரையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில், திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் உள்ள "செய்தி நிலைய"த்தையும், 'அச்சம் பத்து' என்ற பஞ்சாயத்தில் இயங்கிவரும் 'கிராம வானொலி மன்ற'த்தையும் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. செய்தி நிலையத்தில், பயனுள்ள விவரங்கள், அழகான முறையில் விளக்கப்பட்டிருந்தன. சிறப்பாக, "கிராமத் தொண்டர்படை "யின் அலுவல்களை விளக்கும் படங்கள், சிறந்த முறையில் அமைந்திருந்தன. 'அச்சம்பத்து' பஞ்சாயத்துத் தலைவர், அந்த ஊரின் பெயருக்கான காரணத்தைப் பற்றி, மக்களிடையே கர்ண பரம்பரையாக வழங்கிவரும் செய்தியை விரிவாக எடுத்துரைத்தார். நமது பண்டைக் கால வரலாறுகளையும், இலக்கியச் செல்வங்களையும், சாதாரண மக்களிடையே தொன்றுதொட்டு வழங்கிவரும் கதைகளையும், சேகரித்து வைக்கவேண்டியது, மிகவும் அவசியமாகும். உதாரணமாக 'திருப்பரங்குன்றம்' செய்தி நிலையத்தில், சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள பத்துப்பாட்டில் ஒன்றான "திருமுருகாற்றுப் படை"பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வைத்தல் நலம்.

### வளம் கொழிக்க வைக்கும் வைகை நதித் திட்டம்

மதுரையம்பதியைக் கடந்து மேற்கே சென்றால், பெரும்பாலான நிலப்பரப்பு, கட்டாந்தரையாகக் காட்சி அளிப்பதைக் காணலாம். போடிநாயக்கனூர் செல்லும் சாலையில், சில மைல்களுக்கப்பால் சென்றதும், நிலப் பரப்பின் காட்சியே மாறுகிறது. பொட்டல் காடாக இருந்த நிலத்தில், பசுமையான பயிர் பூத்துக்குலுங்குவதைக் காணலாம். இந்த மாறுதலுக்கு வைகை அணைத் திட்டமே காரணம். கடலை, கரும்பு, நெல், முதலியன இங்கு நன்றாக சாகுபடி செய்யப்படுகின்றன. இங்குள்ள பல கிராமங்களுக்கு மின்சார வசதியும் கிடைத்துள்ளது. பல பம்பு செட்டுகள் இயங்கிவருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வளமுள்ள இடங்களும், வசதிகள் குறைவாகவுள்ள பிற்போக்கான இடங்களும் உண்டு. இவற்றுள் வளமுள்ள இடங்களில், அபிவிருத்தி வேலைகள் நன்கு நடைபெறுவதில் ஆச்சரியமில்லை. இயற்கை வசதிகள், மிகவும் பிற்போக்காக உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெறும் முன்னேற்ற வேலை விசேஷ ஆராய்ச்சிக்குரியது. இந்த நோக்கத்துடன், மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனைப் பார்க்கச்சென்றேன்.

### ஆண்டிப்பட்டி யூனியனின் ஆக்கப்பணிகள்

ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 'கன்னியப்பப் பிள்ளைப்பட்டி' என்ற கிராமத்தில் அநேக

[25-ம் பக்கம் பார்க்க]





1



2



3

1. மதுரை-பெரியகுளம் பாதையில் கிராமத் தொண்டர்படையினர், சொளத்துப் பட்டிக்கு இணைப்புப் பாதை அமைத்தல்.

2. பெரியகுளம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த தேவதானப் பட்டிக்கு சமீபம், 18—9—1963-ல், மஞ்சளாறு அணைக்கட்டுத் திட்டத்தை, திரு. காமராஜ் துவக்கி வைத்தார்.

3. மதுரை மாவட்டத்தில், வரதராஜபுரம்-தெப்பட்டிக்கு கிராமத் தொண்டர் படையினர் பாதை அமைக்கின்றனர்.

— லூயி பிஷர் " காந்தி வாழ்க்கை ".







## சரித்திர நிகழ்ச்சிகள்

1. தமிழ் வளர்த்த மதுரையம்பதியில், 27—9—63-ல், பாரதத்தின் ஜனாதிபதிக்கும், திரு. காமராஜ் அவர்களுக்கும் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் "பரிவட்டத்துடன்" வரவேற்பு அளிக்கப்பட்டது.
2. காந்தி ஜெயந்தி தினத்தில் (2—10—63) சென்னை கோட்டையில், புதிய முதலமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்.
3. புதிய அமைச்சரவை கவர்னருடன்—(வெளிநாடு சென்று திரும்பிய திரு. ஆர். வெங்கட்ராமன் 23—10—63-ல் பதவி ஏற்றார்).
4. சென்னை கோட்டை தலைமை அலுவலகத்தில், திரு. காமராஜ், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் செயலாளர்கள், கூட்டுச்செயலாளர்களுடன் காணப்படுகிறார். (திரு. காமராஜ் அவர்களின் கடைசி அரசாங்க அலுவல் தினமான 30—9—63-ல எடுக்கப்பட்ட படம்.)
5. ஏழை எளியோர்களின் மத்தியிலே மக்கள் தலைவர் திரு. காமராஜ்: முதலமைச்சராக இருந்தபொழுது, விதிகளுக்குக் கட்டுப்பட்டு, அதிகாரிகளின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமானார். அதுமட்டுமன்றி, மக்களுடைய குறைகளை பொறுமையுடன் கேட்டு, அவற்றைத் தீர்ப்பதே தம் லட்சியமாகக் கொண்டவர். "அவருடைய பதவி துறவு, மகான் புத்தருடைய துறவுக்கு ஒப்பானதாகும்"—டாக்டர் மு. வ.


4


5




1\. திருச்சி மாவட்டம், அந்தநல்லூர் பஞ்சாயத்து யூனியன், ஜீயபுரம் மாதர் தையல் பயிற்சி நிலையம்.



2\. மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன், "செய்தி நிலையம்."



3\. மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி, பஞ்சாயத்து யூனியன், வரதராஜபுரம் இராமத் தொண்டர் படையினரின் மாதாந்திரக் கூட்டம்.

[illegible] " காந்தி வாழ்க்கை ".

[?-ம் பக்கத் தொடர்ச்சி]

அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருப்பதைக் கண்டேன். பஞ்சாயத்துத் தலைவர் திரு சுப்பையா கவுண்டர் கிராம மக்களுக்குத் தேவையான பள்ளிக் கட்டடம், குடி தண்ணீர்க் கிணறுகள், முதலியன அமைத்துள்ளார். கூட்டுறவுக் கடன் யூனியன் (விவசாய பாங்குக்குப் பதிலாக) ஒன்று, கடந்த மூன்றாண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டு, சிறந்த முறையில் நடந்துவருகிறது. மரங்களை வைத்து பராமரிக்கும் திட்டம், பஞ்சாயத்து மூலம் செயல்பட்டுவருகிறது. பள்ளிக்கூடத்தில் மதிய உணவுத் திட்டம் சிறந்த முறையில் நடைபெறுவதை, நேரில் கண்டேன்.

இந்தக் கிராமத்தைச் சார்ந்த வரதராஜபுரம் என்ற சிற்றூரில், மாதந்தோறும் ஊர்ச்சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெறுவதை அறிந்தேன். சுமார் 200 குடும்பங்கள் கொண்ட இந்தக் கிராமம், குத்துராயபெருமாள் மலை, வேலையப்பர்கோயில்மலை ஆகியவற்றின் அடிவாரத்தில், இரண்டு கண்மாய்களுக்கு மத்தியில் அமைந்திருப்பதால், இதற்கு ரஸ்தா வசதி இல்லை. எனவே, கண்மாயில் தண்ணீர் வந்துவிட்டால், சுற்றுவழியாக சுமார் 7 மைல் கடந்து ஆண்டிப்பட்டிக்குப் போக வேண்டியிருக்கிறது. பிரசவகால உதவி, தானிய விற்பனை முதலியவற்றுக்கும் அதிக அசௌகரியங்கள் உள்ளன. இங்குள்ள கிராமத் தலைவர்களுள் முக்கியஸ்தர்களான திருவாளர்கள் சாமிநாதன், துரைராஜ், கதிரைய கவுண்டர், ஆங்கத்தேவர், ராமசாமி ஆசாரி, பெத்தன் மூலியவர்கள் ஒன்று சேர்ந்து, ரஸ்தா போடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்துக்கு எவ்விதச் செலவுமின்றி, வீட்டுக்கு ஒருவர் உழைப்பதன் மூலம், பொறுப்பைப் பகிர்ந்துகொண்டு, மண் ரோடு அமைக்கும் வேலையைத் தொடங்கி நடத்திவருகின்றனர். இவர்களின் கூட்டுமுயற்சி விரைவில் வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை.

பி. ஏ. பட்டம் பெற்ற ஓர் இளைஞரின் (திரு ஏ. திருவேங்கடசாமி) தலைமையில் நடைபெறும் இந்த யூனியன், பல்வேறு துறைகளிலும், நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. யூனியன் அங்கத்தினர்களான பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும் சிறந்த முறையில் ஒத்துழைத்து, கிராம நல வேலைகளை உற்சாகத்தோடு நிறைவேற்றுகின்றனர்.

வைகை அணைக்கும், பெரியாறு நீர்த்தேக்கத்துக்கும் செல்வோர், ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைக் காணத் தவறமாட்டார்கள். எனவே, பஞ்சாயத்து யூனியன் செய்தி நிலையங்களில், அந்தந்த யூனியனைப் பற்றிய விவரங்கள் அனைத்தும், மேலும் கவர்ச்சிகரமான முறையில் வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள், அதற்கு முக்கிய காரணமாக உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோரைப் பற்றிய படங்களை 'செய்தி நிலைய'த்தில் வைத்திருத்தல் நலம்.

### கேப்டன் மணி—சீரிய பணியாற்றும் தொண்டர்

மதுரை மாவட்டத்தில் நான் கவனித்த மற்றொரு முக்கிய நிகழ்ச்சி, கிராமத் தொண்டர் படைப் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதாகும். திருப்பரங்குன்றத்தில், யூனியன் தலைவர் சின்னக்கருப்பத்தேவர், M.L.A., அவர்களின் உற்சாகத்தால் தொடங்கப்பட்ட இந்த பயிற்சி இயக்கம், இப்போது பல இடங்களிலும் பரவி வருகிறது. இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு அல்லும் பகலும் ஓயாது உழைப்பவர், கேப்டன் R. P. மணி, என்ற இளைஞராவார். ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு இவர் பயிற்சி அளித்துள்ளார். ராணுவத்தில் பல ஆண்டுகள் சேவை செய்த இவர், கிராம மக்களுக்கு தனது அனுபவ அறிவை, பயிற்சி அளிப்பதன் மூலம் பயன்படுத்தி வருகிறார். சிறப்பாக, பெண்களுக்கும் இவர் பயிற்சி அளித்து வருவது குறிப்பிடத்தக்க புதிய முயற்சியாகும். ஐம்பது வயதுக்கு மேற்பட்ட மாதரும் இவர் அளிக்கும் பயிற்சியின்பலனால், வீர நடைபோட்டு, மாதர் அணியில் பங்குபெறும் சிறப்பு, நேரில் கண்டு களிக்கத்தக்கதாகும். கிராமத் தொண்டர் படையில் மேலும் தீவிரமாகப் பணிபுரிய உதவும் வகையில், அந்த இளைஞருக்கு, பொதுமக்கள் ஒரு சைகிள் வாங்கி பரிசளித்துள்ளனர். இது போன்ற ஆர்வமும், உற்சாகமும் உள்ள இளைஞர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சிலர் கிடைத்துவிட்டால், கிராமத் தொண்டர் படைத் திட்டம் இன்னும் சிறப்பான முறையில் செயல்படும் என்பது உறுதி.



கேப்டன் ஆர். பி. மணி

பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம், பெரும்பாலும், பஞ்சாயத்துத் தலைவர்கள், யூனியன் தலைவர்கள், ஆகியோரின் பொதுநல உற்சாகத்தைப் பொருத்திருக்கிறது. அத்துடன், மாவட்டக் கலெக்டர், அவருடைய, பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய தனி உதவியாளர் (Personal Assistant, Panchayat Development) உதவி கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஒட்டி, மேலும் சிறந்த முறையில் நடைபெறும். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (District Development Councils) பஞ்சாயத்து முன்னேற்ற வேலைகளைப் பற்றிய செய்திகளை நன்கு ஆராயவும் பஞ்சாயத்து யூனியன்களின் சாதனைகளை வெளிப்படுத்தவும் சிறந்த பணிபுரியலாம். இதற்காகவே கலெக்டரின் தனி உதவியாளரையும், சில உதவி கலெக்டர்களையும் 'கிராம நல'த்தின 'கௌரவ நிருபர்'களாக அரசாங்கம் நியமித்துள்ளது. இதன் நோக்கம், ஒவ்வொரு மாவட்டத்திலும், பஞ்சாயத்துத் துறையில் நடைபெறும் நல்ல காரியங்களை, மற்ற மாவட்டங்களில் வாழும் மக்களும் அறிந்து பயனடைய வேண்டும் என்பதேயாகும்.

அடுத்த இதழில் : 'திருச்சி மாவட்டம்.'

காந்தியப் பொருளாதாரம்—
தத்துவ விளக்கம் :

# குஜராத்தி வணிகர்

திரு. மீ. லி. சபரிராஜன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

செல்லம்மாளும் சிரித்தாள். "அன்றொரு நாள் நானும் ஒரு புத்தகத்தில் படித்தேன். காந்திஜி அடிக்கடி, நான் செட்டிக்கார வணிகன் (பனியா) தெரியுமா?" என்று சொல்வாராமே!" என்றாள்.

"ஆம், வேடிக்கைக்காக அப்படிச் சொல்லுவார். ஆனால் பொருளாதார சூட்சுமங்களையெல்லாம் அவர் தெரிந்து கொண்டதற்கு, வேறு காரணம் இருக்கிறது. ஏழைகளுக்கு எப்படி நன்மை செய்வது என்பதிலேயே அவர் கவலையுங்கருத்துமாயிருந்தார். அதனால், புதிய புதிய கருத்துக்கள் பல தானாகவே அவருக்குத் தெரிந்தன"

"ஓஹோ" என்றாள் செல்லம்மாள்.

"இப்போது நான் சொன்னது அவருடைய பொருளாதாரத் தத்துவத்தில் ஒரு பகுதிதான். இன்னும், தெரிந்துகொள்ள வேண்டியது இருக்கிறது" என்றான் குப்புசாமி.

"அதையும் சொல்லுங்கள்" என்றாள் செல்லம்.

குப்புசாமி உற்சாகத்துடன் மறுபடியும் சொல்லத் தொடங்கினான். "இந்தக் காந்திஜி இருக்கிறாரே, அவர் இலேசானவர் அல்ல. பார்ப்பதற்குத்தான், ஆள் நோஞ்சானாக, சோளக்கொல்லை பொம்மையைப் போல இருக்கிறார். ஆனால் அவர் தலையில இருக்கும் மூளை அபாரமானது.—பெரிய புரட்சிக்காரர். கையால் செய்த பொருள்களினுங்கூட, நமக்குப் பக்கத்திலே நம் ஊர்களில் செய்த பொருள்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிறார்.—டில்லி நம் தேசத்தில்தானே இருக்கிறது அங்கிருந்து யாராவது ஒரு நூறு கதர் வேட்டியும் புடவையும் இங்கே விற்கக் கொண்டு வந்தால், நாம் அதை வாங்குவது முறையல்லவாம். ஏன் தெரியுமா? இங்கு அந்த தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது வேலையில்லாமல் செய்யும் அல்லவா?" அதனால்தான் அண்டையில் இருப்பவர்களை ஆதரிக்கவேண்டும் என்பது காந்திஜியின் கொள்கை. இதற்கு அவர் ஓர் நல்ல உதாரணம் கொடுக்கிறார். சென்னையிலிருந்து ஒரு நாவிதர் டில்லிக்குப் பக்கத்தில் உள்ள ஓர் ஊருக்குப் போகிறாரென்று வைத்துக்கொள்வோம். அந்த ஊர்க்காரர்கள் அவருக்கு வேலை கொடுக்கலாமா?—கூடாது. அவர்கள் உள்ளூர் நாவிதருக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமாம். சரி.—உள்ளூர்த் தொழிலாளிக்குத் திறமைக் குறைவு. சென்னை ஆசாமி வெகு நன்றாக வேலை செய்கிறார். அப்பொழுது என்ன செய்வது? அப்பொழுதுங்கூட டில்லிக்காரர்கள் உள்ளூர் ஆசாமிக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமா? 'ஆமாம்' என்று கூறுகிறார் காந்திஜி. 'நம் ஊர்க்காற்றும், மண்ணும் வெளிநாட்டுக் காற்றையும், மண்ணையும் விட மட்டமானது என்பதற்காக அவற்றை நாம் விட்டுவிடுவோமா? மாட்டோம் அல்லவா? அதைப்போல, நம் ஊரில் கிடைப்பது எப்படி இருந்தபோதிலும் அதைத்தான் நாம் ஆதரிக்கவேண்டும்' என்கிறார். ஆனால் அதே சமயத்தில், பிழைத்துப் போகட்டும் என்று நமக்கு ஒரு சலுகையும் கொடுக்கிறார். 'சரிதான் ஐயா, உங்களுக்கு டில்லித் தொழிலாளி செய்யும் வேலை பிடிக்கவில்லை. சென்னை நாவிதன் வேலைதான் பிடித்திருக்கிறது. அவனைப் போலவே உங்கள் ஊர் நாவிதனும் வேலை செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள். அப்படியானால் ஒன்று செய்யுங்கள். உங்கள் (டில்லி) நாவிதனைச் சென்னைக்கு அனுப்பி வையுங்கள், அவன் அங்கு தொழில் கற்று வரட்டும்,' என்கிறார் காந்திஜி. பார்த்தாயா, காந்திஜியின் கருத்துக்கள் எவ்வளவு புரட்சிகரமானவையாயிருக்கின்றன!"

செல்லத்தின் முகத்தில் ஐயம் ததும்பிற்று. யோசித்தாள். பிறகு "இதையா புரட்சிகரமானதென்று சொல்லுகிறீர்கள்? குறுகிய மனப்பான்மையுள்ளதாக அல்லவா இருக்கிறது?" என்றாள்.

இதைக் கேட்டதும் குப்புசாமி வாய்விட்டுச் சிரித்தான். "நமதுடைய மனப்பான்மை குறுகியது. நம்முடைய புத்தி குறுகியது. அதனால் காந்திஜி சொல்வது நமக்கு அப்படித் தோன்றுகிறது. உண்மை அதுவல்ல. இதை உனக்கு இன்னும் நன்றாக விளக்குகிறேன்.—'நீ உன் ஊரைத்தான் உன் நாடாக நினைக்க வேண்டும். அதற்கு வெளியே இருப்பவர்களையெல்லாம் பகைவர்களாகவோ, அன்னியர்களாகவோ நினைக்க வேண்டும், எங்கும் போகவோ வரவோ கூடாது' என்று காந்திஜி சொல்லவில்லை.—'இந்தப் பரந்த பாரத பூமி முழுவதும்,—ஏன், இந்த உலகமே உன்னுடையதுதான். நீ காசிக்குப் போகவேண்டுமா, போ; கன்னியாகுமரிக்குப் போகவேண்டுமா, போ. அங்கிருக்கும் கோவில் குளத்தையெல்லாம் சுற்றிப்பார். திரும்பி வா. ஆனால் வேலை செய்து பணம் திரட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு மாத்திரம் போகாதே! அப்படிப் போனால் அங்கு இருப்பவர்களில் ஒருவனுக்கு வேலையில்லாமல் போகும்' என்கிறார் அவர். அன்றொரு நாள் இங்கு (சென்னையில்) எனக்குத் தெரிந்த விறகு வெட்டி ஒருத்தனைப் பார்த்தேன். அவன் கதையைக் கேட்கப் பரிதாபமாயிருந்தது. 'தெற்கேயிருந்து ஏராளமானபேர் இங்கே வேலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் எங்கள் பிழைப்பிலே மண்ணைப் போட்டு விட்டார்கள். நாங்கள் இப்போது வேலையில்லாமல் கஷ்டப்படுகிறோம்' என்றான். காந்திஜி சொல்லைக் கேட்டால் இப்படி யெல்லாம் நடக்குமா? அந்தந்த ஊரிலே இருக்கிறவர்கள், அங்கங்கே வேலை செய்துகொண்டு, அவரவர்கள் வீட்டில் மனநிறைவுடன் இருக்க வேண்டும் என்பதுதான் காந்திஜியின் உபதேசம். ஒவ்வொரு ஊரும் அமைதியாக இருந்தால் நாடு நன்றாயிருக்கும், உலகம் நன்றாயிருக்கும். யுத்தம், கொலை கொள்ளை—எதுவுமே நேராது, நாம் குறுகிய நோக்கமுள்ளவர்களா, காந்திஜி குறுகிய நோக்கமுள்ளவரா? இப்போது நீயே சொல்!"

செல்லத்தின் கண்கள் மலர்ந்தன. "ஆ, இவ்வளவு விஷயம் இருக்கிறதா. இதில்!" என்றாள். பின்பு, "காந்திஜி பெரிய மகான்தான், சந்தேகமில்லை" என்றாள்.

ஒரு பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர், ஷூமேக்கர் என்பது அவர் பெயர்—அவர் கூட இதையெல்லாம் மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்."

"அதிசயந்தான்"

"இந்தக் காலத்தில் பலர் தங்களுக்குப் பரந்த மனப்பான்மை இருப்பதாய் நினைத்துக் கொண்டு, திடீரென்று எங்காவது போய்க் குதிக்கிறார்கள். அதனால் என்ன நேருகிறது? பொருளாதாரம் நாசமாகிறது. பழக்கடையிலே குரங்கு குதித்து, கடையையே நாசம் செய்து விட்டது அல்லவா, அதைப் போலத்தான்"

"பேஷ்! குரங்கு உதாரணம் வெகுப் பொருத்தம். உருவத்தில்தான் நாம் கொஞ்சம் மாறி இருக்கிறோமே தவிர, புத்தி கொஞ்சங்கூட மாறவில்லை:"

"செல்லம். இப்போது உனக்கு நான் சொன்ன விஷயத்தோடு மற்றொரு விஷயமும் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதையும் நீ தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் காந்தீயப் பொருளாதாரத்தை நன்கு தெரிந்துக் கொண்டவளாவாய்" என்றான்.

"சொல்லுங்கள்" என்றாள் செல்லம்.

குப்புசாமி சொல்லத் தொடங்கினான். "ஒவ்வோர் ஊரும் சுயம்பூரணமானதாக இருக்கவேண்டும் என்கிறார் அவர். விளங்குகிறதா?

செல்லம் திகைத்தாள். "இப்போதுதான் உண்மையாகவே பொருளாதாரத்தைக் கேட்பது போலிருக்கிறது!" என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

குப்புசாமி தான் சொல்ல வந்ததை விளக்கினான் 'ஒவ்வோர் ஊரும்,' தனது தேவைகளைத் தானே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் அடுத்த ஊரை எதிர்பார்க்கக் கூடாது. தேவைக்கு மேல் அதனிடம் ஏதாவது இருந்தால் அதை மாத்திரம் வெளியே அனுப்பி அதற்கு பதிலாக வேறு ஏதாவது வாங்கிக் கொள்ளலாம்.—இதற்குத்தான காந்திஜி 'சுயம் பூரணம்' என்று பேர் கொடுத்திருக்கிறார்.

செல்லம், ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தவள், திடீரென்று, "அதெல்லாம் சரிதான்.—எனக்கு ஒரு சந்தேகம். சமூகத்தில் பெரிய ஏற்றத் தாழ்வு இருக்கிறதே, இதையெல்லாம் ஒழித்துப் பொருளாதார சமத்துவம் ஏற்படுத்த அவர் இன்னும் ஏதாவது சொல்லியிருக்கிறாரா? அவருடைய சமுதாயத்தில் பணக்காரர்களும் இருப்பார்கள், அது எப்படி?" என்றாள்.

"நல்ல கேள்வி, இதோ சொல்லுகிறேன். காந்திஜிக்குப் பலாத்காரம் கொஞ்சங்கூடப் பிடிக்காது. பொதுவுடைமைவாதிகளைப்போல, இரத்தப் புரட்சி விரும்புபவரல்ல. பணக்காரர்களிடம் இருப்பதையெல்லாம் பலவந்தமாய் பிடுங்கி ஏழைகளுக்குக் கொடுக்க அவர் மனம் ஒப்பவில்லை. தவிரவும், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் திறமையை உபயோகித்துப் பணம் சம்பாதிக்கச் சமூகத்தில் உரிமை இருக்கவேண்டுமென்று அவர் கருதுகிறார். ஆனால், அதே சமயத்தில் ஏழைகளுக்கும் நீதி வழங்க அவர் உள்ளம் துடிக்கிறது. இதற்கு வழி என்ன? அவர் செல்வர்களைப் பார்த்துச் சொல்லுகிறார். 'ஐயா உங்களிடமிருக்கும் பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அதை யாரும் தொடவில்லை. தினமும் ஒரு தடவை அதைத் தட்டிப் பார்த்து வேண்டுமானாலும் மகிழுங்கள். ஆனால் அனாவசியமாகவோ, தேவைக்கு அதிகமாகவோ, நீங்கள் செலவு செய்யக்கூடாது. மற்றவர்கள் நன்மைக்காக வேண்டுமானால் நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம், உங்கள் சொத்துக்கு நீங்கள் ஒரு காவலராக இருங்கள்' என்கிறார். எப்படி இது?"

"சரிதான் நம் ஊரிலே கூட பெரிய வீட்டுச் சுப்பையா செட்டியாருக்கு அவ்வளவு நிலபுலன் இருக்கிறது. ஆனால் அவரும் மற்றவர்களுடன் ஏர் பிடித்து உழுகிறார், சாதாரணக் குடியானவனைப்போலத்தான் உண்கிறார், உடுத்துகிறார்—அதைப் போலவா?"

"ஆம்!—அதைப் போலவேதான். நல்ல உதாரணம் சொன்னாய். நம் நாட்டுக்கு இது பொருத்தமாயிருக்கிறது அல்லவா?"

"ஆம்;—ஆனால், காந்திஜியின் ராஜ்யத்தில் ஏதோ ஒரு ரூபத்தில் பணக்காரர்களும் இருப்பார்கள்.—அப்படித்தானே? என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் செல்லம்.

"இருந்துவிட்டுப் போகட்டுமே! விஷப்பல் இல்லாத நீர்ப்பாம்புகளைப்போல என்று வைத்துக்கொள்வோம்.

பணத்துக்கு அவர்கள் வெறும் காவலர்களாக இருப் பார்கள் !"

"ஏழைகள் ? அவர்கள் என்றும் வறுமைக்குக் காவலர்களாகத்தான் இருப்பார்களோ ?"

"மாட்டார்கள்.—மனிதனுக்கு அடிப்படையான தேவை களாக விளங்குபவை மூன்று. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு. இவை எல்லோருக்கும் கிடைக்கும். ஆனால் அவை நீ நினைப்பது போல ஒரே அளவாக, அதாவது,—சமமாக இராது. தேவைக்கேற்பக் கிடைக்கும். ஒரு மனிதனுக்கு ஜீரணசக்தி குறைவு. எதைச் சாப்பிட் டாலும் எப்பம் வரும். அத்தகையவருக்கு ஒரு நாளைக்கு அரைக்கால்படி அரிசி போதும். மற்றொருவர் நன்றாய்ச் சாப்பிடக்கூடியவர். அவருக்கும் அதே அரைக்கால்படி அரிசி கொடுத்தால் நியாயமாகுமா? இது சம்பந்தமாக காந்திஜி தம்மையே உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டார். அவர் சொல்லுகிறார் : 'நான் கிழவன். குளிர் தாங்க முடியாது. மழைக் காலத்தில் எனக்கு இரண்டு சால்வைகள் வேண்டும். ஆனால் என் பேரனுக்குக் (கனுகாந்தி) கம்பளியே வேண்டியதில்லை. அவன் இளைஞன்.—பிரிவினை இப்படி இருக்கவேண்டும் என்கிறார். அதாவது, அவரவர் தேவைக்குத் தக்கபடி விநியோகம்; தெரிந்ததா.

அது சரி ; அன்றொரு நாள் நான் ஒரு பத்திரிகையில் காந்திஜி இயந்திரங்களைக் கடுமையாக வெறுக்கிறார் என்று படித்தேனே! அது உண்மையா ?

"இதோ பார், அந்தக் குப்பைப் பத்திரிகைகளில் வெளி வந்தவை யெல்லாம் நீ நம்பாதே, காந்தி இயந்திரங்களை வெறுக்கவில்லை; இயந்திரங்கள் மீதுள்ள மோகத்தைத் தான் வெறுக்கிறார். இயந்திரங்கள் மூலம் மக்களுக்கு வேலையில்லாமற் செய்வதைத்தான் அவர் கண்டித்தார். நம் நாடு ஏழை நாடு; இங்கு வேலையில்லாத் திண்டாட் டம் அதிகம். உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களை உபயோகித்தால் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதி கமாகி விடுமென்று அவர் அஞ்சினார்."

"காந்தியப் பொருளாதாரத்தில் உள்ள சிறப்பு அது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது தான். "அறத்தை ஒதுக்கிய பொருளாதாரம் நிலைக் காது" என்றார் அவர்".

"ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். இதெல்லாம் கேட் பதற்கு நன்றாயிருக்கிறது, படிப்பதற்கும் நன்றாய்த்தானி ருக்கும்—இப்போது நடக்கக் கூடிய விஷயமா ?

"மனித குலத்துக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. இப்போது நடக்காவிட்டாலும் எப்போதாவது ஒரு நாள் நடக்கத்தான் நடக்கும். அதுவரை காத்திருக்க வேண்டும்.'

"ஆனால் நான் காத்திருக்க மாட்டேன். மணி மூன்றாகி விட்டது. இப்போதே காப்பி வேண்டும்" என்று தன் அம்மாவின் கைகளைப் பற்றி இழுத்தாள் அலமு.

"காப்பியா?—சுயதேவைப் பூர்த்தி! அவரவர்களுக்கு வேண்டிய காப்பியை அவரவர்கள் போட்டுக்கொள்ள வேண்டியது" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் செல்லம்.

## ஆண்டவனின் தத்துவம்

"இந்தப் பிரபஞ்சத்திலே ஓர் ஒழுங்கு நிலவுகிறது ; ஒவ்வொரு பொருளையும், ஒவ்வோர் உயிரையும் ஆட்டி வைக்கும் அசைக்க முடியாத நியதி ஒன்று இருக்கிறது. அது குருட்டு நியதி அல்ல ; ஏனென்றால், எந்தக் குருட்டு நியதியும், மனிதர்களை ஆட்டி வைக்க முடியாது. . . . சகல உயிர்களையும் ஆட்டி வைக்கும் அந்த நியதியே கடவுள். . . . என்னைச் சுற்றி உள்ள ஒவ்வொன்றும் எந்நேரமும் மாறிக்கொண்டிருக்கிறது ; எந்நேரமும் மாய்ந்துகொண்டிருக்கிறது. இந்த மாறுதல் களுக்கெல்லாம் பின்னே, ஒரு பேராற்றலை நான் காண்கிறேன். அது மாறுதல் அற்றது ; சகலத்தையும் இணைத்துப் பிடிக்கிறது. படைக்கிறது, கரைக்கிறது, மீண்டும் படைக்கிறது. அப்படி என்னை அறியச் செய்கிற உயிராற்றல் அல்லது ஆவியே கடவுள். சாவுக்கு நடுவே வாழ்வு நிலைக்கிறது. பொய்க்கு நடுவே உண்மை நிலைக்கிறது. இருளுக்கு நடுவே ஒளி நிலைக்கிறது. எனவே, கடவுள், உயிரும், உண்மையும், அன்புமா யிருக்கிறார் என்று நான் அறிகிறேன். அவர் அன்புரு வானவர், அவர் மகோன்னதமான நன்மையின் உருவம்".

"கேவலம் அறிவுக்கு மட்டும் திருப்தி அளிப்பாரானால், அவர் கடவுள் அல்ல. கடவுள் அப்படிச் செய்வதில்லை. தம் பக்தனின் ஒவ்வொரு மிகச் சிறு செயலிலும், தம்மை அவர் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஐம்புலன்களாலும் அடைய முடியாத நிச்சயமான ஓர் அனுபவத்தின் மூலமே, இது நிகழ முடியும். புலன் அனுபவங்கள் நமக்கு எவ்வளவுதான் உண்மையாய்த் தோன்றினாலும், அவை பொய்யாக—வெறும் மயக்கமாக இருக்கமுடியும். பல வேளைகளில் அவை அப்படித் தான் இருக்கின்றன. புலன்களைக் கடந்த அனுபவம் எங்கே ஏற்படுகிறதோ, அங்கேதான் தவறாத அனுபவமா யிருக்கிறது. புறச் சான்றுகளால், கடவுள் உண்மையை நிருபிக்க முடியாது. உள்ளத்தினுள்ளே உண்மையிலே கடவுள் உறைவதாக யார் உணர்கிறார்களோ, அவர் களுடைய நடத்தையும் குணமும் மாறியுள்ள மாறுதலே அதை நிருபிக்கிறது."

—மகாத்மா காந்தி

# விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்

## சர்தார் வல்லபாய் படேல்

திரு கே. விசாகன், சென்னை–17

"1915-ம் ஆண்டு. ஸர்தார் வல்லபாய் படேல் அப்பொழுது செழிப்பான வருமானம் உள்ள வழக்கறிஞர். ஒரு நாள், அவர் சேர்ந்திருந்த விளையாட்டுச் சங்கம் ஒன்றில் சீட்டாட்டம் ஆடிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், அங்கே காந்திஜி பிரவேசித்தார். முதன் முதலாக காந்திஜியைப் படேல் கண்டது அப்பொழுதுதான். ஆனால், அந்தச் சமயம் காந்திஜியைக் கண்டபொழுது, படேலுக்குக் கவர்ச்சி ஏற்படவில்லை. பெரிய உப்புசமான தொள தொளத்த தலைப்பாகை கட்டி, நீண்ட கத்தியவார் மேல் சட்டை அணிந்து, அதன் கைகளை மடக்கி விட்டுக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ்சிறு மனிதரைப் பார்த்துவிட்டு, மீண்டும் தம் சீட்டாட்டத்திலே படேல் முனைந்து விட்டார்......

என்றாலும், குடியானவரின் வரிச்சுமை பற்றி ஆலோசிக்க, இது நடந்த ஒரு வாரத்துக்கெல்லாம் காந்திஜி மாநாடு கூட்டினார். அதற்கு படேல் சென்றார். அதில், காந்திஜியின் வாத சாமார்த்தியத்தைக் கண்டு மலைத்துப் போனார். படேலின் மனசு திட்டமாக, விஞ்ஞான ரீதியாக, எஃகுப் பொறிபோல் எதையும் கிரகித்துக்கொள்ளக் கூடியது. தம் உள்ளத்திலே இருக்கக்கூடிய குழந்தை உணர்ச்சிகளை யெல்லாம் அடியோடு மறைத்து வைத்துக் கொள்வதில் வல்லவர்......

சாதாரண அறிவுக்குப் பொருத்தமான கோட்பாடு காந்திஜியுடையது. 'இந்தியா சுதந்திரம் அடையக் குடியானவனின் ஆதரவுவேண்டும். ஏனென்றால், குடியானவரே, அதன் மக்களில் எண்பது சத விதம் இருக்கிறார்கள்' என்பதுதான் அது. இந்தக் கோட்பாட்டைக் கண்டே, காந்திஜியிடம் படேலுக்கு விசுவாசம் ஏற்பட்டது...." என்கிறார் புகழ்பெற்ற அமெரிக்க ஆசிரியர்—லூயி பிஷர், "காந்தி வாழ்க்கை"யில்.

இவ்வாறு காந்திஜிக்கு அறிமுகமான வழக்கறிஞர் வல்லபாய், இந்திய சரித்திரத்தையே மாற்றி யமைக்கும் எஃகு மனிதராக, நூற்றுக்கணக்காக சிதறியிருந்த சமஸ்தானங்களை ஒன்றுபடுத்தி, ஐக்கிய இந்தியாவை, புதிய பாரதத்தை உருவாக்கிய சிற்பியாக, தன்னிகரற்ற நிர்வாக மேதையாக விளங்கினார் என்பது அனைவரும் அறிந்ததே. அவர் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றை கீழே காணலாம்.

சர்தார் வல்லபாய் படேல்—வெண்கல நாதத்திற்கு உள்ள ஓசை இப்பெயருக்கு உண்டு. காதுகளைச் சுற்றி சிறிது நேரம் ரீங்காரம் செய்யும். தன்னுடைய பெயருக்கு ஓசை கொடுப்பவர்கள்தான் காலத்தைவென்று நிற்கும் பெரியவர்கள். சில பெயர்கள் கடூர ஒலியைக் கிளப்பும். உதாரணம்-ஹிட்லர். காந்தியடிகளின் பெயரில் சங்க நாதம் ஒலிக்கும். அது சத்தியத்தின் சங்கநாதம். எது எப்படி இருந்தாலும், வெண்கல நாதத்திற்கு ஒரு கம்பீரம் உண்டு. அந்த கம்பீர ஒலி முழங்கும் பெயரைக் கொண்டவர்தான் இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல்.

### அடங்காத காளை

குஜராத் மாகாணத்தைச் சேர்ந்த செய்ரா மாவட்டத்தில் கரம்சாத் என்ற சிறு கிராமத்தில் வல்லபாய் பிறந்தார். தந்தையின் பெயர் ஜாவேரிபாய் படேல். உழுதுண்டு வாழ்ந்தவர். அவருடைய மூன்றாவது மகனாகப் பிறந்தார் படேல். இந்திய சட்டசபைத் தலைவராக இருந்த வித்தல் பாய் படேலும் அவரது உடன் பிறந்தவர்களில் ஒருவர். ஆரம்பப் பள்ளியிலே வல்லபாய்க்கு ஆசிரியர் இட்ட பெயர் "அடங்காத காளை"! துடுக்குத் தனமும், குறும்புச் செயல்களும் அவருக்கு இந்தப் பட்டத்தை அளித்தன. இதன் காரணமாக அவர் பல ஆரம்பப் பள்ளி களில் படிக்க வேண்டியதாயிற்று. பள்ளிப் படிப்பை முடித்தார். பிறகு வழக்கறிஞர் தேர்விலே வெற்றி பெற்று வக்கீலானார். குறுகிய காலத்திலே சிறப்பும், செல்வமும் பெற்றார். "குற்ற வழக்கிலே புலி" என்ற புகழும் அவருக்குக் கிடைத்தது.

இந்தக் காலத்தில்தான், அவருக்குத் திருமணம் நடந் தது. சொந்த கிராமத்திற்கு மூன்று கல் தூரத்தில் உள்ள "காணு" என்ற கிராமத்தைச் சேர்ந்த "ஜாவர்பா"வை மணந்தார். ஆனால், அவர்கள் வாழ்க்கைப் படகு அதிக தூரம் செல்லவில்லை. மணிபென் என்ற செல்வியையும்



' ஐக்கிய இந்தியாவின் சிற்பி

தயாபாய் என்ற செல்வனையும் விட்டு அந்த அம்மையார் காலமானார். குழந்தைகளுக்கு வல்லபாய் தாயும் தந்தையுமானார். ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து சென்று, பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து வெற்றியும் பெற்றார். மேல் நாடு சென்று பட்டம் பெற்ற வக்கீலாக இந்தியா திரும்பி, வழக்கறிஞர் தொழிலை ஆமதாபாத் நகரில் நடத்தினார்.

### மகாத்மாவின் தொடர்பு

ஆமதாபாத் நகரில் காந்தியடிகள் " சத்தியாக்ரக ஆசிரமம் " ஒன்றை நிறுவினார். அந்த நகர மக்களுடன் தொடர்பு கொள்ள " குஜராத் சங்க "த்திற்குச் சென்று இரண்டொரு முறை பேசினார். காந்தியடிகள் அச்சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளை படேல் கேட்க வேண்டியவரானார். துப்பாக்கியையும், பீரங்கியையும் அடிபணியச் செய்த காந்திய நெறி, வல்லபாய் படேலையும் ஆட்கொண்டது. காந்தியத்தின் பாதுகாவலராக படேல் ஆனார். இதன் பயனாக, பொதுப்பணியில் இறங்கி 1916-ம் ஆண்டில் ஆமதாபாத் நகரசபைத் தலைவரானார். அதே ஆண்டு இலட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு குஜராத் சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றார். அரசியலோடு ஒன்று கலந்தார்.

### பார் புகழும் பர்தோலி வீரர்

படேலின் சேவையையும் சிறப்புகளையும் இரண்டு நிகழ்ச்சிகளின் மூலம் கூறிவிடலாம். காந்திய நெறியாளர்களுக்கு சிறை செல்வதும், சேவை செய்வதும் பொதுவானதுதான். ஆகவே, படேல் அதற்கு விதி விலக்கு அல்ல. ஆனால், அவருடைய தனித்தன்மை சுடர் விட்டுப் பிரகாசித்ததை இரு நிகழ்ச்சிகள் மூலம் கூறி விடலாம். ஒன்று பர்டோலி சத்தியாக்கிரகம். மற்றொன்று இந்தியாவில் இருந்த தனி அரசுகளுக்கு முடிவு கட்டியது.

" பர்டோலி " என்பது பம்பாய் மாகாணத்தில் உள்ள ஒரு தாலுகா. அதன் மக்கள் தொகை 85 ஆயிரம். அனைவரும் விவசாயிகள். அன்றைய ஆங்கில அரசாங்கம் அப்பகுதியில் நிலவரியை 25 சதவிகிதம் உயர்த்தியது. வரிச்சுமை தாங்காத விவசாயிகள் திரண்டெழுந்தனர். வரி கொடா இயக்கம் நடத்த முன்வந்தார்கள். இந்த சத்தியாகிரகத்திற்கு படேல் தளபதியானார். 85 ஆயிரம் மக்களும் ஒருவராக நின்றார். நிலவரியை யாரும் செலுத்தவில்லை.

### வெற்றி முரசு

கிராமம் கிராமமாகச் சென்று படேல் முழங்கினார். "பட்டாளத்தின் பீரங்கி முழக்கத்தை ஒரு தடவையாவது பர்டோலி மக்கள் கேட்கலாகாதா? என்றைக்கு காதுப்பக்கம் பீரங்கிக் குண்டு பாய்வதை விவசாய மக்கள் பார்க்கிறார்களோ, அன்றுதான் அவர்கள் ஆண்பிள்ளைகளாவார்கள். அவர்களுக்குத்தான் வீர சந்ததியும் பிறக்கும்" இவை கோழையையும் வீரனுக்கும் படேலின் வீர மொழிகள்.

### நவபாரதத்தின் சிற்பி !

முடிவில் பர்டோலி மக்கள் வெற்றி முரசு கொட்டினர். அன்னிய அரசு பணிந்தது. வல்லபாய் படேல், சர்தார் படேலானார். இந்திய மக்கள் ஒவ்வொருவர் காதுகளிலும் சர்தார் படேலின் வெண்கல நாதப் பெயர் ஒலித்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்தது. படேல் மத்திய அரசாங்க உள்நாட்டு அமைச்சர் ஆனார். சுதந்திர நாட்டில் அன்று, அம்மைத் தழும்பு போல 565 தனியரசுகள் இருந்தன. இந்தியாவில் 712,508 சதுர மைல்களை அடைத்துக்கொண்டிருந்தன. தனியாட்சியில் சுவைகண்ட இம் மன்னர்களையும், அதன் மக்களையும் வழிக்குக் கொண்டு வருவது சாமானிய காரியமல்ல. ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேல் கள்ளிக்கொடிபோல் வளர்ந்திருந்த இந்தத் தனியரசுகளின் ஆயுள், இரண்டரை ஆண்டுகளுக்குள் முடிவடைந்தது. இதற்குக் காரணம், சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளிகாணாத தீரர் படேலின் தளராத உறுதியேயாகும். அவர்கண்ட அந்த இந்திய ஒற்றுமையே அவருக்கு நினைவுச் சின்னம். தேசத்தை ஒற்றுமைப்படுத்திய வீரராக ஜெர்மனி நாட்டு அதிபர் பிஸ்மார்க்கைக் கூறுவார்கள். ஆனால் பிஸ்மார்க் சர்வாதிகாரி. நமது படேல் குடியரசு நாட்டின் ஒரு அமைச்சர். இருவருக்கும் இடையே தூரம் மிக அதிகம்.

சென்ற சில மாதங்களுக்கு முன் டெல்லியில் படேலுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. அதன் அடியில் " இந்திய ஒற்றுமையின் சிற்பி " என்று எழுதப் பட்டிருக்கிறது. இந்த வாசகத்தைத் தேர்ந்தெடுத்தவர் பிரதமர் நேரு. புதிய பாரதச் சிற்பிக்கு இதைவிட வேறு பொருத்தமான புகழ் மாலையை யார் சூட்ட முடியும் ?

---

# பாரத நாட்டு மாதரசிகள்

## கவியரசி சரோஜினி தேவி

குமாரி ரா. கண்ணகி, சென்னை–15

[1930 ஏப்ரல் 5ம் நாள். பாரத நாட்டின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். வரலாற்றுப் புகழ்பெற்ற தண்டியாத்திரையை, மகாத்மா காந்தி முடித்துக்கொண்டு தண்டி கடற்கரையிலே உப்பு சத்தியாக்கிரகத்தைத் துவக்கி வைத்தார். சில துணுக்கு உப்பை அள்ளியதன் மூலம், தேசத்தோடு அன்று காந்திஜி பேசிவிட்டார். தண்டி கடற்கரையிலே, மகாத்மாவுடன் சத்தியாக்கிரகப்போரில் கலந்து கொண்டார், கவிக்குயில் சரோஜினி தேவி. காந்திஜி உப்பை அள்ளியதும், அவர் அருகில் இருந்த சரோஜினி தேவி " வாழ்க ரட்சகர் " (Hail Deliverer) என்று கோஷித்தார். காந்திஜியின் ஒவ்வொரு போராட்டத்திலும் முன் வரிசைப் படையிலே இருந்தவர், வீராங்கனை சரோஜினி தேவி. அவருடைய வாழ்க்கை வரலாறு மிகவும் பயனுடையதாகும் —ஆசிரியர்.]

இந்திய நாடு பெருமை பெற்றது ஆண்களால் மட்டுமன்று. பெண்களும் இந்நாட்டின் பெருமைக்கு உதவியிருக்கின்றனர். கற்புக்கரசிகளாகவும், வீராங்கனைகளாகவும், அறிவின் பெட்டகங்களாகவும், ஆற்றல் மிக்க வீரர்களை உலகுக்களித்த சிறந்த தாய்மார்களாகவும் விளங்கி, ஆணுக்குப் பெண் இளைத்தவளில்லை என்பதைப் புலப்படுத்தியிருக்கின்றனர். அத்தகைய பெண்ணரசிகளின் வாழ்க்கையை நினைவுகூர்வதும், அவர்கள் நினைவைப் போற்றுவதும் அவசியமாகும். ஏனெனில் சிறப்பைப் போற்றுமிடத்தில்தான், சிறப்பு வளரும்.

### மாதரசிகள் திலகம்—கவிக்குயில் சரோஜினிதேவி

இந்தியாவின் கவிக்குயில் என்றும் கவியரசி என்றும் புகழ்பெற்ற சரோஜினிதேவி, பாரதத்தின் சிறந்த மாதரசிகளில் ஒருவராவார். இளமையிலேயே கவிதைகள் இயற்றும் சக்தி பெற்றிருந்தார். அற்புதமான சொல்லாற்றல் உள்ளவர். இவரது சொற்பொழிவு கவி மாரி போல இருக்கும். காந்தியடிகள் தலைமையில் தாய் நாட்டின் விடுதலை இயக்கத்தை நடத்திய தளபதிகளில் ஒருவராக விளங்கினார். நாட்டின் கதிமோட்சத்தை நிர்ணயிக்கும் வல்லமை வாய்ந்தவர்கள் என்று கருதப் பட்ட குழுவில் முக்கியமானவராக இருந்தார். நாட்டுப் பிரச்னைகளை உணர்ந்து கொள்ளும் ஆற்றலும், சிக்கல்களுக்குச் சரியான தீர்வு காணும் நுண்ணறிவும் பெற்றிருந்தார். அறிஞர்கள் குழுவில் ஒரு அறிஞராகவும், தளபதிகள் குழுவில் ஒரு வீராங்கனையாகவும், தாய்மார்கள் மத்தியில் தலைமைச் சால்புடைய அரசி போலவும் விளங்கினார்.

சரோஜினி தேவி 1879-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ம் நாள் ஐதராபாத்தில் பிறந்தார். இவருடைய தந்தை அகோரநாத், சட்டோபாத்யாயா என்ற பட்டப் பெயருடைய வங்காள பிராமண குலத்தைச் சேர்ந்தவர். சரோஜினி தேவியின் தாயார் இளமையிலேயே கவிதை இயற்றும் ஆற்றலுள்ளவராக இருந்தார்.

சரோஜினிதேவி தமது 12-ஆம் வயதில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் மாகாண முதல்வராகத் தேறினார். 13-ஆம் வயதில் "ஏரி மங்கை" என்ற புகழ்பெற்ற காவியத்தை இயற்றினார்.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி' என்பதற்கேற்ப, மேலும் மேலும் நூல்களைக் கற்றார். இங்கிலாந்து சென்று மேல்படிப்புப் படித்தார். 1898-ல், சாதிக்கட்டுப்பாடுகளை மீறி, டாக்டர் எம். கோவிந்தராஜ் நாயுடுவை சென்னையில் மணம் புரிந்தார். அக்காலத்தில், அது மிகப் புரட்சிகரமான செயலாகும்.

1915-ல் சரோஜினிதேவி லண்டனில் காந்தியடிகளைச் சந்தித்தார். அன்று அரசியல் வாதியாக ஆன அவர், தம் வாழ்நாள் முழுவதையும் அரசியல் பொதுப் பணியிலேயே கழித்தார்.

### சுதந்தரப் போர்க் காவியத்தின் பாட்டுடைத் தலைவி

காந்தியடிகளின் வாழ்க்கை இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தைக் கூறும் புதிய இதிகாசம் ஆகும். அந்தப் புதிய காவியத்தில் பாட்டுடைத் தலைவர்கள் பலர். பாட்டுடைத் தலைவியர்கள் சிலர். பாட்டுடைத் தலைவராக



மதுரை மாவட்டம், தேனி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பூமலைக்குண்டு கிராமத் தொண்டர் படையினருடன் மாதர்கள், குழந்தைகள்.

ளும், அதே சமயத்தில் பா இசைப்பவராகவும் விளங்கியவர் ஒரே ஒருவர்தான். அந்த ஒருவர் சரோஜினிதேவி ஆவார்.

1921-ல் கிழக்கு ஆப்பிரிக்காவில் மாம்பாசா நகரத்தில் நடந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். பின்னர் தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள இந்திய மக்களுக்கு ஊக்கமூட்டினார். 1925-ல் கான்பூரில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். 1928-ல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்று இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எடுத்துரைத்து இந்திய தேசிய காங்கிரஸ் கோரிக்கையிலுள்ள நியாயத்தை வெளி உலகுக்கு உணர்த்தினார்.

காந்தியடிகள் தொடங்கிய உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார். பெண்கள் பலர் விடுதலைப் படையில் வந்து சேருவதற்கு ஒரு முன்னோடியாக விளங்கினார். 1931-ல் காந்தியடிகளுடன் லண்டன் வட்ட மேசை மகாநாட்டுக்குப் போய் வந்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்து, நாட்டின் விடுதலைப் போராட்டத்தை நடத்திச் செல்லுவதில் அருந் துணையாக இருந்தார்.

1942-ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து சிறை சென்றார்.

1947-ல் டில்லியில் நடைபெற்ற ஆசிய உறவு மகாநாட்டில் தலைமை வகித்தார். இந்தியா சுதந்திரம் பெற்றதும், உத்தரப் பிரதேச கவர்னராக நியமனம் பெற்றார். அப்பதவியில் இருக்கும்போதே 1950 மார்ச் 2-ஆம் நாள் காலமானார்.

இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும், மேன்மைக்கும் பாடுபட்டவர்களில் முக்கியமானவராக விளங்கிய சரோஜினி தேவியின் சேவையை பாரதம் என்றுமே மறக்க முடியாது. அவரது வாழ்க்கை நந்தா விளக்குப் போல நின்று எண்ணற்ற மக்களுக்கு வழிகாட்டி வரும்.

## அன்பறத்தோடு கூடிய வாழ்வு

" அன்பே . . . மிக உன்னதமானது ; அன்பு ஒன்றுதான், மனித வாழ்க்கையின் அறம். ஒவ்வொரு மனிதனும், தன், உள்ளத்தின் ஆழத்திலே இதை (மிகத் தெளிவாகக் குழந்தைகளிடம் நாம் காண்பதே போல) உணர்கிறான். உலகத்தில் நிகழும் பொய்யான உபதேசங்களில் மனிதன் சிக்கிக்கொள்ளும் வரையில், இதை உணர்ந்தேயிருக்கிறான். இந்த நியதியை, உலகிலே எல்லாரும் பறைசாற்றியிருக்கிறார்கள்—இந்திய, சீன, யூத, கிரேக்க, ரோமானிய ரிஷிகளெல்லாம் இந்த உண்மையைப் பறை சாற்றியிருக்கிறார்கள். . . .

உண்மையைச் சொல்லும் இடத்தில், அன்பிலே பலாத்காரம் புக இடம் கொடுத்தால், அங்கே அன்பறம் இல்லாது போகிறது. இருக்கவும் முடியாது. அன்பறம் இல்லாதபோது, ஓர் அறமுமே இல்லாது போகிறது. பலாத்காரமே மிஞ்சுகிறது—வலுத்தவன் செய்ததே சரி என்ற நிலை ஏற்படுகிறது."

ஞானி டால்ஸ்டாய்



கிராம நலம் பகுதி-2 * GRAMANALAM PART 2

# பஞ்சாயத்து அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

[பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.]

## கிராம வேலைத்திட்டத்தின்கீழ் ஊருணிகள் சீரமைப்பு வேலைக்கு நன்கொடை வசூலித்தல் பற்றிய குறிப்பு

**[Works—Village Works Programme—Improvements to Ooranies—Collection of Contribution—Clarification.]**

**Memorandum No. 139626 R.D., and L.A., dated 8th August 1963.**

கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 2793-ல் கிராம வேலைத் திட்டத்தின்கீழ், பழைய கிணறுகளை ஆழப்படுத்தல், சீரமைத்தல் ஆகிய வேலைகளை எடுத்துச் செய்யலாம் என்றும், ஆழப் படுத்தப்படும் பகுதிக்கு 75 சத வீத மானிய உதவியும், கிணறுகளுக்குக் கைப்பிடிச் (சுற்றுச்) சுவர் கட்டுதல், மேடை அமைத்தல் முதலிய சீரமைப்பு வேலைகளுக்கு 50 சதவீத மானியமும் அளிக்கப்படுமென்றும் வெளியிடப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 142902-ல் ஊருணிகளைச் சீரமைக்கும் வேலைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஊருணிச் சீரமைப்பு வேலைகளுக்கு அரசாங்க மானியத்தின் சதவீத அளவு குறிக்கப்படாததால், முதலில் குறிப்பிடப்பட்ட அரசாங்க அறிக்கையில் கிணறுகளை ஆழப்படுத்தல் சீரமைப்பு வேலைகளுக்குக் குறித்துள்ள அரசாங்க மானிய சதவீத அளவு, ஊருணி வேலைகளுக்கும் பொருந்துமா என்று திருநெல்வேலி கலெக்டர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

2. மேலே முதலில் குறிப்பிடப்பட்ட அரசாங்க அறிக்கையில் வரையறுத்துள்ள கிராம நீர்வழங்கு திட்டத்தின் கீழ், கிணறுகளை ஆழப்படுத்தவும், சீரமைக்கவும் அளிக்கப்படும் அரசாங்க மானியங்களின் சதவீத அளவு, ஊருணிகள் உட்பட, கிராம வேலைத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும் கிராம நீர்வழங்கு வேலைகள் எல்லாவற்றுக்கும் பொருந்தும் என்று, சென்னை நீங்கலாக ஏனைய மாவட்டக் கலெக்டர்களும், சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகள் அனைவரும் அறிவிக்கப்படுகின்றனர்.

(கிராம நல—தலநிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 139626.)

---

## இந்திய நிர்வாகப் பணிகள்—"கிராம நல" இதழ் ஆலோசனைக்குழு அமைப்பு—குழுவில் பணிபுரிய சில அதிகாரிகளுக்கு அனுமதி வழங்குதல்

**[Indian Administrative Services—Advisory Board for " Grama Nalam " constituted—Permission to certain Officers to serve in Advisory Board—Granted.]**

**G.O. Ms. No. 1330, Public (Special), dated 24th August 1963.**

கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட "கிராம நல" ஆலோசனைக் குழுவை அமைத்து, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது :—

1. செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை—தலைவர்.
2. கிராம அபிவிருத்திக் கமிஷனர்-துணைத் தலைவர்,
3. கிராம நல-தலநிர்வாகத்துறையின் எல்லா துணைச் செயலாளர்களும்—உறுப்பினர்கள்.
4. துணைச்செயலாளர், நிதி (திட்டம்-அபிவிருத்தி) துறை—உறுப்பினர்.
5. துணைச்செயலாளர், பொதுத்துறை—உறுப்பினர்.
6. தலைவர், அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை—உறுப்பினர்.
7. பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராமநல-தல நிர்வாகத்துறை—உறுப்பினர்/செயலாளர்.

(பொதுத்துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1330.)

## 1963-64-ம் ஆண்டில், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்குக் குடியிருப்பு கட்டுவது பற்றிய குறிப்பு

## [Third Five Year Plan—Elementary Education—Construction of Quarters for women teachers in rural areas 1963-64 Regarding.]

### Memorandum No. 87996, R.D. and L.A., dated 19 July, 1963

கல்வித் துறையின் 13—5—63-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 993, எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் கவனத்துக்கும் கொண்டுவரப்படுகிறது. அவ்வாணையில் 1963–64 ஆண்டுக் காலத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கிராமப் பகுதிகளில் ஆசிரியைகளுக்கு இரண்டாவது குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இவ்வாண்டு முடிவுக்குள், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப் பெருமல் இருப்பின் அவற்றையும், இந்த இரண்டாவது குடியிருப்பையும் விரைவாகக் கட்டி முடிக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராமநல–தல நிர்வாகத் துறையின் 19—7—63-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 87996.)

---

## முழு உயர்தர ஆரம்பப் பள்ளி, அல்லது முதுநிலை ஆதாரப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக, பயிற்சி பெற்ற பட்டதாரிகளை நியமித்தல்

## [Education—Elementary—Aided—Appointment of graduate trained teachers as headmasters of Complete Higher Elementary or Senior Basic Schools—Orders passed.]

### G.O. Ms. No. 1672, Education, dated 15 July, 1963.

1963-64-ம் ஆண்டு காலத்தில் 100 உதவி பெறும் தனியார் நிர்வாக முதுநிலை ஆதாரப் பள்ளிகளிலும் (Senior Basic Schools) பயிற்சி பெற்ற பட்டதாரிகளைத் தலைமையாசிரியர்களாக அமர்த்த அரசாங்கம் அனுமதி வழங்குகிறது. இந்த 100 தலைமையாசிரியர் பதவிகளில், 40 பதவிகளை பஞ்சாயத்து யூனியனல்லாத பகுதியிலும் மீதியுள்ள பதவிகளைப் பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் அளிக்கலாம். கீழ்க்கண்டவாறு பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் :—

(i) ஏற்கெனவே, பயிற்சி பெற்ற பட்டதாரிகள் தலைமை ஆசிரியர்களாகப் பணி புரியும் பள்ளி (பள்ளி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 400-க்கு குறைவாக இருந்த போதிலும்) முதலாவதாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

(ii) அடுத்து, மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 400-ம் அதற்கு மேலுமிருந்து, நன்கு நடத்தப்பட்டு தகுதியுள்ள பயிற்சி பெற்ற பட்டதாரியின் பணி தேவைப்படும் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. கல்வித்துறை இயக்குநர் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிகளைத் தேர்ந்தெடுப்பார். அவர் தேர்ந்தெடுத்த பள்ளிகளின் பட்டியலை, செய்தியறிய, அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். விதிமுறைகளைத் தளர்த்த வேண்டுமென்று கருதினல், கல்வித்துறை இயக்குநர் அரசாங்கத்தின் முன் அனுமதிபெற வேண்டும்.

3. தலைமையாசிரியர்களாக அமர்த்தப்பட்ட, பயிற்சியும் பட்டமும் பெற்ற ஆசிரியர்கள், பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெறும் சம்பள விகிதத்தில் ஊதியம் பெற அனுமதிக்கப்படுகின்றனர். அந்த சம்பளத் திட்டப்படி மானியம் கேட்டு பெறப்படும்.

4. பஞ்சாயத்து யூனியனல்லாத பகுதிகளில், கல்வித் துறை இயக்குநர், தம் மேற்பார்வை அதிகாரிகளின் மூலம் மானியங்களை விநியோகிப்பார். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி பெறும் பள்ளிகள் (Aided Schools) தம் நிதியிலிருந்து முதலில் செலவுகளைச் செய்துவிட்டு பின்னர் செலவறிக்கையைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குச் சமர்ப்பித்து, அவர்களுக்குச் சேரவேண்டிய மானியத்தைக் கேட்டுப் பெறுவர். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அவர்களுக்குச் சேரவேண்டிய மானியத் தொகையைப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து விநியோகம் செய்வார்.

ஒவ்வோர் அரையாண்டிறுதியிலும், உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியம் வழங்கும் வகையில் ஆன செலவுகளின் அறிக்கையை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்குச் சமர்ப்பித்து, சேரவேண்டிய அரசாங்க மானியத்தைப் பெற்று செலவைச் சரிக்கட்டுவார்கள். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி செலவறிக்கையைத் தணிக்கை செய்து, பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கு மானியத் தொகையை அனுமதிப்பார்.

பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து செய்யப்படும் செலவு, குறிப்பாக பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்குக் கொடுக்கவேண்டிய, தல கல்வி மானியம் நீங்கலாக இருக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியிடம் இருந்து மானியத்தைக் கோரும்பொழுது, இந்தச் செலவுகள் தல கல்வி மானியத்திற்கான கோரிக்கையில் சேர்க்கப்படவில்லை என்பதற்கான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(கல்வித் துறையின் 15—7—63 தேதியிட்ட அரசாங்க ஆணை 1672)



## பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களை நடத்துதல் பற்றிய விளக்கம்

## (Panchayat Union Councils—Meetings—Holding of—Clarification)

### Memorandum No. 32888, R.D. and L.A., dated 29—6—63.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 47-வது பிரிவில் "கூட்டங்கள்" என்று குறிக்கப்பட்டுள்ள சொல், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சாதாரணக் கூட்டங்களைக் குறிக்குமா, அல்லது அவசர அல்லது சிறப்புக் கூட்டங்களையும் சேர்த்துக் குறிக்குமா அல்லது கூட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள குறைந்த உறுப்பினர் தொகை வரம்பு (Quorum) இன்மையால் தள்ளிவைக்கப் பட்ட கூட்டங்களைக் குறிக்குமா என்னும் ஐயம் எழுப்பப் பட்டுள்ளது.

"கூட்டம்" என்னும் சொல், சாதாரண, அவசர அல்லது சிறப்புக் கூட்டங்களைக் குறிக்கும் பொருளில் உள்ளதே தவிர, கூட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள குறைந்த உறுப்பினர் தொகை வரம்பு இன்மையால் தள்ளி வைக்கப்படும் கூட்டங்களைக் குறிப்பிடாது என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 29—6—63 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண். 32888.)

—0—

## பஞ்சாயத்துப் பணியாளர்க்கு அகவிலைப்படி அளித்தல் பற்றிய மறு ஆய்வு

## (Allowances—Dearness Allowance—Panchayat Employees—Revision—Orders—Issued)

### G. O. Ms. No. 1501, R. D. and L. A., dated 17—7—63.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 150-ம் அதற்கு மேலும், 400 ரூபாய் வரை ஊதியம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கும், தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் அளிக்கப்படும் அகவிலைப்படி வீதங்களை உயர்த்துவதென்று அரசாங்கம் முடிவு செய்து உள்ளது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 388-ல் பஞ்சாயத்து யூனியன் பணியாளருக்கு, உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதங்களை அரசாங்கம் அனுமதித்துள்ளது. பஞ்சாயத்துக்களில் பணி புரியும் ஊழியர்கள் விஷயத்தில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 57-வது பிரிவு (3) துணைப் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1963-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதியிலிருந்து, அதாவது 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி அல்லது அதன் பிறகு அளிக்கப்படும். 1963-ம் ஆண்டு ஜனவரி மாதச் சம்பளத்துடன், பஞ்சாயத்துக்களில் பணி புரியும் ஊழியர்கள் விஷயத்தில் கீழ்க்கண்டவாறு அகவிலைப்படி வீதங்களைத் திருத்தி அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது :—

| சம்பளம். | அகவிலைப்படி. |
|---|---|
| ரூ. 150-ம் அதற்கு அதிகமாகவும் ரூ. 300-க்குக் கீழ். | ரூ. 30. |

| சம்பளம். | அகவிலைப்படி. |
|---|---|
| ரூ. 300-லிருந்து ரூ. 320 வரையில். | ரூ. 330-க்கு, எவ்வளவு தொகை சம்பளத்துடன சேரவேண்டுமோ அந்தத் தொகை. |
| ரூ. 321-லிருந்து ரூ. 390 வரையில் .. | ரூ. 10. |
| ரூ. 391-ம் அதற்கு மேலும். | ரூ. 400-க்கு, எவ்வளவு தொகை சம்பளத்துடன் சேரவேண்டுமோ அந்தத் தொகை. |

3. இப்பொழுது அனுமதித்துள்ள உயர்ந்த அளவு அகவிலைப்படி வீதங்களினுல் வரவு-செலவுத் திட்டங்களில் ஏதாவது பற்றுக்குறை ஏற்படுமானுல், அவற்றைச் சரிக்கட்ட 1962-63 ஆண்டுக்கு, அவற்றுக்குத் தேவையான மானியம் அரசாங்க நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

4. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2651-ன் 9-வது பாரா கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதங்களின்படி கொடுப்பதினுல் ஏற்படும் பற்றுக்குறையைத் தீர்க்க மானியம் கோரும் நடைமுறை தனியே வெளியிடப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 17—7—63-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1501.)

## சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்ட ஒப்படைப்பு—ஒப்படைக்கப்படா வேலை வகைகளுக்கு பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் ஒத்துழைப்பு

(Panchayat Development—Entrustment of National Extension Service Scheme of Community Development—Non-Entrusted items of work—Association of Panchayat Union Councils Instructions—Issued)

### G.O. Ms. No. 1509, R.D. and L.A. dated 18—7—63.

பஞ்சாயத்து யூனியன்களிடம் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தை ஒப்படைத்த போதிலும், பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் (Panchayat Development Schematic Budget) ஏற்கனவே சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் சேர்ந்திருந்த கீழ்க்கண்ட வகை வேலைகள் சேரவில்லை :—

(i) தனிப்பட்டோருக்கு தக்காவி முதலிய கடன்களை வழங்குதல்.

(ii) முதல்நிலை சுகாதார நிலையங்களை நடத்துதல்.

(iii) கேந்திர கிராமத் திட்டங்கள்.

(iv) மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள்.

(v) செயற்கை உர விநியோகம்.

(vi) சிறப்புச் சிறுபாசன மேற்பார்வையாளர் நிறுவனம்.

மேற்குறித்த, ஒப்படைக்கப்படாத வகை வேலைகள் விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்களின் நிலைகுறித்து அறிவித்தல் நலம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

#### (i) தனிப்பட்டோருக்குத் தக்காவி முதலிய கடன் வழங்குதல்.

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1674-ல் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கிராமத்தில் யார் யாருக்குக் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை கிராம வாரியாகக் காட்டும் அறிக்கைப் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் முன் வைக்க வேண்டும். பின்னர் அவர், கடன் (தக்காவி) நூல் நமூனா 41-ல் ஒரு அறிக்கைப் பிரதியை எடுத்து அனுப்பு அடன் மன்றத்தின் யோசனைகளையும், கருத்துக்களையும் மாவட்டக் கலெக்டர்களுக்கு அனுப்பவேண்டும்.

#### (ii) முதல்நிலை சுகாதார நிலையங்களை நடத்துதல்.

இது குறித்துத் தனியே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

#### (iii) கேந்திர கிராமத் திட்டங்கள்

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்களையும், உறுப்பினர்களையும், சம்பந்தப்பட்ட கால்நடை வளர்ச்சிச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு விளக்கங்களை வெளியிடுமாறு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

#### (iv) மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள்.

மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களில் பொறுப்பேற்றுள்ள உதவி விவசாயப் பொறியாளர்கள் (Assistant Agricultural Engineers) இத்துறையில் செய்யப்பட்டுள்ள வேலைகளைக் குறித்து முழு விவரங்களையும் கூறுகின்ற மாத இறுதி அறிக்கைத் தயாரித்து வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கும்படி விவசாயத் துறை இயக்குநர் வேண்டிய விளக்கம் வெளியிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார். வட்டார வளர்ச்சி அதிகாரிகள், உதவி விவசாயப் பொறியாளரின் அறிக்கையைப் பல பிரதிகள் எடுத்து, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் முன் செய்தி அறிவிப்பாகவும், ஆய்வுக்காகவும் வைக்க வேண்டும்.

#### (v) செயற்கை உர விநியோகம்.

ரெவின்யூ போர்டு தன்னுடைய 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 18-ந் தேதிய கடிதத்தில் (எண் : B. P. Rt. 1778 (j)-ல் வட்டாரங்களுக்கு ஒதுக்கித் தரப்படும் உரத்தின் அளவு, அனுமதிச் சீட்டின் பேரில் (Permits) விநியோகம் செய்யக் குறித்துள்ள உரத்தின் அளவு, கட்டுப்பாடின்றி விற்பனை செய்யக்கூடிய வகையில் உள்ள உரத்தின் அளவு முதலானவற்றைக் குறிக்கும் அறிக்கை ஒன்றினை வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் தயாரித்து பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் முன், செய்தியறிவிப்பாகவும், விநியோக வேலையில் பஞ்சாயத்துக்கள் நேரடியாகப் பங்கு கொள்ளாது வகையில் வெறும் ஆலோசனை கூறும் முறையில் கருத்துத் தெரிவிக்கவும், சமர்ப்பிக்கலாமென்று யோசனை தெரிவித்துள்ளது. அரசாங்கம், ரெவின்யூ போர்டின் இந்த யோசனையை ஒப்புக்கொண்டு, அதன்படி செயல்பட ஆணை பிறப்பிக்கிறது.

#### (iv) சிறப்புச் சிறு பாசன மேற்பார்வையாளர் நிறுவனம்.

உணவு-விவசாயத் துறையின் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 41514 F. iii, (3)-ல், சிறப்பு சிறுபாசன திட்டப் பணியாளர்கள் வட்டாரங்களில் செய்துள்ள பணிகள் குறித்து கலெக்டர்கள் கால முறை அறிவிப்புகளைத் தயாரித்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்ப, ரெவின்யூ போர்டு விளக்கம் வெளியிடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதே போன்று மாவட்ட அபிவிருத்தி மன்றக்கூட்ட நடைமுறை அறிக்கைகளையும் செய்தியறிவிப்பாக யூனியன்களுக்கு அனுப்ப வேண்டும். மேற்படி அறிக்கையில் கூறப்பட்டவைகளை, மறுபடியும் வலியுறுத்தும்படி ரெவின்யூ போர்டு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இவ்வாணையின் 2-வது பாராவில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி, ரெவின்யூ போர்டு, விவசாயத் துறை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர், ஆகியோர் வெளியிடும் விளக்கங்களின் நகல்களை அரசாங்கத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1509.)



## மீன் வளர்ப்பு—மீன் மகசூல் உரிமை

[Fisheries—Inland Fisheries—Disposal of Fishery Rights.]

### Memorandum No. 57706, R.D. and L. A., dated 20—7—63.

உணவு-விவசாயத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 304-ன் 4-வது பாராவில் கூறியுள்ளபடி, சில பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள நீர்நிலைகளில் 1963-ம் ஆண்டில் மீன் பிடிக்கும் உரிமையைத் தமக்கு குத்தகை விடவில்லை என்று சில மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்துக் கூறியுள்ளதாக மீன் வளர்ப்புத் துறை இயக்குநர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஆகவே மேற்படி ஆணையில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்றும்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் ஆணை பிறப்பிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 30-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1370-பாரா (i)-ல் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் கலெக்டர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. (அவ்விளக்கங்கள், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.)

பஞ்சாயத்துக்கள், சாத்தியமான அளவுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை காட்டலாம் என்கிற அரசாங்கத்தின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். மேற்படி ஆணைகளில் கூறப்பட்டுள்ள விளக்கங்களை பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துகளும் அறிய, கலெக்டர்கள் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவை கூடுமானவரை அவற்றை பின்பற்றும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 57706.)

---

## ஆரம்பப் பள்ளிகள் முதலானவற்றுக்கு, "கிராம நலம்", "கிராம ராஜ்யம்" ஆகிய பத்திரிகைகளை வழங்குதல்—செலவுகளைப் பற்று வைப்பதற்கான கணக்குத் தலைப்பு பற்றிய விளக்கம்

[Books and Publications—"GRAMA NALAM" and "GRAMA RAJYAM"—Supply to Elementary Schools, etc.—Debit head—Clarification.]

### Memorandum No. 119774, R.D. and L.A., dated 13—8—1963.

"கிராம நலம்", "கிராம ராஜ்யம்" ஆகிய பத்திரிகைகளை ஏற்கெனவே வாங்கி வழங்காத எல்லா சமூகக் கல்வி நிலையங்களுக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்கும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும் வழங்க வேண்டுமென்றும், அதற்காகும் செலவுகளை சமூகக் கல்வி வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளைக் கொண்டு செய்ய வேண்டுமென்றும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு, ஏற்கெனவே, கிராம நல-தல நிர்வாகத் துறையிலிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சமூகக் கல்வி நிலையங்களுக்கு மேற்படி பத்திரிகைகளை வாங்கி வழங்குவதற்காகும் செலவுகளை, சமூகக் கல்வி வரவு செலவு திட்டத்தின்கீழ், "B. கல்வி நிதிக் கணக்குகள்—செலவு—சாதாரணமானவை—16. செய்தி நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள்" என்ற தலைப்பில் பற்று வைப்பதும், இப்பத்திரிகைகளைப் பள்ளிகளுக்கு வாங்கி வழங்க ஆகும் செலவுகளை, "B. கல்வி நிதிக் கணக்குகள்—செலவு—சாதாரணமானவை—3. எதிர்பாராச் சிறு செலவுகளும் கருவிகளும்—(ii) கருவிகள்—நூலகப் புத்தகங்களும் வரைப் படங்களும்" என்ற தலைப்பில் பற்று வைப்பதும் பொருத்தமாகும் என்று தல நிதிக் கணக்குகளின் ஆய்வாளர் எடுத்துக் கூறியுள்ளார். தல நிதிக் கணக்குகளின் ஆய்வாளருடைய மேற்படி யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அதன்படி செலவுகளைப் பற்று வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13-ந் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 119774.)

---

## 'கிராம சகாயக்' திட்டத்தின்கீழ், பொறுக்கு விதை விநியோகம்—விற்பனை விலையை நிர்ணயித்தல் பற்றிய விளக்கம்

[Panchayat Development—Agricultural Production—Distribution of Improved Seeds under Grama Sahayak Scheme—Fixation of sale price—Instructions Issued.]

### Memorandum No. 117993, R.D. and L.A., dated 14—8—1963.

உணவு-விவசாயத் துறை, கிராம நல-தல நிர்வாகத் துறை ஆகியவற்றில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள அரசாங்க ஆணைகளின்படி, கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் பொறுக்கு விதைகளை, பஞ்சாயத்து நியமிக்கும் விவசாயிகளுக்கு, பஞ்சாயத்து நிர்ணயிக்கும் விலைக்கு விற்க வேண்டும் என்றும், இந்த விற்பனைப் பொறுப்பைப்

கூட்டுறவுச் சங்கம் எந்த முன்வரும் இடங்களிலெல்லாம் பொறுக்கு விதைகளை கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்கப்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து நியமிக்கும் விவசாயிகளுக்கு, பஞ்சாயத்து குறிக்கும் விலைக்கு, பொறுக்கு விதைகள் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் கூட்டுறவுச் சங்கத்துக்கும் உண்டு. கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் இரண்டாந்தர விதைகளின் விலையைப் பஞ்சாயத்து ஒரு தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்க வேண்டுமென்று தல நிதிக் கணக்குகளின் ஆய்வாளருடைய தணிக்கைக் குழு வலியுறுத்தியுள்ளதென்றும், பஞ்சாயத்து முழுமையாகக் கூடி விலை நிர்ணயம் செய்வதும், அவ்வப்போது மறு ஆய்வு செய்து நிர்ணயிப்பதும் மிகவும் கடினம் என்றும், விவசாயத் துறை இயக்குநர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளார். பஞ்சாயத்துத் தலைவர் விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்பதும் அவ்வப்போது மறு ஆய்வு செய்து விலையை நிர்ணயிக்க வேண்டுமென்பதும், அடுத்து வரும் பஞ்சாயத்து கூட்டங்களில் பஞ்சாயத்து அறியும்பொருட்டுத் தம் முடிவுகளை அறிவிக்கலாம் என்பதும் கருத்தாகும். ஆகவே, தணிக்கைத் தகராறுகளைத் தவிர்ப்பதற்காக, இது விளக்கப்படலாம் என்று அவர் யோசனை கூறியுள்ளார்.

2. விவசாயத் துறை இயக்குநரின் யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டு, கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் இரண்டாந்தர பொறுக்கு விதைகளின் விற்பனை விலையை, கூடுமான வரையில் பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமே நிர்ணயிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறது. விற்பனை விலையை உடனடியாக நிர்ணயிக்க வேண்டியிருந்து, அந்த நேரத்தில் பஞ்சாயத்துக் கூட்டம் கூட்டுவது சாத்தியமில்லையென்றால் பஞ்சாயத்துத் தலைவர் விற்பனை விலையை நிர்ணயித்துவிட்டு அடுத்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் அதற்குப் பஞ்சாயத்தின் அங்கீகாரம் பெற வேண்டும். கிராம சகாயக்குகள் உற்பத்திசெய்யும் பொறுக்கு விதையை மொத்தமாக கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பதாயின், சம்பந்தப்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கத்துடன் கலந்து, பஞ்சாயத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் விற்பனை விலையை நிர்ணயிக்கவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 117996.)

---

## கிளைக் கஜானக்களில் ஆசிரியர் சம்பளச் செக்குகளை பணமாக்குதல்

## [Elementary Education—Panchayat Unions—Formation of School groups for disbursement of salary-Encashment of Cheques at the Sub-Treasuries.]

## Memorandum No. 99454, R. D. and L. A., dated 16—8—1963.

மாதத்தின் முதல் வேலை நாளில் (First working day of the month), கிளைக் கஜானக்களில் கொடுக்கல் வாங்கல் அலுவல் மிகுதியாக இருப்பதால், பஞ்சாயத்து யூனியன் பள்ளித் தொகுதிகளின் சம்பள விநியோகஸ்தர்கள், உரிய காலத்தில் ஆசிரியர் சம்பளச் செக்குகளைச் சமர்ப்பித்து பணம் பெற, சில நேரங்களில் முடிவதில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இதனால் அங்கு இரவு தங்க வேண்டி வரும் சம்பள விநியோகஸ்தர்களுக்கு தினசரிப் படி கொடுக்க வேண்டியும் உள்ளது. ஆகவே, சம்பள விநியோகஸ்தர்கள் இரவு தங்கும் அவசியம் ஏற்படாத வகையில், இந்த செக்குகளுக்கு முதலிடம் தரும்படி கிளைக் கஜானா அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும்படி கஜானா அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 99454.)

---

## மாநில கதர்—கிராமத் தொழிற் கழக நிலையங்கள், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு மேஜை நாற்காலி வழங்குதல்

## (Furniture—Panchayat Union Offices-Supply by units of the State Khadi and Village Industries Board—Instruction.)

## G. O. Ms. No. 1781, R. D. and L. A., dated 12—8—1963.

சமுதாய அபிவிருத்தித் திட்ட தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தின்கீழ், தொழில் திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் பொறுப்பு ஏற்கெனவே மாநில கதர்—கிராமத் தொழில் கழகத்திடம் (State Khadi & Village Industries Board) ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாங்க உதவியுடன் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இப்போது அக்கழகத்தைச் சார்ந்ததாகும். அரசாங்க இலாகாக்களுக்கு வேண்டிய மேஜை நாற்காலிகள் முதலிய பொருள்களை, சிறைச் சாலைத் துறையிலும், தொழில் நிலையங்களிலும் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கிராமத் தொழில் திட்டத்தில், தச்சுத் தொழிலும் ஒன்றாகும். மாநில கதர்—கிராமத் தொழில் கழகம் நடத்தும் தச்சுத் தொழில் நிலையங்கள், தொழில்—தொழிலாளர்—கூட்டுறவுத் துறையின் 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 648-ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களை, மேற்படி ஆணைகளைப் பின்பற்றுவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று மாநில கதர்—கிராமத் தொழில் போர்டு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ் விஷயத்தை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்த பின், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள்—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தமக்குத் தேவையான மேஜை நாற்காலிகள் முதலிய பொருள்களை, அந்தந்த வட்டாரங்களில் கிராமத் தொழில் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் தொழில் நிலையங்களிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கிறது. அத்தகைய தொழில் நிலையம் இல்லாத வட்டாரங்கள், கீழ்க்குறித்த நிறுவனங்களில் வரிசை முறைப்படியே வாங்கிக்கொள்ளலாம்:—

(1) சிறைச் சாலைகள், இளைஞர் சிறைப்பள்ளிகள்.

(2) தொழில் துறையின் அரசாங்கத் தொழில் நிலையங்கள்.

(3) மாநில கதர்—கிராமத் தொழில் கழகத்தின் சாராம்சம் காரியாலயங்கள் உட்பட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது நிலையங்கள்—இவற்றுள், மேஜை நாற்காலி முதலிய பொருள்கள் தேவைப்படும் அலுவலகம் அல்லது இலாகாவுக்கு எது அருகில் இருக்கிறதோ அங்கு வாங்கிக்கொள்ளலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1781.)

---

# பஞ்சாயத்து யூனியன்வாரியான மக்கள் தொகைக் கணக்கு

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

### சேலம் மாவட்டம்

| தாலுகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| ஓசூர் .. | ஓசூர் .. | 66,169 | 33,911 | 32,258 |
| | சூளகிரி | 73,127 | 37,180 | 35,647 |
| | தளி | 1,00,905 | 51,806 | 49,099 |
| | கெலமங்கலம் | 85,153 | 43,925 | 41,228 |
| கிருஷ்ணகிரி .. | வேப்பனபள்ளி .. | 44,444 | 22,733 | 21,711 |
| | கிருஷ்ணகிரி | 67,717 | 34,381 | 33,336 |
| | ஊத்தங்கரை | 1,04,118 | 52,829 | 51,289 |
| | பருகூர் | 88,033 | 45,267 | 42,766 |
| | காவேரிப்பட்டணம் | 1,12,401 | 56,774 | 55,627 |
| அரூர் .. | அரூர் .. | 77,162 | 39,091 | 38,071 |
| | மொரப்பூர் | 81,127 | 40,896 | 40,231 |
| | பாப்பிரெட்டிபட்டி | 57,314 | 28,889 | 28,425 |
| தர்மபுரி .. | தர்மபுரி .. | 87,348 | 44,077 | 43,271 |
| | பாலக்கோடு | 1,14,484 | 57,505 | 56,979 |
| | நல்லம்பள்ளி | 80,371 | 40,536 | 39,835 |
| | பெண்ணாகரம் | 92,378 | 46,835 | 45,543 |
| ஓமலூர் .. | குளத்தூர் .. | 44,214 | 22,585 | 21,629 |
| | நங்கவள்ளி | 68,276 | 34,749 | 33,527 |
| | தாரமங்கலம் | 57,216 | 29,130 | 28,116 |
| | கடையம்பட்டி | 69,346 | 35,144 | 34,202 |
| | ஓமலூர் | 95,209 | 48,396 | 46,813 |
| | பேச்சேரி | 63,096 | 32,230 | 30,866 |
| ஏர்க்காடு .. | ஏர்க்காடு .. | 23,753 | 12,337 | 11,416 |
| சேலம் .. | வாழப்பாடி .. | 61,234 | 30,645 | 30,589 |
| | வீரபாண்டி | 76,980 | 38,905 | 38,075 |
| | காரிப்பட்டி | 80,018 | 40,374 | 39,644 |
| | பனைமரத்துப்பட்டி | 60,191 | 30,253 | 29,938 |
| | சேலம் | 89,045 | 45,444 | 43,601 |
| சங்கரி .. | சங்கரி .. | 75,302 | 38,160 | 37,142 |
| | எடப்பாடி | 76,379 | 38,717 | 37,662 |
| | கொங்கணபுரம் | 41,129 | 20,959 | 20,170 |
| | மகுடஞ்சாவடி | 49,501 | 25,425 | 24,076 |
| திருச்செங்கோடு .. | திருச்செங்கோடு .. | 79,734 | 39,746 | 39,988 |
| | பள்ளிபாளையம் | 60,631 | 30,531 | 30,100 |
| | எலச்சிபாளையம் | 54,247 | 26,884 | 27,363 |
| | மல்லசமுத்திரம் | 52,055 | 25,986 | 26,069 |
| ராசிபுரம் .. | ராசிபுரம் .. | 51,270 | 25,769 | 25,501 |
| | வெண்ணந்தூர் | 55,274 | 27,628 | 27,646 |
| | நாமகிரிப்பேட்டை | 62,134 | 30,966 | 31,168 |
| ஆத்தூர் .. | தலைவாசல் .. | 66,991 | 33,801 | 33,190 |
| | ஆத்தூர் | 88,384 | 44,924 | 43,460 |
| | கங்கவல்லி | 68,674 | 34,333 | 34,341 |
| | பெத்தநாய்க்கன்பாளையம் | 72,462 | 36,411 | 36,051 |
| நாமக்கல் .. | நாமக்கல் .. | 72,043 | 35,622 | 36,421 |
| | மோகனூர் | 58,805 | 28,898 | 29,907 |
| | பரமத்தி | 54,905 | 27,243 | 27,662 |
| | கபிலமலை | 55,811 | 27,381 | 28,430 |
| | சேந்தமங்கலம் | 54,178 | 27,178 | 27,000 |
| | எருமைப்பட்டி | 56,060 | 27,797 | 28,263 |
| | புதுச்சத்திரம் | 55,546 | 27,787 | 27,759 |
| | கொல்லிமலை | 21,020 | 10,714 | 10,306 |

## திருநெல்வேலி மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| சங்கரன்கோயில் .. | சங்கரன்கோயில் .. | 61,184 | 30,408 | 30,776 |
| | குருவிக்குளம் | 79,141 | 39,233 | 39,908 |
| | மேலநீலிதநல்லூர் | 54,541 | 27,160 | 27,381 |
| | வாசுதேவநல்லூர் | 1,41,062 | 70,221 | 70,841 |
| கோவில்பட்டி. .. | கோவில்பட்டி .. | 1,02,915 | 51,055 | 51,860 |
| | கயத்தாறு | 82,918 | 40,573 | 42,375 |
| | விளாத்திகுளம் | 72,712 | 35,404 | 37,308 |
| | புதூர் | 62,530 | 30,577 | 31,953 |
| | ஒட்டப்பிடாரம் | 91,985 | 45,244 | 46,741 |
| ஸ்ரீவைகுண்டம் .. | ஸ்ரீவைகுண்டம் .. | 91,654 | 44,040 | 47,614 |
| | கருங்குளம் | 63,773 | 30,015 | 33,758 |
| | தூத்துக்குடி | 51,363 | 25,387 | 25,976 |
| திருநெல்வேலி .. | பாளையங்கோட்டை .. | 86,277 | 41,473 | 44,804 |
| | மானூர் | 73,942 | 36,025 | 37,917 |
| தென்காசி .. | கீழப்பாவூர் .. | 89,562 | 44,494 | 45,068 |
| | கடையநல்லூர் | 83,378 | 41,282 | 42,096 |
| | தென்காசி | 96,034 | 47,345 | 48,689 |
| | ஆலங்குளம் | 66,596 | 33,045 | 33,551 |
| அம்பாசமுத்திரம் .. | அம்பாசமுத்திரம் .. | 93,658 | 46,084 | 47,574 |
| | கடயம் | 78,978 | 38,519 | 40,459 |
| | பாபபாகுடி | 37,006 | 17,848 | 19,158 |
| | சேரன்மாதேவி | 83,730 | 39,677 | 44,053 |
| நாங்குனேரி .. | நாங்குனேரி .. | 83,797 | 39,564 | 44,233 |
| | களக்காடு | 69,927 | 32,653 | 37,274 |
| | ராதாபுரம் | 78,610 | 37,361 | 41,249 |
| | வள்ளியூர் | 92,672 | 44,927 | 47,745 |
| திருச்செந்தூர் .. | சாத்தங்குளம் .. | 70,276 | 33,211 | 37,065 |
| | உடன்குடி | 60,714 | 28,111 | 32,603 |
| | திருச்செந்தூர் | 70,501 | 32,476 | 38,025 |
| | ஆழ்வார் திருநகரி | 90,100 | 42,402 | 47,698 |
| செங்கோட்டை வட்டாரம் .. | .... | 45,945 | 22,778 | 23,167 |

## கன்னியாகுமரி மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| விலவங்கோடு .. | மஞ்சிரா .. | 1,08,464 | 55,281 | 53,183 |
| | மேல்புரம் | 1,01,859 | 51,698 | 50,161 |
| | கிள்ளியூர் | 93,520 | 47,731 | 45,789 |
| கல்குளம் .. | தக்கலைகுளம் .. | 1,09,672 | 55,351 | 54,321 |
| | தக்கலை | 1,09,565 | 55,288 | 54,277 |
| | திருவத்தாறு | 91,066 | 46,852 | 44,214 |
| தோவாளை .. | தோவாளை .. | 62,292 | 31,123 | 31,169 |
| அகஸ்தீஸ்வரம் .. | அகஸ்தீஸ்வரம் .. | 85,853 | 42,414 | 43,439 |
| | ராஜாக்கமங்கலம் | 84,545 | 42,482 | 42,063 |





## நீலகிரி மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| கூடலூர் .. | கூடலூர் .. | 69,522 | 36,728 | 32,794 |
| உதகமண்டலம் .. | உதகமண்டலம் .. | 1,16,033 | 61,067 | 54,966 |
| குன்னூர் .. | குன்னூர் .. | 73,884 | 37,673 | 36,211 |
| | கோத்தகிரி .. | 53,846 | 27,523 | 26,323 |

## இராமநாதபுரம் மாவட்டம்

| தாலூகா. | பஞ்சாயத்து யூனியன். | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|
| திருப்பத்தூர் .. | கல்லல் .. | 66,010 | 29,895 | 36,115 |
| | சிங்கம்புணரி .. | 72,120 | 35,128 | 36,992 |
| | சாக்கோட்டை .. | 62,918 | 31,460 | 31,458 |
| | திருப்பத்தூர் .. | 68,349 | 32,565 | 35,784 |
| சிவகெங்கை .. | சிவகெங்கை .. | 74,632 | 36,249 | 38,383 |
| | காளையார்கோயில் .. | 64,940 | 30,797 | 34,143 |
| | மானாமதுரை .. | 62,138 | 30,502 | 31,636 |
| | திருப்புவனம் .. | 66,885 | 32,931 | 33,954 |
| திருவாடானை .. | திருவாடானை .. | 44,890 | 21,764 | 23,126 |
| | தேவகோட்டை .. | 49,909 | 23,580 | 26,329 |
| | கண்ணங்குடி .. | 43,707 | 21,078 | 22,629 |
| | ராஜசிங்கமங்கலம் .. | 51,786 | 24,851 | 26,935 |
| பரமக்குடி .. | பரமக்குடி .. | 81,465 | 39,895 | 41,570 |
| | போகலூர் .. | 68,729 | 32,559 | 36,170 |
| | இளையான்குடி .. | 75,449 | 35,010 | 40,439 |
| முதுகுளத்தூர் .. | முதுகுளத்தூர் .. | 59,107 | 27,992 | 31,115 |
| | கடலாடி .. | 84,622 | 40,789 | 43,833 |
| | கமுதி .. | 90,394 | 43,456 | 46,938 |
| ராமநாதபுரம் .. | | | | |
| | மண்டபம் .. | 68,887 | 32,712 | 36,175 |
| | திருப்புல்லாணி .. | 62,004 | 28,725 | 33,279 |
| | ராமநாதபுரம் .. | 34,447 | 16,025 | 18,422 |
| அருப்புக்கோட்டை .. | | | | |
| | திருச்சுழி .. | 56,764 | 27,701 | 29,063 |
| | அருப்புக்கோட்டை .. | 53,370 | 25,466 | 27,904 |
| | காரைக்குடி .. | 53,666 | 26,255 | 27,411 |
| | காரியப்பட்டி .. | 55,306 | 27,404 | 27,902 |
| சாத்தூர் .. | | | | |
| | வெம்பக்கோட்டை .. | 60,948 | 30,173 | 30,775 |
| | சாத்தூர் .. | 67,071 | 33,366 | 33,705 |
| | விருதுநகர் .. | 71,856 | 35,529 | 36,327 |
| | சிவகாசி .. | 68,460 | 33,690 | 34,770 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. | வத்திராயிருப்பு .. | 77,914 | 38,515 | 39,399 |
| | ராஜபாளையம் .. | 91,986 | 45,517 | 46,469 |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் .. | 61,211 | 30,271 | 30,940 |

## மதுரை மாவட்டம்

| தாலூகா. | | பஞ்சாயத்து யூனியன். | | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|---|---|
| திண்டுக்கல் | .. | திண்டுக்கல் | .. | 66,832 | 33,180 | 33,652 |
| | | ஆத்தூர்-I (செம்பட்டி) | .. | 1,06,668 | 52,227 | 53,441 |
| | | ஆத்தூர்-II (ரெட்டியார் சத்திரம்) | .. | 81,765 | 40,626 | 41,139 |
| | | வேடசந்தூர் | .. | 66,827 | 33,048 | 33,779 |
| | | சாணார்பட்டி | .. | 69,386 | 34,523 | 34,863 |
| | | பாளையம் | .. | 61,006 | 30,355 | 30,651 |
| | | வடமதுரை | .. | 57,116 | 28,292 | 28,824 |
| பழனி | .. | பழனி | .. | 75,989 | 37,654 | 38,335 |
| | | ஒட்டன்சத்திரம் | .. | 81,868 | 40,360 | 41,508 |
| | | தொப்பம்பட்டி | .. | 89,042 | 43,949 | 45,093 |
| கொடைக்கானல் | .. | கொடைக்கானல் | .. | 39,858 | 20,392 | 19,466 |
| பெரியகுளம் | .. | வடுகப்பட்டி | .. | 82,628 | 41,170 | 41,458 |
| | | கம்பம் | .. | 65 601 | 33,089 | 32,512 |
| | | உத்தமபாளையம் | .. | 80.661 | 40,629 | 40,032 |
| | | சின்னமனூர் | .. | 73,971 | 36,895 | 37,076 |
| | | தேனி | .. | 73,871 | 37,285 | 36,586 |
| | | போடி நாயக்கனூர் | .. | 59,051 | 29,463 | 29,588 |
| | | ஆண்டிப்பட்டி | .. | 1,03,745 | 52,358 | 51,387 |
| நிலக்கோட்டை | .. | வாடிப்பட்டி | .. | 65,174 | 32,338 | 32,836 |
| | | அலங்காநல்லூர் | .. | 68,558 | 34,085 | 34,473 |
| | | வத்தலகுண்டு | .. | 63,555 | 31,912 | 31,643 |
| | | நிலக்கோட்டை | .. | 93,719 | 46,559 | 47,160 |
| மேலூர் | .. | மேலூர்-I | .. | 69,315 | 33,968 | 35,347 |
| | | மேலூர்-II | .. | 93,933 | 45,867 | 48,066 |
| | | நத்தம் | .. | 79,272 | 39,945 | 39,327 |
| மதுரை | .. | மதுரை மேற்கு | .. | 64,102 | 31,417 | 32,685 |
| | | மதுரை கிழக்கு | .. | 59,191 | 28,934 | 30,257 |
| | | திருபரங்குன்றம் | .. | 1,22,547 | 61,520 | 61,027 |
| திருமங்கலம் | .. | செல்லம்பட்டி | .. | 65,334 | 32 975 | 32,359 |
| | | சேடபட்டி | .. | 82,797 | 41,663 | 42,134 |
| | | உசிலம்பட்டி | .. | 68,110 | 34.282 | 3 ,828 |
| | | தே. கல்லுப்பட்டி | .. | 63,727 | 31,702 | 32,025 |
| | | திருமங்கலம் | .. | 75,322 | 37,290 | 38,032 |
| | | கள்ளிக்குடி | .. | 54,392 | 26,667 | 27,725 |

## கோயம்புத்தூர் மாவட்டம்

| தாலூகா. | | பஞ்சாயத்து யூனியன். | | மொத்தம். | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|---|---|---|---|
| பவானி | .. | பவானி | .. | 95,085 | 48,532 | 46,553 |
| | | அம்மாப்பேட்டை | .. | 85,699 | 43,406 | 42,293 |
| | | அந்தியூர் | .. | 71,716 | 36,592 | 35,124 |
| கோபிசெட்டிபாளையம் | .. | கோபிசெட்டிபாளையம் | .. | 79,803 | 40,271 | 39,532 |
| | | தூக்கநாயக்கன்பாளையம் | .. | 52,937 | 26.532 | 26,405 |
| | | சத்தியமங்கலம் | .. | 57,876 | 29.160 | 28,716 |
| | | பவானிசாகர் | .. | 66.157 | 33 249 | 32,908 |
| | | தாளவாடி | .. | 28.953 | 14.525 | 14,428 |
| | | நம்பியூர் | .. | 89,492 | 45,049 | 44,443 |
| ஈரோடு | .. | ஈரோடு | .. | 72,716 | 36,785 | 35,931 |
| | | கொடுமுடி | .. | 71.967 | 36 362 | 35 605 |
| | | மொடக்குறிச்சி | .. | 87.075 | 43,853 | 43,222 |
| | | பெருந்துறை-I | .. | 77,136 | 39,167 | 37,969 |
| | | பெருந்துறை-II | .. | 62,369 | 31,627 | 30,742 |
| | | ஊத்துக்குளி | .. | 66,485 | 33,545 | 32,940 |
| தாராபுரம் | .. | தாராபுரம் | .. | 66 648 | 33,334 | 33,314 |
| | | காங்கேயம் | .. | 54,343 | 27.475 | 26,868 |
| | | குண்டாடம் | .. | 61.314 | 30.752 | 30,562 |
| | | மூலனூர் | .. | 62,697 | 31,276 | 31,421 |
| | | வெள்ளக்கோயில் | .. | 54,854 | 2 ,633 | 27,221 |
| பல்லடம் | .. | சூலூர் | .. | 92,676 | 46.571 | 46,105 |
| | | பல்லடம் | .. | 54,418 | 27,186 | 27,232 |
| | | திருப்பூர் | .. | 67,991 | 33,858 | 34.133 |
| | | பொங்கலூர் நாய்க்கன்பாளையம் | .. | 50,336 | 25,086 | 25,250 |
| | | பொங்கலூர் | .. | 45,860 | 23,015 | 22,845 |
| அவினாசி | .. | அவினாசி | .. | 95,087 | 47,901 | 47,186 |
| | | மேட்டுப்பாளையம் | .. | 89,578 | 45,944 | 43,634 |
| | | அன்னூர் | .. | 74,540 | 37,769 | 36,771 |
| கோயம்புத்தூர் | .. | சர்க்கார் சாமக்குளம் | .. | 57,300 | 29,037 | 28,263 |
| | | சிங்காநல்லூர் | .. | 89,847 | 48,174 | 41,673 |
| | | தொண்டாமுத்தூர் | .. | 62,582 | 31,631 | 30,951 |
| | | பெரியநாயக்கன்பாளையம் | .. | 64,271 | 33,123 | 31,118 |
| | | பேரூர் | .. | 100,989 | 53,042 | 47,947 |
| | | மதுக்கரை | .. | 69,080 | 34,723 | 34,357 |
| பொள்ளாச்சி | — | கிணத்துக்கடவு | .. | 72,308 | 36,066 | 36,242 |
| | | ஆனைமலை | .. | 173,835 | 88,901 | 84,934 |
| | | பொள்ளாச்சி | .. | 126,572 | 63,527 | 63,045 |
| உடுமலைப்பேட்டை | — | குடிமங்கலம் | .. | 43.268 | 21,205 | 22.063 |
| | | மடத்துக்குளம் | .. | 56,142 | 28,160 | 27,932 |
| | | உடுமலைப்பேட்டை | .. | 92,924 | 46,923 | 46,001 |

[கிராம நல-நல நிர்வாகத் துறை—கணக்குப் பிரிவின், 16—7—'63 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண்: 64067-ன் இணைப்பு.]

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

நவம்பர், 1963

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் :
கிராமச் சிறுவர்கள் நிகழ்ச்சி.
ஒவ்வொரு திங்கட்கிழமையும்:
விலை வாசிகள் வாராந்திர விமர்சனம்; விஞ்ஞானகூடம்.
ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்:
தேசபக்திப் பாடல்; கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.
ஒவ்வொரு புதன்கிழமையும்:
சரித்திரக் கதைகள்.
ஒவ்வொரு வியாழக்கிழமையும்:
திருக்குறள் விளக்கம்; நமது திட்டம்.
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்:
தேசபக்திப் பாடல்—கிராம வானொலி மன்றம்.
ஒவ்வொரு சனிக்கிழமையும்:
நம் மாதர் மன்றம்.

**இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்**

சனிக்கிழமை (2—11—1963)
நகைத்தடிப்பம்.

ஞாயிற்றுக்கிழமை (3—11—1963)
புகையிலை சாகுபடி : உரையாடல்.

திங்கட்கிழமை (4—11—1963)
நம்பிக்கை—நாடகம் —(எஸ். பூமிநாதன் எழுதியது).

புதன்கிழமை (6—11—1963)
பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்கள்.

சனிக்கிழமை (9—11—1963)
கோழிகளைத் தாக்கும் நோய்—பெரும் பாதம்: உரையாடல்.

ஞாயிற்றுக்கிழமை (10—11—1963)
மாங்காய் மகசூல் : உரையாடல்.

திங்கட்கிழமை (11—11—1963)
எழுதத் தெரியாதவா—நாடகம்—(எஸ். பூமிநாதன் எழுதியது).

புதன்கிழமை (13—11—1963)
டிப்தீரியா—உரையாடல், சிக்கனச் செல்வம் (என். ராகவன் எழுதியது).

வியாழக்கிழமை (14—11—1963)
கிராமங்களில் தொழிற்சாலை : உரையாடல்.

சனிக்கிழமை (16—11—1963)
நிலவுக்குத் நிலவு—இசைச் சித்திரம்—(என். ராகவன் எழுதியது).

ஞாயிற்றுக்கிழமை (17—11—1963)
லாபகரமான இஞ்சி சாகுபடி; கிராமச் சாவடியில்; பேயோட்டிய வழக்கு விசாரணை—(தனுஷ்யன் எழுதியது).

திங்கட்கிழமை (18—11—1963)
ன்மதன்—(என். ராகவன் எழுதியது).

புதன்கிழமை (20—11—1963)
உழைப்பாளி உலகநாதன்—(என். ராகவன் எழுதியது).

சனிக்கிழமை (23—11—1963)
நீரிழிவு நோய்.

ஞாயிற்றுக்கிழமை (24—11—1963)
எலுமிச்சை ரகங்கள், கிராம முன்னேற்றம்—பேட்டி.

திங்கட்கிழமை (25—11—1963)
வளரும் தமிழகம்.

புதன்கிழமை (27—11—1963)
செய்தித்தாள்—கடைசிக் காட்சி—(எஸ். பூமிநாதன் எழுதியது).

வியாழக்கிழமை (28—11—1963)
தேங்காய் ஆராய்ச்சிக்கூடம்—காரைக்குடி.

சனிக்கிழமை (30—11—1963)
கோழிப் பண்ணைக்கு மலிவான வீடுகள்.

**கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்**

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மாலை 6-45 மணி முதல் 7-15 மணி வரை கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. அந்த நிகழ்ச்சியில் "கேள்வியும்—பதிலும்" முதலில் இடம் பெறுகின்றன. பின்னர் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறும்.

## திருச்சி வானொலி கிராம நிகழ்ச்சித் திட்ட ஆலோசனைக் கமிட்டியின் யோசனைகள்.

விவசாயிகளுக்கு அக்கறை ஊட்டக்கூடிய விசேஷ ரேடியோ அறிவிப்புகளின் முக்கியத்துவம் பற்றி சமீபத்தில் திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலையத்தில் நடைபெற்ற கிராம நிகழ்ச்சித் திட்ட கமிட்டிக் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது. விவசாயம், கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றின் பிரச்சினைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைப்பதற்கான விசேஷ நிகழ்ச்சிகள், சுபிமானவரை சாகுபடிப் பருவகாலங்களையும், தேவைகளையும் அனுசரித்த ரீதியில் திட்டமிடப்பட்டு ஒலிபரப்பப்பட வேண்டும் என்று கமிட்டி யோசனை கூறியுள்ளது.

கிராம நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு நேரத்தை இரவு ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையே மாற்றுவது உண்மையிலேயே அனுகூலம் படைப்பதாக இருக்கும் என்று கமிட்டி கருத்துத் தெரிவித்துள்ளது.

ஜூலை—செப்டம்பர் காலத்தில் "ஊர்ச் சாவடி", "விஞ்ஞானக் கூடம்", "சரித்திரக் கதைகள்", "தேசப் பக்திப் பாடல்கள்" முதலியவை போன்ற புதிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வந்திருப்பதை கமிட்டி பாராட்டியுள்ளது.

வெளியிடுபவர் :
திரு. ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :
திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

— லூயி பிஷர் "காந்தி வாழ்க்கை".







1. திருச்சியில், காவேரி மீது கட்டப்பட்ட புதிய பாலத்தை, 17-9-63-ல், திரு. காமராஜ் அவர்கள் திறந்துவைத்தார்.

2. திரு காமராஜ் அவர்களுக்கு, கிராமத் தொண்டர் படையினரின் அணிவகுப்பு மரியாதை. (பெரியகுளம் பஞ்சாயத்து யூனியன்.)

3. மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன், கன்னியப்ப பிள்ளைப்பட்டியில், மாணவர்களுக்கு மதிய உணவு படைத்தல்.

4. திருச்சி மாவட்டம், லால்குடி பஞ்சாயத்து யூனியனில் உள்ள வெண்கல வார்ப்புப் பயிற்சி நிலையம். (பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. கே. என். தங்கவேலு, திருச்சி மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் திரு. குருசாமி ஆகியோர் படத்தில் காணப் படுகின்றனர்.)



Regd. No. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1963.



— லூயி பிஷர் " காந்தி வாழ்க்கை ".



# கிராம நலம்

டிசம்பர் 1963



## அல்லல் தீர்க்கும் அரு மருந்து

"சிரமங்களில் சிக்கி அவதியுறும் பொழுதெல்லாம், நான், என் கீதைத் தாயிடம் ஓடுவது வழக்கம். அது இதுவரை என்னைத் தேற்றிச் சமாதானப்படுத்தத் தவறியதே இல்லை. நான் ஒவ்வொரு நாளும் கீதையை அணுகி உதவிபெறும் முறை தெரியவருமானால், கீதையினிடமிருந்து ஏற்கனவே ஆதரவும் உதவியும் பெற்று வருவோர், அதிக உதவி பெறுவதும், அவர்கள் அதில் புதுக் கருத்துக்களைக் காண்பதும் சாத்தியமாகும்...."

"நான் கீதையைச் சிக்கலான சாத்திரமென்று கருதவில்லை. மெத்தப் படித்தவர்களுக்கு, எதிலும் சிக்கல் தென்படுமென்பது இயல்பு. ஆனால், சாதாரண அறிவுள்ள எந்த மனிதனுக்கும், கீதையின் எளிய போதனையைப் புரிந்துகொள்வதில் சிரமமிராது என்பது என் அபிப்பிராயம்...."

"உலகத்திலுள்ள எல்லா மத நூல்களையும் புரிந்து கொள்வதற்கு, கீதை உதவியிருக்கிறது. அவை அனைத்திலுமுள்ள பரம ரகசியங்களையும், அது எனக்கு விளக்கிக் காட்டுகிறது. நான் அவைகளனைத்தையும் இந்து சாத்திரங்களைப்போலவே மதிக்கிறேன். இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், பார்சிகள் என்பவையெல்லாம் அழைப்பதற்கு உதவியான பெயர்களே. இப் பெயர்களை மறந்து விடுகையில், இவர்களிடையே எனக்கு வேற்றுமையே தெரிவதில்லை...."

மகாத்மா காந்தி
["கீதையின் சாரம்" என்ற நூலிலிருந்து]


# கிராம நலம்



252 GU.
15 DEC 963


"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்


மாடி 9 | டிசம்பர், 1963


## "ஒன்று பட்டால் உண்டு வாழ்வே"

முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம்

ஒற்றுமையே, ஒரு நாட்டின் உயிர்நாடி. மக்களின் மன உறுதிதான், உண்மையான பலம். அமைதியான அபிவிருத்திக்கு மட்டுமல்ல, எதிர்பாராத ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கும், இவ்வ அவசியமாகும்.

சென்ற அக்டோபர் மாதம் 20-ம் தேதி, சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் மறக்கமுடியாத நாளாகும். அன்று, சீனு அராஜகப் படையெடுப்பில் இறங்கி, இந்தியாவைத் தாக்கிற்று.

இந்தத் தாக்குதல், இந்தியாவைத் தட்டி எழுப்பிவிட்டது. சுதந்திரம்தான் ஒரு நாட்டின் உயிர் என்பதை மக்கள் அறிந்தனர். தங்கள் நல்லுயிர் ஈந்தும் நாட்டைக் காக்க அணி திரண்டனர்.

### ஒற்றுமையே நாட்டின் ஆணிவேர்

இந்தியா என்பது என்ன? மலைகளும் வயல்வெளிகளும் நிறைந்த ஒரு நிலப்பரப்பா? இது மட்டும் இந்தியா அல்ல. நாற்பத்து நான்கு கோடி மக்களும் சேர்ந்ததுதான் இந்தியா என்ற புனித பூமி. ஆகையினால், நாம் ஒவ்வொருவரும், சீனப் படையெடுப்பால் பாதிக்கப்பட்டோம். அதைத் தகர்த்தெறிய, நம்மால் ஆன கடமையைச் செய்ய உறுதிபூண்டோம். இந்த உறுதிக்கு ஆணிவேர், இந்திய ஒற்றுமையாகும்.

நமது நாடு, ஒற்றுமையாக இருந்த நாடு. ஒற்றுமை குன்றியதால், இடைக்காலத்தில் நலம் அழிந்த நாடு. மீண்டும் ஒற்றுமை அடைந்ததால், நலமெலாம் பெற்றுப் பொலிவு பெற்றுவரும் நாடு. இந்த ஒற்றுமையைக் கட்டிக் காப்பதிலும், இதை மேலும் வலுப்படுத்துவதிலும்தான், இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. இதை வலியுறுத்தவே, இன்று தேசிய ஒருமைப்பாடு தினத்தை, நாம் கொண்டாடுகிறோம். இந்தியாவின் ஒற்றுமையில், நமக்குள்ள இதயபூர்வமான விசுவாசத்தை, இன்று நாம் புதுப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னால் சிதறிக் கிடந்த பகுதிகளைப் பிணைத்து, பிரிட்டிஷார் ஒரே ஆட்சியை ஏற்படுத்தினர். ஆனால், இந்த நாட்டை அவர்கள்தான் ஒன்றுபடுத்தினர் என்பது சரியல்ல. தங்கள் வசதிக்காக ஆண்ட அந்நியர்கள், மக்களிடையே இல்லாத புதிய உணர்ச்சியை ஏற்படுத்தமுடியாது. ஏற்கெனவே இருந்த அடிப்படையான ஒற்றுமைக்கு, அவர்கள் ஓர் உருவம் தந்தனர். தபால் வசதிகள், தந்திக் கம்பிகள், ரயில் பாதை ஆகியன எல்லாம் இந்தப் பரந்த நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு உதவின. ஆனால், அடிப்படையான ஒற்றுமை உணர்வு, ஏற்கெனவே இருந்து வந்தது.

அகில இந்தியாவிலும் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒற்றுமை, மக்களின் வாழ்க்கையில் ஊடுருவி நிற்கிறது. இந்த நாட்டில், காலமெல்லாம் நிலைத்துள்ள ஒரு தனிப்பண்பு உண்டு. அது தான், இந்தியப் பண்பு. பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடியபோது "நாங்கள் இந்தியர், எங்கள் நாடு இந்தியா" என்றே சொன்னோம்.

## பண்டைய பாரதத்தின் தனிப்பண்பு

சமயம், சமூக உறவு ஆகியவைகளிலும், காலமெல்லாம் ஒருவிதமான பிணைப்பு இருந்து வந்திருக்கிறது. ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு மூலைகளில் நான்கு மடங்களை ஏற்படுத்தினர். வடக்கே ஜோதிர் மடம், மேற்கே துவாரகா மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம் ஆகியவை அவர் ஏற்படுத்தியவை ஆகும். வட இந்தியாவிலிருந்து தல யாத்திரை புறப் பட்டவர்கள் ராமேஸ்வரம் வந்தனர். தென்னிந்தியாவிலிருந்து சென்ற யாத்ரீகர்கள் காசியைத் தரிசிப்பதைப் பெரும்பேறுகக் கருதினர். நமது இதிகாசங்கள், கதைகள், சங்ககால நூல்கள் பலவும், தேச ஒருமைப்பாட்டை உயிர் மூச்சாகக் கொண்டுள்ளன. இந்த நாட்டின் கலாசாரம், ஒன்றுடன் ஒன்று பிணைந்த மணிமாலை போன்றது.



பொதுப் பாரம்பரியம், சரித்திரம், தனிப் பண்பாடு உடையவர்களாக இருப்பதால், மக்களிடையே வேற்றுமைகளே கிடையாது என்பதல்ல. மக்கள் அனைவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் அல்ல. அப்படி இருந்தால், அதில் அழகும் இல்லை. இந்தப் பரந்த நாட்டின் பல்வேறு மாநிலங்களில், பல இனத்தவர், பல மதத்தினர், பல மொழியினர் வாழ்கிறோம். ஒவ்வொரு பிரிவாருக்கும் தனிப் பழக்க வழக்கங்களும், பாரம்பரியங்களும் உள்ளன. கால வெள்ளத்தில், இந்தத் தனிச் சிறப்புகள் அழிந்துபோகும்படி விடாமல், காப்பாற்றப்பட்டும் வந்திருக்கின்றன. உறவும், தொடர்பும் கொண்டு வாழ்ந்ததால், எந்த மொழியும் அழிந்து விடவில்லை. எந்தக் கலாசாரமும் மறைந்து விடவில்லை. சிறப்பான அம்சங்கள் பலவும் செழித்து வளர்ந்தபடியே உள்ளன. இந்தப் பல சிறப்புகளையும் கொண்ட பொதுப் பண்புதான், இந்தியப் பண்பு.

இந்திய சுதந்திரத்துக்காக நாம் போராடியபோது, நாடு முழுவதற்கும்தான் போராடினோம். வங்காளம் பிரிக்கப்பட்டபோது, வங்க மாகாணம் மட்டுமல்ல, தேசம் முழுவதுமே கொதித்தெழுந்தது. காந்தியடிகள், சம்பரானில் குடியானவர்களுக்காக சத்தியாக்கிரகம் ஆரம்பித்தபோது, நாட்டு மக்கள் அனைவருமே, அந்தக் குடியானவர்கள் மீது அனுதாபம் கொண்டனர். குவெட்டா பூகம்ப நிவாரணத்துக்காகத் தேசத்தின் நாலாப் பகுதிகளிலும் மக்கள் அள்ளிக் கொடுத்தனர். காந்தியடிகள், சத்தியப் போர் மூலமும், நிர்மாணத் திட்டங்கள் மூலமும் நாடு முழுவதிலும் தேசிய உணர்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தார். அந்த ஒற்றுமை உணர்ச்சியின் கனிந்த கனியாகத்தான் சுதந்திரம் கிட்டியது.

## உரிமைக்குப்பின் ஏற்படும் பிரச்சினைகள்

மனித வாழ்க்கையில் ஏற்படுவதுபோல், ஒரு நாட்டின் வாழ்விலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கரம்பு நிலமாக இருக்கும்போது அதை யாரும் கவனிப்பதில்லை. பண்படுத்தப்பட்டு, பூத்துக் குலுங்கி நிற்கும் நிலமானால், பலருக்குப் பலவிதமான தன்னல நாட்டம் ஏற்படுகின்றது. இந்த நாடு அடிமை நிலையில் இருந்தபோது, காணப்படாத பல கோரிக்கைகள், இன்று, உரத்த குரலில் பேசப்படுகின்றன. ஜாதி வாதம், வகுப்பு வாதம், பிரதேச நலன் சம்பந்தமான கோரிக்கைகளை எல்லாம் நாம் பார்க்கிறோம். நாம் வாழ வேண்டும், வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை. ஆனால்,



அந்த ஆசையும் லட்சியமும் தூய்மையானவையாக இருக்கவேண்டும். நாம் அனைவரும் வாழவேண்டும்; நாம் அனைவரும் முன்னேற்றம் காணவேண்டும். இந்த வகையில், மனநிலை விரிவடைய வேண்டும். பிளவு மூலம் சுவர் எழுப்புவோர், நாட்டுக்கோ, கலாசாரத்துக்கோ நன்மை செய்யவில்லை.

## ஒற்றுமை உள்ளத்திலே வேரூன்றி வளரவேண்டும்

ஒற்றுமையை, தேச ஒருமைப்பாட்டை, கல்லாலோ காரையாலோ கட்ட முடியாது. மனதிலே இதை வளர்க்கவேண்டும்; இப்படி வளர்ப்பதற்குக் கல்விதான் கண்கண்ட வழி. இளமையிலிருந்தே, குழந்தைகளிடையே ஒற்றுமை, வீரம், நாட்டுப்பற்று முதலிய பண்புகளை வளர்க்கவேண்டும். பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முக்கிய இடம் அளிப்பதும் அவசியமாகும்.

உறவும் நட்பும் மிகப் பெரிய செல்வங்கள். இந்தச் செல்வங்களை வளர்க்கவேண்டுமே தவிர, குறைக்கலாகாது. இந்த நாட்டுக்குப் புதுவாழ்வை அளித்த தேசிய இயக்கம், வலுவான ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற முயற்சி, படிப்படியாகப் பயனளிக்கத் தொடங்கிவிட்டது. பல்வேறு பகுதி மக்களுக்குமிடையே என்றும் இருந்துவந்த உறவு மேலும் உரம் பெற்று வருகிறது.

இந்தியா இன்று உலகில் மிகச் சிறந்த ஜனநாயக நாடாக மலர்ந்து வருவதைப் பார்க்கிறோம். அபிவிருத்தித் திட்டங்கள் மூலம், நாட்டின் வளம் பெருகிவருகின்றது. இதன் முழுப் பலனையும் காண்பதற்காகவும் நம் ஒற்றுமை வலுப்பெற வேண்டும். மாநிலங்கள் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அவைகளுக்கிடையே உறவு பலப்படுவது அவசியமாகும். கனிப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் முதலியவைகளில் தேவைகளைப் பெறவும், உபரிப் பொருள்களை விற்பனை செய்யவும், மாநிலங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ வேண்டியிருக்கின்றன. ஆறுகளின் உபரி நீரைப் பகிர்ந்து கொள்வதிலும், மாநிலங்களுக்கிடையே மின்சார இணைப்பு ஏற்படுத்துவதிலும் இன்று முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இத்துறைகளில் தக்க பலன் காண, உணர்ச்சி பூர்வமான ஒற்றுமையே சிறந்த வழியாகும்.

காந்தியடிகள் மறைவுக்குப் பின், அவரது குரலாக விளங்கும் நம் ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்கள், இன்று தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஜீவ சின்னமாக விளங்குகிறார். அவரது வாழ்வும், உழைப்பும் இந்திய மக்களுக்குக் கிடைத்த ஒப்பற்ற வாய்ப்புகள். அவரது விரிந்த உள்ளத்தையும் உழைப்பையும் புரிந்து கொண்டு, நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றல் நமக்கெல்லாம் வளரவேண்டும்.

## ஒற்றுமை உள்ளத்துடிப்பாக மலரவேண்டும்

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு, ஓர் இயக்கமாக நாடெங்கும் பரவி வருவது, மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். 1961-ல் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டில், ஒரு நல்ல முடிவு மேற்கொள்ளப்பட்டது. மக்களில் வயது வந்த ஒவ்வொருவரும் ஒருமைப்பாடு உறுதி மொழி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டது. நாகரிக சமுதாயக் கொள்கையிலும், தகராறுகளை அமைதியான முறையில் தீர்ப்பதிலும், வன்முறைகளைத் தவிர்ப்பதிலும் நம்பிக்கை தெரிவிப்பதே அந்த உறுதிமொழியாகும்.

இந்த உறுதிமொழி இந்திய மக்கள் அனைவரின் இதயத் துடிப்பாகவும் இருக்கவேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கூடி வாழ்ந்தால் கிடைக்கும் நன்மை, நம்மை வாழ்விப்பதோடு, எதிர்காலச் சந்ததியினரையும் வாழ்விக்கும். இந்த உண்மையைப் பத்திரிகைகளும், ஆசிரியர்களும், சமூகத் தொண்டர்களும், மக்களுக்கு விளக்கிச் சொல்லி, நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

ஜெய் ஹிந்த் !

*[தேசிய ஒருமைப்பாடு தினவிழாவை ஒட்டி, 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ந் தேதி, சென்னை வானொலியில் நிகழ்த்திய உரை.]*



G.N.—1எ

# பஞ்சாயத்து ஆட்சி நிதிகள் பற்றிய ஆராய்ச்சிக்குழுவின் அறிக்கை—1963

## [REPORT OF THE STUDY TEAM ON PANCHAYATI RAJ FINANCES-1963]

### "நிதியைப் பெருக்கி, நலம் பல பெறுவோம்"

[பஞ்சாயத்து ஆட்சி, பாரத தேசம் முழுவதிலும், அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களில், இந்தப் புதிய ஆட்சி முறையை அமைத்துச் செயல்படுவதற்கான ஏற்பாடுகள், விரிவாக நடைபெற்று வருகின்றன.

''குடிமக்கள் சொன்னபடி குடி அரசு'' நடத்தும் ஜனநாயகத் திட்டத்தின் முக்கிய அம்சமாகவும், நம் நாட்டில் வாழும் பெருவாரியான கிராமவாசிகளுடைய பொறுப்புணர்ச்சியின் மலர்ச்சியாகவும் உருவாகியிருப்பதே, புதிய பஞ்சாயத்து ஆட்சி. எனவே, இப்புதிய ஆட்சிமுறை, நம்நாட்டின் தல ஆட்சித்துறையில், மகத்தானதொரு திருப்பு மையமாகும்.

தங்களுடைய பிரதேசங்களில் நடைபெறும் பணிகளிலும், ஆட்சி நிர்வாகத்திலும், தங்களுக்கும் பங்குண்டு என்ற பொறுப்புணர்ச்சியை, கிராம மக்கள் புரிந்துகொண்டு, நாட்டு நிர்வாகத்தில் அவர்கள் நேரடியாகப் பங்குபெறச் செய்யும் ஜனநாயக அமைப்புமுறையே, புதிய பஞ்சாயத்து ஆட்சியாகும்.

பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள், திறம்பட செயல்பட வேண்டுமெனில், அவைகளுக்கு, அதற்கான போதிய நிதி வசதிகள் அவசியம் வேண்டும். இந்த அவசியத்தை உணர்ந்து, பஞ்சாயத்து ஆட்சியின் நிதிகளைப்பற்றி ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க, பாராளுமன்றத்தின் ராஜ்ய சபை உறுப்பினரும், பொருளாதாரத்துறையிலும், நிதி நிலை ஆராய்ச்சியிலும் பழுத்த அனுபவம் பெற்றுள்ளவருமான திரு கே. சந்தானம் அவர்கள் தலைமையில், ஒரு குழுவினை, **(STUDY TEAM ON PANCHAYATI RAJ FINANCES)** 1962-ம் ஆண்டு ஜூலைத் திங்களில், பாரத அரசாங்கம் நியமித்தது. இக்குழுவினர், நமது நாட்டில் பல மாநிலங்களுக்கும் விஜயம் செய்து, பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தப்பட்ட, அதில் அக்கறை கொண்டுள்ள பல்வேறு பிரமுகர்களையும், நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாத ஆரம்பத்தில், தமிழ்நாட்டுக்கும், இக்குழுவினர் விஜயம் செய்திருந்தனர். இக்குழுவினர், மத்திய அரசினிடம் சமர்ப்பித்த அறிக்கையின் முழு வாசகத்தை, தமிழில் அப்படியே பிரசுரிப்பதில், 'கிராம நலம்' பெருமகிழ்ச்சி அடைகிறது.

புதிய பஞ்சாயத்து ஆட்சி, நம்நாட்டில், இன்னும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது என்பது, உண்மைதான். ஆனாலும், எதிர்காலத்தில், நம்நாட்டில், பஞ்சாயத்து ஆட்சியானது, ஓர் உறுதிப்பாடான நிலையினை அடையவும், மக்களின் நல்வாழ்வுக்கான ஆக்கப்பணிகளை அது மேன்மேலும் ஊக்கத்துடன் செயல்படுத்தவும், இக்குழுவின் சிபாரிசுகள் உறுதுணையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை, சிபாரிசுகள்தான். சட்டபூர்வமாக, யாரையும் கட்டுப்படுத்துவன அல்ல. இனிமேல்தான், அரசாங்கம், இவைகளைப் பரிசீலனை செய்து, அவற்றின் பேரில், வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். ஆனாலும், பஞ்சாயத்து ஆட்சி நிதிகள் பற்றி விரிவான முறையில் பரிசீலனை செய்து, ஆராய்ச்சிக் குழுவினர் அளித்துள்ள இவ்விளக்கங்களை, பஞ்சாயத்து ஆட்சியில் அக்கறை கொண்டுள்ளோர் அனைவரும் தெரிந்து கொள்வது, மிகவும் அவசியம். இந்த அறிக்கையில் கண்டுள்ள விஷயங்களை, தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ஆட்சியினை ஏற்று நடத்தும் தலைவர்கள், அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் அனைவருமே, கவனத்துடன் படித்து, அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றி, தங்களுக்குள்ளே விவாதிப்பதினாலும், கருத்துக்களை பரிமாறிக்கொள்வதினாலும், புதிய பஞ்சாயத்து ஆட்சி பற்றிய அறிவு விளக்கப்பணி, மேலும் பெருகி வளரும் என்பதில் ஐயமில்லை.

சிறப்பாக, பஞ்சாயத்து யூனியன் செய்தி நிலையங்களுக்கும், பயிற்சி வகுப்புகளுக்கும் ஆராய்ச்சி வகுப்புகளுக்கும், இந்த விசேஷ மலர், பயன்படும் என நம்புகிறோம். குறிப்பாக, கிராமத் தொண்டர் படையின் அறிவு அணி பிரிவைச் சேர்ந்தவர்கள், இதைப் பெருவாரியான அளவில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டே, இம்மாத 'கிராம நல' இதழே, இவ்வறிக்கை முழுவதையும் தாங்கி வருகின்ற சிறப்பிதழாக வெளியிடப்படுகிறது. வழக்கமாக வெளிவரும் விஷயங்கள் இம்மாத இதழில் இடம் பெறுமைக்கு, வாசக நேயர்கள் மன்னிப்பார்களாக!

—ஆசிரியர்.]



# பஞ்சாயத்து ஆட்சி நிதிகள் பற்றிய ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கை—1963.

## அத்தியாயம் 1

### முகவுரை

*1.1.* *இந்திய அரசாங்கத்தின், சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்து ஆட்சி கூட்டுறவுத் துறை அமைச்சகத்தின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதியிட்ட தீர்மானம் எண். 4/78/61—பஞ்சாயத்தில், எடுக்கப்பட்ட தீர்மானத்தினை ஒட்டி, பஞ்சாயத்து நிதிகள், ஆதாரங்கள் பற்றி ஆராய்வதற்கான ஆராய்ச்சிக் குழு* (Study Team on Panchayati Raj Finances) *அமைக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் வருமாறு :—*

> ''*பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள்* (Panchayati Raj Institutions) *தங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றவேண்டி, அவைகளுக்குப் போதிய வசதிகளை* (Resources), *மாற்றிக்கொடுப்பதின் மூலமோ, மற்ற முறைகளிலோ, கிடைக்கப் பெறுமாறு செய்தல், பஞ்சாயத்து ஆட்சியின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். இந்த நிதி ஆதாரங்களை, பெருவாரியாக, கீழ்க்கண்ட முறையில் வகுத்துச் சொல்லலாம் :— அரசாங்கங்களிலிருந்து மானியங்கள், கடன்கள் என்ற வடிவத்தில் கிடைக்கப் பெறுபவை ; பஞ்சாயத்து ஆட்சி நிர்வாக அமைப்பில் மேல் மட்டத்தில் உள்ள அமைப்புகளிலிருந்து கீழ் மட்டத்தில் உள்ள அமைப்புகளுக்கு நிதிகளை மாற்றுதல் ; பஞ்சாயத்து நிறுவனங்கள் தங்களுக்குள்ள சொந்த அதிகாரங்களின் கீழ் விதிக்கக்கூடிய வரிகள், தீர்வைகள், செஸ் போன்றவற்றின் மூலம் கிடைக்கின்ற வருவாய்கள் ; இந்த நிறுவனங்கள் அபிவிருத்தி செய்கின்ற, ஆதாயம் தரக்கூடிய அமைப்புகளிலிருந்து* (remunerative assets) *கிடைக்கின்ற வருமானங்கள் ; பொது நலத்தில் ஆர்வம் கொண்டுள்ள நபர்கள் அளிக்கின்ற நன்கொடைகள் ; மக்கள், தாமே, கட்டாயமில்லாமல், மனமுவந்து அளிக்கின்ற நன்கொடைத் தொகைகள் ஆகியவையாகும். 1961-ல் ஹைதராபாத்தில் நடைபெற்ற தல நிறுவனங்களின் பொதுமன்றத்தின் ஐந்தாவது, ஆறுவது கூட்டங்களும், பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான மாநில அமைச்சர்களின் மகாநாடும், சில சிபாரிசுகளைச் செய்தன. மாநில அரசுகளிலிருந்து பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு நில வருவாயினை மாற்றுதல் ; இந்த நிறுவனங்கள் விதிக்கவேண்டிய வரிகள் ; பஞ்சாயத்துக்கள் அமைக்கக்கூடிய ஆதாயம் வரக்கூடிய அமைப்புகள் பற்றியதே, இந்தச் சிபாரிசுகளாகும்.*
>
> *மத்திய, மாநில அரசுகளுக்கு கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்கள்* (Resources) *பற்றியும், பல்வேறு திட்டங்களுக்கு அந்த நிதிகளை ஒதுக்கீடு செய்தல் பற்றியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையறை செய்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீடுகள் பற்றியும், அவைகளில் எதெதற்கு முதலிடங்கள் தரப்படவேண்டும் ; அதற்கான பூர்வாங்கமான இலக்குகள்* (Physical Targets) *என்ற இவைபற்றியன எல்லாம் நடைமுறையில் கையாளப்பட வேண்டும். இருந்தும், குறிப்பிடத்தக்க பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்படவேண்டியுள்ளது. வரையறுக்கப்பட்டுள்ள பூர்வாங்க இலக்குகளை அடைவதற்காக வேண்டி, திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுடன், மேற்கொண்டு தாங்களே சில ஆதாரங்களையும், இந்த நிறுவனங்கள் திரட்டவேண்டியுள்ளது. பெரிய வேலைத் திட்டங்களை தாங்களே முன்வந்து எடுத்து நடத்த விரும்புகின்ற பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், மேற்கொண்டு கூடுதலாகத் தேவையுள்ள ஆதாரங்களைத் தாங்களே திரட்டிக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலையில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாநில அரசுகளிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களையும், எந்த நிபந்தனைகளின்கீழ் இந்த ஆதாரங்கள் கிடைக்கும் என்பதையும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் தாங்களாகவே எழுப்பக்கூடிய நிதி ஆதாரங்கள் என்னென்ன என்பதையும் திட்டவட்டமாக வரையறை செய்துகொள்ளவேண்டியது மிகவும் முக்கியமானதாகிறது, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு இந்த நிதி ஆதாரங்கள் கிடைக்கப்பெறுவது என்றால், அதற்காக வரிவசூல் செய்கின்ற முறையும், வற்புறுத்தி பெறுகின்ற முறைகளைக் கையாளுகின்ற பொறுப்பேற்றுள்ள அமைப்புகளுக்கு உள்ள*

அதிகாரங்கள் சுலபமான முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி நிர்வாகத்தில் இயங்குகின்ற பல்வேறு அமைப்புகளிடையே, இந்த நிதி ஆதாரங்களை ஒழுங்கான முறையில் பிரித்து அளிப்பதென்பது, கவனத்திற்குரிய இன்னொரு சிக்கலான பிரச்னையாகும்.

2. இந்தப் பிரச்னைகளும், இது சம்பந்தமான மற்ற விஷயங்களும் சமீபகாலமாக இந்திய அரசாங்கத்தின் கவனத்தைக், கவர்ந்து வந்தது. அதையொட்டி, இந்தப் பிரச்சினைகளையெல்லாம், விரிவான முறையில் ஆராய்ந்து, வேண்டிய சிபார்சுகளைச் செய்வதற்காகவேண்டி, இந்திய அரசாங்கம் ஒரு குழுவினை அமைப்பதென்று முடிவு செய்துள்ளது. இந்த ஆராய்ச்சிக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள்.—

திரு கே. சந்தானம், ராஜ்யசபை உறுப்பினர்—தலைவர்.

உறுப்பினர்கள்.—

(1) திரு ஸ்ரீ நாராயண்தாஸ், பாராளுமன்ற உறுப்பினர்.

(2) திரு எம்.ஓய். கோர்பாடே, எம்.எல்.ஏ., மைசூர்.

(3) பேராசிரியர் எம். வி. மாத்தூர், ராஜஸ்தான் பல்கலைக் கழகம், ஜெய்ப்பூர்.

(4) திரு சி. நரசிம்மம், அடிஷனல் அபிவிருத்திக் கமிஷனர், ஆந்திரப் பிரதேசம்.

3. மூன்றுவது திட்டக் கோப்புக்குள், அத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை ஒட்டி, வெவ்வேறு மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்து நிறுவனங்களின் நிதிகளையும், நிதி ஆதாரங்களையும், இக்குழுவானது, பரிசீலனை செய்து, கிழ்க்கண்ட விஷயங்களில் தன்னுடைய சிபாரிசுகளை அளிக்கும்:—

(அ) அதிகாரப் பொறுப்புகள் மாறினதை ஒட்டி, பஞ்சாயத்து நிறுவனங்களிடம், முழுமையாகவோ, ஒரு பகுதியோ ஒப்படைக்கவேண்டிய வருமான ஆதாரங்கள் (நில வருமானம் உட்பட); பஞ்சாயத்து நிறுவனங்களின்கீழ் செயல்படும் ஸ்தாபனங்கள், செர்வீசுகள் முதலியவற்றின் பராமரிப்புக்காக, சில குறிப்பிட்ட ஆதார வசதிகளை ஒதுக்குதல் பற்றிய ஏற்பாடுகள்:—

(ஆ) மாநில அரசுகள் அளிக்கும் மானியங்கள்; அம்மானியங்கள் அளிக்கப்படுவதில் உள்ள நிபந்தனைகள்.

(இ) பஞ்சாயத்து அமைப்புகளுக்கிடையே நிதி சம்பந்தமாக அமையவேண்டிய சுமுக உறவு;

(ஈ) தற்போதுள்ள ஆதார வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள், பஞ்சாயத்து அமைப்புகளுக்குச் சொந்தமானவையும், வருமானம் அளிக்கக்கூடியவைகளாகவுமுள்ள உடைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள்;

மேற்கொண்டும் அதிக அளவில் நன்கொடைகளையும், மக்களே தாங்களாகவே முன்வந்து, மனமுவந்து தானமளிப்பதற்காக வேண்டிய சக்திகளைத் திரட்டவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்.

4. 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதிக்குள் தன்னுடைய அறிக்கையை, ஆராய்ச்சிக் குழு சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஆராய்ச்சிக் குழுவின் தலைமை அலுவலகம் புது டெல்லியில் இருக்கும். எப்பொழுது தேவையோ, அப்பொழுதெல்லாம், ஆராய்ச்சிக்குழு, பயணங்களை மேற்கொள்ளலாம்; இந்த விஷயத்தில் தேர்ந்த ஞானம் உள்ள நபர்களை இக்குழு சந்தித்துப் பேசலாம்.''

1. 2. இந்தத் தீர்மானம் வெளியிடப்பட்டதை ஒட்டி, சந்தேக நிவர்த்திக்காக, இந்தத் தீர்மானத்தில் மூன்றுவது பாராவில் '' மாநில அரசுகள் '' என்ற வார்த்தையானது, பரவலான கருத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதும், அந்த வார்த்தையினுள், யூனியன் நிர்வாகப் பிரதேசங்களும் (Union Territories) அடங்கும் என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

1. 3. எங்களுடைய முதல் கூட்டமானது, 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதியில் நடைபெற்றது. கையாளப்படவேண்டிய அலுவல் நடைமுறையையும், விதிகளையும் அப்பொழுது உருவாக்கியதுடன், எங்களுடைய வேலைத் திட்டத்தைப் பற்றியும், அக்கூட்டத்தில், பரிசிலனை செய்தோம். எங்களுடைய வேலைக்கு சம்பந்தப்பட்ட தேவையான சில தகவல்களை, மாநில அரசுகளிடமிருந்தும், யூனியன் பிரதேசங்களின் நிர்வாக அமைப்புகளிலிருந்தும், பொறுக்கியெடுக்கப்பட்ட சில பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களிடமிருந்தும் கோரிப் பெறுவது என்று முடிவு செய்தோம். பெருமளவு ஆதார வசதிகள் உள்ள ஒரு மாவட்டம், மிகக் குறைந்த ஆதார வசதிகள் உள்ள ஒரு மாவட்டம், என்று இரு மாவட்டங்களை தங்கள் பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கச் சொல்லி, ஒவ்வொரு மாவட்ட அரசுக்கும், யூனியன் பிரதேச நிர்வாக அமைப்புக்கும் நாங்கள் யோசனை கூறினோம். அதேபோல், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாவட்டங்களிலும், இதே அடிப்படையில், தங்கள் அதிகார எல்லைக்குள் உள்ள இரு பஞ்சாயத்து யூனியன்களையும் தேர்ந்தெடுக்கச் சொல்லி யோசனை கூறினோம். அதேபோல், இக்குழுவினர் விஜயம் செய்வதற்காக வேண்டி, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு பஞ்சாயத்து யூனியன்களிலும், இதே அடிப்படையில், இரு பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி யோசனை கூறினோம். மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களின் நிர்வாக அமைப்புகளுக்கும், அதேபோல் அவை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கும் குழுவினரால் அனுப்பப்பட்ட கடிதங்களை, இணைப்பு—1-ல் காணலாம். (இணைப்புக்கள் இந்த மொழிபெயர்ப்பில் சேர்க்கப்படவில்லை.—ஆசிரியர்).

1. 4. சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை அமைச்சகத்தின் பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின், அவர்கள் பூர்வாங்க ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்கள் (Members of the Informal Consultative Committees) என்ற முறையில், நாங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ள வேலைமுறைகளுக்குப் பொருத்தமான கருத்துக்களை அவர்களிடமிருந்து கேட்டுப் பெறுவது மிகவும் உபயோகமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதினோம். அதை ஒட்டி, 1962-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4-ம் தேதியில் அப்படிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் கடிதங்கள் எழுதினோம்.

1. 5. 1962, அக்டோபர் மாத ஆரம்பத்திலிருந்து, 1963, ஜூன் மாத இறுதி வரையில் உள்ள காலவெளியில், ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், மைசூர், தமிழ்நாடு, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், ஒரிசா, கேரளம், பீகார், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு நாங்கள் விஜயம் செய்து, அந்தந்த மாநிலங்களின் முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள் ஆகியோரை நாங்கள் சந்தித்தோம். யூனியன் பிரதேசமான டெல்லியில், ஒரு வட்டார சமிதியையும், ஒரு பஞ்சாயத்துப் பிரதேசத்தையும் நாங்கள் பார்வையிட்டோம். நாங்கள் பார்வையிட்ட அமைப்புகளின் பட்டியல் ஒன்று இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இங்கே சேர்க்கப்படவில்லை—ஆசிரியர்) மாநிலங்களில், பஞ்சாயத்து ஆட்சி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பொதுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளையும், தனிப்பட்ட நபர்களையும், நாங்கள் சந்தித்துப் பேசினோம். உதாரணமாக, சென்னையில், தமிழ்நாடு பஞ்சாயத்துக்களின் யூனியன் பிரதிநிதிகளுடனும், பெங்களூரில், மைசூர் மாநில பஞ்சாயத்து ராஜ்ய பரிஷத்தின் பிரதிநிதிகளுடனும் கூடிக் கலந்து பேசினோம். மைசூர் மாநிலத்தில், பஞ்சாயத்து ஆட்சிச்சட்டம் அமுல்படுத்தப்படுவதை பரிசீலனை செய்வதற்காக வேண்டி, மைசூர் அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியின் தலைவரும், உறுப்பினர்களும் பெங்களூரில் எங்களைச் சந்தித்துப் பேசினார்கள். பாட்னாவில், பீஹார் ராஜ்யத்தின் பஞ்சாயத்து பரிஷத்தின் தலைவரும், அதன் அங்கத்தினர்களும் எங்களைச் சந்தித்தார்கள். மாநிலக் கிராமப் பஞ்சாயத்து மசோதா பற்றிய ஆந்திரப் பிரதேச சட்டமன்றத்தின் கூட்டுப்பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள், நாங்கள் ஹைதாரபாத்தில் இருந்தபொழுது, எங்களை ஒரு கூட்டத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். பஞ்சாயத்து ஆட்சி பற்றிய தரமான அனுபவத்தையும், ஞானத்தையும் பெறுவதில், அருமையான வாய்ப்புகளை இந்தப் பயணங்களும், கூட்டங்களும் எங்களுக்கு அளித்தன; அத்துடன், நாங்கள் மேற்கொண்டுள்ள பணிக்குச் சம்பந்தமான விஷயங்களில் விளக்கம் பெறவும் எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. மனமுவந்த ஒத்துழைப்பை எங்களுக்கு அளித்த எல்லோருக்கும், அதிகாரிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளோம்.

1.6: குஜராத், அசாம், ஜம்மு-காஷ்மீர், மற்றும் டெல்லி தவிர மற்ற யூனியன் பிரதேசங்களையும், எங்களால் விஜயம் செய்ய இயலவில்லை. அதற்காக பெரிதும் வருந்துகிறோம். நாங்கள் இந்தப் பிரதேசங்களுக்கும் விஜயம் செய்ய ஆசைப்பட்டோம். ஆனால், எங்களுடைய வேலையை முடித்துத் தருவதற்காக எங்களுக்கு ஒதுக்கப்பட்ட காலவரையறைக்குமேல், மேற்கொண்டு அவகாசம் கேட்பது நியாயமாகாது என்றே நாங்கள் கருதினோம். இந்த மாநிலங்களிலிருந்தும் பிரதேசங்களிலிருந்தும் எங்களுக்கு கிடைத்த விஷயதானங்கள், தகவல்களிலிருந்து, நாங்கள் விஜயம் செய்த மாநிலங்களில், எங்கும் பொதுப்படையாக இல்லாத வகையில் தனித்தன்மை வாய்ந்ததாக எந்தப் பிரசினையும், அவைகளிலே இல்லை என்பதே எங்கள் கருத்தாகும்.

1:7: எங்கள் அறிக்கையை இரண்டாகப் பிரித்துள்ளோம்: ஒன்று பிரதான பாகம்: அதில் சிபார்சுகளும், யோசனைகளும் கூறப்பட்டுள்ளன. மற்றொரு பாகத்தில், ஒவ்வொரு மாநிலத்திலும், யூனியன் பிரதேசத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்து ஆட்சிமுறை பற்றி சுருக்கமான விவரங்கள் அடங்கியுள்ளன: பிரதான அறிக்கையில் 2-வது பகுதியில் நாங்கள் பிரச்னைகளையும் அம்சங்களையும் எந்த முறையில் அணுகினோம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 3-வது பகுதியில், பஞ்சாயத்துஆட்சி நிறுவனங்களின் அமைப்பு முறையும், கடமைகளும் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன: இந்த நிறுவனங்களின் ஒவ்வொரு நிலையிலும் உள்ள அமைப்புகளின் ஆதாரங்களும், செலவினங்களும் பற்றிய விவரங்களை அடுத்த நான்கு பகுதிகள் விளக்குகின்றன: 8-வது பகுதி, கடன்கள் பற்றியது: வரவு செலவுத் திட்டம், கணக்குகள், கணக்குகளை பரிசீலனை செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றியது, 9-வது பகுதி. 10-வது பகுதியில், சில பொதுப்படையான விஷயங்களைப் பற்றி நாங்கள் குறிப்பிட்டுள்ளோம்: 11-வது பகுதி எங்களுடைய முடிவுரையைக் கொண்டது: பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் அமைப்பு முறை, அலுவல்கள், அவைகளுடைய வரவு செலவுத் திட்டங்கள், கணக்குகள் மாநில அரசுகள் அவைகளுக்கு செய்கின்ற நிதி உதவிகள், அவைகளுடைய பிரதேச நிதி ஆதாரங்கள் பற்றிய சுருக்கமான விவரங்களையும், ஒவ்வொரு மாநிலம் பற்றிய அறிக்கையும் உள்ளிடக்கியுள்ளது: நாங்கள் விஜயம் செய்த நிறுவனங்களின் நிதி நிலை பற்றிய அட்டவணைகளும் இதில் அடங்கியுள்ளன:

1.8: எங்களுடைய விசாரணைக்கு இணங்கி எங்களுக்கு வேண்டிய தகவல்களையும் விவரங்களையும் அளித்தற்கும், எங்களுடைய பயணங்களின் போது எல்லா வசதிகளையும் செய்துதந்ததற்கும் மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேச நிர்வாக அமைப்புகளுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைச் செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்: எங்களுடன் வந்த டைரக்டர்களும், அதிகாரிகளும் எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தனர், நாங்கள் சந்தித்த பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்து அங்கத்தினர்கள், சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் எங்களுக்கு அளித்த ஒத்துழைப்புக்கும், நல்வரவுக்கும் விசேஷமாக நாங்கள் நன்றி செலுத்துகிறோம்: எங்கள் குழுவின் வேலையில் தொடர்ந்து அக்கறை காட்டிவந்த யூனியன் சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு அமைச்சர் திரு எஸ். கே. டே அவர்களுக்கும், அவருடைய துணை அமைச்சர் திரு. பி. எஸ். மூர்த்தி அவர்கட்கும் எங்கள் நன்றி உரித்தாகும்: அத்துடன், அந்த அமைச்சகத்தின் செயலாளர், அடிஷனல் செயலாளர் மற்ற அதிகாரிகள் ஆகியோர் தாங்களே முன்வந்து எல்லா உதவியையும் செய்தனர். அவர்களுக்கும் எங்கள் நன்றி. இறுதியாக எங்கள் குழுவின் வேலையின் முழு பளுவையும் ஏற்கவேண்டிய நிலையில் இருந்த எங்கள் குழுவின் செயலாளர், திரு ஆர். சரண் அவர்கட்கும், தன்னுடைய திறமையான உதவியை அளித்த ஆராய்ச்சி அதிகாரி திரு. ஆர். ரகுநாதன் அவர்கட்கும் தலைவரின் தனி உதவியாளர் ஸ்ரீபுதிஷ் சந்திரா அவர்கட்கும், எங்களுடைய உதவியாளர், மற்றும் இரு டைப்பிஸ்டுகளுக்கும் நாங்கள் நன்றி செலுத்துகிறோம்.

---

# அத்தியாயம் 2

## பொதுப் பரிசீலனை (General Approach)

2:1: பஞ்சாயத்து ஆட்சி பற்றிய பிரச்னைகளை, எங்கள் குழுவானது எப்படிப் பொதுப்பட்ட முறையில் அணுகியது என்பதைப்பற்றி ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுக் காட்டுவது நல்லது. எங்களுடைய சிபார்சுகளைப் பற்றி தெளிவான முறையில் புரிந்துகொள்ள, இது வசதியாக இருக்கும்:

2:2: அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரங்களை, பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளிடையே, பரவலான முறையில் பிரித்துக் கொடுப்பதென்பது, இந்தியக் குடியரசில் ஒரு நிரந்தரமான அம்சமாக என்றென்றும் இருக்கும் என்றும், சமீப சில ஆண்டுகளில் இந்த அமைப்புகள் பெற்றுள்ள வளர்ச்சியானது, அரசியல் அமைப்புச் சட்டத்தின் (Constitution) 40-வது ஷரத்தில் கண்டுள்ளபடி, "ராஜ்யமானது, கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடுகள் செய்து, சுய ஆட்சியின் உறுப்புகளான அவை வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளையும் அதிகாரங்களையும் அளிக்கவேண்டும்" என்ற நெறிமுறைக் கோட்பாட்டுக்கு (directive principle) ஒப்பவே ஏற்பட்டுள்ளது என்பதையும், நாங்கள் முதலில், அப்படியே ஏற்றுக்கொண்டோம்:



2. 3: இந்த நெறிமுறைக் கோட்பாடு, கிராமப் பஞ்சாயத்துக்களை மட்டும் குறித்தாலும், இந்த விளக்கம், பஞ்சாயத்து ஆட்சியின் பல்வேறு கட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளையும் உள்ளடக்கியுள்ளது என்று, மிகவும் சரியான முறையில், இந்தியாவில் உள்ள மத்திய, மாநில அரசுகள் எடுத்துக்கொண்டுள்ளன என்றே நாங்கள் நினைக்கிறோம்.

2. 4 : மாநில அரசுகள் ஏற்படுத்தியுள்ள பல்வேறு வகையான பஞ்சாயத்து அமைப்புகளின் குணாதிசயங்களைப் பற்றியோ, சிறப்பியல்புகளைப் பற்றியோ, குழுவானது ஆராயவில்லை. பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொடுத்திருக்கும் முறையானது, ஒன்றுக்கொன்று மிகவும் விரிவான முறையில் மாறி மாறிக் காணப்படுகிறது. தங்களுடைய மக்களுக்கு எப்படிப்பட்ட அமைப்புகள் மிகவும் பொருத்தமானவை என்பது அந்தந்த மாநில அரசுகளுக்கு தெரியும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். மாற்றப்பட்ட அதிகாரங்களையும், கடமைகளையும் ஒட்டி, அவைகளுக்கு கிடைக்கும்படிச் செய்யப்பட்டுள்ள நிதிவசதிகளின் தன்மை பற்றியே நாங்கள் ஆராய்ச்சி செய்தோம்.

2. 5 : இந்த அமைப்புக்களில் ஒவ்வொன்றும், மூன்று வகையான அலுவல்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. முதலாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களாக (Elected body) அவை இருப்பதனால், அவை ஒவ்வொன்றும் ஓரளவுக்கு தன்னைத் தானே கவனித்துக்கொள்கிற தன்மையுடையதாகவும், வெளியார் தொடர்பின்றி தனித்தியங்குவதாகவும், இருக்கவேண்டியுள்ளது. இன்னொரு அமைப்புக்கு வெறும் கீழ்ப்படிதலாக உள்ள ஒரு ஏஜென்சியாக இருக்கின்ற நிலைமையை, தேர்ந்தெடுக்கப்படுகின்ற எந்த அமைப்பும் விரும்பாது. இரண்டாவதாக, தேசீய அடிப்படையில் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி காணுதல் என்பது, இந்தியப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான சிறப்பியல்பாகும். ஆகவே, வருங்காலத்தில் அமைக்கப் பெறுகிற ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்தி உருவாக்குவதில், பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் சிறந்த பங்கினை ஏற்றுக்கொள்ளவேண்டும். தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்குத் தேவையான திட்டங்களை நிர்ணயிப்பதில், இந்த அமைப்புக்களின் கருத்துக்களை மேலே உள்ளவர்களுக்கு எட்டும்வகையில், சரியான நடைமுறை ஏற்பாடுகள் உருவாக்கப்படவேண்டும் ; மூன்றாவதாக, திட்டங்களை நடைமுறையில் நிறைவேற்றி வைக்கின்ற சமயத்தில், முன்பே ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள, தேசம் பூராவுக்குமான அமைப்புக்கு பொதுவான முறையில், ஒட்டிப்போகின்ற அளவிலேயே, தங்களுடைய பிரதேசங்களின் தேவைகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் மக்களுடைய விருப்பங்களுக்கும் ஒப்ப, திருப்பி மாற்றி அமைக்கின்ற வசதியினையும், வேண்டிய தூண்டுதலையும், அந்த அமைப்புகள் பெறுவதற்கு போதிய வசதியான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

2. 6 : ஒவ்வொரு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புக்கும், ஒதுக்கப்பட்டுள்ள அலுவல்களை நடத்தி வைக்க, நிதி வசதிகள் போதுமானவையாக இருக்க வேண்டும். அரசுகளிடமிருந்து போதிய உதவியைப்பெறுமல், உலகத்தில் எங்கும் தல ஆட்சி அமைப்புகள் வேலை செய்ய முடியாது. அதே சமயத்தில், மாநில, மத்திய அரசுகள் அளிக்கின்ற உதவிகளையே முழுக்க முழுக்க நம்பிக் கொண்டிருக்கிற ஒரு நிலையில் இந்த அமைப்புகள் இருந்தால், அவைகளுடைய மதிப்புக்கும், சுய ஆட்சித் தன்மைக்கும், அந்த நிலை பங்கம் விளைவிப்பதாகும். ஆகவே, இந்த அமைப்புகளின் வளர்ச்சிக்கும், நிலையான தன்மைக்கும் அவைகளுக்கு போதிய, மேலும் மேலும் பெருகுகின்ற நிலையில் உள்ள ஆதாரங்கள் கிடைக்கப் பெறவேண்டும். அந்த ஆதாரங்கள், அவைகளால் உபயோகப்படுத்தக் கூடியதாகவும், மேலும் பெருகக் கூடியதாகவும், முழுக்க முழுக்க அவைகளின் அதிகாரத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

2. 7 : தன்னால் நியமிக்கப்பட்ட அலுவலராக இருந்தாலும் சரி, மாநில அரசினால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவலர்களாக இருந்தாலும் சரி, அந்த சிப்பந்திகள் எல்லோர் பேரிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து நிறுவனத்திற்கும் அதிகாரம் இருக்கவேண்டும் என்பதை, மிகவும் அவசியமானதொன்றாக நாங்கள் கருதுகிறோம். இப்படிப்பட்ட அதிகாரம் அவைகளிடம் இருக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது, சட்டங்கள், விதிகள் மூலம் அலுவலர்களை தேர்ந்தெடுப்பதில் சரியான வழி முறைகள் கையாளப்படத் தேவையில்லையென்றோ, அல்லது சிப்பந்திகளுக்கு அலுவல் முறையில் போதிய பாதுகாப்பு இருக்கக்கூடாதென்றோ, பணிபுரிவதில் நியாயமான நிபந்தனைகள் கூடாதென்றோ, அர்த்தம் கொள்ளக்கூடாது. இதற்காக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களினால் அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகளின் குறிப்பிடத்தக்க வகையானவர்கள், மாவட்ட அல்லது மாநில அடிப்படையில் தனிப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். பொதுப்படையாக சொன்னால், இந்த நிறுவனங்கள் தங்களுடைய சிப்பந்திகளின் மேல் செலுத்துகின்ற அதிகாரமானது, மத்திய அரசினால் மாநில அரசின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சிப்பந்திகளின் பேரில், மாநில அரசுக்குள்ள அதிகாரத்திற்கு ஒப்பானதாக இருக்க வேண்டும்.

*2. 8:* பஞ்சாயத்துக்கள் எந்த முறையில், எந்த அளவுக்கு பஞ்சாயத்து சமிதிகளினுல் மேற்பார்வை செய்யப்படலாம் ; அவைகளின் வேலைகள் ஒருமுகப்படுத்தப்படலாம் ; அதே மாதிரி பஞ்சாயத்து சமிதிகள் ஜில்லா பரிஷத்துக்களினுல் எந்த அளவுக்கு மேற்பார்வை செய்யலாம் ; அவைகளுடைய அலுவல்கள் ஒருமுகப்படுத்தப்படலாம் என்ற இந்த விஷயம் மிகவும் கடினமான ஒன்ருகும். இதில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். நாங்கள் இந்தப் பிரச்னையில் நடைமுறைக்கு ஒத்துப்போகக் கூடிய ஒரு நோக்கத்தை கையாண்டுள்ளோம். திறமையான முறையில் செயல்படுதல் ; நிதி நிர்வாகம் ; வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் இந்த அம்சங்களினூடே உள்ள பல்வேறு வகையான உறவு முறைகள் பற்றிய அம்சங்களோடு, எங்களுடைய விசாரணையை நாங்கள் வரையறை செய்து கொண்டுள்ளோம்.

*2. . 9* பஞ்சாயத்து ஆட்சி என்பது, நிரந்தரமான ஒன்று என்பதை நாங்கள் ஓர் உறுதியான அம்சமாகக் கொண்டபோதிலும், அதனுடைய நோக்கம், அளவு, அமைப்பு, நிதி ஆதாரங்கள் ஆகியவை, நடைமுறையில் ஏற்படுகின்ற அனுபவத்தின் விளைவாக மாறத்தான் செய்யும். எந்த வகையான அமைப்புக்கும், அந்த அமைப்பு இந்த மாதிரிதான் இருக்க வேண்டும் என்று சிபார்சு செய்வது எங்கள் விருப்பமல்ல ; அதே சமயத்தில், பல்வேறு வகையான இந்த அமைப்பு முறைகள் ஒவ்வொன்றிக்கும் சில அடிப்படையான பொதுவான அலுவல்களும், அதனுல் நிர்வகிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யக் கூடிய சில குறிப்பிட்ட வகையான ஆதாரங்களும், இருக்கத்தான் செய்யும். அவைகளுடைய எல்லாக் கடமைகள், எல்லா அதிகாரங்கள், எல்லா ஆதாரங்கள் ஆகியவற்றிக்கு மிகவும் விரிவான முறையில் பொருந்தக்கூடிய ஏற்பாடுகளை கண்டு பிடிக்க நாங்கள் முயற்சி செய்துள்ளோம்.

—o—

## அத்தியாயம் 3

### 3. அமைப்பும் அலுவல்களும்
### [Structure and Functions]

*3. 1:* பஞ்சாயத்துக்கள், தல ஆட்சி ஸ்தாபனங்கள் பற்றிய பழங்கால வரலாற்றை ஆராய்வது எங்கள் பணிக்கு தேவையற்றது. பண்டைய இந்தியாவில், கிராமச் சபைகளும், பஞ்சாயத்துக்களும் இயங்கிவந்தன என்பது எல்லோரும் அறிந்ததே. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், இந்த அமைப்புகள் சிதறிப் போய்விட்டன. ஆனுல், லார்ட் ரிப்பனுக்குப்பிறகு, இந்த அமைப்புகளை மறுபடியும் ஏற்படுத்த ஒரு முயற்சி செய்யப்பட்டது. அவை எல்லாம், பெருவாரியாக, முனிசிபாலிட்டிகள், மாவட்டக் கழகங்கள், தாலூகா போர்டுகள் ஆகியவைகளே. அவைகளின் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டனர். அல்லது, மிகக்குறுகிய எண்ணிக்கை கொண்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உறுப்பினர்களே அவற்றில் அங்கம் வகித்தனர். மான்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் விளைவாக, தல ஆட்சி முறையானது மாறுதல் அடைந்த ஒரு விஷயமாகியது ; அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர், இந்த தல ஆட்சி அமைப்புகளின் அடிப்படைகளை மேலும் விரிவாக்க முயற்சி செய்தார். சில மாநிலங்களில், பெருவாரியான அளவில் கிராமப் பஞ்சாயத்துக்களைஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனுல், இந்த முயற்சிகள் எல்லாம் முழுமனதோடு செய்யப்படவில்லை. உண்மையான ஜனநாயக அடிப்படையில் இந்த தல ஆட்சி அமைப்புகளை மாற்றியமைத்தல் என்பது அகில இந்திய காங்கிரஸ் மேடைகளில் முக்கியமாகப் பேசப்பட்டது. இந்தக் கருத்தே, அரசியல் அமைப்புச் சட்டத்தில் நெறிமுறைக் கோட்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட வழிவகையை ஒட்டி, மாநிலங்களில் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும், சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதினுல், அடிப்படை வசதிகளை செய்தல் என்ற துறையில், பொது மக்களின் கவனமானது திரும்பியது. வளர்ச்சிப் பணித் திட்டத்தின்கீழ், பெருவாரியான முறையில் அமைப்புகளும், அபிவிருத்தி வேலைகளும் செய்யப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்தப்பட்ட திட்ட அபிவிருத்திக் குழுவானது, ஆலோசனை கூறுகின்ற குழுவாகவே இருந்தது. திரு ஸ்ரீ பல்வந்தராய் ஜி. மேதாவின் தலைமையில் இயங்கிய சமுதாய அபிவிருத்தி வேலைகள், வளர்ச்சிப் பணிகள் பற்றிய ஆராய்ச்சிக் குழுவின் (Team for the Study of the Community Projects and National Extension Service) அறிக்கை 1958-ல், சமர்ப்பிக்கப்பட்டது. அதை ஒட்டி, பஞ்சாயத்து ஆட்சிப் பிரச்னையானது, பெரும் முக்கியத்துவத்தை பெற்றதுடன், உடனடியாகச் செய்யவேண்டிய ஒன்ருகவும் ஆகிவிட்டது. ஜனநாயக அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்தல் பற்றி அந்த அறிக்கையில் கண்டுள்ள கீழ்க்கண்ட கருத்துக்கள், எங்களுடைய பணி சம்பந்தப்பட்டவையாகும்:—

"பிரதேசங்களில் செலவிடப்படும் பணத்தை, அந்தப் பிரதேசத்தின் தேவைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் ஏற்ப செலவு செய்யவும், போதிய அதிகாரத்துடன் அந்தப் பணத்தை வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தவும், பொருத்தமான வகையில் நிதிகளை ஒதுக்குதல் செய்கின்ற ஒரு நிலையை உறுதிப்படுத்துகின்ற பிரதேச ஆர்வத்தையும், மேற்பார்வையையும், கவனத்தையும் செலுத்தி அவற்றை வழங்கக்கூடிய ஒரு பிரதிநிதியையும், ஜனநாயக அமைப்பையும், கண்டுபிடித்து ஏற்படுத்தாத வரையில், அபிவிருத்தித்துறையில், பிரதேச ஆர்வத்தையோ, தூண்டுதலையோ நம்மால் என்றென்றும் உண்டாக்கவே முடியாது."

*3. 2: 1959-ம்* ஆண்டு ஜனவரி மாதம் *12 ம்* தேதியில் தேசிய அபிவிருத்தி மன்றம் (National Development Council), பஞ்சாயத்து ஆட்சி பற்றி, பல்வந்தராய் மேதா கமிட்டி கூறிய யோசனைகளை ஏற்றுக்கொண்டது. தல ஆட்சி சம்பந்தமான பொது மன்றமானது (Central Council of Local Self Government) ஒரு வருடத்திற்குப் பிறகு, மாநிலங்கள் இத்துறையில் ஆற்றிய வேலையை சீர்தூக்கிப் பார்த்து, கீழ்க்கண்டவாறு சிபாரிசு செய்தது.—

"விரிவான அடிப்படையும், அடிப்படையான அம்சங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தாலும், இந்த அமைப்புகள் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்ற ஒரு கண்டிப்பான முறை கையாளப் படக்கூடாது. உண்மையில் சொல்லப்போனுல், நம் நாடோ மிகப் பெரிது ; பஞ்சாயத்து ஆட்சி என்பது, மிகவும் புரட்சிகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மிகவும் சிக்கலான ஒரு பிரச்னையாகும். ஆகவே, இந்த விஷயத்தில் பல்வேறு வகையான வடிவங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்த, நமக்கு பெருமளவில் வசதி உள்ளது. உண்மையான அதிகாரமானது மக்கள் கையில் மாற்றப்படவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமானது. இதை நாம் செய்துவிட்டால், அமைப்பில் வடிவங்களும், உருவங்களும், பல்வேறு மாநிலங்களில் உள்ள நிலைகளுக்கேற்ப, அவசியம் மாறச் செய்யும்."

*3. 3:* அந்த வகையில், எல்லா மாநிலங்களும், பஞ்சாயத்து ஆட்சியை அமைக்க ஏற்பாடுகளை மேற்கொண்டன. ஆந்திரப் பிரதேசம், அசாம், தமிழ் நாடு, மகாராஷ்டிரம், மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இதற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றி, அவைகளைச் , செயல்படுத்தியுள்ளன. பீகார், குஜராத், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், இதற்கான சட்டமானது நிறைவேற்றப்பட்டு, இப்பொழுது பல கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கு வங்காளத்தில், 1956-ம் ஆண்டு மேற்கு வங்காளப் பஞ்சாயத்துச் சட்டம் அமுலில்உள்ளது. அந்த மாநிலத்தில், வட்டார, மாவட்ட அளவுகளில் அமைப்புகளை ஏற்படுத்துவது, மாநில அரசின் யோசனையில் இருந்து வருகிறது. கேரள மாநிலத்தில் புதிய விரிவான பஞ்சாயத்துச் சட்டம் ஒன்று 1960-ல் நிறைவேற்றப்பட்டு, செயல்படுத்தப்படுகின்ற நிலையில் உள்ளது. பஞ்சாயத்துக்களுக்கு மேல் உள்ள தல ஆட்சி அமைப்புகளை ஏற்படுத்த வழிசெய்யும் சட்டமானது அந்த மாநிலத்தில் யோசனையில் இருந்து வருகிறது.

*3. 4:* மாநிலங்களில் பஞ்சாயத்து ஆட்சி தற்பொழுது இயங்குகின்ற தன்மைபற்றி பரிசீலனை செய்ததில், அடிப்படை நிறுவன அமைப்பில் ஓர் ஒற்றுமையைக் காண முடிகிறது. அநேக மாநிலங்களில், வயதுவந்த கிராம மக்களைக்கொண்ட கிராம சபைகள் உள்ளன. பஞ்சாயத்தின் வருடாந்திர வரவு செலவு திட்டம், நிர்வாக அறிக்கை, அந்தப் பிரதேசங்களில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றிய விஷயங்களைப்பற்றி, இந்தக் கிராம சபையானது விவாதித்துப் பரிசீலனை செய்யும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆனுலும், எல்லா மாநிலங்களிலும், பஞ்சாயத்துதான் தல ஆட்சி முறையின் அடிப்படை அங்கமாகத் திகழ்கிறது. கேரளம், தமிழ் நாடு, மைசூர், ஆகிய மாநிலங்கள், கிராம சபைகளை அமைக்க எந்தவிதமான ஏற்பாட்டையும் செய்யவில்லை.

*3. 5:* கிராமப் பஞ்சாயத்து என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட ஓர் அமைப்பாகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 5-லிருந்து 31 வரை உள்ளது. சராசரியாக 15 பேர் உள்ளனர். ஒரு கிராமப் பஞ்சாயத்துப் பிரதேசமானது, பொதுவாக வார்டுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வார்டும், தன்னுடைய பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து, பஞ்சாயத்துக்கு அனுப்பும். அசாமிலும், பஞ்சாபிலும், கிராமத்திலுள்ள கிராம வாக்காளர்கள் அத்தனை பேரும் சேர்ந்து கூட்டாகவே, எல்லா உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து வருகின்றனர். அநேக மாநிலங்களில்,பெண்களுக்கும், அட்டவணையில் கண்டுள்ள வகுப்புகளுக்கும், அட்டவணையில் கண்டுள்ள ஜாதிகளுக்கும், இடம் ஒதுக்குவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன. அநேக மாநிலங்களில், பஞ்சாயத்து உறுப்பினர்கள், இரகசிய வாக்கெடுப்பு முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அசாம், ஜம்மு காஷ்மீர், மத்தியப் பிரதேசத்தின் பகுதிகள், உத்திரப் பிரதேசம், ஹிமாசலப் பிரதேசம் ஆகிய இடங்களில் வாக்காளர்கள் கைகளை உயர்த்தி வாக்களிப்பதின்

மூலம், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் காலம், கேரளம், தமிழ் நாடு, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஐந்து ஆண்டுகள்; குஜராத், ஜம்மு காஷ்மீர், மகாராஷ்டிரம், மைசூர், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நான்கு ஆண்டுகள் ; மற்ற மாநிலங்களில் மூன்று ஆண்டுகளாக உள்ளது.

3. 6: பஞ்சாயத்து ஆட்சி நிர்வாக அமைப்பில் பஞ்சாயத்துக்கு அடுத்தபடியாக உள்ளது பஞ்சாயத்து சமிதி *. அசாமில் ''அஞ்சலிக் பஞ்சாயத்'' என்றும், தமிழ் நாட்டில் '' பஞ்சாயத்து யூனியன் மன்றம் '' என்றும், மைசூரில் '' தாலூகா அபிவிருத்திக் கழகம் '' என்றும், உத்திரப் பிரதேசத்தில் '' க்ஷேத்திர சமிதி'' என்றும், மேற்கு வங்காளத்தில் '' அஞ்சலிக் பரிஷத்'' என்றும், இது அழைக்கப்படுகிறது. பஞ்சாயத்து சமிதி என்பது சாதாரணமாக ஒரு சமுதாய அபிவிருத்தி வட்டாரத்தினைக் குறிக்கிறது. மைசூரில் இது ஒரு தாலூகாவையும், மகாராஷ்டிரத்தில் சில சமிதிகள் இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேற்கு வங்காளத்தில், பஞ்சாயத்து, அஞ்சலிக் பரிஷத் ஆகிய இந்த இரண்டு அமைப்புகளுக்கிடையில், '' அஞ்சலிக் பஞ்சாயத்து '' என்ற ஒரு அமைப்பு உண்டு. இனிமேல்தான் இவை ஏற்படுத்தப்படவேண்டும். அஞ்சலிக் பஞ்சாயத்து என்பது முந்தைய யூனியன் போர்டுக்கு ஒப்பானது. பழங்காலத் தொடர்பை ஒட்டி, இந்த அமைப்பானது தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அஞ்சலிக் பஞ்சாயத்துக்குத்தான் வரி விதிக்கும் அதிகாரம் உண்டே தவிர, கிராமப் பஞ்சாயத்துக்கு அல்ல. டபேதார்கள், சௌக்கிதார்கள் மூலமாக பிரதேசத்தின் பாதுகாப்புக்கு அஞ்சலிக் பஞ்சாயத்து வழி செய்கிறது. அபிவிருத்தி மற்றும் நல நடவடிக்கைகள், கிராமப் பஞ்சாயத்தின் பொறுப்பில் உள்ளன.

3. 7: அநேக இடங்களில், பஞ்சாயத்து சமிதிகள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களாக இல்லை. அதில் அடங்கியுள்ள சர்பஞ்சுகளே † (Sarpanches) இதன் உறுப்பினர்களாக உள்ளனர். மைசூரில் இதன் உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மத்தியப் பிரதேசத்தின் புதிய சட்டத்தில் ஜனபாத சபைகளில் (Janpada sabhas) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உறுப்பினர்களின் ‡ (Panches) வாக்காளர். தொகுதிகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெண்கள், அட்டவணையில் கண்டுள்ள ஜாதியினர், அட்டவணையில் கண்டுள்ள வகுப்பினர், மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு பாங்குகள் போன்ற விசேஷமான அங்கங்களின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ளவோ, அவர்களுக்கு இடம் ஒதுக்கவோ, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தந்தப் பஞ்சாயத்து சமிதியை உள்ளடக்கியுள்ள தொகுதிகளுக்கு பிரதிநிதிகளாக உள்ள சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்தச் சபையில் அலுவல் முறையில் (Ex-officio) உறுப்பினர்களாக இருப்பார்கள். பொதுவாக, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. பஞ்சாயத்து சமிதி என்ற வார்த்தையானது பஞ்சாயத்துடன் சேர்த்து உபயோகப்படுத்தவேண்டிய ஒன்றாகும். அதனுடைய தலைவரும், உபதலைவரும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து பொறுக்கி எடுக்கப்படுகின்றனர். அசாம், தமிழ் நாடு, மகாராஷ்டிரம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், இந்த முறையில், சிற்சில சிறிய மாறுபாடுகள் உள்ளன. அசாமில், அஞ்சலிக் பஞ்சாயத்துக்கு தேர்தலானது, நேரடி வாக்கெடுப்பு முறையில் நடத்தப்படுகிறது. ஆனால், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களை அலுவல் முறையில் பஞ்சாயத்து உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்வதின் மூலம், நிர்வாகத் தொடர்பானது ஏற்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டிலும், பஞ்சாபிலும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்களுடைய உறுப்பினர்களிலிருந்தே, பஞ்சாயத்து சமிதிக்கு தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். தலைவருடன் சேர்த்து, பஞ்சாயத்து சமிதிக்கு மேலும் ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட ஒரிசாவில் வகை செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிரத்தில் வட்டாரத்திலுள்ள பிரிவுகளிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஜில்லா பரிஷத்தின் கவுன்சிலர்கள், பஞ்சாயத்து சமிதியில் அலுவல் காரணமாக உறுப்பினர்களாக உள்ளார்கள்.

3. 8: பஞ்சாயத்து ஆட்சி நிர்வாக அமைப்பில் மேல் மட்டத்தில் உள்ளது, § ஜில்லா பரிஷத்தாகும். இதனுடைய அதிகார எல்லை பொதுவாக, ஒரு மாவட்டமாகும். அசாமில் இது ஒரு உபபிரிவாகவே உள்ளது. தமிழ் நாட்டில் இதற்காக 13 மாவட்டங்கள் 21 அபிவிருத்தி மாவட்டங்களாகப்

* "பஞ்சாயத்து சமிதி" என்பது, தமிழ் நாட்டில் "பஞ்சாயத்து யூனியன் மன்றம்" உள்ளதுபோல, மற்ற மாநிலங்களிலுள்ள அமைப்பினைக் குறிக்கிறது.

† தமிழ் நாட்டில் இந்தத் தொடர், பஞ்சாயத்துத் தலைவரைக் Panchayat President) குறிக்கும்.

‡ தமிழ் நாட்டில் இந்தத் தொடர், பஞ்சாயத்து உறுப்பினர்களை (Members of the Panchayat) குறிக்கும்.

§ "ஜில்லா பரிஷத்" என்பது, தமிழ் நாட்டில் "மாவட்ட அபிவிருத்தி மன்றத்"தைப் (District Development Councils) போல மற்ற மாநிலங்களில் உள்ள அமைப்பைக் குறிக்கிறது.—ஆ-ர்.



(Development Districts) பிரிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து சமிதி போலவே, ஜில்லா பரிஷத்தின் உறுப்பினர்களும், அநேக இடங்களில் மறைமுகமான முறையிலே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பஞ்சாயத்து சமிதியின் தலைவர்கள், பிரதேசத்தில் உள்ள சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். மாதர்கள், அட்டவணையில் கண்டுள்ள ஜாதியினர், அட்டவணையில் கண்டுள்ள வகுப்பினர், மற்றும் கூட்டுறவு பாங்குகள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ளவர்கள் போன்ற விசேஷமானவர்களையும் சேர்த்துக் கொள்ள பொதுவாக வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரிசாவிலும், பஞ்சாபிலும், சட்டசபை உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும் உரிமை கிடையாது. குஜராத், பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், பஞ்சாயத்துச் சமிதியின் அதிகப்படியான அங்கத்தினர்கள் ஜில்லா பரிஷத்தில் அங்கம் வகிக்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மகாராஷ்டிரத்தில் மட்டும், இந்த நடைமுறைக்கு விதிவிலக்காக உள்ளது. அந்த மாநிலத்தில் இந்தக் கவுன்சிலின் எண்ணிக்கை முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுகிறது. அவர்கள் மாவட்டத்தில் உள்ள வாக்காளர் தொகுதிகளிலிருந்து நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், இந்த கவுன்சிலர்களை அவர்கள் சார்ந்துள்ள பஞ்சாயத்துச் சமிதிகளின் அங்கத்தினர்களாக ஆக்குவதன் மூலம்,பஞ்சாயத்துச் சமிதியுடன் நிர்வாகத் தொடர்பானது அறுபடாமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது. ஜில்லா பரிஷத், பஞ்சாயத்து சமிதிகளின் உறுப்பினர்களின் பதவிக் காலமும் ஒன்றுதான்.

3. 9 : பஞ்சாயத்தின் அலுவல்களை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் :—

(i) மக்கள் நல்வாழ்வுக்கான வசதிகள். (Civic amenities).

(ii) சமூக நல ஏற்பாடுகள். (Social Welfare Activities).

(iii) அபிவிருத்தி வேலைகள்.

துப்புரவு, ஊர்சுத்தம் செய்தல், பொது சுகாதாரம், தெருவிளக்குப் போடுதல், பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல், கிராமப் பாதைகளைப் பராமரித்தல், சிறு பாலங்கள், பள்ளிக்கூடங்களைப் பராமரித்தல் ஆகியவை நல்வாழ்வுக்கான வசதிகளுள் அடங்கும். இவை கட்டாயமாக செய்யப்படவேண்டியவை (Obligatory). மற்ற ஏற்பாடுகள் யுக்தானுசாரமானவை (Optional), அவையாவன:— நூல் நிலையங்களை அமைத்துப் பராமரித்தல், வாசகசாலை, சமூகக்கூடம்,விளையாட்டுஇடங்கள், பொழுது போக்கு வசதிகள், தாய்சேய் நல விடுதிகள், வண்டி-பஸ் நிற்கும் நிலையங்கள், இடுகாடுகள் முதலியவை. அபிவிருத்தி வேலைகளைப் பொருத்தமட்டில், சமிதிகள் அல்லது ஜில்லா பரிஷத்துக்களின் ஏஜெண்டுகளாக, பஞ்சாயத்துக்கள், பொதுவாக, செயலாற்றுகின்றன. டெல்லி யூனியன் பிரதேசத்தில் பஞ்சாயத்தின் சாதாரண நல்வாழ்வு வேலைகள்கூட, வரிகள் விதித்தல், மான்யங்கள் பெறுதல் ஆகியவற்றுடன், டெல்லி முனிசிபல் கார்ப்பரேஷனின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, பிரதேச அபிவிருத்தி வேலைகளை ஏற்று நடத்தவும், அதற்காக பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளைத் திரட்டவும் பஞ்சாயத்துக்கள் வெறும் ஏஜென்சிகளாகவே உள்ளன.

3. 10 : கடந்த பத்தாண்டுகளாக, சமுதாய அபிவிருத்தி, வட்டாரத்தில் செய்யப்பட்டு வந்த அபிவிருத்தி வேலைகளை, பஞ்சாயத்து சமிதி மேற்கொள்ளவேண்டும். அத்துடன், ஆரம்பக் கல்வி நிர்வாகம், கிராம மருந்தகங்கள் உட்பட சுகாதாரம், துப்புரவு வேலைகள், கிராமப் பாதைகளையும் சிறுபாசன ஆதாரங்களையும் பராமரித்தல் போன்ற நல்வாழ்வுப் பணிகளையும், பஞ்சாயத்து சமிதி செய்யவேண்டும். பல மாநிலங்களில், பஞ்சாயத்துக்களின் வரவு-செலவுத் திட்டங்களை பரிசீலனை செய்து, அவைகளை ஒப்புக்கொள்கின்ற வேலை உட்பட, பஞ்சாயத்துக்களை மேற்பார்வை செய்யவும் அவைகளின்மீது அதிகாரம் செலுத்துகின்ற வேலையும், பஞ்சாயத்து சமிதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில், தமிழ்நாடு மட்டும், விதிவிலக்காக உள்ளது. மேல்மட்டத்தில் உள்ள ஓர் அமைப்பிடம் இப்படிப்பட்ட மேற்பார்வை செய்கின்ற அதிகாரத்தை அளிக்க அந்த மாநிலத்தில் வழிவகை செய்யப்படவில்லை. பள்ளிக்கூட கட்டடம் கட்டுதல், பாதைகள் அமைத்தல் போன்ற வேலைகள் பஞ்சாயத்துச் சமிதியின் பொறுப்பு என்றாலும், அவை பொதுவாக, பஞ்சாயத்துக்கள் வசமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துச் சமிதிகள் அதற்கான செலவுக்கு கொஞ்சம் பணம் அளிக்கிறது.

3. 11 : ஜில்லா பரிஷத்தின் அமைப்பு, அவைகளின் அலுவல்கள் ஆகிய இந்த விஷயங்களில்தான், மிகப்பெரிய வேறுபாடுகள், மாநிலங்களிடையே காணப்படுகின்றன. தமிழ்நாடு, ராஜஸ்தான், பஞ்சாப் போன்ற சில மாநிலங்களில், ஜில்லா பரிஷத் முழுக்க முழுக்க ஆலோசனை கூறுகின்ற வேலைகளை ஒருமுகப்படுத்துகின்ற ஓர் அமைப்பாகவே உள்ளது. இந்த சபை, அவ்வப்போது கூடி, பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளையும், மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றியும் ஆலோசிக்கிறது. மகாராஷ்டிரத்திலோ, தமிழ்நாட்டிற்கு முற்றிலும் மாறுபாடான நிலை

உள்ளது. அந்த மாநிலத்தில், ஜில்லா பரிஷத், மிகவும் முக்கிய சுய ஆட்சி உறுப்பாகும். ஆரம்ப, செகண்டரி கல்வி, மாவட்ட ரோடுகள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், பொதுச் சுகாதாரம், துப்புரவு உட்பட பெருவாரியான நிர்வாக அலுவல்கள் எல்லாம், ஜில்லா பரிஷத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த மாநிலத்தில், ஜில்லா பரிஷத்தின் வேலைகளை ஏற்று நடத்துகின்ற வெறும் ஏஜென்சியாகவே, பஞ்சாயத்து சமிதி உள்ளது. ஜில்லா பரிஷத்தின் பிரதம நிர்வாக அதிகாரி, மாவட்டக் கலெக்டருக்கு ஒப்பாவார். பஞ்சாயத்து சமிதிகள், பஞ்சாயத்துக்களை மேற்பார்வை செய்கின்ற அதிகாரம் ஜில்லா பரிஷத்திடம் உள்ளது. இந்த இருவகையான மாறுபாடான நிலைகளுக்கிடையே, ஆந்திரப் பிரதேசத்திலும், இன்னும் சில மாநிலங்களிலும், ஓர் இடைப்பட்ட நிலை உள்ளது. அங்கு, பொது செகண்டரி பள்ளிகள், சமூக நலனுக்காக மாநில அரசினரிடமிருந்து கிடைக்கப்பெறுகிற மானியத் தொகைகள் விநியோகம் செய்தல் போன்ற சில நிர்வாக அலுவல்கள், ஜில்லா பரிஷத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

*3. 12 :* பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும், அதிகாரிகளுடனும் நாங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளில், மேற்கொண்ட பயணங்களின் விளைவாக, பல இடங்களில், தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதில், பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் உருப்படியான முயற்சிகளை செய்துள்ளன என்பதை, நாங்கள் கண்டுள்ளோம். நிதி வசதிக் குறைவினால், அவசியம் செய்ய வேண்டிய குறைந்தபட்ச அலுவல்களைக் கூட, பஞ்சாயத்துக்கள் செய்யாமல் இருக்கின்றன என்பதற்கு உதாரணங்கள் இல்லாமல் இல்லை. பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல், துப்புரவு, ஊர் சுத்தம் செய்தல் போன்ற அடிப்படைத் தேவைகள் கூட சமுதாயத்திற்கு அளிக்கப்படாமல் உள்ளன. பிரதேசங்களில் திரட்டப்படுகின்ற நன்கொடைகள், அரசுகள் அளிக்கின்ற ஈட்டு மானியங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள் கட்டுதல், கிராம இணைப்புப் பாதைகள் போன்ற அலுவல்களைச் செய்வதில், பஞ்சாயத்துக்கள் மிகுந்த ஆர்வமும், அக்கறையும் காட்டி வந்துள்ளன. ஆனால், அவைகளை நல்லமுறையில் செப்பனிட்டு, பராமரித்து வைத்துக்கொள்ள, அவைகளால் இயலவில்லை.

*3. 13 :* தன்னிச்சையான வருவாய் ஆதாரங்கள் அவைகளுக்கு இல்லாதபடியால், தங்களுக்குப் பிடித்தமான விசேஷ வேலைத்திட்டங்களையும், அபிவிருத்தி வேலைகளையும் செய்வதில் ஆர்வத்தைக் காட்டி, பணிபுரிய பஞ்சாயத்துச் சமிதிகளினால் இயலவில்லை. அவைகள் பெறுகின்ற மானியங்களில் பெருவாரியானவை, குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே உள்ளன ; அவைகளைச் செயல்படுத்திவைக்கும் வெறும் ஏஜெண்டுகளாகவே, பஞ்சாயத்துச் சமிதிகள் உள்ளன. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடப்பட்ட வேலைமுறையானது, அவைகளுக்கு அக்கறையும் ஆர்வத்தினையும் உண்டாக்குகின்ற தன்மையில், வேண்டிய அளவுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுடைத்ததாய் இல்லை.

*3. 14 :* ஆலோசனை அமைப்புகளாக (Advisory Bodies) ஜில்லா பரிஷத்துக்கள் உள்ள இடங்களில். குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவில் எந்தவிதமான சிரமத்தையும் அவை பெறவில்லை. ஆனால், அவைகளின் ஆலோசனை கூறுகின்ற விஷயங்களின் தன்மையும், கையாளவேண்டிய நடைமுறையும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அவைகளுடைய யோசனைகளுக்கு, மாநில அரசுகள் போதிய அக்கறை காட்டுவதில்லை என்று அவை நினைக்கின்றன. அவை நிர்வாக அதிகாரம் பெற்றுள்ள இடங்களில், சமிதிகளுக்கு இருப்பது போலவே, ஆதாரங்கள் இல்லாத குறையினால், அவைகளைச் செயல்படுத்துவதிலும் கட்டுப்பாடான வரையறை என்ற நிலையே உள்ளது.

*3. 15 :* பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் அமைப்பு முறையில், மேல் மட்டத்தில் உள்ள அமைப்புகள், கீழ் மட்டத்தில் உள்ள அமைப்புகளை அதிகாரம் செலுத்தவும், மேற்பார்வை செய்யவும், அவைகளுக்கு உதவி செய்யவும்படியான வழி முறைகள், பல மாநிலங்களில், சட்டங்களில் செய்யப்பட்டுள்ளன. மத்தியப்பிரதேசம், தமிழ் நாடு, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் தவிர, மற்ற மாநிலங்களில், பஞ்சாயத்துக்களின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கின்ற அதிகாரம், பஞ்சாயத்து சமிதிகளுக்கு உண்டு. தமிழ்நாடு தவிர, மற்ற எல்லா மாநிலங்களிலும், பஞ்சாயத்து சமிதியின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசீலனை செய்து, அவைகளுக்கு ஒப்புதல் அளிக்கின்ற அதிகாரங்கள் ஜில்லா பரிஷத்துக்கு உண்டு. பஞ்சாயத்துச் சமிதியின் வேலைகளை ஒருமுகப்படுத்துதல், ஜில்லா பரிஷத்தின் அலுவல்களில் ஒன்றாகும். பஞ்சாயத்து ஆட்சி செயல்படத் தொடங்கி குறைந்த காலமே ஆகியுள்ளபடியால், இப்பொழுதே, இந்த அம்சம்பற்றி விமரிசனம் செய்வது அவ்வளவு நல்லதல்ல.

---

# அத்தியாயம் 4

## பஞ்சாயத்துக்களின் வருவாய் ஆதாரங்கள்
## (RESOURCES OF PANCHAYATS)

*4. 1 :* 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி அளவில், 94 சதவீத இந்தியக் கிராமங்களில் சட்டபூர்வமான பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டு விட்டன. 3 கோடி ஐம்பத்திரண்டு லட்சம் கிராம மக்கள் அந்தப் பகுதியில், வாழ்ந்து வருகின்றனர். மேற்கு வங்காளத்தில் மட்டும் 38 சதவீத கிராமங்களில் மட்டுமே, பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் ஏனைய கிராமங்களிலும், விரைவில் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*4. 2 :* பஞ்சாயத்துக்கள், பரப்பிலும், ஜனத்தொகையிலும் மிகவும் வேறுபட்டுள்ளன. கேரள மாநிலத்தில், ஒரு பஞ்சாயத்தின் சராசரி ஜனத்தொகை 15,493. கேரளத்தை அடுத்து, ஒரிஸாவில் பெரிய பஞ்சாயத்துக்கள் காணப்படுகின்றன. அங்கு பஞ்சாயத்தின் சராசரி ஜனத்தொகை 6,746. பீகார், ஜம்மு-காஷ்மீர், அஸ்ஸாம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் பஞ்சாயத்துச் சராசரி ஜனத்தொகை 3,000லிருந்து 4,000 வரை அமைகிறது. மைசூர், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2,000 முதல் 3,000 வரை பஞ்சாயத்தின் சராசரி ஜனத்தொகை இருக்கிறது. ஆந்திரப்பிரதேசத்திலும், தமிழ்நாட்டிலும், 1,500 லிருந்து 2,000 வரை அமைகிறது, குஜராத், மகாராஷ்ட்ரா, மத்தியப்பிரதேசம், பஞ்சாப், டெல்லி ஆகிய மாநிலங்களில் 1,000 லிருந்து 1,500 வரை உள்ளது. உத்திரப்பிரதேசத்தில், 1,000-க்குக் குறைவாக சராசரி ஜனத்தொகை அமைந்துள்ளது. மாநிலங்கள் தோறும், பஞ்சாயத்துக்கள் இடையேயும், வேறுபாடுகள் உள்ளன. தமிழ்நாட்டிலும், மைசூரிலும், 5,000 ஜனத்தொகையும், 10,000 ரூபாய்க்கு மேல் வருட வருமானமுள்ளவை 'நகரப்பஞ்சாயத்துக்கள்' (Town Panchayats) எனப்படுகின்றன. இவை, ஆந்திரப் பிரதேசத்தில் '' அறிவிக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் ''(Notified Panchayats)'' எனப்படுகின்றன. குஜராத்தில் 10,000-க்குமேல், 30,000 வரை ஜனத்தொகையுள்ள பஞ்சாயத்துக்கள் '' நகரப் பஞ்சாயத்துக்கள் '' எனப்படுகின்றன. இப்பஞ்சாயத்துக்கள், அரை நகராட்சிகளின் (Semi-Municipalities) தன்மையுடையனவாகையால், தேவையான நிர்வாகப் பணியாளர்களைப் பெறுவது முதலான பயனை; இத்தகைய பகுப்பு முறையினால் அடைய முடிகிறது.

*4. 3 :* பல்வேறு மாநிலங்களின் பஞ்சாயத்துக்களும், அவற்றின் ஜனத்தொகையிலும், வகையிலும் அதிக அளவில் வேறுபட்டிருந்தாலும், அவற்றின் அலுவல்களில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. சில மாநிலங்களில், அவை, கட்டாய அலுவல்கள், யுக்தானுசார அலுவல்கள் (Obligatory and discretionary) என்று இருவகையாகப் பகுக்கப்படுகின்றன. உதாரணமாக, தமிழ்நாட்டில், கட்டாய அலுவல்கள் எட்டாகவும், யுக்தானுசார அலுவல்கள் பத்தாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஆந்திரப்பிரதேசத்தில், கட்டாய அலுவல்கள் பனிரெண்டாகவும், யுக்தானுசார அலுவல்கள், இருபத்திஏழாகவும் வகுக்கப்பட்டுள்ளன. பஞ்சாபில் 27 அலுவல்கள் கட்டாயமானவை. இங்கு ஏழு யுக்தானுசார அலுவல்களைக் கட்டாய அலுவல்களாக்கி ஆணையிட, மாநில அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. மகாராஷ்டிரம், கேரளம், மைசூர், ஆகிய மாநிலங்களிலும், மற்றும் பிற மாநிலங்களிலும் விவசாயம், கால்நடைப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் முதலான தலைப்புக்களில், மிகப்பல அலுவல்கள் வகுக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துக்கள், தம் பொருளாதார நிலையை ஒட்டி, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி, துப்புரவு, கிராமப்பாதைகளின் பராமரிப்பு, பள்ளிக் கூடங்கள், தெருவிளக்குகள் முதலியனவும், வானொலி, சமுதாய அரங்கம், குழந்தைகள் பூங்கா முதலியனவும் அமைக்கும் வேலைகளை எடுத்துச் செய்கின்றன. சட்டப்பேரவைகளில், சட்டங்கள் இயற்றப்பட்டபோது, கட்டாய அலுவல்களைச் செய்ய, குறைந்த அளவு செலவு எவ்வளவு ஆகும் என்று உத்தேசமாக அறியவும், அதற்குவேண்டிய வருமானத்தை அளிக்கும் ஆதாரங்களுக்கு வகை செய்யவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றே கருதுகிறோம். கட்டாய அலுவல்களின் அளவையும் எண்ணிக்கையையும் ஒட்டி, வருவாய் வேறுபடும்.

*4. 4 :* பஞ்சாயத்துக்களின் வருவாய் ஆதாரங்களைக் கீழ்க்கண்ட வகைகளாக வகுக்கலாம் :—

(அ) அவை விதித்து வசூலிக்கும் வரிகளின் மூலம் வரும் வருமானம்.

(ஆ) விதிக்கப்படும் கட்டணங்கள்.

(இ) சொத்துக்கள், முதலீடுகள், வருவாய் தரும் தொழில்கள் மூலமாக வரும் வருமானம்.

(ஈ) மாநில அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவி.

(உ) பொது நன்கொடைகள்.

4: 5. எல்லாப் பஞ்சாயத்துச் சட்டங்களும், பஞ்சாயத்துக்கள் வரிவிதிக்க வகை செய்துள்ளன—இவ்வரிகளின் பட்டியல் இணைப்பு—IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இங்கே சேர்க்கப்படவில்லை —ஆர்.) சில சட்டங்களில், சில வரிகள் கட்டாயமாகவும், பிற விருப்பத்திற்கிணங்கவும் வசூலிக்கலாம் என்றுள்ளது. அஸ்ஸாம், குஜராத், ஜம்மு-காஷ்மீர், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், எல்லா வரிகளும், விருப்பத்திற்கிணங்க விதிக்கப்படுவனவாகவே உள்ளன. ஆந்திரப் பிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, மைசூர், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், 'வீட்டு வரி' கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவற்றுள், மகாராஷ்டிரம், பஞ்சாப் மாநிலங்கள் தவிர, ஏனைய மாநிலங்களில் தொழில் வரியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கேரளத்திலும், தமிழ்நாட்டிலும், வாகன வரி கட்டாயமாகும்.

4. 6: வரிவிதிப்பு ஒரு விரும்பத்தக்க வேலையல்ல என்பதில் ஐயமில்லை. மத்திய, மாநில அரசாங்கங்களைப்போன்று, பஞ்சாயத்துக்களும், வரிகளை விதிக்க கட்டாயப்படுத்தக்கூடாது என்றும், அவை, மேற்குறித்த அரசாங்கங்களிடம் பெறும் வருமானங்கள், விரும்பிக் கொடுக்கப்படும் வரிகள், கட்டணங்கள், நன்கொடைகள் ஆகியவைகளைக் கொண்டு அலுவல்களை நடத்தவேண்டுமென்றும், நாங்கள் விஜயம் செய்த பல பஞ்சாயத்துக்களில் எடுத்துக்கூறப்பட்டன. நாங்கள் இக்கருத்துக்களை ஆதரிப்பதாயில்லை. பஞ்சாயத்துக்கள்; சிறு வருமானத்தைத் தாமே தேடிக்கொள்வதுடன், அவை தன்னாட்சி நிறுவனங்கள் என்பதை எடுத்துக்காட்டும் வகையிலும், சில கட்டாய வரிகளேனும் விதிக்கவேண்டிது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். வீட்டுவரி, தொழில்வரி, வாகனவரி முதலியன இவ்வாறு விதித்து வசூலிக்க மிகவும் ஏற்றன.

4. 7: அதே நேரத்தில், இவ்வரிகளின் நிலையான விகிதங்கள் எதுவும் பஞ்சாயத்துக்களிடம் வற்புறுத்த வேண்டுமென்பது எங்கள் கருத்தல்ல. வரிவீதங்களுக்கு குறைந்த அளவு, உயர்ந்த அளவு வரையறைகளை வகுக்கவேண்டும். குறைந்த அளவு வீதத்தில் வரி விதிக்கவும், உயர்ந்த அளவு வீதத்தில் உயர்த்தி வரி விதிக்கவும், பஞ்சாயத்துக்கு உரிமையுண்டு.

4. 8: வீட்டின் மொத்த மதிப்பு, அல்லது அதன் வருட வாடகை, அல்லது மாநில அரசாங்கம் நிர்ணயிக்கும் இதுபோன்ற பிற அடிப்படையில் வீட்டுவரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், வீட்டின் மொத்த மதிப்பு, அல்லது வருட வாடகை, வகுக்கப்பட்ட வீட்டின் பரப்பு, அல்லது அவற்றில் இரண்டு அல்லதுஅதிகமான அடிப்படைகளில், வீட்டு வரி விதிக்கலாம். வீட்டின் மொத்த மதிப்பின் அடிப்படையில் வரி விதிக்கும்போது, ஓர் அரையாண்டுக்கு, மொத்த மதிப்பில் குறைந்த அளவு 1/16 சதவீதமும், உயர்ந்த அளவு ½ சதவீதமும் கணக்கிட்டு, வரி விதிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வருட வாடகையில், குறைந்த அளவு 1 சதவீதமும், உயர்ந்த அளவு 10 சதவீதமும், அரையாண்டு வரியாக விதிக்கலாம் என்று வகுக்கப்பட்டுள்ளது. வீட்டின் பரப்பளவு அடிப்படையில், அதாவது, தளம், கூரை, ஓடு முதலியன வேய்ந்த வீடுகளுக்கும் குறைந்த அளவு, உயர்ந்த அளவு வீதங்களை மாநிலச் சட்டம் வரையறுத்துள்ளது. நகரப் பஞ்சாயத்துக்கள், அவை போன்ற பெரிய பஞ்சாயத்துக்கள் நீங்கலாக, கிராமப் பகுதிகளில், பொதுவாக, வாடகை மதிப்பென்பது, நடைமுறைக்கொவ்வாததாகையால், வீட்டின் மொத்த மதிப்பின் அடிப்படையிலேயே வரி விதிப்பது விரும்பத்தக்கதாகும்.

4. 9: வீட்டுவரி விஷயத்தில் ஏதாவது விலக்கு அளிக்கப்படலாமா என்ற முக்கியமான கேள்வி எழுகிறது. தமிழ் நாட்டிலும், ஆந்திரப்பிரதேசத்திலும் அத்தகைய விலக்குகள் ஏதும் இல்லை. ஆனால், மத்தியப் பிரதேசத்தில், ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த மதிப்புள்ள எல்லா வீடுகளும் விலக்களிக்கப்பட இருக்கின்றன. கிராமப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்கு, குறிப்பாக, கூரை வீடுகளில் வாழ்பவர்களுக்கு விலக்களிக்க வேண்டும் என்று வாதிக்கலாம். ஆனால் எந்த குடிசை அல்லது வீடும் விலக்களிக்கப்படத் தேவையில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். இதை பொருளாதார காரணங்களுக்காக மட்டுமின்றி, சமூக அடிப்படையிலும் ஆலோசித்துக் கூறுகிறோம். 1/10 சத விகித, குறைந்த அளவு விகிதத்தில் வரி விதிக்கப்பட்டால், 250 ரூபாய் மதிப்புள்ள குடிசைக்கு 25 நயாபைசா வரியும், 500 ரூபாய் மதிப்புள்ள குடிசைக்கு 50 நயாபைசா வரியும் கட்டவேண்டி வரும். மிக எளிய குடும்பங்களுக்கும், இந்தக் குறைந்த விகித வரியைச் செலுத்துவதில் கஷ்டம் எதுவும் இருக்குமென்று நாங்கள் நம்பவில்லை. இந்த வரியை, அவர்கள், கட்டுவதன் மூலம், பஞ்சாயத்துக்கு நேரடியாக நிதி உதவி செய்கிறோம் என்கிற உணர்வை அவர்கள் பெறுவதுடன், எல்லா மக்களுக்கும் செய்யப்படுகின்ற டணிகளையும், வசதிகளையும் பெற உரிமை உடையவர்களாகிறார்கள். வீட்டு வரியை பொதுவாக எல்லா இடங்களிலும் விதிப்பதின் மூலம், எல்லாப் பஞ்சாயத்துக்களிடமும் வெவ்வேறு வகுப்புகளின் எல்லா வீடுகளைப்பற்றிய சரியான பட்டியலும் இருக்க வழி ஏற்படுகிறது. மேலும், இந்தப் பட்டியலில் செய்யப்படும் மாற்றங்கள், கிராமத்தினுடைய வளர்ச்சியை எடுத்துக்காட்டும் உண்மையான அடையாளமாகவும் இருக்கும்.



மாறாக, எந்த வகையான விலக்கும் அளிப்பது, வீட்டு வரியின் மூலம் வரும் வருவாய், குறிப்பாக, இதையே! பெரிதாக எண்ணி இருக்கும் எளிய கிராமங்கள் ஆகியவற்றை மிகவும் பாதிக்கும். நம் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், காலப்போக்கில் எல்லாக் குடிசைகளும் ஒழுங்கான வீடுகளாக மாற்றப்படும். கீழ்க்கண்ட மாநிலங்களில், நாங்கள் விஜயம் செய்த பஞ்சாயத்துப் பகுதிகளில் மட்டும் 1961-62 ஆண்டில் விதிக்கப்பட்ட வீட்டுவரி, கீழே தோராயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது, வீட்டு வரியின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டும்:—

| | | | தலைக்கு ந.பை. |
|---|---|---|---|
| மைசூர் | .. | .. | 73 |
| ஆந்திரப்பிரதேசம் | | .. | 60 |
| மகாராஷ்டிரம் | .. | .. | 52 |
| தமிழ்நாடு | .. | .. | 36 |
| பஞ்சாப் | .. | .. | 13 |

4. 10: இந்த வீட்டுவரியைப் பற்றிய இன்னொரு முக்கியமான பிரச்சினை, வீடுகளை முறையான மதிப்பீடு செய்தல் பற்றியதாகும். பல சட்டங்களிலும், மதிப்பீடு செய்வதற்கான முறைகள் பற்றி விதிகள் வகுக்க, மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் இதற்கான ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. இந்த முயற்சி விரும்பத்தக்கதென்றும், இதுபோன்ற ஏற்பாடு செய்யுமிடங்களிலெல்லாம் வீட்டு வரியின் மூலம் வருவாய் உயர்ந்து வரும் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

4·11: ஆகவே, எல்லா மாநிலங்களிலும் எந்த ஒரு விலக்குமின்றி, கட்டாய வீட்டுவரி இருக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். வீடுகளில் மொத்த மதிப்பின் அடிப்படையில் வருடாந்திர உயர்ந்த அளவு, குறைந்த அளவு வரி வீதங்கள் கீழ்க்கண்டவாறு அமையலாம்:—

| | |
|---|---|
| (a) 250 ரூபாய்க்கு மேற்படாமல் மொத்த மதிப்புள்ள வீட்டின் மேல். | குறைந்த அளவு 25 ந. பை. உயர்ந்த அளவு ரூ. 1. |
| (b) 251 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை மதிப்புள்ள வீட்டின் மேல். | குறைந்த அளவு ரூ. 50: ந. பை. உயர்ந்த அளவு ரூ. 2; |
| (c) 501 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை மதிப்புள்ள வீட்டின் மேல், | குறைந்த அளவு ரூ. 1· உயர்ந்த அளவு ரூ.5. |
| (d) 1,000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள வீட்டின் மேல். | வீட்டின் மதிப்பில் அதிகமாகும் ஒவ்வொரு 500 ரூபாய், அல்லது அதன் ஒரு பகுதிக்கும் குறைந்த அளவு வீதத்தில் 50 ந. பை. யும் உயர்ந்த அளவு வீதத்தில் 2 ரூபாய். 50 ந. பை.-யும் வரியை அதிகமாக்கிக் கொண்டேபோகலாம். |

நகரப் பஞ்சாயத்திற்கு. மேலும் அதிகமான வரி வீதங்களை வகுத்துக்கொள்ளலாம்.

4. 12: சில மாநிலங்களில், பஞ்சாயத்துக்களால் ஒரு கிராமத்தில் ஓராண்டில் தொடர்ந்து 60 நாட்களுக்குக் குறையாமல் செயல்படும் ஒவ்வொரு கம்பெனி அல்லது வியாபார நிலையத்தின் மேலும் கிராமத்தில் 60 நாட்களுக்குக் குறையாமல் வசித்து தொழில் அல்லது கலை அல்லது வேலை அல்லது வாணிபம் அல்லது பொதுத்துறையில் அல்லது தனியார் துறையில் உத்தியோகம் செய்துவரும் ஒருவரின் மேலும், தொழில் வரி விதிக்கத்தக்கதாக உள்ளது. பஞ்சாயத்துப் பகுதியில் வசித்து வருபவர்களின் மேலும், ஓய்வு ஊதியம் பெற்று வருபவர்களின் மேலும், இந்த வரி விதிக்கத்தக்கதாக உள்ளது. பொதுவாக, ஓராண்டுக்கு 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் இதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். ஆந்திரப்பிரதேசம் கிராமப் பஞ்சாயத்துக்கள் மசோதாவில், கீழ்க்கண்ட குறைந்த அளவு, உயர்ந்த அளவு வரி வீதங்கள் வகுக்கப்பட்டுள்ளன:—

| வகை. | ஆண்டு வருமானம். | குறைந்த அளவு ஆண்டு வரி ரூபாய். | உயர்ந்த அளவு ஆண்டு வரி ரூபாய். |
|---|---|---|---|
| I | ரூ. 30,000-க்குமேல். | 200 | 250 |
| II | ரூ. 24,000-க்கு மேல் ரூ. 30,000-க்கு மேற்படாமல். | 150 | 200 |
| III | ரூ. 18,000-க்கு மேல் ரூ. 24,000-க்கு மேற்படாமல். | 100 | 150 |
| IV | ரூ. 12,000-க்கு மேல் ரூ. 18,000-க்கு மேற்படாமல். | 50 | 100 |
| V | ரூ. 9,000-க்கு மேல் ரூ. 12,000-க்கு மேற்படாமல். | 24 | 50 |

| வகை. | ஆண்டு வருமானம். | குறைந்த அளவு ஆண்டு வரி ரூபாய். | உயர்ந்த அளவு. ஆண்டு வரி ரூபாய். |
|---|---|---|---|
| VI | ரூ. 6,000 க்கு மேல் ரூ. 9,000 க்கு மேற்படாமல். | 12 | 24 |
| VII | ரூ. 3,600க்கு மேல் ரூ. 6,000 க்கு மேற்படாமல். | 8 | 12 |
| VIII | ரூ. 2,400க்கு மேல் ரூ. 3,600 க்கு மேற்படாமல். | 4 | 8 |
| IX | ரூ. 1,200 க்கு மேல் ரூ. 2,400 க்கு மேற்படாமல். | 2 | 4 |
| X | ரூ. 600 க்கு மேல் ரூ. 1,200 க்கு மேற்படாமல். | 1 | 2 |

இந்த வரி வீதங்கள், நியாயமானவையென்று நாங்கள் கருதுகிறோம்—பல மாநிலங்களில் வரையறுக்கப்பட்டுள்ள உயர்ந்த அளவு, அரசியல் அமைப்புச் சட்டம் 276-வது விதியின் கீழ் கூறப்பட்டுள்ள உயர்ந்த அளவான ரூ. 250 ஐ, விட மிகவும் குறைவாக இருப்பதை நாங்கள் கண்டோம். இந்த வரையறை வரையிலும் வரி விதிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதிலிருந்து, பஞ்சாயத்துக்கள் ஏன் சட்ட பூர்வமாகத் தடுக்கப்படுகின்றன என்று எங்களுக்குப்புரியவில்லை. பெரிய வருமானங்களின் மீது மட்டுமே உயர்ந்த வீதங்களில் வரி விதிக்கப்படும். மேலே உள்ள அட்டவணையில் உள்ள ஓராண்டுக்கு 50 ரூபாய் என்ற குறைந்த அளவு வீதம், ரூபாய் 12,000த்துக்கு மேல் வருட வருமானமுள்ள ஒருவருக்குப் பொருந்துவதாகும். இதில் எந்தக் கஷ்டமும் இருக்குமென்று நாங்கள் கருதவில்லை. ஆகவே, எல்லா மாநிலங்களிலும், இப் பாராவின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டவர்களின் மேல், அட்டவணையில் காட்டப்பட்டது போன்ற விகிதங்களில், தொழில் வரி விதிக்க வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

*4. 13:* அடுத்து, வாகன வரி கட்டாயமாகக் கட்டத் தகுந்தது என்று நாங்கள் கருதுகிறோம். பொதுவாக, மோட்டார் வாகனங்கள் இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன. ஏனெனில், அவை, தனி வரி விதிப்பு சட்டங்களுக்கு உட்பட்டவையாகும். மேலும், இரண்டோரிடங்கள் தவிர, கிராமவாசிகள் மோட்டார் வண்டிகளை வைத்திருப்பதில்லை. அவை எங்கே இருப்பினும் பொதுவாக நகரங்களிலேயே பதிவு செய்யப்படுகின்றன. இரட்டை வரி விதிப்பைத் தவிர்க்கின்ற வகையில், இவ்வரியை விதிப்பதிலிருந்து பஞ்சாயத்துக்கள் தடுக்கப்படுகின்றன. இந்த விலக்குக்கு உட்பட்டு, எல்லா மாட்டு வண்டிகளும், மிதி வண்டிகளும் (Bicycles), இதர வாகனங்களும் வாகன வரி விதிப்புக்கு உட்பட்டனவேயாகும். மிதி வண்டிகளின் மேல் வரி விதிக்கும் விஷயத்தில், அதை குறைந்த அளவு வீதத்தில் குறைத்தே விதிக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மை பஞ்சாயத்துக்களிடம் இருந்துவருவதைக் கண்டோம். சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து மிதி வண்டிகள், அங்கே பதிவு செய்து கொள்ளத் தூண்டும் வகையில் வரித்தொகை அமைய வேண்டுமென்பதே, அதற்குக் காரணமாகும். ஆகவே, உயர்ந்த அளவு வரையறைக்குட்பட்டு, வசூலிக்க வேண்டிய சரியான வரி வீதத்தை பஞ்சாயத்து சமிதிகளே நிர்ணயிப்பதன் மூலம், அவற்றின் பகுதி முழுதும் ஒரே சீராக அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அந்தப் பகுதியில் உள்ள நகராட்சிகளும், அதே வீதத்தில் வரி விதிக்கும் வகையில், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில், வருட வரியின் குறைந்த அளவு, உயர்ந்த அளவு வீதங்கள் முறையே ரூபாய் 2, ரூபாய் 4 ஆகும். மைசூரில் மட்டுமே உயர்ந்த அளவு 3 ரூபாயாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஒரிஸ்ஸாவில், 2 ரூபாய்—மற்ற மாநிலங்களில் வரிவீதங்களை மாநில அரசாங்கங்கள் நிர்ணயிக்கின்றன. தமிழ்நாட்டின் வரி வீதங்கள் நியாயமானவை என்று நாங்கள் கருதுகிறோம். மாட்டு வண்டிகளைப் பொறுத்த மட்டிலும், விவசாயிகளுடைய வண்டிகள் வரி விதிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. பெரும்பான்மையான வண்டிகள் விவசாயிகளுடையதே ஆகும். அவர்கள் அவற்றை விவசாயத்திற்கும், விவசாயப் பொருள் விற்பனைக்கும் பயன்படுத்துகின்றனர். ராஜஸ்தான் சட்டத்தில், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மாட்டு வண்டிகள் விலக்களிக்கப்படுகின்றன. கிராமப்பாதை நல்ல நிலையில் பராமரிக்கப்படவேண்டியது, மாட்டு வண்டிச் சொந்தக்காரருக்கு மிகமுக்கியமானதாகும்.

*4. 14:* ஆகவே, மிதிவண்டிகள் உட்பட எல்லா வாகனங்களுக்கும், வாகன வரி விதிக்கப்படவேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். ஆனால், வரியின் குறைந்த அளவு வீதம், மிகக் குறைவாகவே இருக்கவேண்டும். அதாவது, ஆண்டுக்கு 2 ரூபாயாக இருக்கலாம். நாங்கள் சிபாரிசு செய்யும் வருடாந்திர வரிவீதம் வருமாறு :—

| | குறைந்த அளவு ரூ. | உயர்ந்த அளவு ரூ. |
|---|---|---|
| மிதி வண்டிகள் (Bicycles) | 2 | 4 |
| மாட்டு வண்டிகள் | 2 | 10 |

மாட்டு வண்டிகளைப் பொறுத்த மட்டில், பஞ்சாயத்துக்கள், வாடகை வண்டிகளிடமிருந்து வரியின் மூலம், அதிக வருவாய் பெறுகின்ற வகையில் உயர்ந்த அளவு வீதம் 10 ரூபாயாக யோசனை



கூறப்பட்டுள்ளது. மற்ற வாகனங்களின்மேல் விதிக்கத்தக்க வரிவீதங்களைத் தகுந்த முறையில் நிர்ணயித்துக்கொள்ளலாம்.

*4.15:* மேற்கு வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில், நிலத்தின் மேல்வரி (Land Cess) வீட்டுவரி, ஆகியவற்றின் சேர்க்கையாக "சொத்து-சூழ்நிலை" வரி (Property and Circumstances Tax) என்ற ஒரு வரி விதிக்கப்படுகிறது. அதை வீட்டு வரி, நிலவரி என்று தனித்தனியே பிரித்துவிடலாம் என்று நாங்கள் யோசனை கூறுகிறோம். ஏனெனில், வரிவிதிப்பு தவறில்லாமலும், தெளிவாகவும் இருப்பதற்கும், எளிதில் வசூலிக்கவும், அவ்வாறு பிரித்து விடுதல் வசதியாகும்.

*4.16:* இந்த வரிகளல்லாமல், பஞ்சாயத்துக்கள் விரும்பினால், கீழ்க்கண்ட வரிகளையும் விதிப்பதற்கு சில சட்டங்கள் வகை செய்கின்றன:—

(அ) ஆந்திரப் பிரதேசத்தில், சில மாவட்டங்களில், எடைபோட்டோ, அளந்தோ, எண்ணியோ விற்கப்படும் கிராம உற்பத்திப் பொருள்களின் மேல், 'கொலகரம்' அல்லது 'கடருசும்' (Kolagaram or Katarusum Tax) எனப்படும் ஒரு வரி வழக்கமாக விதிக்கப்படுகிறது. இந்த வரி பொதுவாக, வாணிபத்தை நடத்தி, வரி வசூலிக்கும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே (Contractors) வசூலிக்கப்படும். அந்த மாநிலத்தின் பல பஞ்சாயத்துக்களுக்கு, இது ஒரு நல்ல வருவாயாக இருந்துவருகிறது. கிராம எல்லைக்குள் விற்கப்படும், அதன் விளைபொருள்களின் மேல் விதிக்கப்படும் சிறுவரியும், கணிசமான அளவு வருவாயைத் தேடித்தரும். இந்த வரி அமுலில்லாத இடங்களில், இதை விருப்பத்திற்கிணங்க விதிக்கும் ஒரு வரியாக ஆக்கலாம் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இதை விதிப்பதில். பஞ்சாயத்துக்களை உற்சாகப்படுத்தலாம்.

(ஆ) மைசூர், குஜராத், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 'ஆக்ட்ரா' (Octroy) என்னும் வரி விரும்பி மேற்கொள்ளும் ஒரு வரியாக இருந்துவருகிறது. மைசூரில் நகரப் பஞ்சாயத்துக்களில் மட்டுமே இது உள்ளது. பெரிய பஞ்சாயத்துப் பகுதிகளில், ஒரு பாராட்டத்தக்க வருமானமாகவே இது இருக்கிறது. எனினும், பொதுவாக இது ஒரு பிற்போக்கான வரி என்று கருதப்படுகிறது. இதை விதித்து வருகின்ற இடங்களில், உடனே நீக்க முடியாமலிருப்பின், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம் அதற்குப்பதில் வேறு முற்போக்கான வரியை ஏற்படுத்தலாம் என்று யோசனை கூறுகிறோம்.

(இ) மகாராஷ்டிரம், குஜராத், ஜம்மு-காஷ்மீர், ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களில், பஞ்சாயத்துக்கள் 'யாத்திரை வரி'யை, விருப்பத்திற்கிணங்க விதித்து வருகின்றன. மகாராஷ்டிர மாநிலம், பூனா மாவட்டத்தில் 'சாது துக்காராம்' பிறப்பிடமாகிய டெகு என்னுமிடத்தில், இவ்வரியினால் பெறுகின்ற அதிக வருமானம் காரணமாக, வேறு வரிகளை விதிப்பதில்லை என்பதைக் கண்டோம். யாத்திரை வரி, மத அல்லது வேறு முக்கியத்துவமுள்ள சில இடங்களில்மட்டுமே விதிக்கத்தக்கது என்பதால், அதை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கவேண்டியதில்லை என்று நாங்கள் கருதுகிறோம். இவ்வரி விதிக்கத்தக்க இடங்களில், பஞ்சாயத்து சமிதி அல்லது ஜில்லா பரிஷத், அதை விதித்து அதன் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்துவிட்டு, ஏனைய பகுதி வருமானத்தை சமிதி அல்லது ஜில்லாவின் பொது நன்மைக்கான வேலைகளுக்குப் பயன்படுத்தவேண்டும். இதற்கான ஆகும் செலவுகளையும் தகுந்தமுறையில் பிரித்துக்கொள்ளலாம்.

(ஈ) ஜம்மு-காஷ்மீர் பஞ்சாயத்துச் சட்டத்தில், கால்நடைகளின் மேல் வரிவிதிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எருமைகள், பிற பால் தரும் கால்நடைகளின் மேல் வரி விதிப்பதன் மூலம், பஞ்சாயத்துக்களுக்கு கணிசமான வருமானம் கிடைக்க வழி செய்யலாம் என்று எங்களுடைய பஞ்சாப் விஜயத்தின் போது கூறப்பட்டது. இத்தகைய வரிகளைப் பஞ்சாயத்துக்கள் விதிக்கலாமா என்பதை மாநில அரசாங்கம் ஆலோசித்து முடிவு செய்யவேண்டுமென்று யோசனை கூறுகிறோம்.

*4. 17:* பொதுவாக கட்டணங்களும் வரிவீதங்களும், (அ) பணிகளுக்கான கட்டணங்கள் (ஆ) லைசென்ஸ் கட்டணங்கள் (இ) அபராதங்கள் தண்டங்களாக விதிக்கப்படும் கட்டணங்கள் என்று பிரிக்கப்படலாம்.

(அ) நீர் வழங்குதல், சாக்கடை கால்வாய், தெருவிளக்கு போடுதல், நிர்வாகம் ஆகியவற்றுக்குக் கட்டணங்களை வசூலிக்கப் பல சட்டங்கள் வகை செய்கின்றன. சாதாரணமாக, இவை விரும்பி விதிப்பானவாகவே இருத்தல் வேண்டும். ஏனெனில், இவை பஞ்சாயத்து, தன் மக்களுக்குச் செய்ய, எதிர்பார்க்கப்படும் சாதாரண சமூகப் பணிகளாகும். ஆனால், நீர் வழங்குதல், மின்சார விளக்கு போடுதல், அல்லது சாக்கடை கட்டுதல், கடன்களைக்கொண்டு செய்யப்பட்டிருப்பின், இவ் வேலைகளினால் பயனடைவோர் அனைவரிடமிருந்தும் கட்டணம் வசூலித்தல் அவற்றின் உரிமையாகும். ஒரு பஞ்சாயத்தில் பல கிராமங்கள், அல்லது கிளைக் கிராமங்கள் சேர்ந்திருக்குமிடங்களில், ஒரு குறிப்பிட்ட பணி ஒரு பகுதி மக்களுக்கு மட்டும் செய்யப்பட்டிருப்பின், அந்தப் பணியினால் பயனடையாதவர்கள் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும். சாதாரணமாக, இத்தகைய கட்டணத்தின் விகிதத்தை, குறிப்பிட்ட பணிக்கு வாங்கியுள்ள கடனைத் தீர்க்கத் தேவைப்படும்

தொகை, அல்லது அதற்காகச் செய்துள்ள செலவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிர்ணயிக்க வேண்டும்.

(ஆ) கால்நடை விற்பனைப்பதிவு, மிருகங்களின் தோல் முதலின சேகரித்தல், தேநீர்க் கடைகள், சிற்றுண்டி விடுதிகள், சந்தைகளில் விற்பனைக்கு வைக்கப்படும் பொருள்கள், புதிய கட்டடங்கள் கட்டுதல், பொது நிலம் அல்லது சமுதாயச் சொத்துக்களைப் பயன்படுத்துதல், ஆட்சேபகரமான அல்லது ஆபத்தான தொழில் செய்தல் ஆகியவற்றுக்கு லைசென்ஸ் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாநில சட்டங்களில் அனுமதித்துள்ள கட்டணங்களின் பட்டியல், இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இங்கே சேர்க்கப்படவில்லை-ஆர்.) ஒவ்வொரு மாநிலத்திலும், இக்கட்டணங்களைப் பற்றிப் பரிசீலனை செய்து, இவ் விஷயத்தில் பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களை கூடியமட்டிலும் தெளிவாக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறோம்.

(இ) (i) ஆக்கிரமிப்புக்கள்.

(ii) லைசென்ஸ் வாங்காமை.

(iii) அனுமதிக்கப்படாதவற்றை உரிமை கொண்டாடுதல், அல்லது விலக்கப்பட்ட பொருள்களைக் கையாளுதல் முதலானவை, பஞ்சாயத்துக்கள் அபராதங்கள், தண்டங்கள் முதலியன விதித்து வசூலிக்கத்தக்கவையாகும்.

*4.18.* நியாயம் வழங்கும் பஞ்சாயத்துக்கள் Nyaya Panchayats—கிராம வழக்கு மன்றங்கள்) விதிக்கும் அபராதத் தொகைகள், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு சேருவதற்கு சில சட்டங்கள் வழி செய்துள்ளன. பொதுவாக, இது நியாயப் பஞ்சாயத்துக்களின் செலவுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிவரும். நியாயப் பஞ்சாயத்துக்கள் பற்றிய ஆய்வுக் குழுவின் அறிக்கையில், கிராமப் பஞ்சாயத்துக்கள், தம் நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையை நியாயப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவதற்கு சட்டம் செய்யலாம், அல்லது மாநில அரசாங்கங்கள் நியாயப் பஞ்சாயத்துக்களுக்கென்று தகுந்த மானியங்களை வழங்கலாம் என்று சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. நாங்கள் இரண்டாவதாக கூறிய ஆலோசனையை ஆதரிக்கிறோம். நியாயப் பஞ்சாயத்துக்களின் வேலையின் அளவு பல்வேறு இடங்களிலும் வேறுபட்டிருக்கிறது. ஒரு முழு நேரச் செயலாளரின் பணிகள் தேவைப்படுமளவிற்கு அவற்றின் வேலைகள் மிகுதியாக இருந்தால், அல்லது கிராமப் பஞ்சாயத்து பணியாளர்களின் மேல் அவற்றின் வேலைப்பளுவும் விழுவதாய் இருந்தால், இந்த இரண்டு வகை பஞ்சாயத்துக்களின் வருமானங்களையும் செலவுகளையும் ஒன்ருகச் சேர்ப்பதினுல், இரண்டின் வேலையும் பாதிக்கப்படும். அரசாங்கம், நியாயப் பஞ்சாயத்துக்களுக்கு, உண்மையில் ஆகும் நிகர செலவின், அடிப்படையில் மானியங்கள் வழங்குவது எளிமையாக இருக்கக்கூடிய, பஞ்சாயத்து சமிதி அளவில், இதற்கு வகை செய்யலாம்.

*4.19.* பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் (Pancha-yati Raj In-titutions) மாநில அரசாங்கத்தின் இன்றியமையாத அங்கமாகும். கிராம அளவில் உள்ள மாநில அரசாங்கத்தின் எல்லா சொத்துக்களும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கும். இவை பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திலிருந்து வருவன ஆகும். மேலும், பஞ்சாயத்துக்கள் அவற்றைப் பராமரிப்பதுடன், அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாயத்திலுள்ளனவாகும். பல பஞ்சாயத்து சட்டங்களில், மாநில அரசாங்கத்துக்குரிய காலி நிலங்களெல்லாம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்துள்ளதைக் காண நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். பல்வேறு சட்டங்களிலும் பஞ்சாயத்துக்களிடம் மாற்றப்பட்டுள்ள இனங்களை இணைப்பு VI-ல் கொடுத்துள்ளோம். (இணைப்பு இங்கே சேர்க்கப்படவில்லை).

*4.20.* அரசாங்க நிலங்களையும், ஒதுக்கப்படாத காடுகளையும் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவதென்பது, அவர்களுடைய விருப்பத்திற்கு விடப் பட்டுள்ள இடங்களில் ரெவினியூ அதிகாரிகள், காட்டிலாகா அதிகாரிகள் ஆகியோரிடையே அவற்றைப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவதில் அதிருப்தி நிலவி வருவதை எங்கள் சுற்றுப்பயணத்தின்போது நாங்கள் கண்டோம். தேசிய மாநில நெடுஞ்சாலைகளின் பக்கங்களில் உள்ள மரங்களின் மகசூலை மாற்ருமல் இருப்பதற்கு ஏமாற்றும் வழிகளைக் கையாளுவதை நாங்கள் கண்டு வியந்தோம். சில மாநிலங்களில் கால்நடைப் பட்டிகள்கூட (Cattle Pounds) ரெவினியூ அதிகாரிகளின் ஆளுகையிலே உள்ளன. இந்த மனப்பான்மை மாறவேண்டுமென்று, நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். சிறப்பாகக் குறிப்பிட்டு விலக்களிக்கப்பட்டாலொழிய, ஒரு பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள, தனி நபருக்கு உரிமையில்லாத, கீழ்க்கண்ட சொத்துக்களெல்லாம் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்படவேண்டும்:

(அ) எல்லா நிலமும்.

(ஆ) எல்லா மரங்களும்:

(இ) குளங்களும், நீர்நிலைகளும், அவற்றில் மீன் பிடிக்கும் உரிமையும்.

(ஈ) ஒதுக்கப்படாத காடுகள்:

(உ) சத்திரங்கள், ஓய்வு விடுதிகள், பிற கட்டிடங்கள்.

*4.21.* பஞ்சாயத்துக்கள் மேற்படி சொத்துக்களை, தவருகப் பயன்படுத்தாத வகையிலும், அக்கறை எடுத்துக்கொள்ளாத தன்மையிலும், விற்றுவிடாத



வகையிலும் கட்டுப்படுத்துவதற்கு விதிகளை வகுத்து, அவற்றை வலியுறுத்த வேண்டும். ராஜஸ்தானில், ஒரு பஞ்சாயத்து, அதனுடைய 'அபாடி' (Abadi) நிலத்தை விற்று, அதைக்கொண்டு அதனுடைய அன்ருடச் செலவுகளைப் பார்த்துக்கொள்வதை நாங்கள் கண்டு வியந்தோம். வீடு கட்டிக்கொள்ள நிலத்தை விற்பதையும் ஒப்புக்கொள்ளலாம். ஆனல், அதன்மூலம் கிடைக்கின்ற வருமானம், பஞ்சாயத்துக்கு நிரந்தர சொத்து ஏற்படுத்தக்கூடிய செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடிய மூலதன நிதியில் சேரவேண்டும். கிராமத்தின் எந்த வகை சொத்துக்களையும் பஞ்சாயத்து விற்பதாயின், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதி அல்லது அங்கீகாரம் பெற்றே விற்கவேண்டும். அதே போன்று, பஞ்சாயத்து, தன்பகுதியிலுள்ள மரங்களின் மகசூலைப் பெறுவதாயினும், கண்டிப்பான விதிமுறைகளுக்கு உட்பட்டே அது நிகழ வேண்டும். விறகுக்காக கிராமப்பொது நிலங்களிலும், ஒதுக்கப் படாத காடுகளிலும் வளர்ந்துள்ள மரங்கள் மனம் போனவாறு வெட்டித் தீர்க்கப்பட்டுவருகின்றன. இதனல், விறகுப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. நிழல் தரும் மரங்களின்மையால் கோடையின் கொடுமைக்கு மிருகங்களும், மக்களும் ஆளாகின்றனர். பெரிய அளவில், மரங்களை வைத்துப்பாதுகாக்கும் படி, பஞ்சாயத்துக்களை எல்லா வகையிலும் தூண்ட வேண்டும். பொது நிலம், மரங்கள் ஆகியவற்றையும், அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பையும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்துவிட்டால், கிராமங்கள் பசுமைக்கோலம் பூணுவதுடன், காலப் போக்கில், விறகு விஷயத்தில் தன்னிறைவும் பெறும் என்று நாங்கள் நம்புகிறோம். பஞ்சாப் மாநிலத்தில் நிலங்களை ஒன்று திரட்டியதன் விளைவாக, அவ்வாறு சேர்க்கப்பட்ட மொத்த நிலத்தில் 1/10 பாகம் அரசாங்கத்திடம் உள்ளதுடன், அந் நிலத்தில் 5 ஏக்கர்கள் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

*4.22.* தனிப்பட்டோருக்கு விடப்படாமல், விவசாயத்திற்கு உபயோகமான மிகுதியான நிலங்களுள்ள கிராமங்களடங்கிய சில மாநிலங்களில், அத்தகைய நிலத்தை யெல்லாம் பஞ்சாயத்துக்களிடம் மாற்றிவிட்டு, பஞ்சாயத்துக்கள் நிலமற்ற உழவர்களுக்கும், பிறருக்கும் பிற்காலத்தில் உரிமையாக்கும்படி விடுவது விரும்பத்தக்கதல்ல. இத்தகைய இடங்களில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், குறைந்த அளவு, தலைக்கு ஒரு செண்ட் என்ற வகையில், விற்க முடியாத சமுதாயச் சொத்தாகக் கொடுத்து விட்டு, மீதி நிலத்தை அரசாங்கமே வைத்திருக்கலாம் என்று யோசனை கூறுகிறோம். மாருக, சில கிராமங்களில், எல்லா நிலமும் தனியார் சொத்தாய் விட்டு பஞ்சாயத்துக்களுக்கு ஊர் குப்பையைக் கொட்டுவதற்கு அல்லது எருக்குழிகளை வெட்டுவதற்குக்கூட இடமில்லாமலிருக்கிறது. கலவை எருத் தயாரித்தல் (Compost making) ஒவ்வொரு பஞ்சாயத்தின் கட்டாயக் கடமையாக இருக்கவேண்டுமென்று நாங்கள் கருதுகிருேம். மைசூரில், ஒரு பஞ்சாயத்து, கலவை எருவை விற்பதனல், ஆண்டுதோறும், பெரும்வருவாயைப் பெறுகிறது என்று எங்களிடம் கூறினர்கள். தேவையான இடங்களிலெல்லாம், பஞ்சாயத்து, வீட்டுமனைகளுக்கும், கலவை எருத் தயாரிக்கவும், மரம் நடவும், நாற்று நடவும் இதுபோன்ற பிற வேலைகளுக்கும் உபயோகிக்க, சமுதாய சொத்தாக ஐந்து ஏகருக்குக் குறையாமல், நிலத்தை அரசாங்கம் பிடித்துக்கொடுக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.

*4.23:* கோடையிலும் தண்ணீருள்ள குளங்களும், ஏரிகளும் உள்ள இடங்களில் எல்லாம், மீன் வளர்ப்பும் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சிறந்த வருவாயாகும். ஒரிசா அரசாங்கம், மாநில முழுவதும், விஞ்ஞான அடிப்படையில், மீன் வளர்ப்பைத் தொடங்க முன்யோசனையுடன் நடவடிக்கை எடுத்துள்ளமை கண்டு, நாங்கள் மிகவும் திருப்தியடைந்தோம். பரம்பரையாக மீன் பிடிக்கும் உரிமை, உள்ளூர் மீனவர்களுக்குரிய இடங்களில் அந்தக் குளம் அல்லது ஏரியின் நிர்வாகம், பழக்கத்திலுள்ள ஏற்பாட்டுக்குட்பட்டு, பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வருமானத்தை ஏதாவதொரு வகையில், அத்தகைய மீனவர்களும், பஞ்சாயத்தும் பங்கு போட்டுக் கொள்ளலாம். மீனவர்களுக்கு வழக்கமாக உரிமையுள்ள நீர் நிலைகளைப் பஞ்சாயத்து பராமரித்து, பழுது பார்த்து அதற்கான கட்டணங்களை அந்த மீன் பிடிக்கும் உரிமையாளர்களிடம் வசூலிக்கும். கால்நடைப் பட்டிகள் பொதுவாகப் பஞ்சாயத்துக்களிடமே இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். மத்தியப் பிரதேசத்தில், அவை ஒரு முக்கியமான வருவாய் ஆதாரமாகும். அவை உள்ளூர் அலுவலாகையால் அவற்றல் வருமானம் அதிகம் வராத இடங்களிலும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கால்நடைப்பட்டிகளுடன், அவற்றுக்கான உயர்ந்த அளவு, குறைந்த அளவு விதங்களை நிர்ணயிக்கும் உரிமையையும், பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

*4.24:* பொருட்காட்சிகளும், சந்தைகளும் பஞ்சாயத்துக்கு நல்ல வருவாயை அளிக்கக்கூடிய இனங்களாகும். சந்தைகளை பஞ்சாயத்துச் சந்தைகள், சமிதிச் சந்தைகள் என்று வகைப்படுத்த, மாநில அரசாங்கங்களுக்கு, சில சட்டங்கள் மூலம், அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில மாநிலங்களில், பெரிய அளவில் நடக்கும் கால்நடைக் காட்சிகள் ''ஜில்லா பரிஷத்',

வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. பொருட்காட்சியோ அல்லது சந்தையோ, ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துப் பகுதிக்கோ அல்லது மக்களுக்கோ தனிப்பட்ட உபயோகமாக இருக்கக்கூடாததாகையால், இவற்றை வகைப்படுத்த வேண்டியது அவசியமானதும், முறையானதும் ஆகும். இந்த பொருட்காட்சிகள், சந்தைகள் மூலம் கிடைக்கும் வருமானம், அவைகளால் பயனடையும் மக்கள் தொகை ஆகியவற்றின் அடிப்படையில், இதை வகைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். பஞ்சாயத்துச் சந்தைகள் என்று வகைப்படுத்தப்பட்ட சந்தைகளின் வருமானம், பஞ்சாயத்திற்கு சேரலாம். சமிதி அல்லது ஜில்லா பரிஷத் சந்தைகள் என்று வகைப்படுத்தப்பட்டவைகளின் வருமானத்திலேயே நியாயமான ஒரு பகுதி அந்த சந்தை அல்லது கண்காட்சி நடக்கும் பகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்திற்குக் கொடுக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். மொத்த வருமானத்தில் இது 1/3 பாகம் இருக்கலாம். ஆனால், இந்தப் பகுதி, மக்கள் தொகையில் தலைக்கு ஒரு ரூபாய் என்ற உயர்ந்த அளவுதான் இருக்கவேண்டும். சில இடங்களில் சந்தைகள் எல்லாம், விசேஷச் சட்டங்களின்கீழ் விற்பனைக்குழு (Market Committee) அல்லது சங்கம் ஆகியவைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. இந்தச் சட்டங்கள் உள்ள பகுதிகளில், ''லைசென்ஸ்'' தொகை மூலமாகவோ அல்லது சந்தைகளை தாங்களே நடத்துவதன் மூலமாகவோ, பஞ்சாயத்துக்கள் வருமானம் பெறலாம். ஆகவே, எங்கு விற்பனைக்குழுக்கள் அல்லது சங்கங்கள் அதிக வருமானத்தைப் பெறுகின்றனவோ, அங்குள்ள பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், நியாயமான தொகையை பங்கிட்டுக் கொள்வது நியாயமாகும். இதை நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாநில அரசாங்கங்களுக்குச் சிபார்சு செய்கிறோம். மேலும் பஞ்சாயத்துக்களும், சமிதிகளும் எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் சந்தைகள் அமைப்பதில் தீவிரமாக பங்கெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

4·25: தல ஸ்தாபன நிறுவனங்கள் அனைத்தும், அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மாநில அரசின் உதவியை நம்பி இருக்கவேண்டியிருக்கின்றன. இவைகளுக்குப் பஞ்சாயத்துச் சட்டம் பல்வேறு வழிகளில் வகை செய்கிறது. நிலவரி, உள்ளூர் ''செஸ்'' ஆகியவை மாநில அரசாங்கத்தால் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியமான உதவியாகும். விரிவான வகையில் அவைகளைப் பிரிப்போமானால்: (அ) எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் சேரும் பொதுப் பணிக்கான மானியம், (ஆ) சமன்செய் நிதிகளின் (equalisation funds) பொதுவான குறித்த வேலைமானிய உபரித் தொகை (General purposes grants), (இ) குறிப்பிட்ட உதவித் தொகை. பல்வேறு மாநிலங்கள் கொடுக்கும் உதவியின் அளவு கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| (அ) ஆந்திரப் பிரதேசம் | .. | தலைக்கு 25 ந.பையும் ''செஸ்'' வரியில் ரூபாய்க்கு 16 ந.பையும். |
| (ஆ) பீகார் | .. | நிலவரியில் $6\frac{1}{4}$ சத விகிதம் (ஆனால் இது இன்னும் அமுலாக்கப்படவில்லை). |
| (இ) கேரளம் | .. | அடிப்படை வரியில் 3/4 பாகம் (சட்டத்தின்படி அனுமதிக்கபட்டுள்ளது. ஆனால், அரசியல் சட்டத்தின்படி செல்லத்தக்கது தானா என்ற சிக்கலால் சரியான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.) |
| (ஈ) தமிழ் நாடு | .. | நில ''செஸ்'' வரியில் இருந்து ரூபாய்க்கு 10 ந.பை. நகரப் பஞ்சாயத்துகளுக்கும், நில ''செஸ்'' வரியில் இருந்து தலைக்கு 20 ந.பை. கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் |
| (உ) மகாராஷ்டிரம் | .. | வசூலிக்கப்படுகிற நிலவரியின் அடிப்படையில் 30 சத விகிதம். |
| (ஊ) மைசூர் | .. | நிலவரியில் 30 சத விகிதம். |
| (எ) பஞ்சாப் | .. | நிலவரியில் 10 சத விகிதம். |
| (ஏ) ராஜஸ்தான் | .. | ரூ. 400-க்கு மேற்படாமல் தலைக்கு 20 ந.பை, |



4.26 முத்திரைத் தீர்வையின் (stamp duty) மீது விதிக்கப்படும் சர்சார்ஜ் விதிப்பானது, பஞ்சாயத்துகளுக்கு மாநில அரசாங்கம் அளிக்கும் மற்றொரு வகை உதவியாகும். ஆந்திரப் பிரதேசத்திலும், தமிழ் நாட்டிலும் விற்கப்படுகிற ஒரு சொத்தின் விலை நிர்ணயத்தின் பேரிலும், மாற்றிக் கொள்கிற அல்லது இனமாகக் கொடுக்கிற சொத்தின் விலையின் பேரிலும், அடகு வைக்கிற சொத்தில் கிடைத்த தொகையின் பேரிலும் அதிக அளவு 5 சதவிகிதம் சர்சார்ஜ் விதிக்கப்படுகிறது: கேரளத்தில் இந்த வரி விதிப்பு அதிக அளவு 4 சத விகிதம்தான். தலைக்கு இவ்வளவு என்று கொடுக்கப்படும் மானியத்தைவிட, இந்த உதவி சில சமயங்களில் அதிகமாக இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில், பஞ்சாயத்துகள் அதை ஒட்டிய உயர் நிறுவனங்கள் ஆகியவைகளின் நன்மைக்காக முத்திரைத் தீர்வையின் மீது விதிக்கப்படுகிற சர்சார்ஜ் விவரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

| வரிசை எண்ணிக்கை | மாநிலம் | வரியைப் பெறும் நிறுவனங்கள் | சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் |
|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | பஞ்சாயத்து சமிதி பரிஷத் | சொத்தின் மதிப்பில் 3 சத விகிதத்திற்கு மேல் ஆகாமல் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிற குறிப்பிட்ட அளவு. |
| 2. | அசாம் | பஞ்சாயத்து | குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட வழிகளில் நிர்ணயிக்கக்கூடிய தொகை விதிக்கலாம். |
| 3. | குஜராத் | தாலூகா பஞ்சாயத்து | தாலூகா பஞ்சாயத்து அல்லது மாவட்ட பஞ்சாயத்து ஆகியவற்றின் விண்ணப்பத்தின் பேரில், முத்திரைத் தீர்வையின் மீது 15 சதவிகிதத்திற்கு அதிகப்படாமல் விதிக்கப்படும் அளவு. |
| | | மாவட்ட பஞ்சாயத்து | மாவட்ட பஞ்சாயத்தின் விண்ணப்பத்தின் பேரில் முத்திரைத் தீர்வையின் மீது 10 சத விகிதத்திற்கு அதிகப்படாமல் விதிக்கப்படும் அளவு. |
| 4. | கேரளம் | பஞ்சாயத்து | சொத்தின் மதிப்பில் 4 சதவிகிதத்திற்கு அதிகப்படாமல் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் அளவு. |
| 5. | மத்தியப் பிரதேசம் | ஜனபதா | சொத்தின் மதிப்பில் $\frac{1}{2}$ சத விகிதம் உயர்த்தக்கூடிய அதிகாரம். |
| 6. | தமிழ் நாடு | பஞ்சாயத்து | சொத்தின் மதிப்பில் 5 சதவிகிதத்திற்கு அதிகப்படாமல் அரசாங்கம் நிர்ணயிக்கிற அளவு. |
| 7. | மகாராஷ்டிரம் | ஜில்லா பரிஷத் | சொத்தின் மதிப்பில் $\frac{1}{2}$ சத விகிதம். |

| வரிசை எண்கள் | மாநிலம் | வரியைப் பெறும் நிறுவனங்கள் | சட்டத்தில் அமைக்கப்பட்ட எல்லைகள் |
|---|---|---|---|
| 8. | மைசூர் | தாலூகா போர்டு | சொத்தின் மதிப்பில் 5 சத விகிதத்திற்கு அதிகமான அளவு. |
| 9. | பஞ்சாப் | பஞ்சாயத்து | இரண்டு சதவிகிதத்திக்கு அதிகமாகாமல் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிற அளவு. |

*4.27:* பஞ்சாயத்துகளின் பொருளாதார நிலையை பலப்படுத்த முத்திரை தீர்வை மிகப் பொருத்தமானதாகும். சொத்தை வாங்குகிறவரோ அல்லது அடகு வைப்பவரோ தீர்வையைச் செலுத்துவதால், இது பொதுமக்களைப் பாதிக்காது.

*4.28:* முத்திரைத் தீர்வை தமிழ்நாட்டில் இருப்பது போல, முழுவதும் பஞ்சாயத்திற்கு சேர்வதா அல்லது பஞ்சாயத்து ஆட்சியின் மற்ற உயர்ப்பிரிவுகளுக்கும் சேர்வதா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்னையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் முத்திரைத் தீர்வையானது, பஞ்சாயத்து யூனியன் பகுதி முழுவதற்குமாக வசூலிக்கப்பட்டு, பிறகு நிலவரியின் அடிப்படையில் பஞ்சாயத்துகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில், பஞ்சாயத்து தனது பகுதியில் வசூலாகும் தீர்வையில் 3/5 பாகம் பெறுகிறது. மீதியை, சமிதியும் ஜில்லா பரிஷத்தும் சமமாக பிரித்துக்கொள்கின்றன. முத்திரைத் தீர்வையானது, சமிதியாலும், பஞ்சாயத்துகளாலும் சமமாகப் பிரித்துக்கொள்ளப்படவேண்டும் என்று நாங்கள் கருதி, கீழ்க்கண்டவாறு சிபார்சு செய்கிறோம்:—

(i) பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் நன்மைக்காக, சொத்தின் மதிப்பில் 5 சதவிகிதத்திற்கு அதிகமாகாமல் முத்திரைத் தீர்வையின் மீது சர்சார்ஜ் விதிக்கலாம்.

(ii) இது மாநில அரசாங்கத்தால் விதிக்கப்பட்டு, மாநில அரசாங்கத்தின் முத்திரைத் தீர்வையுடன் வசூலிக்கப்படவேண்டும்.

(iii) பஞ்சாயத்துச் சமிதியின் பகுதியில் வசூலிக்கப்படும் தீர்வையானது, சமிதிக்கும், பஞ்சாயத்துகளுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படவேண்டும்.

*4.29:* அடுத்ததாக, பஞ்சாயத்துகளும், சமிதிகளும் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ பெற்றுப் பயனடைய வேண்டிய வரி, மாநில அரசாங்கத்தின் கேளிக்கை வரியாகும் (Entertainment tax). தமிழ்நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் பஞ்சாயத்து யூனியன் சமிதியின் பகுதியில் வசூலிக்கப்படுகிற கேளிக்கை வரியின் 90 சதவிகிதம், மாநில அரசாங்கம் நிர்ணய அளவின்படி, பஞ்சாயத்து சமிதிக்கும், அதைச் சேர்ந்த பஞ்சாயத்துகளுக்கும் பிரிக்கப்பட்டு மாற்றப்படுகிறது. தற்போது இந்த வரியின் முழுப் பகுதியும் பஞ்சாயத்துகளிடம் கொடுக்கப்படுகிறது. குஜராத், மகாராஷ்டிரம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்கள் கேளிக்கை வரிவிதிக்க பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் அளித்துள்ளன. இந்த வரி பொதுவாக, காட்சி வரி (Show tax) யாக மட்டும் இருக்கிறது. மாநில அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறதை கேளிக்கை வரியின் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ, பஞ்சாயத்துகளாலும் சமிதிகளாலும் பங்கிட்டுக்கொள்ளப்படவேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். இத்துடன் இந்த நிறுவனங்கள், காட்சி வரியையும் விதித்துக் கொள்ளலாம்.

*4.30:* சில மாநிலங்களில் பஞ்சாயத்துச் செயலாளரின் சம்பளம் முழுவதுமாகவோ, அல்லது அதில் ஒரு பகுதியோ, விசேஷ உதவியாகக் கொடுக்கப்படுகிறது. ஆள் ஒன்றுக்கு இவ்வளவு என்ற விகிதத்தில் கொடுக்கப்படும் மானியம் ஏதாவது இருந்து, அது இதன் மூலம் அதிகம் ஆகாதபடி இருந்தால், இந்த உதவியானது, ''குறித்த வேலை மானியம்'' (purposive grant) என்ற வடிவத்தில் அளிக்கலாம் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். செயலாளருக்கு நேரடியாக பஞ்சாயத்து, சம்பளம் கொடுப்பது அவசியமாகும்.

*4.31:* நிலவரி ''செஸ்'' ஆகியவைகளின் மூலம் கிடைக்கும் வருமானங்களில் ஏற்றத் தாழ்வு இருக்குமானல், அவைகளை ஈடு செய்ய சில மாநிலங்களில் "சமன்செய் மானியம்" (Equalisation grant) அளிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் செழிப்பும் பாசன வசதியும் கொண்ட நிலங்கள் உள்ள பஞ்சாயத்தின் பகுதிகள், மற்றவைகளைவிட அதிகம் பெறுகின்றன. மகாராஷ்டிரத்தில், நிலவரியில் 30 சதவிகிதத்திற்குச் சமமான தொகையாலும், தலைக்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்ட தொகையாலும், இந்த வேறுபாடு சமன் செய்யப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில் தலைக்கு 25 ந.பை. என்ற விகிதத்திற்கு சமமான தொகை, பின்தங்கிய நிலையில் உள்ள பஞ்சாயத்துகளுக்கு அளித்து சமன் செய்வதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மைசூரில் சில பஞ்சாயத்துகளின் வருமானம், 30 சதவிகிதம் நிலவரி மானியத்தில் அளவில் இருந்து தலைக்கு 45 ந.பை. என்ற அளவுக்கு குறைகிறது. இவைகளை சமநிலைக்குக் கொண்டுவர உதவியளிக்கவேண்டியதாகும்.



*4.32 :* ஒரிசாவில் ''கெண்டு இலை'' (Kendu leaf) விற்பனையால் கிடைக்கும் வருமானத்தை பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து சமிதிகளும் பிரித்துக் கொள்கின்றன. இதுபோன்ற வருமானத்திற்கு வழி உள்ள மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநில அரசாங்கங்களை, ஒரிசாவின் வழியைப் பின்பற்றும்படி ஆலோசனை கூறுகிறோம்.

*4.33 :* அதிக அளவு வரி விதிக்க பஞ்சாயத்துகளைத் தூண்டவும், வரியை குறித்த காலத்தில் வசூலிக்கவும் தமிழ்நாடு அரசாங்கம் ஈட்டு மானியம் (Matching grant) அளிக்கிறது. இது பஞ்சாயத்துக்கள் வசூலிக்கிற வீட்டுவரிக்குச் சமமானதாகும். சில மாநிலங்களில் சரியான அளவு வரி வசூலிப்பது உள்பட சிறந்த பணி ஆற்றும் பஞ்சாயத்துகளுக்கு விசேஷ பரிசு கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இருப்பதைவிட ஈட்டு மானியம் (Matching grant) சற்று விரிவாக, ஆனல் சற்று மிதமான அளவில் இருக்க வேண்டும். இப்படி இருந்தால் குறைந்த அளவுக்கு மேல், சற்று அதிகமான வரியை விதிக்கவும், வரியை சரியான காலத்தில் வசூலிப்பதை ஊக்குவிக்கவும் பஞ்சாயத்துக்களைத் தூண்டும் என நாங்கள் எண்ணுகிறோம். ஆகவே, பஞ்சாயத்தின் பாக்கி நீங்கலாக உள்ள வரித்தேவையை அடிப்படையாகக்கொண்டு ஈட்டு மானியம் கொடுக்கப்படவேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். ஒரு ஆண்டில் 75 சதவிகித வரி வசூலிக்கப்பட்டால், அந்த வசூலில் 15 சதவிகிதத்திற்கு ஒப்பான பணம் ஈட்டுமானியமாகக் கொடுக்கப்படவேண்டும். அதிகமாக ஆகும் வசூலில் 5 சதவிகிதத்திற்கு குறைந்த அளவு ஒரு சதவிகிதமாக இது உயர்த்தப்படவேண்டும். பின்தங்கிய பஞ்சாயத்துகளுக்கு இந்த மானியம் அளிப்பது தாராளமான ஒரு முறையில் இருக்கவேண்டும்.

*4.34:* இவ்விதமாக, எல்லாவகை உதவிகள் செய்தபோதிலும், ஏராளமான பஞ்சாயத்துகளின் மொத்த வருமானம், அவை உறுதியான அடிப்படையில் அமைவதற்குப் போதுமான அளவு இல்லாமல், மிகக் குறைவாக இருக்கிறது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறோம். போதுமான நிர்வாக சிப்பந்திகள் இல்லாமல், கிராமப் பஞ்சாயத்து சிறப்பாகப் பணியாற்ற முடியாது என்பது தெளிவானதாகும். வரி மூலமாகவோ அல்லது வேறு வழிகளாலோ வருமானத்தை அதிகமாக்க பஞ்சாயத்துகள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள், பொது நல வசதிக்காகத்தான் என்பதையும், அது வெறும் நிர்வாக செலவுக்காக அல்ல என்பதையும் பொது மக்கள் அறிந்தால், இம்முயற்சிகள் வெற்றியடையும். ஆகவே, அடிப்படையில் பராமரிப்பதற்கு உதவியாக குறைந்த அளவு ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் தலைக்கு (per capita) ஒரு ரூபாய் கொடுக்கப்படவேண்டும் என்றும், இந்த உதவியை, மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சமமாக பகிர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சிபாரிசு செய்கிறோம். இந்திய அரசாங்கம் இதுவரை பஞ்சாயத்துகளுக்கு நேரடியாக எந்த விதமான உதவியையும் இதுபோன்ற இனங்களுக்கு அளிக்கவில்லை என்று விவாதிக்கப்படலாம். ஆனல், மாநில அரசாங்கத்தைப் போலவே, மத்திய அரசாங்கமும் பஞ்சாயத்து ஆட்சியின் அடிப்படையான இந்த அங்கம், குறைந்த அளவு வருமானம்கூட இல்லாமல் பலமிழந்து போவதை விரும்பாது என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். பல்வந்தராய் மேத்தா கமிட்டியின் அறிக்கை, தேசிய வளர்ச்சி மன்றத்தின் தீர்மானம் ஆகியவை அளித்த பெரிய ஊக்கம் இல்லாவிட்டால், இந்தியா முழுவதும் பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டிருக்கும் என்று நாங்கள் எண்ணவில்லை. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த மானியம் 18 கோடி ரூபாய் ஆகலாம். இந்த மானியத்தை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதி காலத்திற்கு இந்த மானியத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமே மாநிலங்களுக்கு உதவியளிக்கும் 282-வது விதியின்படி சரி செய்து கொடுக்கலாம். இந்த அளவில் இதைச் செய்தால், பஞ்சாயத்துகளின் நன்மைக்காக, மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் தனது மானியத்தின் ஒரு பகுதியை பிரித்துக் கொடுக்கவேண்டியதாக இருக்கும். பஞ்சாயத்துகளுக்கு மாநில அரசாங்கங்கள் கொடுக்கும் பல்வேறு வகையான உதவிகள், எங்கு அடிப்படை அளவான தலைக்கு 50 ந.பை. என்பதற்கு வரவில்லையோ, அப்போது, மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற, மாநில அரசாங்கம் தகுதி உடையதாகச் செய்ய அந்த தொகையைச் சரி செய்யவேண்டும்.

*4.35:* பஞ்சாயத்துகளுக்கு தங்கள் மக்கள் தொகையில் தலைக்கு 50 ந.பை.க்கு சமமான உதவி அளிப்பதற்கு வழி செய்வதோடு, எந்த மாநிலமும் திருப்தி அடைந்துவிட முடியும் என்று நாங்கள் கூறவில்லை. ஓரளவுக்கு அதிகமாக அளிக்காத வரை, பஞ்சாயத்துகள் தங்களது கடமைகளை நிறை

வேற்ற முடியாது. பிரான்ஸ், இங்கிலாந்து மேலும் சில நாடுகளில் இருக்கும், பஞ்சாயத்து போன்ற சில தல ஆட்சி நிறுவனங்களில், தலா வருமானம் ரூ. 50 லிருந்து 100 வரை உள்ளது. நமது பஞ்சாயத்துகளில் தலைக்கு சராசரி 5 ரூபாய் வருமானம் கிடைக்கச் செய்வதுபற்றி நாம் ஆலோசனை செய்ய இன்னும் சிலகாலமாகும். மத்திய மாநில அரசாங்கங்களிடமிருந்து, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தலைக்கு ஒரு ரூபாய் என்ற குறைந்த அளவு உதவியையாவது பெறவேண்டும் என்ற அளவில் திருப்தி அடைகிறோம். இந்த சிபாரிசுகளை ஏற்றுக் கொள்வதன் மூலம், நமது நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளில் பெரிய மாறுதல் ஏற்பட்டு, தற்போது அவைகளுக்குக் கிடைக்கும் வருவாயை மேலும் உயர்த்தி, நாங்கள் கூறியுள்ள கட்டாய, இஷ்டபூர்வமான வரிகளை பெருக்கிக்கொள்வார்கள் என்பதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை.

4.36. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், பள்ளிக்கூடக் கட்டிடங்கள், சாலைகள், மருந்தகங்கள், மலஜலம் கழிக்குமிடங்கள், ஆதார சுகாதார நிலையங்கள், பஞ்சாயத்துக் கட்டிடங்கள் ஆகியவைகளை அமைக்க நிச்சயமாகக் கிடைக்கக்கூடிய தல வருவாய்கள் பொதுவாக இருந்ததாகும். அரசாங்கம் கொடுத்த ஈட்டுத் தொகைகளும் இவைகளை அமைக்க உதவியாக இருந்தது. இந்த முறை எப்போதும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சில மாநிலங்களில் பஞ்சாயத்துச் சட்டத்தில் பணமாக வசூலாகிற தொழில் வரி வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பஞ்சாயத்துகள் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக, நிலவரியின் அடிப்படையில் விசேஷ வரி விதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் சமுதாய நலத் திட்ட அமைச்சரகத்தின் தூண்டுதல் பேரில் "பாதுகாப்பு உழைப்பு பாங்குகள்" (Defence Labour Banks) அமைக்கப்பட்டு, கிராம மக்கள் அளிக்கும் உழைப்பு தானம் கணக்கிடப்படுகிறது. இந்த முயற்சிகள் அனைத்தையும் அலசி ஆராய வேண்டியது அவசியம் என்று நாங்கள் எண்ணுகிறோம். இதற்காக கீழ்க் கண்ட சிபாரிசுகளை நாங்கள் செய்கிறோம் :—

எல்லா மாநிலங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளுக்கு குறிப்பிட்ட தங்களது வளர்ச்சித் திட்டத்தைச் செயலாற்ற நிலவரி, அல்லது வீட்டுவரியின் அடிப்படையிலோ அல்லது வேறு அடிப்படையிலோ வரி விதிக்க அதிகாரம் இருக்கவேண்டும். இது ஓர் ஆண்டுக்கு மட்டும் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். ஆனால் இது ஒரு தீர்மானத்தின் மூலம் புதுப்பித்துக்கொள்ளப்படவேண்டும். இதன் முதல் படியாக, நிர்ப்பந்தமில்லாமல் அளிக்கும் உழைப்பு நன்கொடை ஆகியவைகளால் உருவாகும் திட்டங்களைச் செயல்படுத்த முயற்சி செய்யவேண்டும். இந்த நன்கொடைகள் எல்லாம் போதுமான அளவு இல்லாவிட்டால், பாதுகாப்பு உழைப்பு பாங்கு, தொழில் வரி அல்லது உழைப்பாகவோ அல்லது பணமாகவோ அளிக்கப்படும் விசேஷ வரிகளை விதிக்கலாம். நிர்ப்பந்தமில்லாமல் அளிக்கப்படும் நன்கொடைகளை இந்த வரிகளுடன் சேர்த்து சமன் செய்துகொள்ளலாம். ஆனால், கட்டாயமாகவோ அல்லது நன்கொடையாகப் பெறுபவை எல்லாம் மக்களுக்குப் பெரும் சுமையாக இருக்கக்கூடாது. அதே நேரத்தில், கிராமங்களில் சோம்பிக் கிடக்கும் உழைப்புச் செல்வத்தை, நாட்டின் பயன் உள்ள பொதுச் சொத்தாக்க மாற்றி அமைப்பது, நமது கிராமங்களின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன் தருவதாகும்.

---

## அத்தியாயம்-5

### பஞ்சாயத்துக்களின் செலவு இனங்கள்

### (Expenditure of Panchayats)

5.1: பஞ்சாயத்துக்களின் பொறுப்புகளைப்பற்றி நாம் கவனிக்கும்போது, பஞ்சாயத்துக்கள் செய்யக் கூடிய பணிகள் எல்லாவற்றையும் வரிசையாகச் சொல்லத்தேவையில்லை. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் முதலாவதாகச் செய்யப்படவேண்டிய வேலைகள், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிநீர் வழங்குவது, தங்களது சொத்தான கட்டிடங்களையும், தெருக்களையும், பாதுகாத்துப் பராமரித்தல், சிறிய நீர்ப் பாசனத்திற்காகவும், மீன் வளர்ப்புக்காகவும் உள்ள குளங்களைப் பராமரித்துப் பழுது பார்த்தல், சுகாதார வசதி, காடுகளைப் பாதுகாத்தல், தெரு விளக்குப் போடுதல் ஆகியவைகளாகும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்துக்கூட்டம் நடத்தவும், அலுவலகப் பதிவுக்கட்டுகளை வைக்கவும், கட்டிடம் தேவை என்பதை நாங்கள் அறிந்தோம். பஞ்சாயத்துக்கள் அனைத்தும் சமிதிகள் காட்டும் வழியில், விவசாயம், கால்நடை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் தீவிர பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

5.2: எந்த பஞ்சாயத்துக்கு குறைந்த அளவு, ஒரு செயலாளர், ஒரு வேலையாள், ஒரு செய்திகளை எடுத்துச் செல்கின்ற வேலையாள் இருக்கிறார்களோ, அந்தப் பஞ்சாயத்தால்தான், குறைந்த அளவு பொறுப்பையாவது நிறைவேற்ற முடியும். இதற்கு விதிவிலக்கும் உண்டு. பஞ்சாயத்துத் தலைவர் போதுமான அளவுக்கு படித்தவராகவும், ஊக்கமும் உற்சாகமும் கொண்டவராகவும், எல்லா வேலைகளையும் தானே செய்ய விருப்பம் உள்ளவராகவும் இருந்தால், சம்பள ஆட்கள் தேவையில்லை. பொதுவாக, குறைந்த அளவு சிப்பந்திகளும், அவசரச் செலவுகளுக்கு உதவியும் அவசியமானவைகளாகும். இங்கு பஞ்சாயத்தின் மக்கள் தொகை அளவும், பொருளாதார [illegible]ய்த்துறையும் முக்கியமான அம்சங்களா[illegible] இடங்களில் பஞ்சாயத்துக்கள், ஒரு கிரா[illegible]ாகவோ அல்லது ஒரு குக்கிராமமாகவோ மட்டும் அடங்கியதாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. கிராம மக்கள் தங்களுடைய நடவடிக்கைகளை, கிராம சபைகள் மூலம் இயக்க இந்த் முறை வகை செய்யும் என்றும், பஞ்சாயத்துக்கள் இதன் முடிவுகளை செயலாற்றுவதாக மட்டும் இருக்கும் என்றும் விவாதிக்கப்பட்டது. கொள்கை அளவில் இது அழகாகத்தான் இருக்கும். ஆனால், செயலாற்றும் போது, இது கானல் நீராகத்தான் காட்சி அளிக்கும். அலுவலகமும், செயலாளரும் இல்லாமல் பஞ்சாயத்தின் எந்த முக்கியமான அலுவல்களையும் சிறப்பாகவும் செவ்வையாகவும் செய்யமுடியாது. தீர ஆலோசித்தபிறகு, பஞ்சாயத்து அலுவல்கள் திருப்திகரமாக நடைபெற, 1,500-ல் இருந்து 2,000 வரை மக்கள் தொகை இருக்கவேண்டும் என்று முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம். மக்கள் ஏழைகளாக இருந்தாலும், பஞ்சாயத்துக்கு வரியாகவும், மற்ற வழிகளாலும் போதுமான வருமானம் கிடைக்காது என்பதாலும், இந்த மக்கள் தொகை என்ற அளவுமுறை சரியான பலனளிக்காது என்றும் கூறப்படலாம். தலைக்கு ஒரு ரூபாய் வருமானம் கிடைத்தாலும் கூட, அந்தப் பஞ்சாயத்துகள் சிறப்பாக செயலாற்றும் என்று சொல்ல முடியாது. குறைந்த அளவு நிர்வாகச் செலவுக்கே ரூ. 1,500 போதாது. வரிவிதிப்பு, மற்றும் அரசாங்க உதவிகள் பற்றிய எங்கள் சிபார்சுகள் ஏற்கப்பட்டால், இதுபோன்ற பஞ்சாயத்துக்களின் வருமானம் ரூ. 3,000-ல் இருந்து ரூ. 4,000 வரை அதிகமாகி, நிலைமை சுலபமாகிவிடும். அப்படிப்பட்ட நிலைமையிலும், நிர்வாகச் செலவுகள் மொத்தச் செலவுக்குச் சரியான விகித அளவில் அமையாது. ஆகவே, வருமானத்தில் நிர்வாகச் செலவுக்காக 25 சதவிகிதம் என்ற நிர்ணய அளவு இருக்கவேண்டும் என்று சிபார்சு செய்கிறோம். இது உடனடியாக சிறிய பஞ்சாயத்துக்களில் முடியாதென்றாலும் இந்த இலக்கை அடைய முயலவேண்டும். நிர்வாகச் செலவு என்று குறிப்பிடும் பொழுது, அலுவலகத்தைப் பராமரிக்கும் செலவு, செயலாளரின் சம்பளம், வரி வசூலிப்பவராகவும், செய்திகள் எடுத்துச் செல்லும் வேலையும் மற்ற வேலைகளையும் கவனிக்கும் மற்றொரு உதவியாளரின் சம்பளம் ஆகியவைகளைத்தான் இங்கு குறிப்பிடுகிறோம். இதில் சமூகப் பணிகள் செய்யும் தெருக்கூட்டுவோர் போன்ற, மற்ற சிப்பந்திகள் சேர்க்கப்படவில்லை.

5.3: பொதுவாக, ஆண்டுக்கு 10,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வருகிற எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், கிராம ரெவினியூ பணியாளர், பஞ்சாயத்துப் பணியாளர் ஆகியோரை ஒருமுகப்படுத்தல் அவசியம். நிலவரி வசூல் வேலையையும், அவை பற்றிய தஸ்தாவேஜுகளை வைத்திருத்தலையும், பஞ்சாயத்துக்கு மாற்றினால், இது தானாகவே நடைபெறும். நிலவரி வசூலை பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவதற்கு பல பஞ்சா

யத்துச் சட்டங்கள் மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரம் அளித்திருக்கின்றன. இந்தப் பிரச்சினை பற்றி நாங்கள் தெளிவாக அறிந்து கொள்ள முடிய வில்லை. ஆகவே, இதுபற்றி நாங்கள் எவ்வித மான சிபாரிசும் செய்ய விரும்பவில்லை. எங்கு ரெவினியூ அதிகாரிகள் இதுபற்றி உறுதியுடன் இருக்கிறார்களோ, அங்கு பஞ்சாயத்தும் ஒப்புக் கொண்டால், நிலவரி வசூலை பஞ்சாயத்திடமே ஒப்படைக்கலாம். நிலவரி வசூலிப்பதற்காக உள்ள சிப்பந்திகளை பஞ்சாயத்தே எடுத்துக்கொள்ளலாம். அல்லது, வசூல் செய்யும். பணத்திற்கு கமிஷன் கொடுக்கலாம். வரிவசூல் செய்யும் வேலையை மாற்றுதல், அல்லது தஸ்தாவேஜுகளை ஒப்படைத்தல் ஆகியவை மாற்றப்படாமல் இருந் தாலும்கூட, ரெவினியூ இலாகாவுக்கும் பஞ்சா யத்திற்கும் பொதுவான சிப்பந்திகள் இருப்பது சாத்தியமானதுதான். இது தமிழ் நாட்டில் உண்மையாகவே நல்ல முறையில் நிறைவேற்றப் பட்டுவருகிறது. அங்கு கர்ணம் (கிராமக் கணக்கர்) பஞ்சாயத்தின் அலுவல் முறையால் (Ex-Officio) செயலாளராக இருக்கிறார். இதற்காக, அவருக்கு கொஞ்சம் ஊதியமும் கொடுக்கப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் இதே பலனை தற்போது உள்ள செயலாளர் "தாலாதிஸ்" (கிராமக் கணக்கர்) கிராம அளவுப் பணியாளர் (Village level worker) ஆகியோரின் பணிகளை ஒன்று சேர்த்து, பஞ்சாயத் துக்களின் செயலாளர்களாக்கி, மேலே குறிப்பிட்ட மூன்று பணிகளையும் செய்பவர்களாக செய்ய வேண்டும். சில இடங்களில் மாத சம்பளம் ரூ. 15-ல் இருந்து ரூ. 40 வரை வாங்கும் பகுதி நேர (Part-Time) செயலாளர்களாக இருக் கிறார்கள். சில மாநிலங்களில், பல பஞ்சாயத்து களுக்கு ஒரே செயலாளர் நியமிக்கப்பட்டு இருக் கிறார். பஞ்சாபில் ஒருவரே 7 முதல் 8 பஞ்சா யத்துக்களுக்கு ஒருவராகவும் உத்திரப் பிரதேசத் தில் 9 பஞ்சாயத்துக்களுக்கு ஒருவராகவும் செய லாளர்களாக இருக்கிறார்கள். இந்த முறை வெற்றி யடையவில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

*5.4:* மகாராஷ்டிரத்தில் உள்ள ஒரு முறை, விசேஷ கவனத்திற்குரியது. கிராம அளவுப்பணி யாளருக்கு வேண்டிய அனுபவத்தையும், பயிற்சி யையும் பெற்ற ஒருவர், பஞ்சாயத்தில் நியமிக் கப்பட்டு, பஞ்சாயத்தின் செயலாளராகவும் பணி புரியச் செய்யலாம். இந்த முறைக்கு எந்த வித தடையும் இல்லை. ஆனால், இரண்டு ஆண்டுகள் அபிவிருத்தி வேலைக்காகவும், வளர்ச்சிப்பணி களுக்காகவும் பயிற்சி பெற்ற இவருக்கு, இந்த வேலைகளை சிறப்பாகச் செய்ய ஊக்கமும், போது மான நேரமும் கிடைக்குமா என்பது சந்தேகம் தான். ஆகவே, மகாராஷ்டிரத்தில் உள்ள பஞ்சா யத்துக்களை, செயலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில், மீண்டும் ஒருமுறை தொகுத்து அமைப்பது அவசியமாகும்.

*5.5:* ஆகவே எங்கள் முடிவுகளாவன :—

(அ) ஒவ்வொரு பஞ்சாயத்தும், தனக்காக ஒரு செயலாளரைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) நிலவரி, பஞ்சாயத்து வரி முதலியன வசூல் செய்வதுடன், கிராம அளவுப் பணியாளரின் வேலைகளையும் செய்யவேண்டும். ஆனால், எந்த வகையிலும், கிராம அளவுப்பணி யாளர்களுக்கு, வரிவசூல் செய்யும் வேலையைக் கொடுக்கக்கூடாது.

(இ) பஞ்சாயத்தால் முடியுமானால், இந்த வேலைகள் ஒவ்வொன்றையும் தனி யான ஆட்கள் வசம் ஒப்படைக் கலாம்.

*5.6:* பஞ்சாயத்தின் முதற்கடமை மக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிநீர் அளிப்பதாகும். இந்த அடிப்படை வசதிகூட இல்லாமல், இன்னும் அநேக கிராமங்கள் இருப்பது என்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். இந்தக்கடமையின் சுமை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. ராஜஸ்தானின் சில பகுதிகளில், இது மிக முக்கியமானது மட்டுமல் லாமல், மிகப்பெரிய கடமையாகவும் இருக்கிறது. சில சமயங்களில், இதை அருகில் உள்ள பஞ்சாயத்துக்களின் கூட்டுமுயற்சியால் நடத்த வேண்டியிருக்கிறது. ராஜஸ்தானுக்கும், அதைப் போன்ற மற்ற பகுதிகளுக்கும் குடிநீர் பற்றிய பிரச்னை, அவசரமாக தீர்க்கப்படவேண்டிய பெரிய பிரச்னையாகும். மைல் கணக்காக நடந்து, மணிக் கணக்கில் காத்திருந்து, ஆழமான கிணற்றில் ஒரு குடம் தண்ணீர் எடுத்துக்கொண்டு மீண்டும் வீடு திரும்பும் மக்கள் நிலை அவசியம் மாற்றப்பட வேண்டியதொன்றாகும். மின்சார மோட்டார் அல்லது எண்ணெயால் இயங்கும் இயந்திரத்தினால் தண்ணீர் நிரப்பப்படுகிறது. மேல் நிலை நீர்த் தொட்டி ஒன்றும், [illegible]த்தில் தேவையான இடங் களில் தண்ணீர்க் குழாய்களும், பைப்புக் குழாய் களும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இருக்க வேண்டியவைகளாகும்.

*5.7:* சுகாதாரமும், பாதுகாப்பும் கிராமங்களுக்கு, அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒவ் வொரு பஞ்சாயத்தும், தங்களால் முடியுமானால், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தோட்டிகளை நியமித்துக்கொள்ளலாம் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். கிராமச் சுகாதாரத்தைக் கெடுக்கும்



செயல்களைத் தடுக்க, பஞ்சாயத்துக்கள் தங்களது அதிகாரங்களை உபயோகிக்கவேண்டும். ஒவ் வொரு வீட்டிலும் குழிக்கக்கூசுகளும், பொதுக்கக் கூசும் அமைப்பதுடன், இந்த வேலையும் நடக்க வேண்டும்.

*5.8:* தெருவிலே பெருக்கப்படும் குப்பை கூளங்கள் "கம்போஸ்ட்" உரமாகத் தயாரிக்கப்பட வேண்டும். சில பெரிய பஞ்சா யத்துக்கள், இந்த வகையில் சிறிது வருமானம் பெறலாம். எங்கு தோட்டிகள் கிடைக்கவில்லையோ, அங்கு, தெருக் குப்பைகளைப் பெருக்கி எடுத்துக் கொள்ளும் உரிமையை ஏலத்திற்கு விடலாம்.

*5.9:* கிராம சாலையை சரியானபடி பரா மரிப்பது, பஞ்சாயத்துகளின் கடமையாகும். இந்த வகையில்கூட, சாலைகளை பராமரிக்கும் வேலை, கிராமத்துக்குக் கிராமம் பெரிய அளவில் வேறுபடுகிறது. அநேக கிராமங்களில், குறிப்பாக ஆற்றுப்படுகைப் பகுதிகளில் மண்ரோடுகள், மழை காலங்களில் சேறும், சகதியுமாகி உபயோகமற்ற வைகளாகிவிடுகின்றன. இந்த ரோடுகளை கால நிலைக்கு ஒப்பானவைகளாக்கி, இறுதியில் தார் ரோடுகளாக்க முயலவேண்டும். மணற்பாங்கான பகுதிகளிலும், மலைப்பிரதேசங்களிலும் சரளை ரோடு திருப்தியாக இருக்கிறது. ஆனால், அவற்றின் நீளம் அதிகமாக இருக்கிறது. சாலை பராமரிப்புக்காக, பஞ்சாயத்து, தனது வரு மானத்தில் குறிப்பிட்ட அளவு செலவளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது, செயல்முறைக்கு பொருத்தமாக இருக்காது. மேலும், இந்த வேலையை, உழைப்பு தானத்தின் மூலமோ அல்லது வேறுவழி மூலமாகவே செய்யமுடியுமாகையால், நிதிக்குப்பதிலாக, உழைப்பையே கணக்கிட வேண்டும். இந்த வகையில், ஒவ்வொரு பஞ் சாயத்தும் விசேஷக் கவனம் செலுத்தவேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். பஞ் சாயத்தின் திறமைக்கு அப்பாற்பட்டதாக இந்த வேலை இருக்கும்போது, சமிதி, ஜில்லா பரிஷத் அல்லது மாநில அரசாங்கம் இதற்கு உதவி செய்ய முயற்சி செய்யலாம்.

*5.10:* அடுத்ததாக, சாக்கடை வசதி செய்தல் பஞ்சாயத்துக்கள் செய்யவேண்டிய முக்கியமான கடமையாகும். இந்த வசதி இல்லாமல், கிராமத் தின் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் அபி விருத்திசெய்யும் முயற்சி பயன் அளிக்காது. இவ் வசதிகள் இல்லாமல், மோசமாக இருக்கும் பஞ் சாயத்துக்களுக்கு, விசேஷ உதவிகள் செய்ய வேண்டும். இந்த உதவியின் ஒருபகுதி கடனாக இருக்கலாம். இதற்காக பஞ்சாயத்துக்கள் தனித் தீர்வை விதிக்கலாம்.

*5.11:* தெருக்களுக்கு விளக்குப் போடுவது, பஞ்சாயத்துக்களின் மற்றொரு வேலையாகும். ஆனால், இந்த வேலை ஏராளமான பஞ்சாயத்து களில் நடக்கவில்லை. சில பஞ்சாயத்துக்களில், மண்ணெண்ணெய் விளக்கு வசதி செய்யப்பட்டு இருக்கிறது. கிராமங்கள் மின்சார வசதி பெற்றாக வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை. கிராமங்களுக்கு மின்சார வசதியை எவ்வளவு சீக்கிரம் செய்யமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் செய்யவேண்டும் என்று யோசனை கூறுகிறோம். தமிழ் நாட்டிலும், கேரளத்திலும் ஏராளமான கிராமங்களில் மின்சார விளக்கு வசதி செய்யப் பட்டு இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களின் வரவு செலவுத் திட்டத்தில், குறிப்பாக, கேரளத்தில் தெரு விளக்குக்கான செலவினம் பெரிதாக இருக்கிறது.

*5.12:* பல பஞ்சாயத்துக்களுக்கு சமுதாய வானொலிப்பெட்டிகள் (Radio sets for Community Listening) கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகளைப் பராமரிப்பதற்காகவும், செயல்படு வதற்காகவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள முறை திருப்தியாக இல்லை. கிராமங்களுக்கு சமுதாய ஒலிபரப்பு (Community Broadcasting) பொதுப் படையாக இருக்க வேண்டியது அவசியம். சமுதாய வானொலிப் பெட்டிகளைச் சரியான முறையில் பராமரிக்க ஒரு நிறுவனம் அமைக்கப் படவேண்டும்.*

*5.13:* ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் கட்டிடம் இருக்கவேண்டும் என்பதை நாங்கள் முன்பே குறிப்பிட்டோம். எங்கு பஞ்சாயத்திற்கு நிதி இருக்கிறதோ, அங்கு பஞ்சாயத்து கட்டிட நிதி என்று ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கிவைக்க வேண்டும். இதில் சேரும் தேவையான தொகை யுடன் அரசாங்க உதவியும் சேர்ந்தால், கட்டிடம் கட்டப்போதுமான நிதி கிடைக்கும்.

*5.14:* பஞ்சாயத்துக்கள் இரண்டு வகையான வளர்ச்சிப் பணிகளை செயலாற்ற வேண்டியிருக் கிறது. பஞ்சாயத்துச் சமிதிகளின் விவசாயம், கல்வி, ஆரோக்கியம், கால்நடைப் பராமரிப்பு, சிறுபாசன வசதி ஆகிய வேலைத் திட்டங்களைச் செயல்படுத்தும் இயற்கையான, சட்டபூர்வமான ஏஜெண்டாக, பஞ்சாயத்து இருக்கிறது. மேலே குறிப்பிட்டவைகளின் சில வேலைகளுக்காக

---

*நமது மாநிலத்தில், இதற்காக, "பஞ்சாயத்து வானொலிப் பரா மரிப்பு நிறுவனம்" (Panchayat Radio Maintenance Organisation) இயங்கிவருவது அனைவரும் அறிந்ததே. —ஆசிரியர்.

பணத்தையோ அல்லது உழைப்பையோ கொடுக்கும்படி பஞ்சாயத்துக்களைக் கேட்கலாம். இந்த முறைக்கு நாங்கள் முன்பே ஒப்புதல் கொடுத்திருக்கிறோம். ஆனால், பல கிராமங்களில் அபிவிருத்தி வேலைகள் பல்வேறு காரணங்களால் காலவரையறை இல்லாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எங்கு ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தித்திட்டம் பல பஞ்சாயத்துக்களுக்கு ஒன்றாக இருந்து, அந்தப் பஞ்சாயத்துக்களின் அதிகமானவைகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால், அங்கு பின்தங்கிய பஞ்சாயத்துக்கள் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விசேஷ வரி விதிக்கலாம்.

*5.15:* அபிவிருத்தி வேலைகளில் உள்ள, குழந்தைகள் பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற இனங்கள், பஞ்சாயத்து நிர்வாகத்தைச் சேர்ந்த கடமைகளாகும். வருங்காலத்தில் கணிசமான வருமானத்தைக் கொடுக்கக்கூடிய வருவாய் கொடுக்கும் சொத்துக்களை (Remunerative assets) உண்டாக்குவது மற்றவகை இனங்களாகும். இவைகளைப்பற்றி தனியான பகுதியில் விவரித்திருக்கிறோம்.

---

# அத்தியாயம் 6

## பஞ்சாயத்துச் சமிதிகளின் வருவாய் ஆதாரங்கள்

## [RESOURCES OF PANCHAYAT SAMITIS]

*6.1:* தற்போதைய பஞ்சாயத்து ஆட்சி அமைப்பில், பஞ்சாயத்து சமிதிகள் ஒரு சிக்கலான நிலைமையை அடைந்துள்ளன. தமிழ் நாட்டில் பஞ்சாயத்து யூனியன் மன்றம், மைசூரில் தாலூகா போர்டு, உத்திரப் பிரதேசத்தில் "க்ஷேத்திர சமதிகள்" மேற்கு வங்காளத்தில் "அஞ்சலிக் பரிஷத்துக்கள்" அசாமில் "அஞ்சலிக் பஞ்சாயத்துக்கள்", மத்தியப் பிரதேசத்தில் "ஜனபாத் பஞ்சாயத்து" குஜராத்தில் "தாலூகா பஞ்சாயத்து" என்று இவை வழங்கப்படுகின்றன. சாதாரணமாக, சமிதியைச் சேர்ந்த பகுதியானது, தேசிய வளர்ச்சிப் பணி வட்டாரத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலும் இதில், சில மாற்றங்கள் உண்டு. மைசூரிலும், குஜராத்திலும், ரெவினியூ தாலூகா ஓர் அளவையாக (unit) எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரத்தில், சில பஞ்சாயத்துச் சமிதிகள், ஒரு வட்டாரத்தில் இருப்பதைவிட, அதிக மக்கள் தொகை கொண்டவைகளாக இருக்கின்றன. தற்போது, தேசத்தில் 5,182 தேசிய வளர்ச்சிப் பணி வட்டாரங்கள் இருப்பதிலிருந்து, எல்லா மாநிலங்களிலும் பஞ்சாயத்து ஆட்சி அமைந்தால், பஞ்சாயத்து சமிதியின் எண்ணிக்கை 5,000 என்ற அளவில் இருக்கும்.

*6.2:* இந்த சமிதிகள் தேசிய வளர்ச்சிப்பணி வட்டாரத்தின் அலுவல்களை ஏற்று பணிபுரிந்து வருகின்றன. வளர்ச்சிப்பணி அதிகாரியே சமிதியின் தலைமை நிர்வாக அதிகாரி ஆகிறார். மற்ற வளர்ச்சிப்பணி அதிகாரிகளும், கிராம அளவுப் பணியாளர்களும், சமிதியின் அலுவலாளர்களாக ஆகிறார்கள். சமிதிகள் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியைப்பெற்று, திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு உட்பட்ட முறையில் செலவு செய்கின்றன. 5,182 சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் 659 ஆரம்ப நிலையில் உள்ளன. இவைகளுக்கு குறைந்த அளவிலே ஆண்டு நிதி கிடைக்கிறது. முதல் கட்டத்தில் உள்ள 2,766 வட்டாரங்களுக்கு சராசரி 2 லட்சம் ரூபாயிலிருந்து 3 லட்சம் ரூபாய்வரை ஆண்டுதோறும் கிடைக்கிறது. திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி, ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய் பெறுகிற இரண்டாவது கட்டத்தில் உள்ள 1,451 வட்டாரங்களுக்கு, வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் நிதி அல்லாமல், மாநில அரசாங்கம் உபரித் தொகையும் கொடுக்கலாம். இறுதியான இரண்டாவது கட்டத்தில் உள்ள மீதி 306 வட்டாரங்களும், தங்கள் அலுவலகத்தில் உள்ள சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளத்திற்கான பணம் உள்பட, எல்லாத் தொகையையும் மாநில அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டும். நிதி நிலைமையில், சமிதிக்குச் சமிதி பெரிய அளவில் வேறுபாடு உண்டு என்பது தெளிவானதாகும். வட்டாரங்கள் தற்காலிகமானவை எனக் கருதப்பட்டபோது முதல் கட்டம், இரண்டாவது கட்டம் என்ற நிலையில் விசேஷக் கவனம் பெறுகின்ற ஒவ்வொரு வட்டாரமும், மாநில



அரசாங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்படுவது இயற்கையே.

*6.3:* வட்டார அளவில் சமிதிகள் தல ஆட்சியில் நிலையானபகுதியாக அமைக்கப்படவேண்டியிருக்கின்றன. தற்போது வட்டாரங்களிடையே பல்வேறு கட்டங்களில் உள்ள வேறுபாடுகள் தொடர்ந்து இருக்கவேண்டுமா என்பது முக்கியமான விஷயமாகும். இந்த வகையில் வேறுபாடுகளை நீக்க, தமிழ்நாடு அரசாங்கம் குறிப்பிடத்தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, 373 வட்டாரங்களுக்கும் ஒரேமாதிரியான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை (Schematic Budget) தயாரித்திருக்கிறது. இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் நிதியையும், தங்களது பல்வேறு இலாக்காக்கள் மூலம் கிடைக்கும் வருவாயையும் ஒன்று சேர்த்து, ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் வரவு செலவுத்திட்டம், இம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. நமக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு அரசாங்கத்தின் குறிப்பாணை கூறுவதாவது :—

> "இந்த முறை, வட்டாரப் பகுதிகளுக்கும், வட்டாரமல்லாத பகுதிகளுக்கும் இடையே எந்தவிதமான வேறுபாடுகளை ஏற்படுத்தாதது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இது குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தல சுயாட்சி நிறுவனங்கள், மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியாக திட்டமிடப்பட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்லும்வகையில் அமைந்துள்ளது. சமுதாய நலத்திட்டத்திற்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைவிட, மாநில வளர்ச்சிக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் விரிவானதும் செறிவு நிறைந்ததுமாகும். சமுதாய நலத்திட்டத்தின்கீழ் உள்ள ஒரு வட்டாரத்தின் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமானது, அந்த வட்டாரம், முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்கும், இறுதியாக அந்த கட்டத்தை விட்டு வெளியேறும் போதும், அளவில் குறைந்துவிடுகிறது. அதே சமயத்தில், மாநில வளர்ச்சித் திட்டத்தின், திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமானது, யூனியன்களுக்கு, அவைகளது நடவடிக்கைகளை முன்னதாகவே 5 ஆண்டுகளுக்கு திட்டமிடும்படியான வருவாயை அளிக்க உத்திரவாதம் அளிக்கிறது."

*6.4:* முதலாவது நிலையைத் தாண்டிய வட்டாரங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிற விசேஷ சலுகைகள், புதிய அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுக்கு, திட்ட அமைப்புக்காக எடுத்துக்கொள்ள வேண்டியவைகளாகும். வட்டாரங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் உறுதியாக நடப்பதற்கு, மாநில அரசாங்கம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அபிவிருத்தித் தொகை கொடுப்பதற்காக வகை செய்துகொள்ள வழி செய்யும் இந்த முறை, மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இந்தத் திட்டம் மற்ற மாநிலங்களால் பரிசீலனை செய்யப்படவேண்டும். சமுதாய நலத்திட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் உள்ள மானியத்தையும் சமிதிகளின் அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை விரிவுபடுத்த மாநில அரசாங்கம் கொடுப்பவைகளையும் ஒன்று திரட்ட அனுமதிப்பதோடு, ஊக்குவிப்பதாகவும் இருக்கிறது என்பதை, இந்திய அரசாங்கத்திற்கு யோசனையாக சொல்ல விரும்புகிறோம்.

*6.5:* சமிதிகளின் அபிவிருத்திக்கான வரவுச் செலவுத் திட்டம் வட்டாரத்தின் திட்டமிடப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் (Schematic Budget) அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். வட்டாரங்களானது 2-வது நிலைக்கும் அதற்கு அடுத்த நிலையினும் இருக்கும் போது என்ன நடக்கும் என்பது பற்றி மாநில அரசாங்கத்திற்கும் வட்டார அளவில் உள்ள டணியாளர்களுக்கும் தெளிவான கருத்து இல்லை. மாநில அரசாங்கம், இந்த வட்டாரங்களுக்கு, தங்களது சொந்த வருவாயிலிருந்து நிதி உதவி செய்யவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் ஒரு பெரிய பிரச்சினையும் எழுகிறது. அதாவது, வட்டார சிப்பந்திகளை தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது பொறுப்புக்களைக் குறைத்துவிட்டு பதவி நீக்கம் செய்வதா அல்லது பணிகளை ஒன்று சேர்ப்பதா என்பதுதான். நிரந்தரமற்ற அடிப்படையில் தொடர்ந்து இருக்கும் சிப்பந்திகளின் நிலைமையில் உறுதி இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதை முன்னிட்டும், வருங்கால அபிவிருத்தியை முன்னிட்டும், இந்த உறுதி இல்லாத சூழ்நிலை விரைவில் நீக்கப்படவேண்டும். இப்போதைய முறையில் உள்ள சிப்பந்திகள், எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் அப்படியே இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. எது எப்படி இருந்தாலும், தொடர்ந்து அபிவிருத்திக்கு, தற்போது ஆகும் செலவுக்கு ஏறக்குறைய சமமான அளவு சிப்பந்திகள் இருப்பது அவசியம் என்று கருதுகிறோம். சில இடங்களில் ஒருவருக்குப் பதிலாக இரண்டு ஜூனியர் இன்ஜினியர்கள் நியமிக்கப்படவேண்டியிருக்கும். விவசாய, கால்நடை வளர்ச்சி அதிகாரிகளின் வேலைகளையெல்லாம் ஒரே அதிகாரியிடம் கொடுப்பது சாத்தியமானதாகும். சில இடங்களில் தொழில் வளர்ச்சி அதிகாரி ஒருவர் போதுமானதாக இருக்காது. சில இடங்களில் ஒருவருக்குப் போதுமான அளவு வேலை இருக்காது.

இந்த இடங்களில் அவர் இரண்டு வட்டாரங்களுக்கான வேலைகளையும் பார்க்கலாம். ஆனால், மக்களுக்கும் மாநில, மத்திய அரசாங்கங்களுக்கும் இணைப்பாக இருக்க வளர்ச்சிப்பணி அதிகாரிகள் அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். அவர்களது வேலைக்கு வழிவகுத்த மத்திய அரசாங்கம், அவர்களை நிரந்தரமாக்கி நிர்வகிப்பதற்கான பொறுப்பில் பங்கு கொள்ளச் செய்யவேண்டும். இல்லாவிடில், சில மாநிலங்களில் அவர்கள் வேலையில் இருந்து குறைக்கப்பட்டு, அவர்கள் பெற்ற அனுபவமும் செய்த மதிப்பு வாய்ந்த வேலைகளும் மெதுவாக ஒழிந்துபோகும். இதற்காகும் செலவில், இரு அரசாங்கமும், ஒப்புக்கொள்ளும் முறையில் மாநில அரசாங்கம் ஒரு பாதியைத் தரவேண்டும். இந்த நிபந்தனையின்பேரில், மத்திய அரசாங்கம் மறு பாதியைத் தரலாம். தற்போது 70,000 மக்கள் தொகை உள்ள வட்டாரத்தில், வட்டார சிப்பந்திகளுக்காக ஆகும் சராசரி செலவு 50,000 ரூபாயில் இருந்து 60,000 ரூபாய் ஆகும். வட்டாரங்கள் அளவிலும், மக்கள் தொகையிலும் மாறுபட்டவைகளாக இருப்பதால், மாநில மத்திய அரசாங்கங்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகையைப்பற்றியும், சரிசெய்யவேண்டிய தொகைபற்றியும் தொடர்ந்து கணக்கிடுவது சுலபமும் அல்ல; தேவையில்லாததுமாகும். ஆண்டுக்கு தலைக்கு ஒரு ரூபாய் என்று மத்திய மாநில அரசாங்கங்கள் சமமாககொடுக்கும் மானியத் தொகை சிப்பந்திகள் பராமரிப்புக்காக ஒதுக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்கிறோம். இது 3-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்திற்கு சுமையாக இருக்காது. மூன்றாவது பொருளாதாரக் கமிஷன் (Taird Finance Commission) மாநில அரசாங்கங்களின் தேவைகள்பற்றி கணக்கிட்டபோது, இந்தக் கணக்கிற்கான பொறுப்புப் பற்றியும் ஆலோசனை செய்ததை இங்கு குறிப்பிடவேண்டும். மத்திய அரசாங்கம் இப்போது கொடுக்கும் மானிய தொகையிலேயே சரிசெய்து, இதற்கான உதவித் தொகையைக் கொடுத்துவிடலாம்.

*6. 6:* மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வட்டார சிப்பந்திகளை மாநில அரசாங்கமே நிர்வகிப்பதால், இதன் மூலம் அந்த அரசாங்கத்திற்கும் சுமை அதிகமாகாது. இந்த முறையின் உண்மையான சிறப்பு என்னவென்றால், பஞ்சாயத்து சமிதியின் அபிவிருத்திப் பகுதி சிப்பந்திகளை நிரந்தரமாக இருக்கவும் வகை செய்வதுதான். வருங்காலத்தில், மத்திய அரசாங்கத்திற்கு ஏற்படுகிற இந்தப் பொறுப்பினை, 4-வதும் அடுத்துவருகிற பொருளாதார கமிஷன்கள், கவனித்து, மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே உள்ள பொருளாதார உறவுகளை சரிப்படுத்தும்.

*6. 7:* மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதி காலத்தில், சமிதிகள், தற்போது உள்ள திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை தொடர்ந்து அமுலாக்கும். அல்லது மேலே கூறப்பட்ட நிலைமையில் உருவானபடி, அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை அமுல் நடத்தும். அவைகளுக்கு அபிவிருத்திச் செலவு இனங்களின் விரிவான பிரிவில் திட்டங்களுக்கான இனங்களைத் தேர்ந்தெடுக்கவோ அல்லது எத் திட்டத்தை முதலில் அமுல் நடத்தவேண்டும் என்று கணிக்க அதிக அளவு உரிமை கொடுத்திருப்பதும், தற்போதுள்ள திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்படி நிர்ணயிப்பது சரிதான் என்றாலும் அவைகள் சொந்தமான திட்டங்களை அதிகமான அளவுக்கு ஆரம்பிக்க வகை செய்யலாம் என்று எதிர்பார்க்கக்கூடாது. சமிதிகள் எல்லாம் 4-வது ஐந்தாண்டுத் திட்ட முன்னேற்றத்திற்கு தங்களது முக்கிய பங்கை எடுத்துச் சிறப்பாக வேலை செய்யவில்லையென்றால், அதிகார வட்டார வளர்ச்சி ஏஜென்சிகளை தேர்ந்தெடுக்கப்படும் தல ஸ்தாபன நிறுவனங்களாக மாற்றும் வேலையின் குறிக்கோள் பயனற்றதாகிவிடும். மத்திய, மாநில அரசாங்கங்கள் தாங்களால் மானியமாகவும் கடனாகவும் கொடுக்கக்கூடிய நிதியின் உயர்ந்த அல்லது குறைந்த அளவையும் தேசத்திற்கான திட்ட வரையறையையும், எத்திட்டம் முதன்மையாகச் செய்யப்படவேண்டும் என்பதையும் அந்த நிறுவனங்களுக்கு முன்னதாகவே தெரிவித்தால் தான், அவை இத்திட்டத்தில் உண்மையாக ஈடுபடும். அப்போதுதான், ஒவ்வொரு சமிதிக்கும் தாங்கள் திரட்ட உத்தேசித்துள்ள வருவாய் ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் தொகையை இணைத்து, உயர்ந்த அளவு அல்லது குறைந்த அளவுத் திட்டத்தை அமைக்க முடியும். இதன் வரம்பைத் தவிர முடிவான திட்ட அமைப்பில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. திட்டங்களைச் செயலாற்றுவதில், சமிதிகளுக்கு விதிக்கப்பட்ட வரம்புகள், விரிவான இனங்களான, கல்வி, ஆரோக்கியம் சாலை ஆகியவைகளுக்காக இருக்கவேண்டும். தேசீய முறையை உறுதிப்படுத்தும்வரை, அவைகள் இந்த வரம்பைவிட்டு விலகாமல், அவை பெறுகின்ற நடைமுறை அனுபவம் மக்களின் மாறுகின்ற தேவைகள் ஆகியவைகளுக்குத்தக்கப்படி மாற்றிக்கொள்ளும்படி, எல்லா உரிமையையும் கொடுக்கவேண்டும்.

*6. 8:* நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ளபடி, வழக்கமாக ஒவ்வொரு சமிதிக்குமான திட்டத்துடன், சமிதியானது அபிவிருத்தி வேலைகளை எடுத்துக்கொள்ளவும் சுதந்திரம் வேண்டும். இதற்கு இணையான அடிப்படையில் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு உதவ, ஒரு முழுத்தொகை, மாநில



அளவுக்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தல அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழும் பஞ்சாயத்து சமிதியின் கீழும், உபயோகமுள்ள ஏராளமான வேலைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. நாட்டில் உள்ள எல்லாப்பஞ்சாயத்துக்களும் இதன் மூலம் கிடைத்த அனுபவத்தை அதிக அளவு நல்ல முதலீடாக்கும் வகையில் மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு உதவி செய்யும் வகையில் இருக்க வேண்டும். இந்த வேலைக்காக, கிராம மக்கள் தொகையில் தலைக்கு 10 ரூபாய் என்ற விகிதத்தில் 400 கோடி ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படவேண்டும். பஞ்சாயத்துக்களும், சமிதிகளும் இதற்குச் சமமான தொகையை அளித்தால், குறிப்பிடப்படாத அபிவிருத்தித் திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு கிராம மக்கள் சம அளவுடன் கொடுக்கும் 800 கோடி ரூபாய் கொண்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படும்.

*6. 9:* சொத்துக்களையும் பொறுப்புகளையும் எடுத்துக்கொள்வதுடன், தேசீய வளர்ச்சித்திட்ட வேலைகளும் சேரும்போது, சமிதிகளுக்கு பழைய ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள் ஆகியவை விட்டுச் சென்ற வேலைகளும், மாநில அரசாங்க இலாகாக்கள் மாற்றிக்கொடுத்த சில வேலைகளும் சேருகின்றன. பள்ளிக்கூடங்கள், மருந்தகங்களை நடத்துவது, சாலைகளைப் பராமரிப்பது, மற்றநிறுவனங்களை நடத்துவது போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கான வகையில் செலவாகும்தொகை, வரையறைக்குட்பட்ட செலவு தொகையைவிட அதிகமாவதால், சமிதிகளின் பொறுப்புகள் அதிகமாகின்றன. இந்த வகைக்கு நிதியளிக்க இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று, அவைகளுக்கு மாநில அரசாங்கம் முழு மானியம் அளிப்பது, அடுத்தது, பொதுவாகவோ அல்லது குறித்ததாகவோ உள்ள உதவித் தொகையில் பற்றாக்குறை இருந்தால், அதைச் சரிசெய்ய வளைந்து கொடுக்கக் கூடிய சில வருவாய்த்துறைகளை அளிப்பதாகும். சமிதிகளுக்கு உண்மையில் குறைவான தொகை கொடுக்கப்படுகிறதென்றாலும், பொதுவில், இரண்டாவதாக் கூறப்பட்ட முறை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதென்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறோம்.

*6. 10:* பல்வேறு மாநிலங்களிலும் சமிதிகளிடையே உள்ள ஒரு பெரிய வேற்றுமை, ஆரம்பக் கல்வி பற்றியதாகும். சமிதியின் பகுதியில் ஆரம்பக் கல்வியைப் பரப்புதல், நடத்துதல் முதலியன சமிதிகளிடம் மாற்றப்பட்டுள்ள இடங்களில் அந்த சமிதிகள் இச்செய்கையால் குறிப்பிடக் கூடிய அளவுக்கு முக்கியத்துவமும், பெருமையும் அடைந்துள்ளன. அத்தகைய சமிதிகளின் வரவு செலவுத் திட்டம், தமிழ் நாட்டில், 7 லட்சம் முதல் 8 லட்சம் ரூபாய் வரையிலும், ஆந்திரப் பிரதேசத்தில், 5 முதல் 7 லட்சம் ரூபாய் வரையிலும், ராஜஸ்தானில் சுமார் 4 லட்சம் ரூபாயாகவும் அமைந்துள்ளது. ஆரம்பக்கல்வி, சமிதிக்கு மாற்றப்படாத உத்திரப்பிரதேசத்தில் சமிதியின் வரவு செலவுத் திட்டம் 1½ லட்சம் ரூபாய் மதிப்புக்கே உள்ளது. ஆரம்பக்கல்விக்காக மட்டும் வருடச் செலவு, தமிழ் நாட்டில் 4 லட்சம் ரூபாய், ஆந்திரப் பிரதேசத்தில் 2½ லட்ச ரூபாய், ராஜ்ஸ்தானில் 1½ லட்ச ரூபாய் ஆகிறது. அநேகமாக, இச்செலவு, சமிதியின் வரவுசெலவுத் திட்டத்தில் பாதிக்குமேல் ஆகிறது. ஆரம்பக் கல்வி, பஞ்சாயத்து ஆட்சியின் இயல்பானதும் அவசியமானதுமான அலுவலாகையால், அது பஞ்சாயத்து சமிதிக்கும், ஜில்லா பரிஷத்துக்கும் மாற்றப்படுவது மிகவும்விரும்பத்தக்கது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, ஒவ்வொரு மாநிலத்திலும் இவ்வாறு மாற்றப்படுதல் வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். சமிதி-ஜில்லா பரிஷத்தால் அமைக்கப்பட்டு, கல்வி அபிவிருத்தியில் சிறப்பான அறிவும் அனுபவமும் பெற்ற வெளியாரும் இடம் பெற்றுள்ள குழுவிடம், இந்த ஆரம்பக் கல்வியின் அன்றாட நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

*6. 11:* சமிதிக்கு உற்சாகம் அளிக்கும்வகையில், ஆரம்பக்கல்விக்குப் பொருளாதார உதவி செய்வதென்பது எளிதல்ல. ஆந்திரப்பிர தேசம், ராஜஸ்தான் மாநிலங்களிலும் மற்றும் சில மாநிலங்களிலும் நிகர செலவு மானியத்தின் முதலீடு அதாவது இதற்கென குறிக்கப்படும் ஏதாவது சிறப்பு " செஸ் " (Sj ecial cess) நீங்கலாக, ஆரம்பக் கல்விக்காக ஆகின்ற செலவுகளை ஈடுசெய்யும் மானியம் இருந்து வருகிறது. இந்த வகையில் தமிழ்நாட்டில் ஒரு சிக்கலான நடைமுறை பின்பற்றப்படுகிறது. இந்த மாநிலத்தில், இப்போது, ஆரம்பக்கல்விக்கான செலவு தலைக்கு 3·5 ரூபாயாகக் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், முதல் படியாக, ஒவ்வொரு யூனியனுக்கும், சீராக தலைக்கு 1 ரூபாய் என்ற வீதத்தில், அரசாங்கம் கொடுக்கிறது. அடுத்தபடியாக, தலைக்கு 2.50 ரூபாய் பங்கை, ஏ, பி, சி, டி என்று யூனியன்கள் வகைப்படுத்தப்பட்டு, அவை முறையே 50, 60, 70, 80 சத வீதப்பங்கைக் கூடுதல் மானியமாகப் (add tional grant) பெறுகின்றன. மீதித்தொகை, கல்வி நிதியில் சேருகின்றது. 45 ந.பை. நிலவரியில் சமிதி பெறுகின்ற 20 ந.பை. பங்கைக் கொண்டு ஈடுசெய்யப்படுகிறது. இந்தத்திட்டத்தின் கீழ், சில யூனியன்கள் தேவைக்கு அதிகமாகவும், சில தேவையான அளவுக்குக் குறை

வாகவும் பெறுவதையும், அந்த பற்றுக்குறைகளை அரசு ஈடுசெய்யவேண்டியிருப்பதையும் நாங்கள் கண்டோம்.

*6. 12:* ஆரம்பக்கல்விக்கு, தலைக்கு இவ்வளவு என்ற அடிப்படையிலோ அல்லது ஒரு மாணவனுக்கு இவ்வளவு என்ற அடிப்படையிலோ அமைந்த மானியம் வழங்குவதன் மூலம், எளிய நடைமுறையில் பொருளாதார உதவி செய்வது விரும்பத்தக்கதாகும். முதலில் கூறப்பட்ட முறையில் அளிப்பதானால், தலைக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு அளிக்கப்படும் மானியம் முழுதும் எல்லோருக்கும் கட்டாயக்கல்வி அளிக்கப்பட்டது என்ற நிலையடையும் வரையில், ஆண்டுதோறும் அதிகமாக்கிக்கொண்டே போகவேண்டும். பின்னால் கூறப்பட்ட முறையில் மானியம் அளிப்பதானால், மாணவர்களின் சேர்க்கை, வருகைக் கணக்கு சரியாக கணக்கிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஆசிரியர்களின் சம்பளங்கள், படித்தொகைகள் ஆகியவைகளில் ஏதாவது மாற்றம் நேருமானால், மானியம் அளிக்கப்படும் விகிதம் திருத்தி சரிசெய்து கொள்ள வேண்டிவரும். இந்த இரண்டு அடிப்படைகளிலும், ஒரு சுருக்கமான எளியமுறையை வகுப்பதற்குத் தேவையான ஆதாரங்களைத் தேட முடியவில்லை. ஆகவே, கீழ்க்கண்ட பொதுக் கருத்தைச் சிபார்சு செய்வதுடன், நாங்கள் திருப்தியடைகிறோம்.

(1) ஆரம்பக் கல்வி மிகவும் முக்கியமானதும், அடிப்படையானதுமாகையால், எந்த ஒரு விலக்குமின்றி, எல்லா சமிதிகளும், அதற்காகும் மொத்தச் செலவையும், மாநில அரசாங்கம் இதற்கென மாற்றுகின்ற வருவாய்களையும் மானியங்களையும் கொண்டு ஈடுசெய்யவேண்டும்.

(2) கல்வி அபிவிருத்தியில் ஆர்வத்தைப் பெருக்குவதற்காக, ஒவ்வொரு சமிதியும் அதனிடம் ஓரளவு கூடுதலான நிதி வைத்திருக்கவும் வேண்டும்.

*6. 13:* (i) கிராமங்கள் இணைப்புப்பாதைகள், (ii) சிறு பாசனத் திட்டங்கள், (iii) கிராம மருத்துவ, கால்நடை மருந்தகங்கள், பிரசவ விடுதிகள் (Maternity Centres) துப்புரவுப்பணிகள்—முதலியன சமிதிகளின் மற்ற பெரிய செலவினங்களாகும். இந்தவேலைகளை, சமிதிகளுக்கு மாற்றிவிட்ட மாநில அரசாங்கங்கள், மற்ற வேலைகளைப் போன்றே இதற்காகும் செலவுகளையும் சம்பந்தப்பட்ட இலாகாக்களைக்கொண்டே செய்யவேண்டியது மிகவும் முக்கியமாகும். ஆனால், செய்து தீரவேண்டிய இந்த வேலைகளுக்காகும் செலவுகளை, எந்த

அளவுக்கு, சமிதிகளுக்கு மாற்றப்பட்டுள்ள
வாய்கள், அதாவது, நிலவரி அல்லது செஸ்வரி
பங்கு, முத்திரைத் தீர்வை (Stamp duty) கேளிக்
வரி (Entertainment tax) முதலியவற்
கொண்டு செய்யலாம் என்ற வினா எழுகிறது. இ
வருவாய்கள் முழுவதையும் மேற்குறித்த வே
களுக்கே செலவு செய்து விடுவதென்றால், சமிதி
வெறும் ஏஜென்டுகளாகவே மாற்றப்பட்ட
விடும். ஆகவே, இந்த வருவாய்களில் பாதி
மேலே கூறிய செலவுகளுக்கு பயன்படுத்துவதுட
மீதி செலவுக்கு அரசாங்கம், ஒரு பகுதி
வாகவும், ஒரு பகுதி அதற்கென குறித்த மா
மாகவும், பொருளுதவி செய்யவேண்டுமெ
நாங்கள் சிபார்சு செய்கிறோம். இதனால், பே
குறித்த வருவாய்களில் பாதியை அபிவிரு
வேலைக்குப் பயன்படுத்த முடியும். பாதைக
சிறுபாசன வேலைகளைப் பொறுத்தமட்டில், திரு
யான அடிப்படையில், அவற்றுக்கென குறி
மானியம் கொடுக்கப்படுவது விரும்பத்தக்கதாகு
பாதைகள் பராமரிப்புக்கு அளிக்கப்படும் மா
யம், பாதைகளின் நீளத்தின் அடிப்படையி
பாசன ஆதாரங்கள் பழுதுபார்த்தலுக்கும், ப
மரிப்புக்கும் அளிக்கப்படும் மானியம், பா
வசதி பெறும் நிலத்தின் பரப்பளவு அடிப்ப
யிலும் வழங்கப்படலாம். பொதுவாக, சா
சுங்கம் (Tolls) வசூலித்தல், விரும்பத்தக்கத
என்று நாங்கள் கருதியபோதிலும், சமிதிக
புதிய பாலங்கள் கட்டுகையில், சாலைச் சுங்கங்
விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

*6. 14:* முத்திரைத் தீர்வை (Stamp du
வருமானத்தின் சர்சார்ஜிலும் கேளிக்கை, கா
வரிகளின் வருவாய்களிலும், சமிதிகள் ஒரு ப
பெற வேண்டுமென்று நாங்கள் ஏற்கென
சிபார்சு செய்துள்ளோம். சமிதிகள், நில
யின் மேலும், மாநில அரசாங்கமும், பஞ்சாயத்
களும் விதிக்கும் மற்ற சில வரிகளின் மேலும்
சார்ஜ் விதிப்பதற்கு, சில சட்டங்களில் அதிக
மளிக்கப்பட்டுள்ளன. எல்லா மாநிலங்களி
சமிதிகளுக்கு இந்த அதிகாரத்தை ஏன் கொடுக்
கூடாது என்பதற்குக்காரணம் புரியவில்லை.
னும், சர்சார்ஜ் விதிப்பதைக் கவ
துடன் முறைப்படுத்த வேண்டியது அவ
மாகும். துரதிர்ஷ்டவசமாக, பல சட்டங்க
திருத்தப்படவேண்டிய குழப்பங்களும், சிக்
களும் கணிசமான அளவுக்கு இருக்கின்றன.
ரணமாக, குஜராத் சட்டம் 187-வது பிரி
மாவட்டப் பஞ்சாயத்து ஏதாவதொரு வரி
விதித்தால், அதற்குக் கீழுள்ள அமைப்புக்கள் அ
போன்ற வரிகளை விதித்திருப்பின், இவ்வரிவிதி
கள் தானாகவே செல்லாததாக விடும் என்று
கிறது. மாவட்டப்பஞ்சாயத்து, பஞ்சாயத்து



வாயில் பங்குதரக் கடமைப்பட்டுள்ளது என்ற
திலும், மேற்படி முறை பொறுப்பைக் குறைக்
தன்மையிலுள்ளது. பஞ்சாயத்து, சமிதி,
லா பரிஷத் ஆகியவற்றின் வரிவிதிப்பு அதி
த்தில் குழப்பமும், சிக்கலும் இருத்தலாகாது
பது பஞ்சாயத்து ஆட்சிப்பொருளாதாரத்தின்
ப்படைக் கொள்கையாக இருத்தல் வேண்டும்.

*6. 15:* பொதுவாக, சமிதிகள், அவற்றின் அபி
த்தித் திட்டங்களைப் பஞ்சாயத்துகளின் மூலமே
யல்படுத்தக் கடமைப்பட்டுள்ளன. இதுவே
ரும்பத்தக்கமுறை என்பதுடன், பள்ளிக்
ட்டடங்கள், மருத்துவமனைகள், சிறுபாலங்
முதலான திட்டங்களின் செலவுகளுக்குப்
சாயத்துக்கள் நன்கொடை அளிக்கும்படி
ட்க வேண்டியதும் அவசியமாகும். இத்
கைய விஷயங்களிலெல்லாம், வேலைகள், சமிதி
ின் பொறுப்பாகவும் ஏற்படுத்தப்படும் சொத்து,
தனுடைய சொத்தாகவும் கருதப்படவேண்டும்.
தற்காகும் மொத்தச் செலவுகளும் அவற்றின்
ணக்கில் காட்டப்படுவதுடன், பஞ்சாயத்துக்கள்
தற்காகக் கொடுக்கும் நன்கொடைகளையும் வர
ல் காட்டவேண்டும். சில சமிதிகளின் கணக்கு
ில், தம் நிதியிலிருந்து இத்தகைய வேலைகளுக்
ன செலவுகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.
ஞ்சாயத்துக்கள் அவ்வேலைகளுக்கு அளித்துள்ள
ன்கொடைகள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்
களின் கணக்குகளில் மட்டுமே காணமுடிகிறது.
கவே, சமிதியின் ஒவ்வொரு வரவு செலவுத்
ட்டத்தின் வரவுப்பக்கத்திலும், நன்கொடைகள்
ரவாகக் காட்டப்படுவதுடன், மொத்த செலவு
திர்ப்பக்கத்தில் காட்டப்படவேண்டும் என்று
ங்கள் சிபார்சு செய்கிறோம். குடிதண்ணீர்
சதிபோன்ற பஞ்சாயத்துக்களின் அலுவல்களைச்
செய்வதில், சமிதியின் உதவியைப் பஞ்சாயத்து
பெறுகின்ற இடங்களில், ஏற்படுத்தப்படும்
சொத்து, பஞ்சாயத்தைச் சேர்ந்ததேயாகும்.

*6. 16:* சமிதியின் பணியாளர்களுடைய
ம்பளங்களும், படித்தொகைகளும் அதன் நிதி
யிலிருந்து கொடுக்கப்படுவது விரும்பத்தக்கதும்
வசியமானதாகும் என்று நாங்கள் கருதுகிறோம்.
தனுடைய கணக்குகளில் அச்செலவுகள் காட்டப்
டவேண்டும். பல மாநிலங்களில், சமிதிப் பணி
ாளர் நேரடியாக மாநில அரசாங்கங்களால்
ஊதியம் அளிக்கப்படுவதையும், சமிதிக்கணக்கு
ில் பணியாளர் பற்றிய செலவுகள் காட்டப்
டாமையும் நாங்கள் கண்டோம். இவ்வாறு
ஊதியம் பெறும் முறையினால், சில இடங்களில்
ட்டார அபிவிருத்தி அதிகாரிகள், வளர்ச்சிப்
ணி அதிகாரிகள் முதலானோர், மாநில அரசாங்கத்
டமிருந்து தாம் நேரடியாக ஊதியம் பெறுவதால்
உண்மையில் தாம் சமிதியின் நிர்வாக ஆளுகை

யின் கீழ் இல்லை என்கின்ற மனப்பான்மையுடையவர்களாய் இருக்கிறார்கள்.

*6. 17:* சமிதி தன்னுடைய வருவாய்களைக் கொண்டும், தலைக்கு ஒரு ரூபாய் மானியத்தைக் கொண்டும் செலவுகளை ஈடுசெய்ய முடியுமானால், பணியாளர்களை அதிகப்படுத்திக்கொள்ள அதற்கு உரிமை இருக்கவேண்டும்.

*6. . 18.* ஏற்கெனவே 4-வது பிரிவில் ஆலோசனை கூறப்பட்டபடி, பெரிய சந்தைகள், கடைகள், படகுத்துறைகள், படகுகள் முதலியவற்றின் நிர்வாகத்தைச் சமிதிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்றாலும், அதன் வருவாய்களை, அவை அமைந்துள்ள பஞ்சாயத்துக்களுடன் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறோம். இதே முறையில், பெரிய அளவில் மீன் வளர்ப்பு நடத்தக்கூடிய பெரிய ஏரிகள் உள்ள இடங்களில் பஞ்சாயத்துக்கள் அதற்கு முதலீடு செய்ய முடியாதாகையால், அவற்றையும் சமிதிகள் நடத்தலாம். இந்த முறையிலேயே பெரிய அளவில் தோட்டங்களையும் வைத்து வளர்க்கலாம்.

*6. 19:* சமிதிப் பகுதியிலுள்ள மக்களின் நன்மைக்காகவே என்று இருக்கும் விவசாய மாதிரிப் பண்ணைகள், விதைப்பண்ணைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை (Primary Health Centres) இத்தகைய பிற நிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தையும் ஆளுகையையும் சமிதிக்கு மாற்றிவிடலாம். பொதுவாக, இத்தகைய மாற்றங்களுக்குச் சட்டங்களில் வகை செய்திருந்தபோதிலும், பல மாநிலங்களில், அரசாங்க இலாகாக்கள் தம் அதிகாரத்தை மாற்றுவதில் தயக்கம் காட்டுவதை நாங்கள் கண்டோம். மேலும், வேலைகளை மாற்றும் பொழுது, அவற்றுக்குரிய நிதிகளை மாற்ற வேண்டிவருவதுடன், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள துறைப்பணியாளர்களையும் குறைக்கவேண்டுமே என்றும் அவை அஞ்சுகின்றன. பஞ்சாயத்து சமிதிகள் தோன்றி குறைந்த காலமே ஆகிறது என்பதும், அவை அனுபவமில்லாதவை என்பதும் உண்மையே. அவற்றின் அலுவல்களையும், அதிகாரங்களையும், மெல்ல மெல்ல விரிவுபடுத்திக் கொள்வதே அறிவுடைமையாகும். ஒவ்வொரு மாநிலத்திலும் சமிதியின் வரையறைக்கு உட்பட்ட அலுவல்களில் அடங்கும் ஒவ்வொரு பணியையும் அல்லது அமைப்பையும், கூடிய விரைவில், அதற்கு மாற்றுகின்ற குறிக்கோளுடன், ஒரு வேலைத்திட்டம் வகுக்கப்படவேண்டுமென்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.

*6. 20:* 8-வது பிரிவில், சமிதிகள், தாமே அல்லது பஞ்சாயத்துக்களின் கூட்டுறவுடனும் மற்றவர்கள் கூட்டுறவுடனும்அமைத்துக்கொள்ளத் தக்க வருவாய் தரும் தொழில்களைக் குறித்து ஆராய்வோம்.

# அத்தியாயம் 7

## ஜில்லா பரிஷத்துக்கள்
## (ZILA PARISHADS)

7. 1: பஞ்சாயத்து ஆட்சிமேல் வரிசை அமைப்புகளில், அதிக அளவு வேறுபாடு உள்ளவை ஜில்லா பரிஷத்துக்களாகும். ஒரு கோடியில், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஜில்லா பரிஷத்துகள் இருக்கின்றன. பரந்த அளவில் அமைக்கப்பட்ட இவை, மாவட்ட அளவில், சட்டம், ஒழுங்கு, நிதி, தேசீய-மாநில பெருவழித்துறை, கல்லூரி, பல்கலைக் கழகக் கல்வி, மாநில அளவில் முக்கியம் வாய்ந்த நிறுவனங்கள் ஆகியவை நீங்கலாக அரசாங்கத்தின் எல்லாப் பணிகளையும் செய்கின்றன. மற்றொரு கோடியில், தமிழ் நாட்டைச் சேர்ந்த மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (District Development Councils) இருக்கின்றன. இவை ஆலோசனை மட்டுமே கூறுகிற மன்றங்களாகும். இதற்கு சொந்தமாக நிதி எதுவும் கிடையாது. மாவட்டக் கலெக்டர்தான் இம்மன்றங்களுக்குத் தலைவர். மற்ற ஜில்லா பரிஷத்துக்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். மைசூர், ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள ஜில்லா பரிஷத்துக்களின் முக்கிய அலுவல்கள், ஆலோசனை கூறுவதாகும். ஆனால், சமிதிகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளின் வேலைகளைக் கண்காணித்து, இணைந்து பணியாற்றுவதும் அவைகளது வேலைகளாகும். சில சமயங்களில், கதர், சமூக நலம், பின்தங்கிய வகுப்பு ஆகியவைகளுக்கான அகில இந்திய நிறுவனங்களிடமிருந்து பெறுகிற நிதி உதவியை (பஞ்சாயத்து போன்ற) கீழ்வரிசை அமைப்புகளுக்கு இவை விநியோகிக்கின்றன. ஆந்திரப்பிரதேசம், அசாம், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஜில்லா பரிஷத்துக்கள் ஆலோசனை கூறி மேற்பார்வையிடும் அலுவல்களோடுமட்டும் நின்று விடாமல், சில நிர்வாக அலுவல்களையும் செய்கின்றன. ஆந்திரப்பிரதேசத்தில் ஜில்லா பரிஷத்துக்கள், அரசாங்கத்தின், நடுத்தரப்பள்ளிகள், உத்தியோகப் பள்ளிகள், தொழிற்பள்ளிகள் ஆகியவைகளை நிர்வகிப்பதுடன், திட்டநிதிகளை விநியோகித்து, சமிதிகளுக்கு ஆண்டுக்கு அதிகத் தேவையான ஆசிரியர்கள் எண்ணிக்கையின் அளவுகளையும் தீர்மானிக்கிறது. பீகார், ஜம்மு-காஷ்மீர், கேரளம், மத்தியப் பிரதேசம், மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில். ஜில்லா பரிஷத்துக்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. மகாராஷ்டிரத்திலும், உத்திரப்பிரதேசத்திலும் ஆரம்பக்கல்வி நிலையங்களை ஜில்லா பரிஷத்துக்கள் நிர்வகிக்கின்றன என்பதை இங்கு குறிப்பிடவேண்டும். சில மாநிலங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் வரவு செலவுத்திட்டம் பின்வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) 1961-62. |
|---|---|
| (i) ஆந்திரப் பிரதேசம் (மேற்கு கோதாவரி). | 120 |
| (ii) மகாராஷ்டிரம் (பூனா) (1962-63) | 213 |
| (iii) ஒரிசா (கட்டாக்) .. .. | 26 |
| (iv) பஞ்சாப் (லூதியானா) .. | 6 |
| (v) உத்திரப்பிரதேசம் (மீரட்): | 37 |

மகாராஷ்டிரத்தில் உள்ள ஜில்லா பரிஷத்துக்களில் தலைக்கு வருமானம் '' உஸ்மானா பாத்தில் '' ரூ. 8·50-ல் இருந்து '' சங்ளி ''யில் ரூ. 14·65 வரை வேறுபடுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில், ஜில்லா பரிஷத்துக்கள் மொத்த வருவாயில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் செலவு செய்கின்றன. அந்த மாநிலத்தில் ஜில்லா பரிஷத்துக்களுக்கு, பொருளாதார உதவி செய்வதில் உள்ள மிக முக்கியமான அம்சம், குறைந்த அளவு தலைக்கு 2 ரூபாய் என்ற விதிக்கு உட்பட்டு, நிலவரியின் 70 சதவிகிதம், அவைகளுக்குச் சேருவதாகும். மீதியுள்ள 30 சத விகிதம், பஞ்சாயத்துகளுக்குச் சேருகிறது.

எங்களுக்கு கொடுத்த புள்ளி விவரப்படி '' அகோலா '', '' அமராவதி '' ஆகிய மாவட்டங்களில் மட்டும் முறையே தலைக்கு ரூ. 2·48-ம் ரூ. 2·21-ம் பெறப்படுகிறது. மற்ற மாவட்டங்களுக்கு குறைந்த அளவுத்தொகையான தலைக்கு ரூ. 2 அடைய ஈட்டுமானியம் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. 1962-63 ல் '' சங்ளி '' மாவட்டத்தில் கிடைக்கும் தலைக்கு ரூ. 14·65 வருமானம்தான் உயர்ந்ததாகும். அதன் விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய்) |
|---|---|
| நிலவரி மானியம் .. .. | 1·69 |
| சமன்செய் மானியம் .. .. | 0·15 |
| குறித்தவேலை மானியம் .. | 6·00 |
| நிர்வாகத்திற்கான மானியம் | 0·63 |
| பற்றுக்குறை ஈடுசெய்யும் மானியம் | 2·43 |
| திட்ட மானியம் .. .. | 0·63 |
| வட்டார மானியம் .. .. | 1·80 |
| பல்வகை .. .. .. | 0·58 |
| மொத்தம் .. | 13·91 |



சுயமாக தேடிக்கொள்ளும் வருமானங்கள் :—

| | ரூ. |
|---|---|
| பிரதேச '' செஸ் '' .. .. | 0·36 |
| மற்ற வரிகளும் கட்டணங்களும் .. | 0·01 |
| கல்வி .. .. .. | 0·20 |
| மராமத்து .. .. .. | 0·10 |
| இதர சிறிய பல்வகை ஆதாரங்கள் | 0·07 |
| மொத்தம் .. ரூ. | 0·74 |

7..2: நிலவரியில் இருந்து மாற்றப்படுகிற 70 சதவிகித மாற்றம் தாராளமாகக் காணப்பட்டாலும், அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த செலவினங்களை இந்த மாற்றத்தொகையுடன் கூடிய உதவித் தொகை ஓரளவுக்குத்தான் சரி செய்கிறது. மாவட்ட அளவில் தல அரசாங்கத்தின் சக்தி வாய்ந்த பகுதியாக ஜில்லா பரிஷத்துக்கள் இருக்கும் வகையில், அவை தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகளை செவ்வையாக முடிக்க, அதிகமாக சிலமாறத்தகுந்த வருவாய்த்துறைகளை அவைகளுக்கு கொடுக்கவேண்டியது அவசியமாகும். ஜில்லா பரிஷத்தின் ஒரு தீர்மானத்தின் பேரில், மாநில அரசாங்கம் தற்போது நிலவரிமீது உள்ள 40 ந.பை செஸ்ஸை 100 ந.பையாக உயர்த்தி, அதன் மூலம் பெறுகின்ற வருமானத்தைக் கொடுக்க வேண்டும். ஜில்லா பரிஷத்துகள் இதுபோல் செஸ்ஸை உயர்த்தும்போது, மாநில அரசாங்கம் ஈட்டு மானியத்தை அளிக்க விரும்புகிறது.

7. 3: மாவட்ட அதிகாரிகள் அனைவரும், விவசாயம், கல்வி, கால்நடை, மருத்துவம் போன்ற அபிவிருத்தி இலாக்காக்களைச் சேர்ந்த அநேக நிதி நிறுவனங்களும், ஜில்லா பரிஷத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு நிர்வாகத் தலைவர், மாவட்ட கலெக்டரின் அந்தஸ்தில் உள்ளவர். ஜில்லா பரிஷத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் மாவட்ட உதவித் தலைவரும் மாதம் முறையே ரூ. 500-ம், ரூ. 300-ம் கௌரவ ஊதியமாகப் பெறுகிறார்கள். இத்துடன், வீட்டு வாடகையும் பிரயாணப்படியும் அவர்களுக்கு உண்டு. மேலும், நிலையான இரண்டு குழுக்களுக்குத் தலைமை வகிக்கும் 2 உறுப்பினர்கள், உதவித் தலைவர் பெறுவது போல ஊதியம் பெறுகிறார்கள்.

7. 4: அமைப்பிலும்கூட, மகாராஷ்டிரத்தில் உள்ள ஜில்லா பரிஷத்து,மற்ற ஜில்லா பரிஷத்திற்கு மாறுபட்டதாக உள்ளது. நாற்பதுக்குக் குறையாமலும் 60-க்கு அதிகமாகாமலும் உறுப்பினர்கள் நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுடன் மாவட்டத்திலுள்ள சமிதிகளின் தலைவர்களும், தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் நியமிக்கப்படுகிற ஒரு பெண் அங்கத்தினரும், மாநில அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிற, இணைந்த கூட்டுறவு சங்கங்களின் 5 தலைவர்களும், சேர்க்கப்பட்ட அங்கத்தினர்கள் ஆவார்கள். மகாராஷ்டிரத்தில் உள்ள பஞ்சாயத்து சமிதிகள் தற்போது முக்கியமாக சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடத்தும் ஜில்லா பரிஷத்தின் ஏஜெண்டுகளாகவும், வருங்காலத்தில் இதே போன்று அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவும் பணிபுரியும். சமிதிக்குத் தனியாக நிதி கிடையாது. அதனுடைய சிப்பந்திகள் எல்லோரும் ஜில்லா பரிஷத்தினுடையவர்கள். செயலாளரும் பஞ்சாயத்து சிப்பந்திகளுக்குக்கூட இதே நிலைதான்.

7. 5: அதே நேரத்தில், தமிழ் நாட்டில் உள்ள மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முழு வேலையும் ஆலோசனை கூறுவதுதான். இதற்குத் தலைவர், மாவட்டக் கலெக்டர்., மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்கள், மாவட்டத்தில் உள்ள நகர சபைத் தலைவர்கள், அந்த மாவட்டத்தில் வசிக்கும் பாராளுமன்ற, மாநில சட்டசபை உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிட்டுச் செயலாற்றும் இலாகாக்களில் உள்ள அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் ஆகியோர் இதன்அங்கத்தினர் ஆவார்கள்.

7. 6: இதுபோன்ற பரந்த அளவு வேறுபாடு இருக்கும் நிலைமையில், ஜில்லா பரிஷத்துக்களின் வேலைகள், வருவாய்கள் பற்றிய விஷயங்களில் கவனம் செலுத்துவது உபயோகமாகவோ அல்லது தேவையாகவோ இருக்கும் என்று நாங்கள் எண்ணவில்லை. எந்தவகை ஏற்பாடு சிறப்பாக உள்ளது என்பதை அனுபவம்தான் நிரூபிக்க முடியும்.

7. 7: வகை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதனுடைய எல்லைக்குள்தான் சிறப்பாகப் பணிபுரியவேண்டும். ஆலோசனைக் குழுக்கள் கூட தங்கள் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட கற்பனை, உண்மை, சம்பிரதாயம் ஆகியவைகளைப் பற்றி ஆராய்ந்து கூறுவதன் மூலம், சிறப்பான சேவை செய்யலாம். மாநில அமைச்சரவையால் திருத்தப்பட்டோ அல்லது தள்ளப்பட்டோ விடும் நிலைமையைத் தவிர, மற்ற நேரங்களில் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

7..8. சமிதிகளுக்கு விநியோகிப்பதற்காக, ஜில்லா பரிஷத்துகளுக்கு நிதி ஒதுக்கப்படும்போது, விநியோகத்தில் உறுதியான கொள்கையும், வரையறையும் இருக்க வேண்டும். எங்கு நிதி விநியோகமானது, குறிப்பிட்ட ஒரு வழக்கமான முறையில் நடந்து வருகிறதோ, அங்கு அந்த நிதியை ஜில்லா பரிஷத்திற்கு அனுப்பாமல், நேரடியாக அந்த பஞ்சாயத்துக்கோ அல்லது பஞ்சாயத்து சமிதிக்கோ அனுப்பலாம். அந்த பிரச்னை

மகாராஷ்டிரத்தில் உள்ள சமிதிகள் விஷயத்தில் எழவில்லை. ஏனென்றால், அங்கு சமிதிகளுக்கு சொந்தத்தில் பணம் கிடையாது. பஞ்சாயத்துக்கள், சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்கள் ஆகியவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள, வருமானம் கொடுக்கிற சந்தைகள், தோணித்துறைகள் மூலம் கிடைக்கும் வருவாய்களை சமமாகப் பங்கிட்டுக் கொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஜில்லா பரிஷத்துக்கள் பஞ்சாயத்து சமிதிகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளின் கடமைகளும் உரிமைகளும், பராமரிப்பு பற்றியதாக இருந்தாலும் சரி அல்லது அபிவிருத்தியாக இருந்தாலும் சரி, எந்த குறிப்பிட்ட · நடவடிக்கையும் சச்சரவு இல்லாமல் பொறுப்புகளை மங்க வைத்து விடும் வகையில் இல்லாமல், தெளிவானதாகவும் இருக்கவேண்டும்.

7. 9: சமிதி அல்லது பஞ்சாயத்துப் பகுதிகளில் அமுலாக்கவேண்டியிருக்கிற அபிவிருத்தித்திட்டத்தின் உபயோகத்திற்கு மட்டுமல்லாமல், ஜில்லா பரிஷத்துக்கள் இவைகளிடமிருந்து பணம் வசூலிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. அதேபோல், சமிதியும் குறிப்பிட்ட அபிவிருத்திக்காக மட்டும் பஞ்சாயத்துகளிடமோ அல்லது அவைகளைச் சேர்ந்த வேறு வழிமூலமாகவோ உதவித்தொகை பெறலாம். ஆகவே, மேல்வரிசை நிறுவனங்களானது கீழ்வரிசை நிறுவனங்களிடமிருந்து நன்கொடை விதித்து வசூலிக்க சில சட்டங்களில் உள்ள வழி வகைகளை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

7. 10: பஞ்சாயத்துக்களையும் சமிதிகளையும் போலவே ஜில்லா பரிஷத்தின் சிப்பந்திகளின் சம்பளத்தை, நிதிவசதி உள்ள ஜில்லா பரிஷத்துக்கள் கொடுக்க வேண்டும். மகாராஷ்டிரத்தில் 1-வது வகுப்பு 2-வது வகுப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மாநில அரசாங்கம் நேரடியாகச் சம்பளம் கொடுக்கிறது. இந்தச் சம்பளங்களை நேரடியாக ஜில்லா பரிஷத்துக்கள் கொடுத்தால், ஜில்லா பரிஷத்துக்களின் மொத்த செலவுக்கணக்கு துல்லிதமாகத்தெரியும். மேலும் இந்த அதிகாரிகள், தாம் ஜில்லா பரிஷத்தில் தான் பணிபுரிகிறோம் என்று எண்ணவும் வகையளிப்பதாக இருக்கும். இந்த அதிகாரிகளுக்கு நிர்வாகம், கட்டுப்பாடு, ஒழுங்கு நடவடிக்கை ஆகியவை, பொதுவாக, மற்ற சர்வீசுகளிலிருந்து வந்துள்ளோருக்கு இருப்பது போலவே இருக்கவேண்டும்.

---

## அத்தியாயம்—8

## பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்குக் கடன்கள்
## [LOANS TO PANCHAYATI RAJ BODIES]

8. 1: பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து சமிதிகளும், அவற்றிடம் மாற்றப்பட்டுள்ள சொத்துகளிலிருந்து சிறு வருமானத்தையே பெறுகின்றன. அவற்றுள் சில, கடைகள், சந்தைகள், பிற வருமானமளிக்கும் ஆதாரங்களையும் உரிமையாக்கிக் கொண்டுள்ளன. இந் நிறுவனங்கள், வருமானத்திற்கான செயல்களைத் தொடங்குவதற்கு உதவுகின்ற வகையில், முன் யோசனையுள்ள உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது, மிகவும் முக்கியமாகும். இதன் மூலம், வரிகளல்லாத வேறு வகை வருவாயைப் பெருக்க வழி செய்ய வேண்டும்.

8. 2: இது குறித்து, இரு வேறுபட்ட கருத்துகள் உண்டு. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், வியாபார நோக்கோடும், லாப நோக்கத்தோடும் எந்த விவசாய, வாணிக, தொழில் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாது என்று சிலர் நம்புகின்றனர். அவர்கள், இந்நிறுவனங்களை, வரிகளையும், மானியங்களையும் கொண்டு நிர்வாக, சமூகப் பணிகளையும் பிற அபிவிருத்திப் பணிகளைச் செய்யும் அமைப்புகளாக மட்டுமே கருதுகின்றனர்.

8. 3: மற்றும் சிலர், இந்த நிறுவனங்கள் வரிகளையும், மானியங்களையும் மட்டும் தம் பொருளாதாரமாகக் கொண்டுள்ள வரையில், கிராமப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தும் பசி, அறியாமை முதலிய பேய்களை எதிர்த்து ஒழித்து வெற்றிகாண சக்தியற்ற அமைப்புக்களாகவே இருக்கும் என்ற கருத்துடையவர்களாய் உள்ளனர். ஜனநாயகச் சோஷலிஸக் கொள்கையில், மத்திய, மாநில அளவுகளில் மட்டும் பொதுத் துறையில் தொழில்களை நடத்துவது மட்டுமன்றி, தல ஆட்சி அளவுகளிலும் அத்தகைய பணிகளை நடத்துவதும் அடங்கும் என்பது அவர்கள் வாதம். பஞ்சாயத்துக்களும், சமிதிகளும், ஜில்லா பரிஷத்துகளும், எல்லா வகையான விவசாய, தொழில், வாணிகப் பணிகளை மேற் கொள்ளவேண்டும். அவற்றுக்கான முதலீடும், திறமையையும் அவை தேடிக்கொள்ளலாம். காலப் போக்கில், இப் பணிகளிலிருந்து கிடைக்கும்



உபரி வருவாய், இந்நிறுவனங்களின் கணிசமான வருவாயாக அமையும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

8. 4 : இந்த இரண்டு கருத்துக்களில் எதையும் தகுதி காணுமல் ஒப்புக் கொள்ளுவதாயில்லை. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் ஒரு பொருத்தமான நடைமுறையை பின்பற்ற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். பஞ்சாயத்துக்கள், சமிதிகள், ஜில்லா பரிஷத்துகள் ஒரு சிலவேனும் வருவாய் தரக்கூடிய வழிகளைத் தொடங்கி நடத்தும் என்று எண்ணுவதுடன் உறுதியாகவும் நம்புகிறோம். காலப்போக்கில், அவற்றின் உதாரணம் பொதுவான நடைமுறையாக ஆகிவிடும். குறைந்த வருவாயினால் பாதிக்கப்பட்டுள்ள தல அபிவிருத்தியின் கட்டுப் பாடுகள் மொத்தமும் நீங்கவில்லையென்றாலும், பெருமளவிற்கு குறையும். தனியார் துறை தொழில்களும், கூட்டுறவுத் தொழில்களும் எல்லா இடங்களிலும் தோன்றும் என்பதற்கில்லை. சிறு முதலீட்டுத் தொழில்கள், நடுத்தர முதலீட்டுத் தொழில்கள் ஆகியவற்றின் பயனை பல இடங்களும் பெறவில்லை என்றால், அது மிகவும் துர்ப்பாக்கியமேயாகும்.

8. 5 : வருவாய் தரும் தொழில் வகைகளை அபிவிருத்தி செய்வதில், மாநில அரசாங்கங்கள் நேரடியாக ஈடுபடுவதைவிட, கடன் முதலீடுகளை அளித்து உதவும் என்பது வெளிப்படை. இத்தகைய வருவாய் தரும் வழி வகைகளை அமைத்துக்கொள்ள, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாநில அரசாங்கங்கள் சிறு கடன்களும், மானியங்களும் அளித்து வருகின்றன. இதற்காக 1962-63 ஆண்டில் சில மாநிலங்கள் ஒதுக்கியுள்ள தொகை வருமாறு :—

| | (ரூபாய் லட்சக் கணக்கில்) |
|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 23 |
| தமிழ் நாடு | 69 |
| மத்தியப் பிரதேசம் | 2 |
| மைசூர் | 2 |
| ஒரிஸ்ஸா | 4 |
| பஞ்சாப் | 8 |
| ராஜஸ்தான் | 50 |
| உத்தரப் பிரதேசம் | 10 |

8..6. மேலும் கடன்தரும் அரசாங்கம், அந்த கடன்களை பயன்படுத்துவது குறித்து, சிறந்த ஆலோசனைகளைக் கூறவேண்டியதுஅவசியம். அந்தக் கடன்களை கொண்டு தொடங்கப்படும் தொழில்களின் அலுவல்களையும், ஏற்படுத்தப்படும் சொத்துகளின் தன்மைகளையும் கவனமாக கண்காணிக்க வேண்டியதும் அவசியம்.

8. 7 : கீழ்க்கண்ட வேலைகளுக்காக பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு கடன் தேவைப்படுகிறது :

(a) நீர் விநியோகத் திட்டம், சாக்கடை கால்வாய்கள் கட்டுதல், மின்சார விளக்குகளை அமைத்தல் முதலான பொது உபயோக வேலைகள். இத்தகைய வேலைகளுக்காக மாநில அரசாங்கங்கள் ஒரு பகுதி கடனை அடைக்க உதவித் தொகை அளிக்கவும், மீதிக் கடனை அடைக்க இவ்வேலைகளினால் பயன் பெறுவோரிடம் சிறப்புக் கட்டணம் வசூலிக்கவும் விரும்பலாம்.

(b) மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாகவும், கிராமப் பகுதிகள் நகரங்களாக மாறி வருவதன் விளைவாகவும், நிலையான, பெருகி வரும் வருமானத்தை அளிக்கக் கூடிய கடைகள், சந்தைகள், உணவு விடுதிகள், படக் காட்சி கொட்டகைகள் முதலியன கட்டுதல். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களே கடைகளையோ, உணவு விடுதிகளையோ, படக்காட்சி கொட்டகைகளையோ நடத்தவேண்டும் என்பதில்லை. அந்த கட்டிடங்களையும், இடங்களையும் அவை தம் சொத்தாக வைத்துக் கொண்டு வாடகைக்கு விடலாம். கேளிக்கை வரி, காட்சி வரி முதலியவை முழுதுமோ அல்லது ஒரு பகுதியோ பஞ்சாயத்துக்கள் அல்லது சமிதிகளுக்கு சேருகின்ற மாநிலங்களில், அவை சினிமா கொட்டகைகளை கட்டுவதினால், அவற்றின் வாடகை வருமானம் மட்டுமன்றி, வரி விதிப்புகளிலிருந்தும் அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. சில மாநிலங்களைத் தவிர, ஏனைய இடங்களில், கிராமப் பகுதிகளில் இத்துறையில் தனியார் முதலீடு செய்யவில்லை. கடைகள், உணவு விடுதிகளைப் பொறுத்த மட்டில் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களே அவற்றை சொந்தமாக வைத்திருத்தல் சுகாதார, துப்புரவு வகையிலும் கவனித்துக்கொள்ள வசதியாக இருக்கும். ஏற்கனவே, சில பஞ்சாயத்துக்கள், கடைகள், சந்தைகள் மூலமாக நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றன. கூடுமானவரையில், எல்லாப் பஞ்சாயத்துக்களும் இத்தகைய வருமானம் தரும் சொத்துக்களின் மூலம் பயனடையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

(c) யந்திரக் கலப்பைகள், நீரிறைக்கும் யந்திரங்கள், குழாய்க்கிணறு வெட்டும் கருவிகள், போரடிக்கும் கருவிகள், விவசாயக் கருவிகள் முதலியன வாங்குதல். இவை விவசாயிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தோட்டங்களுக்காகவும், காடு வளர்ப்புக்காகவும் வாடகைக்கு விடப் பயன்படும். வரண்ட பிரதேசங்களில் குறைவான மழை காரணமாக, சில நாட்களே நிலம் ஈரமாக இருக்கும். அத்தகைய இடங்களில் யந்திரக் கலப்பை கொண்டு வேகமாக உழவை முடித்து விட

முடியும். தனியாக முதலீடு செய்யக்கூடிய வசதியுள்ள பெரிய விவசாயிகள் சொந்தமாக யந்திரக் கலப்பைகளை வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆகவே, சிறு விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கம் யந்திரக் கலப்பைகள் வாங்குவதற்கு தேவையான முதலீட்டைச் சேர்ப்பது கடினமாகும். நாங்கள் ஒரிஸ்ஸாவிற்குச் சென்றிருந்தபோது, கல்லுடைக்கும் இடங்களிலிருந்து ஜல்லிக் கற்களை எடுத்துக் கொண்டு போய் கொடுத்து வரும் ஒப்பந்தத்தை (Contract) வெற்றிகரமாக நிறைவேற்றி வந்த ஒரு பஞ்சாயத்து, தனக்கே வாகன வசதியிருந்ததால் அந்த ஒப்பந்த வேலையினால் அதற்கு கணிசமான அளவிற்கு மேலும் அதிகமான லாபம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. பஞ்சாயத்துக்களிடம் பொது நிலமாகவோ, ஒதுக்கப்படாத காடுகளாகவோ நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ள இடங்களில், தோட்டங்களை வைத்து வளர்க்கவும், காடுகளை வைத்து வளர்க்கவும் வாய்ப்பிருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு பெரிய தென்னந்தோப்பை வைத்துப் பராமரித்து வந்த ஒரு பஞ்சாயத்தைப் பார்த்தோம். ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில், அது ஆண்டு தோறும் நல்ல வருமானத்தை அளிக்க இருக்கிறது. இருபதிலிருந்து முப்பது ஏக்கர் வரை பரப்புள்ள நிலத்தில், கிளைகளை வெட்டி பதியம் போடுதல் முதலான அறிவியல் ஆலோசனைகளுடன் காடுகளை வைத்து வளர்ப்பது பஞ்சாயத்துப் பகுதிகளில் விறகு விஷயத்தில் தன்னிறைவு காண உதவுவதுடன், மண் எண்ணெய் வாங்குவதில் ஆகும் செலவையும் மீதிப் படுத்தலாம்.

(d) விஞ்ஞான முறையில் மீன் வளர்ப்பை மேற்கொள்வது மிகுந்த வருவாயைத் தரும் ஒரு வழியாகும். ஒரிஸ்ஸா அரசாங்கம் மீன் வளர்ப்புத் திட்டத்தை மாநிலமெங்கும் செயல் படுத்தத் தொடங்கியிருப்பதை இங்கே மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம்.

(e) பஞ்சாயத்துக்களும், சமிதிகளும், ஜில்லா பரிஷத்துகளும் எடுத்து நடத்தக்கூடிய பல்வேறு வகை தொழில்களைத் தொடங்குதல், அரிசி, மாவு அரைத்தல், செங்கல் தயாரித்தல், எலும்புத்தூள் தயாரித்தல், பழச்சாறு எடுத்தல், பழச்சாறு புட்டிகளில் அடைத்தல் ஆகிய சிறு முதலீட்டுத் தொழில்கள் முதலியன பஞ்சாயத்துக்கள் தொடங்குவதற்கு ஏற்றனவாகும். விவசாய இயந்திரங்களைத் தயாரித்தல், சைகிள் பாகங்களைத் தயாரித்தல், எளிய பொறியியல் தயாரிப்புத் தொழில் ஆகிய பெரிய தொழில்களை சமிதிகளும், ஜில்லா பரிஷத்துகளும் தொடங்கி நடத்தலாம். இவற்றுள் ஏதாவதொரு தொழில் சில மாநிலங்கள் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வருவதை நாங்கள் கண்டோம்.

8. 8 : இத்தகைய தொழில்களை எடுத்து நடத்த வேண்டியது கூட்டுறவு இயக்கங்களின் வேலை என்று வாதிக்கலாம். ஒவ்வொரு அளவும், வகையும் உள்ள தொழிற் கூட்டுறவுகள் தோன்றுவதை விரும்புகிறோம். விவசாயம், சிறு முதலீட்டுத் தொழில் அல்லது நடுத்தர முதலீட்டுத் தொழில்கள் மத்திய, மாநில அரசாங்கங்கள் ஏற்று நடத்து மளவுக்குப் பெரியவையல்ல. அவைகளை எடுத்துச்செய்ய, தொழிற் கூட்டுறவுகளை அமைப்பது மட்டுமே பொதுத்துறையில் அமைந்த ஒரே வழி என்றும் நாம் கருதவில்லை. மூலப் பொருள்களை பெரும் பகுதியையோ அல்லது, பயிற்சி பெற்ற தொழில் திறனையோ உறுப்பினர்கள் அளிக்கத்தக்க, கைத்தறி, அல்லது சர்க்கரை ஆலை முதலான தொழில்கள், தொழிற் கூட்டுறவுகள் மூலம் நடத்த ஏற்றன. ஆனால், தொழிலாளர்கள் ஏழைகளாகவும், தொழிலில் பயிற்சி பெறுதவர்களாகவும் இருக்குமிடங்களில், கணிசமான முதலீடும், தொழில் திறனும் தேவைப்படும். நவீன செங்கல், ஓடு தயாரிப்புத் தொழிலை யொத்த துறையில் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்துச் சமிதிகளும் தொடங்கி நடத்தலாம். இத் தொழிலைத் தொடங்கி நடத்தும் பொழுது, பஞ்சாயத்து சமிதிகளும் பஞ்சாயத்துக்களும் தொழிலாளர்களை உறுப்பினர்களாக்கி இதை கூட்டுறவு முறை ஆக்குவதில் எந்தத் தடையுமில்லை. எனினும், முதலீட்டின் பெரும்பகுதியும், நிர்வாகமும், லாப நஷ்டங்களை ஏற்கும் பொறுப்பும் பஞ்சாயத்து அல்லது சமிதியினுடையதாகவே இருக்கவேண்டும்.

8. 9 : இந்த வேலைகளுக்காக, பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு, மாநில அரசாங்கத்துறைகளினால் போதுமான கடன்கள் கொடுக்க முடியாது என்றும், அப்படி கொடுக்கக் கூடிய இடங்களிலும் கடன்கள் பொருளாதார நிறுவனமாக செயல்படும் ஒரு தனி நிலையத்தின் மூலம் வழங்கப்படலாம் என்பதையும் அந்த நிலையம் எந்த வகையான அரசியல் சார்பும் இல்லாமல் விளங்கும் என்பதையும் நாங்கள் உணர்ந்துள்ளோம். ஆகவே நாங்கள் கீழ்க்கண்டவாறு சிபாரிசு செய்கிறோம் :—

(i) மாநில அரசாங்கம் ஒவ்வொன்றும் ஒரு பஞ்சாயத்து ஆட்சி நிதி நிலையத்தை (Panchayati Raj Finance Corpcration) நிறுவ வேண்டும்.

(ii) மாநில அரசாங்கம், அதனுடைய அதிகாரம் அளிக்கப்பட்ட மூலதனமாக, குறைந்த அளவு ஒரு கோடி ரூபாயும், உயர்ந்த அளவு ஐந்து கோடி ரூபாயும் என்ற வரையறைக்குட்பட்டு நிர்ணயிக்க வேண்டும்.

(iii) அதிகாரம் அளிக்கப்பட்ட மூலதனம், முழுதும் செலுத்தப்பட்ட நூறு ரூபாய் பங்குகளாக



பிரிக்கப்பட வேண்டும். அவை கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு குறிக்கப்பட்டுள்ள சத வீத அளவில் வழங்கப்பட வேண்டும்.

| | சத வீதம். |
|---|---|
| (a) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து சமிதிகள், ஜில்லா பரிஷத்துகள். | 20 |
| (b) மாநில அரசாங்கம் .. | 20 |
| (c) மத்திய அரசாங்கம் .. | 20 |
| (d) இந்திய ரிசர்வு பாங்கு, இந்திய லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன். | 20 |
| (e) கூட்டுறவு பாங்குகள், அட்டவணையில் கண்ட பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், மாநிலத்தில் கிளை அலுவலகங்களுள்ள பிற நிதி நிலையங்கள். | 20 |

ஒரு பஞ்சாயத்துக்கு, ஒன்று முதல் பத்து பங்குகளும் ஒரு சமிதிக்கும் ஒரு ஜில்லா பரிஷத்துக்கும் பத்து முதல் நூறு பங்குகளும் ஒதுக்கப்பட்டால், அவற்றிற்கென்று குறிக்கப்பட்ட விகிதசாரப் பங்குகள் எளிதில் சேர்க்கப்பட்டு விடும்.

(iv) மாநில அரசாங்கம் அசல் தொகையையும் குறைந்த அளவு பங்கு விகிதத் தொகையையும் (Dividend) பஞ்சாயத்து ஆட்சி நிதி நிலையத்திற்கு (Panchayati Raj Finance Corporation) திருப்பிச் செலுத்த உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

(v) நிதி நிலையத்தின் பங்குகள் அங்கீகரிக்கப்பட்ட காப்புத் தொகையாக (Securities) இருக்கவேண்டும்.

(vi) நிதி நிலையம் தன்னுடைய புழங்கும் மூலதனத்தை (Working Capital) பெருக்கிக்கொள்ளுவதற்காக, பாண்டுகளையும், கடன் ஈட்டுப் பத்திரங்களையும் வழங்கவும், விற்கவும் அதிகாரமளிக்கப்படவேண்டும். அத்தகைய பாண்டுகளும் கடனீட்டுப்பத்திரங்களும் அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

(vii) அதனுடைய இயக்குனர் கழகத்தில் (Board of Directors) கீழ்க் கண்டவர்கள் இடம் பெறவேண்டும்.

(a) ரிசர்வு பாங்குடன் கலந்து ஆலோசனை செய்து மாநில அரசாங்கம் அமர்த்திய ஒரு நிர்வாக இயக்குனர்.

(b) மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், ரிசர்வு பாங்க் ஆகியவற்றினால் நியமிக்கப்பட்ட மூன்று இயக்குனர்கள். (ஒவ்வொன்றும் ஒரு இயக்குனர் வீதம்).

(c) ஜில்லா பரிஷத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இயக்குனரும், பஞ்சாயத்து சமிதித் தலைவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இயக்குனரும் ஆக, இரண்டு இயக்குனர்கள்.

(d) மேலே (iii) (e) இனத்தில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இயக்குனர்.

(viii) ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர் நான்காண்டுகளுக்குப் பதவியில் இருப்பார். நியமிக்கப்பட்ட இயக்குனரின் பதவிக்காலம் நியமிக்கும் ஸ்தாபனத்தின் விருப்பத்திற்கு ஒப்ப அமையும்.

(ix) இயக்குனர் கழகத் தலைவர், நிர்வாக இயக்குனர் நீங்கலாக உள்ள ஏனைய இயக்குனர்களிலிருந்து மாநில அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவார்.

(x) இந்த நிதி நிலையம், பஞ்சாயத்து அல்லது சமிதி அல்லது ஜில்லா பரிஷத்துக்கு, மேலே விளக்கிய வேலைகளுக்காக கடன் கொடுக்கும்.

(xi) ஐந்து முதல் இருபத்திஐந்து ஆண்டுக் காலவரையறைக்கு கடன் கொடுக்கலாம். இந்தக் கால வரையறை கடன் தேவைப்படுவதையும், கடன் அனுமதிக்கப்பட்ட வேலையின் தன்மையையும் பொறுத்து அமையும்.

(xii) இந்த நிறுவனம், கடன் கேட்டு மனுச் செய்யும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு பொருளாதார, தொழில் நுட்ப, தொழில் திட்டங்கள் பற்றிய பிற ஆலோசனைகளையும் அளிப்பதற்கு ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்து பயிற்சியளிக்கும்.

8. 10 : இந்தச் சிபாரிசுகளை முக்கியமானதாகவும் முன் யோசனை உள்ளதாகவும் நாங்கள் கருதுகிறோம். இக்கருத்தை, நாங்கள் விஜயம் செய்த மாநிலங்களின் அரசாங்கங்களுடன் கலந்து ஆலோசனை செய்தோம். அவற்றுள் பெரும்பான்மையானவை இதை உற்சாகத்துடன் வரவேற்றன. மாநிலத்திலோ அல்லது மத்திய அரசாங்கத்திலோ இப்போது இருந்து வரும் நிதி நிலையங்கள் எதுவும் பஞ்சாயத்து நிறுவனங்களின் வருவாய் பெருக்கும் அபிவிருத்தி வேலைகளில் அக்கறைகாட்டுமென்றோ, அவற்றுக்குத் தேவைப்படும் நிதிகளை ஒதுக்கித் தருமென்றோ நாங்கள் கருதவில்லை. மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் இந்தச் சிபார்சுகளை ஒப்புக்கொண்டு, விரைவில் செயல் படுத்தும் என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். மாநில நிதி நிலையங்கள் சட்டத்தின் (State Financial Corporations Act) முறையிலேயே பாராளுமன்றம் இதற்கு சட்டம் செய்ய வேண்டும். எந்தப் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனமும், அதனுடைய மதிப்பு பெறுமானத்தை பாதிக்கின்ற வகையில் தகாத பொறுப்பை ஏற்றுக் கொள்ள நிதி நிலையம் அனுமதிக்காது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

# அத்தியாயம் 9

## வரவு செலவுத் திட்டக் கணக்குகளும் தணிக்கையும்

## [BUDGET ACCOUNTS AND AUDIT]

*9. 1:* ஒழுங்கான வரவு செலவுத் திட்டத் தயாரிப்பின் முக்கியத்துவம் அதிகமாக வலியுறுத்துவதற்கு முடியாத ஒன்றாகும். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டம் பொதுவாக திருப்திகரமாக இல்லை என்பதே நம் அனுபவம் என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. பல இடங்களில், உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கும், உண்மையில் நிகழ்ந்துள்ள வரவு செலவுகளுக்கும் சம்பந்தமே இல்லை. இது, முழுதும் பஞ்சாயத்துக்கள், சமிதிகளின் குற்றமல்ல. மாநில அரசாங்கம் அளிக்கத்தக்க மானியங்கள், உதவித் தொகைகளின் மொத்த அளவு அவற்றுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்படவில்லை. ஆகவே அவை, எதுவும் விடப்படக் கூடாதே என்ற தவறான அச்சத்தினால், நடுத்தரமான உத்தேசக் கணக்குகளைப் போட்டுவிடுகின்றன.

*9. 2:* பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு மாநில அரசாங்கம் மூலம் கிடைக்கும் உதவியை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது, (i) வரிகளின் பங்குகளும், சட்டபூர்வமான மானியங்களும் (ii) திட்டத்திற்கும், பிற அபிவிருத்தி வேலைகளுக்கும் அளிக்கப்படும் மானியங்களும், கடன்களும் (iii) பணியாளர், நிறுவனங்களை வைத்திருப்பது முதலான திட்டத்தில் சேராத வேலைகளுக்கு அளிக்கப்படும் மானியங்களும், உதவித் தொகைகளும், ஈட்டு மானியம், சமன் செய் மானியம், பற்றாக்குறை தீர்வு மானியம் முதலியனவும்; வரிகளின் பங்குகளும், சட்டபூர்வமான மானியங்களும், ஜனத்தொகை அடிப்படையில் கணக்கிட்டு கொடுக்கப்படுவன. ஆகையால் பஞ்சாயத்துக்களும், சமிதிகளும் எவ்வளவு வரவு வரும் என்பதை சரியாக வரவு செவுத் திட்டத்தில் கணக்கிட்டுக்கொள்வதில் கஷ்டமொன்றுமில்லை. அவை வரிகள், கட்டணங்கள் முதலான வரவுகளையே சார்ந்துள்ள இடங்களில், ஓராண்டின் செலவினங்களை அதற்கு முன் ஆண்டில் நிகழ்ந்த வரவு செலவுகளின் அடிப்படையில் கணக்கிட்டால், தயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்படும் நிதி வசதிகளும், உண்மையில் ஆகும் செலவினங்களுக்குமிடையே ஏற்படும் வித்தியாசத்தைக் குறைக்கலாம். இதற்காக, மாநில அரசாங்கம், வரவு செலவுத் திட்ட ஆண்டின் முன் ஆண்டின் முதல் அரையாண்டில் உண்மையில் வசூலாகியிருக்கும் தொகை, இரண்டாம் அரையாண்டில் எதிர்பார்க்கப்படும் உத்தேச வசூல் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டிய உதவி இனங்களைக் கணக்கிட வேண்டும். இவ்வாறு கணக்கிடப்பட்ட தொகை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு காலத்திற்கு மிகவும் முன்னதாகவே பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படவேண்டும். புதிய அபிவிருத்திச் செலவுகளைச் சரியாகக் கணக்கிடுவது கடினம் என்பதில் ஐயமில்லை. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் குறித்தும், அவற்றுக்காக, மானியங்களாகவும், கடன்களாகவும் கொடுக்க வேண்டிய தொகை குறித்தும் உறுதியான முடிவு எடுப்பதில் மாநில அரசாங்கம் தனி முயற்சி மேற்கொள்ள வேண்டும். மேலும் அவற்றை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்கு முன்னதாகவே அறிவித்து விடவும் வேண்டும். இந் நிறுவனங்கள், மாநில அரசாங்கம் அறிவிக்காத எந்த நிதி வசதி குறித்தும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டா. பணியாளர்களையும், நிறுவனங்களையும் வைத்துப் பராமரிப்பதற்கான மானியங்களைப் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களே எளிதில் கணக்கிட்டுவிடலாம். இம் மானியங்களை ஏற்கெனவே உண்மையில் ஆகியுள்ள செலவுகளின் அடிப்படையிலோ, அல்லது ஆகக்கூடிய செலவுகளின் அடிப்படையிலோ—உத்தேச மதிப்பீடு செய்யலாம். அதே போன்று, ஈட்டு மானியங்கள், பற்றாக் குறைகளைச் சரி செய்யும் மானியங்கள் ஆகியவற்றைப் பற்றி அரசாங்க ஆணைகள் தெளிவாக இருப்பதால் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், தாம் எதிர்பார்க்கும் வகையை யொட்டி அவற்றின் வரவு செலவுத் திட்டங்களில் முறையான மதிப்பீடுகளைச் செய்து கொள்ளலாம். சமன் செய் மானியங்களை (Equalisation Grants), அத்தகைய மானியங்களைப் பெறத்தக்க நிறுவனங்கள் வரவு செலவுத் திட்டங்களில் என்ன வகை செய்ய வேண்டுமென்று குறிப்பிட வேண்டியது, மாநில அரசாங்கம் அல்லது ஜில்லா பரிஷத்தின் பொறுப்பாகும். இது குறித்தும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் அறிவித்து விடவேண்டும்.

*9. 3:* பஞ்சாயத்துக்களும், சமிதிகளும், அவற்றின் சொந்த வரிகளைப் பொறுத்த விஷயத்தில், வரவு செலவுத் திட்ட ஆண்டில் உண்மையில் விதிக்கத்தக்க வரிகளினால் வரும் வருவாயை மட்டும், பொருத்தமான வகையில் மதிப்பிட்டு வரவு செலவுத் திட்டத்தில் குறிக்க வேண்டும்.



*9. 4:* ஒரு பஞ்சாயத்துப் பகுதியில் சமிதி ஒரு திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசித்தால், அதற்கு, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து கொடுக்க வேண்டிய நன்கொடையின் அளவைக் குறித்து சமிதி உறுதியான முடிவு செய்து. அதைப் பஞ்சாயத்துக்கு அறிவிக்க வேண்டும். இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து வரவு செலவுத் திட்ட ஆண்டுக்கு, குறைந்த அளவு ஆறு மாதத்துக்கு முன்னரே முடிவு செய்யும் பழக்கம் நல்லது என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். ஏனெனில், விதிகளின்கீழ், அளிக்கப்பட வேண்டிய நன்கொடை குறித்து அரசாங்கத்தின் அனுமதியைப் பெற அது வசதியாக இருக்கும்.

*9. 5:* பஞ்சாயத்துக்களின் வரவு செலவுத் திட்டத்தைக் குறையுள்ளதாக்கும் மற்றொரு விஷயம், வரிகளையும், பாக்கிகளையும் வசூலிக்கத் தவறுகின்ற வருந்தத்தக்க நிலையாகும். வரவு செலவுத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள வரிகள் முதலானவை ஒழுங்காக வசூலிக்கப்பட வேண்டியது அவசியமாகும். கிராமக் கணக்கர், பஞ்சாயத்து செயலாளர் ஆகியோரின் அலுவல்களை ஒருவரிடமே சேர்ப்பது குறித்து ஏற்கெனவே பரிசீலனை செய்துள்ளோம். இவ்வாறு செய்தால், பஞ்சாயத்துக்களின் வரிகள் மிகவும் திறம்பட வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். இப்போது கூட பெரும்பான்மையான பஞ்சாயத்துச் சட்டங்களில், நில வரி பாக்கிகளை வசூலிப்பதுபோல் பஞ்சாயத்து வரிகளையும் வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இது அதிகமாக வலியுறுத்தப்படவில்லை. பொதுவாக, பஞ்சாயத்துத் தலைவர்கள், வசூல் பாக்கிப் பட்டியல்களை ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்புவதில்லை. ஆகவே, ரெவின்யூ அதிகாரிகளும், நிலவரி, பிற அரசாங்க வரி வசூல்களுக்கு அளிக்கும் முக்கியத்தை இதற்கு அளிப்பதில்லை. இந்த நிலை பூரணமாக மாற்றப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். சில ஆண்டுகளுக்கு பஞ்சாயத்து, வரிகளை உறுதியுடன் வசூலித்தால், மக்கள் பஞ்சாயத்துக்களின் மூலம் ஏற்படும் நன்மைகளை உணர்ந்து, பின்னர் பஞ்சாயத்து வரிகளைத் தடையின்றி செலுத்தி விடுவார்கள். எல்லா பாக்கி நிலுவைகளின் மேலும் ஒரு தகுந்த தண்டத் தொகை, அதாவது 10 சதவீதத்துக்கு விதித்து, வசூலிக்கலாம். இவ்வாறு வசூலிக்கப்படும் இத்தொகையை நிலுவை பாக்கிகளை வசூலிக்க, . ரெவின்யூ அதிகாரிகள் அல்லது பஞ்சாயத்து சமிதிகள் தனி பணியாள்களை அமர்த்தப் பயன்படுத்தலாம். வரி வசூலை உற்சாகப்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு ஈட்டு மானியம் (Special Matching Grant) அளிக்கலாம் என்று ஏற்கெனவே யோசனை கூறியுள்ளோம். நியாயமான உயர்ந்த அளவு வரி விதித்து அவற்றை நூறு சதவீதமும் வசூலிக்கும் பஞ்சாயத்துக்களுக்குப் பரிசுகளை அளித்து உற்சாகப்படுத்தலாம்.

*9. 6:* பஞ்சாயத்துக்கள் தம் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து, சட்டங்கள் அல்லது விதிகளில் கூறியுள்ளபடி, அதிகாரிகளுக்கோ, அல்லது சமிதிகளுக்கோ சமர்ப்பிக்க, கால அட்டவணைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து வரவு செலவுத் திட்டங்களைச் சமிதி அங்கிகரிக்கவேண்டிய இடங்களில், அவை சமர்ப்பிக்கப்பட்ட உடனே அங்கிகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும். வரவு செலவுத் திட்டங்கள் அனைத்தையும் விவரமாகப் பரிசீலனை செய்ய சமிதிக் கூட்டம் மொத்தத்தையும் கூட்டுவதென்பது நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியதல்ல. பொதுவாக, வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், வரவு செலவுத் திட்டங்களை தம் சிபாரிசுகளுடன் சமிதியின் முன்வைத்து, சமிதி அவற்றை வாலாயமாக (Routine Manner) அங்கிகாரம் செய்யும். பல இடங்களில், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் தாங்களே அவற்றைப் பரிசீலனை செய்ய நேரமின்மையால், அவர்கள், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளின் ஆய்வை நம்பி செயல்பட வேண்டியுள்ளது. ஆகவே, பஞ்சாயத்துக்களின் வரவு செலவுத் திட்டங்கள் சமிதியின் அங்கிகாரம் பெறவேண்டிய இடங்களில், அந்த அதிகாரத்தை சமிதியின் நிதிக் குழுவுக்கோ, அல்லது அதன் ஒரு சிறு துணைக் குழுவுக்கோ அளிக்கலாம் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இந்தக் குழு அல்லது துணைக் குழு, வரவு செலவுத் திட்டங்களை நன்கு பரிசீலனை செய்வதற்கு வசதியாக, நீண்ட நாட்கள் கூட்டங்களை நடத்தும். வட்டார அபிவிருத்தி அதிகாரி பரிசீலனை செய்வதில் இக் குழுவுக்கு உதவி செய்யவேண்டும். தமிழ்நாட்டில் இந்த வரவு செலவுத் திட்டங்களை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் பரிசீலனை செய்து, மாற்றங்களைச் செய்ய யோசனை கூறுகின்றனர். அந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளுவதோ தள்ளுவதோ என்பதுபற்றி பஞ்சாயத்துக்களே முடிவு செய்கின்றன. அவை, அந்த யோசனைகளைத் தள்ள வேண்டியிருந்தால், மாவட்டக் கலெக்டரின் இறுதி முடிவுக்கு அனுப்பப்படுகிறது. மாவட்டக் கலெக்டரும், அரசாங்கமும் யூனியன்களுக்கு ஒரே வகை அதிகாரிகளே ஆகும்.

*9. 7:* இது சம்பந்தமாக, சமிதிகளோ, அல்லது தனி அரசாங்க அதிகாரியோ, பஞ்சாயத்து வரவு செலவுத் திட்டங்களைப் பரிசீலனை செய்து அங்கிகரிக்கும் முறையில் உள்ள கொள்கையைப் பற்றி இங்கே குறிப்பிடலாம். பஞ்சாயத்து போன்ற ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் வரவு செலவுத் திட்டத்தை அங்கிகரிப்பதோ, திருத்துவதோ—மேலும் நிலையிலுள்ள, உயர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அமைப்பினால் அதாவது சமிதியினால்தான் செய்யப்படவேண்டுமென்று கூறப்படுகிறது. பஞ்சாயத்துத் தலைவர்களடங்கிய ஓர்

அமைப்பே சமிதி என்பதால் இது பொருத்தமான முறையாகவே கருதப்படுகிறது. மாறாக, தேர்ந்தெடுக்கப்படும் அமைப்பு ஒவ்வொன்றும், அதனளவில் முழு உரிமையுடையன என்பதால், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் முடிவை, வேறொரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் தீர்ப்புக்குச் சமர்ப்பிப்பது தவறு என்று, அந்த அளவுக்கு நியாயமாகத் தோன்றக்கூடிய கருத்தும் கூறப்படுகிறது. நிபுணர்களின் ஆய்வுக்கு மட்டுமே வழி செய்ய வேண்டுமென்றும், அதனால் வரவு செலவுத் திட்டம் முடிவு செய்யப்படுவதில் எளிமையும், விரைவும் இருக்கும் என்பது இக் கருத்துடையவர்களின், வாதமாகும். இவ் விஷயத்தை, எவரும் தத்துவ வாதத்தினால் மட்டும் முடிவு செய்யக்கூடியது என்றோ, முடிவு செய்ய வேண்டுமென்றோ நாங்கள் கருதவில்லை. மாநில அரசாங்கங்கள் நல்ல முறையை ஏற்கும் எண்ணத்துடன் பிரத்தியட்ச அனுபவம் காட்டும் வழியில் செயல்பட வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறோம். சமிதி, பஞ்சாயத்துக்களின் வரவு செலவுத் திட்டங்களில் அதிகமாகவோ, ஒருதலைப் பட்சமாகவோ தலையிட முனையுமானால், இம் முறையை மாற்றி, தமிழ்நாட்டு முறையைப் பின்பற்றத் தயங்க வேண்டியதில்லை. மாறாக, தமிழ் நாட்டில் ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, மேல் அதிகார மனப் பான்மை கொண்டு, பஞ்சாயத்துக்களைத் தன் கீழ்ப்படிதலுள்ள சபைகளாகக் கருதி நடத்தினால், சமிதி ஆராய்ந்து அங்கீகரிக்கும் முறையைப் பின்பற்றலாம்.

9. 8: பஞ்சாயத்து சமிதியின் வரவு செலவுத் திட்ட ஆய்வு, அங்கீகார விஷயத்திலும் இந்தக் கருத்தே கொண்டு காணவேண்டும். எனினும், சமிதிகளின் அமைப்பு, வட்டார அபிவிருத்தி அதிகாரி போன்ற ஒரு நிர்வாக அதிகாரி இருக்கும் போதும், புற ஆய்வும், அங்கீகாரமும் வெறும் சாதாரண சம்பிரதாயமாகிவிடுகிறது. சமிதியின் வரவு செலவுத் திட்டம், மிகப் பெருவாரியானவர்களின், அதாவது முக்கால் பங்கு ஆதரவுடன் நிறைவேறுமானால், இந்தச் சம்பிரதாயத்தை நீக்கி விடுவதில் தடையில்லை. பிளவுகளும், வேறுபட்ட கருத்துக்களும் தோன்றுகின்ற சமிதிகளின் வரவு செலவுத் திட்டங்கள் மட்டும், புற ஆய்வுக்கும், அங்கீகாரத்துக்கும் உரியனவாகும். இந்த நடைமுறை, பிளவு மனப்பான்மையைக் குறைக்கும் வகையில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கலாம்.

9.9. ஜில்லா பரிஷத்துகளின் வரவு செலவுத் திட்டம் குறித்து நாங்கள் ஏதும் ஆலோசனை கூறுவது அவசியம் என்று தோன்றவில்லை.

9.10. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கணக்குகள், தணிக்கை, பிற சிறு விஷயங்களில், சிபாரிசுகளைச் செய்ய ஒரு தனி ஆய்வுக் குழு விசாரணை நடத்தி வருவதால், இத் தலைப்புகளை விவரமாக ஆய்வது எங்கள் எண்ணமல்ல. எனினும், அந்த ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளுடன் வைத்துக் கவனிக்கத் தக்க சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறோம் :

(a) பஞ்சாயத்துக் கணக்குகளின் அமைப்பு மிகவும் எளிமையாக இருக்க வேண்டும். குறித்த வருமானத்தையும் (ad hoc income) மூலதனச் செலவுகளையும், சாதாரண வரவு செலவுகளுடன் கலந்து எழுதும் இப்போதைய பழக்கம் விரும்பத்தக்கதல்ல. வருமானத்தின் பக்கம், சாதாரண தொடர்ந்து வரும் வரவுகளும் (Ordinary recurring receipts) செலவுகள் பக்கம், சாதாரண, பொறுப்பேற்றுக்கொண்டுள்ள செலவுகளும் (Normal Committed Expenditure), மூலதன வரவு செலவுகள் சேர்த்தெழுதாமல் தனியே எழுதப்பட வேண்டும். இதனால் பஞ்சாயத்து, தன் பொருளாதாரப் பெறுமானத்தைப்பற்றி எச்சரிக்கையாக இருக்க முடியும். சமிதி அல்லது மாநில அரசாங்கம் அல்லது வேறு வகையில் மானியங்களாக அல்லது கடன்களாக வருகின்ற சிறப்பு வருமானங்கள், கணக்குகளின் வரவுகளில், தெளிவாகக் காட்டப்படவேண்டும். அதே போன்று, சமிதியின் சார்பில் எடுத்துச் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளின் செலவுகளும், பஞ்சாயத்துக் கட்டிடம் கட்டுதல் முதலான அவற்றின் சொந்த வேலைகளின் செலவுகளும் செலவுக் கணக்குகளில் தனித்தனியே எழுதப்பட வேண்டும்.

(b) மைசூரில், எங்களிடம் காட்டப்பட்ட சமிதிகளின் வரவு செலவுத் திட்டங்களில், சமுதாய அபிவிருத்தித் திட்டத்துக்காகக் கொடுக்கப்பட்ட கடன்கள், மானியங்கள் ஆகியவை வரவுக் கணக்கிலும், அந்த வரவுகளைக்கொண்டு செய்யப்பட்ட செலவுகளைச் செலவுக் கணக்கிலும் வைக்கப்படாமை கண்டு நாங்கள் வியப்பெய்தினோம். தமிழ் நாட்டைப் போல், சமிதிக்காக ஓர் ஒழுங்கிணைந்த திட்டமிட்ட வரவு செலவுத் திட்டத்தைப் பின்பற்றும் நம் ஆலோசனை ஒருபுறமிருக்க, அதனுடைய வரவு செலவுத் திட்டம், அதன் சொந்த சாதாரண வரவுகளையும், சமுதாய அபிவிருத்திக் கடன்களையும், மானியங்களையும், மாநில அரசாங்கத் துறைகளிடமிருந்து பெறும் இதர அபிவிருத்தி மானியங்களையும், அதன் பொறுப்பிலுள்ள வேலைகளுக்குப் பஞ்சாயத்துக்களிடமிருந்து பெறும் கடன்களையும், நன்கொடைகளையும் காட்டுகின்ற ஒரு தொகுப்புத் திட்டமாக இருக்க வேண்டும். மேலும், சமுதாய அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி அல்லாத எல்லாப் பணியாளர்களின் சம்பளங்கள், நேரடியாக அரசாங்கம் கொடுத்துவந்தபோதிலும், அவை சேர்த்துக்



கொள்ளப்படவேண்டும். இதற்காக அரசாங்கம் கொடுக்கும் தொகை வரவாகக் குறிக்கப்படவேண்டும்.

(c) பஞ்சாயத்துக்களுக்கு, குடிநீர் வேலைகள், பஞ்சாயத்து சாலைகள் போன்ற அவற்றின் வேலைகளுக்கு சமிதி கொடுக்கும் மானியங்கள், சமிதியின் வரவு செலவுத் திட்டத்தில் அவ்வாறே குறிக்கப்படவேண்டும்.

(d) சமிதி, மானியங்கள், கடன்கள், நன்கொடைகள் பிறவருவாய்கள் மூலம் ஏற்படுத்தியுள்ள எல்லா நிரந்தரச் சொத்துக்களின் மொத்த மதிப்பையும் ஏதாவதொரு வகையில் குறிப்பிட வேண்டியதும் அவசியமாகும்.

(e) பொது உபயோக வேலை அல்லது வருமானம் தரும் வேலைகளுக்கு கடன் வழங்கியிருந்தால், முறையான வாணிகக் கணக்குகள் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

9· 11: பஞ்சாயத்துக்களின் கணக்குகளைப் பஞ்சாயத்து அதிகாரியும் சமிதிகளின் கணக்குகளை மாவட்ட பஞ்சாயத்து அதிகாரியும் கால முறைப்படி பரிசீலனை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர். ஒரு சமிதிக்குள் குறைந்த அளவு பஞ்சாயத்துக்களே உள்ள கேரள மாநிலத்தில், பஞ்சாயத்து அதிகாரி, குறைந்தது மாதம் ஒரு முறையேனும் பஞ்சாயத்துக் கணக்குகளைத் தணிக்கை செய்ய முடிகிறது. மற்ற மாநிலங்களில் இது நடக்க முடியாது. ஆனால், ஒவ்வொரு பஞ்சாயத்தும், குறைந்தது மூன்று மாதத்துக்கொரு முறையேனும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியினால் தணிக்கை செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இவ் வேலையை ஒரே அதிகாரி செய்ய முடியாத இடங்களில், மற்றுமொரு அதிகாரி அமர்த்தப்பட வேண்டும். கணக்குகளைத் தணிக்கை செய்து, ரொக்க நிலுவைகளும், கணக்குகளும் தவறில்லாமலும், தவறாகக் கையாடல் செய்யப்படாமலும், சரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது இந்த அதிகாரியின் பொறுப்பாகும். மேற்குறித்த தவறுகளை அவர் கண்டு பிடிக்கவில்லையென்றால், அந்தத் தவறுகளுக்கு பஞ்சாயத்துத் தலைவர், செயலாளருடன் இந்த அதிகாரியும் பொறுப்பாளராக்கப்படுவார்.

9. 12: விபத்து அல்லது குற்ற நோக்கத்தினால் பஞ்சாயத்துக் கணக்குப் புத்தகங்கள் இழந்துவிடவோ, அழிந்துவிடவோ, கூடிய ஆபத்து நேரலாம். கேரள மாநிலத்தில், பஞ்சாயத்து செயலாளர், தினப் புத்தகம் (Day book), ரொக்கப் புத்தகம் (Cash book) ஆகியவற்றின் பிரதியை தினந்தோறும் தயாரித்து, பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்புவதை நாங்கள் கண்டோம். தவறு நேராமல் இருக்க, பஞ்சாயத்துக் கணக்குகள் விஷயத்தில் இந்த முறையைக் கையாள்வது நல்லது. பஞ்சாயத்துக்கள் அதிகமாக உள்ள இடங்களில், வாரத்துக்கொருமுறை அறிக்கை தயாரித்து சமிதிக்கு அனுப்பி, சமிதி பரிசீலனை செய்து சேர்த்து வைக்கச் செய்யலாம்.

9. 13: பஞ்சாயத்துக்கள் விஷயத்தில், வசூல் தொகைகளை அல்லது செலவுக்கு வேண்டிய தொகைகளை வைத்திருப்பதில் சிக்கல் இருக்கிறது. விதிகளையும் நடைமுறையையும் ஒட்டி, கூடுமான வரை, எல்லா வரவுகளையும் பாங்குக் கணக்கில் கட்டிவிடுவதுடன், செலவுகளுக்கு அதிலிருந்து பெறுவது விரும்பத்தக்கதாகும். தமிழ்நாட்டில், பஞ்சாயத்து சமிதி, அதைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களுக்குப் ''பாங்''காக பணி புரிகிறது. ஒரு தனிப் பெட்டகம், 'குறைந்த அளவு நிலுவைத் தொகையுடன், பஞ்சாயத்து சமிதி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் அருகிலுள்ள கஜானாவில் அல்லது கிளைக் கஜானாவில் கணக்கு வைத்திருக்கிறது. சில பஞ்சாயத்துக்களின் கணக்குகளில் அரசாங்க மானியங்கள் மட்டுமே வரவு வந்துள்ளதையும், வசூல் தொகை ஏதும் வரவு வைக்கப்படாததையும் கண்டோம். கஜானாவில் கணக்குகள் வைத்துள்ள பஞ்சாயத்துக்கள், எல்லா வசூல்களையும் கஜானாவில் செலுத்திவிட்டு, அதனுடைய செலவுகளுக்கு அதிலிருந்து வாங்கிக்கொள்ளவேண்டியது கட்டாய முறையாகும். அன்றாடச் செலவுக்கு ஒரு சிறு தொகையை அலுவலகத்தில் வைத்திருக்கலாம். அது கால முறைப்படி ஈடு செய்யப்படலாம். பஞ்சாயத்துக்கள், தபாலாபீஸ் சேமிப்பு 'பாங்கு' களிலோ, அட்டவணையிற்கண்ட பாங்கின் கிளையிலோ மத்திய அல்லது மாவட்ட கூட்டுறவு பாங்கிலோ கணக்கு வைத்திருக்கந் நடையில்லை.

9. 14: பஞ்சாயத்து அல்லது சமிதி, உபகாரச் சம்பளம், மதிய உணவுத்திட்டம் முதலிய குறிப்பிட்ட அறக்கொடைகளை ஒப்புக்கொள்ளுமிடங்களைத் தவிர, வேறு, சேரும் வட்டிக்காக நீண்டகால முதலீடுகளைச் செய்யக் கூடாது. அவை அவற்றின் நிலுவைத் தொகைகளை, வருவாய் தரும் தொழில் அபிவிருத்தி உட்பட ஆக்க வேலைகளுக்கும் பயன்படுத்தலாம்.

9. 15: மாநில சட்டங்களில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கணக்கு தணிக்கையை, அரசாங்கம் அமர்த்தும் தணிக்கையாளர்கள் நடத்துவதற்கு பொதுவாக வகை செய்யப்பட்டுள்ளது. நிதி ஆண்டின் முடிவில் ஆறு மாதங்களுக்குள், கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு கணக்குத் தணிக்கை அறிக்கை தயாரிக்கப்படவேண்டியது அவசியமாகும். இதற்காக ஒவ்வொரு மாநிலத்

திலும், தல நிதித் தணிக்கை ஆய்வாளர் அலுவலகத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். தணிக்கையாளர் எடுத்துக்காட்டும் தவறுகள் முறையாக நீக்கப்படவேண்டுவதுடன், தணிக்கை ஆட்சேபனைகளுக்கு திருப்திகரமான விளக்கங்களும் அளிக்க வேண்டுமென்று பஞ்சாயத்துக்களும், சமிதிகளும் வலியுறுத்தப்படவேண்டும். கணக்குத் தணிக்கையில் எடுத்துக் காட்டப்பட்ட தவறை திருத்திக்கொள்ளாத பஞ்சாயத்து அல்லது சமிதியின்மேல் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டும். தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் பஞ்சாயத்து அல்லது சமிதியின் சிறப்புக்கூட்டம் கூடி விவாதித்து, அந்த விவரங்களை மேற்பார்வை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

---

## அத்தியாயம் 10.

## பொது
## (GENERAL)

10.1: இந்தப் பகுதியில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் அனைத்துக்கும் பொதுவான, முக்கிய விஷயங்கள் சிலவற்றை ஆராயலாம். இந்த நிறுவனங்கள், இன்னும், ஓர் உறுதிப்பாடான நிலையினை அடையவில்லை. சமிதிகளையும் ஜில்லா பரிஷத்துக்களையும் அமைக்க, கேரளம், ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில், சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. பீகார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்களில், இதற்கான விதிகள் உருவாக்கப்படவேண்டும். அங்கெல்லாம், தேர்தல்கள் இனி மேல் நடைபெற வேண்டியுள்ளன. நிறுவனங்களை நடைமுறையில் செயல்படுத்தப்படவேண்டியுள்ளது. பஞ்சாயத்து ஆட்சியின் மூன்று அமைப்புகளையும் நடைமுறையில் முன்பே அமலுக்கு கொண்டுவந்த மாநிலங்களில் ஆந்திரப்பிரதேசமும் ஒன்று என்றாலும், பஞ்சாயத்துச் சம்பந்தமான சட்டமானது திருத்தியமைக்கப்பட்டு, தேர்வுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு முடிந்த நிலையில் விரிவான முறையில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய மசோதா ஒன்று அந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்பட தயாராக உள்ளது. மைசூர் மாநிலத்தில், இந்த வேலைக்காக அமைக்கப்பட்ட கமிட்டி தன்னுடைய சிபாரிசுகளை சமர்ப்பித்துவிட்டது என்று அறிவிக்கப்படுகிறது. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களை அமைப்பதற்காக செய்யப்படுகிற இந்த எல்லா ஏற்பாடுகளும் வரவேற்கப்படவேண்டியவை என்றாலும், இந்த வேலையை எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதும், அவை நீண்ட காலம் நிலைத்து நிற்கும்படியும், தொடர்ந்து இயங்குகின்ற நிலையையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதும் மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகும். இந்த நிறுவனங்களிடையே, அவைகளுடைய அமைப்புகள், கடமைகள், ஆதாரங்கள் பற்றிய விஷயங்களில் அடிக்கடி மாற்றங்கள் செய்துகொண்டேயிருந்தால், இவை வேர்விட்டு நிலையாக நிலைத்து நிற்பதை அது தடுத்துவிடும். அவை நிலைத்து இருக்குமோ இருக்காதோ என்று ஒரு சந்தேகமான சூழ்நிலையை உருவாக்கவும் செய்துவிடும். அடிக்கடி தொடர்ந்து கவனித்துக்கொள்ளுதலும், சில சில மாற்றங்களும், அவ்வப்போது பரிசீலனை செய்தலும் வேண்டியது அவசியமே. எனினும், இந்நிறுவனங்கள் செயல்படுவதில் போதிய அனுபவம் பெற்ற பின்னரே, சட்டங்களையும், விதிகளையும் அடிப்படையில் மாற்றுவது முதலியவை யோசிக்கப்படவேண்டும்.

10.2: பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் பணியாற்றும் பல்வேறு வகையான சிப்பந்திகளின் பணிகள் பற்றிய நிபந்தனைகள் (Conditions of Service) வேலையில் உயர்வு அளித்தல் பற்றிய விஷயங்களெல்லாம் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். மகாராஷ்டிரத்தில், எல்லா முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு அதிகாரிகளும் மாநில அரசின் பணித்துறையைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு ஜில்லா பரிஷத்துக்கும், மூன்றாவது வகுப்பு மாவட்ட தொழில் நுட்ப பணித்துறை ஒன்றும், மூன்றாவது வகுப்பு மாவட்ட பணித்துறை ஒன்றும், நான்காவது வகுப்பு மாவட்ட பணித்துறை ஒன்றும் என்று மகாராஷ்டிரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஜில்லா பரிஷத் மற்றும் பஞ்சாயத்து சமிதியின் எல்லாச் சிப்பந்திகளும் இந்தப் பணித் துறைகளைச் சேர்ந்தவர்கள். டிவிஷனல் சிப்பந்திகள் தேர்ந்தெடுக்கப்படும் குழுவினாலும் மாவட்ட சிப்பந்திகள் தேர்ந்தெடுக்கப்படும் குழுவினாலும், சிப்பந்திகள் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். பணித் துறை பற்றிய சட்ட திட்டங்கள் (Conditions of Service) விதிகளினால் (Rules) ஒழுங்கு முறைப் படுத்தப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில், நிர்வாக



அதிகாரிகளும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் மாநில பணித் துறைகளைச் சேர்ந்தவர்கள். சிப்பந்திகளின் எந்த வகையான பிரிவுகளையும், மாநிலம் பூராவுக்குமோ, அல்லது ஒரு பகுதிக்கோ, ஒரு தனியான பணித்துறையாக அமைக்க அந்த மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. ராஜஸ்தானில், மாநில அளவில் இயங்குகின்ற பஞ்சாயத்து ஆட்சி சர்வீஸ் கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பணித்துறைகளுக்கு ஆட்களை, மாவட்ட அளவில்உள்ள ஒரு குழு தேர்ந்தெடுக்கிறது. இந்தக் குழுவுக்கு மேற்சொன்ன கமிஷனின் உறுப்பினர் ஒருவர் தலைவராக உள்ளார். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் சிப்பந்திகள், மாநில பணித் துறையையோ, மாவட்ட அளவில் உள்ள பணித் துறையையோ சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இதனால், ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சிப்பந்திகளை மாற்றுவதற்கும், வேலை உயர்வு கிடைப்பதற்கான வழி வகைகளுக்கும் சுலபமாக இருக்கிறது. மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையே சிப்பந்திகளின் வகையில் இப்பொழுது உள்ள ஏற்றத்தாழ்வுகள், மாநில அரசு ஊழியர்கள் —பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களில் உள்ள சிப்பந்திகள் ஆகியவர்களிடையே இருக்கும்படியான ஒரு நிலையை உண்டாக்கி விடுவது மிகவும் துரதிஷ்டவசமான ஒன்றாகும். இந்த நிறுவனங்களில் பணியாற்றுகிற எந்த வகையான சிப்பந்திகளாக இருந்தாலும் சரி, மாநில அரசின் நேரடி அதிகாரத்தில் உள்ள சிப்பந்திகளுக்கு மேலே உள்ள வேலை உயர்வுக்கு என்னென்ன வாய்ப்புகள் உண்டோ, அவை அத்தனையும் இந்தச் சிப்பந்திகளுக்கும் இருக்கவேண்டும். அவர்களுக்கு அப்படி வேலை உயர்வு அளிக்கப்படும் பொழுது, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் கீழ் அவர்கள் பணியாற்றிய காலத்தை, வேலை உயர்வு அளிக்கும் பொழுதும் ஓய்வு கால ஊதியத்தை நிர்ணயிப்பதிலும், கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

10.3: பயிற்சி, ஆராய்ச்சி, செய்த வேலையினை மதிப்பிடுதல் (Evaluation) ஆகிய இவை பெருவாரியான முறையில் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வளர்ச்சி அதிகாரிகள், கிராம அளவில் உள்ள பணியாட்கள், பஞ்சாயத்துச் செயலாளர்கள் மற்றவர்களுக்கும் பயிற்சி நிலையங்கள், மத்திய அரசின் அளவிலும், மாநிலங்களிலும் இயங்கி வருகின்றன. வரவு-செலவுத் திட்டம் சம்பந்தமாகவும், கணக்குகளை வைத்துக்கொள்கின்ற நடைமுறைகள் சம்பந்தமாகவும் ஆன நடைமுறைகள் பற்றி பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள் செயலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்பது விசேஷமாக வலியுறுத்தப்படவேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.

10.4: ஆதாயம் அளிக்கக் கூடிய அமைப்புகளின் (Remunerative Assets) வளர்ச்சிக்காக வேண்டி, பஞ்சாயத்து ஆட்சி நிதி கார்ப்பரேஷன்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்துள்ளோம். இந்தக் கார்ப்பரேஷன்களின் வேலையைச் சுலபமாக்க வேண்டிய, குறிப்பிட்ட பிரதேசங்களில் ஆதாயம் அளிக்கக் கூடிய முயற்சிகளுக்கான வசதிகளை ஆராயவும், முன்னோடி வேலைத் திட்டங்களை (Pilot Projects) ஏற்று நடத்தவும், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு நிறுவனம் அமைக்கப்படுவது விரும்பத்தக்கது. இது பற்றிச் சொல்லும்பொழுது, லக்னோவில் உள்ள திட்டம், ஆராய்ச்சி செயல்படுத்துதல் நிறுவனம் (Planning, Research and Action Institute) ஆற்றியுள்ள சீரியபணிகளை இங்கே குறிப்பிடலாம். இந்த நிறுவனங்களின் நிதி, அதிகாரம் ஆகியவற்றை மாநில பஞ்சாயத்து ஆட்சி நிதிக் கார்ப்பரேஷன் இறுதியில் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், உடனடியாக மாநில அரசு, பல்கலைக் கழகங்கள், பஞ்சாயத்து ஆட்சியில் அக்கறை கொண்டுள்ள மற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகிற சுதந்திரமாக இயங்குகின்ற அமைப்பளவில் உள்ள ஒரு நிறுவனத்தை நிறுவுவது விரும்பத்தக்கதாகும். இந்த நிறுவனத்திற்கு, பெருவாரியாக, மத்திய மாநில அரசுகளினால் நிதி உதவி அளிக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் சம்பந்தமாக பரிசீலனையும் ஆராய்ச்சியும் செய்வதற்கும் இப்படி அமைக்கப்படுகிற நிறுவனத்தில் இந்தியாவின் கிராமப்புறங்களின் பொருளாதார நிலையிலும், கருத்து வளர்ச்சியிலும் இவை ஏற்படுத்துகின்ற விளைவுகள் பற்றி ஆராய்வதற்கும் பிரிவுகள் இருக்க வேண்டும் என்பதும் விரும்பத்தக்க ஒன்றாகும்.

10.5: பஞ்சாயத்து, சமிதி, ஜில்லா பரிஷத் அளவில், பொதுத் தொண்டில் ஆர்வமும், விஷயங்களில் நல்ல கைதேர்ந்த அறிவு விளக்கமும் கொண்டுள்ள தலைமை உருவாவதைப்பொறுத்தே, பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றி பெருவாரியான அளவில் அமைந்திருக்கும். அரசியல் சட்டத்தின்படி, 14 வயது வரையில், கல்வி கட்டாயமானதாகவும், எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வகையிலும் இருக்கவேண்டும். ஆகவே, வருங்காலத்தில் பஞ்சாயத்து உறுப்பினர்கள், சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்களின் உறுப்பினர்கள், ஆகியோரில் பெரும்பாலோர், உயர்நிலைக்கல்வி பெற்றவர்களாக இருப்பார்கள் என்று தாராளமாக எதிர்பார்க்கலாம். அவர்களில் சிலர் பட்டதாரிகளாகக்கூட இருக்கமுடியும். ஆகவே, எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் பஞ்சாயத்து ஆட்சி பற்றி சொல்லிக்கொடுப்பதற்கு வழிவகை செய்யப் படவேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்

கிறோம். பஞ்சாயத்து ஆட்சிப்பொறுப்பில் உள்ள பிரதேச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, கிராமங்களில் ஏற்படுத்தக் கூடிய, மாணவர் சாரணர் குழுக்களின் அவ்வப்போது தாமே முன்வந்து நடத்துகிற முகாம்கள், தேசிய மாணவர் படை மற்றும் இதுபோன்ற குழுக்களின் மூலமாக, இந்த அறிவு விளக்கப்பணிக்கு, உதவி செய்ய முடியும். சமூகக்கல்வியில் ஒன்றாக இணைக்கப்பட்டோ, அல்லது ஒரு விசேஷ பாடமாக செய்வதன் மூலமோ, பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமான விஷயங்கள், கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சொல்லிக் கொடுப்பதை, மேன்மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

*10.6:* குறிப்பிட்ட காரியங்களுக்காக அரசாங்கத்துறைகள் அளிக்கின்ற மானியங்கள் உட்பட, எல்லா மானியங்களும், மற்ற இதுபோன்றவை எல்லாம் மாநிலஅளவில் ஒருமுகமாக திரட்டப்பட்டு, பல்வேறு வகையான பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கும், ஒரு கூட்டான வடிவத்தில் அனுப்பப் பெறுவது விரும்பத்தக்கது. இந்தக்காரியத்திற்காக குறைந்தபட்சமாக, பெரிய மாநிலங்களிலாவது, இந்த நிறுவனங்களின் நிதி விஷயங்களை மட்டும் கவனிக்கக்கூடிய ஓர் உயர்தர அதிகாரி இருக்க வேண்டும்.

*10·7:* கமிஷனர்களுக்கும், மாவட்டக் கலெக்டர்களுக்கும் மேற்பார்வை செய்கின்ற—வழிகாட்டுகின்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அதிகாரிகளும், கோட்டப்பிரிவு அதிகாரிகளும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் செயல்முறைகளில் மிகுந்த அக்கறை காட்டிவருவதையும், அவர்களுடைய யோசனைகளை, சமிதிகளின் தலைவர்களும், பஞ்சாயத்துக்களின் தலைவர்களும் தாராளமாக ஒப்புக்கொள்கின்ற ஒரு நிலையினையும், பல இடங்களில் நாங்கள் கண்டுள்ளோம். இந்த நிலை எல்லா இடங்களிலும் நிலவவேண்டும் என்பது எங்கள் ஆசை. ஆனால், துரதிருஷ்டவசமாக, அப்படிப்பட்ட நிலையைக் காணமுடியவில்லை. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள்—மாவட்ட, கோட்ட அதிகாரிகள் ஆகியோரிடையே, ஓங்கி வளர்கின்ற சுமுகமான உறவு நிலையைப் பொறுத்தே, எந்த மாநிலத்திலும், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் எதிர்காலம் உறுதியாக அமையும். இந்த விஷயத்தில் விசேஷ அக்கறை செலுத்தி, பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள்—அதிகாரிகளிடையே சுமுகமான உறவு இருக்கும்படியாக, பஞ்சாயத்து ஆட்சி பொறுப்பேற்றிருக்கும் மாநில அமைச்சர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் யோசனை கூறுகிறோம்.

*10·8:* சரியான தகவல்கள் கிடைக்கச் செய்வது, அதுவும் குறிப்பாக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் நிதிகள் பற்றிய சரியான, தவறில்லாத தகவல்கள் கிடைக்கச் செய்வது, மிகவும் முக்கியமானதாகும். கடந்த ஆண்டில் கிடைத்த சரியான வருமானம் எவ்வளவு, செலவுத்தொகை எவ்வளவு என்பன பற்றிய விவரங்களையும் எல்லாப் பஞ்சாயத்துக்களின் நடைமுறை ஆண்டுக்கும், வருகின்ற வரவு-செலவுத் திட்ட ஆண்டுகளுக்கும் ஆகும் மதிப்பீடுகள் பற்றிய விவரங்களையும் தொகுத்து, அந்த விவரங்களை ஜில்லா பரிஷத்திற்கும் அனுப்பவேண்டியது, ஒவ்வொரு பஞ்சாயத்துச் சமிதியின் கடமையாக இருக்கவேண்டும். அதே மாதிரி, தன்னுடைய அதிகார எல்லைக்குள் இருக்கும் பஞ்சாயத்துக்கள், சமிதிகள் ஆகியவற்றின் வரவு-செலவுத் திட்டங்களை ஒரு தொகுப்பு அட்டவணையாகத் தயார் செய்து, மாநில அரசுக்கு, ஜில்லா பரிஷத் அனுப்ப வேண்டும். மாநிலம் பூராவுக்குமான ஒரு விவரத் தொகுப்பு, மாநில அரசினால் தயார் செய்யப்பட்டு வெளியிடப்பெறலாம். அப்படித் தயார் செய்யப்பட்ட விவரத்தொகுப்பானது, ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றத்தின் முன், ஆண்டுதோறும், வைக்கப்படலாம் என்பது எங்கள் கருத்தாகும். நாடு பூராவுக்குமான விவரத்தொகுப்பை மத்திய அரசின் சமுதாய வளர்ச்சி கூட்டுறவுத் துறை அமைச்சகம் தயார் செய்து, மாநில வாரியாகக் தொகுக்கப்பட்ட விவரங்களுடன், அவற்றையும் அந்த அமைச்சகம், வெளியிடலாம். இப்படி விவரங்களும், தகவல்களும் தொகுக்கப்பட்டால், அரசுகளும், பொது மக்களும் பஞ்சாயத்து ஆட்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை, தொடர்ந்து கவனமாகக் கவனித்து வர, மிகவும் உதவியாக இருக்கும் என்பதுடன், ஒவ்வொரு மாநிலத்திலும், பஞ்சாயத்துக்களும், சமிதிகளும், ஜில்லா பரிஷத்துக்களும் தாங்கள் ஆற்றியுள்ள செயல்களை மற்ற மாநிலங்களில் அதே மாதிரி இயங்குகின்ற அமைப்புகளின் செயல்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும் உதவும். அவைகளுக்கிடையே, இப்படி ஒரு வரவேற்கத்தக்க போட்டி மனப்பான்மை உருவாவது. நல்ல பயனையே விளைவிக்கும்.

*10·9:* பஞ்சாயத்துக்கள், சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்கள் மேலும் முன்னேற்றப் பணிகளைப் புரிய தூண்டுகிற போட்டியை உண்டாக்குகின்ற பரிசுத் திட்டங்கள், ஈட்டு மானியங்கள் அளித்தல் ஆகியவற்றைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். இப்படிச் செய்வது, பலவீனமாக, ஏழையாக இருக்கின்ற நிறுவனங்களுக்குப்பயன் அளிக்காமல், பணக்கார, நல்ல வசதியில் உள்ள அமைப்புகளே பயன் பெறக்கூடிய ஒரு வழியை அநேகமாக ஏற்படுத்த வழிசெய்து விடுகிறது. பஞ்சாயத்துக்களையும், சமிதிகளையும், தங்களுடைய ஆதாரங்களைத் திரட்டுகின்ற சக்திக்கேற்ப, மூன்று அல்லது நான்கு வகையான பிரிவுகளாக் வகைப்



படுத்துவது விரும்பத்தக்கது. அங்கங்கே வசூல் செய்யப்பட்ட நிதி அளவை மட்டும் கணக்கிட்டுப் பார்ப்பதன் மூலம், இதைச் செய்து விட முடியாது. ஒரு பணவசதி படைத்த வலுவான பஞ்சாயத்து சமிதி, குறைந்த பட்சம் வரிகளை விதித்து, மிகக்குறைந்த வசூலை செய்வதற்கு மேல், ஏழ்மையில் உள்ள பலவீனமான ஒரு பஞ்சாயத்தோ, சமிதியோ, அதிகப்பட்சமாக வரிகளை விதித்தல் மூலமும், விதிக்கின்ற எல்லா வரிகளையும் விடாமல் வசூல் செய்வதன் மூலமும், பணக்கார அமைப்பை விட, அதிகப்படியான வருமானத்தை திரட்டி விடலாம். ஆகவே, பஞ்சாயத்துக்கள், சமிதிகள் ஆகியவை ஆதாரங்களைத் திரட்டுவதில் அவைகளுக்குள்ள சக்தியையும், திறமையையும், ஓர் ஒழுங்கு முறையில் மதிப்பிட்டுக் கணக்கிடுவதும், அவைகளை வகைப்படுத்துவதும் அவசியமாகிறது. அப்படிச் செய்துவிட்டால், பின்பு ஏழ்மை வகைகளைச் சேர்ந்த பகுதிகளுக்கு அதிகப்படியான உதவி அளிப்பதற்கு இயலும். ஒரு நிறுவனத்தின் ஆதாரங்கள் என்னென்ன, அவை எவ்வளவு என்பதைப்போலவே, அந்த ஆதாரங்களை அந்த நிறுவனம் எப்படி உபயோகப்படுத்துகிறது என்பதும், அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பஞ்சாயத்துக்கள் செய்துள்ள சாதனைகளில் காட்டியுள்ள திறமையையும், அதற்காக அவை குறைந்த அளவில், விரயம் செய்யாமல் பணம் செலவு செய்துள்ளதையும் மதிப்பிட்டுக் காட்டும் முறையில், வழி வகைகள் உருவாக்கப்பட வேண்டும். பாராட்டத்தக்க சாதனைகள் புரிந்துள்ள அமைப்புகளை பாராட்டுவதற்குத் தகுந்த செயல் முறைகளும் உருவாக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், தமிழ்நாட்டில், கல்விக்காகவும் இன்னும் மற்ற விஷயங்களுக்காகவும், ஈட்டு மானியங்கள் அளிப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்கள், அவைகளுடைய தலைக்கு இவ்வளவு என்றுள்ள (Per Capita) வருவாயினை அடிப்படையாகக் கொண்டு, நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதை குறிப்பிடலாம். இதை நாங்கள் பாராட்டுகிறோம். அதே சமயத்தில், இன்னும் விரிவான முறையில் பிரிவுகளை வகைப்படுத்துதல் என்ற முறையை ஏற்படுத்தலாம் என்று சிபாரிசு செய்கிறோம்.

*10·10:* பிற்பட்ட பிரதேசங்கள், குறிப்பாக அட்டவணையில் கண்டுள்ள வகுப்பினர் வசிக்கும் மலைப் பிரதேசங்களில் தனிப்பட்ட சில பிரச்னைகள் உள்ளன. அந்தப் பிரதேசங்களில், எல்லா இடங்களிலும் செய்தமாதிரியே, பொதுவான பாணியில், பஞ்சாயத்து ஆட்சியை வழக்கமான முறையில் புகுத்தி விடுவது எந்த வகையான பயனையும் ஏற்படுத்தாமல் போகலாம். ஒரிசாவில் மிகச் சில வீடுகளே கொண்ட, அங்கங்கே சிதறிக் கிடக்கின்ற குக்கிராமங்களை உள்ளடக்கிய, பெரிய பெரிய நில அளவினைக்கொண்ட பஞ்சாயத்துக்களையும், அதனால், ஒரு பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டுமென்றாலும், அங்கத்தினர்கள் பலமைல்கள் நடந்தே செல்ல வேண்டியுள்ள ஒரு நிலையையும், நாங்கள் கண்டோம். இதற்கு மாறாக, முக்கியமான ஓர் இடத்தில், நல்ல முறையில் நிர்வகிக்கப்படுகிற அலுவலகம் சமிதியில் இருந்தால், அதன் கூட்டங்களுக்கு, பொதுவாக, பெருவாரியான உறுப்பினர்கள் வந்து கலந்து கொள்கிறார்கள். பஞ்சாயத்து அமைப்புகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருப்பது, அப்புடிப்பட்ட மலைப் பிரதேசங்களின் அசாதாரணமான நிலையில், மிகவும் பொருத்தமாக இருக்கமுடியாமல் போகலாம். அந்த இடங்களுக்காக வேண்டிய தனியான முறையில் அமைப்புகளும், தனியான நடைமுறைகளையும் கண்டுபிடிப்பது அவசியமாகிறது.

*10·11:* காட்டுப்பிரதேசங்களில், பஞ்சாயத்துக்களும் சமிதிகளும் உள்ளன. அங்கே விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லை. அதனால் கிடைக்கின்ற நில வருவாய் சொற்பம். அப்படிப்பட்ட இடங்களுக்கு நிலவருவாய் செஸ் போல, காட்டிலிருந்து கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியினை அளிக்க வேண்டியது மிகவும் நியாயம். குறைந்த பட்சமாக, பஞ்சாயத்துகளுக்கு, தலைக்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில் மானியம் அளிக்கப்பட வேண்டும் என்ற எங்களுடைய சிபாரிசானது ஒத்துக் கொள்ளப்பட்டால், பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில், இந்த விஷயத்தில் அதிக சிக்கல் இருக்காது. இருந்தாலும், அவைகளுடைய பற்றாக்குறையை போக்க முன் வருவதைவிட, வருகின்ற வருவாயில் ஒரு பங்கை அளிப்பதின் மூலம், மாநில அரசுகள் இந்த அமைப்புகளுக்கு அதிக திருப்தியை அளிக்கக்கூடுமா என்பதை ஆராய்வது பயன் அளிக்கும். இந்தக் கருத்துக்கள், கல் உடைக்கும் இடங்கள், சுரங்கங்கள் உள்ள இடங்கள் போன்றவைகளுக்கும் பொருந்தும்.

*10·12:* தங்களுக்கு நேரடியாகச் சம்பந்தமில்லாத பொதுக் காரியங்களுக்கு நன்கொடை அளிப்பதற்கோ, விசேஷங்களுக்கு செலவு செய்வதற்கோ, அனுமதிப்பதற்கியலாத நிலையில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் நிதி நிலைமை உள்ளது. உதாரணமாக, பஞ்சாபில் சில பஞ்சாயத்துக்களும், சமிதிகளும், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு பெருவாரியான அளவில் நன்கொடை அளித்திருப்பதை நாங்கள் கண்டோம். அந்தக் காரியம் விதிவிலக்கான ஒன்றானாலும், அப்படிச் செய்தல் சரியான செயல் அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். தேசிய பாதுகாப்பு நிதி மக்கள் கொடுக்கின்ற வரிகள் போன்றவற்றுடன், அவர்கள் அளிக்கின்ற நன்கொடைகளும்

சேர்ந்ததே. ஆகவே, இந்தமாதிரி காரியங்களுக்கும், செலவினங்களுக்கும் அளிக்கின்ற நன்கொடைகளும், ஒரு குறைந்த பட்ச அளவுக்கு மேல், வரவேற்புகளுக்கும் விசேஷ நிகழ்ச்சிகளுக்கும் பணம் செலவிடப்படுவதும் தடுக்கப்படவேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

**10.13:** சட்டங்களினாலும், அவைகளின்கீழ் செய்யப்படும் விதிகளினாலும், நிலங்களும் மற்ற சொத்துக்களும் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்பட்டுவிட்டாலும், சர்வே படங்கள் இல்லாததனாலும், ஆக்கிரமிப்புகளினாலும் சட்ட சம்பந்தமாக ஏற்படுகின்ற சில இடையூறுகளினாலும், அவைகளின் பேரில் வாஸ்தவமான உடமையையோ உரிமையையோ தாங்கள் இன்னும் அடையவில்லை என்று, பல பஞ்சாயத்துக்கள் புகார் செய்துள்ளன. இந்தச் சிக்கலை எவ்வளவு விரைவில் தீர்த்துக் கொள்ள முடியுமோ அதற்கான விசேஷ முயற்சிகள் அவ்வளவு விரைவில் செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். கோர்ட்டு விவகாரங்களில் பஞ்சாயத்து நிறுவனங்கள் சிக்கிக்கொண்டிருக்கின்ற இடங்களில், அவைகளுக்கு சட்ட நுணுக்க ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கவும், தகுதியான இடங்களில் நிதி உதவி அளிக்கவும், ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

**10.14:** சில இடங்களில், சிறு சேமிப்புகளையும், ஆயுள் காப்பீடு கார்ப்பரேஷனின் (Life Insurance Corporation) பணத்தையும் வசூல் செய்கின்ற ஏஜென்சி வேலையை, பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. பஞ்சாயத்துக்களின் வருமானத்தை மேற்கொண்டு அதிகமாக்குகின்ற ஒரு வழியாக இது உள்ளது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே ஏஜென்சி என்ற ஒருமித்த தகுதியை (Corporate Capacity) ஒட்டி, பஞ்சாயத்துகளுக்கு இந்த விஷயங்களில் சலுகைக் காட்ட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யோசனை கூறுகிறோம். பஞ்சாயத்து இந்த வேலைகளை ஏற்றுச் செய்ய விரும்பவில்லை என்றால் மட்டும், இந்த வேலையை தனிப்பட்ட நபர்களிடம் ஒப்படைக்கலாம்.

**10.15:** ஒவ்வொரு கிராமத்திலும், அனாதையாக உள்ள வயதுவந்த, செயலாற்ற முடியாதவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு உதவிபுரிவதற்காக, வேலைத் திட்டங்களை, சில மாநில அரசுகள் ஆரம்பித்துள்ளன. அப்படிப்பட்ட எல்லா விஷயங்களிலும், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் மூலமாக இந்த உதவி தரப்படவேண்டும். முடிந்த அளவுக்கு இந்த உதவியில் ஒரு பங்கினை, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்ற நாடுகளில், தல ஆட்சி அமைப்புகள் ஏற்படுத்தியதற்கே, தலையாயக் காரணம் இதுதான். இந்தியாவில் கூட்டான குடும்ப வாழ்க்கை முறை அப்படிபட்டவர்களுக்கு ஒரு வகைப் பாதுகாப்பினை அளித்து வந்துள்ளது. ஆனால், கூட்டான குடும்ப முறை மெள்ள மெள்ள மறைந்து வருகிறது. அதனால், உதவியற்றோர்க்கு உதவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவசியம் தேவையாகின்றன. பிறப்புகள், இறப்புகள், திருமணங்கள் பற்றிய விவரங்கள் விட்டுப்போகாமல், சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுவிட்டால், எதிர்காலத்தில் சமூகப் பாதுகாப்பு முறை சுலபமான ஒன்றாக இருக்கமுடியும். திருமணங்களை கட்டாயமாகப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்பதனால், அப்படிப் பதிவு செய்வதற்கு, சிறு கட்டணம் கட்ட வேண்டும் என்றிருந்தால், கொஞ்சம் வருமானம் கிடைக்க ஏதுவாகும்.

**10.16:** நம்முடைய மக்களிடையே, தாமே முன் வந்து தானம் அளித்தல் என்ற வழக்கம் நீண்ட காலமாக, தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இதுவரையில், இப்படித்தானம் அளித்தல் என்பது கோயில்களுக்கும், மடங்களுக்கும், மற்ற சமய சம்பந்தமான காரியங்களுக்காகவே செய்யப்பட்டு வந்துள்ளது. பள்ளிக்கூடம், கல்லூரிகள், மருத்துவ மனைகள் கட்டுவதும், அவற்றிற்காக பணம் ஒதுக்குவதும், பணக்காரர்களிடையே இப்பொழுது, சர்வ சாதாரண விஷயமாகிவிட்டது. பரம்பரை பரம்பரையாக நடந்துவரும் இந்த விஷயத்தை பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் போற்றி வளர்ப்பதுடன், கிராமத்தின் நலனைப் பெருக்குவதில், அவற்றை முழுக்க முழுக்க உபயோகப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அறுவடை சமயங்களில், தானியங்களைச் சேகரித்தல், மதிய உணவு படைத்தல், ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள், உடைகள் அளித்தல் ஆகியவற்றிற்கான செலவினங்களுக்கு, மிகவும் உதவியாக இருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் சிறு உண்டிகள் வைத்து தினம் ஒன்று அல்லது இரண்டு நயாபைசாவை அதில் போட்டு வைத்தால், அதனால் கிடைக்கும் மொத்த வசூல், குறிப்பிடத்தக்க அளவினதாக ஆகிவிடும். நோயாளிகளின் கஷ்டங்களை தீர்ப்பதற்காக என்றும், அனாதைகளுக்கு உதவி செய்வதற்காக என்றும் குறிப்பிட்ட சில நல்ல காரியங்களுக்கு இப்படி வசூல்கள் செய்யப்பட்டால், அதிகம் பேர் இதற்கு நிதி அளிக்க முன் வருவார்கள். பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணங்கள், மற்ற முக்கிய விசேஷங்கள் கொண்டாடப்படும்பொழுது, பரிசுகள் வழங்குதல் வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தக் காரியங்களைச் செய்வதற்கெல்லாம், அவற்றை ஏற்று நடத்துகின்ற சிறந்த தலைமையும், நல்ல மதிப்பான நிலையும் இருக்கவேண்டியது அவசியம். பல இடங்களில் இத்தகைநிலை உருவாகும் என்று நாங்கள் பெரிதும் நம்புகிறோம்.



**10.17:** பஞ்சாயத்து ஆட்சி அமைப்பில் உள்ள மூன்று நிர்வாக அமைப்புகளைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்படும் பெயர்கள், மாநிலத்திற்கு மாநிலம் மிகவும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இந்த அமைப்புகளுக்கு வழங்கி வரும் பெயர்கள் ஓரளவு ஒரே மாதிரியாக இருக்கும் முறையில் முயற்சி செய்தல் நல்லது. மாநிலங்களுக்கிடையே ஒத்துள்ள விஷயங்களில் பரிசீலனை செய்யும் பொழுதும், அகில இந்திய ரீதியில் அறிக்கைகள் தயார் செய்யும் பொழுதும், பல பெயர்களாக இல்லாமல், ஒரே பெயரில் இருந்தால், ஏற்படக் கூடிய குழப்பமான நிலை தவிர்க்கப்படும்.

**10.18:** பல்வேறு கட்டங்களிலும், கூட்டுறவு நிறுவனங்களும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளும் சுமுகமான முறையில் இணைந்து பணியாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். பஞ்சாயத்துகள் கூட்டுறவு சங்கங்களிடையே உள்ள உறவு முறைகள் பற்றி பரிசீலனைகளும் செய்து, இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட செயற்குழு ஒன்று, ஓர் அறிக்கையை 1961 அக்டோபரில் வெளியிட்டுள்ளது. நாங்கள் மேற்கொண்ட பணிக்கான நிபந்தனைகளுக்கு இந்த அறிக்கை சம்பந்தமில்லாதபடியால், அந்தக் குழுவின் சிபார்சுகளைப் பற்றி விமரிசனம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, எங்களுடைய ஆராய்ச்சியின் பொழுது, இவற்றைப்பற்றி கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் விவாதிக்கவில்லை. இருந்தாலும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு, பஞ்சாயத்துச் சமிதிகளிலும், ஜில்லா பரிஷத்துக்களிலும் சட்ட பூர்வமான பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதே சமயத்தில், கூட்டுறவு நிறுவனங்களில் பஞ்சாயத்து சமிதிகளுக்கும் பரிஷத்துக்களுக்கும் பிரதிநிதித்வம் அளிக்கப்படுவது இல்லை என்றும் எங்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. விதைகள், உரங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்வதை எங்கெல்லாம் கூட்டுறவு நிறுவனங்கள் எடுத்துச் செய்கின்றனவோ அங்கெல்லாம், இந்த விநியோகம், நியாயமான முறையில் இருக்கவேண்டும். ஏழையாகவும், பலவீனமாகவும் உள்ள பகுதிகளுக்கு நியாயமான அளவில் இவை கிடைக்க வேண்டும் என்பதில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் விசேஷமாக அக்கறை காட்டியுள்ளன. கூட்டுறவு நிறுவனங்களின் கொள்கைகளை உருவாக்குவதிலும், அவைகளுடைய நடவடிக்கைகளிலும் நேரடியான பங்கினை, பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் பெறாமல் இருக்கும்பொழுது, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான வளர்ச்சியில் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் மிகவும் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நியாயமில்லை. இந்தக் கருத்தைத்தான், கூட்டுறவுத் துறைபற்றி நியமிக்கப்பட்ட செயற்குழுவும் எடுத்துக் காட்டியுள்ளது. ஆகவே, எல்லா மாநிலங்களிலும், பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் உறுதியாக அமைக்கப்பட்ட பிறகு, கூட்டுறவு நிறுவனங்கள்—பஞ்சாயத்து அமைப்புகள் ஆகிய இரு சாராரின் பிரதிநிதிகளின் உதவியுடன், இந்த இரு அமைப்புகளிடையே இருக்கவேண்டிய சுமுகமான உறவுநிலை பற்றி பரிசீலனை செய்வது நல்லது.

**10.19:** பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு மானியங்கள், கடன்கள் மூலமாக மாநில அரசுகள் எவ்வளவு உதவிகள் புரிகின்றன என்பது பற்றிய விவரங்கள் இணைப்பு VIII-ல் உள்ள அறிக்கைகளில் கண்டுள்ளன. [இணைப்புகள் இங்கே தரப்படவில்லை —ஆ.ர்.]

**10.20** விரிந்த அளவில் அமைக்கப்பட்டுள்ள பொதுவான சில கொள்கைகளின் அடிப்படையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் காரியங்களைச் செய்துகொண்டு போவது இயற்கையேயாகும். எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியே கொள்கைகள் கையாளப்படுவதினால், நியாயத்திற்கு புறம்பான காரியங்கள் நடைபெறவும், சமமான வாய்ப்புகள் இல்லாத நிலையும் ஏற்படுகின்றன என்று அவை நினைப்பதும் இயற்கையேயாகும். இந்தக் கருத்து ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனால், சில குறிப்பிட்ட பஞ்சாயத்துக்கள், சமிதிகளின் பிரச்சனைகளை பொறுமையுடன் கவனித்து, அதற்கு வேண்டிய சிறுசிறு தேவையான மாற்றங்களைச் செய்ய ஒத்துக்கொள்வதின் மூலம், மாநில நிதியில் மிகவும் அதிகமான அளவில் செலவு ஒன்றும் ஏற்பட்டு விடாது. மாறாக, நல்லதொரு திருப்தியையும், மனநிறைவையுமே, இது உண்டாக்கலாம். பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் மதிப்பாகச் செயல்படுதல் என்பதும், அவைகளுடைய திறமையான செயல் திறன், ஆதார வசதிகள் போலவே, அவ்வளவு முக்கியமாக, தேசத்திற்கு நிலையான பொதுச் சொத்தாகும்.

## அத்தியாயம் 11

### முடிவுரை

எங்களுடைய அறிக்கையைத் தயார் செய்வதில், எங்களுக்குள்ள கட்டுப்பாடுகளை நாங்கள் உணர்ந்துள்ளோம். இந்த அறிக்கை இன்னும் விரிவாகவும், எல்லா விஷயங்களையும் விட்டுவிடாமல், தன்னுள் அடக்கியதாகவும் இருந்திருக்கலாம் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். ஆனால், கடுமையான வசதிக்குறைவுகளுக்கிடையே எங்கள் வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சி, எல்லா இடங்களிலும் செயல்படுத்தப் பட்டுவிட்ட மாநிலங்களில் கூட, குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. சில மாநிலங்களில், இந்த அமைப்பையே இனிமேல்தான் செயல்படுத்த வேண்டியுள்ளது. எங்களுக்குக் கிடைத்த தகவல்களும் புள்ளிவிவரங்களும், பல அம்சங்களில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு நாங்கள் வருவதற்கு போதியதாக இல்லை. எங்கள் குழுவின் சிரமங்களையும் குறிப்பிட ஆசைப்படுகிறோம். நாங்கள் எல்லோரும் பகுதி நேர உறுப்பினர்களே. குழுவில் அங்கம் வகித்த ஒவ்வொருவரும், தங்களுக்குள்ள மற்ற முக்கியப் பொறுப்புக்களிடையேதான், இந்த வேலையிலும் ஈடுபட வேண்டியிருந்தது. எங்களுக்கு அளிக்கப் பட்ட சிப்பந்திகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. இந்தக் குறைபாடுகளுக்கிடையே கூட, ஆரம்ப நிலையிலேயே, முழுக்க முழுக்க சரியில்லாத நிலையில் செய்யப்படுகிற பரிசீலனையும் விமர்சனமும், பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு ஒரு சாதகமான ஆரம்பத்தையும் ஆர்வத்தையும் அளிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற உண்மையை மறுக்க முடியாது. அவைகளுடைய ஆதாரங்களைப் பலப்படுத்துவதிலும், அதனால் அவை உறுதியான முறையில் நிலை நிறுத்தப்பட்டு, மக்களுக்கு மேன்மேலும் உபயோகமான சேவையை அவை புரிவதற்கும், எங்களுடைய சிபாரிசுகள் உறுதுணையாக அமையும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த அமைப்புகள் செயல்படத் தொடங்கி, சில ஆண்டுகள் சென்று, அதன்பிறகு அவைகளின் ஆதாரங்களையும் நிதிகளையும் பற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்து அறிக்கைச் சமர்ப்பிக்கும் ஓர் ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். மாநில அரசுகள் தங்களுக்குள் ஓர் உடன்பாடு செய்துகொண்டு, ஒரே மாதிரியான அடிப்படையில், மாநில அளவில் பரிசீலனை செய்யவேண்டும். அதே மாதிரி, இப்படிச் செய்வதைத் தொடர்ந்து மத்திய அரசினால் நாடு பூராவுக்குமாக, ஒரு பரிசீலனை நடத்தப்பெற வேண்டும். இப்படிச் செய்தால், பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளின் பல்வேறு நிலைகளில் உள்ள அமைப்புகளின் நிதி நிலைமைபற்றி துப்புரவாக பரிசீலனை செய்து பார்க்கவும், அவ்வப்போது இதைப்பற்றி பரிசீலனை செய்யவும் மதிப்பீடு செய்யவும் கூடிய விசேஷ அமைப்புகளை ஏற்படுத்துவது உட்பட வேண்டிய எல்லா ஏற்பாடுகளை உருவாக்கவும் இயலும்.

(ஒப்பம்) கே. சந்தானம், தலைவர்.
ஸ்ரீ நாராயண்தாஸ், உறுப்பினர்.
எம். ஒய். கோர்பாடே, உறுப்பினர்.
எம். வி, மாத்தூர், உறுப்பினர்.
ஸி. நரசிம்மம், உறுப்பினர்.

(ஒப்பம்) ஆர். சரண், செயலாளர்,
புதுடெல்லி.
31—7—63.

[1960 ஆகஸ்டு, 'கிராம நல' சிறப்பிதழாக வெளியிடப்பட்ட "பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்கு மலரில்" உபயோகப்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்களே, இவ்வறிக்கையின் தமிழாக்கத்திலும் கையாளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தீர்க்கமாக ஆலோசனை செய்து, இன்ன இன்ன தமிழ் வார்த்தைகளை உபயோகிக்கலாம் என்று முடிவுசெய்து, அவ்வார்த்தைகளே, கருத்தரங்கு மலரில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

—ஆசிரியர்.]



# முக்கிய அறிவிப்பு

— o —

**நீங்கள் 'கிராம நல'த்திற்கு சந்தாதாரர் ஆக விரும்பினால் :**

"கிராம நலம்" ஆண்டு சந்தாத் தொகையான ரூபாய் 1—50-ஐ, "பொது ஜனத்தொடர்பு அதிகாரி, கிராம நல தலநிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும். அதில் உங்களுடைய முழுத் தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மணியார்டர் கிடைத்ததும், எந்த மாதத்திலிருந்து எந்த மாதம் வரை, உங்களுக்கு "கிராம நலம்" இதழ் அனுப்பப்படும் என்பது பற்றி கடிதம் வரும். அக்கடிதத்தில், உங்களுடைய சந்தா எண் குறிக்கப்பட்டிருக்கும். உங்களுடைய சந்தாவைப் புதுப்பிக்கும் போதும், கடிதம் எழுதும்போதும், இந்த சந்தா எண்ணை. தவறாமல் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

சந்தாத் தொகை "கிராம நலம்" அலுவலகத்தில், அந்த மாதத்தில் 15-ம் தேதிக்குள் கிடைக்கப்பெறவேண்டும். அப்பொழுதுதான் 'கிராம நல' அடுத்த மாத இதழ் அனுப்ப சௌகரியமாக இருக்கும். உதாரணமாக, டிசம்பர் 15-க்குள், சந்தாத் தொகை அனுப்பப்பட்டுவிட்டால், ஜனவரி மாத இதழ் முதல் அனுப்ப இயலும். ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட வேண்டியிருப்பதாலும், முதல் வாரத்திற்குள்ளேயே அச்சாகும் பிரதிகளின் தொகை நிர்ணயிக்கப்பட்டு விடுவதாலும், குறிப்பிட்ட தேதிக்குள் சந்தாத் தொகையை அனுப்பி, தங்களுடைய ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

**நீங்கள் உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க விரும்பினால் :**

'கிராம நலம்' அனுப்பப்படும் மேலுறையில் காணப் படும் உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, "கிராம நலம்" ஆண்டு சந்தாத் தொகையான ரூபாய் 1—50-ஐ, மேலே குறித்த முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பிவையுங்கள். மணியார்டரை, சந்தா காலம் முடிவதற்கு முன்னதாகவே அனுப்பினால்தான், 'கிராம நலம்' தொடர்ந்து கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

ஆண்டு சந்தா ரூ. 1·50. தனிப் பிரதி 0·13 ந. பை.

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

---

**மேல் அட்டைப்படம் :**

"செந்தமிழின் சீர் மறைந்து
பாவாணர் குலம் சிதைந்து
செழுமை நீங்கி
அந்தமிழர் அடிமைகளாய்
அந்நியராய் ஆங்கிலராய்
அலையுங்காலை
எம் தமிழ்நா டெம் தமிழர்
எங்கள் குலப் பண்பாட்டின்
ஏற்றம் கூற
வந்த பிரான் பாரதியாம்
மணிப்புலவன் வான் கவிஞன்
வாழ்க வாழ்கவே !"

—கவிஞர் எஸ்.டி.எஸ். யோகி

## "கிராம நல" இதழ் ஆலோசனைக் குழு

——( o )——

1. திரு கே. எஸ். சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — தலைவர்

2. திரு கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர். — துணைத் தலைவர்

3. திரு டி. வி. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்.; பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — உறுப்பினர்

4. திரு கே. வெங்கடராமன், ஐ.ஏ.எஸ்., பஞ்சாயத்து நிதி இயக்குநர், கிராம நல-தல நிர்வாகத்துறை. — ,,

5. திரு வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை. — ,,

6. திரு கே. சங்குண்ணி மேனன், துணைச் செயலாளர், கிராம நல-தல நிர்வாகத் துறை.

7. திரு எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். துணைச் செயலாளர், (சிறப்பு) கிராம நல-தல நிர்வாகத் துறை.

8. திரு கே. பி. கீதா கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர், நிதித் (திட்டம்–அபிவிருத்தி) துறை. — ,,

9. திரு பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர், பொதுத் துறை. — ,,

10. திரு எம். சந்திரசேகரம் பிள்ளை, ஐ.ஏ.எஸ்., தலைவர், அரசாங்க எழுதுபொருள் அச்சுத் துறை. — ,,

11. திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ., பொது ஜனத் தொடர்பு அதிகாரி, ஆசிரியர், 'கிராம நலம்'. — உறுப்பினர்/செயலாளர்

159895

---

**வெளியிடுவோர் :**
திரு கே. எஸ். சிவசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.

**ஆசிரியர் :**
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

## பஞ்சாயத்து ஆட்சியின் மறுமலர்ச்சி



தமிழ்நாட்டில், நமது ஒப்பற்ற தலைவர் திரு காமராஜ் அவர்கள் தலைமையிலும், நேரடி நிர்வாகத்திலும், 1960-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி முதல், "புதிய பஞ்சாயத்து ஆட்சி" மறுமலர்ச்சிபெற்றது. அதாவது, பல நூற்றுண்டுகளாக, தமிழ்நாட்டு மன்னராட்சியில் வழங்கிவந்த பழைய பஞ்சாயத்து முறைக்குப்பதிலாக, ஜனநாயக அடிப்படையில் அமைந்த, புதிய கிராம ஆட்சி ஆரம்பமாகியது. இன்றைய தினம், சுமார் 374 பஞ்சாயத்து யூனியன்களும், 12,523 பஞ்சாயத்துக்களும் செயல்பட்டு வருகின்றன. ("கல்ராயன்மலை" வட்டாரம் நீங்கலாக).

இந்தச் சந்தர்ப்பத்தில், என்னைப்பற்றி, ஒரு சில குறிப்புகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஒரு விவசாயி ; வயதில் இளையவன். இத்தகைய எளியேனிடம், மிகப் பெரிய பொறுப்பை அளித்துள்ளார், நமது முதலமைச்சர். என்னிடம் அவர் கொண்டுள்ள நம்பிக்கைக்கு, என் மனமார்ந்த நன்றி. கிராமவாசிகளுக்குப் பயனுள்ள முறையில் முழுநேரமும் உழைக்க உறுதி கொண்டிருக்கிறேன். நமது முதல் அமைச்சர் போன்ற பெரியவர்களின் ஆசியும், சக மந்திரிகளின் ஒத்துழைப்பும், மக்களின் பூரண ஆதரவும் கிடைக்கும் என்ற உறுதி, எனக்கு நிச்சயமுண்டு.

குறிப்பாக, கிராம நலத்திட்டங்களை உருவாக்கி நடத்துகின்றவர்கள், மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களேயாவர். ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் பெருமையும், புகழும், அதன் உறுப்பினர்கள், பொதுநல வேலைகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே இருக்கின்றன. எனவே, பெரும்பாலான அங்கத்தினர்கள், தம்தம் ஊராட்சி வேலைகளில் மிகுந்த ஊக்கத்தோடு செயலாற்ற வேண்டுகிறேன்.

கிராமத்தைப் பொறுத்தவரையில், ஊராட்சித் தலைவர்கள், மற்ற உறுப்பினர்கள் போலவே, மிகவும் முக்கியமானவர்கள், "கிராம சேவக்குகள்". புதிய பஞ்சாயத்து ஆட்சியின் அச்சாணி போன்றவர்கள் அவர்கள். சோம்பலை உதறித்தள்ளி, வாய்ச்சொல் வீரராக மட்டும் இல்லாமல், இவர்கள் கிராமவாசிகளுக்குத் துணைபுரிய வேண்டுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலுள்ள தலைவர், உபதலைவர், கமிஷனர், மற்ற வளர்ச்சி அதிகாரிகள் (Extension Officers), அலுவலகத் துணைவர்கள் (Office Staff) முதலிய அனைவரும், ஒருமுகப்பட்டு கிராமநல வேலைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற உறுதிகொள்ள வேண்டுகிறேன்.

தக்க ஆராய்ச்சி செய்து, உணவு உற்பத்தியைப்பெருக்கும் நோக்கத்தோடு, பஞ்சாயத்து ஆட்சியைத் திறம்பட இயக்க வேண்டும். சிறப்பாக, மிகச்சிறந்த பொறுக்கு விதைகளை (Improved seeds), எல்லா கிராமங்களுக்கும் நல்ல முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்வதைப்பற்றி, உடனடியாக ஆலோசித்து வருகிறோம்.

எல்லா மக்களுக்கும் எல்லா நலமும், பலமும் ஏற்படும் வகையில், ஓயாமல் உழைக்கும் சக்தியை, நகர ஆட்சிப்பொறுப்போடு, புதிய பஞ்சாயத்து ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுள்ள எனக்கு அருளுமாறு எல்லாம் வல்ல ஆண்டவனை உள்ளன்போடு வேண்டுகிறேன்.

எல்லோருக்கும் வணக்கம். சேவையாளருக்கு என் நல்வாழ்த்துக்கள்.

சென்னை-9,
1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி.

எஸ். எம். ஏ. மஜீது,
தல நிர்வாகம், பஞ்சாயத்து அமைச்சர்.

Regd. No. M. 7277

© தமிழ்நாடு அரசாங்கம் 1963.

1 6 DEC. 1963

## தேசிய ஒருமைப்பாடு நாள் உறுதிமொழி

தாய் நாட்டின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் எப்பாடு பட்டாகிலும், என்ன தியாகம் செய்தாகிலும் காக்க மக்கள் மேற் கொண்டுள்ள சங்கற்பத்தில் எனது உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு பலம் பெறவும், ஒற்றுமை வலுப்பெறவும், திட சித்தத்துடன் பாடுபட உறுதி கூறுகிறேன்....

*(19–10–1963-ல், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு எஸ். கே. செட்டூர், ஐ.சி.எஸ்., உறுதி மொழியை வாசிக்க, அரசாங்க ஊழியர்கள் உறுதிமொழிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.)*

